
V2 11;31 N73
31N73.36;1
6/508

வெளியீடு—12—6—1973]
Issued—12—6—1973]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

சனிக்கிழமை 1973 மார்ச் 17

Saturday 17th March 1973

தொகுதி XXXVI—எண் 1

Volume XXXVI—No. 1

©
தமிழ் நாடு அரசு
1973

GOVERNMENT OF TAMIL NADU
1973

*சட்டப் பேரவைத் துறை*
*சென்னை-9.*

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

V,2:11,31 N73

:1N73 . 36,31

61608

# Index To Tamil Nadu Legislative Assembly Debates

SEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

17TH, 19TH, 20TH AND 21ST MARCH 1973.

*Volume XXXVI* (*Nos.* 1 *to* 4).

TABLE OF CONTENTS.

*Saturday, 17th March* 1973.

PAGES

Personnel of the Government of Tamil Nadu .. i–vi

Principal Officers of the Tamil Nadu Legislative Assembly .. .. .. .. .. .. vii

List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies .. .. .. ix–xvi

1. Questions and Answers .. .. .. .. .. 1–23
2. Adjournment Motion—
   Arrest of B.T. Teachers at Madurai and the consequent unrest .. .. .. .. .. 23–28
3. Voting on Demands for Grants for the year 1973–74—*cont.*
   (i) Community Development Projects, etc. ..
   (ii) Public Works—Grants-in-Aid .. .. .. 28–111
4. Papers laid on the Table .. .. .. .. 111

*Monday, 19th March* 1973.

1. Questions and Answers .. .. .. .. .. 123–154
2. Announcements—
   (i) Release of Thiru C. V. Velappan, M.L.A. .. 154
   (ii) Election to the Committee of Privileges .. 155
   (iii) Election to the Committee on Public Accounts. 156
   (iv) Election to the Committee on Estimates .. 156–157
   (v) Change in the order of business .. .. 243

PAGES

*Monday, 19th March 1973—cont.*

3. Government Motions—
   (i) Election to the Committee of Privileges .. 155
   (ii) Election to the Committee on Public Accounts. 155–156
   (iii) Election to the Committee on Estimates .. 156
4. Point of order—
   Election of Speaker .. .. .. .. .. .. 157–164
5. Voting on Demands for Grants for the year 1973–74—*cont.*
   (i) Fisheries .. .. .. .. .. ..
   (ii) Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. .. .. .. .. .. 164–243
6. Papers laid on the Table .. .. .. .. 244

*Tuesday, 20th March 1973.*

1. Obituary reference—
   Thiru B. Ramachandra Reddy, ex-Chairman of the Madras Legislative Council .. .. .. 313
2. Questions and Answers .. .. .. .. .. 313–346
3. Government Bills—
   (i) The Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 .. .. 346
   (ii) The Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1973 .. .. 347
4. Voting on Demands for Grants for the year 1973–74—*cont.*
   Education .. .. .. .. .. .. 347–513
5. Papers laid on the Table .. .. .. .. 514

*Wednesday, 21st March 1973.*

1. Questions and Answers .. .. .. .. .. 515–543
2. Privilege Matter—
   Distorted publication in "Thennagam" of Chief Minister's reply regarding 'Tamil Nadu House'. 543–572
3. Calling Attention—
   Scarcity of diesel oil and petrol .. .. .. 572–577



PAGES

*Wednesday, 21st March 1973—cont.*

4. Government Bill—
   The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973 .. .. 577
5. Voting on Demands for Grants for the year 1973–74—*cont.*
   (i) Irrigation .. .. .. .. .. 577–606,
   (ii) Public Works—Works .. .. .. .. 610–629,
   (iii) Public Works—Establishment and Tools and Plant .. .. .. .. .. .. 630–651,
   (iv) Capital Outlay on Irrigation .. .. 652–688,
   (v) Capital Outlay on Public Works .. .. 696–728
6. Points of order—
   (i) Allotment of more time for Opposition Party Members. 606–609
   (ii) Supply of tea during evening session .. 629
   (iii) Right of reply to Chairmen of Boards .. 688–696
7. Announcement—
   Arrest of Thiru S. M. Durairaj, M.L.A. .. .. 651–652
8. Papers laid on the Table .. .. .. .. 728–729

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்.

**மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா**

---

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம், திரைப்படத் தொழில் நுட்பவியல், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், இளைஞர் அணி.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, சட்ட மன்றம், நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம்,, பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள்; இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, பயண அனுமதிச் சீட்டுகள், சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, உணவு உற்பத்தி, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு.



13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனு.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அறக்கட்டளைகள், பால்வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம் ஆகியவை நீங்கலாக பால் உற்பத்தி.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

**THIRU KODARDAS KALIDAS SHAH**

---

***Members of the Council of Ministers.***

1. THE HON. DR. M. KARUNANIDHI, (Chief Minister)-in-charge of Public, Finance, Planning, General Administration, **matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Information and Public Relations, Cinematograph Act, Newsprint** control, Tamil Nadu Drainage and Water-supply Board, Slum Clearance Board, Film Technology, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation and Youth Service Corps.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, (Minister for Education and Local Administration)-in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, (Minister for Public Health)-in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, (Minister for Labour)-in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, (Minister for Harijan Welfare)-in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Service, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, (Minister for Revenue)-in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி.வி. எம். | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 7 அழகுத் தேவர், திரு. எஸ். | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். பௌலர், திருமதி | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. | விளாத்திக்குளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. | வந்தவாசி. |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | பரங்கிமலை. |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணாநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ) |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி .. | முதுகளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 59 கார்த்திகேசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 75 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 76 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 77 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 78 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 79 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 80 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 81 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 82 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 83 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 85 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 86 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 87 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ. |
| 89 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 90 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனார் கோவில். |
| 91 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |

| ...டர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 93 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 95 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 96 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 97 சீனிவாசன், மாண்புமிகு திரு. பெ. (துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 98 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 99 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 100 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 101 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 102 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 103 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 104 சின்ன வெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 105 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 106 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்கநல்லூர். |
| 107 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 108 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 109 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 110 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 111 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 112 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 113 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 114 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. எ. ஆர். | கடயநல்லூர். |
| 116 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 117 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 118 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 119 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 120 ஜெயராமன், திரு. இ. | சேலம்-1. |
| 121 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர்.(செ. வ.) |
| 122 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |
| 123 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 124 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 சோணையா, திரு. த. | மானாமதுரை. |
| 126 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 127 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 128 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 129 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 130 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை மேற்கு. |
| 131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 132 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 133 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 134 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 135 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 136 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 137 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 138 துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 139 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 140 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 141 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 142 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 143 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 144 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 145 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 146 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 147 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 148 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 149 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 150 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 151 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 152 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 153 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 154 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 155 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 156 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 157 நைனாமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 158 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 159 பத்மாவதி, திருமதி. ஏ. கோ. | முகையூர். |
| 160 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 161 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 162 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 163 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 164 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 165 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 166 பழனிச்சாமி, புலவர். சி. | பழனி (செ.வ.) |
| 167 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 168 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 169 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 170 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 171 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 172 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 173 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 174 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 175 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 176 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 177 பாலையா, திரு. ஏ. | கௌச்சல். |
| 178 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 179 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 180 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 181 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |
| 182 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 183 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 184 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 185 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 186 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 187 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 188 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 189 மதியழகன், திரு. கே.ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 190 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 192 மலைச்சாமி, திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 197 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம்.. |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 ராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு.மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 221 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் | கோயம்புத்தூர் (மேற்கு). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**சனிக்கிழமை, 1973 மார்ச் 17.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

**வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.**

நாடகங்களுக்குப் பரிசுத் திட்டம்.

*401. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு ஆண்டும் திரைப்படங்களுக்கு அரசு பரிசு தந்து ஊக்குவிப்பதை போல் நாடகங்களுக்கும் பரிசு அளிக்கும் திட்டம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, நாடெல்லாம் நாடகங்களை நடத்தி வரலாற்றினை ஏற்படுத்தியிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நாடகங்களையும் உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே, அண்மைக் காலங்களில் நல்ல நாடகங்களை நடத்துவதை ஊக்குவிக்கும் வகையில்—திரைப்படங்களுக்கு எப்படிப் பரிசுகள் அளித்துத் தரத்தை உயர்த்துவதற்கு முயன்றிருக்கிறார்களோ அதேபோல் நாடகங்களுக்கும் பரிசு வழங்கும் திட்டத்தை இனிமேலாவது கொண்டுவர அரசு முயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நாடகங்களுக்கென்று பரிசுகள் வழங்காவிட்டாலும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும், அனுபவமும் புதுமையும் உள்ள, ஆற்றல் வாய்ந்த நல்ல நாடக ஆசிரியர், நாடக நடிகர், நாடக நடிகை, நாடகத் தயாரிப்பாளர், பாடலாசிரியர் ஆகியோரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குக் ' கலை மாமணி 'ப் பட்டம் வழங்கப்படுவதோடு, தங்கப் பதக்கம் ஒன்றும் அந்தச் சங்கீத நாடக சங்கத்தின் சார்பாக வழங்கப்பட்டு வருகிறது.

[1973 மார்ச் 17

திரு. மே. பி. தூயமணி : பேரவைத் தலைவர் அவர்களே, எந்த எதிர்ப்பையும் சமாளித்துக்கொண்டு கடந்த நாற்பதாண்டுக் காலமாக நாடகத் துறையின் மூலமாகப் பகுத்தறிவுப் பணியாற்றிய நடிகவேள் எம். ஆர். இராதா அவர்களுடைய சிறந்த நாடகங்களுக்குப் பரிசு வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் அதுபற்றி ஆராய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாடகக் கலைஞர் திரு. ரா. ரா. முனுசாமி அவர்கள் கேள்வி கேட்கலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி : கிராமப் புறங்களில் பண்டைக்காலந்தொட்டு இராமாயணம், மகாபாரதம் போன்ற நாடகங்களை வழி வழியாக நடித்து வந்த நடிகர்களெல்லாம் இருக்கிறார்கள். அவர்களில் சிறந்த நடிகர்களுக்கு அரசு பரிசு வழங்க முற்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபோல் பழைய நாடகங்கள் நடத்தியவர்களில் இராமாயணம் பாரதத்தோடு விட்டுவிடாமல் ‘ அரிச்சந்திரன் ’ நாடகம் நடத்தியவர் கூட இருக்கலாம். அப்படிப்பட்டவர்களைக் கண்டு பிடித்து அவர்களுக்கெல்லாம் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் பரிசு வழங்கக் கூடும். ‘ அரிச்சந்திரன் ’ நாடகத்தைக் குறிப்பிட்டதற்குக் காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சந்திரமதி வேடத்தில் மிகுந்த திறமைசாலி என்பதால்.

திரு. கா. காளிமுத்து : தெருக் கூத்து நாடகக் கலைஞர்கள் ஆண்டில் ஒரு குறிப்பிட்ட சில மாதங்களில்தான் நாடகம் நடத்த வாய்ப்பைப் பெறுகிறார்கள். மற்ற காலங்களில் வறுமையால் வாடுகிறார்கள். அவர்களுக்கு உதவிபுரிய அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொதுவாகவே, வறுமையால் வாடுகின்ற நாடகக் கலைஞர்களானாலும், திரைப்படக் கலைஞர்களானாலும், அவர்கள் வாழ்க்கையில் மிகவும் நொந்து போயிருப்பார்களானால் அவர்களுக்குப் பல துறைகளில் இப்பொழுது உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இப்படிப்பட்டவர்கள் இருப்பார்களானால் அரசின் சார்பில்தான் அவர்களுக்கு உதவி அளிக்கப்பட வேண்டும் என்ற சூழ்நிலை இருந்தால், அவர்களைக் குறித்து அரசின் சிறப்பான கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், அத்தகைய கோரிக்கை கவனிக்கப்படும்.



1973 மார்ச் 17]

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்படிப் பெறுகின்ற பரிசுத் தொகைகளை நன்கொடையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லிப் பல தவறான முறையில் பிரசாரம் செய்து, அப்படி நம்முடைய நாட்டில் எம்.ஜி.ஆர். அவர்கள் ‘ அடிமைப் பெண் ’ படத் தயாரிப்பாளர்களிடமிருந்து வாங்கிய பரிசுத் தொகை ரூபாய் முப்பதாயிரத்தைத் தேவர் கல்லூரிக்காக முதல் அமைச்சர் அவர்களிடத்தில் நன்கொடை கொடுத்ததாகவும், அந்தப் பணம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை என்றும் சமீபத்தில் பேசியிருக்கிறார்களே அதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். அப்படிக் கூறியதாக ஒரு பத்திரிகையில் செய்தி பார்த்தேன். அது அவர்களுடைய பேச்சோ அல்லது அறிக்கையோ தெரியாது. அதிலே எம்.ஜி.ஆர். அவர்கள் ‘ அடிமைப் பெண் ’ படத்திற்காகத் தமிழக அரசின் சார்பாகத் தரப்பட்ட 30 ஆயிரம் ரூபாயில் தேவர் கல்லூரிக்காகப் பத்தாயிரம் ரூபாயும் பிற்பட்ட மாணவர்களுக்காக இருபதாயிரம் ரூபாயும் தந்ததாகவும், அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். அதைப்பார்த்து நான் உள்ளபடியே வியப்படைந்தேன். 4—11—1970-ல் அடிமைப் பெண் படத்திற்காகத் தமிழக அரசு பரிசு அளித்த முப்பதாயிரம் ரூபாயைச் சிறு சேமிப்புப் பத்திரமாக வழங்கியது. சிறு சேமிப்புப் பத்திரம் ஏழு ஆண்டுக் கால தவணையில் உள்ளது. ஏழு ஆண்டுக் காலத்திற்குப் பிறகுதான் அதைப் பணமாக்க முடியும். இடையிலே குறைந்த அளவுக்குப் பணம் தந்தால் போதும் என்ற அளவுக்கு மாற்றுவதாக இருந்தால்கூட, மூன்றாண்டுகளுக்குள் முடியாது. 1973 நவம்பர் வரையில் அதை மாற்ற இயலாது. அப்படி மாற்ற வேண்டுமானால் தனிப்பட்ட லேவாதேவிக்காரர்களிடத்திலேதான் சிறு சேமிப்புப் பத்திரத்தைப் பணயமாக வைத்துப் பொருள் பெற்றுக்கொள்ள முடியுமேயல்லாமல் வேறு வழியில் முறையாகப் பொருள் பெற முடியவே முடியாது. அது மாத்திரம் அல்லாமல் 4—11—1970-இல் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்கள் என்றாலும், அதற்குப் பிறகு அதை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சிறு சேமிப்புப் பத்திரத்திற்காகக் கையெழுத்து இட்டு அரசுக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் கொடுக்கவே இல்லை. அதற்குப் பிறகு இப்பொழுது 4—1—1973-இல் கையெழுத்திட்டு அவர் அதை நிதித் துறைச் செயலாளருக்கு அனுப்பிவைத்து, மறுநாள் 5-ஆம் தேதி அறிக்கை விடுகிறார். பணம் கொடுத்து விட்டேன், என்ன ஆயிற்று என்று தெரியவில்லை என்று 5-ஆம் தேதி அறிக்கை விடுகிறார். ஆக, அவர்கள் பிரகடனப்படுத்தியது 4—11—70-இல், கையெழுத்திட்டு நிதித்துறைச் செயலாளருக்கு அனுப்பியது 4—1—73-இல். பணம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை என்று முதலமைச்சர் மீது சந்தேகம் ஏற்படுமாறு

அறிக்கை விட்டது 5—1—1973-இல். ஆகவே, தேவர் கல்லூரிக்கோ பிற்பட்ட மாணவர் உதவிக்காகவோ அவர்கள் அறிவித்த பணம் உடனடியாக அவரால் வழங்கப்படவில்லை என்ற நிலைமைகளை உங்களுக்குச் சொல்வேன்.

திரு. ஆ. பரந்தாமன்: தமிழ்நாட்டில் சினிமாக் கலை அதிகமாக வளர்ந்து விட்ட காரணத்தால் நாடகக் கலை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். பல்லாண்டுகளாகத் தமிழ்நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் கட்டி வளர்த்த இந்த நாடகக் குழுக்களுக்குக் கடன் தொகையாவது வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாடகக் கலையை வளர்ப்பதற்கு அரசு தங்களால் இயன்ற எல்லா விதமான உதவிகளையும் செய்து வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நாடகக் காவலரும் நாடகத்தின் வரலாறுகளை உருவாக்கியவருமான மறைந்த டி.கே.எஸ். அவர்களைக் கவுரவிக்கும் வகையில் அவர்க்குச் சிலை எழுப்ப அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படிப்பட்ட உத்தேசம் தென்னிந்திய நடிகர் சங்கத்தில் இருப்பதாக நான் அறிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், மதுரையில் துணை நடிகர்கள் சங்கம் என்று விஸ்வநாத்தாஸ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, இன்றைக்கும் அந்தச் சங்கம் இருந்துகொண்டிருக்கிறது. அதில் உறுப்பினராக இருக்கக்கூடியவர்களுக்கு அரசு எந்தெந்த முறைகளில் உதவி செய்ய இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தச் சங்கம் விடுக்கின்ற கோரிக்கையின் அடிப்படையில் என்னென்ன உதவிகளை செய்யலாம் என்பதை அரசு பரிசீலனை செய்யும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, for the preservation and improvement of culture and tradition of a State, dramas are more essential than cinemas. In villages there is good dramatic talent, but they require help from the Government. May I know from the Hon. Chief Minister whether he would consider sympathetically such cases?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சிறந்த நாடகங்களையும், திறமையுள்ள நாடக நடிகர்களையும் அரசு ஆதரித்துக்கொண்டுதான் இருக்கிறது. ஏற்கெனவே நான் அந்த விபரங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன்.



திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன்: துணைத் தலைவரவர்களே, அமெரிக்கா போன்ற நாடுகளில் ஒரே நாடகம் ஒரு ஆண்டுக்கு மேலாக ஒரே இடத்தில் நடைபெறுகிறது. அங்கெல்லாம் நல்ல ஸ்டேஜ் அமைப்புகள்—ரிவால்விங் ஸ்டேஜ்—செய்யப்பட்டிருக்கின்றன. அந்தமாதிரி ரிவால்விங் ஸ்டேஜுகளை நம் நாட்டிலும் கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதே கூட நமது நாட்டில் சில பெரிய நாடகக் கம்பெனிகள் ரிவால்விங் ஸ்டேஜ்களைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் அமெரிக்கா, இங்கிலாந்து போன்று ஒரு நாடகம் ஒரே இடத்தில் நீண்டநாள் நடைபெறும் சூழ்நிலை இல்லை.

### *Tamil Nadu House, New Delhi*

* 402. *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state the categories of persons from whom charges are collected and charges not collected at the 'Tamil Nadu House at New Delhi'?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைமுன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: துணைத் தலைவரவர்களே, டில்லியிலே இருக்கின்ற தமிழ்நாடு இல்லம் இப்போது பல இடங்களில் பழுதடைந்திருக்கிறது. அதைப் பழுது பார்ப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா, இல்லை என்றால் மாற்றுக் கட்டடம் கட்டுவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ்நாடு இல்லத்தைப் பழுது பார்ப்பது மட்டுமல்ல, பக்கத்திலே புதிதாக ஒரு கட்டடம் கட்டுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு இல்லத்திற்குப் பக்கத்திலே இருக்கின்ற மற்ற மாநிலங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களைப் பார்க்கும்போது நமக்குப் பொறாமையாக இருக்கிறது. அந்த அளவுக்கு அவைகளை நல்ல முறையில் அமைத்திருக்கிறார்கள். எனவே, நமது தமிழ்நாடு இல்லத்தையும் சீரிய முறையில் அமைக்கும்பொருட்டு, பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டதுபோல விரைவிலே புதிய கட்டடம் ஒன்றும் கட்டப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், அமைச்சர்கள், சட்டமன்ற மேலவைத் தலைவர், துணைத் தலைவர், சட்டப் பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்கு மட்டும் இலவசமாகத் தங்குவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால்

@ 112-114-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பதவியில் இருக்கும் எம்.எல்.ஏ.க்களுக்கு அபிஷியலாகச் செல்லும்போது 3 ரூபாய், 5 ரூபாய் என்று கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இல்லை என்றால் அதைப்போல 5 மடங்கு வசூலிக்கிறார்கள். அதை மாற்றி அபிஷியலாகச் செல்லும்போது இலவசமாகவும், மற்றநேரங்களில் 3 ரூபாய், 5 ரூபாய் கட்டணம் வசூலிப்பது என்றும் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கு பதவியிலுள்ள தமிழ்நாடு அரசு அதிகாரிகள், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசைச் சேர்ந்த அரசுத் துறை நிறுவனங்களின் அதிகாரிகள், தமிழ்நாடு அரசு அலுவலில் டில்லிக்கு வரும் நபர்கள் ஆகியோர்களிடமிருந்து தான் சலுகைக் கட்டணத்தில் வாடகை வசூலிக்கப்படுவதாகக் குறிப்பு இருக்கிறது. அரசுப் பணிகள் சார்பற்ற முறையில் இவர்களில் யார் சென்றாலும் முழு வாடகைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவல் சார்பில் சென்றால்தான் சலுகைக் கட்டணத்தில தங்குவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் இப்போதைய விதிப்படி.

திரு. க. ரோ. எட்மண்ட்: துணைத் தலைவரவர்களே, டில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலவசமாகத் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றனரா? இல்லை என்றால் சமீபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் அவர்கள் அங்கே இலவசமாகத் தங்கியதாகப் பத்திரிகையில செய்தி வந்ததே. அதைப்பற்றி விளக்கம் அளிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது உண்மை அல்ல. அது அ.தி.மு.க.வின் விஷமப் பிரச்சாரங்களில் ஒன்று. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் முரசொலி மாறன் உரிய வாடகையைச் செலுத்தித்தான் அங்கே தங்கியிருந்தார். காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட அப்படி தங்கியிருக்கிறார்கள். ஒரு சிலர் இங்கே வீட்டைப்பெற்று வாடகைக்கு விட்டிருக்கிறார்கள் என்று கூடக் கேள்விப்படுகிறேன். ஆனால் முரசொலி மாறன் அப்படிச் செய்யவில்லை. அவர் அங்கே தங்கியிருக்கும்போது முழு வாடகையும் செலுத்தியிருக்கிறாரே தவிர, வாடகை ஏய்ப்பு செய்யவில்லை, வரி ஏய்ப்பும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. வஹாப்: தமிழ்நாட்டிலிருந்து சட்டமன்ற கமிட்டியிலிருந்து நாங்கள் எல்லாம் அங்கே செல்லும்போது எங்களுக்கு தங்குவதற்கு முதலிடம் அளிக்கப்படவில்லை. மற்ற அதிகாரிகளுக்குத்தான் முதலிடம் அளிக்கப்படுகிறது. ஆகவே, அலுவல் சார்பாக கமிட்டி உறுப்பினர்கள் செல்லும்போது முன்னுரிமை கொடுத்து தங்குவதற்கு வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எப்போதுமே டில்லிக்கு என்றால் நான்கு, ஐந்து கமிட்டிகள் ஒரே நேரத்தில சென்றுவிடுகின்றன. ஒன்று இரண்டு கமிட்டி உறுப்பினர்கள் சென்றால் தங்குவதற்கு வசதி இருக்கும். இப்படி 4, 5 கமிட்டி உறுப்பினர்கள் சேர்ந்து ஒரே சமயத்தில் செல்வதால், அங்கே அவர்கள் எல்லோருக்கும் போதுமான இடவசதி இல்லாததால் இந்த நெருக்கடி ஏற்படுகிறது இதையெல்லாம் உத்தேசித்துத்தான் புதிய கட்டடம் ஒன்று விரைவில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

திரு. கே. டி. கே. சங்கமணி: சார், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு டில்லியிலே சொந்த வீடு இருப்பதால், அவர்கள் தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதை டிஸ்கரேஜ் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் டில்லியிலே சொந்த வீடு கிடையாது. திரு. தங்கமணி அவர்கள் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் வீடு கிடைக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். வீடு சிலருக்கு இல்லாத காரணத்தினால், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் உரிய கட்டணத்தைச் செலுத்தி, தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: துணைத் தலைவரவர்களே, புதிதாகக் கட்டுவதற்கு முயற்சி எடுத்திருக்கிற கட்டடம் எப்போது கட்டி முடிக்கப்படும்? இந்த வருடத்திற்குள்ளேயே கட்டி முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்கான வரைபடங்கள் வரப்பெற்று பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு விரைவிலேயே அங்கீகாரம் அளிக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: புதிதாகக் கட்டப்படும் தமிழ்நாடு இல்லத்தில் வெளிநாட்டினரைக் கவரத்தக்க விதத்தில் நமது தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாப் பகுதிகளாகிய குற்றாலம், உதகமண்டலம், மாமல்லபுரம், மதுரை போன்ற இடங்களில் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் விளம்பரப் பிரிவு ஒன்றும் அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதே தனியாக தமிழ்நாடு அரசு சார்பாக, நமது கலை, கலாச்சாரம், பண்பாடு இவைகளை விளக்குகின்ற வகையில் விளம்பரப் பிரிவு ஒன்று தமிழ்நாடு இல்லத்தில் இடம் பெற்றிருக்

கிறது. அதை நம்முடைய செய்தித் துறை நடத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையும் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. மு. இரத்தினசபாபதி: துணைத் தலைவரவர்களே, டில்லியிலிருந்து நமது தமிழ்நாடு இல்லத்தில் தங்கியிருப்பவர்களுக்கு போக்குவரத்திற்காக கார் வசதி செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் எந்த வகையில் வாடகை வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது அறை வாடகையைப் பற்றித்தான் கேள்வி. கார் வாடகையைப்பற்றி சொல்லவில்லை.

திரு. ஏ. எம். இராஜா: புதிதாகக் கட்டப்படும் இல்லத்தில் எத்தனை அறைகள் இருக்கும்? அந்த அறைகளில் ஏர் கண்டிஷன் வசதி செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதே தமிழ்நாடு இல்லத்தில் உள்ள சில அறைகள் ஏர் கண்டிஷன் செய்யப்பட்டிருக்கின்றன. புதிதாகக் கட்டப்படும் கட்டடத்திலுள்ள அறைகள் எல்லாம் ஏர் கண்டிஷன் செய்யப்பட வேண்டும் என்று திட்டம் இருக்கிறது.

## *Uniform gratuity for workers*

*403. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to press the Union Government to prescribe uniform gratuity to workers in all industrial concerns ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். டென்னிஸ்: துணைத் தலைவரவர்களே, எல்லாத் தொழில் நிறுவனங்களிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் ஒரே சீரான பணிக்கொடை அளித்தால் அந்தத் தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டு, தொழிலில் ஊக்கம் காட்டுவார்கள். ஆகவே, அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஏற்கெனவே இந்த அரசு, தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் இதுபற்றித் தனது கருத்தைத் தெரி



வித்து, தொழிலாளர்களுக்கு ஒரு மாதச சம்பளம் கிராஜுவடி தரவேண்டும் என்று வற்புறுத்தியது. ஆனால் மத்திய அரசு ஆண்டு ஒன்றுக்கு 15 நாட்கள் ஊதியத்தைத்தான் பணிக்கொடையாக தரவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது. எனவே, அதற்கான விதிமுறைகளை இந்த அரசு விரைவில் செயல்படுத்தும்.

திரு. மே. சி. தூயமணி: ஈக்குவல் ஒர்க், ஈக்குவல் வேஜ் என்று அரசியல் சட்டம் 4-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றும் வகையில் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாநில அரசின் சார்பில் நான் டில்லியில் நடைபெற்ற தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஆண்டுக்கு ஒரு மாதம பணிக்கொடை தரவேண்டுமென்று வலியுறுத்தினேன். என்றாலும் மத்திய அரசு 15 நாள் ஊதியம்தான் தரவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது.

## பர்மா, இலங்கையிலிருந்து திரும்புவோருக்குக் கடன்கள்

*404. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து வரும் அகதிகளுக்கு விவசாயம், வர்த்தகம் போன்ற தொழில் செய்ய குடும்பம் ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் தற்போது கடன் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து: விவர அறிக்கை @ ஒன்று சட்டப்பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எ. வகாப்: இந்த பர்மா, இலங்கை அகதிகளுக்கு அளிக்கப்படுகிற உதவித் தொகை போதவில்லை என்று அவர்களே சொல்கிறார்கள்—என் தொகுதியில்தான் அந்தப் பிரச்சினை இருக்கிறது—இந்த உதவித் தொகையை அதிகப்படுத்துவார்களா? இப்போது ஒரு வீடு கட்ட 2 ஆயிரம் தான் தருகிறார்கள். அதற்குள் கட்ட முடிவதில்லை. ஆகவே இந்தப் பண உதவியை அதிகப்படுத்துவார்களா? மேலும் வந்துகொண்டிருக்கிற அகதிகளுக்கும் இந்த உதவியை அளிப்பார்களா?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து: இந்த அகதிகளுக்கு எந்த எந்த காரியத்திற்கு என்ன என்ன உதவி அளிப்பது என்பது மத்திய அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் மாநில அரசாங்கம்

---

@ 114-119-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தருகிறது. கொடுக்கிற உதவியைக் கூட சிலர் தான் அந்தக் காரியத்திற்காகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். பலபேர் வேறுவகையில் செலவிட்டுவிடுகிறார்கள். நகர்ப்புறங்களில் வீடு கட்ட ரூ. 4,100 என்றும், கிராமப்புறங்களில் வீடுகட்ட ரூ. 2,500 என்றும் இப்போது கொடுக்கப்படுகிறது. இன்னும் எவ்வளவுபேர் வந்தாலும் அவர்கள் எல்லோருக்கும் இந்த உதவியை அளிக்க மத்திய அரசு அனுமதித்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பொற்கொல்லர்களுக்கு கொடுத்த கடனை மத்திய அரசு ரைட் ஆப் செய்திருக்கிறார்கள். அதைப்போல பர்மா, இலங்கை அகதிகளுக்குக் கொடுக்கப்படுகிற கடனையும் ரைட் ஆப் செய்ய மத்திய அரசுக்கு மாநில அரசாங்கம் சிபார்சு செய்யுமா?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து : பொற்கொல்லர்களுக்குக் கொடுத்த கடனை மத்திய அரசு ரைட் ஆப் செய்ததுபற்றிய தகவல் எனக்கு இல்லை. அகதிகளுக்குக் கொடுக்கப்படுகிற கடனை ரைட் ஆப் செய்ய வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு எழுதிக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த விவர அறிக்கையில் அன் அட்டாச்டு விமன்—தனியாக இருக்கக்கூடிய பெண்களுக்கு பிசினஸ் செய்ய 2 ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது என்று இருக்கிறதா? இப்படி எத்தனைபேர்கள் உதவி பெற்றிருக்கிறார்கள்? ஐயாயிரம் ரூபாயில் இருந்து 25 ஆயிரம் ரூபாய் வரை பிசினஸ் செய்ய உதவி செய்யப்படும் என்று இருக்கிறதே, இதன்மூலம் எத்தனை பேர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து : விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. ஆ. பாத்தாமன் : பர்மா இலங்கையில் இருந்து வருகிறவர்களுக்கு சிறு தொழிற்சாலைகள் அமைக்க சிட்கோ மூலம் கடன் உதவி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து : சிறு தொழில்கள் அமைக்க 10 ஆயிரத்தில் இருந்து 25 ஆயிரம் வரை ரிபாட்ரியேட் பாங்குகள் மூலம் கடன்பெற வசதிகள் இருக்கின்றன. அதன்மூலம் தான் இப்போது கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : அகதிகளுக்கு அளிக்கப்படுகிற உதவியில் மத்திய அரசாங்கத்தின் பங்கென்ன? மாநில அரசாங்கத்தின் பங்கென்ன?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து : முழு உதவித் தொகையும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தது.



திரு. கே. எ. வகாப் : அவர்களுக்கு வீடுகள் கட்ட 2,500 ரூபாய் அளிக்கப்படுகிறது. அதைக்கொண்டு அவர்கள் வீடுகள் கட்ட முடியவில்லை, ஆகவே மத்திய அரசு பாதி, மாநில அரசு பாதி என்கிற அளவிலாவது ஏற்றுக்கொண்டு அந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கட்ட முடியாதவர்களுக்குத் தள்ளுபடி செய்வதுபற்றித்தான் எழுதியிருக்கிறோம். அந்தப் பணத்தைக் கொண்டு அவர்கள் கட்ட ஆரம்பித்து அதற்குள் முடிக்கவில்லை என்றால் மேற்கொண்டு உதவி செய்வதுபற்றியாவது யோசிக்கலாம். பணத்தை வாங்கிக் கொண்டு வேறுவகையிலேயே செலவிட்டு விடுகிறார்கள். அதனால் பிரச்சினை எழுகிறது.

திருவள்ளுவர் அறுவை விடுதி, வீரவநல்லூர்

* 405. வினா —திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—12—1972 அன்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூரில் உள்ள திருவள்ளுவர் அறுவை விடுதி பற்றிப் புகார் மனு ஏதேனும் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து : 1—12—1972 நாளிட்ட புகார் மனு வரப்பெறவில்லை. ஆனால் வீரவநல்லூரில் உள்ள திருவள்ளுவர் அறுவை விடுதி நடைமுறைகளைப்பற்றி 30—11—1972 நாளிட்ட புகார் மனு ஒன்று கல்வி இயக்குநர் அவர்களால் பெறப்பட்டு அதன் நகலை திருநெல்வேலி (தெற்கு) மாவட்டக் கல்வி அலுவலர் அவர்கட்கு அனுப்பப்பட்டு அம்மனுவில் செப்பியுள்ள புகார்களை ஆராய்ந்து அவருடைய குறிப்புரையை பணிந்தனுப்பும்படிக் கேட்கப்பட்டுள்ளது. அன்னாரின் குறிப்புரை கல்வி இயக்குநரால் எதிர்பார்க்கபபடுகிறது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, இந்த அறுவை ஆசிரமத்திற்காக அரசாங்கத்தினிடம் 32 நபர்களுக்கு மானியம் பெற்று, அங்கு 18 பேர்களைத்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையா?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து : புகார்கள் வரப்பட்டிருக்கின்றன. என்ன புகார் என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற புகார் அதில் அடங்கியுள்ளதா என்பது எனக்குத் தெரியாது.

## மேட்டுநாவிதன்பாளைய அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 406. வினா—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு தாலுக்கா, மேட்டுநாவிதன்பாளையம் கிராமத்தில் அரிசனங்களுக்கு வீட்டு மனைக்காக சுமார் 10 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய 4(1) நோட்டீஸ் வெளியிடப்பட்டதா?

(இ) ஆம் எனில், எப்போது?

(உ) தற்போது அந்த நில ஆர்ஜிதம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) ஈரோடு வட்டம், மேட்டுநாவிதம்பாளையம் (மேட்டுநாவிதன் பாளையம்) கிராமத்தில் உள்ள அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக மேற்படி ஊரில் 10.80 ஏக்கர் புஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்ய மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட 4(1) முன்மொழிவு வரைவு அரசு வாலாய ஆணை எண் 1654, ச.ந., தேதி 22—6—1970-ல் ஏற்கப்பட்டு 31—5—1971 தேதியில் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

(உ) பிரிவு 5-ஏ விசாரணையின்போது நிலச் சொந்தக்காரர்கள் ஆட்சேபணை தெரிவித்ததாலும், அந்த ஆட்சேபணைகள் ஏற்கக்கூடியதாக இருப்பதாலும், திருத்திய செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அத்திருத்திய செயற்குறிப்பு வருவாய்த் துறை வாரியத்தின் மூலமாக அரசுக்கு வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## கள் விற்பனை

* 407. வினா—திரு. என். கிட்டப்பா, திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளைப் பதனப்படுத்தி புட்டியில் அடைத்து விற்பனை செய்யும் கள் பதனத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.



திரு. என். கே. பழனிசாமி: கள்ளுக்கடை, மற்ற சாராயக் கடைகளில் எல்லாம் சுகாதார வசதி மோசமாக இருப்பதனால், அதனை ஒழுங்குபடுத்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மூலக் கேள்வி கள்ளைப் பதனப் படுத்தும் தொழிற்சாலை பற்றியது. உறுப்பினர் தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. ஆ. பாந்தாமன்: கள்ளைப் பதனப்படுத்தும் தொழிற்சாலை மைசூரில் பெருவாரியான லாபத்தை அளித்துக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்களே, இங்கும் அதைப்போல ஏற்படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மைசூர் மாநிலத்தைப்பற்றி எனக்குத் தகவல் இல்லை. இந்த ஆண்டு இங்கே அப்படிச் செய்யக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. மு. இரத்தனசபாபதி: சுண்ணாம்பு கலக்காத பதனீர் உடம்புக்கு நலம் அளிப்பதனால் பாட்டில்களில் அத்தகைய பதனீரை அடைத்து விற்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கெனவே பதனீரை பாட்டில்களில் அடைத்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: க்வாலிடி கண்ட்ரோல் எப்படி செயல்படுகிறது? ஏதாவது கேஸ்கள் பிடிபட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கள்ளோடு வேறு சில பொருள்களைக் கலந்து விற்கிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டு வழக்குகளும் போடப்பட்டிருக்கின்றன.

## மது அருந்துவதால் விளையும் தீமைகள் குறித்த செய்திப்படம்

* 408 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மது குடிப்பதால் ஏற்படும் தீமைகளை விளக்கி செய்திப்படம் மூலம் பிரச்சாரம் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. கா. காளிமுத்து: மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலைமையைக் கருதி மீண்டும் அதனை அமல்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* இல்லை.

THIRU B. VENKATASWAMY : According to the answer given by the Hon. Minister, there is no proposal to introduce a film to wipe off the evils of drink. May I know from the Hon. Minister whether at least hereafter the Government will order to introduce any film about the evils of liquor ?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* அதுபோல் யோசனை இல்லை.

*திரு. ஆ. பரந்தாமன் :* மது குடிப்பதனால் ஏற்படும் தீமைகளைக் குறித்துப் பிரச்சாரம் செய்ய ஏற்கனவே ஒரு தலைவர் தமிழ்நாட்டில் ஒரு குழுவுக்கு நியமிக்கப்பட்டிருந்தாரே, அவர் இப்போது எங்கே இருக்கிறார் என்றே தெரியாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறதே, அதைப் புரிந்துகொண்டு நமது அரசாங்கம் புதியதாக ஒரு பிரச்சாரக் குழுவை அமைத்து பிரச்சாரங்கள் மூலம், படங்கள் மூலம் அதன் தீமையை மக்களுக்கு எடுத்து விளக்க முன்வருவார்களா ?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* தற்சமயம் அத்தகைய படம் எதுவும் எடுத்துப் பிரச்சாரம் செய்வதாக இல்லை.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* ஏற்கனவே திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் குடித்துப் பழகணும்—பால் குடித்துப் பழகணும் என்பதாக நடித்த ஒரு படம் இருக்கிறதே, அந்தப் பகுதியையாவது போட்டுப் பிரச்சாரத்தை நடத்துவார்களா ?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* அங்கத்தினர்களைப் போன்றவர்கள் அந்தப் படத்தைப் பார்த்தாலே போதும்.

THIRUMATHI ALDA M. FOWLER : Will the Hon. Minister for Revenue be pleased to state if any survey has been made to find out if the evils of the consumption of liquor offset the revenue collected, the evils being deaths, ill-health and broken homes?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sorry, Sir, we do not have any such data.

*திரு. நா. வீராசாமி :* தலைவர் அவர்களே, குடிப்பது தப்பு என்றெல்லாம்
காலை 9-30 சொல்லிக்கொண்டே சிலர் குடித்துக்கொண்டிருக்கிறார்களே, மதுவிலக்குப் பிரச்சாரம் செய்கிறேன் என்று சொல்பவர்களும் அவர்களைச் சுற்றி இருப்பவர்களும் குடித்துக்கொண்டிருக்கிறார்களே, குடிக்காதே என்று சொல்லிக் கொண்டே குடிப்பது வளர்ந்துகொண்டு வருகிறதே, ஆகவே, அவரவர்



களுக்குத் தெரிந்த வகையிலே முடிவெடுக்கட்டும் என்று விட்டுவிட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* குடித்துவிட்டு குடிக்காதே என்று சொல்கிறார்கள் என்றால், தங்களுக்கு ஏற்பட்ட கேடு மற்றவர்களுக்கு வரக் கூடாது என்று பொருள்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. வீராசாமியினுடைய ஸ்டாண்ட் என்ன என்று சொல்லவில்லையே. (சிரிப்பு.)

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the evil of drink is known but unfortunately a bad idea that taking liquor is good and healthy is being spread throughout the State and it has even spread to educational institutions. So at least in the interest of putting an end to all these things, will the Government think of producing a film to show the bad effects of liquor ?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் இல்லை. என்னிடம் தகவல் கிடையாது.

*திரு. தி. பொன்னுமலை :* தலைவர் அவர்களே, கள்ளுக்கடை வந்த பிறகு, அதனால் நோய்கள் குறைந்து, ஆஸ்பத்திரிகளிலே மருத்துவத்திற்கு வருகிறவர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது உண்மையா? அப்படிப்பட்ட தகவல் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* தலைவர் அவர்களே, அப்படி எதுவும் தகவல் இல்லை.

*திரு. கே. எ. வகாப் :* மது அருந்தக் கூடாது என்பதற்காக ஒரு பிரச்சாரக் குழு மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டதே அந்தக் குழு ஏதாவது உருப்படியான காரியங்களைச் செய்திருக்கிறதா ? அல்லது வேறு அமைச்சர்கள் பங்கேற்கிற குழு ஒன்றை அமைத்து, பிரச்சாரம் செய்ய ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* அந்தக் குழு அவராக அமைத்துக் கொண்ட குழு. அதைப்பற்றி எனக்குத் தகவல் கிடையாது.

*திரு. ஆ. கு. சுப்பையா :* தலைவர் அவர்களே, கள் இறக்குவது அதிகமாகி விட்டது. அதனால் வியாபாரம் பாதிக்கப்படுகிறது என்று கள் ஏலக்காரர்கள் அரசாங்கத்திடம் முறையிட்டார்களா, அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன செய்ய யோசித்திருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, முறையீடுகள் வருகின்றன. முறையீடுகள் வரும்பொழுது போலீசாரை அனுப்பி அவர்களையெல்லாம் பிடித்து, புதிதாக கொண்டுவந்த சட்டத்தின்படி தண்டனைக்கு ஆளாக்கிக்கொண்டிருக்கிறோம்.

*Exploration of mineral deposits*

* 409 *Q*.—THIRU N. K. PALANISAMY :
THIRU N. DENNIS : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government approached the United Nations Development Programme Committee for taking up the mineral development in this State; and

(*b*) if so, the details of the same ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை@ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவர் அவர்களே, நம் மாநிலத்தில் செம்பும், யுரேனியமும் மற்ற மாநிலங்களைவிட அதிகமாக கிடைப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதை எக்ஸ்பிளாய்ட் பண்ண சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது யூ.என்.டி.பி. பற்றிய கேள்வி. அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

**திரு. என். டென்னிஸ் :** இதன் பயனாகத் தொழில் அபிவிருத்திக்கான மூலப் பொருள்கள் அதிகரிக்கப்பட்டு, அதன்மூலம் தொழில் அபிவிருத்தி ஏற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த ஆராய்ச்சியில் அப்படிப்பட்ட மூலப் பொருள்கள் கிடைக்குமானால், அவை தொழிலுக்குப் பயன்படுத்தப் படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, சேலம் ஆற்காடு, தர்மபுரி, சேலம் போன்ற பகுதிகளிலே ஆராய்ச்சி நடப்பதற்கு ஏற்பாடு ஆகியிருப்பதாக இந்த அறிக்கையிலே பார்க்கிறேன். அது சம்பந்தமாக, விவரமாக, திட்டவட்டமாக, ஏதாவது உலோகப் பொருள்களை எடுப்பதற்கு வழிவகைகள் இருக்கின்றனவா ? அப்படி இருந்தால், அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

---

@ 120--121-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 'வெர்மிகுலைட்' வட ஆற்காட்டிலே கண்டு பிடிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலையிலே அயர்ன் ஓர் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. 'சைரோகுளோர்' என்ற தாதுப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பல பொருள்கள் அங்கங்கே தென்படுகின்றன. தொழில் வளர்ச்சிக்குப் போதுமான அளவுக்கு அவைகள் கிடைத்தால்தான் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடியும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ரூ. 120 லட்சம் செலவிட்டு, மூன்றுண்டு காலமாக, இந்த சர்வேயெல்லாம் நடத்தி இந்த 4 ஜில்லாக்களைப் பொறுத்த வரையில் விவரங்கள் கிடைத்திருக்கின்றனவே, குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்திலே செம்பு, ஈயம், துத்தநாகம் ஆகிய கனி வளங்கள்—செம்பு 9 லட்சம் டன் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறதே, அதற்காக அரசு மத்திய அரசிடத்திலிருந்து கிளியரன்ஸ் வேண்டுமென்று ஏதாவது கேட்டிருக்கிறார்களா, அல்லது அவற்றை எடுத்துப் பயன்படுத்த ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மொத்தமாக இது சர்வே செய்யப்பட்டது. அங்கங்கே எந்த எந்தப் பொருள்கள் அதிகமாக கிடைக்கின்றனவோ, அதற்கு தொழில் துறையிலே நாம் முயற்சி எடுக்கிறோம். இந்த ஆராய்ச்சியிலே மிக அதிகமாக கிடைத்தது என்று தெரிய வந்தது திருவண்ணாமலையிலே அயர்ன் ஓர்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினு எண் 410-ஐயும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

* 410 வினு.—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டத்தில் கனிவள ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் கனி வள ஆராய்ச்சியை நடத்தியதுபோல், தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள செஞ்சி, பாடிப்பள்ளம், சென்னூர், பாக்கம் மலைகளிலெல்லாம் கனி வளம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அங்கு மீண்டும் ஆராய்ச்சி நடத்த நமது அரசு முற்படுமா என அறிய விரும்புகிறேன்.

---

@ 121-122-ம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 மார்ச் 17

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதிலே இந்த விவரம் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. செம்பு, ஈயம், துத்தநாகம் இவைகளெல்லாம் தென்னாற்காடு, கள்ளக்குறிச்சி வட்டம் மாமண்டூருக்குப் பக்கத்திலே கிடைக்கிறது. சுண்ணாம்புக் கிளிஞ்சல்கள் திண்டிவனம் வட்டத்தில் மரக்காணத்தில் கிடைக்கிறது. சுண்ணாம்புக்கல் விழுப்புரம் வட்டாரத்தில் வானூரைச் சுற்றிலும், திண்டிவனம் வட்டத்தில் இராயப் புதுப்பாக்கம், துருவைப் பக்கத்திலும் கிடைக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற விவர அறிக்கையில் இந்த திட்ட ஆவணம், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்தால் ஏற்பளிக்கப்பட்டு, மத்திய அரசிடமிருந்து இசைவு வரவில்லை என்ற தகவல் தரப்பட்டிருக்கிறது. அது எப்பொழுது அனுப்பப்பட்டிருக்கிறது? இப்பொழுது ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கிற உதவிகள், இசைவு வராத காரணத்தால் தாமதம் ஆகிறது. அதை விரைவுப்படுத்த அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முதல் திட்டம் அனுமதி பெற்றுத்தான் நடத்தப்பட்டது. செகண்ட் ஃபேசுக்குத்தான் அனுமதி கேட்டிருக்கிறோம். விரைவிலே வந்து விடும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே தென்னாற்காடு மாவட்டத்தில் கிடைக்கின்ற கனி வளங்கள் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. செம்பு, ஈயம், துத்தநாகம் கிடைப்பதாகத் தெரிகிறது. ஆனால், வட ஆற்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் என்ன என்ன மூலப் பொருள்கள் கிடைக்கின்றன என்ற விவரங்கள் அதிலே குறிப்பிடப்படவில்லை. தென்னாற்காட்டிலே கிடைக்கின்ற அந்த செம்பு, துத்தநாகம் உயர்வாக இருக்கிறது. இப்பொழுது இந்தியாவிலே செம்பு, துத்தநாகம் இறக்குமதி செய்யப்படுகிறது. ஆகவே, அங்கு 9 லட்சம் டன் கிடைப்பதால், அவைகளை எக்ஸ்டிராக்ட் செய்வதற்கு நம்முடைய தமிழக அரசே ஏற்பாடு செய்யுமா? அப்படி ஏற்பாடு செய்வதற்கு மத்திய அரசு ஏதாவது தடை செய்கின்றதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கேள்வி, தென்னாற்காடு மாவட்டத்தைப் பற்றியிருக்கிற காரணத்தால், அதைப்பற்றி மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாமண்டூர் ரீஜியனிலே அதுபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. முன்னாலே சொன்னபடி, தொழில் தொடங்குவதற்கு ஏற்றபடி அங்கு கனி வளங்கள் இருந்தால், தொழில் தொடங்க முடியும். ஆகவேதான் அந்த ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



1973 மார்ச் 17]

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** மாமண்டூரிலே கிடைக்கக் கூடிய செம்பு, அதை வெட்டி எடுப்பதற்கு உண்டான அறிக்கையினை ஏற்றுக் கொண்டால், சிக்கனமாக இருக்கும் என்று ஏற்கனவே ஒருமுறை இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டது. ஜப்பானியக் குழு நிபுணர்கள் கூட அதை வந்து பார்த்துவிட்டு, அவர்கள் வெட்டி எடுப்பதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்தால், அவர்களே கூட அங்கே ஒரு பிராஜக்ட் ஏற்படுத்துவதற்கும் முன் மாதிரியாக வந்தார்கள். இது சம்பந்தமாக அரசாங்கத்திலே ஏதாவது விவரம் இருக்கிறதா, மாநில அளவிலாவது எவாலுவேஷன் காஸ்ட் ஆப் பிராஜக்ட் இவைகளையெல்லாம் போட்டு மத்திய அரசு இதற்கு முன்வரவில்லையென்றாலும், இப்படிப்பட்ட பிராஜக்ட்டுகளை, மிக முக்கியமாக உள்ள இந்த பிராஜக்டினை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எகனாமிக்கலி வயபிளாக இருந்தால் ஏற்றுக் கொள்ளலாம். சர்வேயிலே அந்தப் பகுதியிலே இது கிடைப்பதாக, காப்பர், கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னபடி அங்கே எடுத்து தொழில் நடத்தலாம் என்று ஆராய்ச்சியில் தெரிந்தால்தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. எ. வகாப் :** திருவண்ணாமலையிலே இரும்புக்கனி கிடைப்பதாகச் சொன்னார்கள். அப்படி கிடைக்கின்ற இரும்புக் கனியை கனிவள நிபுணர் ஆராய்ச்சி செய்து இது மிகவும் தரமானது என்று சொல்கிறார்களா? ஆகவே, அங்கே உடனடியாக கனியை எடுக்க அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி கேளுங்கள். நீங்களாகவே, பதில் சொல்வதைப்போல், 'ஆகவே' என்று சொன்னால் எப்படி?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திருவண்ணாமலையிலுள்ள இரும்புக் கனியை ஜப்பான் நிபுணர்கள் பார்த்துச் சென்றிருக்கிறார்கள். அதைக் கொண்டு எப்படி இரும்புத் தூள் தயாரிக்கலாம் என்ற அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கை பரிசீலனையில் இருக்கிறது. மத்திய அரசாங்கத்தோடு கலந்து முடிவெடுக்கப்படும்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரின் ஆராய்ச்சிக் குழு இந்த மாநிலம் பூராவும் ஆராய்ச்சி செய்கின்றதே, அது இந்த இந்த மாநிலத்திலே இன்ன இன்ன கனி வளங்கள் கிடைக்கின்றன என்று சர்க்காருக்குத் தெரிவித்ததா? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** யூ.என்.டி.பி. திட்டத்திலே அப்படிப்பட்ட தகவல் அரசாங்கத்திற்கு தரப்படுகிறது. எங்கெங்கே அதிக வாய்ப்பு கனி வளங்களுக்கு இருக்கிறதோ, அங்கேயெல்லாம் தொடர்ந்து ஆராய்ச்சி செய்யப்பட்டு, அதை எந்த அளவுக்குப் பயன்படுத்தமுடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

**திரு. மே. சி. தூயமணி:** நீலகிரி மாவட்டத்தில் அயர்ன் ஓர், பாக்சைட், மாக்னசைட் போன்ற கனிப் பொருள்கள் பற்றி ஆராய்ச்சி நடக்கிறதா? அவற்றைப் பயன்படுத்த அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த ஆராய்ச்சியில் எல்லா மாவட்டங்களும் எடுத்துக்கொள்ளப்படும். நீலகிரியைப் பொறுத்த அளவில் ஏற்கனவே பாக்சைட் தோண்டி எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** 27 திங்கள் கால அளவில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டத்திற்கு மத்திய அரசின் இசைவை எதிர்பார்ப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்கள் எத்தனை சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் எவ்வளவு ரூபாய் செலவில் எந்தெந்த மாவட்டங்களில் நடைபெறும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** முதல் திட்டம் ஏற்கனவே நடைபெற்று வருகிறது என்று சொன்னேன். இரண்டாவது திட்டத்திற்கு அனுமதி கேட்டு அனுப்பி இருக்கிறோம். எந்த அளவுக்குச் செய்யப்படும் என்ற விவரம் இல்லை.

THIRU B. VENKATASWAMI: Is it a fact that gold is available in Dharmapuri district because it is a adjacent to Kolar gold fields?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நீலகிரி மாவட்டத்தில் சிறிய அளவு தங்கம் கிடைப்பதாக ஆராய்ச்சி கூறுகிறது. முழுமையாக அதைப்பற்றிய விவரம் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Many private industrialists who come to Vepanapali Firka in Krishnagiri taluk have dug pits to find out whether there is gold. Such things are going on. We do not know the results. Will the Hon. Minister for Industries tell us whether there would be a comprehensive investigation of minerals in Dharmapuri district?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** யு.என்.டி.பி. ப்ராஜக்ட் அடிப்படையில் தான் தமிழ்நாடு ஏரியா பூராவும் சர்வே செய்து எந்தெந்தப் பகுதிகளில் என்னென்ன மினரல்கள் கிடைக்கின்றன என்று ஆராய்ச்சி செய்கிறார்கள்.



தங்கத்தைப் பொறுத்தவரை நீலகிரியில் சிறிய அளவு கிடைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை முழுமையாகப் பயன்படுத்த முடியுமா என்பது தான் பிரச்சினை. பொருளாதாரத்திற்கு வசதியாக இருக்குமா என்பது மற்றொரு பிரச்சினை. இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றபடி பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தத்தக்க அளவுக்கு அதிகம் கிடைக்கவில்லை என்று தெரிகிறது.

**திரு. ஆ. பாந்தாமன்:** யு.என்.டி.பி. கமிட்டியின் பரிந்துரை அடிப்படையில் கிடைக்கக்கூடிய கனிவளத்தைப் பெருக்க அவர்களே முன்வருகிறார்களா அல்லது மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதற்கு ஐ.நா. உதவி இருக்கிறது. மத்திய அரசாங்கம் அனுமதி தருகிறது.

**திரு. ப. முத்துசாமி:** தமிழ்நாட்டில் விலை உயர்ந்த பச்சைக் கற்கள், வைரக் கற்கள் கிடைப்பதாகத் தகவல் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தனியாகக் கேள்வி கேட்கவேண்டும்.

**திரு. எம். தேவராசன்:** நீலகிரியில் கிடைக்கும் பாக்சைட்டைப் பயன்படுத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதற்கு நாம் சிலருக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். அவர்கள் அதை எடுத்து தொழிலுக்குப் பயன்படுத்துகிறார்கள். மற்ற விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. என். கே. பழனிசாமி:** மத்திய சர்க்கார் குழு திருச்சியில் யுரேனியம் அதிகமாகக் கிடைப்பதாகத் தகவல் கொடுத்திருக்கிறார்களா? அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** திருச்சியைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்கவேண்டும்.

## *Fossil trees*

*411. Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Geological Department has found out fossil trees near Cuddalore;

(b) whether any investigation has been conducted thereon; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) முதல் (உ) வரை. கடலூருக்கருகில், புவியியல் ஆராய்ச்சித்துறை, கல்லாக உறைந்த மரங்கள் எதனையும் கண்டு பிடிக்கவில்லை. எனினும், தென் ஆற்காடு மாவட்டம், திருவக்கரைக்கருகில் கண்டுபிடிக்கப்பட்ட கல்லாக உறைந்த மரக்கட்டை அமைந்துள்ள பகுதி, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பூங்காவாக இந்தியப் புவியியல் ஆராய்ச்சித் துறையால் வேலியிட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. புவியியல் ஆய்வுகளுக்காக பண்டைக் காலத்தில் இருந்தவையும் கல்லாக உறைந்தவையுமான இந்த மரப் பகுதிகளில் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு அவை வேலியிட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

### கொண்டக்கடலை விநியோகம்

* 412 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசு, வெளி மாநிலங்களிலிருந்து கொண்டக்கடலை தற்போது இறக்குமதி செய்கின்றதா ?

(இ) அப்படி இறக்குமதி செய்யப்படும் கொண்டக்கடலையை இங்குள்ள வணிகர்களுக்கு வழங்குவதில் கையாளப்படும் முறைகள் யாவை ?

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### *Government Ration Shop, Gopalapuram*

* 413 Q.—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that the Government Ration Shop at Gopalapuram was looted on 21st August 1972; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி : (அ) 21-8-1972-ல் கோபால புரத்தில் உள்ள அரசு பங்கீட்டு பொருள் சில்லறை விற்பனைக் கடையில் ரூ. 9,524 ரொக்கம் வைத்திருந்த பெட்டி ஒன்று களவாடப்பட்டது. வேறு இழப்பு எதுமில்லை

(இ) காவல் துறையினரிடம் புகார் ஒன்று தாக்கல் செய்யப்பட்டுப் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது, ஒரு காவலாளி மீதும் சில்லறை விற்பனைக் கடையின் கண்காணிப்பாளர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப் பட்டுள்ளது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் 414, 415 ஆகிய இரண்டும் மாண்புமிகு பின்தங்கிய நல அமைச்சர் அவர்கள் வேண்டு கோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (2) ஒத்திவைப்புத் தீர்மானம்

### மதுரையில் பட்டதாரி ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருப்பதும் அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. சோ. அழகர்சாமி அவர் களும் கீழ்க்கண்ட பிரச்சினையைப்பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிறார்கள்—அதாவது

The arrest in Madurai on 16th March 1973 of 252 BT teachers including 22 women teachers and failure of Government to settle the dispute and unrest in Madurai and other areas.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களும் ஏறத்தாழ இதைப்போன்ற ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது பேரவை யில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் எப்படி இது பேரவையை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு 42-வது விதியின்கீழ் வருகிறது என்பதைப்பற்றி மட்டும் சுருக்கமாக விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, பி.டி. ஆசிரியர்கள் பிரச்சினை பல முறை இந்தச் சபையில் விவாதிக்கப்பட்டது என்பதை அறி வோம். சென்ற தடவை இதுபற்றி இங்கு கிளப்பப்பட்ட போதெல்லாம், சென்னை நகரத்தில் பி.டி. ஆசிரியர்கள் தடை உத்தரவை மீறினார்கள், அதனால் கைது செய்யப்பட்டார்கள் என்று விளக்கம் கூறினார்கள். அவர் களது பிரச்சினை தீராத காரணத்தால்தான் மதுரை நகரத்தில் 250 பி.டி. ஆசிரியர்கள் ஊர்வலமாகச் சென்றார்கள். 22 பெண்கள் உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக இந்த ஆசிரியர்கள் சம்பந்த மாக அரசு தங்களுக்கு நேரடியாகச் சவால் விட்டிருக்கிறார்கள் என்ற முறையில் இந்தப் பிரச்சினையை அணுகி இருக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

[1973 மார்ச் 17

சென்னையில் அன்றைக்குத் தடை உத்தரவை மீறி சிறைக்குச்' சென்ற
வர்களை பல கட்சித் தலைவர்களும் சென்று பார்த்திருக்கிறார்கள். இப்போ
தாவது இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையை நீடிக்க விடாத முறையில்
அதைப்பற்றிப் பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர்களையாவது அல்லது
இந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் தலைவர்களையாவது
கலந்து இதை நீடிக்க விடாத அளவுக்கு அரசு நடவடிக்கை எடுத்துக்
கொள்ள வேண்டுமென்பதுதான் நான் இதைக் கொண்டு வந்ததன் நோக்கம்.
இது சென்னையோடு நிற்காமல் ஒவ்வொரு இடத்திலும் பரவிக் கொண்டிருக்
கின்ற நிலைமை இருக்கிறது. இந்த அரசின் போக்கு பிரச்சினையைத் தீர்க்க
உதவிகரமாக இல்லை என்ற முறையில்தான், இதிலே அரசுக்குப் பங்கு இருக்
கிறது என்ற முறையில்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன்.

இந்தச் சம்பவம் முன்பு நடந்த சம்பவம் அல்ல. நேற்றுத்தான் நடந்
திருக்கிறது. சாதாரணமாக இதைப் பற்றி மானியக் கோரிக்கையில் விவா
திக்க முடியாத நிலையில் குறிப்பிட்ட பிரச்சினையாக இருப்பதால், இது
மதுரை மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஆசிரியர்களைப் பொறுத்த பிரச்சினை
யாக இருக்கும் காரணத்தால், இது மற்ற இடங்களுக்குப் பரவாமல் இருப்ப
தற்கு அரசு தடுக்கக்கூடிய அல்லது நல்ல முறையில் தீர்க்கக்கூடிய
நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்காக இந்த ஒத்தி
வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, சபையின்
மற்ற நடவடிக்கைகளை இரண்டு மணி நேரமாவது ஒத்தி வைத்து இதைப்
பற்றி விவாதிப்பது இதிலே தீர்வு காணுவதற்கு உதவிகரமாக இருக்கு
மென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த ஒத்தி
வைப்புப் பிரச்சினையைக் கொண்டுவந்த கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்
திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இது தீராத பிரச்சினை என்று குறிப்பிட்
டார்கள். இது தீராத பிரச்சினை அல்ல; ஏற்கனவே தீர்த்து வைக்கப்பட்ட
பிரச்சினையை வைத்துக்கொண்டுதான் பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டத்
திலே ஈடுபட்டார்கள் என்பதை நாடு நன்றாக அறியும். இந்த அவையிலும்,
மேலவையிலும் நானும் மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் அவர்களும்
இந்தப் பிரச்சினை குறித்து, அரசு எந்த அளவுக்கு அக்கறை எடுத்துக்
கொண்டது என்பதையும் எத்தனை முறை ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளோடு
நாங்கள் பேசியிருக்கிறோம் என்பதையும் இறுதியாக அவர்கள் போராட்டம்
தொடங்குவதற்கு முன்புகூட, மேலவையிலும், பேரவையிலும் அவர்களுடைய
கோரிக்கைகள் ஏற்கப்பட்டுவிட்டன என்பதை எடுத்துக் காட்டியும் அதிலே



1973 மார்ச் 17] [டாக்டர் மு. கருணாநிதி]

அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தைப் போக்குவதற்காக மீண்டும் அழைத்து அந்தச் சந்தேகத்திற்கான விளக்கங்கள் எல்லாம் அளிக்கப்பட்டன என்பதையும் வெகு விரிவாக நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

அதற்குப் பிறகும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்கள் போராட்டத்தை நிறுத்துவதாகச் சொல்லவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்வது தவறு என்றெல்லாம் கூறினார்கள். போராட்டத்தை நிறுத்துவதாகச் சொல்லித்தான் சென்றார்கள் என்று மேலவை உறுப்பினர் திரு. ராஜா ஐயர் அவர்கள் அங்கு எழுந்து சாட்சியம் கூட அளித்தார்கள். இவ்வளவுக்கும் பிறகும் போராட்டம் நடைபெற்றிருக்கிறது. திரு. தங்கமணி அவர்கள் சொன்னதைப்போல் இதில் அரசு ஏதோ விடாப்பிடியாக இருக்கவேண்டும் அல்லது கௌரவப் பிரச்னையாகப் பார்க்க வேண்டும் என்பதல்ல. ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகும் இது போன்ற ஒரு கிளர்ச்சியில் ஈடுபடுவது ஆட்சிப் பொறுப்பில் எந்தக் கட்சி இருந்தாலும் எதிர்காலத்தில் வளரவேண்டிய சமுதாயத்திற்கு அது உகந்ததாக இருக்காது என்ற உணர்வைத்தான் நான் பலமுறை இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஆனால் பொறுப்பு மிக்க எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் கலந்து பேசி ஒரு முடிவு காணவேண்டும் என்று தங்கமணி அவர்கள் கூறினார்கள்.

இன்று காலையில்கூட பொறுப்பு மிக்க தலைவர்கள் சிலர் என்னை என் இல்லத்தில் சந்தித்தார்கள். காலையில் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் கழகத்தின், இன்று அந்தப் போராட்டத்தை நடத்துவதற்காக அமைக்கப்பட்டிருக்கிற திரு. மைல்சாமி அவர்களும், சிங்காரவேலு அவர்களும் கையெழுத்திட்டு என்னிடத்தில் காலையில் ஒரு அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின்படி போராட்டத்தை அவர்கள் நிறுத்தி விட்டதாகக் கூறியிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்.) அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பது, "5—3—1973-ல் இருந்து தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகம் நடத்திவரும் நேரிடை நடவடிக்கை தொடர்பாக 16—3—1973 வெள்ளியன்று கூடிய நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவை அரசிற்குச் சமர்ப்பிக்கின்றது" என்று தொடங்கி, "1—4—1970-க்குப் பிறகு பணியில் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களின் பணிவரை முறைப்படுத்தப்படுவது பற்றிய தமிழக அரசின் ஆணைக்கும் 10 ஆண்டுகள் பணி புரிந்த பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு நிலை பெற தகுதி உடையோர் ஆவர் என்ற அரசின் அறிவிப்பிற்கும், தமிழக அரசின் விளக்கங்கள் திருப்தியளிப்பதாக இருப்பதாலும்,

இணைப்பு சம்பந்தமான முயற்சியில் அரசு ஈடுபடும் வகையில் அதன் கவனத்தை ஈர்ப்பதில் நமக்கு வெற்றி கிடைத்திருப்பதாலும்,

தனியார் துறை பள்ளி ஆசிரியரின் பணிப்பாதுகாப்பிற்கு வகை செய்யும் விதத்தில் மசோதா இறுதி வடிவமாகி சட்டமன்றத்திற்கு வர இருப்பதாலும்,

மற்றக் கோரிக்கைகளைக் கவனிப்பதற்கான அரசின் கவனத்தை ஈர்க்க இது வரை நடத்திய நடவடிக்கை போதுமானது என நடவடிக்கைக் குழு கருதுவதாலும் என்று சில கருத்துக்களைத் தொடர்ந்து சொல்லி போராட்டத்தை நிறுத்திக்கொள்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதில் கையெழுத்து இட்டிருப்பவர்கள் திரு. மைல்சாமி, திரு. சிங்காரவேலு என்ற நடவடிக்கைக் குழுவில் உள்ளவர்கள்.

அந்த அறிக்கையில் கையெழுத்திட்டிருக்கிற மற்றும் சிலர் திரு. ராஜா ஐயர், எம்.எல்.சி., திரு. சுவாமிநாதன், எம்.எல்.சி., திரு. கணபதி, எம்.எல்.சி., ஆகியோர் கையெழுத்திட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையை என்னிடத்தில் தருகிற நேரத்தில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும், தவத்திரு குன்றக் குடி அடிகளார் அவர்களும் உடன் இருந்திருக்கிறார்கள். இவ்வளவு சாட்சியங் களோடு இப்படி ஒரு அறிக்கை என்னிடம் தரப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்).

இதைத் தெரிவிப்பதோடு அவர்கள் போராட்டத்தை அவர்களே முன்வந்து நிறுத்திக்கொண்டதற்காக எனது மகிழ்ச்சியை அறிவிக்கிறேன். போராட் டத்தில் ஒரு பகுதியினர் ஈடுபட்டாலும் கடமையுணர்ச்சியோடு மற்றொரு பகுதியினர் தொடர்ந்து பணியாற்றி வந்தமைக்கு எனது நன்றியையும் பாராட்டுதல்களையும் அந்த ஆசிரியப் பெருமக்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சிலர் தங்கள் செயலுக்காக வருந்தி கடிதம் எழுதித் தந்து மீண்டும் தொடர்ந்து பணி புரிய வந்திருப்பதற்காக அவர் களது கடமையுணர்ச்சியையும் நான் வரவேற்கிறேன். அதேபோல் போராட் டத்தில் ஈடுபட்ட மற்ற ஆசிரியர்களும் கடமை உணர்வோடு பணியாற்ற முன் வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். போராட்டத்தை அவர்கள் நிபந்தனையின்றி எல்லாக் கட்டத்திலும் வாபஸ் பெற்றுக்கொண்ட காரணத் தினால் சிறையில் உள்ள ஆசிரியர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படு வார்கள் என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்). இதற்கு மேல், அவையை ஒத்திவைத்துப் பேச எதுவும் இல்லை என்பதை தலைவர் அவர் களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. கே. டி. கே. தங்கமணி: முதலமைச்சர் அவர்கள் சொன்னதில் மகிழ்ச்சியடைபவர்களில் நானும் ஒருவன். சாதாரணமாக ஒரு போராட்டம் முடிகிறபோது ஒரு க்ளாஸ் எப்போதும் சேர்ப்பது உண்டு என்று சொல்லி.

" No action of any sort will be taken against anybody for taking part in the struggle in any form "

அதாவது எந்தவிதமான 'விக்டிமைசேஷனும்' இருக்கக் கூடாது. அவர் களுடைய சர்வீஸ் பாதிக்கக்கூடிய முறையில் மற்றவைகள் இருக்கக் கூடாது. இன்று சிலர் கடமையுணர்ச்சியோடு வந்தார்கள் என்று அவர்கள் சொன் னார்கள். நாங்கள் அம்மாதிரியாக—போராட்டம் நடக்கிறபோது அவர்கள் வந்து வேலை செய்கிறார்கள் என்றால் அவர்களைக் கடமையுணர்ச்சி உள்ளவர்கள் என்று நாங்கள் எல்லாம் கருதுவதில்லை. அப்படி முதல் அமைச்சர் அவர்கள் கருதுவதாக இருக்கலாம். அவர்களை எல்லாம் நாங்கள் வேறு முறையில் தான் கருதுவது வழக்கம். அவர்கள் பேரில் எந்தவிதமான நடவடிக்கை களும் எடுக்கப்படக்கூடாது, எடுக்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதம் வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது அரசாங்கமும் ஆசிரியர்களும் உட்கார்ந்து செய்து கொண்ட ஒப்பந்தம் அல்ல. அப்படி ஒப்பந்தமாக இருந்தால் இரண்டு பேர்களும் கூடக் கையெழுத்துப் போட்டு இன்னின்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட மாட்டாது, ஆகவே வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு விடுங்கள் என்று சொல்லலாம். அவர்களாகவே நாங்கள் போராட்டத்தைக் கைவிட்டு விட்டோம் என்று அவர்களாகவே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே தாங்களாக போராட்டத்தை கைவிட்டுவிட்ட தாக எழுதிக் கொடுத்திருப்பதால் அரசே யாரையும் கேட்காமல் அவர்களை யெல்லாம் இன்று மாலையே விடுதலை செய்துவிடலாம் என்றிருக்கிறது.

அவர்களின் பேரில் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றார்கள். இந்த அரசு யாரையும் பழி வாங்கிப் பழக்கப்பட்டதல்ல. சேலத்தில் நடைபெற்ற கைத்தறியாளர்கள் மறியல் போராட்டத்தில் கூட விடுதலையானவர்கள் போக மறியலில் ஈடுபட்டுத் தண்டிக்கப்பட்டவர்கள் சிறையிலே இருந்தார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்களும் என்னிடம் அதைப்பற்றிச் சொன்னார்கள், அவர்களை எல்லாம் விடுதலை செய்து விடலாம் என்று. 300, 400 பேர்கள் இருப்பார்கள், அவர்களையெல்லாம் விடுதலை செய்யச் சொல்லி நேற்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே யாரையும் பழி வாங்கவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை.

கடமையுணர்ச்சியோடு வந்தவர்களுக்கு அவர்கள் வைக்கும் பெயர் வேறு என்று சொன்னார்கள். அவர்கள் அவர்களுடைய அதிலே உலகக் கண்ணோட்டத்தில் அந்தப் பெயர்களை எல்லாம் வைப்பார்கள். ஆனால் நாங்கள் தமிழ் நாட்டு பண்பாட்டுக் கண்ணோட்டத்தோடு அவர்கள் கடமையுணர்ச்சியோடு பணியாற்றினார்கள் என்றுதான் நாங்கள் அதற்குப் பெயர் வைக்க கடமைப் பட்டு இருக்கிறோம். யாரையும் அரசு பழி வாங்க முயலவில்லை, அப்படிப் பழி வாங்கும் எண்ணம் இந்த அரசுக்குக் கிடையாது.

ஆசிரியர்கள் பிரதிநிதிகளோடு, மேலவை உறுப்பினர்கள் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் கூட அவற்றைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் விடுதலை பெற்ற பிறகு அந்த ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் என்னையும், கல்வி அமைச்சர் அவர்களையும் சந்திக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சந்திக்கத் தயாராக இருப்பதாகச் சொல்லியிருக்கிறோம். அப்படிச் சந்திக்கும்போது எவை எவை எப்படிப் பேச வேண்டுமோ அப்படிப் பேசி அந்தப் பிரச்னைகள் தீர்க்கப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின்னால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லாத காரணத்தால் இதற்கான அனுமதியை நான் மறுக்கிறேன்.

### (3). 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**நிதிக் கோரிக்கை எண் 27—வளர்ச்சித்திட்டங்கள் முதலியன.**

**நிதிக் கோரிக்கை எண் 34—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 27—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 25,36,55,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion to discuss policy :—

"That the allotment of Rs. 25,36,55,800 under Demand No. 27—Community Development Projects, etc., be reduced—by Rs. 100."



THIRU B. VENKATASWAMY : Sir, I move the following cut motion to discuss policy :—

"That the allotment of Rs. 25,36,55,800 under Demand No. 27—Community Development Projects, etc., be reduced by Rs. 100."

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following cut motion to discuss the necessity to reorganise the Panchayat Unions :—

"That the allotment of Rs. 25,36,55,800 under Demand No. 27—Community Development Projects, etc., be reduced—by Rs. 1,000."

*நிதிக் கோரிக்கை எண் 34—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள்.*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 34—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,29,31,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, கடற்கரையோரப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வழங்குவதில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதைக் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 34—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,29,31,400-ல் ரூ. 100-ஐ குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** துணைத் தலைவர் அவர்களே, அண்மையில் ஏற்பட்ட புயல் சேதத்தைச் சீர் செய்யும் வேலைகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 34—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,29,31,400-ல் ரூ. 100-ஐ குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I move the following cut motion to discuss about the grants to the Madras Corporation for Metropolitan Roads Scheme—

"That the allotment of Rs. 5,29,31,400 under Demand No. 34—Public Works—Grants-in-Aid be reduced by Rs. 100.

திரு. ஏ. சுவாமிதாஸ்: துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், தக்கலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மாம்பழத்துறை என்னுமிடத்தில் அணை கட்டி நீர் தேக்கி வைத்து அன்டைக் கிராமங்களான வில்லுக்கிரி, நுள்ளிவிளை, கண்டன்விளை, இரணியல், மாடத்தட்டுவிளை, பேயன் குழி முதலிய கிராமங்களுக்கும், தக்கலை, குளச்சல் நகரங்களுக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 34—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,29,31,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிதிக் கோரிக்கைகளும் * வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன்னால் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

முற்பகல் 10-00

திரு. என். கே. பழனிசாமி: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்தச் சமுதாய வளர்ச்சிக்காக ரூ. 94.69 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இந்த ஒதுக்கப்பட்ட பணத்தில் பெரும் பகுதி நிர்வாகத்திற்கும், கல்விக்கும் செலவிடப்பட்டு, அபிவிருத்திக்காக கொஞ்சம்தான் விடப்பட்டிருக்கிறது. இந்தச் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் இந்த நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவது என்பதாகும். இதற்கு 1956-ம் வருடத்திலிருந்து இந்தியா பூராவிலும் ஒரு திட்டத்தை அமல் செய்து, அமெரிக்காவின் உதவி யால் முதலில் செய்யப்பட்டு வந்தது—அதன் காரணமாக ஒவ்வொரு பஞ்சா யத்து யூனியனுக்கும் ரூ. 2 லட்சத்தை மானியமாகக் கொடுத்து வந்தார்கள். இந்த 10 வருட காலத்தில்—அந்தத் திட்டம் அமலான பிறகு—எந்த அளவுக்கு உணவு உற்பத்தி ஆகி இருக்கிறது என்று அவர்கள் கொடுத்த எவல்யூஷன் ரிப்போர்ட்டில்—அந்த உணவு உற்பத்தித் திட்டம் அதிக பலன் தரவில்லை

* இந்தக் கோரிக்கைகள் பற்றிய விளக்கக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.



என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1966-67-லிருந்து இது வரையிலும் சர்க்கார் அதற்கான மாற்றுத் திட்டம் எதையும் ஏற்படுத்தவில்லை. அதற்கு மானியம் கொடுத்து வந்தார்கள். அதுவும் இப்போது நின்று விட்டது. சர்க்கார் ஸ்பெஷல் ஸ்கீம், அக்ரிகல்சரல் ஸ்கீம் என்று இருந்தது. இந்த 6 வருஷமாக அதுவும் இல்லை. சர்க்கார் இதற்கு உடனடியாக ஒரு மாற்றுத் திட்டம் ஏற்படுத்தி, அதில் ஒரு அக்கரை செலுத்தியிருந்தால் இன்று இந்த நிலைமையேற்பட்டு இருக்காது.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

இன்று பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கிற கிராம சேவக்குக்கள் பூச்சி மருந்து விற்கும் கடைக்காரர்கள் போல் இருக்கிறார்களே தவிர விவசாய அபிவிருத்திக்கான முன்னேற்றத் திட்டங்கள் எதுவும் செய்வதில்லை. ஒவ் வொரு யூனியனிலும் 10, 20 கிராம சேவக்குகள் இருந்தும், அவர்களுக்கு எந்தவிதமான திட்டங்கள் செய்வதற்கும் இல்லாத காரணத்தால் அவர் களுக்கு கிராமப் பகுதிகளில் எந்தவிதமான வேலையும் இல்லை. சிறப்புத் திட்டங்கள் ஏற்படுத்தி அவர்களுடைய உழைப்பைச் சரியான முறையில் பயன் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் பஞ்சாயத்துகளை எடுத்துக்கொண்டாலும் சரி, பஞ்சா யத்து யூனியன்களை எடுத்துக்கொண்டாலும் சரி, அவர்களுக்குப் போதுமான நிதி வசதி இல்லை. ஆகவே, இன்றையதினம் பஞ்சாயத்து யூனியன்கள் அபி விருத்தித் திட்டங்களைச் செய்வதற்குப் பதிலாக, அரசாங்கத்தின் ஒரு டிபார்ட்மெண்டாக இயங்கி வருகிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அங்கே பாமிலி பிளானிங், கண்ணொளி திட்டத்தைப் பரப்புதல், பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு நிதிக்குப் பணம் சேகரித்தல் போன்ற காரியங்களைச் செய்து வரு கிறார்கள். இதைச் செய்வதற்கு அவர்களுக்கு வருஷத்தில் 6 மாதம் ஆகிறது. அவர்களுக்கு வேறு வேலை இல்லை.

கிராமப் பஞ்சாயத்துகளுக்கு செஸ் நிதியிலிருந்து 40 பைசா, 20 பைசா கொடுக்கப்படுகிறது. அந்தப் பணம் போதவில்லை. அந்தப் பஞ்சாயத்து களுக்கு நில வரி இருக்கும் நேரத்தில் அதிக வருமானம் இருந்தது. அதற்குப் பங்கும் அதிகமாக இருந்தது. இப்போது நிலவரி ரத்து செய்யப்பட்ட பிறகு ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் வருமானம் மிகக் குறைவாக இருக் கிறது. அது மட்டுமல்லாமல், ஸ்டாம்பு டியுடி சரியாக அந்தக் கிராமப் பஞ்சா யத்துகளுக்குக் கொடுப்பது இல்லை. இம்மாதிரி இருக்கும் சூழ்நிலையில் அந்தப் பஞ்சாயத்துகளின் நிதி வசதியைப் பெருக்குவதற்கு அரசு மாற்றுத்

திட்டம் கொண்டு வந்தால் தான் சரியான முறையில் இயங்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பூச்சி மருந்து பற்றிச் சொல்கிறபோது, பருத்திக்கு மட்டும் 13 மருந்து அடிக்கவேண்டும். ஒரு ஏக்கருக்கு ரூ. 600, ரூ. 700 செலவாகிறது. மெட்டாஸ்கோப் ரூ. 26 ஆகிறது. எலிடிரின் அதிக விலை உள்ளதாக இருக்கிறது. சர்க்கார் நேரடியாக டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் மூலமாக வெறும் மருந்து சப்ளை செய்தால் பிரயோசனம் இல்லை. அதைப் பூச்சிகளின்மேல் அடித்தால், அது வாலி மாதிரி அதிக பலம் பெற்று வருகிறதே தவிர பூச்சி சாவது இல்லை. இப்போது இருக்கும் முறைக்குப் பதிலாக அந்தந்த மாவட்ட அக்ரிகல்சுரல் ஆபீசர்களுக்கு இவ்வளவு என்று ஒதுக்கினால் அவர்கள் எந்தெந்த மருந்துகள் அந்த வட்டாரங்களுக்குத் தேவையோ அந்த மருந்தை வாங்கி அங்கேயுள்ள விவசாயிகளுக்குத் தர முடியும். சாலைகள் அமைப்பதற்காக ரூ. 1.10 லட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த ஆறு கோடி ரூபாயையும் பஞ்சாயத்து யூனியன்களுக்கே கொடுக்க வேண்டும்.

மாவட்ட அபிவிருத்தி மன்றக் கவுன்சில் வெறும் 'டாகிங் பிளேசாகத்' தான் இருக்கிறது. அங்கே போடுகின்ற தீர்மானங்கள் நிறைவேறும் வகையில் இருக்கவேண்டும். அந்த அபிவிருத்திக் கவுன்சிலுக்கு எலெக்டட் மெம்பர்தான் தலைவராக இருக்கவேண்டும். கலெக்டர் வேண்டுமானால் எக்ஸ்-அபிசியோ செக்ரடரியாக இருக்கலாம். பஞ்சாயத்து யூனியன்களைப் பராமரிப்பதற்காக ஆர்.டி.ஓ.க்குப் பதிலாக கலெக்டர் கீழே உதவியாளரை நியமித்து அந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கிறார்களோ அவற்றை நல்ல முறையில் செய்கிறார்களா என்று பார்க்க வேண்டும். இன்றைய தினம் அட்மினிஸ்டிரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் சொல்லியிருக்கிறது. பஞ்சாயத்து துறையில் கரெப்ஷன் ஜாஸ்தி இருக்கிறது என்று சொல்கிறார்கள். 47 பேர் இதுவரையில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். சர்க்கார் இதுவரையில் அதைப் பரிசீலனை செய்ததாக? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒரு பகுதி போக்குவதற்காக ரூ. 10 கோடி மத்திய சர்க்கார் மானியமாக வழங்குகிறது. கிராஷ் ப்ரோக்கிராமாக அதைச் செய்து வருகிறார்கள். அது சரியான முறையில் அமல் செய்யப்படுகிறதா என்று பார்க்கவேண்டும்.



பவானியில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்டுள்ள சேதத்தை சீர்படுத்த சக்தி சுகர் மில்ஸுக்கு 5 பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கார் அவர்களுக்குக் காண்டிராக்ட் கொடுத்து இருக்கிறது. அவர்கள் எஸ்டிமேட் ஒரு வேலைக்குக் கொடுத்துவிட்டு, எஸ்டிமேட்டிற்குப் பொருத்தமில்லாத வேலைகளைச் செய்து வருகிறார்கள். ஐந்து பஞ்சாயத்து யூனியன்களும் கோடிக்கணக்கான ரூபாய் அதற்குச் செலவு செய்கிறது. உள்ளபடியே அவர்களுக்குக் கொடுக்கும் காரணம் என்ன? இன்றைய தினம் பஞ்சாயத்துகளில் பல ஊழல்கள் இருப்பதால், பஞ்சாயத்துகளில் நேரடித் தேர்தல் முறை ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. பத்மனாபன்: தலைவரவர்களே, இந்த 1973-74-ம் ஆண்டுக்கான சமுதாய வளர்ச்சி மானியக் கோரிக்கையின் மீது, அதை ஆதரித்து என்னுடைய நெல்லை நகராட்சியைப் பொறுத்தவரை சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகராட்சியில் ஏதாவது நில ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்றால், அதற்கு தீர்மானம் போட்டு, ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டுக்கு அனுப்பி, அதற்கு அனுமதி கிடைப்பதற்கு 5 ஆண்டுக்காலம் ஆகிறது. அதற்குள்ளாக அந்தப் பகுதியிலிருந்து நகராட்சி உறுப்பினர் பதவி காலம் முடிந்து விடுகிறது. அவர் திரும்பி தேர்தலில் வெற்றி பெற்று வருவாரா என்பது சந்தேகமே, அதனால் அந்த நில ஆர்ஜிதம் பிறகு செய்ய முடியாமலே போய் விடுகிறது. ஆகவே, அந்த நில ஆர்ஜிதத்தை நகராட்சியே நேரடியாகச் செய்யலாம் என்று சொன்னால் நல்லது. இல்லையென்றால், ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் குறுகிய காலத்திற்குள் அதற்கு அனுமதி வழங்கிவிட வேண்டுமென்று சொல்ல வேண்டும்.

நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக்கெல்லாம் 80 சதவிகிதம் உதவித்தொகை அளிக்கப்படுகிறது. ஆனால் தனியார் பள்ளிகளுக்குப் பூராத் தொகையும் உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. தனியார் பள்ளிகளுக்கு அளிப்பது போல் நகராட்சிப் பள்ளிகளுக்கும் உதவித் தொகை பூராவாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை நகராட்சி—பெண்கள்-குழந்தை ஹாஸ்பிடல் நடத்தி வருகிறது. அந்த ஹாஸ்டலுக்கு வருடத்திற்கு 1 லட்ச ரூபாய்க்கு மேல் செலவாகிறது. நகராட்சிக்குப் போதுமான வருமானம் இல்லை. ஆகவே, அரசே அதை ஏற்று

[திரு. பொ. பத்மநாபன்] [1973 மார்ச் 17

நடத்தவேண்டுமென்று தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். ஆகவே, அதை அரசே உடனடியாக ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை கொடுத்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** திரு. கே. எ. வகாப், திரு. ரா. ரா. முனுசாமி. பெயர் கொடுத்து விட்டு வெளியேபோய் விடுகிறார்கள். இப்போது திரு. ஏ. ஆர். மாரிமுத்து பேசுவார்.

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த சமுதாய வளர்ச்சித் திட்ட மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டம் நாடு பூராவும் பரவலான முறையில் ஒரு பெரும் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கிறது என்பதைப் பொதுவாக நாம் ஒப்புக்கொள்கிறோம். கடந்த பல ஆண்டுகளாக சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் நாட்டிலே பரவலாக அமுலாக்கப்பட்டதன் மூலமாக கிராமப்புற சாலை வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, மற்றும் மக்களுக்குத் தேவையான சுகாதார மேம்பாடுகள், இவைகளெல்லாம் ஓரளவு அபிவிருத்தி கண்டிருக்கிறது என்றாலும் கூட, முழுமையாக அவற்றை நாம் அடைவதற்கு இன்னும் பல முயற்சிகளை மேற்கொண்டாக வேண்டியிருக்கிறது என்பதை நான் குறிப்பிடாமலிருக்க முடியாது.

பஞ்சாயத்துச் சட்டம் தமிழகத்தில் புதிதாக அமுலாக்கப் பட்டபோது, கிராமப்புறங்களில் ஒரு பெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டு மக்கள் பெருவாரியாக ஒத்துழைப்புக்கொடுத்து, இந்த நாட்டிலே ஒரு புரட்சிகரமான பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோல் கிடைக்கும் என்று திட்ட கர்த்தாக்கள் கருதினார்கள். அது பெருவாரியாக மக்களிடத்தில் கிராமப்புறங்களில் நல்ல பிரசாரமும் செய்யப்பட்டது. ஆனால் ஆரம்ப காலத்திலே பஞ்சாயத்துக்களே இல்லாத கிராமங்களிலே எந்த விதமான வளர்ச்சித் திட்டங்களும் அமுலாக்கப்படாத நேரத்திலே, இந்தத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டபோது மக்களிடத்திலே ஆர்வமும் உணர்ச்சியும் இருந்தது என்பதை மறந்து விடக் கூடாது. ஆனால் காலப் போக்கில் அந்த உணர்ச்சிகள் குறைந்திருக்கிறது என்பதைத் தான் நாம் காண முடிகின்றது.

கிராமப்புறங்களில் இருக்கின்ற சாதாரண மக்களுடைய முழு ஒத்துழைப்பையும் நாம் பெறவில்லையென்றால் நமது திட்டங்கள் பெரு வாரியான எதிர் பார்த்த பலனை கொடுக்கமுடியாத நிலை ஏற்படும். கடந்தகால திட்டங்களின்



1973 மார்ச் 17] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

நிலை இதைத் தான் அறிவுறுத்துகிறது. பெரும் திட்டங்களை நாம் நிறைவேற்றும் போது மக்களுடைய முழுமையான ஒத்துப்பைப் பெறமுடியாத நிலைமை நாடு பூராவம் பரவலாக இருக்கிறது. ஆகவே நம்முடைய திட்டப் பணிகள் நல்ல முறையில் பயன் தரத்தக்க பக்குவம் பெற்ற நிலைமையைப் பெறவேண்டுமானால் மக்களுடைய முழு ஒத்துழைப்பையும் நாம் பெற்றாக வேண்டும். அதற்கேற்ற வகையிலே காலப் போக்கையும், அனுபவத்தையும் அனுசரித்து, அடிப்படையிலே சில மாற்றங்கள் செய்ய வேண்டுமென்பது என்னுடைய கருத்து.

கிராமப் பஞ்சாயத்துக்களை நாம் எடுத்துக்கொண்டால், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் மக்களுக்கும் இருக்கின்ற தொடர்பு மிகக் குறைவாக இருக்கின்றது. தேர்தலில் ஓட்டுப் போடுவதைத்தவிர, தேர்ந்தெடுக்கப் பட்ட ஊராட்சி மன்றங்கள் மக்களுடைய ஒத்துழைப்பையும் பெறுவதற்கு இயலாத நிலையில் இன்றைக்கு இருக்கின்ற பஞ்சாயத்துச் சட்டம் இருக்கின்றது. அதுவும் பஞ்சாயத்துச் சட்டம் கொண்டுவந்த பிறகு, கிராமங்களில் இருக்கின்ற பிளவுகள், தேர்தலில் போட்டி போடுகின்றவர்கள் இரு பிளவாகப் பிளந்ததன் காரணமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் கிராமங்களில் முற்போக்கான காரியங்களைச் செய்யமுடியாது தடுக்கவேண்டுமென்ற எண்ணத்தில் எதிர்த்துப் போட்டியிட்டவர்கள் இருக்கக்கூடிய துர்பாக்கியமான நிலைமை பல இடங்களில் நிலவுகிறது. இந்த நிலைமைகளை எல்லாம் மாற்றி, பஞ்சாயத்து மக்களுடைய முழு ஒத்துழைப்பையும் பெறக்கூடிய சக்தி வாய்ந்தாகச் செய்ய பஞ்சாயத்துச் சட்டத்தை அடிப்படையிலே மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பஞ்சாயத்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அந்தப் பஞ்சாயத்து சரியாக நடக்கிறதா, என்ன செலவு செய்கிறார்கள், என்ன காரியங்கள் செய்கிறார்கள் என்பதைக் கண்காணிக்கவும், பார்ப்பதற்கும், மக்களுக்கு அதிகாரம் கிடையாது. ஓட்டுப் போடுவதற்குத்தான் அவர்களுக்கு உரிமை இருக்கிறதேதவிர, ஓட்டுப்போட்டு தங்களால் ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்து எப்படி நடக்கிறது என்று பார்ப்பதற்கு அவர்களுக்கு இன்றைய நிலையில் அதிகாரம் கிடையாது. நான் கருதுவதெல்லாம், இந்தப் பஞ்சாயத்துச் சட்டத்தை மாற்றி, மூன்று மாதம் அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை, யார் யார் ஓட்டுப் போடுகிறார்களோ அவர்களைப் பஞ்சாயத்து முறை, யார் யார் ஓட்டுப் போடுகிறார்களோ அவர்களைப் பொதுக் குழு என்ற பெயரால் கூட்டி, அவர்கள் முன்னால் இந்த பஞ்சாயத்து நிதிநிலைபற்றியும் வேலைத்திட்டங்கள்பற்றியும் சாங்ஷன் வாங்க வேண்டுமென்ற அடிப்படையிலே மாற்றவேண்டும்.

இன்றைக்கு இருக்கின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் நிர்வாகக் குழுக்களாகத்தான் இருக்க முடியுமேதவிர, வேலைத் திட்டங்களை அனுமதிக்கக் கூடியவர்கள் கிராமத்தில் இருக்கின்ற மக்கள் என்ற முறையில் சட்டத்தை மாற்றி அமைத்தால்தான் கிராம மக்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் ஒரு தொடர்பு ஏற்பட வழிவகை காணமுடியும். இது நான் மட்டும் சொல்லுகின்ற கருத்தல்ல. பஞ்சாயத்து வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்ட பெரும் தலைவர்கள் எல்லாம்கூட ஆலோசித்துச் சொன்ன கருத்தாகும். இந்தக் கருத்தினை ஏற்றுத் தமிழ்நாட்டிலாவது நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, கிராமப்புறங்களில் இருக்கின்ற வளர்ச்சித் திட்டங்களுக்கெல்லாம் அரசாங்கத்திலிருந்து அதிகாரிகள்மூலம் தங்களுக்கு மானியம் வரவேண்டும் என்று எதிர்பார்ப்பதைவிட, ஆங்காங்கு இருக்கின்ற மக்களைத் திரட்டி, அந்தப் பொது வேலைகளைச் செய்வதற்கு ஏதுவாக, கிராமப்புறங்களில் இருக் கின்ற வயதுவந்த ஆண்கள் மாதத்திற்கு ஒரு நாள் இலவச உழைப்புக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் சட்டத்தில் ஒரு புதிய ஷரத்தைச் சேர்க்க வேண்டும். அப்படிச் செய்வோமேயானால், நாம் ஒதுக்கக்கூடிய மானியங்கள் பலவற்றை வேறு பல திட்டங்களுக்குச் செலவழிக்க வேண்டிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே அதன்மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கு இன்றிருப்பதைவிட வேகமான முறையில் வளர்ச்சி காண ஏதுவாக இருக்கும். அந்த முறையில் மாற்றங்களைச் செய்வதற்கு, சட்டப்பூர்வமான மாற்றங்களைச் செய்வதற்கு முன் வரவேண்டும். ஒரு பொது வேலை செய்வதற்காக, அந்த வேலையின் பலனை அனுபவிக்கின்றவர்கள் உதவி செய்யவேண்டுமென்று சொல்லுவதில் தவறு இருப்பதாக நான் கருதவில்லை. ஆகவே இதை அரசாங்கம் தீர்க்கமாக ஆலோ சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இன்றைக்கு இருக்கின்ற ஊராட்சி மன்றங்களாக இருந்தாலும் சரி, ஊராட்சி ஒன்றியங்களாக இருந்தாலும்சரி, அவைகளுக்கு சுயேச்சை யாக இருக்கக்கூடிய அதிகாரம் போதாது. எதையெடுத்தாலும், சென்னைக்கு வந்து அனுமதி பெற்றுச் செல்லவேண்டுமென்ற நிலையைக் குறைத்து, கோட்டாட்சி தலைவர் மட்டத்திலோ, மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் மட்டத்திலோ சீக்கிரமாக அனுமதி கிடைத்துக் காரியங்களைச் செய் வதற்கான வகையிலே அரசு உத்திரவை மாற்றிப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு சிறு காரியமாக இருந்தாலும் அனுமதி பெற நீண்ட நாள் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. திட்டங்களுக்குத் தொகைகள் இருந்தாலும்கூட அவற்றைச் சரியான முறையில் செயல்படுத்த





முடியாமல் பல ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஊராட்சி மன்றங்களை யெல்லாம் சிறிது சிறிதாகப் பிரித்து அமைத்ததன் காரணமாக, போதிய நிதி இல்லாததால், அவை தெரு விளக்குக்குக்கூடப் பணம் கட்ட முடியாமல் வளர்ச்சிக் காரியங்களையும் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே அவைகளின் நிதி நிலையை அதிகரிக்க முயற்சி செய்கின்றபோது, இம்மாதிரி சிறிய யூனிட்டுகளாக வைப்பதைவிட, வயபிள் ( Viable ) யூனிட்டு களாக, பெரிய யூனிட்டுகளாக அமைத்து நல்ல முறையில் இயங்கக் காரியங் களைச் செய்யமுடியுமா என்பதை அரசு கருதிப் பார்க்கவேண்டும். இன்றைக்கு இருக்கின்ற நிலையில், பரவலாக எல்லோரும் தாங்கள் தலைவராக இருக்க வேண்டும், தம்மைச் சார்ந்தவர்கள் தலைவராக இருக்கவேண்டும் என்பதற்காக 500 மக்களைக்கொண்ட ஊர் எல்லாம் ஒரு பஞ்சாயத்து என்று பிரித்து விட்டதால் விளக்குக்குக்கூடப் பணம் கட்ட முடியாத, எந்த விதமான வேலை யையும் செய்ய முடியாத துர்பாக்கிய நிலைமை இருப்பதால், அதிக வருவாய் உள்ள பகுதிகளை வருவாய் இல்லாத பகுதிகளோடு சேர்த்து, வயபிள் யூனிட்டாக, பெரிதாக அமைத்தால் பல காரியங்கள் வேகமாக நிறைவேற்ற வழிவகை பிறக்கும் என்ற காரணத்தால் அதையும் அரசு ஆலோசிக்க வேண்டும்.

சில பஞ்சாயத்து யூனியன்களுக்கு நிதி வசதி போதாத நிலையில், அவர்கள் தங்களுடைய பராமரிப்பில் எடுத்துக்கொண்டிருக்கிற ரோடுகளைக்கூட மணலை வெட்டிப் போட்டு பராமரிக்க முடியாத நிலையிருக்கிறது. அம்மாதிரி இருக் கின்ற பஞ்சாயத்து யூனியன்களில் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு, அவர் களுக்கு அதிகப்படியான மானியங்கள் ஒதுக்கவேண்டும். பல ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக நிதி வருவாய் இருக்கின்ற காரணத்தால், அவர்களையும் நிதி வசதி இல்லாத ஊராட்சி ஒன்றியங்களையும் ஒன்றாக இணைத்து தலா 18 காசு என்று சொல்லப்படுகிற பஞ்சாயத்து யூனியன் ரோடுகளையும் கருத்தில்கொண்டு நிதி ஒதுக்குவதைவிட, அதோடு சேர்த்து அவர்களுடைய பொதுவான நிதி நிலையையும் கருத்தில்கொண்டு அதிகத் தொகை கொடுக்க முயற்சி செய்வதற்கு அரசு ஆலோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய திட்டம் இப்போது மாவட்ட வாரியாகத் தயாரிக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையில் அதிகமான வேலை வாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு கிராமப்புறங்களிலேதான் இருக்கிறது. கிராமப்புறங்களிலே இருக்கின்ற தொழிலில் முக்கியமானது விவசாயம். ஆகவே, விவசாயத்தை அபிவிருத்திச் செய்யக்கூடியக் காரியங்களை எல்லாம் இந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்மூலம் செய்ய முடியும். ஆகவே, ஒவ்

வொரு கிராமத்திற்கும் ஒரு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அந்தத் திட்டத்தின்மூலம் அந்தக் கிராமத்திலே இருக்கின்ற பொருளாதார நிலை வளர்ச்சியடையும். அதன்மூலம் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க முடியும்; நிலங்களைச் சாகுபடி செய்ய முடியும்; ஒரு போகம் விளையக்கூடிய நிலங்களை இருபோகமாக மாற்ற முடியும். அதற்கான திட்டங்களைத் தயாரித்து, எந்தெந்த முறைகளிலே அவைகளைச் செய்யலாம் என்பதை ஆராய்ந்து, அந்தந்தக் கிராமங்களிலே இருக்கின்ற மக்களின் மூலமே அவைகளைச் செயலாற்றும் முற்போக்கான நடைமுறைகளைக் கையாள வேண்டும். அப்படிச் செய்தால் வளர்ச்சிப் பணிகளில் கிராம மக்களே நேரடியாகத் தொடர்பு கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும்.

நாம் மேலே ஒரு திட்டத்தைத் தயாரித்து, அவர்களை அதைச் செய்யவேண்டுமென்று சொன்னால், ஏதோ மேலே உள்ளவர்கள் சொல்கிறார்களே என்பதற்காகச் செய்வோம் என்ற எண்ணத்தில்தான் அதை நிறைவேற்றுவார்களே தவிர, அதிலே அவர்களுக்கு ஒரு பிடிப்பு ஏற்படாது. ஆனால் அவர்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்வதற்கு அவர்களே திட்டம் தீட்டி, அவர்களே அதை நிறைவேற்றுவதாக இருந்தால் நமக்காக நாமே செய்கிறோம் என்ற உணர்வு ஏற்பட்டு, அதிலே அக்கறையோடு ஈடுபடுவார்கள்.

உதாரணமாக கிணறு வெட்டவேண்டும், ரோடு போட வேண்டுமென்றால் அங்கே இருக்கக்கூடிய கஷ்ட நிலைகளை உணர்ந்து அதற்குத் தக்கபடி அவர்கள் திட்டங்களைப் போட்டு, அவர்கள் அந்தத் திட்டங்களை முழு ஒத்துழைப்புடன், ஆர்வத்துடன் நிறைவேற்றுவார்கள். அந்த வகையிலே திட்டங்கள் தீட்டப்பட்டு, நிறைவேற்றப்படுமானால் நாம் அளிக்கும் பணம் விரயமாகாது. வேலை வாய்ப்புப் பெருகும். கிராமம் முன்னேற்ற மடையும். ஆகவே, கிராம மட்டத்திலே ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராமத் திட்டம் ஒன்றைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பல பஞ்சாயத்து ரோடுகள் போடுவதற்குப் பஞ்சாயத்து மன்றத்துக்கு மானியம் அளிக்கப்படுகிறது. அவர்கள் அதை வாங்கி கிராவல்-சிவப்பு மண் கப்பி போடுகிறார்கள். ஆனால் சிவப்புக் கப்பி போடுவதற்காக ஒரு தடவைதான் அரசாங்கம் மானியம் கொடுக்கிறது. அதற்குப்பின் கொடுப்பதில்லை. ஒரு தடவை சிவப்புக் கப்பி போட்டதும் மூன்று அல்லது நான்கு மாதங்களில் அந்த ரோடு உடைந்து போகிறது. அதற்குப் பின்னால் அதைப் பஞ்சாயத்து மன்றத்தால் செப்பனிட முடியவில்லை. அரசாங்கமும் செப்பனிட மானியம் கொடுப்பதில்லை. அதனால் கொடுத்த பணம் விரயம் ஏற்படுகிறதே தவிர அதனால் பயன் இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட பணிகளை இணைப்புச்



சாலை போடுவதற்கு அளிக்கப்படும் மானியத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். அல்லது கொடுக்கின்ற பணத்திற்கு மெட்டல் ரோடாகப் போட வேண்டும். முழுதும் மெட்டலாக போடுவதற்கு அரசாங்கம் கொடுக்கக்கூடிய உதவிப் பணம் போதாது. ஆகவே, கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் போடும் திட்டத்தின்கீழ் அப்படிப்பட்ட ரோடுகளையும் சேர்த்து, அரசாங்கமே அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1,500 மக்கள் தொகை குடியிருப்புகள் உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் போடவேண்டுமென்று அரசாங்கம் திட்டம் போட்டிருக்கிறது. குடியிருப்பில் 1,500 மக்கள் இல்லாத கிராமங்கள் ஏராளமாக இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும் எல்லாக் கிராமங்களும் 1,500 மக்கள் தொகை கொண்டவையாக இருக்காது. ஆகவே, 1,500 மக்கள் குடியிருப்பு கொண்ட கிராமம் என்பதற்குப் பதிலாக 1,500 மக்களைக் கொண்ட பஞ்சாயத்து என்று ஒரு மாற்றத்தைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இந்தத் திட்டத்தினால் நல்ல பலன் கிடைக்கும்; அநேகமாக எல்லாக் கிராமங்களுமே பயனடையும். அதை அரசாங்கம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட வளர்ச்சி மன்றம் என்ற அமைப்பு இயங்கிக்கொண்டிருக்கிறது. அதில் ஏராளமான தீர்மானங்களை எல்லாம் போடுகிறோம். நிறைவேற்ற வேண்டும் என்றும் சொல்கிறோம். அதுதான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் நடைபெறுகிறது. அதனால் என்ன பயன் ஏற்படுகிறது என்று பார்த்தால் ஒன்றும் இல்லை. எடுக்கின்ற முடிவுகளை நிறைவேற்றினால்தானே பலன் ஏற்படும். ஆகவே, வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் எடுக்கின்ற முடிவுகளை வளர்ச்சி மன்றமே நிறைவேற்றுகின்ற வகையில் அதற்குத் தனியாக நிதி வசதிகளும், அதிகாரங்களும் இருக்க வேண்டும். எடுக்கக்கூடிய முடிவுகளை நிறைவேற்றுவதற்கு அவைகளுக்கே முழு அதிகாரம் இருக்கவேண்டும். அந்த வகையில் சட்ட அமைப்பு இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல. மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்தான் தலைவராக இருக்க வேண்டுமென்ற முறை இப்போது இருக்கிறது. அதை மாற்றி அதிகாரப் பற்றற்ற ஒருவரை அதன் தலைவராகப் போடும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். இதை நாங்கள் நீண்டநாட்களாகச் சொல்லி வருகிறோம். அப்படிச் செய்தால்தான் இந்த மாவட்ட வளர்ச்சி மன்றங்களினால் காரியங்களைச் சரியாகச் செய்ய முடியும். அதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1973 மார்ச் 17

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல். ஊராட்சி மன்றத் தலைவர்களாலேயே இபபோது ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இந்த முறையை மாற்றி, அந்தந்த ஊராட்சி ஒன்றியப் பகுதி மக்களே ஊராட்சி ஒனறியத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொண்டு வரவேண்டும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்களுக்குப் பயன்தருகின்ற வகையிலே, திட்டங்கள் சிறப்பாக தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்படக்கூடிய வகையிலே நான் கூறிய கருத்துக்களை அரசாங்கம் பரிசீலனைசெய்து, அதற்கு உரிய சட்டங்களைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ரா. ரா. முனுசாமி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று இந்த ஊராட்சித் துறை மானியத்தின்மீது எனக்கு பேசுவதற்கு ஒரு வாய்ப்பினை அளித்தமைக்காக முதற்கண் தங்களுக்கு நன்றி தெரிவித்து, இந்த மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின்மூலமாக 1967-க்குப் பிறகு நல்ல பல திட்டங்களைத் தீட்டி, செயல்பட்டு வந்தாலும் இன்னும் செய்யப்பட வேண்டிய வேலைகள் ஏராளமாக இருக்கின்றன என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிபபாக ஊராட்சி ஒன்றியங்களில் இன்றைக்குப் பணியாற்றுகின்ற பணியாளர்கள் எப்பொழுதிலிருந்து ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படத் தொடங்கினவோ அப்பொழுதிலிருந்தே அங்கே பணியாற்றி வருகிறார்கள். அவர்களை மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரத்தைத் தந்தும், ஒரு ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஒன்றியத்திற்கு அவர்களை மாற்ற முடியவில்லை. ஏனென்றால் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் அதற்குத் தீர்மானம் போடவேண்டும் என்றிருக்கிறது. பணியாளர்கள் தவறு செய்கிறபோது, அவர்களை அந்த யூனியனிலிருந்து மாற்றுவதற்கு அவர்கள் தீர்மானத்தைப் போட்டாலும், அடுத்த யூனியனில் தீர்மானம் போடாமல் காலத்தைக் கடத்திவிடுகிறார்கள். இரண்டு யூனியன்களிலும் ஒரே நேரத்தில் மாற்றுவதற்கும், மாற்றத்தை ஏற்றுக்கொள்வதற்கும் தீர்மானம் போட்டால்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மாற்ற முடியும். அப்படித் தீர்மானம் போடாமல் இருப்பதால் தவறு செய்தவர்கள் அங்கேயே தொடர்ந்து இருக்கக்கூடிய நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. இப்படியே காலத்தைக் கழித்துவிடுகிறார்கள்.



1973 மார்ச் 17] [திரு. ரா. ரா. முனுசாமி]

காலத்தை கழித்துவிடுவார்கள். இந்த நிலைமைகளை மாற்றி ஊராட்சி முற்பகல் 10-30
ஒன்றியங்களிலே பணியாற்றும் பணியாளர்கள் தவறுகளிழைக்கும்போது அவர்களை மாற்றக்கூடிய அதிகாரத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கினால் நலமாயிருக்கும். எனவே அத்தகைய அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்றவர்களில் ஆறு பிரிவினர்கள் இருக்கின்றனர். அதில் கல்வித்துறைக்கு என ஒரே ஒரு கிளர்க் மட்டும் போடப்பட்டிருக்கின்றது. இந்த அமைப்பு ஏற்பட்ட காலத்தில் ஒரு ஒன்றியத்தில் 20 அல்லது 30 பள்ளிக்கூடங்களே இருந்தன. ஆனால் காலப் போக்கில் கல்வித்துறை விரிவடையும் போக்கில் பள்ளிகளின் எண்ணிக்கை கூடுதலாகியிருக்கின்றது.

குறிப்பாக, மேல்மலையனூர் ஒன்றியத்தில் மட்டும் இப்போது 80, 81 பள்ளிகள் இருக்கின்றன.னஆனால் கல்விப் பிரிவிற்கு என்று ஒரே ஒரு அதிகாரியைப் போட்டு கிட்டத்தட்ட 300 ஆசிரியர்களுக்குமேல் உள்ள அவர்களுடைய வருங்கால சேமிப்பு நிதிக் கணக்கினை நிர்வாகம் செய்யக்கூடிய நிலைமை இருக்கின்றது. இந்த நிலை அநேகமாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் இருக்கின்றது என்றே கருதுகிறேன். எனவே ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் என்று கல்விப் பிரிவிற்கு ஒரு கணக்காயரை நியமித்தாகவேண்டும். அப்போதுதான் பணியாற்றும் ஆசிரியர் பெருமக்களுடைய வருங்கால சேமிப்பு நிதிக் கணக்குகளை முறைப்படுத்திச் செப்பனிட்டுத் தரமுடியும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இப்போது ஒன்றியத்தில் இயங்கிவரும் பள்ளிகளுக்குத் தேவையான தளவாடங்களை வாங்குவதற்கு என்று ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ரூபாய் 2,000 தான் அனுமதிக்கப்படுகிறது. இதற்குமேல் தளவாடங்களை வாங்குவதற்கு அனுமதி இல்லாத காரணத்தினால், பல பள்ளிகளில் மேசை, நாற்காலி போன்றவை இல்லாமலேயே நடந்துகொண்டிருக்கும் நிலை இருக்கிறது. எனவே '2000-க்கு மேலே தளவாடங்களை வாங்கக்கூடாது' என்ற ஏற்பாட்டினை மாற்றியமைத்து, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே எவ்வளவு பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவிற்கும் தேவையான தளவாடங்களை வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது தமிழ்நாட்டில் பல பகுதிகளில் பள்ளிச் சிறார்களுக்கு என 'கேர்' நிறுவனத்தினரால் ஏற்று நடத்தப்படும் மதிய உணவுத் திட்டத்திற்காக பல ஊராட்சி ஒன்றியங்கள் அதற்கு வேண்டிய இட வசதிகளையும் மற்ற மற்ற வசதிகளையும் செய்து கொடுத்திருக்கின்றார்கள். ஆனாலும் 'கேர்' நிறுவனத்தின்கீழ் இயங்கிவரும் அந்தத் திட்டத்திற்கும் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திற்கும் எந்தவிதமான நிர்வாகத் தொடர்பும் இப்போது இல்லாது இருக்கின்றது. எனவே இது மேலும் செம்மையாகச் செயல்பட இந்தத் திட்டமானது ஒன்றியத்தோடு இணைக்கப்பட்டுச் செயல்பட்டால் முறையாக இருக்கும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சமூகக் கல்வி சுற்றுலா நிதி ஒன்றினை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இதன்படி ஒன்றியங்களிலுள்ள விவசாயிகள் நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று அங்கு நடைபெறும் விவசாய வளர்ச்சியினைக் கண்டு பயன் பெற வேண்டும். ஆனால் ஆண்டொன்றுக்கு இதற்காக ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒதுக்கப்படும் தொகை ரூ. 1,000 என்று இருக்கிறது. இத்தோடு சுற்றுலாவில் பங்கு பெறும் விவசாயிகளும் ரூ. 1,000 போட வேண்டும் என்று இருக்கிறது. இப்படிப்பட்ட சுற்றுலாக்களை அண்டையிலுள்ள ஐந்து மாநிலங்களுக்குள் சென்றுவர ஏற்பாடு செய்யலாம் என்று இருக்கிறது. ஆனால் பல ஊராட்சி ஒன்றியங்களில் இது நடைபெறுவதில்லை. காரணம் விவசாயிகள் 50 சதவிகிதப் பணத்தைப்போட முடியாத நிலையிருப்பதால் தான். எனவே இப்போதுள்ள 50 சதவிகித்தினை அரசு அளிப்பதற்குப் பதிலாக 75 சதவிகிதத்தினை அரசு ஏற்றுக்கொண்டால் மிச்சமுள்ள 25 சதவிகிதத்தினை ஏற்றுக்கொள்ள விவசாயிகள் முன்வருவார்கள் என்று சொல்லிக்கொண்டு, இப்படிப்பட்ட சுற்றுலாவின் செலவில் 75 சதவிகிதத்தினை அரசு ஏற்றுக்கொள்ள முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து இன்னும் ஒரு நிமிஷத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ரா. ரா. முனுசாமி:** இன்னும் இரண்டு நிமிஷம் தரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், இப்போது ஊராட்சி ஒன்றியங்கள் எந்த முறையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதை எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சில ஊராட்சி ஒன்றியங்கள் முறைப்படி செயல்படவில்லை என்பதை அவர்கள் எடுத்துக் காண்பித்தார்கள்.



எந்த அளவிற்கு அங்கே தீர்மானங்களைக்கூடப் போட முடியவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதையெல்லாம் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழகத்தில் கிட்டத்தட்ட 12 ஆயிரம் ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. இவைகள் அனைத்துக்கும் 12 ஆயிரம் எஸ்.எஸ்.எல்.ஸி படித்த கிளார்க்குகளை நியமித்தால் ஊராட்சிகள் முறையாகச் செயல்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, என் தொகுதியில் உள்ள சில குறைகள்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். என் தொகுதி மேல்மலையனூர் தொகுதியாகும். அங்குள்ள ஏரி ஐயாயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியளிக்கிறது. முறைப்படி மழை பெய்தால் அதில் இரண்டு அல்லது மூன்று போகம்கூடப் பயிரிடலாம். ஆனால் இந்த ஏரியை மேலும் ஒரு பத்தடிக்கு ஆழப்படுத்தினால் தண்ணீர்வசதி அதிக காலத்திற்குக் கிடைக்கும். இப்படி ஆழப்படுத்திப் பக்கத்திலுள்ள போளூர் பக்கத்திலுள்ள ஆற்றிலிருந்து கால்வாய் வெட்டி இந்த ஏரியை நிரப்பினால் மூன்றாண்டுக் காலத்திற்கு அந்த ஏரியில் தண்ணீர் குறையாமல் இருக்கும். விவசாயமும் செழிக்கும். அதனால் ஏரியை ஆழப்படுத்தும்படி கோருகிறேன். அடுத்து இப்போது நந்தன் கால்வாய் துவக்கப்பட்டு வேலை நடக்கிறது. அதிலிருந்து துணைக்கால்வாயினைப் பிரித்துக்கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். காரணம் சத்தியமங்கலம் ஏரி மலையனூர் ஏரியிலிருந்துதான் சங்கராபரணி ஆறு உருவாகிறது. எனவே சத்தியமங்கலம் ஏரிக்கு நந்தன் கால்வாயிலிருந்து ஒரு துணைக் கால்வாயினைப் பிரித்துத்தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப் பிரித்துக் கொடுத்தால் செஞ்சி வட்டத்தில் மூன்று போகமும் நெல் விளைவு கிடைக்கும். அப்படிக் கிடைத்தால் உணவு நெருக்கடியைப் போக்க முடியும் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த நாட்டின், சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக அண்ணல் காந்தியடிகளும் பேரறிஞர் அண்ணா அவர்களும் எந்தக் கனவினைக் கண்டார்களோ, அந்தக் கனவின் அடிப்படையில் இந்தச் சமுதாய வளர்ச்சித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. என்றாலும்கூட, அன்று அண்ணல் காந்தியடிகள் கூறியதைப் போல இந்த நாட்டிலுள்ள ஏழு இலட்சம் கிராமங்களே இந்த நாட்டின் இதயமாகும். அதுபோன்றே பேரறிஞர் அண்ணா அவர்களும் அடிக்கடி குறிப்பிடுவார்கள் 'இந்த நாட்டின் உயிர்த் துடிப்பே இந்த நாட்டிலுள்ள கிராமங்கள்தான்' என்று. கிராமங்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் நமது நாடு முன்னேறும். நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றால் கிராமங்கள் முன்னேற்றம் அடைய வேண்டும். இப்படிப்பட்ட முன்னேற்றத்

திற்காகத்தான் நாட்டிலுள்ள சமுதாய நலத்துறை செயல்பட்டு வருகின்றது என்றாலும்கூட அதிலுள்ள சில பல குறைபாடுகளை நாங்கள் இங்கே எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் இருக்கின்றது.

எப்படி 'வரப்புயர நிலம் உயரும், நிலமுயரக் குடி உயரும், குடி உயரக் கோன் உயரும்' என்று சொல்லுவார்களோ அதுபோன்று இந்த நாட்டிலே கிராமங்கள் உயர்ந்தால்தான், நகரமும் உயரக்கூடும். நகரம் உயர்ந்தால்தான் தொழில் உயரும் தொழில் உயர்ந்தால்தான் நாடு உயரும், நாட்டிற்கு நல்ல பெயரும் கிடைக்கும் என்ற அடிப்படையில் இன்றுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. என்றாலும்கூட, முருகேச முதலியார் கமிட்டி அறிக்கையின் அடிப்படையில் சில சிபாரிசுகளை ஏற்று செயல்படுத்திக்கொண்டு வருகிறோம் என்கின்றார்கள். அவை எந்த அளவிற்கு முழுமையாகச் செயல் பட்டிருக்கின்றன என்று தெரியவில்லை. இருந்தாலும் இன்றுள்ள நிலையில் இந்த ஒன்றியங்களிலே சில பல சீர்திருத்தங்களைச் செய்துதீர வேண்டிய அவசியமும் அவசரமும் இப்போது இருக்கின்றது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் சொல்லவிரும்புவது ஒன்றியங்களிலே பல அதிகாரிகள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் மாதம் ஒரு முறை தாங்கள் செய்யும் வேலைகள் இன்னின்ன என்ற ஒரு அறிக்கையைக் கவுன்சிலுக்குச் சமர்ப்பித்தால் அவர்கள் ஆற்றும் பணியினைப்பற்றி அறிய ஒரு வாய்ப்பு நமக்குக் கிடைக்கும் என்று கருதுகிறேன். "இந்த மாதத்தில் இந்த ஒன்றியத்தில் இவ்வளவு முன்னேற்றத்திற்கான பணிகளை ஆற்றியிருக்கிறேன்" என்று அவர்கள் அறிக்கையினை அளித்தால் அது நாட்டுமக்களுக்கு நன்மை பயக்கத்தக்கதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமில்லை. இன்றையதினம் விவசாயிகளுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பு ஒன்றியத்தின் மட்டத்தில் சில அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இன்றைய தினம் பரவலாகக் கூறப்பட்டுவரும் குறை என்னவென்றால், விவசாயிகளுக்கு அளிக்கப்படும் விதை சில வேளைகளில் நல்ல விதைகளாக இருப்பதில்லை என்றும், கொடுக்கப்படும் உரம் சீராக விநியோகிக்கப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

அதுமட்டுமில்லை, ஐம்பது ரூபாய்க்கு ஒன்றியத்தில் அளிக்கப்படும் உரமானது வெளியில் எண்பது ரூபாய்க்குக் கிடைக்கும் அளவில் நிலைமைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட முறைகேடுகளினால் சிலர் தங்களுடைய சம்பாத்தியத்தினைப் பெருக்கிக்கொள்ளுகிறதைப் பார்க்கிறோம். உண்மையான



விவசாயிகளுக்கு என உரவிநியோகத்திற்கு என்று கார்டு முறை இருக்கின்றது. அந்த அடிப்படையில் ஒரு ஏக்கருக்கு 15 கிலோ என்றும் 25 கிலோ என்றும் ஒரு ஏற்பாட்டினை வைத்திருக்கிறார்கள். ஆனால் பத்து ஏக்கர் பயிர் செய்கின்றவர்கள் கேட்டாலும் இரண்டு மூட்டைக்குமேல் தரப்படுவதில்லை. இது வேதனை அளிக்கத்தக்கதாக இருக்கிறது. இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். அங்கே வேலைசெய்கிற இ.ஓ. நிலங்களைச் சென்று பார்க்கவேண்டும். இன்றைக்கு அவர்களுக்குக் கிராம சேவக்குகள் சர்டிபிகேட் மட்டும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களேதவிர நிச்சயமாக அந்த அந்த இடங்களுக்குச் சென்று பார்ப்பதில்லை. விவசாயத்திற்கு கிராம சேவக்குகள் பயன்படுகிற அளவில், ஆணையாளரின் அனுமதியைப்பெற்று நான்கைந்து பேரை இ.ஓ. அக்ரியின் மேற்பார்வையில் இருக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றியத்தின் தலைவருக்கும், ஆணையாளருக்கும் எல்லா விஷயங்களிலும் ஒரு சுமுகமான உறவு இருக்கும்படியான திட்டத்தை அரசு வகுக்க வேண்டும்.

சமீபத்தில் ஆசிரியர்களை மாற்றுகிற விஷயத்தில்கூட நாங்கள் எங்கள் கருத்துக்களைச் சொன்னோம். அந்த அதிகாரம் நிர்வாக அதிகாரியிடத்தில் ஒப்படைக்கப்படவேண்டும் என்றோம். அதைப்போலவே அரசு அந்த அதிகாரத்தைக் கல்வி அதிகாரியினிடத்தில் ஒப்படைத்திருக்கிறது. என்றாலும் கல்வி அதிகாரி இதுபோன்ற மாற்றல் உத்தரவுகளைப் போடுவதற்கு முன்பாக ஆணையாளரையும் கலந்துகொண்டு முடிவு செய்யவேண்டும். இந்த மாதிரியான ஒரு ஏற்பாட்டை அமல் செய்கிறபோதுதான் நிரந்தரமாகச் சிக்கலைத் தீர்க்க ஒரு வழி இருக்கும்.

சாலை அமைப்பு, குடி தண்ணீர் வசதி ஆகியவற்றை நாம் இந்தத் துறையின் மூலம் செய்கிறோம். ஆயினும் சில நடைமுறைச் சிக்கல்களை நாம் கவனிக்க வேண்டும். உதாரணமாக, வந்தவாசி ஒன்றியத்தில் சேதாரகுப்பத்திற்கு ஒரு சாலை இருக்கிறது. நடுவில் உள்ள சுபநதிக்கு ஒரு பாலம் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது. அதைக் கட்ட 56 ஆயிரம் ரூபாய் ஆகும் என்று எஸ்டிமேட் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஒன்றியத்திடம் பணம் இல்லை, அரசாங்கத்தினிடம் நிதிப் பற்றாக்குறை—இப்படிப்பட்ட காரணத்தினால் அந்தப் பாலம் கட்ட முடியாத நிலை, அதனால் அந்தச் சாலையைச் சரியான முறையில் பயன்படுத்த முடியாது. பத்துப்பதினைந்து கிராமங்கள் போக்கு வரத்து வசதியின்றி இன்றைக்கும் இருக்கின்றன. எனவே என்னுடைய கோரிக்கையாக இந்த

அவையில் இதனை வைக்கிறேன். சுபநதிக்குப் பாலம் கட்டிக் கொடுத்து வந்தவாசி—சேதாருப்பத்திற்குச் சரியான சாலை அமைய அரசு உதவி செய்யவேண்டும்.

அதுமட்டுமல்ல. இன்று ஒன்றியத்தில் முஸ்லிம் ஊழியர்கள் அதிகம் இல்லை. ஓரளவு வேலை செய்கிறார்கள். அவர்களுக்குள்ள பல குறைகளை அவ்வப்போது வந்து சொல்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இந்த மைனாரிட்டி மக்களது குறைகளை உடனுக்குடன் கவனித்துக் களைய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இடையில் ஏற்படுகிற கோளாறு காரணமாகக் கிடைக்கவேண்டிய பதவி உயர்வு கிடைப்பதில்லை. நகராட்சிகளில் வேலை செய்துகொண்டிருக்கிற ஆணையருக்குப் பதவி உயர்வுக்குள்ள தகுதிகள் அத்தனை இருந்தும் கொடுக்கப்படவில்லை என்று அறிகிறேன். நாமக்கல் அருகிலே வேலை செய்கிறவருக்குக் கிடைக்கவில்லை. அவர்பேரில் கேஸ் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஏழெட்டு வருஷங்களாக ஆணையராகப் பணிபுரிந்துகொண்டிருப்பவர்கள்மீது கேஸ் என்றால் உடனே அதுபற்றி விசாரித்து ஒரு முடிவை எடுக்க வேண்டாமா? அவர்களும் உங்களுடைய அரவணைப்பில் உள்ளவர்கள்தான். உங்களுடைய அதிகாரிகள்தான்—குழந்தைகள்தான். மைனாரிட்டி சமூகத்தினரின் குறைகளையும் அமைச்சர் அவ்வப்போது கவனித்து ஆவன செய்யவேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பேரூராட்சி—அவை அனாதைக் குழந்தைகளாக இருக்கின்றன என்று சொல்ல வேண்டும். நகராட்சிகள், ஒன்றியங்களுக்கு மானியங்கள் கொடுக்கிறார்கள். பேரூராட்சிகளுக்கும் எண்டர்டெயின்மெண்டு டாக்ஸ், நிலவரி ஆகியவற்றில் இருந்து மானியம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரூராட்சியில் தார்சாலை போட பொது மானியத் தொகை வழங்குகிறார்கள். பல பேரூராட்சிகள் அதனைப் பயன்படுத்திக் கொள்ளாத நிலையில் அந்தப் பணம் அரசுக்கே திரும்பிவருகிறது. எந்தப் பேரூராட்சி நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் என்பதாக தார்சாலைகள் போட செலவிடுகிறதோ. அவற்றுக்காவது நாம் பொதுவாகக் கொடுக்கிற ஐயாயிரம், பத்தாயிரம் போக பாக்கியுள்ளதைத் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ச் நான் முன்பே சொல்லியிருக்கிறேன். தானே கையொப்பமிட்டுக்கொண்டு செக்கை மாற்றுகிற முறையினால் ஊராட்சியில் பல ஊழல்கள் ஏற்பட இடமிருக்கிறது. அதுபோல வந்தவாசியிலே 20 ஆயிரத்திற்கு நடந்துவிட்ட ஊழல்





பற்றியும் அரசு அறியும். ஆகவே கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு முறை வைத்திருக்கிறார்கள். அதைப்போல ஊராட்சித் தலைவரும், நிர்வாக அதிகாரியும் சேர்ந்து கையொப்பமிட்ட செக்குகளைத்தான் பணமாக மாற்ற முடியும் என்கிற ஒரு நடைமுறையைக் கொண்டுவந்தால் பலவிதமான ஊழல்களுக்கு இடமிருக்காது.

கதர் மானியமும் வரஇருக்கிறது. அது நல்ல முறையில் செயல்படுகிறது. கதர் என்றாலே மரியாதை என்று பொருள். கதராடை உடுத்துபவர்களுக்கு காங்கிரஸ்காரர்கள் காலத்தில் மட்டுமல்ல—இன்றைக்கும்கூட ஒரு மரியாதை சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறது. அமைச்சர்கள்கூட கதராணிவதைப் பார்க்கிறோம். கதரிலே கவர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். நல்ல கவர்ச்சிமிக்க கதராடைகளை நல்ல டிசைனோடு உற்பத்தி செய்தால் வேறு மாநிலத் துணிக்கு ஈடாக நல்ல விற்பனை கிடைக்கும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்வதோடு . . . . (மணி அடிக்கப்பட்டது).

* திரு. மா. வே. நாராயணசாமி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஊர்வளர்ச்சி, உள்ளாட்சித்துறை, மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மக்கள் ஆட்சித் தத்துவத்தின் சின்னங்களாக விளங்கக்கூடிய சட்டமன்றம், நாடாளுமன்றத்திற்கு அடிப்படையாக விளங்கக்கூடிய நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் நமது கழக அரசின் காலத்தில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதனை நாம் அனைவரும் எண்ணிப் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏராளமான எண்ணிக்கையைக்கொண்ட நகராட்சி மன்றங்கள் கழக ஆட்சியில் வளர்ந்துகொண்டிருக்கின்றன. அந்த அளவுக்கு நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் செவ்வனே நடைபெறுதல் வேண்டும். மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படைச் சின்னங்களே இவைதான். அந்த முறையில் இந்த அரசு செயல்படுவதைப் பாராட்டுகிற நேரத்தில் ஆண்டாண்டுக் காலமாக இருந்து வரக்கூடிய சிலபல குறைபாடுகளைப் போக்க வேண்டும் என்ற கருத்தினையும் இந்த நேரத்தில் நான் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். அப்படிப் பார்க்கும்போது அங்கு இருக்கக் கூடிய அதிகாரங்கள் குறைவுபடாமல் நமது அரசு பார்த்துக் கொள்ள வேண்டிக்கொள்கிறேன். நகராட்சி மன்றங்களுக்கு வேலை நியமனம் செய்கின்ற நியமனக் குழுக்களை எடுத்துவிட்டு மாநில சர்வீஸ் அடிப்படையில் வந்ததன் காரணமாக இன்றைக்குச் சில அலுவலர்களை நியமிக்கக்கூடிய அதிகாரம் நகராட்சி மன்றத்திற்கு இல்லாமல் போய் இருக்கிறது. அந்த ஒரு பிரச்சினைபற்றிக்கூட, இன்றையதினம் ஓரளவிற்கு நகராட்சி மன்றங்களேகூட சரி என்பதாக ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால், அண்மையிலே, நகராட்சி

களுடைய வேலைகள், பொதுப்பணிகள்பற்றிய அந்தப் பிரச்சினைக்கு ஏற்கனவே டெக்னிக்கல் சாங்க்ஷன் பெறுவதற்கான ஒரு உத்தரவுதான் இருந்து வந்திருக்கிறது. ஆனால், இப்பொழுது அட்மினிஸ்ட்ரேட்டிவ் சாங்ஷன் பெற்றாக வேண்டுமென்ற உத்தரவு, அண்மையிலே, ஜி.ஓ.எம்.எஸ். நெம்பர் 155, ஆர்.டி. & எல்.ஏ., டேட்டட் 29—1—1973 ஆணையிலே அட்மினிஸ்ட்ரேட்டிவ் சாங்ஷனுக்குக் கூட, உதாரணத்திற்கு, முதல் தர நகராட்சிகள் ரூ. 25,000 அளவுக்குத்தான் அந்த நகராட்சி மன்றமே தீர்மானம் போட்டாலும் அவர்கள் அந்த அளவுக்குத்தான் வேலைகளைச் செய்யமுடியும், செய்ய வேண்டும், அதற்கு மேலே போனால், பிறகு நகராட்சி நிர்வாக இயக்குநரிடத்திலே செல்லவேண்டும். ரூ. 50,000-க்கு மேலே போனால், அரசாங்கத்திடம் செல்ல வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது. அதிலே குறிப்பாக செக்கண்ட் கிரேட் முனிசிபாலிட்டிக்கு ரூ. 15,000-க்கு மேலே சாங்க்ஷன் செய்ய கவுன்சிலுக்கு அதிகாரம் இல்லையென்ற குறிப்பு அந்த ஆணையிலே இருக்கிறது. அந்த ஒரு குறையைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், நகராட்சி மன்றங்கள் தங்களுடைய சொந்த நிதியிலிருந்து இந்தப் பணிகளையெல்லாம், சாலைகள் அமைத்தல், கட்டடங்கள் அமைத்தல் என்ற முறையில், மன்றங்களே தீர்மானம் நிறைவேற்றுகின்றன. வேண்டுமென்றால், டெக்னிக்கல் சாங்ஷன் சம்பந்தப்பட்ட அதிகாரியிடத்திலே பெற வேண்டுமென்று ஒப்புக்கொள்கிறோம். தேவையானதும்கூட. ஆனால் அட்மினிஸ்ட்ரேட்டிவ் சாங்க்ஷன் தேவையா என்பதை நம்முடைய கழக அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, நகராட்சி மன்றம் தனித்து, சொந்தப் பணத்தைச் செலவிட்டாலும்கூட. அதற்கு டி.எம்.ஏ. உத்தரவு வேண்டும் அல்லது சர்க்கார் உத்தரவு வேண்டுமென்ற நிலை தவிர்க்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். வேண்டுமென்றால், அரசாங்கம் நகராட்சி மன்றங்களுக்கு நிதி உதவி செய்யக் கூடிய அந்தப் பணத்தைக்கொண்டு அந்தப் பொதுப் பணிகள் மேற்கொள்கின்ற நேரத்தில் வேண்டுமென்றால், அட்மினிஸ்ட்ரேட்டிவ் சாங்ஷன் வலியுறுத்தப்படலாம் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, நகராட்சி மன்றம் தனித்து சொந்த நிதியிலிருந்து செய்கின்ற அந்தக் காரியங்களுக்கு மேல் உத்தரவுகள், அட்மினிஸ்ட்ரேட்டிவ் சாங்க்ஷன் அவசியம் இல்லையென்ற கருத்தை நான் தாழ்மையோடு அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சி வேலைகள் வீணாகக் காலதாமதமாகிக் கொண்டு வருகின்றன என்ற குறை. அந்தக் குறையை அரசாங்கமும் அறியும். நகராட்சி மன்றங்கள் சில தீர்மானங்கள் போடுகின்றன. அவைகளை 2 ஆண்டுகள்



3 ஆண்டுகள் அமலாக்க முடியாமல், கிட்டத்தட்ட 1 டெர்ம், 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள் அந்தக் காலக் கட்டத்திற்குள்ளாக முடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, இதற்காக, நம்முடைய நகராட்சி இயக்குநர்—அலுவலாளர் மட்டத்திலே ஒரு மத்திய குழு, சென்ட்ரல் பூல் ஏற்படுத்தி, அது ஹெல்த் டிபார்ட்மெண்ட் பிரச்சினையாக இருந்தாலும்சரி, பி.டபிள்யூ.டி. பிரச்சினையாக இருந்தாலும் சரி அந்த ஒரு மட்டத்திலேயே அதற்கான, முறையான டெக்னிக்கல் சாங்க்ஷன் கிடைக்கத்தக்க ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும். இது மிகமிகத் தேவையான ஒன்று. ஒவ்வொரு அலுவலிலும், பைல் எங்கே போகிறது, சம்பந்தப்பட்ட இலாகா எங்கே இருக்கிறது என்று ஒவ்வொன்றிற்கும் அலையக்கூடிய நிலைமைகள் இருப்பதை நாம் தவிர்க்க முடியும். டி.எம்.ஏ. சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்குச் சென்றால், அங்கே எல்லா அதிகாரிகளும் இருப்பார்கள், நாம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்ற அளவில், 6 மாதத்திற்குள், ஒரு வருடத்திற்குள் நகராட்சிமன்ற முடிவுகளை நாம் அமல்படுத்த முடியும், மக்களுக்குத் திருப்தி ஏற்படுத்த முடியும். அந்த ஆலோசனையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சிமன்றங்கள் மதிப்பீடுகள் செய்கின்ற நேரத்திலே 5 சதவீதத்துக்குக் குறைவான மதிப்பீடுகள் இருந்தால்தான் அந்த மன்றம் அனுமதி வழங்கலாம். 5 சதவீதத்துக்கு மேலே போனால் பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்படவேண்டுமென்ற நிலை இருக்கிறது. 20 சதவீதம் வரை நகராட்சிமன்றங்களே அனுமதி அளிக்கலாம் என்று ஏற்பாடு செய்யலாம். அதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருவொற்றியூர் நகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையிலே செங்கற்பட்டு மாவட்டத்திலே வந்தாலும் சென்னையிலிருந்து 6 மைலிலே உள்ள நகராட்சி மன்றம் அது. அங்கே மதிப்பீடுகளைச் செய்யும்போது செங்கற்பட்டு மாவட்ட மதிப்பீடுகளைக் கணக்கிட்டுத்தான் செய்யப்படுகிறது.

City rates must be applicable to Thiruvottriyur Municipality.

சென்னையின் 20 மைல் சுற்றளவில் நகராட்சிகள் நிரம்ப இருக்கின்றன. நகரியங்கள் என்னுடைய தொகுதிக்குச் சம்பந்தப்பட்ட வரையிலே கத்திவாக்கம், மாதவரம், ஆவடி, அம்பத்தூர்—இங்கெல்லாம் சிட்டி ரேட்ஸ் அடிப்படையிலே மதிப்பீடுகள் போடப்படுதல் வேண்டும். செங்கற்பட்டு ரேட்டிலே இருக்கக்கூடாது. மதிப்பீடுகளைக்கூட 5 சதவிகிதத்துக்கு உட்பட்டு

மதிப்பீடுகளைச் சமர்ப்பிக்கிறார்கள் என்ற நிலை கிடையாது. ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கவேண்டிய அவசியத்திலே காலதாமதம் ஆகிறது. ஆகவே, 20 சதவீதம் வரையிலே, நகராட்சி மன்றங்களே, மதிப்பீடுகள் அதிகமாக இருந்தாலும், ஏற்றுக்கொள்ள வழி வகை இருக்கவேண்டும்.

அடுத்து. இந்த புரொபஷனல் டாக்ஸ்-க்கு பே ரோல் ரெக்கவரி செய்ய முடியவில்லை. அதற்காக பேமெண்ட் ஆப் வேஜஸ் ஆக்டை திருத்த வேண்டியிருந்தால் திருத்தி, வழிவகை செய்தால், நகராட்சிமன்ற வேலைகள் தடை இல்லாமல் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கும்.

அடுத்து, நகராட்சிப் பொறியாளர்கள் மதிப்பீடுகளை தயாரிக்கின்ற ஒரு நிலை. செக்கண்ட் கிரேட் முனிசிபாலிட்டியிலே தேர்ட் கிரேட் இன்ஜினியர்களைத் தான் போடுகிறார்கள். அவர்களுக்கு ரூ. 8,000 வரைதான் பொது வேலைகளுக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கின்ற அதிகாரம் இருக்கிறது. 1944-ம் ஆண்டிலே போடப்பட்ட உத்தரவின் அடிப்படையிலே இருக்கக்கூடிய ஒன்று அது. கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் ஆகின்றன. விலைவாசிகள் எல்லாம் 11 மடங்கு, 12 மடங்கு உயர்ந்து விட்டன. ஆகவே, ரூ. 8,000 என்று இருக்கக்கூடிய அதிகாரத்தை ரூ. 25,000 என்று உயர்த்த வேண்டும். அதை இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருவொற்றியூர் தொகுதியிலே உள்ள வில்லிவாக்கத்தை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முனிசிபல் பினான்ஸ் கார்ப்பரேஷன் என்ற ஒன்றை, நம்முடைய அரசு வருவாய் அடிப்படையிலே, ரெமுனரேட்டிவ் ஸ்கீம்ஸ்லுக்காக அறிவித்தார்கள். அது இன்னும் சரியான முறையிலே துவக்கப்படவில்லை, செயலுக்கு வரவில்லை. ஆகவே, அதை விரைவுபடுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாதவரம் ஊராட்சி ஒன்றியத்தை 6-வது பிரிவிலே வைக்க வேண்டும். ஏனென்றால், அங்கே விவசாயம் கிடையாது, வருவாய் கிடையாது.

கடைசியாக ஒரே ஒரு ஆலோசனை, என்னுடைய தொகுதி நகராட்சி மன்றங்கள் ஊராட்சி என்பதாக, சென்னை மாநகரத்தை ஒட்டியுள்ள பகுதி என்ற காரணத்திலே, 20 மைல் தூரம் சாட்டிலைட் டவுன்ஸ் என்றும் அந்தப் பகுதியிலே, மெட்ரோபாலிட்டன் ஸ்கீம் என்று ஒன்றும் அமைந்து, ஒன்றியச்



சாலைகள், நகராட்சி எல்லைகளுக்குள்ள பகுதிகள், குறைந்தபட்சம் 60 அடி அகலத்திலே உள்ள சாலைகளையாவது, அரசாங்கம் நேரடியாக எடுத்துக் கொள்ளவேண்டும். இது மிகமிக முக்கியமான பணி. இன்றையதினம் சாட்டிலைட் டவுனை நாம் ஏற்படுத்தவேண்டுமென்ற முறையிலே, அதற்கேற்ற வகையிலே, சாலைகளை அமைத்தால், போக்குவரத்து அபிவிருத்தி ஏற்படுத்த வசதியாக இருக்கும். (மணியடிக்கப்பட்டது).

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Chairman, Sir, at the outset I have to say that the importance that should be given to the Community Development Projects is not given by this Government. I think it was during the year 1918–19 or 1921 when the Commonwealth Bill was drafted by the late Anne Besant who said : "If you want to associate people with the Government, the only possible way is to give all importance and autonomy to panchayats.". To-day the panchayat derives authority from the Government of Tamil Nadu. Sir, the authority should be taken from the panchayat to the Government instead from the Government to the panchayat.

So far as Panchayats and community development works are concerned, if this Government or the Union Government are very serious about a solution to the unemployment problem and the rising prices, they must confine their entire attention to the panchayat and community development schemes. Industries should be started wherever possible and community development projects also should be worked so that they could provide employment to a large number of people.

Coming to cloth problem, I find that a charka with 12 spindles has been invented by Textools. The entire unit costs Rs. 65,000. I understand that only four or five had been ordered up to now. முற்பகல் 11-00 Instead of spending lakhs of rupees and investing crores of rupees on weaving mills, if this charka is popularised I think there will be possibility of employment of more people. I may also say in this connection that we need accountancy control on many items. For example the Khadi Board has been incurring losses. Similarly money given for Palm gur development is sometimes not used even for three years. Like that I can go on saying. We must have more control. Some panchayats have practically no income.

[Thiru K. M. Subramaniam] [1973 மார்ச் 17

It is said if panchayat contributes 1/4th expenditure, Government will bear 3/4th expenditure on roads. There are panchayats which cannot afford to pay even the 1/4th. What are we going to do about it? Are we going to leave those roads? Such poor panchayats should be exempted from a provision like this. Similarly in small panchayat areas where water-supply is difficult. the nearest water source should be tapped and water should be taken through pipes to those panchayats. In the 'Peravoorani' panchayat, there is no drainage. There is possibility to construct drainage without much difficulty there. Such cases have to be investigated and suitable action taken.

Coming to my own constituency, I find that the present Corporation Act is an outmoded Act. It is the 1919 Madras Municipal Corporation Act. At that time the authority was more in the hands of Government and with the passage of time, Corporation has to be invested with more powers and to suit present conditions, the Act should be amended.

Sir, rupees one crore had been granted to Corporation when the Hon. Chief Minister was elected from Saidapet constituency. The entire amount, instead of being distributed equally to other divisions (I have no quarrel with Saidapet, I agree it should be developed) had been spent in Saidapet. A suit had been filed. The Corporation being controlled by D.M.K. party, they decided that at least 80 per cent of the amount should be spent in Saidapet constituency. Such sort of thing should not be done. It should be left to the Council to accord sanction to rudimentary things in other divisions also.

The Education cess was invented in 1919 and those paying property tax have to pay this education cess also. Now primary education has been made compulsory. It is the duty of Government, whether State or Centre, to meet the extra expenditure that the Corporation is incurring for making elementary education compulsory. From 60,000 boys and girls, it has increased to 3 lakhs boys and girls now. That is why I say Government should give them more grants. For maintenance of roads also they require special grant. Unfortunately Corporation is not having enough funds. Every year we are told that the Government would give a "block grant" to the Corporation. Unless and until Government gives Rs. 10 crores as "block grant" to the Corporation



1973 மார்ச் 17] [Thiru K. M. Subramaniam]

work cannot be done there. It need not be in one year; it may be spread over two to three years. But a block grant is necessary and I hope the Hon. Chief Minister will pay heed to this and grant at least a block grant of Rs. 5 crores to the Corporation for ordinary welfare schemes. Thank you.

*திரு. வி. சுப்பிரமணியம்:* பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை 1960-ம் ஆண்டில் துவக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் 12 ஆண்டுகளுக்குப் பின்னும் பாதை வசதிகளும், குடிதண்ணீர் வசதிகளும், சுகாதார வசதிகளும் அற்ற நிலையில் இருப்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் நாளுக்கு நாள் செயல்படாமல் இருப்பதற்குக் காரணம் அது ஒரு தனி இலாகாவாகச் செயல்படவில்லை என்பதுதான். ஊராட்சி ஒன்றியத்தைத் தனி இலாகாவாகப் பிரித்து மாவட்டந்தோறும் தனி அதிகாரிகளை நியமித்து சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பொது நிதியை ஊராட்சி ஒன்றிய மன்றம் விரும்புகிற தலைப்பின்கீழ் செலவழிப்பதற்கு அதிகாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பல்வேறு தலைப்புகளின்கீழ் வழங்கப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகள் நீண்ட நெடுங்காலமாக தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் அத்தனைக்கும் சரி சமமாகப் பங்கிடுகின்ற நிலைமை இருந்து வருகிறது. பின்தங்கிய ஊராட்சி ஒன்றியங்கள் மேம்பாடு அடைய அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்களில் வசூலிக்கப்பட்டு வரும் சைக்கிள் வரி, வண்டி வரி ஆகியவற்றை நீக்கிவிட வேண்டும். சென்னை மாநகராட்சியில் சைக்கிள் வரியை நீக்கி இருக்கிறார்கள். கிராமங்களில் உள்ள சிறு விவசாயிகள் வைத்திருக்கும் பத்து பன்னிரண்டு சைக்கிள்களுக்கு உள்ள வரியை நீக்கிவிட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த வரிகளை எல்லாம் நீக்கிவிட்டு தனிப்பட்டவர்கள் நடத்தும் சந்தையையும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மினி தியேட்டர்களையும் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒதுக்கி, அதன் மூலம் ஊராட்சி ஒன்றியத்தின் நிதிநிலையை மேம்படுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் இன்று இருக்கும் வரி வசூல் செய்யும் முறையை மாற்ற வேண்டும். வருவாய்த் துறை மூலமாகவும், பகுதி நேர எழுத்தர் மூலமாகவும் அவை செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையை மாற்றி தமிழ்நாடு முழுவதும் ஆறாயிரம் பேர் எழுத்தராகப் பணி புரியும் அளவுக்கு, அரசு நிதி நிலையைப் பாதிக்காத அளவுக்கு வருவாய்த் துறைக்குச் செலவழிக்கின்ற அந்தப் பணத்திலிருந்து இதற்கு தனியாக எல்.டி.சி. கிரேடில் எழுத்தரை நியமித்து அதன் மூலம் ஊராட்சி மன்றங்கள் செயல்படுவதற்கு வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு வாரியங்களின் மூலம் ஒன்றியங்களில் நடைபெறுகின்ற செயல்களுக்கு, சாலை அபிவிருத்திகள், சுகாதார வசதிகள், குடிதண்ணீர் வசதிகள், வீட்டு வசதிகள் அத்தனையும் ஒன்றியத்தின், மன்றத்தின் ஆலோசனை பெற்று அதன் அடிப்படையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அலுவலர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து புதிய ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அந்த நான்கு பிரிவுகளும் செயல்படுவதற்கு மிகுந்த தாமதம் ஏற்படுகிறது. அது அன்றாடம் நடைமுறைக்கு ஒவ்வாத வகையில் இருப்பதால் அந்தப் பிரிவுகளை மாற்றி இதுவரையில் இருந்ததைப்போல் ஊராட்சி ஒன்றிய ஆணையரின் தலைமையில் அந்த ஊராட்சி ஒன்றியங்கள் இயங்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு வருகை புரிகிற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகிற படி ஒருவருக்கு ரூ. 2 தான் கொடுக்கிறார்கள். இன்று அரசாங்கத்தின் கடைநிலை ஊழியருக்குக்கூட ஐந்து ரூபாய்க்கு மேல் தினசரிப் படி கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். எனவே மரியாதைக்குரிய ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு தினசரி இரண்டு ரூபாய் படி என்று கொடுப்பதை மாற்றி தகுந்த அளவில் அவர்கள் வந்து போகும் செலவைக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு என் தொகுதிபற்றிய சில குறைபாடுகளை இந்த சமயத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனது தொகுதியில் புத்தனந்தாள் அணை 1958-ல் கட்டப்பட்டு இன்று நீர்ப்பாசனத்திற்கு அது லாயக்கில்லாத நிலையில் இருக்கிறது. வாய்க்கால்கள் வெட்டப்படாததால் அந்த அணை செயல்படவில்லை. மேலும், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் வீட்டு வசதிச் சங்கங்களை நிறுவி கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான வழிவகைகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உளுந்தூர்பேட்டை, திருவெண்ணைநல்லூர் சாலை



இரண்டாவது திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டும் நிதிநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருப்பதை இந்த ஆண்டு அந்தச் சாலைத் திட்டத்தை எடுத்து செயல்படுத்தி நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, I thank the Chairman for giving me this opportunity to speak a few words on Community Development in support of my cut motion.

Regarding Community Development, there is a long wish even from the Opposition party benches to separate this Community Development Department from the Revenue Department. It is very urgent and essential. Even at Kodikanal Conference, it has been discussed and accepted by the Hon. Minister and other officials of the Revenue Department. But so far, it has not been implemented. I request the Government to see that it is implemented soon so that they can carry on the needed development without any obstruction.

Next point is about basic amenities to the people in panchayats and panchayat unions. Even after 25 years of Independence, it is disturbing to note that we are not able to give protected water-supply, even at least water-supply, in villages, in areas like my Constituency Anchetty. There are no drinking water wells there. I request the Government to provide at least water supply to such areas first.

What did Gandhiji and Anna say? Every one has been saying that people should be given basic amenities like protected water-supply, etc. It is disturbing to see that the Hon. Minister has not eliminated such difficulties. Even the hon. Member, the Chairman of the Water and Drainage Board held a Seminar at Dharmapuri when he was saying that within five years, all places in the State would be provided with water-supply. I hope the hon. Member will take that into consideration and implement the scheme, especially in my area of Hosur taluk.

Regarding school buildings, we are having only three or four school buildings in each panchayat union every year. It is pathetic that even children have to sit in cattle sheds. This kind of thing should be changed. Even in Kodaikanal Conference the

[Thiru B. Venkataswamy] 1973 மார்ச் 17]

suggestion was agreed to that loan can be taken from L.I.C. and provision made in this regard. I hope Government will take action in that regard also.

Coming to irrigation tanks, they are giving only Rs. 3,000 for each tank to maintain. But desilting of tanks has not been done for many many years. Desilting also should be taken up urgently.

As rgeards Roads, we are laying roads under a crash programme It is quite appreciable. After laying roads, we should plant trees. The panchayat unions say that they have no funds for this purpose. Therefore, planting of trees and avenues on road sides should also be taken up so that soil erosion could be prevented.

For Animal Husbandry, more funds should be provided for medicines.

Direct election to the panchayats and panchayat union council should be there. I suggest that direct election is the best method. I hope and trust that the Government will take action about this.

Coming to collection by Commissioners, they are harassing the people, the teachers and staff. I suggest that collection work ought not to be given to Commissioners. They may be left to attend to their legitimate work honestly and efficiently.

Pension should be given to panchayat union staff. I hope Government will consider this and pass early orders.

Regarding panchayat poramboke, collection is made by the Revenue Department and it has not been remitted to the panchayat accounts or union accounts. This should be taken rete of and collections made on behalf of the panchayat porambokes should be remitted to panchayat or panchayat union accounts.

Unions appoint gang coolies on a temporary basis. They are taken year after year. It is better to make them permanent, so that experienced people may not be lost for the work.

In the Women's Welfare Department, steps should be taken to give preference to widows also in the department.

In hilly areas, Government are not in a position to provide roads. We are not in a position to lay roads with the amounts allotted, especially in hilly areas like Ootacamund, Anchetty, etc.



[1973 மார்ச் 17 [Thiru B. Venkataswamy]

An integrated programme and a crash programme should be formulated for the purpose. I understand that there is a crash programme, but it has not been implemented. I requst the Government to take quick action so as to lay roads in hilly areas.

Suplly of medicines is done with the approval of higher authorities to Primary Health Centres. This should be changed so that we can give more relief and timely to pregnant women and delivered women and the Doctors of the Centres should be allowed to purchase medicines from co-operative stores for immediate use. This should be done urgently so that we can give better help on the health side.

**திரு. முனு ஆதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அந்த மானியக் கோரிக்கைக்கு வெட்டுப் பிரேரணை தந்த என் கட்சியின் சார்பில் நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உள்ளாட்சித் துறைகள் அத்தனையும் அடங்கியிருக்கின்றன என்றாலும் அதேநேரத்தில் அந்த உள்ளாட்சித் துறையில் பல நிறுவனங்கள் இருப்பதை நாம் நன்கு அறிவோம். குறிப்பாக மாவட்ட அபிவிருத்திக்குழு என்பது நீண்ட நெடுங்காலமாக நாம் அங்கு சந்தித்து மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் அந்தந்தத் தொகுதியில் உள்ள குறைகளையும், சாலைப் பராமரிப்புகளையும், குடிநீர் வசதியையும், சுகாதாரத்தையும், பள்ளிக்கூடங்கள் மற்றவைகள் பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியும் இதுவரையில் அந்த அபிவிருத்திக் கௌன்சிலின் எதிரொலி எங்கேயும் படவில்லை என்பது விவாதத்தில் கலந்துகொண்ட அத்தனைபேர்களும் சொல்லிய கருத்தாகும். இந்த ஆண்டு, 1972-73-ல் 11 கோடி ரூபாய் வரையில் ஒதுக்கியிருந்த இந்த அரசு இந்த ஆண்டு ரூ. 25 கோடி ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். ஒன்றரை மடங்கு உயர்த்தியிருப்பது நாட்டிலுள்ள மக்களின் எழுச்சியையும் கொந்தளிப்பையும் இதன் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்று செய்திருந்தாலும் மக்களுக்குப் பயன்படத்தக்க அளவில் அதை ஒதுக்கியிருப்பதற்காக அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் பல ஆடிட் செய்யப்படாமல் இருக்கின்றன. ஆனால் குறிப்பிட்ட சில ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் துரிதமாக ஆடிட் செய்யப்படுகின்றன. அந்த ஆடிட் ரிப்போர்ட்டுகள் சட்டமன்றத்திலும் வைக்கப்படுவது இல்லை. அந்த ஆடிட் ரிப்போர்ட்டுகளில் குறைகள் எடுத்துக் காட்டப்பட்டிருந்தும் அரசாங்கம் அவற்றின் மீது எவ்வித நடவடிக்கையும்

எடுப்பது இல்லை. இப்படி இருப்பதற்குக் காரணம், ஊராட்சி ஒன்றியங்கள் தலைவர்கள் செயல்படுகிற விவகாரங்களில் குறைபாடுகள் வந்தால் அது அதிகாரிகளைச் சாரும் என்று நினைக்கிறேன்—ஆகையால் அந்த ஆடிட் ரிப்போர்ட்டில் 'குறை இருந்தால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் வேண்டியவர்களாக இருந்தால் அங்கே நடவடிக்கை எடுக்கப்படுவது இல்லை. வேண்டாதவர்கள் இருந்தால் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இப்படிப்பட்டவைகளை நான் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

ஒன்றாக இருந்தகாலத்திலிருந்தே சொல்கிறேன், இந்த டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலுக்கு நான்-அபிசியல் தான் சேர்மனாக இருக்க வேண்டும். அப்போது தான் அவர் எல்லா உறுப்பினர்களையும் அனுசரித்துப் போகவேண்டும் என்பதற்காக சரியான முறையில் நிதிப் பங்கிடு செய்வார்கள். அதற்கு அதிகாரிகள் இப்போது இருப்பதால் அவர்கள் அரசு எந்தெந்தப் பகுதிகளுக்குச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்களோ அந்தப் பகுதிகளுக்குத்தான் செய்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், கிழக்குச் செங்கற்பட்டு பகுதிக்கு சாலை அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை ஒரே ஒன்றியத்தொகுதியில் செலவு செய்து இருக்கிறார்கள். இதை மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலில் ஒன்றாக இருந்த நேரத்திலேயே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆதாரத்தோடு தெரிவித்து இருக்கிறேன். இதுவரையிலும் அது குறித்து அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சென்னையைச் சுற்றியுள்ள பெல்ட் ஏரியாவில் குடிமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று 5 ஆண்டுகாலமாக இந்த அரசைக் கேட்டோம். அப்போது செய்ய முடியாது என்று சொன்னார்கள். இப்போது ஏதோ காரணத்திற்காக உத்தரவிட்டு 3 சென்ட்ஸ் கொடுத்து இருக்கிறார்கள். அவசரக் கோலத்தில் அள்ளித்தெளித்தாற்போல் கல் கூட நடாமல் கொடுத்து இருக்கிறார்கள். ஆக்கிரமிப்புச் செய்கிறபோது அந்தக் பக்கம் உள்ளவர்கள் 3 சென்ட், இந்தப் பக்கம் உள்ளவர்கள் 3 சென்ட் எடுத்துக்கொண்டு விட்டு, இடையில் உள்ளவர்களுக்கு குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் அங்கே சண்டை கூட சிலயிடங்களில் ஏற்பட்டிருக்கிறது. அங்கேயுள்ளவர்கள் கடன் வாங்கி வீடு கட்டவேண்டுமென்று நினைத்தால் அந்த 3 சென்ட் நிலத்தில் வீடு கட்ட முடியாது. காரணம் டவுன் பிளானிங் ஆக்ட் படி அந்த பிளான் அப்ரூவ் ஆகாது. 5½ சென்ட் இருந்தால் தான் அப்ரூவ் ஆகும். இந்த அரசு 3 சென்ட் கொடுத்ததற்குக் காரணம் அங்கேயுள்ளவர்கள் வீடு கட்டிக்கொண்டு வாழக்



கூடாது, எப்போதுமே குடிசையிலே இருக்கவேண்டுமென்ற எண்ணத்தில் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்த அரசு நிச்சயமாக ஏழைகளுக்காக இருக்கிறது என்று சொன்னால் உடனடியாக 5½ சென்ட் ஒதுக்கி அவர்கள் நல்ல வீடுகள் கட்டிக்கொண்டு வாழக்கூடிய நிலையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாளையங்கோட்டை நகராட்சி மன்றம், அந்தப் பகுதியில் மாணவர்கள் மீதும், மக்கள் மீதும் போலீஸ் கடுமையாக தடியடி நடத்தியதை வன்மையாகக் கண்டித்து ஒரு தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பினார்கள். அங்கே மனச்சாட்சியுள்ள ஒரு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தான் அதை முன்மொழிந்திருக்கிறார்கள், இன்னொருவர் வழிமொழிந்து இருக்கிறார். இந்த அரசுக்கு அந்தத் தீர்மானம் வந்தவுடன், அவசர அவசரமான அந்தத் தீர்மானத்தை ரத்து செய்து விட்டு, அந்த மாநகராட்சி மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று கேட்டு நோட்டீஸ் பிறப்பித்து இருக்கிறார்கள். நான் இன்னொன்றைச் சொல்வேன். சில காலத்திற்கு முன்பு குழந்தைகளைப் பிடிக்கிறார்கள் என்ற பீதி ஏற்பட்டது உண்டு. சர்க்கரைக் கடத்தல் காரர்கள் இருக்கிறார்கள் என்று சொல்வது உண்டு. உரம் கடத்துபவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்வது உண்டு. வைரம் கடத்துபவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்வது உண்டு; கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஆளைக் கடத்துபவர்களை இந்த ஆட்சியில் தான் பார்த்திருக்கிறேன். ஆளைக் கடத்தும் படலம் இந்த ஆட்சியில் தான் இருக்கிறது. கடத்தப்பட்டவர்கள் வீட்டில் உள்ள பெண்கள் ஐயோ என் கணவனைக் காணவில்லையே என்று தவிக்கிறார்கள். (குறுக்கீடு) கடத்தப்பட்டவர்கள் சாதாரண ஆட்கள் அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர மன்ற உறுப்பினர்கள். அவர்களுடைய வீட்டில் உள்ளவர்கள் என்னிடத்தில் வந்து சொன்னபோது நான் காவல் துறையினரிடத்தில் கேட்டேன். ஆளைக் கடத்துபவர்களைப் பிடித்து தாருங்கள் என்று. அதற்கு அவர்கள் சொன்னார்கள். உங்களைப் பிடிப்பதற்குத்தான் எங்களுக்கு உத்தரவு இருக்கிறதே தவிர மற்ற ஆட்களைப் பிடிப்பதற்கு எங்களுக்கு உத்தரவு இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை நீடிக்க விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

யூனியனுக்கு ஒதுக்கப்படும் நிதிகள் காட்சிக் கன்ஸோட்டத்தில் ஒதுக்கப்படுகின்றன. இதற்காகத்தான் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் நான்-அபிசியலாக இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டேன். அப்போது இந்தப் பிரச்னை இருக்காது. அவர் ஒருதலைப்பட்சமாக நடக்க முடியாது. அபிசியல்கள் தலைவர்களாக இருப்பதால், அது நகர மன்றமாக இருந்தாலும் சரி, ஊராட்சி

மன்றங்களாக இருந்தாலும் சரி, அவற்றிற்கு முறையாக நிதி கொடுக்காத சூழ்நிலை இருக்கிறது. நகர மன்றத் தலைவரையும், நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கொள்கையில் இந்த அரசின் கருத்து என்ன என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன் நிர்வாகங்களில் புளா ஒதுக்கீடு சில தனிப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு வேண்டியவர்களுக்கு அதிகமாகவும், வேண்டாதவர்களுக்குக் குறைவாகவும் கொடுக்கப்படுகிறது என்று நம்முடைய அருமை நண்பர் ஆதி அவர்கள் சொன்னார்கள். அது உண்மைக்கு மாறானது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி:** தலைவரவர்களே, நான் ஆதாரத்தோடு சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** அது ஸ்டாசுடரி கிராண்ட், அதிலே யாரும் ஒன்றும் சொல்ல முடியாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்?

**திரு. முனு ஆதி:** மைக் இருந்தால் தானே. என் மைக் ஓர்க் செய்யவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** நான் சொன்னால் தான் மைக் வரும். நான் சொல்கிறவர் பேசுகிறபோது மைக் ஓர்க் பண்ணும். திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களை பேச அழைத்து இருக்கிறேன். அவர் பேசுகிறார். அவர் பேசி முடித்ததும் நீங்கள் பேசலாம். எல்லோரும் ஒரே நேரத்தில் மைக் வேண்டுமென்று கேட்டால் அது ஓர்க் பண்ணாது. நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள் சொல்லுங்கள்.

**திரு. முனு ஆதி:** துணைத் தலைவரவர்களே, கிழக்கு செங்கற்பட்டு மாவட்ட அபிவிருத்திக் குழு கும்முடிப்பூண்டி தொகுதிக்கு மட்டும் மொத்தத் தொகையையும் ஒதுக்கி செலவு செய்து இருக்கிறது. நாங்கள் அத்தனை பேரும் சென்று கேட்டதற்குப் பின்னாலே தான், அது குறித்து ஆவன செய்கிறேன் என்று சொன்னார்கள். உண்மையில் தி.மு.க. உறுப்பினர்களும் சேர்ந்து கொண்டு தான் அந்த ரெப்ரசன்டேஷன் செய்தோம். இதை ஆதாரத்தோடு சொல்வேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் கும்முடிப்பூண்டி ஒன்றியம் மட்டும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரைக் கொண்டு நிர்வாகம் நடத்தப்படவில்லை. பல்வேறு ஒன்றியங்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் சொன்ன அந்த ஒன்றியத்தில் கூட காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்தான் அதனுடைய தலைவராக இருக்கிறார். மாண்புமிகு முனு ஆதி அவர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு ஒரு நீதி வழங்கப்படுகிறது, மற்றவர்களுக்கு ஒரு நீதி வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். இந்த ஒன்றியம் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவரை தலைவராகக் கொண்ட ஒன்றியம், எதிர்க் கட்சியைச் சார்ந்த ஒன்றியத்திற்கு அதிகமாகச் செலவழித்தோம் என்பது ஒரு குற்றச்சாட்டா?

**திரு. முனு ஆதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றாக இருந்த நேரத்தில், மாவட்ட அபிவிருத்தி குழுவில் கடுமையான விவாதம் நடத்தி, நானும், திரு. இ. ராஜரத்தினம் அவர்களும், சீப் இன்ஜினியர் அவர்களைப் பார்த்து சொன்ன உடனே தவறு தான், உடனே கவனிக்கிறேன் என்று சொன்னார்கள், எதிர்க் கட்சிக்காரர்கள், ஆளும் கட்சிக்காரர்கள் என்று சொல்லவில்லை. ஒரு தலைப்பட்சமாக நடந்து இருக்கிறது என்பதற்காகத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒன்றாக இருந்த நேரத்தில் என்று சொல்கிறார்கள். அது பலருக்குப் புரியாமல் இருக்கலாம். அவர் எங்களோடு இருந்ததைக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அந்தக் காலத்தைக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அப்போதுகூட குற்றச்சாட்டு காங்கிரஸ்காரர் யூனியன் தலைவராக இருக்கிறார், அவருக்குக் கொடுக்கப்பட்டது அதிகமாக என்று குற்றச்சாட்டு சொன்னால், அதைக் குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ள முடியாது. இப்படிப்பட்ட காரியங்களை கிராமங்களில் செய்கிறோம். அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தவர் இருக்கிற இடத்திற்குச் செய்வது, காங்கிரஸ்காரர்கள் நிர்வாகத்தில் இருந்தால் செய்வது இல்லை என்ற கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, அது காங்கிரஸ்காரர்கள் இடமாக இருந்தாலும் நாங்கள் செய்து இருக்கிறோம் என்பதைத் தான் பாராட்ட வேண்டும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவரவர்களே, காமாலைக் கண்ணனுக்கு முற்
கண்டதெல்லாம் மஞ்சலாகத் தெரிவதுபோல், நமது நண்பருக்கு எதை பகல்
எடுத்தாலும் அதில் கட்சி வந்து புகுந்து விடுவதுபோல் தோன்றுகிறது. 11-30

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1973 மார்ச் 17

தனக்கு வேண்டியவர்களுக்குச் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு சொல்வதை அவர் நிறுத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் இருப்பவர்களில் நானும் ஒருவன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்குகிறார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொண்டு பேசவேண்டும். வேண்டியவர்கள் என்பதற்காக ஒரேடியாக பணம் ஒதுக்கிவிட்டு, வேண்டாதவர்களுக்கு ஒதுக்குவதில்லை என்று சொல்லுவது சரியல்ல.

மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலுக்கு அதிகாரம் கிடையாது. It is only a recommendatory body, advisory body அவர்கள் இயர்மார்க் (earmark) செய்து இத்தனை லட்சம் இந்த யூனியனுக்கு என்று சொல்ல முடியாது. சில பகுதிகளில் இருக்கின்ற சேர்மன்கள் சுறுசுறுப்பாக (ஆக்டிவ்) இருப்பவர்கள். அவர்கள் அதைச் செய்யவேண்டும், இதைச் செய்யவேண்டுமென்று கேட்டு வாங்கிச் செய்தால், நண்பர் ஆதி அவர்களும் அந்தமாதிரியே அவருடைய பகுதியில் இருக்கிற ரோடுகளைப் போட முயற்சி செய்யலாம். மற்றவர்கள் பேரில் குறை சொல்லுவதில் பிரயோஜனமில்லை.

பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் சில ஆர்கனைசேஷனல் செட் அப்பை organisational set-up மாற்றவேண்டுமென்று கொடைக்கானல் கூட்டத்தில் முடிவு செய்தார்கள். ரெவின்யூ இலாக்காவிலிருந்து உள்ளாட்சித் துறையை பிரிக்க வேண்டும்; ரெவின்யூ இலாக்காவுக்கு ஒரு தனிப்பட்ட அமைப்பு (செட் அப்), உள்ளாட்சித் துறைக்கு வேறுமாதிரியான அமைப்பு; இவைகள் இரண்டும் ஒன்று சேர்ந்திருப்பதால், இரு இலாக்காவுக்கும் ஒற்றுமை இல்லாத காரணத்தால் கோளாறுகள் இருக்கின்றன; ஆகவே இதை உடனடியாக பரிசீலனை செய்து உள்ளாட்சித் துறையை, ரெவின்யூ இலாக்காவிலிருந்து தனியாகப் பிரிக்கவேண்டும் என்று இங்கே தீர்மானிக்கப்பட்டது. அதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலுக்கு எந்த விதமான அதிகாரமும் கிடையாது. முன்பு டிஸ்டிரிக்டு போர்டு இருந்தபோது, கல்வி சம்பந்தமான விஷயம் அவர்கள் மானேஜ்மெண்டிலிருந்தது. இப்போது டிஸ்டிரிக்டு எஜுகேஷனல் ஆபீசர் வேறு, சீஃப் எஜுகேஷனல் அதிகாரி வேறு என்று வைத்து மாவட்டத்தில் உள்ள 200, 300 உயர்நிலைப் பள்ளிகளையும், அவற்றில் உள்ள 3,000 அல்லது 4,000 ஆசிரியர்களையும், சீஃப் எஜுகேஷனல் ஆபீசர் எல்லாவற்றையும் தெரிந்தவர் என்று நினைத்து அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி, டிஸ்டிரிக்டு டெவலப்மெண்டு கவுன்சிலிடம்



1973 மார்ச் 17] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

உயர்நிலைப் பள்ளிகளை நிர்வாகம் செய்யும் பொறுப்பை கொடுக்க வேண்டும். அப்படிச் செய்து அந்த உயர்நிலைப்பள்ளிகள் நல்ல முறையில் இயங்க தக்க வகையில் அரசாங்கம் உத்திரவுகளை எல்லாம் மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கொடைக்கானல் மாநாட்டில் இன்னும் பல சிறந்த முடிவுகளை எல்லாம் எடுத்திருக்கிறார்கள். சர்வ கட்சியினரும் சேர்ந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியினர், மற்றும் உள்ள கட்சியைச் சார்ந்தவர்கள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், ஏனைய அதிகாரிகள் எல்லோரும் சேர்ந்து அங்கே அமைச்சர் அவர்கள் தலைமையில் 6, 7 மாதங்களுக்கு முன்னால் கூடி அரிய தீர்மானங்களை விவாதத்திற்குப் பிறகு நிறைவேற்றியிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் என்ன காரணத்தினாலோ அமுல் படுத்தப்படாமல் இருக்கின்றன. ஒரு வேளை சம்பந்தப்பட்ட இலாக்காவினரை இன்னும் கொஞ்சம் அதிகமாக புல் அப் (pull up) செய்யவேண்டுமோ என்ற கருத்திருக்கிறது. 8 மாதங்கள் ஆகின்றன. எந்த விதமான அக்கறையும் அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் காட்டப்படவில்லை என்றால் என்னவென்று புரியவில்லை.

அடுத்து, இந்த குடி தண்ணீர் வழங்குவது, பள்ளிக்கூட கட்டிடம் கட்டுவது என்பதை எடுத்துக்கொண்டால், நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற கிராமங்களுக்கெல்லாம் குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்றால், குடிநீர் வாரியத்தின் மூலமாக திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால், 120 கோடி ரூபாய் வேண்டும் என்றார்கள். மத்திய அரசாங்கம் இந்த 120 கோடி ரூபாயை வழங்க வேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் அதற்குள் கிராமங்கள் எல்லாம் அழிந்துவிடும். அவர்கள் வழங்கிச் செய்வதென்றால் இன்னும் 20 ஆண்டுகள் ஆகும். இந்த வருடம் அவர்கள் 50 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அடுத்த வருடம் 1 கோடி ரூபாய் கொடுப்பதாகத் தெரிகிறது. ஆகவே அவர்கள் இந்த 120 கோடி ரூபாயையும் உடனடியாகக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்ப்பது தவறாகும். நாமே இந்தப் பிரச்னையை தீர்க்க முயற்சிக்க வேண்டும். நமது இலாக்காவினர் இதற்கான மதிப்பீட்டைப் போட்டு, 33 கோடி ரூபாய் இருந்தால் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சிறிய குடிநீர் நிலையத்தை வைத்து, 40,000 ரூபாய்க்கு மேற்படாத அளவில் குடிநீர் நிலையத்தை வைத்து ஏற்பாடு செய்யலாம். தமிழகத்தில் எஞ்சியிருக்கின்ற எல்லா கிராமங்களுக்கும் அவ்வாறு செய்ய வேண்டுமென்றால் 33 கோடி ரூபாய் தேவை என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். அதைச் செய்யவும் வெறும் கூரையோடு இருக்கின்ற பள்ளிக்கூடங்களுக்கும் மரத்தடியில் நடத்தப்படுகின்ற

பள்ளிகளுக்கும் சேர்த்து கட்டடம் கட்ட ரூபாய் 13 கோடியாகும். ஆக இரண்டு இனங்களுக்கும் சேர்த்து 46 கோடி ரூபாய் இருந்தால் அத்தியா வசியமான இவைகளைச் செய்யலாம் என்ற கருத்து இலாக்காவால் அரசாங்கத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது.

ஆகவே, நமது அரசாங்கம் 2, 3 ஆண்டுகளில் இந்தத் தொகையை ஒதுக்கி, நேரடியாகச் செலவழிக்க பொறுப்பு மேற்கொண்டால் மிகவும் நல்லது. அப்படி முடியவில்லை என்றால் ரூரல் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன் என்ற அமைப்பு ஒன்றை ஏற்பாடு செய்து, பாங்குகள் அல்லது மத்திய நிதி நிறுவனங்கள் மூலமாக அந்த அமைப்புக்கு கடன் வழங்கச் செய்து, இந்த வேலைகளை உடனடியாக நிறைவேற்றினால் தான் நாம் மீண்டும் மக்களிடத்தில் செல்லலாம். அப்படிச் செய்தால்தான, பஞ்சாயத்து யூனியன்கள் பஞ்சாயத்துக்கள் மூலம் அவற்றின் தலைவர்கள் மக்களுக்கு நல்ல தொண்டாற்றுகிறார்கள் என்ற உணர்வு மக்களுக்கு ஏற்படும். ஆகவே இவற்றை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தால் படித்தவர்கள் பலரும் அவதியுற்றுக் கொண்டிருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் வேலையில்லாமல் இருப்பவர்கள் நிறைய இருக்கிறார்கள். நமது அரசாங்கம் வரி வசூல் செய்வதற்கு 87 லட்சம் ரூபாய் செலவு செய்கிறார்கள். தற்போது கிராம அதிகாரிகள், மணியக்காரர்கள் மூலமாக வரி வசூல் செய்யப்படுகிறது. எங்களுக்கு இந்த வரி வசூலிப்பு வேலை வேண்டாம் என்று அந்த கிராம அதிகாரிகள் கூறிக்கொண்டிருக்கின்றனர். 87 லட்சம் ரூபாய் அரசாங்கம் செலவு செய்தும், கிராம அதிகாரிகளை அரசாங்கம் திருப்திப்படுத்த முடியவில்லை.

ஏற்கெனவே நாம் முடிவு செய்தோம். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு கிளார்க்கை போட்டு வரி வசூலிக்கலாம், அரசாங்கம் செலவழிக்கிற 87 லட்சம் ரூபாய்க்கு மேல் அவர்கள் செலவழிக்க வேண்டியதில்லை; அரசாங்கத்திடம் நாங்கள் அதற்கு மேல் பணம் கேட்கவில்லை; அதிகமாக ஆகின்ற பணத்தை பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் பகிர்ந்து கொள்ளுகிறோம் என்று சொன்னோம். நமது மாநிலத்தில் 14,500 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன என்றால், 14,500 பேர் படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆகவே அதைச் செய்தால் நன்றாக இருக்கும். மாவட்ட அளவில், ஒன்றிய அளவில் நியமனம் செய்ய உத்திரவு ஏன் இன்னும் போடவில்லை என்று கேட்க விரும்புகிறேன். இதில் என்ன தடையிருக்கிறது என்று புரிந்துகொள்ள முடியவில்லை.



இரண்டாவதாக ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களைப் பற்றி எடுத்துக் கொண்டால், நமது மாநிலத்தில் ஆரம்பக் கல்விக்காக பஞ்சாயத்து ஒன்றியங்கள் மூலமாக ஏறக்குறைய 30 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். நாங்களும் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருக்கிறோம். மக்களுடைய வரிப் பணத்தை செலவு செய்யும்போது, ஒழுங்காக அதைச் செலவுசெய்கிறோம் என்ற நிலை எங்களுக்கு இருக்கவேண்டும். ஆசிரியர் என்று பெயரளவில் இருந்துகொண்டு, உள்ளூர் தகராறை, கட்சித் தகராறுகளை வைத்துக் கொண்டு நடத்துகிறவர்களை அந்த ஊரிலேயே ஆசிரியர்களாக வைப்பது என்பது அநியாயம்.

முன்னால் செஞ்சியில் இருப்பவர்களை சிதம்பரத்துக்கும், சிதம்பரத்தில் இருப்பவர்களை கள்ளக்குறிச்சிக்கும் மாற்றுவார்கள். இன்றைக்கு ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கும் இன்னொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் இடையே 10 மைல் தூரம்தான் இருக்கிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியனுக்குள் ஆசிரியர்கள் எங்கே வேண்டுமானாலும் சைக்கிளிலேயே வந்துவிட முடிகிறது. இந்தமாதிரி தவறு செய்யும் ஆசிரியர்களை மாற்றக்கூடாது என்றால், அரசாங்கப் பணத்தை வீணாக்க பஞ்சாயத்து யூனியன் சேர்மனாகிய நாங்கள் தயாரில்லை. We should not waste public funds like this.

ஆகவே மாணவர்களுக்கு கல்வி போதிக்கக் கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டும்; அதற்கு ஆசிரியர்களை திருத்த வேண்டும் என்று நடவடிக்கை எடுத்தால், ஆசிரியர்களை பழிவாங்க வேண்டும் என்று எடுப்பதாக கருதக் கூடாது. ஆசிரியர்களை பழி வாங்கவேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. ஆசிரியர்களை பழிவாங்கிவிட்டு நாங்கள் எப்படி இங்கு வரமுடியும். ஆசிரியர்கள் என்ற போர்வையில் அரசியல்வாதிகள் உள்ளே நுழைந்துகொண்டு, எல்லா கட்சிக்காரர்களையும் ஏமாற்றிவிட்டு செல்லுகிறார்கள் என்றால், அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டாமா? பொது மக்கள் பணத்தில் 30 கோடிக்கு மேல் ஆரம்பக் கல்விக்கு செலவு செய்கிறோம். அப்படி இருக்கும் போது சில ஆசிரியர்கள் வாரத்துக்கு 5 நாட்கள் பள்ளிக்கூடம் என்றால், 2 நாட்களுக்கு பள்ளிக்கூடத்திற்கு போவார்கள், 3 நாட்களுக்கு லீவு தேதி போடாமல் எழுதிவைத்துவிட்டு இருந்துவிடுவார்கள், யார் போனாலும் கண்டுபிடிக்க முடியாது என்ற நிலைமை இருந்தால், இதற்கு நடவடிக்கை எடுக்கும் முறையில் ஆசிரியர்களை மாற்ற பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்குக் கூட என்ன அதிகாரம் இருக்கிறது?

ஆசிரியர்களை மாற்றக்கூடாது என்று சென்றமுறை அமைச்சர் வீட்டிற்கு முன்னால் மறியல் செய்தார்கள். யாரையும் மாற்றாதீர்கள், மறு உத்தரவு வருகிற வரையில் மாற்றாதீர்கள் என்று சொல்லிவிட்டார்கள். கொஞ்சகாலம்

கழித்து உத்தரவு போட்டார்கள். உத்தரவு போட்டது பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. என்னுடைய பஞ்சாயத்து யூனியனில் செலக்ஷன் கிரேடாக சில பேரை நியமிக்க வேண்டும் என்று சொன்னார்கள். செலக்ஷன் கிரேடு போட்ட பிறகு 5 ரூபாய், 10 ரூபாய் டியூட்டி அலவன்ஸ் கொடுத்தார்கள். போன வருடம் பிப்ரவரி மாதம் இந்த உத்தரவு போட்டார்கள். செலக்ஷன் கிரேடாக போட்டதில் 16 பேரை தலைமை ஆசிரியராக வேறு இடத்தில் மாற்ற வேண்டி வந்தது. சீனியாரிடி நிர்ணயித்து 16 பேரை மாற்றினோம். இது சம்பந்தமாக கமிஷனர் டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீசருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

" The benefits of the duty allowance should be allowed to the teachers in the order of seniority. As it is, some of the juniors are working as Headmasters. The anamoly has to be set right at the earliest possible date. The following schools have the following strength and they require transfers என்று சுட்டிக்காட்டினார். ஆறு மாதத்திற்கு முன்னால் இந்தக் கடிதம் எழுதியிருக்கிறார், அரசாங்கம் போட்ட உத்தரவின்படி. இன்னும் அந்த விஷயம் பைசலாகவில்லை. செலக்ஷன் கிரேடு உள்ளவர்களுக்கு 30 ரூபாயும், டியூட்டி அலவன்ஸ் 5 ரூபாய், 10 ரூபாய் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. அரசாங்கப் பணம் வீணாவதற்கு நாங்கள் எதற்கு சேர்மனாக இருக்கவேண்டும்?

எங்களுக்கு அதிகாரம் வேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை. பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களுக்கு ஆசிரியர்களை மாற்றும் அதிகாரம் இருக்க வேண்டுமென்று கேட்கவில்லை. ஆனால் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரை ஏன் நம்பக்கூடாது? மாவட்ட கல்வி அதிகாரியும், பள்ளித் துணை ஆய்வாளர்களும் ஆசிரியர்களைப் பார்த்து உன்னை மாற்றட்டுமா, மாற்றக்கூடாதா என்று பேரம் பேசிக் கொண்டிருக்கின்றனர். இந்தமாதிரி நிலை இருப்பதால் 30 கோடி ரூபாயில் பெரும் பகுதி வீணாகிறது. சரியான கல்வி போதிக்க முடியவில்லை. ஆகவே, 374 பஞ்சாயத்து யூனியன் சார்பிலும் சொல்லிக்கொள்ளுவேன். தயவு செய்து முன்பிருந்ததைப் போல் கமிஷனர்களே ஆசிரியர்களை மாற்றலாம், சேர்மனை கலந்தோ அல்லது கலக்காமலோ மாற்றலாம் என்று உத்தரவு போடவேண்டும். அப்படிச் செய்யாமல் மக்களின் வரிப்பணத்தை வீணாக்குகிற காரியத்தைச் செய்துவிடாதீர்கள் என்று சொல்லி மானியத்தினை ஆதரித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, எங்கள் கட்சியின் சார்பிலே கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து நான் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



இந்தியாவின் முன்னேற்றம் கிராம முன்னேற்றம் தான் என்ற அடிப்படையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசியல் சட்டத்தின் 40-வது ஷரத்து வகை செய்கிறது. கிராம மக்கள் முன்னேற்றத்திற்காக மாநில அரசுகள் பல சீர்திருத்தங்களைச் செய்திருக்கின்றன. இன்று இந்த மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை கிராமத்தில் இருக்கின்ற ரோடுகளைச் சீரமைக்கவும், கிராமங்களில் பாலங்களைக் கட்டவும் குடிதண்ணீர் வசதிகளைச் செய்யவும், சுகாதார வசதிகளை ஏற்படுத்தவும் போதுமானதாக இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக போதுமானதாக இல்லை என்று தான் நான் சொல்வேன்.

பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக்கொண்டால், அவைகளுக்கு இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நிதிநிலை வசதி இல்லை. ஆகையால், பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அதிக மானியங்கள் கொடுத்து, அவைகளின் நிதிவசதியைப் பெருக்க வேண்டும். அதுதான் இன்றைய முக்கிய அவசியமாக இருக்கிறது. இன்று பல பஞ்சாயத்துக்கள் சிறிய சிறிய பஞ்சாயத்துக்களாக இருக்கின்றன. அவைகளுக்கு நிதிவசதியும் போதுமானதாக இல்லை. அப்படிப்பட்ட பல பஞ்சாயத்துக்களை ஒன்று சேர்த்து ஒரு 'வயபிள் யூனிட்டாக', நிதிநிலை வசதி உள்ளதாக ஆக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை கிராம மக்களுக்குப் போய் சேருகின்றதா; அதற்குரிய பயன் கிடைக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்பதைத்தான் நாம் இன்று கண்டுகொண்டிருக்கிறோம். பஞ்சாயத்து யூனியன்களிலே பல ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வேலைகளைச் சரியாகச் செய்யமுடியவில்லை. சிலர் செய்வதும் இல்லை. அவர்கள் தங்கள் பணிகளை சரியாகச் செய்கிறார்களா என்று கண்காணிக்கப்படுகிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. சில பணியாளர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணிகளைச் செய்ய முடியாமல் வேறு பல காரியங்களுக்கு அவர்களைப் பயன்படுத்துகிறார்கள். நிதி வசூலிப்பதிலும், அதுபோன்ற வேறு பல வேலைகளுக்கும் பயன்படுத்துகிறார்கள். அதனால் அவர்கள் பஞ்சாயத்துக்களின் வளர்ச்சிக்காகத் தங்கள் முழு கவனத்தையும் செலுத்த முடியவில்லை என்பதை இந்த நேரத்திலே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களின் நிதிநிலை மிகவும் மோசமாக இருப்பதால் அந்தந்த பகுதிகளிலுள்ள மதுபான கடைகளின் மூலம் வருகின்ற வருமானத்தில் ஒரு பகுதியை பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்து, அவைகளின்

நிதிநிலையை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் பஞ்சாயத்து யூனியன்களுக்கு வளர்ச்சிப் பணிகளை ஏற்று நடத்துவதற்கு வசதி ஏற்படும்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்களுக்கு இன்றைக்கு இருக்கின்ற அதிகாரங்கள் போதாது; இன்னும் அதிகமான அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் சிறிய காரியங்களுக்குக் கூட ஆர்.டி.ஓ.வை கேட்க வேண்டியிருக்கிறது; மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்க வேண்டியிருக்கிறது; அரசாங்கத்தைக் கேட்க வேண்டியிருக்கிறது. அதன் காரணமாகப் பல வளர்ச்சிப் பணிகள் நடைமுறைப்படுத்த முடியாமல், கால தாமதம் ஏற்படுகிறது. ஆகையால் அந்தக் குறையைப் போக்க மக்கள் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய ஊராட்சித் தலைவர்களுக்கும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் அதிகாரம் அளிக்கவேண்டும். அதுதான் சரியான ஜனநாயகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று கூறினார்கள். நானும் அந்தக் கருத்தை ஆதரிக்கிறேன். அப்படி இருந்தால்தான் பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கக்கூடிய போட்டி மனப்பான்மை மறைந்து, வளர்ச்சித் திட்டங்களில் அதிகக் கவனம் செலுத்த வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து, சட்டசபை அங்கத்தினர்கள் பஞ்சாயத்து யூனியனின் முழு உரிமை பெற்றவர்களாக இருக்க வகை செய்யும்பொருட்டு சட்டத்தைத் திருத்த வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களில் அவர்கள் பொதுக் காரியங்களைச் செய்வதற்காக சுற்றி வருவதற்கு பஞ்சாயத்து யூனியன்களின் ஜீப்பை வழங்க சர்க்கார் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களின் நிர்வாகம் செம்மையாக நடைபெறுவதற்காக யூனியன் தலைவர்களுக்கும் ஆணையர்களுக்கும் அரசாங்கம் பலவிதமான உத்தரவுகளை அனுப்புகிறது. ஆனால், அவைகள் பஞ்சாயத்துச் சட்டத்தில் இடம்பெறாத காரணத்தால், அரசாங்க உத்தரவுகளை சரிவர நிறைவேற்ற முடியாத நிலை இருக்கிறது. ஆகையால், அந்த நிர்வாகம் சம்பந்தமாகப் போடப்படும் அரசாங்க உத்தரவுகளை பஞ்சாயத்துச் சட்டத்தில் இடம் பெறத் தக்க வகையில் பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இணைப்புச் சாலைகள். கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக பல சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பழைய சாலைகள் பல இருக்கின்றன. ஆனால் அவை சரியாகப் பராமரிக்கப்படவில்லை. பாலங்



களைப் பராமரிக்கப் பணம் இல்லை.. ஆகவே, இந்த நிலையை மாற்ற யூனியன்களுக்கு கூடுதல் மானியம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** நீங்கள் பேச்சை முடித்துவிடுங்கள். மீதியிருக்கின்ற கருத்துக்களை உங்கள் கட்சித் தலைவரிடம் சொல்லச் சொல்லுங்கள். நேரம் ஆகிக்கொண்டே இருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். கிராமங்களுக்கு குடிதண்ணீர்-வசதி வழங்கப்பட்டு வந்தாலும் இன்னும் பல கிராமங்கள் அந்த வசதியைப் பெறாமல் இருக்கின்றன. காரணம் பல பஞ்சாயத்துக்களுக்கு போதுமான பணவசதி இல்லை. அரசாங்கச் செலவில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு தொகை ஒதுக்கினாலும் கூட பஞ்சாயத்துக்கள் அதற்கு ஒரு சிறு தொகை 'கான்ட்ரிபியூஷன்' கொடுக்க வேண்டி இருக்கிறது. கான்ட்ரிபியூஷன் கொடுக்கவில்லை என்றால் அரசாங்கம் பணம் கொடுப்பதில்லை. கான்ட்ரிபியூஷன் கொடுப்பதற்கு சில பஞ்சாயத்துக்களுக்கு நிதி வசதி இல்லை. ஆகையால் கிராம நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு கான்ட்ரிபியூஷன் கொடுக்க பஞ்சாயத்துக்களுக்கு நிதிநிலை வசதி போதவில்லை என்றால் கான்ட்ரிபியூஷன் கொடுக்காமலேயே கிராமத் திட்டங்களை நிறைவேற்ற வழிவகை செய்ய வேண்டும் அல்லது அதற்கு மானியம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கிய விஷயத்தைக் கூற விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியன் சாலைகளை பராமரிப்பதற்காக 'லோக்கல் ரோட்ஸ் கிராண்ட்' கொடுக்கப்படுகிறது. அது 1—4—1967-ல் இருந்து போடப்பட்ட சாலைகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அதற்கு முன்னால் உள்ள சாலைகளுக்கு கொடுக்கப்படவில்லை. ஆகையால், இன்றைக்கு இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் எவ்வளவு நீளம் இருக்கின்றன என்று பார்த்து, அந்த அடிப்படையில் 'லோக்கல் ரோட்ஸ் கிராண்ட்' கொடுக்க வேண்டும். இன்றைக்கு பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். சில ரோடுகளை ஹைவேஸ் பராமரித்து வருகிறது; சில ரோடுகளை இன்னும் பஞ்சாயத்து யூனியன்தான் பராமரித்து வருகிறது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன் பராமரிப்பில் இன்றைக்கு எவ்வளவு நீளம் ரோடு இருக்கிறதோ, அந்த அளவுக்கு இந்த கிராண்ட் கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

அடுத்து, பல பஸ் ரூட்டுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அப்படி மோசமாக இருக்கின்ற பஸ் ரூட்களை ஹைவேஸ் ஏற்று பராமரிக்க வேண்டும். மதிய உணவுத் திட்டத்தை செயல்படுத்த இன்றைக்கு ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு சரியாகச் செயல்படவில்லை. ஆகையால், பஞ்சாயத்து யூனியன் தலைவரே மதிய உணவுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அதிகாரம் அளிக்க

வேண்டும். பஞ்சாயத்து கவுன்சில் அங்கத்தினர்கள் இப்போது யூனியன் கூட்டங்களுக்குச் சென்றால் ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் தான் படி கொடுக்கப்படுகிறது. அது போதாது. ஆகையால் 10 ரூபாய் அல்லது 5 ரூபாயாக அந்தப் படியை உயர்த்த வேண்டும்.

அடுத்தபடியாக, சமூகக் கல்வி நிலையங்களை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு இருக்கக்கூடிய எண்ணிக்கை போதாது. அவைகளின் எண்ணிக்கையை இன்னும் அதிகமாக்க வேண்டும். ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு மொத்தமாக 30 மாதர் சங்கங்கள்தான் இப்போது இருக்கின்றன. அதை மாற்றி, குறைந்த அளவில் ஒரு ஊராட்சிக்கு ஒரு மாதர் சங்கத்தையாவது ஏற்படுத்த வேண்டும். ரூரல் மான்பவர் திட்டத்தை கிராமப் புறங்களுக்கு இன்னும் அதிக அளவில் விஸ்தரிக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

• திரு. டி. இராசரத்தினம் : மாண்புமிகு தலைவரவர்களே, சமுதாய நலதிட்டமான்யத்தை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இப்போது கிராமப் பகுதிகளுக்கு பாதைகளை அமைத்துத் தரும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் மாநில அரசினாலும் மத்திய அரசினாலும் ரூ. 1,25,000 என்று ஒதுக்கி அங்கங்கே பாதைகளைச் சிறப்பாக உருவாக்கித் தரும் நிலையினைப் பார்த்து கிராம மக்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றார்கள். இதற்கு, அரசுக்கு அவர்கள் சார்பிலே என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இப்போது ஊராட்சியானாலும் பேரூராட்சியானாலும் தொழில் வரிகளை வசூலிக்க முடியாத நிலை இருப்பதைப் பார்க்கிறோம். அப்படி ஏதாவது வசூல் செய்தாலும் அத்தொகையில் 25 சதவிகிதத்திற்குக் குறையாமல் அதற்காகச் செலவிடவேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த நிலையை மாற்றி அங்கங்கே உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஊழியர்கள் எந்தெந்த ஊராட்சி அல்லது பேரூராட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கேட்டறிந்து தொழிற்சாலைகளின் நிர்வாகமே அவர்களிடமிருந்து தொழில் வரியினை வசூல் செய்து சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்குக் கொடுக்கும்படியானதொரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நிலவருவாயிலிருந்து இப்போது தலைக்கு ஒரு ரூபாய் என்ற விகிதத்தில் கொடுக்கப்படுகிறது. சமுதாய நலத் திட்டம் மேலும் திறம்பட நடைபெறுவதற்கு என்று இது இரண்டு ரூபாயாக உயர்த்தித் தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்து, இப்போது வீட்டு வரிகள் கிராம அதிகாரிகளால் வசூலிக்கப்படுகின்றன. ஆனால், இப்போதுள்ள நிலையில் முறையாக, சீராக வசூலிக்கப்படமுடியாத நிலையில் இது இருக்கிறது. இந்த



நிலையில் கடந்த ஆண்டு 500 ரூபாய் அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு உரிமக் கட்டணம் என்றால் இந்த ஆண்டு 502 என்று இருக்கும் நிலையில் மேற்கொண்டு வசூலிக்காமல் விட்டுவிடுகின்றார்கள். இப்போது கிராம மணியம், கிராமக் கர்ணம் இவர்களுக்கு இவற்றை வசூலிப்பதற்காக 'டெவலப்மெண்டு அலவன்ஸ்' என்று கொடுக்கிறோம். இதை நிறுத்திவைத்துவிட்டு, 'க்ரூப் பில் கலெக்டர்' என்று குறிப்பிட்ட ஒன்றியங்களுக்கு 'க்ரூப் பில் கலெக்டர்' என்று போடவேண்டும். இப்படிப் போடுவதன்மூலம் ஒரு ஒன்றியத்திற்கு ஆறு பில் கலெக்டர்கள் என்ற முறையில் கிட்டத்தட்ட 2,250 பில் கலெக்டர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களில் வேலை கொடுப்பதற்கு அது ஏதுவாக அமையும். கிளார்க்குகள் என்று போட்டால் பின்னிட்டு அவர்களுக்கு 'ப்ரமோஷன்' இல்லை என்று ஏற்படும். எனவே இந்த நிலைமைகளை மாற்றி க்ரூப்பாகப் பில் கலெக்டர்களைப் போடுவதன்மூலம் ஊராட்சி ஒன்றியங்களில் மற்ற மற்ற அபிவிருத்தி பணிகளை நிறைவேற்ற நிதி நிலை உருவாகி அதேநேரத்தில் கிராம அதிகாரிகள் சரியானபடி வசூலிக்க முடியாதுள்ள இன்றைய நிலை மாறி அவற்றை வேகமாக இவர்களால் வசூலிக்க முடியும் என்ற நிலை ஏற்படும். மேலும் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு ஈட்டு மான்யத்தொகையும் கொடுப்பதற்கு இது ஏதுவாக இருக்கும்.

இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள வேலைப் பளுவானது 1960-ல் இருந்தது போலில்லாமல், இப்போது 12 ஆண்டுகளுக்குப் பிறகு அது வெகுவாக அதிகரித்திருப்பதைப் பார்க்கிறோம். எனவே இதற்குச் சரியாக ஒவ்வொரு ஒன்றியத்திலும் கூடுதலாக இரண்டு இளநிலை எழுத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். கல்வித் துறைக்கு ஒன்று, கணக்குப் பிரிவிற்கு ஒன்று என்று இரண்டு பேர்கள் கூடுதலாக நியமிக்கப்படுவதன்மூலம் சுமார் 750 பேருக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியவர்களாவோம். மேலும் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் இளநிலை எழுத்தர்களெல்லாம் எற்கெனவே முன்பிருந்த பெருந்தலைவர்களாலோ மற்றவர்களாலோ நியமிக்கப்படும் நிலைமை இருந்து இருக்கின்றது. இப்படிப்பட்டவர்கள் பின்னால் வரும் பெருந்தலைவர்களுடைய எண்ணங்களுக்கொப்ப வேகமாகப் பணியாற்ற முடியாத நிலை சில சமயங்களில் உருவாகிறது. எனவே இவர்கள் மாவட்ட அடிப்படையில் பணி செய்வதற்கு ஏதுவாக அமைவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இப்போதெல்லாம் ஊராட்சி மன்றங்கள் முறையாக நிர்வகிக்கப்படவில்லை. முன்பெல்லாம் வெளிச்சத்திற்கு 15 சதவிகிதம், சுகாதாரத்திற்கு 30 சதவிகிதம், சாலை பராமரிப்பிற்கு 15 சதவிகிதம் என்று இருந்தது. இப்போது இவற்றை எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம். அப்படி மாற்றிக்

கொள்ள கமிஷனர் அனுமதி கொடுக்கலாம் என்று இருப்பதால் ஒன்றைக் குறைத்து மற்றொன்றை அதிகப்படுத்திவிடுவதால் வளர்ச்சிப் பணிகள் சற்று குறைந்துவிடுகின்றன. ஊராட்சி நிதி நிலை போதிய அளவிற்கு இல்லாத காரணத்தால், ஒவ்வொரு தலைப்பின்கீழும் இவ்வளவு சதவிகிதம் என்று நிர்ணயித்திருப்பதே வெளிச் சத்திற்கு இவ்வளவு, சுகாதாரத்திற்கு இவ்வளவு என்று நிர்ணயித்திருப்பதே நல்லது; அப்படி நிர்ணயித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவது போல ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறை உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியப் பிரதேசத்தில் கிணறுகளை எடுத்தால் நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. இப்போதுள்ள நிலைப்படி குடிநீர் கிணறுகளைத் தோண்டுவதற்குத்தான் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால் குடிநீர்க் குளங்களைப் பராமரிப்பதற்காக நிதி ஒதுக்கப்படுமானால் குடிநீர்க் குளங்களை நல்ல முறையில் பாதுகாக்கலாம். அப்படி இல்லையென்றாலும் கிணறுகளுக்காக ஒதுக்கப்படும் நிதியினை உபயோகித்து குடிநீர்க் குளங்களைப் பராமரிக்கலாம் என்று இருத்தல்வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து ஆவடி நகரியத்தைப் பொறுத்தமட்டில் அது இன்றைய தினம் வெகு வேகமாக வளர்ந்து வருகின்றது. ஆனால் நிதி நிலையினைப் பார்க்கும்போது அங்கே வசூலிக்கப்படும் வரியானது நகர அபிவிருத்திக்குப் போதுமானதாக இல்லை என்பதுதான் உண்மை நிலை. எனவே அரசு ஆவடி நகரியத்தின் வழி வகை செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பினை அளித்த புற வழி வகை செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி என் உரையினை முடித்துக்கொள்ளுகிறேன், வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணித் திட்டங்கள் உள்ளூர் மேம்பாட்டுப் பணிகளுக்கென வகுத்துள்ள 1973-74-ஆம் ஆண்டுக்கான திட்டத்தினை எனது ஃபார்வர்டு ப்ளாக் கட்சியின் சார்பிலே வரவேற்று இந்த நல்லதொரு திட்டத்தின் மூலம்—நாட்டில் யாம்பெற்ற இன்பத்தினை இவ்வையகமும் பெறுக என்ற நிலையில்—பாமர மக்களை, விவரம் தெரியாத மக்களை, நமது நாட்டில் மெஜாரிட்டியாக உள்ள அந்த மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் நிலை போய், இப்போது ஏழை எளியவர்கள், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள், பின்னுக்குத் தள்ளப்பட்டவர்கள் கடைநிலையில் இருந்தவர்கள் அனைவரும் வாழ்வதற்கு தங்களுக்கும் அருகதை உண்டு, தங்களுக்கும் உரிமை உண்டு





என்று உணரும் அளவிற்கு இன்றைய தமிழக அரசு அவர்களுக்குப் பல நன்மைகளை, பிச்சைக்காரர்களுக்கு விடுதிகளை அமைத்துக்கொடுப்பதன் மூலமாகவும் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பல பாதுகாப்புத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலமாகவும பல நன்மைகளைச் செய்து வந்திருப்பதானது பாராட்டுக்குரியதாகும் என கூற விரும்புகிறேன். 'அண்டு திஸ் லாஸ்ட்' என்றதொரு புத்தகத்தில் காந்தியடிகள் குறிப்பிட்டிருப்பதைப்போல கிராம இராஜ்யத்தினைத்தான் அவர்கள் இராம ராஜ்யம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அதை அன்று நாட்டை ஆண்டவர்கள், காந்தியடிகளுடைய சீடர்கள், என்று சொல்லிக்கொண்டு இருந்தவர்கள், அன்றைக்கு அப்படிப்பட்ட இராம இராஜ்யத்தினை கிராமங்களிலுள்ள பஞ்சாயத்துக்களின்மூலம் பரப்பலாம் என்று முயற்சி செய்து அதற்கான திட்டமிட்டார்கள் என்றாலும் நடைமுறையில் அவர்கள் அன்றைக்குச் செய்யத் தவறியதை இன்றைய அரசு நல்லபல திட்டங்களின் மூலம் நிறைவேற்றி வருகின்றது என்பதைக் கண்டு நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பாராட்டும் அதே நேரத்தில் நடைமுறையிலுள்ள சில சிறு குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக்காண்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். உதாரணமாக பஞ்சாயத்து யூனியன்களின் சட்டதிட்டப்படி அந்த அந்த பஞ்சாயத்துக்கள் இந்த இந்த சீர்திருத்த வேலைகளைச் செய்ய வேண்டும் என்ற திட்டத்தின்படி அரசிடம் நிதி உதவி கோரும்போது அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்கள் தாங்கள் கொடுக்கவேண்டிய பங்குத் தொகையினைக் கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறது. உதாரணமாக என் தொகுதியில் பல பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் இயங்கிவந்தாலும் ஒருசில பஞ்சாயத்துக்கள் நிதி பற்றாக்குறை காரணமாக சீராக இயங்க முடியவில்லை. உதாரணமாக கள்ளப்பட்டி கிராமப் பஞ்சாயத்தில் அதைச் சேர்ந்த ஐந்து கிராமங்கள் இருக்கின்றன. அந்த ஐந்து கிராமங்களுக்கும் அன்றிலிருந்து இன்று வரையில் எந்தவிதமான சீர்திருத்தப் பணிகளையும் செய்தது கிடையாது. உதாரணமாக அங்கே சில கிராமங்களில் குடி நீர்க் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது. என்றாலும் அந்த கிராமங்கள் தங்கள் பங்கு என்று தாங்கள் வசூலிக்கும் வரிப்பணத்திலிருந்து எதையும் கொடுக்கமுடியாத நிலையில், அந்த வேலை நிறுத்தப்பட்டுவிட்டது. இதைப்போலவே நான் சுற்றுப்பயணம் செய்த பல கிராமங்களிலே, 'எங்கள் கிராமங்களுக்கு நீங்கள் பிரச்சாரம் செய்ய வருகின்றீர்கள். ஆனால் இங்கே விளக்கில்லை. நாட்டிலெல்லாம் 1973-ம் ஆண்டுக்குள் மின்னொளி வழங்கும் திட்டம் பூர்த்தி செய்யவேண்டும் என்று அரசு அறிவித்து வருகின்றது. ஆனால் என் எங்கள் கிராமத்திற்கு மின்னொளி வழங்கக்கூடாது' என்று கேட்கின்றார்கள். இதுபற்றி பஞ்சாயத்துத்

தலைவரிடம் கேட்டதற்கு, 'தெருவிளக்குகளைப் போட்டால் அதற்கான கட்டணத்தைக் கட்டுமளவிற்குக்கூட அந்தக் கிராமங்களில் வரிவசூல் கிடையாது. ஆகவே முடியாத நிலை' என்றார் அவர். இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் இங்கே வரி வருவாய் இல்லாத பல ஏழை கிராமப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. எனவே அவை அபிவிருத்தியடையாத நிலையிலேயே இருக்கின்றன. அப்படிப்பட்ட கிராமங்களுக்கு அரசின் நிதியிலிருந்து உதவியளித்து, இருக்கும் விதிகளிலிருந்து அவற்றுக்கு விதிவிலக்கு அளித்து அங்கேயெல்லாம் நல்ல பணிகளைச் செய்திடுவதற்கு அரசு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதுபோன்று பஞ்சாயத்து யூனியன்களில் வேலைபார்ப்பவர்கள் அவர்கள் ஆசிரியர்களாக இருந்தாலும் அல்லது அலுவலர்களானாலும் சரி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அன்றொரு நாள் கேள்வியொன்றிற்கு பதிலளித்த நேரத்தில் குறிப்பிட்டார்கள், 'மாவட்ட ஆட்சியாளர்களுக்கு

நண்பகல் அங்கே அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்களை மாற்றுவதற்கு அதிகாரம்

12-00 இருக்கின்றது' என்று. ஆனால் நடைமுறையில் உள்ள சிக்கலைப் பார்க்கும்போது, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருந்தாலும் அதைப் பயன்படுத்திச் செயல்படுவதற்கு அவர்கள் தயக்கம் காட்டுகின்றார்கள். காரணம் அங்கே பஞ்சாயத்து யூனியன் சேர்மென், பஞ்சாயத்து தலைவர் போன்றவர்கள் சில அரசியல் காரணமாகத் தலையிடுகிறபோது நடைமுறையில் மாற்றம் செய்வதில் சிக்கல் ஏற்படுகிறது. ஆகவே ஒரு இடத்தில் 3 வருடம் ஒருவர் வேலை செய்தார் என்றால் மற்ற துறைகளிலே எப்படி மாற்றம் செய்கிறார்களோ அதுபோல பஞ்சாயத்து ஒன்றியத்துறையிலும் அதிகாரிகள் நிர்வாக ஆணைப்படியோ சட்டப்படியோ மாற்றம் செய்ய முழு அதிகாரம் தரப்படவேண்டும்.

'Not only for administrative reasons but also for certain humanitarian reasons' என்ற அளவில் தக்க அதிகாரத்தை அளிக்க வேண்டும். மாற்றுத காரணத்தினால் சில இடங்களில் புதிய சேர்மென் வந்தவுடன் முன்னால் இருந்தவர் பழிவாங்கப்படுவதையும் பார்க்கிறோம். அதுபோல ஒரேயிடத்தில் ஒருவர் பல வருஷங்கள் இருந்துவிட்ட காரணத்தினால் லோகல் பாலிடிக்சில்—உள்நாட்டு அரசியலில் பங்குகொண்டு—தங்களை உத்தியோகஸ்தர்கள் என்று கூட கருதாத அளவு அரசியல்வாதியைப் போல நடந்துகொள்வதைப் பார்க்கின்றோம். சிலருக்கு நல்லவராக நடந்துகொண்டால் போதும் என்கிற நிலையில் அவர்கள் அரசியலில் ஈடுபட்டு தம் கடமையை சரிவரச் செய்வதில்லை என்கிற விவரத்தையும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக மாணவர்கள் அரசியல் பற்றித் தெரிந்துகொள்ளலாம். ஆனால் நேரிடையாக அரசியலில் ஈடுபடும்படியாக அவர்களை எந்தக் கட்சியும் இழுக்கக் கூடாது. எல்லாக் கட்சித் தலைவர்களும்தான் சொல்கிறார்கள். என்றாலும் ரீசன்டு பாலிடீஷியனாக, அரசியலில் நீண்ட அனுபவம் உடைய நமது எதிர்க் கட்சித் தலைவரைப் போன்றவர்கள் கட்சித் தலைவர்கள் எல்லோரும் சேர்த்து அரசியலில் தலையிடக்கூடாது என்பதாக உத்தரவை அரசாங்கம் போடுவதற்கு உதவி செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

In the name of democracy anything cannot be done and should not be allowed to be done.'

என்பதாக ஒரு லிமிட் வேண்டும்.

'Over democracy will lead to confusion.'

இப்போது ஓவர் டெமாக்ரசி தான் இருக்கிறது. சுதந்திரத்தின் பேரால் பலவித மான குழப்பங்களைத்தான் உண்டாக்குகிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் வெளியில் பேசும்போது இந்த அரசு செய்கிற பல காரியங்களைப் பாராட்டித் தான் செய்கிறார்கள். என்றாலும் சட்டமன்றத்திலும் கூட

பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது என்று சொல்கிறார். அப்படியென்றால் அவர் இந்த அவையில் வேறுவிதமாகத்தான் பேசிவருகிறார் என்கிற பொருள் தொனிக்கிறது. அந்தமாதிரி பேசாமல் நல்ல பண்பாட்டோடு பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): நானே அதுபற்றி சொல்வதற்குத்தான் இருந்தேன். இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் என்று திரு. கந்தசாமி அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட ஆணையிடுகிறேன்.

திரு. கே. கந்தசாமி: நான் அவ்வாறு சொன்னதற்குக் காரணம். . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. நா. வீராசாமி) அதைவிட்டு மற்றதைப் பேசுங்கள்.

திரு. கே. கந்தசாமி: இன்னும் கிராமப்பகுதிகளில் வாழ்கிறவர்களுக்கு உத்தியோக வாய்ப்பளிக்க அரசு பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. அவற்றை நான் வரவேற்கிறேன். இன்றையதினம் நான் அட்வகேட்டாக

---

மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. கே. கந்தசாமி] [1973 மார்ச் 17

இருக்கிறேன். எம்.எல்.ஏ. ஆக இருக்கிறேன். அதனால் என் குழந்தைகளுக்கு கான்வென்ட் படிப்பை என்றால் கொடுக்க முடிகிறது. கிராமத்தில் உள்ளவர்கள், படிக்காதவர்கள் இதுபோன்ற படிப்பை தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்க முடிவதில்லை. அதனால் படித்துவிட்டு வருகிறபோது என் பிள்ளைகளின் இண்டலிஜென்ஸ் அந்தப் பள்ளைகளிடத்தில் இல்லாமல் இருக்கலாம். ஆகவே இப்படியாராக இருந்தாலும் உத்தியோகத் துறையில் படிக்காத, கிராமப்புரங்களில் இருக்கக்கூடியவர்களின் பிள்ளைகள் போட்டிக்கு வரும்போது இவர்களுடைய இண்டலிஜென்ஸைப் பார்க்காது, க்வாலிபிகேஷனைப் பார்த்து உத்தியோகச் சலுகை அளிக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பல திட்டங்களை மண்டலவாரியாகப் பிரித்திருப்பதைப் பார்க்கிறேன். உத்தியோகத்துறையிலும் கூட அந்தந்த மண்டலவாரியாக இருக்கக்கூடிய பிள்ளைகளுக்கு சலுகை அளிப்பது நன்றாக இருக்கும். நகர்புறங்களில் உள்ளவர்களது குழந்தைகளே உத்தியோக வாய்ப்பைப் பெற்றுக்கொண்டு போகவிடாது, கிராமப்புறங்களில் இருந்து வரக்கூடியவர்களுக்கும் தனிவாய்ப்பை ஏற்படுத்தும் ஒரு திட்டத்தை உருவாக்கித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எதற்கெடுத்தாலும் அரசியலைப் புகுத்தக்கூடாது. பிற்பட்ட இடங்கள், பிற்பட்ட சமுகத்தினர்கள் எந்தவிதமான நன்மையும் அப்போது பெற முடியாதுபோகும். திண்டுக்கல்லையே எடுத்துக்கொள்ளுங்கள். இப்போதுதான் தேர்தல் வருகிறது. நான் ஒரு வருஷமாகவே மிகவும் பிற்பட்ட அந்தப் பகுதியில் பல வளர்ச்சிகளைக் கண்டாகவேண்டும் என்று கோரி வந்திருக்கிறேன். அரசியல் காரணமாக பழிவாங்கப்பட்ட பகுதி அது. தமிழக அரசு என்னுடைய வேண்டுகோளைக் கருத்தில்கொண்டு சிலபல அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கிறபோது தேர்தலுக்காக அவற்றைச் செய்வதாக குற்றம் சாட்டுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். . . (மணி அடிக்கப்பட்டது.).

DR. H. V. HANDE: Mr. Chairman, Sir, in support of the cut motion given on behalf of our Party, I would like to say a few words.

First of all, regarding the Madras City Corporation, I am very much pained to say that the sanitary condition of the City is in a very deplorable state. I am quite sure all the hon. Members of the Assembly here, irrespective of the party affliations, will agree with me that almost the entire City is in a most deplorable state. In spite of the fact that representations have been made even on behalf of the Government and directives have been given on behalf of the Government and complaints have been voiced in this House



1973 மார்ச் 17] [Dr. H. V. Hande]

by every section of the House, nothing seems to have been done with regard to the utter chaotic and insanitary conditions of the City of Madras.

With regard to Coom, after the 'Cooum Seeramaippu' we have been hoping that the nuisance of mosquitoes will come down both in quantity and quality. But the unfortunate position is that it has increased beyond any recognition. The medicines that are used on the mosquitoes seems to be having beneficial effect on the mosquitoes and their number has increased threefold. (Interruption). So much so that they got immunized.................

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நண்பர் ஹாண்டே அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன், நான் மைலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்தநேரத்தில், மஸ்கிட்டோக்கள் ஏராளமாக இருந்தன. ஆனால் இப்பொழுது அவ்வளவு இல்லை.

DR H. V. HANDE: Almost every person, every councillor has complained me about this. What is the exact reason? Is it because of sub-standard medicine used for anti-malarial activities or is it because of unfortunate circumstances by which Cooum is partially obstructed, one portion, estuary portion being all right and the other portion being completely stagnant giving room for breeding in of mosquitoes. After spending so much as Rs. 3 crores on Cooum, what is now left is a scientific method by which mosquitoes are bred due to stagnation in one portion of Cooum. Cooum is becoming a source of production of mosquitoes. It is high time the Hon. Minister does something to eradicate this mosquito nuisance. Leave alone Cooum. What about the streets. I find that garbage is removed only once a week. The hon. Lady Member Thirumathi Anandanayaki agrees with me. What a shame, instead of being cleaned everyday, the garbage is cleaned only once a week? There is a Health Officer in the Corporation. Is he not exercising control over his subordinates? What is the system of removing garbage? Once a week, we are told. Is it not shameful? After spending so much money on the Corporation, why should garbage be cleaned once a week? When the Congress handed over the reins to the D.M.K. the income of the Corporation was Rs. 3 crores. Now today it is Rs. 15 crores. When the Congress was in power, the loans incurred was Rs. 5 crores or so. Now it has risen to Rs. 25 coses. I do not know the exact figure,

It has risen to an astronomical figure. That I can say. When such is the case, when income has increased so much, the provision of amenities has become meagre. I charge that the Corporation is wholly ridden with politics, politics and politics. A handful of politicians dominate the whole field in Corporation, completely disregarding the suggestions of Opposition members in the Council. That is the serious charge I am levelling against the Government.

I would like to meniton another thing which I mentioned earlier during Governor's speech and that is about மாற்றாந்தாய் மனப்பான்மை. Now this மாற்றாந்தாய் மனப்பான்மை is used by this Government against Panchayat, Panchayat Unions and municipalities wherein the Opposition, viz., Congress (O) is in power. I ask the Hon. Minister one thing. You are in a majority here. I have said it is fictitious majority once. Let us for argument's sake assume that the Prime Minister issues an order saying that an Executive Officer will run the administration in Madras and not these 180 majority D.M.K. members here and not this D.M.K. Ministry. Will you approve it ? Will I approve it ? We will not approve such a thing. But that is what is exactly allowed to happen by this Government, in panchayats controlled by Congress (O). I shall cite an instance. There is a panchayat, Suramangalam in Salem. There is an Executive Officer there. Representations against him have been made to Revenue Minister. But in spite of all these, he has not been removed from that place and transferred to some other place. This officer has been doing things in a high-handed manner, in a deplorable manner. He had allowed selection grade pandits to continue for more than 1½ years whereas normally they are normally kept for only one year. He has appointed, without approval of Appointments Committee, six supervisors, two clerks, and one town planning officer, against all rules. He has been selling tonnes of compost and field manure to an important person. I would not mention the name of that important man. I would not like to go down to that level. All particulars I have got. He has allowed Panchayat tractor and driver to work in the field of an important person. His name is Chandrasekharan. How he has become so important, the Hon. Minister must know better. This Executive Officer is actively participating in politics and has tried to make the President and



Vice-President to defect. But that has not reduced the overall majority of Congress. He has refused to show Panchayat records to the President. He has sent notices disqualifying two Congress (O) members. He is the boss of all things. Without legality, he is dong all these things. He has also threatened to dissolve Panchayats and he is freely using the name of the Hon. Minister for Local Administration.

நான் நாவலருக்குப் போன் பண்ணுகிறேன், அவர் வந்து சொல்லி விட்டார் என்று சொல்லுகிறார்.

I have got the signed document here, the signed letter. He has misappropriated a sum of Rs. 5,000 taxes, collected by the Revenue Divisional Officer, Salem. He is over-riding the Chairman. He is the actual boss. If this is going to happen, and if no action is taken against him, is it not மாற்றாந்தாய் மனப்பான்மை against the Panchayat? Is it not showing மாற்றாந்தாய் மனப்பான்மை against the Opposition parties ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சூலமங்கலத்திலுள்ள அந்த நிர்வாக அதிகாரியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அங்கே ஒரு சாரார் கூறிய கருத்துக்களை மட்டும் எடுத்துக் கூறி வரிசையாக குற்றச்சாட்டுக்களைக் கூறினார்கள். அந்த குற்றச்சாட்டு களின்மீது மாவட்ட ஆட்சித்தலைவர் விவரமாக விசாரணை நடத்தினார். ஒவ்வொன்றிற்கும் பதில் சொன்னால் தான் சரியாக வரும். அவர் பெரும்பான்மையானவை பால்ஸ் என்றும், ஆகவே நடவடிக்கை தேவையில்லையென்றும். . .

In the circumstances it is reported that no further action seems to be necessary.

என்று பலவற்றிற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முழுவிவரத்திற்காக கேள்வி கேட்டால்கூட எடுத்துச்சொல்லத் தயாராயிருக்கிறேன். ஒரு பகுதி அறிக்கையை மட்டும் எடுத்துச்சொன்னால், அது சரியல்ல. மாவட்ட ஆட்சித் தலைவர் இவ்வளவு பெரிய அறிக்கையினை கொடுத்திருக்கிறார். இந்தத் தன்மைகளைப் பார்த்து மாநிலத்திலே 1 லட்சத்து 25 ஆயிரத்து சொச்சம் ஊராட்சிகள் இருக்கின்றன. இதிலே இங்கு மட்டும் ஏன் அந்த நிலைமை? இந்த மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டவில்லை. தலைவர் எல்லா வகையிலும் ஒழுங்கானவர் என்றும் அவர்கள் குறிப்பிடமுடியாது.

அந்த ரிப்போர்ட்டும் வர இருக்கிறது. ஒரு சேர்மன் நிர்வாக அதிகாரியை விலக்க வேண்டுமென்று சொன்னார் என்று ரிமூவ் பண்ணவில்லை. நிர்வாக அதிகாரி சரியாகத்தான் நடக்கிறார், சேர்மன் சொன்னபடி நடக்கவில்லை என்ப

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 17

தற்காக நீக்க வேண்டுமென்று சொல்லுகிறார் என்று ஒரு சாரார் சொல்லுகிறார்கள். ஒரு சாரார் மாற்ற வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இன்னொரு சாரார் மாற்ற வேண்டாமென்று சொல்லுகிறார்கள். விசாரணை நடந்து முடிந்து அந்த விவரங்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றன.

DR. H. V. HANDE : Sir, my whole contention was that the Chairman and the majority of the members have clearly stated that this man has done all these irregularities and they have clearly stated without any doubt. Besides, it is but natural one cannot expect a unanimous resolution, especially when there are the D.M.K. members also there. It should be clarified as to who should completely be in charge of things there whether the Chairman or the Executive Officer. Should the Chairman be subservient to the officer planted by the Government there ? Should not the Chairman be given at least the basic freedom ? Let there be a no-confidence motion. No, it cannot be. The majority of members are for this Chairman.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்குமானால் அந்த அதிகாரியை மாற்றுவதோடு மட்டுமல்லாமல் நடவடிக்கையும் எடுக்கலாம், பதவியை விட்டு நீக்கவும் செய்யலாம். விசாரித்த பிறகு அவர் அந்த இடத்தில் இருக்கத் தகுதியானவர் என்று தெளிவாகியிருக்கிறது. தவறு இருந்தால் எல்லாவித நடவடிக்கைகளையும் எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் சொல்லி இரண்டு மாதங்கள் ஆகி விட்டன. இருந்தாலும் இப்போதுதான் ரிப்போர்ட் கொடுக்கிறார்கள். இதற்கு முன்னால் ஏற்கனவே அந்த அதிகாரியை டெம்பரரியாக மாற்றும் முறையில் உத்தரவு இருந்தது. அந்த ஆர்டர் பின்னால் எப்படியோ மாற்றப் பட்டு விட்டது. ஏற்கனவே போட்ட உத்தரவை இங்கிருந்து மாற்றி இருக்கிறார்கள். கலெக்டர் அவர்கள் எப்படி வேண்டுமானாலும் ரிப்போர்ட் கொடுக்கலாம். யாரை அழைத்து விசாரிக்க வேண்டும்? பஞ்சாயத்து யூனியன் பிரசிடென்டை, மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடாரையும் உடன் வைத்துக் கொண்டு விசாரித்தால் நியாயமான வகையில் இருந்திருக்கும். நான் ஒரு பெரிய குற்றத்தைச் சாட்டுகிறேன். எதிர்க்கட்சி சார்பாக இருக்கின்ற அந்த யூனியனின் சேர்மனுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாத வகையில் கட்டிப் போட்டிருக்கிறார்கள் என்ற பயங்கரமான குற்றச்சாட்டைக் கூறுகிறேன். கலெக்டர், அரசாங்கத்தின் அதிகாரி. . .



1973 மார்ச் 17]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கலெக்டர் விசாரணையிலோ, அரசாங்கத்தின் விசாரணையிலோ அவர்களுக்கு நம்பிக்கையோ, மதிப்போ இல்லை என்றால் கோர்ட்டுக்குக் கூடப் போய் தீர்ப்பு பெற சேர்மனுக்கு முழு உரிமை இருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** கோர்ட்டுக்குப் போய்த்தான் நியாயம் பெற வேண்டுமென்ற நிர்ப்பந்தத்திற்கு அவர்களை ஆளாக்குவது நியாயமா? எல்லோரும் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்றால சக்தி இல்லை. பண வசதி இல்லை. இதிலே அவர் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்று சொல்வது என்ன நியாயம்?

அடுத்தபடியாக, திருச்சி நகரத்திலிருந்து சாக்கடைத் திட்டத்திற்கு மனு அனுப்பியிருக்கிறார்கள். திட்டங்களை அமைச்சருக்கு அனுப்பி இருக்கிறார்கள். குடிதண்ணீர்த் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்றும் அனுப்பி இருக்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது? இத்தனை மாதங்கள் காலதாமதம் ஏன்?

*** திரு. செ. கந்தப்பன் :** ஒரு தவறான கருத்திலே டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அங்கு சாக்கடைத் திட்டத்திற்கு மாண்புமிகு நாவலர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணியும் துவக்கப் பட்டு விட்டது. ஹாண்டே அவர்கள் பேச்சைத் துவக்குவதற்கு முன்னாலேயே என்னைக் கேட்டபோது நான் சொன்னேன். நான் சொன்னதில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை போலிருக்கிறது.

தண்ணீரைப் பற்றிச் சொன்னார்கள். தமிழகத்தில் இருக்கும் நகரசபைகளிலேயே திருச்சி நகரசபையிலேதான் அதிகமான தண்ணீர் தரப்படுகிறது. ஒரு நபருக்கு 25 காலன் அளவுக்குத் தரப்படுகிறது. நகர நிர்வாகக் கோளாறு காரணமாக—இந்த வார்த்தையை நான் சொல்ல வருந்துகிறேன்—நகர் எங்கும் வைக்கப்பட்டிருக்கும் குழாய்கள் மூலமாக தண்ணீர் எப்போதும் வீணாகிக் கொண்டிருக்கிறது. அப்படி வீணாகிக் கொண்டிருக்கின்ற தண்ணீரைக் கட்டுப்படுத்த முயற்சித்தாலே மணப்பாறை போன்ற இன்னொரு நகரசபைக்கும் சேர்த்து தண்ணீர் கொடுக்க முடியும். அப்படி இருந்தும் மேலும் தண்ணீர் கொடுப்பதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து ஆரம்ப ஏற்பாடுகள் செய்திருப்பதற்காக அரசையும் வாரியத்தையும் பாராட்ட வேண்டியவர்கள் தாக்கிக் கொண்டிருப்பது வியப்பாக இருக்கிறது.

* திருமதி த. ந. அனந்தநாயகி: தண்ணீர் வீணாக்கப்படுகிறது என்று சொன்னார்கள். தானாகவே குழாய்களில் இருந்து தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறதா அல்லது மக்கள் திறந்து வைத்து விடுகின்றார்களா?

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI): What is this? Is it a point of order? What madam? Dr. Hande will continue his speech.

திரு. செ. கந்தப்பன்: தண்ணீர்த் திட்டத்தைப் பராமரிப்பது நகரசபைகளிடம் தரப்பட்டிருக்கிறது. நகரசபைகள் அதிகக் குழாய்கள் வைக்க வேண்டாமென்று அரசு ஆலோசனை கூறியிருந்தும் அதையும் மீறி அதிகக் குழாய்கள் கேட்பதால்தான் இந்தத் தகராறு.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அமைச்சர் அவர்களுக்கும், இலாகாவுக்கும் மனுப் போட்டார்கள். எத்தனை மாதம் தாமதமாகி இருக்கிறது? பெருந்தலைவர் படத் திறப்புக்காகக் கூட மனுப் போட்டார்கள். அதற்குக் கூட மூன்று மாதம் கழித்து அனுமதி வந்தது. அதற்குப் போயிருந்தபோதுதான் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். பல மாதங்கள் ஆகியும் எந்தவிதமான பதிலும் அரசாங்கத்திலிருந்து வரவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். எதிர்க்கட்சிகளால் நடத்தப்படுகின்ற நகராட்சிகளுக்கும், எல்லா நகராட்சி மன்றங்களுக்கும், பேரூராட்சி மன்றங்களுக்கும் ஒரே வகையான கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டுமென்று கூறி என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்தி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, in support of the cut motions that have been moved on behalf of my party, I would like to offer a few remarks regarding the major Demands which are now the subject-matter of discussion. A sum of Rs. 30 crores is being sought under the two Demands which is now the subject-matter before the House. Before, I proceed to other points, I would like to make a few observations regarding the City of Madras.

Sir, the life of the members of the Corporation Council has been extended periodically, bringing amendments to to the City Corporation Act and I am told that the next elections to the Corporation will have to be held sometime in October 1973. I woud like to get a categorical assurance from the Hon. Minister whether the elections to the City Council would be held on that day or whether it will be postponed or likely to be postponed still further. That is the question I am posing to the Hon. Minister.



Now the strength of the City Divisions has been increased to 150. There is some work going on regarding delimitation so far as the City is concerned. The City of Bombay has got less number of divisions, even though it has got three times the population of Madras. I do not oppose the divisions, but I would emphatically urge upon the Government that the elections will have to be expedited and no other extraneous considerations should be allowed to prevail in the matter of conduct of elections to the City Council. I think the Hon. Minister will take prompt steps for conducting the elections at the proper time.

The next point I would refer to is water-supply schemes (Interruption). Well, voters' list will have to be prepared and I do not think there is any legal impediments to that.

Next is with regard to Veeranam Water-supply Scheme. It has been said that the Veeranam scheme would materialise very soon. But the progress of the work on the scheme is very slow. I would say that it is at a snail's pace. I thought that this work would be expedited very soon and people would get their water-supply augmented from it. Suffice it for me to say that the progress on this work is very slow and is not at all very happy or encouraging. I do not want to use any other stronger word, for it will be disparaging if I use a stronger word.

Another point regarding the man-holes in the City is this. பிற்
The man-holes in the City is a potential danger to the children, பகல்
as they are not adequately protected. During the rainy season many 12-30
children fell a victim to this and they will have to be protected. There were cases in which children could not be rescued from the man-holes. Such is the plight which is obtaining in this capital City. I think the Hon. Minister will bestow his attention regarding that aspect as well.

Another point which I want to stress is regarding the poor condition of the roads in the City of Madras. The roads in the City of Madras are not adequately maintained and that is the standing complaint. It may be said that main roads are kept well. But in the by-roads and by-lanes the condition is so poor and so appalling that the majority of the people occupying that area are making a huge complaint stating that the Corporation

authority is not bestowing attention in that regard. I think the Hon. Minister will take prompt steps for effective repairs there also.

The cleaning of streets has been adversely commented upon. The sanitary staff who are working in the City of Madras, whether they are discharging their functions properly is a matter that will have to be considered. I accuse the Corporation and this Government for not taking effective and prompt steps to clean the garbage and other waste materials which are dumped in the streets. Even though dust-bins are provided in certain places, the refuse is not put in the dust-bins, whereas it is heaped in the midst of the road and it does not speak well of us. Of course, it may be said that this Government have taken a long-term step and effective step in the matter of clearance of the slums, but that will not be sufficient. I would go a step further and urge that the sanitary conditions of the City will have to be improved.

Similar conditions prevail in the other towns also. Dr. Hande has been just stressing about the appalling condition that is prevailing in the City of Tiruchirappalli. Sir, I had the occasion to contact the Chairman of that Municipality. I would once again say that the stink that is emanating from the molases as soon as we enter Tiruchirappalli City is so stinking and nauseating which affects the health of the people who are dwelling in the vicinity and I think it is not fair. It will not be proper even though the Government may say that they have passed orders. So many things may be said, but does it look well, does it speak well on the part of the authorities, is a matter which will have to be considered by this House.

THE HON. THIRU K. ANBAZHAGAN : A Sub-Committee has been constituted under the Chairmanship of the Chief Secretary to the Tamil Nadu Government with Health Secretary and concerned Officials. They are going and inspecting the spot and very often giving suggestions to improve the conditions.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I am aware that this process of Committee may take a long time. Inordinate delay would be the result. It is a crying need, but the Committee may take a long time to go into all these aspects. That also will have



to be taken into account. That was the trick that had been planned by the alien Government. Whenever there was some agitation or some such thing, the Britisher used to appoint some committee to postpone the whole thing.

THE HON. THIRU K. ANBAZHAGAN : The British legacy is not only owned by the D.M.K. but also by the Congress. The Congress Government established the factory there without knowing the implications and only it is left to us to rectify such pollution.

THIRU R. PONNAPPA NADAR : The legacy has left an indelible mark on the administration. That is the charge which I am making. I do not say that we have changed. We are still following the Clive's Rules and that is the reason why I once again say that the D.M.K. Government which says that it is wedded to socialism and also progressive ideas can very well change this. I do not want to say anything further.

There is yet another point which I want to stress. There is also the processing of hides and skins going on in Tiruchirappalli town. That also emanates very fowl odour and a person who goes to the air-port will be aware of the same if he travels along that road. That will also have to be looked into. That is so far as the Corporation is concerned.

Next, I want to speak about the condition of Municipalities. Sir, the Municipalities are now functioning and there is protected water-supply in several Muinicipalities. I want to make one submission regarding the Nagercoil Municipality where there is acute shortage of drinking water. The Chairman of the Water and Drainage Board has been saying the other day that there is no acute scarcity. I got a letter from the Councillor who is the Leader of the Congress Party there and also from the Opposition stating that the drinking water position is deteriorating considerably. I af fortified to say that many big Officers—I do not want to drag in the names of the big Officers in this debate but I know and I can say without fear of contradiction that they are getting water in police vans and police jeeps because drinking water is not available for their domestic consumption and water has to be conveyed and some other arrangement will have to be made. There are certain places where water is copiously available

from wells and that can be supplied. I think the Municipality can take it up as a temporary measure for augmenting the drinking water-supply.

திரு. செ. கந்தப்பன்: ஏற்கனவே கூட பேசுகிறபோது-முன்பு-ஒருமுறை-இந்தப் பிரச்னையை அவர்கள் கிளப்பினார்கள். அங்கு கடுமையான வறட்சி இல்லையென்று நான் கூறியதை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அங்கு சற்று பற்றுக்குறை உள்ளது. இன்று நாகர்கோவிலில் மட்டுமல்ல பல நகர சபைகளிலும் அந்தப் பற்றுக்குறை இருக்கிறது. ஆனால் நாகர்கோவிலின் சில பகுதிகளில் விநியோக முறையில், மேட்டுப் பகுதிகள், புதிதாக விரிந்த பகுதிகள் என்ற வகையில் விநியோக முறையில் சற்று சீர் செய்யப்பட வேண்டியிருக்கிறது. விநியோக முறையைச் சீர்படுத்துவதற்காகவும், மேலும் தண்ணீரைக் கூடுதலாக்கவும் திட்டம் தயாரிக்கப்பட்டு—விலை உயர்ந்த குழாய்களை வைத்து அதிகச் செலவில் தயாரிக்கப்படும் திட்டமாதலால் நாகர்கோவிலின் மீது அத்தகைய பளுவைப் போடக்கூடாது என்று மலிவான குழாய்கள் போட்டுச் செய்வதற்கு வாரியத்தில் உள்ள பொறியாளர்கள் 16 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைத் தயார் செய்து அரசு அங்கீகாரத்திற்கு, இன்னும் அனுப்பப்படவில்லை, விரைவில் அனுப்பப்படும் சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, if it is implemented, I will be the first person to congratulate this Government. But it is not progressing. That is the complaint which I am making and the hon. Member has been saying that there is no acute scarcity. Sir, I am experiencing it day by day. As soon as summer starts, there would be trouble. So far as water-supply is concerned, that water-supply was designed only for about 50,000 persons.

THIRU S. KANDAPPAN: This is a relative term. If we compare it with the development of foreign countries where the minimum per capita consumption is 40 or 50 or even 60 gallons, then all our Cities and Municipalities are suffering from very acute scarcity. But if we compare the drinking water-supply within Tamil Nadu and even in India, I do not consider that the application of the phrase 'acute scarcity' is quite relevant there. But there is need for augmenting it. I do agree, not only in Nagercoil, but in many towns. But the Nagercoil Scheme is being processed.



THIRU R. PONNAPPA NADAR: There is plenty of water available and we are only reminded of the saying 'water, water everywhere, but not a drop to drink'. That is the only pitiable plight to which we are reduced. I can understand if water is not available. But I am sorry to say that I am unable to accept the argument advanced by the hon. Member because we had 24 hours supply formely. When I went and lived in that town some 28 years ago, there was perannial supply—24 hours supply—throughout. At that time the population was only about 50,000. It was designed only for 50,000 people. But now the population is 1½ lakhs. It has increased thrice. That is the reason why the scarcity has arisen. That is the reason why I say that the Municipality requested for a loan of Rs. 1 crore and 25 lakhs and the L.I.C. was kind enough to advance that loan. But that has not been utilised properly. I think the Chairman of the Water Board will be kind enough and good enough to give us drinking water. With that statement, I am closing that issue.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of order. The Hon. Minister for Education is in-charge of Local Administration. But the clarifiication to the point raised by the hon. Member is coming from the Chairman of the Water-supply and Drainage Board. This is really leading to an anomalous position in the Legislature...............

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMY): As the Chairman he can say it.................

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I am only suggesting that instead of giving information now and then, I would request the Government to place the report on the table of the House as the Report of the Electricity Board is placed on the table of the House. This is a very important issue and we are not able to get full information.................

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMY): The hon. Member wants to speak on a fresh subject because she has no opportunity to participate in the discussion.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Even otherwise, I want to submit to the Government.........

MR. CHAIRMAN: (THIRU N. VEERASAMY): I am sorry it is 12.40 p.m. and after hon. Member Thiru Ponnappa Nadar completes his speech.........

THIRU J. JAMES: Sir, on a point of order. When the Chairman of the Water-supply and Drainage Board is not responsible to this House and only the Hon. Minister is responsible to this House, how is he competent.........

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMY): What is it ? Being the Chaiman he is explaining the position. As a Member of this House, he can give all the information he knows to this House. There is n harm ino his doing so. Now, the hon. Leader of the Opposition can continue his speech.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I have been subjected to frequent interruptions and I do not mind interruptions and I would welcome any interruption because then only clarification and light can be thrown during the debate.

The next point which I want to stress is regarding town planning. Sir, recently certain promotions have been given to Building Inspectors as Town Planning Officers (Grade III). There are certain set of rules in regard to promotions and a committee will have to be constituted. But before the constitution of the committee, temporary promotions have been given by the departmental head, which, I submit, is not very happy. Because any person who is acting temporarily will just press forward his claim by saying that he has acted in the post even as a temporary incumbent. So, it may not be proper and in consonance with the rules that have been framed and the G. O. that has been passed by the Government, that the departmental head should arrogate to himself the powers which are not conferred on him under the rules. Many persons have been adversely affected. Now the committee has been constituted with the Tuticorin Chairman as one of the members and some other officers as well. Before making temporary promotion, a panel will have to be drawn by the department and in the light of that panel, the committee can be well advised to consider the recommendations made by the panel. I think steps should have been taken in that reagrd. That is another point which I want to bring to the notice of the Government.

So far as municipalities are concerned, their employees' services have been regularised by the passing of certain orders which are now in force. But those orders and rules will have to be strictly





complied with. There has been a departure from the rules and the orders that have been passed. I think, the department will take steps to rectify these things.

Then I come to panchayats and panchayat unions. Sir, district boards were abolished and panchayat unions became the successor bodies. Now throughout the State there are 374 panchayat unions and they were constituted on 2nd October 1960 and on 2nd October 1961. Time has elapsed and the Panchayat Act gives certain powers to the Panchayat Union Councils and the panchayats. It has been stated in the Note that has been circulated to us that the panchayats and panchayat unions are autonomous corporate bodies in their sphere. Whether the panchayats and panchayat unions are autonomous corporate bodies in their sphere is the next point which I am going to refer. The hon. Member, Dr. Hande, has just now stated about the pitiable plight that is obtaining in the Suramangalam Town Panchayat. There has been certain complaint against the Executive Officer who has served there for about $1\frac{1}{2}$ years. The complaint of the panchayat is that he is working against the resolutions passed by that panchayat. This executive officer got sanction of 30 works from the Collector behind the back of the elected President and the Members. It may be argued that he is doing it for the benefit of the panchayat. The panchayat or the Panchayat President is not against the sanction of the works but the way in which the elected president is treated, is the most direspectful part of the whole affair. I was listening to the reply given by the Hon. Minister for Local Administration and he has stated that some enquiry has been made by the District Collector and he has submitted a report and in that report the allegations made, have not been substantiated.

Now. I am asking whether this Government are conducting an enquiry against that President for his removal by a dubious legal method. Because I know, Sir, in my constituency, one panchayat union chairman has been removed at the instance of the ruling party on certain flimsy grounds and the grounds have been just communicated to the President who has given his reply. But his reply and objections were not heeded and he has been asked to face the no-confidence motion. What had happened during the no-confidence motion was that many members were purchased and

the Hon. Minister for Co-operation camped at Tirunelveli and he sent his own men and his vehicles were plying there and there has been a demotion of the panchayat union chairman. That has happened in my constituency and the name of panchayat union is Munjeri Panchayat Union and the Chairman of the panchayat union is a lawyer and a former Member of the Travancore-Cochin Assembly. Now it may be stated that that may be a victory for the ruling party. But does it speak well about the ruling party, is the point and that is the allegation and accusation which I am making. This sort of dubious and doubtful legal method should not be adopted and I think it is not in good taste. I hope that such a thing should not happen in Suramangalam because he is an old Congressman. He has written a personal letter explaining all the details and I do not want to say that things are very happy there. The executive officer in conjunction with Thiru Chandrasekara Mudaliar—whose name has been mentioned is determined to exterminate him. I do not want to read the letter and these are the words which have been used—

"பழைய காங்கிரசை [illegible] இல்லாமல் [illegible] நசுக்குவோம்"

If this is true, does it speak well about the executive officer. He should not align himself with any political party or should not be under the shade of big men who are entrenched in office. He should not behave like that. He has been unnecessarily using the name of very respectable and very responsible Ministers whom I respect most and their names should not be dragged in. Now, Sir, the President of the panchayat cannot be removed unless a no-confidence motion has been passed against him or supersession of the panchayat has been made as per the law. The best thing that should be done under the circumstances of the case, is just to transfer the executive officer to some other place.

He has served for more than $1\frac{1}{2}$ years there. He has not been transferred. There is victimisation of President. The President says he has been terrorised. The officers are fighting shy of taking action against this person. It is also alleged that there is a case of defalcation of Rs. 6,000. Whether the allegation is ill founded or well founded is a matter which requires investigation by impartial persons and I hope the matter will be examined in detail. With the observations I have made, I hope and trust the Hon. Minister will restore the autonomous character of panchayat and





panchayat unions. If there is no power vested in the President to have democratic way of life, what is the sanctity of having a panchayat with only limited powers?

Next point I want to stress is regarding direct election of Panchayat Union Chairman. Many members have expressed in this august House that direct election will have to be there so far as Panchayat Unions are concerned. I think the present system of depending upon the votes of President of Panchayats and others is not happy because it harbours corruption. Corruption in political life has become more rampant. If direct election is made, it may be argued it may be more costly something like election of MLA. But then it would be a healthy convention and practice if direct election is made, so far as Chairmen of Panchayat Unions are concerned.

Another point is the District Collector and R.D.O. who control panchayats and panchayat unions at district level. The District Collector is having a P. A. (Planning and Development) to assist him in developmental activities. But I think a change has to be effected. It is better that this is not tacked on to the Revenue Department. There should be a separate department for Panchayat administration at district level. R.D.O. has got numerous functions in revenue side to attend to. He has also executive powers of first-class magistrate. So, I think if developmental activities of panchayats are handled separately, it would be better. Then they could properly see to the implementation of works.

Regarding roads in Panchayats, certain roads have been laid but their maintenance is poor and some of them have been washed away by the recent rains. Sufficient funds are not available for new schemes and for laying new roads. Some roads, built without protective works like culverts, have been washed away. Some effective steps will have to be taken so that existing roads may be kept in good condition. I think the department would be well advised to take concrete measures in this direction.

Another point is the local matter. In Neyyakarampatti panchayat, in Palni taluk, there is a market and panchayat is collecting rent. This market is on poramboke land. Regarding permission to have the market on poramboke land, government had not taken action. In fact, the Collector of Madurai had been approached. I think the needful would be done in the matter.

[Thiru R. Ponnappa Nadar] [1973 மார்ச் 17

Regarding rain damage work, cut-motion No. 538 mentions that during the October, November 1972 rains, certain breaches have occurred in Melpuram taluk and Punnakarai channel. We approached the Collector and Government but nothing has materialised. The damage remains like that.

There is the drinking water supply problem detailed in the cut-motion No. 605 of Thiru A. Swamidhas. If that project is implemented, many villages could be covered. If a bridge is constructed at Mambazhathurai and water impounded then Takkalai and Kulachal town could be benefited by water supply. I hope Government would take speedy action in this matter.

With these observations I would once again say that the tempo of administration needs to be considerably improved. With these words, I conclude.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே,

"கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையிற் பீடுடைய தில்."

என்பது வள்ளுவர் வாக்கு. குடி மக்களுக்காக கடமை செய்வதில் நான் சோர்வடைய மாட்டேன் என்று கூறி ஒருவன் முன் வருவானேயானால் அவனுடைய பெருமையை மிஞ்சிய புகழ் வேறு எதுவும் இல்லை என்பது வள்ளுவர் வாக்கு. அந்தத் தன்மையை நிறைவேற்றுகின்ற அளவுக்கு அமைந்த ஒன்றுதான் சமூக வளர்ச்சிப் பணிகள், வட்டார வளர்ச்சிப் பணிகளாகும். எனவே, சமூக நலன் கருதியும், வட்டார வளர்ச்சி நலன் கருதியும் இந்த மான்யக் கோரிக்கைகள் இங்கே வைக்கப்பட்டு அதற்காக ரூ. 30,65,87,207 இரண்டு வகைகளிலும் கோரப்பட்டிருக்கிறது.

சமூக வளர்ச்சி கருதியும், வட்டார வளர்ச்சி கருதியும் பலரும் பல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆக, இதில் இரண்டு பெரும் பணிகள் அடங்கியிருக்கின்ற காரணத்தால், பொதுமக்களுடைய தொடர்பு, பொது மக்களுடைய ஊக்கமும், ஆர்வமும், அக்கறையும் இந்தத் துறையிலே வேறு எந்தத் துறையையும் விட மிகப் படிந்து இருக்கிறது என்பது இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் கூறிய கூற்றுக்களிலிருந்து மிகத் தெளிவாகியிருக்கிறது. பொது மக்களுடைய நல்லொத்துழைப்பு, ஆதரவின் அடிப்படையில்தான் பணிகள் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அந்த முறையில் இந்தப் பணிகள் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி இருக்கின்ற பாங்கினையும்



1973 மார்ச் 17] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நாம் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் கூட, இந்த ஊர் வளர்ச்சிப் பணிகள், சமூக வளர்ச்சிப் பணிகள் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகின்ற வகையில் சிறந்த வகையில் வெற்றி பெற்று வருகின்றன. தோங்கி வந்திருக்கின்ற பாங்கினையும் நன்றாகக் காண்கிறோம்.

இங்கே ரூ. 30,65,87,200-க்கு மான்ய கோரிக்கைகள் வைக்கப்பட்டாலும், இந்தத் துறையின் மூலமாக இந்த ஆண்டு மட்டும் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் ரூ. 9,469 லட்சமாக அமைகிறது. பல்வேறு துறைகள் தனித்தனியாக இருந்தாலும் கூட, அவற்றின் நன்மைகளை மக்களிடத்தில் கொண்டுபோய் சேர்க்கின்ற இந்த ஊராட்சித் துறையும், ஊராட்சி ஒன்றியத் துறையும், வேறு துணைத் துறைகளாக இருந்து பாடுபடும் துறைகளும் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி வந்திருக்கின்ற பாங்கினையும் நன்றாகக் காண்கிறோம்.

1961-62-ல் 1,575 லட்ச ரூபாய் அளவுக்கு இந்தத் துறைகளின் மூலமாக பணிகள் ஆற்றப்பட்டு, 1966-67-ல் ரூ. 4,748 லட்சமாக வளர்ந்து, இப்போது 9,469 லட்சமாக வளர்ந்தோங்கி நிற்கிறது. 1961-67-க்கு இடையே இருக்கிற 6 ஆண்டு காலத்தில் மாத்திரம் ரூ. 198 கோடியே 83 லட்சம் அளவுக்கு பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்று கணக்கிட்டால், 1967-லிருந்து 1972-73 வரையில் 6 ஆண்டு காலத்தில் ரூ. 378 கோடியே 95 லட்சம் அளவுக்கு சமுதாய, பிற் பகல் 1.00
வட்டார வளர்ச்சிப் பணிகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பதை நாம் காணலாம். 1973-74-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்டத் தொகையையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் 473 கோடியே 64 லட்சம் ரூபாயாகும். 6 ஆண்டு காலத்திற்கு முன்பு இருந்ததை விட இப்போது எவ்வளவு செலவழிக்கிறோம் என்று பார்த்தால் 99 சதவிகிதம் அதிகமாக கிட்டத்தட்ட சென்ட், பர்சன்ட் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அதிகமாகச் செலவழிக்கிற ஒரு துறையாக இந்தத் துறையை கொண்டு வந்திருக்கிறோம். ஆக, இந்தத்துறை மிகப் பலன் அளிக்கக்கூடியதாக இருக்கிறது என்று சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

வேறுபல மாநிலங்களிலே இருக்கின்ற அமைப்புகளோடு நமது தமிழகத்தைப் ஒப்பிட்டுப் பார்த்தோமானால் • நிலைமை இன்னும் தெளிவாகப் புரியும். வேறு பல மாநிலங்களிலே ஜில்லா பரிஷத் என்ற அமைப்புக்களை ஏற்படுத்தி, சமுதாய வளர்ச்சிப்பணி, வட்டார வளர்ச்சிப் பணிகளை செய்துகொண்டிருக்கிறார்கள். அவைகளிலே சிறப்பாகச் சொல்லப் பட்டது மகாராஷ்டிர மாநிலம். ஊராட்சி ஒன்றிய அமைப்புகளை வைத்துசெயல்படுகின்ற சில மாநிலங்களை விட மகாராஷ்டிர மாநிலத்தில் ஜில்லா பரிஷத் அமைப்புகளின் மூலம் வளர்ச்சிப் பணிகளை சிறப்பாக நடத்துவதாகச் சொல்லப்பட்டது. அதனால் அவர்கள் எப்படி செயல்படுத்துகிறார்கள், எந்தெந்த முறைகளில் பணிகளை நிறைவேற்று

கிறார்கள் என்பதை ஆராய்ந்து அறிந்து வருவதற்காக நமது மாநில அதிகாரிகள் குழு ஒன்றை அங்கே அனுப்பி வைத்தோம். நமது மாநிலத்தைவிட எந்த வகையிலே சிறந்திருக்கிறது என்பதை அறிந்து, நமக்கு ஏற்றதாக இருந்தால் அதைச் செயல்படுத்தலாம் என்பதற்காக அதிகாரிகள் குழுவை அனுப்பிவைத்தோம்.

அவர்கள் அங்கே போய் பார்த்துவிட்டு, அங்கே திட்டங்களைச் செயல்படுத்துவதிலே உள்ள கஷ்டங்களையும் சங்கடங்களையும் மற்ற காரியங்களையும் ஆராய்ந்து பார்த்து அறிக்கை கொடுத்தார்கள். அவர்கள் அறிக்கையிலே 374 ஊராட்சி ஒன்றிய அமைப்புகளை வைத்து வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் நமது முறைதான் மகாராஷ்டிரத்தைவிட சிறந்ததாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆக, கழிந்த 12, 13 ஆண்டு காலமாக வேறு பல மாநிலங்களைவிட நமது மாநிலத்தில் இந்த ஊராட்சி ஒன்றிய அமைப்புகளின் மூலம் வளர்ச்சிப்பணிகள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் தெள்ளத்தெளியப் புரிந்துகொள்கிறோம்.

இந்த 12, 13 ஆண்டு காலத்தில் ஏற்பட்ட வாய்ப்பை அடிப்படையாகக் கொண்டு, அதிலே ஏற்பட்ட குறைபாடுகளையும் நிறைபாடுகளையும் பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். திட்டங்களைச் செயல்படுத்துவதில் சில குறைபாடுகளும் இருக்கின்றன. அதை இல்லை என்று நாம் சொல்லவில்லை. அந்தக் குறைபாடுகளை எந்த எந்த வகையிலே நிவர்த்தி செய்யலாம் என்பதில் நாம் கவனம் செலுத்தியிருக்கிறோம். மேலும் குறைகளைக் களைந்து சிறந்த முறையில் செயல்படுவதற்குள்ள வழிவகைகள் என்ன என்பதை ஆராய்ந்து அறிவிக்கும்படி நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் அறிக்கை வந்தவுடன் அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கின்ற வாய்ப்புகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது கொடைக்கானலிலே மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். அதைப்பற்றித் துறை ஆராய்ந்துகொண்டிருக்கிறது. மேலும் அதைப்பற்றி சிரிய கருத்துரைகளைக் கூறுவதற்காக நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவிடம் கேட்டிருக்கிறோம். அவர்களிடத்திலே கருத்துக்கள் கேட்ட பின்னால், அவர்கள் அறிக்கை வருவதற்குள் நாம் சில பணிகளை மேற்கொண்டோம். ஆனால் நாம் அவர்களை மதிக்கவில்லை என்ற தவறான எண்ணம் ஏற்படக்கூடும். ஆகவே, அவர்களின் அறிக்கைக்காக காத்துக் கொண்டிருக்கிறோம்; அறிக்கை வந்தவுடன் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



மொத்தத்தில் இந்த 12, 13 ஆண்டு காலத்தில் ஊராட்சித்துறை ஒப்புக்கொண்டிருக்கின்ற பணிகள் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வந்திருப்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். இப்படி பொறுப்புக்கள் அதிகரித்திருப்பதனால் ஒன்றியங்கள் சிறப்பாகப் பணியாற்றுவதற்காக ஊராட்சித் துறையை வருவாய்த் துறையிலிருந்து தனியாகப் பிரிக்க வேண்டுமென்று பலர் சொன்னார்கள். மாவட்ட அளவிலே இப்படி நிர்வாகத்தை இரண்டாகப் பிரித்தாலும் இரண்டுத் துறைகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் தான் தலைவராக இருக்க முடியும். அந்த அடிப்படையில்தான் இந்தத் துறையை முழு கவனம் செலுத்தி பார்ப்பதற்காக தனி அதிகாரிகள் இருந்தாலும் ஆர். டி.ஓ. அதிகாரம் பெற்றவர்கள் இந்த வட்டார வளர்ச்சி அதிகாரிகளாக அல்லது கோட்டாட்சித் தலைவர்களாக இருந்தாலும மேலதிகாரம் படைத்தவர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பதால் கோட்டாட்சித் தலைவர்களுக்கு அதிக வாய்ப்பும் வசதியும் ஏற்படாமல் போகக்கூடிய ஒரு நிலைமை ஏற்படலாம். இருப்பினும் சிறந்த நிர்வாகத்தை முன்னிட்டு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்ற கருத்தை கொள்கை அடிப்படையில் ஏற்கெனவே நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறோம். எந்தெந்த வகையிலே அதைச் செய்யலாம் என்பதற்கு நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவிடம் கருத்துரைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் அறிக்கை வந்தபின்னால் அதிலே நல்ல முடிவுகள் ஏற்படும் என்று கருதுகிறேன்.

பொதுவாக, நமது நாட்டில் ஊராட்சி வளர்ச்சித்துறைகள் எப்படி செயல்படுகின்றன என்பதை ஆராய்வதற்காக 'நாஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்யூனிட்டி டெவலப்மென்ட்' என்ற அமைப்பிலிருந்து யுனைட்டெட் கிங்டம் பிரிட்டனைச் சேர்ந்த வல்லுனர் குழு ஒன்று வந்தது. அவர்கள் தமிழ்நாடு, ஆந்திரம், மத்திய பிரதேசம், குஜராத் இந்த நான்கு மாநிலங்களையும் பார்வையிட்ட ஒரு அறிக்கையை சமர்பித்தார்கள். அந்த அறிக்கையிலே தமிழகத்தில் ஊராட்சி வளர்ச்சித்துறை செயல்படும் முறை சிறப்பானது என்று பாராட்டியிருக்கிறார்கள் என்பதை பெருமையோடு நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்

'Almost all services connected with agriculture, such as irrigation, seed distribution, fertiliser distribution, poultry farming, and animal husbandry have improved after the introduction of Panchayat Raj in Tamil Nadu'.

என்று அந்தக் குழுவினர் இந்த நான்கு மாநிலங்களையும் பார்த்துவிட்டு தங்களுடைய அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றிய அமைப்பு வேளாண்மைத் துறை வளர்ச்சியில் , தமிழ்நாடு 68 சதவிகித வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும், ஆந்திரப்பிரதேசம் 55 சதவிகித வளர்ச்சியைக் கண்டிருக்

கிறது என்றும், மத்தியபிரதேசம் 5 சதவிகித வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும், குஜராத் 34 சதவிகிதம் வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும் அவர்கள் மேலும் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களை அணுகி, உழவர் பெருங்குடி மக்கள் பெறுகின்ற நிதிவசதிகளைப் பற்றியும் கணித்திருக்கிறார்கள். தமிழகத்தில் 71 சதவிகிதம் வேளாண்மைப் பெருங்குடி மக்கள் நிதிவசதியைப் பெறுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களை அணுகியிருக்கிறார்கள் என்றும், ஆந்திரப் பிரதேசத்தில் 39 சதவிகிதம் என்றும், குஜராத்தில் 19 சதவிகிதம் என்றும் மத்தியப் பிரதேசத்தில் ஒரே ஒரு சதவிகிதம் என்றும் புள்ளி விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவுக்கு மற்ற மாநிலங்களை விட நமது தமிழகம் இந்தத் துறையிலே முன்னேறியிருக்கிறது என்பது நன்கு தெளிவாகிறது.

பொதுவாக, தமிழகம் நீண்ட நெடுங்காலமாக இந்தத் துறையில் வளர்ச்சி பெற்று வருகிறது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். நமது தமிழகத்தில் மேலும் இந்தத் துறை வளர்ச்சிபெற நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. 1971-ம் ஆண்டு சென்சஸ் கணக்குப்படி பார்த்தால் நகரங்களைப் பிரிப்பதற்காக வகுக்கப்பட்ட இலக்கணப்படி இந்தியா முழுவதிலும் உள்ள எல்லா மாநிலங்களிலும் கணக்கிட்டு, ஒவ்வொரு மாநிலத்தையும் எத்தனை நகரங்களாகப் பிரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்ப்போமானால் உத்திரப் பிரதேசத்தில் 294 நகரங்கள் என்றும், மகாராஷ்டிரத்தில் 289 நகரங்கள் என்றும், குஜராத்தில் 217 நகரங்கள் என்றும் அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் 443 நகரங்கள் வருகின்றன என்றும் சென்சஸ் ரிப்போர்ட்டில் தெரிவித்திருக்கிறார்கள். 8 கோடி மக்கள் வாழ்கின்ற உத்திரப் பிரதேசத்தில் நகரங்களைப் பிரிக்கின்ற இலக்கணப்படி 294 நகரங்கள்தான் வருகின்றன என்று அந்த ரிப்போர்ட்டிலே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் நமது தமிழகத்தில் 443 நகரங்கள் வருகின்றன என்றால் அது எவ்வளவு பெருமைக்குரியது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இப்படி தமிழகத்தில் பல கிராமங்கள் சிற்றூர்கள் பேரூர்களாகவும் பேரூர்கள் நகரங்களாகவும் நகரங்கள் பெருநகரங்களாகவும் மாற்றமடைந்து வரும் அளவிற்கு பல்வேறு கிராமங்கள் வளர்ச்சி பெற்று இருக்கின்றன என்பதை அறியலாம். மற்ற மற்ற மாநிலங்களிலுள்ள நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது தமிழகத்தில் வளர்ச்சி பரவலாக அமைந்திருப்பதையும் அறியலாம்.

வங்காளத்தை எடுத்துக்கொண்டால் கல்கத்தா போன்ற இரண்டொரு நகரங்களைத் தவிர மற்ற பகுதிகளெல்லாம் மிகச் சாதாரணமாகத்தான் இருக்கின்றன. மராட்டியத்தினை எடுத்துக்கொண்டால் பம்பாய் வளர்ந்த நகர், பூனா





வளர்ந்த நகர். அது போன்று மைசூரை எடுத்துக்கொண்டால் மைசூர் வளர்ந்த நகர். பெங்களூர் வளர்ந்த நகர். ஆனால் மற்ற, மற்ற பகுதிகளெல்லாம் மிகமிகச் சாதாரணமாகவே இருக்கின்றன. ஆனால் தமிழகத்தை எடுத்துக்கொண்டால் வளர்ச்சியுற்ற நகரைப் பார்க்க வேண்டுமானால் 300, 400 மைலைக் கடந்துவந்தால்தான் பார்க்க முடியும் என்ற நிலையில்லாமல் சென்னையும் சென்னைக்கு அடுத்தபடியாக மதுரையும், கோவையும், திருச்சியும், திருநெல்வேலியும், சேலமும், வேலூரும் இப்படி மாவட்டத்திற்கு மாவட்டம் பெரும் நகரங்கள் வளர்ச்சியுற்று இருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட வளர்ச்சி இன்று நேற்று ஏற்பட்டது என்று சொல்லவில்லை. வெள்ளைக்காரர்கள் காலத்தில் சென்னை வளர்ச்சி அடைந்தது என்று சொன்னாலும் சேர சோழ பாண்டியன் காலத்திலிருந்தே இப்படிப்பட்ட வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்லுகிறேனே தவிர இதற்குக் காரணம் வெள்ளைக்காரன் மட்டுமில்லை.

நான் குறிப்பிட்டதைப்போல சென்னைக்கு மட்டும்தான் வெள்ளைக்காரன் காரணமாக இருக்கலாம். காஞ்சி, மதுரை, உறையூர் மற்றவையெல்லாம் நீண்ட நெடுங்காலமாக வளர்ந்துவரும் நகரங்களாகும். அத்துடன் நமது அரசு எடுத்துவரும் பல்வேறு வளர்ச்சித்திட்டங்களின் காரணமாக கிராமங்களும் நகரங்களும் மேலும் விரிவடைந்துவருகின்றன என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறைந்தது 300 மக்கள் தொகையுள்ள பகுதிகளுக்கு ஒரு துவக்கப்பள்ளியும், 2½ மைல் வட்டாரத்திற்கு ஒரு உயர் துவக்கப்பள்ளியும், ஐந்து மைல் வட்டாரத்திற்கு ஒரு உயர் நிலைப்பள்ளியும் நிறுவவேண்டும் என்பது நமது திட்டம். நிதிநிலையினையொட்டி மேலும் மேலும் வளர்ந்துவரும் இந்தப் பகுதிகளின் தேவைகளையும் முடிந்த அளவிற்கு நிறைவேற்றிவருகின்றோம். கல்வியைப் பொறுத்த மட்டில் அது மேலும் மேலும் பரவலாக்கப்பட்டு வருகின்றதைப் பார்க்கலாம்.

1966-67-ல் ஆரம்பக் கட்டத்தில் கற்பவர்களுக்கு ரூ. 17.90 கோடி செலவழித்தோம் என்றால் 1973-74-ல் இது ரூ. 34.32 கோடிக்கு வளர்ந்துள்ள நிலைக்குக் கல்வி பரவலாக்கப் பட்டிருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக இதை நான் குறிப்பிடுகிறேன். இன்னும் இத்துறையில் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன. கல்வியினைப் பொறுத்தமட்டில் ஊராட்சி ஒன்றியங்கள்தான் இப்பணியினை பெரும்பாலும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஆறு வயதிலிருந்து பதினோரு வயதுவரையிலுள்ள சிறுவர்கள் சிறுமிகள் நூற்றுக்கு தொண்ணூற்று நான்கு பேரை பள்ளிக்குக் கொண்டு வந்தோம் என்றாலும் இன்னும் ஆறு பேர் பெற்றோர்கள் கைக்கு அகப்படாமல் ஆசிரியர்களுடைய கண்களுக்கும் அகப்படாமல் அங்கங்கே சுற்றிக்கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்களையும் பள்ளிகளில் கொண்டுவந்து சேர்க்க

வேண்டிய பெரும்பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கின்றன. அவற்றை அவை நிறம்பட மேற்கொண்டும் இருக்கின்றன. ஆகவே ஊராட்சி ஒன்றியங்களின் பங்குகூட 314 லட்சத்திலிருந்து ரூபாய் ஐந்து கோடிக்கு வந்து, இதில் பல ஊராட்சி ஒன்றியங்கள் ஆசிரியர்களுக்கு உரிய நாளில் சம்பளம் தருவதில் இடர்பாடுகள் இருப்பதாகத் தெரிவித்து, உரிய பணத்தை உரிய தினத்தில் அவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை என்று அவர்கள் சொன்னபிறகு இப்போது ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளத்தை முதல் தேதியன்றே தந்துவிடுவதற்கான ஏற்பாடு ஒன்றை செய்து, சம்பளத்தைக் கொடுத்தபிறகு கணக்குப் பார்த்து ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெறுகிறது என்ற ஏற்பாட்டினைச் செய்திருக்கிறோம்.

அதுமட்டுமின்றி 'ரீ க்ளாஸிஃபிகேஷன்' என்று சொல்லத்தக்க அளவிற்கு சில வகைகளை மாற்றி அமைப்பதன் மூலம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டும் சென்ற ஆண்டு அளித்ததைவிட இபபோது ஏழுகோடி ரூபாய் அதிகமாக அரசு ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தந்து ஓரளவிற்கு இடர்பாட்டைப் போக்கியிருக்கிறோம்.

இதை தவிர, சிற்றூர் வளர்ச்சி வாரியம் என்று அழைக்கப்படும் ரூரல் டெவலப்மென்டு போர்டு ஒன்றினை ஏற்படுத்தி அதன்மூலம் கடன் வசதிகளைப் பெற்று பள்ளிக்கூடக் கட்டிடங்களைக் கட்டுதல், இணைப்புச் சாலைகளை அமைத்தல், மார்கெட்டுக்கான கட்டிடங்களைக் கட்டுதல் போன்றவற்றுக்கான நிதி உதவியை கடனாகக் கொடுக்க ஏற்பாட்டினைச் செய்ய கருதிக்கொண்டிருக்கிறோம்.

அரசாங்கத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலமாகவாவது அல்லது தேசிய பாங்குகளிலிருந்தாவது கடன் உதவி பெற்று ரூரல் டெவலப்மெண்டு போர்டு என்ற ஒன்றினை அமைத்து உதவ வேண்டும் என்று, முதலில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினை அணுகினோம். அன்றிருந்த தலைவர் ஒப்புதல் தந்தார். ஆனால் அதை முறையாகப் பெறுவதற்கு முன்னம் அவர் மாறிவிட்டார். இப்போது அவருக்குப் பதிலாக வேறு ஒருவர் தலைவராக வந்திருக்கின்றார். வந்துள்ள இவரிடம் நமது கோரிக்கை போயிருக்கின்றது. இவர் ஒப்புதல் அளித்தபிறகு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதியினைப் பெற்று நாம் இப்போது யோசித்துக்கொண்டிருக்கும் சிற்றூர் வளர்ச்சி வாரியத்தினை அமைப்பதன் மூலம் கிட்டத்தட்ட எண்ணாயிரம் பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க முடியும். இரண்டு ஆண்டு காலத்தில் எல்லாக் கட்டிடங்களையும் கட்டி முடித்துவிட்டு பின்னர் இந்த ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் அதற்கான செலவுகளைத் திரும்பப் பெறலாம். ஒருக்கால் ஆயுள் காப்பீட்



டுக் கழகம் இந்த உதவியினைச் செய்ய முன் வராவிட்டாலும் தேசிய பாங்குகளோடு தொடர்பு கொண்டு இந்த வாரியத்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கின்றது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இப்படி அமைக்க இருக்கும் இந்த வாரியத்தின் தலைவராவது கட்சிப் பற்று இல்லாமல் வேறு கட்சியிலிருந்து ஒருவரைப் போடுவதற்கு அரசாங்கம் முன்வருமா? அல்லது மந்திரிகளின் எண்ணிக்கையாவது அதிகப்படுத்தினால் எங்களுடைய கேள்விகளுக்கு அதிக விளக்கங்களும் பதிலும் கிடைக்கும். இந்த இரண்டில் ஏதாவதொன்றை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கேள்வி, இப்போது வாரியத் தலைவர்களாக இருப்பவர்கள் எல்லாம் அப்படி இருக்கின்றார்கள் என்ற பொருள்பட இருக்கின்றது. அப்படிப்பட்ட பொருள்கொள்ள சிறிதும் இடமில்லை என்று சொல்லிக்கொண்டு, யார் தலைவராக இருந்தாலும் ஆற்ற வேண்டிய பணிகளை முறைப்படி செம்மையாக ஆற்றுகின்றார்களா என்பதுதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். வேறு கட்சியினரைப் போட்டுவிட்டாலும் இத்தகைய புகார்கள் இருந்துதான் தீரும். இருக்கும் குற்றங்களை குறைகளை களைய நாம் பாடுபட வேண்டுமே தவிர, கொடுக்கப்பட்டுள்ள பணிகள் செம்மையாக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டுமே தவிர வேறில்லை.

அடுத்து, ஆசிரியர்கள் மாற்றங்களைப் பற்றிச் சொன்னார்கள். இதுபற்றிய விதிகள் கடந்த எட்டு ஆண்டுகளுக்குள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி, அதற்கான கமிட்டிகளின் எண்ணிக்கையும் வளர்ந்து அவற்றோடு உறுப்பினர்களுடைய எண்ணிக்கையும் வளர்ந்து பல சிக்கல்கள் ஏற்பட்ட நிலையில்தான் கடைசியில் சட்ட மன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள் அடங்கிய அனைத்துக் கட்சி தலைவர்களையும் கொண்ட ஒரு கூட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டி அப்போது எடுத்துக்கொண்ட முடிவின்படி, அந்த அடிப்படையில்தான் ஆசிரியர்களின் மாற்றங்களை அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையர்கள் ஏற்றுக்கொள்ளுவது, அதிலும் 'இன் கன்சல்டேஷன் வித் தி டி. இ. ஓ.', மாவட்டக் கல்வி அதிகாரிகளைக் கலந்துகொண்டு, என்று போட்டோம். இப்படிப் போட்டதற்குக் காரணம் ஒன்றியத்தின் தலைவர் அல்லது வேறு ஒருவருடைய தூண்டுதலின்பேரிலே மாற்றிவிட்டார்கள் என்ற புகாருக்கு இடம் இருக்கக்கூடாது என்றுதான். இப்போதுதான் இதை நடைமுறைப் படுத்தியிருக்கிறோம். இத்திட்டத்தில் குறை குற்றங்கள் இருந்தால்

அவற்றைப் போக்குவதற்கு என்னென்ன செய்யலாம் என்பதையும் ஒரு ஆண்டு அனுபவத்தின் அடிப்படையில் பரிசீலித்து முடிவெடுக்கலாம் என்பதை இப்போதும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிகுப்பம்): தலைவரவர்களே, இது விஷயத்தில் அரசு ஆணை பிறப்பித்த பிறகு இந்த சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இரண்டு மூன்று மாதங்களாக இதனால் டீடி அலவன்ஸ் கொடுக்க முடியாமல் செலெக்ஷன் கிரேடு போஸ்டு க்ரியேட் பண்ண முடியாமல் இந்த அமைலி இருப்பதால் இதைப்பற்றி டி.இ.ஓ.-விடம் கேட்டு எழுதி அவர் டெபுடி இன்ஸ்பெக்டரிடம் அனுப்பி நான் குமாதமாகிறது. ஆகவே நாங்கள் கமிஷனரை மிரட்ட முடியாது. ஆகவே இந்த in consulation with DEO. என்ற வாலை மட்டும் வெட்டிவிட்டால் கமிஷனரே ஆசிரியரை மாற்றலாம் என ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதைத்தான் நான் குறிப்பிட்டேன். செப்டம்பரில்தான் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆண்டு முடியவில்லை. இந்த ஆண்டின் அனுபவத்தை வைத்து எந்தெந்த அளவில் குறைபாடுகள் இருக்கின்றன என்று கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்கு என்னென்ன வழி வகைகளைச் செய்யலாம் என்று இந்த ஆண்டின் இறுதியில் முடிவெடுத்து அதன்படி செயலாற்றலாம்.

அடுத்து, சாலை வசதிகள் பற்றி இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கிராமச்சாலைகள் அபிவிருத்தித்திட்டம் என்ற அடிப்படையில் ரூரல் ரோட்ஸ் ப்ரோக்ராம் என்ற வகையில் நாம் ரூ. 230 லட்சம் சென்ற ஆண்டு நிதி ஒதுக்கிச் செலவழித்திருக்கிறோம். தவிர, வேலை வாய்ப்பினை அளித்திடும் திட்டத்தின் கீழும் 6,032 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு அதற்காக ரூபாய் 240 லட்சம் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. இதுபோன்று காவேரி ஆற்றுப் பகுதியில் 'காவிரி கமேண்டு ஏரியா'வில் 'லிங்க் ரோட்ஸ்' போடுவதில் 38.72 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல போக்குவரத்து மற்றும் மார்க்கெட்டிங் காம்ப்ளெக்ஸ் என்ற அளவில் 13.82 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மேலும், வறட்சிப் பகுதிகளில் பணிகளுக்கு என ட்ரௌட் ப்ரோன் ஏரியா என்ற அளவில் ரூபாய் 16.49 லட்சம் செலவழிக்கப்பட்டு சாலை வசதிகளை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

பல் ரூட்டுகளை பெருவழித்துறையினர் எடுத்துக்கொண்டதன் காரணமாக ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக அமைகிற சாலைகளின் நீளம் மொத்தம் 1,637 கிலோ மீட்டருக்கு வருகிறது. இதற்காக அரசு 24.68 லட்சம் ரூபாய்



V21, 31 1173
31 1173-3631

செலவழித்திருக்கிறது. அதைத் தவிர இணைப்புச் சாலைகள் இந்த இணைப்புச் சாலைகளுக்காக ரூ. 112 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆக ஆறு கோடியே எழுபத்தாறு லட்சம் ரூபாய்க்கு மேல் 1972-73 இல் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கிட்டத்தட்ட 7 கோடி ரூபாயை அரசு இதற்காக ஒதுக்கியிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மாரிமுத்து அவர்கள்கூடச் சொன்னார்கள். ரோடுகளைப் போட்டுவிட்டாலும் பலயிடங்களில் அவற்றை சரியான முறையில் பராமரிக்க முடியவில்லை என்றார்கள். அந்தக் கருத்தை நானும் வலியுறுத்திக்கொண்டுதான் வருகிறேன். ரோடுகளைச் சரியான முறையில் பராமரிக்க ஏற்பாடுகள் இல்லாது போட்டுவிட்டால் மழை காரணமாக, அல்லது வேறுவிதமாக அவை அழிகிற போது நமக்குத்தான் பெரு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவேதான் புதிதாகப் போடப்படுகிற ரோடுகளின் பராமரிப்பு பற்றியும் ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நாம் இப்போது பராமரிப்புக்காகக் கொடுப்பது ரூ. 119.32 லட்சம் தான். டி. ஆர். டி. திட்டமிட்டிருப்பது ரூ. 500 இலட்சம். துறையினர் உயர்ந்தபட்சம் 300 லட்சமாவது ஒதுக்கித் தரப்படவேண்டும் என்கிறார்கள். இதுபற்றியும் அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. தக்க முடிவினைக் காணலாம் என்பதை இந்த அவையினில் தெரிவித்துக்கொள்கிறேன்.

61608

அடுத்து, குடிநீர் திட்டம் பற்றியும் சொன்னார்கள். இது பல்வேறு வகையில் மக்களுடைய தேவையைக் கருதி செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தை எடுத்துக்கொண்டால் எந்தவிதமான குடிநீர் வசதியும் இல்லாத இருக்கிற கிராமங்கள் 4,551. குடிநீர் வசதி கொஞ்சம் இருக்கிறது என்றாலும் அதிக அளவில் பற்றாக்குறையோடு இருக்கிற கிராமங்கள் 12,853 ஆகும். அங்குள்ள மேல்நிலை நீரை குடிநீராக உபயோகப்படுத்தினால் நோய்கள்தான் உண்டாகின்றன என்ற அளவில் தமிழகத்தில் [illegible] கிராமங்கள் 2,059 ஆகும்.

பொதுவாக கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக நாம் மானியமாகக் கொடுத்து வருவது ஒருகோடியே எண்பத்தொரு லட்சம் ரூபாயாகும். யுனிசெப் உதவியுடன் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் இரண்டு கோடியே எழுபத்தொரு லட்சத்திற்கு இதுபோன்று தொத்துநோய்களை உண்டாக்கக்கூடிய இடங்களில் குழாய்க்கிணறுகள் அமைக்கவும் திட்டம் வகுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட நமது மாநிலத்தில் குடிநீருக்காக 8,850 குழாய்க் கிணறுகள் அமைக்க இருக்கிறோம். இது மிகவும் உபயோகமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அதைத்தவிர இந்திய அரசு தரும் கிராமிய குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் நாம் ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் 1972-73-க்கு செலவிட்டிருக்கிறோம். 1973-74 இல் இது 3 கோடி என்ற அளவில் கூடும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி கூட்டித் தரவேண்டும் என்று நாங்கள் மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

நம்முடைய மாநிலத்தில் அங்கங்கே குடிநீர் வசதியைப் பெருக்கவேண்டும் என்கிற அடிப்படையில் குடிநீர்வாரியமும் ஆயுள்காப்பீட்டுக் கழகம் தரும் கடன் உதவியைக் கொண்டு பற்பல காரியங்களைச் செய்து வருகிறது. அதோடு கூட குடிநீர் வாரியம் ஒரு புதிய திட்டம் ஒன்றினை அரசுக்குத் தந்திருக்கிறார்கள். அரசு 80 லட்சம் ரூபாயை அதற்காக ஒதுக்கினால் அவர்கள் 80 லட்சம் ரூபாயைக் கடனாகப் பெற்று ஒவ்வொரு ஊராட்சிக்கும் குடிநீர் வசதியை ஏற்படுத்தும் திட்டத்தை பாதி மானியமாகவும், பாதிக் கடனாகவும் நிறைவேற்ற ஒரு யோசனை சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் இதுபற்றியும் விரைவில் ஒரு முடிவினை எடுக்கும் என்பதனை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் 1970 இல் நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் காலன் தண்ணீர் தேவைப்பட்டது. அரசும், மாநகராட்சியும் எடுத்துக்கொண்ட பல திட்டங்களின்படி 1972 இல் சென்னை நகரத்திற்கு நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் காலன் தண்ணீர் சப்ளை செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தினோம்.

இப்போது சென்னை நகருக்கு 51 இல் இருந்து 53 மில்லியன் காலன் தண்ணீர் கொடுத்து வருகிறோம் என்றாலும் பூண்டி, தாம்பரபாக்கம் அருகில் நாம் செய்து வருகிற சீர் அமைப்புப் பணிகள் பூர்த்தியானால் நாள் ஒன்றுக்கு 55 மில்லியன் காலன் தண்ணீர் சப்ளை செய்ய முடியும். வீராணம் திட்டமும் நிறைவேறிய பின்னர் சென்னை நகரத்தில் தண்ணீர் சப்ளை நிலைமை நல்லமுறையில் முன்னேற்றம் அடைந்துவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் சென்னைக்கு குடிதண்ணீர் வழங்கும் முறை சீரமைப்பதற்காக மட்டும் நாம் இப்போது ரூ. 79 லட்சம் செலவிட்டு வருகிறோம். இந்தத் திட்டம் முடியும் தறுவாயில் இருக்கிறது. இதனால் தென்சென்னை குடிநீர் சப்ளை நல்லமுறையில் விஸ்தரிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தென் சென்னை குடிநீர் பற்றாக்குறையும் நீங்கிவிடும்.



சென்னை மாநகரின் துப்புரவுப் பணிகளைப்பற்றிச் சொன்னார்கள். அது பற்றியும் கூட மாநகராட்சி முழு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அது பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த ஆண்டு மாநகராட்சி மன்ற பட்ஜெட்டில் எல்லா எதிர்க்கட்சி உறுப்பினர்களுமே பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். சுதந்திராக் கட்சி உறுப்பினர் கூட அங்கே பாராட்டியிருக்கிறார். அதற்காக இப்போது எடுக்கப்படுகிற முயற்சிகளை போதுமானவை என்று கருதவில்லை. பல செய்ய வேண்டிய பணிகள் இருக்கின்றன. 1951-52 இல் இதற்காக செலவானது ரூ. 31.50 லட்சம். அதுவே 1972-73 இல் ரூ. 222 லட்சமாயிற்று. 1973-74 ம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 244 லட்சம் ஆகும். முன்பு அவர்கள் 200 வாகனங்களை வைத்திருந்தார்கள். 1972-73 இல் 23 லாரிகளை வாங்கினார்கள். இப்போது மேலும் ஒரு 28 லாரிகள் வாங்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஸ்லோ மூவிங் வெஹிகிள் மட்டும் இருந்தால் ஒரு நாளைக்கு ஒரு தடவைக்கு மேல் சென்று துப்புரவு செய்ய முடிவதில்லை அதற்காக லாரிகளைப் பயன்படுத்தினால் இரண்டு மூன்று தடவைகள் கூட சென்று வர சாத்தியமாகும். அந்த அடிப்படையிலேதான் லாரிகளின் எண்ணிக்கை அதிகமாக்கப் பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், ஆன் எ பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): விவாதத்திற்குப் பதிலளித்து முடிந்தபின் கேளுங்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: He has yielded. If he yields, I can ask.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI): Even if he yields, no questions should be asked now. Mr. Krishna Rao has given a ruling that 'points of clarification might be raised only at the end, and not in the middle, of the speech of the Hon. Minister'.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இங்கே சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை பேருந்து நிலையம் கட்டுவதற்காக ரூ. 14 லட்சத்தில் திட்டமிடப்பட்டிருக்கிறது. இன்னும் பல அடுக்கு மாளிகைகளைக் கட்ட ரூ. 55 லட்சமும், கேசவப்பிள்ளை சந்தைக்கு ரூ. 46 லட்சமும் ஆக மாநகராட்சி திரட்டுகிற கடனில் 25 சதவிகிதம், 30 சதவிகிதம் வரை வருவாய் தரக் கூடிய மார்க்கெட், ஷாப், ஸ்டால்ஸ், பஸ் ஸ்டாண்டு ஆகியவற்றுக்குச் செலவிட திட்டமிடப்பட்டிருக்கிறது.

ட்ரைனேஜ் கழிவுநீரை அப்புறப்படுத்த சென்னை நகரம் 5 ஸோன்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 13.92 கோடி ஒவ்வொரு ஸோன் திட்டத்திற்கும் ஒதுக்கப்படுகிறது. விரைவில் இந்தத் திட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தைப்பற்றி நான் அடிக்கடி சட்ட மன்றத்தில் சொல்லி வந்திருக்கிறேன். மாவட்டத்தில் வேலைவாய்ப்பு இல்லாதவர்களில் குறைந்தது ஆயிரம் பேர்களுக்காவது தொடர்ச்சியாக பத்துத் திங்களுக்கு வேலையளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்திய அரசு உருவாக்கியுள்ள திட்டம் இது. இத்திட்டம் 1971-72 இல் 230 ஒன்றியங்களில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இதற்காக ரூ. 2.93 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. 64.04 லட்சம் மனித நாட்கள் பயன்பட்டிருக்கின்றன. அதேபோல் 1972-73 இல் ரூ. 2.40 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. நம்முடைய இலக்கு 33.20 லட்சம் மனித நாட்கள் பயன்படுத்தப்படவேண்டும் என்பது ஆகும். அதற்காகவே நாம் 1973-74 இல் ரூ. 3.02 கோடி செலவிட திட்டமிட்டிருக்கிறோம்.

முன்மாதிரி தீவிர வேலைவாய்ப்புத் திட்டம் என்பதாக தொண்டுக்காடு மாவட்டம், பங்களூர் ஒன்றியம் ஆகிய இரண்டையும் தேர்ந்தெடுத்து செயல் படுத்தி வருகிறோம். இது மத்திய அரசின் திட்டம். இந்தப் பகுதியில் உள்ள எல்லோருக்கும் படிப்படியாக வேலை வாய்ப்பு அளிப்பதுதான் இதன் நோக்கம். இதற்காக 1972-73 இல் இருந்து 3 ஆண்டுகளுக்கு மத்திய அரசின் உதவி ரூ. 45 லட்சங்கள் ஆகும்.

பிற்பகல் 1-30 மத்திய அரசு ரூ. 45 லட்சத்திற்கு திட்டம் தந்தாலும், நாம் மேற்கொண்டு மொத்தத்திலே இன்னும் சேர்த்து, ரூ. 1 கோடியே 75 லட்சமாக ஆக்கி, அதை முன்மாதிரியாக ஆக்கி, வேறு பல பகுதிகளுக்கு அதனை விரிவுபடுத்தலாம் என்கின்ற அளவிலே அந்த எண்ணமும் அரசுக்கு இருந்து வருகிறது. அதைப் படிப்படியாக இந்த அரசு செய்யும் என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): பேரவையின் அனுமதியோடு அவையில் நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது தவிர, பொதுவாக ஏற்படுகின்ற பணிகளை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறு பிரச்சினைகளை பற்றியும், ஊராட்சி மன்றங்கள், இருக்கின்ற பிரச்சினைகள் பற்றியும் தனித்தனியாக எடுத்துச் சொன்னார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்





எடுத்துச் சொன்ன கருத்துக்கள், தனியாக ஆராயப்பட்டு, அந்த குறிப்புகள் ஆராயப்பட்டு, குறைகளைப்போக்க அந்தத் துறையினால் முயற்சி செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுபற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லாத காரணத்தினால் அதைப்பற்றி ஆராய்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப் படும் என்று கூற விரும்புகிறேன்.

'அர்பன் டெவலப்மென்ட் பண்ட்' என்ற ஒரு 'நகர வளர்ச்சி நிதி' ஏற்படுத்தும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துவருகிறது. நகர்ப் புற வரியிலிருந்தும் சென்னை நகரின் விற்பனையின்மீது போடப்படும் உபவரியும் சேர்த்து அமைக்கப்படுகின்ற அளவுக்கு மாநகரின் முக்கியமான வளர்ச்சியை மேற்கொள்ள இருக்கிறோம். அர்பன் டெவலப்மென்ட் பண்ட் மூலமாக ஓரளவு வருவாய் வருகின்ற வாய்ப்பு ஏற்படக் கூடும். அதனால் முக்கியமான வேலைகளைச் செய்யலாம் என்பதற்காக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக் கிறது.

சென்னை மாநகரத்தைப் பொறுத்த அளவுக்கு மாநில அரசாங்கம் தருகின்ற அளவுக்கு நகராட்சிப் பணியாளர்களுக்கு சம்பளம் அளிக்கப்பட்டு, அதற்காக அதிகப்படியாக ரூ. 30 லட்சத்திற்கு இந்த அரசு மாநகராட்சிக்கு ஒதுக்கி தந்திருக்கிறது.

முனிசிபாலிட்டிகளைப் பொறுத்தவரையில், மிச்சப்படும் தொகையில் ஒரு பங்கை கல்விக்காகச் செலவிடவேண்டுமென்ற தன்மையிலே, இப்பொழுது பொதுவாக ஆராய்ந்து அங்கே துண்டு விழுகிற நிலைமையிலே, 75 சதவிகிதத் திற்காவது அவர்கள் கட்டாயம் வரியை வசூலிக்கவேண்டும். வசூலித்து, அதை மிச்சப்படுத்துகிற தொகையிலே ஓரளவுக்கு கல்விக்கு ஒதுக்கவேண்டுமென்று சொல்லி, அதற்கும் பிறகு துண்டு விழுமானால் அரசாங்கம் ஏற்றுக்கொள்வது என்று முடிவெடுத்து, அந்த உத்தரவு இப்பொழுது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 75 சதவிகிதத்திற்கு குறைந்த வரியை வசூலித்து, அந்த துண்டு விழுந்து, அதை அரசாங்கம் செலுத்துவார்களானால், 75 சதவிகிதத்திற்குத்தான் துண்டு விழுகின்ற தொகையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமே தவிர, மற்ற தொகை யைக் கடனாகத்தான் தரும், அதை அவர்கள் எப்படியாவது தரவேண்டுமென்று இப்பொழுது தெரிவித்திருக்கிறோம். கல்வித்துறையிலே, நகராட்சி மன்றங் களிலே எந்த இடுக்கண்ணும் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் இது செய்யப்படுகிறது. இதன் காரணமாக, அரசாங்கத்திற்கு ரூ. 78 லட்சம் செல வாகிறது என்றாலும் கூட, நகராட்சி மன்றங்களுக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடங் களை நீக்க இந்த முயற்சியினை அரசு மேற்கொண்டிருக்கிறது.

ட்ரைனேஜ் கழிவுநீரை அப்புறப்படுத்த சென்னை நகரம் 5 ஸோன்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 13.92 கோடி ஒவ்வொரு ஸோன் திட்டத்திற்கும் ஒதுக்கப்படுகிறது. விரைவில் இந்தத் திட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தைப்பற்றி நான் அடிக்கடி சட்ட மன்றத்தில் சொல்லி வந்திருக்கிறேன். மாவட்டத்தில் வேலைவாய்ப்பு இல்லாதவர்களில் குறைந்தது ஆயிரம் பேர்களுக்காவது தொடர்ச்சியாக பத்துத் திங்களுக்கு வேலையளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்திய அரசு உருவாக்கியுள்ள திட்டம் இது. இத்திட்டம் 1971-72 இல் 230 ஒன்றியங்களில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இதற்காக ரூ. 2.93 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. 64.04 லட்சம் மனித நாட்கள் பயன்பட்டிருக்கின்றன. அதேபோல் 1972-73 இல் ரூ. 2.40 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. நம்முடைய இலக்கு 53.20 லட்சம் மனித நாட்களை பயன்படுத்தப்படவேண்டும் என்பது ஆகும். அதற்காகவே நாம் 1973-74 இல் ரூ. 3.02 கோடி செலவிட திட்டமிட்டிருக்கிறோம்.

முன்மாதிரி தீவிர வேலைவாய்ப்புத் திட்டம் என்பதாக தொன்னூர்க்காடு மாவட்டம், பங்களூர் ஒன்றியம் ஆகிய இரண்டையும் தேர்தெடுத்து செயல் படுத்தி வருகிறோம். இது மத்திய அரசின் திட்டம். இந்தப் பகுதியில் உள்ள எல்லோருக்கும் படிப்படியாக வேலை வாய்ப்பு அளிப்பதுதான் இதன் நோக்கம். இதற்காக 1972-73 இல் இருந்து 3 ஆண்டுகளுக்கு மத்திய அரசின் உதவி ரூ. 45 லட்சங்கள் ஆகும்.

பிற்பகல் 1-30 மத்திய அரசு ரூ. 45 லட்சத்திற்கு திட்டம் தந்தாலும், நாம் மேற்கொண்டு மொத்தத்திலே இன்னும் சேர்த்து, ரூ. 1 கோடியே 75 லட்சமாக ஆக்கி, அதை முன்மாதிரியாக ஆக்கி, வேறு பல பகுதிகளுக்கு அதனை விரிவுபடுத்தலாம் என்கின்ற அளவிலே அந்த எண்ணமும் அரசுக்கு இருந்து வருகிறது. அதைப் படிப்படியாக இந்த அரசு செய்யும் என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): பேரவையின் அனுமதி யோடு அவையில் நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது தவிர, பொதுவாக ஏற்படுகின்ற பணிகளை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறு பிரச்சினைகளை பற்றியும், ஊராட்சி மன்றங்கள், இருக்கின்ற பிரச்சினைகள் பற்றியும், தனித்தனியாக எடுத்துச் சொன்னார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்





எடுத்துச் சொன்ன கருத்துக்கள், தனியாக ஆராயப்பட்டு, அந்த குறிப்புகள் ஆராயப்பட்டு, குறைகளைப்போக்க அந்தத் துறையினால் முயற்சி செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுபற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லாத காரணத்தினால் அதைப்பற்றி ஆராய்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப் படும் என்று கூற விரும்புகிறேன்.

'அர்பன் டெவலப்மென்ட் பண்ட்' என்ற ஒரு 'நகர வளர்ச்சி நிதி' ஏற்படுத்தும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துவருகிறது. நகர்ப் புற வரியிலிருந்தும் சென்னை நகரின் விற்பனையின்மீது போடப்படும் உபவரியும் சேர்த்து அமைக்கப்படுகின்ற அளவுக்கு மாநகரின் முக்கியமான வளர்ச்சியை மேற்கொள்ள இருக்கிறோம். அர்பன் டெவலப்மென்ட் பண்ட் மூலமாக ஓரளவு வருவாய் வருகின்ற வாய்ப்பு ஏற்படக் கூடும். அதனால் முக்கியமான வேலைகளைச் செய்யலாம் என்பதற்காக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக் கிறது.

சென்னை மாநகரத்தைப் பொறுத்த அளவுக்கு மாநில அரசாங்கம் தருகின்ற அளவுக்கு நகராட்சிப் பணியாளர்களுக்கு சம்பளம் அளிக்கப்பட்டு, அதற்காக அதிகப்படியாக ரூ. 30 லட்சத்திற்கு இந்த அரசு மாநகராட்சிக்கு ஒதுக்கி தந்திருக்கிறது.

முனிசிபாலிட்டிகளைப் பொறுத்தவரையில், மிச்சப்படும் தொகையில் ஒரு பங்கை கல்விக்காகச் செலவிடவேண்டுமென்ற தன்மையிலே, இப்பொழுது பொதுவாக ஆராய்ந்து அங்கே துண்டு விழுகிற நிலைமையிலே, 75 சதவிகிதத் திற்காவது அவர்கள் கட்டாயம் வரியை வசூலிக்கவேண்டும். வசூலித்து, அதை மிச்சப்படுத்துகிற தொகையிலே ஓரளவுக்கு கல்விக்கு ஒதுக்கவேண்டுமென்று சொல்லி, அதற்கும் பிறகு துண்டு விழுமானால் அரசாங்கம் ஏற்றுக்கொள்வது என்று முடிவெடுத்து, அந்த உத்தரவு இப்பொழுது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 75 சதவிகிதத்திற்கு குறைந்த வரியை வசூலித்து, அந்த துண்டு விழுந்து, அதை அரசாங்கம் செலுத்துவார்களானால், 75 சதவிகிதத்திற்குத்தான் துண்டு விழுகின்ற தொகையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமே தவிர, மற்ற தொகை யைக் கடனாகத்தான் தரும், அதை அவர்கள் எப்படியாவது தரவேண்டுமென்று இப்பொழுது தெரிவித்திருக்கிறோம். கல்வித்துறையிலே, நகராட்சி மன்றங் களிலே எந்த இடுக்கண்ணும் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் இது செய்யப்படுகிறது. இதன் காரணமாக, அரசாங்கத்திற்கு ரூ. 78 லட்சம் செல வாகிறது என்றாலும் கூட, நகராட்சி மன்றங்களுக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடங் களை நீக்க இந்த முயற்சியினை அரசு மேற்கொண்டிருக்கிறது.

1-4-1973 முதல் எல்லா நகராட்சி மன்றங்களிலும் சைக்கிள் வரி நீக்கப்படுவதை அரசாங்கம் கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது ஒருசில நகராட்சிகளிலே சைக்கிள் வரி விதிக்கப்படுகிறது. ஒருசில நகராட்சிகளிலே சைக்கிள் வரி விதிக்கப்படவில்லை. எல்லா நகராட்சிகளும் 1-4-1973 லிருந்து சைக்கிள் வரி போட வேண்டாமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. எல்லா ஊராட்சி மன்றங்களுமே அந்தப் பணியிலே ஈடுபடும்.

பேருந்து சாலைகளை எடுத்துக்கொள்ள, அதற்காக ரூ. 10 இலட்சம் அளிக்கப்பட்டிருக்கிறது.

தனிநிலை—தேர்வு நிலை நகராட்சிகள் தங்கள் கணக்குகளை தேசிய வங்கிகளில் வைத்துக்கொள்ளலாம். இந்த வகையில், அவர்கள் தங்களுடைய பணிகளை செம்மையாக நடத்த வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

'நகராட்சி நிதி ஆய்வுக்குழு' ஒன்றை நியமிக்க திட்டமிடப் பட்டிருக்கிறது. நகராட்சியினுடைய நிதிநிலைமைகளைக் கண்டு ஆராய்ந்து, அவர்கள் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக்கொள்வது எப்படி என்பதையும், தங்களுடைய செலவினத்தை எப்படி சீரமைக்கலாம் என்று அறியவும் ஒரு ஆய்வுக் குழு அமைத்து, அவர்கள் அளிக்கின்ற அறிக்கையை ஆராய்ந்து, எந்த எந்த இனங்களில் வரி விதிக்கலாம், எந்த எந்த இடங்களுக்கு நான்-டாக்ஸ் ரெவின்யூ, பெறலாம் என்ற யோசனையை அவர்களிடத்திலே பெற்று, அதன் மூலம் நகராட்சி மன்றங்களுடைய வருவாயைப் பெருக்குவதற்கு வழிவகை பெறலாம் என்ற அளவிலே ஒரு நகராட்சி நிதி ஆய்வுக் குழு, 'முனிசிப்பல் பினான்ஸ் என்குயரி கமிட்டி' அமைக்கலாம் என்றும் அதன்மூலம் அறிக்கை பெறவும் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

பெண்கள்—தாழ்த்தப்பட்டவர்கள் தொகுதி இதுவரையிலே பல நகராட்சி மன்றங்களில் இரட்டை நபர் தொகுதிகளாக இருந்தன. இரண்டுபேரும் சேர்ந்து நிற்கவேண்டியதாக இருந்தது. இப்பொழுது சட்டமன்றத்தைப் பொறுத்தவரையிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதியை ஒதுக்கியுள்ள மாதிரி நகராட்சி மன்றங்களிலே பெண்களுக்கென்று தனித் தொகுதியையும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு தனி வார்டையும் ஒதுக்குவது நல்லது, இருபாலாருக்கும் சங்கடங்களை ஏற்படுத்த வேண்டாமென்ற முறையிலே அரசாங்கம் முடிவு எடுத்து, அதற்கான ஒரு சட்டத்தை விரைவிலே கொண்டுவர உத்தேசித்திருக்கிறது.



நகராட்சிகள் 40-ஆக இருந்தது, இப்பொழுது 90-க்கு மேல் உயர்ந்து விட்ட காரணத்தால், பணிகள் அதிகம் ஆகியுள்ளன. ஆகவே, இரண்டு வட்டார இயக்குநர்கள் (தனி நிலை, செலக்ஷன் கிரேட் என்ற அளவுக்கு, ஆணையர்க்கு ஒப்பான நிலையில்) நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. ஆகவே, இரண்டு ரீஜினல் டைரக்டர்களை நியமிப்பதன் மூலமாக இந்த நகராட்சிப் பணிகள் இனி செம்மையாக இருக்கும். நான்கு பேர் வேண்டுமென்று கேட்டாலும் இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் 2 ரீஜினல் டைரக்டர்கள் செலக்ஷன் கிரேட் ஆணையர்க்கு ஈடான வகையில் நியமிக்கப்பட்டு அந்தப் பணிகளை செம்மைப் படுத்துவதற்கான முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சமூக வளர்ச்சி, வட்டார வளர்ச்சியைப் பொறுத்த வரையிலே, செய்ய வேண்டிய பல பணிகள் இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். எல்லா ஊர்களும் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்று துடி துடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஐந்து, ஆறு ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விட அதிகமாக 2 மடங்கு அளவுக்கு மேம்பாடு செய்தாலும் கூட, செய்ய வேண்டிய பணிகள் இன்னும் எறித்தான் இருக்கின்றன. அவைகள் எல்லோருடைய ஒத்துழைப்பினுடைய அடிப்படையிலே நிறைவேறுகின்ற அளவுக்கு இருக்கின்றன. பொதுமக்களும் இதிலே ஒத்துழைக்க வேண்டும். இதிலே பாரபட்சம் காட்டுகிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். ஒரு லட்சத்து இருபத்தைந்து ஆயிரம் ஊராட்சிகள் இருக்கும் போது, ஓரிடத்திலே மட்டும் பாரபட்சம் காட்டுவேனா என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் உணர வேண்டும். யார் எங்கே தவறு செய்தாலும், சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கிற முறையிலே, காரியங்களைச் செய்கிறோம். நகராட்சி மன்றத்திற்குப் புறம்பான ஒரு தீர்மானம் போடுகிறபொழுது, அந்தத் தீர்மானத்தை ரத்து செய்யக் கூடாது என்று கேட்கிற அந்தப் பழக்கம் தொடர்ந்து இருந்து வருகிறது. நகராட்சி மன்றங்கள் அவைகளுக்கு உரிய அளவிலே தான் இருக்க வேண்டும், தீர்மானங்கள் போட வேண்டும். ஓரிடத்தில் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்தான் என்று எடுத்துக் காட்டினார்கள். ஆக, அவர் கொண்டு வந்தாலும் சட்டம் சட்டம் தான் என்பதை நிரூபிப்பதற்காக அதை நிராகரித்தோம். அதுவே சிறந்த எடுத்துக்காட்டு விதிமுறைகளுக்குப் புறம்பான தீர்மானங்கள் கொண்டு வந்தால் ரத்து செய்வோம். காங்கிரஸ் உறுப்பினர் கொண்டு வந்தால்தான் ரத்து செய்வோம். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கொண்டு வந்தால் ரத்து செய்ய மாட்டோம் என்று சொல்கிறவர்களுக்குத்தான் இது பயன்படும் என்று

பாளையங்கோட்டை நகராட்சி மன்றம் போட்ட தீர்மானத்தை ரத்து செய்தோம். மேலும் மேலும் பணி ஆற்றுவதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு பொதுமக்களுடைய ஆதரவு இதற்கு நிரம்ப இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு இந்த காரியங்கள் நல்ல முறையில் நடைபெறும். எல்லா உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பும் வேண்டும். மற்ற மாநிலங்களை விட எல்லா துறையிலேயும் முன்னே நிற்கிறோம் என்றாலும், இந்த துறை எல்லோருடைய ஒத்துழைப்புடன் மேலும் முன்னேற முடியும். அதற்கு உறுதுணையாக இருந்து யோசனைகளைக் கூறிய மன்ற உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்தத் துறையிலே பணியாற்றிய, பணியாற்றுகிற அதிகாரிகள், அலுவலாளர்கள், இயக்குநர், அத்தனை பேருக்கும் அவர்களுடைய பணிகளுக்காக நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்த சென்னை கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையில் இரண்டுமூன்று முக்கியமான விஷயங்கள். அமைச்சருடைய பேச்சிலே குறிப்பிட்ட விஷயங்களைக் கொண்டு அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். முதலில், மாட்டு வண்டியிலே குப்பை எடுத்துக்கொண்டு போகிறார்கள். சந்துகளில் லாரி செல்ல முடியாது, ஆகவே மாட்டு வண்டியைப் பயன்படுத்துகிறார்கள். அந்த இடங்களிலே டெம்போ வான்களை பயன்படுத்தி, துரிதமாக குப்பைகளை எடுக்க முடியுமா? மாட்டு வண்டி மெதுவாக செல்வதால், ஒரு தடவை தான் வருகிறது. அதற்குமேல் வர வசதி இல்லை. ஆகவே, டெம்போ வான்களை, வில்லிஸ் ஜீப்புகளை இந்தக் குப்பைகளை எடுக்க கார்ப்பரேஷனிலே பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கார்ப்பரேஷனிலே புதை சாக்கடை, விளக்கு வசதி, தண்ணீர் வசதி இவைகளையெல்லாம் இன்னும் கொடுக்கலாம். 1954-லே திட்டம் போட்டோம். பல வருடங்கள் ஆகியும் அந்தத் திட்டம் நிறைவேறவில்லை. பல இடங்களுக்கு இந்த வசதி வரவேயில்லை.

அடுத்து லைப்ரரி செஸ் முழுவதையும் பயன்படுத்துவது கிடையாது. அதைப் பயன்படுத்தவில்லையென்றால், அந்த வரியிலிருந்து விலக்கு கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே சொன்னேன். சிறு சிறு 'த்ரீ வீலர்கள்' என்று குறிப்பிட்டேன். அப்படிப்பட்ட வசதிகளின் மூலமாகத் துப்புரவுப் பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியும். எல்லாவற்றையும் எடுத்த எடுப்பில் நிறைவேற்ற முடியாது. நிதிவசதிக்கேற்ப படிப்படியாக நிறைவேற்றும் முயற்சியை மாநகராட்சி மேற்கொள்ளும். குடி தண்ணீர் வசதியைச் செய்யும் முயற்சியில் ஸோன்களாகப் பிரித்து பணியாற்றப்பட்டு வருகிறது. வீராணம் திட்டம் நிறைவேறும் நிலையில் இந்தக்





குறைபாடுகள் நீங்க வழிவகைகள் ஏற்படும். லைப்ரரி செஸ்ஸைப் பொறுத்த வரை சென்னை மாநகர நூலக ஆணைக் குழுவினால் அதற்கான பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதற்கான திட்டங்கள் என்ன என்பது பற்றி ஒரு தனிக் கேள்வியாகக் கேட்டால் கூட எல்லா விவரங்களையும் சேகரித்துக் கொடுக்க முடியும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாட்டு வண்டிகளை நீக்கும் போது அதிலே வேலை செய்து வந்தவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க வேண்டும்.

குடிதண்ணீரைப் பொறுத்தவரை தென் சென்னையில் தியாகராய நகரில் ஒரு இடம் இருக்கிறது. இப்போது அங்கே குடிதண்ணீர் வரப் போகிறது என்று சொல்லுகிறார்கள். ரொம்ப நாட்களாக அந்த இடம் ஒரே அழுக்காக இருக்கிறது. அதிலே தண்ணீர் விட்டால் பயங்கரமான நிலைமை ஏற்படும். ஜாண்டிஸ், காலரா போன்ற நோய்கள்தான் உங்களுக்கு வரும் (சிரிப்பு)— உங்களுக்கு என்றால் நமக்கு—தென் சென்னையில் குடியிருப்பவர்களுக்கு. அது ஒருமொத்த ஹஸார்டாக இருக்கிறது. அதிலே தண்ணீர் விடும்போது முதல் ஐந்தாறு நாட்கள் ப்யூரிபை செய்து விடுவது நல்லது. இதை முன்கூட்டியே சொன்னால் எச்சரிக்கையாக இருக்கும் என்ற முறையில்தான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தென் சென்னைக்கு தண்ணீர் விடுவது முடியும் தருவாயில் இருக்கிறது. ஓரிரு மாதங்களில் அந்தப் பணிகள் முடிந்துவிடும். மாட்டு வண்டிகளை மாற்றும்போது நிச்சயமாக அதிலே வேலை செய்து வந்தவர்களுக்கு மாற்று வேலை கொடுக்கும் முயற்சியை மாநகராட்சி மன்றம் எடுத்துக்கொள்ளும். பத்தாண்டு, பதினைந்தாண்டுக் காலம் பணியாற்றியவர்களை வீட்டுக்கு அனுப்பி விடமாட்டார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நான் இரண்டு விளக்கங்கள் கேட்க விரும்புகிறேன். எங்கள் நாகர்கோயிலுக்குக் குடிதண்ணீர்த் திட்டம் எப்போது ஆரம்பிக்கும்? நமது மாநகராட்சித் தேர்தல் இந்த வருஷத்தில் நடக்குமா? இன்னும் தள்ளிப் போடப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவதற்கு முன்னால் கூற விரும்புகிறேன். நாகர்கோயில் என்று சொல்லும்போது 'எங்கள் நாகர்கோவில்' என்றும், சென்னை மாநகராட்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது 'நமது மாநகராட்சி' என்றும் சொல்லுவது ரொம்ப சுயநலமாக இருக்கிறது. அதை நாடார் அவர்கள் திருத்திக் கொள்ளவேண்டும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 17

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாகர்கோயில் குடிநீர்த்** திட்டத்திற்கு இன்னும் ஒருசில மாதங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

THIRU K. M. SUBRAMANIAM : In the course of my speech, I raised a point that in view of the heavy indebtedness of the Corporation to the tune of about Rs. 28 crores and the income being only Rs. 15 crores, whether the Government propose to give any block grant, say Rs. 10 crores to do urgent works of the Corporation. The Hon. Minister has not replied to that point.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநகராட்சி மன்றம் அரசுக்கு விண்ணப்பித்துக் கொள்ளுமானால் ஆராய்ந்து பார்த்து முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : விவாதம் முடிவுற்றது. இப்போது மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

கோரிக்கை எண் 27-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. பி. வெங்கடசாமி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. என். கே. பழனிசாமி இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மான பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பேரவை முன்னுள்ள கேள்வி :**

"நிதிக் கோரிக்கை எண் 27—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன" என்ற தலைப்பின் கீழ் ரூ. 25,36,55,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, **கோரிய தொகை வழங்கப்பட்டது.**

நிதிக் கோரிக்கை எண் 34-க்கு திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. கே. எம். சுப்பிரமணியம் ஆகியோர் கொடுத்த வெட்டுப் பிரேரணைகள் **பேரவையின் அனுமதியுடன்** திரும்பப் பெறப்பட்டன.



1973 மார்ச் 17] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

**திரு. கே. ஏ. கபூர், திரு. ஏ. சுவாமிதாஸ் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன்** திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பேரவை முன்னுள்ள** கேள்வி :

**"நிதிக் கோரிக்கை எண் 34—பொதுப் பணிகள், உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,29,31,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".**

**நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.**

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பேரவையின் **இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை 19—3—1973 திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.**

**பின்னர் பேரவை பிற்பகல் 1-45 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.**

**(4) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

*A. Statutory Rules and Orders*—' Nil '.

B. *Reports, Notifications and Other Papers.*

† 101. Policy Note on Demand No. 19—Agriculture 1973–74 (English and Tamil).

§ 102. Performance Budget on Agriculture—1973–74.

---

† Circulated and despatched to members on 15th March 1973.

§ Laid on the Table of the House on 16th March 1973

1973 மார்ச் 17]

### இணைப்பு-1.

[5-ம் பக்கத்தில் 402-ஆம் எண்ணுள்ள கேள்விக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

In Tamil Nadu House, New Delhi, charges are collected at the following concessional rates from the Tamil Nadu Government Officers on duty, Members of Tamil Nadu Legislature, Officers of Public Undertaking of Tamil Nadu Government and persons visiting Delhi on Tamil Nadu Government business.

| Category of Persons. | Airconditioned (including electric charges.) | Non-Airconditioned. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | RS. | |
| Single person .. | 6 per day .. .. | 3 per day. |
| Married couple .. | 10 per day .. .. | 5 per day. |

2. The following intermediate rates are collected from Officers of Other Government and non-officials including former Ministers of Tamil Nadu (other than those who happen to be Members of the Tamil Nadu Legislature) visiting Delhi on duties that may indirectly be in the interest of Tamil Nadu Government.

| Category of Persons. | Airconditioned (including electric charges.) | Non-Airconditioned. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | RS. | |
| Single person .. | 9 per day .. .. | 4·50 per day. |
| Married couple .. | 15 per day .. .. | 7·50 per day. |

3. Non-officials are charged at the following 'as for others' rate.

| Category of Persons. | Airconditioned (including electric charges.) | Non-Airconditioned. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | RS. | |
| Single person .. | 20 per day .. .. | 15 per day. |
| Married couple .. | 35 per day .. .. | 25 per day. |



1973 மார்ச் 17]

4. In respect of State guests, viz., Ministers of this State, Chairman and Deputy Chairman of the Legislative Council, Speaker and Deputy Speaker of the Legislative Assembly, no boarding and lodging charges are collected.

விவரம்.—(1) புதுடில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கு, பதவியிலுள்ள தமிழ்நாடு அரசு அதிகாரிகள், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசைச் சார்ந்த அரசுத்துறை நிறுவனங்களின் அதிகாரிகள், தமிழ்நாடு அரசு அலுவலில் டில்லிக்கு வரும் நபர்கள் ஆகியோர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிட்டுள்ள சலுகை விதங்களில் கட்டணங்கள் வசூலிக்கப்படுகிறது :—

| நபர்களின் வகை. | சீர்வளிச்சாதன வசதியுள்ள அறை. | சீர்வளிச்சாதன வசதி இல்லாத அறை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மின் கட்டணம் உள்ளிட்டது.) | |
| | ரூ. காசு. | ரூ. காசு |
| ஒரு நபர் தங்கும் அறை .. | 6.00 (நாள் ஒன்றுக்கு) | 3.00 (நாள் ஒன்றுக்கு) |
| மணமான தம்பதியர் தங்கும் அறை. | 10.00 ,, | 5.00 ,, |

(2) டில்லிக்கு வரும் பிற அரசு அதிகாரிகள், தமிழ்நாடு அரசு நேரடியாக அல்லாமல் மற்றபடி பற்றுக் கொண்டுள்ள பணிகள் தொடர்பாக தமிழ்நாடு அரசின் அரசுச் சார்பற்ற பிறர், முன்னாள் அமைச்சர்கள், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினரல்லாத பிறர், ஆகியோர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள இடைநிலை விதங்களில் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன :—

| (1) | (2) | (3) |
|---|---|---|
| ஒரு நபர் தங்கும் அறை .. | 9.00 (நாள் ஒன்றுக்கு) | 4.50 (நாள் ஒன்றுக்கு) |
| மணமான தம்பதியர் தங்கும் அறை. | 15·00 ,, | 7.50 ,, |

(3) அரசுச் சார்பில்லாத பிறருக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள "பிறருக்கான விதத்தில்" கட்டணம் வசூலிக்கப்படுகிறது :—

| (1) | (2) | (3) |
|---|---|---|
| ஒரு நபர் தங்கும் அறை .. | 20·00 (நாள் ஒன்றுக்கு) | 15.00 (நாள் ஒன்றுக்கு) |
| மணமான தம்பதியர் தங்கும் அறை. | 35·00 ,, | 25.00 ,, |

[1973 மார்ச் 17

(4) இம்மாநிலத்தின் அமைச்சர்கள், சட்டமன்ற மேலவைத் தலைவர், அவைத் தலைவர், சட்டமன்றப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகிய அரசு விருந்தினர்களுக்கு உணவு வசதி, தங்கும் வசதிக்கு கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை.

## இணைப்பு II

[9-ம் பக்கத்தில் 404-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

Each repatriate family from Burma is eligible for a maximum loan of Rs. 5,000 for conducting business, if the family has a business background, or if the family cannot be rehabilitated otherwise. Each repatriate family from Ceylon covered by the Indo-Ceylon Agreement, 1964, is also eligible for a maximum loan of Rs. 5,000 for conducting business, provided the value of the repatriated amount by the family concerned does not exceed Rs. 10,000 in Indian currency. The loan of Rs. 5,000 is paid in two instalments, the first instalment being Rs. 2,000. If the first instalment is utilised properly and if there is need for and possibility of expanding the business, an additional loan up to Rs. 3,000 depending upon the requirements of the business is paid.

2. Unattached women among the repatriates, who are above 30 years of age and less than 65 years are entitled to get a total business loan of Rs. 2,000 only according to their business background.

3. Repatriates from Burma and Ceylon who join together on partnership or on co-operative set up for running business are eligible for the grant of business loan at the rate of Rs. 5,000 for each member payable in one instalment.

4. Repatriate families from Burma and Ceylon which posses agricultural background and which have no land of their own are eligible for settlement in land colonisation schemes and for a maximum agricultural loan assistance of Rs. 4,299 per family in addition to free allotment of lands (subject to availability) up to three acres for cultivation and a grant of Rs. 60 for purchase of pesticides. They are also given a loan of Rs. 300 each for carrying on subsidiary occupation like dairy farming, vegetable gardening, bullock cart plying, etc.



1973 மார்ச் 17]

5. Repatriate families from Ceylon who have their own lands in India and who are in need of funds for cultivating their lands are also given loans up to Rs. 4,299 for cultivating their lands and grant of Rs. 60 for purchase of pesticides, depending upon the extent of lands owned by them.

6. Those repatriates from Ceylon who are having less than three acres of land or do not have any land of their own will also be given loans up to a maximum rate of Rs. 1,000 per acre or the actual price, whichever is less to purchase private lands up to a maximum extent of three acres, if they had repatriated assets worth below Rs. 5,000 in Indian currency. They will also be given loans to a maximum of Rs. 4,299 and a grant of Rs. 60 to cultivate these lands depending upon the extent of the total holding.

7. Repatriates from Ceylon not covered by the Indo-Ceylon Agreement, 1964, are given a loan of Rs. 500, if they are artisans like carpenters, painters, barbers, dhobies, composers, etc., to enable them to carry on their avocation here.

8. *Loans for agricultural purposes by the Repatriates Co-operative Finance and Development Bank.*—It was originally contemplated by the Repatriates Co-operative Finance and Development Bank that the Bank would help repatriates rehabilitated in the Agricultural Sector. But the Board of Directors at the meeting held on 29th July 1972, while reviewing the loan policy, decided that as there was limited scope for financing repatriates settled in agriculture, the Bank need not, at present, grant loans to repatriates for this purpose. Only some repatriate families settled in the Sindhanoor Project in Mysore State had been given crop loans. A sum of Rs. 55,000 was paid as loan to 55 repatriates at Rs. 1,000 each, during the year 1970–71 on the recommendation of the Administrator of Rehabilitation Project, Sindhanoor. Loans have been sanctioned for the year 1972–73 to 140 repatriates for a total sum of Rs. 1,09,600.

9. *Loans for non-agricultural purposes by the Repatriates' Co-operative Finance and Development Bank.*—The members of the Repatriates' Co-operative Finance and Development Bank are given loans for conducting various types of small business such as sale of betel leaf, soda, etc., sale of vegetables, tailoring and

readymade garments, tea and refreshment stalls, lorry transport, laundry, fancy shops, flowers, glasswares, hardware, cloth, barber-shop, fish stalls, mutton stall, hosiery, bakery, cycle shop, sweet meats, oil, optical prints, rice and ceramic products. Bigger schemes of business are also financed by the Bank.

The maximum loan limit for an individual repatriate for improving his/her business is restricted to Rs. 5,000. The maximum amount of loan for each individual repatriate for starting a business or rade is limited to Rs. 25,000. In both the above cases, the loans can be increased at the rate of Rs. 5,000 per repatriate to be employed, subject to a maximum of Rs. 50,000. In the case of co-operatives of repatriates or goups of repatriates, the amount of assistance is upto Rupees one lakh depending upon the cost of the project. Some of the bigger schemes financed by the Bank in excess of Rs. 10,000 consist of purchase of auto-rickshaws, taxis, setting up saw mills, printing presses, ice cream factory, manufacture and sale of aerated waters, etc.

The Repatriates Co-operative Finance and Development Bank has advanced loans to members from its inception (November 1968) till 30th June 1972 amounting to a total of Rs. 102.27 lakhs. The Bank also secures loans exceeding Rs. 5,000 to the repatriates by providing 33-1/3 per cent guarantee.

**விடை.**—பர்மா அகதி குடும்பம் ஒவ்வொன்றும் வணிகம் நடத்துவதில் அனுபவம் பெற்றிருந்தால் அல்லது அக்குடும்பம் ஏனைய வகையில புது வாழ்வளிக்கப்பட இயலாததாக இருந்தால் வணிகம் நடத்துவதற்கு உயர்ந்த அளவு ரூ. 5,000 கடன் பெறத் தகுதியுடையதாகும். 1964-ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் பொருந்துகிற இலங்கை அகதிக் குடும்பம் ஒவ்வொன்றும், வாணிகம் நடத்துவதற்கு உயர்ந்த அளவுக் கடன் தொகை ரூ 5,000 பெறத் தகுதியுடையதாகும். ஆனால் அக்குடும்பத்தால் தாயகத்திற்குக் கொண்டுவரப்பட்ட தொகையில் மதிப்பு இந்திய நாணய மதிப்பில் ரூ. 10,000-க்கு மேற்பட்டிருக்க வேண்டும். இந்தக் கடன் தொகை ரூ. 5,000 இரண்டு தவணைகளில் கொடுக்கப்படுகிறது. முதல் தவணையாக ரூ. 2,000 கொடுக்கப்படுகிறது. முதல் தவணைத் தொகை முறையாகப் பயன்படுத்தப்பட்டு வாணிகத்தை மேலும் பெருக்கும் வாய்ப்பு இருந்தால் வாணிகத் தேவைகளைப் பொறுத்து, கூடுதல் கடன் தொகை ரூ. 3,000 வரை வழங்கப்படுகிறது.



2. 30 வயதிற்கு மேற்பட்டும் 65 வயதுக்குக் குறைந்தும் உள்ள சார்பிலாப் பெண் அகதிகள் மொத்தம் ரூ. 2,000 மட்டுமே வாணிகக் கடன் தொகை பெறத் தகுதியுடையவராவார். இக்கடன் தொகை அவர்களுக்குள்ள வியாபார அனுபவ அடிப்படையில் கொடுக்கப்படுகிறது.

3. வாணிகம் நடத்துவதற்காக பர்மா அகதிகளும் இலங்கை அகதிகளும் பங்குதாரர்களாக அல்லது கூட்டுறவு அமைப்பாகச் செயல்பட்டால் ஒவ்வொருவருக்கும் ரூ. 5,000 என்ற வீதத்தில் வாணிகக் கடன் தொகை பெற அவர்கள் தகுதியுடையவராவர். இது ஒரே தவணையில் கொடுக்கப்படத்தக்கதாகும்.

4. வேளாண்மைத் தொழிலில் முன் அனுபவம் பெற்றுள்ள ஆனால் தங்களுக்குச் சொந்த நிலம் இல்லாத பர்மா, இலங்கை அகதிக் குடும்பங்கள் நிலக் குடியேற்றத் திட்டங்களின் கீழ்க் குடியேறுவதற்குத் தகுதியுடையவையாகும். மேலும் பயிரிடுவதற்காக மூன்று ஏக்கர் நிலம் (நிலம் கிடைப்பதற்கு ஏற்ப) இலவசமாக ஒதுக்கீடு செய்தல், பூச்சிக்கொல்லி மருந்து வாங்க ரூ. 60 மானியம் ஆகியவற்றுக்குக் கூடுதலாக குடும்பம் ஒவ்வொன்றும் உயர்ந்த அளவும் கடன் தொகை ரூ. 4,299 மானியம் பெறத் தகுதியுடையதாகும். பாற்பண்ணை, காய்கறித் தோட்டம் அமைத்தல், மாட்டு வண்டி ஓட்டுதல் முதலிய துணைத் தொழில்கள் செய்வதற்கும் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 300 கடன் தொகையும் வழங்கப்படுகிறது.

5. இந்தியாவில் சொந்த நிலம் பெற்றிருந்து அந்த நிலங்களைப் பயிரிடுவதற்கு தொகை தேவைப்படக்கூடிய இலங்கை அகதிகளுக்கும் அவர்களின் நிலங்களைப் பயிரிடுவதற்காக அவர்களுக்கு சொந்தமாக உள்ள நிலங்களின் பரப்பளவைப் பொறுத்து, ரூ. 4,299 வரை கடன் தொகையும், பூச்சிக்கொல்லி மருந்து வாங்குவதற்கு ரூ. 60-ம் வழங்கப்படுகின்றன.

6. மூன்று ஏக்கர் பரப்பளவிற்குக் குறைந்த நிலம் பெற்றுள்ள அல்லது சொந்த நிலமில்லாத இலங்கை அகதிகளுக்கு தனியார் நிலங்களை உயர்ந்த அளவு மூன்று ஏக்கர் வரை வாங்குவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,000 என்ற உயர்ந்த அளவு கடன் தொகை அல்லது நிலத்தின் உண்மையான விலை இதில் எந்தத் தொகை குறைவானதோ அந்தத் தொகை வழங்கப்படும். ஆனால் அத்தகைய தேர்வில் இந்திய நாணய மதிப்பில் ரூ. 5,000-க்குக் குறைவான மதிப்புக்கு உடைமைகளைத் தாயகத்திற்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். அவர்களுக்கு இந்த நிலங்களைப் பயிரிடுவதற்கு, அவர்களுக்குள்ள, நிலங்களின் பரப்பளவைப் பொறுத்து உயர்ந்த அளவு ரூ. 4,299 வரை கடன் தொகையும் ரூ. 60 மானியமும் வழங்கப்படும்.

**7. 1964-ம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வராத இலங்கை** அகதிகள், தச்சர், வண்ணம்பூசுவோர், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர், அச்சுக்கோப்பவர் போன்ற கை வினைத் தொழிலாளர்களாகவிருப்பின் அவர்கள் இங்கு (இந்தியாவில்) தத்தம் வாழ்க்கைத் தொழிலைச் செய்ய இயலும் வகையில் அவர்கட்கு ரூ. 500 கடன் வழங்கப்படுகிறது.

**8. அகதிகள் கூட்டுறவு நிதியுதவி மேம்பாட்டு வங்கியால் வேளாண்மைச் செயல் நோக்கங்களுக்கு வழங்கப்படும் கடன்கள்.**—அகதிகள் வேளாண்மைத் தொழிலில் நிலைபெற உதவுவது என்று அகதிகள் கூட்டுறவு நிதியுதவி-மேம்பாட்டு வங்கி தொடக்கத்தில் கருதியிருந்தது. ஆனால். 29—7—72-ம் நாளில் வங்கி நிர்வாகிகள் குழுவின் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிர்வாகிகள் குழு கடன் கொள்கை குறித்துச் சீர்தூக்கிப் பார்த்தது. அவ்வமயம், அகதிகள் வேளாண்மைத் தொழிலில் நிலைபெறச் செய்ய உதவுவதற்கு வாய்ப்புகள் மிகக் குறைவாகவேயுள்ளன என்பதால் வங்கி தற்போதைக்கு, இதற்காக அகதிகளுக்குக் கடன்கள் வழங்கவேண்டியதில்லை என்று அக்குழு முடிவு செய்தது. மைசூர் மாநிலத்திலுள்ள சிந்தானூர் திட்டத்தில் குடியேறியுள்ள சில அகதிக் குடும்பங்களுக்கு மட்டுமே பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. சிந்தானூர் புதுவாழ்வுத் திட்ட நிர்வாக அதிகாரி பரிவுரை செய்ததன் பேரில் 1970-71-ல் 55 அகதிகளுக்குத் தலைக்கு ரூ. 1,000 வீதம் ரூ. 55,000 கடனாக வழங்கப்பட்டது. 1972-73-ஆம் ஆண்டில் 140 அகதிகளுக்கு மொத்தம் ரூ. 1,09,600 கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**9. அகதிகள் கூட்டுறவு நிதியுதவி மேம்பாட்டு வங்கியால் வேளாண்மைத்** தொழில் அல்லாத பிற செயல்நோக்கங்களுக்கு வழங்கப்படும் கடன்கள்.—பின்வருவனபோன்ற பல்வேறு வகைப்பட்ட சிறிய அளவு வியாபாரங்களை நடத்தும் பொருட்டு அதிகள் கூட்டுறவு நிதியுதவி மேம்பாட்டு வங்கியின் உறுப்பினர்களுக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. அவையாவன: வெற்றிலை—பாக்கு, சோடாக்கடை, காய்கறிக்கடை, தையற்கடை, ஆயத்த உடைகள் கடை, தேநீர் சிற்றுண்டி விடுதிகள், லாரிப் போக்குவரத்துத் தொழில், சலவைக்கடை, அழகுசாதனப் பொருள்கள் கடை, பூ வியாபாரம், கண்ணாடிச் சாமான்கள் இரும்புச் சாமான்கள், துணிவியாபாரம், முடிதிருத்தம் நிலையம், மீன் கடைகள், இறைச்சி விற்பனை நிலையம், உள்ளாடைகள் விற்பனை, ரொட்டிக் கடை, சைக்கிள்கடை, இனிப்புப் பண்டங்கள் விற்பனைக் கடை, எண்ணெய் வியாபாரம், பலகோணப் பார்வைப் படங்கள் ( On' cal rrints ) அரிசி வியாபாரம், மட்பாண்டங்கள் இன்னும் பெரிய அளவு வியாபாரங்களுக்கும் வங்கி நிதியுதவியளிக்கிறது.





ஒரு அகதிக்கு அவரது வியாபாரத்தை மேம்படுத்த அளிக்கப்படும் கடனுதவியின் உயர் அளவு ரூ. 5,000 என்று வரையறுக்கப்பட்டுள்ளது. வியாபாரத்தை அல்லது ஒரு தொழிலைத் தொடங்க அகதிகள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் கடன் தொகையின் உயர் அளவு ரூ. 25,000 என்று வரையறுக்கப்பட்டுள்ளது. மேற் சொன்ன இரு நேர்வுகளிலும் அவ்வியாபாரத்தில் அல்லது தொழிலில் வேலைக்கமர்த்தப்படுகிற ஒவ்வொரு அகதிக்கும் ரூ. 5,000 என்ற வீதத்தில் கடன் தொகைள் உயர்த்தி கொடுக்கப்படலாம் ஆனால் அவ்வாறு உயர்த்தி கொடுக்கப்படுவது ரூ. 50,000-க்கு மேற்படக் கூடாது அகதிகள் கூட்டுறவு சங்கங்களின் நேர்வில் அல்லது அகதிகள் (கூட்டுத்) தொகுதியினர் நேர்வில் திட்டங்களின் செலவைப் பொருத்து கடனுதவித் தொகை ரூ. ஒரு லட்சம் வரை வழங்கப்படும். ரூ. 10,000-க்கும் அதிகமாக வங்கியால் நிதியுதவியளிக்கப்படுகின்ற பெரிய திட்டங்களிற் சில பின்வருமாறு:—ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்சிகள் வாங்குதல், டீம் அறுக்கும் ஆலைகள் நிறுவுதல், அச்சகம் நிறுவுதல், ஐஸ்கிரீம் தொழிற்சாலை நிறுவுதல், சோடா-கலர் உற்பத்தி பானங்கள் உற்பத்தி—விற்பனை.

அகதிகள் கூட்டுறவு நிதியுதவி மேம்பாட்டு வங்கி, அது தொடங்கிய நாள் தொட்டு (நவம்பர் '68) 30-6-72 வரை மொத்தம் ரூ. 102.27 லட்சம் தொகையைத் தனது உறுப்பினர்களுக்குக் கடனாக வழங்கியுள்ளது. இந்த வங்கி 33-1/3 உத்தரவாதமளிப்பதன் மூலம், அகதிகளுக்கு (வணிக வங்கிகளிடமிருந்து) ரூ. 5,000-க்கு மேற்பட்ட கடன் தொகையைப் பெற்றுத்தரவும் செய்கிறது.

## இணைப்பு III

(16-ம் பக்கத்தில் 409-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க)

தமிழ்நாடு அரசு, இந்திய அரசின் மூலம் இம் மாநிலத்தில் கனிவள ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டச் சிறப்பு நிதி நிறுவனத்தை வேண்டியது. தமிழ்நாடு கனிவள மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் சிறப்பு நிதி நிறுவனம் நிதியுதவி அளிக்க ஐக்கிய நாட்டு நிறுவனம் ஏற்பளித்தது. இத்திட்டத்தின் காலஅளவு 1968 முதல் 1971 வரையிலான மூன்றாண்டுகளாகும். இத்திட்டத்தின் கீழ், வட ஆர்க்காடு மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம், தருமபுரி, சேலம் மாவட்டங்கள் ஆகியவற்றின் சில பகுதிகளில் 17,000 சதுர கிலோ மீட்டர் பரப்பில் பரவலான முறையிலும், மும்முரமாகவும் கனிப்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்

பட்டன. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 120 லட்சமாகும். இதில் கிட்டத்தட்ட ரூ. 80 லட்சம் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தால் வழங்கப் படுகிறது.

இரண்டாவது நிலையாக, 27 திங்கள் கால அளவில் நிறைவேற்றப்பட வேண்டிய தமிழ்நாடு கனிவள மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்குமாறு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்திடம் வேண்டப்பட்டுள்ளது. திட்ட ஆவணம், ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்தால், ஏற்கெனவே ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்திய அரசு விரைவில் முறையாக இசைவு அளித்து கையொப்பமிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

The Government of Tamil Nadu, through the Government of India, requested the United Nations Development Programme Special Fund authorities for a mineral exploration project in this State, and the United Nations approved the Tamil Nadu Mineral Development Project for assistance by the United Nations Special Fund and the project was of three years duration from 1968–71. Under this project, extensive and intensive mineral explorations over an area of 17,000 sq. km. in parts of North Arcot district, South Arcot district, Dharmapuri and Salem districts were taken up. The total cost of the project is Rs. 120 lakhs of which nearly Rs. 80 lakhs is provided by United Nations Development Programme.

The United Nations Development Programme have been requested for sanction of second phase of the Tamil Nadu Mineral Development Project which will be 27 men-months duration. The project document has already been approved by the United Nations Development Programme and is expected to be formally cleared and signed by the Government of India shortly.

## இணைப்பு IV

(17-ம் பக்கத்தில் 410-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க)

தென்னார்க்காடு மாவட்டத்தில் பல இடங்களில் கீழே கண்ட கனிப்பொருள்கள் காணப்படுகின்றன. முக்கியக் கனிவளங்களும் அவை கிடைக்கும் இடமும், அளவும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.



1. **பலவித உலோகக் கனிவளங்கள் :** தென்னார்க்காடு மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டம் மாமண்டூருக்கு அருகாமையில் செம்பு, ஈயம், துத்தநாகம் ஆகிய கனிவளங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்திய புவியியல் அமைப்பு மேற்கொண்ட பணிகளின் அடிப்படையில் சுமார் 900,000 டன்கள் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

2. **களிமண்கள்**

1. கடலூருக்கு அருகாமையில் பண்ருட்டியிலும்
2. குமாளப்பட்டிக்கு அருகாமையில் திருவக்கரையிலும்
3. நெய்வேலிக்கருகாமையிலும்

எல்லாவிதமான களிமண்களும் சுமார் 3 மில்லியன் டன்கள் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

3. சுண்ணாம்புக் கிளிஞ்சல்கள் (Lime shell)

திண்டிவனம் வட்டத்தில் மரக்காணத்தில் சேறோடும், மண்ணோடும் கலந்து மேற்படலமாக கடல்நீரின் பின் நீர் இயக்கத்தால் கிடைக்கின்றது. இவ்விடத்தில் சுண்ணாம்புக் கிளிஞ்சல்கள் 30,000 டன்கள் கிடைப்பதாக மதிப்பிடப் பட்டிருக்கின்றது.

4. **சுண்ணாம்புக்கல் :**

(1) விழுப்புரம் வட்டத்தில் வானூரைச் சுற்றிலும்

(2) திண்டிவனம் வட்டத்தில் இராயபுதுப்பாக்கம், திருவைப்பக்கம் கனியிலும் கிடைக்கிறது.

5. இரும்புத்தாது :

மாக்னடைட் குவார்ட்ஸைட் என்னும் இரும்புத்தாது சிறிய அளவில் காடிசித்தூர், பள்ளிப்பாளையம் ஆகியவற்றுக்கருகிலுள்ள மலைகளிலும் கல்லக்குறிச்சி வட்டம் கல்ராயன் மலைப்பகுதியிலுள்ள மாமண்டூர் கிராமத்திலும் செஞ்சி வட்டம் தாலங்குளம், புதுமங்கலம் (இதில் ஒரு பகுதி வடஆற்காடு மாவட்டம்) ஆகிய கிராமங்களிலும் கிடைக்கின்றது. இக்கனிவளம் மிகக் குறைந்த அளவே கிடைக்கிறது.

6. **நிலக்கரி.**

நெய்வேலிச் சுற்றிலும் 250 சதுர கிலோ மீட்டருக்குக் கிடைக்கிறது. 2,000 மில்லியன் டன்கள் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

Yes. The following minerals have been located in different areas, in South Arcot district. The important deposits with their location and reserves are as follows:—

1. *Multi-Metal Deposit.*—A copper, lead and zinc deposit has been located near Mamandur in Kallakurichi taluk of South Arcot district. The estimated reserves based on the work carried out by the Geological Survey of India in this area are about 900,000 tonnes.

*Clays.*—(i) Panruti—Cuddalore area.

(ii) Tiruvakkarai—Kumalampatti area.

(iii) Neyveli area.

The total estimated reserves of all types of clays in this area are about 3 million tonnes.

3. *Limeshells.*—As layers associated with mud and soil in the backwaters of Marakkanam, Tindivanam taluk. A reserve of 30,000 tonnes of limeshell has been estimated in the above area.

4. *Limestone.*—(i) Around Vanur in Villupuram taluk.

(ii) Rayapudupakkam—Turuvai area in Tindivanam taluk.

5. *Iron ores.*—Small occurrences of magnetite, quartzites are located on the hills near Karadichitfur, Pallipalayam and Mamandur villages, in Kalrayan Hill area, Kallakurichi taluk and Talankulam, Pudumangalam village in Gingee taluk (Part of it in North Arcot district). The deposits are small in extent.

6. *Lignite.*—Around Neyveli over an area of 250 square kilometres where a reserve of 2,000 million tonnes have been estimated.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

### திங்கட்கிழமை, 1973 மார்ச் 19

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### மருத்துவ மனைகளில் இலவச-சிகிச்சைக்கான வருமான வரம்பு

*416 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவ மனைகளில் தங்கி இலவசச் சிகிச்சை பெறுவதற்கான தற்போதுள்ள உச்ச வருமான வரம்பை ரூ. 300 ஆக உயர்த்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

**திரு. மே. சி. தூயமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நிறைந்த வருமானம் உடையவர்கள் கூட, குறைந்த வருமானம் பெறுவதாகக் கூறி அரசினர் மருத்துவ மனைகளில் இலவசமாக மருத்துவம் பெறுவதைத் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, வருமானத்தைக் குறைவாகச் சொல்வதாக அறியப்பட்டால் அதற்குச் சான்றிதழ் கேட்டு அதை நிரூபிக்கும்படிக் கேட்கலாம்.

**திரு. ஆ. பாந்தாமன்:** இப்பொழுது வருமானத்தை ரூ. 200 ஆக வைத்திருக்கிறார்கள். இந்த வருமானம் உள்ளவர்கள் மிகவும் தொல்லைப் படுகிறார்கள். ஆகவே, வருமான வரம்பை ரூ. 300 அல்லது ரூ. 400 ஆக உயர்த்த அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மாதம் ரூ. 200 சம்பாதிக்கிறவர்கள் அதிகக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மருத்துவ மனை களில் இலவசமாக வேண்டும் என்ற கருத்தே நியாயமான கருத்து அல்ல. ரூ. 200 சம்பாதிக்கிறவர்கள் சினிமாவுக்கு எவ்வளவு செலவழிக்கிறார்கள்

சிகரெட்டுக்கு எவ்வளவு செலவழிக்கிறார்கள், நோயை விலைக்கு வாங்குவதற்கு எவ்வளவு செலவழிக்கிறார்கள் என்ற கணக்கைப் பார்த்தால் மருத்துவ மனைக்குச் சிறிய கட்டணமாவது செலுத்துவதுதான் ஜனநாயகத்தில் நியாயம் ஆகும்.

***திரு. கே. டி. கே. தங்கமணி :*** பொதுவாகவே, மருத்துவ மனையில் இலவச மாகவே வைத்தியம் கொடுக்கக்கூடிய அளவுக்கு அரசு இருந்தால் உதவி கரமாக இருக்கும் என்ற காரணத்தால்தான் ரூ. 100-ஐ ரூ. 200 ஆக ஆக்கி இருக்கிறது. விலைவாசி உயர்ந்து போய்க்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ரூ. 200 என்று வைத்திருப்பது மிகக் குறைந்த வருவாய் ஆகும். ஆகவே, ரூ. 200-ஐ ரூ. 300 ஆக ஆக்குவதற்கு அரசு யோசிக்குமா ?

***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :*** முதலிலேயே ஒரு விடை சொன்னேன். எவ்வளவு ஏழையாக இருந்தாலும் மருத்துவ மனையில் குறைந்த பட்சக் கட்டணம் செலுத்தினால் ஒரு பொறுப்புணர்ச்சி வளரும். அந்தப் பொறுப்பு உணர்ச்சியை வளர்க்க உணவுக்கு எப்படிச் செலவழிக்கப்படுகிறதோ, உடைக்கு எப்படிச் செலவழிக்கப் படுகிறதோ, அப்படியே மருந்துக்கும் ஒரு சிறு பங்கு செலுத்த வேண்டும். ஆனால், அடியோடு செலுத்த முடியாதவர் களுக்கு எல்லாவிதமான வசதியும் அரசு செய்ய முடியும். ஆனால், செலவிடக் கூடிய வாய்ப்பு வசதிக்கேற்ப குறைந்த கட்டணம் செலுத்துவதென்பது அவர்கள் மருத்துவ மனையை முறையாகப் பயன்படுத்திக்கொள்ளவும், அனாவசி யமாகப் பயன்படுத்தாமலிருக்கவும் உதவும். குடும்பத்தில் தகராறு வந்தால் கூட மருத்துவ மனையில் போய்ப் படுத்துக்கொள்ளாமலிருக்கவும், இவை களுக்கெல்லாம் மிகப் பெருமளவுக்கு உதவியாகும்.

***திரு. கு. காமாட்சி :*** இலவச சிகிச்சை பெறுவதற்குப் பாராளுமன்ற உறுப் பினர்களின் குடும்பங்களுக்கு வாய்ப்பு இருக்கிறதே, அதுபோல் சட்ட மன்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும் அந்த வாய்ப்பை ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா ?

***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :*** தலைவர் அவர்களே, இரண்டு ஏற்பாடு கள் செய்யலாம். ஒன்று—சட்டசபை உறுப்பினர் தங்கள் சம்பளத்தை ரூ. 200-க்கு உட்படுத்திக் கொள்ளலாம். அது எளிதில் இன்றைக்கு நடக்கக் கூடிய காரியம். இல்லையானால், அவர்கள் மருத்துவம் பெறும்போது அவர் களுக்குத் தேவையான வசதிகள் கிடைக்கவில்லையென்றால், அதைக் கிடைக்கச் செய்ய அரசாங்கம் முயற்சிக்கலாம். ஆனால், மொத்தமாக இந்த வருமான எல்லையை உயர்த்துவது என்பது கடினம்.





***திரு. வை. பாலசுந்தரம் :*** துணைத் தலைவர் அவர்களே, சில அரசாங்க உத்தியோகஸ்தர்கள், தாங்கள் அரசாங்கத்தில் வேலை செய்யவில்லை என்று மருத்துவ மனையில் பொய் சொல்லி, மருத்துவ மனையில் சேர்ந்துவிடுகிறார்களே அதைப்பற்றி இந்த அரசு அறியுமா ?

***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :*** அறியாது.

***திரு. எம். சுரேந்திரன் :*** சார், மருத்துவ மனையில் சேருவதற்கு உள்ள வருமான வரம்பை உயர்த்த வேண்டுமென்ற இந்தக் கோரிக்கை குறித்து, ஏதோ மற்ற காரியங்களுக்கெல்லாம் அதிகச் செலவு செய்கிறார்கள், இதற்குக் குறைந்த செலவு செய்தால் போதும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இது நோய் பரவுகின்ற விஷயம். மற்றவர்களைப் பாதிக்கின்ற விஷயம். நோய் சொஸ்தப்படாவிட்டால் அடுத்த வீட்டுக்குப் பரவி அவர்களும் கஷ்டப்படுகிற விஷயம். அதனால், இந்த விஷயத்தை மனிதாபிமானத்துடன் அரசு கவனித்து வருமான வரம்பை உயர்த்துவதற்கு முயற்சி செய்யுமா ?

***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :*** மனிதாபிமானத்தை மிக அதிகமாகக் கருதுகிற இந்தியாவின் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கிராமத்தில் மிகச் சாதாரணமான கிராம வைத்தியர்களை வைத்து, அதுவும் இரண்டாயிரம் பேருக்கு ஒருவரை நியமிக்கலாம் என்றும் அவர்கள்கூட ஒவ் வொருவரிடமிருந்தும் பத்து பைசா வீதம் கட்டணம் வாங்கிக்கொண்டு மருந்து தரவேண்டும் என்றும் ஒரு ஆலோசனையை வழங்கினார்கள். கிராமத் திலேயிருக்கிற ஏழை மக்களிடத்தில் படித்துப் பட்டம் பெறாத, ஆனால், மூன்று மாதங்கள், ஆறு மாதங்கள் பயிற்சி பெற்று 'பேர்ஃபுட்' டாக்டர்களை வைத்து நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கவும், நோயாளி ஒவ்வொருவரிடமும் பத்து பைசா வீதம் வாங்கவேண்டும் என்றும், இல்லையானால் அவர்களுடைய நில வருமானத்தின்மீது ஒரு துணை வரி போட்டு அதை வசூலித்து, அதன் மூல மாக நிதி பெறவேண்டும் என்னும் கருத்தை மனிதாபிமானம் மிக்க இந்திரா காந்தி அம்மையார் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய நிலைமைக்கு ஏற்ப பார்க்கும்போது, 100 ரூபாயை 200 ரூபாயாக்கியதினாலேயே பெரும்பாலோர் இலவச மருத்துவ வசதி பெறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடு கிறது. இலவச மருத்துவம் பெறுவதன் காரணமாக ஏற்படுகிற நிலைமை என்னவென்றால், இலவச மருத்துவ வசதியை அவர்களுக்கு வழங்குகிற போது, ஒரு பொறுப்பற்ற சூழ்நிலை உருவாகிறது. 200 ரூபாய்க்குமேல் வரு மானம் உள்ளவர்கள் இதற்காக ஒரு நாமினல் சார்ஜ் ஒரு குறைந்த அளவு கட்டணம்—செலுத்துவதன்மூலம் ஒரு பொறுப்புணர்ச்சி வளரும் என்றுதான் கருதுகிறேன்,

**திரு. எம். தேவராசன்:** தலைவர் அவர்களே, அவுட்-பேஷன்ட்கள் ஏராளமாக வந்து இலவசமாக மருத்துவ வசதி பெறுகிறார்கள். ஆகவே, மருத்துவ மனையிலேயே ஒரு உண்டியலை வைத்து, அவர்கள் விரும்பிய தொகையை அதில் போடும்படி ஏற்பாடு செய்தால் நல்ல வருமானம் கிடைக்கும். ஆதலால் அரசு அதைச் செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு நன்றி. புற நோயாளிகள் ஆயிரக்கணக்கில் இலட்சக் கணக்கில் அரசு மருத்துவ மனைக்கு வந்து வைத்தியம் செய்துகொள்கிறார்கள். வெளியிலிருந்து வந்து வைத்தியம் செய்துகொண்டு போகிற புற நோயாளிகளுக்கு மருந்து இலவசமாகத்தான் கொடுக்கப்படுகிறது. ஆனால், மருத்துவ மனைக்குள்ளே படுக்கை வசதி, சுகாதார வசதி, இன்னும் வேறுவிதமான மருந்துகளை எடுத்துத்தருகிற செவிலியர்களுடைய பணி வசதி போன்றவை அனைத்தும் தரப்படுகிறவர்களுக்குத்தான் ஒரு குறைந்த கட்டணம் இருக்கிறதே தவிர, புற நோயாளிகளுக்கு அவ்விதமான கட்டணம் எதுவுமே கிடையாது. உண்டியல் வைக்கலாம் என்று சொன்னார்கள். உள்ளபடியே நல்ல கடமை உணர்ச்சியை உருவாக்கிக்கொண்டால் உண்டியல் வெற்றி பெறும். அதற்கான எண்ணம் இருக்கிறது. அதுகுறித்து பின்னர்தான் முயற்சிக்க வேண்டும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, தோராயமாக ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு பேர் இலவச சிகிச்சை பெறுகிறார்கள் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அந்த விவரம் இல்லை. ஆனால், ஏறத்தாழ 4 கோடி மக்களில் குறைந்தபட்சம் 50 லட்சம் பேராவது இந்த மருத்துவ வசதி பெற்றுக்கொண்டுதான் இருப்பார்கள். இன்னும் அதிக பேரளவாகவும் இருக்கலாம்.

**திரு. தி. பொன்னுமலை:** ஒவ்வொரு நோயாளியும் நபர் ஒன்றுக்குப் பத்து பைசா வீதம் அளிக்கவேண்டும் என்ற யோசனை இருந்ததே, அந்த யோசனை செயல்படுகிறதா? இல்லையா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அப்படி நோயாளிகள் பத்து பைசா தரவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்படவில்லை. அதற்குமாறாக, நோயாளிகளைப் பார்க்க பெரிய மருத்துவ மனைகளுக்குள்ளே வருகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாகி, சில நேரத்தில் பண்டங்கள் கூட காணாமல் போகிற நிலையும் சுகாதார வசதி கெடுகிற நிலையும், நோயாளிகள் ஐம்பது பேர் இருக்க, அவர்களைப் பார்க்க 100 பேர்கள் வந்து,





மூச்சுக்காற்று கூட கெடுவதற்கு வாய்ப்பும் இருக்கிறது என்பதால் அதை அளவுபடுத்த, ரெஸ்ட்ரிக்ட் செய்ய, பார்க்க வருகிறவர்களிடம் பத்து பைசா வீதம் வசூலிக்கலாம் என்று கருதுகிறோம். பத்து பைசா கட்டணம் வசூலிக்க ஆகும் செலவு டிக்கட்டுக்கு 5 பைசா வீதம் இருக்கும், அதிக வருமானமும் இருக்காது. வீண் செலவை ஒரு வகையில் உண்டாக்குவதைத்தவிர பெரும் பலன் இருக்காது என்று கருதி, இப்பொழுது அந்தக் கட்டணம் வசூலிக்கும் முயற்சி கைவிடப்பட்டிருக்கிறது.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** நோயாளிகளை படுக்கையில் வைத்து சிகிச்சை செய்யவேண்டுமென்று சிபாரிசு செய்தாலும் அந்த சிகிச்சை முடிவதற்கு முன்பே, பூரணமாக குணம் அடையுமுன்பே ஆறு ஏழு நாட்களில் அவர்களை திருப்பி அனுப்பி விடுகிறார்கள். ஆனால் சிலரை மாதக்கணக்கில் வைத்திருக்கிறார்கள், காரணம் டாக்டர்கள் அவர்களுக்கு வேண்டியவர்களாக இருப்பதன் காரணத்தினால் என்று அங்கிருந்து வருகிற நோயாளிகள் கூறுகிறார்கள். எனவே யாராக இருந்தாலும் முப்பது நாட்களுக்கு மேல் இருப்பார்களேயானால் அவர்களைக் கண்காணித்து, உடன் அவர்களே அக்கறை எடுத்து அவர்களைக் கண்காணித்து முப்பது நாட்களுக்கு மேல் தங்குபவர்களை அங்கிருந்து நீக்கி தேவை உள்ளவர்களுக்கு அதிக நாட்கள் சிகிச்சை அளிப்பதற்கு அரசாங்கம் வேண்டியதைச் செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இதெல்லாம் மனிதனுடைய நல்லெண்ணத்தைப் பொறுத்தது. உண்மையாகவே நோய் நீங்கிற்று என்று டாக்டர் சொல்லிவிட்ட பிறகு நோய் நீங்கினாலும் பலஹீனம் நீங்கியிருக்காது, எனவே அது நீங்கும் வரை அவர்களை மருத்துவ மனையில் வைத்திருப்பது என்பது முறையல்ல. அதோடு புதிதாக வருகிறவர்களுக்கும் இடம் தரவேண்டும். மருத்துவ மனையில் இருந்து இன்னும் ஒரு வார காலம் நல்ல உணவு எல்லாம் சாப்பிட்டுவிட்டுப் போகலாம் என்றால் மருத்துவ மனைகளில் தற்போதுள்ள இடநெருக்கடி காரணமாக அதற்குத் தற்போது வசதியில்லை. கூடுமான வரையில் அடிப்படையாக எந்த நோய்க்கு சிகிச்சை பெற வந்தார்களோ அது நீங்கிவிட்டால் அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டுமென்ற முறைதான் இருக்கிறது.

## *Doctors for Leprosy Clinics*

* 417 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the medical men have been showing disinclination to work at Leprosy Clinics in this State; and

(b) if so, the action taken thereon.

[1973 மார்ச் 19

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) தனிப்பட்ட முறையில் சிகிச்சை அளிக்க வாய்ப்பில்லாததால் ஒரு சில மருத்துவ அதிகாரிகள் தொழு நோய் பணியை மேற்கொள்ள தயங்குகிறார்கள்.

(இ) மருத்துவ அதிகாரிகளை தொழுநோய் பணியை மேற்கொள்ளுமாறு ஊக்குவிக்க தொழுநோய் படியை மாதத்திற்கு ரூ. 100-ல் இருந்து ரூ. 125-க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

**திரு. என். டென்னிஸ் :** 100 ரூபாய் போக வேறு ஏதாவது விசேஷ சலுகைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்போது இந்த படி ஒன்றுதான் அதிகமாக அவர்களுக்குத் தரப்படுகிறது. வேறு சலுகைகள் என்ன அவர்கள் பெற விரும்புகிறார்கள் என்பதை நான் அறியவில்லை.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** இந்தத் தொழுநோய் சிறப்பு மருந்தகங்களில் உள்ள மருத்துவர்கள் தங்குகிற க்வார்ட்டர்ஸ்களில் வதிகள் மிகவும் குறைவாக இருப்பதால். உதாரணமாக ஈரோடு பக்கத்திலுள்ள தாமரைப் பாளயத்தில் உள்ள அந்த மருத்துவமனை மருத்துவர் க்வார்ட்டர்ஸ்களில் எலெக்ட்ரிக் விளக்குகள் கூட இல்லை, கிரஸின் விளக்குகளை வைத்துத்தான் பதினெட்டாம் நூற்றாண்டில் உள்ளதைப் போன்று கிரஸின் விளக்குகளைத் தான் வைத்துக்கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. எனவே இதுபோன்ற குறைகளைக் களைவதற்கு இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இதுபோன்ற குறைகளைக் களைய இந்தக் கேள்வி கேட்டதைப் போல் உறுப்பினர் அவர்கள் முன்னாலே கடிதம் எழுதுவார்களேயானால் இப்படிப்பட்ட சிறிய சிறிய குறைகளை நீக்க முடியும். எனவே உறுப்பினர்களைப் போன்றவர்கள் சிறிது அக்கறை எடுத்து இவை பற்றி கடிதம் எழுதுவார்களேயானால் அதைப் பற்றிக் கவனிக்க அரசு தயாராக யிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Public Health in which parts of our State leprosy is prevalent and the reasons for the same?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the reasons are not yet known. Any how, leprosy is more prevalent in parts of Chingleput, South Arcot, North Arcot and Dharmapuri districts and in certain parts of Coimbatore and other districts also.



1973 மார்ச் 19]

**திரு. கா. வேழவேந்தன் :** அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு போன்ற மாவட்டங்களில் தொழுநோய் அறிகுறிகள் அதிகம் தென்படுவதாகக் கூறினார்கள். வெளி நாட்டு உதவி பெற்று மாதர்பாக்கத்தில் ஒரு தொழுநோய் மருத்துவமனை தொடங்குவதற்காக, அதற்கு அடிக்கல் நாட்டப்பட்டும் கூட அந்த மருத்துவ மனையைத் தொடங்குவதற்கு மத்திய அரசு உரிய துணை புரியவில்லை என்ற குறைபாடு கூறப்படுகிறது. எனவே இதுகுறித்து மாநில அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** வெளிநாட்டிலிருந்து நம் நாட்டிற்கு வந்து இத்தகைய பொது மக்களுக்குப் பணி செய்யக் கூடியவர்களுக்கு அனுமதி வழங்கும் உரிமையை மத்திய அரசு வைத்திருக்கிறது. மாநில அரசு மத்திய அரசின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்கு ஆலோசனைத்தான் வழங்க முடிகிறது. மாதர்பாக்கத்தில் மருத்துவ மனை கட்டும் முயற்சி மட்டு மல்ல, அதேபோல் உசிலம்பட்டி வட்டாரத்திலும், சீர்காழி வட்டாரத்திலும் வெளிநாட்டில் உள்ளவர்கள் ஏழெட்டு லட்சம் ரூபாய் செலவு செய்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன்வந்தார்கள். ஆனால் மத்திய அரசு அவர்களுக்கு இன்னும் அனுமதி வழங்கவில்லை. மத்திய அரசினுடைய மனப் போக்கு மாறுமானால் அல்லது உலக அரங்கிலுள்ள அரசியல் அடிப்படையில் வெளிநாட்டாரை அனுமதிக்கக் கூடாது என்ற எண்ணம் மாறுமானால் நமக்கு அனுமதி கிடைக்கும் என்று நம்புகிறேன்.

**திரு. மே. சி. தூயமணி :** மருத்துவப் படிப்பிற்கு விண்ணப்பிக்கும்போது தொழுநோய் பிரிவில் கண்டிப்பாகப் பணியாற்றவேண்டும் என்ற விதி முறையை அரசாங்கம் ஏற்படுத்த முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கண்டிப்பினால் கட்டாயப்படுத்தப்பட்டு ஒருவர் அந்த இடத்தில் பணியாற்றினால் அடியோடு ஆர்வம் இல்லாது அந்தப் பணி சிறப்பாக நடைபெறாது. ஆர்வத்தை உண்டாக்குவதன் மூலம்தான் செய்ய வேண்டுமே தவிர கட்டாயத்தால் மட்டும் காரியங்கள் மருத்துவத் துறையில் நடக்காது.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** வட ஆர்க்காடு மாவட்டத்தில் தொழு நோய் அறிகுறிகள் அதிகமாக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். எலத்தூர் என்ற இடத்தில் இதற்கான சிகிச்சை நடைபெற்றுக் கொண்டுவருகிறது. அந்த மருத்துவ மனை சீர்கெட்டிருப்பதால் வாகனங்கள் மூலம் டாக்டர்கள் கிராமங்களுக்கு வந்து சிகிச்சை அளித்துவருகிறார்கள். கிராமங்களுக்கு வந்து

அங்குள்ள மக்களுக்கு மருந்துகள்தான் கொடுக்கிறார்களே தவிர புண் உள்ள நோயாளிகளுக்கு கை கால்களில் புண்ணுக்கு கட்டுகள் கட்ட, கட்டுகள்போட முடியாது என்று சொல்கிறார்கள் வசதியில்லாத காரணத்தினால். எனவே புண் உள்ள நோயாளிகளுக்கு கை கால்களில் கட்டுகள் போடுவதற்கு தகுந்த சிப்பந்திகளை நியமித்து அதற்கு ஆவன செய்யப்படுமா?

***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :*** இது கேள்விக்குரியதல்ல. ஏனெனில் ஒரு இடத்தில் புண்களுக்கு கட்டு கட்டத் துணி இல்லை, ஆள் இல்லை என்று சொன்னால் அப்படி அவற்றைக் கேள்வி நேரத்தில் சொல்வது பொருத்தமுடையதல்ல. உறுப்பினர் அவர்கள் அதுபற்றி கடிதம் எழுதி அனுப்புவார்களேயானால் அதை அந்த இலாகாவிற்கு அனுப்பி என்ன செய்யமுடியும் என்று பரிசீலிக்கலாம்.

***திரு. எம். சுரேந்திரன் :*** இந்தத் தொழுநோய் சம்பந்தமான அறிகுறிகள் பெருவாரியான மக்களிடம் இருப்பதாக ஆராய்ச்சி செய்த சிலர் சொல்கிறார்கள். தொழுநோய் சம்பந்தமான அடையாளங்கள் அல்லது அறிகுறிகள் பல பேர்களுக்கு இருப்பதாக ஆராய்ச்சி செய்த சிலர் கூறுகிறார்கள். அதனால் எல்லா மருத்துவ மனைகளிலும் தொழுநோய் சிகிச்சை செய்வதற்கான விசேஷ ஏற்பாடுகள் செய்யப்படுமா? அதோடு இந்த மாநிலத்தில் தனியார் துறையிலும் தொழுநோய் சிகிச்சை செய்யும் பல மருத்துவமனைகள் இருப்பதினால் அவைகளுக்கு எல்லாம் சரியான உதவி செய்து அவர்களை உற்சாகப்படுத்தி எல்லாப் பகுதிகளிலும் அவர்களது சேவை பயன்படும் முறையில் ஏதாவது வழிவகை செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள முன்வருமா?

***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :*** தொழுநோய் பெரும்பாலோருக்கு இருக்கிறது என்று சொல்கிற கருத்து தவறானதாகும். ஆனால் விகிதாச்சார அளவைப் பார்க்கிறபோது சில மாவட்டங்களில் அந்த விகிதாச்சார எண்ணிக்கை நூற்றுக்கு 2, 2½ 3 என்ற அளவுக்கு சில வட்டாரங்களில் இருக்கிறது. குறிப்பிட்ட சில கிராமங்களில் 10 சதவிகிதம், 15 சதவிகிதம் என்ற அளவில் இருக்கிறது. மாவட்ட அளவில் பார்க்கிறபோது 2 சதவிகிதம் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்றால் அது சற்று அதிகம்தான். தமிழ்நாட்டில் ஏறக்குறைய ஏழு லட்சத்திலிருந்து எட்டு லட்சம் வரையில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. இதற்கு அடிப்படையாகச் செய்ய வேண்டிய காரியம், தொழுநோய் அடையாளம் வருகிற கால கட்டத்தில், தொடக்கக்காலத்தில் அதற்கான சிகிச்சை செய்தால் பரிபூரண குணம் ஏற்படுகிறது. ஆகவே





பள்ளி மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோருக்கு எந்த வட்டாரத்தில் தொழுநோய் 2 அல்லது 3 சதவிகிதம் அளவில் இருக்கிறதோ அந்த வட்டாரத்திலுள்ள சிறு பிள்ளைகளுக்கு பரிசோதனை செய்யப்படுகிறது. தொடக்க கால கட்டத்தில் இந்தப் பரிசோதனையை பொதுமக்கள் அறிந்து கொள்வார்களேயானால் இந்த நோயினின்றும் காத்துக் கொள்ளலாம். நோயையும் விரட்டிவிடலாம்.

## *Low level areas in Nungambakkam*

* 418 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the dumping of garbage in low level areas in Nungambakkam at Madras is done without being covered by a layer of sand or mud thus allowing it to emanate bad smell; and

(b) if so, the details thereof and steps taken to prevent the same?

***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :*** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

***திரு. கே. டி. கே. தங்கமணி :*** இந்த நுங்கம்பாக்கத்தில் மட்டுமல்ல, ராஜா அண்ணாமலைபுரத்திலும் இம்மாதிரியாக குப்பைகளை எல்லாம் போட்டு குறிப்பாக பஸ் வழி அந்த இடத்தின்வழி பிரயாணம் செய்யும்போது, 4-இ, 21-எ பஸ்களில் போகும்போது பிரயாணிகள் ஒரு ஐந்து நிமிட நேரத்திற்காவது மூக்கைப் பிடித்துக்கொண்டு போக வேண்டிய நிலை இருக்கிறது. இம்மாதிரி லோ லெயிங் எரியாக்களில் டம்ப் செய்யும் நேரங்களில், அல்லது டம்ப் செய்தால் அந்த வாசனை வராத அளவிற்கு ஏற்பாடுகளை செய்ய அரசாங்கம் முன்வருமா?

***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :*** சமுதாயத்தில் எந்த ஒரு மாற்றத்தைச் செய்வதாக இருந்தாலும் அதற்கு ஒரு எதிர்ப்பு வரும். அதேபோல் பள்ளத்தை நிரப்பும் காரணத்தினால் முதலில் நாற்றம் வரத்தான் செய்யும். அதை அடியோடு தடுக்கமுடியாது. பள்ளத்தை நிரப்புவதற்கு பெரும்பாலும் நகரத்திலுள்ள குப்பைகளைக் கொண்டு வந்து கொட்டி, அதன் மீது மணலைக் கொட்டுவது என்ற முறையில்தான் மணல் நிரப்பப்படுகிறது. முதலில் குப்பையைக் கொட்டி அதை சமன்செய்து அதன் மேல் மணலைக் கொட்ட வேண்டியிருக்கிறது. ஐம்பது-நூறு வண்டி குப்பை கொட்ட வேண்டியிருக்

கிறது. சமன் செய்து மணலைக்கொண்டு வந்துகொட்டும்போது இடையில் மழை பெய்தோ அல்லது சாக்கடைத் தண்ணீர் அதில் கலந்துவிட்டாலோ நாற்றம் அதிகமாகிறது.

ஆகவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அந்தக் கஷ்டத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இலாகாவைக் கேட்டால் முறைப்படி செய்வதாகத்தான் அவர்கள் சொல்வார்கள். முறைப்படி செய்கிற காரியத்தில் இவ்வளவு லாரி குப்பை என்று குப்பையைக் கொட்டிவிட்டு, அதன் மீது மணலைப் போடுகிறார்கள் என்று தான் அவர்களைக் கேட்டால் சொல்வார்கள். இடைக்காலத்தில் ஓரளவிற்கு நாற்றம் இருக்கத்தான் செய்யும். முழுவதையும் மூடிவிட்ட பிறகு அது நமக்குப் பயன்படுகிற பூங்காவாக மாறும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, though Madras has been a City since one or two centuries, certain areas within Madras have the appearance of backward villages. The health conditions and other conditions have not been improved after so many years. May I know the reasons for such things and will the Government take steps to see that every part becomes City?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the question is not clear. I am not able to follow the question.

MR. DEPUTY SPEAKER : I am also not able to follow it.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இப்படி குப்பைக் கூளங்களைக் கொட்டி அதன் மேல் மணல் போட்டு, அதன் மேல் வீடுகள் கட்டப்படுகின்றன. அப்படிக் கட்டப்படுகிற வீடுகள் காலக்கிரமத்தில் உள்ளே இறங்கி விடுகின்றன. அதைத் தடுக்கும் முறையில், அங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் பூங்கா வைத்துக்கொள்ளலாம், வீடுகள் கட்டக்கூடாது என்று அரசு அறிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, குப்பை மேலே வீடு கட்டுகிற அளவுக்கு கட்டடக்கலை வளர்ந்து இருக்கிறது. கட்டுகிறவர்கள் என்ன முறைகளைக் கையாளுகிறார்கள் என்பதைப் பொறுத்தது தான் அது. குட்டை உள்ள இடத்தில், களி மண் உள்ள இடத்தில் வீடுகள் கட்டத் தடை இருக்கிறது. அந்தத் தடையை மீறிக் கட்டுவதற்கும் சில முறைகள் இருக்கின்றன. டவுன் பிளானிங் சட்டப்படி இந்த இடத்தில் கட்டலாம், கட்டக்கூடாது என்று இருக்கிறது. நகரமைப்புத் திட்டத்தின் கீழும் சில முறைகள் இருக்கின்றன. அதன் படிதான் கட்டப்படுகிறது.



**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட குப்பைக்கூளங்கள் போடப்படுகின்ற இடங்களில் ஏதாவது ஆசிட்டுகள் தெளிக்கப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே அதிலிருந்து வருகின்ற நாற்றத்தைப் போக்குவதற்கும், நோய்க்கிருமிகள் பரவாமல் இருப்பதற்கும் ஒரு விதமான மருந்து தெளிக்கப்படுகிறது.

Swing fog also is regularly used and fog malathion as well as pyrethrum solution is used. என்று கூறப்பட்டுள்ளது.

இதற்குத் தமிழிலே சொல்லப்படுகிற சொற்களை நான் தெரிந்து கொள்ளவில்லை.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** தலைவரவர்களே, பள்ளத்தை அடைக்க இந்த குப்பைக்கூளங்களைப் போடுகிறார்கள். இதை அதற்காகப் பயன்படுத்தாமல், அதை கம்போஸ்ட் உரமாக, நல்ல உரமாக்கி செய்தால் அது நல்ல பலனைத் தரும் அல்லவா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்த இடத்தில் வரப்போகிற பூங்காவிற்கு அது நல்ல கம்போஸ்ட் உரமாக இருக்கும்.

### *Water Pollution of Adyar River*

*419 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that a Four-member Committee went into the Water Pollution of the Adyar River; and

(b) if so, the details of the composition of the Committee and the terms of reference?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, இந்த நீரைக் கடலில் நேரடியாகக் கலக்கச் செய்வதன் மூலம் அதன் நிலைமை மாறும், அதைச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, கடல் நீரைக் கலக்கச் செய்வதன் மூலம் அந்த நீர் நிலையில் இருக்கும் அழுக்குத் தன்மையைத்

தானாகவே குறைக்க முடியும். அது வேறு. ஆனால் இங்கே கேட்கப்பட்ட கேள்வி

whether it is a fact that a four member Committee went into the water pollution of the Adayar river? There was no Committee.

நான் அதற்கு பதிலாகத்தான் அந்தக் குழு நியமிக்கப்படவில்லை என்று சொன்னேன். ஆனால் சென்னையிலே பொறியியற் கல்லூரியைச் சேர்ந்த பப்ளிக் ஹெல்த் இன்ஜினீரிங் மாணவர் ஒருவர். அவருடைய ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்காக அந்த நீர் நிலையில் தன்மைகள், ஆகியவற்றைச் சேகரித்து இருக்கிறார் என்று கருதுகிறேன். அதிலிருந்து சில புள்ளிவிவரங்களைத் தேடி எடுத்து அதன் அடிப்படையில் சில கருத்துக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, அண்மையில் கூவத்தின் நீர்த் தன்மைக் கெட்டு விட்டதால், மீன்கள் உயிரிழந்து கரைக்கு வந்து விட்டன என்பது அரசுக்குத் தெரியுமா? அந்தமாதிரி மீன்களைப் பிடிப்பதற்காக நூற்றுக்கணக்கானவர்கள் தூண்டிலோடு அங்கே வந்தார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கூவம் ஒரு சிறு ஆறு. கடலிலேயே இந்தமாதிரி நிலைமைகள் தற்காலத்தில் ஏற்படுகின்றன. சமீபத்தில் இராமேஸ்வரம் பகுதியில் இரண்டு மாதங்களுக்கு முன்பு மீன்கள் இறந்து கரையில் ஒதுங்கியதாகச் சொல்லப்படுகிறது. சமுதாயத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் போல், விஞ்ஞான வளர்ச்சியால் சில சமயங்களில் கடல் நீரில் கூட அத்தகைய மாற்றம் ஏற்படுகிறது.

**திரு. மே. சி. தூயமணி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, கூவம் ஆற்றைச் சீர்படுத்தி படகு விடுவது போல், இந்த அடையாறு ஆற்றையும் சீர்படுத்தி ஆழ்கடல் வரை அதை ஒழுங்குபடுத்தி, படகு விடும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அப்படி ஒரு உத்தேசம் இருந்தாலும் அதை அறிவிக்கிற இடத்தில் நான் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், ஒரு பப்ளிக் ஹெல்த் இன்ஜினீரிங் ஸ்டூடென்ட் ஒரு ஆராய்ச்சி செய்து தீசி எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். அவருக்கு டாக்டரேட் பட்டம் கிடைத்து இருக்கிறதா? அவர் தானாகவே



எழுதியிருப்பாரானால் அந்த முடிவுகள் இந்தச் சபை முன் சமர்ப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அதை அவர் பல்கலைக்கழகத்திடமிருந்து பெற வேண்டும். அதிலே இருக்கும் உண்மைகள் எந்த அளவுக்கு டாக்டரேட் பட்டம் கொடுப்பதற்குத் தகுதியானது என்பதை ஆராய்ந்து அந்த குழுவிலே உள்ள மேதைகள் முடிவு செய்ய வேண்டிய தொன்றாகும். அந்த இரண்டின் மீதும் கருத்துச் சொல்ல அரசுக்கு இயலாது.

## *Village Courts*

* 420 *Q.*—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to revive the village courts in villages; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) இல்லை. ஆனால் நீதி மன்றங்களை ஏற்படுத்துவதற்கான சட்டத்தின் செயற்குறிப்பை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, இப்போது சாதாரணமாக உள்ள சிறுசிறு கேஸ்கள் பொதுஜன கோர்ட்டில் இருப்பதால் காலதாமதமும், பணச்செலவும் ஏற்படுவதன் காரணத்தால் சர்க்காரே ஒவ்வொரு கிராமங்களுக்கும் நீதி மன்றங்களை அனுப்பி, சிறு சிறு கிரிமினல் கேஸ்கள், மற்ற கேஸ்களுக்கு முடிவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நீதிமன்றங்களை நாம் விரும்புகிறபடி அனுப்புவதற்கு முடியாது. உயர் நீதி மன்றம் எந்த இடங்களில் நீதிமன்றம் தேவை என்று கருதுகிறதோ அங்கே தான் போட முடியும். இப்போதுள்ள கேள்வி, கிராமப்புறங்களில் கிராம நீதி மன்றங்களை ஏற்படுத்தலாமா என்பது பற்றியதாகும். அதற்கான சட்டத்தை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், ஏற்கெனவே கிராம நீதி மன்றங்கள் செயல்பட்டுக்கொண்டிருந்தன, மதுரை போன்ற இடங்களில் கூட இருந்தன. அதைத் தொடர்ந்து செயல்படுத்தும் முறையில் சட்டம் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** முதலில் வில்லேஜ் கோர்ட் சட்டம் என்று இருந்தது. அதன்படி வில்லேஜ் கோர்ட் உருவாக்கப்பட்டது. அதற்குப்

பின்னாலே 1950-ல் அந்த வில்லேஜ் கோர்ட்டுகளை பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் கொண்டுவந்தார்கள். அதற்குப் பின்னால் 1958-ல் அந்தச் சட்டம் ரத்து செய்யப்பட்ட காரணத்தால், அந்த நீதி மன்றங்கள் முழுமையாகச் செயல் படாமல் இருக்கின்றன. 1888 வில்லேஜ் கோர்ட்ஸ் சட்டத்தின் கீழ் சில இடங் களில் அவை இருக்கின்றன. ஆகவே தான் முழுமையாக அதைப் பரிசீலித்து பெரிய நகரங்களில் இருக்கின்ற நீதி மன்றங்கள் போல், கிராமங்களில் நீதி மன்றங்கள் உருவாக்கும் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, இம்மாதிரியான வில்லேஜ் கோர்ட்ஸ் ஏற்படுவதை வழக்கறிஞர்கள், எதிர்க்கிறார்களா, ஆதரிக்கி றார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாம் கொண்டுவர இருக்கின்ற சட்டம் என்ன என்று படித்துப் பார்க்காமலேயே—நான் விசாரித்துப் பார்த்தேன்— அந்த நீதி மன்றம் தேவையில்லை என்று அறிக்கை வந்திருக்கிறது. அந்த நீதி மன்றம் எப்படி ஏற்படுத்தப்படுகிற தென்று சொன்னால் எப்படி நம்முடைய சென்னை போன்ற நகரங்களில் கிரிமினல் வழக்குகளை விசாரிக்க அரசாங்கம் தனிப்பட்ட நபர்களைப் போட்டு நீதி மன்றம் வைத்திருப்பது போல், இதற்கும் ஹானரரி மேஜிஸ்டிரேட்டுகளை நியமித்து, அதை உருவாக்கலாமா என்பதைப் பரிசீலித்து வருகிறோம். வழக்கறிஞர்கள் வேறு எண்ணத்தில் அதை ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்,

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே,, அமைக்கப்படவிருக்கின்ற ஊர் நீதி மன்றங்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்படவிருக்கின்றன ? வக்கீல் கள் சொல்கிறார்கள் என்பதற்காக அதைக் கைவிடாமல் அமல் நடத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தப் பஞ்சாயத்துப் பொறுப்புகளில் இருந்த நீதிமன்றங்கள் 1958-ம் ஆண்டில் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது சென்னையில் இருப்பதைப் போன்று ஹானரரி மேஜிஸ் டிரேட்களை நியமிப்பதற்கு இந்தச் சட்டத்திலே இடம் தரப்பட்டிருக்கிறது. அவர்கள் குற்றச் சட்டங்களையும், சிவில் சட்டங்களையும் பரிசீலிக்கக்கூடிய நீதி வழங்கக்கூடிய உரிமை கொடுக்கலாமா என்பதையும் பரிசீலித்து அந்தச் சட்டத்தில் இடம் தர ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது, அப்படியே அந்தச் சட்டம் வந்தாலும் சில பேர் அந்த ஊர் நீதி மன்றம் வேண்டாம்; நாங்கள் ரெகுலர் கோர்ட்டுகளுக்குத்தான் போகவேண்டுமென்று சொன்னால், அதற்கும் வாய்ப்புக் கொடுக்கலாமா என்றும் பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது. வழக்கறிஞர்கள் அநேகமாக எதிர்க்கமாட்டார்கள் என்று கருது கிறேன்.



**திரு. மா. வே. நாராயணசாமி :** துணைத் தலைவரவர்களே, கிராமங்களில் அடிக்கடி சிறு சிறு தகராறுகள் இருந்து கொண்டே இருக்கின்றன. அந்தத் தகராறுகள் உடனடியாக தீர்க்கப்படாத காரணத்தால் பெரிய அளவில் கூட சண்டை வளர்ந்து கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. ஆகவே, கிராம நீதி மன்றங்கள் ஏற்படுத்துவதன் விளைவாக இதுபோன்ற தகராறுகள் தீர்ப்பதற்கு அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நீதிமன்றங்கள் வழக்குகளை விசாரித்துத் தான் முடிவு சொல்லும். தகராறுகளைத் தீர்ப்பதற்கு நீதி மன்றங்களாலே முடியாது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்னாலே மு. ட
இருந்து கிராம நீதிமன்றங்களில் வழக்குரைஞர்கள் இல்லாமல் நல்லமுறையில் ப-30
வழக்காடிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அதைப் போல சில நீதி மன்றங்களை கிராமப்புறங்களில் நியமிக்க உத்தேசித்திருப்பதாக அமைச்ச ரவர்கள் சொன்னார்கள். அந்த நீதிமன்றங்களில் சிறப்பாக வழக்காடுவதற் காக வழக்குரைஞர்களை நியமிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நீதிபதிகளைத்தான் நியமிக்கிறோம். வழக்குரைஞர்களை நியமிக்கவில்லை. மேலும் வழக்குரைஞர்கள் வழக்காடுவ தாக இருந்தால் வழக்குகள் வளர்ந்து கொண்டேதான் இருக்கும் என்று கருதப்படுகிறது. ஆகவேதான் கிராமப்புறங்களிலே இருக்கிற அனுபவம் வாய்ந்த பெரியவர்களை அந்த நீதிமன்றங்களில் நியமித்தால் அவர்கள் அனுபவ ரீதியில் உடனடியாகத் தீர்ப்பு வழங்கிவிட முடியும் என்று அந்த வகையில் சட்டம் வர இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, வில்லேஜ் கோர்ட்டுகளில் நியமிக்கப் படும் நீதிபதிகளுக்கு குறைந்த பட்ச தகுதிகள் ஏதாவது நிர்ணயிக்கப்படுமா ? அப்படி நியமிக்கப்படுகிறவர்களுக்கு ' பேசிக் லா ' பயிற்றுவிக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ? மேலும் அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அவர்கள் 'ஆனரரி மாஜிஸ்டிரேட்டு' களாக இருப்பதால் சம்பளம் கிடையாது. சென்னையில் நியமிக்கப்பட்டிருப்ப வர்களைப் போன்று அவர்களுக்கும் குறைந்தபட்ச வயது வரம்பு இருக்கிறது. இந்த வேலைகளுக்காக யார் யார் மனுப் போடுகிறார்களோ, அவர்களின்

மனுக்களைப் பரிசீலித்து, வழக்குரைஞர்கள், நீதிபதிகள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் இருந்தால் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, இந்த நீதிமன்றங்களில் தீர்ப் பளித்துவிட்டப் பிறகு அப்பீல் செய்ய முடியாது என்று சட்டம் கொண்டு வரப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிச் செய்யக் கூடாது. அந்த மாதிரிச் சட்டம் கொண்டுவருவது நியாயம் அல்ல.

திரு. எம். சுரேந்திரன்: சார், கிராமப்புறங்களில் நீதிபதிகள் என்று இல்லாவிட்டாலும் கிராமப் பஞ்சாயத்தார்கள் என்று பரம்பரையாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கிராமப்புறங்களில் ஏற்படுகிற சிறு சிறு வழக்குகளைச் சரியாக ஆராய்ந்து பார்த்து தீர்ப்பு வழங்கி, மேற்கொண்டு அம்மாதிரியான வழக்குகள் ஏற்படாமல் இருக்க உதவி செய்துகொண்டிருக்கி றார்கள். அந்தமாதிரியாக இருப்பவர்கள் இரண்டு, மூன்று பேர்களை தேர்ந் தெடுத்து ஒரு அமைப்பாக வைத்தால் நலமாக இருக்கும். அதற்கு அரசாங்கம் ஆவனச் செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நீதித்துறையிலும் தேர்தல் முறை வந்துவிட்டால் ஆபத்து வந்துவிடும். ஆகையால்தான் கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட் முறை 1958-ம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. தேர்தல் இல்லாது, எந்தெந்த ஊர்களில் கிராம நீதிமன்றங்களை நியமிக்கிறோமோ அங்கெல்லாம் 'ஆனரி மாஜிஸ்டிரேட்டு' களைப் போடுவதாக உத்தேசிக்கப்பட் டிருக்கிறது. இப்போது சென்னை நகரில் அப்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த முறையை கிராமப்புறங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்பதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம்.

திரு. மே. சி. தூயமணி: கிராமப்புற மக்கள் வழக்குரைஞர்களை நாடி வழக்காடுவதற்கு நகரங்களுக்கு வருவதில் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகவே, கிராமப்புறக் கோர்ட்டுகளில் அந்த மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் தமிழிலேயே தீர்ப்புகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தமாதிரி தொல்லைகள் கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் வரப் போகிறது.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, ஏற்கெனவே கிராம நீதிமன்றங் கள் இருந்து, அங்கே சரியாக வழக்குகள் நடைபெறவில்லை என்று சொல்லி அவைகளை எடுத்துவிட்டார்கள். மறுபடியும் இந்தக் கோர்ட்டுகளை ஏற்படுத்து



வதினால் சச்சரவுகள் ஏற்படாதா? அப்படி ஏற்படுவதாக இருந்தால் அவை களைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பஞ்சாயத்து நீதிமன்றங்களில் முன்பு சச்சரவுகள் வந்தன. 'இப்போது அப்படிச் சச்சரவுகள் வரக்கூடாது என்பதற் காகத்தான் 'ஆனரரி மாஜிஸ்ட்டிரேட்டு'களை நியமிக்கப் போகிறோம்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, தற்போது கிராம நீதிமன்றங்கள் ஒரு சில இடங்களில் இருப்பதாகச் சொன்னார்கள். அவைகள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன? இப்போது அந்த நீதிமன்றங்களில் பெண்மணி கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது பெரும்பாலும் நகரப் புறங் களில் இருக்கின்றன. அங்கே பெண்களும் இருக்கிறார்கள். அவர்கள் எத்தனை பேர்கள் என்ற விபரம் இப்போது இல்லை.

திரு. மு. வேதாசலம்: இப்போது நாட்டு வக்கீல் பலர் இருக்கிறார்கள். அவர்கள் சட்டம் படிக்கவில்லை. அவர்களுக்கு இந்தமாதிரி நியமனம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாட்டு வக்கீல்களாக இருப்பவர்கள் கிராமங்களைப் பொறுத்தவரையில் வழக்குரைஞர்களாக இருக்கிறார்கள். அவர்கள்தான் சிறு சிறு வழக்குகளைத் தீர்த்து வைக்கிறார்கள். கிராம நீதி மன்றங்களில் நியமனம் செய்வதற்கு அவர்களும் விண்ணப்பிப்பார்களானால் குறைந்தபட்சத் தகுதி அடிப்படையில் அவர்கள் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, கிராம நீதிமன்றங்களில் வழக் காடுவதற்கு வழக்குரைஞர்களைப் போட்டால் வழக்குகள் வளர்ந்து கொண்டே தான் போகும் என்று சொன்னார்கள். அதைக் கண்டு நான் வேதனைப்படு கிறேன். வழக்குரைஞர்கள் இருளுக்கு ஒளி கொடுப்பவர்கள் என்பது பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்து. ஆகவே வழக்குரைஞர்கள் நல்லவர் கள் அல்ல என்ற நிலை மாற்றப்பட அவர்கள் எல்லாம் சிறப்பாக பணியாற்றி. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் சொல்வதைப் பார்த் தால் வழக்குரைஞர்கள் எல்லாம் நல்லவர்களாக இல்லையா? வழக்குரைஞர்கள் நல்லவர்கள்தான். அதில் சந்தேகம் இல்லை.

திரு. கே. கந்தசாமி : நான் என்னுடைய கேள்விக்கு வந்துவிடுகிறேன். நாட்டு வக்கீல்கள் என்று சொன்னார்கள். நாட்டுப்புறத்திலே இருக்கின்ற என்னைப் போன்றவர்கள்தான் நாட்டு வக்கீல்கள். ஆகவே, இந்த நீதிமன்றங்களில் என்னைப் போன்றவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். நானும் ஒரு வழக்கறிஞர்—அதிலும் கிராமப்புறத்திலே இருந்து வந்த வழக்கறிஞர். இப்போது இருக்கின்ற சட்டத்தில் வழக்கறிஞர்கள் வாதாடக் கூடாது என்று வைத்திருக்கிறோம். ஆகவே, வழக்கறிஞர்கள் சிறு சிறு வழக்குகளில் தலையிட வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, rivalries between political parties have gone into a large number of villages. Therefore, good persons there are not bold enough to take up the post of Honorary Magistrate. So, may I know whether the Hon. Minister will make some other arrangements to find out good persons for these posts?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது கொண்டுவரப்போகின்ற சட்டத்தில் யார் நல்லவராக இருக்கிறாரோ அவரை நியமிக்க வாய்ப்பு இருக்கிறது. ஏற்கெனவே இருந்த தேர்தல் முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய தொல்லைகள் இருந்திருக்கலாம். இப்போது அப்படி இருக்காது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): தலைவரவர்களே, உரிய நீதி கிடைக்க வேண்டுமென்றால் வழக்குத் தொடுத்தவர்களுக்கும், தீர்ப்பு வழங்குபவர்களுக்கும் சம்பந்தம் இருக்கக் கூடாது. ஆனால் கிராமங்களிலே அப்படி இருப்பதற்கு வாய்ப்பில்லை. எனவே இந்த முறையினால் பல சச்சரவுகள் வரும் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா இல்லையா என்பதை அறிந்து கொள்வதற்காக முதலில் ஏதாவது ஒரு மாவட்டத்தில் சில இடங்களில் பரீட்சார்த்தமாக இந்த முறையை செயல்படுத்தி பார்த்துவிட்டு, நல்ல முறையாக இருந்தால் மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கிராம நீதிமன்றம் வேண்டாமென்று வாதிடுகிறவர்கள் இப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்கிறார்கள்.





திரு. கு. காமாட்சி: அமைய இருக்கின்ற கிராம நீதிமன்றங்களில் வழக்காடுவதும், தீர்ப்பு வழங்குவதும் தமிழிலேதான் இருக்கவேண்டுமென்று அரசு சட்டம் கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெரும்பாலும் தமிழுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

*Honorary Presidency Magistrates*

* 421 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of posts of Honorary Presidency Magistrates which were vacant in Madras as on September 1972; and

(b) the reasons for keeping them vacant?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1972 செப்டம்பர் திங்கள் நிலவரப்படி, சென்னை மாநகரில் 45 ஊதியம் பெறா மாநகர மாஜிஸ்டிரேட் பதவிகளும், 3 ஊதியம்பெறா சிறப்பு மாநகர மாஜிஸ்டிரேட் பதவிகளும் இன்னும் நிரப்பப் படாமல் உள்ளன.

(இ) விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசி நாள் 31—10—1972 என்று குறிப்பிட்டு, அதற்குள் விண்ணப்பங்கள் அனுப்புமாறு அரசு அறிவிப்பு வெளியிட்டது. இந்த நாளுக்குள் மாநகரத் தலைமை மாஜிஸ்டிரேட்டுக்கு விண்ணப்பித்துக் கொண்டுள்ளவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு பின்னர் தெரிந்தெடுக்கப்படும். மாநகரத் தலைமை மாஜிஸ்டிரேட்டிடமிருந்து செயற்குறிப்புகள் அனுப்பப்படுமென அரசு எதிர்பார்த்துள்ளது.

THIRU N. DENNIS : Sir, may I know whether any general qualification is prescribed for the appointment of a person as Honorary Magistrate and whether any allowance is given to him and if not, whether the Government will consider such proposals?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் முன்னாலே கூறியபடி ஆனரரி மாஜிஸ்டிரேட்டுகளாக நியமிக்கப்படுபவர்கள் 35 வயதிலிருந்து 65 வயதிற்குட்பட்டு இருக்க வேண்டும். மாநில மொழில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். நல்ல பண்பாடு உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றுதான் வைத்திருக்கிறோம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளுக்குச் சட்டம் தெரிந்திருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அநேகமாகச் சட்டம் படிக்காதவர்கள் கௌரவ

[1973 மார்ச் 19

மாஜிஸ்டிரேட்டுகளாக இருப்பதால் வழக்குரைஞர்கள் அவர்களிடம் வழக்கு களைப்பற்றி எடுத்துரைப்பதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, சட்டம் படித்தவர்களையும், பதவிகளிலிருந்து ஓய்வு பெற்ற வழக்குரைஞர்களை யும் நீதிபதிகளையும் கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளாக நியமிக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சட்டம் படிக்காதவர்கள் ஆனரரி மாஜிஸ்டிரேட்டுகளாக இருப்பதில் சங்கடங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. சட்டம் படிக்காதவர்களாக இருந்தாலும் அனுபவம் பெற்றவர்கள் இந்த பதவிக்குத் தகுதிபெற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆனால் சட்டம் படித்தவர்களும், வழக்குரைஞர்கள், நீதிபதிகள் பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் இருந்தால் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். உதாரணமாக திருச்சி மாவட்டத்தில் பல ஆண்டுகளாக ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் ஆனரரி மாஜிஸ்டிரேட்டாகப் பணியாற்றியிருக்கிறார். அப்படிப்பட்ட வர்கள் இல்லாத இடங்களில் மற்றவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

## *Magistrates under suspension*

*422 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of (i) Sub-Judges (ii) District and Sessions Judges and (iii) Sub-Magistrates, who are now under suspension;

(b) the period for which they are under suspension; and

(c) the steps taken to clear their cases soon?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) துணை நீதிபதி அல்லது மாவட்ட நீதிபதி எவரும் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட வில்லை. சப்-மாஜிஸ்டிரேட் ஒருவர் 26—10—1970-லிருந்தும் கூட்டு முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் ஒருவர் 30—1—1971-லிருந்தும் பதவியிலிருந்து தற் காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

(உ) சப்-மாஜிஸ்டிரேட்டைப் பொறுத்தவரை விசாரணை அதிகாரியின் (மாவட்ட நீதிபதி, மதுரை) அறிக்கை, உயர்நீதி மன்றத்திற்கு இன்னும் கிடைக்கவில்லை. கூட்டு முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டை பொறுத்தமட்டில், சேலம் கூட்டு மாவட்ட நீதிபதி விசாரணை நடத்தியதன் பேரில் அவர் தெரிவித்த முடிவுகள் உயர்நீதி மன்றத்தின் ஆய்வில் உள்ளன.



1973 மார்ச் 19]

திரு. என். டென்னிஸ்: குறுகிய காலத்திற்குள் இதுபோன்ற வழக்குகளில் ஒரு முடிவினை எடுக்க வேண்டும் என்பதனை அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த முயற்சிகளை உயர்நீதிமன்றம் எடுத்துள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஒரு ஜில்லா மாஜிஸ்டிரேட் சஸ்பெண்டு செய்யப்பட்டு 3 வருடமாகிறது. இன்னமும் அந்த வழக்கில் ஒரு முடிவு தெரிவிக்கப்படாது காலதாமதம் ஆகிறதே, இதுபோன்ற வழக்குகளில் ஒரு வருடத்திற்குள் முடிவினைத் தெரிவிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்வார் களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நீண்டகாலம் சஸ்பென்ஷனில் வைக்கக் கூடாது என்பதுதான் அரசின் உத்தேசம். அந்த அடிப்படையில் இதுபோன்ற வழக்குகளில் விரைவாகத் தீர்ப்பினைக் கூற நடவடிக்கைகள் உருவாகும்.

## ராமநதி அணைக்கட்டுத் தொழிலாளர்களுக்கு 'திட்டப்படி'

*423 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடனா நதி, ராமநதி அணைக்கட்டுத் தொழிலாளிகள் ப்ராஜக்ட் அலவன்ஸ் கோரி அம்பாசமுத்திரம் அலுவலகத்தின் முன்பு 1972 ஏப்ரல் மாதத்தில் உண்ணாவிரதம் இருந்தது அரசுக்குத் தெரி யுமா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) 15—4—1972 அன்று முதல் நான்கு தொழிலாளிகள் 'திட்டப்படி' (Project allowance) அரசு விரைவில் வழங்குமாறு கோரி உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தனர். பின்னர் 27—4—1972 அன்று போராட்டக்குழு அணைக்கட்டுத் தொழிலாளர் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின் பேரில் உண்ணாவிரதத்தை நிறுத்துவது என்று முடிவு செய்து 28—4—1972 அன்று காலை உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** இந்த அலவன்சு எல்லோருக்கும் வழங்கப் பட்டு விட்டதா ? இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தொழிலாளர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து ப்ராஜெக்ட் அலவன்சு தருவதற்கான உத்தரவுகளை அரசு பிறப்பித்திருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சென்ற ஆண்டு இந்த உண்ணாவிரதம் நடந்து மே மாதம் 15-ம் தேதிக்குள் ப்ராஜெக்ட் அலவன்சு கொடுக்கப்பட வேண்டும் என்பதாக உத்தரவிடப்பட்டது. என்றாலும் அது ஏன் இன்னமும் கொடுக் கப்பட வில்லை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தொழிலாளர்களின் வேண்டு கோள்களைக் கவனமுடன் பரிசீலனை செய்தபிறகு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடானா, இராமநதி திட்டங்களில் அரசுப் பணியிலும், அரசுப் பணி யில்லாத பணியிலும் வேலைக்கு அமர்ந்துள்ள வேலைநிதி ஊதியம் பெறுவோர் அந்தந்தப் பதவிகளில் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதற்கொண்டு அவர் களுக்கு ஈட்டுப்படி வழங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது.

## *Ryots of Chittar-Pattanamkal Channels*

* 424 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the Government to provide lift irrigation facilities to the ryots of the Chittar-Pattanamkal Channels in Kanyakumari district to raised portions?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. என். டென்னிஸ் :** சித்தாறு-பட்டணங்கால் செல்லும் வழி மேடுபள்ள மானது. மேட்டில் உள்ள பல நிலங்கள் இந்தக் கால்வாய் மூலமாகப் பயன் அடையாமல் இருக்கிறது. ஆகவே மேட்டு நிலங்களுக்குத் தண்ணீர் பாய லிப்ட் இர்ரிகேஷன் மூலம் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சித்தாறு-பட்டணங்கால் திட்டம் நீரோட்டப் பசானத்துக்கு மட்டுமே வகை செய்கிறது. இத் திட்டத் தின் கீழ் இறைவைப் பாசனத்துக்கு வகை செய்யப்படவில்லை. இந்த ஆயக் கட்டில் உயர்ந்த மேட்டுப் பகுதிகளுக்கு இறைவைப் பாசன வசதிகள் செய்து தர வேறெந்த செயற்குறிப்பும் பரிசீலனையில் இல்லை.



**திரு. ஜே. ஜேம்ஸ் :** சித்தாறு-பட்டணங்காலில் போதுமான அளவு தண்ணீர் இருந்தும் பரளியாறு விஸ்தரிக்கப்படாததால் டெய்லெண்டில் உள்ள நிலங்கள் பயன்படாமல் இருக்கிறது. ஆகவே அதை விஸ்தரிக்க, விரிவுபடுத் தும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

## ஊற்று நீர்க்கிணறு திட்டங்கள்.

* 425 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் "ஆர்டீஷியன்" கிணற்றுத் திட்டங்கள் தற் போது எங்கெங்கு நிறைவேற்றப்பட்டுள்ளன ?

(இ) அந்தத் திட்டத்தினை விரிவுபடுத்த அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) தென்னார்க்காடு திருச்சிராப் பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் நீர் பொங்கி வழியும் கிணறுத் திட்டங்கள் செயல்படுகின்றன. அவை வருமாறு :—

(1) தென்னார்க்காடு—140 கிணறுகள்.

(2) திருச்சிராப்பள்ளி—12 கிணறுகள்.

(3) தஞ்சாவூர்—4 கிணறுகள்.

இதைதவிர சோதனைக்காகத் தோண்டப்பட்ட கிணறுகள் பலவற்றில் நீர் தானே பொங்கி வருகிறது. அது இந்தக் கணக்கில் வரவில்லை.

(இ) நெய்வேலியில் சுரங்க வேலைகள் தொடங்கப்பட்ட பிறகு தானே பொங்கி வழியும் நீர்க் கிணறுகள் வரண்டு வருவதால் அதனை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு இல்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜாப்பார் :** நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் தோண்டு வதற்கு முன்னால் அந்தப் பகுதியில் நிறைய ஆர்ட்டீஷியன் வெல்ஸ் இருந்தன. நிலக்கரிச் சுரங்கம் தோண்ட ஆரம்பித்தவுடன் இதில் ஊறுகிற நீரை இறைக்க இறைக்க அவற்றில் தண்ணீர் வறண்டு அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக் கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு மாற்றுப் பாசனத் திட்டம் ஏதா வது ஏற்படுத்திக் கொடுப்பார்களா ? அல்லது நெய்வேலி நிலக்கரி கார்ப்ப ரேஷனிடம் இருந்து இந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு பெற்றுத் தருவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** வரண்டுவிட்ட கிணறுகளை ஆழப் படுத்தி அவைகளில் பம்புசெட்டு வைத்து தண்ணீர் இறைக்க ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு இருக்கிறது.

[1973 மார்ச் 19

திருமதி த. ந. அனந்தநாயகி: தஞ்சை மாவட்டத்தில் 6 ஆர்டீஷியன் வெல்ஸ்தான் இருக்கின்றன என்கிற குறிப்பு இங்கே இருக்கிறது. வருங்காலத்தில் காவேரி நதிப் பாசனம் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருப்பதனால் அங்கே இந்தக் கிணறுகளை அதிகப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கெனவே சொன்னேன். சோதனைக்காக அந்தப் பகுதியில் தோண்டப்பட்ட கிணறுகளில் இருந்தும் தண்ணீர் பொங்கி வந்துகொண்டிருக்கிறது. இன்னும் அந்தப் பகுதியில் சப் ஆர்டீஷியன் வெல்ஸ என்பதாகத் தானாகவே நீர் பொங்கி வழிகிற கிணறுகளில் பம்பு செட்டைப்போட்டு தண்ணீர் இறைப்பதன் மூலம் அதிக அளவு தண்ணீரை எடுத்துக்கொள்கிற வாய்ப்பும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. மே. சி. தாயமணி : 150 அடி, 200 அடிக்குக் கிணறு வெட்ட வேண்டியிருக்கிற கோவை மாவட்டத்தில் போர் வெல்ஸ் போட்டு குறைந்த கட்டணத்தில் தண்ணீர் வழங்குகிற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மூலக் கேள்வி தானாக நீர் பொங்கி வழியும் கிணறுகளைப் பற்றியது.

திரு. சோ. அழகர்சாமி : ஆர்டீஷியன் வெல்ஸ் மாத்திரம் போதுமான பலன் அளிக்காமல் இருப்பதால் கோவில்பட்டி போன்ற பகுதிகளில் சப் ஆர்டீஷியன் வெல்களை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சை, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் இந்த சப் ஆர்டீஷியன் வெல்ஸ் அதிகப்பயன் அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

திரு. எல். கணேசன் : ஒரத்தநாடு பகுதியில் ஆர்டீஷியன் வெல்களை முழுமையாக, விரிவாகத் தோண்ட அரசு தக்க ஏற்பாட்டினைச் செய்ய முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, ஒரத்தநாட்டில் தோண்டப்பட்ட கிணறுகளில் தானாகத் தண்ணீர் பொங்கி வழிகின்றது. அவைகளுக்குப் பம்ப் செட் தேவையா, இல்லையா என்பதைப்பற்றி அரசு இன்னும் முடிவு செய்யவில்லை. இப்பொழுது கேட்கப்பட்ட வினாவானது இந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஏற்கெனவே உள்ளதைப்பற்றி, அரசாங்க செலவில் நடைபெறுவதைப் பற்றி, ஒரத்தநாட்டில் நிலவள வங்கியின் மூலமாக நடைபெறுகிறது.



1973 மார்ச் 19]

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஸ்பெஷல் ஆர்டீஷியன் வெல்ஸ் இராமநாதபுரம் மாவட்டத்தில் நல்ல பலன் அளிப்பதாக அமைச்சர் அவர்கள் முன் கூறினார்கள். விவசாயம், தொழில் இவற்றில் பிற்பட்ட அந்தப் பகுதி முன்னேற்றம் அடைவதற்காக, இதைத் தீவிரத் திட்டமாக அந்தப் பகுதியில் மேற்கொள்ள ஏதாவது குறிப்பு அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஸ்பெஷல் ஆர்ட்டீஷியன், தானாக வடிகின்ற கிணறுகள் இருப்பது பழையவந்தான்—கிழக்கு இராமநாதபுரத்தில் இருப்பது—பகுதியில். அங்கு மணிக்கு 150 கேலன் தண்ணீர் கிடைக்கிறது. காரைக்குடியில் 1,500 காலன் வருகிறது. இன்னும் இரண்டு ஊர்கள் கிழக்கு இராமநாதபுரத்திலே இருக்கின்றன. அங்கே வெகு வேகமாக, கிணறுகளிலே, தானாகத் தண்ணீர் பொங்கி விளைகின்ற அளவுக்கு, பம்ப் செட் வைக்கப்பட்டு, தண்ணீர் இறைப்பதற்கான திட்டங்கள் வேகமாகச் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்வியைப் பற்றிக் கேளுங்கள். தனித்தனியாக அவரவர்களுடைய ஊர்களுக்கு அழைத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். திரு. வீராசாமி, பொதுவான கேள்வியாக இருக்க வேண்டும், ஆற்காட்டைப்பற்றி இருக்கக் கூடாது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இப்பொழுது நீர் பொங்கி வழியும் கிணறுகள் எங்கெங்கே எடுக்கப்பட்டிருக்கின்றன என்று பட்டியலை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாற்றின் கரை ஓரத்தில் இப்படிப்பட்ட கிணறுகள் வெட்ட, சிறிதளவு தோண்டினாலே நீர் பொங்கி வழியும் . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : I am not going to allow பொதுவான கேள்வியைக் கேளுங்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அங்கே அந்தப் பாலாற்றங்கரை ஓரத்தில், அப்படிப்பட்ட கிணறுகளை அமைப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வட ஆற்காடு மாவட்டத்திலே தானாக நீர்பொங்கி வழிகின்ற கிணறுகள் இல்லை. குறிப்பாக, இப்படி நீர் பொங்கி வழிகின்ற கிணறுகள் உள்ள மாவட்டங்கள் கடலோர மாவட்டங்கள்.

அப் பகுதிகளில்தான் சிறப்பாக இருக்கிறது என்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். வட ஆற்காட்டில் மற்ற கிணறுகளும் பம்ப் செட்டுகளும் வைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்பது உறுப்பினருக்குத் தெரியும்.

திரு. கே. எ. வகாப்: இப்பொழுது நீர் பொங்கி வழியும் கிணறுகள் தமிழ்நாடு முழுவதும் எவ்வளவு இருக்கின்றன என்ற சர்வே எடுக்கப்பட்டிருக்கிறதா? கிணற்றிலிருந்து வருகின்ற தண்ணீரை அந்தந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் மட்டும் பயன் படுத்த அனுமதித்திருக்கிறார்களா, அல்லது ஏரியிலேயுள்ள பொதுமக்களும் பயன்படுத்துகின்ற வகையில் செயலாக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, ஒரு கிணற்றிலிருந்து இறைக்கிற தண்ணீர் 50 ஏக்கர் நிலத்திற்குப் பாசனத்திற்கு ஏற்றதாக இருக்கிறது. இதுவரையிலே நிலச்சொந்தக்காரர்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 22½ என்று வசூல் செய்து வந்தோம். ஆனால், இப்பொழுது தானாக வழிகின்ற நீர்ப்பாசன முறை இல்லாத காரணத்தால், பம்ப் செட் வைக்க வேண்டிய காரணத்தால், அந்தத் திட்டத்தைச் சீரமைக்க வேண்டியிருக்கிறது.

டாக்டர் ச. அ. சின்னராசு: தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் வறண்ட பகுதியான தர்மபுரி பகுதியில் இந்தப் பொங்கி வழியக்கூடிய கிணறுகளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, நான் முன்பு சொன்ன விடையில், தானாகப் பொங்கி வழிகின்ற கிணறுகள், கடலோர மாவட்டங்களில்தான் இருக்கின்றன என்றேன். தர்மபுரி மாவட்டம் கடலோரமாக இல்லை. ஆகவே, பொங்கி வழியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள், எந்தக் கேள்வி கேட்டாலும் பதில் சொல்கிறீர்கள். ஆகவே, நான் இவ்வளவு கேள்விகள்.

திரு. சோ. அழகர்சாமி: நெல்லை மாவட்டத்தில், அந்தக் கடலோரப் பகுதியில் அந்தத் திட்டம் ஏதாவது பரிசீலனை செய்யப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: The artesian wells are found in a very large number in Southern Australia and large scale cultivation is going on there with the help of these artesian wells. May I know from the Hon. Minister for co-operation whether he will try to send a set of persons to that country and find out how



they are working, and whether they can make use of that system here?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: I am thankful for the information that in Southern Australia there are artesian wells. There is no proposal to send any delegation to southern Australia, because when the water comes out, it comes out of its own accord in the artesian wells.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், திருச்சி மாவட்டத்தில் ஆர்ட்டிசான் கிணறுகள் இருப்பதாகச் சொன்னார்கள். எந்த எந்த வட்டத்தில் இருக்கிறது? காவேரிப் பகுதியிலும் விரிவுபடுத்தப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: காவேரி பகுதி என்பது எனக்குத் தெரியும். எந்த எந்த வட்டத்தில் என்ற குறிப்பு இல்லை.

திரு. நா. வே. குருசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மதுரை மாவட்டத்திற்கு விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மதுரை மாவட்டத்தில், ஆர்ட்டிசயன் வெல்ஸ், தானாகப்பொங்கி வழிகின்ற கிணறுகள் கண்டு பிடிக்கப்படவில்லை.

## கோயம்புத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

* 426 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடச் செயலாளர் பொறுப்பில் உள்ளவர் பற்றிய தவறுகள் குறித்து திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து அண்மையில் புகார் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) வேளாண்மை இயக்குநருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டதில் புகார்கள் ஆதாரமற்றவை எனத் தெரியவந்ததால் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

[1973 மார்ச் 19

திருமதி க. ந. அனந்தநாயகி: இந்த ரெகுலேட்டட் மார்க்கெட்டை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க சட்டமே கொண்டு வந்திருக்கலாம். அதை விரைவில் அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, நேற்று முன் தினம்தான் சொன்னேன், எல்லா மாவட்டங்களிலேயும் அவை ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருக் கிறது. ஏறக்குறைய 150 திட்டம் தயாரிக்கப்பட்டு, 120 ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் சீசன் டிக்கட்டுகள்

* 427 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் சீசன் டிக்கட்டுகள் வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, இப்படி சீசன் டிக்கட் கொடுப் பதன் மூலம் போக்குவரத்துக் கழகத்திற்கு நட்டம் ஏற்படுமா? அப்படி நட்டம் ஏற்படுமானால் பொதுவாக, இந்தப் பெரு நகரங்களில் நடத்தப்படுகின்ற போக்குவரத்தினால் ஏற்படுகின்ற நட்டங்களைச் சீர்படுத்துவதற்கு மத்திய அரசு உதவி கொடுத்து வருகின்றது. டெல்லியிலே கடந்த இரண்டு ஆண்டுகளில், ரூ. 4 கோடி டெல்லி போக்குவரத்துக் கழகத்திற்கு மத்திய அரசு கொடுத்ததாகப் பத்திரிகைகளிலேயிருந்து அறிந்து கொண்டோம். அதைப் போல் தமிழ் நாட்டின் தலைநகரமாகிய சென்னைக்கு டெல்லிப் பேரரசு உதவி கொடுத்திருக்கிறதா? மாநில அரசு டெல்லி அரசைக் கேட்டிருக்கிறதா என்ற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, பயணிகளுக்கு நன்மை செய்யும் பொருட்டு இந்த சீசன் டிக்கட்டுகள் வழங்கப்படுகின்றன. இதை முதலிலே, 60 டிரிப்புக்கு 20 நாள் என்று கணக்கிட்டு, அவர்களுக்கு சீசன் டிக்கட்டுகள் வழங்கப்படு கின்றன. இதனால் ஓரளவு நஷ்டம் ஏற்படும் என்பது உண்மைதான். இருந்தாலும், பயணிகளின் நன்மையைக் கருதித்தான் மாநகரங்களில் போக்கு வரத்தை நாம் நடத்த வேண்டியிருக்கிறது. மெட்ரோப்பாலிட்டன் சிட்டிகள், மாநகரங்கள் என்ற வகையில், அவைகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று



1973 மார்ச் 19]

பிரதம அமைச்சர் அவர்கள் ஒரு குழுவை 1970-ம் ஆண்டு செப்டம்பரிலே நியமித்தார்கள், அந்தக் குழு சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. மெட்ரோப்பாலிட்டன் டிரான்ஸ்போர்ட்டுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அக்குழு கூறியிருக்கிறது. அந்தப் பரிந்துரைகள் இன்னும் டெல்லி அரசாங் கத்தின் ஆய்விலே இருக்கின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, சீசன் டிக்கட்டின் மூலம் வருகிற வருமானம் இப்பொழுது குறைந்திருப்பதாகவும், அதற்குக் காரணம், பலர் ஓசியிலே பயணம் செய்வதாகவும் செய்திகள் வருகின்றன. இப்பொழுது ரெயிலிலே ஓசியிலே பயணம் செய்தால் தண்டனை விதிப்பதைப் போல, பஸ் ஸிலே ஓசியிலே பயணம் செய்தால் தண்டனை அளிக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாதம் ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 7,000 சீசன் டிக்கட்டுகள் விற்பனையாகின்றன. ஆனால் இப்பொழுது பிப்ரவரியிலே 6,800 என்கின்ற அளவிலேதான் வந்திருக் கிறது. ஆகையினாலே, ஓசியிலே பயணம் செய்கிறார்கள் என்று சொல்வது பொருத்தமானது அல்ல.

இருந்தாலும், ஓசியிலே பயணம் செய்கின்றவர்களைத் தடுக்க வேண்டுமென்ற வகையில், மோட்டார் வாகன விதிகளைத் திருத்தி, இனி டிக்கட் இல்லாமல் பயணம் செய்வார்களானால், இரண்டு ரூபாயோ, அல்லது பஸ் புறப்பட்ட இடத் திலேயிருந்து வருகின்ற கட்டணமோ, எது அதிகமோ அது வசூலிக்கப்படும் என்று விதிகள் திருத்தப்படுகின்றன.

சென்னை-வடபுறம் பாக்கம் வழித்தடம்

* 428. வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா— மு.ப. 10·00

(அ) வழித்தடம் எண் 48-பி பேருந்துக்களை வடபுறம் பாக்கத்திலிருந்து விளங்காடு பாக்கம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) இவ் வினாவுக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை வட்டத்தில் முக்கியமான ஊர்களை இணைக்கக்கூடிய இந்த நீட்டிப்பைச் சிக்கிரமாகப் பரிசீலனை செய்து அரசாங்கம் அமலுக்குக் கொண்டுவருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பாரிமுனையிலிருந்து விளாங்காடு பாக்கம், மின்ட் வழியாக ஒரு பஸ் விடுவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

பெட்ரோலுக்குப் பதிலாகக் கெரோசின் உபயோகப்படுத்துதல்

* 429. வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை சி. ஐ. டி. உணவு பிரிவுப் போலீஸ் டிப்டி-சூப்ரண்டண்ட் மற்றும் சர்க்கிள், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோர் 21—7—1971 அன்று கும்பகோணத்தில் ஒரு லாரி, பெட்ரோலுக்கு பதில் கெரோசின் எண்ணெயை டாங்கியில் பிடிக்கும்போது கண்டுபிடித்தது உண்மையா?

(இ) ஆம் எனில், லாரி உரிமையாளர் பெயரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) லாரி உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு கும்பகோணம் சப்-மாஜிஸ்ட்ரேட் அவர்களால் ரூ. 20 அபராதம் விதிக்கப்பட்டது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, மின்சார வெட்டு ஏற்பட்டு இருக்கிற இந்த நேரத்திலே இப்படி லாரிகளுக்கு மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகிறார்கள். அதைத் தடுப்பதற்கு லாரி வைத்திருக்கிறவர்கள்மீது மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது. அதை சப்ளை செய்யக்கூடிய பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: லாரி வைத்திருக்கின்றவர்கள் மீது மட்டுமல்ல, மண்ணெண்ணெய் லாரிகளுக்கு விற்பனை செய்கின்றவர்கள், டிரைவர்கள், கண்டக்டர்கள் ஆகியவர்கள் மீது எல்லாம் வழக்கு பதிவுசெய்யப்பட்டு அபராதம் விதிக்கப்படுகிறது. அதைச் சோதனை செய்வதற்காக 55 ஹைட்ரோ மீட்டர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்குக் கொடுக்க, ஏற்கனவே ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



கோதண்டராமசாமி கோவில், மதுராந்தகம்.

* 430 வினா—திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகரில் உள்ள கோதண்டராமசாமி கோவிலுக்குச் சொந்தமான சொத்துக்கள் எவ்வளவு?

(இ) அவை சரியாகக் கண்காணிக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(உ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) மதுராந்தகம் நகரம், கோதண்டராமசாமி கோவிலுக்குச் சொந்தமான சொத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| கிராமத்தின் பெயர் | சொத்து விவரம் |
|---|---|
| மதுராந்தகம் கிராமம் | 12 ஏக்கர் 39 சென்ட் புஞ்சை |
| மதுராந்தகம் கிராமம் | 20 ஏக்கர் 54 சென்ட் நஞ்சை |
| அருங்குளம் கிராமம் | 11 ஏக்கர் 27 சென்ட் நஞ்சை |
| ஓலக்கூர் கிராமம் (தென்னாற்காடு மாவட்டம்) | 2 ஏக்கர் 48 சென்ட் நஞ்சை |

(இ) & (உ) புஞ்சை நிலத்தில் ஒரு பகுதியில் மனைகளாகப் பிரிக்கப்பட்டு வாடகைக்கும், கட்டிடங்கள் வாடகைக்கும் விடப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு வாடகை ரூ. 6,170 வரவேண்டியுள்ளது. வாடகைக் கட்டுப்பாடு சட்டம் போன்ற சட்டங்களால் வாடகைதாரர்களை அப்புறப்படுத்துவது சிரமமாக உள்ளது. நஞ்சை நிலங்கள் 32 நபர்களுக்கு 24,925 படி நெல் குத்தகைக்கு 1381-ம் பசலியிலிருந்து விடப்பட்டுள்ளன. குத்தகைதாரர்கள் நீண்ட காலமாகப் பயிரிட்டு வருவதால், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டப்படி, நிலுவை இருந்தும் குத்தகைதாரர்களை வெளியேற்ற இயலவில்லை. நிலுவைகளையும் சேர்த்து வசூலிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

திரு. மா. வே. நாராயணசாமி: துணைத் தலைவர் அவர்களே, கோயில் சொத்துக்களை சொந்த நலனுக்காகப் பயன்படுத்துவது, அல்லது விற்பனை செய்வது போன்ற தவறான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய நபர்கள் மீது அரசு பொது

வாக எடுக்க இருக்கின்ற நடவடிக்கை என்ன? குறிப்பாக பரம்பரை தர்ம கர்த்தாக்கள் என்று சொல்லிக்கொண்டு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே இதைப்பற்றிக் கேட்டிருக்கிறோம். மதுராந்தகத்தைப்பற்றிக் கேளுங்கள், பாலிசியைப்பற்றி கேட்கக் கூடாது, வேண்டுமானால் தனியாகக் கேள்வி போடுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கோயில்களுக்குச் சொந்தமாக இருக்கின்ற கட்டடங்களுக்கு எல்லாம் குறைவான வாடகை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மதுராந்தகத்தைப்பற்றி தான் மூலக்கேள்வி, அதைப்பற்றி கேளுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: மதுராந்தகத்தைப்பற்றித்தான் கேட்கிறேன். கோயில்களுக்கு இருக்கின்ற கட்டடங்களுக்கு குறைந்த வாடகைதான் வசூலிக்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அவற்றிற்கு நிறைய வாடகை வசூல் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, குறைந்த வாடகையாக இருந்தாலும், நிறைய வாடகையாக இருந்தாலும், அதைப்பற்றியெல்லாம் நிர்வாகிகள்தான் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்--விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).]

## 2. அறிவிப்புகள்

### (அ) பேரவை உறுப்பினர் திரு. சி. வே. வேலப்பன் விடுதலை செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1—3—1973-ம் நாளன்று சேலம் கூடுதல் வகுப்பு குற்றவியல் நீதிபதி அவர்களால் இந்திய குற்றவியல் சட்டம் 147, 341 பிரிவின் கீழும், குற்றவியல் திருத்தச் சட்டம் 7 (1) (சி) பிரிவின்கீழும் காவலில் வைக்கப்பட்ட கபிலமலை தொகுதி பேரவை உறுப்பினர் திரு. சி. வே. வேலப்பன் அவர்கள் சேலம் மத்திய சிறையிலிருந்து 17—3—1973-ம் நாள் காலை விடுதலை செய்யப்பட்டார் என்று அச் சிறைக் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து தகவல் வந்துள்ளது என்பதை இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.



## 3. அரசினர் தீர்மானங்கள்

### (அ) அவை உரிமைக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:—

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் 183-வது விதியின் கீழ் 1973-74-ம் நிதியாண்டுக்குரிய அவையுரிமைக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதினன்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) அவை உரிமைக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் அவையுரிமைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 24—3—1973, சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 26—3—1973 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 27—3—1973 செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினன்கிற்கு மேற்பட்டுமாயின் 29—3—1973 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்—

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் 173-வது விதியின் கீழ் 1973-74-ம் ஆண்டுக்குரிய பொதுக்கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்

படி, பதினறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின்முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கான தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒற்றை மாற்று வாக்கு முறைப் படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 24—3—1973, சனிக்கிழமை, காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டு வோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 26—3—1973 திங்கட்கிழமை, முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலக்கிக் கொள்ள விரும்பும் வேட்பாளர் கள 27—3—1973 செவ்வாய்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினறுக்கு மேற்படு மாயின் 29—3—1973, வியாழக்கிழமை, காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"தமிழ் நாடு சட்டப்பேரவையின் 164-வது விதியின் கீழ் 1973-74-ம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒற்றை மாற்று வாக்கு முறைப் படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்



கீழ் மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர் கள் நியமனத்தாள்களை 24—3—1973, சனிக்கிழமை, முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாள ரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 26—3—1973, திங்கட்கிழமை, முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட் பாளர்கள் 27—3—1973, செவ்வாய்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினறுக்கு மேற்படு மாயின் 29—3—1973, வியாழக்கிழமை, முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

4. நடைமுறைக் கேள்வி

பேரவைத் தலைவர் பதவிக்குத் தேர்தல் நடத்துவது குறித்து

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நமது சட்டமன்ற விதிமுறைகளின்படி அண்டர் ரூல், 4

'When, owing to the existence of any vacancy in the office of Speaker, the election of a Speaker is necessary, the Governor shall fix as early a date as possible for the holding of the election and the Secretary shall send to every member notice of the date so fixed . .'

என்று இருக்கிறது. நமது சட்ட மன்றத் தலைவர் பதவி கழிந்த டிசம்பர் மாதம் 2 ஆம் தேதியிலிருந்து இன்றுவரையிலும் காலியாக இருக்கிறது. நான்கு மாதம் ஆகியும் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட இந்த அரசாங்கம் எதையும் செய்யவில்லை. நமது சட்ட மன்ற விதிமுறைகளின்படி இந்தத் தேர்தல் அதிக காலதாமதம் இல்லாமல் விரைவிலேயே நடைபெறவேண்டும். அரசியல் சட்டப்படி, under article 178,

". . . so often as the office of the Speaker or Deputy Speaker becomes vacant, the Assembly shall choose another member to be Speaker . . ."

அரசியல் சட்டத்திலும் இந்த வகையில் வகை செய்திருக்கிறது. ஆனல் நாம் எந்த அக்கறையும் இல்லாமல் இந்த மன்றத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். நாம் இந்த மன்றத்திற்குத் தலைவர் இல்லாது நான்கு மாதங்களாக துணைத்

[திரு. ஜே. ஜேம்ஸ்] 1973 மார்ச் 19]

தலைவரை வைத்துக் கொண்டு நடத்திக் கொண்டு வருகிறோம். இது அவசரமும், முக்கியமுமான விஷயம். ஆகவே, அரசாங்கத்தைக் கேட்டோ அல்லது துணைத் தலைவர் அவர்களே உடனடியாக சபாநாயகர் தேர்தலை நடத்த வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : I am afraid, Sir, the point of order raised by the hon. Member Thiru James is a very very important and valid point of order. (Laughter). It should have struck us much earlier. There is nothing to laugh at this, as far as I am concerned. . .

MR. DEPUTY SPEAKER : Dr. Hande, when members smile or laugh, do not take it as offence. We do not want members to weep. It is better to smile and laugh. Let them laugh.

DR. H. V. HANDE : I do not mind if I have aroused some laughter. My point is this. I am afraid that because of the absence of the Speaker, there is almost a situation akin to break-down of constitution. That is the most important point. We have not elected a Speaker for the past three or four months in spite of the fact that officially a vacancy has been announced after the Court as also given its decision. Probably, the Hon. Deputy Speaker, the Leader of the House and members were under the impression that we should wait till the Court has delivered its judgment. That might have indirectly. . .

MR. DEPUTY SPEAKER : No, no. We have nothing to do with the Court decision.

DR. H. V. HANDE : Perhaps indirectly it might be thought as entering into the domain of the judiciary, they might have thought so. But now after the Court has given its judgment, still if there is delay with regard to the election of the Speaker, it means that either the ruling party finds it very difficult or a situation akin to break-down of the Constitution has come into being. Therefore, I would request the Hon. Deputy Speaker to give a clear ruling on the subject.

(Thiru Thangamani stood up)

MR. DEPUTY SPEAKER : I am not giving my ruling. Wait a minute. I will give a clarification. It is better we do not bring in the Court into our discussions. Let us not refer to Court



1973 மார்ச் 19] [Deputy Speaker]

decision and we should not raise the question on the basis of a decision of the Court. I have already given my ruling that we should not discuss or take into account such Court decisions. Either we should discord or leave it. It is not good parliamentary practice to refer to Court decisions here. Please do not mix up things.

கோர்ட்டைப் பற்றி நாம் பேசக்கூடாது. அதைப் போல் கோர்ட்டுக்கு அசெம்பிளியைப் பற்றிப் பேச உரிமை இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: எதிர்க் கட்சியில் இருக்கக்கூடிய மதியழகன் அவர்கள் அப்பீல் செய்கிறார்களா இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டு அவர்கள் பேசுகின்றார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்னுடைய வேண்டுகோள் தயவு செய்து நீதிமன்றத்தை இதிலே சம்பந்தப்படுத்திப் பேச வேண்டாம். நீதி மன்றத்தின் முடிவு இந்தப் பேரவையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது. ஆகவே, தலைவர் தேர்தலில் நீதிமன்றத்தைச் சுட்டிக்காட்டி அதை ஒரு பாயின்ட் ஆக 'கோட்' செய்வது சரியல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி: தாங்கள் இந்தத் தீர்ப்பைக் கொடுத்த பிறகு எங்களுடைய வாதம் மேலும் கொஞ்சம் வலுவாகிறது. டிசம்பர் மாதம் 2-ம் தேதி ஸ்பீக்கர் என்ற பதவி இல்லாமல் போய்விட்டது. இந்த விதியிலே இருப்பது போல் கவர்னரைக் கேட்டு ஒரு தேதியை நிச்சயம் செய்து ஸ்பீக்கரைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். டிசம்பர் மாதம் முடிந்து சனவரி, பிப்ரவரி, மார்ச் மாதம் வந்து விட்டது. அதிலும் பட்ஜெட் விவாதம் நடக்கக்கூடிய நேரத்தில் ஸ்பீக்கர் இல்லாத அளவுக்கு நடத்தக்கூடிய சபை என்ற பெயர் இருக்கக் கூடாது என்ற முறையில் இப்போதாவது இந்தச் சபையின் தலைவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? கோர்ட்டில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை. பொதுவாக கோர்ட்டை விட சட்டமன்றந்தான் வலுவுள்ளது என்ற நிலையில் இருக்கக்கூடியவர்கள் நாங்கள். சாதாரணமாக பல விஷயங்களை இங்கே முடித்துக் கொள்ள வேண்டுமென்று கருதுபவர்கள் நாங்கள். நான்கு மாத காலமாக ஸ்பீக்கர் இல்லாத நிலை இருக்கிறது. அரசு சார்பாக உடனடியாகக் கவர்னர் அவர்களுக்குச் சொல்லி ஸ்பீக்கர் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இந்த விதியானது மீறப்பட்டதாகும் என்ற முறையில் இது பாயின்ட் ஆப் ஆர்டருக்கு உரியதாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** எதிர்க் கட்சிகளுக்கு வாய்ப்புக் கொடுப்பது போல் ஆளுங்கட்சி சார்பில் ஒருவருக்காவது வாய்ப்புக் கொடுங்கள்.

நம்முடைய கான்ஸ்டிடியூஷனில் 178 வது விதியில் ஸ்பீக்கர் இல்லா விட்டால் இப்படித்தான் செயல்பட வேண்டுமென்று இருக்கிறது. இந்த மன்றத்தில் 1960-ல் டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்கள் காலமான பிறகு திரு. பக்தவத்சலு நாயுடு அவர்கள் இரண்டு ஆண்டுக் காலம் தொடர்ந்து டெபுடி ஸ்பீக்காராகவே இருந்து சபையை நடத்தியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இப்போது சில மாதங்கள் இல்லை யென்ற காரணத்தால் அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தவில்லை என்பது போல் பேசுவது முறையல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் அங்கத்தினர் அன்று அப்படி இருந்ததே என்று சொல்லுகிறீர்கள். அன்று நீங்கள்தான் எதிர்க் கட்சியில் இருந்தீர்கள். நீங்கள் அன்றே கேட்டிருக்க வேண்டும். கேட்காததால் எதிர்க் கட்சி சரியாகச் செயல்படவில்லை. என்று தோன்றுகிறது. இன்று நாங்கள் எதிர்க் கட்சியாக இருக்கிறோம். நாங்கள் கேட்கிறோம் as early a date as possible என்று விதியில் திட்ட வட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். டிசம்பர் மாதத்திலிருந்து ஸ்பீக்கர் இல்லாத நிலை இருக்கிறது. நான்கு மாதங்களாக அப்படியே இருக்கிறது. அக்கவுண்ட்ஸ் கமிட்டி, எஸ்டிமேட்ஸ் கமிட்டிக்கு எல்லாம் தேர்தலை நடத்து வது முக்கியமாகத் தோன்றும்போது சபாநாயகர் தேர்தலுக்கு முக்கியம் அளிக்காமல் இருப்பது எப்படி என்று தெரியவில்லை. அது சரியானதல்ல என்று எதிர்க் கட்சியின் சார்பில் சொல்ல விரும்புகிறேன். சுப்ரீம் கோர்ட்டுக்கு இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு போகிறார் என்று பார்க்க வேண்டு மென்று சொன்னது போல் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யார் அப்படிச் சொன்னது?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்தான் சொன்னது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வழக்கறிஞர்கள் கோர்ட்டை கோர்ட்டிலேயே விட்டு விட்டு இங்கு வரவேண்டும். நான் திருப்பித் திருப்பி அழுத்திச் சொல்லுகிறேன். கோர்ட்டினுடைய முடிவுக்காக நாம் காத்திருக்க வில்லை. அவர்கள் இதிலே தலையிட முடியாது. இங்கே பேசுகின்றவர்களைப் பார்த்தால் அதை ஒப்புக் கொள்கிறார்களா இல்லையா என்பது சந்தேகமாக இருக்கிறது. கோர்ட்டைப் பற்றி விவாதித்தால் விரும்பத் தகாத வார்த்தைகள்



வரும். அதே போன்று நீதிமன்றத்திலும் விரும்பத்தகாத வார்த்தைகள் வந்தால் அது ஜனநாயக முறைக்கு நல்லது அல்ல. நீதித் துறையும், இந்தத் துறையும் தனித் தனியாக இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் மோதலை ஏற்படுத்திக் கொள்ள நாம் உதவி செய்வதாக இருக்கக் கூடாது.

(திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்தார்.)

உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன? ஸ்பீக்கர் தேர்தலை ஏன் நடத்தவில்லை, உடனடியாக நடத்த வேண்டுமென்பது. அதைத்தான் திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள், டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், நீங்களும் சொல்லுகின்றீர்கள். திரு. ஜேம்ஸ் சொன்னதை நானும் வலியுறுத்து கிறேன் என்று சொல்லி நீங்கள் உட்கார்ந்திருக்கலாமே.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** ஆபீஸ் ஆப் ஸ்பீக்கர் நான்கு மாத காலமாக காலியாக இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு கோர்ட்டுக்குப் போன பிறகு . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் இதை அனுமதிக்கப் போவதில்லை.

THIRU SOWDI S. SUNDARABHARATHI: I am not referring to what happened in the Court. I am not going into that.

MR. DEPUTY SPEAKER: Please avoid reference as far as possible to the Court and its decisions.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** நமக்கு கோர்ட்டின் தீர்ப்பு என்ன என் பதைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற கடமை இருந்தால். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் கிடையாது. தவறாகப் புரிந்து கொண்டிருக்கின்றீர்கள். கோர்ட்டில் தீர்ப்பு என்ன என்று இந்தப் பேரவை காத்துக் கொண்டிருந்ததாக நினைப்பது தவறான கருத்து, நம்முடைய உரிமையை உறுப்பினர் புரிந்து கொள்ளவில்லை என்று வருத்தத் தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கணபதி:** துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தை மாத்திரம் கூற விரும்புகிறேன். எதிர்க் கட்சிகள் அத்தனையும் டிசம்பர் மாதம் 2-ம் தேதி நடந்த பேரவை நிகழ்ச்சிகள் சரியல்ல என்று வாதிட்டு நீதிமன்றத் தில் அபிடவிட் தாக்கல் செய்தார்கள். இன்று அவர்கள் டிசம்பர் மாதம் 2-ம் தேதியிலிருந்து பேரவைத் தலைவர் பதவி காலியாக இருக்கிறது என்று சொல்லுவது அன்று அவர்கள் சொன்னதற்கு விரோதமாக இருக்கிறது. நீதி மன்றத்தில் தீர்ப்புக் கொடுக்கப்பட்டு பத்து தினங்கள் ஆகிறது . . . (மணி அடிக்கப்பட்டது).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்திய அரசியல் சட்ட 180 (1) பிரிவின்படி "While the office of Speaker is vacant, the duties of the office shall be performed by the Deputy Speaker........." என்று தெளிவாக இருக்கிறது. நம்முடைய விதிகளில்கூட தேர்தலைக் கூடுமான விரைவில் நடத்த ஆளுநர் குறிப்பிட்ட நாளை உறுப்பினர்களுக்கு செயலாளர் அறிவிக்க வேண்டும் என்பது விதி. கூடுமான விரைவில் நடத்துகிற அளவுக்கு ஆளுநர் அறிவிக்க வேண்டுமென்று இருக்கின்றதே தவிர, இவ்வளவு நாட்களுக்குள் அறிவிக்க வேண்டும் என்ற வரையறுத்த தன்மையில் காலம் நிர்ணயிக்கப்படவில்லை. ஏற்கெனவே முன்னால் அவைத் தலைவராக இருந்த திரு. கோபாலமேனன் மறைந்த பிறகு மூன்று மாத காலம் துணைத் தலைவரவர்களே அவையை நடத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. கோபால மேனனின் தொகுதி கேரளாவுக்கு மாற்றப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஏற்கெனவே மூன்று சந்தர்ப்பங்களில் துணைத் தலைவர்களே சில காலம் அவையை நடத்தி வந்திருக்கிறார்கள். டாக்டர் யூ. கிருஷ்ண ராவ் மறைந்த பிறகு 6 மாதம் துணைத் தலைவராக இருந்தவர் அவையை நடத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே போன்று மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள் அவைத் தலைவராக இருந்து விலகிய பிறகு, மூன்று, நான்கு மாதங்கள் துணைத் தலைவர் அவர்களே அவையை நடத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே 6, 7 மாதம் போக வேண்டுமென்பதல்ல. அதற்கு மரபு இருக்கிறது என்ற காரணத்தாலும் கூடுமான விரைவில் என்று குறிப்பிட்டு இருப்பதாலும், இப்போதே உடனடியாகத் தேர்தலை நடத்தித் தீரவேண்டிய அவசியமில்லை. ஆளுநர் அவர்கள் குறிப்பிடுகின்ற தேதியில் நடத்த வேண்டுமென்று இருக்கிறது. அந்தக் கருத்தை ஆளுநர் அவர்கள் மேற்கொண்டு, தேதியைத் தெரிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுவதுடன், இதில் எந்தத் தவறுமில்லை என்று குறிப்பிட்டுக் கொள்ளுகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவரவர்களே, இன்னும் மூன்று ஆண்டுகள் முடியும் வரை இப்படியே துணைத் தலைவரவர்களே அவையை நடத்திக் கொண்டு போவார்களா? தலைவர் தேர்தலை எப்போது நடத்தப் போகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மூன்று ஆண்டுகள் போகாது என்பதற்காகத் தான் கூடுமான விரைவில் நடத்த தேதியை ஆளுநர்



நிர்ணயிப்பார் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, முன்பு எல்லாம் ஆறுமாத காலம் துணைத் தலைவர்களே அவையின் நடவடிக்கைகளை நடத்தியிருக்கிறார்கள் என்று தெரிவிப்பதைப் பார்த்தால், இந்தக் கூட்டத் தொடரில் (செஷனில்) தேர்தல் நடத்தப்படுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. அப்படி இந்தத் தொடரில் நடத்தாமல் போனால், அடுத்தாற்போல ஜூலை மாதம் தான் கூட இருக்கிறோம். அப்படியானால் 7, 8 மாதம் துணைத் தலைவரே அவையை நடத்துகின்ற நிலைமை ஏற்படும். இந்தத் தொடரில் தேர்தல் நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலம் வரையறுக்கப்படவில்லை. ஆனால் shall be done as early as possible என்று விதிமுறைகளில் இருக்கிறது என்று கூறினார்கள். ஏற்கெனவே நான்கு மாதங்கள் ஆகியிருக்கின்றன. As early as possible என்பதைப் பார்த்தால் அதிக விரைவில் நடத்த வேண்டும் என்பதுதான் நோக்கம். தலைவர் தேர்தலை நடத்த நான்கு மாதங்கள் போதவில்லையா, இன்னும் எத்தனை மாதங்கள் வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அமைச்சர் அவர்கள் கால தாமதத்திற்கான காரணத்தையும் கூறவில்லை. காரணம் இருந்தால், 4 மாதங்கள் அல்ல, 10 மாதங்கள் வேண்டுமானாலும் சகித்துக் கொள்ளலாம். இப்போது 180 அங்கத்தினர்கள் ஆளுங் கட்சியின் பக்கம் இருக்கிறார்கள். தேர்தலை நடத்த எந்தப் பிரச்னையும் இல்லை. அவசியம் இல்லாமல் காலங்கடத்திக் கொண்டு போக வேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தப் பேரவையில் டாக்டர் யு. கிருஷ்ண ராவ் காலமான பிறகு 10 மாதங்கள் வரையில் அடுத்த தேர்தல் வரையில் பேரவைத் தலைவர் தேர்தல் நடத்தப்படாமல் இருந்திருக்கிறது. ஆகவே This is not a point of order அசெம்பிளி விதிகளின் படி இதை ஒரு பெரிய பாயின்ட் அப் ஆர்டராக எழுப்ப இடமில்லை. ......the Governor shall fix as early a date as possible. என்றுதான் இருக்கிறது, குறிப்பாக இத்தனை நாட்களுக்குள் நடத்த வேண்டும் என்று சொல்லப்படவில்லை. அப்படித் தெளிவாக இல்லாத நேரத்தில் நம்முடைய பேரவையின் மரபுகள்படி நம்முடைய முன்னோர்கள், மூத்தவர்கள் பேரவையில் கடைபிடித்த முறைகளை கடைபிடிப்பது வழக்கமாக இருந்து வருகிறது. இதே பேரவையில் 10 மாத காலம் சபாநாயகர் இல்லாமல், துணைச் சபாநாயகர்

பேரவையை நடத்தியிருக்கிறார்கள். ஆகவே இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்ற முடிவை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: உதவி சபாநாயகர் அவர்களே, நீங்கள் சொன்ன கருத்திலிருந்து கூடுமான விரைவில் என்பதற்கு, 10 மாதம் வரையில் என்று கணக்கு வைத்துக்கொள்ளலாம் என்று அர்த்தம் வருகிறதே அது சரிதானா,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அச்சப்படும் அளவுக்கு இது ஒரு ஆபத்தான பிரச்னையல்ல.

Don't you think that I am here to conduct the functions of the House ?

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நீங்களே தலைவராக வருவது பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

5. 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது

வாக்கெடுப்பு—தொடர்ச்சி

கோரிக்கை எண் 20—மீனளம்

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 20—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,58,39,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K. H. BOMMAN : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 2,58,39,300 under Demand No. 20—Fisheries—be reduced by Rs. 100".

திரு. கே. எ. வகாப்: துணைத் தலைவரவர்களே, உள்நாட்டில் மீன் பிடிப்போருக்கு வசதியாக ஆழமான குட்டைகளை அமைப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 20—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,58,39,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Sir, I move the following cut motion to discuss the necessity to develop Mandapam as a major research centre—

"That the allotment of Rs. 2,58,39,300 under Demand No. 20—Fisheries—be reduced by Rs. 100."



THIRU N. DENNIS : Sir, I move the following cut motion to discuss about the altering of the present system of allotment and distribution of mechanised boats to enable the Fishermen of all coastal villages to get mechanised boats in an equitable way—

"That the allotment of Rs. 2,58,39,300 under Demand No. 20—Fisheries—be reduced by Rs. 100".

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, Sir, I move the following cut motion to discuss the difficulties in Tamil Nadu in using the mechanised boats manufactured in Kerala—

"That the allotment of Rs. 2,58,39,300 under Demand No. 20—Fiseheries—Be reduced by Rs. 100".

நிதிக் கோரிக்கை எண் 29—பழங்குடி மக்கள், அரிசனங்கள்

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 29—பழங்குடி மக்கள், அரிசனங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,16,35,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Sir, I move the following cut motion to discuss about special steps for constructing houses for Scheduled Tribes and Castes on a large scale—

"That the allotment of Rs. 8,16,35,200 under Demand No. 29—Welfare of the Scheduled Tribes and Castes, etc.—be reduced by Rs. 100".

திரு. கே. எ. வகாப்: துணைத் தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீடுகட்ட வாங்கப்பட்டு, இதுவரை வீடு கட்டாமல் இருக்கும் இடங்களில், உடன வீடுகள் கட்டத் தீவிர நடவடிக்கை எடுப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 29—பழங்குடி மக்கள், அரிசனங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,16,35,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவரவர்களே, கிராமப் பகுதியிலுள்ள வீட்டுமனை இல்லாத எல்லா அரிசனக் குடும்பங்களுக்கும் ஐந்து செண்டுக்குக்

[திரு. சோ. அழகர்சாமி] [1973 மார்ச் 19

குறையாமல் அனைவருக்கும் மனை வழங்க அரசு தவறியதை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 29—பழங்குடி மக்கள், அரிசனங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,16,35,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: துணைத் தலைவரவர்களே, நங்கவள்ளி பேரூராட்சியில் இருக்கும் அரிசனங்களுக்கு மேட்டூர் பாதையுடன் இணைக்கும் பாதை ஒன்று போடுவதற்கு உத்தரவிட்டு வருடக்கணக்காகியும் இதைச் செயல்படுத்தாமை குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 29—பழங்குடி மக்கள், அரிசனங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,16,35,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES: Sir, I move the following cut motion to discuss the necessity to give fifteen acres of forest land to each family of Kaningars in Kanyakumari district for cultivation—

"That the allotment of Rs. 8,16,35,200 under Demand No. 29—Welfare of the Scheduled Tribes and Castes, etc.—Be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிதிக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன்னால் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

* மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, இந்த அவையில் நான் கொடுத்திருக்கின்ற இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதான விளக்க உரையை @ குறிப்பேடுகளில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அரிசன நலத்துறை மானியம், மீனளத் துறை மானியம், ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஒட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

@ 245–312-ம் பக்கங்களில் இணைப்பு I, II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1973 மார்ச் 19] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இன்று மாண்புமிகு அமைச்சரவர்கள் எங்களுக்கு அளித்திருக்கின்ற இந்த 'நோட்டில்' பல்வேறு புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கின்றபோது அரிசன, மலை வாசி மக்களுக்காக, அந்த மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக, இந்த அரசு செலவிடுகின்ற தொகையைப் பார்க்கும்போது, ஆண்டுதோறும் அது குறைந்து கொண்டு வருகிறது. ஆகவே, இந்த அரசு அரிசன மக்களிடம் எந்த அளவுக்கு அக்கறை வைத்திருக்கிறது என்பதை அது காட்டக் கூடிய நிலையில் இருக்கிறது.

குறிப்பாக, இந்த அரசு மது விலக்குத் திட்டத்தை ரத்து செய்து, நமது மாநிலத்திலே மதுவை தாராளமாக அருந்தலாம் என்ற முறை வந்ததும், அதனால் அதிகமாக பாதிக்கப்பட்ட மக்கள் அரிசனங்கள் என்பதை நிச்சயமாக அரிசன நல அமைச்சர் அவர்களும் மறுக்க மாட்டார்கள் என்று எண்ணுகின்றேன். அதுமட்டுமல்ல, அரிசன நலத் துறைக்காக 1972-73-ம் ஆண்டில் 841 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 1973-74-ம் ஆண்டைப் பார்க்கும்போது இது ரூ. 816.35 லட்சத்திற்குக் குறைக்கப் பட்டிருக்கிறது. ஆக ஏறத்தாழ ரூ. 25 லட்சம் குறைவாக ஒதுக்கப் முற்பகல்
பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் பெரும் பகுதி கல்வி வளர்ச் 10.30
சிக்காக செலவிடப்பட இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையைத் தள்ளிவிட்டுப் பார்த்தால் பொருளாதார முன்னேற்றத்திற்காக சென்ற ஆண்டில் ரூ. 278 லட்சமாக இருந்தது இந்த ஆண்டு ரூ. 220 லட்சம் என்ற அளவிற்குத்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக கல்வி வளர்ச்சிக்கென ஒதுக்கப் பட்டுள்ள தொகையைக் கழித்துப் பார்த்தால் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மக்கள் வாழ்விற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 52 லட்சம் குறைவாக இருக்கிறது.

அது மட்டுமில்லை. தொழில் வளர்ச்சிக்கென வட்டியில்லாக் கடனாக அளிக்கப்பட்ட தொகை 1970-71-ல் 1,853 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இது 1971-72-ல் 1,450 நபர்களாகக் குறைந்திருக்கின்றது. இது மேலும் குறைந்து 1972-73-ல் 957 நபர்கள்தான் பயன்பெற்று இருக்கின்றார்கள். இப்படி பயன்பெறும் நபர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றதைப் பார்க்கும் போது 'கழுதை தேய்ந்து கட்டெறும்பாக' ஆனதுபோல தமிழக அரசு இவர் களுக்காகச் செய்துவரும் நலன் பெறத்தக்க காரியங்களின் அளவு குறைந்து கொண்டே வருகின்றதைப் பார்க்கின்றோம்.

அடுத்து தமிழகத்தில் அரிசன மாணவர்களுக்கென உதவித் தொகை அளிப்பதைப் பார்க்கும்போதுகூட 1970-71-ம் ஆண்டில் 8,136 மாணவர்

களுக்கு இப்படி உதவிப் பணம் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் இது 1971-72-ல் 7,108 ஆகக் குறைந்து காணப்படுகின்றது.

இதுபோல மலைவாசி மக்களுக்கும் இந்த அரசு போதுமான ஆதரவை அளிக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதுமட்டுமல்ல. கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்குக்கூட போதுமான இல்லங்களை அமைத்துத்தர இந்த அரசு திட்டமிடவில்லை என்பதை இந்தக் குறிப்புகளிலிருந்து காண்கின்றேன். மலைவாசி மாணவர்களைப் பார்க்கும்போது ஏறத்தாழ 1,758 மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்றார்கள். ஆனால் இந்தப் புள்ளிவிவரப் பட்டியலைப் பார்க்கும்போது மலைவாசி மாணவர்களில் ஒருவராவது இன்னும் கல்லூரியில் படிக்கவில்லை என்று காண்கிறேன். இதையெல்லாம் பார்த்தால் இந்த அரசு மலைவாசிகளின் மேம்பாட்டிற்காக எந்த அளவிற்கு அக்கரை காட்டுகின்றது என்பதை புரிந்துகொள்ள முடிகின்றது.

அடுத்து, இந்த அரசின் கொள்கை, மதம்மாறிய அரிசன மக்களுக்கு ஆதரவாக இல்லை என்பதைப் பார்க்கும்போது இந்த அரசு மதச்சார்பற்ற அரசா என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது. அரசியல் சட்டத்தில் கூட There should be no discrimination on the basis of religion, caste, etc என்று இருக்கும்போது இந்த அரசு மாணவர்களை—அரிசன மாணவர்கள் விஷயத்தில் பார்க்கும்போது இந்த மாணவர் இந்துவா அல்லது கிருஸ்துவரா என்று பார்த்து கிருஸ்துவ அரிசன் என்று சொன்னால் இந்த அரசு அவர்களுக்கு எந்தவிதமான நன்மையும் செய்வதில்லை என்று சொன்னால் நிச்சயமாக அரிசனங்களுக்காக இந்த அரசு நன்மை செய்வதாக ஏற்றுக் கொள்ள முடியாது. 'எம்மதமும் சம்மதம்' என்று இந்த அரசு கருதுவதாக ஏற்றுக் கொள்ள முடியாது. இப்படி இந்துக்களாக உள்ள அரிசனங்களுக்கு உதவியளிக்கின்றார்கள். ஆனால் மதம் மாறிய கிருஸ்துவ அரிசனங்களுக்கு உதவியளிப்பதை நிறுத்திவிடுகின்றார்கள் என்றால் இதற்குக் காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலில் விளக்கமளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். 'மத்திய அரசுதான் இந்தப் பாகுபாடுகளை வைத்திருக்கிறது, மாநில அரசினைப் பொறுத்த மட்டில் இப்படிப்பட்ட உதவிகளை மதச்சார்பற்ற முறையில்தான் கொடுக்கின்றார்கள்' என்று அரசின் சார்பில் சொல்லப்படுகிறது. ஆனால் இன்று பார்க்கும்போது அது சரியில்லை.

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்: மொத்தம் 20 உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள். எனவே ஒவ்வொரு உறுப்பினரும் ஐந்து நிமிஷம் என்று எடுத்துக் கொண்டால்தான் முடியும்.





திரு. ஜே. ஜேம்ஸ்: அடுத்து என் தொகுதிப்பற்றி மட்டும் எடுத்துச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். என் தொகுதியில் அதிகமாக மலைவாசிகளான, 'காணிக்காரர்கள்' என்ற வகுப்பினர் இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் வேளாண்மை செய்து வாழ்வதற்காக திருவிதாங்கூர்-கொச்சி அரசு, குடும்பத்திற்கு 15 ஏக்கர் வீதம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த அரசு அவர்களுக்கு அந்த அடிப்படையில் நிலங்கள் வழங்கப்படவில்லை. எனவே அவர்கள் குடும்பத்திற்கு 15 ஏக்கர் என்று கொடுக்க வேண்டும்.

அடுத்து பேச்சிப்பாறை பிரம்பு பயிற்சி நிலையமொன்று இருந்தது. அதை மூடிவிட்டார்கள். இதை மீண்டும் திறந்திட வேண்டும். அதோடு குறவர்களுக்கென பிரம்புத் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று குலசேகரத்தில் இருக்கின்றது. அது நிதிப் பற்றாக்குறையினால் சரிவர இயங்கவில்லை. எனவே அதற்குப்போதிய நிதி உதவி அளித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் இந்தக் 'காணிக்காரர்கள்' தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள அவர்கள் துப்பாக்கி வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கின்றது. அதற்கென அவர்கள லைஸென்ஸ் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த லைசென்ஸை புதுப்பிக்க அவர்கள் 40, 50 மைல் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே அவர்கள் லைசென்ஸ் எடுத்தால் மீண்டும் மீண்டும் அவர்கள் புதுப்பிக்க வேண்டாம் அதோடு புதுப்பிப்பதற்கு செலுத்த வேண்டிய கட்டணமும் செலுத்த வேண்டாம் என்று அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

* திரு. கோ. செபமாலை: சட்டப்பேரவை உதவித் தலைவரவர்களே, 1973-74-ம் ஆண்டுக்கான (கோரிக்கை எண் 29), அரிசன நலத்துறை மானியத்தினை வரவேற்று இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் நமது ஏழை எளிய அரிசனங்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு உதவிகளை அறிவித்திருக்கின்றார்கள். அவர்கள் விவசாயத்திலும் பொருளாதாரத்திலும் உயர்ந்திட வேண்டுமானால் மேலும் பல உதவிகளை அவர்களுக்கு அளித்திட வேண்டும் என்றும் இன்றைய திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள எட்டு கோடிக்கு மேலேயே நிதி ஒதுக்கிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். குறைந்தது ரூ. 15 கோடியாவது ஒதுக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்போது தான் அவர்கள் மேலும் வளம்பெற முடியும். எனவே அடுத்த நிதி ஆண்டிலாவது இந்தத் தொகையை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகரித்திடுவார்கள் என்று நம்புகிறேன்.

மேலும் அரிசன மாணவர்கள் இல்லங்களில் பல இடங்களிலே சுகாதாரம் மிகமிகக் குறைவாகக் காணப்படுகிறது. பல இடங்களிலே முறையாகக் கட்டடங்களே இல்லாமல் இருக்கிறது. எனவே தேவையான இடங்களிலே கட்டடங்களைக் கட்டிக்கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

அடுத்து என் தொகுதி மங்களூர் தொகுதி மிகமிகப் பிற்பட்ட தொகுதியாக இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனமுவந்து செய்த பல ஏற்பாடுகளினால் என் தொகுதியில் பல இடங்களிலே குடி நீர்க் கிணறுகள், கிராமங்களுக்கு மின்சாரம் எல்லாம் அளிக்கப்பட்டு பல பகுதிகளில் அரிசனங்கள் நல்ல முறையில் இப்போது வாழ்ந்து வருகின்றார்கள். இப்படி வாழ்வளித்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பிலே என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும் திட்டக்குடி கிராமத்தில் இந்தத்திட்டத்தின்கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளாக 25 மாணவர்களுக்குத்தான் உதவியளிக்கப்பட்டு வருகின்றது. அவர்களுடைய எண்ணிக்கையினை மேலும் உயர்த்தி மேலும் அங்குள்ள அரிசன மக்கள் உண்ண ஒரு ஹாஸ்டல் தேவைப்படுகிறது. அதற்காக நமது அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

அதேபோல, ஏழை ஹரிஜன மாணவியர்கள் தங்கிப் படிப்பதற்காக, மாணவியர்கள் ஹாஸ்டல் ஒன்று ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மாடுகள் வாங்கிக்கொள்வதற்குக் கடன் தொகை குறைந்தபட்சம் ரூ. 250 என்று இருக்கிறது. இதனை ரூ. 500 ஆக உயர்த்த வேண்டும். அப்போது தான் இன்றைய பொருளாதார நிலையில், அவர்கள் ஓரளவுக்காவது ஆடு மாடுகளை வாங்கிக்கொண்டு வசதியாக வாழ முடியும். வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள முடியும்.

அடுத்தபடியாக, கிணறுகள் வெட்டுவதற்கு, ரூ. 2,000 என்று கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகையையும் ரூ. 5,000 ஆக உயர்த்த வேண்டும். அப்போதுதான் இந்த நிலையிலுள்ள விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மானியக் கோரிக்கையில் பல நல்ல கருத்துக்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. சிதம்பரத்தில்—தமிழகத்திலேயே எங்கேயும் இல்லாத படி, ஒரு ஹாஸ்டல் சிறப்புற நடந்து வருகிறது. சிதம்பரம்



ஹாஸ்டலில் ஏராளமான மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மாணவர் ஹாஸ்டலுக்கு ஃபோன் வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே ஒரு போன் வசதி ஏற்படுத்தித் தந்தால், அவர்களுடன் தொடர்பு கொள்ளவும், மற்றும் பல நலல காரியங்கள் நடக்கவும் ஏதுவாக இருக்கும். இதற்கு சர்க்கார் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அவைமுன் இருக்கிற இந்த இரண்டு மானியங்களையும் ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

அரசு, ஹரிஜன நலத் துறையிலும், மீன்வளத் துறையிலேயும்—இந்த இரண்டு துறையிலேயும் நல்ல அளவுக்கு அக்கறையும் ஈடுபாடும் செலுத்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஹரிஜன நலத் துறையைப் பொறுத்தவரையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு ஒதுக்கி இருக்கக் கூடிய தொகையில், முக்கால் வாசி—73 சதவிகிதம் கல்விக்காக என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம், ஹரிஜன நல மக்களிடையே ஒரு மிடில் கிளாஸ் ஏற்படுத்தப் பட்டிருப்பதாகக் கருதுகிறேன்.

ஹரிஜன மக்களிடையே படித்தவர்கள் மிடில் கிளாசாக வந்து விடுகிறார்கள். ஆனால் மொத்தம் ஹரிஜன மக்களிடையே படித்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்றால், ஒரு பத்து சத விகிதம் தான். ஆகவே இந்த சமுதாயத்தில் 10 சத விகிதம் மக்கள் ஒரு மிடில் கிளாசாக ஆக்கப்பட்டு வருகிறார்கள். அது போதுமா என்பது என்னுடைய கேள்வி. மற்ற எல்லா ஹரிஜனங்களையும், மற்ற மக்களைப் போல, மற்ற சமுதாயத்தினரைப் போல, சமமாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோமா என்றால், இது வரையில் இந்த முறையில் கவனம் செலுத்தப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, இந்தச் சமுதாயத்திலுள்ள எல்லா மக்களையும் மற்ற மக்களுக்குச் சமமாகக் கொண்டுவர வேண்டும் என்ற ஆலோசனையை இங்கே கூற விரும்புகிறேன். ஹரிஜன நல மக்கள் யாராக இருந்தாலும், அவர்கள் படிக்கின்ற வயது வந்தவுடன், கட்டாயப் படிப்பிற்கு உள்ளாக்கப்பட வேண்டும். செகண்டரி கிரேட் படிப்பு மட்டுமாவது எல்லோரும் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்ற நிபந்தனையை அமுல் படுத்த வேண்டும். அப்போதுதான் எல்லா ஹரிஜன மக்களையும், மன நிலையிலேயும், பொருளாதார நிலையிலேயும், மற்றச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இணையாகக் கொண்டுவர முடியும் என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

வீட்டு மனைகள் போன்ற சலுகைகள் இவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இது எப்படி வழங்கப்படுகிறது என்றால், தனியாக ஒரு இடத்தைப் பார்த்து, தனியாக வீடுகள் கட்டிக்கொடுக்கின்ற நிலை இப்போது இருக்கிறது. இந்த நிலையை மாற்றவேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில், நான் கூறுகின்ற ஆலோசனை என்னவென்றால், தற்போது உள்ள நிலை, ஹரிஜன மக்கள், தாங்கள் வேறு, மற்ற சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வேறு என்ற எண்ணத்தைத் தான் உண்டாக்கிக்கொண்டிருக்கும். அந்த எண்ணத்தைப் போக்க வேண்டும். அதற்காக ஜாதி இந்துக்கள் வாழ்கின்ற பகுதிகளில் காலி இடங்கள் எங்கே இருந்தாலும், அந்த இடங்களை இந்த ஹரிஜன சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு கொடுத்து, அங்கே வீடு கட்டி அவர்கள் வாழ்கின்ற சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். அப்போதுதான் நாங்கள் எல்லா சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இணையானவர்கள் சமமானவர்கள் என்ற உணர்வு பிறக்கும். இந்த முறையைக் கையாளாவிட்டால் நிச்சயமாக ஹரிஜனங்கள் மற்ற மக்களோடு சமமாக வாழ முடியும் என்று நான் கருதவில்லை. எனவே, அரசு இன்றைக்கு எடுத்திருக்கிற நோக்கம் வெற்றி காண வேண்டுமானால், புரட்சிகரமான திட்டங்களை இந்தத் துறையில் புகுத்த வேண்டும், என்று இந்தத் துறையைப் பொறுத்தவரையில் கூற விரும்புகிறேன்.

அடுத்து, இந்த மீன் வளத் துறையைப் பற்றி ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இந்த அரசு வேளாண்மைத் துறைக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதோ அந்த அளவுக்கு மீனளத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும் என்று கூற விரும்புகிறேன். வேளாண்மைத் துறைக்கு 24 கோடி செலவழிக்கிறோம். ஆனால் மீனளத் துறைக்கு 2½ கோடி தான் செலவழிக்கிறோம் வேளாண்மைத் துறை எப்படி முக்கியமானதோ, அந்தத் துறை எப்படி மக்களுக்கு உண்ண உணவுக்கு வழிவகைகளை செய்கிறதோ, அந்த அளவுக்கு முக்கியத்துவம் உள்ளது இந்த மீனளத் துறை. நல்ல ஒரு சத்துணவை இந்தத் துறை மக்களுக்கு அளிக்கிறது என்ற நிலையிலே இந்தத் துறையை மேலும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்த முறையில் இதற்கு அதிகக் கவனம் செலுத்தப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன்.

நாம் வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். அந்த முக்கியத்துவம் இந்தத் துறைக்கும் கொடுக்க வேண்டும். வேளாண்மைத் துறையில் நம்முடைய அதிகாரிகள் எப்படி ஈடுபாடு காட்டுகிறார்களோ,



ஆராய்ச்சிகள் நடத்தி முன்னேற்றம் காண்கிறார்களோ,—அவர்கள் இந்த தேசத்திற்கு இந்தத் துறையில் செய்திருக்கிற சேவையை யாரும் மறுக்க முடியாது—அதே ஆர்வத்தை, ஆராய்ச்சியை, இந்த மீனளத் துறையில் காட்டுகிறார்களா என்றால், இல்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. நாம் இதில் போதிய அக்கறை காட்டினால் நிச்சயமாக அந்த அளவுக்கு அக்கறையும் ஆர்வமும் அவர்கள் காட்டுவார்கள், அதற்கு, இந்த அரசு தூண்டுதல் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்வேன்.

நம்முடைய அமைச்சர் அவர்களுடைய பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார்கள், மீனளத் துறையில் புரட்சி உண்டாக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள், பசுமைப் புரட்சியில் வெற்றி கண்டிருக்கிறோம். ஆனால் மீனளத் துறையில் புரட்சி கண்டு இருக்கிறோமா என்றால், இதில் ஒரு படியாவது எடுத்து வைத்திருக்கிறோமா என்றால், இல்லை என்றுதான் கூற விரும்புகிறேன். இதற்கு ஒதுக்க வேண்டிய தொகையைக் கூடுதலான தொகையை இன்னும் ஒதுக்கவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நமது நாட்டிலிருக்கக் கூடிய கடல் பரப்பு இருக்கிறதே அது மிகப் பெரியது. 77 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் என்று சொல்கிறார்கள். இதிலே எவ்வளவு சதுர கிலோ மீட்டரைப் பயன்படுத்தியிருக்கிறோம் என்ற கணக்கு இதிலே இல்லை. அதைப் போல 1.59 லட்சம் டன் கடல் மீன் உற்பத்தி தான் இந்த வருஷம் செய்யப் போகிறோம் என்று காட்டியிருக்கிறார்கள். ஆனால், கிடைக்கக் கூடிய மொத்த கடல் மீனின் அளவு 8.8 லட்சம் டன் என்று இருக்கிறது. எனவே, அதிக வசதி இருந்தும் நமது டார்க்கெட் அந்த அளவுக்கு இல்லை. மூன்று லட்சம் கடல் மீனவர்கள் இருக்கக் கூடிய நிலையில் ஒரு லட்சம் மக்கள் தான் இதிலே அதிகமான அளவுக்கு ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களிடம் இந்த 5 ஆண்டுகளில் நாம் கொடுக்கப்போகின்ற மொத்த விசைப் படகுகளின் எண்ணிக்கை ஆயிரம் தான். எனவே, இந்த மூன்று லட்சம் மீனவத் தொழிலாளர்களையும் எப்போது பயன்படுத்தப் போகிறீர்கள்? அவர்கள் நல்ல முறையில் மீன் பிடித்து சேவை செய்ய நாம் ஊக்கம் அளிக்க வேண்டாமா, இந்த மூன்று லட்சம் மீனவர்களுக்கும் நாம் எப்போது விசைப் படகுகள் கொடுக்கப்போகிறோம் என்ற கணக்கு இங்கே இல்லை. அவ்வளவு பேருக்கும் படகுகள் கொடுக்க எத்தனை ஆண்டுகள் ஆகும்? ஐந்து ஆண்டுகளுக்கு நாம் கொடுக்கப்போவது ஆயிரம் படகுகள் தான். இந்த நிலையில் போய்க் கொண்டிருந்தால், இந்தத் துறையில் புரட்சியை எப்படி உண்டாக்கப் போகிறோம்? எனவே, இதிலே அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேளாண்மைத் துறைக்கு அதிகக் கவனம் செலுத்தினோம். அவர்கள் நல்ல பலனைக் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோல இந்தத் துறையிலேயும் அதிகக் கவனம் செலுத்தி எல்லா மீனவர்களுக்கும் 3 லட்சம் பேர்களுக்கும் 3 லட்சம் விசைப் படகுகள் இருக்கக் கூடிய அளவுக்கு நமது திட்டங்களை இந்த ஐந்து வருஷத்தில் கொடுக்க வேண்டும் என்ற அளவுக்கு நிலைமையை ஏற்படுத்தி, கடல் புரட்சியை உண்டாக்கி அதன் மூலம் மீன்வளத் துறையை மேலும் சிறப்பான முறையில் இயங்கச் செய்ய இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கூறி, இந்த அளவுக்கு என்னுடைய கருத்துக்களை கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, இன்றைடதினம் அரிஜன நலத் துறை மானியத்தை மனப்பூர்வமாக வரவேற்று சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

பொதுவாக இந்த மானியத்தைப் பற்றிப் பேசுவதற்கு குறைந்தது இரண்டு நாட்களாவது ஒதுக்கியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் இப்போது பேசுகிற நேரம் 2½ நிமிடமாக இருக்கிற காரணத்தினால் என்ன பேசுவது என்று தெரியவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** இந்த அரிசன நலத் துறை பற்றி 5 நிமிஷம் பேசலாம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** மீனாட்சியை இதோடு சேர்த்திருக்கிறது என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

எனவே இன்றையதினம் அரிஜன நலத் துறைக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு இந்த அரசு செய்து வருகிற நன்மைகள் நாடறிந்த உண்மையாகும். அரிஜன மக்கள் கலைஞர் தலைமையிலே உள்ள அரசு தான் தங்களுக்கு வாழ்வூட்டும், வழி காட்டும் என்று கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் நம்பி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், என்பதை இந்த அவை முன்னே தங்கள் முன்பாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனோ தெரியவில்லை, வெறும் வாய்க்கு அவல் கிடைத்தாற் போல சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 841 லட்சமாக இருந்தது, இந்த ஆண்டு 816 லட்சமாக குறைந்து விட்டது என்பதை மதிப்புமிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டு சொன்னார்கள். உண்மையிலேயே கொஞ்ச நாட்கள் ஸ்லம் பகுதிகளிலே அவர்கள் பேசுவதற்கு வெறும் வாய்க்கு அவல் கிடைத்தது என்று என்னைப் பொறுத்த அளவிலே நான் கருதிக் கொள்கிறேன். இன்றையதினம் இதிலே குறிப்பிட்டிருக்கிற விவரத்தைப் பார்க்கிற போது 28 வது பக்கத்திலே வருவாய் கணக்கீடு என்று குறிப்பிட்டு 816.35



லட்சம் என்றும், இதிலே ஆக மொத்த செலவு என்று குறிப்பிட்டு 848.53 லட்சம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே மூலதனக் கணக்கு என்று குறிப்பிட்டு 14.53 லட்சம் என்றும், கடன் கணக்கு என்று குறிப்பிட்டு 17.65 லட்சம் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. ஆக, இந்த மூலதனக் கணக்கு, கடன் கணக்கு இவைகளை சேர்த்து 31 லட்சம் எந்தத் திட்டத்தின் அடிப்படையிலே செயல்பட்டிருக்கிறது என்பதை விளக்குவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் செலவிடப்படுகிற 816 லட்சத்தின் கல்விக்காகவே கிட்டத்தட்ட 6 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது என்பது தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இந்த 6 கோடி ரூபாய் செலவிட்ட பின்னும் 2 கோடி ரூபாய் மிச்சமிருக்கிறது. இந்த 2 கோடி ரூபாய் மற்ற பணிகளைச் செம்மையாகச் செயல்படுத்த முடியும் என்பதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதை தங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். நம்முடைய கலைஞர் அரசு தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுடைய நலத்தைப் பேணிக் காப்பதிலே முன்னணியில் நிற்கிற அரசாகும். இப்படிப்பட்ட அரசு தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு, எனக்கு முன்னால் பேசிய திரு. செபமாலை கூறியது போல இன்னும் பல கோடி ரூபாய் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என்ற என்னுடைய அவாவை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே சமயத்தில் ஒரு மகிழ்ச்சியான, தித்திக்கும் செய்தியை இந்த அறிக்கையில் என்னால் பார்க்க முடிகிறது. அது என்னவென்றால், அடித்தளத்தில் குமுறிக் கொண்டிருக்கிற தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் தங்களுக்கு வாழ்வே இருக்காதா என்று ஏங்குகிற அந்த எண்ணத்தைப் போக்குகிற வகையில் 10 ஆயிரம் வீடுகள் கட்டித் தருவது என்ற முடிவினை அறிவித்திருக்கிற அறிவிப்பு மகிழ்ச்சிக்குரிய அறிவிப்பாகும், என்று சொல்கிற நேரத்தில் 80 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற ஒரு மேலான திட்டத்தை உருவாக்கி இருக்கிறது. இதற்காக சுமார் 2 கோடி ரூபாய் செலவிடும் எண்ணம் அரசுக்கு இருப்பதாக அறிகிறேன். ஆக, இந்தத் திட்டம் நல்ல செயல் முறைக்கு வரவேண்டுமானால், இந்த அரசுதான் செய்யும், இந்த அரசால்தான் செய்ய முடியும் என்ற எண்ணத்தைப் பரவலாக மக்கள் கொண்டிருக்கிற காரணத்தினால் இதை மேலும் தீவிரப்படுத்தி இதை உடனுக்குடன் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் வாழ்க்கை வளம் பெறுவதற்கு இந்த அறிக்கையில் இன்னென்று குறிப்பிடப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி யடைகிறேன். சிறு தொழில்கள் தொடங்க தேவையான கடனை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் அரிஜனங்கள் நேரடியாகப் பெற்று பயன் பெற வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கடனுக்கு அரசாங்கம் உத்திரவாதம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது, இது புரட்சியான அறிவிப்பாகும். இந்த சிறு தொழில்கள் எந்த வகையில் எப்படியெல்லாம் நன்மை பயக்க இருக்கிறது என்ற விளக்கத்தை அறிய விரும்புகிறேன், என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொண்டு, கடைசியாக இன்றையதினம் கல்வி இலாகா கிட்டத் தட்ட 100 கோடி ரூபாய் கல்விக்காக செலவிடுகிறது. அப்படிச் செலவிடுகிற நேரத்தில் இந்த அரிஜன நல இலாகா கல்விக்காக செலவிடுகிற இந்த 6 கோடி ரூபாயைக் கல்வி இலாகா மானியமாக அரிஜன நலத் துறைக்கு வழங்கவேண்டு மென்ற என் கோரிக்கையை இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். நம்முடைய அரசு இதை அறிந்து ஆலோசித்து ஆவன செய்யும் என்ற நம்பிக்கையோடு இந்த மானியத்தை வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. குழ. செல்லையா : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த மீன்வளத் துறை மானியத்தின் மீது அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்னை முதல் குமரி வரை மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நித்தம் நித்தம் செத்துப் பிழைக்கின்ற பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண் டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் கடலுக்குள்ளே போய் திரும்பி வருகிற வரை அவர்கள் வீட்டில் உண்ணுவதற்கு உணவு இல்லாமல் இருக்கிறார்கள். மீன் பிடிக்கப் போனவர்கள் 5 ரூபாய்க்கோ, 2 ரூபாய்க்கோ, 10 ரூபாய்க்கோ பிடித்தோ அல்லது இல்லாமலும் திரும்பி வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

குறிப்பாக, இவர்கள் விசைப் படகுகளை வைத்தும் நாட்டுப் படகுகளை வைத்தும் தொழில் செய்கிறார்கள். விசைப்படகுகளை வைத்து தொழில் நடத்துபவர்களைவிட நாட்டுப் படகுகளை வைத்து தொழில் செய்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். எனவே இந்த இரு சாராருக்கும் இன்றைக்கு பெரிய சச்சரவு இருக்கிறது என்பதை நாம் அறிவோம். காரணம், விசைப் படகுக்காரர்கள் நாட்டுப் படகுக்காரர்களின் அந்த வலைகளையும், மற்ற பொருள்களையும் அறுத்து நாசப்படுத்தி விடுகிறார்கள். இவைகளை அடிக்கடி பஞ்சாயத்து செய்தும், கூடிப் பேசியும் எந்த தீர்வும் காணவில்லை. இப்படி குழப்பத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. எனவே, நேரத்தை



ஒதுக்கின்றது போன்ற நிலைமைகளைக் கூடச் செய்தோம். விசைப்படகுக் காரர்கள் பகலில் போக வேண்டும், நாட்டுப் படகுக்காரர்கள் இரவில் போக வேண்டுமென்று தீர்மானம் செய்து அதுவும் ஒத்துவர முடியவில்லை இத்தனை மைல் தூரத்தில் தான் விசைப்படகுக்காரர்கள் தொழில் செய்ய வேண்டும், இத்தனை மைல் வரைதான் நாட்டுப் படகுக்காரர்கள் தொழில் செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்தால் கூட, அது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. எனவே எல்லாப் படகுகளையும் கடலில் விசைப்படகுகளாக மாற்ற வேண்டும். இந்த அரசு சர்வே செய்ய வேண்டும். எங்கெங்கு, எந்தெந்த இடங்களில் எந்த வகையைச் சேர்ந்த மீன்கள் அதிகமாகக் கிடைக்கின்றன என்று சர்வே செய்து கொடுத்தால் இந்த மீனவர்களுக்கு நல்ல நிலைமையை உருவாக்குவதற்கு ஏற்ற வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

விசைப்படகுகளைப் பற்றிச் சொல்கிற போது அந்தப் படகுகள் சம்பந்தப் பட்டவரை வெவ்வேறு விதமான ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, இந்த படகுகள் உண்மையாக சிலோன் அகதிகளுக்குத் தரப்பட்ட தாக எண்ணிக் கொண்டிருந்தோம். குறிப்பாக போராவூரணி பகுதியில் மல்லிப்பட்டினத்தில் சிலோன் அகதியாக இல்லாதவர்கள் அங்கே சிலோன் அகதிக் குடும்பம் என்ற பெயரால் அத்தகைய வசதிகளைப்பெற்று ஒரே கிராமத்தில் 7, 8, பேர்கள் படகுகளை வாங்கி தொழில் செய்து கொண்டிருக் கிறார்கள். இதைக் கவனப்படுத்துவதற்குக் காரணம், இதை நான் இந்த மாமன்றத்தில் பல முறை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். மீண்டும் பரிசீலனை செய்து உண்மையான சிலோன் அகதிகள் யார் என்பதைப் பார்த்து அப்படி யில்லையென்றால் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து அப்படி ஒப்படைத்த படகுகள் கடன்களைத் திரும்ப பெற்றுக் கொள்ளவேண்டும். அவர்கள் உண்மை யான மீனவர்கள் என்றால் அவர்களுக்கு தருவதில் ஆட்சேபனை இருக்க முடியாது.

மேலும் இன்றைக்கு பர்மா அகதிகள் என்று சொல்லப்படுகிற நிலைமையில் அவர்களைத்தான் குழுக்களில் சேர்க்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது. இது வியாபாரமாக ஆகியிருக்கிறது. எப்படி குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆள் பிடித்தால் 10 ரூபாய் கிடைக்குமோ அப்படி இன்றைக்கு 3 பர்மா அகதிகளைப் பிடித்தால் 25 ஆயிரம் ரூபாய் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. 3 அகதி களைக் கொண்டு வந்து ஊரில் வைத்துக் கொண்டு அவர்களுக்கு சான்றிதழ்கள் வாங்கி அவர்கள் பெயர்களை சீட்டுக் குலுக்கலில் சேர்த்து விடுகிறார்கள். அவர் களுக்கு போட்டை கொடுக்காமல் தாங்களே எடுத்துக் கொண்டு அவர்களுக்கு ஆயிரம் அல்லது 500 ரூபாய் கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். அந்த

3 பேரும் மீன் பிடிக்கிற சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக, மீன் பிடிக்கிற தொழில் தெரிந்தவர்களாக இருந்தால் அக்கறையில்லை. மீன் பிடிக்கிற தொழில் தெரிந்தவர்களா என்று ஆராய்ந்து அறிந்து சான்றிதழ்கள் கொடுத்தால் அக்கறையில்லை. அப்பேர்ப்பட்ட நிலைமை இல்லாமல் எங்கள் பகுதியில் தொழில் தெரியாதவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள், வியாபார நோக்கத்தோடு இப்படி ஆட்களைப் பிடித்து கொள்ளை லாபம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இன்றைக்கு மீனவர் சமுதாயமும், சில இடங்களில் முஸ்லிம் பெருங்குடி மக்களும் தொழில் செய்கிறார்கள். இந்த இரண்டு பேருமில்லாமல் யார் யாரோ கிராமத்தில் இருக்கின்ற கோடிஸ்வரர்கள், பணக்காரர்கள் அங்கே அரசாங்க மானியத் தொகையோடு வழங்கப்பட்ட படகுகளை 10 ஆயிரம் 20 ஆயிரம் ரூபாய் கொடுத்து சொந்தமாக வாங்கி தொழில் செய்கிறார்கள். இப்படி எங்களுடைய பகுதியில் ஏராளமாக நடக்கிறது. எந்த நோக்கத்திற்காக இந்த அரசு இந்த படகுகளை வழங்குகிறதோ, எந்த திட்டத்தை எண்ணி எந்த எண்ணத்தில் வழங்குகிறதோ அதற்கு ஒத்துவராதபடி இந்தப் படகுகளை வாங்கிக் கொண்டு போய் 20 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்கிறார்கள்.

மு.ப. 11.00 மேல் அதிகாரிகள் குறிப்பிட்ட தேதி அன்று வருகிறேன் என்று முன் கூட்டியே அறிவித்துவிட்டு வரும்போது இந்தப் பணக்கார வியாபாரிகள் யார் மீது போடப்பட்டிருக்கிறதோ அவர்களை அழைத்து வந்து இரண்டு மூன்று நாட்கள் அங்கு அவர்களைத் தங்க வைத்து அதிகாரிகளிடம் காண்பித்து அவர்கள்தான் தொழில் செய்கிறார்கள் என்று சொல்கிற தன்மையில் நடந்து கொள்கிறார்கள். இதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்தப் படகுகளைப் பற்றிப் பேசும்போது தனியார் இடத்தில் அவற்றை வாங்கும்போது விலை குறைவாகவும், அரசு அதை மீனவ சமுதாய மக்களுக்குக் கொடுக்கும்போது அதன் விலை அதிகமாகவும் இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். காரணம், அரசு உற்பத்தி செய்கிற படகுகளுக்கு விலை அதிகமாகவும் தனியார் உற்பத்தி செய்கிற படகுகளுக்கு விலை மலிவாகவும் இருப்பதாகச் சொல்கிறார்கள். இதில் எந்த அளவிற்கு ஏற்றத் தாழ்வு இருக்கிறது அல்லது இடையில் பணம் சோரம் போகிறதா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். உற்பத்திச் செலவு அதிகமாகிறது என்றால் அதைத் தனியாரிடம் விட்டுவிட்டு அரசுமேற்பார்வை செய்து அதைச் செய்து எந்த அளவிற்கு ஏழை மீனவர்களுக்குக் குறைந்த விலையில் கொடுக்கமுடியுமோ அந்த அளவிற்குக் குறைந்த விலையில் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.



மேலும் இந்த என்ஜின்கள், நல்ல என்ஜின்கள் பொருத்தப்படுவதில்லை. யான்மார் என்ஜின்தான் சிறந்த என்ஜின்கள் என்று மீனவ மக்கள் சொல்கிறார்கள். அவை வைத்து செய்ய படகுகளில்தான் ஆழ்கடலில் வேகமாகச் சென்று மீன் பிடிக்க வசதியாயிருக்கிறது. இன்று போடப்படுகிற என்ஜின்கள் எல்லாம் சிறு காலத்திற்குத்தான் பயன்படுத்த முடிகிறதே தவிர பெரும்பாலும் அத்தனை என்ஜின்களும் நல்லமுறையில் வேலை செய்வதாக இல்லை, அந்த என்ஜின்கள் மிகக்குறுகிய காலத்தில் பாழ்பட்டுப் போகின்றன என்ற குறைபாடுகள் எல்லாம் இருக்கின்றன. உப்புத் தண்ணீரில் ஓடுவதன் காரணமாக அந்த என்ஜின்கள் எல்லாம் நீண்ட காலத்திற்கு நல்லமுறையில் வேலை செய்ய முடியவில்லை என்ற பல்வேறு குறைபாடுகள் அமைச்சரவையின் கவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

1968-ம் ஆண்டு என்றுதான் கருதுகிறேன், அண்ணா காலத்தில் கூட யான்மார் என்ஜினை வைத்து ஜப்பான் நாட்டோடு இரண்டறக் கலந்து கூட்டு முயற்சியில் படகுகளைக் கட்டலாம், நல்ல என்ஜின்களை வரவழைக்கலாம் என்ற திட்டத்தை பேரறிஞர் அண்ணா காலத்தில் உருவாக்கினார்கள். அதேபோல் நல்ல முறையில் தக்க என்ஜின்கள் பொருத்தப்பட்டு உழைக்கக் கூடிய படகுகளையும் தயாரிக்கும் பணியில் அரசு ஈடுபடவேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் தனியார் சிலரது மூலதனத்திற்காக அல்லாமல் மீனவ சமுதாயத்தினர் இந்தப் பலனைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் நாம் பணியாற்றவேண்டும். இன்னும், கிராமப்புறங்களில், உட்புறங்களில், மீன் குஞ்சு வளர்ப்பு போன்ற பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். மீன் குஞ்சு வளர்ப்பு என்பது விளம்பரத்திற்காக செய்யப்படுகிற காரியமாக இருக்கிறதே தவிர அது உண்மையில் லாபத்தைப் பெற்றுத் தருவதாக இல்லை. நான் ஊராட்சி ஒன்றியத் தலைவராக பத்து ஆண்டுகளாக இருந்து வருகிறேன். எங்கள் ஒன்றியத்திலும் மீன் குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன, மீன்குஞ்சு வளர்ப்புத் திட்டம் என்று வேண்டுமானால் போர்டு போட்டுக்கொள்ளலாமே தவிர இந்த மீன்குஞ்சுகள் வளர்க்கும் திட்டத்தினால் எந்த ஒரு ஒன்றியத்திற்காவது இதிலிருந்து வருமானம் வந்திருக்கிறதா என்று பார்த்தால் செலவுக் கணக்குத்தான் கூடுதலாக இருக்கிறதே தவிர எங்கும் லாபம் வந்ததாக எனக்குத் தெரியவில்லை.

அமைச்சர்கள் சுற்றுப்பயணம் வரும்போது பல ஊராட்சி மன்றங்களில் மீன் குஞ்சுகள் வளர்ப்புப் பண்ணை என்று சிமெண்ட் தொட்டிகள் இருக்கின்றனவே தவிர மீனும் இல்லை, மீன் குஞ்சுகளும் இருப்பதில்லை, அவற்றை

வளர்க்க முடியவில்லை. அவற்றைக் குளங்களில் விட்டால் வளர்க்கமுடிகிறதே தவிர தொட்டிகளில் விடுவதால் நிச்சயமாக அதிலிருந்து நாம் லாபம் பெற முடியவதில்லை, அதனால் நஷ்டம்தான் வருகிறது. அந்த அளவிற்கு பஞ்சாயத்துகளுக்கு இழப்பு ஏற்படுகிறது.

எனவே இப்படி மீன் குஞ்சுகளை வளர்ப்பதை விட்டு விட்டு நல்ல வருமானம் தரக்கூடிய வகையில் தவளைகளை வளர்க்கலாம். தவளைகளை வளர்ப்பதில் கஷ்டமில்லை, சிரமமில்லை. பயமும் இல்லை. கிராமமக்கள் மீன்களைப் பிடிப்பதைப் போல் தவளைகளைப் பிடிக்கமாட்டார்கள். ஆக, தவளைகளை வளர்ப்பதில் சிரமம் இல்லை என்ற முறையில் அந்தப் பணியினை மேற்கொண்டால் நல்ல வருமானத்தை இந்த அரசு பெறமுடியும்.

இன்னும் கிராமப் பகுதிகளில் உள்ள, பலபகுதிகளில் உள்ள பல்வேறு விதமான திட்டங்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு திட்டத்தை எந்தெந்தப் பகுதிகளில் எப்படி எப்படி அமைக்கவேண்டும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். கடற்கரை ஓரமாக உள்ள கிராமப்புறங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குளங்களை ஏலத்திற்கு விடுகிறார்கள். எங்கள் பகுதியை எடுத்துக்கொண்டால் யாரோ ஒருவர், மீனவர் அல்லாதவர் அந்தக் குளங்களை பத்து பதினைந்து ரூபாய்க்கு ஏலத்திற்கு எடுக்குகிறார்கள். அந்தக் குளங்களின் அமைப்பு, அதிலிருந்து எவ்வளவு வருமானம் வரும் என்பது மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றவர்களுக்குத் தெரியாது. ஒன்றியங்களுக்குத்தான் தெரியும். எனவே அவற்றையெல்லாம் ஒன்றியப் பகுதிகளுக்கு விட்டுவிடவேண்டும். மீனவர் கூட்டுறவு சங்கம் என்ற அடிப்படையில் விட்டு விடக்கூடாது.

திருச்செந்தூர் வட்டத்தைப் பொறுத்தவரையில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விட்டுவிடவேண்டும், காரணம், குளங்கள் கடலோரப் பகுதிகளில் இருக்கின்றன. ஒரு பகுதிக்கு அப்படி, இன்னொரு பகுதிக்கு வேறு ஒரு விதத்தில் செய்யவேண்டும் என்று ஏன் சொல்கிறேன் என்றால் அந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு செய்யப்படவேண்டும்.

அடுத்து, மீன்வளத் துறை பெரிதொரு துறையாகும். விவசாயத் துறைச் செயலாளர் இரண்டையும் பார்த்துக்கொள்வார்கள் என்ற நிலை இருக்கிறது. நான் கேட்டுக்கொள்வது, மீன்வளத் துறைக்கு என்று ஒரு செயலாளரும், விவசாயத்துறைக்கு என்று ஒரு செயலாளரும் தனித்தனியாக போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



(மணியடிக்கப்பட்டு, திரு. தொ. ப. சீனிவாசன் அவர்கள் அழைக்கப்பட்டார்.)

**திரு. தொ. ப. சீனிவாசன்:** தலைவர் அவர்களே, இன்றையதினம் நம் அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மீனவளத் துறை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை வழங்க நான் முன்வருகிறேன்.

பொதுவாக, தமிழக அரசு மீனவ மக்களுடைய குறைகளைத் தக்க முறையில் எப்படி நிறைவு செய்வது என்பதை அறிய அடிக்கடி அரசு அதிகாரிகள் கருத்தரங்குகளை நடத்தி அவர்களின் குறைகளை அறிந்து அவற்றை நிறைவு செய்யும் ஆர்வத்தைக் கண்டு இந்த மன்றத்தின் சார்பாக அந்த அதிகாரிகளை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இருக்கிற சிறு சிறு குறைகளை எடுத்துச் சொல்லவும் நான் முற்படுகிறேன்.

பொதுவாக கடலில் சென்று மீன் பிடிக்கிற மீனவ மக்களின் குறைகளை, அவர்களுக்கு ஏற்படுகிற தொல்லைகள் துயரங்களை அதிகாரிகள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு எல்லா வகைகளிலும் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உள்நாட்டில் உள்ள சில மீனவர்கள், அடையாறு பகுதியிலும், எண்ணூர் பகுதியில் ஓடுகின்ற ஆறுகளில் மீன் பிடித்து பிழைக்கக்கூடிய நிலையில் சில மீனவர்கள் இருக்கிறார்கள். அந்த ஆறுகளில், எண்ணூருக்கு அருகில் உள்ள ஆற்றில் கழிவு நீர் கலந்து, அதாவது சுத்திகரிப்பு சாலையில் உள்ள கழிவு நீரால் அந்த ஆற்று நீர் பாதிக்கப்பட்டு அதிலுள்ள மீன்கள் எல்லாம் செத்துவிடுகின்றன. ஆகவே அந்தப் பகுதியில் உள்ள மீனவர்களுக்கு பிழைப்பு இல்லாமல் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் அடையாறும் கழிவு நீரால் பாதிக்கப்பட்டு, அந்த நீர் கெட்டு விட்டதால், அதை தூர்வாரி அந்த ஆற்று நீரை சுத்தப்படுத்தினால்தான் அந்தப் பகுதியிலுள்ள மீனவ மக்கள் மீன் பிடித்து பிழைக்க முடியும். இதை உணர்ந்து, மீன் பிடி தொழில் அறவே இல்லாததால், அந்த மீனவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய் வீதம் உதவித் தொகை கொடுத்துவருகிறார்கள். அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். அந்தப் பகுதியில் கழிவு நீர் கலக்காமல் இருப்பதற்கு வேண்டிய வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எண்ணூரில் உள்ள ஆற்றில் அங்குள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையில் உள்ள கழிவு நீர் கலந்து விடுகிறது. அதன் காரணமாக அங்குள்ள ஏராளமான மீன்கள் செத்துவிடுகின்றன. எனவே மீன்கள் வளர வசதியில்லாமல் போய் விடுகிறது. இந்தக் கழிவு நீர் கலப்புக் காரணமாக அங்கு

உற்பத்தியாகி வந்த எரால்-மீன் உற்பத்தி இப்போது மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த ஆற்று நீரில் கழிவு நீர் கலக்காமல் இருப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில் பொன்மலைப் பகுதியில் உள்ள சர்க்கரை ஆலைகளின் கழிவு நீர் மொத்தமும் வெண்ணாறு, கிரான்ட் அணைக்கட்டு, காவேரி, உள்ளூர் ஆறுகளில் கலந்து அங்குள்ள மீன்கள் செத்துப் போகின்றன என்று பத்திரிகைச் செய்திகள் வந்துள்ளன. அங்கும் அந்த ஆற்றுத் தண்ணீர் கெடாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். அப்போதுதான் அங்குள்ள மீனவர்கள் மீன் பிடித்துத் தங்கள் வாழ்க்கையை நடத்தமுடியும்.

உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 250 விதம் கடன் தொகை இப்போது வழங்கப்பட்டு வருகிறது. அதை தற்போது நிறுத்துவதற்கு ஒரு ஆலோசனை இருப்பதாக நான் அறிகிறேன். அந்தச் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதேதவிர இது வேறு அல்ல. ஆகவே இதை நிறுத்தாமல் தொடர்ந்து கொடுக்கவேண்டும். உள்நாட்டு நீர்நிலைகளை, பஞ்சாயத்து யூனியன்கள், பி.டபிள்யூ.டி. நீர்நிலைகள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் ஏலம் விடவேண்டுமென்ற ஒரு உத்தரவு இருந்தும்கூட அதை மீறி மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் தனியார்களுக்கு அவற்றை ஏலத்திற்கு விட்டுவிடுகிறார்கள். அதை உடனடியாக நிறுத்தி மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கே தொடர்ந்து அவைகளை ஏலத்திற்கு விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்நிலைகளில் மீன் குஞ்சுகள் விடப்படுவதுபற்றிச் சொன்னார்கள். திலேபியா என்ற மீன்குஞ்சுகளைத்தான் விடுகிறார்கள். அவை விலை போகாது இருக்கின்றன. எனவே அதற்கு பதிலாக மிருகால, கண்ணாடிகண்டை, ரோகு, கட்லா போன்ற மீன் குஞ்சுகளை விடவேண்டும். அப்படிச் செய்வதன்மூலம் அந்த மீன்வகைகள் பெருகவும் வாய்ப்பு இருக்கிறது. அதோடு மீனவர்களுக்கு வாழ ஓரளவிற்கு வசதியாகவும் இருக்கும்.

அடுத்து, மீனவர் கூட்டுறவு பெடரேஷன்மூலம் விசைப்படகு ரூ. 23,000-க்கு கொடுக்கிறார்கள், ஆனால் தனியார்கள் கட்டும் விசைப்படகுகள் ஒவ்வொன்றும் ரூ. 19,750-க்கு கொடுக்கப்படுகிறது. அரசு கட்டும் படகுகளுக்கு ரூ. 23,000 ஆவது ஏன்? இதைக் கவனித்து இதிலுள்ள குறைபாடுகளைப் போக்கி மீனவர்களுக்குத் தக்க வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டும். மீனவர்கள் பாண்டியன் போட்யார்ட் கட்டும் விசைப் படகுகளைத்தான் அதிகமாக விரும்புகிறார்கள். அதுவே வேண்டுமென்று கேட்கிறார்கள்.



(மணியடிக்கப்பட்டு திரு. லத்தீப் அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.)

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஹரிஜன நலத் துறை மானியத்தின்மீதும், மீனளத்துறை மானியத்தின்மீதும் ஓரிரு கருத்துக்களைச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன்.

ஹரிஜன மானியத்தைப் பொறுத்தவரையில் அரசு சுமார் 8 கோடி அளவுக்கு மானியம் ஒதுக்கியிருக்கிறது. அந்த ஒதுக்கீட்டைப்பற்றி நான் சிலவற்றைச் சொல்லுவதற்கு ஆசைப்படுகிறேன். திரு. பாலசுந்தரம் அவர்கள் சொல்லியதுபோல் கல்விக்காக 73 சத விகிதம் நாம் அந்தத் தொகையிலிருந்து செலவிடுகிறோம். மற்ற முன்னேற்றங்களுக்காகவும் தொழில் துறையில் முன்னேற்றம், விவசாயத் துறையில் முன்னேற்றம், மற்ற மற்ற, துறைகளில் முன்னேற்றம், என்று எல்லாவற்றிற்குமாக 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இந்தத் தொகை போதாது என்பது என்னுடைய கருத்து. அதற்கு அதிகத் தொகை ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, நாம் இவ்வளவு தொகையை ஒதுக்கீடு செய்து நாம் ஹரிஜனங்களுக்குச் சில திட்டங்களை வகுக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில், அவர்களுக்குக் கல்வி வசதி கொடுத்தது விடுவதுடன் நின்று விடாமல் பொருளாதாரத்தில் அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து உதவுவதுடன் நின்று விடாமல், நம்முடைய சமுதாயத்தில் ஒரு மானசீகமான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். அந்தச் சமுதாயம் பிற்படுத்தப்பட்ட சமுதாயம், ஒதுக்கப்பட்ட சமுதாயம், தீண்டப்படாத சமுதாயம் என்கிற கருத்தை மாற்ற வேண்டும். அது வரையில் நம்முடைய பணி தொடர்ந்துகொண்டே இருக்க வேண்டும். இந்த நாட்டின் பழங்குடி மக்களாக இருக்கும் அந்தச் சமுதாய மக்களின் எண்ணத்திலே நம்மோடு இருக்கக்கூடிய சமரசம், சௌஜன்யம், சம அந்தஸ்து சம வாய்ப்பு என்ற உணர்வு ஏற்படவேண்டும். அனத எண்ணம் என்று நிறைவேற்றப்படுகிறதோ அன்றுதான் நாம் ஹரிஜனங்களுக்கு உண்மையிலேயே நீதி செய்தோம் என்று திருப்திப்பட முடியும். அப்படிச் செய்யவில்லையென்றால் நிச்சயமாக அவர்களுக்கு நாம் நீதி செய்தவர்களாக ஆக மாட்டோம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் நமக்கு மிகுந்த பெருமை உண்டு. நம்முடைய மாநிலத்திலே உள்ள மக்களாகட்டும், அல்லது இங்கே இருக்கிற ஆட்சியாக இருக்கட்டும், அந்த ஹரிஜன மக்களிடையே ஒரு சமரச சௌஜன்ய, சம அந்தஸ்து ஏற்படவேண்டுமென்ற எண்ணத்திலே முனைப்போடு வேலை செய்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அரசின் இந்தக் கொள்கையை மக்கள் ஓரளவிற்கு ஏற்று நம்முடைய நாட்டிலே எந்த

விதமான பாகுபாடும் இன்றி, பிறப்பால் உயர்வு தாழ்வு மனப்பான்மை இன்றி, மக்கள் ஓரளவிற்குச் செயல்பட்டு வருகிறார்கள் என்ற உண்மையை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்மையில் 10 மாதங்களுக்கு முன்பாகப் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்கப்பட்டது. ஹரிஜன மக்கள் எத்தனை பேர் தீக்கிரையாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்கள் என்ற விவரம் கேட்கப்பட்டது. அந்தக் கேள்வி மக்களவையில் கேட்கப்பட்டபோது, அங்கேயிருந்த அமைச்சர் அவர்கள் புள்ளி விவரம் தருகிறார்கள். உ.பி., பீகார், ராஜஸ்தான், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் மொத்தமாக 3 ஆண்டுகளில் 1,150 ஹரிஜன மக்கள் தீக்கிரையாக்கப்பட்டார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட இழி நிலை இல்லை. ஹரிஜனங்கள் எல்லாம் ஓரளவிற்கு இங்கே சம உரிமையோடு வாழக்கூடிய நிலை இருக்கிறது என்றால் அது இன்றைக்கு இருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற பகுத்தறிவுக் கொள்கைதான் என்று என்னாலே சொல்ல முடியும்.

இங்கே சில புள்ளி விவரங்களைத் தந்து இருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தத் துறையில் முன்னேற்றத்தைச் சம நிலையிலே செய்து இருக்கிறார்களா என்ற ஐயம் இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது ஏற்படுகிறது. இந்தப் புள்ளி விவரங்களைப் பார்த்தால் தென்னாற்காடு மாவட்டத்தில் 167 பள்ளிகள் அந்தச் சமுதாயத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் படிக்கின்ற மாணவர்கள் 8,912 பேர் தான் இருக்கிறார்கள். ஆனால் வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாணவர்களின் எண்ணிக்கை 9,798 என்று இருக்கிறது. ஆனால் பள்ளிகளின் எண்ணிக்கை 147 ஆக இருக்கிறது. மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ள வடாற்காடு மாவட்டத்தில் குறைந்த அளவு பள்ளிகள் இருப்பது ஏன் என்று தெரியவில்லை.

வடாற்காடு மாவட்டத்தில் அதிகமாக மலைஜாதி மக்கள் வாழ்கிறார்கள். அங்கேதான் ஜவ்வாது மலை, ஏலகிரி மலை இருக்கிறது. வடாற்காடு மாவட்டத்தில் மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் ஆலங்காயம் பொதுக் கூட்டத்தில் பேசுகிறபோது மிக உருக்கமாகச் சொன்னார்கள். "மலை வாசி மக்களைப் பொறுத்தவரையில் இந்த ஆட்சிக்கு அவர்கள் செல்லப்பிள்ளைகள். இந்த ஆட்சி அவர்களுடைய முன்னேற்றத்திற்காக அதிகமாக நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் என்று சொன்னார்கள்." ஆனால் அந்த ஜவ்வாது மலைப் பகுதியில் போதிய அளவுக்கு முன்னேற்றம் இல்லை என்று பார்க்கிறபோது, ஏன், ஏன் என்ற கேள்விக் குறி எழுகிறது. அரசு அதற்கு அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அமைச்சர் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களைப் பார்த்தால், கூட்டுறவுத் துறையில் பல சங்கங்கள் ஆரம்பித்து இருக்கிறோம். அதற்காகப் பல திட்டங்களை வகுத்து இருக்கிறோம். 20 மைல் பரப்பளவிற்கு மேலாக உள்ள ஜவ்வாது மலைப்பகுதியில் அத்தகைய அக்கறை காட்டப்படவில்லை புதூர் என்ற இடத்தில் ஒன்று வைத்து இருக்கிறார்கள். மற்ற இடங்களில் ஒன்றும் இல்லை. கூட்டுறவுத் துறை அவர்களுக்கு எந்த விதமான ஊக்கத்தையும் அளிக்கவில்லை. அதைப் புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த நிலைமையை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏலகிரியில் ஒரு பள்ளிக்கூடம் நடத்துகிறார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தில் இருக்கிற மாணவர்களுக்கு உணவுக்காக மிகமிகக் குறைந்த தொகை கொடுக்கிறார்கள். 30 பைசாதான் கொடுக்கிறார்கள். அந்த 30 பைசாவில் அவர்கள் நல்ல சத்துணவு சாப்பிடமுடியுமா. அங்கேயுள்ள சீதோஷ்ண நிலைக்கு "தே சிகோயர் நியூட்ரிசியஸ் புட்" ஆகவே, அந்த 30 பைசாவை 50 பைசாவாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டு, திரு. மு. ராமன் பேச அழைக்கப்பட்டார்.)

நான் மலைப்பகுதியிலிருந்து வந்திருக்கிறேன். எனக்கு இரண்டு நிமிடங்கள் அதிகமாகக் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): காட்டுப் பகுதியிலிருந்து வந்திருந்தாலும், நாட்டுப் பகுதியிலிருந்து வந்திருந்தாலும் ஒரே விதி முறைகள்தான் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்துவிட்டது. ஏற்கெனவே 3 நிமிடங்கள் அதிகமாகக் கொடுத்திருக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். அந்த ஏலகிரி பகுதியில் இருக்கிற மக்களுக்கு அரசு ரக்குகள், கம்பளிகள் கொடுத்து உதவ வேண்டும். அவர்களுக்கு நிலப் பட்டாங்கள், வீடுகள் கட்டிக்கொள்ள தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். [illegible] நில ஆர்ஜிதம் செய்கிறபோது மிகுந்த தாமதம் ஏற்படுகிறது. [illegible] நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவர்களிடம் நில ஆர்ஜிதம் செய்தால் நல்லது அல்லது அரசு நிலங்களை ஆர்ஜிதம் செய்யலாம், என்று சொல்லி இந்த மானியத்தின் மீது அதிகப்பணம் அடுத்த ஆண்டிலேனும் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மு. இராமன்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, 1973-74-ம் ஆண்டுக்கான அரிசன நல மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்புத் தந்ததற்கு முதலில் எனனுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

1942-ம் ஆண்டிலிருந்து வெள்ளையர் ஆட்சிக் காலத்திலிருந்து மிகவும் தாழ்த்தப்பட்டு வந்த அரிசன சமுதாயத்தை வாழ்க்கைத் துறையிலும், கல்வித் துறையிலும் முன்னேற்ற வேண்டுமென்பதற்காக 1949-ம் ஆண்டு 1¼ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த இந்தத் துறைக்கு இன்றைய தினம் ரூ. 8,16,35,200 ஒதுக்கீடு செய்திருக்கும் தன்மை குறித்து மகிழ்ச்சி கொள்ளுவதுடன், அதற்காக என்னுடைய நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் தென்னகத்தில் 1 கோடி மக்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் கல்வி வளர்ச்சிக்காக எட்டுக் கோடி ரூபாய் செலவாகிறது. 400 கோடி ரூபாய் பட்ஜெட்டில் 100 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்விக்காக செலவிடப்படும் தொகை அனைத்தையும் கல்வி இலாக்காவே பொறுப்பு ஏற்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் கல்விக்காகச் செலவாகும் 100 கோடி ரூபாயில், தாழ்த்தப்பட்ட மக்களின் கல்விக்காகவும், ஆசிரியர்களுக்கும், பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கும், மதிய உணவுக்காகவும், புத்தகங்களுக்காகவும் செலவழிப்பதில் என்ன கெட்டுப் போய்விடும். இதனைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரிசன மக்களின் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற 6 கோடி ரூபாயையும் கல்வி இலாக்காவே ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த 6 கோடி ரூபாய் போனால், எஞ்சியுள்ள 2 கோடி ரூபாயைக்கொண்டு அரிசன மக்களுக்கு என்ன நல்ல காரியம் நடக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 1949-ல் மதிய உணவுக்கு 15 காசு என்று சொல்லி, 525 கிராம் போட வேண்டும் என்று போடப்பட்ட உத்திரவு 1973-லும் அப்படியே இருந்து வருகிறது. 1949-லே அரிசி விலை, பருப்பு விலை என்ன, இப்போதுள்ள விலை என்ன என்று பார்க்கவேண்டும். 15 காசு என்பதை 25 காசு என்று ஆக்கினால்தான் உள்ளபடியே 875 கிராமங்களுக்குச் சோறு போடமுடியும். உள்ளபடியே இந்த மதிய உணவுத் திட்டம் எவ்வாறு நடைபெறுகிறது என்று பார்த்தால், 875 கிராமங்களில் அது நடைபெறுவதில்லை. அதிகாரிகளாக இருப்பவர்கள் போய் பார்வையிடுகிறார்கள். இருந்தாலும் நடைபெறுவதில்லை.

நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் உள்ளாட்சித் துவக்கப் பள்ளிகளில் 6 காசுக்குத் தான் சாப்பாடு போடுகிறார்கள். நான் 15 காசு தருகிறேன் என்று இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அது பொருந்தாது. ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் கல்வி இருப்பதால், கேர் நிறுவனத்தில் கொடுக்கிற உணவை,



அமெரிக்காவிலிருந்து வருகிற உணவைத் தருகிறார்கள். அதைக்கூட மூன்று மணிக்கு சிறுநீர் கழிக்கின்ற இடைவேளையில் அந்த கேர் உணவை வாங்கிக் கொடுத்தால் நலமாக இருக்கும். இப்படிப்பட்ட நிலைமையில் மாணவர்கள் கால் வயிற்றுக்கூட சாப்பிட முடியாது. அமைச்சர் அவர்கள் சென்னையில் உள்ள பாடசாலைகளைச் சென்று பார்வையிட்டால் தெரியும். அழகாகச் சொல்லி விட்டால்மட்டும் போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்காக இதுவரையில் 80 ஆயிரம் குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டிருந்தாலும், வீடு கட்டுவதற்கு எந்த வசதியும் இல்லாமல் இருக்கிறார்கள் என்பதைப் பேரவை உறுப்பினர்கள் அறிவார்கள். மனை உள்ளவர்களுக்கு வீடுகட்டித் தரும் முறையில், தமிழ்நாட்டு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு 10 ஆயிரம் கல்வீடு கட்டித் தரும் திட்டத்தை நிறைவேற்றுவதாக அறிவித்திருக்கிறார்கள். இப்படி அறிவிக்கப்பட்டுள்ள கல்வீடு திட்டம், இதுவரையில் கட்டப்பட்ட கல்வீடுகள் போல் இருக்கக்கூடாது. ஏற்கெனவே முன்னால் இருந்த ஆட்சியில் ரூ. 500 வீடு கட்ட கொடுக்கப்பட்டது. இப்போது ரூ. 1,500 கொடுக்கப்படுகிறது. அதைக்கொண்டு வீடு கட்டமுடியுமா என்று சிந்திக்க வேண்டும். குடிசை மாற்று வாரியம் அமைத்திருப்பது போல, வீடுகள் அமைக்க தாழ்த்தப்பட்ட நலத்துறை வீட்டுவசதி மேம்பாட்டு வாரியத் தலைவரை நியமிக்கவும், வீடுகளை நல்ல முறையில் கட்டித் தரவும் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தாழ்த்தப்பட்ட அரிசன பள்ளிகளுக்குப் புத்தகங்கள் காலா காலத்தில் வழங்குவது கிடையாது. பள்ளிக்கூடம் திறப்பது ஜூன் மாதத்தில். புத்தகம் வழங்குவது டிசம்பர், சனவரித் திங்களில் என்றால், கல்வி வளர்ச்சி எப்படி இருக்கும்? இரண்டு ஆண்டுகளாக இந்த நிலை நீடிக்கிறது.

அடுத்து, உணவு விடுதிகளுக்குப் பதிவேடுகள் குறிப்பிட்ட காலத்தில் வழங்கப்படுவதில்லை. விடுதிக் காப்பாளர்கள் கையால் பதிவேடுகளை எழுதுகிறார்கள். நான் பல பள்ளிக்கூட ஆசிரியர்களையும், விடுதிக் காப்பாளர்களையும் சந்தித்தேன். 4 ஆண்டுகளாகக் கொடுக்கவில்லை என்று தெரிவிக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இந்த விடுதிகளைச் சென்று பார்த்தால் தெரியும்.

அடுத்தபடியாக விடுதி மாணவர்களுக்கு, பிற்பட்ட மாணவர்களுக்கு பொங்கல், தீபாவளி காலத்தில் சீருடை அளிக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குச் சீருடை வழங்கப்படுவதில்லை. இதைப் பார்க்கின்றபோது

எதிர்வரிசையில் உள்ளவர்கள் மக்களிடத்தில் தவருன பிரசாரத்தைச் செய்கிருர்கள். இதைத் தவிர்க்க இந்த ஆண்டாவது சீருடை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* திரு. எம். சுரேந்திரன்: மாற்றுத் தலைவரவர்களே, சபைமுன் வைக்கப்பட்டிருக்கிற அரிசன நல மானியக் கோரிக்கைக் குறித்து வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அதைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு முன்னுல் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த விவாதங்களுக்கெல்லாம் பதிலளிக்கின்றபோது, அமைச்சர்கள் எல்லாம் மன்றத்திலே உறுப்பினர்கள் சொல்லுகின்ற குறைகளையும், கோரிக்கைகளையும் விசேஷமாகக் கவனித்து அதை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று ஒவ்வொரு தடவையும் வக்குறுதி அளிக்கிருர்கள். ஆனுல் இந்த மானியத்தில் 1967-லிருந்து தொடர்ந்து நான் குறையைச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். அந்தக் குறை இன்னும் தீர்க்கப்படவில்லை என்பதை முதலில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அரிசனங்களைவிடப் பழங்குடி மக்கள்தான் மிகப் பிரதானமாக கவனிக்கப்பட வேண்டியவர்கள் என்பது அவ்வளவு பேரும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒன்ருகும். ஆனுல் என்னுடைய தொகுதியில் பாலமலையில் வாழ்கின்ற பழங்குடி மக்கள்மீது அரசின் கடைக்கண் பதியாமல் இருப்பது கண்டு நான் மிகவும் வேதனைப்படுகிறேன். அவர்கள் கால்நடையாகச் செல்வதற்குக் கூட பாதை இல்லாத நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். அவர்களுடைய ஊரில் மின்சார விளக்கு போடுவதற்காக ரூ. 1,80,150-ல் ஒரு எஸ்டிமேட் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு இன்னும் அனுமதி வழங்கப்படாமல் இருக்கிறது.

இது போன்று அங்கே இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் உள்ள மாணவர்களுக்கு மாணவர் இல்லங்களோ, உணவு, உடை எதுவும் அளிக்கப்படுவதில்லை என்பதையும் வருத்தத்துடன் கூறிக்கொள்ளுகிறேன். அரிசன இலாக்காவால் செய்யப்படுகின்ற ஒவ்வொரு காரியங்களிலும் நாம் எவ்வளவு பணம் செலவு செய்கின்ருேம் என்பதைவிட, இந்தப் பணம் எவ்வளவு பயன்படுகிறது, அரசாங்கத்தின் உத்திரவுகள் எவ்வளவு நல்லமுறையில் செயல்படுகின்றன என்பதுதான் பிரதான அம்சம் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது சம்பந்தமாக இரண்டு உதாரணங்களைச் சொல்லி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுவரையில் சபாநாயகர் அவர்கள் நேரம் அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.



என்னுடைய தொகுதியில் சூரப்பள்ளி பஞ்சாயத்தில் குப்பம்பட்டி என்ற கிராமம் இருக்கிறது. அதில் அரிசனச் சேரி ஒன்று இருக்கிறது. அதில் சுமார் 100 குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். அதில் வாழ்பவர்களுக்கு வீடுகள் வசதியில்லை என்பதற்காக வேறு இடத்தில் வீடு கட்டித்தர நிலம் ஒதுக்கப்பட்டது. அவ்வாறு ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தில் ஒரு செட்டியார் விவசாயம் செய்து வந்தார். செட்டியாரிடத்திலிருந்த நிலத்தை எடுத்துக் கொள்ள நடவடிக்கைகள் வந்தவுடன், செட்டியார் அந்த நிலத்தை ஒரு கவுண்டருக்கு விற்ருர். கவுண்டர் நிலத்தில் கிணறு வெட்டி, சுற்றிலும் சுவர் எழுப்பி விவசாயம் செய்ய ஆரம்பித்தார். அதை நிர்பந்தப்படுத்தி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று ஏற்பட்டபோது, ஆளுங் கட்சியைச் சேர்ந்த கந்தப்பக் கவுண்டர் நிலம் வாங்கி கவுன்சிலருக்கு உதவி செய்து அவருக்குப் பட்டா வாங்கித் தர ஏற்பாடுகள் செய்து, நிலத்தைப் பட்டா வாங்கித் தந்து விட்டார்கள் என்று அங்கேயுள்ளவர்கள் கூறுகிருர்கள்.

ஆகவே, இன்றைக்கு அரிசன சேரிக்காக ஒதுக்கப்பட்ட நிலம் விற்கப்பட்டு, இன்னொருவருக்குப் பட்டா செய்யப்பட்டிருக்கின்ற நிலையில், அவர்களுக்கு வீடு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக புகார்கள் செய்யப்பட்டு, ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், தாசில்தார் ஆகியோர் இன்ஸ்பெக்ஷன் செய்து, அதற்குப் பின்னுலும் அவர்களுக்கு விமோசனம் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம், வேருெருவருக்குப் பட்டா செய்யப்பட ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் உதவிசெய்து, அரிசனங்கள் வீடு இல்லாமல் இருப்பது மிகவும் வேதனை அளிக்கின்ற ஒன்ருகும்.

அதே போன்று நங்கவள்ளியில் அரிசனச் சேரியை மெயின் ரோடாகிய மோட்டூர் பாதையுடன் இணைக்க ஒரு இணைப்புப் பாதை போட 1964-ம் வருடம் உத்திரவு போடப்பட்டது. 1964-ம் வருடம் டிசம்பர் மாதம் அது கெஜட்டில் வெளியிடப்பட்டு, அதை எடுத்துக் கொள்ளுவதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது. 4—1—1965-ல் ஆறும் நம்பர் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்னுல், நில உடமையாளர் தர்மலிங்கம் செட்டியார் உயர்நீதி மன்றம் சென்று ரிட் பதிவு செய்து 26—9—1967-ல் தள்ளுபடி செய்யப்பட்டது.

முற்பகல் 11.30

இப்படித் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னுல், நிலவுடைமையாளர்கள் தற்போது எடுத்திருக்கும் நடவடிக்கைகளைக் கைவிட வேண்டுமென்றும், தாங்கள் இலவசமாகப் பாதை போடுவதற்கு வேறு நிலம் தருவதாகவும் 15—12—1967-லே அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்தார்கள். அந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் மேற்படி நடவடிக்கை எடுக்க

வேண்டாம் என்று 27—12—1967-ல் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. இதனால் ஏற்பட்ட நிலைமை என்னவென்று பார்த்தால் சுமார் 50 ஆண்டுகளாக அரிசன மக்கள் பயன்படுத்தி வந்த அந்தப் பாதையை அவர்கள் விரும்பிக் கேட்டும் அது கிடைக்காமல் போய்விட்டது. மேல் ஜாதிக்காரர்கள் அந்தப் பாதையைக் கொடுக்க விரும்பாததால் அவர்களுக்கு அது கிடைக்கவில்லை. ஆகவே, இன்னும் அரிசனங்களுக்குச் சலுகை செய்வதாகச் சொல்கின்ற இந்த அரசாங்கம் மேல் ஜாதிக்காரர்கள் சொல்வதைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்குப் பின்னால் அந்த அரிசனங்கள் தங்களுக்குத் தாங்கள் கேட்ட பாதைதான் வேண்டுமென்று கேட்டு, கிளர்ச்சி, உண்ணாவிரதம் நடத்தி பின்னால் போராட்டம் நடத்தினார்கள். அதனால் இந்த அரசாங்கம் இலவசமாகக் கொடுத்த பாதையை விட்டுவிட்டு, பழைய பாதையே அந்த அரிசனங்கள் பயன்படுத்த வகை செய்யவேண்டுமென்று 19—10—1970-ல் அரசாங்கம் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் இதுநாள் வரையில் அதைச் செயல்படுத்தவில்லை. இந்த விஷயத்தைப்பற்றி 7—8—1971-ல் வட சேலம் மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதற்கு இந்த விஷயத்தைப்பற்றித் தமிழ்நாடு கெஜட்டில் விளம்பரப்படுத்திய பின்னால்தான் வேலையைத் துவங்கமுடியும் என்று சொன்னார்கள். அதுபற்றிப் பின்னால் 21—8—1971-ல் அரசாங்கத்திற்குப் கடிதம் எழுதப்பட்டது. அதற்கு நில ஆர்ஜித நோட்டிபிக்கேஷன் 12—3—1971-ல் செய்யப்பட்டதாகவும் 10—4—1971-லே அதுபற்றி கெஜட்டில் வெளியிட்டதாகவும் 13—10—1971-ல் அறிவிக்கப்பட்டது இவ்வளவும் நடந்த பின்னாலும் இன்னும் அந்தப் பாதை வேலை நடைபெறவில்லை. 1964-லே இருந்து 1973 வரையில் வற்புறுத்தப்பட்டும் இன்னும் வேலை நடக்கவில்லை என்றால் அதற்கு என்ன காரணம். அந்தச் செட்டியாருக்குத் துணையாக இங்கே ஆளும் கட்சியில் இருக்கிற செட்டியார்கள் இருப்பதால் தான் இந்தத் தாமதம் ஏற்படுகிறது என்பதை நான் அழுத்தந் திருத்தமாக நான் கூறிக் கொள்கிறேன். இதுபோன்ற அரசாங்கத்தில் இருந்தால் அரிசன மக்கள் எப்படி நன்மையடைய முடியும்? அரசாங்கம் அரிசனங்களுக்குச் சலுகை அளிப்பதாக எப்படிச் சொல்லமுடியும்? ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவேதான் காவேரிபுரத்திலே இருக்கின்ற செட்டித்கோட்டாம் சக்கரையும் இருக்கின்றன. அங்கும் இன்னும் அரிசனங்களுக்கு நடைபாதைக்கு நிலம் ஒதுக்கப்படவில்லை. ஆலமரத்துப்பட்டி அரிசனங்களுக்கு அவர்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்துவருகிற—சுடுகாட்டுப்பாதை



ஒதுக்கப்படவில்லை. தண்டா பஞ்சாயத்திலுள்ள அரிசனங்களுக்கும் வீரக்கல் புதூர் கிராமத்திலுள்ள அரிசனங்களுக்கும் இன்னும் வீட்டுமனைகள் ஒதுக்கப்படவில்லை. (மணியடிக்கப்பட்டது.) அயோத்தியா பேட்டை டவுன்ஷிப்பிலுள்ள அம்பேத்கார் நகர், காமராஜ் நகர், கவிபுரம் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீட்டு மனை இல்லை. அவர்களுக்கு எல்லாம் உடனடியாக வீட்டு மனைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற. . . . . . . (மணியடிக்கப்பட்டது).

திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, இந்த மன்றத்திலே இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கும் மீனள மானியக் கோரிக்கையை ஆதரித்து அரசு செயல்படுத்துகின்ற திட்டங்களைப் பற்றி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவிலே கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சம் டன் என்ற அளவிலே மீன் உற்பத்திப் பெருக்கத்தை உருவாக்குகின்ற வகையிலே பற்பலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். இப்படிப்பட்டத் திட்டங்களிலே ஒன்று—என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பெரியதாழையில் ஒரு பனிக்கட்டி உற்பத்தித் தொழிற்சாலைக்கு 1972-ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தத் தொழிற்சாலை 1973-ம் ஆண்டிலே கட்டி முடித்து, உற்பத்தித் தொடங்க வேண்டுமென்ற அடிப்படையிலே அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேலையைக் கொஞ்சம் துரிதமாகச் செயல்பட்டு, விரைவிலே வேலையைத் தொடங்குவதற்கு ஆவனச் செய்ய வேண்டுமென்று இந்தத் துறையைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுதவிர, அங்கே இருக்கின்ற குலசேகரப்பட்டினம் முன்பு ஒரு காலத்திலே நல்ல துறைமுகமாக இருந்தது. அது இப்போது துறைமுகமாக இல்லை. எனவே, அங்கே ஒரு மீன்பிடித் துறைமுகத்தை அல்லது ஒரு தோணித்துறையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கை அறிக்கையைப் பார்க்கின்றபோது நான்காவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ஏறத்தாழ ஆயிரம் விசைப் படகுகள் இந்த நாட்டிலே மீனவர்களுக்குச் செய்து தரப்பட வேண்டுமென்ற குறிக்கோளில் ஓரளவு எட்டக்கூடிய நிலை இருக்கிறது என்றும், வருகின்ற ஆண்டிலே ஏறத்தாழ 254 விசைப்படகுகள் செய்துதரப்பட இருக்கின்றன என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக சாதாரண தோணிகளுக்கும் கட்டு மரங்களுக்கும் இன்போர்டு என்ஜின்களும், அவுட் போர்டு

என்ஜின்களும் பொருத்தப்படும் என்று சொல்லிவந்து, முதலிலே கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த முட்டத்தில் இந்திய-பெல்ஜியத் திட்டத்தின்படி அவுட் போர்டு என்ஜின்களைக் கட்டுமரங்களிலே பொருத்திப்பார்த்து, ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது என்றும், அதைப்போலவே தஞ்சை மாவட்டத்தில் தோணிகளுக்கு இன்போர்டு என்ஜின்களைப் பொருத்தி ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது என்றும், அது இவை இப்போது ஆய்வில் இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆய்வு என்ற நிலையைக் கடந்து, நடைமுறை என்று சொல்லக்கூடிய அளவுக்கு வேகமாகக் காரியங்கள் நடைபெற வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அரசாங்கம் வழங்கும் விசைப்படகுகள் கொஞ்சம் வசதிப் படைத்தவர்களுக்குத்தான் கிடைக்கிறது. ஆனால் சாதாரணக் கட்டுமரங்கள் வைத்திருக்கக்கூடியவர்கள் ஏறத்தாழ 30,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே இப்படிப்பட்ட இன்போர்டு, அவுட் போர்டு என்ஜின்களைக் கட்டுமரங்களிலே பொருத்துவதற்கு, அதன் பயனை அவர்கள் அடைவதற்கு வகைசெய்யப்பட வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு 258 லட்சத்திற்கு மானியம் கோரியிருக்கிற இந்த நேரத்தில் ஏறத்தாழ 120 லட்சம்வரை விசைப்படகுகளுக்குச் செலவிடப்படுகிறது. அதிலே பத்தில் ஒரு பங்காவது, 10 லட்சம் அளவுக்காவது இப்படிப்பட்ட சாதாரணக் கட்டுமரங்களையும், தோணிகளையும் வைத்திருக்கின்றவர்களுக்கு இன்போர்டு, அவுட்போர்டு எஞ்சின்கள் இந்திய-பெல்ஜியத் திட்டத்தின்மூலம் செய்து தரப்படுவதற்குத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் எங்கள் பகுதியில் சாத்தான்குளம், ராதாபுரம், திருச்செந்தூர் கடலோரப் பகுதிகள் இருக்கின்றன. அங்கே விசைப்படகுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. நாட்டுப் படகு வைத்திருக்கின்ற மீனவர்கள் ஏறத்தாழ 30,000 பேர்கள் இருக்கிறார்கள். விசைப்படகு வைத்திருக்கின்றவர்களுக்கும் நாட்டுப் படகு வைத்திருக்கின்றவர்களுக்கும் கடந்த இரண்டாண்டுக் காலமாக ஒரு பெரும் பிரச்சனை இருந்துகொண்டிருக்கிறது. 1971-ம் ஆண்டிலே இரு சாராருக்கும் ஒரு சமரச உடன்பாடு ஏற்பட்டது. அதையும் மீறி விசைப்படகு வைத்திருக்கிறவர்கள் நடவடிக்கையினால் தகராறு ஏற்படுகிறது. 1972-ம் ஆண்டிலே அரசு இதுபற்றி ஒரு ஆணை பிறப்பித்தது. அந்த உத்தரவில் வாரத்தில் ஒருநாள் தான் விசைப்படகுக்காரர்கள் கட்டுமரம் வைத்திருப்பவர்கள் மீன்பிடிக்கும் இடத்தில் மீன் பிடிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தின் கடனையும், மானியத்தையும் பெற்று விசைப்படகு வைத்திருப்பவர்கள் இந்த அரசாங்க உத்தரவை மீறிக்கொண்டிருக்கிறார்கள்,





அதனால் அங்கே இருக்கின்ற ஏறத்தாழ 30,000 நாட்டுப்படகு மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்தத் தகராறு ஏற்படாமல் இருக்க, நாட்டுப் படகு வைத்திருக்கும் மீனவர்களை பாதுகாப்பட, அரசாங்கம் உத்தரவை உடனடியாகச் சரிவர அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதில் நடைமுறையில் ஏதாவது சிக்கல் இருக்குமானால் அதைப் போக்குவதற்கு உடனடியாகச் சட்டம் இயற்றக்கூடிய அதிகாரம் நமது அரசுக்கு இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தப் பகுதியைப் பாதுகாக்கப்பட்ட இடமாக்க வேண்டுமானால் ஒரு சட்டத்தையே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வ. முத்து: தலைவரவர்களே, இன்று சட்டமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டிருக்கும் 1973-74-ம் ஆண்டு அரிசன நலம்—மீன்வளத் துறை மானியங்களை ஆதரித்து, இரண்டொரு வார்த்தைகள் பேச முற்படுகிறேன்.

இந்த அரிசன சமுதாயம் முன்னேற ஒரே வழி கல்விதான். ஆனால் ஆண்டுக்காண்டு கல்விக்கு அதிகத் தொகை ஒதுக்கிவந்த நமது முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு குறைத்துவிட்டார்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரிசன மாணவர்களுக்கு அரிசன பள்ளிகளில் மதிய உணவுக்காக 15 காசு வீதம் கொடுக்கப்படுகிறது. இதனால் அரிசன மாணவர்களுக்கு வீட்டில் என்ன பற்றாக்குறை இருக்கிறதோ, அதே பற்றாக்குறைதான் பள்ளியிலும் இருக்கிறது. ஆகவே, இதை 25 காசாக உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரிசன மக்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்கும், கிணறுகள் தோண்டுவதற்கும், மானியங்கள் கொடுக்கப்படுவது போல விவசாயக் காரியங்களுக்கும் அவர்களுக்கு மானியங்கள் கொடுக்க வேண்டும். குறிப்பாக விவசாய பம்பசெட்டுகள் வைப்பதற்கு மானியங்கள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களிலே அரிசனங்கள்தான் பெரும்பாலும் விவசாயக் கூலிகளாக இருக்கின்றார்கள். இவர்கள் கிணறுகளை வெட்டும்போது வெடி விபத்துக்களில் கை கால் இழந்து, சில வேளைகளில் உயிரையும் இழந்திடக் கூடிய நிலை ஏற்படுகிறது. எனவே இப்படி விபத்துக்குள்ளாகிவிடுகின்றவர்களுக்கு கட்டாயமாக நிதி உதவி அளிக்கப்பட வேண்டும் என்று தலைவர்கள் மூலமாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. வ. முத்து] [1973 மார்ச் 19

அடுத்து, துப்புறவுப் பணியாளர்கள் விஷயத்தில் சற்று கூடுதலாகக் கவனம் செலுத்த வேண்டும். மற்ற எந்தத் துறையில் வேலை நிறுத்தம் செய்தாலும் ஓய்வு பெற்றவர்களையோ அல்லது மற்றவர்களையோ வைத்துக் கொண்டு பணியினைத் தொடரலாம். ஆனால் துப்புறவுத் துறையில் உள்ளவர்கள் வேலைநிறுத்தம் செய்தால் யாரையும் இழுக்கமுடியாது. இது கீழ்த்தரமான வேலை என்று கருதி இதைச் செய்ய யாரும் முன்வருவது இல்லை. எனவே இந்த வேலை செய்கின்றவர்களுக்கு அதிக சலுகைகளையும் வசதிகளையும் அளிக்க அரசு யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, தீண்டாமை ஒழிப்பினை மேலும் தீவிரப்படுத்த வேண்டும். இன்னும் கிராமங்களிலே அரிசனங்கள் அரிசனங்களாகத்தான் நடத்தப் படுகின்றார்கள். காவல் நிலையங்களில் போய் அவர்கள் புகார்களைக் கொடுத்தால், கொடுக்கப்பட்ட புகார் உண்மைக்குப் புறம்பானது என்று தள்ளி விடுகின்றார்கள். கிராமத்தில் 100-க்கு 15 பேருள்ள அரிசனங்கள் உண்மைக்குப் புறம்பாக எதையும் சொல்லி அந்தக் கிராமத்தில் வாழமுடியாது என்பது அனைவருக்கும் தெரியும். கள்ளுக்கடையில்கூட ஜாதி இந்துக்களுக்குக் கொடுக்கப்படும் பாட்டில்களில் அரிசனங்கள் குடித்துவிட்டார்கள் என்ற முறையில் பல அரிசனங்கள் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். போதையிலேயே ஜாதி பாகுபாடு என்றால் மற்ற நேரத்தில் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பார்த்திட முடியும் என்றே கருதுகிறேன்.

நான் சட்ட மன்ற உறுப்பினரானபிறகு நான் ஒரு பொது இடத்தில் அமர்ந்துகொண்டிருந்தேன். அந்த வழியே வந்துகொண்டிருந்த ஒரு பெரியவர் தன் சொந்தக்காரன் என்று எண்ணி என்னை வணங்கிவிட்டுப்போனார். கூட இருந்தவர் நான் ஒரு அரிசன் என்பதை அறிவித்தபிறகு 100 அடி தூரத்திற்குச் சென்ற அவர் திரும்பிவந்து "தன் சொந்தக்காரன் என்று எண்ணிவிட்டேன்" என்று சொல்லி வணக்கத்தினைத் திரும்பப்பெற்றுக் கொண்டுவிட்டார். சட்டமன்ற உறுப்பினரான எனக்கே இந்த நிலை என்றால் மற்றவர்களுடைய நிலையினை யோசித்துப்பார்த்து இந்தத் தீண்டாமை ஒழிப்பினைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையைப் பாராட்டி நன்றி கூறி அமருகிறேன். வணக்கம்.

திரு. கு. அ. பொம்மன்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, அரிசன நலத்துறை மானியத்தின்மீது எங்கள் கட்சி கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையினை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.



1973 மார்ச் 19] [திரு. கு. அ. பொம்மன்]

முதலாவதாக இந்த மானியத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 815.35 லட்சத்தில் ரூ. 596.16 லட்சம் கல்விக்காகப் போக மிச்சமுள்ள ரூ. 223.19 லட்சம் இதர தலைப்பின்கீழ் உள்ள பொருளாதார, சுகாதார, வீட்டு வசதிகளுக் காக செலவிட அரசு திட்டமிட்டிருக்கிறது. இப்படி வீடு கட்டும் திட்டத்திற் காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதுமா என்று பார்த்தால் நிச்சயமாக இது போதாது என்ற நிலைதான் இருக்கிறது. மேலும் இதை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 816.35 லட்சத்தில் மத்திய அரசு உதவி யாக நமக்குக் கொடுத்த தொகை எவ்வளவு? அதில் மாநில அரசின் பங்கு எவ்வளவு? என்று இதில் குறிப்பிடவில்லை. எனவே அமைச்சர் அவர்கள் இதற்கான விளக்கத்தைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கல்லூரிகளில் மலைசாதியினர் மாணவர்களுக்கென ஒதுக்கப் பட்டுள்ள 16 சதவிகித ஒதுக்கீடு போதுமா என்பதை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. இது இந்தக் கல்வி ஆண்டிலிருந்து செயல்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல 1969-70-ம் ஆண்டிலே ஒரு உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டு, அதன்மூலம் அரசுப் பணிகளில் அரிசனங்கள் மலைவாசி மக்கள் அதிக இடம் பெறுவதற்கான வசதி வாய்ப்புகளை பெருக்கித் தருவதில் ஆழ்ந்த அக்கறை எடுத்துக்கொண்டுள்ளது என்று சொன்னார்கள். அந்தக் குழு தன் பணியினை எவ்வாறு ஆற்றியிருக்கிறது என்பதனையும் அதன் அறிக்கை என்ன ஆயிற்று, ஏன் அந்த அறிக்கை இந்த அவைமுன் வைக்கப் படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, தொழிலில் ஈடுபடும் அரிசனங்களுக்கு கடன் உதவிகளைக் கொடுத்துவருகிறோம். இதன்படி 22 தொழில்கள் குறிப்பிடப்பட்டு அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும் இப்படிக் கடன் உதவிகள் அளிக்கப்படுகிறது. இதனைதவிர்க்க இந்த இந்தத் தொழில் என்பதை எடுத்து விட்டு அரிசனங்கள் ஈடுபடும் அனைத்துத் தொழில்களுக்கும் இப்படிப்பட்ட கடன் உதவி அளிக்கப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட வேண்டும். அது போன்று தொழில் கருவிகளுக்கும் இப்படிப்பட்ட முறையில் வழங்கப்படு கிறது. அதில் ஒரு குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மட்டும் கருவிகள் கொடுக்கலாம் என்று இருக்கிறது. இதை மாற்றி எந்தெந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்களோ, அந்தத் தொழில்களுக்கான கருவிகளை அளித்திட வேண்டும் என்று தற்போதுள்ள அரசு உத்தரவை மாற்றிப்போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வீட்டு வசதிக் கழகம். நான் ஏற்கனவே பொதுவிவாதத்தின் போது இதைப்பற்றித் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். பத்தாயிரம் வீடுகளை அரிசனங்களுக்கும் மலைவாசிகளுக்கும் கட்டுவது என்பது திட்டம் தாழ்ந்த அல்லது சமவெளிப் பிரதேசத்தில் இவர்களுக்காகக் கட்டப்படும் வீடுகளைப் போவில்லாமல் மலைவாசிகளுக்குக் கட்டப்படும் வீடுகளின் கூரை சிமெண்டு ஷீட்டுகள் அல்லது ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகளைப் போட்டு நல்ல செங்கற்களினாலோ அல்லது கருங்கல்லினாலே, கட்டிடங்களாகக் கட்டினால்தான் நீடித்திருக்கும். இதிலும் எந்த மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் அரிசனங்கள் இருக்கின்றார்களோ அந்த மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

மருத்துவத் துறையைப் பொறுத்தமட்டில் மலைப்பிரதேசத்தில் மொபைல் மெடிகல் யூனிட்ஸ் இருக்கின்றன. ஆனால், இவை பெரும்பாலும் பாதையோரத்திலுள்ள கிராமங்களுக்கு மட்டுமே சென்று வருகின்றனவே தவிர, நீலகிரி மாவட்டத்தைப் பொருந்த வரையில் உள்ளிட்ட பகுதியிலுள்ள கிராமங்களுக்குச் செல்லுவதேயில்லை. இதை நான் 'அட்வைஸரி கமிட்டி' யில் கூட எடுத்துச்சொல்லி யிருக்கிறேன். எனவே இதை அரசு மிகமிகத் தீவிரமாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக என் தொகுதியைப் பற்றி இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். மாநிலத்திலுள்ள அரிசனங்களுக்கு நிலம் ஒதுக்குவதில் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகின்றது. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1960-க்கு முன்பு அங்கே குடியேறிய அரிசனங்களுக்கு அந்த நிலங்களை ஒப்படைப்பதில் எந்தத் தடையும் இல்லை. அவர்களுக்கே அதை வழங்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது ஆனால், எங்கள் ஜில்லாவில் 1950-ம் ஆண்டில் ஒரு தடை உத்தரவினைப் பிறப்பித்தார்கள். அதாவது, மின்சார அணைக்கட்டுகளில் மண்விழுந்து அணைக்கட்டுகள் தூர்ந்து விடும் என்ற காரணத்தை உள்ளிட்டு நிலங்களைக் கொடுக்கக்கூடாது என்று உத்தரவு போடப்பட்டது. ஆனால் 1972 ஜூன் மாதம் இந்தத் தடை நீக்கப்பட்டுவிட்டது. இதன்படி அரிசனங்களுக்கு நீலகிரி மாவட்டத்தில் நிலங்களைக் கொடுப்பதில் தற்போது தடை ஏதும் இல்லை. ஆனால் நிலங்கள் கொடுக்கப்படவில்லை. இப்போது இந்தத் தடை நீக்கப்பட்டு விட்டதால் உடனடியாக அவர்களுக்கு நிலங்களைக் கொடுக்க அரசு முன்வர வேண்டும்.
வேண்டும்.

அடுத்து, வடஆற்காடு மாவட்டத்திலுள்ள அம்மணந்தாங்கல் கிராமத்திற்குப் பக்கத்திலுள்ள அரிசனக் காலனிக்கு ரோடு போட வேண்டும் என்று கடந்த பல ஆண்டுகளாக இந்த அரசுக்கும் முன்பிருந்த அரசுக்கும் விண்ணப்பங்



களைக் கொடுத்திருந்தும் பாதை போடப்படாமலேயே இருக்கிறது. இந்தக் கோரிக்கையை யொட்டி இராணிப்பேட்டை ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு முன்பு அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. எனவே இதில் அரசு கவனம் செலுத்தி உடனடியாக இந்தப் பாதையை அரிசனங்களுள்ள அந்தக் காலனிக்கு அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சத்துணவுத் திட்டம் ஸ்லம் ஏரியாக்களில் தான் செயல்படுகிறதா? பொதுப்படையாக எல்லா இடங்களுக்கும் கொடுக்கப்படுகின்றதா? இதற்கு என்ன விளக்கம் அமைச்சர் கொடுக்கப்போகின்றார் என்று தெரியவில்லை. அமைச்சர் அவாகள் இதை விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீண்டாமையைப் பொறுத்தவரையில், அதற்கு தனிப் பிரிவு போலீஸ் செயல்படுகிறது என்று கூறப்படுகிறது. இது ஒரு குறிப்பிட்ட சில மாவட்டங்களில் தான் செயல்படுகிறது. இது எல்லா மாவட்டங்களுக்கும் நீடிக்கப்பட வேண்டும். சில சச்சரவுகள் ஏற்படுகின்றபோது, போலீசுக்குப் போய் சொன்னால், அவர்கள் கவனிப்பதில்லை. எனவே, இந்தப் போலீஸ் பிரிவு எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. இரா. இராமலிங்கம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மீனளத்துறை மானியத்தின்பேரில் ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

மீன் உணவு மக்களுக்கு நல்லதோர் சத்துணவு. அதை எல்லா மக்களுக்கும் வேகமாகவும், குறைந்த விலையிலும் கொடுக்கக் கூடிய அளவில் மீன்வளத் துறை நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மீனளத் துறை இன்னும் அதிகமான அளவில் மீன்களைப் பிடிக்க இப்போது இருக்கின்ற முறையை மாற்றி, நவீன முறையில் மீன் பிடிக்க வசதிகளைச் செய்து தர வேண்டும். இந்த துறையினர், விசைப் படகுகளைக் கொடுப்பதற்கு அதிக அக்கறை செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் ஆயிரம் விசைப் படகுகளை மீனவர்களுக்கு வழங்குவது என்ற ஏற்பாட்டில், 1973-74-ஆம் ஆண்டு 245 விசைப் படகுகளை வழங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதுவரையில் சப்சிடி கொடுக்கப்பட்டு வந்தது. அதை நிறுத்த வேண்டும் என்ற குறிப்பிருக்கிறது.

நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த சப்சிடியை நிறுத்த வேண்டாம், தொடர்ந்து அந்த சப்சிடி கொடுக்கப்பட வேண்டும் என்பது தான்.

இந்த விசைப் படகுகளின் விலை மிகவும் அதிகமாக இருக்கிறது. மீனவர்கள் தவணை முறையில பணத்தைத் திருப்பிச் செலுத்தக் கூட கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே அவர்களுக்குக் கொடுக்கிற சப்சிடியை தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விசைப் படகுகளைக் கொடுக்கின்ற நேரத்தில், பர்மா-சிலோனிலிருந்து வந்த அகதிகளுக்கு, சில அளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல முன்னாள் ராணுவத்தினர்கள்—மீன் துறையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கும் சில சதவீதங்கள் ஒதுக்கி அவர்களுக்கும் விசைப் படகுகள் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைத் தவிர தனியார் கமர்சியல் வங்கிகளின் மூலமாக 12 லட்சம் ரூபாய்க்கும் அதிகமான தொகைக்கான விண்ணப்பங்கள் வந்திருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கடனைப் பெறுவதற்கு, செக்யூரிடி தர வேண்டுமென்று அந்த வங்கியினர் கேட்கிருர்கள். அதை மாற்றி ஏழை எளிய மீனவர்கள். அந்த செக்யூரிடி கொடுக்க முடியாத நிலையில் இருப்பதால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விசைப் படகுகளையே செக்யூரிடியாக வைத்து, கமர்சியல் வங்கிகளில், கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டுப் படகுகளிலும், கட்டுமரங்களிலும் யந்திரங்களைப் பொறுத்தி, அதன் மூலமாக அந்தத் துறையிலே முன்னேற்றம் செய்யக் கூடிய அளவுக்கு இன்றைக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தூத்துக்குடியில் நாட்டுப் படகுகளில் யந்திரங்களை வைத்து மீன் பிடிக்கிருர்கள். இதில் ஆராய்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இது இன்னும் ஆராய்ச்சியிலேயே இல்லாமல் உடனடியாக நாட்டுப் படகுகளுக்கும், கட்டுமரங்களுக்கும் யந்திரங்களைப் பொறுத்துகின்ற அளவுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடிப் பகுதியில், கடலில் ஆபத்துக்குள்ளானவர்களுக்கு உதவி செய்வதற்கு லாஞ்சுகள் போதிய அளவில் இல்லை என்று சொல்லப்படுகிறது. இந்த லாஞ்சுகளை அதிகமான அளவுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





மத்திய அரசைப் பொறுத்தவரையில், தூத்துக்குடியில் "ஆப் ஷோர் ஸ்டேஷன்" வைத்திருக்கிருர்கள். அந்த ஸ்டேஷன் என்ன வேலை பண்ணுகிறது என்று தெரியவில்லை. அவ்வப்போது கடலில் 'ஃபிஷிங் க்ரவுண்ட்கள்' இருக்கின்றன என்பதைத் தெரிந்து மீனவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இது, அப்படி சர்வே செய்து மாநில அரசுக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறதா என்று தெரியவில்லை. அப்படி, உடனுக்குடன் பிஷிங் கிரவுண்டுகள் எங்கே இருக்கின்றன என்று தெரியப்படுத்தினுல் மீனவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தூத்துக்குடியில் ஐந்து டன் அளவுக்கு பனிக்கட்டி தயாரிக்கின்ற பேக்டரி இருக்கிறது. இது போதிய அளவுக்கு இல்லை. 10 டன் அளவுக்கு உற்பத்தி செய்கிற தொழிற்சாலையாக இதை உயர்த்த வேண்டும். மேலும், எங்கள் பகுதியில் வேன் வசதிகளை அதிகப்படுத்த வேண்டும். அப்போது தான் ஓரளவுக்காவது மீனை எடுத்துச் சென்று, விரைவாக, நல்ல நிலையில் விற்க ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் நைலான் நூல் அதிக அளவில் கிடைக்க அரசு வழிவகை செய்தால் மீனவர்களுக்கு வசதியாக இருக்கும்.

தூத்துக்குடியில் சங்கு குளிக்கின்ற தொழில் அரசின் துறையின் கீழ் இன்றைக்கு நடவடிக்கையில் இருக்கிறது. $2\frac{1}{4}$ அங்குலம், $3\frac{1}{2}$ அங்குலம் அளவுக்கு சங்குகள் எடுக்கப்படுகின்றன. வெளி மார்க்கெட்டில், $2\frac{1}{4}$ அங்குல சங்கினுடைய விலை ரூ. 3.25 ஆக இருக்கிறது. ஆனுல் அரசு ரூ. 1.25 தான் கொடுக்கிறது. இந்தத் தொகை போதாது. ரூ. 1.75 ஆக இதை உயர்த்த வேண்டும். அதேபோல, $3\frac{1}{2}$ அங்குலம் சங்குக்கு மார்க்கெட் விலை ரூ. 4.50 ஆக இருக்கிறது. ஆனுல் அரசு கொடுக்கின்ற விலை ரூ. 3.25. இதை ரூ. 3.50 ஆக உயர்த்தினுல் மீனவர்களுக்கு வசதியாக இருக்கும்.

அடுத்து, இந்த சங்கு எடுக்கின்ற தொழிலில் ஈடுபட்டவர்கள் இறந்துவிட்டால், அரசு காம்பன்சேஷன் கொடுப்பதில் சில சமயங்களில் தாமதம் ஏற்படுகிறது. உடனடியாக இந்தத் தொகை வழங்கப்படுவதற்கு இலாக்காவினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தூத்துக்குடியில் முத்துக் குளிக்கப்போவதில்லை என்று அறிவித்தார்கள். எனவே, இந்த ஆண்டு முத்துக் குளிப்பதாகத் தெரியவில்லை. கடலில் விளைந்த முத்துச் சிப்பிகள் அத்தனையும் இறந்து விட்டதாக மீனவர்கள் சொல்கிருர்கள். இதற்கு என்ன காரணம் என்று அரசு கண்டுபிடிக்க

[திரு. கே. இரா. இராமலிங்கம்] [1973 மார்ச் 19

வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த முத்துச் சிப்பிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. கார்த்திசன்: தலைவரவர்களே, அரசின் மீனளத் துறையின் மானியத்தை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு மீனளத் துறைக்கும் ஹரிஜன நலத் துறைக்கும் நமது அரசு பல கோடி ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. இதை எல்லோரும் பாராட்டக் கூடிய அளவுக்கு உள்ளது. இதுபோல, மீனளத் துறையிலும் நல்லபல காரியங்கள் செய்யப்பட்டு வந்தாலும ஒருசில விஷயங்களை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில், கடற்கரைப் பகுதியான கூட்டன்புள்ளியிலும் பெருமணலிலும் பத்தாயிரம் மீனவர்கள் இருக்கிறார்கள். இங்கேயுள்ள மீனவர்கள் மிகவும் ஏழ்மையான நிலையில் உள்ளவர்கள். அவர்களுக்கு வீட்டு வசதிகள் இல்லை. ஆகவே அவர்களுக்கு நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று முதலில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியான ராதாபுரத்தில் தொடர்ந்து கடல் அரிப்பு இருந்து கொண்டு வருவதால், மீனவர்கள் பெரிதும் அல்லலுக்கு ஆளாகி வருகிறார்கள்; வீடின்றி தவிக்கிறார்கள். எனவே, மற்றப் பகுதிகளிலுள்ள உபரி நிலங்களில் அந்த கிராமப்புற ஏழைகளுக்கு நமது இலாகாவின் மூலம் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், அங்கே மீனவர்களுக்கு நல்ல நூல் கிடைப்பது அரிதாக இருக்கிறது. கள்ள மார்க்கெட்டில் அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். அவர்களுக்கு ஒழுங்காக, நல்ல முறையில் சீரான விலையில் நூல் கிடைக்கச்செய்ய நமது அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, மீனவர்களுக்குப் பெரிய படகுகள் வாங்க கடன் வழங்குகிறார்கள். ஏழை எளிய மீனவர்கள் கட்டு மரங்களில் சின்னக் கருவிகள் வாங்க கடனுதவி செய்யவேண்டும். அடுத்து, சிறிய படகுகளிலும் மீன் பிடிக்க, என்ஜின்களைப் பொறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, ஏழை மீனவர்களுக்கு சின்ன என்ஜின் மோட்டார் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 19]

[திரு. வீ. கார்த்திசன்]

மேலும், கடலில் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்ற காலத்தில், கடல் காற்றினால் அவர்கள் கடலிலேயே இறந்து விடுகின்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட நேரங்களில் மீனவர்களின் குடும்பங்களுக்கு நியாயமான விசாரணை உடனடியாகச் செய்து உதவித் தொகை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மேலும் மீனவ கிராமங்களில் வசிப்பவர்களுக்கு உணவு தானியங்கள் கிடைப்பதில் சிரமங்கள் இருப்பதால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, ஆங்காங்கே கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவர்களுக்கு ஒழுங்கான முறையில், சீரான முறையில் உணவு தானியங்கள் கிடைக்கச் செய்ய அரசு முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனளத் துறையிலுள்ள மீனவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மீனளத் துறையில் அவர்களுக்கு அதிகமான அளவுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான ராதாபுரத்தில் கூட்டப்பள்ளி பகுதியில் குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை. எனவே, கடற்கரைப் பகுதிகளிலுள்ள அந்த கிராமங்களுக்கு குடி நீர் வசதி செய்து தரப்பட வேண்டும், சுத்திகரிக்கப் பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியான ராதாபுரத்தில் ஆண்டுதோறும் வரட்சியால் பாதிக்கப்பட்டு, இட்ட பயிர்கள் தீய்ந்து வருகின்ற நிலை காணப்படுகிறது. எனவே, அந்தப் பகுதியை வரட்சிப் பகுதியாக பிரகடனப்படுத்தி சர்க்கார் கடன்களையும், கூட்டுறவு நிலவள வங்கி கடன்களையும் தள்ளிப்போட வேண்டுமென்று அமைச்சரவர்கள் உத்தரவு பிறபிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரிசன நலத்தைப்பற்றி நான் ஒரு சில சொல்ல ஆசைப்படுகிறேன். என் பகுதியில் சுமார் 20,000 அரிசன மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு நமது அரசு பொருளாதார, சுகாதார வசதி செய்து தந்தாலும், இன்னும் ஒரு சில குறைகள் இருக்கின்றன. அங்கங்கு இருக்கும் அரிசனக் கிராமங்களுக்குக் குடிநீர் கிணறுகள் இல்லை. எனது ராதாபுரம் தொகுதியைப் பொறுத்தவரையில், அரிசன கிராமங்களிலுள்ளவர்களுக்கு மனைகள் கொடுத்தும் அந்த அரிசனக் கிராமங்களுக்கு குடிநீர் கிணறுகள் வெட்டப்படவில்லை. நெல்லை நல அதிகாரி அவர்களுக்கு ராதாபுரம் அரிசனங்களுடைய நலன்களைப் பற்றி சொல்லியும் இதுவரை நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. எனவே, அங்குள்ள அரிசனங்களுக்குக் குடி நீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 2·00

என் பகுதி அரிசனங்களுக்கு நீண்ட நெடுநாட்களாக மனைப்பட்டா கொடுத்தும் வீடுகட்டிக்கொடுக்கப்படவில்லை. அப்பகுதியிலுள்ளவர்களுக்கு விவசாயக் கருவிகள், தையல் மெஷின்கள், குடிநீர் வசதி இவைகள் செய்து தர வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, இந்த மீனளத்துறை பற்றி நான் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த மீனளத் துறைக்காக சற்றேக்குறைய ரூ. 2½கோடி ஒதுக்கியிருக்கிறோம். அந்த ரூ. 2½ கோடியில், 1½ கோடியை விசைப் படகுகளுக்காகவே ஒதுக்கியிருக்கிறோம். இதில், 245 விசைப்படகுகளை தயாரித்து, மீனவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற நல்ல திட்டத்தைப் பார்க்கிறோம். ஆனால், விசைப் படகுகளை உற்பத்தி செய்வதிலோ, உற்பத்தி செய்த படகுகளை மீனவர்களுக்கு வழங்குவதிலோ என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று இந்த இலாகா ஆராய்ந்து பார்க்காமல், இத்தகைய காரியங்களைச் செய்வதை இங்கு குறிப்பிட்டு சொல்ல ஆசைப்படுகிறேன். மொத்தமாக, நாமும் சில போட் பில்டிங் யார்ட்சை வைத்திருக்கிறோம். அத்தனை படகுகளையும் நாமே அங்கே கட்டுவது கிடையாது. வெளியிலே இருக்கிறவர்களுக்கும் படகுக் கட்டத் தருகிறோம். அதுவே தவறு. சமதர்ம ஆட்சியாளர்கள், எல்லாவற்றையும் நாமே உற்பத்தி செய்வோம் என்று சொல்கிறவர்கள், ஊரிலே இருக்கிற நல்ல தொழிற்சாலைகளை எல்லாம் எடுத்துக்கொள்வதில் ஆர்வம் காட்டுகிறவர்கள், தங்களிடமுள்ள தொழிற்சாலைகளிலே, தங்களுக்கு வேண்டியவற்றை உற்பத்தி செய்வதிலே ஏன் தயக்கம் காட்டுகிறார்கள் என்று புரியவில்லை. 245 படகுகளை போட் பில்டிங் யார்டில் உற்பத்தி செய்ய ஏன் காலதாமதம்? உங்களுடைய படகுக்கட்டும் துறையிலே இவைகளை உற்பத்தி செய்ய ஏன் முயற்சி எடுக்கவில்லை என்ற என்னுடைய முதல் கேள்விக்கு அவர்கள் பதில் அளிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த விசைப்படகுகளைத் தனியார் துறையிலே தயார் செய்பவர்களுக்குக் கொடுப்பதிலேயும் அதிகமான குறைபாடுகள் இருக்கின்றன. 1971-ல் நாம் மூன்று கம்பெனிகளுக்கு போட்டுகளைக் கட்ட அனுமதி வழங்கியுள்ளோம். மெக்கனைலட் போட் பில்டர்ஸ் 22 விசைப் படகுகளையும் அசோக் போட் பில்டர்ஸ் ஐந்து விசைப் படகுகளையும், நாதன் போட் பில்டர்ஸ் ஐந்து விசைப் படகுகளையும் கட்ட அனுமதியளித்திருக்கிறோம். ஆனால், அவர்கள் காலதாமத செய்து, அந்தப் படகுகளை உற்பத்தி செய்யமுடியாமலே போய்விட்டது.



அப்படி 33 படகுகளைச் செய்ய முடியாமலே போய், அதற்கு ஒதுக்கப்பட்ட பணமும் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது ரூ. 2½ கோடி ஒதுக்கி என்ன பயன்? இந்த ரூ. 2½ கோடியை காலா காலத்திலே படகுகளை உற்பத்தி செய்து மீனவர்களுக்கு வழங்கவேண்டுமென்று தான் நாம் ஒதுக்குகிறோம். என்ன காரணத்திற்காக இப்படி அவர்கள் காலதாமதம் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் கட்டக்கூடிய திறன் படைத்தவர்களா என்பதை ஆராய்ந்து பார்ப்பது கிடையாது. என்ன காரணங்களினாலோ இப்படி 1971-லே 32 படகுகள் செய்யப்படாமலே போனதைப் பார்க்கும்போது, உண்மையிலே ஒதுக்கப்படுகிற பணம் பயன்படுத்தப்படுகிறதா என்ற கேள்விக்கு அவர்கள் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கேரளத்திலே இருந்து வந்திருக்கிறவர்களுக்கெல்லாம் உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். மலையாளப் பகுதியிலே இருந்து வருகிறவர்களுக்கெல்லாம் உத்தரவு கொடுக்கிறார்கள். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. நம் மாநிலத்திலே தொழிலை நாம் எப்படி வளர்ப்பது? நம் மாகாணத்திலே தொழில் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்றால், அவர்களை ஊக்குவிக்காமல், வளர்க்காமல், பக்கத்தில் இருப்பவர்களுக்குக் கொடுத்தால், எப்படி தமிழ் மாநிலம் வளரும் என்பதை இந்த இலாகா சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்தத் துறையிலே மகாராஷ்டிரம் முதல் இடத்தைப் பெறுகிறது. கேரளம் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. தமிழகம் மூன்றாவது இடத்திற்கு வந்திருக்கிறது. தமிழ் மாநிலத்தைவிட கேரளம் சிறிய இடம். அந்த இடத்திலே யிருந்துகொண்டு, அவர்கள் இந்தியாவிலே இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கிறார்கள் என்றால், அதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

லோயஸ்ட் டெண்டர், 30 அடிப் படகுக்கு ரூ. 17,000, 32 அடிப் படகுக்கு இவ்வளவு என்று கொடுக்கிறார்கள். லோயஸ்ட் டெண்டர் என்று நீங்கள் கொடுக்கிறீர்கள். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதற்குப் பிறகு அந்தத் தொகைக்கு இந்த வகையிலே செய்ய முடியாது, எனக்கு இன்னமும் அதிகமாகக் கொடுங்கள் என்று எழுதுகிறார்கள், அதை நீங்கள் பரிசீலிக்கிறீர்கள் என்றால், டெண்டர் முறைக்கே அர்த்தம் இல்லாமல் போய்விடுகிறது. லோயஸ்ட் டெண்டரை எடுக்கிறோம். செய்யக்கூடிய திறன் இல்லாதவர்கள் என்றால், அடுத்ததற்குப் போகலாம். லோயஸ்ட் டெண்டர் என்று எடுத்துக்கொண்டு மற்றவர்களை உதறித் தள்ளிவிட்டு, விலைவாசி இப்படி இருக்கிறது. இதை செய்யமுடியவில்லை. ஆகவே, ரூ. 2,000 க்கு மேலே போட்டுத்

தாருங்கள் என்று சொன்னால் அதை ஒத்துக்கொள்ள முடியாது. There can be no revision upwards எப்படி நீங்கள் அதை ஒத்துக்கொள்ள முடியும்?

அவர்களால் செய்ய முடியவில்லையென்றால், அடுத்த டெண்டர்காரருக்குக் கொடுத்துவிட்டுப் போங்கள். குறைந்த டெண்டர் என்ற போர்வையிலே புகுந்து, டெண்டரை எடுத்துக்கொண்டு, அதை வாங்கிக்கொண்டு, பின்னால் எதையோ பயன்படுத்திக்கொண்டு, இப்பொழுது விலைவாசி ஏறிவிட்டது, எங்களால் இந்த விலைக்கு செய்யமுடியாது என்று சொன்னால், அதே விலைக்கு தமிழ் மாநிலத்திலிருந்து போட்ட டெண்டர்காரர்களுக்கு ரெபியூஸ் செய்து கொடுத்திருக்கிறார்களே அதற்கும், இதற்கும் அதிக வித்தியாசம் கிடையாது. ரூ. 250 வித்தியாசம் இருக்கும். கேரளத்திலே செய்தால் உங்களுக்கு எவ்வளவு நஷ்டம்? இங்கே இருந்து ஒரு ஆபீசர் போய் வர செலவு செய்யவேண்டும். ஒரு போட்டை பார்த்துவிட்டு வர ரூ. 300 செலவு செய்யவேண்டும். அங்கே இருந்து போட்டை இங்கே கொண்டுவரவேண்டும். அதற்கு செலவு. தமிழ் நாட்டிலேயிருந்து கேட்டவர்களுக்குக் கொடுத்தால், லாபமாக இருக்குமா என்பதை இந்த இலாகா ஆராய்ந்து பார்க்கிற அளவுக்கு நடந்து கொள்ளவில்லை. சிந்தித்துப் பார்க்கிற சூழ்நிலை இந்த இலாகாவில் இருக்கிறதா என்றால் இல்லையென்றுதான் சொல்லுவேன்.

கேரளாவிலே தயாரிக்கப்பட்ட படகுகளை வாங்கிக்கொண்டு, அந்த போட்டிலே வருகிற மீனை நீங்கள் வாங்காதே என்று சொல்கிறார்கள். Kerala Manufactured boats are lying idle in Madras. கேட்டால், அங்கேயிருந்து மீன் வந்தால் நீங்கள் வாங்கக் கூடாது என்று சொல்கிறார்கள். அவர்கள் மேல் என்ன கோபமோ தெரியவில்லை. அவர்கள் கோபத்தையும் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் முறைகளையும் புரிந்துகொள்ள முடியவில்லை. கேரளா மேனுபாக்ச்சர்ட் போட்டிலே மீன் பிடிடிக்கக் கூடாதா? இங்கேகூட, ரூல் 42-லே அட்ஜோர்ன்மென்ட் மோஷன், அந்தப் படகிலே மீன் வாங்கியவர்களையெல்லாம் மீனவர் சமுதாயத்திலே ஒருசிலர் துன்புறுத்துகிறார்கள் என்று அரசாங்க கவனத்திற்குக் கூடக் கொண்டு வரப்பட்டது உறுப்பினர் திரு. மருதாசலம் அவர்களாலே.

ஆனால், இன்றைக்கும் கேரளா மானுபாக்ச்சர்ட் போட்சால் மீன் பிடிக்கப் போக முடியவில்லை. ஏற்கனவே, நீங்களாகவே பார்த்து, கேரளா போட் கம்பெனிக்காரர்களுக்கு போட் மானுபாக்ச்சர் செய்ய கொடுக்கிறீர்கள். இப்பொழுது கொடுத்திருக்கிறார்கள், அதிகமான போட்களை மானுபாக்ச்சர் செய்யுங்கள் என்று. 20, 25 போட்களுக்கு அவர்களுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டும், அவர்கள் போட்களைச் செய்து தரவில்லை. இங்கிருக்கிறவர்களை 10





போட்கள் செய்யச் சொல்லி, அவர்கள் 5 போட்களைத் தயார் செய்துவிட்டோம், take delivery of those boats என்று சொல்லியும் 2 மாதங்களாக அந்தப் படகுகளை எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். அந்த காலதாமதத்திற்குக் காரணம் என்ன? இப்படி இருக்கும்போது ரூ. 2½ கோடி என்ன, ரூ. 25 கோடி கொடுத்தால் கூட மீன் வளத்திலே நாம் முன்னேற முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: முதல்வர் அவர்களே, அம்மையார் அவர்கள் தவறான சில கருத்துக்களை, இந்தத் துறையில், குறிப்பாக, டெண்டர் கொடுப்பதிலே, கேரளக்காரர்களுக்கு அதிகச் சலுகை கொடுக்கிறோம், இங்கேயிருக்கிறவர்களுக்கு அதனை மறுக்கிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். அவைகள் அத்தனையும் உண்மைக்குப் புறம்பானவை. கேரளத்திலே இருக்கிறவர்களுக்கும் கொடுக்கிறோம். கேரளக்காரர்கள், தமிழ் மாநிலத்திலே போட் கட்டுகிறவர்களுக்கும் கொடுக்கிறோம். இங்கிருந்து எந்த அதிகாரியும் அரசாங்க பணச் செலவிலே, அங்கு போய், கேரளத்திலே கட்டுகிற முறையைக் கவனிக்க மாத்திரம் செல்லவில்லை. எத்தனையோ பணிக்காகச் செல்கிறார்கள். அதேபோல், கேரளக்காரர்கள் தயாரித்த படகை வைத்துக்கொண்டு இங்கே மீன் பிடிக்கும்போது அரசு அதைத் தடைசெய்யவில்லையென்று கூறுகிறார்கள். இது இரண்டையும் தெரிந்துகொண்டு அவர்கள் பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அரசா அந்தத் தவறைச் செய்யும்? அப்படி மற்றவர்கள் செய்கிறார்கள் என்று தெரிந்தும் கண்டிக்காமல் இருப்பது தவறு. நீங்கள் அந்தத் தவறைச் செய்தால், இந்தியாவிலே இருக்கிற அத்தனை மாநிலங்களும் உங்களைப் பிடித்துக் கொள்ளுமே, ஆனால் உங்களால் அதைத் தடுக்க முடியவில்லை. 'Kerala manufactured boats are not going out for fishing'. அந்தக் கொடுமையான நிலைமையை தடுக்க நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள்? நீங்கள் கண்டும் காணாமல், மறைமுகமாக அவர்களுக்கு இப்படி இருக்கிற நிலையை—அவர்கள்மேல் என்ன கோபமோ—. . . .

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கேரளத்துப் படகுகாரர்கள் மீன் பிடிக்கச் செல்லவே இல்லையென்று அம்மையார் அவர்கள் கூறுவது தவறு.

திருமதி த. ந: அனந்தநாயகி: எனக்கு வந்த தகவல். 'Kerala manufactured boats are still lying idle.' ஆக, இந்த நிலைமையை சமாளிக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை என்பது

தான் என்னுடைய கேள்வி. கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். கொடுத்திருக்கிறீர்கள். கே. பி. தாமஸ், சேவியர் அன்ட் சன்ஸ் என்பவர்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். கடலூரிலே ஆபீஸ் மாத்திரம் வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஆபீஸ் மாத்திரம் கடலூரிலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆபீஸ் மாத்திரமல்ல, கட்டுகிற தளங்கூட கடலூரிலேதான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அம்மையார் அவர்கள் தமிழ்நாட்டிலே மலையாளிகளுக்கு எந்த வாய்ப்புமே தரக்கூடாது என்று சொல்கிறார்கள். அகில இந்தியக் கட்சியாக இருக்கிற காங்கிரஸ் கட்சியிலே இருக்கிறவர்கள் அப்படிச் சொன்னால் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் சொல்லவில்லை. நீங்கள்தான் சொல்கிறீர்கள். நான் சொல்வது 'you must always give priority to Tamil Nadu' என்பதுதான்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மீண்டும், மீண்டும் நாங்கள் சொல்கிறோம் என்று சொல்கிறார்கள். நாங்கள் சொல்லவில்லை. அம்மையார் அவர்கள் கட்சியைச் சேர்ந்த கட்சிக்காரர்கள்தான் அப்படிப்பட்ட கலவரத்தைச் செய்து கொண்டு வருகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பெரும் தவறு. நாங்கள் அப்படிச் செய்யவில்லை. எங்கள் கட்சியைப் பொறுத்தவரையிலே அகில இந்தியக் கட்சியாக இருக்கிறது, உங்களுடைய கட்சி பிராந்தியக் கட்சியாக இருக்கிறது . . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அகில இந்தியக் கட்சியாக இருக்கின்ற கட்சியிலே இருக்கிறவர்களே அப்படிச் சொல்வதால் நிலைமை இன்னும் மோசமாகத்தான் போய்விடும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் ஒவ்வொருவரும் பிழைப்பதற்கு இன்னொரு மாநிலத்தாரை அடையாளம் காட்டுவார்கள். அம்மையார் அவர்கள் அப்படிச் சொல்வது சரியல்ல என்று தான் தகவல் தந்தார்கள். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கடலூரிலே இருக்கிற அந்தக் கம்பெனிக்கு சலுகை கொடுக்கப்பட்டிருப்பது உண்மையா இல்லையா என்றுதான் கேட்டார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை.



மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கோவாவிலே படகு கட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். கோவாவிலே கட்டவில்லை, தமிழகத்திலேதான் கட்டுகிறார்கள், கடலூரிலேதான் கட்டுகிறார்கள் என்று சொன்னேன். தமிழகத்தைத் தவிர வேறு ஒரு மாநிலத்திற்கு எந்தத் தொழிலும் கொடுக்கக் கூடாது என்பதுதான் அம்மையார் அவர்கள் நோக்கமா?

திருமதி த. ந. அனந்தநாயகி: என்னுடைய வாதத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. தரக்கூடாது என்று நான் சொன்னதாகச் சொல்கிறார்கள். நான் சொன்னது இங்கே உள்ளவர்களுக்கு பிரையாரிடி கொடுக்க வேண்டும் என்பதுதான். "Reference must be given to the sons of the soil" என்ற முறையிலேதான் சொன்னேன். அவர்களுக்கும் கொடுங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அம்மையார் அவர்கள் சன்ஸ் ஆப் தி சாயில் என்ற முறையிலே கலவரத்தை உண்டாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதையும் சந்திக்க நாங்கள் தயார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கலவரம் அல்ல. இங்கே உள்ளவர்களுக்கு பிரையாரிடி கொடுக்கவேண்டும் என்று சொல்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

* திரு. பு. வேதாசலம்: தலைவர் அவர்களே, மீனவர் துறையின் மானியத்தினை ஆதரித்து பாராட்டிப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் மிகச் சிறந்த கடற்கரை நமக்கு இருக்கிறது. இந்தக் கடலிலே ஏராளமான மீன்களும், ஏராளமான சங்குகளும், ஏராளமான முத்துகளும் கிடைக்க அதை நம்பி வாழ்கிற மீனவர்கள் மிகச் சாதாரண நிலையில் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். கல்வித் துறையிலேயும் பொருளாதாரத் துறையிலேயும் மிகப் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். அதற்காக நான் இந்த மன்றத்திலே பலமுறைகள் பேசியிருக்கிறேன். மீனவர்கள் எல்லா வகைகளிலுமே தாழ்ந்தவர்களாக இருக்கின்ற காரணத்தினால் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலேயே அவர்களையெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களின் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மீனவத் துறையிலே 20 ஆண்டுக்கால காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இல்லாதவையெல்லாம் என்ன என்ன சாதனைகளையெல்லாம் இந்த ஆட்சி செய்திருக்கிறது என்பதை அம்மையார் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள், இதிலே படித்துப் பாருங்கள். எவ்வளவு நல்ல நல்ல திட்டங்களையெல்லாம் தீட்டித் தந்திருக்கிறார்கள் என்பது புரியும். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொல்கிறார்கள், குறைந்த டெண்டர் விட்டது தவறு என்று சொல்கிறார்கள் . . . .

[1973 மார்ச் 19

திருமதி சு. ந. அனந்தநாயகி: பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் சார், குறைந்த டெண்டருக்குக் கொடுத்தது தவறு என்று சொல்லவில்லை. குறைந்த டெண்டர் என்ற போர்வையிலே டெண்டர் எடுத்துக்கொண்டு பிறகு ரிவைஸ் செய்யப்படுவது தவறு என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஒரு முறை டெண்டர் கேட்கப்பட்டது. மீண்டும் டெண்டர் கொடுக்கப்படும்பொழுது அதை நேரடியாக அரசாங்கத்திற்கே கொடுப்பதில்லை. பிஷரீஸ் மெஷினரி அட்வைசரி கமிட்டி என்று கமிட்டி இருக்கிறது. டெண்டர் திறந்து பார்ப்பதற்குள்ளாகவே தான் ரிவைஸ் செய்யப்படுகிறது, அப்போதும் குறைந்த டெண்டருக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே தவறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. வேதாசலம்: விதிகள் பிரகாரம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே செய்தால்கூட ஊழல் பட்டியல் என்று சொல்கிறார்கள். மீனவர்களுக்கு படகு வாங்குவதற்காக 40 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்பொழுது 80,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மீனவர்கள் 80,000 ரூபாய்க்கு வாங்கக்கூடிய வசதியில்லை. மத்திய சர்க்கார் முன்பெல்லாம் சப்ஸிடி மூலமாக மானியம் தந்தார்கள். சப்ஸிடி தந்தார்கள். இப்பொழுது அது நிறுத்தப்பட்டு இருக்கிறது. எனவே நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே சப்ஸிடி தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பாகத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் வசிக்கின்ற பகுதிகள் எல்லாம் குடிசைப் பகுதிகளாக இருக்கின்றன. அங்கே ரோடுகள் நன்றாக இல்லை, போதுமான இணைப்புச் சாலைகள் இல்லை. அவர்களுக்கு விளக்குகள் இல்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை. என்னுடைய தொகுதியில் இராயபுரம் பகுதியிலே ஒரு மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்த வேண்டுமென்று 5 ஆண்டுக்காலத்திற்கு முன்பிருந்தே திட்டமிருந்தது. இதுவரையிலே அது தொடங்கப்படவில்லை, அதனால் விசைப்படகுக்காரர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. விலை உயர்ந்த படகுகள் போவதற்கு அங்கே கஷ்டமாக இருக்கிறது. மீனவர்களுக்கு யான்மார் இஞ்சின்கள் தேவை என்று பலமுறைகள் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஜப்பான் நாட்டுடன் சேர்ந்து மத்திய சர்க்காருடைய உதவியுடன் அதை இங்கே எண்ணூரில் உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்லியும் இன்னும் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.



1973 மார்ச் 19]

[திரு. மு. வேதாசலம்:

கடற்கரையிலே வாழுகின்ற மீனவர்களுக்கு ஸீ எரோஷன் அடிக்கடி ஏற்படுவதால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய குப்பங்கள் சரிந்து போகின்றன. எனவே ஸீ வால் ஒன்று கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முறையிலே அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏராளமான மீன்கள் கடலிலே கிடைக்கின்றன. இறால், லாப்ஸ்டர் போன்ற வகை மீன்களை நிறையப் பிடித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் நமக்கு நல்ல வருமானம் அன்னியச் செலாவணி கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்களுடைய தொழில் உயிர் ஊசலாடுகிற தொழில். அன்றாடம் அவர்கள் உயிர்விடுகிற நிலைமை இருக்கிறது. மீனவர்களுக்குக் கட்டாய இன்ஷூரன்ஸ் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே மீனவர்களுக்கு ஒரு மாஸ்டர் பிளான் தேவை என்று சொன்னேன். அதற்கு 10 கோடி ரூபாய் அளவிலே ஒரு திட்டத்தைத் தயாரித்து அவர்களை வாழவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.ஆர்.சி. ஸ்கீம் மூலமாக சென்னை மாவட்ட பெடரேஷனுக்கு 35 லட்ச ரூபாய் தந்திருக்கிறார்கள். அதுபோல் திருநெல்வேலிக்கு 75 லட்சம் ரூபாய் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். விசைப்படகுகள் மூலம் அவர்களை நல்ல முறையிலே வாழவைக்க முடியும் என்று நம்புகிறேன்.

திரு. செல்லையா அவர்கள் பேசும்பொழுது தவறான கருத்தை வைத்து, இந்த இலாகா சரியாக செய்யவில்லை என்று சொன்னார்கள். அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். மீன் இலாகா இயக்குநர் நல்லவர், திறமையுள்ளவர். நல்ல முறையிலே ஆராய்ந்துதான் செய்வார். ஆகவே, அவர்கள் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பர்மா ரிபேட்ரியேட்ஸ் என்று யாரிடமோ பிறகு கையெழுத்து வாங்கிக் கொண்டு கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள், அது தவறு. அந்த பர்மாக்காரர்களுக்கு தகுந்த சான்றிதழ் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை தெரிவித்தார்கள். இது போலவே மீனவர் பகுதியிலே பல கோடி ரூபாய் தேவை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியத் தொகையை ஆதரித்து விடைபெறுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மீனவர் சம்பந்தமாகவும், அரிஜன மக்கள் சம்பந்தமாகவும் இருக்கக்கூடிய இரண்டு முக்கியமான மானியக் கோரிக்கைகளின் பேரில் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இந்த அரிஜனங்கள் சம்பந்தமாகத்தான் சில விவரங்களை பின்னால் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அதற்கு முன்னால் இந்த மீன் படகு சம்பந்தமான ஒரு பிரச்னையும் இப்போது எழும்பியது. அதைப் பற்றி எனக்கு சில தகவல்கள் இருக்கிற காரணத்தினால் அதை முதலில் தெளிவுபடுத்தி விடலாம் என்று கருதுகிறேன். பொதுவாக மீனவர்களுக்கு விசைப்படகு கொடுக்கும் திட்டம் நல்ல திட்டம் தான். இந்தத் திட்டத்தின் படி எல்லா மீனவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். அப்படி கொடுக்கப்பட்டு சாதாரணமாக இருக்கக்கூடிய மீனவர்களுக்கும் மற்ற மீனவர்களுக்கும் முரண்பாடு இல்லாதபடி பார்த்துக்கொள்ள நாங்கள் உதவி செய்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

எனவே, உள்ள பிரச்னை என்னவென்றால் 1972-ம் வருஷத்தில் சில மெகனைஸ்டு போட்டுகளுக்கு டெண்டர் கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்னால் அந்த டெண்டரின் அடிப்படையில் போட்டுகளை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யவில்லை. 1972-ம் வருஷத்தில் ஜுன் மாதத்தில் முதல் டெண்டர் திறக்கப்பட்டபோது ஒரு குறிப்பிட்ட கம்பெனி, அந்த கம்பெனி கேரளாவைச் சேர்ந்ததாக இருக்கலாம் அல்லது ஆந்திராவைச் சேர்ந்ததாக இருக்கலாம், வங்காளத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம், அந்தப் பிரச்னை எழவே இல்லை. ஆனால் எந்தக் கம்பெனியாக இருந்தாலும் அந்த கம்பெனி ஒரு குறைந்த டெண்டரை கொடுத்திருக்கிறதென்ற காரணத்தினால் அதை ஏற்றுக்கொண்ட பிறகு, குறிப்பாக சின்ன போட் ரூ. 17,900 என்றும் பெரிய போட் ரூ. 31,750 என்றும் அவர்கள் டெண்டர் கொடுத்து அந்த டெண்டர் கொடுத்ததை, திறந்து எடுத்துப் பார்த்ததற்குப் பின்னால், அதை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் அதை ரிவைஸ் பண்ணுவது எப்படி சரி? Upward revision is not proper இந்த பிரச்னையைத் தான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்குக் கிடைத்த விவரத்தின் அடிப்படையில் பார்த்தால 17,900 ரூபாய் என்ற டெண்டரை ஒத்துக் கொண்டதற்குப் பிறகு ஏதோ ஒரு குழுவானது செயல்பட்டது என்று சொல்கிறார்கள், ஒத்துக்கொள்கிறேன். 17,900 ரூபாயை 19,250 ரூபாய் ஆக்குவது என்ன முறையாக இருக்கும். அதே மாதிரி 31,750 ரூபாயை 38,000 ரூபாய் ஆக்குவது என்ன முறையாக இருக்கும். ஆகவே, இன்றைக்கு பல போட்டிக்கு இருக்கிறார்கள் என்று குறைந்த டெண்டருக்கு கொடுத்திருக்கிறார்





என்றால் அதை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் ரிவைஸ் பண்ணுவது சரியில்லை என்று மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் வேறு சில விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். சிலருக்கு 15 போட், 20 போட் என்று விற்கிற நிலை இருந்தும், கொஞ்சம் போட்டுகள் உற்பத்தி செய்து கொடுக்கிறேன் என்று சொல்லக் கூடியவர்கள் உற்பத்தி செய்து தயாராக வைத்திருந்தாலும் அதை டெலிவரி எடுப்பதற்கு தயாராக இல்லாத நிலைமையும், அதிகமான போட்டுகள் உற்பத்தி செய்கிறவர்கள் என்னதான் சொல்லியும் இன்றைக்கு, அவர்கள் டெலிவரி பண்ணுவதற்குத் தயாராக இல்லாமல் இருக்கிறார்கள் என்ற இந்த விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

*மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, இந்தப் பிரச்னைகளுக்கு உடனுக்குடன் பதில் சொல்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆரம்பத்தில் அவர் கூறியது போல் டெண்டர் நேரடியாக இயக்குநரிடத்திலோ அல்லது அரசாங்கத்தினிடத்திலோ தரப்படவும் இல்லை, பரிசிலனை செய்யவும் இல்லை. ஃபிஷரீஸ் மெஷினரி அட்வைசரி கமிட்டி என்ற குழு இருக்கிறது. அவர்கள்தான் இந்த டெண்டரைப் பிரித்து பார்க்கிறார்கள் அவர்கள் பிரிப்பதற்கு முன்னாலே மறுபடியும் அந்த டெண்டரை ரிவைஸ் செய்து கொடுப்பதும் அவர்கள் பொறுப்பில் தரப்படுகிறது. எனவே பிரிப்பதற்கு முன்னாலேயோ பின்னாலேயோ கொடுக்கப்பட்டு விட்ட பிறகு அவர்கள் பார்த்து முடிவு செய்கிறார்கள். 17,900 ரூபாயாக இருந்ததை 19,250 ரூபாயாக மாற்றியதற்கும், அதே போன்று 31,750 ரூபாயாக இருந்ததை 38,000 ரூபாயாக மாற்றியதற்கும் அவர்கள் சில காரணங்களைக் கூறியிருக்கிறார்கள். படகு கட்டுவதற்கு உபயோகப்படுகிற ஐரி மரத்தின் விலை அதிகமாக இருக்கிறது. வேறு பல பொருள்களின் விலையெல்லாம் ஏறிவிட்டது என்ற காரணங்களைச் சொல்லி அவர்கள் அந்த ஃபிஷரீஸ் மெஷினரி அட்வைசரி கமிட்டியிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். அதனைப் பரிசீலனை செய்து குறைந்த டெண்டரைத்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதில் இயக்குநரோ அல்லது அரசாங்கமோ இடம்பெறவில்லையென்பதை சொல்லிக்கொள்கிறேன்.

இரண்டாவது, இன்னொரு குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார். படகு கட்டி விட்ட பிறகு யாரும் வாங்கவில்லையென்று கூறுகிறார்கள். அந்த டெண்டரின் அடிப்படையில் படகுக் கம்பெனிக்காரர்கள் கட்டிக் கொடுத்த படகுகள் குறைவேதும் இல்லாமல் கட்டியிருக்கிறார்களா என்று பார்த்து ஒவ்வொரு படகுக் கம்பெனிக்காரர்களுக்கும் இத்தனை படகுகள் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படியே அவர்களும் படகுகளை கட்டியிருக்கிறார்கள். அதுவும் கட்டும்போதே எந்த மீனவர் எந்த படகு கட்டும் கம்பெனியிலிருந்து பெற்றுக்

கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிலருக்கு கடலூரில் இருக்கும், வேறு சிலருக்கு சென்னை இராயபுரத்தில் இருக்கும். அவர்களுக்கு வாய்ப்பாக, வசதியாக எந்த கம்பெனியிடத்தில் அந்த மீனவர்கள் விரும்பு கிறார்களோ அவர்கள் விருப்பத்தை அறிந்து அந்தக் கம்பெனியிடத்தில மீன வர்கள் படகுகள் வாங்கிக் கொள்ளலாம் என்று உத்திரவு இடப்படுகிறது. எனவே, ஒரு குறிப்பிட்ட கம்பெனி படகுகளை யார் வாங்க வேண்டுமென்று உத்திர விட்டிருக்கிறோமோ அந்த மீனவர்கள் வாங்கி வருகிறார்கள். அப்படிப் போட்டு விட்ட பிறகு, அந்தப் படகை எடுப்பதில் தாமதம் ஏற்படுகிறதென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் அடுத்த விஷயத்திற்குப் போகலாம் என்று நினைக்கிறேன்.

குறிப்பாக, இந்த அரிஜனங்கள் மானியத்தைப் பொறுத்த வரையில் சபை யில் அதிகமான உறுப்பினர்கள் வாதிக்க விரும்புகிறார்கள் என்பதும், அவர்கள் அந்தளவு பேசுக்கூடும் நேரம் கிடைக்காத நிலைமை ஏற்பட்டது என்பதும் வருந் தத்தக்க விஷயம்தான். நான் கூட இந்த சபையின் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. பொதுவாக இந்த அரிஜன நல இலாகா வானது 1949-ஆம் வருஷத்தில் அமைக்கப்பட்டது. அதுவும் அரசியல் சட்டம் உருவானதற்குப் பின்பு அதனுடைய நடைமுறை பற்றி சற்று சிந்திப்பது உதவி கரமாக இருக்குமென்று கருதுகிறேன். அன்றைக்கு போலீஸ் இலாகாவிலும் வேறு இலாகாவிலும் இருந்து இன்றைக்கு இந்த குறிப்பிட்ட பகுதியை இப்போது அரிஜன நல இலாகா என்று ஒதுக்கியதற்குப் பின்னால் இந்த நடப்பு ஆண்டில் உள்ள பர்ஃபார்மென்ஸ் பட்ஜெட்டைப் பார்த்துப் பார்த்தேன். வரக் கூடிய ஆண்டில் 8 கோடி ரூபாய் வரையிலும் ஒதுக்கியிருக்கிறோம். இது போதுமானதில்லைதான். ஆனால் இந்த 8 கோடி ரூபாயிலே இந்த நிர்வாகச் செலவு இரண்டு கோடி ரூபாயாகும். 8 கோடி ரூபாய் செலவில் நிர்வாகச் செலவு 2 கோடி ரூபாய்.

* மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பர்ஃபார்மென்ஸ் பட்ஜெட்டிலே கூட பாலிசி ஃபார்முலேஷன் அடிப்படையில் 53.5 லட்சம் என்று மொத்தத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஃபிரன்ஷியல் ரிக்வையர்மெண்ட்ஸ் என்று பார்த்தால், பக்கம் 4-ல் பார்த்தால் எஸ்டேப்ளிஷ்மெண்டிற்காக 187.96 லட்சம் என்றும், டிராவலிங்குக்காக 5.88 லட்சம் என்றும், அதர் சார்ஜஸ் 8.43 லட்சம் என்றும் போடப்பட்டிருக்கிறது. கொஞ்சம் குறைவாக இருக்கலாம்.





என்னுடைய பாயிண்டு என்னவென்றால் ஒதுக்கக் கூடிய 8 கோடி ரூபாயில் 10% அல்லது 5% இந்த செலவினங்களுக்காக இருந்தால் பரவாயில்லை. இந்த இலாகாவில் ஒதுக்கப்படக்கூடிய 8 கோடி ரூபாயும் அவர்களுக்காக செலவழிக் கப்படுவதாக இருக்கவேண்டும். இதற்கிடையில் வரக்கூடிய செலவுகளைப் பூராவும் வேறு தலைப்பின் கீழே கொண்டு வரப்படுமானால் உதவிகரமாக இருக்கும். அதே நேரத்தில் இன்னொரு நிலைமை.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பக்கம் 25-ல் நிர்வாகச் செலவுக்கு 53.5 லட்சம் என்று இவ்வளவு தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் புரிந்து கொண்ட அளவிற்கு பர்ஃபார் மென்ஸ் பட்ஜெட்டிலே 8 கோடி ரூபாயிலே 2 கோடி ரூபாய் என்று இருக்கிறது. அது முக்கால் கோடியாக அல்லது அரை கோடியாகக் கூட இருக்கலாம். அதுவும் இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வாதம். நான் கணக்கு போட்டு பார்த்ததில் இரண்டு கோடி தான் வந்தது. இன்னொரு விஷயம் என்னவென்றால், மற்ற எந்த இலாகாவை எடுத்தாலும் நாம் செலவழிக்கக் கூடிய தொகை கூடுதலாக ஆகிக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த இலாகா வைப் பொறுத்த வரை சென்ற ஆண்டு 841 லட்சமாக இருந்தது இந்த ஆண்டு 815 லட்சமாக ஆகியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் சொல்லலாம், கல்விக் காக சென்ற ஆண்டு 562 லட்சமாக இருந்தது இந்த ஆண்டு 590 லட்சமாக பிற்பகல் ஆகியிருக்கிறது என்று சொல்லலாம். 12·30

ஆனால் சென்ற ஆண்டு இந்த இலாகாவுக்கு எந்த அளவு பணம் ஒதுக்கப் பட்டிருந்ததோ அதை விட இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதிக அளவுக்கு அரிசனங்கள் மேம்பாடு அடைந்து விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

தீண்டாமை ஒழிப்பை அரசியல் சட்டத்திலேயே அடிப்படை உரிமையாக வைத்திருக்கிறார்கள். அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவில் இதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். சென்ற காலத்தைப் பொறுத்தவரை தீண்டாமை கூடாது என்று சொன்னார்கள். வருங்காலம் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு 46-வது பிரிவிலே சொல்லியிருக்கிறார்கள்—

The State shall promote with special care the educational and economic interests of the weaker sections of the people and in particular Scheduled Caste and Scheduled Tribe and shall protect them from social injustice and all forms of exploitation.

அந்த மக்களை உயர்த்த வேண்டுமென்பதற்காக இதைவிட வேறு வார்த்தைகளைச் சொல்ல முடியாத அளவுக்குச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் நடக்கின்ற விஷயங்கள் அதற்கு மாறுபாடாக இருக்கின்றன என்பதற்குச் சில உதாரணங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

1957-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பங்கி காலனியில் ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. டில்லியில் இருக்கும் அரிசனங்கள் காலனி அது. அந்த முனிசிபல் தொழிலாளிகளின் காலனியில் ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடந்து ஒரு தொழிலாளி இறந்து விட்டார்; சிலருக்குக் காயம் ஏற்பட்டது. அவர்கள் தங்களுடைய சம்பளக் கோரிக்கையை வைத்தபோது இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. எந்த இடத்தில் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது? மகாத்மாஜி தன்னுடைய இறுதிக் காலத்தில் பிரார்த்தனைக் கூட்டங்களை எந்த இடத்தில் நடத்தினாரோ அந்த இடத்தில்தான் துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததால் அதற்கு முக்கியத்துவம் ஜாஸ்தியாகி பாராளுமன்றத்தில் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையை கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த சதன குப்தா அவர்கள் கொண்டு வந்தார்கள். இதைக் கொண்டு வந்து உடனேயே அன்றைக்கே பாரதப் பிரதமர் அந்த இடத்திற்கு உடனடியாக விஜயம் செய்து பார்த்தது மாத்திரம் அல்லாமல் 3 ஆம் தேதி Adjournment motion was allowed அவை நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டு இதைப்பற்றி விவாதித்தபோது சில கருத்துக்களைச் சொன்னார்கள். எப்படி இந்த நாடு பின்தங்கியிருக்கிறது, அடிப்படையாக அடிமைப்பட்டிருந்தது என்று சொன்னால் அதற்குக் காரணமே இப்படி ஒரு சமுதாய மக்களைத் தீண்டப் படாதவர்கள் என்று வைத்திருந்ததுதான் என்று சொல்லப்பட்டது. எந்த நாட்டிலும் தீண்டாமை என்று இருக்குமானால் அந்த நாடு உருப்படாது என்று சொல்லப்பட்டது.

அமெரிக்காவில் தென்பகுதியில் இருக்கும் மக்களை, நீக்ரோ மக்களை, அமெரிக்க அரசாங்கம் அடிமைகளாகக் கருதுமானால் அந்த அளவுக்கு அந்த நாடு முன்னேற முடியாது. ஆப்பிரிக்காவில் ஆபிய நாட்டு மக்களைக் கறுப்பு மனிதர்கள் என்று ஒதுக்குவார்களானால் அந்த நாடு முன்னேற முடியாது என்பது உலக ரீதியில் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம்.

அப்படி இருக்கும்போது தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதி மக்கள் பிறப்பினால் தாழ்வடைந்தவர்கள் என்ற காரணத்தால் தீண்டாமையை அனுஷ்டிப்பது மிக மிகத் தவறு. அந்த முறையில் அன்றைக்கு கோவிந்த வல்லப பந்த் அவர்கள் பதில் சொல்லும்போது, இது சட்டத்தினால் முடியக்கூடிய காரியமல்ல, தேசிய இயக்கம் வளர்ந்த காலத்திலேயே அரிசன மக்களைப் பாதுகாக்க



வேண்டுமென்ற முறையிலேதான் வளர்ந்தது. தேசிய இயக்கத்திலே அரிசன ஆண்களும், பெண்களும் சேர்ந்து அன்று ஈடுபட்டார்கள். ஜாதிப் பாகுபாடு இல்லாமல் எல்லோரும் சேர்ந்து ஈடுபட்டார்கள் என்று சொன்னார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக அரிசன மக்களைத் தாழ்வாக வைத்துக்கொள்ளக் கூடாது என்ற வகையிலே சுயமரியாதை இயக்கம் எல்லாம பணியாற்றி இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கக் கூடிய பெரும்பகுதியானவர்கள் இந்த மாதிரி ஜாதி பாகுபாட்டை தீண்டாமை என்ற முறையில் வைத்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அதோடு போகாமல் பிரசார ரீதியாக இது வரவேண்டும்.

சேலத்தில் கடந்த 20 வருஷ காலமாக ஒரு பிரச்சினை. கே. ஆறுமுகம் என்று சொல்லக்கூடிய அரிசன விவசாயிக்கு ஐந்து ஏக்கர் நிலம் உண்டு. He is not in possession of the land for these twenty years and he is not able to get at h's lands. யாருடைய ஆட்சி இன்று நடந்து கொண்டிருக்கிறது? அவருக்குச் சொந்தமான நிலத்திற்குள்ளே அவர் போக முடியாது; சாகுபடி பண்ண முடியாது. நான் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. அந்த நிலத்திற்குப் பக்கத்தில் மிகப் பெரிய மிராசுதார், எனக்கும் வேண்டியவர்தான், நண்பர்தான். அந்த செல்வாக்குள்ள ரத்தின கவுண்டர் நிலத்தின் பக்கத்திலுள்ள தன்னுடைய நிலத்திற்கு அந்த ஆறுமுகம் நுழைய முடியவில்லை. இப்படி பல ரத்தின கவுண்டர்கள் இருப்பார்கள், பல ஆறுமுகங்கள் இருப்பார்கள். இந்த நாட்டின் பிரஜை என்ற முறையில் தன்னுடைய நிலத்திற்குள்ளே போவதற்கு, நிலத்தை விற்பதற்கு, குத்தகைக்கு விடுவதற்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்த விஷயத்தை இந்த இடத்தில் குறிப்பிடுகிறேன்.

நாம் இன்று அதிகமாக கல்விக்காகச் செலவழிக்கிறோம். கல்விக்காக 65 சதமானம் செலவழித்தது இன்று 70 சதமானமாக ஆகியிருக்கிறது. நல்லதுதான். ஆனால் இன்று அதிலும் சாதி வந்து விடுகிறது. டாக்டர் கோலாம்பி என்ன சொல்லுகிறார்? Education mitigates casterism, but for getting education, you should develop caterism. என்ற முறையில் போகிறது. அரிசன மக்களுக்கு இன்றைக்குள்ள நிலைமை என்ன? கல்விக்காக அந்த மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்படுகின்ற பணத்திற்கு மேல் அந்தக் குடும்பத்தில் இருந்து வருஷத்திற்கு 200, 300 ரூபாய் கூடுதலாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அதைச் செலவழிக்க முடியாத நிலையில் அவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலை கூட ஏற்படுகிறது.

ஆகவே, அரிசனங்களுக்கு பணம் கொடுப்பதற்குப் பதிலாக செலவு பூராவையும் ஏற்றுக்கொள்வது என்ற முறையில் இருந்தால் நல்லது. எங்கள் கட்சியில் கூட அப்படி ஒரு வழக்கம் இருக்கிறது. குடும்பத்திற்குத் தேவையான அளவு, போதுமான அளவு கட்சியிலிருந்து கொடுத்து விடுவார்கள். எங்களுக்குச் சம்பளமாகக் கொடுக்காமல் குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற முறையில் கொடுத்து விடுவார்கள்.

இன்னொரு முக்கியமான விஷயம். அரிசன மக்களைப் பொறுத்தவரை இன்றைக்கும் கிராமங்களில் தனி டம்ளர்கள், தனி பிளேட்டுகள் வைத்திருக்கும் கிராமங்கள் இல்லையா? இந்த மாதிரி நடக்கக்கூடிய விஷயங்களைப் பொறுத்தவரை குற்றமாக வைத்து அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். எந்தவிதமான சோஷல் இன்ஜஸ்டிஸாக இருந்தாலும் மாற்றப்பட வேண்டும்.

பொதுவாக, ஒரு லட்சம் விவசாயிகளுக்கு வீட்டு மனைப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டது. இன்னும் அந்த அளவுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதுதான் ரிப்போர்ட்டை ஆராய்ந்ததில் தெரிந்தது. அப்படிக் கொடுக்கப்பட்டிருப்பதும் அதிகமாகத் தஞ்சையில்தான். ஏற்கனவே விவசாயத் தொழிலாளர்கள் அந்த இடத்தில் இருக்கிறார்கள். அந்த இடத்தை விட்டு அவர்களை அந்த மிராசுதார்கள் வெளியேற்ற முடியாது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு இப்போது பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பட்டா கொடுக்கும்போது இடத்தை எடுத்துக் கொள்ளும்போது அந்த இடத்தில் இருக்கக்கூடிய மரங்கள் மிராசுதாருக்கு என்று போகக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, ஏற்கனவே இருந்த பலனை விட்டுக் கொடுக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது.

இந்த வீட்டுமனைப் பட்டா கொடுப்பது எல்லா இடங்களுக்கும் எல்லா ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அப்படி விஸ்தரிக்கக்கூடிய நேரத்தில் நகரப் பஞ்சாயத்துக்குக் கிடையாது, நகரங்களுக்குக் கிடையாது என்று சொல்லுகிறார்கள். நகரங்களிலே அரிசனங்கள் இல்லையா? நகரங்களில்தான் பெரிய பெரிய காலனிகளை வைத்திருக்கிறார்கள். ஆகவே, நகரத்திற்கும், நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் கூட 5 செண்ட் நிலம் கொடுக்க வேண்டுமென்ற முறையில் விஸ்தரிக்க வேண்டும்.

கேரளாவில் இவர்களுக்குப் புதிதாக வீடு கட்டித் தந்திருக்கிறார்கள். நம்முடைய அரசிலிருந்து போய்ப் பார்த்து வந்திருக்கிறார்கள். எனக்கு அந்தக் கட்டடங்களைப் பார்க்கும் பாக்கியம் கிட்டவில்லை. அங்கு அவர்களுக்குத் தனி





காலனியாக அமைக்கவில்லை. இனிமேல் நம்முடைய தமிழக அரசும் ஊருக்கு வெளியே ஆசிரியர்கள் காலனி, மற்றக் காலனிகள் அமைப்பது போல் அரிசனக் காலனிகளை அமைக்காமல் ஊருக்குள்ளேயே அமைக்கவேண்டும். ஊருக்கு வெளியே காலனி இருக்க வேண்டுமென்ற முறையே முதலில் ஒழிக்கப்பட வேண்டும். அந்த மாதிரி சில காரியங்களைச் செய்தால் அவர்களைத் தனியாக வைத்திருக்கும் போக்கு கூட குறையும் என்பதற்காகத்தான் இந்த ஆலோசனையைக் கூறுகிறேன்.

சில விஷயங்களை நான் படித்துப் பார்த்தேன். அடிமைகளாக வந்தவர்களை சிலவிடங்களில் காலனிகளில் வைத்திருந்ததாகச் சொல்கிறார்கள். இலக்கியங்களில் இருக்கிறது. காஞ்சிபுரம் பக்கத்தில் இருந்ததாகச் சொல்கிறார்கள். அன்று கூட ஊருக்கு வெளியே தனியாக ஒதுக்கப்பட்ட மக்களை வைத்ததாக ஞாபகம் இல்லை. எந்தெந்த இடங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படுகிறதோ அங்கெல்லாம் இம்மாதிரியாக ஹரிஜனங்களுக்கு என்று காலனிகள் வைத்தால் தொழிலாளர்கள் கலகமே கூட செய்து விடுவார்கள். இன்று இலாகா மூலம் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்லும்போது கிராமத்திற்கு அப்பால், ஊருக்கு வெளியில் காலனிகள் அமைத்துக் கொடுக்கிறோம் என்று சொல்லும்போது—இப்படி தனியாக காலனிகள் அவர்களுக்காக அமைக்கும் முறையை கைவிட்டுவிட்டு மற்றவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் இவர்களும் இருக்கும்படிச் செய்யவேண்டும். அந்த முறையில்தான் வீடு கட்டும் திட்டம் இருக்கவேண்டும்.

otherwise, it will be perpetuation of untouchability.

பிற்பட்ட வகுப்பினருக்கு என்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்றும் தனித்தனியாக இலாகாக்கள் இருக்கின்றன. இந்த இரண்டு இலாகாக்களையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே அமைச்சரே அதைப் பார்க்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். அதற்கும் அதிகப் பணம் ஒதுக்கவில்லை, இதற்கும் அதிகப் பணம் ஒதுக்கவில்லை. ஆகவே இந்த இரண்டு இலாகாக்களையும் சேர்த்து ஒரு அமைச்சரே பார்க்கலாம். அப்போது இரண்டையும் முன்னுக்குக் கொண்டு வர வாய்ப்பு இருக்கும். ஹரிஜனங்களுக்கு என்று, அவர்களுக்கு மட்டும் ஒரு அமைச்சர் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. பிற்பட்ட வகுப்பினர், மற்றவர்களையும் சேர்த்து ஒரு அமைச்சரே இருக்கலாம். மத்திய பாராளுமன்றத்தில் கூட ஹரிஜனங்களுக்காக என்று ஒரு தனி அமைச்சர் இருப்பதாகத் தெரியவில்லை. வேறு சில விஷயங்களையும் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய முறையில் பின் தங்கிய வகுப்பினரையும் சேர்த்து இரண்டுக்கும் ஒரு அமைச்சர் என்றிருந்தால் தனி

கரமாக இருக்கும். ரிசர்வேஷனைப் பொறுத்த வரையில் 16 சதவீதம் என்பதை 18 சதவீதம் ஆக ஆக்கியிருக்கிறார்கள். ரிசர்வேஷன் கொஞ்ச காலத்திற்கு இருக்க வேண்டியது அவசியமாக இருக்கலாம். பல காரணங்களினால் இந்த ரிசர்வேஷன் படி எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றனவா? அந்த அடிப் படையில் பூர்த்தி செய்யப்படுகிறதா, செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம், பள்ளிக் கூடங்கள் கட்டிக் கொடுக்கிறோம், மாடுகள் வாங்கிக் கொடுக்கிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். அந்தமாதிரி யான பட்டியல்களைக் காட்டிவிடுகிறார்கள். எதிர்காலத்தில் இந்த மாதிரியான விவரங்களும் கிடைத்தால் நன்றாக யிருக்கும். உண்மையில் இந்த 18% என்பது முடிந்ததா, அந்த அளவிற்கு தகுதி உள்ள ஆட்கள் கிடைக்கிறார்களா இல்லையா என்று அப்போதுதான் சொல்ல முடியும்.

ஐ.ஏ.எஸ்.-ல் 16% தான் இருக்க வேண்டுமென்று நான் சொல்லமாட்டேன். அந்த அளவிற்கு, குறிப்பிட்ட அளவிற்கு வர முடியவில்லை என்றால் அதற்கு வேறு ஏற்பாடு செய்ய முடியும் அதுபற்றிய விவரங்கள் தெரிந்தால். சமீபத்தில் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைப் படித்தேன். டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாக இருந்தவர், நல்ல கெட்டிக்காரர், திரு. வரதராஜன் அவர்கள். வரதராஜன் கமிட்டி பற்றி நான் கேட்டுக்கொண்டே இருக்கிறேன் ஆரம்ப முதல். அவர்களைப் போன்றவர்கள் ஹைகோர்ட் ஜட்ஜாக வருவதை எல்லோரும் வரவேற்கிறார்கள். அவர்கள் திறமைசாலியும் கூட. புதிதாக ஒருவர் ஹரிஜன வகுப்பிலிருந்து இப்போது தான் ஹைகோர்ட் ஜட்ஜாக வந்திருக்கிறார்கள். உண்மையாகவே அது பாராட்டக் கூடிய விஷயமாகத்தான் இருக்கிறது. ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக செலவு செய்யப்படுவது குறித்த விஷயத்தில் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள தொகை குறைந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது எந்த அளவிற்கு இந்த சர்க்கார் அவர்களைப் பார்க்கிறார்கள் என்பதுதான் தெரிகிறது.

ஜில்லா மட்டத்தில் பார்த்தால் ஹரிஜன் வெல்பேர் ஆபீசராக இருக்கக்கூடிய அதிகாரிகள், They suffer from inferiority complex அந்தமாதிரி யில்லாமல் அவர்கள் கிட்டத்தட்ட நம்முடைய கலெக்டருடைய ஒரு பி.ஏ. அல்லது கலெக்டருடைய ஒரு அஸிஸ்டென்ட் என்ற அளவிற்கு அவர்களுக்கு ஒரு அந்தஸ்து கொடுத்தால்தான் அந்த இலாகாவிற்குள்ள அந்தஸ்து உயரும். அதுவும் ஹரிஜன வெல்பேர் ஆபீஸர் என்று தனி இலாகாவாக இல்லாத முறை



யில் ஜில்லா ரீதியில் மேற்சொன்ன முறையில் இருக்கவேண்டும். இந்த மானியத்தைப் பொறுத்தமட்டில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை—சாதாரணமாக குறைக்க வேண்டுமென்று சொல்வோம்—போதாது.

முன்பு இங்கு பேசும்போது நறிக்குறவர்கள் பற்றி, அவர்களை ஷெட்யூல்ட் ட்ரைப்ஸில் சேர்த்திருப்பதாகச் சொன்னார்கள். அவர்களைப் பற்றிச் சொல்லும் போது, மலையப்பன் என்ற ஒரு கலெக்டர் இருந்தார். நறிக்குறவர்கள் அவரை "எங்கள் இதயக் கோவில் மலையப்பன்" என்று சொல்வார்கள். அவர்கள் காலமாகி விட்டார்கள். அவர்களுக்காக பிரத்தியேகமாக ஒரு அமைப்பு ஏற்படுத்தி உதவி செய்தார்கள். 20,000 பேர்கள் இருக்கிறார்கள், மதுரையில் தனியாக ஒரு இடத்தில் இருக்கிறார்கள். எந்தெந்த இடங்களில் அவர்கள் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளாக தங்கியிருக்கிறார்களோ அங்கேயே அவர்கள் தங்கிவிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அடுத்த ஆண்டு, நறிக்குறவர்களை ஷெட்யூல்ட் ட்ரைப்ஸில் சேர்த்திருக்கும்போது—எந்த அளவிற்கு அவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பற்றி தனியாக ஒரு ஐட்டமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன நலத் துறை மானியக் கோரிக்கை மீது எனது கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன். பல ஆண்டுகளுக்கு முன்பே பழங்காலத்தில் ஜாதி இரண்டொழிய வேறில்லை என்று பெரியவர்கள் கூறினார்கள். ஆனால் இன்றும் இந்த ஜாதிப் பிரச்னையைக் கொண்டு விவாதம் ஏற்படுவதைப் பார்க்கும்போது அது மிகவும் வருத்தத்தைத் தருகிறது. அன்று பிற்பட்ட நலத்துறை மானியத்தின்மீது பேசும்போது பலர் கூறினார்கள், காரணப் பெயர்களை வைத்துத்தான் ஜாதிகள் வந்தன என்று. காரணப் பெயர்களாக வந்த ஜாதிகள் இன்று தொடர்ந்து நாட்டிலே ஜாதிப் பிரச்னையாக இருந்துகொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கும்போதும் நினைக்கும்போதும், ஹரிஜன நலத்துறைக்காக ஒதுக்கப் பட்டுள்ள தொகையைப் பார்க்கும்போதும் எனக்கு முன்பு பேசிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறியதைப் போல் சென்ற ஆண்டு ஒதுக்கிய தொகையை விட இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள தொகை குறைவாக இருப்பதைப் பார்க்கும்போதும் இந்த நலத் துறை எவ்வாறு இந்த மக்களுக்கு நலன்கள் அளிக்கும் வகையில் பயனளிக்கும் என்பது புரியாமல் இருக்கிறது.

பிற்பட்ட வகுப்பினர் நலன் பற்றிப் பேசும்போது பலர் கூறினார்கள்—முகமதிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் பிற்போக்கான நிலைமையில் பலர் இருக்கிறார்கள். அவர்களை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டு

மென்று கூறினார்கள். கிருத்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள், அவர்களையும் இந்த பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு பிற்பட்ட நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள், இன்னும் பதினைன்கு சமுதாயத்தினரை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க இருக்கிறோம் என்று. இப்படி இன்னும் எவ்வளவு வகுப்பினரை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப் போகிறார்களோ? இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற பிரிவில் இன்னும் எத்தனை சமுதாயத்தைச் சேர்க்கப்போகிறார்களோ என்பதைப் பார்க்கும்போது ஜாதிகளை அதிகப்படுத்திக் கொண்டு வருகிறோமே தவிர ஜாதிகளை ஒழித்துக் கட்டுவதற்கான எந்தவிதமான திட்டமும் இல்லை என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். முதன்முதலாக இந்த ஹரிஜன வெல்பேர் டிப்பார்ட்மென்ட் ஆரம்பித்தபோது அதற்குத் தலைவராக இருந்தவர் ஒரு ஐயங்கார். காலஞ்சென்ற திரு. பாஷ்யம் ஐயங்கார் அவர்கள் ஆவார்கள். அவர்கள் தலைமையில், அவர்கள் ஹரிஜனங்களுக்காக எவ்வளவோ நன்மைகளையெல்லாம் செய்திருக்கிறார்கள். இந்த சபையில் பேசுவதில் கூட ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்கள் அல்லாதாருக்கு கூடுதல் வாய்ப்பு கொடுப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அந்த யோசனையை நான் தங்கள் மூலம் அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மீனாட்சிபுரம் என்ற கிராமம் இருக்கிறது, அது அந்த நல்லூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கிராமம். அந்த பஞ்சாயத்து யூனியனில் பண வசதி சற்று உபரியாக இருக்கிறது சில காரியங்கள் மக்களுக்குச் செய்வதற்காக. அந்த பஞ்சாயத்து யூனியனுக்கு கிராமத் தேவைகளை செய்ய அரசு உடனடியாக அனுமதிக்க வேண்டும். அங்கு வாழும் மக்கள் ஊருக்கு வெளியே வசிக்கிறார்கள். அவர்களை ஊருக்கு வெளியே வசிக்கச் செய்வது பெரிய பாவம் என்றுதான் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஊருக்கு வெளியே அவர்கள் வசிப்பது மட்டுமல்லாமல் அவர்கள் ஊருக்கு உள்ளே வருவதற்கு அவர்களுக்கு தக்க பாதை வசதி கிடையாது. சிலருடைய தோப்புகள் வழியாகவும்; சொந்தக்காரர்களின் நிலங்கள் வழியாகவும்தான் அவர்கள் வரவேண்டிய நிலை இருக்கிறது. நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து அரசு அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து, அவசியம் அந்தப் பாதையைப் போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே எந்தவிதமான மின்சார வசதியும் கிடையாது. இருண்ட சூழ்நிலையில் அவர்களுடைய வாழ்க்கை இருப்பதால் அந்த நிலைமையையும் நீக்க வேண்டும். குடி தண்ணீருக்காக ஒரு மைல் தூரம் காவிரி ஆற்றங்கரை வந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு போக வேண்டியிருக்கிறது. குடிதண்ணீர் திட்டத்திற்காக பல கிராமங்களுக்கு பணம் ஒதுக்கப்



பட்டிருக்கிறது. இந்த கிராமத்தையும் அதில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல கிராமங்களில் மினிமம் அமெனிடீஸ் கூட இல்லாமல் இருக்கிறது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் ஏற்பட்ட மழையின் காரணமாக, கொள்ளிடக்கரையில் ஓரத்தில் இருக்கும் சலவைத் தொழிலாளர்களின் வீடுகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. கலெக்டர், தாசில்தார் போன்றவர்கள் அங்கே சென்று பார்வையிட்டு வந்தும், அங்கே வெல்பேர் ஆபிசர் இன்னும் பார்வையிடப் போகவில்லை. அவர்களுக்குத் தகுந்த குடிமனைகளைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் வசிக்கும் பக்கத்தில் சில தனிப்பட்டவருக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது அதை அரசு ஆர்ஜிதம் செய்து இவர்களுக்கு பட்டா செய்து கொடுத்தால் அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பழுவூர் கிராமம்—முத்தரசநல்லூரில் ரோடு போட நிலம் கேட்டும், அதன் சொந்தக்காரர்களுக்கு இன்னும் அரசு பணம் கொடுக்காத காரணத்தால் அந்த நிலத்தில் ரோடு போட நிலச் சொந்தக்காரர்கள் அனுமதிக்க முடியாத நிலை இருக்கிறது. அதற்கும் அந்த ஏழை ஜனங்கள் அரசுக்கு மனு போட்டு இருக்கிறார்கள். அது என்ன நிலைமையில் உள்ளது என்று தெரியவில்லை. அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுத்தம், சுகாதாரம் ஹரிஜனங்களுக்குத் தேவை என்று சொல்கிறபோது, அவர்களுக்கு குடி தண்ணீர் வசதி கூட செய்து தரப்படாமல் இருக்கிறது. இந்த கிராமத்தை சார்ந்த மக்கள் வாய்க்காலிலிருந்து தான் குடிதண்ணீர் கொண்டு வரவேண்டியிருக்கிறது. அந்த வாய்க்காலுக்கு படிக்கட்டு கட்டிக் கொடுத்தால் அவர்கள் குளிப்பதற்கு வசதியாக, நன்றாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழுவூரில் ஹரிஜன மக்கள் வாழும் கிராமத்தில் மயானக் கொட்டகை மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அவைகளைக் கூட வெல்பேர் ஆபிசர் சென்று பார்க்கவில்லை. அதை உடனடியாக வெல்பேர் ஆபிசர் சென்று பார்த்து, அரசுக்குத் தகவல் அனுப்பி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மணச்சநல்லூரில் சாதாரணமாகக் காலரா வருகிறது என்று கூறுகிறார்கள். அங்கே தற்போதுள்ள கான்டீன் மூலமாக குடிதண்ணீர் 4 மணி நேரம் விடுகிறார்கள். அங்கே ஏறத்தாழ 15,000 மக்கள் வசிக்கிறார்கள். அந்த கிராமத்தில் எந்தவிதமான தொத்து நோயும் வராமல் இருப்பதற்காக அவர்களுக்குக் குடிதண்ணீர் கொஞ்சம் அதிக

மான நேரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிகமான அளவுக்கு மின்சாரம் வழங்க வேண்டுமென்று மின்சார அமைச்சருக்குக் கூட தந்தி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் தற்போது ஸ்காலர்ஷிப் கொடுக்கிறது. இதில் இரண்டிற்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. அந்த வித்தியாசத்தைக் கூட சென்ற முறை எடுத்துக் காட்டினேன். மத்திய அரசாங்கம் ஸ்காலர்ஷிப்பை மாநில அரசாங்கமும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அதை விரைவில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மதிய உணவு திட்டத்திற்காக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இது சென்ற ஆண்டில் ஒதுக்கிய தொகையை விடக் குறைவாக இருக்கிறது. பொதுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு—ஹரிஜன மாணவர்களுக்கு அதைக் குறைத்து விட்டார்கள். அதை ஏன் குறைத்து விட்டார்கள் என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் கூறுகிறபோது காரணத்தைச் சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

தமிழ்நாடு அரிசன, மலைவாசி மக்கள் வீட்டு வசதிக் கழகம் நிறுவ கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவதற்காக அரசு ஆணை விரைவில் பிறப்பிக்கப்பட உள்ளது. இக்கழகம் ஆயுள் காப்பீட்டுக் கழகம், மற்ற நிறுவனங்களிலிருந்து கடன் முதலிய வசதிகள் பெறும். அரிசனங்களுக்காக வழங்கப்பட்ட வீட்டு மனைகள் யாவற்றிலும் 10 ஆண்டு காலத்திற்குள் வீடுகள் கட்டுவது தான் அரசின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தை ஜாதி அடிப்படையில் போடக் காரணம் என்ன? இதை நான் வன்மையாக எதிர்க்கிறேன். ஏற்கனவே ஹவுசிங் போர்டு இருக்கிறது. அந்த அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அந்த போர்டில் ஒரு பிரிவு ஏற்படுத்தி ஒரு liaison officer போட்டு இந்த வசதியை செய்ய ஏற்பாடு செய்யலாம். அந்த liaison officer மூலமாக எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று வீடுகள் கட்டித் தர அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். இதை நான் வன்மையாக எதிர்ப்பதற்குக் காரணம் மறுபடியும் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்லி தனியாக ஜாதியின் அடிப்படையில் ஒரு வாரியம் அமைப்பது என்றால் அது விரும்பத்தக்கது அல்ல என்பது என் கருத்தாகும். ஆகவே, ஹவுசிங் போர்டில் இந்த Wing -ஐ அமைக்க வேண்டுமென்றும் அதன் மூலமாக அந்த



வேலையைக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஜாதியின் அடிப்படையில் கழகம் ஆரம்பிப்பது விரும்பத்தக்கதல்ல என்பதை மறுபடியும் சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், கிராமப்புறத்திலுள்ள அரிசனங்கள் மற்ற இனத்தவர்களின் வன்முறைகளுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாகாவண்ணம் பாதுகாக்கும் பொருட்டு நடமாடும் காவல்படைகளை அரசு நிறுவியுள்ளது. 1972-ம் ஆண்டின் தொடக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள இப்படைகள் முதலில் கோவை, மதுரை, தென் ஆர்காடு, தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய ஆறு மாவட்டங்களில் இயங்கிச் செயல்படுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனுடைய ரிப்போர்ட் இங்கே வைக்கப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நடமாடும் காவல்படைகள் என்ன வேலை செய்கின்றன. அதையும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டால் நல்லது.

தென்னாற்காடு மாவட்டத்தில் தியாகவல்லி என்று ஒரு கிராமம் உண்டு. அங்கு ஹரிஜனக் காலனி இருக்கிறது. இட் ஈஸ் அன் ஐலண்ட் போல் இருக்கின்றது. அங்கே நிறைய ஹரிஜனங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கேயிருக்கும் ஜாதி இந்துக்களுக்கும், இந்த அரிசனங்களுக்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது. அங்கே இருக்கும் அரிசனப் பிள்ளைகள், ஜாதிப் பிள்ளைகள் போகும் பள்ளிக்குப் போக அனுமதிக்கப்படுவது இல்லை. அவர்களுக்கு அங்கே ப்ராபர் சேப்டி Medical amenities கிடையாது. அந்தக் காரணத்தால் அங்கே எந்த அளவுக்குச் சுகாதாரச் சீர்கேடு இருக்கிறது என்பதை அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுக்கும் ஜாதி இந்துக்களுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லாமல் இருப்பதால் ஜாதிக் கட்டுப்பாட்டிற்கு பயந்து அவர்கள் வெளியே இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இங்கே நடமாடும் காவல் படை ஆரம்பித்து, தென்னாற்காடு ஜில்லாவில் இருக்கிறது என்று அரசு ரிப்போர்ட்டு கொடுத்து இருக்கிறார்கள் என்றால், என்ன ரிப்போர்ட் கொடுத்து இருக்கிறார்கள்? அவர்களுடைய ரிப்போர்ட்டுகளையெல்லாம் இப்படி மானியம் வரும் போது சமர்ப்பித்தால் அங்கத்தினர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். அந்த கிராமத்தில் வசிக்கும் அரிஜனங்கள் Yaws என்ற வியாதியால் மிகவும் பாதிக்கப்பட்டு வாடி வதங்குகின்றார்கள். அங்கு சுகாதார முறைக்கு ஏற்ப ஒரு sewage கிடையாது. குடிதண்ணீர் கிடையாது. ஆகையால் இவைகளை அளித்து அந்த ஏழை மக்களை வாழச் செய்ய அரசு தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டும்.

பிற்பகல் 1-00 அடுத்து மெண்டலி ரிடார்டெட் குழந்தைகள் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். அந்தக் குழந்தைகள் எப்படியோ பிறந்து விடுகின்றன, அது அந்த குழந்தைகளின் குற்றமல்ல. ஆனால் நாட்டிலே அவர்களுக்கு என்ன செய்கிறோம். தனிப்பட்ட முறையிலே அரசாங்கம் அந்தக் குழந்தைகளை எடுத்துப் பராமரிப்பது கஷ்டம் என்றாலும், பல social இன்ஸ்டிடியூஷன்கள் ஏற்கனவே எடுத்து நடத்துகிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கக் கூடிய மான்யத்தை இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களை பராமரிப்பது எளிதல்ல. ஆகவே அதிகப்படியான மான்யம் கொடுப்பது அவசியம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 18% ரிசர்வேஷனைப் பற்றிக் கூறினார்கள். இந்த ரிசர்வேஷனை எப்படி இதுவரை பூர்த்தி செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால், குறிப்பாக கல்வி மான்யம், சுகாதார மான்யம் ஆகிய மான்யங்கள் வரும்போது, அரிசனங்களுக்கு காலேஜில் இவ்வளவு பர்சென்டேஜ் ரிசர்வேஷன் கொடுக்கவேண்டியது கொடுக்கப்பட்டது, ஷெட்யூல்டு வகுப்பு, ஷெட்யூல்ட் டிரைப் ஆகியவர்களுக்கு இவ்வளவு சதவிகிதம் கொடுக்கப்பட வேண்டியது கொடுக்கப்பட்டாகி விட்டது, பிற உத்தியோக துறைகளிலும் கொடுக்கப்பட்டு விட்டது என்று பொதுவாக நாம் கூறி வருகின்றோம். ஆனால் அடிப்படையாக அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட ரிசர்வேஷன் பூராவும் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை தனிப்பட்ட துறையில் நீங்கள் ஆராய்ச்சி செய்வீர்களேயானால், ஒவ்வொரு டிபார்ட்மெண்டை எடுத்துக்கொண்டாலும், சரியான முறையில் ஒதுக்கப்பட்ட பர்சென்டேஜ் கொடுக்கப்படவில்லை என்பது தெரியவரும்.

அரிசன ஹாஸ்டல்கள் பல இருக்கின்றன. அந்த ஹாஸ்டல்களுக்கு வார்டன்களைப் போடுகின்றார்கள். அதில் பெருமளவு அரிசன வகுப்பைச் சார்ந்தவர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றியிருக்கும் விதத்தை இங்கே நான் கூறாமல் இருக்க இயலாது. பழனியைச் சார்ந்த அரிசன ஹாஸ்டல் ஒன்றில் இருந்த வார்டன் ஒருவரை 17 முறை மாற்றியிருக்கிறார்கள். 17 முறை அவர் மாற்றப்பட்ட காரணம் என்ன? ஆளுங் கட்சியின் எம்.எல்.ஏ. அவர் இங்கேயிருக்க வேண்டாமென்று கூறியிருக்கலாம். அவர் இங்கேயிருக்க வேண்டுமென்று ஆளுங்கட்சியைச் சாராத ஒரு எம்.எல்.ஏ. சொல்லியிருக்கலாம். ஆனால் அரசாங்கம் கட்சி மனப்பான்மை இல்லாமல் அதைச் செய்யவேண்டும். ஹாஸ்டலில் வேலை செய்கிறவர்கள் மாத்திரம் அல்ல. அரசாங்க உத்தியோகத்தை சார்ந்தவர்கள் கணவன் மனைவி ஒரே இடத்தில்தான் போஸ்டிங்க்ஸ் கொடுக்க



வேண்டும், கணவன் மனைவி தனித் தனியாக மாற்றக் கூடாது என்று அரசு உத்திரவு இருக்கிறது. ஆனால் மாற்றும்போது வேறு காரணங்கள் சொல்லுவார்களேயானால், அது திருப்தி அளிக்காது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு எம்.எல்.ஏ. அவர் இருக்க வேண்டாம் என்று சொல்லுவதற்காக வார்டனை மாற்றுவதும், இன்னொரு எம்.எல்.ஏ. இருக்க வேண்டுமென்று சொல்லுவதால் திரும்ப மாற்றுவதும் நல்லதல்ல எது அந்தந்த ஹாஸ்டலுக்கு, பள்ளிக்குத் தகுந்த முறையில் இருக்கிறது என்று பார்த்து செய்யவேண்டும். ஏனென்றால் அவர்கள் எல்லாம் குறைந்த சம்பளத்தில் வேலை செய்கிறவர்கள். அவர்களை ஒரு ஆண்டுக்குள்ளாக 9 இடங்களுக்கு மாற்றினால், அது ஹாஸ்டலுக்கும் நல்லதல்ல, அவர்களுக்கும் நல்லதல்ல அரசுக்கும் நல்லதல்ல. மூன்று ஆண்டுக்கு ஒரு முறை மாற்றுகிறோம் என்ற முறையை வைத்திருக்கிறோம். அதை அரசாங்கம் கடைபிடித்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிறேன்.

அடுத்து, மீனவத்தைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மீனவர்கள் தங்கள் பிடிப்புகளை நியாயமான முறையில் விற்க மார்கெட்டிங் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று வெட்டுந் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதைச் செய்வதற்கு அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறார்கள்? அவர்களுடைய கஷ்டங்களை அறிந்து அரசு வழிவகை செய்ய முன்வர வேண்டும். அவர்களுக்கு மீன் பிடிப்பு கிடைக்கும்போது ஓரளவுக்கு வாழ்க்கையை நடத்த முயன்றாலும், மீன் பிடி கிடைக்காத போது கஷ்டப்படுகிறார்கள். அம்மாதிரி நேரங்களில் அவர்களை பராமரித்துக் கொள்ள வேண்டிய அளவிற்காவது அரசு அவர்களுக்கு ஏதாவது நிதி உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்

மெகானைஸ்டு போட்டுகள் எல்லாம் குறைந்த விலையில் அரசு வாங்கி அதிகப்படியான விலையில் விற்பதைக் கூட இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எதற்காக அப்படி அதிக விலைக்கு மீனவர்களுக்கு விற்க வேண்டும் என்பது புரியவில்லை. அவர்களுக்கு ஒரு சப்ஸிடி கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதுடன், அதிகப்படியான விலையில் கொடுத்தால் அது மீனவர்களுக்கு மிகவும் கஷ்டத்தை ஏற்படுத்தும். அதை அரசு ஆராய்ந்து ஆவன செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, மீனத் துறை மான்யத்தின் மீதும், அரிசன நலத் துறை மான்யத்தின் மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் முக்கியமான கருத்துக்களுக்கு மாத்திரம் பதில் சொல்ல விரும்புகிறேன்,

பொதுவாகவே, முதலில் மீனளத் துறையை எடுத்துக் கொண்டால், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு, இல்லை கடந்த காலத்தை விட இப்போது, ஒரு புதிய வேகமான முன்னேற்றத்தைக் காண்கின்ற திருத்தங்கள் இருக்கின்றன என்பதை இந்த விளக்க உரையிலிருந்து நிச்சயமாகக் காணமுடியும்.

படகு கட்டுவதில் காட்டுகின்ற மிகத் தீவிரமான திட்டங்களும் அதிகப்படியான படகுகள் கட்டுகின்ற முறைகளும் ஏற்பட்டுள்ளன. கட்டுமரங்கள் அல்லது தோணிகள் இவைகளில் கூட சாதாரண பெரிய படகுகளில் வைப்பதை போல அவுட்போர்டு என்ஜின்கள் பொருத்தப்பட்டு மலிவான விலையில் மீனவர்களுக்குக் கொடுத்து, மீனவ மக்கள் சமுதாயம் முன்னேறவும், அதே நேரத்தில் அதிகப்படியான மீன் பிடிப்பதை உண்டாக்குகின்ற காரியங்களில் ஈடுபட்டும், ஆக இந்தத் திட்டங்களில் எல்லாம் அரசு முனைந்திருக்கிறது என்பதை விளக்க உரையில் காணமுடியும்.

ஆய்வைப் பயன்படுத்துதலை எடுத்துக் கொண்டால், இப்போது சென்னை, கடலூர், இராமேஸ்வரம், குமரிமுனை ஆகிய இடங்களில் அண்மைக் கடல் மீன் பிடி நிலையங்கள் இருக்கின்றன. இவற்றைத் தவிர இந்திய அரசு தூத்துக்குடியில் தொலைகடல் மீன்பிடி நிலையம் ஒன்றை அமைத்துள்ளது. சென்னையில் மற்றொரு தொலைகடல் மீன்பிடி நிலையம் அமைக்க மத்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலையங்களுக்கு வழங்கப்பட்ட விசைப் படகுகளைக் கொண்டு அண்மைக் கடல் தொலைகடல் பகுதிகளில் மீன்பிடிப்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது தவிர இந்திய-நார்வே திட்டத்தின் கீழ் மீன்பிடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இப்படகுகளைக் கொண்டு ஆய்வு செய்ததன் மூலம் ஆழ்கடலில் வாழ்கிற மீனள வாயில்கள் குறித்து பயனுள்ள தகவல்கள் கிடைக்கச் செய்வதில் அரசு முனைந்திருக்கிறது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நமது நாட்டில் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படுகின்ற பெரிய பெரிய இழுவை படகுகளுக்குப் பதில், நம்முடைய நாட்டிலேயே 50 அடி, 43 அடி, 49 அடி, 57 அடி உள்ள பெரிய படகுகளை உண்டாக்குகிற தளத்தையும் நடத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆய்வுசெய்த பிறகு, எந்த நிலையங்களில் அதிகப்படியான மீன்கள் கிடைக்கின்றன என்ற குறிப்பையும் மீனவ மக்களுக்கு கொடுக்கின்ற வசதியை அரசு வைத்திருக்கிறது என்பதை சுட்டிக் காட்டிக்கொள்ள விரும்புகிறேன்.



பெரிய படகுகள், இழு படகுகள் அமைப்பதுடன், சிறப்புத் தன்மை வாய்ந்த நடுத்தர அளவு இழு படகுகள் கட்டும் தளம் ஒன்றிருக்க வேண்டும் என்பதற்காக மண்டபத்தில் தென்னிந்திய ரயில்வேயின் பொறியியல் பட்டறை, சருக்குப் பாதை, கப்பல் பழுது பார்க்கும் துறை ஆகியவற்றை எல்லாம் எடுத்துக் கொண்டு, நடுத்தர அளவு இழுபடகு கட்டுந்தொழில் அமைக்க அவை பொருத்தமானவை என்று கருதி பொதுத் துறை நிறுவனம் ஒன்றை நிறுவுவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகின்றது என்பதையும் நான் சுட்டிக்காட்டிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று நல்ல மார்க்கெட்டிங் வசதிகள் தரவேண்டிய முறையிலும், ஏற்றுமதி செய்வதில் கணிசமான அளவு பங்கு பெறவும், உற்பத்தியை விற்பனைக்காக பல்வகைப் படுத்தவும் பொது நிறுவனம் ஒன்றை நிறுவுவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகின்றது. அந்த நிறுவனம் பெரிய படகுகளைப் பெற்று சொந்தமாக இயங்கி ஏற்றுமதிக்காகவும், உள்நாட்டுப் பயனுக்குப் போர்க்கும் பொருட்களை விற்பனை செய்யவும் பயன்படும். ஆக இந்த மீனளத் துறையில் ஒரு 'புளூ ரெவல்யூஷன்' உண்டாக்குகின்ற அளவுக்கு அதிகப்படியான மீன் பிடிக்கின்ற வகையிலும் பெரிய பெரிய படகுகளை தாம் கட்டுகின்ற வகையிலும், ஆழ் மீன் பிடிப்பு இடங்களைத் தேடி கண்டுபிடிக்கின்ற வகையிலும், அதில் ஈடுபாடு கொள்ளுகின்ற மக்களுக்கும், தனிப்பட்ட சிலர் தனியார் துறையில் எடுத்து நடத்துகிறவர்களுக்கும் ஊக்கம் தருகின்ற வகையிலும், இப்படி பல திட்டங்கள் உருவாக்குவதன் மூலம் இந்தத் துறையில் பல்வகையான முயற்சிகளை அரசு செய்து வருகிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

உள்நாட்டு மீனளங்களை நல்ல முறையில் பரிசீலனை செய்து, புது புது ரக மீன் இனங்களை உற்பத்தி செய்து, இந்தத் துறையிலே வேகமான முன்னேற்றத்திற்கு வகை செய்து வருகிறோம். அண்மைக் காலங்களில் பெரிய கெண்டை மீன் சினைகளைத் தூண்டுதல் முறையில் பொரிக்கச் செய்யும் உத்திகளைப் பெரிதும் கையாண்டதால், உள்நாட்டு மீன் உற்பத்திப் பெருக்கத்தில் பெரிதும் முன்னேற்றம் அடைய முடிந்தது. இப்படி இன்றைக்கு பல்வேறு வகைகளில் அரசு முனைப்பாக ஈடுபட்டு, மீனளத் துறையில் ஒரு பெரிய மாறுதலை செய்து வருகிறது.

கடல் மீன்பிடித் தொழிலைப் பெருக்குவதற்காக பெரிய பெரிய மீனளத் துறைகளை நிர்வகிக்க முடிவு செய்துள்ளோம். அந்த வகையில் விரைவிலேயே தூத்துக்குடி துறைமுகம் கட்டி முடிக்கும் நிலையில் இருக்கிறது. சென்னையில் இருக்கின்ற மீனளத் துறை கட்டுமானப் பணிகள் வேகமாக முன்னேறி வருகின்றன. அதேமாதிரி சிறு சிறு துறைமுகங்களையும் கட்டி வருகிறோம்.

முட்டத்தில் ஒரு சிறிய துறைமுகத்தையும், குளங்களில் ஒரு சிறிய துறைமுகத்தையும் கட்ட இருக்கிறோம். 10 லட்சம் ரூபாயும் அதற்குக் கீழே செலவாகக் கூடிய மீன்பிடித் துறைமுகங்களை மத்திய அரசு ஆதரவு தரும் திட்டங்களின் கீழ் நிறைவேற்றுவதற்காக சில சிறிய துறைமுகத் திட்டங்களை மத்திய அரசுக்கு அனுப்ப இருக்கிறோம். அதிலே ஒன்று தஞ்சை மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டினம் மீன்பிடி துறைமுகம். அதிகப்படியான மீன்களை உற்பத்தி செய்து, அவை கெட்டுப்போகாமல் பாதுகாக்கப்படுவதற்காக மீன் உறை நிலையங்கள், பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள், மீன் பதப்படுத்தும் நிலையங்கள் முதலியவைகளை நிறுவுவதற்கும் நிறைய பணத்தை ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

நமது மாநிலத்தில் எண்ணூர், மண்டபம், கடலூர் ஆகிய இடங்களில் பிடிக்கப்பட்ட மீன்களை கெட்டுப்போகாமல் பாதுகாப்பதற்காக பனியறை பிரிவு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் பல இடங்களில் பனிக்கட்டி உற்பத்திப் பிரிவு, உறைய வைக்கும் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது மீனவர்களைத் தவிர, தனியார்களும் மீன்பிடித் தொழிலில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அவர்கள் ஆர்வத்தை மேலும் வளர்க்கும் வகையில் அவர்களுக்கும் பல உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. மீன் பிடித் துறைமுகங்களில் இடம் ஒதுக்குதல், மீன்களை பக்குவப்படுத்தி வைப்பதற்கு இடவசதி, விசைப்படகுகளை நிறுத்தி வைக்க வசதி போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. தவிர அவர்களுக்கு வட்டி இல்லாத கடனும் கொடுக்க அரசு முன்வந்துள்ளது.

மீன்பிடிப் படகுகள் அடிக்கடி பழுது பார்க்கக்கூடிய வகையில் தமிழ்நாட்டில் படகு நிறுத்தப்படும் முக்கியமான இடங்கள் பலவற்றில் 'ஏ' வகுப்பு, 'பி' வகுப்பு பழுது பார்க்கும் பட்டறைகளை அமைப்பதற்கான பெருந்திட்டத்தின்படி இப்போது அதற்கான தீவிர முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம். இத்திட்டத்தின்படி ஏற்கனவே கடலூரில் உள்ள பழுது பார்க்கும் பட்டறை இன்னும் விரிவாக்கப்படும்.

வேறுபல சமுதாயத்தினருக்கு அளிக்கப்பட்டிருப்பதைவிட மீனவர் சமுதாயத்திற்கு ரோடு வசதிகள், கல்வி வசதி, பயிற்சி நிலைய வசதிகள் போன்ற வசதிகளை அதிகமாக அளிக்க அரசு முனைப்பான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த சிறிய அறிக்கையிலிருந்து நன்கு புரிந்துகொள்ளலாம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சிறிய சிறிய குறைகளைச் சொன்னார்கள்.



வேளாண்மைத் துறையில் உணவு உற்பத்தி செய்வது போலவே மீன்பிடித் துறையிலும் மீன் உணவு உற்பத்தி செய்கிறோம். அப்படியிருக்கும்போது வேளாண்மைத் துறைக்கு அளிக்கப்படும் மானியத்தைப்போன்று ஏன் மீனவர் துறைக்கும் மானியம் ஒதுக்கக்கூடாது? மீனவர் துறைக்கு 2 கோடி ரூபாய் தானே செலவழிக்கிறோம் என்று எல்லாம் சொன்னார்கள்.

நமது மாநிலத்தில் பெரிய கடலோரப் பகுதி இருந்தாலும் உரிய முறையிலே அதைப் பயன்படுத்துவதில் இதற்கு முன்னாலே இருந்த அரசு அக்கறை செலுத்தவில்லை. அதனால் மீன் உற்பத்தியில் நாம் மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கிறோம். அந்த நிலையைப் போக்குவதற்காகத்தான் இப்போது பற்பலத் திட்டங்களைத் தீட்டி படிப்படியாக முன்னேறி வருகிறோம். இன்னும் சில ஆண்டுகளில் நாம் எதிர்பார்க்கின்ற மாறுதலை எட்டிவிடுவோம் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது. அப்படி பெரும் மாறுதலை அடைந்த பின்னால் இந்தத் துறைக்கு இன்னும் அதிகமான பணம் ஒதுக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதை குறைபட்ட உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர் சமுதாயத்திற்குப் படகு வழங்குவதிலே பல தவறுகள் நடைபெறுகின்றன என்றும், மீனவர்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லி, வேறு தனிப்பட்டவர்களுக்குக் கொடுப்பதாகவும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. குழ. செல்லையா அவர்கள் சொன்னார்கள். இப்படிப்பட்ட குற்றச்சாட்டு சரியானதாக இருக்க முடியாது. ஏனென்றால் படகு ஒதுக்குவதில் கையாளப்படுகின்ற முறை அப்படி இருக்கிறது. மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அவர்கள் உண்மையிலே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்களா என்று பார்த்து, இதற்கு முன் அவர்களுக்கு விசைப்படகு ஒதுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று பார்த்து, அவர்கள் எந்தப் பகுதியிலே எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று பார்த்து, விசைப்படகுகளை செலுத்துவதில் பயிற்சி பெற்றிருக்கிறார்களா என்று பார்த்து—அப்படிப்பட்டவர்களின் பெயர்களை எழுதிப்போட்டு குலுக்குச் சீட்டு மூலம் தேர்ந்தெடுத்து படகு வழங்கப்படுகிறது. ஆகவே, இதிலே நிச்சயமாக தவறுதல் ஏற்பட வழி இல்லை.

இதிலே தவறு நடக்கவேண்டுமானால், மீனவர்கள் தங்கள் பெயருக்கு வந்த படகுகளை மற்றவர்களுக்கு கொடுத்து, அவர்கள் பினாமியாக ஒருவேளை வைத்துக்கொண்டிருக்கலாம். அப்படிப்பட்ட தவறுகள் எங்காவது நடந்திருக்குமானால், குறிப்பிட்டுச் சொல்லப்பட்டால் அல்லது அரசாங்கத்திற்கு தகவல் வந்தால் அதுபற்றி விசாரிக்கப்படும். இந்தமாதிரியான தவறு எங்கும் எப்போதும் நடந்துகொண்டிருக்கிறது என்றால் அவைகளைத் தடுப்பதில்

பொறுப்புள்ள உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அகதியாக இல்லாதவர்களுக்கு அகதி என்ற பெயரில் விசைப்படகுகள் வழங்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அகதி அல்லாத யாருக்காவது படகு கொடுக்கப்பட்டிருந்தால், அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப் பற்றிய தகவல்களை தனிப்பட்ட முறையிலோ அல்லது இந்த மன்றத்திலோ குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, குற்றச்சாட்டுகளைச் சொல்பவர்கள் ஆதாரப்பூர்வமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்நாட்டு மீன்பிடி இடங்களான அடையாறு, எண்ணூர், பொன்மலை ஆகிய இடங்களில் கழிவு நீர் வந்து கலப்பதால் மீன்கள் செத்து விடுகின்றன என்று சொன்னார்கள். அரசு அதைப்பற்றி பரிசீலித்து, தொழிலதிபர்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. தொழிற்சாலைகளின் கழிவு நீர் நீர்நிலைகளில் கலப்பதால் மீன் செத்துவிடுவதாகப் புகார் வருகிறது, ஆகவே கழிவு நீரை நல்ல நீராக மாற்றி நீர்நிலைகளில் விட வேண்டும்; அல்லது வேறு பகுதிகளில் கழிவு நீரை விடவேண்டும் என்று அரசு தெரிவித்திருக்கிறது என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்நாட்டு மீனவர்களுக்கே உள்நாட்டு மீனளங்களில் மீன் பிடிக்கும் குத்தகையைத் தரவேண்டுமென்று கேட்டதன் அடிப்படையில் அவர்களுக்கே கொடுப்பது என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, உள்நாட்டு மீனவர்கள் குத்தகை எடுக்க முன்வருவார்களானால் அவர்களுக்குக் குத்தகை விட அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருச்செந்தூர், பெரியதாழை பகுதியில் இருக்கின்ற விசைப்படகுகாரர்களுக்கும் நாட்டுப் படகுக்காரர்களுக்கும் அடிக்கடி தகராறு வருவதாக திரு. கே. பி. கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். நாட்டுப் படகுக்காரர்களுக்கு பாதிப்பு இல்லாமல் விசைப்படகு வைத்திருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் சென்று மீன் பிடிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்ட சில தினங்களில்தான் பிடிக்கவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கேதான் பிடிக்கவேண்டும், இங்கே பிடிக்கக் கூடாது என்று சட்டம் போட முடியாது. இரண்டு பேரும் ஒரே இடத்தில் மீன் பிடிப்பதால் தகராறுகளும் சச்சரவுகளும் ஏற்படுகின்றன. சென்னையிலே கூட சிறிய படகு வைத்திருப்பவர்களுக்கும் பெரிய படகு வைத்திருப்பவர்களுக்கும் இப்படிப்பட்ட சச்சரவுகள் வருகின்றன. இப்படிப்பட்ட நேர்வுகளில் பாதிப்பு ஏற்படாத வகையிலும்,



சச்சரவுகள் வராமல் இருப்பதற்காகவும் இரண்டு பேரும் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்குள் நாட்டுப் படகுக்காரர்களும், அதற்கு அப்பால் விசைப்படகுக்காரர்களும் மீன் பிடிப்பது என்றும் அல்லது இன்னின்ன நாட்களில் இன்னின்ன நேரத்தில் அந்த இடத்தில் சிறிய படகுக்காரர்கள் மீன் பிடிப்பது என்றும் மற்ற நாட்களில்—மற்ற நேரங்களில் பெரிய படகுக்காரர்கள் மீன் பிடிப்பது என்றும் ஏதாவது ஒரு சமரச உடன்பாடு செய்துகொள்ள வேண்டும். அது அல்லாமல் அரசாங்கம் தனியாக உத்தரவு போட முடியாது.

சென்னையில் இப்படிப்பட்ட தகராறுகள் வராமல் இருக்க அதிகாரிகள் அவ்வப்போது கவனித்து வருகிறார்கள். புகார்கள் வந்தால் அவற்றை நீக்க உடனடியாக சமரச ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். திருச்செந்தூர், பெரியதாழை பகுதிகளிலும் அப்படிச் செய்யலாம்; செய்து வருகிறார்கள் என்று கருதுகிறேன். ஆகவே மேற்கொண்டு பெரிய புகார்கள் எதுவும் வருவதற்கு வாய்ப்பில்லை. நாட்டுப் படகுக்காரர்கள் மீன் பிடிக்கும் இடத்தை பாதுகாக்கப்பட்ட இடமாக்கவும், அந்த இடத்தில் விசைப்படகுக்காரர்கள் மீன் பிடிக்கக் கூடாது என்றும் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கே. பி. கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எந்த அளவு சாத்தியமாக இருக்க முடியும் என்று இப்போது சொல்ல முடியாது.

அடுத்து, எக்ஸ்-சர்வீஸ்மேன்களுக்கும் இப்படி படகுகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்கின்றார்கள். இப்போது அவர்களுக்கு இப்படி படகுகளைக் கொடுக்கும் திட்டம் இல்லையென்றாலும், இதைப் பரிசீலனை செய்து, அவர்களுக்கும் கொடுக்க முடியுமா, இந்தத் துறையில் அவர்களும் ஈடுபடுவார்களா என்பதை ஆராய வேண்டும். ஆனாலும் மீனவர்கள் அல்லாதவர்களுக்கும் கடன் மூலமாகப் படகுகளைக் கொடுக்க அரசு திட்டத்தினை வைத்திருக்கின்றது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் எக்ஸ்-சர்வீஸ்மேன்கள் படகுகளைப் பெற வழிவகையிருக்கின்றது. இந்தத் திட்டத்தின்கீழ் அவர்கள் படகுகளைப் பெறுவதில் எந்தவிதமான குறுக்கீடும் கிடையாது.

அடுத்து, பாங்கிகளின் மூலம் இதற்காக கடன் தொகையைக் கேட்டால் அவர்கள் 'செக்யூரிட்டி' கேட்கிறார்களே என்று சிலர் குறைபட்டுக் கொள்ளுகின்றார்கள். மேலும் அந்தப் படகையே ஏன் செக்யூரிட்டியாக வைத்துக் கொண்டு கொடுக்கக் கூடாது என்றும் கேட்கின்றார்கள். யார் கடன் கொடுத்தாலும் செக்யூரிட்டி கேட்கத்தான் கேட்பார்கள். அதில் தவறேதும் இல்லை. படகையே செக்யூரிட்டியாக வைத்துக்கொள்ளக்கூடாதா என்றால் கடலில் போகும் படகு காற்றாலும் அலைகளாலும் ஆறுகளில் வெள்ளத்தாலும் மூழ்கி விடக்கூடிய வாய்ப்பு இருப்பதால் அவர்கள் படகுகளையே செக்யூரிட்டியாக

ஏற்றுக்கொள்ளத் தயங்குவதில் நியாயம் இருக்கிறது. இதில் ஏதாவது மாற்றம் காண முடியுமா என்பதைப் பரிசீலனை செய்து பார்க்க முன்வருகின்றேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பொதுவாக ஒரு குறை சொல்லப்பட்டதைக் கேட்டோம். "கோளக்காரர்களுக்கு நாம் அதிகச் சலுகைகளைத் தருவது பொருத்தமானதுதானா" என்றார்கள். கோளக்காரர்களுக்கும் கொடுப்பதில் என்ன தவறுகள் இருக்க முடியும் என்று எனக்குப் புரியவில்லை. இங்கே உள்ளே இப்படிப் பேசிவிட்டு, வெளியே போய் கோளக்காரர்களுக்குச் சலுகை தருவதில்லை, அவர்களை பாரபட்சமாக நடத்துகின்றார்கள் என்று சொல்லுகின்றார்கள். இப்படி உள்ளே ஒன்றும் வெளியே ஒன்றுமாகப் பேசுவது பொருத்தமானதுதானா நியாயமானதுதானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. கே. பி. கே. தங்கமணி:** துணைத் தலைவரவர்களே, முதலில் அனந்தநாயகி அம்மையார் அவர்கள்தான் குறிப்பிட்டார்கள். அதில்கூட 'டெண்டர்' என்று வரும்போது கோளக்காரர்களைத்தான் 'ப்ரிஃபோ' பண்ணுகின்றார்கள் என்றுதான் சொன்னார்களே தவிர . . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** க்ளாரிஃபிகேஷன் என்பதையெல்லாம் கடைசியில் வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அம்மையார் அவர்கள்தான் கோளதத்துக்காரர்களுக்குக் கொடுத்து விட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். நமது அரசினைப் பொறுத்த மட்டில் ஒரு குறிப்பிட்ட மாநிலத்தைச் சார்ந்தவர் என்ற பாகுபாடு இல்லாமல் தொழில் அபிவிருத்தி அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் செயல்பட்டு வருகிறது என்பதை நான் இதைப் பொருத்தவரையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே, மீன்வளத் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு மிக முன்னேற்றமான காரியத்தைச் செய்து வருகின்றது. அவர்கள் விஷயத்தில் எந்தவிதமான தவறோ குறையோ ஏற்படுவதில்லை. ஆனால் ஒருசிலர் படகுகளைக் கட்டுவதில் குறையிருப்பதாகத் தெரிவித்தனர். அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் படகுகளைக் கட்டுவதையொட்டிய டெண்டர்கள் பொறுத்தமட்டில் இயக்குநர் வகையிலோ அல்லது அரசுச் செயலாளர் வகையிலோ எதுவும் ஒன்றும் முடிவெடுப்பதில்லை. இதற்கென ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியினர்தான் டெண்டரைப் பிரிக்கின்றார்கள்.



விலைகளைப் பொருத்தமட்டில் கமிட்டிதான் அவற்றை முழுக்க முழுக்கப் பரிசீலிக்கிறார்கள். எனவே அரசினைப் பொறுத்தமட்டில் எந்தவிதமான தவறும் ஏற்படுவதில்லை. அந்தக் கமிட்டிக்கு பரிசீலனை செய்யும் உரிமை இருக்கிறது. அந்தக் கமிட்டி செய்வதில் குற்றம் காணமுடியாது என்று சொல்லிக்கொண்டு நேரம் இடந்தராத காரணத்தால் எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல முடியவில்லையே என வருந்தி மீனளத் துறையைப் பொறுத்தவரையில் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருப்பவர்கள் அருள்கூர்ந்து அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையோடு இதை முடித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அரிசன மான்யக் கோரிக்கையின் மீது பல நண்பர்கள் சில குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அவைபற்றியும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, அனைவருமே ஒன்றைச் சொன்னார்கள். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி குறைந்து விட்டது, குறைந்துவிட்டது என்று கூறியிருக்கின்றார்கள். இங்கே கொடுத்துள்ள விளக்க உரையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது குறைந்துவிட்டதாகக் காணப்படலாம். கடந்த ஆண்டு ரூ. 841.23 லட்சம் செலவழிக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 816.35 என்று இருக்கும்போது ஏதோ சென்ற ஆண்டைவிட இப்போது குறைந்துவிட்டது என்று எண்ணுகின்றார்கள். ஆனால் கடந்த ஆண்டில் இந்த ரூ. 841.23 லட்சத்தில் ரூ. 88 லட்சம் சத்துணவுத் திட்டத்திற்காக நாம் செலவழித்திருக்கிறோம். இந்தத் திட்டத்தின்படி நகர்ப்புறங்களிலே உள்ள மூன்று வயதிலிருந்து ஆறுவயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்கப்பட்டது. அந்த அடிப்படையில் சென்ற ஆண்டு ரூ. 38 லட்சம் செலவழித்தோம். அந்தத் தொகை அரிசன நலத் துறை மானியத்தில் கடந்த ஆண்டு சேர்க்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு அந்தத் தொகை சமூக நலத் துறை அதாவது மகளிர் நலத் துறையில் சேர்க்கப்பட்டு, இதிலிருந்து அந்தத் தொகை எடுக்கப்பட்டுவிட்டதால் அது குறைந்து காணப்படுகிறது. எனவே ரூ. 841.23 லட்சத்தில் ரூ. 85 லட்சம் சத்துணவுத் திட்டத்திற்காக உள்ளதைக் கழித்துப் பார்த்தால் கடந்த ஆண்டு அரிசன நலத் துறைக்கு என ஒதுக்கப்பட்டது ரூ. 753.23 லட்சம்தான். ஆனால் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது 816.35 லட்சம் என்றால் கடந்த ஆண்டைவிட இப்போது ரூ. 63 லட்சம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளுவார்கள் என்று எண்ணுகிறேன். இந்த ரூ. 88 லட்சம் கடந்த ஆண்டு 'சத்துணவு' என்ற தலைப்பில் வந்திருப்பதை கடந்த ஆண்டு பட்ஜெட் எஸ்டிமேட்டைப் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். இப்போது இந்தச் சத்துணவு

**வேறு துறைக்கு மாற்றப்பட்டுவிட்டதால் அது விழுக்காடாகத் தெரிகின்றது. ஆக மொத்தத்தில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு ரூ. 63 லட்சம் அதிகமாக ஒதுக்கியிருக்கின்றோம் என்பதுதான் உள்ள நிலை.**

இந்தச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 88 லட்சத்தினால் பலனடையக் கூடிய குழந்தைகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருடைய, குடிசை வாழ் பகுதி மக்களுடைய குழந்தைகள்தான். இப்போது நகர்ப் புறக் குழந்தைகள் எல்லோருக்கும் இதைக் கொஞ்சம் கொஞ்சமாக விஸ்தரித்து வருகிறோம். இப்போது ஒரு லட்சத்துக்கு உள்ளிட்ட மக்கள் தொகை உள்ள நகரங்களிலெல்லாம் இந்தத் திட்டத்தினை நடத்துகிறோம். இதிலும் 'ஸலம்' என்று வரும்போது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த குழந்தைகளுக்குத்தான் இந்தச் சத்துணவைக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். எனவே அரிசனத் துறையிலிருந்து ரூ. 88 லட்சம் நீக்கப்பட்டு அது வேறு துறையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே "குறைந்துவிட்டது குறைந்துவிட்டது" என்று சொல்லுவதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**அதோடு மாண்புமிகு உறுப்பினர் பாலசுந்தரம் அவர்கள் கூறும்போது 28-ம்** பக்கத்தில் உள்ள குறையைச் சொன்னார்கள். அதாவது மொத்தத்தில் வருவாய்க் கணக்கில் ரூ. 816,35 லட்சம், மூலதனக் கணக்கில் ரூ. 14.53 லட்சம், கடன் கணக்கில் ரூ. 17,65 லட்சம் ஆகமொத்தம் ரூ. 848.53 லட்சம் என்று இருக்கின்றது என்று குறிப்பிட்டு இந்த மூலதனமும் கடனும் ஏன் இதில் சேர்க்கப்படவில்லை என்று கேட்டார்கள். இது கடன். பல்வேறு திட்டங்களுக்கு நாம் கடனைக் கேட்கிறோம். இந்தக் கடன் தொகைகளை நாம் வருவாய் என்று வைத்துக்கொண்டு கணக்கில் காண்பிக்க முடியாது. அரசாங்கம் செலவழிக்கும் கணக்கைத்தான் வரவு-செலவுத் திட்டத்தில் காண்பிக்க முடியுமே தவிர கடன்களையெல்லாம் இதில் காண்பிக்க முடியாது. எனவே இதில் எந்தவிதமான தவறும் இருக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் பாலசுந்தரம் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று இதை அவர்களுக்கு விளக்கமாகக் கூறிக்கொள்ளுகிறேன்.

எட்டுக் கோடி ரூபாய் திட்டத்தில் ரூ. 596 லட்சத்தை கல்விக்காக என்று **செலவினை ஒதுக்கிவிட்டு, மிச்சம் கிட்டத்தட்ட ரூ. 2.5 கோடியைத்தான் பொருளாதாரம், வீட்டுவசதி இவற்றுக்காக ஒதுக்கியிருக்கின்றீர்கள், ஏன் கல்விக்கான** செலவினை முழுவதுமாக கல்வித் துறையே ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று **மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கேட்டார்கள். கல்வி இலாகா ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு இது பெரியதொரு தொகையில்லை. ஆனால் இந்தத்**



**துறைக்கு என்று தனியாக ஒரு தொகையை ஒதுக்கி, தனியான பொறுப்புடன்**
அந்தத் தொகையைச் செலவழித்து அரிசனக் குழந்தைகள், மாணவர்கள்
மாணவிகள் போதுமான எண்ணிக்கையில் பயன் பெற வேண்டும் என்ற
நோக்கத்தோடுதான் தனியாக இதை ஒதுக்கிவைத்திருக்கிறோம். இந்தத்
துறையில் இதற்காகவே தனியான பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன, நிதி
ஒதுக்கீடும் தனியாக இருக்கின்றது. கல்வித் துறையில்கூட அன்றைக்கு
மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள், "பதினெட்டு
சதவிகிதம் கொடுக்கவேண்டும் என்றால் இன்னும் கொடுக்கவில்லையே" என்று.
இன்று அரிசன இலாகாவின் மூலம் இப்படி கல்விக்கென நிதி ஒதுக்கீடு செய்
கின்றதை கல்வி இலாகாவிலேயே சேர்த்துவிட்டுச் செய்தாலும் இப்படிப்பட்ட
குறைகள் ஏற்படக்கூடும். எனவேதான் அந்த வகையில் அவர்களைச் சேர்த்து
விடக்கூடாது என்று கல்வியினைப் பொறுத்தமட்டில் தனிச் சலுகை, தனியான பிற்
கணக்கு, தனியான மேற்பார்வை என்று கவனம் செலுத்தி வருகின்றோம். பகல்
கல்வி இலாகா பணமானாலும் அரிசன நலத் துறைப் பணமானாலும் எல்லாம் 1.30
தமிழக அரசுப்பணம்தான் என்பதை நாம் மறந்துவிடுவதற்கு இல்லை என்பதை
நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**எனவே, நம்முடைய பணம் இருந்தால் பராமரிக்கும் பொறுப்பில் தனி**
அக்கறை ஏற்படும் என்ற நோக்கத்தில் இந்த இலாகாவின் மூலமாக இந்தப்
பணத்தைச் செலவழித்துக்கொண்டு வருகின்றோம்.

அடுத்து, பொதுவாகத் மதம் மாறியவர்களுக்கு எந்தவிதமான முன்னேற்ற
மும் தரப்படவில்லையே, செக்புலர் ஸ்டேட் என்று சொல்லப்படுகிறதே என்று
ஜேம்ஸ் கேட்டார்கள். இந்தக் கேள்வியை எங்களைக் கேட்கத் தேவையில்லை.
மதம் மாறிய புத்த மதத்தினரும் இந்து அரிசனங்களுக்குக் கொடுக்கின்ற
அத்தனை சலுகைகளையும் கொடுத்துக்கொண்டு தான் வருகிறது. ஆனால்,
மாநில அரசு மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்கு சலுகைகளை தரக்கூடாது என்ற
கண்டிப்பான உத்தரவை—ஆணையை—மத்திய அரசு கொடுத்திருக்கிறது. அதே
**அரசு, புத்த மதத்திற்கு மாறிய ஹரிஜனங்களுக்கு எல்லாச் சலுகைகளையும்**
**மாநில அரசு தரலாம் என்ற உத்தரவையும் போட்டிருக்கிறது. எனவே, மத்திய**
அரசில் வலுவாக உள்ளவர்கள் "மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்கும் மாநில
அரசு சலுகைகள் கொடுக்கலாம்" என்று மாற்றித் தந்தால் கிறிஸ்துவர்கள் அனை
வருக்கும் நன்மை செய்தவர்களாக ஆவார்கள். **அவர்கள் அதைச் செய்ய**
**வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.**

இன்றைக்கும், உறுதியாக, நமது டாக்டர் கலைஞர் அவர்களின் **தலைமையின்**
**கீழ் இயங்கிக்கொண்டிருக்கிற இந்த அரசு மதம் மாறிய கிறிஸ்துவ ஹரிஜனங்**

களுக்கு, ஹரிஜனங்களுக்குக் கொடுக்கின்ற அத்தனை சலுகைகளையும் தந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்கள் கூட, மதம் மாறிய கிறிஸ்துவ ஹரிஜனங்களுக்கு ஒரு தலைமுறைக்கு சலுகைகள்—இரண்டாம் மூன்றும் தலைமுறையினர்களுக்குக் கிடையாது என்று சட்டம் போட்டிருந்தார்கள். இது, பழைய காங்கிரஸ்காரர் திரு. ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரிய வேண்டும். ஆனால் நாங்கள் அந்த பாகுபாட்டைக் கூடப் பார்க்கவில்லை. ஒரு தலைமுறையினராக இருந்தால் என்ன, இரண்டு தலைமுறையினராக இருந்தால் என்ன, எல்லாம் ஒரே தாழ்த்தப் பட்டவர்கள்தான். பழைய கந்தன் பழைய கந்தன்தான் என்ற முறையில் மாநில அரசு தரும் அத்தனை சலுகைகளும் மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்கும் உண்டு என்று வகை செய்திருக்கிறோம். மத்திய அரசுச் சலுகையானாலும், மாநில அரசுச் சலுகையானாலும், மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்கும் அவை கொடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மத்திய அரசு அதைச் செய்யவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அடுத்து, ஹரிஜனங்களுக்கு உயர்ந்த சாதிக்காரர்கள் வாழ்கின்ற பகுதியில் வீடுகள் கட்டவேண்டும் என்று எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சொன்னார்கள். இது கொள்கை அளவில் உயர்ந்த ஒன்றாகும், உயர்ந்த நோக்கமாகும் என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். ஆனால், யாரும் புதிய நகரம் எதனையும் உண்டாக்கவில்லை. ஒரு புதிய குடியிருப்பை உண்டாக்கவில்லை. வீடுகளைக் கட்டுவது, அவர்கள் குடிசையில் வாழ்கிறார்கள், சொந்தமாக இடமில்லாமல் வாழ்கின்றார்கள். எனவே, நல்ல வீடுகள் அவர்களுக்குக் கட்டித் தர வேண்டு மென்பதற்காகவே தவிர, தமிழகத்திலேயே ஒரு புதிய குடியிருப்பை உண்டாக்க வில்லை. அப்படி உருவாக்கக்கூடிய ஹவுசிங் போர்டு இருக்கிறது—அப்படிப் பட்ட குடியிருப்புகளில் 10 சதவிகிதம் அரிசன மக்களுக்காக ஒதுக்குகிறோம்.

இன்றைக்கு வீடுகள் கட்டுவதற்காக ஏற்கனவே நிலம் வைத்திருக்கிறோம். சொந்தமாக நிலமற்ற அரிசனங்களுக்கு நிலம் தரவேண்டும் என்று 1960-க்கு முன்னாலேயே அரசுக்கு தேவையற்ற நிலத்தில் அரிசன மக்கள் குடியிருந்தால் அந்த இடத்தை அவருக்கே சொந்தமாக்கித் தரவேண்டுமென்று சட்டம் போட்டு அதன் மூலம் நிலம் தரப்படுகிறது.



இப்போது தஞ்சாவூர் குடியிருப்புச் சட்டம் இருக்கிறது. அது இன்றைக்கு பல மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படுகிறது. விவசாயக் கூலிகள் சொந்தமாக நிலமில்லாமல் வீடுகள் வைத்திருந்தவர்களுக்கு அந்த நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்று சட்டம் போட்டிருக்கிறோம். அப்படி இருக்கும்போது, வீடு கட்டும்போது அதை ஜாதி இந்துக்கள் இருக்கின்ற இடத்திலே சேர்க்கவேண்டு மென்று சொன்னால் அது ஆகக்கூடிய காரியம் அல்ல. புதிதாக குடியிருப்புகள் அமைக்கப்படும்போது வேண்டுமானால் ஐம்பதுக்கு ஐம்பது, அறுபதுக்கு நாற் பது என்ற அடிப்படையில் செய்யலாம்.

கேரளாவைப் பற்றி மதிப்புக்குரிய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள், கேரளத்திலே, தனித்தனியாக அவர்களுக்கு வீடுகள் கட்டித்தரப்படவில்லை என்று. நான் அண்மையில் கேரளாவிற்குச் சென்றிருந் தேன், அந்த மாநிலத்தின் அழைப்பின் பேரில். போய் 100 வீடுகளுக்கு சாவி கொடுத்துவிட்டு வந்தேன். அதற்கக்காக அந்த அரசுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்ள வேண்டும். ஆனால், அங்கே ஏதும் தாழ்த்தப்பட்ட மக்களும் சாதி இந்துக்களும் ஒன்றாக இருக்கவில்லை. அங்கே அந்தப் பாகுபாடு இருக்கத்தான் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் தனியாகவும், வேற்று சாதிக்காரர்கள் தனியாகவும்தான் வசிக்கிறார்கள். வீடுகள் கட்டும்போதும் 50 சதவிகிதம் சாதி இந்துகள், 50 சதவிகிதம் அரிசனங்கள் என்று அங்கே அவரவர்கள் வாழ்கின்ற பகுதிகளில் வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்கிறார்களே தவிர, இரண்டு பேர்களுக்கும் வீடுகளை ஒன்றாகக் கட்டவில்லை. ஆனால், அப்படி இருவரும் சேர்ந்து வாழ்கின்ற வகையில் வீடுகள் கட்டப்பட வேண்டுமானால், பெரிய மாற்றங்களைச் செய்ய வேண்டும். இப்போது அவர்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டுமென்ற அடிப்படையிலே தான் வீடுகள் கட்டப்படுகின்றன.

இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல ஒரு வீட்டு வசதிக் கழகத்தை உருவாக்கியிருக்கிறோம். ஏறத்தாழ 80 ஆயிரம் பேர்களுக்கு வீடுகள் கட்ட இருக்கிறோம். இதுவரை திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டது போல ஒரு லட்சமல்ல, 2,07,987 வீட்டு மனைகள் கொடுத்திருக் கிறோம். இதில்—77,219 கிட்டத்தட்ட 80 ஆயிரம் பேர்கள் இன்னும் இதில் வீடு கட்டிக்கொள்ளவில்லை. அந்த 80 ஆயிரம் பேர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். அது தவிர, இன்னும் பலர் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லாமல் இருக்கிறார்கள். அவைகளையெல்லாம் நாம் கவனித்தாக வேண்டும். ஏன், இந்த வீட்டு வசதிக் கழகத்திற்கு கூட ஹரி இருக்க வேண்டுமா என்று மாண்புமிகு அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இந்த சமுதாயம் உயர்வடைகிற வரை, அதற்கு தனி பார்வை இருக்க வேண்டு மென்று அரசு கருதுகிறது.

அம்மையார் அவர்கள், இதை 'வெஹிமெண்டாக்' எதிர்க்கிறேன் என்று கூடச் சொன்னார்கள். இன்றைக்கு, எல்லாத் துறைகளிலும், எல்லா முன்னேற்றங்களிலும், எல்லாத் திட்டங்களிலேயும், அரிசனங்களுக்கு சட்டப்படி அடிப்படையில் ஒரு உரிமை இருக்கிறது. அகில இந்திய முறையிலும் இருக்கிறது. ஒவ்வொரு நடவடிக்கையிலும், அரசாங்கம் செய்கின்ற ஒவ்வொரு நன்மையிலேயும் அவர்கள் சம பங்கு பெற வேண்டிய தகுதி, உரிமை இருக்கிறது என்றாலும், அவை தரப்படவில்லை. இதுவரையிலும், ஆண்டாண்டு காலமாக எத்தனையோ இயக்கங்கள் மூலமாகவும், எத்தனையோ திட்டங்கள் மூலமாகவும், வலுவான காந்தியார் தலைமையிலே இருக்கிற கட்சி ஆட்சிக்கு வந்திருந்தாலும், இப்படி தனி அக்கறை செலுத்தினார்கள் என்றாலும், சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகளானாலும் அந்த மக்கள் முன்னேற்றம் அடையவில்லை. அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை, அவர்கள் வாழ வீடு இல்லை, உண்ண உணவு இல்லை என்ற நிலையைப் பார்க்கிறோம். எனவே தான், தனி அக்கறை காட்ட வேண்டுமென்ற நோக்கத்திலே பல சலுகைகள் தனியாக இவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதை அறிந்தும், அம்மையார் ஏனோ, 'கண்டிக்கிறேன்' என்று கூறுகிறார்கள். இப்படி தனி அக்கறை எடுக்கப்படவில்லை என்றால், எப்படித் தான் அந்த மக்களுக்கு இந்தச் சலுகைகளையெல்லாம் கொடுப்பது? என்றைக்குத் தான் அவர்களுடைய வாழ்விலே முன்னேற்றத்தைக் காண்பது? அப்படியில்லாமல், பொத்தாம் பொதுவாக, பல்லாயிரக்கணக்கானவர்களோடு நீங்களும் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னால் அவர்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகளை தட்டிப் பறிக்கிறவர்கள் ஏராளமாக எதிரிலேயே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உண்டாக்கக் கூடாது என்ற நோக்கத்திலேதான் தனிப் பார்வை வேண்டும் என்ற கொள்கையில் இருக்கிறோம்.

அந்த நோக்கத்தின் அடிப்படையிலேயேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த தனி வீட்டு வசதிக் கழகத்தை உருவாக்கி இருக்கிறார்கள். அதன் மூலமாக இன்றைக்கு ஆண்டுக்கு 10 ஆயிரம் பேர்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்கவிருக்கிறோம். அதிகப்படியான மக்களுக்கு கடன் தருகின்ற திட்டங்களைச் செயலாற்றவிருக்கிறோம்.

அது மட்டுமல்ல. இன்னொரு புதிய திட்டத்தையும் இந்த ஆண்டு இந்த அரசு நிறைவேற்றி இருக்கிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எப்படி வீட்டு வசதிக் கழகம் அரிசன மக்களுக்கு நன்மை செய்யவிருக்கிறதோ, அதே போல ஒரு திட்டம்—சிறு தொழில்கள் தொடங்க தேவையான கடன்களை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து அரிசன மக்கள் நேரடியாகப் பெற்று



பயனடைய உதவியான திட்டம்—பைனான்சிங் கார்ப்பரேஷன் போல ஒன்று—அது இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதிலே முதல் கட்டமாக, சென்னை போன்ற நகரங்களில் இருக்கின்ற ரிக்ஷா இழுப்பவர்களுக்கு உதவியளிக்கவிருக்கிறது. சென்னை நகரில் கை ரிக்ஷா இழுக்கிறார்கள். எங்கள் இயக்கம் ஆரம்ப நாளிலிருந்தே கை ரிக்ஷாவை எடுத்துவிட வேண்டும் என்று தீர்மானம் போட்ட இயக்கம். அது எங்கள் கொள்கைக்கு உகந்ததல்ல என்று சொல்லி வந்தோம். நாங்கள் கை ரிக்ஷாவில் ஏறியது கிடையாது. ஏறக் கூடாது என்று கட்சி தீர்மானம் போட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் கையால் இழுக்கப்படுகிற ரிக்ஷாக்கள் இனி இருக்கக் கூடாது, இன்றைக்கு கை ரிக்ஷா இழுக்கிறவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா வாங்கிக்கொள்ள நாஷனலைஸ்டு பாங்கு, கமர்ஷியல் பாங்க் மூலம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்வது என்பது தான் இந்தத் திட்டம். இதற்குப் பிறகு இதுபோன்ற பல திட்டங்களை எல்லாம் அரிசன மக்களுடைய நலனுக்காக இந்த அரசு வகுக்க இருக்கிறது என்பதனையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். வீடு கட்டிக்கொடுக்கவும், அவர்கள் பல தொழில்களைச் சொந்தமாகச் செய்யவும் வேண்டிய வழிவகைகளைச் செய்து அந்த மக்களது வாழ்வில் ஒரு பெரிய மாறுதலைச் செய்யவேண்டுமென்றே இந்த அரசு பல காரியங்களையும் செய்து வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

மதிய உணவு குறைந்துவிட்டதே, மாணவர்கள் வரவில்லையா, மனம் இரங்கவில்லையா என்பதாக எல்லாம் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு பஞ்சாயத்துகள் நடத்துகின்ற பள்ளிகளில் இந்த மதிய உணவுத் திட்டத்தை நலத்துறை சார்பில் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வருகிறார்கள். பஞ்சாயத்துகள் நடத்துகிற பள்ளிகளில் மதிய உணவை அவர்கள் செலவில் தருகின்றார்கள். ஆனால், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 'நாங்கள் கொடுக்க மாட்டோம், நீங்கள் தான் கொடுக்கவேண்டும்' என்கிறார்கள். பஞ்சாயத்துகளே இந்த அநீதியைச் செய்வதா? இது நியாயமா? ஆகவே தான் நாங்கள் இப்போது ஒரு ரிவைஸ்டு ஸ்கீம்—அதாவது நூற்றுக்கு 75 பேர்களுக்கு மேல் அரிசன மாணவர்கள் படிக்கக்கூடிய பள்ளிகளில் உள்ள அத்தனை பேர்களுக்குமே அரிசன நலத்துறை மூலமாக மதிய உணவு அளிப்பது என்பதுதான் அந்தத் திட்டம். இப்படி அந்தத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டிருப்பதனால்தான் தொகை குறைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விடுதிகளைப்பற்றிச் சொன்னார்கள். அரசும் அதனை உணர்ந்துதான் வங்கிகளின் மூலம் ஒரு கோடியைக் கடனாகப் பெற்று தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு நல்ல விடுதிகளைக் கட்டித்தரவேண்டுமென்ற திட்டத்தை முதலமைச்சர்

அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி நிறைய விடுதிகள் கட்டிக்கொடுக்க அரசு முன்வந்திருக்கிறது என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

திரு. லத்தீப் அவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் மலைவாசிக் குழந்தை களுக்கு நலத்துறை மூலம் பள்ளிகள் நடத்தப்படவில்லை என்று சொன்னார் கள். அங்கே ஒரு பள்ளியைத்தான் நலத்துறை நடத்திக்கொண்டிருக்கிறது. ஏனைய 12 பள்ளிகள் வனத்துறையினால் நடத்தப்படுகின்றன. வேண்டுமென் றால் அதனையும் பரிசீலனை செய்து அந்தப் பள்ளிகளையும் கூட நலத்துறை மூலமாகவே நடத்த ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா என்பதனைப் பரிசீலிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சுரேந்திரன் அவர்கள் நங்கப்பள்ளி பாதையைப்பற்றிச் சொன்னார் கள். செட்டியார் செட்டியாருக்கு உதவி செய்வதாகச் சொன்னார்கள். எந்தச் செட்டியாரும் எந்தச் செட்டியாருக்கும் உதவி செய்யவில்லை. நிலம் வாங்கி யாகிவிட்டது. இந்த ஆண்டு அதிலே பருத்தி போட்டிருப்பதனால் பருத்தியை வெட்டியவுடன் பாதை உடனடியாகப் போட்டுக்கொடுக்க இந்த அரசு ஒரு போதும் தயங்காது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு சமுதாயமே ஒரு மறுமலர்ச்சியைக் கண்டாகவேண்டும். திரு. முத்து அவர்கள் குறிப்பிட்டார்களே, சட்டமன்ற அங்கத்தினரைப்போன்ற எங்களுக்கே வணக்கத்தைத் தெரிவித்து, அப்புறம் இன்னார் என்று தெரிந்த வுடன் வணக்கத்தைத் திருப்பிப்பெற்றுக்கொண்டார்கள் என்பதாக—இவை எல்லாம் நாளடைவில்தான் போகவேண்டும். மனிதனை மனிதனாக நடத்து கின்ற மனிதப்பாங்கு எல்லோரிடத்தும் ஏற்பட எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒத்துழைத்தால்தான் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இந்த மக்களது வாழ்விலே ஒரு புது மலர்ச்சியை உண்டாக்க முடியும். நேரம் அதிகமில்லாத காரணத்தினால் எல்லா உறுப்பினர்களுக்கும் பதில் சொல்ல முடியவில்லை. இருந்தாலும் அவர்கள் கருத்துக்கள் பரிசீலிக்கப்படும் என்று கூறி இந்த மானியத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை திரும்பப்பெறவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நமது அரசாங்கத்தில் ஒரு ஜி.ஓ.-வே இருக்கிறது. நமது மாநிலத்தில் உள்ளவர்கள்தான் போட்டுக் கட்ட வேண்டும். நமது மாநிலத்திலேயே கட்டப்படவேண்டும் என்பதாக. அப்படி இருக்க கே. பி. தாமஸ் என்கிற கேரள கம்பெனிக்கு ஏன் கொடுத்தீர்கள் என்றுதான் கேட்டேன். அதுவும் 31 ஆயிரத்திற்கு டெண்டர் கொடுத்துவிட்டு, அப்புறம்



அதை 39 ஆயிரமாக ரிவைஸ் பண்ணியிருக்கிறீர்கள். கமிட்டி சொன்னது என்றால் கமிட்டி அட்வைசரி பாடிதான். இதுபோல அனுமதித்தால் அப்புறம் டெண்டர் கோருவதே அவசியமற்றதாகிவிடும். முதலில் குறைந்த தொகைக்கு டெண்டர் கொடுத்துவிட்டு அப்புறம் அவர்கள் இஷ்டம்போல மாற்றிக் கொள்ளலாம் என்று ஆகிவிடும். இதைத்தான் நான் எடுத்துக்காட்டினேனே தவிர வேறு இல்லை.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** கமிட்டியினர்கள் இந்த ரேட்டை மாற்றுவதற்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அது நியாயமான காரணங்களானதால்தான் கமிட்டியினர்களே ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். நாம் கமிட்டி சொல்வதை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றால் கமிட்டிக்கே அவசியம் இல்லை. அதோடு அதிக விலை ஒன்றும் கொடுக்கவில்லை குறைந்த டெண்டர்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாவது அவர்கள் இன்றையதினம் கடலூரிலும், சென்னையிலும் தான் இந்தப் படகு கட்டித்தருவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். கன்னியா குமரியில் உள்ளவர்கள் இங்கே இருந்து படகைக் கொண்டுபோவது சாத்திய மில்லை. அங்கேயே கட்டித்தரவேண்டும் என்று கோரியதால்தான் அங்கே உள்ளவர்களுக்கான படகை கேரளாவில் கட்ட அனுமதித்தோம். கேரளாவில் கட்டுவதினால் தவறில்லை. இதில் கட்டுபவர்கள், வாங்குபவர்கள் ஆகியவர்களுக் கிடையே உள்ள ஒப்பந்தப்படி நடக்கிறதே தவிர அரசு இதில் ஒன்றும் தலையிட வில்லை. கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் சொன்னதைப்போல ஒப்பந்தப்படி படகு கட்டினபிறகு மீனவர்கள் அதை எடுக்கவில்லை. அந்தப் படகுகள் சரி யாகக் கட்டப்படவில்லை, விரிந்துவிடுகிறது, அந்தப் படகுகள் வேண்டாம் என்கிறார்கள். இதுபோன்ற காரணங்களினால் கொஞ்சம் காலதாமதம் ஆகலாமே தவிர வேறு இல்லை. அரசு எந்த வகையிலும் யாருக்கும் தனிச் சலுகை அளிக்கவோ, வேறுவிதத்திலோ தலையிடவில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அப்படி கட்டப்பட்ட படகுகளை மீனவர்கள் எடுத்துக்கொள்ள மறுத்தால் கட்டினவர்களின் கதி என்ன ஆவது, அந்த நஷ்டத்திற்கு யார் பொறுப்பேற்றுக்கொள்வது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மீனவர்கள் அந்தப் படகுகளை எடுத்துக்கொண்டாகவேண்டும் என்றுதான் வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. க. சுப்பு:** உள்நாட்டுக் குளங்களை மீன் பிடிக்க சங்கங்களுக்கு விடுகிறார்கள். சில இடங்களில் சங்கங்கள் என்று வைத்துக்கொண்டு ஒருசிலர்

தான் பலனைப்பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே பல ஊராட்சி மன்றங்கள் வருமானம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையில் அவர்களுக்கே அவர்களது வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள வாய்ப்பு ஏற்படத்தக்க வகையில் குத்தகைக்கு விட அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** உள்நாட்டு மீனவர்கள் தங்களுக்கு வேறு எந்தவிதமான வாய்ப்பும் இல்லை என்று போராடி உள்நாட்டுக் குளங்களை மீன்பிடி குத்தகைக்கு எடுக்கிற உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். நாம் அவர்கள் சங்கங்கள் என்று அமைத்துக்கொண்டு முன்வந்தால் அனுமதி அளிப்பதாகச் சொன்னோம். அதன்படிதான் இப்போது அங்கங்கே சங்கங்கள் அமைத்துக்கொண்டு குத்தகை எடுத்து வருகிறார்கள். அதுவும் உள்நாட்டுக் குளங்களில் சில மாதங்கள்தான் மீன் பிடிக்க முடியும். சங்கங்கள் இருக்கக் கூடிய இடங்களில் சங்கங்களுக்குத்தான் கொடுக்கிறோம். சங்கங்கள் இல்லாத இடங்களில் ஊராட்சி மன்றங்கள் எடுக்கலாம். கொள்கை அளவில் இதில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்த அரசு விரும்பவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** விவாதம் முடிவுற்றது. இப்போது மானியக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

கோரிக்கை எண் 20-க்கு திரு. கு. அ. பொம்மன், திரு. கே. எ. வகாப், திரு. என். டென்னிஸ், திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக்கோரிக்கை எண். 20-மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,58,39,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

**நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.**



நிதிக் கோரிக்கை எண். 29-க்கு திரு. கே. எ. வகாப், திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

திரு. எம். சுரேந்திரன் : குப்பம்பட்டியிலே அரிசன மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலம் பட்டா செய்யப்படவில்லையென்ற குற்றச்சாட்டைச் சொன்னேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** இது வாக்கொடுப்பு நேரம். நீங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை திரும்பபெறுகிறீர்களா, இல்லையா என்று மட்டும் சொல்லுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லையாதலால் அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்கள் இருக்கையில் இல்லாதலால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 29-பழங்குடி மக்கள், அரிசனங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,16,35,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

## (உ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** 22—3—1973-ம் நாள் எடுத்துக் கொள்ளப்பட அறிவிக்கப்பட்டிருந்த 14-ம் எண் மானியக் கோரிக்கை—சிறைச்சாலைகள் —27—3—1973-ம் நாள் எடுத்துக் கொள்ளப்படும்.

**போவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை நாளைக் காலை 9-10 மணி அளவில் கூடும். வணக்கம்.**

**பின்னர் பேரவை பிற்பகல் 1-52 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.**

## 6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders*

80. Notification issued with G.O. Ms. No. 16, Revenue, dated the 4th January 1973, in regard to reduction in the rate of sales tax, on the sales of cement, to Kerala State Electricity Board for the construction of Hydro Electric Project at Idikki in Kerala State. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

81. Notification issued with G.O. Ms. No. 3384, Revenue, dated the 14th December 1972 in regard to certain amendments to Revenue Department Notification II-1 No. 5939 and 5940 of 1969, published at pages 1-2 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette Extraordinary*, dated the 19th December 1969 as subsequently amended. [Laid on the Table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

@ 82. Annual Accounts of the Tamil Nadu Khadi and Village Industries Board for the years 1960-61 to 1965-66. [Laid on the Table of the House under section 24 (3) of the Tamil Nadu Khadi and Village Industies Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

### B. *Reports, Notifications and Other Papers*

† 103. Policy Note relating to Welfare Programmes for Women and Children for 1973-74 (English and Tamil).

† 104. Policy Note on Financial Supplement to Demand under Community Development 1973-74 (English and Tamil).

@ Laid on the Table of the House on 17th March 1973.
† Despatched to Members on 16th March 1973.



## இணைப்பு I

(44-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### முகவுரை.

"கோரிக்கை 20—மீனளம்" என்பதன்கீழ், ரூ. 2,58,39,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டுமென்று முன் மொழிகிறேன்.

இவ்வரசு 1972-73-ல் செயல்படுத்தியுள்ள முக்கியமான மீனளத் திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிக் கீழ்க்காணும் பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1973-74-ல் மேற்கொள்ளக் கருதியுள்ள புதிய பணிகள் பற்றிய முக்கியக் கூறுகளும் ஈண்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

### நோக்கம்.

தமிழ்நாடு, கடல் மீனளத்தையும் உள்நாட்டு நீர்நிலை மீன் வளத்தையும் பெருமளவு பெற்றுள்ளது. உரிய வகையில் அதனை மேம்படுத்தித் தக்கவாறு பயன்படுத்திக் கொள்வோமாகில். 'மீனளப் புரட்சி' யை (Blue revolution) உருவாக்கி ஒரு புதிய யுகத்தையே ஏற்படுத்த முடியும் என்பது திண்ணம். பெருகி வரும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையே குறிக்கோளாகக் கொண்ட ஒரு சமுதாயத்தில், கடல் மீனளத்தையும் உள்நாட்டு நீர்நிலை மீன் வளத்தையும் பாதுகாத்துப் பயன் கொள்வதன் அவசியம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. இயல்பாகவே மக்கள் உணவு உட்கொள்ளும் முறையில் ஊட்டமும், சத்தும் நிறைந்த துணை உணவுப் பொருளாக, மீன் உணவு உலகமெங்கணும் கருதப்பட்டு வருகிறது. வளர்ந்து வரும் நம் நாட்டில் சத்துள்ள முழு உணவு பெருகிவரும் மக்கள் தொகைக்கு அவசியமாய் உள்ளது. இந்நிலையில் மீன், வருங்காலத் தலைவர்களான சிறுவர்களுக்கு மட்டுமின்றி பெரியவர்களுக்கும், குறிப்பாக, தொழிலாளர் சமுதாயத்தினருக்கும் ஊட்டம் அளிக்க வல்ல உணவாக விளங்கக் கூடும். மேலும் இறால்கள், சிங்கி இறால்கள் (Lobsters), தவளைகள், அதிக பொருளீட்டக் கூடிய பிறவகையான மீன்கள் முதலியவற்றிற்கு உலக சந்தையில் நல்ல தேவை இருந்து வருகிறது. இவற்றையும் நாம் பெருவாரியான அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவற்றை நாம்

[1973 மார்ச் 19

அதிக அளவு ஏற்றுமதி செய்து மிருந்த பொருளீட்ட முடியும். எனவே, நாம் கடல் மீனளத்தையும் உள்நாட்டு நீர் நிலைகளின் மீன்வளத்தையும் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும் என்பது தெளிவாகிறது.

தமிழ்நாடு 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையையும், கடற்கரையை ஒட்டி சுமார் 77,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள மீன்பிடிப்பதற்கேற்ற கடற்பகுதியையும் கொண்டுள்ளது. 60 அடி முதல் 240 அடி ஆழமுள்ள பகுதி, தொலைகடல் மீனளப் பகுதி சுமார் 22 லட்சம் ஹெக்டேர் உள்ளது. இதற்கும் அப்பால் பலவகையான மீன்களைக் கொண்ட பரந்த ஆழ்கடல் உள்ளது. தமிழ்நாட்டில் வற்றாத ஆறுகள், நீர்த்தேக்கங்கள், பாசன ஏரிகள், குளங்கள் ஆகியவற்றுடன் சுமார் 7.9 லட்சம் ஹெக்டேர் உள்நாட்டு நீர்நிலைகள் உள்ளன. இத்தகைய நீர் வளத்தைக் கொண்டு தமிழ்நாடு கடல் மீன் உற்பத்தியிலும் உள்நாட்டு நீர்நிலை மீன் உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. 1966-ல் 1.47 லட்சம் டன்னாக இருந்த கடல் மீனள உற்பத்தி 1970-ல் 1.59 லட்சம் டன்னாகப் பெருகியுள்ளது. 1966-ல் 1.05 லட்சம் டன்னாக இருந்த உள்நாட்டு மீனள உற்பத்தி 1970-ல் 1.20 லட்சம் டன்னாகப் பெருகியுள்ளது. கடல் மீனள உற்பத்தியில் மகாராட்டிர மாநிலத்துடன் தமிழ்நாடு போட்டி போட்டு வருகிறது. கேரளம் மீனள உற்பத்தியில் முதலில் நிற்க, தமிழ்நாடு இரண்டாவது இடத்தையோ அன்றி மூன்றாவது இடத்தையோ பெற்றுள்ளது. நமது நாட்டின் மீன் உற்பத்தியில் சுமார் 14 சதவீதம் வரை தமிழ்நாடு கொடுத்து உதவுகிறது. தமிழ்நாடு மூலம் கிடைக்கும் இந்தச் செல்வம் நடப்பு விலைகளில் ரூ. 25.18 கோடியாக மதிப்பிடப்படுகிறது. 1950-லிருந்து 1970 வரை தமிழ்நாட்டில் மீன் உற்பத்தி வளர்ச்சி விதம் ஆண்டு ஒன்றுக்கு 5 சதவீத அளவில் அமைந்துள்ளது.

இந்த வளர்ச்சி விதம் கடல் பகுதிகளிலும் உள்நாட்டு நீர் நிலைகளிலும் மேலும் உயர்த்தப்படலாமென்பது மாநில மீனளத் துறை மேற்கொண்ட ஆய்வு பணிகள் பலவற்றிலிருந்து மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு ஆழ்கடலில் வாழ்கிற மீனள வாயில்களை இரு மடங்காக உயர்த்தவும், நீர் மேல்பரப்பில் வாழ்கிற மீனள வாயில்களை சுமார் நான்கு மடங்காக உயர்த்தவும் இயலும். உள்நாட்டு நீர்நிலைப் பகுதிகளில் நவீன முறையில்



1973 மார்ச் 19]

மீன்களை விட்டு வளர்ப்பதால், மீன் உற்பத்தியைக் குறைந்த அளவு இரு மடங்காகவேனும் பெருக்க முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, அடுத்து வரும் சில ஆண்டுகளில் மேற்சொல்லிய மீனளத்தை விரைவில் பயன்படுத்துவதற்கு அவசியமான எல்லா வசதிகளையும், நிலைமைகளையும் உருவாக்குவதே நமது கொள்கையாக இருக்க வேண்டும். கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்காக படகுகளில் விசைப்பொறி அமைக்க வேண்டும். நாம் மிக்க மீன் பிடி சாதனம் வாங்கிக் கொடுக்க வேண்டும். மீன்களைக் கரை சேர்ப்பதற்கான வசதிகள், மீனை உறைய வைப்பதற்கும் குளிர வைப்பதற்குமான வசதிகள், பிடித்த மீன்களை ஆதாயத்தோடு விற்பனை செய்வதற்கு உதவியாகவும், அதிக விலைபோகும் மீன்களை ஏற்றுமதி செய்வதற்கு உதவியாகவும், மீன்பிடி கிராமங்களையும் விற்பனை இடங்களையும் இணைப்பதற்கான சாலைகள் ஆகியவற்றை நாம் அமைக்க வேண்டியுள்ளது. உள்நாட்டு மீனளத்தைப் பொறுத்தவரை, பல இடங்களில் தூண்டல் முறையில் கெண்டை மீன் குஞ்சுபொரிக்கும் நிலையங்கள் அமைக்கப்படும். பெரிய நீர்த்தேக்கங்களில் மீன்கள் விடப்பட்டு வளர்க்கப்படுவது தீவிரப்படுத்தப்படும். அரசுக்குச் சொந்தமாக்கப்பட்ட பல நீர்நிலைகளில் மீன்கள் விடப்பட்டு பேணிவரப்படும். உள்நாட்டு நீர் நிலையில் பிடிக்கப்பட்ட மீன்களை ஆதாயத்தோடு விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மீனள உற்பத்திக்காக 1971-72, 1972-73 ஆண்டுகளில் மேற்கொண்ட செலவு, 1973-74-ஆம் ஆண்டுக்கு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு ஆகியவை பற்றி பின்வரும் அட்டவணை எடுத்துக் காட்டுகிறது :—

| | | மத்திய அரசு ஆதரவு அளிப்பவை. | மத்திய அரசு உதவி அளிப்பவை. |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1971–72 | (கணக்குகள்) .. .. | 64·04 | 145·69 |
| 1972–73 | (வரவு-செலவுத் திருத்த மதிப்பீடு) | 111·36 | 184·03 |
| 1973–74 | (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு) | 221·49 | 186·85 |

[1973 மார்ச் 19

## மீன்பிடி விசைப் படகுகள்.

தமிழ்நாடு சுமார் 3 லட்சம் கடல் மீனவர்களைக் கொண்டது. இவர்களில் சுமார் 1 லட்சம் பேர் மீன்பிடித் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டவர் ஆவர். தமிழ்நாட்டுக் கடற்கரைப்பகுதியில் 30,000 நாட்டுப் படகுகள் உள்ளன. 1967-ல் நடத்திய ஆய்வின் அடிப்படையில், இந்திய அரசின் வேளாண்மை அமைச்சகம், தமிழ் நாட்டுக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள கடற்பகுதிகளிலிருந்து சுமார் 8.8 லட்சம் டன் மீன்கள் கிடைக்கும் என்று மதிப்பிட்டுள்ளது. கடல் மீனள உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன், ஏற்புடைத்த வடிவமைப்புகளில் மீன்பிடி விசைப் படகுகளைத் தயாரிப்பதற்கு அரசு முக்கியத்துவம் அளித்துள்ளது. மீன்பிடி விசைப் படகுகளை விடும் திட்டம் 2-வது திட்டக் காலத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வந்தபோதிலும், 3-வது திட்டக் காலத்திலும் அதைத் தொடர்ந்து வந்த ஆண்டுத் திட்டங்களிலும் மட்டுமே விரைவாகச் செயல்பட்டது. 4-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,000 விசைப் படகுகள் விட அரசு முடிவு செய்துள்ளது. வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்திடமிருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்று மாவட்ட மீனவர் கூட்டுறவு கூட்டமைப்புகள் மூலமாக மேலும் 275 விசைப் படகுகள் கூடுதலாக விடவும் கருதியுள்ளது. 1972-73-ஆம் ஆண்டில் அரசு படகு கட்டும் தளங்களிலும், தனியார் படகு கட்டும் தளங்களிலும் 250 விசைப் படகுகள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1973-74-ல் மீனளத்துறை படகு கட்டும் தளங்களிலும் தனியார் படகு கட்டும் தளங்களிலும் 245 விசைப் படகுகள் கட்ட கருதப்பட்டுள்ளது. விசைப் படகுகள் கட்டுமான வேலையில் சாதனையும், நிதி சம்பந்தமான சாதனையும் பற்றிய விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. | படகுகளின் எண்ணிக்கை. | செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1969—70 | 135 | 89·92 |
| 1970—71 | 186 | 94·26 |
| 1971—72 | 131 | 128·33 |
| 972—73 | 250 | 144·65 |
| 1373—74 (இலக்கு) | 245 | 151·12 |



1973 மார்ச் 19]

வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்திலிருந்து பெறும் நிதியுதவியுடன், விசைப் படகுகளைக் கட்டுதல், வழங்குதல் ஆகியவற்றிற்கான திட்டத்தை, சென்னை மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சம்மேளனமும், திருநெல்வேலி மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சம்மேளனமும் செயல்படுத்தி வருகின்றன. இதுவரையில், சென்னை மாவட்டச் சம்மேளனம் 28 விசைப்படகுகளை வழங்கியுள்ளது. 1972-73 ஆம் ஆண்டில் திருநெல்வேலி சம்மேளனம் 15 விசைப் படகுகளை வழங்கும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் விசைப் படகுகளைக் கொண்டு வருவதில் முழுத்திட்ட இலக்கையும் எய்தும் என்று அரசு நம்புகிறது.

விசைப் படகுகள் மூலம் மீன் பிடித்தலின் பொருளாதாரத்தைப் பற்றிக் கவனமாக ஆய்வு செய்த பின்னர், விசைப்படகுகள் வைத்திருப்பவர்களுக்கு விசைப் படகுகள் போதுமான வருவாயை ஈட்டித்தரும் ; அதனால் அவர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய தவணை முறைத் தொகைகளைச் செலுத்துவதோடு தமக்காகவும் உபரியாக வைத்துக் கொள்ள இயலும் என்று அரசு திடமாகக் கருதியது. ஆகவே, 1972-73 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொண்டு விசைப் படகுகளுக்குக் கொடுக்கப்படும் ஈடுசெய் தொகையை நிறுத்துவதென அரசு முடிவு செய்தது.

துறையால் ஒதுக்கப்பட்ட விசைப்படகுகள் பல்வேறு காரணங்களால் சரிவர இயங்காததால் பொருத்தமான நேர்வுகளில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு, முதலில் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு இரண்டாம் முறையாக புதிய எஞ்சின்களையும், படகுகளையும் வழங்க அரசு அனுமதித்தது.

1972-73 ஆம் ஆண்டில், தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட படகுகளுக்காக பொருத்தமான எஞ்சின்களைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டுமென மீனவர்களிடமிருந்து முறையீடு வந்ததனால் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள படகுகளில் பொருத்தப்பட வேண்டிய எஞ்சின்களைத் தெரிந்தெடுக்கும் விருப்பத்தினை ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களிடமே விடுவதென்று அரசு முடிவு செய்தது. இந்த விசைப் படகுகளில் இழுவை வேலைகள்

செவ்வையாக நடைபெற ஏற்றப் பொறிகளையும் (winches) விசைப் பொறிகளையும் (power take-off) பொருத்துவது அவசியமாகும். ஆகவே, இதை முன்னிட்டு இவ்வகைப் படகுகள் ஒதுக்கப் பெறுபவர்கள் கேட்டுக் கொள்வதன் பேரில் தக்க வடிவங்களையுடைய ஏற்றப் பொறிகளைப் புதிய படகுகளில் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரும்பு-சிமிட்டிப் படகுகளைக் கட்டுவதில் இந்தத் துறை மேற்கொண்ட முன்னோடிப் பணியை அனைவரும் அறிவர். மும்முரமாகத் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளவும், படகு கட்டும் செலவைக் குறைக்கவும், மாற்று மூலப் பொருட்களைப் பயன்படுத்துவது குறித்து சோதனைகளை நிரந்தரமாக மேற்கொள்ளவும், அரசு, இரும்பு-சிமிட்டி படகு கட்டும் தளத்தையும், ஆராய்ச்சிப் பிரிவையும் அமைப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கியது. இரும்பு-சிமிட்டியில் 38 அடி நீளமுள்ள விசைப் படகு ஒன்றும், 16 அடி நீளமுள்ள விசைப் படகு ஒன்றும் கட்டப்பட்டு பல்வேறு நிலைமைகளில் சோதனை செய்யப்பட்டன. இரும்பு-சிமிட்டியை மீன்பிடி படகுகள் கட்டுவதற்குப் பயன்படுத்துவது குறித்து நியூஸிலாந்தில் நடந்த உணவு-வேளாண்மை நிறுவன கருத்தரங்கில் அண்மையில் பங்கு கொண்ட இத்துறையின் அதிகாரி ஒருவர், இத்துறையால் மேற்கொள்ளப்படும் படகு கட்டும் முறைகள், படகு கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் ஆகியவை மனநிறைவளிக்கும் வகையில் உள்ளதென்று உணவு-வேளாண்மை நிறுவன வல்லுநர்கள் கருதியதாக அறிவித்துள்ளார். இதன் மூலம் ஊக்குவிக்கப்பட்டதால் 1972-73 ஆம் ஆண்டில் இரும்பு-சிமிட்டியில் 38 அடி நீளமுள்ள விசைப்படகுகள் ஐந்தினைக் கட்ட திட்டமிடப்பட்டது. 1973-74 ஆம் ஆண்டில் அத்தகைய படகுகள் 5 கூடுதலாகக் கட்டப்படும். இரும்பு-சிமிட்டி படகு கட்டும் தளம் நிரந்தரமாக அமைவது அரசின் ஆழ்ந்த நாட்டத்தை ஈர்த்து வருகிறது. இதுகுறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும். முடிவாக இது அமைக்கப்படுகையில், இரும்பு-சிமிட்டிப் படகுகளின் வடிவமைப்பு, அவை கட்டப்படுதல் ஆகிய பணிகளில் மட்டுமல்லாமல் மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்தி படகுகள் கட்டப்படுவது குறித்தும் விரிவான ஆராய்ச்சியை இந்த படகு கட்டும் தளம் மேற்





கட்டுமரங்கள், தோணிகள் போன்ற நெடுங்காலமாகப் பயன்படுத்தப்பட்டுவரும் மீன்பிடி சாதனங்களைத் திறம்பட இயக்குவதை மேம்படுத்துவதற்கான தொழில் நுட்ப வாய்ப்பு குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. பசிப்பிணி ஒழிப்பு இயக்கத்தால் (Freedom from Hunger Campaign) தொடங்கப்பட்ட இந்திய—பெல்ஜிய மீனளத் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முட்டம் என்ற இடத்தில் கட்டுமரங்களின் வெளிப்புறத்தில் எஞ்சின்களைப் பொருத்துவதன் விளைவு குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இம்முறையில் பயனுள்ள பணியை மேற்கொள்ள இயலுமா என்பது குறித்து கண்டறியலாம். அதுபோன்றே, தஞ்சாவூர் மாவட்டத்தில் தோணிகளில் உட்புற எஞ்சின்கள் பொருத்தப்படும் பணி அரசின் நாட்டத்தை ஈர்த்து வருகிறது. சில தோணிகளில் உட்புற எஞ்சின்களை அமைப்பது, அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஆய்வு செய்வது ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கான முன்னோடித் திட்டம் தொடங்குவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

## ஆய்வும் பயன்படுத்தலும்.

மாநில மீனளத் துறையைச் சேர்ந்த அண்மைக் கடல் மீன்பிடி நிலையங்கள் சென்னை, கடலூர், இராமேஸ்வரம், குமரிமுனை ஆகிய இடங்களில் உள்ளன. இந்திய அரசு தூத்துக்குடியில் தொலைகடல் மீன்பிடி நிலையம் ஒன்றை அமைத்துள்ளது. சென்னையில் மற்றொரு தொலைகடல் மீன்பிடி நிலையம் அமைக்கப்படுவதற்கு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த நிலையங்களுக்கு வழங்கப்பட்ட விசைப்படகுகளைக் கொண்டு அண்மைக்கடல் தொலைகடல் பகுதிகளில் மீன்பிடிப்பது குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இதைத் தவிர இந்திய—நார்வே திட்டத்தின்கீழ் மீன்பிடி ஆய்வுகள் சில மேற்கொள்ளப்பட்டன. இப்படகுகளைக் கொண்டு ஆய்வு செய்ததன் மூலம் ஆழ்கடலில் வாழ்கிற மீனள வாயில்கள் குறித்த பயனுள்ள தகவல் கிடைத்துள்ளது. தென் பிராந்திய கடற்கரையோரங்களில் ஆழ்கடல் சிங்கி இறால்கள் (deep sea lobsters) ஆழ்கடல் இறால்கள், மற்றும் பல வகை மீன்கள் ஆகியவை பெருமளவில் கிடைப்பது கண்டறியப்பட்டுள்ளது. மன்னார் வளைகுடாவிலும், பாக் விரிகுடாவிலும் மீன்பிடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கு கெளுத்தி மீன்கள் நிறைந்திருப்பது கண்டறியப்பட்டது.

[1973 மார்ச் 19

1972–73 ஆம் ஆண்டில் குமரி முனையில் புதியதாக அண்மைக் கடல் ஆய்வு நிலையம் ஒன்று செயல்படத் தொடங்கியது. இந் நிலையத்தில் ஆய்வுப் பணியை மேற்கொள்வதற்காக 43 அடி நீள முள்ள படகுகள் இரண்டும், 50 அடி நீளமுள்ள படகு ஒன்றும் கட்டப்படுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்படகுகள் மண்டபத்திலுள்ள படகு கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வருகின்றன. 1973–74 ஆம் ஆண்டில் கூடுதலாக 43 அடி, 50 அடி நீளமுள்ள படகுகளுடன் சென்னையிலும், மற்றும் இராமேஸ்வரத்திலுமுள்ள ஆய்வு நிலையங்களிலுள்ள படகுகளின் எண்ணிக்கையை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

மீன்பிடி தொழில் முனைவர்களின் தகவலுக்காக இதுவரையில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளை விரைவில் வெளியிடுவதற்குத் துறை கருதுகிறது.

மீன்பிடி சாதனங்களை மேம்படுத்துவதன் மூலம் மீன்பிடி அளவை உயர்த்துவதற்கான வாய்ப்பு இத்தகைய ஆழ்ந்த ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மண்டபத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்ட பிரிவில், உள்ளூர் மீன் பிடி சாதனத்தை மேம்படுத்துவது பற்றிய முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். முதன்முறையாக, இந்திய-நார்வே, திட்டத்தின்கீழ் துறையினைச் சேர்ந்த படகுகளைக் கொண்டு மண்டபத்தில் நவீன சுருக்கிழுப்பு வலைச் சாதனங்களால் மீன் பிடிப்பது மேற்கொள்ளப்பட்டது. அதனால் சிறந்த பலன்கள் கிட்டியது. 1973–74 ஆம் ஆண்டில், நீர்மேல் பரப்பில் வாழும் மீன்கள், நீர் நடுவில் வாழும் மீன்கள் ஆகியவற்றைப் பிடிப்பதில் சுருக்கிழுப்புவலை சோதனைகளைத் தொடர்ந்து செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆய்வு, சோதனை அடிப்படையில் மீன் பிடிப்பது ஆகியவை முக்கிய நடவடிக்கையாக அமைகின்றன. அவை நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முழு ஆக்கத்துடன் மேற்கொள்ளப் படவேண்டும். தொலைகடல் ஆய்வு, சோதனை அடிப்படையில் மீன் பிடிப்பு ஆகிய செயல்களுக்காக, 57 அடி நீளமுள்ள இழு படகுகள் 4-ஐப் பெறும் திட்டமொன்று துறையிடம் உள்ளது. இத்திட்டத்திற்காக ரூ. 64 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இரண்டு இழு படகுகள் ஏற்கெனவே பெறப்பட்டு, சென்னையில் ஒன்றும், மண்டபத்தில் ஒன்றுமாக சோதனை அடிப்படையில் மீன் பிடித்தலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.



1973 மார்ச் 19]

எஞ்சிய இழு படகுகள் இரண்டும், கல்கத்தாவில் தனியார் படகு கட்டும் தளமொன்றில் கட்டப்பட்டு வருகின்றன.

தொலைகடல், ஆழ்கடல் மீன்வளங்களைப் பயன்படுத்திக் கொள்வது முக்கியத்துவம் பெற்றுவருகின்றது. இதற்காக, முழுதும் சாதனங்கள் அமையப்பெற்ற நவீன, நடுத்தர, பெரிய அளவுகளிலான இழு படகுகளைப் பெற்றிருப்பதன் அவசியம் நன்குக உணரப்படுகிறது. வெளிநாட்டில் தயாராகும் படகுகளைக் குறிப்பிட்ட அளவில் இறக்குமதி செய்ய இந்திய அரசு அனுமதிக்கின்றது. நமது நாட்டிலும் படகு கட்டும் தளங்களில் குறிப்பிட்ட அளவு புதிய வடிவமுள்ள 57 அடி இழு படகுகள் தயாரிக்கப்படுகின்றன. கடல் மீனளத் திட்டங்களின் பயனை விரைவில் அடையும் பொருட்டும், உலகத்தில் நமது நாட்டினை மீன்பிடிக்கும் பெரும் நாடாகத் திகழச் செய்யவும், நமது நாட்டில், சிறப்புத் தன்மை வாய்ந்த நடுத்தர அளவு இழு படகுகள் கட்டும் தளம் ஒன்றிருக்க வேண்டியது விரும்பத்தத்கதும், அவசியமுமாகும். மண்டபத்தில், தென்னிந்திய ரயில்வேயின் பொறியியல் பட்டறை, சருக்குப் பாதை, கப்பல் பழுதுபார்க்கும் துறை ஆகியவற்றை நாம் எடுத்துக் கொண்டுள்ளோம். நடுத்தர அளவு இழு படகு கட்டுந்தொழில் அமைக்க அவை பொருத்தமானவை என்று கருதப்படுகின்றது. இச்செயலுக்காக, பொதுத் துறை நிறுவனமொன்றை நிறுவுவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

கடல் மீனளத்தின் வாணிகப் பயனுக்கான நல்வாய்ப்பு பற்றி அரசு அறிந்துள்ளது. பெரிய படகுகளை வைத்துக்கொண்டு இயக்குகின்ற நிறுவனம் ஒன்றால், கடல்படுபொருட்களை ஏற்றுமதி செய்வதில் கணிசமான அளவு பங்கு பெறவும், உற்பத்தியை விற்பனைக்காக பல்வகைப்படுத்தவும் இயலும். இதற்காக, பொது நிறுவனமொன்றை நிறுவுவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகின்றது. அந்நிறுவனம், பெரிய படகுகளைப் பெற்று சொந்தமாக இயக்கி ஏற்றுமதிக்காகவும், உள்நாட்டுப் பயன்துய்ப்போர்க்கும் பொருட்களை விற்பனை செய்யும்.

### மீன்பிடி சாதனங்கள் வழங்கல்.

விசைப்படகு ஒதுக்கீடு பெற்றவர்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராயுள்ள மீனவர்கள் ஆகியோருக்கு,

நைலான் நூல், 20 சதவீதம் ஈடு செய்யப்பட்ட விலையில் வழங்கப்படுகின்றது. மீனவர்களுக்கு விசைப் படகுகளுடன் வழங்கப்படுவதற்காக, 1969–70, 1970–71, 1971–72 ஆம் ஆண்டுகளில், தோராயமாக ரூ. 15.26 லட்சம் செலவில் முறையே 10 டன், 14 டன்; 17 டன் நைலான் நூல் வாங்கப்பட்டது. அதே காலத்தில், கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஈடுசெய் தொகை வழங்குவதற்காக அரசு ரூ. 4.00 லட்சம் செலவு செய்தது. அக்கூட்டுறவுச் சங்கங்கள், குறிப்பிட்ட அளவில் நைலான் நூலைத் தம்தம் உறுப்பினர்களுக்கு வழங்கின. 1972–73-ல், விசைப் படகுகளுடன் 7 டன் நைலான் நூல் வழங்கப்படும். இவ்விரு திட்டங்களும் 1973–74 ஆம் ஆண்டில் தொடரப்படும். 1973–74 ஆம் ஆண்டு முதல், விசைப் படகு ஒதுக்கீட்டாளர்களுக்கு ஈடுசெய் விலையில் நைலான் நூல் வழங்குவதை நிறுத்திவிடுவது குறித்து அரசு பரிசிலனை செய்து வருகின்றது.

## மீன்சினைகள் உற்பத்தியும் அகநாட்டு நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் விடுவதும்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்வரை நீர்நிலைகளில் விடுவதற்காக, பெரிய கெண்டை மீன்சினைகளை இயற்கை நீர்நிலைகளிலிருந்து சேகரிப்பதையே சார்ந்திருந்தோம். ஆனால், பெரிய கெண்டைமீன் சினைகளைத் தூண்டுதல் முறையில் பொருக்கச் செய்யும் உத்திகளைப் பெரிதும் பயன்படுத்தியதால், சினைகள் தேவையை நிறைவு செய்வதில் பெரிதும் முன்னேற முடிந்துள்ளது.

தமிழ்நாட்டில் தற்போதைய மீன்குஞ்சு உற்பத்தியின் அளவு சுமார் 6 கோடி மீன்குஞ்சுகளாகும். இவற்றில் 4.5 கோடி இயற்கை நீர்நிலைகளிலிருந்து சேகரிக்கப்படுகின்றன ; 1.5 கோடி மீன்குஞ்சுகள், கெண்டை மீன்சினைகளைத் தூண்டுதல் முறையில் பொரிக்கச் செய்து சேகரிக்கப்படுகின்றன. இம்மாநிலத்தில், பெரிய கெண்டை மீன் சினைகளைத் தூண்டுதல் முறையில் பொரிக்கச் செய்யும் நிலையங்கள் 9 உள்ளன. இது தொடர்பாக இவை நல்ல பணியைச் செய்து வருகின்றன.

மீன்குஞ்சுகள் வளர்க்கப்படக்கூடிய எல்லா நீர்நிலைகளிலும் மீன்குஞ்சுகள் விடப்படுவதற்கு மொத்தம் 12 கோடி மீன்குஞ்சுகள் தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. பெரும் இடைவெளி நிரப்பப்பட வேண்டியுள்ளது. இயற்கை நீர்நிலைகளிலிருந்து



சேகரிக்கப்படும் மீன்குஞ்சுகள் எப்போதும் நல்ல தரத்திலிருப்பதில்லை. எனவே, கூடுதலான தேவைகளை, பெரிய கெண்டை மீன்சினைகளைத் தூண்டுதல் முறையில் பொரிக்கச் செய்யும் முறையினால் பெறுவது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளது. இம் முடிவைக் கருத்திற் கொண்டு, சாத்தனூரிலும், திருமூர்த்தி நகரிலும் கூடுதலாக மீன்வளர்ப்பு-குஞ்சுவளர்ப்பு நிலையங்கள் உருவாக்கப்படும். கூடுதலாக, பெரிய கெண்டை மீன்சினைகளைத் தூண்டுதல் முறையினால் பொரிக்கச் செய்யும் நிலையங்களை அமைப்பது, அகநாட்டு நீர்நிலைகளில் மீன்குஞ்சுகளைவிட பெரும் நீர்நிலை நிர்வாகத்தில் முன்னேற்றம் ஏற்படுத்துவது ஆகியவற்றிற்கான அடங்கல் திட்டமொன்று அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம், வரும் ஆண்டுகளில் பலகட்டங்களிற் செயற்படுத்தப்படும். 1973-74 ஆம் ஆண்டு இது தொடர்பான பணி தொடங்கப்படும்.

மீன் வளர்ப்புக்காக ஊராட்சிப் பகுதிகளில் உள்ள குளங்களைப் புதுப்பிப்பதற்கும், ஊராட்சி ஒன்றியங்களில் மீன்குஞ்சு வளர்ப்பினை மேற்கொள்வதற்குமான திட்டமொன்று கிராம வளர்ச்சித் துறை இயக்குநரால் செயற்படுத்தப்படுகின்றது.

## நீர்த்தேக்கங்களில் மீன் பண்ணைகளை அமைத்தல்.

பெரும் நீர்த்தேக்கங்கள் அனைத்தும் மீனவ வளர்ச்சிக்காக, மீனவத் துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. சாத்தனூர் அணை, அமராவதி நீர்த்தேக்கம் ஆகிய இரண்டும் ஏக்கர் ஒன்றுக்குச் சராசரி பெரும் அளவை உற்பத்தி செய்து சாதனையேற்படுத்தியுள்ளன. பவானி சாகரில் அமைக்கப்பட்டுள்ள தூயநீர் உயிரியல் ஆராய்ச்சி நிலையம் அகநாட்டு நீர் நிலைகளில் மீன் இன உயிர் வளர்ச்சிக்கான சூழல் பற்றி ஆராய்வதில் சிறந்த பணியாற்றியுள்ளது. பவானி சாகரிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்புத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தி வருகின்றது. அது மாநிலத்திலுள்ள அகநாட்டு நீர் நிலைகள் ஒவ்வொன்றிலும் வளர்க்கப்படக் கூடிய பல்வகை மீன்களின் உரிய அளவு குறித்து ஆய்வு செய்யும்.

செல்லுயிர்களைப் (Planktons) பெருக்குவதற்காக வீடூர் நீர்த்தேக்கத்தின் நீரில் உரமிடும் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு, அது நல்விளைவுகளைத் தந்துள்ளது.

அவலாஞ்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குட்டைகளில், நன்னீர் உணவு மீன் (Trout) வகையை வளர்க்கும் திட்டத்தை 1973-74-ல் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. நன்னீர் உணவு மீனுக்கான உரிய அளவு உணவுத் தேவைகளைக் கண்டறிவதற்கான சோதனைகள் இந்நிலையத்தில் நடைபெறுகின்றன.

### உள்நாட்டு நீர்நிலை மீனளங்களைக் குத்தகைக்கு விடுதல்.

மாநில அரசுக்குச் சொந்தமான நீர்வாயில்களிலும், ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்வாயில்களிலும் மீன் பிடிப்பதற்கான உரிமைகள் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்படாமல், 1970-லிருந்து அல்லது 1380-ம் பசலி ஆண்டிலிருந்து மேலும் மூன்றாண்டுகளுக்கு, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகைக்கு விடப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. 1969-ம் ஆண்டுக் குத்தகைத் தொகையில் 10 சதவீதம் அதிகமான தொகைக்கு குத்தகைக்கு விடப்படவேண்டுமென்று இந்த ஆணையில் ஆணையிடப்பட்டது. மேற்கொண்டும் இச்சலுகையை நீட்டிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

### கழிமுக நீர்நிலைகளில் மீன்வளர்த்தல்—கடல் மீனளம்.

கடல் மீனளம் மீன் வளர்ப்பில் ஒரு புதிய துறையாகும். இந்தியாவில் தற்போது இத்துறையில் நாட்டம் செலுத்தப் படுகிறது. சில நாடுகள் கடல் மீன் வளர்ப்பில் நல்ல வெற்றியைக் கண்டுள்ளன. நம் நாட்டில் இத்துறையில் முனைப்பாக இனிமேல் தான் செயல்பட வேண்டும். தமிழ்நாட்டில் சுமார் 46,750 ஹெக்டேர் நீர்ப் பரப்பளவுக்கு உப்பங்கழிகளும், கழிமுக நீர்நிலைகளும், காயல்களும் உள்ளன. இவற்றில் கூன் இறால், நத்தை, சிப்பி உயிர்வகைகளில் ஒன்றான கடலின மீன், ஓட்டுடல் கடல் பிராணி, மீன்கள், கடற்பாசிகள் ஆகியவை கிடைக்கின்றன. பழவேற்காடு உப்பங்கழியில் சிப்பிகள் வளரும் கடலடிப் பகுதிகள் உள்ளன. இவற்றை மேம்படுத்தி மீன்வளர்ப்பதில் முதலீடு செய்தால், கடல்மீன் பிடிப்பு மூலம் கிடைக்கும் வருவாயைவிட அதிகமாக வருவாய் பெற முடியும். செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் அதிக அளவு நீர்ப்பரப்புடன் உப்பங்கழிகள் உள்ளன. பழவேற்காட்டிலுள்ள உப்பங்கழி மீன்வளர்ப்புக்குச் சிறந்த



முறையில் பயன்படும். பழவேற்காட்டிலுள்ள உப்பங்கழியைக் குறித்து தொடக்க ஆய்வுப்பணியை மேற்கொள்வதற்காகவும், பொருத்தமான திட்டங்களைப் பரிந்துரை செய்வதற்காகவும் சில பணியாளர்களை அரசு நியமித்தது. தற்போது ஆய்வுப் பணிகள் முடிவடைந்து விட்டன. ஆய்விலிருந்து அறிந்த உண்மைகளின் அடிப்படையில், பழவேற்காட்டிலுள்ள உப்பங்கழியில் மீன் வளர்ப்புக்கான முன்னோடித் திட்டம் ஒன்றை மேற்கொள்வதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. 1972-73 ஆம் ஆண்டில் சிதம்பரத்திலுள்ள கிள்ளை உப்பங்கழியில் மீன்வளர்ப்பது குறித்து ஆய்வுப்பணிகளை மேற்கொள்வதற்காகவும், கழுவெளிச் சதுப்பு நிலத்தில் குட்டைகளை ஏற்படுத்துவதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தற்போது இப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அடையாறு உப்பங்கழியில் சோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பண்ணையை நன்முறையில் பேணி வந்ததால் அதிக அளவில் இறால் மீன் கிடைத்தது. பழவேற்காட்டில் சோதனை முறை சிப்பிவளர் பகுதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

### பயிற்சி.

விசைப் படகுகளைச் சரியான முறையில் இயக்கவும், மேம்படுத்தப்பட்ட முறையில் மீன் பிடிப்பதற்காகவும் பயிற்சி அளிப்பதற்காக சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி, குளச்சல் ஆகிய இடங்களில் ஆறு கடல் மீனவர் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 10 மாத காலப் பயிற்சியின்போது ஒரு சமயத்தில் சுமார் 300 மீனவர்களுக்கு இப் பயிற்சியளிக்கப்படுகிறது. இதுவரை 2,000 மீனவர்களுக்கு மேல் பயிற்சி பெற்றுள்ளனர். பேட்டூர் அணையில் உள்நாட்டு மீனவர் பயிற்சி நிலையம் ஒன்று உள்ளது. இந் நிலையத்தில் மீன்பிடி இயந்திரப் படகுகளை இயக்குவதிலும், நீர்த் தேக்கங்களில் ஆழத்தில் மீன் பிடித்தல் குறித்த நவீன முறைகளிலும் மீனவ இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. மீனவப் பயிற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 பயிற்சி உதவிப்பணம் வழங்கப்படுகிறது.

திட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றும் பொருட்டும் எல்லாத் துறைகளிலும், துறைப் பணியாளர்களின் திறமையை

மேம்படுத்தும் நோக்கத்துடனும், அரசிதழ் பதிவுபெற்ற, அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், பல துறைகளிலும் பயிற்சி பெறுவதற்காக எர்ணுகுளம், கட்டாக், சென்னை, பம்பாய் ஆகிய இடங்களிலுள்ள மத்திய மீனள நிலையங்களில் நடைபெறும் பல்வேறு சிறப்புப் பயிற்சிக்கு முகமையில் அனுப்பப்படுகிறார்கள்.

### பனிக்கட்டி உற்பத்திப் பிரிவு, பனியறைப் பிரிவு, உறைய வைக்கும் பிரிவு.

இத்துறை இதுவரை 32 பனிக்கட்டி உற்பத்திப் பிரிவுகளையும், பனியறைப் பிரிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. எண்ணூர், மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் உறைய வைக்கும் பிரிவுகள் மூன்று உள்ளன. எண்ணூர், சென்னை, தூத்துக்குடி ஆகியவிடங்களில் பனியறைப் பிரிவு வசதியுள்ளன. மேற்கொண்டு, பல்வேறு உற்பத்தித் திறன் கொண்ட பனிக்கட்டி உற்பத்திப் பிரிவுகள் எட்டினை அமைக்கும் பணி நிறைவேறி வருகிறது. பணி பல்வேறு நிலைகளில் உள்ளது. சென்னையில் ஒன்றும், அரம்பாக்கத்தில் மற்றொன்றுமாக 1971–72 இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 2 பனிக்கட்டி உற்பத்திப் பிரிவுகள் 1973–74 இல் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1972–73 இல் பெரியகளை கிராமத்தில் ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பனிக்கட்டி உற்பத்திப் பிரிவும் 1973–74 இல் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓர் இடத்தில் 1973–74 ஆம் ஆண்டில் உறைய வைத்தல்-பனியறைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பவானிசாகர், அம்மாபட்டினம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் 1 டன் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு பனிக்கட்டி உற்பத்திப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

### பதப் படுத்திய மீன்களை டப்பியிலடைக்கும் தொழிற்சாலையும், மீன் மாவுத் தொழிற்சாலையும்.

தூத்துக்குடியில் அமைக்கப்பட்டு, 1965 ஜூனில் உற்பத்தியைத் தொடங்கிய, பதப்படுத்திய மீன்களை டப்பியில் அடைக்கும் தொழிற்சாலை 1969-70-ல் தனியார் ஒருவருக்கு குத்தகைக்கு





விடப்பட்டது. இத்தொழிற்சாலையை குத்தகைக்கு எடுத்தவர் அப்பகுதியில் கிடைக்கும் சூடை (Sardine) மீனைப் பதப்படுத்தி டப்பியிலடைக்கும் தொழிலை மேற்கொண்டுள்ளார்.

இந்தியாவிலேயே மிகப் பெரிய மீன்மாவு தயாரிக்கும் தொழிற்சாலை மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 50 டன் பதப்படுத்தாத மீன்களை 10 டன் மீன் மாவாக்கும் திறனுடையதாகும். இந்திய நார்வே திட்டத்தின்கீழ் நார்வே நாட்டின் உதவியுடன் இத்தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டது. இப்பகுதியில் கிடைக்கும் காரல் மீன்களை (Silver bellies) இத்தொழிற்சாலைக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. 1971-ம் ஆண்டின் சில மாதங்களிலேயே ரூ. 1.96 லட்சம் மதிப்புள்ள 196 டன் மீன் மாவை இத்தொழிற்சாலை உற்பத்தி செய்தது. 1972-73 இல் இத்தொழிற்சாலை ரூ. 2.11 லட்சம் மதிப்புள்ள 211 டன் அளவுக்கு மீன்மாவை உற்பத்தி செய்தது. உள்ளூர் மீனவர்கள் பிடிக்கும் சருகு மீனை காரல் மீன்களுக்கு நல்ல விலை கொடுத்து உதவி செய்வதே இத்தொழிற்சாலை ஏற்படுத்தியதன் மூலநோக்கமாகும். இந்நோக்கம் பெருமளவுக்கு வெற்றியடைந்துள்ளது. இதன்மூலம் காரல் மீன்களின் விலையும் உயர்ந்துவிட்டது. எனினும், அண்மை மாதங்களில் மீனவர்களில் பெரும்பாலோர் இறால் மீன்களைப் பிடிப்பதற்கு மட்டுமே செல்வதால் மீன்மாவுத் தொழிற்சாலை அதன் உற்பத்தித் திறன் அளவுக்கு உற்பத்தி செய்ய இயலவில்லை. இத்தொழிற்சாலைக்கான மூலப்பொருளை முழுஅளவில் கிடைக்கச் செய்யும் வகையில் துறையினுடைய மீன்பிடி படகுகளைப் பயன் படுத்திக்கொள்ள மீனளத்துறை திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் மீன்மாவுத் தொழிற்சாலையின் செயல்திறனை மேம்படுத்த முடியும் என்று நம்பப்படுகிறது. மீனளத்துறை உற்பத்தி செய்யும் மீன் மாவை கால்நடை வளர்ப்புத் துறை கால்நடை, கோழித் தீவனங்களை உற்பத்தி செய்வதற்காக தற்போது முழு அளவில் பயன்படுத்திக் கொள்கிறது.

### மீன்பிடி தொழிலுக்கான நிறுவனக் கடன் உதவி.

தமிழ் நாட்டில் கடற்பகுதியில் துறையின் பெரு முயற்சியால் நிறைந்த அளவில் மீன்பிடிக்கும் இடங்கள் கண்டறியப் பட்டதாலும், தமிழ் நாட்டில் அதிக அளவில் மீன் பிடிக்கும் தொழிலினால் ஆதாயம் அடைய இயலும் என்ற எண்ணம்

பொதுவாக வளர்ந்து வருவதாலும் மீனவர்களல்லாத தொழில் முனைவர் பலர் விசைப்படகு கொண்டு மீன்பிடி தொழிலில் ஈடுபட விரும்பினர். அத்தகைய தொழில் முனைவரின் ஆர்வத்தை அரசு பாராட்டியதுடன் அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் நிதியுதவி அளிப்பதற்கான திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியது. இத்திட்டத்தின்படி தொழில் முனைவர்கள் 20 சதவீதம் முதலீடு செய்ய வேண்டும்; 60 சதவீதத் தொகை வணிக வங்கிகளிடமிருந்து கிடைக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, மீன்பிடிக்கும் தொழிலை மேற்கொள்வதற்காக 20 சதவீதத் தொகையை வட்டியில்லாக் கடனாக அரசு அளிக்கும். இப்புதிய திட்டம் தொழில் முனைவரிடையே அதிக அளவு ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. இது வரை மொத்தம் ரூ. 12.66 லட்சம் திட்டச் செலவுக்கு நிதியுதவி கோரி 55 விண்ணப்பங்கள் மீனளத் துறைக்கு வந்துள்ளன. அவ்விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இத்தொழில் முனைவர், மீனளத்தைப் பயன்படுத்துவதைக் கணிசமான அளவுக்குப் பெருக்க உதவுவார்கள் என்பதிலும், பயிற்சி பெற்ற மீனவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதோடு மட்டுமல்லாது மீன் பதப்படுத்தும் எல்லாவகைத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அதன் வாயிலாக மீனளத்தினால் கிடைக்கும் ஆதாயத்தைப் பொதுவாகப் பெருக்குவதில் பெரிதும் உதவுவார்கள் என்பதிலும் ஐயமில்லை.

அரசு மற்றும் வணிக வங்கி நிறுவனங்களைத்தவிர, கூட்டுறவு நிறுவனங்களும் மீனள வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டி வந்துள்ளன. மீனவ சமுதாயத்தினருக்குப் பலனளிக்கக்கூடிய மீனள வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான நிறுவனங்கள் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சம்மேளனங்களேயாகும். சென்னை சம்மேளனம் சென்னை-செங்கற்பட்டு மாவட்டங்களில் 1969-70 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 33.82 லட்சம் செலவில் ஒரு திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இதைப் போலவே, திருநெல்வேலி மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சம்மேளனமும், 1972–73-லிருந்து ரூ. 78.70 லட்சம் மொத்தச் செலவில் ஒரு திட்டத்தைச் செயற்படுத்துகிறது. இந்த இரு திட்டங்களுக்கும், வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் நிதி உதவி செய்கிறது. தென்ஆர்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில், இதைப்போன்ற கடல்





மீனள வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது. வேளாண்மை மறுநிதி உதவிக்கழகத்தின் நிதி உதவி கிடைத்தவுடன் இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

### மீனளத் தொழிற்பேட்டை.

மீனளத் தொழிலில் ஈடுபடுவதில் தனியார் தொழில் முனைவர்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், இம் மாநிலத்தில் வளர்ச்சியடைந்துவரும் பல்வேறு மீன்பிடித் துறைமுகங்களுக்கு அருகில், மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை, படகு கட்டும் தளங்கள் முதலியன அமைப்பதற்கான நிலங்களை ஒதுக்கித்தர இத்துறை முயற்சி எடுத்து வருகிறது. மேற்சொன்ன காரியத்திற்காகக் கடலூரில் ஏற்கெனவே நிலங்கள் ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளன. இதே காரியத்திற்காக அரசு, எண்ணூரில் 6.75 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியுள்ளது. மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில்கூட நிலங்கள் ஒதுக்கிவைக்கப் பட்டுள்ளன. இந்த நிலங்களை எவ்வாறு தனியார் தொழிலுக்குப் பயன்படுமாறு செய்வது என்று அரசு பரிசீலித்து வருகிறது.

### மீன்பிடி துறைமுகங்களும், மீன்களைக் கரை சேர்ப்பதற்கான துறைகளும்.

தமிழ்நாட்டின் கடற்கரை ஓரங்களில் நெடுகவும், ஒருங்கிணைந்த மீன்பிடி துறைமுகங்களையும், மீன்களைக் கரை சேர்ப்பதற்கான துறைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம், கடல் மீனள வளர்ச்சித் திட்டத்தில் முக்கிய அங்கம் வகிக்கிறது. கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் தற்பொழுது மீன்களைக் கரை சேர்ப்பதற்கான சில வசதிகள் உள்ளன. கடலூரில், மீன்பிடி துறைமுகம் கட்டும்பணி நடந்தேறி வருகிறது. படகு நிற்குமிடத்தில் தூர்வார வேண்டியுள்ளது. துறைமுகத் துறையிடமிருந்து தூர்வாரிக் கப்பல் வரவேண்டியுள்ளது. மண்டபத்தில், கடற்கரைத் துறை ( shore quay ) கட்டும் பணி முடிந்துவிட்டது. ஆனால், தூர்வாரும் பணிகள் சில முடிவடையாமல் உள்ளன. புன்னக்காயல் என்னும் இடத்தில் ஏற்படும் மணற்குவியல் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை அகற்றப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள மீன்களைக் கரை சேர்ப்பதற்கான பல்வேறு இடங்களில், தூர்வாருவதற்காக

தூர்வாரிக் கப்பல் ஒன்று அவசியமாக உள்ளது. எனவே, அரசு, கல்கத்தாவில் உள்ள திருவாளர்கள் கார்டன் ரீச் பணிக்களறியிலிருந்து ரூ. 16 லட்சம் செலவில் தூர்வாரிக் கப்பல் ஒன்றை வாங்க முடிவு செய்துள்ளது. இந்த தூர்வாரிக் கப்பல் கட்டப்பட்டு வருகிறது.

தூத்துக்குடியில் உள்ள பெரிய மீன்பிடி துறைமுகம் பெரும் பகுதி கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. பெரும்பாலான கட்டடப் பணிகள் முடிந்துவிட்டன. படகு நிற்கும் இடத்தையும் வாய்க்காலையும் தூர்வாருவதற்காகவே 50 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகை செலவிடப்படும். இந்திய அரசுக்குச் சொந்தமான, MOT தூர்வாரிக் கப்பலைக் கொண்டு தூர்வாரப்பட்டு வந்தது. 1972 ஆகஸ்ட்டில் இந்திய அரசு இந்தத் தூர்வாரிக் கப்பலைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. இதனால், தூர்வாரும் பணி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதன் விளைவாக, துறைமுகம் செயல்பட முடியவில்லை. இந்தப் பணியை முடிக்கவியலும் வகையில் இந்திய அரசிடமிருந்து தூர்வாரிக் கப்பல் ஒன்றைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சென்னை மீன்பிடி துறைமுகத் திட்டத்தை சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம் விரைவிலேயே மேற்கொள்ளவிருக்கிறது.

பொருத்தமான இடங்களில், மீன்களைக் கரை சேர்க்கும் வசதிகள், படகுகளை நிறுத்துவதற்கான வசதிகள் ஆகியவற்றைச் செய்து கொடுப்பது, மீன்பிடிப்பதற்காக விரைவிலேயே விசைப் படகுகள் அதிகரிக்க உதவும். மீன்பிடி கலன்கள் தாங்கள் பிடித்த மீன்களைக் கரை சேர்ப்பதற்காக நெடுந்தூரம் சென்று நேரத்தை வீணாக்காமல் இருக்க, ஒவ்வொரு 30 முதல் 50 மைல் தொலைவிற்காவது மீன்களைக் கரை சேர்ப்பதற்கான வசதிகள் செய்துகொடுத்தால் நலம் என்று கருதப்படுகிறது. இதனால் மீன் கெட்டுப்போவது குறைவதுடன் மீன்களை நல்ல முறையில் பாதுகாக்கவும் உதவும். மீன்பிடி கலன்களுக்காக, மீன்களைக் கரை சேர்ப்பதற்கான வசதிகள், படகுகளை நிறுவுவதற்கான வசதிகள் ஆகியவற்றைச் செய்து கொடுப்பதற்கான பொருத்தமான இடங்களைக் கண்டறிவதற்கு உதவிப் பொறியாளர்கள் இருவர்களுடன் தேவையான பணியாளர்களைக் கொண்ட



துறைமுக ஆய்வுக்குழு ஒன்றை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இக்குழு அமைக்கப்பட்டு மேம்பாடு செய்வதற்கான வாய்ப்புகள்பற்றி இப்பொழுது ஆய்வு செய்து வருகிறது.

ரூ. 10 லட்சமும் அதற்கு மேலும் செலவாகக்கூடிய மீன்பிடி துறைமுக திட்டங்கள் குறித்து அனைத்து நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் முதலீடு முன் ஆய்வுக் குழுவினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு முடிவு எடுக்கப்படவேண்டும். இதுதான் இந்திய அரசு கடைப்பிடித்துவரும் நடைமுறை. இந்த ஆய்வுக்குழு, தமிழ் நாட்டில் மூன்று இடங்களில், அதாவது கோடிக்கரை, மல்லிப் பட்டினம், சின்னமுட்டம் ஆகிய இடங்களில் மீன்பிடி துறைமுகங்கள் அமைப்பதுபற்றி ஆய்வு செய்தது. இந்த ஆய்வுக்குழு, இந்த மூன்று இடங்கள் தொடர்பான பொறியியல், பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கைகளை அனுப்பியுள்ளது. இந்த அறிக்கைகளில், மீன்பிடி துறைமுகங்களை அமைத்தல், கரையோர மீன்பிடி வசதிகள் மேம்பாடு ஆகியவற்றிற்கு முதலீடு செய்ய வேண்டிய முறைபற்றி யோசனை தெரிவித்துள்ளது. மேற்சொன்ன ஆய்வுக்குழு தெரிவித்த யோசனைகளை ஒட்டி, மாநில அரசு, இத் திட்டங்களுக்கான விரிவான மதிப்பீடுகள் தயாரித்து, இப்பணி "மத்திய அரசு ஆதரவு தரும் திட்டங்களின்" கீழ் ஒப்பளிப்புக்காக இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ரூ. 10 லட்சத்திற்குக் குறைவாகச் செலவாகக் கூடிய பணிகள் ஒவ்வொன்றும் மாநில அரசினால் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் செயற்குறிப்புகள், "மத்திய அரசு ஆதரவு தரும் திட்டங்களின்" கீழ் பரிசீலிக்கப்படுவதற்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட வேண்டும். மேற்சொன்ன துறைமுக ஆய்வுக் குழு, பழவேற்காடு, எண்ணூர், மகாபலிபுரம், திருமுல்லைவாசல், வழிநோக்கம் ஆகிய இடங்களில் திட்டங்களுக்கான வாய்ப்புகள் உள்ள இடங்கள்பற்றி ஆய்வு செய்யும்.

### பணிமனை வசதிகள்.

இயந்திர மீன்பிடி கலன்களைத் தயாரித்து வழங்கினால் மட்டும் போதாது என்றும் மீன்பிடி காலங்களில் இவற்றை அதிகமான நாட்களுக்குப் பயன்படுத்தவியலும் பொருட்டு அவற்றை நல்ல நிலையில் வைத்துவரவேண்டியதும் அவசியம் என்றும் துறை

அறிந்தது. உதிரிப் பாகங்கள் விற்பனை நிலையங்கள், பழுது பார்க்கும் பட்டறைகள் ஆகியவை போதிய அளவில் இல்லாத காரணத்தால், இயந்திர மீன்பிடி கலன்களில் வேலைத்திறன் எந்த அளவுக்கு இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இல்லை என்று இத்துறை நடத்திய ஆய்விலிருந்து தெரிய வருகிறது. சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி, கொளச்சல் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கடல் பொறியியல் பணி நிலையங்களில், போதிய பணியாளர்களும், உதிரிப்பாகங்களும் இருந்தும், அவை செயல்படக்கூடிய கடற்கரைப் பரப்பு குறைவே. விசைப்படகுகளின் செயல் திறனைக் கணிசமான அளவுக்கு மேம்படுத்த இயலும் வகையில் விசைப் படகுகளைப் பழுது பார்ப்பதற்காகக் கடற்கரை நெடுகிலும் உள்ள வசதிகளை மேலும் பெருக்குவது குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு, தமிழ்நாட்டில் படகு நிறுத்தப்படும் முக்கியமான இடங்கள் பலவற்றில் ' ' வகுப்பு, ' B ' வகுப்பு பழுதுபார்க்கும் பட்டறைகளை அமைப்பதற்கான பெருந்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இப்பெருந்திட்டத்தின்படி கடலூரில் ஏற்கெனவே உள்ள பழுதுபார்க்கும் பட்டறையின் வசதிகளைப் பெருக்கவும், 1973-74 ஆம் ஆண்டில் மல்லிப்பட்டினத்தில் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றை ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. இப்பெருந்திட்டத்தை அடுத்துவரும் ஆண்டுகளில் படிப்படியாகச் செயல்படுத்த அரசு எண்ணியுள்ளது.

### இந்திய-நார்வே திட்டம்.

நார்வே நாட்டுத் தொழில் நுட்ப மற்றும் பொருள் உதவிகளுடன் மண்டபத்தில் மீனளத் திட்டம் ஒன்று தொடங்கி வைக்கப்பட்டது. படகு கட்டும் தளம், மீனளப் பயிற்சி நிலையம், பனிக்கட்டித் தொழிற்சாலை, குளிர்சாதன அறை, மீன்களை உறைய வைக்கும் பிரிவு, மீன் மாவுத் தொழிற்சாலை, மீன்பிடி படகுகளை நிறுத்திவைப்பதற்கான துறை, பணிமனை ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். ஒப்பந்தத்தின் நிபந்தனைகளும், கால அளவும் 31-3-72 அன்றுடன் முடிவடைந்து விட்டதால், இத்திட்டம் மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.





### முத்து, சங்கு குளித்தல்.

திருநெல்வேலிக் கடற்கரைப் பகுதி நீங்கலாக ஏனைய இடங்களில் சங்கு குளிப்பவர்கள் தாராளமாகச் சங்கு குளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால், மீனவர்களைப் போன்று கடல் வளத்தை முழு அளவில் அனுபவிக்க தங்களுக்கும் உரிமை வேண்டுமென்றும், இடை ஆட்களை ஒழிக்க வேண்டும் என்றும் சங்கு குளிப்பவர்கள் இடைவிடாமல் செய்து வந்த கோரிக்கை நிறைவேறுகின்றது. இதன் மூலம் பயனடைந்த சங்கு குளிப்பவர்களின் எண்ணிக்கை சுமாராக 1,750 ஆகும். அரசு, அண்மையில், திருநெல்வேலி மாவட்ட மீனளத்தின் பெரிய சங்குகள் வாங்கும் விலையைச் சங்கு ஒன்றுக்கு ரூ. 1.25-லிருந்து ரூ. 1.75 ஆக உயர்த்தியுள்ளது.

### ஆராய்ச்சி.

மீனள ஆராய்ச்சி, மீனளத் துறை தொடங்கப்பட்டதிலிருந்து அதன் தலையாய பணியாக இருந்து வந்துள்ளது. கடல் மீனள உயிரியல், தூய நீர் உயிரியல், நீரியல் உயிரியல், தொழில் நுட்ப மீனளவியல் தொடர்பான பிரச்சினைகளை ஆய்வு செய்ய அனைத்து வசதிகள் கொண்ட மீனள ஆராய்ச்சி நிலையங்கள், கன்னியாகுமரி, தூத்துக்குடி, நாகப்பட்டினம், இராமேஸ்வரம், அடையாறு, சேத்துப்பட்டு, எண்ணூர் ஆகிய இடங்களில் உள்ளன. நடப்பாண்டில், பொடி மீன்களைப் பயன்படுத்துவது பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்கான இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத் திட்டம் ஒன்று, சேத்துப்பட்டிலுள்ள ஆராய்ச்சி நிலையத்தில் செயல்பட்டு வருகிறது. பவானிசாகரில், நீர்த் தேக்கங்களில் மீன் வளர்ப்பு ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு ஆகியவை குறித்த உள்நாட்டு மீனள ஆராய்ச்சித் திட்டங்கள் இரண்டும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் ஆதரவளிக்கும் திட்டங்களாகும். இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் ஆதரவளிக்கும் கடல் மீனள ஆராய்ச்சி மத்திய நிறுவனத்தின் உடனுழைப்புடன் தூத்துக்குடியில் முத்துச்சிப்பி வளர்ப்பதற்கான செயற்குறிப்பு குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மீனளத் துறை ஆராய்ச்சி செய்து வரும் பணிகளை, மாநில அளவிலான மீனள ஆராய்ச்சிக் குழு ஆய்வு செய்து மேற்பார்வையிட்டு வருகிறது. முறையான நிர்வாகம், வழிகாட்டுதல், உன்னிப்பாக மேற்பார்வையிடுதல் ஆகிய காரியங்களுக்காக ஆராய்ச்சி செய்த பணிகளை

ஒருங்கிணைத்து அவற்றைச் சீரமைத்தல், ஆராய்ச்சி நிலையங்கள் சிலவற்றினை மைய ஏற்பாட்டின்கீழ்க் கொண்டு வருதல் ஆகியவை குறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. துறை, மீனளம் பற்றிய பத்திரிகை ஒன்றை சென்னையில் வெளியிட்டு வருகிறது. துறை அவ்வப்போது வெளியிடும் செய்திக் கதிரில் மீனள ஆராய்ச்சி பற்றி பயனுள்ள தகவல் கொடுக்கப்படுகின்றது. அத்துடன் துறையின் அதிகாரிகள், பணியாளர் ஆகியோரின் மேம்பாட்டினையும் தெரிவிக்கிறது. பழவேற்காட்டில், கடல் மீனளம் குறித்து முன்னோடி ஆய்வுக்கான செயற்குறிப்பு பற்றி பாரக்பூர், உள்நாட்டு மீனள ஆராய்ச்சி மத்திய நிலையம் பரிசிலித்து வருகிறது.

## மீனவர் நலத் திட்டங்கள்.

1968-69 ஆம் ஆண்டில் வீட்டுவசதித் திட்டத்தை அரசு மீண்டும் செயலுக்குக் கொண்டு வந்தது. 300 வீடுகள் கட்ட அரசு இதுவரை ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவற்றில் 1971-72 வரை 149 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 51 வீடுகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் கட்டி வருகின்றன. தொடக்கத்தில், ஒரு வீடு கட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசு ரூ. 1,000 நிதியுதவி அளித்து வந்தது. இப்போது அதனை ரூ. 2,000 ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ரூ. 2,000-ல், 50 சதவீதம் உதவித் தொகையாகக் கருதப்படுகிறது. இதைத் தவிர, புயல் நிவாரண நிதியிலிருந்து ரூ. 2.63 லட்சம் செலவில், தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபட்டினம் கிராமத்தில் 70 வீடுகள் கட்ட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவை 1973 மார்ச் இறுதிக்குள் கட்டி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. ரூ. 4 லட்சம் செலவில், தஞ்சாவூர் மாவட்டத்தில், (1) தோப்புத்துறை ரயில் நிலையத்தை ஆர்க்காடு தெருவுடன் இணைக்கும் சாலை, (2) முக்கிய சாலையுடன் செருத்தூர் மீனவர் குப்பத்தை இணைக்கும் சாலை ஆகிய இரண்டு இணைப்புச் சாலைகளை அமைக்கும் பணி நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் செருத்தூர் மீனவர் குப்பத்தினை முக்கியச் சாலையுடன் இணைக்கும் சாலை அண்மையில் முடிக்கப்பட்டுள்ளது. மற்றொரு இணைப்புச் சாலை முடியும் தறுவாயில் உள்ளது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ரூ. 1.19 லட்சம் செலவில் சிலம்பிமங்கலத்தையும், சாமியார்





பேட்டையையும் இணைத்து பெரிய சாலை ஒன்று அமைக்கும் பணியை நெடுஞ்சாலைத் துறை இவ்வாண்டு முடித்துள்ளது. 1970–71-ல் அரசு மானியத்துடன், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் எட்டு இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணியையும், சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு சாலை அமைக்கும் பணியையும் மேற்கொண்ட அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் அப்பணிகளை முடித்துள்ளன. அரசிடமிருந்து 10 சதவீத மானியத்துடன் பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் மேற்கொண்ட இரு சாலைகள் அமைக்கும் பணியும், 40 சதவீத மானியத்துடன் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரு சாலைகள் அமைக்கும் பணியும் நடந்தேறி வருகின்றன.

புயல், வெள்ளம், தீ ஆகியவற்றினால் பாதிக்கப்படும் மீனவர்களுக்கும் துறை உதவி செய்கிறது. கடலில் மீன் பிடிக்கும்போது உயிர் துறக்கும் மீனவர்களின் குடும்பத்தினருக்குக் கருணைத் தொகையாக ரூ. 1,000 வழங்கப்படுகிறது. மீனவர்களுக்கு இது வரை கருணை மானியமாக ரூ. 1,03,000 வழங்கப்பட்டுள்ளது. இயற்கைப் பேரிடர்களின் போது, சேதமடையும் கட்டுமரங்களுக்கும், வலைகளுக்கும் பதிலாகப் புதிய கட்டுமரங்களையும் வலைகளையும் மீனவர் வாங்கிக்கொள்ளவும், புதுவாழ்வு பெறவும் அவர்களுக்கு இத்துறை கடன்களையும் உதவித் தொகைகளையும் வழங்கி வருகிறது. மீனவர் வாழும் பகுதிகளில், கடல் அரிப்பினாலோ, எண்ணெய்க் கப்பல் துறை, மீனளத் துறைமுகம், அணு மின்சக்தித் திட்டம் போன்ற பெருந் திட்டங்கள் கட்டப்படுவதனாலோ அங்கிருந்து மீனவர் வெளியேற்றப்படும்போது, அவர்களுக்காக மீனவர் குடியிருப்புகள் கட்டும் பணியைத் துறை மேற்கொள்வதோடு அங்கு மாதிரி மீன்பிடி கிராமங்களை உருவாக்குகிறது. கல்பாக்கம், அம்மாபட்டினம் ஆகிய இடங்களிலுள்ள இரு குடியிருப்புகளில், இதுவரை 373 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## கருத்தரங்குகள்.

கடல் மீனளம், விசைப் படகுகளில் சென்று மீன்பிடித்தல் ஆகியவை குறித்து அனைத்து இந்தியக் கருத்தரங்கு ஒன்று 1972 நவம்பரில் சென்னையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்குத்

தமிழ்நாட்டு ஆளுநர் தலைமை வகித்தார். தமிழ்நாடு முதலமைச்சர் இக்கருத்தரங்கினைத் தொடங்கி வைத்தார். நாடு முழுவதிலிருந்தும் பெருமதிப்பிற்குரிய பிரதிநிதிகள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். பயனுள்ள தகவல்கள் அடங்கிய கட்டுரைகள் இக் கருத்தரங்கில் படிக்கப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து பயனுள்ள விவாதங்கள் நடைபெற்றன. இந்தக் கருத்தரங்கில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பயனுள்ள பரிவுரைகள் செய்யப் பட்டன. தொழில் நுட்ப மீனளவியலின் மேம்பாடுகள் பற்றி, அதில் ஈடுபாடுடைய மக்களிடையே பரப்புவதற்காக 1973-74-ல் தெரிந்தெடுத்த மாவட்டங்களில் குறை கருத்தரங்குகளை நடத்தும். இத்தகைய ஒரு கருத்தரங்கு விரைவில் தஞ்சாவூரில் நடை பெறும். தமிழ் நாட்டிலிருந்து கடல் சார்ந்த பொருட்களை ஏற்றுமதி செய்வது பெருகி வருகிறது. இந்த ஏற்றுமதியினை மேலும் பெருக்கவும், இது குறித்த பிரச்சினைகளை ஆய்வு செய்யவும், நமது ஏற்றுமதிப் பாங்கினை மேம்படுத்த உரிய வழிகளை மேற்கொள்ளவும் வேண்டி தமிழ்நாட்டின் கடல் சார்ந்த பொருள்கள் மேம்பாடு குறித்த கருத்தரங்கு ஒன்று 1973-74-ல் நடத்தப்படும்.

### முடிவுரை.

தமிழ்நாடு, மீனளப் புரட்சியின் தலைவாயிலில் நிற்பதாக நாம் கூறலாம். மேற்குறிப்பிட்ட திட்டங்கள் வாயிலாக, நமது மாநிலம், கடல், உள்நாட்டு நீர்நிலைகளிலிருந்து மீன் உற்பத்தியை விரைந்து பெருகச் செய்ய முடியும் என்று கருதப்படுகிறது. மீனள வளர்ச்சிக்கான ஐந்தாவது, ஆறுவது திட்டங்களின் விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் மீனள வளர்ச்சிக்கு இவ்விரு திட்டங்களும் மிகுந்த சிறப்பிடம் கொடுக்கும். ஏற்கெனவே இருந்து வரும் அல்லது ஏற்படுத்தக் கருதியுள்ள அடிப்படை வசதிகள், நான்காம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்து ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகளை நாம் நல்ல முறையில் தொடங்க உதவும் என்று கருதப்படுகிறது.



## இணைப்பு II.

(44-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## அரிசன நலத்துறை மானியம்

### கொள்கை விளக்கக் குறிப்பு 1973–74.

“அரிசன, மலைவாசி மக்கள் நலன்” என்ற தலைப்பின்கீழ் 1973–74 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையை நான் இம்மன்றப் பேரவையின் முன் வைத்து ரூ. 816·35 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய அவையின் ஒப்புதலைக் கோருகிறேன்.

அரிசன, மலைவாசி மக்களின் நலன்களைப் பேணுவதற்காகத் தமிழ்நாடு அரசு ஆற்றும் ஆக்கப் பணிகளை—

(1) கல்வி,

(2) பொருளாதார முன்னேற்றம்,

(3) சுகாதாரம், வீட்டுவசதி எனைய திட்டங்கள்

என்ற தலைப்புகளின்கீழ் தொகுக்கலாம்.

### 1. கல்வி.

ஒவ்வோர் ஆண்டும் அரிசன நலத்துறைக்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பகுதி கல்விக்காகச் செலவிடப்படுகிறது. 1971–72 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 719·57 லட்சத்தில் கல்விக்கு மட்டும் ரூ. 527·59 லட்சம் செலவழிக்கப்பட்டது. 1972–73-ம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள மொத்த தொகையான ரூ. 841·23 லட்சத்தில் கல்விக்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 562·31 லட்சமாகும். 1973–74 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீடாகிய ரூ. 816·35 லட்சத்தில் கல்விக்காக ரூ. 596·16 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மொத்தத் தொகையில் 73 விழுக்காடு ஆகும்.

**படிப்பு உதவித் தொகைகள்:**

அரிசன மலைவாசி வகுப்பைச் சார்ந்த (மதம் மாறியவர்கள் உட்பட) மாணவ மாணவியர்களுக்கு உணவு, உறைவிடத்திற்கான உதவித்தொகைகளும், படிப்பு உதவித் தொகைகளும், தொடரா மானியங்களும் தொடக்க வகுப்புகளிலிருந்து பட்ட மேற்படிப்பு வரையிலும், கலைப் படிப்பிற்கும் தொழில் படிப்பிற்கும் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன.

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான படிப்புதவிப் பணம் என்பது கல்வி நிலையங்களுடனும், ஏற்பளிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களுடனும் இணைந்துள்ள விடுதிகளில் தங்கி 6-வது வகுப்பும் அதற்கு மேற்பட்டும் படித்துவரும் மாணவர்களுக்கு வழங்கப்படும் படிப்புதவிப் பணமாகும். உண்டி உறையுள் செலவும், புத்தகங்களுக்காகும் செலவும், சிறப்புச் சம்பளம் முதலியனவும் அதில் அடங்கும். விடுதிகளில் தங்கிப் பயிலாத மாணவர்களுக்கான உபகாரச் சம்பளம் என்பது, விடுதிகள் எதிலும் தங்கியிராமல் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் படிப்புதவிப் பணமாகும். புத்தகங்களுக்காகும் செலவும், சிறப்புச் சம்பளம் மட்டுமே அதில் அடங்கும். 'தொடரா மானியம்' என்பது, பக்ககம். எழுது பலகை முதலியவற்றின் செலவைச் சரிக்கட்ட முதல் வகுப்பு முதல் 3-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஒரு மொத்த மானியமாகும். அரிசன நலத்துறை இல்லங்களில் தங்கும் மாணாக்கர்களுக்கு இலவசமாக உணவும், உறைவிடமும் அளிக்கப்படுகின்றது.





1969–70, 1970–71, 1971–72, 1972–73 ஆம் ஆண்டுகளில் படிப்பு உதவித் தொகைக்காக வழங்கப்பட்ட தொகையும் இதனால் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கையும் கீழ் வருமாறு :—

| ஆண்டு. | அரிசன மாணவ மாணவியர்கள் (பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை). | | செலவான மொத்த தொகை (ரூபாய் லட்சத்தில்). | மலைவாசி மாணவ மாணவியர்கள் (பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை). | | செலவான மொத்த தொகை (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|---|---|---|---|
| | பள்ளியில் பயில்வோர். | கல்லூரியில் பயில்வோர். | | பள்ளியில் பயில்வோர். | கல்லூரியில் பயில்வோர். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | மத்திய அரசு படிப்பு உதவித் தொகை. | | | |
| 1969–70 .. .. .. | .. | 11,527 | 57·43 | .. | 117 | 0·70 |
| 1970–71 .. .. .. | .. | 13,138 | 64·03 | .. | 158 | 0·80 |
| 1971–72 .. .. .. | .. | 15,408 | 72·80 | .. | 164 | 0·87 |
| 1972–73 .. .. .. | .. | 17,060 | 77·53 | .. | 152 | 0·84 |
| | | | தமிழ்நாடு அரசு படிப்பு உதவித் தொகை. | | | |
| 1969–70 .. .. .. | 3,52,155 | 7,640 | 82·55 | 744 | .. | 0·14 |
| 1970–71 . .. .. | 3,86,843 | 8,136 | 88·02 | 1,001 | .. | 0·13 |
| 1971–72 .. .. .. | 4,17,639 | 5,702 | 94·16 | 597 | .. | 0·11 |
| 1972–73 . .. | 4,71,830 | 7,108 | 97·54 | 1,758 | .. | 0·20 |

மேலே கண்ட விவரப் பட்டியலிலிருந்து படிப்பு உதவித் தொகையின் அளவும் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கையும் ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டு வருவது நன்கு விளங்கும்.

பட்ட மேற்படிப்பு, ஆசிரியர் பட்டப் பயிற்சி, புலவர் படிப்பு, தொழில் நுட்பக்கல்வி, தொழிற்கல்வி, தட்டெழுத்துப் பயிற்சி முதலிய ஐம்பது வகைப் படிப்புகளுக்கு உதவித் தொகை வழங்க நிர்ணயிக்கப்பட்டிருந்த உச்சவரம்பு எண்ணிக்கை 1970–71 முதல் அறவே நீக்கப்பட்டு கல்வி கற்கத் தகுதி பெற்ற அனைவரும் உதவித் தொகை பெற வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது. பல்கலைக் கழகம் நடத்தும் நூலக அறிவுப் பட்டப்படிப்பிற்கும் உதவித் தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள், மலைசாதி மாணவர்களைச் சேர்க்க இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 16 சதவிகித இடத்தை 18 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒதுக்கீடு சரிவர பூர்த்தி செய்யப்படுகின்றதா என்பதை ஆராய இதற்கென ஒரு தனி குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு அரிசன நலத் துறை இயக்குனரை செயலாளராகவும், அரிசன நல அமைச்சரை தலைவராகவும் மற்றும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டும் அடுத்த கல்வி ஆண்டிலிருந்து செயல் படவிருக்கிறது.

காந்தி அடிகள் நினைவுச் சிறப்புக் கல்வி உதவித் தொகை திட்டம் நமது பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு 1970–71-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1971–72 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலமாக 52 மாணவ மாணவிகள் பயன் அடைந்தார்கள். இதற்காக ரூ. 0·65 லட்சம் 1971–72-ல் செலவழிக்கப்பட்டது. புத்த மதத்திற்கு மாறியுள்ள அரிசன மாணவ மாணவியர்களுக்கும் 1971–72-ம் ஆண்டு முதல் மேல்படிப்பு உதவித் தொகைகள் வழங்க மத்திய அரசு உத்தரவிட்டது. 1971–72-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு இத்திட்டத்தினை செயற்படுத்தி வருகிறது.

1971–72 ஆம் ஆண்டிலிருந்து பள்ளி மற்றும் பல்கலைக் கழக ஆண்டு இறுதித் தேர்வில் 60 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்வு பெறும் இந்து அரிசன மற்றும் மலைவாசி மாணாக்கர்களுக்கு (புத்த மதத்திற்கு மாறியவர்கள் உட்பட) மத்திய அரசு உதவித் தொகை திட்டத்தின் கீழ் விடுதிக்கட்டணம் $1\frac{1}{2}$ மடங்காக வழங்கப்பட்டு வருகிறது. 60 சதவிகிதத்திற்குக் குறைவான மதிப்பெண்கள் பெறும் மாணாக்கர்களுக்கு வழக்கம்போல் விடுதிக்கட்டணம் வழங்கப்படும்.

அரசினரால் வழங்கப்படும் உதவித்தொகைகளுக்கு மேல் கூடுதலாகப் பொறியியல், உழவியல், மருத்துவம் போன்ற படிப்பு வகைகளுக்குச் செலவு செய்ய நேரிடுகிறது. அத்தகைய கல்வி பயிலும் மாணவர்களில் மிகவும் அவசியமாகப் பொருளுதவி தேவைப்படுபவர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்கவும் அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது. இதற்கென 1971–72-ஆம் ஆண்டில் ரூ. 1,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 1971–72 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலமாக 221 மாணவர்கள் பயன் அடைந்தார்கள். இதே அளவுள்ள தொகை 1972–73, 1973–74-ம் ஆண்டுகளிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.





மேல் பட்டப் படிப்பிற்காக மத்திய அரசு வழங்கும் உதவித் தொகைகளும் அரிசன நலத்துறையின் மூலமாக வழங்கப்படுகின்றன. சில கொள்கைகளையும் விதி முறைகளையும் அனுசரித்து மத்திய அரசு நிதி உதவி நிர்ணயம் செய்து வழங்குகின்றது. அதன்படி 1969–70-ம் ஆண்டிற்கு ரூ. 5 லட்சம் வழங்கியது. 1970–71-ம் ஆண்டிற்கு ரூ. 8.79 லட்சம் வழங்கியது. 1971–72-ம் ஆண்டிற்கு ரூ. 22.90 லட்சம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. 1972–73-ல் ரூ. 30·40 லட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீடுகள் போதுமானதல்ல என்பதாலும் இத்திட்டத்தின்கீழ் மாநில அரசால் செலவிடப்படும் தொகை ஆண்டுதோறும் உயர்ந்து வருவதாலும், மத்திய அரசு தன் பங்கை அதிக அளவிற்கு ஏற்றுக்கொண்டு நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என ஒவ்வொரு ஆண்டும் இவ்வரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்கின்றது.

மத்திய அரசு வழங்கும் உதவித்தொகை பெறும் மாணவர்கள் மாநில அரசு உதவித் தொகை பெறுவதற்குத் தகுதி உள்ளவர்களாயிருந்தால் மாநில அரசு உதவித் தொகைக்கும் மத்திய அரசின் உதவித் தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை இவ்வரசு ஈடுசெய்து அளித்து வருகின்றது.

## அரிசன நலத்துறைப் பள்ளிகள் (அரிசனங்கள்).

அரிசன மாணவ மாணவியர்களுக்காக 839 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் தொடக்கப்பள்ளி 740, நடுநிலைப் பள்ளிகள் 88, மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் 11. இப்பள்ளிகளில் சுமார் 1.22 லட்சம் மாணவ மாணவியர்கள் கல்வி கற்றுப் பயனடைந்து வருகின்றனர். இப்பள்ளிகள் பற்றிய புள்ளி விவரங்கள் மாவட்ட வாரியாக விவரப்பட்டியல் 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1972–73-ம் ஆண்டில் நான்கு மாவட்டங்களில் 8 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டன.

## அரிசன நலத்துறைப் பள்ளிகள் (மலைவாசிகள்).

மலைவாசி மாணவ மாணவியர்களுக்காக 72 உறைவிடப் பள்ளிகளை அரிசன நலத்துறை நடத்தி வருகிறது. அவற்றில் தொடக்கப்பள்ளிகள் 65, நடுநிலைப்பள்ளிகள் 6, உயர்நிலைப்பள்ளி 1. இவைகளைத்தவிர 2 உறைவிட வசதியில்லாப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் மொத்த மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 4,465. மாவட்ட வாரியாக உள்ள பள்ளிகளின் எண்ணிக்கையும் பயில்கின்றவர்களின் எண்ணிக்கையும் விவரப்பட்டியல் 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1972–73-ம் ஆண்டில் மலைவாழ் மக்களுக்கு சேலம் மாவட்டத்தில் நடுவஞ்சேரியிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்துகாணியிலும் இரு பள்ளிகள் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

1973–74-ம் ஆண்டில் மலைவாசியினருக்காக தென்னாற்காடு மாவட்டத்தில் அரசம்பட்டு என்ற இடத்தில் புதியதாக ஒரு உறைவிடப்பள்ளி திறக்க அரசு உத்தேசித்து கூடுதலான நிதியும் ஒதுக்கியுள்ளது.

**பள்ளிகளில் வசதிகள் பெருக்கம்.**

அரிசன நலத்துறை நடத்தும் பள்ளிகளில் மேசைகள் நாற்காலிகள் முதலியவற்றிற்கும், விஞ்ஞான கருவிகள் கல்விப் பயிற்சி சாதனங்கள் அறிவியல் ஆய்வுக் கூட சாதனங்கள் முதலியவற்றிற்கும், நூல் நிலைய வசதிகளைப் பெருக்கவும் படிப்படியாக ஆண்டுதோறும் வகை செய்யப் பட்டு வருகின்றது. இதற்காக 1972–73-ம் ஆண்டுக்கு ரூ. 4·14 லட்சமும் 1973–74-ம் ஆண்டிற்கு ரூ. 4·40 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதே போல் பழுதடைந்த பள்ளிக் கட்டிடங்களை மேம்பாடு செய்ய வும் புதுக்கட்டிடங்கள் கட்டவும் படிக்கிரமத் திட்டப்படி நிதி ஒதுக்கப்பட்டு வருகின்றது. 1972–73-ம் ஆண்டிற்கு ரூ. 15·83 லட்சமும், 1973–74-ம் ஆண்டிற்கு ரூ. 16·44 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசன நலப்பள்ளிகளில் 125 பள்ளிகள் இன்னும் வாடகைக் கட்டிடங் களிலேயே இயங்கி வருகின்றன. அரசு கணிசமான நிதி ஒதுக்கி ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் இப்பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் அமைக்க வேண்டுமென 1968–69-ம் ஆண்டு மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்திருந்தது. அதற்கிணங்க ஒரு படிக்கிரமத் திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் பள்ளிக் கட்டிடங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் ரூ. 12·90 லட்சம் ஒதுக்கப்பட்டு 30 புதுப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படும்.

**சீருடை வழங்கல்.**

அரிசன நல இல்லங்களில் தங்கிப் பயிலும் எல்லா மாணவியர்களுக்கும் அரிசன நலப்பள்ளிகளில் உள்ள எல்லா மாணவியர்களுக்கும் (இனப்பாகு பாடின்றி) ஆண்டுக்கு இருமுறை தீபாவளி, பொங்கல் விழாக்களை யொட்டி சீருடை வழங்கும் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

அரிசன நலத்துறைப் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரைப் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் ஆண்டுக்கு ஒரு முறை பொங்கல் விழாவை ஒட்டி ஒரு சிறுவனுக்கு ரூ. 10 வீதம் சீருடை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் அரிசன நல இல்லங்களில் தங்கி நான்காவது, ஐந்தாவது வகுப்புகளில் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் (இனப்பாகுபாடின்றி) 1971–72 முதல் நீடிக்கப் பட்டுள்ளது (முதல் வகுப்பிலிருந்து மூன்றும் வகுப்பு வரையிலும் அரிசன மாணவர்களுக்கு இல்லங்களில் தங்கும் வசதியில்லை). இந்தத் திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு சுமார் 64,000 சிறுமிகளும், 55,000 சிறுவர்களும் பயனடைகின்றனர். இத்திட்டத்திற்காக 1973–74-க்கு ரூ. 21·03 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



**சுற்றுலா.**

மலைவாசியினருக்கான பள்ளிகளில் பயிலும் மாணவர்களைப் பொது வெளி உலக அறிவு வளர்ச்சிக்காக ஆண்டில் ஒரு முறை நமது மாநிலத்திலுள்ள முக்கிய இடங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் சென்று வரும் திட்டம் 1969–70-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக 1973–74-ம் ஆண்டுக்கு ரூ. 1,000 நிதி ஒதுக்கப்படுகிறது.

**மதிய உணவு.**

அரிசன நலத்துறையின் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளில் பயிலும் எல்லா மாணவ மாணவியர்களுக்கும் மதிய உணவு வழங்கும் இப்பய னுள்ள திட்டம் சீரிய முறையில் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இதனால் ஆண்டுதோறும் சுமார் 1·25 லட்சம் குழந்தைகள் பயனடை கின்றனர். வேறு பொதுப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் மொத்தத் தில் 75 விழுக்காட்டிற்குக் குறையாமல் அரிசன மாணவர்கள் இருந்தால் அவ்வரிசன மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கும் திட்டம் அமு லாக்கப்படுகிறது. மதிய உணவு வழங்கும் திட்டத்திற்கு 1970–71-ம் ஆண்டு மொத்தம் ரூ. 35·62 லட்சம் செலவழிக்கப்பட்டது. 1971–72-ம் ஆண்டு இதற்கென ரூ. 37·30 லட்சம் செலவிடப்பட்டது. 1972–73-ம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 36·44 லட்சம் வகை செய்யப் பட்டுள்ளது. வரும் 1973–74 நிதி ஆண்டில் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 36·53 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

**புத்தகங்களும் பலகைகளும் வழங்கல்.**

அரிசன நலத்துறையின் கீழ் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குப் புத்தகங்கள், குறிப்பேடுகள், கரும்பலகைகள், எழுது பொருட்கள் முதலியன இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 6 லட்சம் 1972–73-க் கும், ரூ. 6·10 லட்சம் 1973–74-ம் ஆண்டிற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பள்ளிகளில் சுகாதார வசதிகள்.**

அரிசன நலத்துறைப் பள்ளிகளில் உள்ள மாணவியர்களுக்கும், ஆசிரியை களுக்கும் சுகாதார (கழிவு அறை) வசதியை முதல் கட்டமாகச் செய்து தரப்படுவது அவசரத் தேவை என்பதை உணர்ந்து ஒரு படிக்கிரமத் திட்டம் வகுத்து இத்தேவையைப் பூர்த்தி செய்ய அரசு முடிவு செய்தது. சென்ற ஆண்டில் முதல் கட்டமாக 50 அரிசனப் பள்ளிகளில் ஆசிரியை களுக்கும், மாணவியர்களுக்கும் சுகாதார (கழிவு அறை) வசதிகள் ஏற் படுத்த ரூபாய் ஒரு லட்சம் நிதி ஒதுக்கியது. இத்திட்டம் வரும் நிதி யாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**ஆசிரியர்களுக்கு வீடுகள்.**

அரிசன நலத்துறைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரும் திட்டத்தின் முதல் கட்டமாக மலை வாசி மக்களுக்கான பள்ளிகள் உள்ள இடங்களில் ஆசிரியர்களுக்கான இல்லங்கள் 1967–68-ம் ஆண்டு முதல் அமைக்கப்பகட்டு வருகின்றன.

இத்திட்டத்தை அரிசன நலப்பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த அரசு முடிவு செய்து இதற்காக 1971–72-ம் ஆண்டுக்கு 20 குடியிருப்புகள் அமைப்பதற்கு மொத்தம் ரூ. 1·12 லட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1972–73-ம் ஆண்டுக்கு ரூ. 1·94 லட்சமும், 1973–74-ம் ஆண்டுக்கு ரூ. 2·50 லட்சமும் ஒதுக்கப்பட்டு சுமார் 50 வீடுகள் கட்டப்படும்.

## தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிலத் திட்டம்.

அரிசன மலைவாசி மாணவ மாணவியர்களில் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயின்றவர்கள் போதிய அளவு இல்லாத காரணத்தால், மேற்படி பணிகளில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட விழுக்காடு நிறைவு பெறுமல் இருந்தது. இதை உணர்ந்து, அரிசன மலைவாசி மாணுக்கர்களை இப் பயிற்சிகளில் தேர்வு பெற ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் இதற்கென 1971–72-ம் ஆண்டு முதல் புதிதாக ஒரு திட்டம் சென்னை, கோவை, திருச்சி ராப்பள்ளி, மதுரை, தென் ஆற்காடு மற்றும் சேலம் ஆகிய இடங்களில் செயல்படுத்த ஆணையிடப்பட்டது. பின்னர் இத்திட்டம் மற்ற எல்லா மாவட்ட தலைநகரங்களுக்கும் 1972–73-ல் நீடிக்கப்பட்டது. இத்திட்டத்தின் படி தனியார் பயிற்சி பள்ளிகளில் தட்டெழுத்துப் பயில 850 மாணுக்கர் களுக்கும், சுருக்கெழுத்துப் பயில 425 மாணுக்கர்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1972–73-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2·04 லட்சம் வகை செய்யப்பட்டிருந்தது. இத்தொகை 1973–74-ம் ஆண்டில் ரூ. 3 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம் அரிசனங்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிப்பதுடன் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயின்ற அரிசன பணியாளர்களின் விழுக்காட்டில் உள்ள குறைவையும் நீக்கப் பெருமளவில் உதவுகிறது.

## தேர்வுகளில் தேருத மாணுக்கர்களுக்கு சிறப்புப் பயிற்சி.

அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளில் 9-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரை உள்ள தேர்வுகளில் தேருத அரிசன மற்றும் மலைவாசி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்று அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளில் 1971–72-ம் ஆண்டு முதல் மேற்கொள்ளப் பட்டது. இத்திட்டம் தொடர்ந்து அமுல்படுத்தப்படுகிறது.

## பட்டயக்கணக்கர் தேர்வுக்கான பயிற்சி.

1972–73-ஆம் ஆண்டு முதல் பரிசோதனை நடவடிக்கையாகச் சென்னை நகரில் மொத்தம் 10 அரிசன மலைவாசி மாணவ மாணவியர்களுக்குப் பட்டயக்கணக்கர் தேர்வுக்கான பயிற்சி தரப்படுகின்றது. இப்புதிய திட்டத்திற்காக 1972–73-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0·15 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1973–74-ம் ஆண்டிற்கும் அதே அளவில் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அரிசன மக்களின் கல்வி வாய்ப்பினைப் பெருக்குவதற்கும் உரிய வேலை வாய்ப்பினைப் பெருக்குவதற்கும் வகை செய்யும்.





## கல்வித் தகுதியில் மேம்பாடுள்ள மாணவ மாணவியர்களுக்கு சிறப்புப் பயிற்சித் திட்டம்.

அரிசன மற்றும் பழங்குடியைச் சார்ந்த சிறப்புத் தகுதியுள்ள மாணவ மாணவியர்களுக்கு தனிப்பயிற்சி அளிக்க திட்டம் செயல்படுத்தப் படுகின்றது. இத்திட்டம் சென்னை நீங்கலாக ஏனைய நகரங்களில் படிக்கும் முதலாண்டு பி.எஸ்ஸி. மாணவ மாணவியர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தனிப்பயிற்சி சென்னையில் கல்லூரி விடுமுறை நாட்களில் ஓர் குறிப்பிட்ட காலத்திற்கு நடத்தப்படும். 16-9-1972 முதல் 8-10-1972 வரை 103 அரிசன மலைசாதி மாணவ மாணவி யர்களுக்கு இத்தனிப் பயிற்சி அளிக்கப்பட்டது. மேற்படி திட்டத்திற்கென்று 1973–74-ம் ஆண்டிற்கு ரூ. 1·00 லட்சம் ஒதுக்கப்பட்டு, இப்பயிற்சி மே, ஜூன் மாதங்களில் நடத்தப்படும். இவ்வாண்டு "தமிழில் சிறப்பாக எழுது வதற்கும்" பயிற்சியளிக்கப்படும்.

## மாணுக்கர் இல்லங்கள் பராமரிப்பு.

அரிசன மலைவாசி மாணவ மாணவிகளுக்கான இல்லங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. நிதி நிலைமையைப் பொருத்தும் தேவைக்கேற்பவும் புதுப்புது இல்லங்கள் ஆண்டுதோறும் திறக்கப்பட்டு அரசினுல் பேணப்பட்டு வருகின்றன. அவற்றில் கீழ்க்காணும் விகிதத்தில் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன :—

| | மலைவாசி மாணுக்கர் இல்லங்கள். (விழுக்காடு). | அரிசன மாணுக்கர் இல்லங்கள். |
|---|---|---|
| அரிசனங்கள் .. .. .. .. | 30 | 75 |
| மலைவாசிகள் .. .. .. .. | 60 | |
| பின் தங்கிய வகுப்பினர் .. .. | 10 } | 20 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். | | .. |
| முன்னிலை வகுப்பினர் .. .. | .. | 5 |
| மொத்தம் .. .. | 100 | 100 |

அரிசனங்களுக்கும் மலைவாசியினருக்கும் அரிசன நலத் துறையால் பராமரிக்கப்படும் இல்லங்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு:—

| ஆண்டு. | அரிசனங்கள். | | மலைவாசியினர். | |
|---|---|---|---|---|
| | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணுக்கர்களின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணுக்கர்களின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1966–67 .. | 388 | 27012 | 15 | 700 |
| 1967–68 .. | 396 | 27237 | 15 | 700 |

[1973 மார்ச் 19

| ஆண்டு. | அரிசனங்கள். | | மலைவாசியினர். | |
|---|---|---|---|---|
| | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணாக்கர்களின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணாக்கர்களின் எண்ணிக்கை |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1968-69 .. | 411 | 27748 | 16 | 725 |
| 1969-70 .. | 430 | 28188 | 16 | 725 |
| 1970-71 .. | 457 | 29867 | 16 | 725 |
| 1971-72 .. | 488 | 31457 | 14* | 620 |
| 1972-73 .. | 508 | 32561 | 14* | 620 |

* இரண்டு மாணவர் இல்லங்கள் அரிசன மாணவர் இல்லங்களாக மாற்றப்பட்டன.

அரிசன நலத் துறையினரால் மொத்தம் 522 இல்லங்கள் பராமரிக்கப்படுகின்றன. அவைகளில் மொத்தம் 33,181 மாணாக்கர்கள் தங்கி கல்விப் பயில்கின்றனர்.

1972-73-ம் ஆண்டில் புதிதாகத் திறக்கப்பட்ட இல்லங்களின் விவரம் பின்வருமாறு :—

அரிசனங்கள்—

| | | |
|---|---|---|
| 1. | உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான இல்லங்கள் .. | 10 |
| 2. | உயர்நிலைப்பள்ளி மாணவிகளுக்கான இல்லங்கள் .. .. | 4 |
| 3. | கல்லூரி மாணவர்களுக்கான இல்லங்கள் .. .. .. | 7 |
| | மொத்தம் .. .. | 21 |

1973-74-ம் ஆண்டில் புதிய இல்லங்கள் திறக்கவும், சில தனியார் இல்லங்களை மேற்கொள்ளவும் ரூ. 4·50 லட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1973-74-ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டம் பூலாம்பாடியில் உள்ள அரிசன மாணவர் இல்லத்தில் கூடுதலாக இடவசதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 7,000 ஒதுக்கப்பட்டுள்ளது. தவிர, தென் ஆற்காடு மாவட்டத்தில் சங்கராபுரத்தில் மலைவாசி மாணவர்களுக்கு 1973-74-ல் புதிய மாணவர் இல்லம் கட்ட ரூ. 29,800 ஒதுக்கப்பட்டுள்ளது.

1973-74-ம் ஆண்டில் கல்லூரி மாணவர்களுக்கு புதியதாக 3 விடுதிகளும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்காக 16 விடுதிகளும் திறக்க அரசு முடிவு செய்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள கல்லூரி மாணவர் இல்லத்தில் 50 இடங்கள் கூடுதலாக வசதி செய்யப்பட்டுள்ளது. தவிர, 3 தனியார் இல்லங்களை அரசு மேற்கொள்ளவும் முடிவு செய்துள்ளது. இதற்கென 1973-74-ஆம் ஆண்டிற்கு ரூ. 4·50 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



1973 மார்ச் 19]

அரிசன நலத்துறையால் நடத்தப்படும் மொத்தமுள்ள மாணாக்கர் இல்லங்களின் எண்ணிக்கையும் தங்கிப் பயிலுபவர்களின் எண்ணிக்கையும் விவரப்பட்டியல் 4(அரிசனங்கள்) மற்றும் விவரப்பட்டியல் 5 (மலைவாசிகள்)-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## இல்லக் கட்டிடங்கள் கட்டுதல்.

அரிசன நலத்துறையால் நடத்தப்படும் மொத்தமுள்ள 522 இல்லங்களில் 456 இல்லங்கள் தற்போது வாடகைக் கட்டிடங்களில் தான் உள்ளன. அவைகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் விவரப்பட்டியல் 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அவசியமான வசதிகளுடன் கூடிய கட்டிடங்களை அமைத்துத்தர வேண்டியதின் அவசியத்தை அரசு உணர்ந்து படிப்படியாகப் புதுக் கட்டிடங்களைக் கட்ட நீண்ட கால திட்ட அடிப்படையில் வகை செய்துள்ளது. ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள கட்டிடங்களை நிறைவு செய்வதற்கும் புதிய கட்டிடங்களை கட்டவும் 1973-74-ம் ஆண்டிற்கு ரூ. 12·10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து ஒரு கோடி ரூபாய் கடனுகப் பெற்று எல்லா வசதிகளுடன் இல்லங்களை அரிசன மலைவாசி மாணவர்களுக்கு கட்டித்தர அரசு மு[illegible]துள்ளது. இம்மாதிரி பெருமளவில் கட்டிடங்கள் கட்டப்பட்டு[illegible] களுக்குத் தற்போது வாடகைக் கட்டிடங்களில் உள்ள இல்லங்களை மாற்றப்படும். படிப்படியாக வாடகைக் கட்டிடங்களில் உள்ள இடங்களின் எண்ணிக்கை குறைக்கப்படும். அரிசன மாணவர்களுக்கு இல்லங்கள் கட்ட 1973-74-ஆம் ஆண்டில் ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பகுதிநேர ஆசிரியர்கள்.

மாணவர் இல்லங்களில் தங்கிப்பயிலும் மாணவ மாணவியர்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும் இறுதி ஆண்டுத் தேர்வில் அவர்களது செயல் திறனை வளர்க்கவும் பகுதி நேர ஆசிரியர்களை நியமனம் செய்து பாடம் சொல்லித்தரும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## தனியார் விடுதிகளுக்கு உணவு மானியங்கள்.

ஏற்புப்பெற்ற தனியார் விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவ மாணவிகளைப் பேணுவதற்காக நிதி உதவி மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1973-74 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூ. 5·24 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

அரசு மானியம் பெறும் தனியார் விடுதிகளின் எண்ணிக்கை மொத்தம் 58. அவைகளின் பெயர்கள் விவரப்பட்டியல் 7-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 2. பொருளாதார முன்னேற்றம்.

### வேளாண்மை.

பெரும்பான்மையான அரிசன மலைவாசி மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே, அவர்களின் நிலையை உயர்த்துவதற்கு உழவு மாடுகள், விதை, விவசாயக்கருவிகள் முதலியன வாங்கவும், பாசனக் கிணறுகள் தோண்டவும் மானியம் வழங்கப்படுகிறது. இந்த வகையில் வழங்கப்பட்டு வந்த தொகை போதுமானதாக இல்லை என்பதை உணர்ந்து உழவுமாடுகள் வாங்க ரூ. 400-லிருந்து 500 ஆகவும், கிணறு தோண்ட ரூ. 1,500-லிருந்து 2,000 ஆகவும் 1970-71 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டது. 1971-72 ஆம் ஆண்டில் அரிசன மக்களுக்கென ரூ. 9·86 லட்சமும், மலைவாசி மக்களுக்கென ரூ. 2·82 லட்சமும் செலவழிக்கப்பட்டது. 1972-73, 1973-74 ஆம் ஆண்டுகளில் அரிசன மக்களுக்கென ஆண்டொன்றுக்கு ரூ. 9 லட்சமும் மலைவாசி மக்களுக்கென ரூ. 3 லட்சமும் ஆக மொத்தம் ரூ. 12 லட்சம் செலவழிக்கப்படும். தரிசு நிலங்களை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட பட்டியலில் அரிசனங்களுக்கு 7-வது இடமாக இருந்த முன்னுரிமையை 2-வது இடத்திற்கு உயர்த்தி மேலும் மிகுதியான அரிசனங்கள் வேளாண்மை நிலங்களைப் பெற்றுப் பயனடைய ஏற்கனவே வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இம் மாதிரி முன்னுரிமையை உயர்த்தியது அரிசனங்களுக்கு நிலம் பெருமளவில் வழங்கி அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சியை தெளிவுபடுத்துகின்றது.

### நிலக்குடியேற்றம்.

நிலமில்லாத ஏழை அரிசன உழவுத் தொழிலாளர்களுக்கு உதவும் வகையிலும் உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும் கூட்டுறவுப் பண்ணைத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. பயிரிடத்தக்க புறம்போக்கு நிலங்களும், தரிசு நிலங்களும் நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு அச்சங்கங்களில் உறுப்பினராக உள்ள அரிசன உழவர்களுக்கு வினியோகம் செய்யப்படுகின்றன. இதில் மேலும் அரிசனங்களை ஊக்குவிக்கும் முறையில் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டா வழங்கும் திட்டமும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

### தொழில் கருவிகள் வழங்குதல்.

கருமார் தொழில், தச்சுத் தொழில், தையல் தொழில், இன்ன பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள அரிசன மலைவாசி மக்களுக்கு அவரவர் தொழில்களுக்குத் தேவையான கருவிகளும் சாதனங்களும் இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து அமுலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தால் 1971-72 ஆம் ஆண்டில் 1,124 பேர் பயனடைந்தனர் இத்திட்டத்திற்கென 1973-74 ஆம் ஆண்டிற்கு ரூ. 2·50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### தொழில் நடத்த வட்டியில்லாக் கடனுதவி.

பேருந்து பழுது பார்த்தல், மிதி வண்டி கடைகள், மளிகை, சிற்றுண்டி விடுதிகள் நடத்துதல் முதலான 22 குறிப்பிட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள அரிசன மக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் அந்தந்த



தொழில்களுக்குத் தகுந்தாற்போல் ரூ. 250 முதல் ரூ. 10,000 வரை வட்டியில்லாக் கடன் வழங்கும். திட்டம் 1968-69ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இவ்வரிய திட்டத்தின் மூலம் இதுவரை பயன் பெற்றோரின் பட்டியல் வருமாறு:—

| ஆண்டு. | பயன் பெற்றவர்களின். எண்ணிக்கை. | கடனாக வழங்கப் பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1968-69 .. .. .. .. | 170 | 1·00 |
| 1969-70 .. .. .. .. | 707 | 3·01 |
| 1970-71 .. .. .. .. | 1,853 | 10·02 |
| 1971-72 .. .. .. .. | 1,450 | 10·11 |
| 1972-73 (9—3—1973 முடிய) .. | 957 | 6·00 |

இத்திட்டத்திற்காக 1972-73 ஆம் ஆண்டிலும் வரும் நிதி ஆண்டிலும் ஆண்டொன்றுக்கு ரூ. 10·00 லட்சம் செலவழிக்கப்படும்.

### தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஈட்டுத் தொகை.

வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை இயக்குனரின் நிர்வாகத்தின் கீழ் நடத்தப்படும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் அரிசன மலைவாசி மாணவ மாணவியருக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இதற்காகும் செலவு முழுவதும் அரிசன நலத் துறையால் ஈடு செய்யப்படுகிறது. 1972-73 ஆம் ஆண்டிற்கு ரூ. 13 லட்சம் திருத்திய மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. 1973-74ஆம் ஆண்டிற்கும் ரூ. 13 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. நீலகிரி மாவட்டம் கூடலூரில் இயங்கி வரும் தச்சுத் தொழில் உற்பத்தி நிலையத்தில் தொழிற் பயிற்சியும் அளிக்க 1973-74ஆம் ஆண்டில் வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 14,700 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறு தொழில்கள் தொடங்க தேவையான கடனை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து அரிசனங்கள் நேரடியாக பெற்றுப் பயனடைய வசதி செய்யப்பட்டுள்ளது. இக்கடன்களுக்கு அரசாங்க உத்திரவாதம் கிடையாது.

### கூட்டுறவு (அரிசனங்கள்).

தொழில் துறையில் அரிசனத் தொழிலாளர்கள் முன்னேற்றம் காண வகை செய்யும் முறையில் கூட்டுறவுத் தொழிற் சங்கங்களையும், உற்பத்திப் பயிற்சிப் பணி நிலையங்களையும் புதிதாக அமைத்திடவும்; ஏற்கனவே அமைக்கப்பட்டவைகளைப் பேணி பலப்படுத்தவும் அரசு வழிவகை செய்து வருகிறது. நிர்வாக வசதிகளுக்காக இவைகள் தொழில் வணிகத் துறை, சமூக நலத் துறை, தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் ஆகியவற்றின் பொறுப்பில் உள்ளன. இதற்குத் தேவையான நிதி உதவியை அரிசன நலத்துறை அளிக்கிறது.

## கூட்டுறவு (மலைவாசிகள்).

காட்டுப் பகுதிகளிலும் மலைப்பகுதிகளிலும் வாழும் மலைவாசி மக்களின் பிற்பட்ட நிலையையும், பொருளாதாரச் சீர்கேட்டையும், அவர்களின் தூய உள்ளத்தினையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு வியாபாரிகளும், வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களும் அவர்களைச் சுரண்டிவிடுகிறார்கள். இக்கொடுமையைக் தடுக்கவும் மலைவாசி மக்கள் காட்டு வளங்களை நல்ல முறையில் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட்டு அதிகப்படியாக பொருளீட்டுவதற்கும் உதவியாகயிருக்கும்பொருட்டுக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் நிறுவப்பட்டு சிறப்பாக நடந்து வருகின்றன. இச் சங்கங்களின் அவசியத்தை ஒட்டிச் சில சிறப்புச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. இத்தகைய சங்கங்கள் தற்போது 20 இயங்கி வருகின்றன. அவைகளைப் பற்றிய தகவல்கள் விவரப்பட்டியல் 8-ல் கொடுக்கப் பட்டுள்ளன.

## பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்.

வேளாண்மையில் ஈடுபட்டுள்ள அரிசனங்களுக்கு பொதுவாக ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு இல்லை. ஆகவே, பணியின்றி இருக்கும் போது தக்க வேலைகளில் ஈடுபட்டுத் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும், மற்றும் ஏழை அரிசன மக்களுக்கு உதவவும் பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் மூலம் அரிசன உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க மானியமாக ரூ. 150, கடனாக ரூ. 150 ஆக மொத்தம் ரூ. 300 நிதி உதவி 1968 முதல் அளிக்கப்பட்டு வந்தது. 1969–70ஆம் ஆண்டு முதல் கறவை மாடுகள் வாங்க மானியமாக ரூ. 250, கடனாக ரூ. 250 ஆக மொத்தம் ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டது. 1970–71 ஆம் ஆண்டு வரையில் 352 சங்கங்கள் துவக்கப்பட்டன. பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்படவும், தன்னிறைவு பெற்ற அமைப்புகளாக அமையவும் இதுவரை இயங்கி வந்த திட்டம் 1971–72 ஆம் ஆண்டு முதல் சற்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இனி புதிய சங்கங்களில் 150 உறுப்பினர்கள் இருக்கவேண்டும். கறவை மாடுகள் வாங்க மூன்று முறை உதவி அளிக்கப்படும். முதல், இரண்டாவது தவணைகளில் மாடு வாங்க முறையே ரூ. 375 கடனும், ரூ. 125 மானியமும் ஒவ்வொரு முறையும் அளிக்கப்படும். மூன்றாவது தவணையில் மாடு வாங்க ரூ. 500 கடனாக அளிக்கப்படும். பொதுச் சங்கங்களில் உள்ள அரிசன அங்கத்தினர்களும் இக் கடனுதவி பெறத் தகுதி உள்ளவர்கள் ஆவார்கள். இத் திட்டத்திற்காக 1973–74 ஆம் ஆண்டுக்கு ரூ. 8 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகத்தின் மூலம் வேலை வாய்ப்புக்கான பயிற்சி.

தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகம் ஆண்டுதோறும் நடத்தும் தேர்வுகளில் அரிசனங்கள் மற்றும் மலைவாசிகள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தும்பொருட்டு, 20 பயிற்சி நிலையங்கள் அமைத்து, அரிசன, பழங்குடி நபர்களுக்கு 1971–72-ல் பயிற்சியளிக்கப்



பட்டது. நடப்பு நிதியாண்டில் இப்பயிற்சி நிலையங்கள் 20-லிருந்து 30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி ஆண்டுதோறும் மூன்று திங்களுக்கு நடத்தப்படுகிறது. இப்பயிற்சியின்போது பயிற்சி பெறும் நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 45 உதவிப் பணமாக வழங்கப்படுகிறது. இத் திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்கு 1,500 நபர்கள் பயனடைய வாய்ப்பு உள்ளது. இத் திட்டத்திற்காக 1973–74 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2·25 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## முன்னோடி பயிற்சித் திட்டம்.

உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மதிப்பெண்ணும் அதற்கு அடுத்த மதிப்பெண்ணும் பெற்றுக் கல்லூரியில் பயிற்சி பெறும் இரண்டு அரிசன மாணவர்களுக்கு அவர்களது மேற்படிப்புக்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அவர்களுக்கு சிறப்பு உதவித் தொகை மாதம் ரூ. 80 வீதம் வழங்கப் படுகிறது. மேலும் அவர்களுக்குக் கல்லூரி விடுமுறை நாட்களில் உல்லாசப் பிரயாண வசதியும், குடிமைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இச் சிறப்பு உதவித் தொகைக்கு எவவித வருமான உச்சவரம்போ அல்லது விடுதிகளில்தான் தங்க வேண்டும் என்ற வரையறையோ கிடையாது. இத்திட்டம் 1971–72 முதல் செயல்படுகிறது. இதனால் வருடந் தோறும் 28 அரிசன மாணவர்கள் பயனடைவர்.

## இந்திய ஆட்சிப் பணியாளர் பயிற்சி நிலையம்.

அனைத்திந்தியப் பணிகளான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மத்திய அரசுப் பணிகள் போன்ற தேர்வுகளுக்கு அரிசன மற்றும் மலைவாசி இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, முன்னோடி பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. இதற்காக வரும் நிதி ஆண்டில் ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 60 மாணவர்கள் பயிற்சி பெறலாம். 1972–73 ஆம் ஆண்டில் 40 நபர்கள் பயிற்சி பெற பயிற்சி நிலையத்தில் சேர்ந்துள்ளார்கள். இந்நிலையத்தில் தமிழ்நாடு அலுவலர்கள் அரசுப் பணிக்கான தேர்வு, ஆயுள் காப்புக் கழகத்தினரால் நடத்தப்படும் தேர்வு, ஸ்டேட் வங்கி இதர தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவற்றால் நடத்தப்படும் பொறுக்குத் தேர்வுகள் முதலியவற்றிற்கு பயிற்சி அளிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆகையால் நாட்டின் பல பகுதிகளிலிருந்து வரும மாணக்கர்கள் இதில் சேர்க்கப்படுகின்றனர்.

## 3. சுகாதாரம், வீட்டு வசதி ஏனைய திட்டங்கள். வீட்டு மனைகள்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் வீட்டு வசதி முக்கியமானது. வீடில்லாத எல்லா அரிசன மக்களுக்கும் வீட்டு மனைகள் வழங்கி அவர்கள் வீடு கட்டி வாழ வகை செய்ய வேண்டுமென்பது அரசின் அவா. இதற்காக அரசாங்கப் புறம்போக்கு நிலங்கள் இருக்கும் இடங்களில் அவர்களுக்கு மனைகளுக்காக நிலம் இலவசமாக வழங்கப்பட்டு

வருகிறது. இவ்வேலையையும் சேர்த்துக் கவனிக்கத் தனி வட்ட அலுவலர்கள் (தாசில்தார்) அவர்களின் கீழ் தனி வருவாய் ஆய்வாளர்கள், நில அளவையாளர்கள் முதலிய பணியாளர்கள் தேவைக்கேற்ப எல்லா மாவட்டங்களிலும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தேவையான நிலங்களைக் கையகப்படுத்தி மனைகளாக வழங்கிப் பட்டாவும் தந்து வருகின்றனர். இத்திட்டத்திற்காக 1971–72 ஆம் ஆண்டில் ரூ. 15.48 லட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்திற்காக 1972–73 ஆம் ஆண்டு ரூ. 15.00 லட்சமும், 1973–74–ஆம் ஆண்டிற்கு அதே அளவில் தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார் 15,000 வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்யப்படும். புறம்போக்கு நிலங்களில் அரிசன மக்கள் மிகுதியாகக் குடியேறி பல்லாண்டுகளாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் குடியேறியுள்ள மனைக்கட்டுகளைத் தங்களுக்கே உரிமையாக்க வேண்டுமெனக் கோரி வந்தனர். இவ்வரசு பொறுப்பேற்றதும் இக்கோரிக்கையை நன்கு ஆய்ந்து ஆட்சேபணையில்லாத புறம்போக்கு நிலங்களில் 1960 ஆம் ஆண்டிற்கு முன்பு குடியேறி வாழ்ந்து வரும் அரிசன மக்களுக்கு அந்நிலங்களை ஒப்படைப்பதில் வேறுவிதத் தடையேதுமில்லை எனில், அவற்றை அவர்களுக்கே வழங்கலாம் என அரசு ஆணை பிறப்பித்து அதை விரைந்து செயற்படுத்தி வருகின்றது.

## வீட்டு வசதி.

அரிசன மக்களுக்கு ஏராளமான வீட்டு மனைகள் வழங்கப் பெற்றும் இன்னும் அநேக மனைகள் வீடுகள் கட்டப்படாமல் காலியாக உள்ளன. ஆகவே, அதிகப்படியான மக்கள் பயன் பெற மலிவு வீடுகள் கட்டும் திட்டம் செயல்பட்டு வருகின்றது. சென்ற இரண்டு ஆண்டுகளாக ரூ. 940 மதிப்புள்ள வீடுகள் கட்டப்பட்டு வந்தன. அதில் ரூ. 690 மானியமாகவும், ரூ. 250 வட்டியில்லாக் கடனாகவும் வழங்கப்பட்டது. அரிசன மக்களின் குடியிருப்புக்காக ரூ. 940–க்கு வீடுகள் கட்டப்பட்டு வந்ததை மாற்றியமைத்து ரூ. 1,600–க்கு ரூ. 1,200 மானியமாகவும் ரூ. 400 கடனாகவும் மலைப்பாங்கான இடங்களில் மலைசாதியினருக்கு ரூ. 2,000–க்கு ரூ. 1,500 மானியமாகவும், ரூ. 500 கடனாகவும் கொடுத்து 1972–73 ஆம் ஆண்டு முதல் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக 1973–74 ஆம் நிதியாண்டில் ரூ. 9·30 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரிசனங்களுக்காகவும், மலைவாசிகளுக்காகவும், "தமிழ்நாடு அரிசன, மலைவாசி மக்கள் வீட்டு வசதிக் கழகம்" நிறுவ கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவதற்காக அரசு ஆணை விரைவில் பிறப்பிக்கப்பட உள்ளது. இக்கழகம் ஆயுள் காப்பீட்டுக் கழகம், மற்ற நிறுவனங்களிலிருந்து கடன் முதலிய வசதிகள் பெறும். அரிசனங்களுக்காக வழங்கப்பட்ட வீட்டு மனைகள் யாவற்றிலும் 10 ஆண்டு காலத்திற்குள் வீடுகள் கட்டுவதுதான் அரசின் நோக்கமாகும். இதன் அடிப்படையில், முதல் கட்டமாக 1973–74ஆம் ஆண்டில் 10,000 வீடுகள் கட்டப்படும். இதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே அறிவித்துள்ளார்கள். காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் நடத்திய புனிதப் போரில் பங்கு பெற்ற தமிழ்நாட்டு வீராங்கனை வள்ளியம்மையின் தியாகத்தையும், பண்பையும் நினைவூட்டும் வகையில் தில்லையாடியில் அவ்வம்மையாரின் பெயரில் ஓர் அரிசனக் குடியிருப்பு அரசு அமைத்துள்ளது. அங்கு அரிசனங்களும் மற்ற





இனத்தார்களும் வாழ்வதற்குத் தேவையான வீடு, குடிநீர், தெருக்கள், மருத்துவ மனை, உயர்நிலைப் பள்ளி, உண்டுறை இல்லம் முதலிய வசதிகள் யாவும் செய்து தரப்பட்டுள்ளன.

## துப்புறவுப் பணியாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டங்கள்.

நகர், உள்ளாட்சி, ஊராட்சி மன்றங்களில் பணிபுரிந்து வரும் துப்புறவுத் தொழிலாளர்களின் நிலையை உணர்ந்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து தரவும், அரசு தனித் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தி வருகின்றது. மத்திய அரசு ஆதரவுள்ள திட்டத்தின்கீழ் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1972–73. 1973–74–ம் ஆண்டிலும் ஆண்டொன்றுக்கு ரூ. 8 லட்சம் செலவழிக்கப்படும்.

துப்புறவுப் பணி செய்யும்போது அவர்கள் உபயோகிக்க தட்டுகளும், கரண்டிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. கழிவுப் பொருள்களைத் தலையிலோ, கையிலோ ஏந்திச் செல்லும் முறையை அறவே ஒழிக்கத் தள்ளு வண்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1972–73-ம் ஆண்டில் ரூ. 2 லட்சம் செலவழிக்கப்படும். இதே தொகை 1973–74–க்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## குடிநீர்க் கிணறுகள்.

அரிசன, மலைவாசி மக்களுக்குச் சுத்தமான நல்ல குடிநீர் வசதியை செய்து தரும்பொருட்டு அவர்கள் வாழும் குடியிருப்புகளில் குடிநீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஒரு கிணறுக்காகும் செலவு ரூ. 3,000 முதல் ரூ. 5,000 ஆகும். இத்திட்டத்தின்கீழ்த் தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| ஆண்டு. | தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|
| | அரிசன மக்களுக்கு. | மலைவாசி மக்களுக்கு. |
| (1) | (2) | (3) |
| 1969–70 .. .. .. .. | 337 | 37 |
| 1970–71 .. .. .. .. | 372 | 30 |
| 1971–72 .. .. .. .. | 666 | 68 |
| 1972–73 .. .. .. .. | 419 | 42 |
| 1973–74 (மதிப்பீடு) .. .. .. | 360 | 44 |

[1973 மார்ச் 19

அரிசன குடியிருப்புகளில் குடிநீர் வசதிக்காக வழக்கமாக ஒதுக்கும் ரூ. 8·50 லட்சத்துக்குமேல் 1971–72-ம் ஆண்டில் கூடுதலாக ரூ. 8·75 லட்சமும் 1972–73-ம் ஆண்டில் கூடுதலாக ரூ. 9·50 லட்சமும் 1973–74-ல் ரூ. 11·69 லட்சமும் அரசு ஒதுக்கியுள்ளது. இப்படித் தனிக் கவனம் செலுத்தி அரிசன குடியிருப்புகளில் வசதிகளைப் பெருக்குவதன் நோக்கம் குடிநீர் வசதி இல்லாக் குடியிருப்பு எதுவுமே இல்லை என்ற நிலையை விரைவில் எய்த வேண்டுமென்பதே ஆகும்.

## மின் வசதி.

அரிசனக் குடியிருப்புகளுக்கும், மலைவாசி மக்கள் குடியிருப்புகளுக்கும் மின் இணைப்பு வசதிகள் செய்து தருவது தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. எல்லாக் குடியிருப்புகளுக்கும் மின் இணைப்பு வசதி விரைவில் செய்து தர வேண்டும் என்று அரசு கருதி அதற்கான செயல்முறையை மேற்கொண்டுள்ளது. இந்த நோக்கம் நிறைவேறுவதற்காகக் கிராமத்தில் மின் இணைப்பு வசதி இருந்தால்தான் அரிசன குடியிருப்புக்கு மின் இணைப்பு வசதி செய்யலாம் என்றிருந்த நிபந்தனையை இவ்வரசு நீக்கிவிட்டது. ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 3 லட்சமாக வழங்கப்பட்டு வந்தத் தொகையைத் தேவைக்கேற்ப ரூ. 40 லட்சமாக கூடுதலாக்கி வந்துள்ளது இவ்வரசு. அண்மையில் அரிசன காலனி தெருக்களில் உள்ள தெரு மின்சார விளக்குகளுக்கான கட்டணத்தையும் அரசு ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் இதற்காகவும், மின்சாரக் கட்டணத்திற்காகவும் வழங்கப்பட்டத் தொகைகள் பற்றிக் கீழே தந்துள்ள விவரங்களிலிருந்து மின் இணைப்பு செய்து தருவதில் அரசின் அக்கறையும் தீவிரமும் தெளிவாகும் :—

| ஆண்டு. | செலவான தொகை. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1967–68 | 5·07 |
| 1968–69 | 5·67 |
| 1969–70 | 9·15 |
| 1970–71 | 20·03 |
| | (மின்சாரக் கட்டணத்திற்கான செலவுகள் உள்பட.) |
| 1971–72 | 40·05 |
| 1972–73 (திருத்திய மதிப்பீடு) | 40·00 |
| 1973–74 (நிதி ஒதுக்கீடு) | 70·00 |



1973 மார்ச் 19]

1970–71-ம் ஆண்டு முடிவிற்குள் 6,466 குடியிருப்புகளுக்கு மின் வசதிகள் செய்து தரப்பட்டன. 1971–72-ம் ஆண்டு 4,599 குடியிருப்புகளுக்கு மின்வசதி செய்யப்பட்டது. மொத்தமுள்ள 20,235 அரிசனக் குடியிருப்புகள் அனைத்திற்கும் விரைவில் இவ் வசதி செய்துதர ஒரு படிக்கிரமத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதன்படி 1973–74-ம் ஆண்டு முடிவிற்குள் இத் திட்டம் பூர்த்தியாகி மின்வசதி இல்லாக் குடியிருப்பு எதுவுமே தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை எட்டும்.

## மருத்துவம்.

மலைப் பகுதிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் மலைவாசிகள் ஆங்காங்கே சிதறிய குடியிருப்புகளில் இருந்து வாழ்கின்றனர். தக்க போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தாலும், மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளதாலும் மற்றச் சுற்றுப்புறச் சூழ்நிலைகளாலும் தேவையான மருத்துவ வசதிகளைப் பெற இவர்களுக்கு இயலாமற் போகின்றது. ஆகவே, அவர்களது இருப்பிடங்களுக்கே சென்று வேண்டிய மருத்துவ வசதிகளை இலவசமாக வழங்க அரசு வகை செய்துள்ளது. இது நடமாடும் மருத்துவ உந்துகள் மூலம் செயல்படுத்தப்பட்டு நல்ல பலனைத் தந்துள்ளது. வட ஆற்காடு, கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வந்த இத்திட்டம் 1969–70-ல் தர்மபுரி மாவட்டத்திலும் துவக்கப்பட்டு நல்ல முறையில் செயல்படுகின்றது. திருநெல்வேலி, கன்யாகுமரி மாவட்டங்களிலும் இம்மாதிரி நடமாடும் மருத்துவ உந்துகள் ஏற்படுத்த ஆணையிடப்பட்டுத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## சமுதாயக் கூடங்கள்.

திருமணங்கள், கூட்டங்கள் மற்றும் இதர நிகழ்ச்சிகள் அரிசன குடியிருப்புகளில் சிறப்பாக நடைபெற சமுதாயக் கூடங்கள் (திருமணக் கூடங்கள்) வருடத்திற்கு ஐந்து வீதம் 1971–72-ம் ஆண்டு முதல் கட்ட அரசு ஆணைப் பிறப்பித்துள்ளது. ஒவ்வொரு சமுதாயக் கூடமும் ரூ. 10,500 செலவில் கட்டப்படுகிறது. 1972–73-ம் ஆண்டு கீழ்குறிப்பிட்டுள்ள ஐந்து இடங்களில் சமுதாயக் கூடங்கள் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது :—

| கிராமத்தின் பெயர். (1) | மாவட்டம். (2) |
|---|---|
| 1. வடக்கலூர் | கோயம்புத்தூர். |
| 2. செங்கோடாப்பட்டி | இராமநாதபுரம். |
| 3. சித்தலாங்குடி | மதுரை. |
| 4. திருமுடிவாக்கம் | செங்கற்பட்டு. |
| 5. வளவனூர் | தென்னாற்காடு. |

[1973 மார்ச் 19

## தீண்டாமை ஒழிப்பு.

தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தவும், இச்சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆய்வு செய்யவும், வட்ட, மாவட்ட, மாநில நிலைகளில் அரிசன நல வாரியங்களை நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது.

மேலும், கிராமப்புறத்திலுள்ள அரிசனங்கள் மற்ற இனத்தவர்களின் வன்முறைகளுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாகாவண்ணம் பாதுகாக்கும் பொருட்டு "நடமாடும் காவல்படைகளை" அரசு நிறுவியுள்ளது. 1972-ம் ஆண்டின் தொடக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள இப்படைகள் முதலில் கோவை, மதுரை, தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய ஆறு மாவட்டங்களில் இயங்கிச் செயல்படுகிறது.

மக்களிடையே திரைப்படம் மூலமாக ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி தீண்டாமையைத் தீவிரமாக நீக்கும் நோக்கத்துடன் அரசு இதற்கென தனியாக 20 நிமிட நேரம் கொண்ட ஒரு திரைப்படம் எடுக்க தீர்மானித்துள்ளது.

## உயர்மட்டக் குழு.

அரசு நிர்வாகத்திற்குட்பட்ட பலவகை அலுவலகங்களில் பணியாளர்கள் நியமனம் செய்யப்படுகையில் அரிசனங்களுக்கும், மலைவாசிகளுக்கும் ஒதுக்கப்பட்ட இடங்களில் நிர்ணய சதவீத இடங்கள் நிரப்பப்படுகின்றதா என்பதை ஆராய "உயர் ஆணைக்குழு" என்ற அமைப்பு இயங்கி வந்தது. இதில் இன்னும் ஆழ்ந்த கவனம் செலுத்தும் வகையிலும், மேலும் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் ஈடுபடும் வகையிலும் இந்த அமைப்பை மாற்றி முதலமைச்சரைத் தலைவராகவும், அரிசன நல அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்ட "உயர் மட்டக் குழு" வாக 1969–70-ல் இவ்வரசு அமைத்தது. இக்குழு அரிசன மலைவாசி மக்கள் பெருமளவில் அரசுப் பதவிகளில் இடம் பெறுவதற்கு வாய்ப்பு வசதிகளைப் பெருக்கித் தருவதில் ஆழ்ந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது.

இவ்வரசு சிறப்பான கல்வி, பொருளாதாரத்தில் சீரிய முன்னேற்றம் குறிப்பாகத் தீண்டாமை ஒழிப்பு ஆகிய நல்வாழ்வுக் கொள்கைகளுக்காக ஆண்டுதோறும் பற்பல புதிய திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி பல இலட்சங்களைக் கூடுதலாகச் செலவழித்துப் பாடுபட்டு வருகின்றது.

இவற்றைக் கூறி, இத்துறையின் மானியக் கோரிக்கையை இம்மன்றம் ஏற்றிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கின்றேன்.



விவரப்பட்டிகள் 1 முதல் 8 வரை.

[1973 மார்ச் 19

1973 மார்ச் 19]

விவரப் பட்டி 1.

அரிசன நலத்துறை வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.

1973-74.

(ரூபாய் லட்சங்களில்.)

| திட்டங்களின் விபரங்கள். | திட்டத்திலுள்ள இனங்கள். | | | | திட்டத்திலில்லாத இனங்கள். | | | | ஆக மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மத்திய அரசு ஆதரவுள்ள திட்டம். | | மத்திய உதவித் அரசின் திட்டம். | | திட்டத்திலில்லாத இனங்கள். | | மொத்தம். | | |
| | அரிசனங்கள். | மலை வாசிகள். | அரிசனங்கள். | மலை வாசிகள். | அரிசனங்கள். | மலை வாசிகள். | அரிசனங்கள். | மலை வாசிகள். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 நிர்வாகம் .. .. .. .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 53·50 |
| 2 மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டம். | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 3 கல்வி— | | | | | | | | | |
| படிப்பு உதவித் தொகை .. .. .. | 36·11 | 1·01 | 37·50 | 0·17 | 126·30<br>*1·00 | 0·11 | 200·91 | 1·29 | 202·20 |
| பள்ளிகள் .. .. .. .. .. | .. | .. | .. | 3·75 | 105·44 | 6·26 | 105·44 | 10·01 | 115·45 |
| நண்பகல் உணவு .. .. .. .. | .. | .. | 7·73 | .. | 28·80 | .. | 36·53 | .. | 36·53 |
| சீருடைகள் .. .. .. .. .. | .. | .. | 7·53 | .. | 13·50 | .. | 21·03 | .. | 21·03 |
| பள்ளிச் சாதனங்கள் .. .. .. | .. | .. | 4·00 | 0·40 | .. | .. | 4·00 | 0·40 | 4·40 |
| பள்ளிக் கட்டிடங்கள் .. .. .. | .. | .. | 6·83<br>**6·00 | 0·61 | 3·00 | .. | 15·83 | 0·61 | 16·44 |
| புத்தகங்களும் பலகைகளும் வழங்குதல் .. | .. | .. | 6·10 | .. | .. | .. | 6·10 | .. | 6·10 |
| ஆசிரியர்களுக்கு வீடுகள் .. .. .. | .. | .. | 1·50 | 1·00 | .. | .. | 1·50 | 1·00 | 2·50 |
| கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் .. | .. | .. | 17·78 | 0·98 | .. | 0·09 | 17·78 | 1·07 | 18·85 |
| சுற்றுலா .. .. .. .. .. | .. | .. | .. | 0·01 | .. | .. | .. | 0·01 | 0·01 |
| பரிசுப் பொருட்கள் .. .. .. .. | .. | .. | .. | .. | 0·35 | .. | 0·35 | .. | 0·35 |
| மாணக்கர் இல்லங்கள் கட்டுதல் .. .. | 1·30<br>**1·00 | 0·77 | 4·53<br>** 3·00 | 1·50 | .. | .. | 9·83 | 2·27 | 12·10 |
| மாணக்கர் இல்லங்கள் பராமரிப்பு .. .. | .. | .. | 33·00 | 2·53 | 86·13 | 10·12 | 119·13 | 12·65 | 131·78 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3. கல்வி—தொடர்ச்சி. | | | | | | | | | |
| பகுதி நேர ஆசிரியர்கள் .. .. .. | .. | .. | 0·62 | 0·08 | 0·40 | .. | 1·02 | 0·06 | 1·08 |
| தனியார் விடுதிகளுக்கு மானியம் .. .. | .. | .. | .. | .. | 5·13 | 0·11 | 5·13 | 0·11 | 5·24 |
| இந்திய ஆட்சிப் பணியாளர் பயிற்சி நிலையம். | 3·00 | .. | .. | .. | .. | .. | 3·00 | .. | 3·00 |
| மற்ற கல்வித் திட்டங்கள்— | | | | | | | | | |
| தொழிற் பயிற்சிக்கான ஈட்டுத் தொகை .. | .. | .. | .. | .. | 13·94 | .. | 13·94 | .. | 13·94 |
| சீருந்து ஓட்டுநர் பயிற்சி .. .. .. | .. | .. | 0·20 | 0·10 | .. | .. | 0·20 | 0·10 | 0·30 |
| முன்னோடிப் பயிற்சித் திட்டம் .. .. | .. | .. | 0·71 | .. | .. | .. | 0·71 | .. | 0·71 |
| பட்டயக்கணக்கர் தேர்வுக்கான பயிற்சி .. | .. | .. | 0·15 | .. | .. | .. | 0·15 | .. | 0·15 |
| தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிலத் திட்டம். | .. | .. | 2·00 | .. | 1·00 | .. | 3·00 | .. | 3·00 |
| திறமையான மாணவ மாணவிகளுக்கு தனிப் பயிற்சி அளிக்கும் திட்டம். | .. | .. | .. | .. | 1·00 | .. | 1·00 | .. | 1·00 |
| 3. கல்வி மொத்தம் .. | 41·41 | 1·78 | 139·18 | 11·11 | 385·99 | 16·69 | 566·58 | 29·58 | 596·16 |
| 4. பொருளாதார முன்னேற்றம்— | | | | | | | | | |
| வேளாண்மை .. .. .. .. | .. | .. | 9·00 | 3·00 | .. | .. | 9·00 | 3·00 | 12·00 |
| கூட்டுறவு .. .. .. .. .. | 2·00 | 3·00 | .. | .. | .. | .. | 2·00 | 3·00 | 5·00 |
| பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் .. | .. | .. | 4·00<br>** 4·00 | .. | .. | .. | 8·00 | .. | 8·00 |
| நிலக்குடியேற்ற சங்கங்கள் .. .. .. | .. | .. | 0·21 | .. | .. | .. | 0·21 | .. | 0·21 |
| குடிசைத் தொழில் .. .. .. .. | .. | .. | .. | .. | 2·58 | 0·38 | 2·58 | 0·38 | 2·96 |
| உற்பத்தி பயிற்சி பணி நிலையங்கள் .. | .. | .. | 0·43 | 1·20 | .. | .. | 0·43 | 1·20 | 1·63 |
| தொழிற் கருவிகள் வழங்குதல் .. | .. | .. | 2·00 | 0·50 | .. | .. | 2·00 | 0·50 | 2·50 |
| தமிழ்நாடு அரசு அலுவலர் கழகத்தின் தேர்வு வாய்ப்புக்கான பயிற்சி. | 2·25 | .. | .. | .. | .. | .. | 2·25 | .. | 2·25 |
| தோட்டக்கலை .. .. .. .. | .. | .. | .. | .. | .. | 1·09 | .. | 1·09 | 1·09 |
| தொழில் கடன்கள் .. .. .. .. | .. | .. | 10·00 | .. | .. | .. | 10·00 | .. | 10·00 |
| 4. பொருளாதார முன்னேற்றம் மொத்தம் | 4·25 | 3·00 | 29·64 | 4·70 | 2·58 | 1·47 | 36·47 | 9·17 | 45·64 |

[1973 மார்ச் 19

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 5. சுகாதாரம்—வீட்டு வசதி, ஏனைய திட்டங்கள்— | | | |
| வீட்டு வசதி .. .. .. .. | .. | .. | 3·75<br>* 1·25 |
| வீட்டு மனைகள் .. .. .. .. | .. | .. | 15·00 |
| துப்புரவுப் பணியாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டங்கள். | 10·00 | .. | .. |
| பொதுச் சுகாதாரம் .. .. .. .. | .. | .. | .. |
| குடிநீர் கிணறுகள் .. .. .. .. | .. | .. | 18·00 |
| மருத்துவம் .. .. .. .. .. | .. | .. | 1·44 |
| மின்வசதி .. .. .. .. .. | .. | .. | .. |
| சாலைகள் .. .. .. .. .. | .. | .. | .. |
| ஆக்கப் பணிகள் பரப்புதல் .. .. | .. | .. | .. |
| தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு பரிசுகள். | .. | .. | .. |
| துப்புரவான குடியிருப்புகளுக்கு பரிசுகள் .. | .. | .. | .. |
| சமுதாய நிலையங்கள் .. .. .. | .. | .. | .. |
| மூன் மாதிரி கிராமம் .. .. .. | .. | .. | .. |
| பலவகை .. .. .. .. .. | .. | .. | .. |
| கலப்புத் திருமணங்கள் .. .. .. | .. | .. | 0·35 |
| 5. சுகாதாரம், வீட்டு வசதி ஏனைய திட்டங்கள் மொத்தம். | 10·00 | .. | 39·79 |
| ஆக மொத்தம் .. | 55·66 | 4·78 | 208·61 |

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| * வருவாய்க் கணக்கீடு .. | 816·35 |
| ** மூலதனக் கணக்கில் .. | 14·53 |
| † கடன் கணக்கில் .. | 17·65 |
| ஆக மொத்தம் .. | 848·53 |



1973 மார்ச் 19]

பட்டி 2.

நலத்துறை.

நலப் பள்ளிகள்.

| | நடுநிலைப் பள்ளிகள். | | | |
|---|---|---|---|---|
| மொத்தம். | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள். | மாணவியர்கள். | மொத்தம். |
| (5) | (6) | (7) | (8) | (9) |
| 3,960 | 1 | .. | 75 | 75 |
| 15,869 | 21 | 3,579 | 2,068 | 5,647 |
| 16,219 | 8 | 977 | 674 | 1,651 |
| 18,706 | 5 | 1,078 | 863 | 1,941 |
| 14,214 | 7 | 891 | 909 | 1,800 |
| 13,014 | 25 | 4,492 | 3,831 | 8,323 |
| 1,529 | 3 | 519 | 366 | 885 |
| 1,944 | 8 | 1,673 | 623 | 2,299 |
| 850 | 3 | 648 | 515 | 1,163 |
| 339 | 2 | 357 | 266 | 623 |
| 1,363 | 2 | 420 | 430 | 850 |
| 209 | 2 | 232 | 164 | 396 |
| 1,706 | 1 | 85 | 38 | 123 |
| .. | .. | .. | .. | .. |
| 89,172 | 88 | 14,951 | 10,825 | 25,776 |

[1973 மார்ச் 19

| வரிசை எண்ணும், மாவட்டமும். | உயர்நிலைப் பள்ளிகள். பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர் கள். | மாணவி யர்கள். |
|---|---|---|---|
| | (10) | (11) | (12) |
| 1. சென்னை .. .. .. .. .. | 1 | 717 | 508 |
| 2. செங்கற்பட்டு .. .. .. .. .. | 2 | 1,687 | 949 |
| 3. தென் ஆற்காடு .. .. .. .. | 4 | 1,708 | 1,024 |
| 4. வட ஆற்காடு .. .. .. .. | .. | .. | .. |
| 5. தஞ்சாவூர் .. .. .. .. .. | 2 | 231 | 159 |
| 6. திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 2 | 160 | 56 |
| 7. இராமநாதபுரம் .. .. .. .. | .. | .. | .. |
| 8. மதுரை .. .. .. .. .. | .. | .. | .. |
| 9. சேலம் .. .. .. .. .. | .. | .. | . |
| 10. தர்மபுரி .. .. .. .. .. | .. | .. | .. |
| 11. கோயம்புத்தூர் .. .. .. .. | .. | .. | .. |
| 12. நீலகிரி .. .. .. .. .. | .. | .. | .. |
| 13 திருநெல்வேலி .. .. .. .. | .. | .. | .. |
| 14. கன்னியாகுமரி .. .. .. .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 11 | 4,503 | 2,696 |

_‘ 839 அரிசன நலப் பள்ளிகளைத் தவிர கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 இரவுப்



1973 மார்ச் 19]

| (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|
| 3·00<br>1·00 | 0·30 | .. | 5·30 | 4·00 | 9·30 |
| .. | † 0·10 | .. | 15·10 | .. | 15·10 |
| .. | .. | .. | 10·00 | .. | 10·00 |
| .. | 20·00 | .. | 20·00 | .. | 20·00 |
| 2·19 | .. | .. | 18·00 | 2·19 | 20·19 |
| 1·52 | 0·02 | 0·30 | 1·46 | 1·82 | 3·28 |
| .. | 70·00 | .. | 70·00 | .. | 70·00 |
| 2·10 | .. | .. | .. | 2·10 | 2·10 |
| .. | 0·24 | .. | 0·24 | .. | 0·24 |
| .. | 0·20 | .. | 0·20 | .. | 0·20 |
| .. | 0·30 | .. | 0·30 | .. | 0·30 |
| .. | 2·10 | .. | 2·10 | .. | 2·10 |
| 0·07 | .. | .. | .. | 0·07 | 0·07 |
| .. | .. | .. | .. | .. | .. |
| .. | .. | .. | 0·35 | .. | 0·35 |
| 9·88 | 93·26 | 0·30 | 143·05 | 10·18 | 153·23 |
| 25·69 | 481·83 | 18·46 | 746·10 | 48·93 | 848·53 |

[1973 மார்ச் 19

விவரம்

அரிசன

அரிசன

| வரிசை எண்ணும் மாவட்டமும். | தொடக்கப் பள்ளிகள். | | |
|---|---|---|---|
| | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர் கள். | மாணவியர் கள். |
| (1) | (2) | (3) | (4) |
| 1. சென்னை .. .. .. .. .. | 5 | 2,042 | 1,918 |
| 2. செங்கற்பட்டு .. .. .. .. .. | 97 | 7,910 | 7,959 |
| 3. தென் ஆற்காடு.. .. .. .. .. | 167 | 8,912 | 7,307 |
| 4. வட ஆற்காடு .. .. .. .. .. | 147 | 9,798 | 8,908 |
| 5. தஞ்சாவூர் .. .. .. .. .. | 147 | 7,774 | 6,440 |
| 6. திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 110 | 6,376 | 6,638 |
| 7. இராமநாதபுரம் .. .. .. .. | 13 | 833 | 696 |
| 8. மதுரை .. .. .. .. .. | 11 | 901 | 293 |
| 9. சேலம் .. .. .. .. .. | 7 | 464 | 386 |
| 10. தர்மபுரி .. .. .. .. .. | 3 | 172 | 167 |
| 11. கோயம்புத்தூர் .. .. .. .. | 16 | 781 | 582 |
| 12. நீலகிரி .. .. .. .. .. .. | 1 | 114 | 95 |
| 13. திருநெல்வேலி .. .. .. .. | 16 | 891 | 815 |
| 14. கன்னியாகுமரி .. .. .. .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 740 | 46,968 | 42,204 |



1973 மார்ச் 19]

| | மொத்தம். | | | | கட்டிடங்கள். | |
|---|---|---|---|---|---|---|
| மொத்தம். | பள்ளி களின் எண் ணிக்கை. | மாணவர்கள் | மாணவியர் கள். | மொத்தம் | வாடகை கட்டிடங் களில் உள்ளவை. | அரசாங்க கட்டிடங் களில் உள்ளவை. |
| (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) |
| 1,225 | 7 | 2,759 | 2,501 | 5,260 | 2 | 5 |
| 2,636 | 120 | 13,176 | 10,976 | 24,152 | .. | 120 |
| 2,732 | 179 | 11,597 | 9,005 | 20,602 | 15 | 164 |
| .. | 152 | 10,876 | 9,771 | 20,647 | 18 | 134 |
| 390 | 156 | 8,896 | 7,508 | 16,404 | 47 | 109 |
| 216 | 137 | 11,028 | 10,525 | 21,553 | 42 | 95 |
| .. | 16 | 1,352 | 1,062 | 2,414 | .. | 16 |
| .. | 19 | 2,574 | 919 | 3,493 | .. | 19 |
| .. | 10 | 1,112 | 901 | 2,013 | .. | 10 |
| .. | 5 | 529 | 433 | 962 | .. | 18 |
| .. | 18 | 1,201 | 1,012 | 2,213 | .. | 5 |
| .. | 3 | 346 | 239 | 585 | .. | 3 |
| .. | 17 | 976 | 873 | 1,849 | 1 | 16 |
| .. | .. | .. | .. | .. | .. | .. |
| 7,199 | * 839 | 66,422 | 55,725 | 1,22,147 | 125 | 714 |

... பள்ளிகளும், 1 திண்ணைப் பள்ளியும் அரிசனங்களுக்காக நடத்தப்படுகின்றன.

[1973 மார்ச் 19

1973 மார்ச் 19]

விவரப் பட்டி 3.

அரிசன நலத்துறை.

மலைவாசி மாணவ மாணவியர்களுக்கான பள்ளிகள்.

| வரிசை எண்ணும், மாவட்டமும். | உறைவிடப் பள்ளிகள். ஆரம்பப்பள்ளிகள். பள்ளிகளின் எண்ணிக்கை. | உறைவிடப் பள்ளிகள். ஆரம்பப்பள்ளிகள். பயில்வோரின் எண்ணிக்கை. | உறைவிடப் பள்ளிகள். உயர்தர ஆரம்பப்பள்ளிகள். பள்ளிகளின் எண்ணிக்கை. | உறைவிடப் பள்ளிகள். உயர்தர ஆரம்பப்பள்ளிகள். பயில்வோரின் எண்ணிக்கை. | உறைவிட வசதி இல்லாத பள்ளிகள். உயர் நிலைப்பள்ளிகள். பள்ளிகளின் எண்ணிக்கை. | உறைவிட வசதி இல்லாத பள்ளிகள். உயர் நிலைப்பள்ளிகள். பயில்வோரின் எண்ணிக்கை. | உறைவிட வசதி இல்லாத பள்ளிகள். பள்ளிகளின் எண்ணிக்கை. | உறைவிட வசதி இல்லாத பள்ளிகள். பயில்வோரின். எண்ணிக்கை. | மொத்தப் பள்ளிகள் எண்ணிக்கை. | மொத்தப் பயில்வோரின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1. செங்கற்பட்டு .. .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 2. கோயம்புத்தூர் .. .. | 16 | 672 | 2 | 171 | .. | .. | .. | .. | 18 | 843 |
| 3. கன்னியாகுமரி .. .. | 2 | 120 | 1 | 75 | .. | .. | .. | .. | 3 | 195 |
| 4. மதுரை .. .. .. | 1 | 40 | 1 | 40 | .. | .. | 2 | 85 | 4 | 165 |
| 5. வட ஆற்காடு .. .. | 2 | 100 | .. | .. | .. | .. | .. | .. | 2 | 100 |
| 6. இராமநாதபுரம் .. .. | 1 | 20 | .. | .. | .. | .. | .. | .. | 1 | 20 |
| 7. சேலம் .. .. .. | 10 | 730 | .. | .. | 1 | 120 | .. | .. | 11 | 850 |
| 8. தென் ஆற்காடு .. .. | 2 | 325 | .. | .. | .. | .. | .. | .. | 2 | 325 |
| 9. நீலகிரி . .. .. .. | 20 | 1,270 | 2 | 201 | .. | .. | .. | .. | 22 | 1,471 |
| 10. திருச்சிராப்பள்ளி .. .. | 10 | 430 | .. | .. | .. | .. | .. | .. | 10 | 430 |
| 11. திருநெல்வேலி .. .. | 1 | 66 | .. | .. | .. | .. | .. | .. | 1 | 66 |
| மொத்தம் .. | 65 | 3,773 | 6 | 487 | 1 | 120 | 2 | 85 | 74 | 4,465 |

## விவரப் பட்டி 4.

## அரிசன நலத்துறை.

## அரிசன மாணுக்கர் இல்லங்கள்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | உயர்நிலைப்பள்ளிகளுக்கான விடுதிகள். — மாணவர்களுக்கானவை. | | உயர்நிலைப்பள்ளிகளுக்கான விடுதிகள். — மாணவியர்களுக்கானவை. | | கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகள். — மாணவர்களுக் கானவை. | | கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகள். — மாணவியர்களுக் கானவை. | | தொழிற்பயிற்சி மாணவர்களுக்கான விடுதிகள். | | ஆக மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர் களின் எண்ணிக்கை. | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவியர் களின் எண்ணிக்கை. | விடுதி களின் எண் ணிக்கை. | மாண வர்களின் எண் ணிக்கை. | விடுதி களின் எண் ணிக்கை. | மாணவி யர்களின் எண் ணிக்கை. | விடுதி களின் எண் ணிக்கை. | மாணவர் களின் எண் ணிக்கை. | விடுதி களின் எண் ணிக்கை. | மாணவ மாணவியர் களின் எண் ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1 சென்னை .. .. .. | 3 | 270 | 4 | 340 | 3 | 700 | 1 | 30 | 2 | 250 | 13 | 1,590 |
| 2 செங்கல்பட்டு .. .. .. | 31 | 1,722 | 10 | 402 | 1 | 50 | .. | .. | .. | .. | 42 | 2,174 |
| 3 வட ஆற்காடு .. .. .. | 17 | 1,061 | 10 | 517 | 1 | 50 | .. | .. | .. | .. | 28 | 1,628 |
| 4 தென் ஆற்காடு .. .. | 33 | 2,811 | 14 | 1,005 | 1 | 50 | .. | .. | .. | .. | 48 | 3,866 |
| 5 தஞ்சாவூர் .. .. .. | 29 | 1,381 | 13 | 645 | 2 | 125 | .. | .. | .. | .. | 44 | 2,151 |
| 6 திருச்சிராப்பள்ளி .. .. | 42 | 3,771 | 11 | 899 | 2 | 100 | .. | .. | 1 | 55 | 56 | 4,825 |
| 7 மதுரை .. .. .. | 33 | 2,305 | 18 | 1,275 | 1 | 50 | .. | .. | 2 | 118 | 54 | 3,748 |
| 8 இராமநாதபுரம் .. .. | 47 | 3,245 | 12 | 797 | 1 | 50 | .. | .. | .. | .. | 60 | 4,092 |
| 9 திருநெல்வேலி .. .. | 34 | 1,968 | 20 | 875 | 2 | 100 | .. | .. | .. | .. | 56 | 2,943 |
| 10 கன்னியாகுமரி .. .. .. | 4 | 225 | 3 | 125 | 1 | 30 | .. | .. | 1 | 40 | 9 | 420 |
| 11 சேலம் .. .. .. | 23 | 1,084 | 11 | 502 | 2 | 170 | 1 | 50 | .. | .. | 357 | 1,806 |
| 12 தர்மபுரி .. .. .. | 15 | 600 | 4 | 140 | 1 | 100 | .. | .. | .. | .. | 20 | 810 |
| 13 கோயம்புத்தூர் .. .. | 16 | 1,034 | 11 | 539 | 1 | 50 | .. | .. | 1 | 40 | 29 | 1,663 |
| 14 நீலகிரி .. .. .. .. | 9 | 570 | 3 | 245 | .. | .. | .. | .. | .. | .. | 12 | 815 |
| மொத்தம் .. | 336 | 22,047 | 144 | 8,306 | 19 | 1,625 | 2 | 80 | 7 | 503 | 508 | 32,561 |

[1973 மார்ச் 19] 1973 மார்ச் 19]

விவரப்பட்டி 5.

அரிசன நலத்துறை.

மலைவாசி மாணவ மாணவியர்களுக்கான விடுதிகள்.

| மாவட்டம். | உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான விடுதிகள். | | | | ஏனைய விடுதிகள். | | | | மொத்தம். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாணவர்கள். | | மாணவியர்கள். | | மாணவர்கள். | | மாணவியர்கள். | | | | | |
| | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின எண்ணிக்கை. | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவியர்களின எண்ணிக்கை. | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள். | மாணவியர்கள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1 வடஆற்காடு .. .. .. | .. | .. | .. | .. | 2 | 75 | .. | .. | 2 | 75 | .. | 75 |
| 2 செங்கல்பட்டு .. .. .. | .. | .. | .. | .. | 1 | 50 | .. | .. | 1 | 50 | .. | 50 |
| 3 கோயம்புத்தூர் .. .. | .. | .. | .. | .. | 2 | 115 | .. | .. | 2 | 115 | .. | 115 |
| 4 மதுரை .. .. .. | .. | .. | .. | .. | 2 | 110 | .. | .. | 2 | 110 | .. | 110 |
| 5 திருச்சிராப்பள்ளி .. .. | 1 | 50 | 1 | 35 | .. | .. | 1 | 30 | 3 | 115 | .. | 115 |
| 6 சேலம் .. .. .. | .. | .. | 1 | 50 | 1 | 40 | 1 | 25 | 3 | 40 | 75 | 115 |
| 7 கன்னியாகுமரி .. .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 40 | 1 | .. | 40 | 40 |
| மொத்தம் .. | 1 | 50 | 2 | 85 | 8 | 390 | 3 | 95 | 14 | 505 | 115 | 620 |

## விவரப் பட்டி 6.

## அரிசன நலத்துறை.

## இல்லக் கட்டடங்கள்.

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | அரிசன நல இல்லங்கள். வாடகை கட்டடத்தில் உள்ளவை. மாணவர்களுக்கான விடுதிகளின் எண்ணிக்கை. | அரிசன நல இல்லங்கள். வாடகை கட்டடத்தில் உள்ளவை. மாணவியர்களுக்கான விடுதிகளின் எண்ணிக்கை. | அரிசன நல இல்லங்கள். அரசாங்க கட்டடத்தில் உள்ளவை. மாணவர்களுக்கான விடுதிகளின் எண்ணிக்கை. | அரிசன நல இல்லங்கள். அரசாங்க கட்டடத்தில் உள்ளவை. மாணவியர்களுக்கான விடுதிகளின் எண்ணிக்கை. | மலைவாசி மாணுக்கர் இல்லங்கள். வாடகை கட்டிடத்தில் உள்ளவை. | மலைவாசி மாணுக்கர் இல்லங்கள். அரசாங்கக் கட்டிடத்தில் உள்ளவை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 சென்னை .. .. .. .. .. .. .. .. .. .. | 5 | 5 | 3 | .. | .. | .. |
| 2 செங்கல்பட்டு .. .. .. .. .. .. .. .. .. | 28 | 10 | 4 | .. | 1 | .. |
| 3 வடஆர்க்காடு .. .. .. .. .. .. .. .. .. | 15 | 10 | 3 | .. | 1 | 1 |
| 4 தென்ஆர்க்காடு .. .. .. .. .. .. .. .. .. | 31 | 13 | 3 | 1 | .. | .. |
| 5 தஞ்சாவூர் .. .. .. .. .. .. .. .. .. | 28 | 9 | 3 | 4 | .. | .. |
| 6 திருச்சிராப்பள்ளி .. .. .. .. .. .. .. .. .. | 40 | 9 | 5 | 2 | .. | 3 |
| 7 மதுரை .. .. .. .. .. .. .. .. .. .. | 35 | 18 | 1 | .. | .. | 2 |
| 8 இராமநாதபுரம் .. .. .. .. .. .. .. .. .. | 45 | 11 | [illegible] | 1 | .. | .. |
| 9 திருநெல்வேலி .. .. .. .. .. .. .. .. .. | 34 | 18 | 2 | 2 | .. | .. |
| 10 கன்னியாகுமரி .. .. .. .. .. .. .. .. .. | 3 | 3 | 3 | .. | 1 | .. |
| 11 சேலம் .. .. .. .. .. .. .. .. .. | 21 | 10 | 4 | 2 | 1 | 2 |
| 12 தருமபுரி .. .. .. .. .. .. .. .. .. | 14 | 4 | 2 | .. | .. | .. |
| 13 கோயம்புத்தூர் .. .. .. .. .. .. .. .. .. | 13 | 9 | 5 | 2 | .. | 2 |
| 14 நீலகிரி .. .. .. .. .. .. .. .. .. .. | 9 | 2 | .. | 1 | .. | .. |
| மொத்தம் .. | 321 | 131 | 41 | 15 | 4 | 10 |

விடுதிகளின் மொத்த எண்ணிக்கை .. .. .. .. .. 522

வாடகைக் கட்டடத்திலுள்ளவைகளின் எண்ணிக்கை .. .. .. 456

அரசாங்க கட்டடத்திலுள்ளவைகளின் எண்ணிக்கை .. .. .. 66

[1973 மார்ச் 19

## விவரப் பட்டி 7.

### அரிசன நலத் துறை

**மானியம் பெற ஏற்புப் பெற்ற தனியார் விடுதிகளின் பட்டியல்.**

**சென்னை நகரம்.**

1. நகர மகளிர் இல்லம், சென்னை-31.
2. ராவ்சாகிப் டி. ஆர். எஸ். பிள்ளை மகளிர் இல்லம், சென்னை-5.
3. சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை-3.
4. ஏ. டி. எஸ். எஸ். மாணவர் விடுதி, சென்னை-21.
5. ராமகிருஷ்ண மிஷன் மாணவர் விடுதி, சென்னை-4.

**தென் ஆற்காடு மாவட்டம்.**

6. பர்வதராஜகுலம் ஏழை மாணவர் விடுதி, காட்டுமன்னார்கோயில்.
7. சேவக சங்க மாணவர் விடுதி, திருக்கோயிலூர்.
8. நேருஜி அரிசன விடுதி, உளுந்தூர்ப்பேட்டை.
9. சகஜானந்தா அரிசன விடுதி, குருஞ்சிப்பாடி.
10. விக்டரி மெமோரியல் விடுதி, விருத்தாசலம்.

**செங்கற்பட்டு மாவட்டம்.**

11. திரு. டபிள்யூ. டி. மாசிலாமணி முதலியார் குழந்தைகள் விடுதி, வாலாஜாபாத்.
12. வள்ளுவர் குருகுலம், தாம்பரம்.
13. குருகுலம் உணவு விடுதி, மதுராந்தகம்.
14. ராமகிருஷ்ண மிஷன் விடுதி, பல்லியன்கரணை.
15. புனித மேரி மகளிர் உயர்நிலைப் பள்ளி உணவு விடுதி, செங்கற்பட்டு.

**வட ஆற்காடு மாவட்டம்.**

16. காந்தி மிஷன் குழந்தைகள் விடுதி, வாலாஜா.
17. ஆர். எஸ். எஸ். விடுதி, ராணிப்பேட்டை.

**கோயம்புத்தூர் மாவட்டம்.**

18. டி. எஸ். இராமன், சரோஜினிதேவி விடுதி, கோபி.
19. பி. எஸ். ஜி. கங்கா நாயுடு நினைவு விடுதி, பீளமேடு.



1973 மார்ச் 19]

**நீலகிரி மாவட்டம்.**

20. புனித மேரி மகளிர் விடுதி, கோட்டகிரி.
21. திரு சற்குரு மாணவர் விடுதி, குன்னூர்.
22. சி. எஸ். ஐ. கெல் மெமோரியல் மகளிர் விடுதி.
23. தக்கர்பாபா குருகுலம், நீர்க்காசிமெண்ட்.

**திருநெல்வேலி மாவட்டம்.**

24. வ. வே. சு. ஐயர் நினைவு விடுதி, சேரன்மாதேவி.
25. திரு புனித மைக்கேல் உணவு விடுதி, சுவாமிநாதபுரம்.
26. பிஷப் சார்ஜெண்ட் பயிற்சிப் பள்ளி உணவு விடுதி, பாளையங்கோட்டை.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

27. காந்திஜி விடுதி, புத்தனாம்பட்டி.
28. திருவள்ளுவர் ஆர்ப்பனேஜ், லிங்கத்தடிமேடு.

**இராமநாதபுரம் மாவட்டம்.**

29. கஸ்தூரிபா மகளிர் விடுதி, மானாமதுரை.
30. தக்கர்பாபா விடுதி, மானாமதுரை.
31. ராஜாஜி மாணவர் விடுதி, கமுதி.

**தஞ்சாவூர் மாவட்டம்.**

32. இரியாஸ் சத்திரம் விடுதி, தஞ்சாவூர்.
33. சத்திரம் உணவு விடுதி, ஒரத்தநாடு.
34. அரிசன விடுதி, வல்லம்.
35. ராஜம் விடுதி, ஒரத்தூர்.
36. அரிசன விடுதி, திருக்காட்டுப்பள்ளி.
37. மகாத்மாஜி அரிசன விடுதி, கனமங்கலம்.
38. கோகுலம் விடுதி, வெள்ளபெரம்பூர்.
39. எல். எம். சி. உணவு விடுதி, சீர்காழி.
40. கஸ்தூரிபா கன்யா குருகுலம், வேதாரண்யம்.
41. ஆர். எஸ். எஸ். விடுதி, பட்டுக்கோட்டை.
42. காந்திஜி அரிசன விடுதி, பேரளம்.

[1973 மார்ச் 19

## மதுரை மாவட்டம்.

43. சேவாலயா மாணவர் விடுதி, மதுரை.
44. காந்திஜி மாணவர் விடுதி, உசிலம்பட்டி.
45. கஸ்தூரிபா மகளிர் விடுதி, மேலூர்.
46. ஜவஹர் மாணவர் விடுதி, சோழவந்தான்.
47. காந்திஜி மாணவர் விடுதி, மேலூர்.
48. சாந்தி மாணவர் விடுதி, நிலக்கோட்டை.
49. விவேகானந்தர் மாணவர் விடுதி, கம்பம்.
50. பாரதி மாணவர் விடுதி, திண்டுக்கல்.
51. கஸ்தூரிபாய் மகளிர் விடுதி, திண்டுக்கல்.
52. மகாதேவ தேசாய் மாணவர் விடுதி, வத்தலக்குண்டு.
53. ஆதார விடுதி, காந்திகிராமம்.

## மலைவாசிகள்.

1. ஸ்ரீ சற்குரு மாணவர் உணவு உறைவிடப்பள்ளி, கூனூர் (நீலகிரி).
2. ஸ்ரீ சற்குரு மாணவிகள் உணவு உறைவிடப்பள்ளி, கூனூர் (நீலகிரி).
3. ஸ்ரீ சற்குரு உணவு உறைவிடப்பள்ளி, கல்லாறு (கோவை).
4. தக்கர்பாபா குருகுலம், நீர்க்காசிமண்டு (நீலகிரி).
5. பழனிமலை ஆதிவாசிகள் சேவா சங்கம், தாண்டிக்குடி (மதுரை).

## அரிசனங்கள்.

6. ஆல்காட் மெமோரியல் பள்ளி, அடையாறு, சென்னை.
7. போர்டு உயர்நிலைப்பள்ளி, இராஜபாளையம், இராமநாதபுரம் மாவட்டம்.



1973 மார்ச் 19]

# விவரப் பட்டி 8.

## அரிசன நலத்துறை.

### தமிழ்நாட்டில் மலைவாசிகள் மக்களின் நலனுக்காக இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்கள்.

### அ. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்.

1. போளூர் வட்ட மலைவாசி கூட்டுறவு விற்பனைச் சங்கம், வட ஆற்காடு மாவட்டம்.

2. பச்சைமலை கூட்டுறவு விற்பனைச் சங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. துனத்கடவு சரக மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கோயம்புத்தூர் மாவட்டம்.

4. பூணுச்சி சரக மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கோயம்புத்தூர் மாவட்டம்.

5. சத்தியமங்கலம் சரக மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கோயம்புத்தூர் மாவட்டம்.

6. தாலமலை சரக மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கோயம்புத்தூர் மாவட்டம்.

7. கல்ராயன்குன்று மலைவாசி கூட்டுறவு விற்பனைச் சங்கம், தென்னாற்காடு மாவட்டம்.

### ஆ. வனத் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்.

1. செண்பகத்தோப்பு மலைவாழ் மக்கள் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம், இராமநாதபுரம் மாவட்டம்.

2. சர்க்கரபதி மலைவாழ் மக்கள் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம், கோயம்புத்தூர் மாவட்டம்.

3. தலிஞ்சி மலைவாழ் மக்கள் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம், கோயம்புத்தூர் மாவட்டம்.

4. புதூர் நாடு வனத் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம், வட ஆற்காடு மாவட்டம்.

5. தங்கமரபடா மலைவாழ் மக்கள் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம், நீலகிரி மாவட்டம்.

6. மசினகுடி மலைவாழ் மக்கள் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம், நீலகிரி மாவட்டம்.

7. பீஞ்சிமடை தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம், வட ஆற்காடு மாவட்டம்.

[1973 மார்ச் 19

இ. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்.

1. பேச்சிப்பாறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கன்னியாகுமரி மாவட்டம்.

2. அகத்தியர் பொதிகை மலை ஆதிவாசிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கன்னியாகுமரி மாவட்டம்.

3. தோடர்கள் கூட்டுறவு பலநோக்கு ஊரக வரவுச் சங்கம், வன்லாக் டவுன், நீலகிரி மாவட்டம்.

4. வெள்ளக்கடை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சேலம் மாவட்டம்.

5. வளவந்தி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சேலம் மாவட்டம்.

6. வளவந்தி நாடு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சேலம் மாவட்டம்.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### செவ்வாய்க்கிழமை, 1973 மார்ச் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) நீத்தார் நினைவுக் குறிப்பு.

### திரு. பி. இராமச்சந்திரா ரெட்டி அவர்கள் மறைவுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்ட மன்ற மேலவையில் 1924-ஆம் ஆண்டிலிருந்து உறுப்பினராகவும், 1930-ஆம் ஆண்டிலிருந்து 1937-ஆம் ஆண்டுவரை சட்ட மன்றத் தலைவராகவும் இருந்த திரு. பி. இராமச்சந்திரா ரெட்டி அவர்கள் 19—3—1973 ஆம் நாளன்று மறைந்ததைக்குறித்து இப் பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்).

### 2. வினுக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

*Raffle Scheme*

*431 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to revise the prizes awarded under the Raffle Scheme in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 10—11—1972-ல் நடைபெற்ற 49-வது குலுக்கலிலிருந்து தமிழ் நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தில் பரிசு அமைப்பு முறை மாற்றியமைக்கப்பட்டு, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. சாதாரணப் பரிசுகளின் மொத்த எண்ணிக்கை 1,066-லிருந்து 1,684-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இவற்றில் ஆறுதல் பரிசுகளும் அடங்கும். ஆறுதல் பரிசுகள் முதலாவது, இரண்டாவது பரிசுகளைப் பெறுகின்ற எண்களுக்கு நேர் முந்திய எண்களுக்கும் அடுத்துப் பிந்திய எண்களுக்கும் வழங்கப்படுகின்றன:—

அவற்றின் விவரம் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு | 2 | 1,500 | 3,000 |
| இரண்டாவது பரிசு | 4 | 500 | 2,000 |

திரு. என். டென்னிஸ்: இந்தப் பரிசுத் தொகைகள் என்ன என்ன காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது பல முறை இந்த மன்றத்தில் எடுத்து விளக்கப்பட்டிருக்கிறது. மருத்துவ வசதிகளுக்காகவும், பள்ளிக்கூட வசதிகளுக்காகவும், கண்ணொளி வழங்குதல் போன்ற காரியங்களுக்காகவும் இந்தத் தொகைகள் ஈடு செய்யப்படுகின்றன.

திரு. ஏ. சுப்பிரமணியம்: துணைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்படுகிற பரிசுத் தொகைகளில் யாரும் வாங்கிக்கொள்ளாத தொகையின் அளவு இந்த ஆண்டு உயர்ந்துள்ளதே அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? அந்தத் தொகைகள் ஒழுங்காக வழங்கப்படுவதற்கும், வாங்காதவர்களின் தொகை உயர்ந்து வருவதைத் தடுக்கவும் என்ன நடவடிக்கை அரசு எடுக்கவிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தப் பரிசுகளை யாரும் பெற்றுக்கொள்ளாமல் இருந்தால் அது அரசாங்கக் கணக்கில் சேர்ந்துவிடுகிறது.





திரு. கா. வேழவேந்தன்: துணைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் பதில்சொல்லும்போது, கண்ணொளி வழங்குவதற்கும், மருத்துவச்சாலை அமைப்பதற்கும், பள்ளிக்கூடங்களை விரிவுபடுத்துவதற்கும் இதனுடைய வருவாய் பயன்படும் என்ற அருமையான யோசனையைச் சொன்னார்கள். அப்படியிருக்கும்போது, வெளியில் இருக்கும் எதிர்க்கட்சிகள் சில, இதைச் சூதாட்டம் என்று பிரச்சாரம் செய்து மக்களை வாங்கவிடாமல் தடுக்கின்றார்களே, அதைத் தடுக்க வேண்டிய முயற்சியினை அரசு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மக்களை வாங்கவிடாமல் தடுப்பதும் மக்கள் வாங்காமலிருப்பதும் பிரச்சார முறையில் இருக்குமானால் அதை யாரும் தடுக்க முடியாது. வாங்கச் செல்பவர்களை மறியல் போன்ற முறையில் தடுத்தால்தான் அதில் ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியும். இப்படிப்பட்ட பிரச்சாரங்களையெல்லாம் தடுப்பதென்பது இயலாத காரியம்; கூடாத காரியம். இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டம் தமிழ் நாட்டில் மட்டுமல்ல; அனைத்திந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் நடத்தப்படுகிறது.

திரு. இ. எஸ். தியாகராாசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு அமைச்சர் அவர்கள் ஒரு பரிசுத் திட்டம் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். அதுவும் இதில் அடங்கியிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி அவர்கள் சொல்லியிருப்பார்களானால் அந்த நல்ல காரியத்துக்காகச் செய்யப்படுகிற அந்தத் திட்டத்தையும் இப்பொழுது நடத்துகிற இந்த நிர்வாகமே மேற்கொள்ளும்.

திரு எம். தேவராசன்: தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டு விற்பனை இப்பொழுது குறைந்திருக்கிறது. அதை அதிகப்படுத்த மாவட்டத் தலைநகரங்களிலும் ஒவ்வொரு குலுக்கலையும், வைத்தால் ஜனங்களை நல்ல முறையில் கவர்ந்து விற்பனை அதிகமாகும். எனவே, அரசு இந்த யோசனையை ஆலோசிக்குமா? மாவட்டத் தலைநகரில் ஒவ்வொரு குலுக்கலை வைப்பதுகுறித்து அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபற்றி எந்தவிதமான பரிசீலனையும் இப்பொழுது அரசினிடம் இல்லை.

திரு. நா. வீராசாமி: முதல் பரிசு இரண்டாவது பரிசுக்குமட்டும் ஆறுதல் பரிசு வைத்திருக்கிறார்கள். நூறு ரூபாய்ப் பரிசு விழுந்தவர்களுக்கு நூறு ரூபாய்ப் பரிசாவது விழுந்திருக்கிறதே என்று ஆறுத

லாக இருக்கிறது. ஆனல், அந்த எண்ணுக்கு முன்னும் பின்னும் உள்ள எண் பரிசுச் சீட்டை வாங்கியவர்களுக்கு ஒரு ரூபாய்ப் பரிசுகூட விழவில்லையே என்று நினைக்கக்கூடும். ஆகவே, நூறு ரூபாய் பரிசு விழுந்த எண்ணுக்கு முன்னும் பின்னும் உள்ள எண்ணுக்கு ஒரு பத்து ரூபாயாவது அளிக்க நம்முடைய அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது இருப்பவைக ளெல்லாம் ஆறுதல் பரிசுகள். மாண்புமிகு உறுப்பினர் கேட்பது போல் அளிக்க வேண்டுமானல் அவர்களுக்கு அளிக்கக்கூடிய பரிசு ஆறுதல். (சிரிப்பு)

திரு. எஸ். முருகையன்: மற்ற மாநிலங்களில் பரிசு எண்களைக் குலுக்கும்போது சினிமா நடிகைகளை வைத்துக் குலுக்குகிருர்கள். நம்முடைய மாநிலத்திலும் அதுபோன்று சினிமா நடிகைகளை வைத்துப் பரிசு எண்களைக் குலுக்க ஏற்பாடு செய்தால் இன்னும் அதிகக் கவர்ச்சியாக இருக்கும்; அதிகப்படியாகத் தொகையும் சேரும். அதை உடனடியாக அரசு நடைமுறைப்படுத்துமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குலுக்கலிலே கவர்ச்சி இல்லை. வாங்குகிற இடத்திலே கவர்ச்சி தேவை. அதுபற்றி வேண்டுமானல் யோசிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தப் பரிசுத் தொகைமீது வரி போடுவதை நிறுத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு ஒரு ஆலோசனை கூறப்பட்டதே, அதன்படி அந்த வரி ரத்து செய்யப் பட்டதா? அல்லது, இன்னும் வரி கொடுத்துக்கொண்டிருக்கிருேமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: யாருக்காவது பரிசு விழுந்தால் அவர்கள் 33-1/3 சத வீதம் மத்திய சர்க்காருக்கு வருமான வரியாகக் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. அது மாற்றப்பட வில்லை. அது அப்படியே இருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன்: முதல் பரிசாகிய ஒரு லட்சம் விழவில்லை யென்ருல், எல்லோருமே ஏமாற்றம் அடைந்துவிடுகிருர்கள். காரணம், இரண்டாவது பரிசு மிகக் குறைவாக இருப்பது. ஆகவே, இரண்டா வது பரிசுத் தொகையை அதிகரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது ஒரு காரணமாக இருக்குமேயானல், இந்த அரசு சீட்டு முறையில் மாற்றங்கள் செய்யும்போது அதுவும் ஆராயப்படும்,





திரு. சோ. அழகர்சாமி: இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் 1972–73 ஆம் ஆண்டில் அரசுக்குச் செலவெல்லாம் போக நிகரமாக என்ன ஆதாயம் இருக்கும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1972–73-ல் மொத்த வருவாய் ரூ. 2,29,95,159. அதிலே மொத்த செலவு ரூ. 1,41,95,019, மீதி வருவாய் ரூ. 88,00,140.

திரு. வை. பாலசுந்தரம்: மத்திய சர்க்கார் 33–1/3 சத வீதம் வரி விதித்த காரணத்தால் பரிசு பெறுகிறவர்கள் இலட்சாதிபதிகள் என்கிற அந்தஸ்தை இழக்கிருர்கள். எனவே ஒரு ரூபாய்க்குப் பதிலாக இரண்டு ரூபாயாகப் பரிசுச் சீட்டின் விலையை உயர்த்தி, முதல் பரிசுத் தொகையை இரண்டு இலட்ச ரூபாக உயர்த்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்களுக்கு அந்த அந்தஸ்து சேரவேண்டும் என்று நாம் யாரும் அக்கறை கொள்ளத் தேவையில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Between the first prize and the second prize, there is a wide gap which is very discouraging. May I know from the Hon. Chief Minister, whether he will narrow the gap by introducing one more prize?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே அதற்கு நான் பதில் சொன்னேன். முதல் பரிசுக்கும் இரண்டாவது பரிசுக்கும் இடையிலே உள்ள அந்த இடைவெளி அதிகமாக இருக்கிறது என்பதை இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தில் மாற்றம் செய்கிற நேரத்தில் கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

திரு. கு. காமாட்சி: பரிசுச் சீட்டு வாங்குவதற்கு எல்லோருக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆனல், அமைச்சர்களுக்கும் அமைச்சர்கள் குடும்பத்தினருக்கும் அந்த வாய்ப்பு இல்லையே. அதிகாரிகளெல்லாம் வாங்குவதற்கு வாய்ப்பு இருந்தும் அமைச்சர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாதிருப்பதால் இனிமேலாவது அந்த வாய்ப்பை ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அமைச்சர்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனல், அவர்களுக்குப் பரிசு விழுந்தால் அதைப் பிச்சைக்காரார் நல்வாழ்வுத் திட்டம், கண்ணொளித் திட்டம் ஆகியவற்றிற்குத் தந்துவிட வேண்டும்.

[1973 மார்ச் 20

திரு. த. சோனேயா : தலைவர் அவர்களே, தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுக்குப் பரிசு விழுந்தவுடனே பரிசுச் சீட்டு வாங்கியவர்கள் மகிழ்ச்சியடைகிருர்கள். ஆனல் 33 சத விகிதம் வரி கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் கேட்கிற நேரத்தில் அதிர்ச்சிதான் அடைகிருர்கள். இப்படி மத்திய சர்க்காரிடமிருந்து அதிர்ச்சி யடைகிற செய்திகளாகத்தான் வந்து கொண்டிருக்கின்றன. எனவே அதிர்ச்சியடைகிற செய்தியை மகிழ்ச்சி தருகிற செய்தியாக ஆக்குவதற்கு நம்முடைய அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : இலட்சம் ரூபாய் பரிசு பெறுகிறவர்கள் 33 சத விகிதம் வரியாகத் தருவதிலே அப்படி யொன்றும் கஷ்டம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லே.

திரு. கே. எ. வகாப் : முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது பரிசுச் சீட்டுகள் மூலம் 2½ கோடி ரூபாய் கிடைத்ததாகச் சொன்ஞர்கள். அந்தத் தொகைகள் எந்த எந்தப் பொது நலப் பணிகளுக்காகப் பயன்படுகின்றன? இரண்டரைக் கோடி ரூபாயில் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய்வரையில் செலவாகிறது என்று சொன்ஞர்கள். அப்படி அதிகமாகச் செலவாகாமல் குறைவாகச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிகள் எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : செலவு என்ருல் நிர்வாகச் செலவல்ல. செலவு என்பது பரிசுச் சீட்டு வாங்கியவர்களுக்குப் பரிசு கொடுப்பதற்காக ஆவது. இதன்மூலம் பல பணிகளுக்கு நாம் பணம் ஒதுக்குகிருேம். இதன் வருமானத்திலிருந்து 75 சத விகிதம் தமிழ் நாடு ஸ்டேட் வெல்பேர் பண்டுக்குக் கொடுத்திருக்கிருேம். 1971–72-ல் பிச்சைக்கார மறுவாழ்வு நிதிக்கு (ஸ்பெஷல் பம்பர்) 43,27,200 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. தேசியப் பாதுகாப்பு நிதிக்கு 6 கோடி ரூபாய் தந்தோம். அதிலே 2 கோடியே 9 லட்சம் ரூபாய் பரிசுச் சீட்டுகள் மூலமாகத் தரப்பட்டது. கிராமச் சாலேகள், பள்ளிக்கூட வசதிகள், மருத்துவ சுகாதார வசதிகள் ஆகிய பணிகளுக் காகவும் அதைப் பயன்படுத்த அரசு முனேகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் வசூல் செய்கிற 33–1/3 சத விகிதம் வரியில் மத்திய அரசாங்கம் நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு எத்தனே சத வீதம் கொடுக்கிறது ? கொடுக்கவில்லேயென்ருல் அதிலே பங்குத் தொகை நம்முடைய அரசு கேட்குமா ?



1973 மார்ச் 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : அதிலிருந்து தனியாகப் பிரித்து நாம் கணக்குக் கேட்க முடியாது. பொதுவாக வரி வருமா னத்திலே அவர்கள் நமக்கு ஒரு பங்கு அளிக்கிருர்கள். அதிலே இது சேரும்.

## மகளிர் காவற் பிரிவு

* 432 வினு.—திரு. பி. எஸ். மணியன் :
திரு. அ. தேவேந்திரன் :
" திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

காவல் துறையில் பெண் போலீசார் நியமனம் செய்வது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் தற்சமயம் அரசு பரிசீலனே யிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : சென்னே மாநகர்க் காவற் பிரிவில் மகளிர் காவற் பிரிவு ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு சமீபத்தில் பரிசீலனே செய்யப்பட்டு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. எனினும் இதைப்பற்றிக் காலப் போக்கில் முடிவு செய்யப்படும்.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, இத்தகைய முறை யில் பெண் போலீஸார் நியமனம் செய்யப்படும்பொழுது அவர் களுக்குக் கொடுக்கப்படும் வேலேத் திட்டங்கள் எவையெவை என்பதை அறிவிக்க இயலுமா? ஆண் போலீஸாருக்கும், பெண் போலீஸாருக்கும் கொடுக்கப்படுகின்ற பணிகளில் என்ன வேறுபாடு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : இன்னும் அதைப்பற்றி முடிவாகவில்லே. பரிசீலனே செய்யப்பட்டு தள்ளிவைக்கப்பட்டிருக் கிறது. ஏற்கனவே ஒரு முறை பெண் போலீஸார் எடுப்பதற்கு முடிவெடுக்கப்பட்டு அதற்காக விளம்பரம் செய்யப்பட்ட நேரத்தில் நிறையப் பேர்கள் அதற்குத் தகுதியானவர்கள் கிடைக்காத காரணத் திஞல்தான் அது தள்ளிவைக்கப்பட்டு இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, பெண் போலீஸார் டெல்லியிலேயும், கேரளாவிலேயும் ஏற்கனவே இருக் கிருர்களே, அப்படியிருக்கிறபொழுது அவர்களே இங்கேயும் நியமனம் செய்யாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்பு கிறேன்.

[1973 மார்ச் 20

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டெல்லி, கேரளா மாத்திர மல்ல. பீகார், மகாராட்டிரம், பஞ்சாப், ஒரிஸா ஆகிய மாநிலங் களிலேயும் பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நாம் இங்கே தள்ளிவைத்ததற்குக் காரணம் போதுமான தகுதியானவர்கள் கிடைக்கவில்லையென்பதுதான்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, பெண் போலீஸார் களை துப்பறியும் பகுதியிலே நியமித்தால் அவர்கள் மிகத் திறமை யாகப் பணியாற்றுவார்கள். அவர்கள் மாறுவேடம் போட வேண்டிய அவசியம் இல்லை. இயற்கையான உடையிலே சென்று அவர்கள் தங்கள் பணியினைத் திறமையாகச் செய்வார்கள். எனவே அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துப்பறியும் இலாகாவில் பெண்கள் மாத்திரம் திறமைசாலிகளாக இருப்பார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆண்களும் திறமைசாலிகளாக இருப்பார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த பெண் போலீஸ் படை அமைப் பதைத் தள்ளி வைத்திருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தொடக்கமாக சென்னை நகரிலாவது—சென்னை நகரிலே அதற்கு வேண்டிய ஆட்கள் அதிகமான அளவில் கிடைப் பார்களே—கொண்டுவந்து நிறைவேற்ற அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதற் கட்டமாக வேண்டு மானால் சென்னை மாநகரிலே பரிட்சார்த்தமாகச் செய்து பார்க்கலாம் என்ற எண்ணம் இருந்து வருகிறது. அதுபற்றிய முடிவு எடுக்கப் படும்.

திரு. கே. கந்தசாமி: பெண் காவலர்களாக நியமிக்கப்பெறப் போதுமான மனுக்கள் வராத காரணத்தினால் அது ஆரம்பிக்கப்பட வில்லை என்று சொன்னார்கள். போதுமானவர்கள் வரவில்லை யென்பதற்குக் காரணம் ஊதியம் குறைவாக இருப்பதாலும், அந்த வேலை மிக சிரமமாக இருப்பதாலும்தான் என்று கருதுகிறேன். எனவே அதற்கு ஊதியம் அதிகமாகக் கொடுத்தால் மேலும் ரகசிய இலாகாவில் அதிக சிரமம் இல்லாத இலாகாவில் அவர்கள் பணி யாற்றுகின்ற வாய்ப்பையும் கொடுத்தால் அதிகமான பேர்கள் வருவார்களல்லவா? எனவே அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?



1973 மார்ச் 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஊதியத்தைப் பெண் போலீஸாருக்குத் தனியாக வைத்துவிட்டால் பிறகு ஆண் போலீஸாரும் அதேவிதமான ஊதியம் வேண்டுமென்று கோரிக்கை விடக்கூடிய சூழ்நிலை ஏற்படும். பெண் போலீஸாராக வருகிறவர் களுக்கு அவர்கள் ஆற்றவேண்டிய பணி சிரமமானதாக இருப்பது அதிகமானவர்கள் வராமலிருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கலாமா என்று கேட்டார்கள். அவர்களுக்குக் கூடுமானவரையில் எத்தகைய பணிகள் கொடுக்கக்கூடுமோ அத்தகைய பணிகள்தான் கொடுப்பது பற்றி பரிசீலிக்கப்பட்டது. விரும்பத்தகாத நடவடிக்கைகளை உடைய மகளிர் அடிக்கடி நடமாடக்கூடிய இடங்களில் சுற்றுக் காவல் புரிதல், விபச்சாரத் தடைச் சட்டத்தின்கீழ் திடீர் சோதனை யிடுவதில் காவலர்களுடன் செல்லுதல், பெண் கைதிகளை நீதி மன்றத் திற்குப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லுதல், நீதி மன்றத்தில் அவர்களைக் காவல்புரிதல், காவலில் வைக்கப்பட்ட மற்றும் விசாரணை செய்யப்பட்டு வரும் பெண் கைதிகளைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லுதல் போன்ற பணிகளில் அவர்களை ஈடுபடுத்தலாம் என்ற குறிப்பும் அரசிடத்திலே இருக்கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: தமிழ்நாட்டிலே என்.சி.சி. கேர்ள்ஸ் விங் மிகச் சிறப்பான முறையிலே செயல்படுகிறது. எனவே அந்தப் பயிற்சி பெற்றவர்கள் அதிகமாக இதற்கு மனுப்போடு வார்கள். மேலும் அவர்களை கான்ஸ்டபிளாக நியமிக்காமல் இன்னும் உயர்ந்த அதிகாரியாகப் போட்டால் நிறையப் பேர்கள் வருவார்கள், எனவே அதற்கு ஆவன செய்ய அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதலிலே பெண் போலீஸார் வந்த பிறகுதான் அவர்களுக்கு ஒரு அதிகாரி வரமுடியும்.

புலவர் சி. பழனிச்சாமி: ஆண்களை போலீஸாராக நியமிப்பதை விட பெண்களை போலீஸாராக நியமிப்பதில் சில சிக்கல்கள் இருக் கின்றன. அந்தச் சிக்கலைப் போக்க பெண்கள் போலீஸாராக இருக்கக்கூடிய இடங்களில் தனி காவல் நிலையங்கள் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தச் சிக்கல்களையெல் லாம் யோசித்துத்தான் அரசு ஆர அமர ஆலோசனை செய்து கொண்டு வருகிறது.

[1973 மார்ச் 20

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, பெண் போலீஸாருக்கு கராத்தே, ஜூடோ போன்றவற்றில் பயிற்சியளிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கராத்தே போன்றவற்றை காவலர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்பது பரிசீலனை செய்யப்பட்டு இப்பொழுது அது நடந்துகொண்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி: பெண் போலீஸார்கள் தேவையென்று விளம்பரம் செய்யப்பட்டது என்று சொன்னார்கள். அந்த விளம்பரத்தில் எத்தனை அடி உயரம் இருக்கவேண்டும், எவ்வளவு மார்பு அளவு இருக்கவேண்டுமென்றெல்லாம் கன்டிஷன்கள் போட்ட காரணத்தினால் அப்படிப்பட்டவர்கள் பெண்கள் நம் நாட்டிலே இல்லை என்பதால் போதுமானவர்கள் வரவில்லை. எனவே அந்த கன்டிஷன்களையெல்லாம் ரிலாக்ஸ் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா? ஆண்களைவிட அதிகமாக ஒட்டுக்கேட்கிற பழக்கம் நம்முடைய நாட்டிலே பெண்களுக்குத்தான் இருக்கிறது......

திருமதி ஜோதி வெங்கடாசலம்: பெண் போலீஸார்களைப்பற்றி இவ்வளவு நேரம் கேள்விகள் கேட்டபொழுது எனக்கு வாய்ப்பே வேண்டாம் என்று இருந்தேன். இப்பொழுது பெண்கள் ஒட்டுக் கேட்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதை நான் ஆட்சேபிக்கிறேன். அதை அவர்கள் வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் ஆட்சேபணையே போதும், அவர்கள் வாபஸ் வாங்கவேண்டியதில்லை.

திரு. நா. வீராசாமி: புராணக் கதைகளிலேகூட வருகிறது. எனவே பெண்களின் திறமையை உத்தேசித்து அந்த கன்டிஷன்களையெல்லாம் ரிலாக்ஸ் செய்து அவர்களைத் துப்பறியும் இலாகாவிலே பணியாற்றச்செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது அதற்காக ரிலாக்ஸ் செயவதாக உத்தேசம் இல்லை. எந்த எந்தத் துறைக்கு என்ன என்ன தகுதி பெற்றவர்கள் தேவையோ அந்தத் தகுதிபெற்றவர்கள்தான் எடுக்கப்படுகிறார்கள். பெண்கள் ஒட்டுக்கேட்பதாக திரு. விராசாமி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் ஒட்டுக் கேட்பதை விட்டுவிட்டு இப்பொழுது ஒட்டுத்தான் கேட்கிறார்கள்.



1973 மார்ச் 20]

திரு. தி. பொன்னுமலை: பெண் போலீஸார் வேறு எந்த எந்த மாநிலங்களிலே இருக்கிறார்கள்? அவர்கள் எல்லாம் அங்கே திறமையாக பணியாற்றுகிறார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுதுதான் அவர்கள் அந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH: There is a feeling that appointment of women in police requiring hazardous and ruthless work would spoil their fineness and domestic life also Will the Hon. Chief Minister consider this point also?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் முதலிலே அவர்களுக்கு என்ன என்ன பணிகளை ஒதுக்கலாம் என்று சொன்ன நேரத்திலே இவைகளைப்பற்றி சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதும் கவனத்திலே கொள்ளப்படும்.

திரு. வை. பாலசுந்தரம்: திறமையான நம் காவல் துறையினர் சிலவேளைகளில் பெண் வேஷம் போட்டுக்கூட குற்றவாளிகளை மயக்கி குற்றங்களைக் கண்டுபிடிக்கிறார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகளை எல்லாம் சொன்னால் பிறகு இந்த துப்பறியும் வேலைகள் வெற்றிகரமாக நடைபெற இயலாது.

## தாவர இரசாயன மருத்துவ ஆய்வு

* 433 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

பச்சிலைகளில் மருத்துவ இயல்புகள், நோய் நீக்கும் பண்புகள் உண்டா என்பதை ஆராய மருத்துவத்துறை பேராசிரியர் திரு. ராமச்சந்திரா அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மருத்துவத்துறை பேராசிரியர் திரு. ராமச்சந்திரா அவர்கள் தலைமையில் தாவர இரசாயன மருத்துவ ஆய்வுக் கூடம் ஒன்று சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.

[1973 மார்ச் 20

திரு. தொ. ப. சீனிவாசன்: வட ஆர்க்காடு மாவட்டத்தில் பர்வத மலைப் பகுதியில் ஏராளமான மூலிகைகள் கிடைப்பதாக முற்காலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அந்தப் பகுதியிலும் ஆராய்ச்சி செய்வதற்கு இந்தக் குழு அனுப்பப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இது நேராக மூலிகைகளைக் கண்டுபிடிக்கிற ஆராய்ச்சி அல்ல. ஏற்கனவே சித்த மருத்துவத் துறையில் அல்லது வேறு இந்திய மருத்துவத் துறையில் காணப்படுகிற சிறந்த மருந்துகள் எந்த வகையில் பயன்படுகின்றன என்பதை ஆராய்கிற முறையில், அந்த மருந்துகளின் தன்மையை ஆராய்கிற முறையில் நடைபெறுகிற காரியமாகும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: இப்படி அமைக்கப்பட்டிருக்கிற இந்த ஆராய்ச்சி காரணமாக இப்போது எவ்வளவு வியாதிகளுக்கு மருந்துகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்? இன்னும் எவ்வளவு வியாதிகளுக்குக் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அவர்கள் இப்போது ஏழு மூலிகைகளை, அல்லது நோய் தீர்க்கக்கூடிய மூலப்பொருள்களாக உள்ள மருந்துகளைப் பற்றி ஆராய்கிறார்கள். நாய்பாளை, சிறுகுறிஞ்சி, காட்டு அரளி, ஊவாமுள், நீலவிருக்ஷம், பிங்கனிப்பூ, முடக்கத்தான் என்ற ஏழு மருந்துச் செடிகள் பயன்பற்றி ஆராய்கிறார்கள். அதில் நாய்பாளை என்ற மூலிகை ப்ராங்கியல் ஆஸ்த்மாவிற்கு, கடுமையான ஆஸ்த்மாவில் ஒருவகையான நோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது என்று கண்டிருக்கிறார்கள். சிறுகுறிஞ்சி என்பதில் ஆண்டி-டயபட்டிக் ப்ராப்பர்ட்டி, நீரழிவு வியாதியைத் தடுக்க அது பயன்படுகிறதென்று கண்டிருக்கிறார்கள். காட்டு அரளி என்பதில் டிஜிடாலிஸ் உள்ளது என்றும் அது ஒருவகையான நோய்க்குப் பயன்படுகிறது என்றும் கண்டிருக்கிறார்கள். ஊவாமுள் என்பது ரத்த அழுத்தத்தைக் குறைக்கப் பயன்படுகிறது என்று கண்டிருக்கிறார்கள். நாய்பாளை என்பது இப்போது தொடர்ந்து ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. அதேபோல் மற்றவைகளும் தொடர்ந்து ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றன.

திரு. கா. வேழவேந்தன்: இப்படிக் கண்டுபிடித்திருக்கிற பச்சிலைகள் போக இன்னும் பயன் உள்ள பச்சிலைகள், கீரைகள் இருப்பதாகப் பழம்பாடல்களிலும், இடைக்காலப் பாடல்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தச் சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்து, மேலும் பல கீரைகள், பச்சிலைகள் ஆகியவற்றின் பயனை கண்டுபிடிக்கக்கூடிய வகையில் இந்த ஆராய்ச்சி விரிவுபடுத்தப்படுமா?



1973 மார்ச் 20]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இது அலோபதி டாக்டர் தலைமையில் உள்ள குழு. இதில் இடம் பெறுகிறவர்கள்,

Professor of Medicine

Professor of Pharmacology.

Professor of Botany, Presidency College.

Professor of Chemistry, Presidency College.

இவர்கள் சேர்ந்து ஆயுர்வேதத்தில், சித்த மருத்துவத்தில் கையாளப்படுகிற மருந்துகளை ஆராய்ந்து அலோபதி துறையில் உள்ளவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளத்தக்க அளவில் இந்த ஆராய்ச்சியை நடத்துகிறார்கள். இருக்கிற மூலிகைகள் அல்லது பழங்காலத்து சுவடிகளில் உள்ள மருந்துகள் ஆகியவற்றைக் கண்டு பிடித்து அவைகளை உலகிற்கு அறிவிக்கவேண்டிய பொறுப்பில் சித்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். அது ஓரளவு பாளையங்கோட்டையில் உள்ள இந்திய மருத்துவக் கல்லூரியில் நடைபெறுகிறது.

திரு. கே. கந்தசாமி: மூலிகைகள் ஆராய்ச்சி நடைபெறுவதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். கிராமப்புறங்களில் ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாராட்டு விழா நடத்திக் கொண்டிருக்கிறீர்களே, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கே. கந்தசாமி: கிராமப்புறங்களில் கைதேர்ந்த வைத்தியர்கள் இருக்கிறார்கள். மூலிகைகளில் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வந்து தகவல் கொடுக்க, அவர்களுடைய உதவியைப் பெறுகிற அளவில் வசதிகள் செய்துகொடுக்க அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நாட்டுப்புறங்களில் உள்ள கிராம வைத்தியவர்களிடம் சிறந்த மருந்துகள் இருந்தால் அதை இந்திய மருத்துவ ஆலோசனைக் குழுவிடம், சித்த மருத்துவக் குழுவிடம் அறிவித்தால் அது ஏற்கனவே அந்தக் குழுவிற்குத் தெரியாத ஒரு மருந்தாக இருந்தால் அதை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளும். ஆனால் பல நாட்டுமருத்துவர்கள் தங்களுக்குத் தெரிந்தது பிறருக்குத்

[1973 மார்ச் 20

தெரியாது என்ற தவருன எண்ணத்தில் இருக்கிருர்கள். நாட்டு மருந்துகள் பல ஒருவருக்குத் தெரிந்தது மற்றவருக்கும் தெரியும். புதிதாக இருந்தால், அவைகளைப் பற்றி அந்தக் குழுவிற்குத் தெரிவித்தால் அந்தக் குழு அதை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளும்.

திரு. த. சோனையா: நாகதாளி என்ற ஒரு செடி இருக்கிறது. நல்ல பாம்பு கடித்தால்கூட அந்த விஷத்தை, கடும் விஷங்களைக் கூட, அகற்றி காப்பாற்ற முடியுமாம் இந்த செடியினுல். எனவே அந்தச் செடியையும் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது எந்த அளவிற்குக் காப்பாற்றும் என்பதைப்பற்றி நான் சொல்லமுடியாது. anti--scorpian bite drug, anti-snake bite drug, cobra venom என்னும் திறனுடைய மருந்துகள் ஆராயப்பட்டுவருகின்றன என்று தெரிவித்திருக்கிருர்கள். அவை எலிகளுக்குத் தரப்பட்டிருக்கின்றன. மிகவும் அதிகமான விஷச் சத்து உள்ளதாக உணரப்படுகிறது. ஆனுல் மனித இனத்திற்கு அது எப்படிப் பயன்படும் என்பது அதற்கான முறைப்படி ஆராய்ச்சி செய்யப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Ayurveda and Siddha doctors, both of them, use the same herbs for preparation of medicines but they carry on research independently and separately. If they both join together and do research, they can produce quick and good results and the two systems can come closely. Will the Hon. Minister arrange for such a joint investigation?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Siddha and Ayurveda are more or less very close to each other and though the basic materials are more or less the same, the formula adopted for preparation of medicines is different. The formula for preparation and effect of medicines is slightly varying.

திரு. கே. எ. வகாப்: பல சித்த மருத்துவர்கள் இந்த மூலிகைகளின் அருமைகளைத் தெரிந்தும் அதை அவர்கள் குடும்பச் சொத்தாகப் பாவித்து வெளியில் ரகசியங்களைச் சொல்லாமல் இருக்கிருர்கள். அவர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் தனிப்பட்ட தன்மைகள் இருந்தால் பரிசுகள் அளிப்பதன்மூலம் அவர்களிடமிருந்து அந்த ரகசியங்களைப் பெற்று மக்கள் சமுதாயத்திற்கு அவை பயன்படும்படிச் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?



1973 மார்ச் 20]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அரசு முயற்சிக்கலாம். ஆனுல் அந்த இரகசியத்தைச் சொன்னுல் அதற்குப் பின்னுல் அது பலிக்காமல் போய் விடும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கிறது. ஒரு மருந்தின் பெயரை அல்லது மூலிகையின் பெயரைச் சொல்லிவிட்டால் அதற்குப் பிறகு அது பயன்படாது, ஆகவே நாங்கள் சொல்லமாட்டோம் என்று சொல்கிறவர்களும் இருக்கிருர்கள். ரகசியங்களைத் தெரிந்ததாக மட்டும் சொல்லி பலபேர்களை நம்ப வைத்து ஏமாற்றுகிறவர்களும் இருக்கிருர்கள்.

## ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களுக்குச் சுற்றுச்சுவர்கள்

* 434 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

பெரியபாளையம் பிரதம சுகாதார நிலையக் கட்டடத்திற்கும், கும்முடிப்பூண்டி பிரதம சுகாதார நிலையக் கட்டடத்திற்கும் சுற்றுச் சுவர் (compound) கட்டுவதில் ஏற்படும் தாமதத்திற்கு காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தற்போதைய நிதி நிலை நெருக்கடியின் காரணமாக பெரியபாளையம், கும்முடிப்பூண்டி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் (compound wall) கட்ட இயலாது.

திரு. கா. வேழவேந்தன்: பல லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டி முடித்து இந்த அரசு சிறப்பான பணிகளை நிறைவேற்றுகிறது. சுற்றுச் சுவர் கட்டாததால் அந்தக் கட்டடத்திற்குள்ளே யார் யாரோ நுழைகிருர்கள். ஆகவே இந்த நிலையைப் போக்க பேஸ்ட் ப்ரோக்ராம் ஒன்று போட்டு விரைவில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்த வட்டாரத்தில் மருத்துவ மனை அமைக்கப்பட்டதே உறுப்பினர்களைப் போன்றவர்களின் செல்வாக்கை நம்பித்தான் மருத்துவமனைகள் கட்டுகிறோம்—யார் யாரோ நுழைகிருர்கள் என்ருல் நம்முடைய செல்வாக்குக்குக் கட்டுப் படவில்லை என்றுதான் பொருள்.

மற்றென்று; இந்தச் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு செலவாகக் கூடிய தொகையைக் கொண்டு வேறு சில கிராமங்களில் மருத்துவ மனைகள் கட்ட அதைப் பயன்படுத்தமுடியும். அடுத்து சுவராகக் கட்டுவதற்குப்

பதிலாக சவுக்கு மரங்கள் போன்றவற்றை வைத்து உயிர் வேலி அமைக்கக்கூடிய முறை இருக்கிறது சுவருக்குப் பதிலாக. அந்த முறையில் அமைக்கவேண்டுமென்று அரசு ஏற்கனவே அதிகாரி களுக்குத் தெரிவித்திருக்கிறது.

*College by Madras Homoeopathy Development Association*

* 435 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Madras Homoeopathy Development Association proposes to open a College in Madras this year; and

(*b*) if so, whether the sanction of the Government has been applied for?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இதைப்பற்றி அரசிடம் தகவல் எதுவும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: இப்போது இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரிகளில் ஹோமியோபதியையும் ஒரு பாடமாக கற்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அலோபதி மருத்துவத் துறை யில் உள்ளவர்கள் ஹோமியோபதி முறையை இன்னும்கூட ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருவர் இருவர்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே அலோபதி மருத்துவத்துறையில் பாடம் நடைபெறுகிற இடத்தில் இதைச் சேர்த்து நடத்துவது என்பது இயலாது. தனியாகக் கல்லூரி ஏற்படுத்தி அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த அரசு முயற்சிக்கும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: நாடு முழுவதும் ஓமியோபதித் துறையில் மருத்துவம் செய்யக்கூடிய மருத்துவர்கள் பரவலாக இருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு எவ்விதமான பயிற்சியும் கிடையாது. ஆகவே, இம்மாதிரி ஓமியோபதி கல்லூரி ஏற்படுத்தி ஓராண்டு, இரண்டாண்டு பயிற்சி பெற்று பிறகுதான் மருத்துவப் பணியில் ஈடுபட வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை அரசு கொண்டு வருமா?





மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்த ஓமியோபதி கல்லூரியில் குறைந்தது 4½ அல்லது ஐந்து ஆண்டு காலம் படிக்க வேண்டும். நாலைந்து ஆண்டு காலப் படிப்பு என்ற காரணத்தால் விரிவான மருத்துவ மனை ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஓராண்டுக் காலப் படிப்பு என்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. இன்றைக்கு ஏற்கெனவே மருத்துவர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் பத்தாண்டுக் கால அளவுக்குப் பணியாற்றி இருப்பார்களானால் அவர்கள் பதிவு செய்யப்படுவார்கள். ஓமியோபதி சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு அண்மையில் ஓமியோபதி கவுன்சில் ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன்: ஓமியோபதி படிப்பை சிலர் 9 மாதங் களில் தபால் மூலமாகக் கற்று ஊசி போடுகிறார்கள். ஸ்டெதஸ் கோப் வைத்துப் பார்க்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் டயக்னஸ் செய்து பார்க்க முடியாத நிலையில் மக்களுக்கு மருந்து தருகிறார்கள். இதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இன்னும் ஓராண்டுக் காலத்திற் குள்ளாக பதிவு பெற்றவர்கள் என்ற நிலையிலுள்ள மருத்துவர்கள் தவிர மற்றவர்கள் இப்படி மருத்துவம் செய்யக்கூடாது என்று கவுன்சில் மூலமாக ஆணை பிறப்பிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

மாநில குடும்பநலத் திட்ட அமைப்பு

* 436 வினா.—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பநலத் திட்ட அமைப்பில் (ஸ்டேட் பேமிலி பிளானிங் பீரோ) டெமோகிராபிக் செல் (Demographic Cell) எத்தனை ஆண்டுகளாக இயங்குகிறது?

(இ) இதில் எவ்வகைப்பட்ட அலுவலர்கள் பணியாற்று கின்றனர்?

(உ) இதற்கு அனுமதிக்கப்பட்ட எல்லா அலுவலர்களுக்கும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) சென்ற இரண்டு ஆண்டு காலமாக இயங்கி வருகிறது.

[1973 மார்ச் 20

(இ) டெமோகிராபர், புள்ளிவிபர உதவியாளர்கள், புள்ளி விபர ஆய்வாளர், கம்ப்யூட்டர், (கணக்கர்) எழுத்தர், இளநிலை எழுத்தர்.

(உ) சோஷியல் சையன்டிஸ்ட் தவிர மற்ற எல்லா அலுவல் களுக்கும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த டெமோகிராபிக் செல் என்ன பணிகளைச் செய்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நாட்டிலே இப்போது மிக அதிக நெருக்கடியை உண்டாக்குகின்ற மக்கள் தொகைப் பெருக் கத்தைக் குறித்த புள்ளி விவரங்களையும், அதைக் கட்டுப்படுத்து வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பல்வேறு வகையாக இருப்பதால் அதனுடைய தர விளைவுகள்பற்றியும் தனித் தனியாகப் புள்ளி விபரங்களை அவ்வப்போது சேகரித்துத் தருகிறது.

## வெங்கல் கிராமத்திற்கு உயர்நிலைப்பள்ளி

* 437 வினா.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், வெங்கல் கிராமத்தில் அரிசன நலத் துறையின்கீழ், ஒரு உயர்நிலைப் பள்ளி துவக்குவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: வெங்கல் கிராமத்தில் அரிசன மக்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். கல்வித் துறையில் ஒரு பள்ளி தொடங்க வேண்டுமென்றால் 12,500 ரூபாய் பங்குத் தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது. அரிசன மக்களுக்காகப் பல்வேறு இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளில் துவக்கப்பட்டிருப்பது போல் இங்கு துவங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அரிசன மக்கள் அங்கு அதிகம் என்று சொல்வது தவறு. 3,085 மக்கள் தொகையில் அரிசன மக்கள் ஏறத்தாழ 1,700 பேர்தான் இருக்கிறார்கள். மாணவர்கள் தொகையில்கூட இப்போதுள்ள ஊராட்சி உயர்தர ஆரம்பப் பள்ளியில் 489 பேரில் 195 பேர்தான் அரிசன மாணவர்கள்



1973 மார்ச் 20]

இருக்கிறார்கள். சுற்று வட்டாரத்தில்கூட ஐந்து மைல் சுற்றளவில் வடமதுரை, பொன்னபுரம், செம்மேடு கிராமங்களில் மூன்று நடு நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இவைகளை எண்ணிப் பார்க்கும் போது நலத்துறை மூலமாக அங்கு பள்ளி தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

## பெரியபுலியூர் அரிசனக் குடியிருப்பு

* 438 வினா.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி துணை வட்டம், பெரியபுலியூர் அரிசன காலனி மக்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டம் மேலும் கால தாமதப்படுவதன் காரணம் என்ன?

(இ) இது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) பிரிவு 6 விளம்பல் அரசால் ஏற்கப்பட்டு 13—10—1971-ம் தேதியில் அரசிதழில் வெளி யிடப்பட்டுள்ளது. அரிசன நலத் தாசில்தாரால் அனுப்பப்பட்டுள்ள நில விலை மதிப்பீட்டு அறிக்கை செங்கை மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

(இ) அரசால் நிதி ஒதுக்கீடு செய்தவுடன் அவார்டு பாஸ் செய்து விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: நிதி ஒதுக்கீடுகள் விரைவாகச் செய்து 1973-க்குள்ளாக, இறுதியிலாவது மனைப் பட்டாக்கள் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அவார்டு பாஸ் செய்து விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

## கோணப்பராயன்குளம் கிராமத்துக்கு சாலை வசதி

* 439 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், கோணப்பராயன்குளம் கிராம தாழ்த்தப்பட்ட மக்கள் சுடுகாட்டுப் பாதை இல்லாது சிரமப் படுகிறார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், பாதை அமைத்துத்தர அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம். உண்மைதான்

(இ) குளித்தலை தாலுகா ரெங்கநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த சிற்றுபுரில் கோனபராயன்குளம் கிராமத்தில் வாழும் அரிசனங்களுக்கு சுடுகாட்டுப் பாதை அமைக்க ரெங்கநாதபுரம் கிராம புல எண் 509/2-ல், 7 செண்ட் புன்செய் நிலத்தை ஆர்சிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான 4 (1) முன்மொழிவு வரைவு வாலாய ஆணை எண். 1116, நாள் 22—5—1971-ல் (சமூக நலத் துறை) ஒப்புதல் அளிக்கப்பட்டு 16—6—1971-ந் தேதிய தமிழ் நாடு அரசிதழில் பிரசுரமாகியுள்ளது.

திரு. த. சோனையா: அரிசனப் பெருமக்களுக்கு சுடுகாட்டுக்கு ரோடு போடுகின்ற முறையில் ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இப்போது அந்த அதிகாரம் அரிசன நல அதிகாரிக்கு மாற்றப்பட்டு விட்டதால் காலதாமத மாகிறது. ஆகவே, உடனடியாக செய்து கொடுக்க வேண்டு மென்றால் மீண்டும் அந்த அதிகாரம் பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: காலதாமதம் அதனால் அல்ல. தாசில்தார்கள் மூலமாகத்தான் செய்து கொடுக்கப்படுகிறது. நிலத்தை எடுக்கின்றபோது நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைக் கொடுக்க மறுப்பதால்தான் அதைப் பெறுவதிலே காலதாமதமா கிறதே தவிர, அலுவலர்கள் சார்பில் காலதாமதம் இல்லை.

*Technical guidance by Ground Water Directorate*

*440 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the details and the nature of the technical guidance given by the Ground Water Directorate to small cultivators in this State?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உலக வங்கியின் அபிவிருத்தி வளர்ச்சி நிறுவனம் (உலக வங்கி) வேளாண்மை மறு நிதி உதவிக் கழகம், மாநில நிலவள வங்கி, மற்றும் வர்த்தக வங்கிகள் சிறு விவசாயிகள் அபிவிருத்தி நிறுவனம், நடுத்தர விவசாயிகளும் மற்றும் விவசாய தொழிலாளர்கள் அபிவிருத்தி



நிறுவனம், ஆகியவைகளால் ஏற்படுத்தப்படும் வடி குழாய் கிணறுகள் (குழாய்க் கிணறுகள்) கிணறு தோண்டுதல் ஏற்கெனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்துதல், விசை ஏற்றம் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கிறது. அதன் அடிப்படையில் சிறு விவசாயிகளுக்கும் மேற்கூறிய நிறுவனங்கள் கடன் வழங்குகின்றன.

திரு. என். டென்னிஸ்: மாநிலத்திலுள்ள எல்லா மாவட்டங் களுக்கும் இதன் வசதி அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் திட்டத்தின் கீழ் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களிலும், திட்டத்தில் சேராத பகுதிகளில் கிணறு தோண்டுதல் போன்ற வேலைகளுக்காக விவசாய மறு நிதிக் கழகத்தின் மூலமாக உதவி செய்யப்படுகிறது. இந்தத் திட்டங்கள் அமல் இருக்கும் இடங்களிலும், அமலில் இல்லாத இடங்களிலும் தொழில் நுட்ப அனுமதியைத்தான் தருகிறது.

திரு. ஆ. பரந்தாமன்: கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் கொடுத்த அட்ஹாக் ரிப்போர்ட்டில் தவறான புள்ளி விவரங்கள் அடங்கியுள்ளன என்று எனக்குத் தெரியும். மீண்டும் தமிழ்நாடு முழுமைக்கும் சர்வே செய்து சரியான புள்ளி விவரங்கள் அடங்கிய அட்ஹாக் ரிப்போர்ட்டை சமர்ப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி ஒரு ரிப்போர்ட்டே இன்னும் கொடுக்கப்படவில்லை. ஏற்கெனவே, தவறான குறிப்பு கொடுத்தாகத் தகவல் இல்லை.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: இந்த Cell கிராமப் புறங்களில் இருக்கும் சிறு விவசாயிகளுக்காக கூட்டுறவு நீர்ப்பாசன கழகத்தோடு தொடர்பு கொண்டு பணிகளை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த இலாகாவின் பணி தொழில் நுட்ப அனுமதியை அளிப்பதுதான். தொழில் நுட்ப அனுமதி கொடுத்த பிறகு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மூலமாகக் கடன் பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கிரவுண்டில் வாட்டர் இருக்கிறதா இல்லையா என்று வாட்டர் டிவைனர் வைத்து கண்டு பிடிக்கிறார்களா அல்லது வேறு டிவைசில் கண்டுபிடிக்கிறார்களா?

[1973 மார்ச் 20

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தொழில் நுட்ப ரீதியில் சில மீட்டர்களை வைத்து பரிசீலிக்கிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா: கிரவுண்ட் வாட்டர் செல்லின் முடிவுப்படி ஒரு இடத்தில் தண்ணீர் இருக்கிறது என்று சொல்லி அங்கே கிணற்றை வெட்டினால் சில இடங்களில் தண்ணீர் வராமல் போகிறது. அப்படி தண்ணீர் வராமல் போனால் அந்த விவசாயிகள் வாங்கிய கடனை வஜா செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சருக்குப் போட வேண்டிய கேள்வி இது. சமயம் வரும்போது அந்தக் கேள்வியைப் போட்டால் அவர்கள் விரிவாகப் பதில் சொல்லுவார்கள்.

திரு. கே. கந்தசாமி: கிரவுண்ட் வாட்டர் டிப்பார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள் மாநில அளவில் அளந்து பார்த்துச் சொல்லுகிறார்கள். மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை அவர்களுடைய சர்வே தெளிவாகக் கூறுகிறது—அங்கு கிரவுண்ட் வாட்டர் ஸ்டாக் குறைவாக இருக்கிறது, குறிப்பிட்ட அளவுதான் இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். நம்முடைய அரசு திட்டத்தின்படி விளைச்சலைப் பெருக்க அதிக கிணறுகள் வெட்ட மானியங்கள் கொடுத்து வருகிறார்கள். அந்தப் பகுதியைப் பொறுத்தவரை கிரவுண்ட் வாட்டர் ஸ்டாக் குறைவாக இருக்கின்ற காரணத்தால் அரபிக் கடலில் வீணாக விழும் நீரை தமிழகத்திற்கு, குறிப்பாக மதுரை மாவட்டத்திற்குத் திருப்பிவிட்டு தண்ணீர் சப்ளை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஒரு திட்டத்தின் அடிப்படையில்தான் அரசாங்கம் கடன் உதவி செய்கிறது. அங்கு போதுமான தண்ணீர் இருக்கிறதா என்று ஆராய்ந்து அனுமதி கொடுப்பது இந்த இலாகா. அப்படி அனுமதி கொடுத்த பிறகு அந்தத் திட்டங்களை நிறைவேற்ற அரசு முயலுகிறது.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில் எத்தனை இடங்களில் பரிசோதனை செய்யப்பட்டது, எத்தனை இடங்களில் வெற்றி பெற்று இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தனிக் கேள்வி போட்டால் எத்தனை இடங்கள் சோதனை செய்யப்பட்டன என்று விவரத்தைத் தர முடியும்.



1973 மார்ச் 20]

*Bridge across river Kuzhithurai*

* 441 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the scheme of the construction of Kuzhithurai bridge in Kanyakumari district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மார்த்தாண்டம்—பணிச்சமூதூர்—சாலையின் (அரசினர் மாவட்டப் பெரிய சாலை) 0/8-வது மைலில், குழித்துறை ஆற்றின் குறுக்கே ரூ. 20 லட்சம் செலவில் பாலம் ஒன்று கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

குழித்துறை நகராட்சி எல்லைக்குள் சேலம்—கொச்சி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 47) 23/1—மைலில் குழித்துறை ஆற்றின் குறுக்கே உள்ள பாலம் ரூபாய் 13 லட்சம் செலவில் அகலப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இப்பணி, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், "தேசிய நெடுஞ்சாலைகள்" திட்டத்தின்கீழ் சேர்க்கப்படவில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இது போன்று குழித்துறை—தீக்குரிச்சி பாலம் கட்ட வேண்டுமென்று பொதுமக்கள் பல நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் தீவிரப் படுத்தி கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: முதலாவது திட்டத்தைப் பொறுத்தவரை ரூ. 20 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நிதிநிலைக் காரணமாக அதைக் கட்டும் வேலையில் காலதாமதம் ஏற்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மார்த்தாண்டம்—பணிச்சமூதூர் சாலை 1962-ஆம் ஆண்டில் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு, அன்றைய தினம் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக நிறுத்தப்பட்டது. அதன் முக்கியத்துவத்தைக் கருதி, வருகிற ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதை சேர்த்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: நான் ஏற்கனவே சொல்லியது போல் The Chief Engineer has included the work of construction of a bridge across the Kuzhithurai river at Mile 0/8 Mathandam–Panichamoodur road referred to as item 1 above, in the list of works under Part II Scheme for 1972–73 for approval of the Government. But in view of the

reduced outlay suggested by the Standing Finance Committee, the work was deleted from the final list of works approved. The proposal is under the active consideration of the Government.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டுகிற முறை...............(மறையடிக்கப்பட்டது).

*Formation of road near Karumanjarai Pond.*

*412 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for the delay in laying the Panchayat Union road near Karumanjarai Pond, Uthukuli, even though instructions in this regard have already been issued by the District Collector?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கருமாஞ்சேரியின் அருகே உள்ள குட்டையின் கரை மேல் சாலை போடுவது சிக்கன மற்றதோடு இடைஞ்சலாகவும் இருப்பதால் குட்டையின் அருகே சாலை போடுவதற்கு மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது.

*Cases involving Co-operative Societies.*

*443 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the police have taken up investigation into the affairs of a number of (1) Co-operative Land, (2) Co-operative Credit Banks during 1971-72; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) 1971-72-ஆம் ஆண்டில் விவசாய வங்கி, கடன் வழங்கு சங்கங்கள் ஆகியவற்றின் வழக்குகளும், கூட்டுறவு நிலவள வங்கிகளில் 6 வழக்குகளும் ஆக 133 வழக்குகள் காவல் துறையினரால் புலனாய்வு செய்யப்பட்டன.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, சில வழக்குகள் இன்வஸ்டிகேஷன் செய்வதற்கு வெகு காலதாமதம் ஏற்படுவதால் ஒரு கால வரையறை குறிப்பிட்டு இன்வஸ்டிகேஷன் செய்வதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இப்படிப்பட்ட வழக்குகளைப் புலனாய்வு செய்வதற்கு தனி விங் இருக்கிறது. அவர்கள் மிக ஊக்கமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் துரிதப் படுத்த வேண்டுமானால் அதைப் பெரிதாக்க வேண்டியிருக்கும். இப்போது போதிய அளவு வேகமாக போய்க்கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

திரு. இ. எஸ். தியாகராாசன்: தலைவரவர்களே, மாவட்டந் தோறும் எத்தனை சங்கங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்ற விவரத்தை தர முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, மாவட்டந்தோறும் எத்தனை என்பதற்குத் தனியாகக் கேள்வி எழுப்புவதாக இருந்தால் அதனுடைய புள்ளி விவரங்களை அச்சிட்டு மேஜைமீது வைப்பதற்கு நான் ஆயத்தமாக இருக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, சாதாரணமாகப் புலனாய்வு செய்வதற்கு சராசரி எத்தனை ஆண்டுகள் எடுக்கப் படுகின்றன? புலனாய்வு முடிந்து, வழக்குகள் தொடர காலதாமதம் ஏற்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அம்மையார் அவர்கள் வழக்கறிஞர். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். புலனாய்வு செய்வதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பது அந்த வழக்கை ஒட்டியது. சில நேரங்களில் ஏறத்தாழ 1,000-க்கு மேற்பட்ட சாட்சிகள் கூட இருக்கின்றனர். அவர்களை விசாரித்து நடவடிக்கை எடுக்க பல ஆண்டுகள் ஆகின்றன. சாதாரணமாக ஒரு சில மாதங் களில் அந்தப் புலனாய்வு முடிந்து உடனடியாக வழக்குகள் தொடரப் படுகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த ஆண்டு எத்தனை வழக்குகள் புலனாய்வு செய்யப்பட்டு, வழக்குமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார் களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, வினா 1971-72-ஆம் ஆண்டு பற்றியது. அதற்குப் பிறகு 72-73-ல் என்ன என்பதைப் பற்றி தனியாக வினா எழுப்பினால் புள்ளி விவரங்கள் தர முடியும்.

[1973 மார்ச் 20

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த கடனுய்வு (சிரிப்பு), புலனுய்வுக்கு எடுத்துக்கொண்ட வழக்குகளில் கூட்டுறவுக் கடன் வழங்கும் சொசைடியில் தருமபுரி சொசைடி, பொட்னேரி சொசைடி இரண்டும் சேர்க்கப்பட்டிருக்கிறதா? இம்மாதிரியான புலனுய்வு செய்வதில் எவ்வளவு வழக்குகள் நிரூபணம் ஆகி இருக்கிறது? வழக்குத் தொடரத் தகுதியுள்ள வழக்குகள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, இந்த வினு எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றியும் அல்ல. அவர்கள் சொல்வதுபோல் கடன் வழங்கும் சங்கங்கள், அல்லது புலனுய்வு பற்றிய விவரங்களைப்பற்றித் தனி வினு போடப்படுமாஞல், அதிலே எத்தனை வழக்குகளில் தீர்ப்பாகி இருக்கிறது, எத்தனை இன்னும் புலனுய்வில் இருக்கின்றன என்று சொல்ல முடியும். அது நீண்ட பட்டியலாக இருப்பதால், அதை அச்சிட்டு மேஜைமீது வைக்கத் தயாராக இருக்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : May I know what is the total amount involved in this case?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Even the information about the total amount, Sir, I do not have readily on hand. But if a separate question is put, I will be able to say districtwar or societywar the amount involved.

### மதுரை மண்டலப் பகுதியில் கதர் விற்பனை

* 444 வினு.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-70, 1970-71, 1971-72 ஆண்டுகளில், மதுரை காதி மண்டலப் பகுதியில் கதர் கடனுக விற்றதில் பாக்கியுள்ள தொகை எவ்வளவு?

(இ) இதில் வசூலிக்க முடியாது என்று தள்ளுபடி செய்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) ரூ. 30,09,038-21.

(இ) ஏதுமில்லை.



1973 மார்ச் 20]

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இந்த காதி வஸ்திராலயத்திலிருந்து சமீபத்தில் இந்த சாயில்ட் கூட்ஸ் என்று சொல்லி விற்கப்பட்டதே சென்னையில் நடந்த எக்சிபிஷனில், எவ்வளவு விற்கப்பட்டது, அதற்காக மத்திய அரசு ஏதேனும் மானியம் அளித்ததா என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : அது பற்றிய கேள்வி அல்ல இது. இன்னும் அதனுடைய கணக்கு என்னிடத்தில் வரவில்லை. தனிக் கேள்வி போட்டால் கொடுக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், மதுரை காதி மண்டலப் பகுதியில் மட்டும் ரூ. 30 லட்சம் என்று கூறினுர்கள். அதுபோல் மாநிலம் முழுவதற்கும் எடுத்துக்கொண்டால், எவ்வளவு லட்சம் இருக்கும் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மதுரையைப்பற்றி மட்டும் கேட்டு இருந்தார்கள். அதுபற்றிய கணக்கு தான் வைத்து இருக்கிறேன். மாநிலம் பூராவிற்கும் எவ்வளவு என்று கேட்டால் வேறு கணக்குத் தருகிறேன்.

### மாதவரத்தில் பனைபொருள்கள் சங்கக் கண்காட்சி

445 வினு.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-செங்கற்பட்டு மாவட்ட பனைபொருள்கள் கூட்டுறவு சம்மேளனம் 1970-ஆம் ஆண்டில் மாதவரத்தில் கண் காட்சி ஒன்று நடத்தியதா?

(இ) ஆம் எனில், அதற்கு ஆன செலவு என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) வினுவுக்கு இடமில்லை.

### அசோக்நகர்-அமைந்தகரை இணைப்புச் சாலை

* 414 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அசோக் நகரிலிருந்து அமைந்தகரை வரை பெரிய சாலை அமைத்து அதனை பூந்தமல்லி நெடுஞ்சாலையுடன் இணைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அசோக் நகரிலிருந்து ஆற்காடு சாலை வரை சாலை அமைப்பு வேலைகள் முடிவடைந்துவிட்டன. ஆற்காடு சாலையிலிருந்து அமைந்தகரை வரையிலும் அமைந்தகரையி லிருந்து பூந்தமல்லி நெடுஞ்சாலை வரையிலும் சாலை அமைப்பு செய்வதற்குத் தேவையான நிலங்களை நில எடுப்பு சட்டத்தின்கீழ் (Land Acquisition Act) ஆர்ஜிதம் செய்யும் வேலை நடவடிக்கையில் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, சாதாரணமாக அதற்கு எத்தனை மாதம், எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அதற்குக் காலதாமதம் ஆவதற்குக் காரணம், அங்கே சில கட்டடச் சொந்தக் காரர்கள், நிலச் சொந்தக்காரர்கள், நில ஆர்ஜிதத்தைத் தடுப்பதற் கான முயற்சிகளில் ஈடுபட்டு விண்ணப்பங்களை அளித்துக் கொண் டிருக்கிறார்கள். ஆகவே, தனி துணைத் தாசில்தார், தனித் துணை மாவட்ட ஆட்சித் தலைவர், வீட்டு வசதி வாரியத் தலைவர் ஆகியோர் அந்த இடத்தைச் சென்று, ஆய்வு செய்து, அந்த வேலைகளை முடிப் பதற்கான முயற்சிகளை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டிருக்கிறது.

## இராணிப்பேட்டையில் சுற்றுலா மாளிகை

* 45 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

இராணிப்பேட்டையில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, ராணிப்பேட்டை ஆற்காடு நவாப்புகள் ஆண்ட இடம். அங்கே அவர்கள் ஆட்சியைப் பற்றி விளக்குகின்ற பல இடங்கள் இருக்கின்றன. பள்ளிவாசல்கள் இருக் கின்றன. அவைகளை எல்லாம் பயணிகள் வந்து பார்த்துச் செல்வதற்கு வசதி செய்வதற்காக ஒரு சுற்றுலா மாளிகையை கட்ட அரசு முன் வருமா?



மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அங்கே பல நவாப்புகள் ஆண்டாலும் இப்போது வகாப்தான் இருக்கிறார்கள். சுற்றுலா மாளிகை கட்டுவது என்றால் அங்கே பயணிகள் வந்து பார்க்கத் தகுந்த சிறப்புப் பெற்ற இடங்கள் இருக்க வேண்டும். இயற்கை எழில் இருக்க வேண்டும். அந்த மாதிரியான இடங்கள் எதுவும் ராணிப்பேட்டையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பி னர் அவர்களே அறிவார்கள். ஆகவே, அங்கே சுற்றுலா மாளிகை கட்டும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஆற்காடு சுற்றிப் பார்க்கக் கூடிய இடமாக இல்லை என்று சொன்னார்கள். அது நவாப்கள் எல்லாம் ஆண்ட இடம். அந்த நவாப்கள் கட்டிய குதிரை லாயம் இப்போது டி.பி. ஆஸ்பத்திரியாக மாற்றப்பட்டிருக்கிறது. இப்படிப் பட்ட பல சிறப்பான கட்டடங்களை அந்தக் காலத்திலே கட்டியிருக் கிறார்கள். அவைகளை எல்லாம் பயணிகள் வந்து பார்ப்பதற்காக அங்கே சுற்றுலா மாளிகை கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சுற்றுலாப் பயணிகள் இயற்கை எழில் நிறைந்த இடங்களையும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் தான் பார்க்க வருகிறார்கள். குதிரை லாயம் டி.பி. ஆஸ்பத்திரியாக மாறியதைப் பார்க்க வருவதில்லை. ஆகவே, ராணிப் பேட்டையில் சுற்றுலா மாளிகை கட்ட இயலாது. வடாற்காடு மாவட்டத்தில் வேலூரில் வேண்டுமானால் பின்னால் ஒரு சுற்றுலா மாளிகை கட்டக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். வேலூர் மலையில் மேலே ஒரு கோட்டை, கீழே ஒரு கோட்டை இருக்கின்றன. இந்தக் கோட்டைகளை பார்க்க பயணிகள் வரலாம். ஆகவே, அங்கே வேண்டுமானால் சுற்றுலா மாளிகை கட்டுவது பற்றி யோசனை செய்யலாம்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்திலே ஜவ்வாது மலையிலுள்ள ஜமுனாபுத்தூரைப் பார்ப்ப தற்காக நிறைய பயணிகள் வருகிறார்கள். ஆகவே, அங்கே ஒரு சுற்றுலா மாளிகையை கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மூன்று மலைகளில் இப்போது சுற்றுலா வாரியத்தின் கண்காணிப்பில் சுற்றுலா மாளிகைகள் இருக் கின்றன. உதகையில் ஒன்றும், கோடைக்கானலில் ஒன்றும் நீண்ட

நாட்களுக்கு முன்னாலே இருக்கின்றன. அதைப்போல ஏற்காட்டிலும் தற்போது சுற்றுலா மாளிகைக் கட்டப்பட்டிருக்கிறது. ஜவ்வாது மலையில் இன்னும் கொஞ்சம் பாதை வசதிகள் ஏற்பட்ட பின்னால் சுற்றுலா மாளிகைக் கட்டலாம். அதில் அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன் : வேலூரிலே சி. எம். சி. ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. அது இப்போது ஏழைகளுக்காக இல்லை; பெரும் பணக்காரர்களுக்காகத்தான் செயல்படுகிறது. அதே நேரத்தில் ராணிப் பேட்டையில் "ஸ்காடர் மெம்மோரியல் ஆஸ்பிட்டல்" இருக்கிறது. அது ஏழைகளுக்காகப் பணியாற்றி வருகிறது. ஆகவே, அங்கே ஒரு சுற்றுலா மாளிகையை கட்டினால் வியாதியஸ்தர்கள் வருவதற்கும், அவர்களைப் பார்க்க வருகிறவர்களும் மற்றவர்களும் தங்குவதற்கும் வசதியாக இருக்கும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சுற்றுலா மாளிகை என்பது குடிசைமாற்று வாரியத்தைப் போன்றது அல்ல. இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் வெளி நாட்டாரையும், நமது நாட்டிலுள்ள வெளி மாநிலங்களிலுள்ளவர்களையும் கவருகின்ற வகையில் சுற்றுலா மாளிகைகளை அமைத்து, வருகின்ற பயணிகளுக்கு வசதி செய்து கொடுத்து, உரிய கட்டணங்களை வசூல் செய்து லாபம் சம்பாதிக்கும் நோக்கோடு சுற்றுலாத் துறை செயல்படுகிறது. ஆகவே, இதில் ஏழை பணக்காரர் என்று பாகுபாடு இல்லை. வசதிகள் செய்து கொடுத்து, வருவாய் ஈட்டக்கூடிய இலாகா இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, ராணிப் பேட்டையிலிருந்து ஜவ்வாது மலை, வேலூர் எல்லாம் போய் சுற்றி வந்த பிறகு நான் மீண்டும் ராணிப்பேட்டைக்கு வருகிறேன். அங்கே ஏற்கெனவே Travellers Bungalow ஒன்று இருக்கிறது. ஆனால் அதில் நிறைய இடவசதி இல்லை. இரண்டு அறைகள் இருக்கின்றன. ஆனால் அங்கு நிறைய நிலம் இருக்கிறது. அமைச்சர்களும் அதிகாரிகளும் தான் இப்போது இருக்கிற Travellers Bungalow தங்குகிறார்கள். அங்கே சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தங்குவதற்கு அந்த நிலத்தில் சில அறைகள் கட்டி சௌகரியம் செய்து கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. இராசாராம் : அம்மையார் அவர்கள் "ட்ராவலர்ஸ் பங்களா" வைப்பற்றி குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். சுற்றுலா மாளிகை வேறு; ட்ராவலர்ஸ் பங்களா வேறு. ட்ராவலர்ஸ் பங்களா அமைச்சர்களும், அதிகாரிகளும், வருகின்ற போது தங்குவதற்காக கட்டப்பட்டிருக்கிறது. அங்கே சாதாரணமாக வருகிறவர்கள் தங்க முடியாது. ஆனால் சுற்றுலா மாளிகையில் யார் வேண்டுமானாலும் தங்கலாம். யார் முன்னால் போய் கட்டணம் செலுத்துகிறார்களோ, அவர்கள் தங்கலாம். ஒரு குறிப்பிட்ட நபர்களுக்கு என்று அது கிடையாது. ஆகவே, ட்ராவலர்ஸ் பங்களாவுக்கும் சுற்றுலா மாளிகைக்கும் நிரம்ப வேறுபாடு இருக்கிறது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்திலே "பூவர் மான்ஸ் ஊட்டி" என்று சொல்லக்கூடிய ஏலகிரி மலை இருக்கிறது. அங்கே ஒரு சுற்றுலா மாளிகைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏலகிரி மலை வளரவேண்டிய மலை என்பதில் சந்தேகம் இல்லை. சமீபத்தில் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அங்கே சென்றிருந்தபோது அவர்களுடைய கார் கூட பாதையில் சிக்கிக்கொண்டது. அங்கே போதுமான பாதை வசதி இப்போது இல்லை. நல்ல பாதை வசதிகள் ஏற்பட்ட பின்னால் அங்கே ஒரு சுற்றுலா மாளிகைக் கட்டுவது பற்றி ஆலோசனை செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆஸ்பத்திரி பக்கங்களிலே சுற்றுலா மாளிகை அமைத்தால் அங்கே வரக்கூடிய வெளிநாட்டார்கள் "இங்கே வியாதியஸ்தர்கள் நிறைய இருக்கிறார்கள்; நமக்கும் நோய் வந்துவிடக்கூடும்" என்று பயந்து, வராமல் போய்விடுவார்கள். ஆகவே, அம்மாதிரியான இடங்களில் கட்டாமல் நல்ல வசதியான இடங்களில் சுற்றுலா மாளிகைகளைக் கட்டி, சட்டசபை அங்கத்தினர்களுக்கு அங்கே தங்குவதற்கு சலுகைகள் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சட்டசபை அங்கத்தினர்களுக்கு ட்ராவலர்ஸ் பங்களாக்களில் சலுகைகள் இருக்கின்றன. ஆனால் சுற்றுலா மாளிகைகளில் சலுகை அளிக்க முடியாது. வெளி இடங்களிலிருந்து வரக்கூடியவர்களுக்கு வசதி செய்து கொடுத்து, உரிய கட்டணங்களை வசூல் செய்து ஆதாயத்தோடு நடைபெற வேண்டுமென்ற நோக்கத்தில்தான் சுற்றுலா மாளிகைகள் கட்டப்

பட்டிருக்கின்றன. அங்கே சட்டசபை அங்கத்தினர்கள் சலுகை முறையில் போய் உட்கார்ந்துகொண்டால் சுற்றுலா கெட்டுவிடும். ஆகவே, பொது மக்களுக்கு—சுற்றுலா பயணிகளுக்குப் பயன்படுவதற்கு சுற்றுலா மாளிகைகளே தவிர, சட்டசபை அங்கத்தினர்களுக்கு சலுகை அளிப்பதற்காக அல்ல. இதை ஒரு உரிமைப் பிரச்சனை ஆக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். சட்டசபை அங்கத்தினர்கள் சுற்றுலா மாளிகையில் தங்கினால் சுற்றுலா கெட்டு விடும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது சட்டசபை அங்கத்தினர்களை பழித்துக் கூறுவதாக இருக்கிறது அல்லவா. சட்டசபை அங்கத்தினர்கள் சென்று பார்த்தால்தானே அங்கே இருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொல்ல முடியும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சட்டசபை உறுப்பினர்கள் அங்கே போகலாம்; உரிய கட்டணத்தைக் கொடுத்து தங்கலாம்; பணம் கொடுத்து சாப்பிட்டுப் பார்க்கலாம்; ஏதாவது குறைபாடுகள் இருந்தால் தாராளமாக எடுத்துச் சொல்லலாம். அதற்கு எந்த விதமான தடையும் இல்லை. அதுமட்டுமல்ல. மேலும் வெளி நாட்டார்களுக்கும் சுற்றுலாப் பணயத்திற்காக வருகின்ற மற்றவர்களுக்கும் என்னென்ன வசதிகளை மேலும் செய்து கொடுக்கலாம், என்னென்ன வழிவகைச் செய்தால் ஆதாயம் கிடைக்கும் என்பதை எல்லாம் தெரிவிக்கலாம். ஆனால் சட்டசபை அங்கத்தினர்கள் எல்லாம் அங்கே போய் உட்கார்ந்து விட்டால் வருகின்ற பயணிகளுக்கு தங்குவதற்கு வசதி இல்லாமல் போய்விடும்; அதனால் சுற்றுலாப் பயணிகளின் வரத்து தடைப்படும்; இந்தத் துறை ஆதாயம் தேட முடியாது; அது சுற்றுலாவுக்கு கெடுதல் ஏற்படக்கூடியதாக இருக்கும். ஆகவே, சட்டசபை அங்கத்தினர்களுக்கு சுற்றுலா மாளிகையில் சலுகை அளிக்க இயலாது.

திரு. நா. வீராசாமி : சார், ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நாங்கள் எல்லாம் துணைக் கேள்வி கேட்பதற்காக கையை தூக்கிக் கொண்டிருக்க வேண்டும். தாங்கள் அனுமதித்த பின்னால்தான் கேள்வி கேட்கிறோம். ஆனால் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கைத்தூக்காமலே, தங்கள் அனுமதியைப் பெறாமலே எழுந்திருக்கிறார்கள்; உடனே கேள்வி கேட்கிறார்கள்; அமைச்சர்களும் அதற்குப் பதில் சொல்லி விடுகிறார்கள். அவர்களுக்கு மட்டும் இப்படி சலுகை அளிப்பது நியாயமா?





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் மைனாரிட்டியாக இருக்கிறார்கள். இந்த மன்றத்தில் பெண் உறுப்பினர்கள் 2, 3 பேர்கள் தான்—மைனாரிட்டியாக—இருக்கிறார்கள். அதனால் அனுமதிக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இப்படி ஒவ்வொரு ஊரிலும் சுற்றுலா மாளிகை வேண்டுமென்ற உணர்வை இங்கே எல்லா உறுப்பினர்களும் பிரதிபலித்திருக்கிறார்கள். ஆகையால் இப்போது சுற்றுலா மாளிகை இல்லாத இடங்களில் தனியார்கள் சுற்றுலா மாளிகைகளைக் கட்ட முன்வந்தால் அனுமதிக்கப்படுமா? அவர்களுக்கு அதற்காக உதவி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சுற்றுலா மாளிகைகளை தனியார் கட்டுவதற்கு அரசு அனுமதிக்கவில்லை. இது அரசுத் துறை ஈடுபட்டிருக்கிற காரியம். ஆனால் தனியார்கள் பெரிய ஓட்டல்களை கட்டுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இப்போது நமது அரசு ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் ஒரு சுற்றுலா மாளிகையைக் கட்ட வேண்டுமென்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கோ. செபமாலை : நெய்வேலியில் நிலக்கரி சுரங்கம் இருப்பதால் அதைப் பார்ப்பதற்காக நிறைய சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். ஆகவே, நெய்வேலியில் ஒரு சுற்றுலா மாளிகைக் கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நெய்வேலியில் ஏற்கெனவே ஒரு "கெஸ்ட் ஹவுஸ்" இருக்கிறது. அதிலே நிறைய அறைகள் காலியாகவே இருக்கின்றன. வருகின்ற சுற்றுலாப் பயணிகள் அதிலே தங்கிக்கொள்வதற்கு வசதி இருக்கிறது. ஆகவே, அங்கே அரசு சுற்றுலா மாளிகைக் கட்டும் உத்தேசம் இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : ஜவ்வாது மலையிலும், ஏலகிரி மலையிலும் பாதை இல்லாமல் இருப்பதால் சுற்றுலா மாளிகை இப்போது கட்ட முடியாது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏலகிரி மலையில் ஏற்கெனவே பாதை இருக்கிறது. ஜவ்வாது மலையில் இருக்கிற பாதையை மாற்றி நல்லமுறையில் அமைக்க பொதுப்பணித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பாதை

அமைப்புப் பணியை விரைவிலே முடிக்க ஏற்பாடு செய்து, உடனடியாக அங்கே சுற்றுலா மாளிகைகளைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பாதை இல்லாததினால் சுற்றுலா மாளிகை கட்டப்படவில்லை என்று சொல்லவில்லை. இருக்கின்ற பாதை போக்குவரத்திற்கு—சுற்றுலாப் பயணிகள் சென்றுவர வசதி இல்லாமல் இருக்கிறது என்று சொன்னேன். பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் அங்கே பாதை அமைப்புப் பணிகளில் விரைவான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தால் அவர்கள் அதிலே கவனம் செலுத்துவார்கள். நல்ல பாதை வசதிகள் ஏற்பட்ட பின்னால் அங்கே சுற்றுலா மாளிகை வரும் என்பதில் ஐயப்பாடு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) 1973-ம் ஆண்டு, சிறு வழக்கு மாநகர் நீதி மன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 1973-ம் ஆண்டு சிறு வழக்கு மாநகர் நீதி மன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



### (ஆ) தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு, குடி நீர் வழங்கு வடிகால் வாரியத் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு, குடி நீர் வழங்கு வடிகால் வாரியத் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## (4) 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு

### கோரிக்கை எண்: 16—கல்வி

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 16—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 98,65,64,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I move the following cut motion:—

To discuss policy—

"That the allotment of Rs. 98,65,64,100 under Demand No. 16—Education be reduced by Rs. 100."

THIRU K. SUPPU: Sir, I move the following cut motion:—

To discuss the necessity of changing the entire educational system to suit the needs of the time—

"That the allotment of Rs. 98,65,64,100 under Demand No. 16—Education be reduced by Rs. 100."

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Sir, I move the following cut motion—

To discuss about improving the content and quality of education in our schools and colleges—

"That the allotment of Rs. 98,65,64,100 under Demand No. 16—Education be reduced by Rs. 100."

THIRU N. DENNIS : Sir, I move the following cut motion—

To discuss about the ways to improve the standard of students—

"That the allotment of Rs. 98,65,64,100 under Demand No. 16—Education be reduced by Rs. 100."

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, சென்னை, மதுரை அண்ணாமலை பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்திலும், பாடத் திட்ட நிர்ணயக் குழுக்களிலும் மாணவர்களுக்கு பயன் தரத்தக்கப் பங்கு தரவேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 16—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 98,65,64,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்",

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, குறிப்பிட்ட மதங்களைப் பற்றியோ மத ஸ்தாபகர்களைப் பற்றியோ பாடநூலில் எழுதும் போது அந்தந்த மதங்களில் உள்ள அறிஞர்களைக் கலந்து பாடநூல்கள் எழுத வேண்டும் என்பதை வலியுறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 16—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 98,65,64,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்",

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I move the following cut motion—

To discuss about the educational facilities and needs required for the linguistic minorities—

"That the allotment of Rs. 98,65,64,100 under Demand No. 16—Education be reduced by Rs. 100."



DR. H. V. HANDE : Sir, I move the following cut motion—

To discuss the need to fix teacher-student ratio at 1 : 30 to improve the standard of education—

"That the allotment of Rs. 98,65,64,100 under Demand No. 16—Education be reduced by Rs. 100."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த கல்வித் துறை மானிய கோரிக்கைபற்றிய விவரக் குறிப்புகள் @ இந்த மன்றத்தின்முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவோடு உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கல்வி மானியத்திற்காக 99 கோடி ரூபாய், அதாவது 21 சதவீதம் மொத்த பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது. இவ்வளவு அதிகமான தொகையை செலவிடக் கூடிய கல்வித் துறை, இதிலே பயிலக் கூடிய மாணவர்கள் இந்தச் சமுதாயத்தின் எதிர்காலத்தை உருவாக்கக் கூடிய முறையில் அமையவேண்டுமென்ற அடிப்படையில் என்னுடைய கட்சியின் கருத்துக்களை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக கல்வித் தரத்தை உயர்த்த வேண்டுமென்பதைப்பற்றி இங்கே வரவு செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சில மாற்றங்களைக் கொண்டுவரவேண்டுமென்ற அடிப்படையில் "டாஸ்க் ஃபோர்ஸ்" அதாவது மாநில திட்டக் குழுவின் பணிக்குழுவின் அறிக்கையும் தயாராகியிருக்கிறது. இந்த பணிக் குழுவிலே முன்னாள் யுனெஸ்கோ டைரக்டராக இருந்த மால்கம் ஆதிசேஷய்யா போடப்பட்டிருக்கிறார். அவரே அறிக்கை கொடுத்திருக்கிறார். அது மிகச் சிறந்த கல்விச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரப்போவது போன்றிருக்கிறது. ஆனால் இன்றைய நடைமுறைக்கு, சோஷலிச கருத்துக்களுக்கு ஏற்ற முறையில் கல்வித் துறை அமைக்கப்பட வேண்டுமென்பதற்கு முரணாகக் கூறியிருக்கிறார் என்று பார்க்கும் போது, எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலுமே போட்டிருக்கிற நிபுணர்களைப் பொறுத்த அளவிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ப போடப்பட்ட நிபுணர்களாக போடப்படுவதில்லை. அவர் கொடுத்த அறிக்கையைப் பார்த்து, டாஸ்க் ஃபோர்ஸ் அறிக்கையைப் பார்த்து நம்முடைய அரசாங்கத்தைப்

@ மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

பாராட்டியவர்கள் அமெரிக்க நாட்டு நிபுணர்கள் என்று பார்க்கும் போது நமக்கு அங்கே தான் ஐயப்பாடு வருகிறது. இப்படி போடக் கூடிய நிபுணர்களை எந்த அடிப்படையில் போடுகிறார்கள் என்று தெரியவில்லை. இந்த அறிக்கையில் சொல்லப்படுவது என்னவென்றால், இன்றைக்கு (ஹையர் எஜுகேஷனுக்கு) உயர் கல்விக்குச் சம்பளம் விதிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை அவர்கள் வலிமையாக வற்புறுத்துகிறார்கள். மேல் நிலைக் கல்வி என்று கல்லூரிக்கு வரும் போது அதற்கு கட்டணம் வசூலிக்கவேண்டும், அது வடிகட்டுவதாக அமையும், அப்போதுதான் மாணவர்களின் தரம் உயரும் என்று சொல்லப்படுகிறது. இத்தகைய தனியார் கல்வி நிறுவனங்கள் 50 சதவீதம் கட்டணங்களை உயர்த்திக் கொள்ளலாம். அதற்கு அனுமதி கொடுத்து விடவேண்டுமென்று அந்த அறிக்கையில் இருக்கிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, ஏற்கெனவே தனியார் கல்லூரிகள் அடித்து வரக் கூடிய கொள்ளை லாபத்திற்கு மேலும் ஊக்கம் அளிப்பதாக இது அமைகிறது. இதைத் தவிர, மார்க் அடிப்படையிலே, மெரிட் அடிப்படையிலே மேல் பட்டப்படிப்பிற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒன்றை மறந்து விட்டு இப்படி சொல்கிறார்கள். இன்றைய சமுதாய அமைப்பிலே ஒரே சீரான கல்வி அமைப்பு முறை கொண்டு வர ஏற்பாடு ஆகி வருகிறது. இருப்பினும், கிராமப்புறங்களில், சேரிகளில், போன்ற இடங்களிலிருந்து பயின்று வரக்கூடிய மாணவர்கள், நகரப் புறங்களில் பயின்று வரக்கூடிய மாணவர்கள் இவர்களிடையே வேறு பாடு இருக்கத்தான் செய்யும். உசிலம்பட்டியில் இருக்கக் கூடிய மாணவர் சென்னையில் இருக்கிற மாணவரோடு போட்டி போட முடியாது. அவர்கள் நிலையிலிருந்து பெற்ற கல்வியின் தரத்தில் அவர்களை அனுமதிக்கவேண்டும். அந்த அடிப்படையிலே அவா களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். அவர்களை மேல் படிப்புக்கு அனுமதிக்கக் கூடாது என்ற அடிப்படையில் இந்தக் கமிட்டிகளே சிபாரிசு சொல்வது மிகவும் ஆபத்தானது. அது இன்றைய நிலைக்கு ஒத்து வராது. இன்னும் நம் நாட்டில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் வந்து விடவில்லை.

மாணவர்களை அனுமதிப்பதிலே வடி கட்டுவது என்ற நோக்கத் தினைப் பரிந்துரைந்திருப்பது தரம் கெட்டு விடும் என்ற நோக்கத்திற் காக அல்ல, வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கும், போட்டிகளைத் தவிர்ப்பதற்கும் உதவும் என்று இப்படிச் செய்கிறார்கள்



இப்படிப்பட்ட முறை சரியானது தானா என்பதை சிந்திக்க வேண்டும். இப்படி ஏற்படுத்தி நிறுத்திவிட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்து விடும் என்று எண்ணுவது முதலாளித்துவ நாடுகளுக்குப் பொருந்துவதாக இருக்கலாம். மால்கம் ஆதிசேஷய்யா அவர்களைப் பொறுத்தவரை அவருக்குப் பொருந்துவதாக இருக்கலாம். ஆனால் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கைக்கு இது பொருத்தமாக இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். இவ்வளவு அதிகமாக செல விடக் கூடிய இந்தக் கல்வித் துறையில் இவ்வளவு ஆபத்தான கொள்கையை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சொல்லி அரசாங்கம் இதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மாணவர்களின் தரம் உயருவதற்காக எடுக்கப்பட்டுள்ள முயற்சி களை வரவேற்கிறோம். மாணவர்களின் கல்வித் தரம் உயருவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை வரவேற்கிறோம். மாணவர்களின் கல்வித் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்றால், மாணவர்கள், ஆசிரியர் விகிதாசாரம் குறைக்கப்படவேண்டும். மாணவர்கள் ஆசிரியர்கள் விகிதாசாரம் குறைக்கப்படவேண்டுமென்று அமைச் சருடைய அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறதே, என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் ஒன்றும் கிடையாது. 1956–57இல் மாணவர்களின் எண்ணிக்கை 39.10 லட்சம் என்றால் 1972–73இல் அது 74.36 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அதாவது ஒன்றரை மடங்கு உயர்ந்திருக்கிறது. அதே நேரத்தில் ஆசிரியர் களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், 1956–57-இல் 1.8 லட்சமாக இருந்தது 1972–73இல் 2.34 லட்சமாகத் தான் உயர்ந் திருக்கிறது. அதாவது ஒரு மடங்கு தான் உயர்ந்திருக்கிறது. ஏற்கெனவே விகிதாசார அடிப்படையில் குறைக்கப்பட வேண்டு மென்றும், கல்வித் தரம் உயர்த்தப்படவேண்டும் என்றும் சொல்லப் பட்டதே, மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்த அளவிற்கு ஆசிரியர் களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. இதிலே விகிதாசாரத்தைக் குறைப்பதற்குத் தெளிவான திட்டத்தை அறிவித் திருக்கிறார்களாவென்பதைப் பார்க்க வேண்டும். இதைப் பற்றி சுட்டிக் காட்டினால், மாணவர்களுக்குத் தனியாக பயிற்சி கொடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. பெரிய செல்வந்தர்களுக்கு, அதிகமான பணம் வைத்திருப்பவர்களுக்கு இப்படிப்பட்ட பயிற்சி

[திரு. க. சுப்பு] [1973 மார்ச் 20

கொடுப்பது சாத்தியமாக இருக்கலாம். ஆனால் சாதாரண மக்களை கைதூக்கி விடக் கூடிய முறையில் மாணவர்கள் ஆசிரியர்கள் விகிதாசாரத்தைக் குறைக்கவேண்டும். இது அவசியம்.

ஆசிரியர்களின் வேலை இல்லா திண்டாட்டத்தைப் பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று பார்க்கவேண்டும். வேலையில்லாமல் இருக்கிற ஆசிரியர்களுக்கு எந்த அளவிற்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்று பார்த்தால், மத்திய அரசாங்கத்தின் உதவியில் 1200 பட்டதாரி ஆசிரியர்களை நடு நிலைப் பள்ளிகளுக்குத் தலைமை ஆசிரியர்களாகப் போடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரி தான். ஆனால் இதிலே பிரச்சினை இருக்கிறது. இவர்களைப் போடுவதால் எங்களுடைய நிலைமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அடிஷனல் ஹெட்மாஸ்டர்கள் சொல்கிறார்கள். அவர்கள் எங்களை இது பாதிக்கிறது என்று சொல்லி ஏற்கெனவே சட்ட மன்ற உறுப்பினர்களை நோக்கி படையெடுத்து வந்தார்கள். அவர்களுக்கு இருக்கக் கூடிய சந்தர்ப்பங்களில் அவர்களுடைய வாழ்க்கையிலே அடையக் கூடிய உச்சமான பதவி ஹெட்மாஸ்டர் பதவிக்கு வரலாம். அது தடை படக் கூடாது.

இந்த 1,200 பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க, அவர்களை வேலையில் அமர்த்திக்கொள்ள வழி இருக்கிறது. அதற்காகத்தான் ஆசிரியர், மாணவர் விகிதாசாரத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்கிறோம். ஒரு ஆசிரியருக்கு 80 மாணவர்கள் இருந்தால் அது பள்ளிக்கூடமா, அல்லது வேறு ஏதாவதா என்று கேட்கவேண்டிய நிலைமையில் இருக்கிறது. விகிதாசாரத்தைக் குறைத்து, அந்த உயர்நிலைப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்களைப் போட்டு மத்திய அரசாங்க பணத்திற்குத் திட்டங்களைத் தீட்ட வேண்டும். கார்ப்பரேஷனில் கூட ஓய்வு பெறக் கூடிய ஆசிரியர்கள் ஸ்தானங்களில் நடு நிலைப் பள்ளிகளில் புதிதாக அடிஷனல் ஹெட்மாஸ்டர்களைப் போட்டு அவர்களுக்கு மனக் குறை ஏற்படுத்துகிறோம். அவர்களுக்கு மனக் குறை ஏற்படுகிறதென்றால், கல்வித் தரம் குறைந்து போகும். கல்வி கற்றுத் தரவேண்டுமென்ற மனோபாவம் குறைந்து போகும். பி.டி. ஆசிரியர்கள் பிரச்சினை நல்ல முறையில் தீர்க்கப்பட்டது, தீர்ந்து விட்டது என்று எண்ணியிருந்தோம்.

ஆனால் முதலமைச்சர் அவர்கள், அந்த ஆசிரியர்கள் அபாலஜி லெட்டர், நான் என்னுடைய செயலுக்கு வருந்துகிறேன் என்று எழுதிக் கொடுத்துவிட்டு வேலைக்குச்சேர வேண்டும் என்று



1973 மார்ச் 20] [திரு. க. சுப்பு]

சொல்லுகிறார். நான் போராட்டம் நடத்தியதற்கு வருந்துகிறேன் என்றால் என்ன அர்த்தம்? நான் செய்தது தப்பு என்று தானே அர்த்தமாகும். இன்டிவிஜுவல் லெட்டர் கேட்கிறார் முதலமைச்சர். அப்படிக் கொடுத்தால் தான் வேலைக்குச் சேரலாம் என்று சொன்னால்.........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் சட்டசபையில் சொன்னதைத் தான் அவர்களிடத்தில் சொன்னேன். சட்டசபையில் சொல்லியிருக்கிறேன். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் சிலர் அவர்களுடைய செயலுக்கு வருத்தம் தெரிவித்து எழுதிக் கொடுத்துவிட்டு மீண்டும் கடமையாற்ற வந்திருக்கிறார்கள். அவர்களை வரவேற்கிறேன். அதேபோல போராட்டத்தில் ஈடுபட்ட மற்ற ஆசிரியர்களும் வருத்தம் தெரிவித்து கடமையாற்ற வருவார்களேயானால், அவர்களை வரவேற்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அதைத் தான் நான் நேற்று அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். அவர்கள் எழுதிக் கொடுத்துவிட்டால் அவர்கள் பழிவாங்கப் படமாட்டார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. சட்டசபையில் அதைத் தான் சொன்னேன். அதையே தான் நேற்று கல்வி அமைச்சர் அவர்களும் நானும் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம்.

* திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, ஏற்கனவே எழுதிக் கொடுத்தவர்களைப்பற்றி சொல்ல வேண்டியதில்லை. மற்றவர்களும் அப்படி எழுதிக் கொடுக்கவேண்டுமென்று சொல்வது சரிதானா என்று சிந்திக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எல்லோரும் சேர்ந்து தான் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். கிட்டத் தட்ட 5,000 ஆசிரியர்களில் 1,000 பேர் பி.டி. ஆசிரியர்கள். அப்படி 5 ஆயிரம் பேர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஆயிரம் பேர் வருத்தம் தெரிவித்து எழுதிக் கொடுத்துவிட்டு கடமைக்குச் சேர்ந்திருக்கும் போது, மற்றவர்கள் எழுதிக் கொடுக்கமாட்டோம், எழுதிக் கொடுக்காமலே வேலையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்றால், எழுதிக் கொடுத்தவர்கள் தவறு செய்துவிட்டது போலவும், எழுதிக் கொடுக்காதவர்கள் திறமையுள்ளவர்கள் போலவும் நிலைமை ஆகிவிடக்கூடாது என்பதற்காகத் தான் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, பி.டி. ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுவிட்டதாகத் தெரிவித்த சனிக்கிழமை அன்று ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டு வந்தபோது நான் தெளிவாகக் கேட்டேன். அந்த ஆசிரியர்கள் யாவர் பேரிலும் நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது அல்லவா என்று கேட்டேன். நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று சொல்லுகிறபோது, ஏற்கனவே வேலை நிறுத்தம் வாபஸ் வாங்கப்படுவதற்கு முன்பு 1,000 பேர் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வேலைக்குச் சேர்ந்திருக்கலாம். இன்றைக்கு மற்றவர்கள் வேலைக்கு வருவதற்கு தயாராக இருக்கக்கூடியவர்களை, அவர்களும் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்கவேண்டும் என்று கேட்பது பழி வாங்கும் தன்மை அல்லவா. அவர்களாக இன்றைக்கு வேலைக்கு வரத் தயாராக இருக்கிற போது வேலைக்கு வரவேண்டும் என்று வரவேற்கக் கூடிய முறையில் ஏதாவது ஒப்பந்தம் முடியும் நிலையில் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் (அஷ்யூரன்ஸ்) தன்மை அதுவாகத் தான் இருக்கிறது என்று நானும் கருதுகிறேன். நேற்று அவர்களுடைய அறிக்கை வந்த பிறகு எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆகவே, ஏற்கனவே 1,000 பேர் கையெழுத்துப் போட்டு விட்டார்கள் என்பதற்காக மீதி இருக்கக்கூடிய 4,000 பேரும் மன்னிப்புக் கடிதத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்வது சரிதானா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தங்கமணி ஒப்பந்தம் ஆனது என்று சொன்னார்கள். அதை மாற்றிக் கொள்ள வேண்டும். ஒப்பந்தம் எதுவும் ஆகவில்லை. அவர்களுக்கு நாங்கள் எடுத்துச் சொல்லியும், நானும், கல்வி அமைச்சர் அவர்களும் வேண்டுகோள் விட்டும், கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு விட்டன என்று கூறியும், பெரும்பாலான கோரிக்கைகள், முதலாவதாக அவர்களுடைய சர்விஸ் கண்டிஷன்கள் வரைமுறைப் படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை நிறைவேற்றப்பட்டும் ; பிறகு செலக்ஷன் கிரேட் பத்து வருட சர்விஸ் உள்ளவர்களுக்கு எல்லாம் நிறைவேற்றப்பட்டும், பிறகு அவர்களுடைய பாதுகாப்புக்கான மசோதா ஒன்று சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட செலக்ட் கமிட்டியால் ஆராயப்பட்டு வருகிறது, ஆகவே அது நிறைவேற்றப்பட்ட கோரிக்கை; அதை இப்போது பேசவேண்டியதில்லை, நிறைவேற்றப்



பட்டுவிட்டது என்று சொல்லியும், ஆகவே ஆசிரியர்களே போராட்டத்தைக் கைவிடுங்கள் என்று அரசு சார்பிலும் என் சார்பிலும் கல்வி அமைச்சர் சார்பிலும் சொல்லியும் போராட்டத்தை வாபஸ் பெறாமல் நடத்தினார்கள். பிறகு அவர்களாகவே போராட்டத்தை வாபஸ் வாங்கிவிட்டதாக எங்களிடம் எழுதிக் கொடுத்து, போராட்டத்தை நிறுத்தினார்கள். போராட்டத்தை வாபஸ் பெற்று விட்டதால், மறியல், வேலை நிறுத்தங்கள் நடைபெறாது என்ற காரணத்தால், அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்று அறிவித்தேன். நான் இந்தப் பிரச்சினை கல்வி மானியத்தில் வரும் என்பதற்காகவே அன்றையத் தினம் சபையில் குறிப்பிட்டிருக்கிறேன்.

"போராட்டத்தில் ஒரு பகுதியினர் ஈடுபட்டாலும் கடமையுணர்ச்சியோடு மற்றொரு பகுதியினர் தொடர்ந்து பணியாற்றி வந்தமைக்கு எனது நன்றியையும் பாராட்டுதல்களையும் அந்த ஆசிரியப் பெருமக்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சிலர் தங்கள் செயலுக்காக வருந்திக் கடிதம் எழுதித் தந்து மீண்டும் தொடர்ந்து பணிபுரிய வந்திருப்பதற்காக அவர்களது கடமையுணர்ச்சியையும் நான் வரவேற்கிறேன்."
"அதே போல" என்று சொல்லியிருக்கிறேன்.

"அதே போல் போராட்டத்தில் ஈடுபட்ட மற்ற ஆசிரியர்களும் கடமை உணர்வோடு பணியாற்ற முன்வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்",

என்று குறிப்பிட்டிருக்கிறேன். பழி வாங்குவது என்றால் அவர்கள் வருத்தம் தெரிவித்து கடிதம் எழுதிக் கொடுத்த பிறகும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று பழி வாங்குவதாக அர்த்தம். வருத்தம் தெரிவித்து கடிதம் எழுதிக் கொடுத்த பிறகு, நிச்சயமாக வேலைக்கு ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்று கூறுவது பழி வாங்குவது என்று அர்த்தம் அல்ல.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் ஒரு மானியத்தின்மீது விவாதிக்கும் போது ஒரு உறுப்பினர் ஒரு பிரச்சினையை எழுப்பினால், அமைச்சர்கள் விளக்கம் தருகிறார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி முடித்தால்தான் பேரவை 2 அல்லது 3 மணிக்கு முடியும். அதை விட்டுவிட்டு ஒவ்வொரு கட்சிக்காரர்களும் கேள்விக்கு மேல் கேள்வி

கேட்டு, விவாதத்தை கேள்வி நேரமாக நடத்துகிறார்கள். இது கேள்வி நேரமா அல்லது மான்யத்தின்மீது விவாதமா என்று தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்திற்குப் பின்னால் நடக்கிற மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் தான்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நண்பர் வீராசாமி சொன்னதற்கு I take strong objection நீங்கள் அனுமதிக்காமல் இருந்திருந்தால் நான் பேசியிருக்க மாட்டேன். நீங்கள் அனுமதித்து நான் பேசிய பிறகு, யார் யாரோ கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் பேசுகிறார்கள் என்ற முறையில் நண்பர் அவர்கள் சொல்லுவது எல்லாம் சரியானதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னொரு விஷயம். இந்தக் குறிப்பிட்ட விஷயத்தைப் பொறுத்த வரையில், இதே மாதிரி கேரளத்தில் ஒரு சம்பவம் ஏற்பட்டது. அங்கு திரு. அச்சுத மேனன் அவர்கள், தாங்களாக வேலைக்குத் திரும்பி வந்தவர்களைப் பொறுத்தவரையில் அண்டர்டேக்கிங் கொடுக்க வேண்டும். அப்பாலஜி கடிதம் கொடுக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்யவில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கேரளத்தைப் பொறுத்த வரையிலும் அவர்கள்மீது எடுத்த நடவடிக்கைகள் அப்படியே இருக்கின்றன. தாற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள். சில பேரை தாற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். தலைமை ஆசிரியர்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். இப்போது நம்முடைய மாநிலத்தில் ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தது போன்று சென்ற ஆண்டே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றபோதும், போலீஸ் சட்டத்தின் 41-வது விதியை அவர்கள் மீறிய போதும், அது குற்றம், அதற்கு தண்டனை உண்டு என்று அதை எடுத்துச் சொன்ன பிறகும் மீறினார்கள். ஆகவே சிறையில் அடைக்கப்பட்டார்கள். அப்படி மீறியவர்களை இப்போது இருக்கின்ற கல்வித் துறை விதிகளை வைத்து வேலையிலிருந்து நீக்க இடமிருக்கிறது.

இந்த ஆண்டு அவர்கள் சென்ற ஆண்டை விட முழு பலத்தையும் சேர்த்து எந்தவித வருத்தமும் தெரிவிக்காது, ஆண்டு தோறும் பங்குனி மாதம் நடத்தப்படுகின்ற பங்குனித் திருவிழா போன்று,



ஒவ்வொரு ஆண்டும் மார்ச்சு மாதத்தில் இப்படிப்பட்ட போராட்டத்தை நடத்துவது என்ற முறையை வைத்துக் கொண்டு இந்த ஆண்டும் நடத்தினார்கள். பல முறை இது தவறு என்று எடுத்துச் சொன்னோம். கல்வித் துறை மூலமாக அறிக்கைகள் விட்டோம். அவர்களும் அறிக்கை விட்டிருக்கிறார்கள். துச்சமென மதிப்போம், ஏற்றுக்கொள்ள மாட்டோம்; ஆசிரியர்கள் படை திரளுகிறது; தன்னிகர் அற்ற சிங்கமென எழுந்து நில்லுங்கள், போராட்டப் படை புறப்படட்டும்; இந்தச் சட்டங்களை முறியடிப்போம் என்று அறிக்கைகள் விட்டார்கள். அதனுடைய விளைவுகளை தாங்கிக் கொள்ளுகின்ற உணர்வோடு அவர்கள் இருக்க வேண்டும்.

போலீஸ் சட்டத்தின் 41-வது விதியை மீறி ஊர்வலத்தை நடத்தினார்கள். அதன் பேரில் தான் கைது செய்யப்பட்டார்கள். பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாமல் "ஆப்செண்ட்" ஆனவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சஸ்பெண்டு செய்து வைக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க இடமிருக்கிறது. அப்படியிருந்தும் கூட, இப்போதும் மன்னிப்பு கேட்க வேண்டுமென்று அரசு கூறவில்லை. அவர்கள் செயலுக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் இருக்கிறது, அதனுடைய கட்டளைகளை ஆசிரியர்கள் மதிக்கமாட்டார்கள், கல்வித் துறை சட்ட திட்டத்தை மதிக்க மாட்டார்கள், வேண்டுகோள்களை மதிக்கமாட்டார்கள். சங்கம் விடுக்கிற வேண்டுகோளின்படி, அது போராட்டம் நடத்து என்றால் நடத்துவார்கள்; அவர்கள் எப்படி நடத்த வேண்டுமென்று சொல்லுகிறார்களோ, அப்படி நடத்துவார்கள், அவர்கள் நிறுத்திக் கொள்ளுங்கள் என்றால் நிறுத்திக் கொள்ளுவார்கள் என்ற முறையில் செய்திருந்தும்கூட, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற தன்மையிலோ, பழி வாங்கவேண்டுமென்ற முறையிலோ மன்னிப்பு கேட்க வேண்டுமென்று சொல்லவில்லை. வருத்தம் தெரிவித்துக் கொள்ளவேண்டும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

போலீஸ் சட்டத்தை மீறியதற்கு வழக்கு மன்றத்தில் வழக்கு இருக்கிறது. வழக்கு மன்றம் தண்டனை கொடுக்கலாம். டிபார்ட்மெண்டு நடவடிக்கை எடுத்து நீக்க இடமிருக்கிறது. அப்படிப்பட்ட பழிவாங்கும் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளாது என்ற அடிப்படையில்தான், மற்றவர்கள் எப்படி தங்களுடைய செயலுக்கு வருத்தம் தெரிவித்திருக்கிறார்களோ அப்படி இவர்களும் தெரிவிக்க வேண்டும் என்று தான் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் அறிக்கை

[டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 20

விட்டதில்கூட தங்கள் செயலுக்கு வருத்தம் தெரிவிக்கவில்லை. ஆகவே சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும் என்று அரசு விரும்புகிறது. ஒரு இயக்கத்தின் தன்மையைக் காப்பாற்ற விரும்பு கின்ற மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், மாண்புமிகு தங்கமணி அவர்கள் ஒரு அரசின் கட்டுப்பாடு, ஒழுங்கு, சட்டதிட்டம் ஆகிய வற்றைக் காப்பாற்றுவதற்கும் துணை புரிய வேண்டும், உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : துணைத் தலைவரவர்களே, "ஆன் எ பாயிண்ட் ஆஃப் எக்ஸ்ப்ளனேஷன்", ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். ஆசிரியர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக போராடும்போது மக்களுடைய, அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக "டு த்ரோ ஸம் லைட் ஆன் தி இஷ்யூ" ஜனநாயக ரீதியில் போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் விஷயத்தில் இவ்வளவு பரந்த தாராளமனத்தோடு நடந்துகொள்ளும் அரசு, தண்டனை கொடுக்க இடமிருந்தாலும் தண்டனைகூட கொடுக்காமல் விட்டுவிடுகிறோம் என்று பொருள்படக்கூறும் அரசாங்கம், இந்தச் சின்னஞ்சிறு கடிதத்திற்காக "வருந்துகிறோம்" என்று எழுதிக் கொடுக்கும் அந்தக் கடிதத்திற்காக பிடிவாதம் காண்பிக்க வேண்டுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஆசிரியர்கள் தங்கள் மனத்தில் ஒரு வருத்தத்தோடு மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது உகந்ததாக இருக்குமா என்பதை அரசு யோசித்து, அரசு பரந்த மனப்பான்மையோடு, விவகாரம் தீர்ந்து விட்டது, இதோடு போகட்டும் என்ற அளவில் இந்தக் கடிதத்திற்காக நிற்காமல் இதைச் சுமுகமாக முடித்துவிட்டால் நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆசிரியர்களுக்கு இவ்வளவு விட்டுக் கொடுத்து இருக்கிறோம் என்பதை அம்மையார் அவர்கள் பாராட்டியதற்கு நன்றி. "அரசாங்கம் இந்தச் சின்னஞ் சிறு கடிதத் திற்காக பிடிவாதம் காண்பிக்க வேண்டுமா" என்று சொல்லும் அம்மையார் அவர்கள் அதையே ஆசிரியர்களிடம் நன்கு எடுத்துச் சொல்லி, "இது மிகச் சாதாரண விஷயம்தானே, வருத்தம்தானே தெரிவிக்கச் சொல்லுகின்றார்கள், அதை எழுதிக் கொடுத்து விடுங் களேன்" என்று அவர்களுக்குச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளு கிறேன்.



1973 மார்ச் 20]

திருமதி த. ந. அனந்தநாயகி : அரசாங்கத்தைப் பொறுத்த வரையில்தான் அது சாதாரணமான காரியம். ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில்..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த நேரத்தை சவால் விடுவதற்கோ அல்லது சேலஞ்ஜ் பண்ணுவதற்காகவோ பயன் படுத்தக்கூடாது. நல்லதில்லை. கிட்டத்தட்ட 20, 22 பேர் இன்றைய தினம் பேச வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். அப்படிப் பார்த்தால் விவாதம் $2\frac{1}{2}$ மணி வரையில் போவது திண்ணம். மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதம் $1\frac{1}{2}$ மணிக்கெல்லாம் முடிய வேண்டும் என்று இருந்தாலும் நாம் தினமும் பேரவையின் அனுமதியோடு 2 மணி $2\frac{1}{4}$ மணி வரையில் நீடித்துக்கொண்டு போவது வழக்கமாகிவிட்டது. எனவே, நேரத்தில் முடிப்பதற்கு உதவியாக ஒவ்வொரு கட்சிக்கும் ஒருவர் மட்டும் பேசும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சட்டப்பேரவைத் துணை தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவர்களுடன் கலந்து பேசி இன்று மாலையிலும் இந்தக் கல்விமானியத்தின் மீதான விவாதத்தை வைத்துக் கொள்ளலாம் என்று யோசனை கூறப்பட்டு இருக்கிறது. அதற்கு ஏற்ப பகல் $1\frac{1}{2}$ மணியோடு காலை நிகழ்ச்சியினை முடித்துக்கொண்டால் மாலையில் கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் நிகழ்ச்சியினை மட்டும் வைத்துக்கொள்ளலாம் என்று யோசனை கூறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை மீண்டும் 4 மணி அளவில் கூடலாம். அப்படி இருந்தாலும்கூட $1\frac{1}{2}$ மணிக்கு காலை நிகழ்ச்சி முடியாதென்றே தோன்றுகிறது. நிறைய பெயர்கள் லிஸ்டில் இருக்கின்றன. திரு. சுப்பு தம் பேச்சைத் தொடரலாம்.

* திரு. க. சுப்பு : தலைவரவர்களே, பெற்றோர்களுடைய ஸ்தானத் தில் உள்ள அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் எப்படி அணுக வேண்டும் என்பதை மீண்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மடியில் தவழ்ந்து மழலை மொழி பேசும் குழந்தை தகப்பனைப் பார்த்துக் கொன்றுவிடுவேன் என்று சொன்னால், அதனால் அந்தத் தகப்பன் அஞ்சப்போவதில்லை, கோபப்படுவதும் இல்லை. அது போல, "சிங்கமென சீறி எழு ஆசிரிய சமுதாயமே, பொங்கியெழு" என்றெல்லாம் ஆசிரியர்கள் சொல்லிப் போராட்டத்தில் இறங்கினார் கள் என்று மாண்புமிகு நாவலர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

[1973 மார்ச் 20

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தகப்பனைப் பார்த்து "கொன்று விடுவேன்" என்று குழந்தை சொன்னால், தகப்பன் சொல்லுவான், "இனி அப்படிச் சொல்லாதே, அது நல்ல வழக்கமில்லை, சொல்லாதே, சொல்லாதே" என்று சொல்லி, அந்தக் குழந்தையும் "இனிச் சொல்ல மாட்டேன், சொல்ல மாட்டேன்" என்று சொல்லும். நல்ல தகப்பனாக இருந்தால் குழந்தையை திருத்தாமல் விடமாட்டான்.

திரு. க. சுப்பு : அந்த நல்ல தகப்பனுடைய இலக்கணம் நமது அரசுக்கு வரவேண்டாம் என்று விரும்புகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன், இன்று ஆசிரியர்கள் இப்படிப்பட்ட வார்த்தைகளை உபயோகிக்கின்றார்கள் என்றால் அது அனைத்தும் இன்று ஆட்சிப்பொறுப்பில் உள்ள கட்சியைச் சார்ந்தவர்களால் உருவாக்கப்பட்டதுதான். எனவே இதற்காக நீங்கள் வருத்தப்பட்டாலும் நான் வருத்தப்படவில்லை. எனவே அதைச் சொல்லி, இனி எதிர்காலத்தில் இப்படித்தான் நடக்க வேண்டும் என்று சொல்லுவது, எதிர்காலத்தில் மன அமைதியையும் நல்ல சூழ்நிலையையும் சுமுகமான உறவையும் ஏற்படுத்துவதாகாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு நாட்டின் விடுதலைப் போராட்ட காலத்தில் முழங்கப்பட வேண்டிய வார்த்தைகளை இப்படிப்பட்ட போராட்டங்களில் பயன்படுத்தி, அப்படிப்பட்ட வார்த்தைகளுடைய மதிப்பினைக் கெடுத்துவிடக் கூடாது என்பதுதான் என் எண்ணம்.

திரு. க. சுப்பு : அவற்றைப் பயன்படுத்தலாமா கூடாதா என்பதைக் காலம்தான் முடிவு கட்ட வேண்டும். ஆனாலும் ஒரு அமைதியான சூழ்நிலையினை ஏற்படுத்துவதற்கு இப்படிப்பட்ட ஒரு மன்னிப்புக் கடிதத்தினை எழுதி வாங்குவது நன்மை பயக்குமா என்று பரிசீலித்துப் பார்க்க வேண்டும். இதை விடுத்து ஆசிரியர்களுடைய மனத்திலுள்ள குறைகளைப் போக்கி இப்படிப்பட்ட போராட்டங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக என்னென்ன செய்யலாம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசாங்கத்தின் சார்பிலே "மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தால் தான் ஆயிற்று" என்று சொல்லுவதும், ஆசிரியர்களின் மத்தியில் இதனால் மனக்கசப்பு ஏற்படுவதும்—ஏதோ பெரிய தொழிற் சங்கத்தினை நடத்துகின்றவர்களை அணுகுவதுபோல அரசாங்கம்



1973 மார்ச் 20] [திரு. க. சுப்பு]

இதில் நடந்துகொள்ளாமல் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு, இந்தக் கடிதத்தினை, மன்னிப்புக் கடிதத்தினை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "மன்னிப்பு கடிதம், மன்னிப்புக் கடிதம்" என்று சொல்லுகின்றார்கள், "அபாலஜிக்கும்" "ரிக்ரெட்"டுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். அரசாங்கம் வற்புறுத்துவது, வருத்தத்தினைத் தெரிவிக்கும் கடிதம்தான்.

திரு. க. சுப்பு : "வருந்துகிறேன்" என்று சொன்னால், "நடந்து கொண்டது தவறு, வருந்துகிறேன், மன்னிக்க வேண்டும்" என்றுதான் பொருளாகிறது. எனவே இந்தப் பிரச்சினையை நீடிக்க வேண்டாம். கௌரவப் பிரச்சினையாகக் கருதாமல் அரசு இதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதே நேரத்தில் மற்றுமொன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

பாலிடெக்னிக் மாணவர்கள் நேற்றுக்கூட கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். நான் தெரிந்துகொண்ட அளவிற்கு இந்த பிரச்சினையைப் பொறுத்தவரையில் அந்தத் துறையினர் அவர்களுக்குச் சில வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் கோரிக்கை "டிப்ளோமா" படித்த அவர்களுக்கு "டிகிரி" படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பது. அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இருக்கின்றது. ஏற்றுக்கொண்டு பல்கலைக் கழகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். எவ்வளவு வருட காலத்தில் அவர்கள் "டிகிரி கோர்ஸ்" முடிய வேண்டும் என்று வேண்டுமானால் பிரச்சினையிருக்கலாம். அதை நிபுணர் குழுவினரின் பரிந்துரைக்கு அனுப்பி வைக்கலாம்.

இதைத் தவிர இன்னும் ஒன்று, இப்போது, "இண்டர்னெல் அசஸ்மெண்ட் சிஸ்டம்" என்று இருக்கின்றது. இதில் 15 சதவிகிதத்தினர்தான் வெற்றிபெற்று இருக்கின்றார்கள். 85 சத விகிதத்தினர் தேர்வு பெறவில்லை. இப்படிப் பெருவாரியான மாணவர்கள் தேர்வு பெறாமல் போகும் நிலைமாறி மாணவர்கள் பெரும் பகுதியினர் தேர்வு பெறத்தக்க அளவில், இந்தப் பிரச்சினையில் மாணவர்களுக்கு வேண்டியது என்ன என்பதை ஆலோசிக்க வேண்டும்.

[1973 மார்ச் 20

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : "அகெடமிக் ஸப்ஜெக்ட்ஸ்" என்று சொல்லும்போது அது அரசால் மட்டும் தீர்மானிக்கப்படுவ தில்லை. ஆலோசனையை மட்டும் அரசு வழங்கலாம். அவர்கள் போராடுவது "அகாடெமிக்ஸ் ஸப்ஜெக்ட்ஸ்" பற்றியது. இப்படிப் பட்ட போராட்டத்தை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஆதரிக் கின்றார்களா, இப்படிப்பட்ட தவறான போராட்டத்தினை அங்கத்தினர் அவர்கள் ஊக்குவிக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : மற்ற மற்ற மாநிலங்களில் இம்முறை அங்கீகரிக்கப் பட்டு இருக்கின்றது. இங்கே மாணவர்கள் தங்களுடைய மேல் படிப்பிற்கு வசதிகள் வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்திருக் கின்றார்கள். இதை அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிறது. ஆனால் அவர்கள் எந்தெந்தப் பாடங்களைப் படிக்க வேண்டும் என்று சொல்ல மாணவர்களுக்கும் உரிமையில்லை எங்களுக்கும் உரிமையில்லை. கல்வி நிபுணர்கள்தான் அதைப்பற்றிச் சொல்ல வேண்டும். அரசு அதற்கு ஏற்பாடுகளைச் செய்ய உத்திரவிட்டுவிட்டால் மாணவர்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு விட்டதாகத்தான் அர்த்தம். அடுத்து இந்த இண்டெர்னல் அஸெஸ்மெண்ட் பற்றியும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். காரணம் அதன்கீழ் 85 சதவிகித மாணவர்கள் தேர்வு பெறாமல் போய்விடுகின்றார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படியானால் 100-க்கு 85 சத விகிதத்தினர் தேர்வு பெற்றுவிட்டார்கள் என்று அரசு அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு சுப்பு அவர்கள் சிபாரிசு செய்கின்றார் களா?

திரு. க. சுப்பு : இப்படிப் பெரும் எண்ணிக்கையில் தேர்வு பெற வில்லையென்றால் இந்த முறையில் தவறு இருக்கின்றதா என்று பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்பதுதான் என் வேண்டுகோள். சோஷலிஸ நாடுகளில் பத்து சதவிகிதத்தினர் வெற்றிபெறவில்லை யென்றால் அவர்களுக்கு மீண்டும் ஸ்பெஷல் கோச் கொடுத்து அவர்களை வெற்றிபெறச் செய்வார்கள். பதினைந்து பேர்தான் தேர்வு பெறுகின்றார்கள் என்றால் அவர்கள் மனத்தில் ஓர் அச்சம் ஏற்பட்டிருக் கின்றது. நான் இந்த முறை வேண்டாம் என்றுகூடச் சொல்லவில்லை. இதில் உள்ள குறைபாடு என்ன என்று பார்த்து அதை நீக்கிவிட்டால் போதும்.



1973 மார்ச் 20] [திரு. க. சுப்பு]

அடுத்து கல்வி நிலையங்களைப்பற்றிச் சொல்லப்போனால், நான் சொல்ல விரும்புவதெல்லாம் அவை மாணவர்களைத் தவறான பாதை யில் எடுத்துச் செல்லும்படி அமையக்கூடாது என்பதுதான். சில நேரங்களில் அரசியல் நோக்கத்தோடு சில கல்லூரியினைத் தொடங்க உரிமை வழங்கப்படுகிறது. இன்றைக்கு வகுப்புவாத அடிப்படையில் கல்வி நிலையங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன என்று குற்றம் சாட்டு கிறேன். அப்படிப்பட்ட வகுப்புவாத அடிப்படையில் ஊக்குவிக்கப் படக்கூடிய கல்வி நிலையங்களில் பயிலக்கூடிய மாணவர்கள் எப்படி உயர்ந்த நிலைக்கு வர முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். சமதர்ம சமுதாயம் என்று வாய் கிழியப் பேசிவிட்டு இப்படி கல்வி நிறுவனங்களை ஜாதி அடிப்படையில் ஊக்குவிப்பதன் மூலம் அவர்கள் சரியான தகுதியில்லாமல் வந்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு நாம் அங்கீகாரம் கொடுக்கிறோம். இப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு யார் பேரை வைப்பது என்பதைப் பற்றி எண்ணுகிற போது உயிரோடு இருக்கிறவர்களுடைய பெயரை வைப்பதைத் தவிர்ப்பது நல்லது.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் ஆதித்தனார் பேரில் கல்லூரி ஒன்று இருக்கிறது. ஆதித்தனார் என்றால், அந்தப் பெயரைப் பார்த்தவுடனேயே அவர் ஒரு சரியான தலைவர் என்று நினைக்க வேண்டும். அவரைப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் வர வேண்டும். இவரைப் பற்றி ஒரு வரலாறு எழுதியிருக் கிறார் திரு. குரும்பூர் குப்புசாமி. அதைப்பற்றி நீதிமன்றத்தில் சொல்கிறபோது, "என்னைக் கேட்காமலே அந்த வரலாற்றை எழுதி இருக்கிறார்" என்று ஆதித்தனாரே கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட வரலாற்றைப் படிக்கிற மாணவர்களுக்கு அவர் மேல் என்ன மரியாதை வரும்? யார் இந்த குரும்பூர் குப்புசாமி? ஏன், எப்படி எழுதினார் என்றெல்லாம் பார்க்க வேண்டும். திரு. ஆதித்தனார், எனக்கு சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார். திரு. கண்ணப்பன் அந்தக் கல்லூரிக்குப் போயிருக்கிறார். அங்கே இருக்கிற கல்லூரி மலரை எடுத்துப் பார்த்தேன். ஆதித்தனாரின் போட்டோவைப் போட்டிருக் கிறார். அதற்கு கீழே ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார்கள். Not in Zoo. But in Zoological department. (மிருகக்காட்சி சாலையில் இல்லை—விலங்கியல் ஆய்வுக்கூடத்தில்தான்) என்று எழுதியிருக் கிறார்கள். அமைச்சர் அவர்கள் இதைப் பார்த்திருக்கமாட்டார். தெரியாமல் போட்டிருக்கிறார்கள். கிண்டல் பண்ணுகிற மாதிரியாக,

[திரு. க. சுப்பு] [1973 மார்ச் 20

இருக்கிறது. எனவே, உயிரோடு இருப்பவர்களின் பெயரை வைத்தால் மனமாச்சர்யங்கள் எல்லாம் வருகிறது. எனவே, அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அத்தகைய நிறுவனங்களைப்பற்றி கோர்ட்டுகளில் எத்தனை மோசமான ரிமார்க்குகள் வழக்குகளில் வருகின்றன? அதைப் படிக்கும் மாணவர்களுக்கு என்ன சிந்தனை இருக்கும்? எல்லாம் ஜாதிப் பெயர்கள். கோவையில் நாயுடுகள், விருதுநகரில் சிவகாசியில் நாடார்கள் இல்லையென்றால் தேவர். இப்படி ஜாதி அடிப்படையில் பெயர்களைப் போடுவதை அறவே ஒழிக்க வேண்டும் என்று நமது அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வி நிறுவனங்களில் நியமனம் செய்யப்படுகின்றபோது, திறமையானவர்களைத் தூக்கி எறிந்து விட்டு, திறமையற்றவர்களைக் கூட ஜாதி அடிப்படையில் போடுவது என்ற நிலை இருந்து வருகிறது. நான் இப்படிச் சொல்லும்போது திரு. மதியழகன் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகளை அங்கீகரிக்கிறேன் என்று அர்த்தம் இல்லை. இன்றைக்கு திரு. சுந்தரவடிவேலு அவர்களும் மு. வரதராசனாரும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால் ஜாதி அடிப்படையில் அல்ல என்றாலும் தற்செயலாக அப்படி வருகிறது............

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அவர்கள் நியமிக்கப்பட்டது ஜாதி அடிப்படையில் அல்ல. அறிவு அடிப்படையில். அவர்கள் ஆற்றல் மிக்கவர்கள் என்ற காரணத்தால்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். திரு. மு. வரதராசனார், திரு. சுந்தரவடிவேலு ஆகியோர்களை நியமித்திருப்பது ஜாதி அடிப்படையில் அல்ல. அவர்களுடைய தமிழ் அறிவினையும், கல்வித் துறைக்கு அவர்கள் ஆற்றிய பணியினையும் நாடு அறியும்.

* திரு. க. சுப்பு : நான் அவர்களைச் சொல்லவில்லை. தற்செயலாகவே அப்படி வருகிறார்கள் என்று தான் சொன்னேன். அவர்கள் மரியாதைக்குரியவர்கள் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். நான் அவர்களைப்பற்றிச் சொல்லவில்லை. இன்சிடண்டலி அப்படியும் வருகிறது என்று கூறினேன்.

நான் ஒரு அறிக்கைகூட விட்டிருக்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கடிதத்தை கையில் வைத்துக்கொண்டு சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் மதுரை சிண்டிகேட் தேர்தலில் ஒருவருக்கு வாக்குச் சேகரித்தார். அதைப்பற்றி அறிக்கை விட்டேன். அடுத்து மாண்புமிகு கல்வி அமைச்சருக்கு இது தெரியும் என்ற



1973 மார்ச் 20] [திரு. க. சுப்பு]

காரணத்தால் கூறினார். திரு. சந்திரபாபு எல்லாத் தகுதிகளும் வாய்ந்தவர்—இன்னும் சொல்லப்போனால், தேவைக்கும் அதிகமான தகுதிகள் வாய்ந்தவர் நூலகத் துறையில். ஆனால் இவர் நியமிக்கப் படாமல் இன்னொருவர்—அவருக்கு ஜூனியராக இருந்தவர் தில்லை நாயகம் என்பவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தேவைக்கும் அதிக மான, எல்லாத் தகுதிகளையும் கொண்ட திரு. சந்திரபாபு தேர்ந்தெடுக்கப்படாமல் தில்லைநாயகம் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்று சொன்னால் இந்த டிபார்ட்மெண்ட் இருக்கிறதா? என்ன செய்து கொண்டிருக்கிறது என்று புரியவில்லை. கன்னிமாரா நூலகத்தில் லைப்ரேரியன் பதவிக்கு அத்தனைத் தகுதிகள் உள்ளவர்; எம்.ஏ., டிப்ளமோ இன் ஆந்த்ரபோலஜி, டைப்ரைடிங், இந்தியில் மத்யமா இன்னும் ரொம்பத் தகுதிகளை உடையவர். இப்படிப்பட்ட நபர்கள் எல்லாம் புறக்கணிக்கப்படுவது சரியல்ல. இப்போது பதவி உயர்வு பெற்றிருக்கும் தில்லைநாயகம் எங்கள் ஜில்லாவைச் சேர்ந்தவர் தான். என்றாலும், தகுதி உள்ளவருக்கு இந்தப் பதவி கொடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

சட்டக் கல்லூரியில் அசிஸ்டெண்ட் புரொபசராகப் போடுகிறார்கள். யார், யாரைப் போடுகிறார்கள் என்றால், தேர்ட் கிளாஸ் எடுத்தவர்களைப் போடுகிறார்கள். மாணவர்கள்மீது குறை சொல்வதில் என்ன பிரயோசனம்? வருடா வருடம் ஸ்டிரைக் என்ற விவாதங்கள் எல்லாம் வருகின்றன. அந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறோம்? எப்படி நடைமுறை பின்பற்றப்படுகிறது என்று பார்க்க வேண்டும். மூன்றும் வகுப்பில் தேறியவர்கள் எல்லாம் லா காலேஜில் டியூட்டர். முதல் வகுப்பில் பாஸ் பண்ணியவர்களுக்கு இல்லை என்ற நிலை...............

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சில குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது, கையில் ஆதாரம் வைத்துக்கொண்டு பேச வேண்டும். சட்டக் கல்லூரியில் டியூட்டர் பதவி எத்தனை செகண்ட் கிளாஸ், எத்தனை தேர்ட் கிளாஸ் பாஸ் பண்ணியவர்களுக்கு கொடுக்கப்பட்டன என்ற விவரங்கள் எல்லாம் அங்கத்தினர் வைத்திருந்தால், அதைத் தெரிவித்தால் நல்லது. இந்த நியமனங்கள் சர்வீஸ் கமிஷனால் செய்யப்படுகின்றன. தகுதி இல்லாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், அப்படிக் கொடுக்க வேண்டிய அவசியத்தை சர்வீஸ் கமிஷன் சொல்லியிருப்பார்கள். தகுதி உள்ளவர்கள் யார்

யார் விண்ணப்பம் செய்தார்கள். யார் யாருக்கு கிடைக்கவில்லை என்று தெரிவித்தால், இப்போது கொடுக்கப்பட்டவர்களுக்கு எப்படி அந்தப் பதவி கொடுக்கப்பட்டது என்ற காரணத்தைச் சொல்லலாம்.

திரு. க. சுப்பு : என்னை கமிட்டியில் போட்டால் அந்த விவரங்களை எல்லாம் எடுத்துக் கூறுவேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of order Sir. When the Education Minister is here, why should another Minister intervene?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி அனந்தநாயகி அவர்கள் நேரத்தை கெடுக்கிற மாதிரி பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார்கள். வேறொரு அமைச்சர் பதில் சொல்லக்கூடாது என்று எந்த விதிமுறையில் இருக்கிறது? சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்கும் போதே, மற்றொரு அமைச்சர் பதில் சொல்லலாம். இல்லாமல் இருக்கும்போதும் சொல்லலாம். இதுபற்றி, பேரவைத் தலைவரின் தீர்ப்பு ஒன்று இருக்கிறது. உங்களுக்கும் தெரியும். தற்போது நீங்கள் எழுப்பியிருப்பது தேவையில்லாத பாயின்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடு) பேரவையில் பேசுகிறோம் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறீர்கள். உங்கள் கட்சித் தலைவர் மாரிமுத்து இருக்கும்போது நீங்கள் எப்படிப் பேசுகிறீர்கள்? கட்சித் தலைவர் இருக்கிறபோது இன்னொரு உறுப்பினர் ஏன் பேச வேண்டும்? மந்திரி சபையில் எல்லா மந்திரிகளுக்கும் ஜாயின்ட் ரெஸ்பான்சிபிலிடி இருக்கிறது.

திரு. சுப்பு அவர்கள் 40 நிமிடம் பேசியிருக்கிறார்கள். இன்னும் ஒரே நிமிடத்தில் முடித்துவிட வேண்டும்.

திரு. க. சுப்பு : நான் மட்டும் பேசவில்லை. எல்லோரும் பேசி இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கும் நீங்கள் தான் பொறுப்பு.

திரு. க. சுப்பு : இதுவும் ஜாயின்ட் ரெஸ்பான்சிபிலிடி தானா? இந்த மாதிரி குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் வைத்துக்கொண்டுதான் சொல்கிறேன். இவைகள் ஆதாரமற்றவை என்று சொல்லி விட்டாலும் நான் ஒன்றும் சொல்லப்போவதில்லை. நான் இந்தக்





குற்றச்சாட்டுகளைச் சொல்வது இவையெல்லாம் ஊருக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான். லைப்ரேரியன் அப்பாயிண்ட்மெண்ட் சரிதானா என்று பார்க்க வேண்டும்.

அடுத்து, பட்டதாரி ஆசிரியர்களை வெளியே விட்டாகிவிட்டது. என்றாலும், இன்னும் சிலர், அவர்களுக்காகப் போராடிய மாணவர்கள் பலர் உள்ளே இருக்கிறார்கள். கோவையில் பி.எச்.டி. மாணவர்கள் உள்ளே இருக்கிறார்கள். இதில் சம்பந்தப்படாதவர்களையும் சம்பந்தப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் கூறிய குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் அமைச்சர் பொறுப்பு என்று சொல்லவில்லை. சில இடங்களில் சரியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மணி அடிக்கப்பட்டது)

இன்னும் இரண்டு நிமிடங்கள். பள்ளிக்கூடங்களில் மேப்ஸ், சையன்ஸ் கருவிகள் வாங்குவதற்கு ரூ. 20 புரொவிஷன் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி குளித்தலை பஞ்சாயத்து யூனியன் B. D C பல ஆயிரக் கணக்கான ரூபாய்க்கு—இந்தி மேப்கள் வாங்கியிருக்கிறார்கள். இது யாருக்கும் பயன்படாத காரணத்தால், அந்த மேப்கள் அந்தப் பள்ளிக்கூடத்தில் தூங்கிக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. இளங்கோவன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாலையிலும் விவாதம் நடக்கும் என்று சொன்னார்கள். இன்று மாலையில் பொதுக்கணக்கு ஆய்வுக் குழு 3 மணிக்கு கூட இருக்கிறது. அது கூடப்போகிறதா அல்லது அவை கூடப்போகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை நாளைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று திரு. மணலி கந்தசாமி அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU MANALI C. KANDASAMY : Tomorrow also we are having Public Accounts Committee meeting. Therefore, we have to continue.

[1973 மார்ச் 20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியானால் மாலை 2-லிருந்து 3 வரையிலுமோ அல்லது அவை முடித்த பிறகோ வைத்துக் கொள்ளலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: The Estimates Committee is also asked to meet at 11 a.m. today.

MR. DEPUTY SPEAKER: I think you can postpone the meeting of the Estimates Committee.

THIRU T. N. ANANTHANAYAKI: The Speaker can give a direction that when the Assembly is in session, let us not have Select Committee meetings or other Committee meetings. It really inconveniences our work.

MR. DEPUTY SPEAKER: Normally we do not conduct committee meetings when the Assembly is in session. But out of necessity I think we are having some committee meetings in connection with some legislation.

திரு. சுப்பு அவர்கள் ஏறத்தாழ 40 நிமிடம் பேசியிருக்கிறார்கள். அவரது கட்சித் தலைவர் அதைக் கவனித்து தாம் பேசும் நேரத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இனி பேசக்கூடியவர்கள் ஐந்து நிமிடத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டும். நான்கு நிமிடத்தில் மணி அடிக்கப்படும். ஐந்தாவது நிமிடம் அவர் முடித்துக்கொண்டாலும், இல்லாவிட்டாலும் அடுத்தவர் பேச அழைக்கப்படுவார்கள்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 1973–74-ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

"கேடில் விழுச் செல்வம் கல்வி" என்பது வள்ளுவம், அதனை உணர்ந்து செயல்படுகிற நமது தமிழக அரசு கல்விக்காக 98 கோடியே 65 லட்சம் ரூபாயினை ஒதுக்கியிருக்கிறது. அதற்காக இந்த அரசினை நான் பாராட்டுகிறேன். அப்படி ஒதுக்கிய காரணத்தினால் தான் மாணவர்கள் எண்ணிக்கை பெருகி வருகிறது. ஆசிரியர்களது எண்ணிக்கை பெருகிவருகிறது. பள்ளிகளின் எண்ணிக்கை பலவாகப் பெருகிவருகிறது. கல்லூரிகள் ஆண்டுதோறும் அதிகப்பட்டு வருகின்றன. 1965–66-ல் நமது மாநிலத்தில் இருந்த பள்ளிகளின் எண்ணிக்கை 32,940 என்றால் 1972–73-ல் 35,011 ஆக உயர்ந்திருக்



1973 மார்ச் 20] [திரு. கோ. இளங்கோவன்]

கிறது. ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அதுபோல 1965–66-ல், 1,96,690 ஆக இருந்தது என்றால் 1972–73-ல் 2,33,745 ஆக உயர்ந்திருக்கிறது. முன்பு தனியாக உயர்நிலைப் பள்ளியை மட்டும் எடுத்துப் பார்த்தால் 2,234 ஆக இருந்தது இன்றைக்கு 2,763 ஆக உயர்ந்திருக்கிறது. இப்படி பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

எதிர்வரிசையில் இருக்கிறவர்கள் இப்படி மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை, பள்ளிகளின் எண்ணிக்கை உயர்ந்தாலும் கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதா என்று கேட்கிறார்கள். கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தாலும் நிச்சயமாக கல்வியின் தரம் உயர்வதற்கு இந்த அரசு பலவகையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருப்பதையும் நாம் காணலாம். முன்பெல்லாம் இளநிலை ஆசிரியர்கள் இருந்தார்கள். இப்போது இளநிலை ஆசிரியர்கள் இல்லாத சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதுமட்டுமல்ல. உயர் தொடக்கப் பள்ளிகள் என்று சொன்னால் அங்கே பட்டதாரி ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு அரசு முன்வந்திருக்கிறது. நான் ஆசிரியனாக இருந்தவன். நன்றாக அறிவேன்.

ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு பள்ளி இறுதி வகுப்பில் படிக்கும் மாணவனைப் பார்த்து அடுத்த ஆண்டு என்ன செய்யப்போகிறாய் என்று கேட்டால் அவன் அமைதியாகப் பதில் சொல்வான் "நான் தேர்விலே வெற்றிபெற்றால் கல்லூரியில் சேர்வேன். இல்லையென்றால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்குச் செல்வேன்" என்பான். ஒரு காலத்தில் எஸ்.எஸ்.எல்.சி-யில் தேர்ச்சி பெறாதவர்களுக்கு எல்லாம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி புகலிடமாக இருந்தது. ஆனால் இன்றைக்கு எஸ்.எஸ்.எல்.சி-யில் தேர்ச்சி பெற்றவர்களைத்தான் பள்ளிப் பயிற்சிப் பள்ளியில் சேர்த்துக்கொள்வது என்பதாக இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. நல்ல தகுதி உடையவர்கள் தான் ஆசிரியர்களாக வர வேண்டும் என்பதற்காக கல்வியின் தரத்தை உயர்த்த இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் தரமான மாணவர்கள் தான் இன்றைக்கு இடம் பெறுகிறார்கள்.

அதுமட்டுமல்ல. ஆசிரியர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகவே தேர்வுநிலைப் பதவிகளை இந்த அரசு உண்டாக்கியிருக்கிறது. ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தியிருக்கிறது. ஓய்வு ஊதியத்தை உயர்த்தியிருக்கிறது. முன்பெல்லாம் பட்டதாரி ஆசிரியர்களுக்கே

[திரு. கோ. இளங்கோவன்] [1973 மார்ச் 20

ஒய்வூதியம் 30 ரூபாய் சில்லரைதான் இருக்கும். இப்போது எடுத்துக் கொண்டால் அதை அரசு அதிகரித்திருக்கிறது என்பது மட்டுமல்ல. அவர்கள் ஏறத்தாழ 200 ரூபாய் வாங்கக்கூடிய அளவில் உயர்த்தியிருக்கிறார்கள். நான் என் தொகுதிக்குச் சென்றிருந்தபோது ஒரு ஆசிரியை என்னைப் பார்த்து "உங்கள் அரசு ஒய்வூதியத்தை அதிகப்படுத்தாதா?" என்று கேட்டார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். "நீங்கள் எப்போது ஓய்வு பெற்றீர்கள்?" என்று. அவர்கள் 1961-ல் என்றார்கள். உங்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் எவ்வளவு? என்றேன். ரூ. 11.85 காசு என்றார்கள். இப்போது உங்களுக்கு அளிக்கப்படுகிற ஒய்வூதியம் எவ்வளவு என்றேன். 40 ரூபாய் என்று சொன்னார்கள். ரூ. 11.65 காசாக இருந்த உங்கள் ஒய்வூதியத்தை ரூ. 40 ஆக உயர்த்தியிருப்பது எங்கள் அரசுதான். இதற்காக நீங்கள் இந்த அரசைப் பாராட்ட வேண்டும் என்றேன்.

இப்படி எல்லாம் அரசு ஆசிரியர்களுக்காகப் பல நன்மைகளைச் செய்கிற நேரத்தில் ஆசிரியர்கள் போராட்டம் செய்கிறார்கள். அவர்களது போராட்டத்தில் நியாயம் இருக்கிறதா என்று பார்க்காமல் சில அரசியல் கட்சிகள் போராட்டத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார்கள். அதுபற்றி இங்கே கூடப் பேசுகிறார்கள். போராட்டம் என்றாலும் காலம் அறிந்து செய்ய வேண்டும். காலம் அறிந்து செய்யவில்லை என்றுதான் நான் குற்றம் சாட்டுகிறேன். பல பள்ளிகளைச் சுற்றிப் பார்த்தேன். நல்ல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். "எங்கள் பணி பணி செய்து கிடப்பதே" என்பதாக காலம் அறிந்து, மாணவர்கள் நலன் கருதி பள்ளியில் வேலை செய்கின்ற நல்ல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். முதலமைச்சருக்கு நான் நன்றி செலுத்துகிறேன். ஆனால் பள்ளிக்குச் செல்கிற அந்த பட்டதாரி ஆசிரியர்களைக்கூட சிலர் போகக்கூடாது என்று தடை செய்கிறார்கள். வாண்டையார் பள்ளியில் பட்டதாரி ஆசிரியர்களை பெருநகரில் இருந்து வந்தவர்கள் குழப்பியிருக்கிறார்கள். இல்லை என்று யாரும் மறுக்க முடியாது. தஞ்சாவூரில் பல பள்ளிகளில் பள்ளிக்குப் போகிற ஆசிரியர்களைப் போகவிடாது சிலர் தடுத்து போகிறவர்களை பழித்தும், இழித்தும் சுவரில் எழுதியிருக்கிறார்கள். இப்படி எல்லாம் செய்த காரணத்தினால்தான் பணியில் சேருகிறவர்கள் தம் செயலுக்கு தனித்தனியே வருத்தம் தெரிவித்து விட்டு பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்கிறார் முதல்வர். அதில் என்ன குற்றம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணரவேண்டும்.



1973 மார்ச் 20] [திரு. கோ. இளங்கோவன்]

அடுத்து, கல்லூரிகளை எடுத்துக்கொண்டால் அரசுக் கல்லூரிகளை விட தனியார் கல்லூரிகள் தான் அதிகமாக இருக்கின்றன. அதுவும் அரசுக் கல்லூரியில் தவணைக்கு 60 ரூபாய் வாங்கினால் தனியார் கல்லூரிகள் 60-ல் இருந்து 130 ரூபாய் வரை வசூலிக்கிறார்கள். அதைக் கண்டிக்க ஆசைப்படுகிறேன். தமிழாசிரியர்கள் நிலைமை தமிழகத்தில் உயர்ந்திருக்கிறது. அவர்களுக்குரிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டில் முதல் அமைச்சராய் இருக்க வேண்டுமென்று பாவேந்தன் சொன்னார்.

"வாணிக சிரிப்பினூடே வாணிப திறமை தேங்கும்"
பொங்குமென் அருமை அண்ணா புலவனின் சிரிப்பினுள்ளே
சங்க முத்தமிழும் தேங்கும்; நாட்டு சனத்திரள் யாவும்
தேங்கும்!

என்றபடி தனது புன்னகையில் முத்தமிழையும் தேக்கி பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தில் முதல்வராக இருந்தார். பிறகு டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள். இவர் காலத்தில் தமிழ் ஆசிரியர்கள் உரிய தகுதியைப் பெற வேண்டுமெனக் கூறி முடிக்கிறேன்

* THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Deputy Speaker, Sir, at the outset permit me to congratulate the Government on its performance with regard to education. Whatever I may say later, does not take away from the fact that here is a task that is so difficult to perform and yet there are so many improvements and expansions in this work. Because I am the Anglo-Indian representative here, it is my duty to represent the matters that come under the sub-heading 'Anglo-Indian education'. Yet, Sir, if you look at the Budget, you will not find that sub-heading there any more.

(Thiru N. VEERASAMY in the Chair.)

Anglo-Indian Education in the Budget has been sunk in the heading 'Secondary Education'.

And so it is very difficult to find out what has been spent and what has been budgeted and what will be spent and what would be left over. I feel that this is a pity because one wants to know how much we cost the Government.

Anglo-Indian schools have been delivering the goods and continue to do so. If it is qualitative work you want, you have it. If it is efficiency or discipline it is all there for you in our school

and yet, Sir, there seems to be some feeling of prejudice towards Anglo-Ind.an educat'on. This attitude, I feel, is wrong and should be removed from the minds of the people, from the department itself and from the Government itse.f. If you take that way, all else will fall into their places and there would be due respect, regard and trust. After all the various sections in the educational field are working towards one goal. We are try'ng to ach:eve one thing. We may do it at different rates. Some may be quicker than others but after all, if you remove one section, the Education Department itself will be weaker and poorer for it. So all feel:ngs of prejudice should be removed from our mutual m'nds. Sir, I have to remark that when it comes to praise or words of appreciation, we find them just not there. I do not think we get any pats on our back for work done well. I think this is a sad omission and State have not yet come our way as also the selection grade which are the plums the other teachers enjoy.

As for National Welfare Schemes, we have not touched the fring as yet, and yet there are many poor teachers who reture and who ought to get such benefits. So, Sir, I have to summit that these are only small grievances which can earily be set right.

Coming down to practical matters, last year Anglo-Indian schools were informed that the age for retirement would be 58, Now, all this time we have been told that the retirement age was 60. The order came at the end of the years just the time when we closed the schools. It meant that the teachers who went home for their holidays would not come back in January. Th's seemed hard and a little unfair. So a petition was made that a little time for adjustment should be given. Today I ask, that this adjustment period be given to such teachers who have reached 58 or 59 years because ret'rement is not like transfer. There are practical, physical and psycholog'cal adjustments to be made. I feel that th's can be done if the date for the actual retirement is taken up to June 1973.

Then again in the high school examination, we have been g'ven a chance to hold a re-examinat'on in April for the failed candidates. Now a cand'date may appear for subjects in which





he fails. Yet he is not given a certificate which qualifies h'm as a passed h:gh school candidate. He is given a completed mark list—that may not the actual name—but he cannot call himself a passed h'gh school candidate. That is no use to the candidate who has to get a job because he has to qualify as a passed high school candidate and that also may be given due consideration.

Sir, in this City......

(Mr. Chairman sounded the gong)

Sir, usually I am very brief but this time please be generous to me...

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI): Sorry, Madam. Mr. Deputy Speaker has asked me to allot only seven minutes for each hon. Member. Now, you have completed six minutes. You can take one more minute.

* THIRUMATHI ALDA M. FOWLER: Sir, the Church Park Train.ng School is a very well-known institution and it has completed sixty years of life and it has sent out teachers all over the world. Some of them are model teachers. This school needs a new build.ng. The present one is fall.ng to pieces. It has no science laboratory. It needs a good library and it also needs a maintenance grant. We are sure that this training school would serve for another 60 years and send out teachers of the right quality all over the country especially to our State. A stipend of only Rs. 20 has been paid for the last 60 years. In West Bengal and oher places, a stipend of Rs. 60 is given and I think the time has come when a teacher-trainee-candidate should receive something better than Rs. 20.

Then, what shall I say about Inspectors' Offices. I made remark about it last year. These are my own observations. Now the Office is so short-staffed that they do not take their minds off the routine work. To attend questions I have put to them relating to the Anglo-Indian cand'dates who received the highest marks in Tamil in 1970. 1971 and 1972. So. I would beg that this office is streamlined and really made effective.

Sir, one last word about discipline. You know how 'mportant a matter that is. Without d'sc'pline everything falls to pieces. Sir, we have to think of our teachers and the example that they

[Thirumathi Alda M. Fowler] [1973 மார்ச் 20

set we have to think about the selection of teachers. We should select only the best and then only perhaps things will improve. Also classes should be smaller. If you have 50 or 60 children in a class, you cannot expect good teaching. Neither can you expect a good response from the children. So, this is a thing to which the Department of Education should give serious thought in its improvement programme.

Thank you, Sir, for your listening.

* திரு. கே. பி. கோபால் : கனம் மாற்றுத் தலைவர் அவர்களே, கல்விமானியக் கோரிக்கைமீது ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பேரவையிலே வழக்கறிஞர்கள் 40 பேர், பட்டதாரிகள் 23 பேர், டாக்டர்கள் 6 பேர், ஆசிரியர்கள் 6 பேர் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று பெருமையுடன் கூறிக்கொண்டிருந்தோம். அதற்குக் காரணமான ஆசிரியர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினரான பி.டி. ஆசிரியர்கள் சிறையிலே இருந்தபொழுது, பார்வையாளர்கள் கூட அவர்களைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள்கூட அமைச்சர்களுடைய அனுமதியுடன்தான் பார்க்க முடிந்தது. முன்னாள் ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த தினத்தை ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகிறோம். ஆனால், அதே ஆசிரியர்கள் தற்போது திருச்சி சிறையிலும், மதுரை மத்தியச் சிறையிலும் கிரிமினல் குற்றவாளிகளைப்போல அவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய மேலவை உறுப்பினர்களுடைய முயற்சிகளினால், பட்டதாரி ஆசிரியர்கள் இதை ஒரு கவுரவ பிரச்சினையாக கருதாது, மாணவர்களும் இதிலே ஈடுபட்டிருப்பதனால், போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொண்டார்கள். அதைப்போல இந்த அரசும் பெருந்தன்மையுடன் அவர்களிடம் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்பம் தொகுதியிலே, கூடலூரிலே செயல்பட்டுவந்த அரசின் கள்ளர் உயர் தொடக்கப்பள்ளியை இராஜாங்கம் நினைவு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதே



1973 மார்ச் 20] [திரு. கே. பி. கோபால்]

நேரத்தில் அதை உயர்நிலைப் பள்ளியாக அறிவித்ததில் விதிமுறைகள் அரசியலுக்காக புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன, நிபந்தனைகள் கடைபிடிக்கப்படவில்லையென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சாதாரணமாக, கள்ளர் சீரமைப்புத் தனி துணைக் கலெக்டர் அவர்கள் 8—2—1972-ஆம் தேதி கல்வி இலாகாவுக்கு ஒரு மனு அனுப்பி இருந்தார்கள். அதாவது அங்குள்ள உயர் தொடக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்கவேண்டுமென்று நமது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், இந்தப் பேரவையிலே, 24—8—1972-ஆம் தேதி, ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது 1972–73-ஆம் ஆண்டில் 40 உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட இருந்தன. ஆனால், 54 பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அதிலிருந்து நிச்சயமாக அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்றுதான் தெரிகிறது. அதற்குக் காரணங்கள் பல இருக்கலாம். இப்பொழுது உயர்நிலைப் பள்ளி ஏற்கெனவே ஒன்று நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்பொழுதுள்ள இடம் ஒரு ஏக்கர்தான். மேலும், பல வசதிகள் செய்து கொடுக்கக் கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இந்தப் பள்ளி 1970-ஆம் ஆண்டு தொடக்கப் பள்ளியாக இருந்தது. உயர் தொடக்கப் பள்ளியாக மாற்றப்பட்டும் எந்தவித வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை.

பள்ளிக்கூடங்கள் நடத்த முடியாத அளவிற்கு மழை காலத்தில் நடத்த முடியாத அளவிற்கு கூரை ஷெட்டுகளில்தான் பள்ளிக்கூடம் நடத்தப்படுகிறது. அதன் காரணமாக அனுமதி மறுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதுகிறேன். ஆனால் ஜனவரி மாதத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடலூருக்கு வருகை தந்தார்கள். அவர்கள் வருகை தந்தபொழுது அந்த ஊர் மக்களின் சார்பாக ஒரு மனு கொடுத்தார்கள். அதன்பேரில் அங்கே கூடலூரிலே ராஜாங்கம் நினைவாக ஒரு உயர்நிலைப் பள்ளிக்கு பிப்ரவரி மாதம் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டபொழுது 200 தினங்கள் செயல்பட்டிருந்தால்தான் உயர்நிலைப் பள்ளியாக அங்கீகரிக்க முடியும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு கூடலூரிலே பிப்ரவரி 16-ஆம் தேதி ஒரு பள்ளி துவக்கப்பட்டிருக்கிறது என்றால் எப்படி 200 தினங்கள் செயல்பட முடியும் என்று தெரியவில்லை. ஏற்கெனவே எட்டாவது வகுப்புவரை தான் அங்கே இருக்கிறது. பிப்ரவரி 16-ஆம் தேதியன்று அங்கே உயர்நிலைப்

பள்ளி ஆரம்பிக்கப்படுகிறது. மற்ற பள்ளிகளிலிருந்து எல்லாம் மாணவர்கள் பிப்ரவரி 15-ம் தேதி கொண்டுவந்து சேர்க்கப்படுகிருர்கள்.

திரு. ராஜாங்கம் அவர்களுடைய பெயரை வைத்திருப்பதில் எனக்கு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. அவர் எனக்கு நல்ல நண்பர். உயர்நிலைப் பள்ளிக்கு தனிப்பட்டவர்களுடைய பெயரை வைக்கவேண்டுமென்ருல் குறிப்பிட்ட தொகையை அவர்கள் கொடுத்தால்தான் வைக்க முடியும் என்ற நிலைமைதான் தொடர்ந்து இருக்க வேண்டும். அப்படியில்லாமல், இந்த முறையில் இருக்கக்கூடாது. எங்கள் பகுதியில் கம்பம் நகரில் ஒரு மகளிர் பள்ளிக்கு ஆங்கூர் ராவுத்தர் பெயர் வைக்கவேண்டுமென்று சொன்னூர்கள். அதற்காக 20 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. அதேபோன்று என்.எஸ்.கே. பொன்னையா கவுடர் பெயரைக் கழகப் பள்ளிக்கு வைக்கவேண்டு மென்று சொன்னபொழுது 30 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்படி தனிப்பட்டவர்களுடைய பெயரை வைக்கவேண்டுமென்ருல் ஒரு குறிப்பிட்ட தொகையை அப்பகுதி மக்களிடமோ கட்சிக்காரர்களிடமோ வசூல் செய்தால்தான் வைக்கலாம் என்ற நிலைமை இருக்க வேண்டும். அப்படியில்லாமல் இருந்தால் பொதுமக்களிடமிருந்து பணம் வசூல் செய்ய முடியாது. அவர்களுடைய மனம் மாறிவிடும். அரசியல் வாதிகள்மூலம் தங்கள் பெயர்களைப் பள்ளிகளுக்கு வைக்க முற்படுவார்கள்.

ஐயாயிரம் பேர்கள் இருக்கின்ற சுருளிப்பட்டியிலே ஒரு உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனல் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக மனு அனுப்பவில்லை என்று சொல்லி அதற்கு அனுமதிகொடுக்க மறுத்துவிட்டார்கள். இந்த ஆண்டும் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக மனு அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் அதற்காக அனுமதி தரப்படவில்லை. இப்படி, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக மனு வரவில்லை அதனலே சுருளிப்பட்டிக்கு அனுமதி மறுக்கப்பட்டு இருக்கிற நேரத்திலே கூடலூரிலே பிப்ரவரி மாதத்தில் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

சுருளியாறு நீர் மின் திட்டத்தில், கீழ்முகாமில் உள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக 5 ஆசிரியர்கள் கொண்ட ஒரு பள்ளிக்கூடம் 6—7—1972 முதல் நடத்தப்பட்டு வருகிறது. அது மின்சார இலாகாவினல் நடத்தப்படுகிறது. அதற்காக 25 ஆயிரம் ரூபாய் எண்டோமெண்ட் தொகை கட்ட வேண்டுமென்று சொன்னூர்கள். அவர்கள் 25 ஆயிரம் ரூபாய் எங்களால் கட்ட முடியாது என்று மின்சார வாரியத்தினர் விண்ணப்பம் செய்தார்கள். என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அந்தப் பள்ளியிலே பணியாற்றுகின்ற 5 ஆசிரியர்களுக்கும் சம்பளம் கொடுக்க முடியவில்லை. அந்த ஸ்கூல் அன்ரிகக்னைஸ்டு ஸ்கூல் ஆக இருப்பதால் மாணவர்களுக்கு ஒரு வருட காலம் விரயம் ஆகும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. சுப்பு அவர்களும் மாணவர்கள்—ஆசிரியர்கள் விகிதாசாரம்பற்றி வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிருர்கள். டாக்டர் பால் அவர்கள் குழுவின் அறிக்கையிலேகூட மாணவர்கள்—ஆசிரியர்கள் விகிதாசாரத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிருர்கள். இன்றைக்கு ஆசிரியர்களிடத்திலே எந்த அளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது என்பதற்கு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். அப்ரன்டீஸ் ஸ்கீம் என்று ஒன்று கொண்டுவந்தார்கள். அதிலே 24—10—1970-ஆம் தேதி வரையில் மனுச் செய்துகொண்டவர்கள் 25,498 பேர்கள் ஆக இருக்கிருர்கள். 24—10—1970-க்கு முன்பு மனு செய்யத் தவறியவர்களும், அதற்குப் பிறகு தேறியவர்களும், இன்னும் பலர் இருக்கிருர்கள். இந்த அளவிற்கு வேலையில்லாத நிலை இருக்கிறது. எனவே மாணவர்கள்—ஆசிரியர்கள் விகிதாசாரத்தைக் குறைத்தால்தான் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவிற்கு போக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே 1966–67-ஆம் ஆண்டிலே எத்தனை கல்லூரிகள் இருந்தன. 1972–73-ம் ஆண்டிலே எத்தனை கல்லூரிகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். அவர்கள் முன்பு காங்கிரஸ் ஆட்சியிலே எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. இப்பொழுது எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன என்ற விவரம் குறிப்பிடவில்லை , ஏன்? காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபொழுது எப்படி கல்லூரிகளை ஆரம்பிக்க முடியும்? நாங்கள் புரிந்துகொள்ள முடியும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபொழுது ஏற்கெனவே பல பள்ளிகள் திறந்து விடப்பட்டன. அதனல் கல்லூரிகள் திறப்பதற்கு வாய்ப்பு இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு புதிய கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கான நிர்ப்பந்தம் இருந்தது.

[திரு. கே. பி. கோபால்] [1973 மார்ச் 20

1956–57 ஆம் ஆண்டிலிருந்து 1965–66 ஆம் ஆண்டு வரையில் 9 ஆண்டுக்காலத்திலே மாணவர்களுடைய எண்ணிக்கை 28.63 லட்சம் அதிகரித்து இருக்கிறது. ஆனால் அதற்கடுத்த 6 ஆண்டுக்காலத்திலே 13 லட்சம்தான் அதிகரித்து இருக்கிறது. அதைப் போல உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் 1956–57-ஆம் ஆண்டிலிருந்து 1965–66 ஆம் ஆண்டுவரையில் 9 ஆண்டுகள் காலத்தில் 1,340 அதிகரித்து இருக்கிறது. அதற்கு அடுத்த 6 ஆண்டுக் காலத்தில் 529 அதிகரித்து இருக்கிறது. அன்றைய நிதி நிலைக்கும் இன்றைய நிதி நிலைக்கும் இடையே $2\frac{1}{2}$ சதவீதம்தான் அதிகமாயிருக்கிறது. அதனால்தான் காங்கிரஸ் ஆட்சியிலே எத்தனை உயர்நிலைப்பள்ளிகள் இருந்தன என்பதைக் குறிப்பிடவில்லையென்று நினைக்கிறேன்.

அடுத்து, கல்லூரிகளிலே என்.சி.சி. கட்டாயப் பயிற்சி ஆக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். நம் நாட்டைப் பொறுத்த அளவில் நமக்கு சீனா, பாகிஸ்தான் இந்த நாடுகளிடமிருந்து என்றும் ஆபத்து ஏற்படலாம். அந்த முறையில் உயர்நிலைப் பள்ளிகளிலும் ஜூனியர் பிரிவு என்.சி.சி. பயிற்சி கட்டாயம் ஆக்கப்படவேண்டும். எல்லா பள்ளிகளிலும் கட்டாயம் ஆக்கப்படாவிட்டாலும், விண்ணப்பிக்கும் பள்ளிகளுக்காவது அனுமதி அளிக்கப்படவேண்டும். 1972–73-ம் ஆண்டைப் பொறுத்த அளவு இதற்கு வழி வகை செய்யவில்லை. "தேர் ஈஸ் நோ புரொவிஷன் ஃபார் என்.சி.சி." என்ற உத்திரவு வந்திருப்பதாகத் தெரிகிறது. கல்லூரிகளைப் பொறுத்த அளவில் ஏற்கெனவே 49 கல்லூரிகள் அரசின் சார்பில் இருக்கின்றன. தனியார் சார்பில் 127 கல்லூரிகள் இருக்கின்றன. தோழர் சுப்பு அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

தனியார் துறையில் அவர்கள் சமூகத்தின் பேரில் வைத்தாலும் சரி, அல்லது தனிப்பட்ட பேர்களில் வைத்தாலும் சரி, அதை அனுமதித்தால் தான் தனியார் துறையில் கல்லூரிகள் அதிகரிக்கும் என்பதை இந்தத் தருணத்தில் சொல்லிக்கொண்டு வாய்ப்பளித் தலைமைக்கு நன்றி கூறி, இந்த அளவோடு அமைகிறேன்.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவரவர்களே, 1973–74-ம் ஆண்டுக்குரிய கல்வி மானியக் கோரிக்கையை, வரவேற்று இந்த அவையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி தொடங்குகிறேன்.

அண்மையிலே உயர் நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிற பி.டி. ஆசிரியர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்து போராட்டம் நடத்தினார்கள். அந்தக் கோரிக்கைகளிலே ஒன்று, தமிழ் ஆசிரியர்கள்



1973 மார்ச் 20] [புலவர் சி. பழனிச்சாமி]

தலைமை ஆசிரியர்களாக ஆகக் கூடாது என்பதும், இன்னொன்று தமிழ் ஆசிரியர்களை விட 5 ரூபாயாவது ஊதியத்தில் தங்களுக்கு அதிகம் வேண்டும் என்ற கோரிக்கைகளாகும். இந்த இரண்டு கோரிக்கைகளும் மிகவும் வருந்தத்தக்க கோரிக்கைகளாகும். ஏனென்றால், தமிழ் ஆசிரியர்கள் எந்த வகையிலும் அவர்கள் தரத்தில் குறைந்தவர்கள் இல்லை. இப்படி அவர்கள் கோருவது தமிழ் ஆசிரியர்களை மட்டுமல்ல, தமிழையே, தமிழ்த் தாயையே அவமானப் படுத்துகிறார்கள் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக ஆகக் கூடாது என்று கேட்பது மிகவும் வருந்தத் தக்க ஒன்றாகும். ஏனென்றால், பி.டி. ஆசிரியர்கள் பள்ளித் தேர்விற்குப் பிறகு 4 ஆண்டுகள் படிக்கிறார்கள். அதே போல தமிழ் ஆசிரியர்களும் பள்ளித் தேர்விற்குப் பிறகு 4 ஆண்டுகள் படிக்கிறார்கள். பிறகு இரு சாராரும் ஆசிரியர் பயிற்சி பெறுகிறார்கள். எனவே இந்த இரு சாராரும் ஆசிரியர் பயிற்சி பெற்று வருகிறார்கள். உயர் நிலைப் பள்ளிக்குப் பிறகு கல்வித் தகுதிகளை ஒரே கால கட்டத்தில் பெறுகிறார்கள். அந்த நிலையில் தமிழ் ஆசிரியர்கள் மட்டும் எப்படி தரக் குறைவானர்கள், தரத்தில் குறைந்தவர்கள் என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக ஆகக் கூடாது என்ற இவர்களின் கோரிக்கை நியாயமானதில்லையென்று இங்கே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னின்ன கோரிக்கைகள் வேண்டுமென்று போராட்டம் செய்கிறவர்களைத் தான் நாம் கண்டிருக்கிறோம். ஆனால் இவர்கள், அவர்களுக்கு இதைக் கொடுக்காதே என்கிறார்கள். இப்படிப் போராட்டம் செய்கிறவர்களை இப்போது தான் தமிழகத்தில் முதன் முதலாகக் காண்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன். வள்ளுவர் பெருந்தகை "கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்" என்று சொல்கிறார். ஆகவே, இந்த பி.டி. ஆசிரியர்கள் தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக வரக் கூடாது என்று கூறக் கூடியது நியாயமற்ற கோரிக்கை. இதை அரசாங்கம் ஏற்கக் கூடாது என்று கூறிக் கொள்வது மட்டுமல்லாமல் தமிழ் ஆசிரியர்களை உடனடியாக உயர் நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று இங்கே கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ் ஆசிரியர்களை விட அவர்களுக்கு 5 ரூபாயாவது அதிக ஊதியம் வேண்டுமென்று அவர்கள் கோருகிறார்கள். இப்படிக் கோருவது மிகவும் நகைப்பிற்குரிய ஒன்றாகும். ஏனென்றால்,

அவர்கள் ஆங்கில நாட்டிலிருந்து வந்திருப்பவர்களாக இருந்து இப்படிக் கேட்டால் அது பொருள் உள்ளதாக இருக்கும். ஆனால் தமிழ் மண்ணில் பிறந்து, தமிழ்ப் பாலை உண்டு, தமிழர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிற இவர்கள் தமிழ் ஆசிரியர்களையும், தமிழை யும் பழித்து அவர்களைக் காட்டிலும் தங்களுக்கு ஊதியம் அதிகம் வேண்டுமென்று கேட்பது சற்றும் நியாயமில்லையென்று இங்கே கூறிக் கொள்ள விழைகிறேன். அது மட்டுமல்லாமல், தமிழ் ஆசிரியர்கள், தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் இவைகளை வரைமுறையாக கற்ற தமிழாசிரியர்களாகத் தான் இருக்கிறார்கள். ஆகவே, பி.டி. ஆசிரியர்களைக் காட்டிலும் ஒரு ரூபாயாவது அதிகம் ஊதியத்தில் கொடுத்து தமிழையும், தமிழ் ஆசிரியர்களையும் பெருமைப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் ஆசிரியர்களிடையே இரு நிலை இருக்கிறது. முதல் நிலை, இரண்டாம் நிலை என்றுள்ள இந்த இரு நிலையை ஒழித்து, ஒரு நிலையாகவே முதல் நிலையாகவே தமிழ் ஆசிரியர்களை ஆக்கவேண்டு மென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் பள்ளிகளில் தமிழைப் போதிப்பதற்கு ஆங்கிலத்தை அளவு கோலாக வைக்கக் கூடாது என்று இங்கே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த பி.டி. ஆசிரியர்களுக்கு எப்படி பி.ஏ. எம்.ஏ. டிகிரி கொடுக்கிறார்களோ அது போலவே தமிழ் ஆசிரியர்களுக்கு டிப்ளமா என்ற சான்றிதழைக் கொடுக்காமல் டிகிரி கொடுக்கவேண்டு மென்று நான் இங்கே வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொடக்கக் கல்வி பற்றி கூறவேண்டுமானால், தொடக்கப் பள்ளிகளை நடத்துகிற நிர்வாகிகள் அந்தப் பள்ளிகளை வியாபார நோக்கத்தோடு தான் நடத்துகிறார்களேயொழிய கல்வித் தரத்தை உயர்த்தவேண்டுமென்ற எண்ணத்தில் அவர்கள் நடத்த வில்லை என்று இங்கே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் நான் பல ஆண்டுகள் தொடக்க நிலை ஆசிரியராக பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டு கூறுகிறேன். ஆசிரியர்களை நியமிக்கும் போது அவர்கள் கையூட்டாக பணம் வாங்கிக் கொள்கிறார்கள். ஆயிரம், இரண்டாயிரம் என்று கையூட்டு வாங்கிக் கொள்கிறார்கள். அது மட்டுமல்லாமல் ஆசிரியர்களின் ஊதியத்தில் 10 ரூபாய் 20 ரூபாய் என்று மாதந்தோறும் பிடித்துக் கொண்டு தான் அவர்களுக்கு ஊதியத்தைக் கொடுக்கிறார்கள். அங்கே பணியாற்றுகிற ஆசிரியர் களுக்கு பல விதத்திலும் தொல்லைகள் கொடுக்கிறார்கள். ஒரு சில பள்ளிகளுக்கு உயில்கள் மூலம் நிறைய சொத்துக்கள் இருக்கின்றன.





அதன்மூலம் வருவாய்கள் வருகின்றன. ஆனால் அப்படிப்பட்ட உயில் களின் மூலம் வருவாய் வரக்கூடிய பள்ளிகளுக்குக் கூட அரசாங்கம் மானேஜ்மெண்டு கிரான்டு கொடுக்கிறது. ஆனால் அவர்கள் இந்த சொத்துக்களின் வருவாய்க் கணக்கையும், இந்த மானேஜ்மெண்டு கிரான்டு மூலம் கொடுக்கிற இந்தப் பணத்தையும் ஒரே கணக்காக காட்டி செலவை காட்டிவிடுகிறார்கள். இப்படி சொத்து வருவாயை ஓரளவு மறைத்து விடுகிறார்கள். எந்தப் பள்ளிகளுக்கு சொத்துக்கள் இருக்கின்றனவோ அவைகளுக்கு மானேஜ்மெண்டு கிரான்டு கொடுக்காமல் இருக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் மதிய உணவுத் திட்டத்திற்கும், பள்ளி ஆசிரியர்களுக்கும் எந்த வித சம்பந்தமும் இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் தான் கணக்கு வழக்கு எழுத வேண்டுமென்று சொன்னால் அவர்கள் கற்றுக் கொடுக்கக்கூடிய கடமையிலிருந்து வழுவி சமையல் காரர்களாக, கணக்குப் பிள்ளைகளாக இருப்பார்களேதவிர பாடம் கற்றுக் கொடுக்கக்கூடிய கடமையை ஒழுங்காகச் செய்யமாட்டார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மானேஜ்மெண்டு பள்ளிகளில், தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றுகிற தலைமை ஆசிரியர்களுக்கு 50 பைசா என்றும் துணை ஆசிரியர்களுக்கு 25 பைசா என்றும் கண்டின்ஜென்சிஸ், அதாவது இதர செலவுகளுக்காக கொடுக்கிறார்கள் இப்படி 30 ஆண்டுகளாக கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இன்றைக் கிருக்கிற விலைவாசி உயர்வில் இது கட்டுப்படியாகாது. இந்த கண்டின்ஜென்சிஸ் செலவுகளுக்காக கொடுக்கப்படுவது, தலைமை ஆசிரியர்களுக்கு 2 ரூபாயாகவும் துணை ஆசிரியர்களுக்கு 1 ரூபாயாக வும் மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, இன்றையதினம் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற கல்வி மானியத்தின் கோரிக்கையில் எனக்குப் பேசுகிற ஒரு நல்ல வாய்ப்பைத் தந்ததற்காக என்னுடைய நன்றியை தெரிவித்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்தக் கல்வி மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

[திரு. துரை கோவிந்தராசன்] [1973 மார்ச் 20

இங்கே இந்த மானியக் கோரிக்கையைப் பார்க்கின்ற நேரத்தில் 99 கோடி ரூபாயிலே திட்டம் தீட்டப்பட்டு 1973–74-ம் ஆண்டு 122 கோடி என்று அமையத் தக்க அளவிற்கு பல்வேறு கோரிக்கைகளை இந்த மானியக் கோரிக்கையிலே பார்த்தாலும்,

"கண்ணுடையோர் என்பவர் கற்றோர்
முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"

என்று சொல்கிற அளவிற்கு நாட்டிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வள்ளுவனுடைய குறளுக்கு இணங்க அந்த வகையில் தான் இன்றைய தினம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றாலும் ஆசிரியர்கள் பள்ளிகளை மூடியிருக்கிறது, அதற்காக, பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சையிலே, புதுக்கோட்டையிலே இருந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை இழுத்து மூடி விட்டதற்காக இந்த ஆட்சியை நான் வெகுவாக பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் குறிப்பாக பல்வேறு அம்சங்களை அதிலே பார்த்தாலும் தமிழ் நாட்டு பாட புத்தகங்களை வெளியிடும் பொறுப்பேற்றிருக்கிற நிறுவனம் பல லட்ச ரூபாய்கள் லாபமாக பெற்றிருக்கிறதென்றாலும் பாட புத்தகங்களின் விலைகளை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அப்படி அதிகரிப்பது மட்டுமல்லாமல் கல்லூரிகளுக்கு தயாரிக்கப்படுகிற பாட புத்தகங்களின் தரம் குறைவாகவும் பிழை உள்ளதாகவும் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு இன்றைக்கு துவக்கப் பள்ளி ஆசிரியர்களும், உயர் துவக்கப்பள்ளி ஆசிரியர்களும் ஏதோ கிராமத்தில் இருக்கக்கூடிய வேலையாட்கள் போல் வேலை செய்யக்கூடிய துர்பாக்கியமான நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இவர்கள் குடும்ப நலத் திட்டத்திற்காக தீவிர இயக்கம் செயல்படுகின்ற நேரத்தில் தங்களுடைய ஒரு மாத, இரண்டு மாத சம்பாத்தியத்தைச் செலவு செய்து ஆட்களைப் பிடித்துக் கொண்டு வரவேண்டிய நிலைமைக்கு சூசகமாக அரசாங்கத்தால் ஆட்படுத்தப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையைப் போக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வேன்.

ஆசிரியப் பெருமக்கள் எல்லாம் கட்டாயமாக கதர்த் துணியைத் தான் உடுத்த வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அந்த நிலைமை போக்கப்பட வேண்டும்.



1973 மார்ச் 20] [திரு. துரை கோவிந்தராசன்]

குறிப்பாக உயர் துவக்கப் பள்ளியில் பயிலுகின்ற மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் போகும்போது தேர்வு என்று வைக்கிறார்கள். இதிலே தகுதியுடையவர்கள் யார்? உயர் துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் தகுதியுடையவர்களா அல்லது உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் தான் தகுதி உடையவர்களா? யாரைச் சந்தேகக் கண்ணோடு இந்த அரசு பார்க்கிறது? அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வேன்.

இந்த மாநிலத்திலே, குறிப்பாகப் பல்வேறு துறைகளிலே பட்டம் பெற்றவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். வேலை கிடைக்காத நிலையில் அவர்கள் டி. சி. எல். என்ற அளவுக்கு எலக்ட்ரிசிடி போர்டிலும் மற்றும் வாரியங்களிலும் பணியாற்றுகிறார்கள். அவர்கள் ஒரு நாளைக்கு 3½ ரூபாய்க்கு எலக்ட்ரிசிடி போர்டில் வேலை செய்கிறார்கள். ஞாயிற்றுக் கிழமைகளிலே அவர்களுக்கும் சம்பளம் கிடையாது. வாரியங்களிலும் மாதம் 160 ரூபாய்தான் பெறுகிறார்கள். இந்த நிலைமையில் பட்டதாரிகளை இந்த அரசு வைத்திருக்கிறது. இதற்காக 99 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கி மற்றும் நலத்துறை மூலமாக நடத்தப்படுகின்ற கல்வி நிலையங்களையும் சேர்த்துக் கிட்டத்தட்ட 108 கோடி ரூபாய் செலவழித்து பட்டதாரிகளை உருவாக்கி அவர்களை ரோட்டிலே இந்த அரசு அலைய விட்டிருக்கிறது. இவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பை உருவாக்கித் தர இந்த அரசு வழிவகைகளைக் காண வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வியின் தரம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. அந்தத் தரத்தைப் பல்வேறு கண் கொண்டு பார்க்கிறார்கள். தஞ்சையில் இருக்கும் கல்லூரியில் பக்கத்தில் இருக்கும் இடங்களில் இருந்தெல்லாம், குறிப்பாக என்னுடைய தொகுதியான தஞ்சையிலிருந்து 20 மைலுக்கு அப்பாலுள்ள அறந்தாங்கி போன்ற இடங்களில் இருந்தெல்லாம் வந்து படிக்கின்றார்கள். என்னுடைய தொகுதியில் உயர்நிலைப் பள்ளியில் படித்துவிட்டு தஞ்சைக்கு கல்லூரியில் சேர வரும்போது அவர்கள் 300 மார்க்குகள் பெற்றிருந்தாலும் அதே நிலையில் தஞ்சையிலே படித்த மாணவன் 300 மார்க்குகள் பெற்றிருந்தால் தஞ்சையிலே படித்த மாணவனுக்கு அதை 320 ஆகக் கணக்கெடுத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு 20 மார்க்குகள் கூட்டிக் கொள்கிறார்கள். அந்த முறையில் கணக்குப் போட்டு அவர்களுக்கு இடம் அளிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வேன்.

[திரு. துரை கோவிந்தராசன்] [1973 மார்ச் 20

ஆசிரியர்களுடைய குறையைப் போக்குவதற்காக ஜி. ஓ. 250-ல் ஓர் உத்தரவு போட்டார்கள். துவக்கப் பள்ளியாக இருந்தாலும், உயர் துவக்கப் பள்ளியாக இருந்தாலும் அங்கே பத்து ஆசிரியர்களுக்கு உட்பட்டு இருப்பார்களானால் உடனடியாக ஒரு ஆசிரியரை நியமிக்க வேண்டுமென்று அந்த உத்தரவு கூறுகிறது. ஆனல் இந்த அரசு அதை நல்ல முறையில் கடைப்பிடிக்கவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமையில் ஆசிரியர்கள்...........(மணி அடிக்கப்பட்டது.)

திரு. எ. க. துரைசாமி : தலைவர் அவர்களே, 1973–74-ம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு தொடங்குகின்றேன்.

1966–67-ம் ஆண்டில் கல்வித் துறைக்கு 43 கோடி 80 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது இன்றைக்கு, திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு பேரறிஞர் அண்ணு அவர்கள் காலத்திலும் அவர்களுக்குப் பின்னல் இன்றைக்குத் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலும் படிப்படியாக வளர்ந்து 98 கோடி ரூபாய் அளவுக்கு இந்த ஆண்டு கல்விக்காகச் செலவழிக்கப்பட இருக்கிறது. அதிலே வேளாண்மைக் கல்வியும், மருத்துவக் கல்வியும், அரிசனங்களுக்காகத் தனியாக நடத்தப்படுவதையும் கணக்கில் கொண்டு பார்த்தால் 108 கோடி ரூபாய் இந்தத் துறைக்குச் செலவழிக்கப்பட்டு வருவது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்ருகும்.

465 கோடி ரூபாய் வருமானமாகப் பெற்றிருக்கும் தமிழகத்தின் வருவாயில் 24 சதவிகிதத்தைக் கல்விக்காகச் செலவிடுவது உள்ளபடியே இந்த நாட்டில் இல்லாமை, அறியாமை, போதாமை ஆகியவற்றை அறவே ஒழிக்க இந்த நாட்டின் அறிவைப் பெருக்கியாக வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அசைக்க முடியாத நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வளவு பெருந்தொகையைச் செலவழிக்க முன் வந்திருப்பதை நானும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் பெருமையோடு ஏற்றுக் கொள்கிறேன்.

கல்லூரிகளின் எண்ணிக்கையும் படிப்படியாக வளர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பிறகு 176 கல்லூரிகள் தமிழ் நாட்டிலே இயங்கி வருகின்றன. கடந்த நூற்ருண்டு கால வரலாற்றில்



1973 மார்ச் 20] [திரு. எ. க. துரைசாமி]

இப்படிப்பட்ட வளர்ச்சியை என்றைக்குமே கண்டதில்லை என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குக் கல்விக்காக இவ்வளவு பெருந்தொகையைச் செலவழிக்கின்ற இந்த அரசைப் பாராட்டுகின்ற அதே நேரத்தில் ஒரு சில குறைபாட்டையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அரசாங்கம் நடத்தும் பள்ளிகள், கல்லூரிகளின் செலவையும், தனியார் நடத்தும் பள்ளிகள் கல்லூரிகளின் செலவையும் அரசே முழுவதும் ஏற்றுக் கொள்கிறது. ஆனல் நகராட்சி மன்றத்தால் நடத்தப்படும் பள்ளிகளின் செலவை முழுமையாக அரசு ஏற்றுக் கொள்வதில்லை. பெரும்பாலும் நகராட்சிகள் ஆரம்பப் பள்ளிகளை நடத்தி வருகின்றன. பல இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளையும் நடத்தி வருகின்றன. குறிப்பாக என்னுடைய குடியேற்றம் நகரத்தில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் நகர் மன்றத்தின் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. அதற்குச் செலவாகின்ற தொகையில் மூன்றில் இரண்டு பங்குதான் அரசால் தரப்படுகிறது. அதன் மூலமாக பல லட்சக்கணக்கான ரூபாயை அரசாங்கத்திலிருந்து நகராட்சி மன்றம் பெற முடியாத காரணத்தால் குடி தண்ணீர் வசதி, சாக்கடை வசதி, சுகாதார வசதி, சாலை செப்பனிடுதல் போன்ற பல்வேறு அடிப்படைக் காரியங்களைக் கூட அந்த நகராட்சி மன்றம் செய்ய முடியாத நிலைக்கு இந்தக் கல்வித் துறையை ஏற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால் ஆளாக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இதே மாமன்றத்தில் நம் கல்வி அமைச்சர் அவர்கள், நடமாடும் பல்கலைக்கழகமாம் நாவலர் அவர்கள் குறிப்பிட்டார்கள். குடியாத்தம் நகராட்சி மன்றத்தால் நடத்தப்படுகிற உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தையும் இந்த அரசு ஏற்கும் என்று சொன்னர்கள். ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அந்த நகராட்சி மன்றமும் ஒரு காலத்தில் கேட்டுக்கொண்டது. ஆனல் இப்போது அப்படிக் கொடுப்பதற்கு மறுக்கும் விதத்தில் அவர்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிருர்கள். இப்படி அந்த நகராட்சி முன்னுக்குப் பின் முரணை ஒரு தீர்மானத்தைப்போடக் காரணம், அவர்கள் அப்பாயின்ட்மென்ட் கமிட்டியில் இருந்துகொண்டு தங்கள் உற்ருர் உறவினர்களுக்கு உத்தியோகங்கள் கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக அதைப் பயன்படுத்திக் கொள்கிருர்கள். அதனல் பள்ளியின் தரம் எந்த அளவிற்கு கெடுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். கடந்த ஆறு மாத காலமாகப் பல ஆசிரியர்கள் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சினல் அனுப்பப்பட்டு ஆணையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டும்,

நகராட்சி மன்றத் தலைவர் அவர்களை இதுவரை ஆசிரியர்களாக நியமிக்கவில்லை. அதனால் அந்தப் பள்ளிகளில் படிக்கக்கூடிய பல்லாயிரக் கணக்கான மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் உள்ள நகராட்சி மன்றங்கள் நடத்துகிற அத்தனை உயர்நிலைப் பள்ளிகளையும் அரசே ஏற்றுக் கொண்டு நடத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் புலவர் பழனிச்சாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல் தனியார் நடத்துகிற பள்ளிகளில் ஆசிரியர்களை வேலைக்குச் சேர்க்கிறபோதே அவர்களிடம் தேதி போடாமல் ராஜினாமாக் கடிதங்களை அவர்கள் அன்றே பெற்றுவிடுகிறார்கள். ஆசிரியர்களின் ஊதியத்தில் இருந்து பிடிக்கும் ஒரு சூழ்நிலை இன்று ஓரளவிற்கு மாற்றப்பட்டிருந்தாலும் கூட அந்த ஆசிரியர்கள் வாயில்லாப் பூச்சிகளாக தனியார் நடத்துகிற அந்தப் பள்ளிகளின் நிர்வாகிகளால் அடக்கி ஒடுக்கப்படும் நிலையில் இருக்கிறார்கள்.

எனவே நான் கூற விரும்புவது, தனியார் நடத்துகிற கல்லூரிகளை இந்த அரசு ஏற்கமுடியாவிட்டாலும் உடனடியாக தனியாரால் நடத்தப்படுகிற உயர்நிலைப் பள்ளிகளையாவது இந்த அரசு இந்த ஆண்டே ஏற்றுநடத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு கிராமத்திற்கு இன்னொரு கிராமம் ஒரு மைலுக்கு அப்பால் இருந்தால் அந்த கிராமத்தில் 300-க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருந்தால் அங்கு கட்டாயம் ஒரு பள்ளிக்கூடம் துவங்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது என்றாலும் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் இந்த உத்தரவு அமல் படுத்தப்படவில்லை. என் தொகுதியில் இப்படி பல கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் துவங்கப்படாமல் இருக்கின்றன. எனவே அரசு மீண்டும் ஒரு உத்தரவைப் பிறப்பித்து எல்லா ஒன்றிய ஆணையாளர்களுக்கும் அனுப்பி அப்படிப்பட்ட நிலையிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதற்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள இரண்டு பள்ளிகளுக்கு, தேவிக்குப்பம், பரதகிராமம் என்ற ஊர்களிலுள்ள இரண்டு பள்ளிகளுக்கு கட்டட வசதி குறைவாக இருக்கிறது. இந்த ஆண்டு கருவிகளுக்காக 15,000 ரூபாயும், ஆய்வுக் கூடங்களுக்காக 25,000 ரூபாயும் இப்படி நாற்பது பள்ளிகள் இந்தப் பலனைப் பெறும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் என் தொகுதியைச் சார்ந்த பள்ளிக்கூடங்களும் இடம் பெற



வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் டீச்சேர்ஸ் ட்ரேனிங் ஸ்கூலுக்கு கட்டட வசதி இல்லை, மரத்தடியில்தான் வகுப்புகள் நடத்தப்படுகின்றன என்று குறிப்பிட்டுள்ளேன். அதற்காக ஆறு லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்ட அரசு அனுமதித்திருப்பதற்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வித் துறை மேலும் வளரத்தக்க முறையில் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் உள்ள இந்த அமைச்சரவையில் மாண்புமிகு பொதுச் செயலாளர் டாக்டர் நாவலர் அவர்கள் தலைமையில் இயங்கும் இந்தக் கல்வித் துறை சிறப்பான முறையில் பணியாற்றுகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, 1973–74-ஆம் ஆண்டுக்கான இந்த கல்வி மானியக் கோரிக்கையின்மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கல்விக்காக மொத்த வருவாயில் ஏறத்தாழ 21 விழுக்காடு தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். அது 25 சதவீதம் என்றிருந்தால் மிகவும் பாராட்டுக்குரியதாக இருந்திருக்கும். ஏனெனில் நமக்கிருக்கிற பள்ளிக்கூடங்களில் மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கு பள்ளிக்கூடங்களுக்கு சரியான கட்டடங்கள் இன்னும் கட்டப்படவில்லை. அப் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவது என்றால் அதிகத் தொகை தேவைப்படுகிறது. கட்டடங்கள் கட்டுவதற்கான தொகையைப் பார்த்தால், பரிதாபகரமாக இருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்க்குக்கூட அது வரவில்லை.

பள்ளிகளுக்குச் செல்கிற மாணவர்கள், இளம் சிறார்கள், உட்காருவதற்குக்கூட பல பள்ளிகளில் பெஞ்சுகள் இல்லை. பல பள்ளிகளுக்குக் கூரைகளே இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. மாணவர்கள் உட்கார பெஞ்சுகள், பள்ளிகளுக்குக் கூரை, நல்ல கட்டடங்கள் இவை மிகவும் தேவையாகும். இதை முன்பே செய்து முடிக்கவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில்கூட கூரை இல்லாத பள்ளிகள் பல இருப்பதைக் காண்கிறோம். மழைக் காலங்களில் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்குப் போவதில்லை. மற்றக் காலங்களில் மரத்தடிகளில் மாணவர்களை உட்கார வைத்து பாடங்கள் கற்றுக் கொடுக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலேயே இந்த நிலை என்றால் சென்னை மாநிலத்திலுள்ள இதர மாவட்டங்களில் மரங்களைக்கூட பார்க்க முடியாத ஊர்களில் மாணவர்களை எப்படி எங்கு உட்கார வைத்து

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1973 மார்ச் 20

ஆசிரியர்கள் அவர்களுக்குப் பாடம் கற்பிக்கிறார்கள் என்பது விந்தையாகத்தான் இருக்கிறது. ஆகவே ஒரு ஐந்தாண்டுத் திட்டம் போட்டுக் கட்டடம் இல்லாத பள்ளிக்கூடங்களே இல்லை, கூரை இல்லாத பள்ளிகளே இல்லை என்ற முறையில் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கவும், மாணவர்களுக்கு உட்காருவதற்கு பெஞ்சுகள் போட்டுக் கொடுக்கவும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மொத்த வருவாயில் நான்கில் ஒரு பகுதியை அரசு கல்விக்காக ஒதுக்கியிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து இப்படி இந்தத் தொகையை ஒதுக்கிக்கொண்டு வருகிறோம். ஆனால் கல்வியின் தரம் எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்.

மாணவர்களிடையே இருக்கிற ஒழுக்கம் எவ்வாறு இருக்கிறது, நல்லதொரு பிரஜையாக Citizen அந்த மாணவன் வளர்ந்து கொண்டிருக்கிறானா, மாணவர்களிடம் நாட்டுப் பற்று எந்த அளவிற்கு ஊன்றி இருக்கிறது, காலம் தவறாமை என்ற பண்பாடு அவர்களிடம் இருக்கிறதா, சுத்தம் சுகாதாரம் இவற்றிற்கு மாணவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்களா, மாணவர்களிடம் கட்டுப்பாடு எப்படியிருக்கிறது, மாணவர்கள் உடற்பயிற்சி பெற்று திடகாத்திரர்களாக இருக்கிறார்களா, மாணவர்கள் சாலைகளில் நடக்கும் போது போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை அல்லது விதிகளை ஒழுங்காகக் கடைப்பிடிக்கிறார்களா என்று இவற்றையெல்லாம், அடிப்படையாகக்கொண்ட நடைமுறை அறிவு வளர்க்கப்பட வேண்டும். அவர்களின் பிற்கால வாழ்க்கைக்குத் தேவைப்படுகிற இத்தகைய காரியங்களையெல்லாம் நாம் ஊட்டும் கல்விக்கு ஊடேயே, கற்றுக்கொடுக்கக் கூடிய ஒரு முறையில் நாம் கல்வி கற்றுக்கொடுக்கிறோமா என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதுதான் முக்கியம்.

மேனாடுகளில் கல்வித் தரம் உயர்ந்திருக்கிறது என்றால் அவர்கள் இம்மாதிரி விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். எழுத்தறிவு எண்ணறிவு கொடுப்பது என்பது அது மாணவனின் சக்தியைப் பொறுத்து பின்னால் விருத்தியாகிறது. ஆனால் அடிப்படையாக சிறு குழந்தைகளாக இருக்கும்போதே கொடுக்கும் இத்தகைய கல்வி அறிவுதான் பிற்காலத்தில் அவர்களை நல்ல பிரஜைகளாக, ஆக்கமுடியும். அதற்கு நாம் நம் கல்வி முறையில் சிறிதும் இடம் கொடுக்கவில்லை. பள்ளிக்கூடங்களில் உடற்பயிற்சி ஆசிரியர்களும் இருக்கிறார்கள். ஆனால் மாணவர்களுக்கு உடற்பயிற்சி கொடுப்



1973 மார்ச் 20] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

பதற்குத் தேவையான இடமில்லை. மிகுதியான பள்ளிகளின் பக்கத்தில் விளையாடுவதற்கு இடமே இல்லை. ஆகவே உடற்பயிற்சி ஆசிரியர்கள் வேலையின்றி வாளாயிருக்கிறார்கள். 75 சதவீதம் பள்ளிகளில் இத்தகைய நிலைதான் இருக்கிறது. உடற்பயிற்சி கொடுப்பதற்கு வசதி இல்லாமல் உடற்பயிற்சி ஆசிரியர்களை மட்டும் நியமித்து என்ன பயன்? நாங்கள் எல்லாம் படிக்கும்போது ஸிட்டிஸன்ஷிப் ட்ரெயினிங் குடிமைப் பயிற்சி என்று வாரத்திற்கு ஐந்து வகுப்புகள் வைத்துக் கற்றுக் கொடுப்பார்கள்.

பள்ளிகளில் மாணவர்களோடு மாணவர்கள் எப்படிப் பழக வேண்டும், எப்படி பேசி உறவாட வேண்டும், எப்படிக் காலம் தவறாமல் வகுப்பிற்கு வரவேண்டும், இவைபற்றி கற்றுக்கொடுக்கப் பட்டு வந்தது. ஒரு மாணவன் வகுப்பில் நுழையும்போது எப்படி மாணவர்கள் தங்கள் இருக்கையில் இருந்து விலகிக் கொடுக்க வேண்டும் எப்படி தன் இருக்கையில் சென்று உட்கார வேண்டும் என்பதுபற்றியெல்லாம் சொல்லிக்கொடுக்கப்பட்டு வந்தது, பென்ஸிலை வகுப்பில் வைத்து சீவக்கூடாது, ஏதாவது சிறிய பேப்பர் கீழே இருந்தாலும் அதை எடுத்து வேஸ்ட் பாக்ஸில் போட வேண்டும். இப்போது பள்ளிகளில் அப்படிப்பட்ட வேஸ்ட் பாக்ஸஸையே பார்க்க முடிவதில்லை. அந்தக் காலத்தில் கட்டுப்பாட்டோடு இருந்தார்கள். பள்ளிகளில் வகுப்பறைச் சுவற்றில் மாணவன் காலை தூக்கி வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் அந்தப் பழக்கம் அப்போது இருந்ததில்லை. சுவற்றில் கால் கையை வைக்கமாட்டார்கள். பள்ளிக்கு சரியான நேரத்தில் செல்லும் நிலை இருந்தது.

இப்போது ஐந்தாவது வகுப்பு மாணவன் தூக்கமுடியாமல் புத்தகங்களைத் தூக்கிச் செல்கிறான். ஏடுதான் கையில் இருக்கிறதே தவிர காலம் தவறாமை, பொய் பேசாமை என்ற நல்ல குணங்கள் மாணவர்களிடையே பள்ளிப் பருவத்திலேயே ஏற்படச் செய்ய வேண்டும். அதற்காக நம் கல்வி முறையையே மாற்றியமைத்தால் நன்றாகயிருக்கும் என்று சுட்டிக்காட்ட நான் ஆசைப்படுகிறேன். இப்போது பள்ளி, கல்லூரிப் படிப்புப்பற்றிக் கருத்து வேறுபாடு இருக்கிறது.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பு 11 ஆண்டுகள் இருக்கலாமா, கல்லூரிப் படிப்பு 4 ஆண்டுகள் இருக்கலாமா என்ற விஷயத்தில் என்னைப் பொறுத்தவரையில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு 11 ஆண்டுகள் இருக்கவேண்டும், கல்லூரிப் படிப்பு 4 ஆண்டுகள் இருக்க

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1973 மார்ச் 20

வேண்டும். முன்னால் இருந்ததைப் போல் இன்டர்மீடியேட்-டை புகுத்துவது நலமாக இருக்கும். அண்டை மாநிலங்களில் அதைப் புகுத்தி விட்டார்கள். அது கல்லூரிப் படிப்பிற்கு ஏற்றதாக இருக்கும்.

தேர்வைப் பொறுத்தவரையில் நான் ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாணவன் இறுதியாக எழுதும் பரிட்சையில் எடுக்கும் மார்க்கை வைத்து பாஸ் என்று போடுகிறார்கள். நான் இன்டர்மீடியட் படிக்கும்போது உயர்திரு. மார்ஸ்டன் என்று ஒரு பிரின்சிபால் இருந்தார். அவர் எப்படித் தேர்வு நடத்துவார் என்றால், ஒரு மாணவர் காலாண்டுத் தேர்வில் 50 மார்க், அரையாண்டில் 40 மார்க், ஆண்டு இறுதித் தேர்வில் 30 மார்க் என்று எடுத்து இருந்தால் (35 மார்க்குதான் பாஸ் என்று சொல்வதற்கு வைத்திருந்தாலும்) அவனைப் பாஸ் செய்ய மாட்டார். ஆனால் ஒரு மாணவன் காலாண்டு தேர்வில் 10 மார்க், அரையாண்டுத் தேர்வில் 20 மார்க்கு, ஆண்டு இறுதித் தேர்வில் 30 மார்க்கு என்று வாங்கியிருந்தால், அவன் தேர்வு செய்யப்படுவான். காரணம் முதல் மாணவனைப் பொறுத்தவரையில் அவனிடத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது, இரண்டாவது மாணவன் ஒவ்வொரு தேர்விலும் முன்னேற்றம் கண்டு வருகிறான், (ஹி ஈஸ் ப்ரோகரஸ்ஸிங்) ஆகவே அவனைத் தேர்வு செய்யலாம் என்று செய்வார். அந்த மாதிரி மாணவனின் முன்னேற்றத்தைப் பார்த்துத் தேர்வு செய்ய வேண்டும். கடைசியில் மாணவன் வாங்கும் மார்க்கை வைத்துத் தேர்வு செய்கிற முறையை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போல் பல பிரச்சினைகள் இருக்கின்றன. நான் வாத்தியார் வேலைபார்த்த காரணத்தால் எனக்குப் பேச கூடுதல் நேரம் கொடுக்க வேண்டும். பட்டதாரி ஆசிரியர்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து வருத்தம் தெரிவிக்கும் கடிதம் எழுதி வாங்கவேண்டுமென்று ஆணையை மாற்ற வேண்டும், அவர்களாகவே அன்-கன்டிஷனல் சரண்டர் செய்து இருக்கிறார்கள். அவர்களாகவே கீழ்படிந்து இருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கக்கூடாது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே, வாத்தியாராக இருந்து இருக்கிறேன் என்று சொன்னார்கள். ஆசிரியரா, வாத்தியாரா என்பதைத் தலைவரவர்கள் ரூலிங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 20]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : வாத்தியார் என்பது அவர் பள்ளிக்கூட வாத்தியாரைச் சொல்கிறார். சினிமா வாத்தியாரைப் பற்றி அல்ல.

* திரு. ஏ. சுவாமிதாஸ் : வாத்தியார் என்பது வடமொழிச் சொல். ஆசிரியர் என்பது தமிழ்ச் சொல். நாம் பேசும்போது வடமொழிச் சொல்லும் இருக்கும், தமிழ்ச் சொல்லும் இருக்கும். ஆங்கிலச் சொல்லும் இருக்கும். தனித் தமிழில் பேசுவது இல்லை. நாம் தனித் தமிழில் பேச பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும்.

திரு. கு. காமாட்சி : இந்த வாத்தியார் என்ற சொல் பாடம் சொல்லிக் கொடுப்பவர்களுக்கு மட்டும் சொல்லப்படுவது இல்லை. பல வாத்தியார்கள் இருக்கிறார்கள்.

* திரு. ஏ. சுவாமிதாஸ் : நான் ஆசிரியராக இருந்தேன் என்பதால், அந்த அனுபவத்தை வைத்துச்சொல்லலாம் என்று சொன்னேன்.

இப்போது வேலையில்லாமல் பல பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். நாம் ஒரு நிபந்தனை வைத்திருக்கிறோம். 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டுமென்று கொள்கை அடிப்படையில் வைத்துக்கொண்டிருக்கிறோம். நடைமுறையில் அது கையாளப்படவில்லை. ஒரு வகுப்பறையில் தற்போது 50 மாணவர்கள், 60 மாணவர்கள்கூட இருக்கிறார்கள். ஏன் என்று கேட்டால், 35 மாணவர்கள் என்ற முறையில் போட்டால் அதிகமான ஆசிரியர்கள் தேவைப்படும். அதிகமான ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு அரசாங்கத்தில் பொருளாதாரம் இல்லை என்று சொல்கிறார்கள்.

ஒரு மாவட்டத்திற்கு அல்லது ஒரு பகுதிக்கு இத்தனை ஆசிரியர்கள் தான் நியமிக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதற்குமேல் வைத்தால் அவர்களுக்கு சம்பளம் வராது என்று சொல்கிறார்கள். ஆகவே 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று நியமனம் செய்தால் எல்லா ஆசிரியர்களையும் நாம் நியமித்துக் கொள்ள முடியும். ஆசிரியர்களிடையே வேலையில்லாப் பிரச்சினையும் தீர்ந்து விடும், அதை அவசியம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னால் பேசிய நண்பர், பட்டதாரி ஆசிரியர்கள், வித்வான் படித்தவர்கள் இரண்டு பேருக்கும் ஒரே மாதிரியான சம்பளம் வேண்டும். அவர்களும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள்தான் என்று சொன்னார்கள். பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் வித்வான்களுக்கும் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை யில்லை. உத்யோக உயர்வு கொடுப்பதிலும் வேறுபாடு இருக்கக் கூடாது. அந்தக் கருத்தைப் பொறுத்தவரையில் வேற்றுமை கிடையாது. ஆனால் பல்கலைக்கழகத்தில் இந்த இரண்டு விதமான கல்வித் தகுதிகள் இருக்க வேண்டுமா என்று சிந்திக்க வேண்டும். பி.ஏ. பட்டப் படிப்பில் பலர் தமிழ் எடுத்துப் படிக்கிறார்கள். அவர்கள் தமிழ் லிட்டரேச்சர் படிக்கிறபோது தமிழ் வித்வான்கள் படிக்கிற எல்லாப் பாடங்களையும் படிக்கிறார்கள். ஆகவே பல்கலைக் கழகம் தொடர்ந்து இந்த வித்வான் படிப்பை வைத்திருக்க வேண்டுமா? இதை எடுத்து விடலாம். அது தேவையில்லை என்று சொல்வேன். தமிழ் லிட்டரேச்சர் எடுத்துப் படித்தவர்கள் தமிழ் சொல்லிக் கொடுப்பதற்கு போதிய தேர்ச்சிப் பெற்று இருக்கிறார்கள். அதேபோல் எம்.ஏ. லிட்டரேச்சர் எடுத்தவர்கள் தமிழில் இருக் கிறார்கள். ஆகவே, இந்த வித்வான் கோர்ஸை எடுத்து விட்டால் இந்த மாதிரி கோளாறு இல்லாமல் இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கும் தலைமையாசிரியர்கள் அனைவ ரையும் கெசடட் பதிவு அதிகாரிகளாக மாற்ற வேண்டும். டி.இ.ஓ.-க் களுக்கு அதிகமான வேலை இருக்கிறது. தலைமை ஆசிரியர்களை அரசிதழ் பதிவு பெற்ற ஆசிரியர்களாக மாற்றி விட்டால் டி.இ.ஓ.-க் களுக்கும் வேலைப் பளு குறையும். பள்ளி நிர்வாகமும் நல்ல முறையில் நடைபெறும். ஆசிரியர்களின் தரம் தற்போது உயர்ந்துகொண்டே போகிறது. செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படுகிறது. படிப்படியாக ஆசிரியர்களின் தரம் உயர்ந்து இருக்கிறபோது, இந்த தலைமை ஆசிரியர்களையும் கெசடட் அதிகாரிகளாக ஆக்கினால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொரு பிரச்னையும் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்தின் கீழே இருந்த விஞ்ஞான மன்றம் என்ற ஒரு நிறுவனத்தை 1963-ல் தமிழ்நாடு அரசு ஏற்றது. அங்கே பணியாற்று கிறவர்களை 1971-ல் ஒரு ஜி.ஓ. போட்டு 1963 முதல் அவர்கள் பணி நிலையை ரெகுலரைஸ் செய்து இருக்கிறார்கள். அதன்படி அவர்களுக்கு



அன்று முதல் ஒழுங்கான சம்பளப்படி பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் ஒரு வருடம் கழித்து இன்னொரு ஜி.வோ. 1972-ல் போட்டிருக்கிறார்கள். உங்களுக்கு 1963-லிருந்து ரெகுல ரைஸ் செய்ய முடியாது. 1968-லிருந்துதான் செய்ய முடியும் என்று போட்டு இருக்கிறார்கள். இதனால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். முன்னே போட்ட ஜி.வோ. அப்படியே தொடர்ந்து இருக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தாலும் அவர்களுக்கு 5 வருடம் சர்வீஸ் போகிறது. இந்த இண்டக்கிரேஷன் செய்தது சரி யல்ல. அதிலே பல குழப்பங்கள் இருக்கிறது. அப்படியிருந்தால் அவர்களை செபரேட் கேடராக வைத்து ரெகுலரைஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரைப் பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்லூரி இல்லை. சட்டக் கல்லூரி வேண்டுமென்று நீண்டகாலமாக சொல்லப்பட்டு வருகிறது. எங்கள் ஊரில் ஆத்தூரில் ஒரு பி.டி. காலேஜ் இருக்கிறது. அந்த காலேஜ்க்கு தொடர்புடைய ஒரு உயர்நிலைப் பள்ளி இல்லை. உயர் நிலைப் பள்ளி வேண்டுமென்று கேட்டால் கல்வி இலாகா என்ன சொல்கிறார்கள் என்றால் பக்கத்தில் இருக்கும் பள்ளிக்கூடத்தில் ரிட் ரஞ்ச்மெண்ட் வந்து விடும், ஆதலால் எப்படிக் கொடுக்கலாம் என்று உயர்நிலைப் பள்ளி கொடுக்காமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு உயர்நிலைப் பள்ளி கொடுப்பதால் பக்கத்தில் இருக்கும் எந்தப் பள்ளிக்கூடமும் பாதிக்கப் போவதில்லை. அப்படியே ரிட்ரஞ்ச் மெண்ட் வந்தாலும் அந்த ரிட்ரஞ்ச்ட் ஆசிரியர்களை இந்த ஆசிரி யர்கள் பயிற்சிப் பள்ளியில் எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது).

<u>திரு. எம். தேவராசன்</u> : தலைவரவர்களே, 1973–74-ஆம் ஆண்டுக் கான கல்வி மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

பல அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டியது போல், இந்தத் துறைக்குத்தான் தமிழக அரசு பெருவாரியாக செலவழித்துக்கொண் டிருக்கிறது. 1973–74-ஆம் ஆண்டுக்கு ஏறத்தாழ ரூ. 100 கோடி செலவழிக்கிறது என்றால், இந்தத் துறையைச் சார்ந்தவர்கள், இதற்கு அமைச்சராக வாய்ந்து இருக்கும் நாவலர் அவர்கள் எந்த அளவுக்கு அதிலே கருத்து கொண்டிருக்கிறார்கள், இந்த நாட்டு மக்களை யெல்லாம் அறிவுடைய மக்களாக, நாட்டிலுள்ள ஏழை பாட்டாளி

களுக்கெல்லாம்—ஒரு காலத்தில் மேட்டுக் குடியினருக்குச் சொந்தமான கல்வியை, சாதாரண ஏழை மக்கள், அரிசன மக்களும் கற்க வேண்டும், முதல் நிலை அடைய வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் ரூ. 100 கோடி செலவழிக்க முன் வந்திருக்கிறார்கள். ஆனால் இவ்வளவு பணத்தையும் செலவழித்து நிறைய பள்ளிகளையும் ஏறத்தாழ 2,763 உயர்நிலைப் பள்ளிகள் இன்றையதினம் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவ்வளவு பள்ளிகள் இருக்கின்ற இந்த நிலையில் கற்பிக்கும் தரம் இன்று மிக மிகக் குறைந்து விட்டது என்பதை மிக மிக வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

அதற்குக் காரணம் "பெர்சனல் அடென்ஷன்" கிடையாது. பள்ளிக்கூடங்களுக்குச் சென்று பார்த்தால் ஏதோ சந்தைக் கடை நிலவுவது மாதிரி இருக்கிறது. அங்கே ஆசிரியர் ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார். மாணவர்கள் இஷ்டப்படி போவதும் வருவதுமாக இருப்பார்கள். இந்த நிலை அனேகமாக எல்லாப் பள்ளிகளிலும் காணலாம். அதற்குக் காரணம் மாணவர்கள் அதிக அளவில் ஒரே வகுப்பில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதுதான். எனவே இந்த நிலையை மாற்ற நமது அரசு தயாரித்துள்ள குறைந்த அளவுத் தேவைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அந்தத் திட்டத்தின்கீழ் போதிய பள்ளிகளைக் கட்டுதல், சாதனங்களை வாங்குதல், கூடுதல் ஆசிரியர்களை நியமித்தல் போன்ற நிலைகளை ஏற்படுத்தினால் இந்த பளு குறையும். இதற்கு மத்திய அரசு அதிக உதவி தரவேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்த வேண்டும். இந்த நிலையை ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொள்ளுவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

ஒரு பக்கம் நமது அரசு கோடிக்கணக்கான ரூபாய்களை கல்விக்காக செலவழித்துக்கொண்டு, பள்ளிக்கூடங்களை கட்டிக்கொண்டிருக்கிற அதே நேரத்தில், டியூடோரியல் கல்லூரிகள் காளான்கள் முளைப்பதுபோல் முளைத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றைக் கேட்பார் யாரும் இல்லை. அங்கே பணம் கொடுத்தால், திடீரென்று சில டியூடோரியல் கல்லூரிகள் மாயமாக மறைந்து .விடுகின்றன. பணத்தைப் பெற்றுக்கொண்டு ஓடிவிடுகிறார்கள். அவற்றிற்கு வரைமுறை கிடையாது; கேட்பார் கிடையாது என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. இதை நமது அரசு கவனித்து, அப்ரூவ் செய்த டியூடோரியல் கல்லூரிகள் தான் இருக்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இது பெரிய தொழிலாகி விட்டது; குதிரைப் பந்தயத்தை





போன்று கொள்ளையடிக்கின்ற சாதனமாக ஆகியிருப்பது அரசு உணர்ந்து, அவைகளைத் தடுக்க, கட்டுப்பாடு ஏற்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொரு முக்கியமான நிகழ்ச்சியையும் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய தினம் ஆங்கிலத்தின் தரம் மிகமிகக் குறைந்திருக்கிறது. தனித் தமிழ் என்று சொல்லுகிறோம். தமிழும் வளர வேண்டியதுதான். ஆனால் அகில உலக மொழியான ஆங்கிலத்தை நாம் மறந்து விடக் கூடாது. நாள் முன்னேற வேண்டுமென்றால், இந்த நாடு முன்னேற வேண்டுமென்றால், உலகத்தாரோடு போட்டி போட வேண்டுமென்றால், ஆங்கிலத்தின் தரத்தை அதிகப்படுத்த வேண்டும். பிரிட்டிஷ் கவுன்சில் மூலமாக நல்ல ஆசிரியர்களை உருவாக்கினாலும், அது போதாது. கல்லூரிகளில் கூட இன்றைக்கு ஆங்கில ஆசிரியர்கள் சிறப்பாக பாடம் சொல்லித் தருகிறார்கள் என்று ஒப்புக்கொள்ள முடியாது. ஏனென்றால் அவர்களுக்கு அந்த தரம் குறைந்துவிட்டது. பழைய காலத்தில் ஆங்கிலம் கற்றவர்களைப் பாருங்கள். பத்தாவது படித்தவர்கள், இண்டர்மீடியட் படித்தவர்கள் நல்லமுறையில் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். ஆனால் நமது நிலை இன்று மிக மோசமாக இருக்கிறது. எனவே உடனடியாக ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்த வேண்டும்; அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே பெண்களுக்கு என்று ஒரு கல்லூரி கிடையாது. நிறைய பின்தங்கிய வகுப்புக்களைச் சார்ந்த பெண்கள், தனிக் கல்லூரி இல்லாத காரணத்தால் கல்லூரிப் படிப்பு கற்க முடியாமல் இருக்கிறது. எனவே தமிழக அரசு அருள்கூர்ந்து ஒரு கல்லூரி அமைத்துத் தரவேண்டும் என்று கூறி, இந்தத் துறைக்கு நல்ல அனுபவம் பெற்ற திரு. சிட்டிபாபு இயக்குநராக இருப்பதாலும், மாண்புமிகு நாவலர் அவர்கள் சிறந்த அமைச்சராக இருப்பதாலும், மேலும் இந்தத் துறை சிறப்படைய வேண்டுமென்று வாழ்த்தி முடிக்கின்றேன். வணக்கம்.

*திரு. ஏ. சுப்பிரமணியம் : மாற்றுத் தலைவரவர்களே, இந்த கல்வி மானியத்தில் ஏறத்தாழ 122 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் பெருமையோடு சொல்லுகிறார்கள். தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மெய்யான முன்னேற்றம் இந்தத் துறையில் என்ன ஏற்பட்டிருக்கிறது என்று நாம் பார்ப்போமேயானால், உள்ளபடியே வேதனை தான் மிஞ்சுகிறது என்பதனை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. அமைச்சரவர்க

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1973 மார்ச் 20

ளுடைய அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். "குவான்டிடேடிவ்" டெவலப்மெண்ட் இருக்கிறது; மாணவர்கள் எண்ணிக்கையில், பள்ளிகளின் எண்ணிக்கையில், கல்லூரிகளின் எண்ணிக்கையில், ஒதுக்கியிருக்கிற தொகையில் எல்லாம் உயர்வு இருக்கிறது. ஆனால் தரத்தில் உயர்வைக் காணோம். தரம் தாழ்ந்து கொண்டே போகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுபற்றி அடிக்கடி பேசுகின்றோம். குழுக்கள் அமைக்கின்றோம், கமிஷன் போடுகின்றோம், சிம்போசியம், செமினார் எல்லாம் நடத்துகின்றோம். இவ்வளவும் நடத்திவிட்டு, முடிவுகள் எங்கே போகின்றது? எல்லாம் ஊறுகாய் பானையில் போடப்படுகிறது.

உள்ளபடியே தரத்தை உயர்த்த என்ன நடைபெறுகிறதென்றால், ஒன்றுமில்லை என்பதைப் பார்க்கிறோம். எண்ணிக்கையைப் பொருத்தும் கூட நம்முடைய அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் வந்த 10 ஆண்டுக்குள் 14 வயது வரையிலுள்ள பிள்ளைகள் எல்லோருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே தரப்பட்டுள்ள புள்ளி விவரத்தைப் பார்த்தால், 6 முதல் 11 வயது வரையில் உள்ள பிள்ளைகளில் 90.5 சதவிகிதம் பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றிருக்கிறது. அதைப் பாராட்ட வேண்டியது தான். ஆனால் 11 முதல் 14 வயது வரையில் உள்ள பிள்ளைகளில் 52.2 சதவிகிதம்தான் பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அரசியல் சட்டம் அமலுக்கு வந்து 23 ஆண்டுகள் முடிகின்ற வரையிலும் ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றம் இதுதான். தரத்திலும் மிகவும் தாழ்வாக இருக்கிறது. இன்று உள்ள கல்விமுறையை ஆராய ஐதராபாத்திலிருந்து வந்த குழுவினர் ஏற்கெனவே அறிக்கையை தந்திருக்கிறார்கள். கல்விக்கு ஒதுக்கப்பட்ட பணம் வீணாகப் போகிறது என்று அறிக்கையை அவர்கள் கொடுத்தார்கள்.

எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறோம் தரம் முன்னேற வேண்டுமென்பதை. ஆனால் தரம் முன்னேற என்ன திட்டம் இருக்கிறது என்று பார்த்தால், எதுவுமில்லை. இந்த அறிக்கையிலே துருவித் துருவிப் பார்க்கிறேன். ஏதோ யோசிக்கிறோம், பரிசீலிக்கிறோம் என்கிறார்களே தவிர, உருப்படியாக எதுவும் காணவில்லை. நான் சொல்லிக்கொள்ளுவேன், கல்வி முறையை அடியோடு மாற்றி அமைக்க வேண்டியிருக்கிறது. இதில் வெறும் டிங்கரிங் பயன் படாது. அங்குமிங்கும் கொஞ்சம் பவுடர் பூசி, ஸ்னோ தடவினால் பயன்படாது. அடியோடு மாற்றியமைக்க வேண்டும். எதற்காகக்



1973 மார்ச் 20] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

கல்வி கொடுக்கிறோம் என்று ஆராய வேண்டும். பிள்ளைகள் ஏராளமாக வருகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்று ஏறத்தாழ 90,000 பேர் வருகிறார்கள் ஆண்டுதோறும். கல்லூரிகளிலிருந்து 1½ லட்சம் பேர் வருகிறார்கள். அப்படி வெற்றி பெற்று வருகின்றவர்கள், திக்குத் தெரியாத காட்டில் கண்ணைக் கட்டி விடுவதுபோல் தவிக்கிறார்கள்.

சோஷலிசத்தை ஏற்றுக்கொண்டு அதை நோக்கி முன்னேறிச் செல்லுகிறோம் என்று சொல்லும்போது, அதற்கேற்றவாறு கல்வியை அமைத்திட வேண்டும். மேலை நாடுகளில், வளர்ந்த நாடுகளில் கல்விக்கூடங்களில் நாட்டின் சமுதாயத்தின் தேவைக்கொப்ப கல்வி முறை அமைய வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். கோதாரி எஜுகேஷன் கமிஷனும் அதைத் தான் சொல்லியிருக்கிறார்கள். நாட்டின் தேவையோடு ஒட்டிய கல்வி முறையாக அமைந்திட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான முயற்சி என்ன செய்திருக்கின்றார்கள் என்று பார்க்கின்றபோது, எதையும் செய்யவில்லை. பிள்ளைகள் ஏராளமாக செலவு செய்து படிக்கின்றார்கள் பட்டத்தை வாங்கி வெளியே வருகிறார்கள். வெளியே வந்த பிறகு என்ன படித்தோம் என்று அவர்களுக்கே தெரியாது. எங்கே போவது என்று அவர்களுக்குத் தெரியாது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இல்லையென்றால் நாம் 122 கோடி ரூபாய் கல்விக்காக செலவழித்தோம். 200 கோடி ரூபாய் செலவழித்தோம் என்று பெருமைப்படுவதில் அர்த்தமில்லை. பணம் தான் வீணாகும். ஆகவே உடனடியாக நாம் எந்தக் குறிக்கோளை வைத்திருக்கிறோமோ, அந்த சோஷலிச குறிக்கோளுக்கு ஏற்ப வாழ்க்கையை ஒட்டிய கல்வி முறையாக அமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பாட புத்தகங்கள் இருக்கின்றன. இந்த பாட புத்தகங்களை திருத்தியமைப்பதாகச் சொல்லுகிறார்கள். எப்படி திருத்தியமைக்கிறார்கள் என்றால், இங்கே பாட புத்தகத்திற்கென்று தனியாக ஒரு குழு அமைந்திருக்கிறது. அந்தக் குழு வந்த பிறகும் பாடநிட்டங்கள் எப்படி இருக்கிறது என்பதற்கு ஒரே ஒரு சான்று சொல்ல விரும்புகிறேன். நேதாஜி சுபாஷ் போஸ் இருந்தார். அவரை இந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் முன்னணித் தலைவரென்று இந்த நாடும், நானிலமும் போற்றி வணங்குகிறது. நமது அமைச்சர்கள் எல்லாம் வாய்ப்பு கிடைக்கின்ற போதெல்லாம் அவரைப் போற்றுகிறார்கள். ஆனால் தமிழகத்தில் 11-ம் வகுப்புக்கென்று தமிழ்நாடு பாடநூல்

நிறுவனம் வெளியிட்டிருக்கின்ற இந்திய வரலாறு என்ற நூல் இருக்கின்றது. அதில் நேதாஜி பற்றி சொல்லியிருப்பதை நான் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன்:

> "இந்தியாவிலிருந்து தப்பிச் சென்ற சுபாஷ் சந்திர போஸ் ஆங்கிலேயர்களுக்கு விரோதமாக ஜப்பான் ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் தொடர்பு கொண்டு, அவர் இந்திய தேசியப் படை ஒன்றை அமைத்து ஜப்பானியர்களுக்குப் போரில் துணை புரிந்தார், ஜப்பானியப்படை இந்தியாவின் எல்லையை எட்டிப் பிடிக்கும் அளவு முன்னேறியது."

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் நிறுவிய இந்திய தேசியப் படையைப் பற்றி தமிழ்நாட்டு மாணவர்கள், 11-ம் வகுப்பில் படிக்கின்ற மாணவர்கள் படிக்க வேண்டுமென்று எழுதியிருக்கக்கூடிய விஷயத்தைப் பாருங்கள். நேதாஜி போஸ் இந்திய விடுதலைப் போராட்டத்தின் தலைவர் அல்ல; ஜப்பானுக்கும், ஜெர்மனிக்கும் துணை நின்றவர் என்ற முறையில் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய முறையில் பாடங்களைத் தயாரித்து பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது என்றால், அந்தப் பாடங்கள் இல்லாது ஒழிந்து விடுவது மேல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பாட நூலில் குறிப்பிட்டிருப்பதில் என்ன தவறு என்று குறிப்பிடுகிறார் அல்லது அதில் என்ன திருத்தம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார் என்று தெரிவித்தால் வல்லுநர்கள் அதைப் பற்றி ஆராய்வார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இதைப் படித்தவர்கள் எல்லோரும் தெளிவாகப் புரிந்துகொள்வார்கள். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் இந்திய தேசியப் படையை நிறுவி, இந்திய விடுதலைக்காகப் போராடியவர்கள். இந்தப் புத்தகத்திலே இருப்பதை வேண்டுமானால் மீண்டும் ஒரு முறை படிக்கிறேன். "இந்தியாவிலிருந்து தப்பிச் சென்ற சுபாஷ் சந்திரபோஸ் ஆங்கிலேயர்களுக்கு விரோதமாக ஜப்பான், ஜெர்மனி நாடுகளோடு தொடர்பு கொண்டார்............

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : நீங்கள் படிக்கவேண்டாம். கருத்தை மட்டும் சொல்லிவிடுங்கள். உங்களுக்கு 15 நிமிடம் பேசுவதற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் நீங்கள் முடித்து விடுங்கள். படிக்கத் தொடங்கினால் நேரம் ஆகிவிடும்.



திரு. ஏ. சுப்பிரமணியம் : அவர் ஜப்பானுக்கும் ஜெர்மனிக்கும் துணை புரிந்ததாக இந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மாதிரி வரலாறுகளை எழுதும்போது, வரலாறுகளைப் பற்றி நன்கு தெரிந்தவர்களை, நல்ல அனுபவம் உள்ளவர்களை வைத்து எழுத வேண்டும். அப்படிப்பட்டவர்களை பாடபுத்தக நிர்வாகக் குழுவில் நியமிக்க வேண்டும். இப்படிப்பட்ட தவறுகள் மேலும் ஏற்படா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிடுகிறேன். நம்முடைய பாரத நாட்டிலே நடந்த விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு வீரம் செறிந்த நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அத்தகைய நிகழ்ச்சிகள் எல்லாம் பாட நூலிலே இடம் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களைப் பற்றி எல்லாக் கமிஷன்களும் சொல்லியிருக்கின்றன. அவர்கள் பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்த வேண்டும் ; ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும் ; அவர்களை கண்ணியமான முறையில் நடத்த வேண்டுமென்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்த விஷயத்தில் நாம் சரியாக நடந்துகொள்ளவில்லை. பட்டதாரி ஆசிரியர்களைப் பற்றி பலர் பேசினார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள் ; உண்மை. அவர்களே போராட்டத்தை முடித்துக்கொண்டார்கள் ; அதுவும் உண்மை. அதற்குப் பிறகு அவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று சொல்வது நல்ல மரபாக இல்லை. அவர்களே போராட்டத்தைத் தொடுத்தார்கள்; அவர்களே போராட்டத்தை வாபஸ் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் கடமையை உணர்ந்து அவர்களே போராட்டத்தை முடித்துக்கொண்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்பது முறையல்ல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைப் படித்தார்கள் வருத்தம் தெரிவித்துத் தீரவேண்டுமென்று அந்த அறிக்கையில் சொல்லவில்லை. ஆகவே, மீண்டும் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லாமல் மேற்கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விஷயத்தில் 22—5—1972லே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல உறுதி மொழிகளை கொடுத்ததாகவும், அவை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்றும் அவர்கள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த உறுதிமொழிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். அதிலே ஒன்று ஆசிரியர்களுக்கு மாதத்தில் முதல்தேதியே சம்பளம் வழங்கப் பட வேண்டும் என்பது. அதைச் செயல்படுத்தி வருவதாக அமைச் சரவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு நடை பெறவில்லை. உதாரணமாக, என் பகுதியிலே, சிங்காநல்லூர் நகராட்சியிலே 2, 3 மாதங்கள் கழித்துத்தான் இன்னும் சம்பளம் கொடுக்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இதைப் போன்றுதான் இன்னும் பல இடங்களிலும் இருக்கிறது. ஆகவே, எல்லா இடங்களிலும் முதல் தேதியே சம்பளம் வழங்க ஏற்பாடு செய்வதோடு, எல்லா உறுதிமொழிகளையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. இந்த ஆசிரியர்களின் சங்கக் கட்டடம் கட்டு வதற்கு நிலமும், 3 லட்சம் ரூபாயும் தருவதாக ஆசிரியர்கள் மாநாட்டில் மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எந்த உதவியும் இன்னும் செய்யப்படவில்லை. அதைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று ஊராட்சி ஒன்றியப் பள்ளி, அரசாங்கப் பள்ளி, தனியார் பள்ளி என்று பல்வேறு நிர்வாகப் பிரிவுகள் இருப்பதால் ஆசிரியர்கள் மிகவும் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த முறை களை மாற்றி கல்விக்கு என்று தனி வாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் உத்தரப்பிரதேசத்தில் இன்சூரன்ஸ் திட்டம் ஒன்றை வைத்திருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு 2½ ரூபாய் இந்தத் திட்டத்தின்கீழ் செலுத்தினால், 2,000 ரூபாய் ஈட்டுநிதி கிடைக்கிறது. அத்தகைய திட்டத்தை நமது தமிழ் நாட்டிலும் கொண்டுவர வேண்டும்.

அரசாங்கக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு "லிபரலைஸ்ட் பென்ஷன்" திட்டம் இருக்கிறது. ஆனால், தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு இந்தத் திட்டம் இல்லை. ஆகவே, தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று பல்கலைக்கழகங்கள் பல இருக்கின்றன. ஜனநாயக நாட்டிலே மாணவர்களுக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்தில் பங்குபெற உரிமை கொடுக்கப்பட வேண்டும். உலகம் முழுவதிலும் இந்தக்



கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாம் மற்றவர்களுக்கு எல்லாம் முன்னோடியாக இருப்பதால் உடனடியாக இங்கே இருக் கின்ற பல்கலைக்கழகங்களின் செனட், சின்டிகேட், அகடமிக் கவுன்சில் ஆகிய நிர்வாகப் பிரிவுகளில் மாணவர்களுக்கு இடம் கொடுக்கவேண்டும். இடம் கொடுக்க வேண்டுமென்றால், மாணவர்கள் அங்கே உட்கார்ந்துகொண்டிருந்தால் மட்டும் போதாது.

They must have effective voice in the administration of the University. They must have effective voice in the determination of syllabi and curricula . அந்த வகையிலே பங்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ஒன்றொன்றையும் கூற விரும்புகிறேன். பல மாணவர்கள் ஏழைக் குடும்பங்களிலிருந்தும், பின்தங்கிய வகுப்பினரிலிருந்தும் வருகிறார்கள். அவர்களுடைய ஏழ்மையின் காரணத்தாலோ அல்லது சூழ்நிலையின் காரணத்தாலோ தேர்வில் தோற்றுவிடுகிறார்கள். அத்தகைய மாணவர்களுக்கு "ஸ்பெஷல் கோச்சிங்" கொடுக்க ஒவ்வொரு பள்ளியிலும் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் தேர்வைப் பொறுத்தவரையில் 1948-ஆம் ஆண்டில் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் "கன்டினிவஸ் இன்டர்னல் அசெஸ்மென்ட் சிஸ்டத்தைக்" கொண்டுவர வேண்டுமென்று சொன் னார்கள். அந்த முறை பரீட்சார்த்தமாக சில பள்ளிகளில் நடை பெற்று வருவதாகச் சொல்கிறார்கள். இதிலே "டிங்கரிங்" என்பது கூடாது. பரீட்சார்த்தமாக இருப்பதை மாற்றி, டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் திட்டத்தில் ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால் அவைகளைச் சீர்திருத்தி, உடனடியாக எல்லாக் கல்லூரிகளிலும் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆந்திரப்பிரதேசத்தில் முன்மாதிரியாக சில விஷயங்களை செய் திருப்பதாக பத்திரிகை மூலமாக அறிந்தேன். அந்த வகையில் இங்கேயும் மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1973 மார்ச் 20

முன்பெல்லாம் பள்ளிகளில் "சோஷியல் சர்வீஸ் லீக்" என்ற அமைப்பு இருக்கும். பெரியநாயக்கன்பாளையத்தில் இப்போதும் அந்த அமைப்பு இருக்கிறது. அந்த லீகின் மூலம் மாணவர்கள் நல்ல பல பணிகளைச் செய்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கட்டடப் பணியைச் செய்து முடித்திருக்கிறார்கள். அத்தகைய சமூகப் பணிகளில் மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரப்பட வேண்டும். அப்படிச் செய்தால் மாணவர்கள் உடல் வலிவுபெற்று ஊக்கமுடன் வாழ்வதற்கு பயிற்சிபெற பயனுடையதாக இருக்கும். எனவே, எல்லாப் பள்ளிகளிலும் இத்தகைய அமைப்பை ஏற்படுத்துவது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து, பாலிடெக்னிக் மாணவர்கள். அவர்கள் பெப்ரவரி 12-ந் தேதியிலிருந்து போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கிறார்கள். பிரிஸ்டிஜைப் பார்க்காமல் அந்த மாணவர் தலைவர்களை அழைத்து, போராட்டத்திற்கான காரணங்களை அறிந்து அதற்குப் பரிகாரம் காணவேண்டும். முதலிலே சிறையில் இருக்கின்ற பிள்ளைகளை விடுதலை செய்து, விரைவிலே இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை யூனிவர்சிட்டியில் "யூனிவர்சிட்டி இன்ஃபர்மேஷன் பீரோ" வைத்திருக்கிறார்கள். அது மாணவர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். மாணவர்களின் பிற்கால வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் முறை, வேலை வாய்ப்பு முதலியவைப்பற்றி தகவல் தெரிவிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் இந்த அமைப்பினால் நல்ல பலன் ஏற்படும் என்று தெரிகிறது. ஆகவே, இந்த அமைப்பை சென்னையில் மட்டுமல்லாமல் கல்லூரிகள் அதிகமாக இருக்கின்ற கோவை, மதுரை, திருச்சி போன்ற இடங்களிலும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றி சில கருத்துக்களை கூறி முடித்துவிடுகிறேன். சிங்கநல்லூர் நகராட்சிக்கு 18 லட்சம் ரூபாய் கல்வி மானியம் இன்னும் தரப்படவில்லை. பலமுறை கேட்டும் இன்னும் கிடைக்கவில்லை. ஏதோ வரி பாக்கி இருக்கிறது என்று காரணம் சொல்கிறார்கள். இப்போது அங்கும் மின்வெட்டு இருக்கிறது; தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, வரி பாக்கி இருந்தாலும் அதற்கு தனியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வகை செய்து, கல்வி மானியத்தை உடனடியாக கொடுக்க வேண்டும்.



1973 மார்ச் 20] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

மார்ச் மாதம் 31-ந் தேதிக்குள் மானியம் கிடைக்கவில்லை என்றால் பள்ளிகளை எல்லாம் மூடிவிட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்கு வழி செய்யாமல், இந்த மானியத்தை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவையிலே ஒரு ஸ்டேடியம் பாதியில் இருக்கிறது. திரு. பாங்கோ அவர்கள் அங்கே கலெக்டராக இருந்தபோது பெரு முயற்சி செய்து இந்த ஸ்டேடியத்தை அமைக்க ஏற்பாடு செய்தார்கள் அந்த வேலை பாதியில் நின்று விட்டது. மேற்கொண்டு வேலை தொடங்கவில்லை. அதனால் போட்ட பணம் வீணாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, அதை உடனடியாகக் கட்டி முடிக்க உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஸ்போர்ட்ஸுக்கு என்று தனியாக ஒரு டைரக்டரை நியமிக்க வேண்டும். அப்படியானால்தான் ஸ்போர்ட்ஸில் தனிக் கவனம் செலுத்தி, மாணவர்கள் உடல் வலிமையைப் பெருக்க முடியும் உலகம் முழுவதுமே இந்த ஸ்போர்ட்ஸுக்கு தனி முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆகவே, ஸ்போர்ட்ஸுக்கு தனியாக டைரக்டரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : மாண்புமிகு உறுப்பினர்கள்—திரு. இ. எஸ். தியாகராஜன், திரு. நா. வெ. குருசாமி, திரு. கோதண்டராமையா ஆகியோர் பேசுவதற்கு பெயர் கொடுத்திருந்தார்கள். அவர்கள் இப்போது இருக்கையில் இல்லை. பேசுவதற்கு பெயர் கொடுத்தவர்கள் கண்டிப்பாக அவையில் இருந்தால் தான் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பும் வசதியும் இருக்கும். பெயர் அழைக்கும்போது அவையிலே இல்லாதவர்கள் பின்னால் பேச முடியாது. நான் இங்கே பெயர் குறிப்பிட்ட மூன்று உறுப்பினர்களும் இப்போது அவையில் இல்லாததால் அவர்கள் இனி இந்த மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. அடுத்து, திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் பேசுவார்கள்.

திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி : பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்திலே நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால் ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் கல்வி வசதி அளிக்க வேண்டுமென்று ஏராளமான தொகையை ஒதுக்கியிருக்கும் இந்த

மானியத்தை வரவேற்று பேசுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த மகிழ்ச்சியோடு என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த மானியத்தின்மீது நான் சில வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். அது சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். முதன் முதலில் ஒரு வெட்டுத் தீர்மானத்தை

To discuss about the need to give a complementary grant to Madurai Thiagarajar College of Engineering for inventing a newly designed Debris Remover",

என்று கொடுத்திருக்கிறேன். இதிலே புதிதாக நாம் எவ்வளவோ செலவு செய்து, இந்த மாதிரி ஒரு செய்தியை நாமெல்லாம் மகிழத் தக்க வகையில் கல்வியிலே செய்திருக்கிறார்கள் என்றால் உண்மையிலே அது சந்தோஷப்படக்கூடியதாகத்தான் இருக்கிறது.

இப்படி நாம் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து வருகின்றோம். இதன் பலனை மக்கள் அனுபவிக்கும்போது, அவர்கள் பல புதிய கண்டுபிடிப்புகளில் இறங்கி அதன் பலனை நாட்டிற்கு அளிக்கின்றார்கள். எனவே, அவர்களுக்குப் பாராட்டு மானியம் என்று கொடுத்தால் அவர்களை மேலும் ஊக்குவிப்பதாக அமையும். இந்த மானியத்தில்கூட "பாராட்டு மானியம்" என்று ஒதுக்கீடு செய்யலாம். அடுத்து பிள்ளைகள் படிக்கும் உயர்நிலைப் பள்ளிகளில் பெண்களைச் சேர்ப்பதையொட்டி, அதுபற்றி விவாதிக்க ஒரு வெட்டுப் பிரேரணையைக் கொடுத்திருக்கின்றேன். இதற்கு முன்பு ஒரு கவன ஈர்ப்புப் பிரேரணைக்குப் பதிலளிக்கும் முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "இந்தமாதிரி ஒரு சுற்றறிக்கை இருப்பது அவசியமும்கூட" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் சில பாதிப்புகள் ஏற்படும் என்று கருதுகிறேன். உதாரணமாக திருச்சி, சென்னை போலுள்ள பெரிய ஊர்களை எடுத்துக்கொண்டால் அங்குள்ள பெண்களுக்கான கல்லூரி அல்லது உயர்நிலைப் பள்ளிகள் ஊரின் ஏதோ ஒரு ஓரத்தில் இருக்கின்றன. அவற்றில் படிக்கவரும்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாணவிகள் வெகுதூரம் நடந்து வரவேண்டிய நிலை இருக்கிறது. எனவே, இந்த முறையை நாம் அமுல்படுத்த வேண்டியது அவசியம் தானா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

எந்தக் காரணத்திற்காக இந்தச் சுற்றறிக்கை இப்பொழுது புதிதாக அனுப்பப்பட்டது என்று தெரியவில்லை. எங்காவது ஏதாவதொரு பள்ளியில் ஏதேனும் தவறு இழைக்கப்பட்டிருப்பின் அதைத் திருத்திக்கொள்ள வழிவகைகள் இருக்கின்றன. ஆனால் எல்லா





வற்றுக்குமாக ஒரு பொது உத்திரவை பிறப்பிப்பது அவசியம்தானா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். கிராமப்புறங்களில் சிறு நகரங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என தனித்தனியாக வைத்திருக்கவில்லை. அங்கே சேர்ந்து தான் படிக்கின்றார்கள். அங்கே படிக்கின்றார்களே, இங்கே நகரங்களிலே சேர்ந்து படிக்கக்கூடாது என்ற ஒரு நிர்ப்பந்தத்தினைக் கொண்டு வர வேண்டாம் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, அருப்புக்கோட்டையைப் பொறுத்து ஒரு வெட்டுப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன். அங்கே உள்ள ஒரு முனிசிபாலிடி உயர்நிலைப் பள்ளியை இப்போது அரசு மேற்கொண்டிருக்கின்றது. அதில் ஏறத்தாழ பாதிப் பேர் பெண்கள். அது போன்று ஒவ்வொரு ஆண்கள் பள்ளியிலும் பெண்கள் படிக்கத்தான் படிக்கின்றார்கள். இந்த நிலைமை அங்கே இருப்பதால் இங்கேயும் இந்த மாதிரி ஒரு சலுகை கொடுக்க வேண்டும் என்று சொல்லி இந்த ஜி. ஓ. அவசியம்தானா என்று மீண்டும் இதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ட்ராயிங் மாஸ்டர்கள் இன்னும் பகுதி நேர ஆசிரியர்களாகத்தான் உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரிகின்றார்கள். மாதம் 40 அல்லது 50 என்றுதான் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த அளவில் அவர்கள் குறைந்த சம்பளத்தில்தான் இருக்க வேண்டுமா, அவர்களை முழு நேர ஆசிரியர்களாகவே நியமித்து அவர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைக்க வழிவகை செய்யமுடியாதா என்று அரசு ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஹிந்தி அல்லது சமஸ்கிருதத்தினை ஒரு மாணவன் படிக்க விரும்பினால் அப்படிப்பட்ட மாணவர்களுக்கு வாய்ப்பினை அளித்திடும் வகையில் அதை ஒரு "ஆப்ஷனல் ஸப்ஜெக்ட்" என்று வைத்தால் நலமாக இருக்கும். அதில் அவர்கள் கட்டாயமாகத் தேற வேண்டியதில்லை என்றாலும் ஒரு மொழியினைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கின்றது. எனவே, இதையும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்தக் கல்வியிலாகாவிலுள்ள பல்வேறு சட்ட திட்டங்கள், ரூல்களையெல்லாம் தொகுத்து கோடிபிகேஷன் பண்ணினால் நலமாக இருக்கும். இப்போது எஜுகேஷன் ரூல்ஸ் ஏராளமாக இருக்கின்றன. அதில் சம்மந்தப்பட்டவர்களுக்கே இந்த ரூல்ஸ் முழுதும்

தெரியுமா என்பது சந்தேகம்தான். எனவே, பி.எஸ்.ஓ. போல் இவற்றைத் தொகுத்து வெளியிட்டால் பலனுள்ளதாக அமையும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், நமது கல்வியின் தரத்தைப் பற்றிச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்று பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் தரம் எந்த நிலையில் இருக்கின்றது என்றால் நாம் இவற்றுக்காக ஏராளமாகச் செலவழித்தாலும் மேலைநாடுகளில் இதே வகுப்புகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் கணித-விஞ்ஞான பாடங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் அந்த மாணவர்கள் நமது மாணவர்களைவிட ஆறு அல்லது ஏழு மடங்குக்கு அறிவுத்திறனைப் பெற்று இருக்கின்றார்கள். எனவே அந்த முறையில் நமது மாணவர்களுடைய அறிவுத்திறனை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்தக் கல்லூரி ஆசிரியர்கள், மற்றும் உயர்நிலைப் பள்ளி, ஹையர் எலிமென்ட்டரி, எலிமென்ட்டரி பள்ளி ஆசிரியர்களுடைய சம்பளம், ஸர்வீஸ் கண்டிஷன் இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பார்த்துப் பரிசீலனை செய்யத்தக்க அளவிற்கு ஒரு கமிஷனை நியமித்தால் நலமாக இருக்கும். இப்படி அனைவருடைய தேவைகளையும் பரிசீலனை செய்யத்தக்க அளவிற்கு ஒரு குழுவினை அமைத்து அவர்களுடைய சம்பளம், ஸர்வீஸ் கண்டிஷன் இவற்றை ஒட்டுமொத்தமாகக் கவனித்தால், பி.டி. ஆசிரியர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள், எங்களுக்குக் கொடுக்கவில்லை என்று தமிழாசிரியர்கள் சொல்லுவதோ அல்லது அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள் எங்களுக்குக் கொடுக்கவில்லை என்று இன்னொரு பிரிவினரோ சொல்ல வேண்டிய நிலை ஏற்படாது. எனவே, இப்படிப்பட்ட ஒரு குழுவினை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இதுபோன்று இப்போது நமது உயர்நிலைப் பள்ளிப் படிப்பு பத்தாண்டுகாலம் இருக்க வேண்டுமா அல்லது பதினொரு ஆண்டுகள் இருக்க வேண்டுமா என்றும் அதுபோலவே புகு முகவகுப்பு இருக்க வேண்டுமா அல்லது இரண்டாண்டு கால இண்டர்மீடியட்டும் இரண்டாண்டு கால பட்டப்படிப்பும் இருக்க வேண்டுமா என்றும் இப்படி சமீபகாலமாக ஒரு சர்ச்சை இருந்துகொண்டு வருகின்றது. இந்தச் சர்ச்சையை இப்படியே நீடித்துக்கொண்டு போவது நல்லதல்ல. அரசும் இந்தச் சர்ச்சைகளுக்கு முடிவு காணவேண்டும் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டு இருந்தாலும் இதில் பல சிரமங்கள்



இருக்கின்றன என்று அவற்றைத் தள்ளிப்போட்டுக் கொண்டே போகின்றார்கள். இது நல்லதில்லை. சீக்கிரம் இவற்றுக்கு முடிவு காண அரசு இதைப்பற்றி தீவிரமாக ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நமது பள்ளி மாணவர்களுக்குள்ள இப்போதுள்ள பாடத் திட்டங்களை மாற்றுவது அவசியம்தானா, இப்போதுள்ள சிலபஸ் போதுமா என்று ஆராய ஒரு குழுவினை அமைத்திட வேண்டும் என்று கருதுகிறேன். இப்போதுள்ள பாடத் திட்டங்கள் மட்டும் அறிவு வளர்ச்சிக்குப் போதுமானதுதானா என்று பார்க்கும்போது என்னைப் பொறுத்தமட்டில் "போதாது" என்றுதான் நான் கருதுகிறேன். மாணவர்களை அதிகமான எண்ணிக்கையில் ஈர்க்க வேண்டும் என்று "மாஸ் எஜுகேஷன்" என்று அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அரசு இப்போது திட்டங்களைத் தீட்டி வருகின்றது. எனவே ஸ்பெஷல் ஸப்ஜெக்ட்ஸ்க்குப் போதிய அளவிற்கு அரசு கவனம் செலுத்தவில்லை. எனவே நாட்டிலே மாஸ் எஜுகேஷனோடு "ஸ்பெஷல் எஜுகேஷனையும்" கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட 1973-74-ஆம் ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்தினை அவையின்முன் வைக்கிறேன்.

வருகிற ஆண்டிற்கான மொத்த வரவு செலவுக் கணக்கில், ரூ. 465 கோடியில், ரூ. 99 கோடி—அதாவது 21 விழுக்காடு கல்விக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையினைப் பாராட்டுகின்ற முறையிலே மாண்புமிகு ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இதை வரவேற்று நல்ல பல கருத்துக்களை இங்கே கூறியிருக்கிறார்கள். தமிழக அரசானது நம்முடைய நாட்டிலே நல்ல வளத்தையும் மக்களுடைய வாழ்விலே நலத்தையும் சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தை, அடிப்படையைக் கொண்டு, சமதர்ம ஆட்சி நல்ல முறையில் நடத்த வேண்டுமானால் இந்தத் துறையிலே அதிகமான முறையில் மலர இந்தத் துறையிலே அதிகமான பணத்தைச் செலவிட வேண்டுமென்ற கருத்தோடுதான், இங்கே மொத்தச் செலவில் 21 சதவீதம் என்ற அளவுக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். தொடக்க நிலைக் கல்வியை எடுத்துக்கொண்டால் ஆசிரியர்-மாணவர் வீதத்தை 35 என்றும், உயர் துவக்கப் பள்ளிகளில் 33 என்றும் அமைக்கப்பட்டு

[திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன்] [1973 மார்ச் 20

ஆசிரியர்–மாணவர் விகிதம் சீராக்கப்பட்டிருக்கிறது. அதேபோல 1972–73 முதல் ஆரம்பப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள காரணத்தால் கல்வியின் தரமானது உயர வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, தொடக்க நிலை ஆசிரியர்கள் படிப்படியாக குறைக்கப் படவிருக்கிறார்கள். அந்த இடங்களில் உயர் நிலை ஆசிரியர்கள் (செகண்டரி கிரேட் ஆசிரியர்கள்) நியமனம் செய்யப்படுகிற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அத்தோடு, பள்ளிகளில் நல்ல தரமான கல்வியை எதிர்பார்க்க வேண்டுமானால் இப்போது நடத்தப்படுகிற தேர்வுகள்—அவை அந்தந்தப் பள்ளிகளிலேயே நடத்தப்படுகின்றன—அவற்றில் ஐந்தாவது வகுப்பிலேயே, பொதுத் தேர்வு வைத்து, அந்தப் பொதுத் தேர்வின் விடைத் தாள்கள் வேறு பள்ளி ஆசிரியர்களைக்கொண்டு திருத்தப்படுமானால் கல்வியின் தரம் உயரும்—அந்த ஏற்பாட்டினைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால், நம்முடைய பள்ளிக் கூடங்களில் கட்டிட வசதிகள் போதிய அளவில் இல்லை. எனவே, வசதியான கட்டிடங்களை நமது அரசு கட்டித்தர திட்டமிட்டுச் செயல் பட்டு வருகின்றது. இதன்மூலம் 800 பள்ளிகள் தமிழகத்தில் பயனடைந்துள்ளன. வருகிற ஆண்டில் 4,000 பள்ளிகள் பலன் அடைய விருக்கின்றன.

8-ஆவது வகுப்பில், பொதுத் தேர்வு வைத்திருக்கிறார்கள். பொது வினாக்கள் தயாரிக்கப்பட்டு, விடைத்தாள்கள் அந்தந்தப் பள்ளி யிலேயே திருத்தப்பட்டு வருகின்றன. அவற்றை வேறு பள்ளிகளில் திருத்த ஏற்பாடுகளைச் செய்வோமேயானால் கல்வியின் தரம் வளரவும், ஆசிரியர்கள் அந்தந்தப் பள்ளிகளில் ஊக்கமாக கல்வி கற்பிக்கவும் ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

பள்ளிகள் தொகுதி—ஸ்கூல் காம்ப்ளெக்ஸ்—என்று ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு உயர் நிலைப் பள்ளியை ஒட்டி இருக்கின்ற 10–20 தொடக்கப் பள்ளிகளையும் உயர் நிலைப் பள்ளி யுடன் சேர்த்து கல்வியின் தரம் உயர்வதற்காக ஒரு திட்டம் இருந்து வருகிறது. இத்திட்டம் 114 இடங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இது மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 20] [திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன்]

அடுத்து, ஆசிரியர் நலன் என்று வருகிறபோது, ஆசிரியர்களுக்கு மற்ற அரசு அலுவலர்களுக்குக் கொடுக்கப்படுவதைப்போன்ற நல்ல ஊதியமும், ஓய்வு ஊதியமும் அளிக்கப்பட்டு வருகின்றது. இதுவரை ஆசிரியர் தேசிய நல நிதியிலிருந்து 200 ஆசிரியர்களுக்கு, ரூ. 12 லட்சம் வரை உதவி செய்திருப்பது மிகமிகப் பாராட்டக் கூடிய ஒன்றாகும்.

வேலை வாய்ப்பு என்று எடுத்துக்கொண்டால், கடந்த 6 ஆண்டு களில், 33 ஆயிரம் ஆசிரியர் பதவிகளை உருவாக்கி இருக்கிறது இந்த அரசு. வருகிற 1973–74-ம் ஆண்டிலே 1,475 ஆசிரியர் பதவிகளையும், மைய அரசுத் திட்டத்தின் மூலம் 900 ஆசிரியர் பதவிகளையும் உருவாக்கவிருக்கிறது. மேலும், சிறப்புத் திட்டத்தின் கீழ் இன்னும் பல பதவிகளை உருவாக்கவிருக்கிறது நமது தமிழக அரசு.

இவ்வளவு திட்டங்களை நாம் போட்டாலும்கூட, இப்போது இருக்கக் கூடிய நம்முடைய பள்ளிகளின் நிலைமையைப் பார்க்கிற போது மிகவும் வருந்தக் கூடிய நிலை இங்கே இருப்பதற்குக் காரணம், நம்முடைய பள்ளிகளிலே அரசியல் கட்சிகளின் ஊடுருவல்கள் அதிக மாக வளர்ந்து வருவதுதான். நம்முடைய நாடானது விடுதலை அடைந்தபோது காங்கிரசைச் சேர்ந்த தேசிய இயக்கத்திலுள்ளவர் கள் நாடு விடுதலை அடைவதற்காகப் போராடியபோது, மாணவர் களும் பங்கு கொண்டார்கள்.

அதைப்போலவே நம்முடைய கழகம், மொழிப் போராட்டத்திலே மொழி காக்கின்ற போராட்டத்திலே மாணவர்களை ஓரளவு பயன் படுத்திக்கொண்டது. இல்லை என்று மறுப்பதற்கில்லை. ஒவ்வொரு கட்சியும் அவ்வப்போது நாட்டின் நன்மைக்காக மாணவர்களை பயன் படுத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு நாட்டின் நிலைமை வேறு. நாட்டின் நிலைமையைப் பார்க்கிறபோது பல பொருளா தாரத் திட்டங்களைப் போட்டு ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்று வருகின்றபோது, மாணவர்களை அரசியலிலே பங்குபெற வைப்பது என்பது நல்லதா என்பதை சிந்திக்க வேண்டும். இந்த நேரத்தில் பொதுவாக, அரசியல் சார்புடைய மன்றங்கள், மாணவர் அமைப்புகள், நாட்டில் பரவலாக இருக் கின்றன. இந்த அமைப்புகள் நம்முடைய நாட்டின் எதிர் காலத்திற்கு தேவையா என்பதை இங்கே உள்ள எதிர்க் கட்சித் தலைவர்களும் ஆளும் பொறுப்பிலே உள்ள அமைச்சர்களும் சிந்தித்து வழிவகை காணவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மாணவர்கள் கட்சி ரீதியாகச் செயல் படுகிறபோது அமைதி குலைகின்றது. அமைதி

குலைந்தால் படிப்பில் மாணவர்களுக்கு நாட்டம் குறைகிறது. ஒழுங்கின்மை, கட்டுப்பாடின்மை வளர்கிறது. இந்த நிலைமை மாறவேண்டுமானால் நமது தமிழகத்தில் கல்வி நிலையங்களில் அரசியல் கட்சி சார்புடைய அமைப்புகள் தேவையா என்று சிந்தித்து அதற்குப் பரிகாரம் காண எதிர்க் கட்சிகளும், இங்கே ஆளுங்கட்சி சார்பில் அமர்ந்துள்ள அமைச்சர்களும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஒரு கோரிக்கையை தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திருச்சியிலிருந்து அரியலூர்வரை உள்ள 40 மைல் தூரத்தில் மையமாக உள்ளது எங்கள் தொகுதி. அங்கே, புள்ளம்பாடி பகுதியில் கல்லூரி ஒன்று தேவைப்படுகிறது. அந்தக் கல்லூரியைத் துவக்குவதற்கு அந்த வட்டாரத்திலேயே முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. அங்கே உள்ள பின்தங்கிய சமூகத்தினர் அறநிலையம் ஒன்றினை உருவாக்கி அதன்மூலம் ஒரு கல்லூரியைத் துவக்க வேண்டும் என்று அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். அதற்கு போதிய நடவடிக்கைகளை எடுத்து, அனுமதி வழங்கவேண்டும் என்று கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, "கற்றார் என்பார் கண்ணுடையோர், முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதவர்" என்று சொல்லப்படுகிறது. அந்தப் புண்ணைப் போக்குவதற்காக இன்றைய தமிழக அரசு நாவலர் தலைமையில் ரூ. 100 கோடி ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது என்று கூறி இந்த மானியத்தின் மீது என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டில் கண் வழங்குகின்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் ஊனக்கண்ணை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமது மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் ஞானக்கண்ணை வழங்கிக்கொண்டிருக்கிறார். அதற்காக இன்றைக்கு ரூ. 100 கோடி செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நமது தமிழ் நாட்டில் படித்தவர்கள் 50 விழுக்காடுதான் என்பதை உணர்ந்திருக்கிற



காரணத்தால், கல்வித் துறையில் அதிகமாக தொகை ஒதுக்கி நாட்டிலுள்ள படிப்பறிவு அற்ற ஏழை எளிய மக்களுக்கு கல்வி கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இருக்கிற கல்வி முறை மாறவேண்டுமென்று எல்லோரும் அக்கறையோடு சொன்னார்கள். கல்வி இலாகாவில் மாறுதலைச் செய்ய வேண்டுமென்றுமட்டும் நான் சொல்லவில்லை. ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். அன்றைக்கு ஆங்கிலேயர்கள் இருந்த நேரத்தில் இருந்த கல்வி முறையையே, அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லாத முறையில், நாம் பின்பற்றி வருகின்றோம். இன்றைக்கு இருக்கின்ற கல்வியானது "குமாஸ்தாக்களை உருவாக்குகின்ற தொழிற்சாலை"-யாக இருக்கிறதே தவிர உண்மையில் நன்மை அளிக்கின்ற முறையில் இல்லை. இதை நான் சொல்லும்போது பழைய கல்வி முறையை—குருகுல கல்வித் திட்டத்தை கொண்டுவரவேண்டும் என்று சொல்லவில்லை. அந்த குருகுலத்தில் இருந்த ஆசிரியர்–மாணவர் பாசம், பற்று ஆகியவைகளை உடையதாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுவும் ஆரம்ப ஆசிரியர்கள் சிற்பியைப் போன்றவர்கள். சிற்பி கலையழகு பொருந்திய சிலையைச் செதுக்கினால் அது எல்லாக் காலத்திற்கும் கலையழகு பொதிந்த சிலையாக காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. குரங்கை செதுக்கினால் அது குரங்காகவே–மகாபலிபுரத்தில் இருப்பதுபோல–எல்லாக் காலத்திற்கும் இருந்து கொண்டிருக்கிறது. அதுபோல சிறு மாணவர்களுடைய உள்ளத்தில் ஆரம்ப ஆசிரியர்கள் அன்பு, பண்பு, ஒழுங்கு, அடக்கம் ஆகிய நற்பண்புகளைப் போதித்தார்கள் என்றால் அந்த மாணவர்களது பிற்காலத்திலும் கூட அந்த உயரிய குணங்கள் பல்வகையில் வெளிப்பட்டுக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். ஆகவே ஆரம்ப ஆசிரியர்கள்தான் மாணவர்களது இளவயதில் சரியான போதனையைக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் ஆகவே பட்டதாரி ஆசிரியர்களையே ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களாகப் போடவேண்டும் என்கிற முறையை ஏற்படுத்தினால் கூட நல்லது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்போதுதான் எதிர்காலத்தில் உயர்நிலைப் பள்ளிக்கு, கல்லூரிக்குப் போகிற மாணவர்கள் திறம்பட பற்பல துறைகளிலும் சிறந்து நிற்க வழி ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல நாம் பி.யு.சி. என்று வைத்திருக்கிறோம். கிராமங்களில் இருந்து இங்கே வந்து கல்லூரியில் பி.யு.சி.யில் சேருகிறவர்கள் 6 மாதம் நகரத்தைச் சுற்றிப் பார்ப்பதில் கழித்து

விடுகிறுர்கள். பாக்கியுள்ள 6 மாதம்தான் கல்வியில் கவனம் செலுத்துகிறுர்கள். அதற்குள், ஒரு நிலை ஏற்படுவதற்குள், அந்தப் படிப்பு முடிந்துவிடுகிறது. அந்த ஆண்டு இப்படி கல்வியில் ஈடுபாடு ஏற்பாடதவாறே பலரது படிப்பு கெட்டுவிடுகிறது. ஆகவே மறுபடியும் முன்பு இருந்ததுபோல இண்டர்மீடியட் என்பதாக இரண்டாண்டுப் படிப்புத் திட்டத்தை உடனடியாகக் கொண்டு வருவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நெருங்கிய ஒரு பாசம் ஏற்படத்தக்க சூழ்நிலையையும் நாம் ஏற்படுத்தியாகவேண்டும். முன்பு அப்படித்தான் இருந்தது. விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா என்பார்கள். இன்றைக்கு ஆசிரியர்களே கிளர்ச்சி செய்கிறபோது மாணவர்களிடையே கிளர்ச்சி செய்கிற மனப்பான்மை வளர்ந்துவிட்டதுபற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை எடுத்துச் சொல்லட்டும். அரசும் அவற்றைப் பரிவோடு கவனித்து ஆவன செய்யட்டும். ஆனுல் ஆசிரியர்கள் நேரிடையாகக் கிளர்ச்சியில் இறங்குவதை நாம் ஒரு சட்டத்தின் மூலமாகவாவது தடுத்தால்தான் நன்ருக இருக்கும்.

இன்றைக்கும்கூட எனக்கு நினைப்பிருக்கிறது, எப்படி பாசத்தோடு எங்களை அடித்து ஆசிரியர்கள் சொல்லிக் கொடுத்தார்கள் என்பது. அப்போது ஆசிரியர் என்னைக் கிள்ளிய கிள்ளை நினைத்தால்கூட வலி ஏற்படுவதுபோன்ற உணர்ச்சி வருகிறது. அதைப்போல அடித்துச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் ஆசிரியர்கள் மாணவர்களிடையே ஒரு பாச உணர்ச்சியோடு பாடம் சொல்லிக்கொடுக்க வகை செய்யவேண்டும். மார்க்கக் கல்வி முறை இதற்கு அவசியம். நான் மதத்தின் அடிப்படையில் சொல்லவில்லை. மார்க்கம் என்ருல் எல்லா மார்க்கங்களும், எல்லா மதங்களும்தான் சில அடிப்படை உண்மைகளை ஒப்புக் கொண்டிருக்கின்றன. உண்மை பேசவேண்டும், அன்பு, பண்பாட்டோடு நடக்கவேண்டும், மூத்தோர் சொல்லைக் கேட்கவேண்டும் என்பது போன்ற ஒழுக்க அடிப்படையில் கல்விமுறை அமையவேண்டும். மாணவர்களுக்கு இறை உணர்ச்சி ஏற்படவேண்டும். இறை அச்சத்தோடு கூடிய கல்வி அமைப்பு மூலம்தான், தன்னிச்சையாகப் போகமுடியாத நிலை இருந்தால்தான் நமது கல்வித்திட்டமே வெற்றிபெற முடியும். அப்படிப்பட்ட கல்வி முறையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



சென்னையில் நான் படித்தது மொகமடன் காலேஜ். அதுதான் இப்போது அரசினர் கல்லூரியாக இருக்கிறது. அதை ஒரு பெண் கல்லூரியாக மாற்றப்போவதாக அறிகிறேன். அந்தக் கல்லூரி முஸ்லீம்களுடைய அறக்கட்டளையினுல் ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் கல்லூரி என்றைக்கும் பெயர் மாற்றம் இல்லாது இப்போதுள்ளது போல நடந்துவர இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், அந்தக் கல்லூரியில் இஸ்லாமிய சரித்திரத்தை எடுத்துப் படிக்க முன்பு வாய்ப்பு இருந்தது. மாநிலக் கல்லூரியிலும் கூட அந்தப் பாடத்தை எடுத்துப் படித்தோம். இஸ்லாமிய சரித்திரத்தைத் தெரிந்துகொள்ள வாய்ப்பினை ஏற்படுத்தும் அந்தப் பாடத் திட்டமும் இருக்கவேண்டும் என்பதாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்ப் பண்டிதர்களுக்கு முதல் நிலையாளர் தகுதியும், முன்னுரிமையும் அளிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல உருதுவில் இருக்கிற முன்ஷிகளுக்கும் அளிக்கவேண்டும். உருது பள்ளியில் கட்டாயமாகத் தமிழையும் எடுத்துப் படித்தாக வேண்டும் என்று செய்தாகவேண்டும். அவர்கள் விரும்பினுல் அரபையும் இஷ்ட பாடமாக எடுத்துப் படிக்க வழிவகை செய்யவேண்டும்.

இன்றையதினம் கல்லூரிகள் யூனிவர்சிடியோடு சேர்ந்த அடானமஸ் பாடி. அவர்களே பூரணமாக ஒப்புக்கொள்வதாகக் கூட அறிகிறேன். அப்படி அவர்களோடு இணைந்துபோக கல்லூரிகள் விரும்பினுல்கூட நம்மிடத்தில் இருந்து விலகிப்போக நாம் அனுமதிக்கவேண்டும்.

இன்றையதினம் கல்லூரிகளுக்கு ஏற்படுகிற டெஃபிசிட்டில் அரசாங்கம் 80 விழுக்காடு தருவதாகக் கூறப்படுகிறது. உண்மையில் அப்படி அளிப்பதில்லை. அவர்கள் வசூல் செய்கிற நன்கொடை, பிற செலவுகளை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்பதாகச் சொல்லி கடைசியில் அவர்கள் கொடுப்பதைப் பார்த்தால் மொத்தத்தில் 40, 50 விழுக்காடுகள்தான் தருகிறுர்கள். அவர்கள் அதெல்லாம் வேண்டாம் என்கிற அளவில் முன்வந்தால் அரசாங்கமே முழு அளவையும் கொடுக்கத் தயாராய் இருக்கவேண்டும். இன்றைக்கு டி.ஏ., ஸி.ஸி.ஏ., எச்.ஆர்.ஏ., என்பதாக கல்லூரியில் உள்ளவர்களுக்குக் கொடுப்பது எல்லாவற்றையும் அரசாங்கம் ஏற்க முன்வர வேண்டும்.

இன்றைய தினம் நமது நாட்டிலே கல்வித்தரம் சிறப்பாக இருப்பதற்குக் காரணம் தனியார் கல்லூரிகள்தான் என்பதை உணர வேண்டும். தவருன முறையில் ஒன்றிரண்டு தனியார் கல்லூரிகள் நடக்கலாம். ஆனல் பெரும்பாலான தனியார் கல்லூரிகள் நல்ல முறையில் நடக்கின்றன என்பதில் கருத்து வேறுபாடு இல்லே. அரசாங்கக் கல்லூரிகளுக்குக் கொடுப்பதுபோலவே அரசாங்கம் தனியார் கல்லூரிகளுக்கும் உதவியை அளிக்க வேண்டும். இதுபற்றி நாவலர் அவர்களும், டாக்டர் கலேஞர் அவர்களும் கருணை கூர்ந்து தனியார் கல்லூரிகள் சிறப்பாக நடைபெற ஆவன செய்ய வேண்டும்.

தென்னகத்தில் ஏறத்தாழ 12 முஸ்லீம் ஸ்தாபனங்கள் நடத்தக் கூடிய கல்லூரிகள் இருக்கின்றன. அவர்களுக்கு சின்டிகேட் போன்ற அவையில் தேர்தல் மூலம் பிரதிநிதிகளே அனுப்பி வைக்க முடியா விட்டாலும் அரசாங்க நாமினேஷன் மூலமாக அந்தக் கல்லூரிகளேச் சேர்ந்தவர்கள் அந்த அவைக்குச் செல்ல அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும்.

பாடப் புத்தகங்களேப்பற்றி ஒரு வெட்டுத் தீர்மானத்தையே கொடுத்திருக்கிறேன். பாட புத்தகங்களே எழுதுவதில் தவறுகள் தெரிந்தோ, தெரியாமலோ ஏற்பட்டுவிடுகின்றன. மத சம்பந்தமான விஷயங்களே எழுதுகிறபோது—நாங்கள் நபிநாயகத்தைப் பற்றி தவருக அச்சிடப்பட்டிருந்ததைக்கூட சுட்டிக்காட்டினேம்—திருத்திக் கொள்வதாகச் சொன்னர்கள்—அந்த அந்த மதத்தைச் சேர்ந்தவர்களேக் கலந்துகொண்டு எழுதச் செய்யவேண்டும்.

இன்றைய தினம் மதிய உணவுத் திட்டம் நல்ல முறையில் செயல்படுகிறது. மற்ற மாநிலங்கள் பாராட்டுகிற அளவுக்கு நடைபெறுகிறது. இதற்கு வெளிநாட்டில் இருந்தும் அதிக உதவிகளேப் பெற அக்கறை காட்டவேண்டும்.

பெண் கல்வி மிகவும் அவசியமானது. அதற்கு ஒரு வரையறை இருக்கவேண்டும். எம்.எஸ்.ஸி., எம்.பி.பி.எஸ். போன்ற படிப்புகளே—திருமணம் செய்துகொள்ளாது வேலேக்குத்தான் போகப்போவதாக சொல்கிறவர்களுக்கு மட்டும் கொடுத்தால் நன்ருக இருக்கும். பொதுவாக குடும்பப் பெண்களுக்கு ஏற்ற ஒரு கல்வி அமைப்பை ஏற்படுத்திக் தருவது மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். படித்த பெண்களால் அமைவதே நல்ல குடும்பம் என்பதை பாரதிதாசனும் சொல்லியிருக்கிறர். உடல்



பயிற்சி, விளேயாட்டுக் கல்வியில் இன்னும் போதுமான கவனத்தை நாம் காட்ட வேண்டும். 55 கோடி மக்கள் கொண்ட நமது நாடு உலக விளேயாட்டுப் போட்டிகளில் ஒன்றிரண்டு தாமிர விருதுகளேத் தான் பெற முடிகிறது. தமிழகத்தில் சிறப்பாக உள்ள சடுகுடு விளேயாட்டைக் கூட நம்மால் பிரபலப்படுத்த முடியவில்லே. ஆகவே என்.சி.சி. பயிற்சி அளிப்பதுபோன்று விளேயாட்டுத் துறையிலும் அக்கறை காட்டி கட்டாயப்படுத்தியாவது மாணவர்களே விளேயாடச் சொல்லி அதிலே அவர்களுக்கு ஒரு திறமை ஏற்படச் செய்ய வேண்டும்.

இரண்டே இரண்டு கோரிக்கைகளேச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். வந்தவாசி பகுதியைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அங்கே ஒரு கல்லூரியை ஏற்படுத்துவதற்கு அரசு ஆதரவு தருகிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை சொல்கிற அதே நேரத்தில், அதை உடனடியாக அமுல் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அறவக்குறிச்சி தொகுதியிலே ஒரு கல்லூரியை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. அ. பரந்தாமன் : துணைத் தலேவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களேச் சொல்ல விழைகின்றேன்.

இன்றைக்கு தமிழ் நாட்டில் கல்வி நல்ல முறையிலே அமைந்திருக்கிறது என்பதனேக் கண்டு மற்ற மாநிலங்கள் கூட பாராட்டுகின்ற நிலேமைகள் உருவாக்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் உண்மையாகவே பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆனல், இன்றைய தினம் நாம் சிந்திக்கின்ற திறனேக் கொடுக்கின்ற அளவில் கல்வியை வைத்திருக்கின்ருேமா என்பதைப் பார்க்கின்ற நேரத்தில், இந்த விவகாரத்தை கொஞ்சம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிருேம் என்பதனே நான் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் இன்னும் கற்றுக் கொள்ளுகின்ற நிலேமையிலேதான் இருக்கிருேமோ என்றுதான் தோன்றுகிறது. சிந்திக்கின்ற நிலேக்கு நம்முடைய கல்வி வளரவில்லே யென்ற குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்த்துச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதைச் சொல்கின்ற நேரத்தில், 1-வது வகுப்பிலிருந்து 4-வது வகுப்பு வரை

இருக்கிற வேஸ்டேஜை நாம் தவிர்த்தாக வேண்டும். இந்த வகுப்புகளில் மட்டும் 51.2 சத விகிதம் வேஸ்டேஜ் இருந்து கொண்டிருக்கிறது என்றால், நம்முடைய தமிழகத்திலே படிக்காதவர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிறது என்பதை நாம் மனதிலே கொள்ள வேண்டும்.

இதைப் பார்க்கும்போது, புதுமுக வகுப்பிலே 53 சத விகிதம் வேஸ்டேஜ் இருந்து கொண்டிருக்கிறது. இன்ஜினீயரிங் கல்வியை எடுத்துக்கொண்டால், கடந்த 10 வருடங்களிலே, 18 சத விகிதம் வேஸ்டேஜ் இருந்து கொண்டிருக்கிறது. பாலிடெக்னிக்கை எடுத்துக் கொண்டால், 20 சத விகிதம் வேஸ்டேஜ் இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் ஆராய்கின்ற நேரத்திலே, குறிப்பிட்ட சமூகத்தினுடைய குழந்தைகள் தான் வேஸ்டேஜுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஏழை—எளியவர்கள், வஞ்சிக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் வேஸ்டேஜுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி கல்வி இலாகா ஆராயவேண்டும். அதற்கான பரிகாரத்தைத் தேடவேண்டுமென்று நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் இருக்கிற பி.யூ.சி. பற்றி, சென்ற ஆண்டு கூட நான் குறிப்பிட்டேன். P.U.C. is a criminal w[illegible] என்று. இந்த புகுமுக வகுப்பை அடியோடு எடுத்துவிட்டு இண்டர்மீடியட் கோர்சைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புகுமுக வகுப்பை முடித்துவிட்டு வேலை தேடிச் சென்றாலும்கூட, எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவனோடுதான் கணக்கிடப்படுகிறானே யொழிய, புதிய கல்வியைப் பெறவில்லையென்ற குற்றச்சாட்டு இருக்கிறது. இது மாணவர்களுக்கு மட்டுமல்ல, பெற்றோர்களுக்குக்கூட உதவிகரமாக இல்லை. It is a waste both for the students and the parents என்கின்ற குற்றச்சாட்டு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, பழைய இண்டர்மீடியட் வகுப்பைக் கொண்டு வரவேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். இதற்கெல்லாம் காரணம் என்ன?

அயல்நாடுகளிலே, இன்றையதினம் விஞ்ஞான முறை எங்கோ சென்று கொண்டிருக்கிறது. அங்கு வளர்கின்ற விஞ்ஞானத்தோடு தமிழ் நாட்டிலே இருக்கிற நாம் போட்டி போட முடியவில்லை யென்றால், அதற்கான காரணம் என்ன என்று ஆராய்கின்ற நேரத்திலேதான் பல ஆண்டுகளுக்கு முன்னாலே நம்மை ஆண்ட வெள்ளையனை நாடி நமது உள்ளம் செல்கிறது. குமாஸ்தா தொழிலுக்குத்தான் இவர்கள் லாயக்கானவர்களாக இருக்கவேண்டுமென்ற



முறையில் "மெக்காலே" கல்வி முறையைப் புகுத்தினான். நம்முடைய சிந்தனையைத் தூண்டுகின்ற, விரிவுபடுத்துகின்ற கல்வியாக அன்றைய தினம் மெக்காலே கல்வி முறையைப் புகுத்தவில்லை, அப்பொழுது அவர்களுக்கு தேவைப்பட்ட கல்வியெல்லாம் குமாஸ்தாக்களுக்கானதுதான். அவர்களுக்கு அடிமைப்பட்டு வாழ்கின்றவர்கள்தான் இங்கே கல்வி பெறுகின்றவர்களாக இருக்கவேண்டுமென்ற காரணத்தாலேதான், இந்திய துணை கண்டமே, அகில உலகத்திலே போட்டி போட முடியாத நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய கல்விமுறையை அடியோடு மாற்றியமைக்க வேண்டும். நம்முடைய கல்வி முறையை மாற்றியமைக்கின்ற நேரத்தில், நம்முடைய கல்வி முறை பாப்புலேஷன் எடுக்கேஷனை இருக்கவேண்டுமென்ற யோசனையை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கணக்குப் புத்தகத்தை எடுத்துக்கொண்டால், நம்முடைய தாத்தா என்ன படித்தாரோ அதையேதான் இன்றையதினம் படித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அதை மாற்றியமைக்கிற நேரத்திலே பாப்புலேஷன் எடுக்கேஷனை இருக்கவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். ஒரு நாளைக்கு எத்தனை குழந்தைகள் பிறக்கின்றன என்ற அடிப்படையிலே அமைந்தால், மாணவர்களுடைய சிந்தனையைத் தூண்டுகின்ற அடிப்படையிலே இருக்கும். இவ்வளவு ஜனத்தொகை பெருக்கத்திற்கு என்ன காரணம் என்று சிந்திக்க வேண்டுமென்ற உணர்ச்சிக்கு மாணவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். அந்த முறையில், சிந்தனையைத் தூண்டுகின்ற கல்வியாக இது அமையவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

நான் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன், இந்தக் கல்வி முறை, வேலை வாய்ப்புக் கல்வி முறையாக இருக்கவேண்டும். "ஜாப் ஓரியண்டட்" கல்வியாக இருக்க வேண்டுமென்று எல்லோருமே வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். அந்த அளவிலே உயர்நிலைப் பள்ளிகளிலே பல பிரிவுகளாகப் பிரித்து, இன்ஜீனியரிங்குக்கு, விஞ்ஞானத்திற்கு, லிட்டரச்சருக்கு இப்படி பல பிரிவுகளாகப் பிரித்து, மாணவர்களுக்கு அந்த particular branch of knowledge அதிலே பயிற்சி அளித்தால், நல்ல விஞ்ஞானிகளை, நல்ல மருத்துவர்களை, பொறி இயல் வல்லுநர்களை நாம் தமிழகத்திலே உருவாக்கிக் காட்ட முடியும் என்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1967-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலே ஒரு குழுவை, கல்வி முறையைப்பற்றி ஆராய்வதற்காக அமைத்தார்கள்.

"There is an urgent need to upgrade and improve school curricula to increase their knowledge content and to provide adequately for the development of skills and the inculcation of right interests, attitudes and values. Similar steps are also needed at the University stage"

என்று அவர்கள் தங்களுடைய அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அதை மனதிலே வைத்து நம்முடைய கல்வி இலாகா ஒரு மாறுதலை, இந்த முறையிலே, கல்வித்துறையிலே செய்யவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கடைசியாக,

"It is a matter for serious concern that incidents of student unrest have shown a tendency to greater frequency and violence in recent years. The causes of this malaise are complex and deep-seated and on effective cure goes beyond the Educational system. But the situation can be remedied considerably, if the Educational system is transformed, strengthened and made more effective"

என்று கூறுகிறார்கள். அந்த அடிப்படையிலே கல்வி முறையை மாற்றி அமைத்தால், மாணவர்களிடையே இருக்கிற அந்த தன்மைகள் மாற்றப்படும், நல்ல மாணவர்களாக அவர்கள் உருவாக்கப்படுவதற்கு வழிவகை பிறக்கும் என்று நான் சொல்லிக்கொள்வதோடு, கல்வி முறையை மாற்றி அமைக்கின்ற நேரத்தில், ஒழுக்கமுள்ள கல்வி முறைக்கு, "டிசிப்ளின்ட் எடுக்ககேஷனாகவும்" அதை அமைக்க வேண்டுமென்ற என்னுடைய யோசனையை தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, 1973–74-ம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின்மீது எங்களுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன். ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை கூட்டி இருப்பதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. கல்விக்கூடங்களில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்குப் போதுமான அளவு ஆசிரியர்கள் இல்லை. ஆகவே, ஆசிரியர்களை அதிகமாக்குவதற்கு எல்லா சூழ்நிலைகளையும் ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். சென்ற ஆண்டுமுதல் டிரெயினிங் ஸ்கூல்ஸ்கூட நடைபெறவில்லை. இருப்பினும், ஆசிரியர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்காத காரணத்தால்தான்





அவர்கள் ஸ்கூல்களுக்குப் போக முடியவில்லை. ஆகவே, படித்த ஆசிரியர்கள், வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்கவேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கட்டிடங்கள் விஷயமாக, எங்களுடைய மதுரை மாவட்டத்திலே, ஆண்டிப்பட்டி பகுதியில் பல பள்ளிகள் இருக்கின்றன. அங்கு எந்த விதமான கட்டிட வசதியும் சரியான முறையில் இல்லை. அது மலைப் பகுதியாகவும் இருக்கிறது. அங்கு ஏராளமான பள்ளிகள் மரத்தடிகளிலும், கூரை வேயப்பட்ட இடங்களிலும் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அங்கு கட்டிடங்களைக் கட்டித்தர அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித்தரம் உயர்வதற்கு பி. டி. ஆசிரியர்கள் பாடுபடுவதை நான் வரவேற்கிறேன். பி.டி. ஆசிரியர்கள், அதைப் படித்த எல்லோருக்கும் வேலை கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மைய சமையற்கூடங்கள் ஏற்படுத்த இருப்பதாகத் தெரிகின்றது. அவை சென்னையை சுற்றித்தான் இருக்கின்றன. மதுரை திருநெல்வேலி, இம்மாவட்டங்களுக்கு, அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படவில்லை. இதைப் பார்க்கும்போது வட மாவட்டங்கள் வளருகின்றன, தென் மாவட்டங்கள் தேய்கின்றன என்ற நினைப்புத்தான் வருகிறது. ஆகவே, அந்த தென் மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆண்டிப்பட்டியிலே பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று சென்ற ஆண்டிலிருந்தே முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் எந்தவிதமான அறிவிப்பும் கிடைக்கவில்லை. அங்கே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டிப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த மஞ்சிநாயக்கன்பட்டி என்ற இடத்தில் 5 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு கட்டடம் கட்டப்பட்டு இன்னும் அது முடிவுறுமல் இருக்கிறது. பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அவர்கள் அனுமதியுடன் அந்தக் கட்டடத்தினுடைய போட்டோவையே இங்கே காட்ட விரும்புகிறேன். இதைப் பற்றி பலமுறைகள் எடுத்துச் சொல்லப்பட்டுவிட்டது. கல்வி இலாகாவிற்கு விவரங்கள் அனுப்பப்பட்டுவிட்டன. நானும் 17—3—1972 ஆம் நாளன்றும் 6—2—1973 ஆம் நாளன்றும் இதைப் பற்றிய இரண்டு குறுகிய கால வினாக்களைக் கேட்டிருந்தேன்.

[திரு. நா. வெ. குருசாமி] [1973 மார்ச் 20

இன்னும் இதற்கு முடிவு ஏற்படவில்லை. கிராம மக்கள் 2 ஆயிரமும், யூனியன் 4 ஆயிரமும், இன்னும் இரண்டாயிரமும் சேர்த்து மொத்தம் 8,000 ரூபாய்க்கு எஸ்டிமேட் தயாரித்து அந்த வேலை தொடங்கப்பட்டு, அந்தக் கட்டடம் முக்கால் பங்கு வேலை நடந்து கொண்டிருந்தபொழுது சிலர் அதற்கு ஸ்டே வாங்கினார்கள். அந்த ஸ்டே பிறகு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகும்கூட இன்னும் இந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பெறாமல் இருக்கிறது. இதனால் அங்கே படிக்கின்ற குழந்தைகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே இந்த விஷயத்தை அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பள்ளிக் கட்டடத்தை தனிப்பட்டவருக்கு 5 ஆயிரம் ரூபாய்க்கு கமிஷனர் விற்றுவிட்டதாகத் தெரிகிறது. விற்றுவிடுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார். இதைப்பற்றி பஞ்சாயத்து ஒன்றியத் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டு அங்கே இதுபற்றி விவாதிக்கப்பட்டு, இரண்டுபேர்களும் தகராறு செய்து கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர் கட்டப்போனால் வாங்கியவர் தகராறு செய்கிறார். வாங்கியவர் கட்டப்போனால் பஞ்சாயத்துத் தலைவர் தகராறு செய்கிறார். கண்டமனூர் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு வழக்கு இருந்துகொண்டிருக்கிறது. இந்த விஷயத்திலே உடனடியாகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடக்கிற இந்தக் கல்வி மானியத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கொடுத்ததற்காக என் நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனையோ மாதிரியான செல்வ ஆதாரங்களைவிட மனிதச் செல்வம், மக்கட் செல்வம் என்பது ஒரு நாட்டிற்குக் கிடைத்திருக்கிற மிகப் பெரிய பிரசாதம் ஆகும். நாட்டிலே கனி வளங்கள் இருக்கின்றன. நீர் வளம் இருக்கின்றது, சுரங்கங்கள் இருக்கின்றன, தங்கம் இருக்கிறது, இரும்பு இருக்கிறது, இந்தமாதிரியான வளங்களைக் காப்பாற்றுவதைக் காட்டிலும் ஒரு நாட்டிலே முற்போக்கான அரசுக்கு அந்த நாட்டிலே இருக்கிற வாலிபர்களை, வருங்காலத் தலைமுறையினரைக் காப்பாற்றவேண்டிய, அதற்காக மூலதனம் இடவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.



1973 மார்ச் 20] [திரு. கே. ஏ. மதியழகன்]

அதேமாதிரியாக, வாலிபர்களை, வளருகின்ற தலைமுறையினரை, இந்த நாட்டின் நாளையக் குடிமக்களாக தலைமை வகிக்கக்கூடியவர்களைக் கவனிக்கவில்லையென்றால் ஜனநாயகத்தின் அடித்தளத்தையே அது தகர்த்துவிடும் என்று பெரிய மேதாவிகள் எல்லாம், நிபுணர்கள் எல்லாம் கூறியிருக்கிறார்கள். முன்னாலே இருந்த நாளந்தா பல்கலைக் கழகமும், தக்ஷசிலம் பல்கலைக் கழகமும் போன்று இன்றைக்கு நடைபெறவேண்டுமென்று நான் சொல்லவில்லை, பஃறுளியாற்றுப் பன்னெடுங் காலத்து முறைகள் வரவேண்டுமென்று சொல்லவில்லை. ரொம்பப் பழங்காலத்து நிலைமைகள், ஆக்ஸ்ஃபோர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களின் நிலைமைகள் இங்கே வரவேண்டுமென்று சொல்லவில்லை. நாம் மேற்கொண்டிருக்கின்ற ஜனநாயகத்தையும் சமதர்ம லட்சியத்தையும் நிறைவேற்றுகின்ற அவற்றைப் பூர்த்தி செய்கின்ற, வாய்ப்பைப் பெறுகின்ற, அதற்குத் தகுதியுடையவர்களாக இருக்கின்ற சமுதாயத்தை அமைப்பதற்கு ஏற்ற முறையிலே கல்வித் திட்டம் அமைய வேண்டும். ஒரு நாட்டின் இளைஞர்கள், அவர்களுடைய குணநலன்கள், (கேரக்டர்) அறிவாற்றல், அவர்களுடைய நல்ல தன்மைகள் இவையெல்லாம் அவர்கள் எம்மாதிரியான பயிற்சி பெற்றார்கள், எம்மாதிரியாக ஆளாக்கப்பட்டார்கள் என்பவை எல்லாம் ஒரு நாட்டினுடைய எதிர்காலத்திற்கு மிக மிக முக்கியம் ஆன ஒன்று. பள்ளிக்கூடங்கள், விளையாட்டு மைதானங்கள் இவற்றில் மாணவர்கள் எப்படிப் பயிற்சி பெற்றார்களோ அந்த முறையிலேதான் அவர்கள் எதிர்காலச் சமுதாயத்தைச் அமைக்க முடியும். அந்த வகையிலேதான் இருபது ஆண்டுக் காலத்திற்குப் பிறகு உருவாக இருக்கிற சமுதாயம் அமையும் என்பதால் அவர்களிடத்திலே பெரிய சிரத்தையையும், மரியாதையையும் காணவேண்டிய பொறுப்பு நாட்டை ஆளக் கூடியவர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பாக இருக்கிறது.

இன்றைய தினத்திலே எங்கு பார்த்தாலும் பரபரப்பு காணப்படுகிறது என்று முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். The youth have become more restless, more critical, more challenging.

மாணவர்கள் இன்றைக்குக் கேள்விகளைக் கேட்கிறார்கள். அறைகூவல்விட்டுக் கேட்கிறார்கள், பரபரப்பாகக் கேட்கிறார்கள். நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் மகளிர் கல்லூரியில் பேசும்பொழுது இன்றைய வாலிபர்களைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள்.

மாணவர்கள் உணர்ச்சிமயமான தன்மையிலே இருக்கிறார்கள். அவர்கள் மீது குற்றம் அல்ல. அவர்கள் மீது பழிபோட்டுவிட்டு இன்றைய அரசாங்கம் தப்பித்துக்கொள்ள முடியாது. இன்றைக்கு சமுதாயத்திலே இருக்கிற துன்பங்கள், துயரங்கள் இவற்றிற்கெல்லாம் விடை காணத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். அவர்களுக்குப் பதில் சொல்லவேண்டியது, அவர்கள் கேள்வி கேட்பது இன்றைக்கு மிக மிக முக்கியமானது. அவர்களுக்கு இருக்கின்ற அடிப்படை உரிமையிலே அவர்கள் கேட்கிறார்கள், நாளை அவர்கள்தான் வாழப்போகிறார்கள், அவர்களுக்குப் பதில் சொல்லாமல், அதிலிருந்து நழுவுவதோ அல்லது பதில் சொல்ல வேண்டியதில்லை என்றோ கற்பனைக் கோட்டையிலே இருக்கிறவர்கள் நிச்சயமாக, கண்டிப்பாக அவர்களுடைய நம்பிக்கையைப் பெற முடியாது.

சினிமாவிலே—நண்பர் அரங்கண்ணல் அவர்களுக்குத் தெரியும்—சினிமாவிலே அடல்ட்ஸ் ஒன்லி என்று போடுவார்கள், அதுபோல மாணவர்களே அரசியலுக்கு வராதீர்கள் என்று சொல்கிற சித்தாந்தம் வளருகின்ற தலைமுறையினருக்கு உதவி செய்யாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றையெல்லாம் நான் கோடிட்டுக் காட்டுவதற்குக் காரணம் கல்வி இலாகாவிலே இன்றைக்கு மட்டுமல்ல, கடந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்திலே 5, 6 மாத இடைவெளியைத் தவிர நாவலர் அவர்களே, பொறுப்பை வகித்து வருகிறார்கள், அவர்கள் முதலிலே 99 கோடி ஒதுக்கினோம், இப்பொழுது 103 கோடி ஒதுக்குகிறோம் என்று சொல்வார்கள், இன்னும் மெடிக்கல் காலேஜ், கால்நடை மருத்துவக் காலேஜ் இவற்றிற்கு எல்லாம் சேர்த்து 120 கோடி ரூபாய் செலவாகிறது, மொத்தத்திலே 27 சதவீதம் செலவு செய்யப்படுகிறது, இவ்வளவு பெரிய தொகை கல்விக்காக முதலீடு செய்யப்படுகிறது என்று சொல்வார்கள். இந்த ஆண்டு மட்டுமல்ல. ஹைதரபாத் குழுவினர் ஆரய்ச்சி நிலையத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஊதாரித்தனமாகச் செலவு செய்துவிட்டார்கள் என்று நான் சொன்னால் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

அந்த அளவிற்கு அவர்கள் ஸ்பெண்டிங் மினிஸ்டராக—செலவு செய்யக்கூடிய அமைச்சராக, 465 கோடி ரூபாயிலே பெரும் பங்கை செலவு செய்யக்கூடிய அமைச்சராக—மற்ற துறைகள் என்றால் அரசாங்கத்திற்கு வருமானம் வரும், வருவாய்த்துறை அமைச்சர் மூலமாக வருவாய் வரும், சம்பாதித்துக் கொடுப்பார்கள், விற்பனை வரி, கலால் வரி என்றெல்லாம் சம்பாதித்துக் கொடுப்பார்கள்—



ஆனால் நம்முடைய நாவலர் அவர்கள் "என்னுடைய இலாகாதான் அதிகமாகச் செலவழிக்கிறது" என்று பெருமையாகக்கூடச் சொல்வார். பணத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை. பெரிய தொழிற்சாலைகளிலே மூலதனம் செய்வதைவிட ரோடுகளிலே மூலதனம் செய்வதைவிட எதிர்காலத்துச் சமுதாயத்தின்மீது மூலதனம் செய்வதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

ஆனால் இவைகளெல்லாம் சரியாக இந்த சமுதாயத்திற்குப் போய்ச் சேர்ந்தனவாவென்று பார்ப்பதற்குக் கடமைப் பட்டிருக்கிறோம். இந்த அறிக்கையில் இவ்வளவு பெருமையாக 100 கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்று சொல்லியும் கூட, இன்றைக்கும் 33 லட்சம் இளைஞர்கள் 6 வயதிலிருந்து 11 வயது வரையுள்ள இளைஞர்கள், 11 வயதிலிருந்து 14 வயது வரையுள்ள இளைஞர்கள், 14 வயதிலிருந்து 17 வயது வரையுள்ள இளைஞர்கள், இந்த நாட்டின் ஏழை எளிய மக்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பள்ளிக்கூடத்தின் நுழைவாயிலுக்குள் போக முடியாமல் இருக்கிறார்கள். அறிக்கையின்படி 33 லட்சம் இளைஞர்கள் இப்படி இருக்கிறார்கள். 100 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். ஆனால் தமிழ் நாட்டிலே 6 வயதிலிருந்து 11 வயது வரையிலே பள்ளிக்கூடத்திற்கு போகாதவர்கள், வாய்ப்பு இல்லாதவர்கள் 565 ஆயிரம் பேர்கள். 11 வயதிலிருந்து 14 வயது வரை இருக்கிறவர்கள் மொத்தம் 2,653 ஆயிரம் பேர்களில் 1,383 ஆயிரம் பேர்கள்தான் பள்ளிக்குப் போகிறார்கள். போகாதவர்கள் இந்த ஏஜ் க்ரூப்பில் 1,270 ஆயிரம் பேர்கள். 14 வயதிலிருந்து 17 வயது வரை உள்ளவர்களைப் பார்த்தால் அது ரொம்பவும் பயங்கரமானது.

இதற்கு ஆட்சியில் உள்ளவர்கள் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள். 11 வயதிலிருந்து 14 வயது வரை உள்ள இளைஞர்களில் இந்த 1973-ம் ஆண்டிலே, மொத்தம் உள்ள 23 லட்சம் இளைஞர்களில் 13 லட்சம் பேர்கள்தான் படிக்கிறார்கள். இன்னும் பயங்கரமானது, 14 வயதிலிருந்து 17 வயது வரை உள்ள இளைஞர்கள் நிலை. மொத்தமுள்ள 21 லட்சம் இளைஞர்களில் 7 லட்சம் பேர்தான் பள்ளிக்கூடம் போகிறார்கள். மீதியுள்ள 14 லட்சம் பேர் பாதையோரத்திலும், வேலி ஓரத்திலும், சாக்கடையிலும் இன்னும் வசதிக் குறைவான இடங்களிலேயெல்லாம் சாப்பாட்டிற்குக்கூட இல்லாமல் இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் வேடிக்கைக்காக சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்திலிருந்து சொல்கிறேன். நாம் 70 லட்சம் பேரை படிக்கவைக்கிறோம். 2½

[திரு. கே. ஏ. மதியழகன்] [1973 மார்ச் 20

லட்சம் பேர் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். இப்படி பெருமைப்
பட்டுக் கொள்கிற நேரத்தில், 100 கோடி ரூபாய் இந்தத் துறைக்கு
மூலதனம் செய்யப்பட்ட பிறகும் 33 லட்சம் குழந்தைகள், 6 வயதி
லிருந்து 17 வயது வரை உள்ள குழந்தைகள், இன்றைக்கு பள்ளிக்
கூடம் போவதற்கான வாய்ப்பை பெறவில்லை. இந்த ஆண்டுகூட
40 ஆயிரம் பேர்களை சேர்ப்பதற்கு சில வசதிகளை செய்திருக்கிறோம்
என்று சொல்கிறார்கள். 40 ஆயிரம் பேர் போனால் மீதியுள்ள 32½
லட்சம் பேர்கள் இந்த நாட்டு மக்களல்லவா? அவர்களுக்கு உரிமை
கிடையாதா? அவர்களுக்கென்று என்ன முயற்சி எடுத்துக் கொண்
டீர்கள்? 70 லட்சம் பேர் படிக்கிறார்கள் என்றால் 30 லட்சம் பேர்கள்
வெளியே இருக்கிறார்கள் என்பதைக் குறித்து மாண்புமிகு கல்வி
யமைச்சரவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆசிரி
யர்கள் இல்லையா, பயிற்சி பெற்றவர்கள் இல்லையாவென்றால் நிரம்பத்
தான் இருக்கிறார்கள். அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். நாம்
செய்த சாதனை, செகண்டரி கிரேடு படித்த ஆசிரியர்களை ஹையர்
கிரேடு போஸ்டிலே வைத்திருக்கிறோம். இந்த 4, 5 ஆண்டுகளில்
இப்படி 25 ஆயிரம் பேர்களை செய்திருக்கிறோம். என்ன பொருள்,
செகண்டரி கிரேடு பயிற்சி அவர்களுக்குப் பயிற்றுவிக்கிறோம்.
படிக்கிறார்கள். படித்த அவர்களுக்கு அதற்கு வேண்டிய சம்பளத்தை
கொடுக்க முடியாமல் இருக்கிறோம். எம். ஏ. படித்தவர்களை
எஸ். எஸ். எல். சி-க்காரர்கள் மாதிரி வேலை செய்யுங்கள் என்று
சொல்கிறமாதிரி இந்த 25 ஆயிரம் பேர்களை இந்த 5, 6 வருடமாக
வைத்திருந்தோம்.

இந்த வருஷம் இன்னும் 5 ஆயிரம் ஹையர் கிரேடுகளை செகண்
டரி கிரேடாக மாற்றுகிறோம் என்று சொன்னால் இதை எந்த ஆசிரியர்
சமுதாயம் வாழ்த்தும் என்று கருதுகிறீர்கள். இந்த நாட்டில் வேலை
வாய்ப்பிற்கான உரிமை கிடையாதா? செகண்டரி கிரேடு படித்து
விட்டு 25 ஆயிரம் பேர்கள் இவ்வளவு நாட்களாக இப்படி இருந்திருக்
கிறார்கள். இன்றைக்கு 5 ஆயிரம் பேர்கள் என்றால் இன்னும் எத்தனை
பேர்கள் என்பதை கண்டிப்பாக தெரிவிக்க கடமைப்பட்டிருக்
கிறார்கள். ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. இப்போதுதான்
ஆசிரியர்களை சஸ்பெண்டு செய்கிறார்கள். கடந்த ஆண்டு டிரெயினிங்
ஸ்கூல்களை சஸ்பெண்டு செய்தார்கள். ஏராளமான பேர்களுக்கு
வேலையில்லை. இருக்கிற ஆசிரியர்களுக்கும் வேலையில்லை. புதிதாக
ஆசிரியர்களை உற்பத்தி செய்யக்கூடாதென்று டிரெயினிங் ஸ்கூலில்
யாரையும் சேர்ப்பதில்லை. 118 டிரெயினிங் ஸ்கூல்கள் இருக்கின்றன
என்று நினைக்கிறேன். இவ்வளவு டிரெயினிங் ஸ்கூல்களை வைத்துக்



1973 மார்ச் 20] [திரு. கே. ஏ. மதியழகன்]

கொண்டு வேலையில்லை. 33 லட்சம் பேர்கள், ஏழை மக்களின் குழந்தைகள் தெருவில் இருக்கிறார்கள். இருக்கிற ஆசிரியர்களுக்கு வேலை இல்லை. செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்களாகப் போகிறார்கள். இன்னும் இந்த நிலையில் இருக்கிற தென்றால் விளங்கவில்லை.

இதேமாதிரியாகத்தான் 100 கோடி ரூபாய் என்று பெருமை யாகச் சொல்கிறார்களே தவிர பள்ளிக்கூடங்களில் நிலை என்ன? 2,500 ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. 800 பள்ளிக்கூடங்களுக்கு ஒழுங்கான கட்டிடங்கள் கிடையாது. மீதியுள்ள பள்ளிகளின் கட்டிடங்கள் உதவாக்கரை கட்டிடங்கள். சென்னை நகரத்திலே எலிமெண்டரி பள்ளிகள் 600 இருக்கின்றன. இவைகளில் 300 வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. மணி நகரிலே உள்ள பழைய கட்டிடம் போன்று எத்தனையோ கட்டிடங்கள். இதற்கு. பள்ளிகள் கட்டுவதற்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டது என்று பார்க்கவேண்டும். 5 வருஷ காலமாக இந்த கட்டிடம் கட்டுவதற் காக, ஏழைக் குழந்தைகள், இந்த நாட்டினுடைய பிரஜைகள், வருங் கால தலைமுறையினர், இந்த நாட்டின் பொறுப்பை வருங்காலத்தில் ஏற்கவேண்டியவர்கள், அமைச்சர்களாக, நீதிபதிகளாக, போர் வீரர் களாக பணியாற்ற வேண்டியவர்கள் பயிலவேண்டிய அறிவாலயங்கள் கட்டடம் கட்ட, ஒரு கோடி ரூபாய் தான் செலவிடப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்தில் அல்ல. நாவலர் அமைச்சராக வந்ததிலிருந்து இந்த பள்ளிக் கட்டடங்களுக்காக ஒரு கோடி ரூபாய் தான் செலவு செய் திருக்கிறோம். ஆனால் வேறு இனங்களில் தாராளமாக செலவு செய்யப்படுகிறது.

கிரிக்கெட் ஸ்டேடியத்திற்கு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிரிக்கெட் பார்க்க வேண்டாமென்று சொல்லவில்லை. எல்லோரும் ரசிக்கும்போது நாமும் ரசிக்கலாம். நம் ஊரில் இருக்கிற கிரிக்கெட் ஸ்டேடியத்திற்கு 15 லட்ச ரூபாய் நன்கொடை கொடுத்திருக் கிறார்கள். 15 லட்சம் கொடுத்திருக்கிறேன் என்று ஸ்வாரஸ்யமாக எழுதியிருக்கிறார்கள். கிரிக்கெட்டை நான் குறைத்துச் சொல்லவில்லை. ஒரு ஆண்டிற்கு கிரிக்கெட்டிற்கு இவ்வளவு நாம் கொடுத்திருக்கிறோம். ஆனால் 5 வருடத்தில் பள்ளிக்கூடம் கட்ட ஒரு கோடி ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிரிக்கெட்டில் இருக்கிறவர்கள் எல்லாம் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளமாட்டார்களா? அவர்க ளெல்லாம் கோடீஸ்வரர்கள். அப்படிப்பட்ட கோடீஸ்வரர்களுக்கு 15 லட்ச ரூபாய் கொடுக்கிற நாம் ஒரு கோடி ரூபாய்தான் பள்ளிகள்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1973 மார்ச் 20

கட்டடம் கட்ட இதுவரை கொடுத்திருக்கிறோம். இவைகள் நாம் செய்யவேண்டிய காரியங்களுக்கு நெடுந்தூரத்தில் இருக்கிறோம் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. 100 கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்று பெருமை பேசுகிறவர்கள், இவ்வளவு பெரிய இடைவெளி இருக்கிறதென்பதை ஒத்துக்கொள்ளவேண்டும்.

மதிய உணவு பற்றி எல்லோரும் பேசினார்கள். மதிய உணவிற்கு இரண்டு கோடி ரூபாய் செலவு செய்கிறோம். கேர் நிறுவனக்காரன் 6 கோடி ரூபாய் அளவிற்கு கொடுக்கிற அந்த உணவுப் பொருள்களை வைத்துக்கொண்டு மதிய உணவு திட்டம் செயல்படுகிறது. விளம்பரப் பலகை செய்து கொள்வது தவிர இதற்காக நம்முடைய கஜானாவிலிருந்து, கருவூலத்திலிருந்து அதிக செலவுகள் செய்வதில்லை. ஒருவரை திருப்தி படுத்துவதற்காகவும், ஏதோ ஒரு அறிக்கை கொடுக்கிறோம் என்ற வகையில் இருக்கிறதே தவிர ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்காக வேண்டிய காரியங்கள் நடைபெறவேயில்லை. எத்தனையோ மாதிரியான கோளாறுகள் பரிட்சைகளில் என்று டில்லியிலிருந்து வந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை இங்கே இருக்கிறவர்கள் ஆராய்ச்சி செய்கிறார்களா என்று தெரியாது.

கல்வித் துறை என்பது ஆபத்தான நிலவரம் பொருந்திய ஒன்றுதான். திரு. அவிநாசலிங்கம் செட்டியார் காலம் ஆரம்பித்து அதற்குப் பிறகு திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள், பக்தவத்சலம் அவர்கள் வரை, துணை வேந்தர்கள் லட்சுமணசுவாமி முதலியார் போன்றோர் இருந்தும், நாம் உருப்படியான கல்வியைப் பெறுததற்குக் காரணம் இது ஒரு லெகசி, வெள்ளைக்காரன் காலத்திலிருந்து கிளார்க் வேலைக்குச் செய்கிற ஒன்றாக இது இருந்து வந்திருக்கிறது.

அதேமாதிரி இப்போது பி.யு.சி. வேண்டுமா, இண்டர்மீடியட் வேண்டுமா, 4 ஆண்டுகள் வைப்பதா அல்லது 3 ஆண்டுகள் வைப்பதா என்று யோசிக்கப்படுகிறது. அப்போது விவாதம் நடைபெற்றது. நாவலர் அவர்கள் கூட இருந்தார்கள். அவர்கள் பி.யு.சி.யை ஆதரித்தார்கள் என்று நான் கருதுகிறேன். திரு. பக்தவத்சலம் அவர்கள் காலத்திலே என்று கருதுகிறேன். கல்வித் துறை துக்ளக் தலைநகரை தௌலதாபாத்திற்கு மாற்றியமாதிரி இருக்கிறது. ஒரு தடவை 11 வருஷம் இங்கே இருக்கவேண்டும், பிறகு இண்டர்மீடியட் இருக்க வேண்டுமென்கிறார்கள். இப்படி இளைஞர்களுடைய வாழ்க்கையோடு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும். ரொம்ப வருத்தத்தோடு சொல்கிறேன். இது பெரிய விவகாரம்.



1973 மார்ச் 20] [திரு. கே. ஏ. மதியழகன்]

எதிர்காலத் தலைமுறையினருக்கு, உயிர்ப்பான சமுதாயத்திற்கு உபயோகமாகக் கூடிய புதிய கல்வி முறையை உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். இதிலே "ரி-திங் கிங்", "ஃப்ரஷ் அவுட்லுக்" வேண்டும். அது இல்லாது இப்போது கோடிக் கணக்கான ரூபாய் விரயமாகிக் கொண்டிருக்கிறது.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : ஒரே ஒரு கருத்து விளக்கத்தைச் சொல்லி விடுவது நல்லது என்று கருதுகிறேன். புகுமுக வகுப்பைப் புகுத்த வேண்டுமென்று அகில இந்தியத் துணை வேந்தர்கள் மாநாட்டில் முடிவு செய்து எல்லாப் பல்கலைக் கழகங்களும் கடைப் பிடித்தது, நான் பொறுப்பேற்று யோசனை சொல்வதற்கு முன்னாலேயே நடைமுறைக்கு வந்ததாகும். நான் எதிர்க்கட்சித் தலைவராக வருவதற்கு முன்னாலேயே நடைமுறைக்கு வந்து விட்டது. மறுபடியும் அதே துணை வேந்தர்கள் கூடி மறுபடியும் இண்டர்மீடியட் கொண்டு வரவேண்டுமென்று கூறி, பல்வேறு மாநிலங்களிலே அவர்களாக மாற்றிக் கொண்டு வருகின்றார்கள்.

பக்கத்திலுள்ள கேரளாவில் மாற்றி விட்டார்கள்; மைசூரில் மாற்றி விட்டார்கள், ஆந்திரத்தில் மாற்றி விட்டார்கள். வேறு பல மாநிலங்களிலும் மாற்றி வருகிறார்கள். நாமும் மாற்ற வேண்டுமா, வேண்டாமா என்ற கருத்துக்கள் வந்திருக்கின்றன. திட்டக் குழுவினர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நான் எடுத்துச் சொல்லி வந்தது என்று சொல்லுவது பொருந்தாது.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u> : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சில மாநிலங்கள் ஒப்புக் கொண்டு விட்டதாகச் சொன்னார்கள். சில மாநிலங்களில் ஹையர் செகண்டரி என்று இருந்து நம்மை விட நல்ல வாய்ப்பு கிடைத்து வந்தது. They were having a better chance அந்தக் காலத்தில் இந்தியா முழுவதும் பல இடங்களில் ஹையர் செகண்டரி என்று இருந்தது டெல்லி யூனிவர்சிடிக்கு எல்லாம் நல்ல வாய்ப்பாக இருந்தது. அந்த வாய்ப்பு நம்முடைய ஸ்டேட்டுக்கு இல்லை. அப்போது கோட்டை விட்டு விட்டது போல் இப்போதும் விட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : எல்லா மாநிலங்களும் அல்ல. ஒரு சில மாநிலங்களில் வேறு முறை இருந்திருக்கலாம் பெரும்பாலான மாநிலங்களில் இந்த முறை இருந்தது. நம்முடைய

மாநிலத்தில் இருந்த முறைக்கு நான் காரணமல்ல என்பதற்குத்தான் அப்போதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சட்டமன்றத் திற்கே வந்தார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்போதுகூட அறிக்கையில் தெளிவாகக் கூறவில்லை. இண்டர்மீடியட் ஆக்க வேண்டுமா, ஆக்கினால் கட்டடங்களுக்கு அதிகச் செலவு ஆகும் என்று இப்படித்தான் எழுதியிருக்கிறார்களே தவிர திட்டமிட்ட முடிவாக அறிக்கையிலே ஒன்றும் கொடுக்கப்படவில்லை, குழப்பமாக இருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அந்தக் குழப்பத்தைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நானே முடிவு எடுத்தால் எதேச்சாதிகாரமாக எடுத்த முடிவாகிவிடும் என்ற காரணத்தால்தான், தங்களைப் போன்ற கல்வி வல்லுநர்கள் எல்லாம் சேர்ந்து கருத்துக்களைச் சொல்வீர்களானால் யோசித்து முடிவு செய்ய வாய்ப்பாக இருக்கும். (சிரிப்பு)

திரு. கே. ஏ. மதியழகன் : நாவலர் அவர்கள் இந்தக் கருத்தைத் தான் கொண்டிருந்தார்கள் என்று நான் சொல்லவில்லை. என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன். என்னுடைய கவலை எல்லாம்—பி.யு.சி.யிலும் கவலை இல்லை; இண்டர்மீடியட்டிலும் கவலை இல்லை. எல்லாமே மாறுதலான, புதிய சமுதாயத்திற்கு ஏற்ற கல்விமுறை வர வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கம். இவ்வளவு கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்வது இளைஞர்களின் அறிவாற்றலை அற்புதமான கற்பனைத் திறனைத் தூண்டுவதாக அமையவேண்டுமென்பதற்கான ஒரு சிந்தனை பிறக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறேனே அல்லாமல் இதிலே இடமா, வலமா என்று கேட்கக் கூடிய நிலையிலே இல்லை. நாவலர் சொன்னது போல் நான் கல்வி நிபுணரும் அல்ல, அதிலே பாண்டித்தியம் பெற்றவனும் அல்ல; பொதுமக்களுடைய பிரதிநிதி என்ற முறையில் எப்படி இருக்க வேண்டுமென்ற கருத்திலே சொன்னேன்.



திரு. எம். ஏ. லத்தீப் : சென்னைப் பல்கலைக் கழகத்திலே பி.யு.சி. திறக்க 1956-லே முடிவு செய்து, முதல் பி.யு.சி. ஜுன் 1957-லே ஆரம்பிக்கப்பட்டது. நான் கூட முதல் பி.யு.சி. குருப்பைச் சேர்ந்தவன். விளக்கம் கூறினேன்.

ஆரம்ப ஆசிரியர்கள் 80.000 பேர் வரை எய்டெட் பள்ளிக் கூடங்களில் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்காக இப்போதுதான் மசோதா உருவாகி வந்திருக்கிறது. அவர்கள் தங்கள் கருத்தைக் கட்டுப்பாடாக எடுத்துச் சொல்லி போராட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

அரசாங்கத்திலிருந்து இப்போது புத்தகங்கள் போடுகின்றார்கள். எவ்வளவோ தேசிய மயமாக்க வேண்டியதை எல்லாம் விட்டு விட்டு மூன்று கோடி ரூபாய்களுக்குப் புத்தகங்களை அச்சடிக்க முன் வந்திருக்கிறார்கள். இதிலே குறைபாடுகள் இருக்கின்றன. ரொம்பச் சொல்லப் பிரியப்படவில்லை. பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு சிரத்தையைக் காண்பித்து நல்ல வகையில் கொண்டு வருவதற்கு முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யாருமே செய்யாத காரியத்தைச் செய்ய வேண்டுமென்பதிலே, அவருடைய பெரிய அறிவாற்றல் உலகப் பிரசித்தமானது. இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கம் உயர்நிலைப் பள்ளிக் கல்வி அளவுக்கு இலவசமாக்கியது. பி.யு.சி. மாணவர்களுக்கும் கல்வி இலவசம் என்று அன்று கொண்டு வந்தார்கள். நான்தான் அப்போது நிதியமைச்சர். என்னைத்தான் கையெழுத்துப் போடச் சொன்னார்கள். கல்லூரிப் படிப்புக்கும் இலவசமாக்கினோம் என்ற பெருமை இருக்க வேண்டுமென்று சொன்னார்கள், வற்புறுத்தினார்கள். நிதியமைச்சர் என்ற முறையில் நானும் கையெழுத்துப் போட்டேன். இவ்வளவு சீக்கிரமாக இரண்டு கோடி ரூபாயைச் செலவு செய்யச் சொல்லுகிறாரே என்று யோசித்தேன். இந்தச் சலுகை முழுக்க முழுக்க போய்ச் சேரவேண்டிய ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேர்ந்தால் பரவாயில்லை. கையைக் காட்டுகிறார்கள். தப்பாக ஒன்றும் சொல்லமாட்டேன். எல்லா பி.யு.சி. மாணவர்களுக்கும் இலவசம் என்று போட்டார்கள். அதனால் 80,000 மாணவர்கள் பலன் பெறுகிறார்கள். ராஜா சர் முத்தையாச் செட்டியார் வீட்டுப் பையனும் பலன் பெறுகிறான், பக்கத்திலே இருக்கின்ற குப்பத்திலே இருக்கிறவனும் பலன் பெறுகிறான். நாம் சொல்லுகின்ற சோஷலிஸத்தில் இதைப் பரிசீலனை

[திரு. கே. ஏ. மதியழகன்] [1973 மார்ச் 20

செய்ய வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். இப்படி சொல்லுவதால் நாங்கள் கொண்டு வந்ததை அண்ணா தி.மு.க.வினர் வேண்டாமென்று சொல்லுகிறார்கள் என்ற முறையில் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தக் கூடாது. அதிலே பணக்காரர்கள், தொழில் அதிபர்கள் வீட்டுப் பிள்ளைகளும் இருக்கிறார்கள். இரண்டு கோடி ரூபாயை ஏன் இழக்க வேண்டும்? ஒரு குறிப்பிட்ட வருமான வரம்பை நிர்ணயித்து அதற்குக் கீழே உள்ள பிள்ளைகளுக்கு இலவசம் என்று அறிவிக்கலாம். அந்த வரம்பை ஆண்டுக்கு 5,000 என்றோ, 6,000 என்றோ எப்படியோ வைத்துக் கொள்ளுங்கள். ஏழைகளுக்கு இருக்கலாம். அதை கிரேட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டக் கல்லூரியில் நாங்கள் படித்த காலத்தில் 300 பேர், 400 பேர் கூட இருக்க மாட்டார்கள். இப்போது 2,500 பேர், ஜெயிலில் தான் ஆயிரம் பேரை அடைக்கக்கூடிய இடத்தில் இரண்டாயிரம் பேரை அடைக்கிறார்கள் என்றால் இதிலும் அந்த நிலை உண்டாகியிருக்கிறது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி அமைய வேண்டுமென்பது நெடுநாளைய கோரிக்கை, அதை நிறைவேற்றுகின்ற வகையில் கல்வியமைச்சர் உரையில் ஒன்றையும் காணோம்.

சங்கீத நாடக சங்கம் என்று ஒன்று இருக்கிறது. வயது வந்தவர்கள், நாம் மறந்து விட்டவர்களுக்கெல்லாம் பரிசு கொடுக்கக்கூடிய அமைப்பாக இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இளைஞர்கள், வளரும் தலைமுறையினருக்கு உற்சாகம் அளிக்கக்கூடியதாக இல்லை. வயதானவர்களுக்கும் மரியாதை செய்ய வேண்டியதுதான்.

கோயில்களில் சாமி சிலைகள், விக்கிரகங்கள் ஏராளமாகத் திருடு போகின்றன. முதலமைச்சர் அவர்கள் கூட பிள்ளையோ பிள்ளை என்று அந்தக் கருத்தை மையமாக வைத்து கதை எழுதியிருக்கிறார்கள். "Antiquities and Arti Treasures Act" என்ற ஆக்டை மத்திய சர்க்கார் போட்டிருக்கிறார்கள்.

யார் யார் எவ்வளவு வைத்திருக்கிறார்கள் என்று பொருள்கள் பற்றி பட்டியல் கொடுக்க நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். குதிரை போனதற்குப் பிறகு லாயத்தைப் பூட்டுவது போல் எல்லாம் போய்க் கொண்டே இருக்கின்றன. பத்திரிகைகளில் கூடப் பார்த்தோம் அமெரிக்காவில் விற்கப்பட்டிருக்கிறது, இவ்வளவு லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ளதைக் காணோம் என்று பேப்பர்களில் வந்திருக்கின்றன. இவைகளுக்கு எல்லாம் நீங்கள்



1973 மார்ச் 20] [திரு. கே. ஏ. மதியழகன்]

எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன. பட்டியல் வந்தால் மட்டும் விக்கிரகங்கள் போவது நின்றுவிடுமா? ஏதேதோ காரியங்களுக்கு மத்திய அரசின் சட்டம் தேவை இல்லை என்று சொல்பவர்கள் இப்படி திருட்டுப் போவதற்கான காரணங்களைச் சொல்ல அவர்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கோவில்களில் உள்ள சிலைகள் திருட்டுப் போகிற நிலை நீண்ட நெடுங்காலமாகவே இருந்துவருகிறது. அவர்கள் குறிப்பிட்ட அமெரிக்கா சென்றதுகூட 67-க்கு முன்னால் திருட்டுப் போனது. பிறகுதான் தீவிர நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பதற்காக இன்று ஒரு தனி காவல் துறையை, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு தனி காவல் துறை அமைக்கப்பட்டு அதற்கென்று சில பல அதிகாரிகள் காவல் துறையில் நியமிக்கப்பட்டு, அவர்கள் மிகத் தீவிரமாக ஈடுபட்டு பல்வேறு வழக்குகள் எல்லாம் தொடரப்பட்டு, எந்தெந்த வகைகளில் அத்தகைய திருட்டுக்கள் தடுக்கப்படவேண்டும் என்பது மட்டுமல்லாமல் சிலைகளுடைய படங்களை ஆங்காங்கு வைக்கவேண்டும், மாற்றுச் சிலைகளை வைக்கக் கூடாது என்று பாதுகாப்பெல்லாம் முறைப்படி செய்துகொண்டு வரப்படுகின்றன என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : தமிழ் ஆட்சிமொழியாவது பற்றி, அதற்காக என்னென்ன காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை.

ம. பொ. சி. அவர்கள் இந்த மன்றத்தில் இல்லை. மாணவர்கள் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். தமிழ் பயிற்சி மொழியாவது என்னவாயிற்று என்பதுபற்றி இந்த அறிக்கையில் எங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. அதற்காக தமிழை ஒரே நாளில் பாடமொழியாக்க வேண்டுமென்று சொல்லவில்லை. நிதானமாகப் போகவேண்டியதுதான். தமிழ் போதனைமொழியாக இருக்கிறதா என்ற நிலையில்தான் போய்க் கொண்டிருக்கிறது. இதை தமிழில் ரொம்பவும் அக்கறை கொண்டுள்ளவர்கள் என்று சொல்லும் இந்த அமைச்சரவைக்கு வினயமாக எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஆட்சிமொழி என்பதை, தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டுவருவது ஒரு

நாளில் முடியப்போவதில்லை, ஒரு ஆண்டில் முடியப் போவதில்லை. இதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவா என்றுதான் கேட்கிறேன், தலைமைச் செயலகம் என்று போர்டுதான் மாறியிருக்கிறதே தவிர கட்டுக்கள், சுற்றறிக்கைகள் இவை எல்லாம் எந்த மொழியில் எவ்வாறு எழுதப்படுகின்றன என்பதை விளக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

கல்வித் துறை செயலாளர் திரு. திரவியம் அவர்கள் நான் உணவுத் துறை அமைச்சராக இருந்தபோது பைல்களை எல்லாம் தமிழிலே எழுதினார்கள். இன்று கல்வித் துறையில் அப்படி வந்திருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆற்றல் மிகுந்தவர்களெல்லாம் அதிகாரிகளாக இருக்கிறார்கள். சிலபேர்களுக்கு வராது. ஆனால் அவர்கள் வேண்டுமானால் மணிப்பிரவாளத்தில் எழுதட்டும். மாவட்டங்களில் எல்லாவற்றையும் தமிழ்படுத்தும் முறை எந்த அளவில் இருக்கிறது என்பதைப் பற்றிய விவரங்கள் இந்த அறிக்கையில் இருக்கிறதா என்று கேட்கிறேன். கல்லூரிப் படிப்பில் அரசாங்கப் பணி குறைவானது.

150 கல்லூரிகள் உள்ளன. அவற்றில் 120 தனியார் துறையைச் சார்ந்த கல்லூரிகள்தான். கிருத்துவ மார்க்கத்தாரும், வேறு பல வள்ளல்களும், அழகப்பச் செட்டியாரைப் போன்றவர்கள், கோவையில் உள்ள பீளமேடு பி.எஸ்.ஜி. குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போன்றவர்கள், எம்.எஸ்.பி. பெரியசாமி நாடாரைப் போன்றவர்கள் இப்படி எவ்வளவோ பேர்கள் கோடிக்கணக்கான பணத்தைக் கொடுத்து, அதன் காரணமாக இன்று பெரும்பாலான கல்லூரிகள் தனியார் துறையில் இருக்கின்றன. இன்று படிக்கக்கூடிய இரண்டு லட்சம் கல்லூரி மாணவர்களில் $1\frac{1}{2}$ லட்சம் மாணவர்கள் தனியார் கல்லூரிகளில் தான் படித்துக்கொண்டு வருகிறார்கள்.

இன்று ஒவ்வொரு ஆண்டும் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு இரண்டு லட்சம் மாணவர்கள் செல்கிறார்கள். அவர்களில் ஒரு லட்சம் பேர்கள் வடிகட்டப்பட்டுவிடுகிறார்கள். தேறியவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளதா, அவர்கள் உத்தியோகத்திற்குப் போனார்களா அல்லது ஊர் சுற்றுகிறார்களா என்பவற்றிற்கெல்லாம் பதில் வேண்டும். இவ்வளவு ரூபாய் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று மட்டும் சொல்லிவிட்டால் போதாது. மாணவர்களுக்கு நல்ல முறையில் எதிர்காலத்தை உருவாக்குவதற்காகத்தான் கல்வித்



துறை இருக்கிறதே தவிர வெறும் வரவு செலவு அறிக்கை மாதிரியாகத்தான் இந்த அறிக்கை இருக்கிறது. மகளுடைய சம்மதத்தைப் பெற்றுவிட்டோம் என்று நினைத்து எதிர்கால சமுதாயத்தின் நலன்களோடு நீங்கள் விளையாடுகிறீர்கள் என்று நான் நிச்சயமாகச் சொல்வேன்.

மாணவர்களிடையே கொந்தளிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். ஏன் இருக்காது? நாவலரை விட, என்னை விட, கலைஞரை விட இன்னும் எவ்வளவோ காலம் ஆக்டீவாக இருக்க வேண்டியவர்கள் அவர்கள். கற்பனைக் கோட்டையில் இருந்துகொண்டு பதில் சொல்லாமல் இருக்கலாம் என்றால் அதை காலம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. புதிய முறைகளில் நாம் அணுக வேண்டும்.

நான் கல்வி அமைச்சரவர்களைக் கேட்கிறேன். இந்த ஆண்டு எவ்வளவு நாட்கள் கல்லூரிகள் நடைபெற்றன? வொர்க்கிங் டேஸ் கணக்கு இருக்கும் அல்லவா. எவ்வளவு நாட்கள் கல்லூரிகள் நடைபெற்றன? வேலை நிறுத்தம் ஏன் ஏற்பட்டது? காரணம் என்ன? மாணவர்கள் மீதே பழி போட்டு விடுவதா? எந்த கல்வி அமைச்சர் காலத்திலாவது 2,000, 3,000 ஆசிரியர்கள் சிறைச்சாலைக்குப் போனார்களா? பெண்மணி ஆசிரியர்கள் சிறைச்சாலைக்குப் போனார்களா? 3,000 பட்டதாரி ஆசிரியர்களை சிறைச்சாலையில் போட்ட ஒரு பெருமை இந்த கல்வி அமைச்சருக்கே தவிர எந்தக் கல்வி அமைச்சர் காலத்திலாவது, எந்த ஊரிலாவது இப்படி நடந்ததுண்டா? விமர்சனத்திற்காகச் சொல்லவில்லை.

சின்னஞ்சிறு பாலகர்கள், க்ளைவ் ஹாஸ்டலில் நுழைந்து ஹைஸ்கூல் பிள்ளைகளையும் பாதிரிமார்களையும், புனிதமான கல்வித் தொண்டு தவிர வேறு எந்தத் தொண்டும் இல்லாதவர்களை— காரணம் என்ன வேண்டுமானாலும் இருக்கட்டும்—தாக்கி வெறியாட்டம் ஆடி ரத்தக் களறி ஏற்பட்ட அவமானகரமான சம்பவங்கள் வேறு எந்தக் கல்வி அமைச்சர் இருந்த காலத்திலாவது ஏற்பட்டதா என்று கேட்கிறேன்.

பாளையங்கோட்டை நகரில் லூர்துநாதன் என்ற மாணவன், நீந்தத் தெரிந்த இளைஞர் ஆற்றில் தூக்கியெறியப்பட்ட இந்தக் காரியம்பற்றி நீங்கள் ஒரு வார்த்தை அனுதாபம் சொன்னதுண்டா? ஒரு காரியமாவது செய்ததுண்டா? அது ஏன் நடைபெற்றது.........

[1973 மார்ச் 20

திரு. என். கணபதி : பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த பாளையங் கோட்டை சம்பவம் பற்றியும், க்ளைவ் ஹாஸ்டல் சம்பவம் பற்றியும் ஜுடீஷியல் என்கொயரி நடக்கின்றன. ஆகவே, அவற்றைப் பற்றி இங்கு காரசாரமாக விவாதம் செய்வது அவற்றைப் பாதிக்கக்கூடிய அளவில் இருக்கும். எனவே, அவற்றைப் பற்றி இங்கு விவாதிப்பது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : அதற்குள்ளே போகவில்லை. வெளியே தான் இருக்கிறேன். ஒரு சப்-இன்ஸ்பெக்டர் ஒரு பேராசிரியரை அடிக்கும்படியான காரியம், தவறான காரியம் நடைபெற்று இருக்கிறது.

I have not referred to a matter on which a judicial decision is pending. நான் உள்ளே போகவில்லை.

My point is, the Education Minister has abdicated his function.

நீங்களும் வழக்கறிஞர், அவர்களும் வழக்கறிஞர். நானும் முக்கால் வழக்கறிஞர். அவைகளில் ஒரு நோக்கம் சொல்லக்கூடாது.

THIRU N. GANAPATHY : What I want to submit is this. While you are at liberty to make any allegation whatsoever on any matter, but when a matter if subjected to a judicial enquiry, if you want to make any statement about that or any allegation about that, that should not affect the course of judicial enquiry. Any opinion expressed by the hon. and eminent Member Thiru Mathialagan may affect the course of judicial enquiry. Therefore, I am raising the point of order.

திரு. எஸ். சகாதேவன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு மதியழகன் அவர்கள் தானும் ஒரு வழக்கறிஞர் என்று சொன்னார்கள். அவர்கள் வக்கீல்தானா என்பதைத் தெரியப்படுத்த வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஏதாவது வழக்கு வைத்து இருக்கிறீர்களா? (சிரிப்பு)



1973 மார்ச் 20]

* THIRUMATHI JOTHI VENKATACHELLUM : Sir, when the matter is before the Court it is *sub judice*. Here the matter is before an Enquiry Commission. The hon. Member Thiru Mathialagan did not go into the merits of the case. All that he said was, he referred to an incident that had taken place in Clives Hostel connected with the students. It is but proper that he has mentioned this on the Education Demand which concerns the students

DR. H. V. HANDE : We have time and again established in this House the fact that a Court of Enquiry does not attract the provision of a *sub judice* case. It is not *sub judice*. We have time and again established that it is only a Fact-Finding Commission. Therefore, I think the hon. Member is at full liberty to speak whatever he wants on the subject. It is only a Fact-Finding Commission and it is not a matter *sub judice*. As far as our rules are concerned, only a matter which is *sub judice* or over which a judicial judgment is pending should not be referred to. But here there is no question of judicial judgment. It is only a matter of Enquiry Commission. It is clear.

திரு. துரைமுருகன் : நான் அதற்குள்ளே போகவில்லை, வெளியே தான் இருக்கிறேன் என்று திரு. மதியழகன் அவர்கள் சொன்னார்கள். அவர் பாளையங்கோட்டை சம்பவத்தைப் பற்றி பேசிவிடலாம். பேராசியர் அடிக்கப்பட்டார் என்று சொல்லி விடலாம். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது எப்படி நடந்தது என்பதை அவர் விவரிக்க வேண்டும். அப்படி அவர்கள் சொல்கிற போது அந்த நீதி விசாரணை பாதிக்கக் கூடியதாக இருக்கும்.

(பல உறுப்பினர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கூறினார்கள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த அவையில் பாயின்ட் ஆப் ஆர்டர் அதிகமாகக் கேட்பது வழக்கமாகி விட்டது. பேரவையின் விதியைப் படித்து விடுகிறேன். திரு. மதியழகன் அவர்களுக்கு விதியை நினைவு படுத்தத் தேவையில்லை. திரு. ஹாண்டே அவர்கள் சொன்னதற்காகச் சொல்கிறேன்.

[பேரவைத் துணைத் தலைவர்] [1973 மார்ச் 20

" No motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any commission or court of enquiry appointed to enquire into, or investigate, any matter shall ordinarily be permitted to be moved " . . . .

ஜுடிஷியல் என்கொயரி, பேக்ட் பைன்டிங் என்கொயரியாக இருக்கலாம். ஆனால் நம்முடைய பேரவை நிகழ்ச்சிகள் அந்த விசாரணையை பாதிக்கக்கூடிய அளவில் இருக்கக்கூடாது. ஆகவே, தயவுசெய்து அதைப் பற்றிப் பேச வேண்டாம். நீங்கள் சீக்கிரமாக பேசி முடித்து விடுங்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : பேராசிரியர் தாக்கப்பட்டார், போலீஸ் அத்து மீறி நடந்தார்கள் என்பது எல்லாம் கல்வி அமைச்சருக்குக் கறுப்புப் புள்ளிகளாக இருக்கின்றன என்று சொல்லிக்கொள்கிறேன்.

THIRU DURAIMURUGAN : Sir, on a point of order .........

THIRU K. A. MATHIALAGAN : I am not yielding. You are obstructing me.

THIRU DURAIMURUGAN : No, I am raising a point of order. இங்கே தான் என்னுடைய கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். ஒரு பேராசிரியர் தாக்கப்பட்டார். சப்-இன்ஸ்பெக்டர் அடித்தார். இந்தக் கல்வி அமைச்சர் காலத்தில் ஏற்பட்டது என்று சொல்கிறீர்கள் அது வரையில் சரி. கல்வி அமைச்சர் அந்தச் சம்பவம் எப்படி ஏற்பட்டது என்பதை அவருடைய பதிலில் சொல்கிறபோது, அந்த நீதி விசாரணையில் இருக்கும் விஷயங்களையும் குறிப்பிட வேண்டி யிருக்கும். அவர் அதன் உள்ளே போகாமல் இருக்கலாம், உள்ளே போய் இருக்கலாம். அது எனக்குத் தெரியாது. அமைச்சர் பதில் சொல்கிறபோது, அந்த விசாரணை நிச்சயமாக பாதிக்கும். ஆகவே, அதைப் பற்றி பேசாமல் இருப்பது சாலச் சிறந்தது என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ......

THIRU K. A. MATHIALAGAN : Is this a point of order? Are you allowing him to obstruct me?



1973 மார்ச் 20]

MR. DEPUTY SPEAKER : He is not obstructing. I have already permitted the hon. Member to state his point of order...

(திரு. துரைமுருகன் அவர்களும், திரு. சுரேந்திரன் அவர்களும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்தனர்.)

திரு. துரைமுருகன் : நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பக் கூடாது என்று சொல்வதற்கு அவர் யார்?

திரு. எம். சுரேந்திரன் : நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பக் கூடாது என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுரேந்திரன், அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பினால் அது உண்டா இல்லையா என்று நான் சொல்கிறேன். நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டாம். ஜுடிசியல் என்கொயரியில் இருக்கிறபோது பேசக்கூடாது.

திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு வரம்பு வேண்டும். இது என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேசுவது உண்மையிலேயே நியாயப்படி சரியல்ல. போலீசார், பேராசிரியரை அடித்தார்கள் என்று சொல்வது, அமைச்சர் பதில் சொல்லி விளக்கம் கொடுக்கிறபோது, இங்கே ஜுடிசியல் என்கொயரிபற்றிய விளக்கங் கள் வந்துவிடும்போல் இருக்கிறது. அதைப் பாதிக்கும் வகையில் நம்முடைய பேரவை நிகழ்ச்சிகள் இருக்கக் கூடாது. நீங்கள் சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : இதற்கு ரூ. 100 கோடி என்பது அல்ல, இன்னும் எவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்தாலும், நாட்டின் எதிர்காலச் செல்வங்கள், படிக்கும் செல்வங்கள், இந்தச் சமுதாய மக்கள் வாழ்வில் ஒரு சம்பிரதாயப் போக்காக இது இல்லாமல், மிகுந்த ஒரு புதிய நோக்கத்தோடு, மாறிய சிந்தனையோடு அவர் களுக்கு நல்ல எதிர்காலம் அவர்கள் திறமை, பயிற்சியின் அடிப்படை யில் இருக்கிறது என்ற முறையில் கல்வித் துறையை மாற்றியமைப் பதற்கு இந்த அரசு தவறிவிட்டது, அவர்கள் அதைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இவ்வளவு சொன்னேன் என்று சொல்லி, என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, இன்று மாலை 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 1.38 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

இடைவேளைக்குப்பின் மாலை 4 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

* திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற கல்வி மான்யத்தின் மீது எனது கருத்துக்கள் சிலவற்றை சொல்ல விரும்புகிறேன். கல்விக்காக மொத்தம் 99 கோடி ரூபாய் நாம் செலவு செய்யப் போகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் உள்ளபடியே நாம் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் இந்தத் துறைக்குச் செலவழிக்கிறோம் என்று பார்த்தால், சாதாரணக் கல்வி அல்லாமல் மருத்துவக் கல்வி, விவசாயக் கல்வி ஆகியவை சேர்ந்து கிட்டத்தட்ட 130 கோடி ரூபாய் செலவு செய்வதல்லாமல், பெற்றோர்கள் தங்களுடைய சொந்தப் பணத்திலிருந்து மாணவர்களுக்குச் செலவு செய்யக்கூடிய பணம் ஏறக்குறைய 200 கோடி ரூபாய். ஆக ஆண்டு ஒன்றுக்கு 330 கோடி ரூபாய் அளவுக்கு மாணவர்களுக்காக நம்முடைய பெற்றோர்களும் அரசாங்கமும் செலவு செய்கிறது என்பதை நாம் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்கவேண்டும். 330 கோடி ரூபாய் செலவு செய்து அதன் மூலம் நமக்கு கிடைக்கின்ற ரிடர்ன் எவ்வளவு என்று பார்த்தால், உள்ளபடியே அது இதுவரையில் நம்முடைய நாட்டில் கணக்கிடப்படவில்லை . வளர்ந்திருக்கிற மேலை நாடுகளில் இப்படிப்பட்ட ரிடர்னை கணக்கிட்டிருக்கிறார்கள். அமெரிக்காவிலே, மேற்கு ஜெர்மனியிலே, பிரான்சிலே, அவர்களெல்லாம் கணக்கிட்டிருப்பது போல நம்முடைய நாட்டிலே நாம் செலவு செய்கின்ற பணத்திற்கு ரிடர்ன் ஏதாவது வருகிறதா என்று ஆராய ஒரு குழு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னொன்று Education system should be thoroughly changed. நம் நாட்டுக்கு உகந்தமாதிரி கல்வி முறையை மாற்றி அமைக்கவேண்டும். அமெரிக்க, ரஷ்ய நாடுகளிலே விஞ்ஞானத்திலே கவனத்தைச் செலுத்துகின்ற அடிப்படையிலே கல்வியைக் கற்றுத் தருகின்றார்கள். ஜெர்மனி நாட்டிலே தொழில் வளர்ச்சியை மையமாக வைத்து அதற்கேற்ற கல்வியை கற்றுத் தருகிறார்கள். நம்முடைய நாட்டிலே விவசாயத்தை மையமாக வைத்திருக்கிறோம். எந்தக் கல்வியாக இருந்தாலும், நம்முடைய நாடு உண்மையிலேயே முன்னேற வேண்டுமென்றால். விவசாயத்தை மையமாக வைத்துத் தான் கல்வி முறை அமைக்கப்பட வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்கு உதாரணம் சொல்வேன். அமெரிக்க நாட்டில் ஜனாதிபதியாக இருந்த கென்னடி அவர்கள், அந்த நாட்டிலே ஸ்புட்னிக் விட்டபோது கோளாறு ஏற்பட்ட நேரத்தில், ஏன் இது கெட்டுவிட்டது என்று கேள்வி கேட்டுவிட்டு "நமது கல்வி முறையில் ஏதோ கோளாறு இருக்கிறது; ஆகவே கல்வி முறையை மாற்றி அமைக்கவேண்டும்" என்று சொன்னார். ரஷ்யாவில் விடப்பட்ட ராக்கெட்டில் கோளாறு ஏற்பட்ட நேரத்தில், கல்வி முறையை ரியோரியென்டேட் (reorientate) செய்ய வேண்டும், கல்வி முறையில் மாற்றங்கள் உண்டாக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்கள். அந்த முறையில் நம்முடைய நாட்டிலும் விவசாயத்தை மையமாக வைத்து கல்வி முறையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





இன்னொன்று, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் இந்த மன்றத்தில் சில நல்ல கருத்துக்களைச் சொல்லுவதாக எண்ணிக் கொண்டு பேசினார்கள். திரு. மதியழகன் பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்றைய தினம் "அடல்ட்ஸ் ஒன்லி" என்று சினிமா பார்ப்பவர்களை தடுப்பதுபோல், மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தடுக்கலாமா அவர்கள் அரசியலில் ஈடுபடுவது உண்மையிலேயே சித்தாந்தமாக வளர்கிறது, இப்பொழுது அவர்களைத் தடுப்பது முறையா என்று கேட்டார்கள். எனக்குத் தெரிந்தவரையில், பேரறிஞர் அண்ணா அவர்களும், காமராசர் அவர்களும், மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது, அரசியல் தெரிந்து கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால் அண்ணா அவர்கள் பெயரால் கட்சி வைத்துக் கொண்டிருக்கிறவர்கள், இப்படி தடுப்பது முறைதானா என்று கேட்கிறார்கள்.

இன்னொன்றும் கேட்டார்கள். ஆசிரியர்கள் 3,000 பேர் சிறை சென்றிருக்கிறார்களே, இது எந்த ஆட்சியில் நடைபெற்றது என்று கேட்டார்கள். ஆசிரியர்கள் சிறைக்குச் செல்ல வேண்டிய அவசியம் யாரால் எப்படி உருவாக்கப்பட்டது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நாட்டிலே அரசியல் கட்சித் தலைவர்களாக இருக்கக் கூடியவர்கள், தங்களுடைய கொள்கைகளை பொது மக்களிடத்தில்

எடுத்துச் சொல்லி விலை போகமுடியாத நேரத்தில், தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு அரசியல் கொள்கைகளை விற்க முடியாத நேரத்தில், கறுப்பு மார்க்கெட்டில் கள்ளப் பணத்தை வைத்து வியாபாரம் நடத்துவது போல மாணவர்களிடத்திலே, ஆசிரியர்களிடத்திலே, கறுப்புக் கொள்கையை வைத்ததால் ஆசிரியர்கள் தூண்டப்பட்டார்கள் என்று வேதனையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்று சொல்லுவேன், அரசியல் தலைவர்களாக இருப்பவர்கள் நாட்டிலே மாணவர்களைப் பார்த்து கல்லூரிக்குச் செல்லாதே, பள்ளிக்குச் செல்லாதே, தேர்வுக்குச் செல்லாதே என்று இதுவரையில் யாராவது சொல்லியிருக்கிறார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் புதுக் கட்சியில் புதுத் தலைவர்களாக உருவாகி இருக்கக்கூடியவர்கள், வேலூரில் பேசும்போது பேசியிருக்கிறார்கள். மாணவர்களே, ஆசிரியர்களுடைய போராட்டம் வெற்றி பெற வேண்டுமென்றால், அவர்களுடைய போராட்டத்திற்கு நீங்கள் அனுதாபம் காட்ட வேண்டும். அதற்காக நீங்கள் பரிட்சைக்குப் போகக்கூடாது, வீட்டிலேயே இருக்கவேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். சுதேசமித்திரன் பத்திரிகையில் கூட இந்தப் பேச்சுக்கள் வெளி வந்திருக்கின்றன. இப்படி நாட்டிலே மாணவர்களையும், ஆசிரியர்களையும் தூண்டி விடுகின்றவர்கள் ஒரு பக்கத்தில் இருந்து கொண்டிருக்கிறபோது, ஆட்சி எவ்வளவுதான் நன்மை செய்தாலும், அதன் பலன் எப்படி நமக்குத் தெரியும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, கல்வி மான்யத்தில் சில கருத்துக்களை நான் சார்ந்திருக்கின்ற வணிகப் பயிற்சியைப் பொறுத்த வரையில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 100 கோடி ரூபாய் கல்வித் துறையில் செலவிடும் இந்த இலாகா கடந்த ஆண்டு முதல் வணிகக் கல்வி பொறுத்தவரையில் சில நல்ல மாற்றங்களை உண்டாக்கியிருக்கிறது. வணிகத் தேர்வுகளை இரகசியமாக நடத்தவும், தேர்வு பெற்றவர்களுக்கு சர்டிபிகேட்டுகள் விரைவில் கிடைக்கப் பெறவும், இப்படிப்பட்ட முறைகளில் நல்ல மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். இதைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்களையும், அந்தத் துறையையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன். அந்தத் துறை இன்னும் சிறந்து விளங்க சில பிரச்னைகளை இங்கே யோசனைகளாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மானியக் கோரிக்கை பற்றிய விளக்கக் குறிப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏறக்





குறைய 70 பக்கம் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம், தமிழ் நாட்டிலே 1,200 இன்ஸ்டிட்யூட்டுகள் இருக்கின்றன. ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சம் மாணவர்கள் படிக்கின்றார்கள். ஏறக்குறைய 2 லட்சத்து 20 ஆயிரம் மாணவர்கள் தேர்வுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வணிகப் பயிற்சித் துறை நம்முடைய நாட்டிலே இருப்பதாகவே கொஞ்சம் கூட காட்டிக் கொள்ளாமல், அமைச்சரவர்கள் தம்முடைய விளக்கக் குறிப்பைத் தயாரித்திருக்கிறார்கள். அதுகுறித்து நான் உள்ளபடியே வருந்துகிறேன். வருகின்ற ஆண்டிலாவது வணிகப் பயிற்சித் துறையில் நாம் பெற்றிருக்கின்ற முன்னேற்றங்கள், பெற்றிருக்கின்ற வலிவு இவைகளைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்று சொல்வார்கள். அந்த "அவன்" யார் என்று பார்த்தால் அவன் தான் அமைச்சர்களிடத்தில் இருக்கின்ற ஸ்டெனோகிராபர்; அதிகாரிகளிடம் இருக்கின்ற ஸ்டெனோ டைப்பிஸ்ட்; இங்கே இருக்கிற ரிப்போர்ட்டர். இவர்கள்தான் "அவனாக" வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறையிலே அவர்களை ஊக்குவிக்கின்ற அளவுக்கு சில மாற்றங்களை நாம் செய்ய வேண்டும்.

இப்பொழுது காமர்ஸ் பாடங்களில் தேர்வு நடைபெறுகிறது. கடந்த ஆண்டு சுமார் 500 மாணவர்கள் ஆங்கிலச் சுருக்கெழுத்து மேல்நிலை தேர்வுக்குச் சென்றார்கள். அவர்களில் எத்தனை பேர் தேர்ச்சி பெற்றார்கள் என்றால் 27 பேர்கள்தான். அதாவது 5 சத விகிதம்தான் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஏன் இப்படி திடீரென்று சுருக்கெழுத்தாளர்களுக்குப் பஞ்சம் வந்துவிட்டது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். தமிழ், ஆங்கிலம் இரண்டு சுருக்கெழுத்திலுமே இந்த நிலைதான் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று தமிழைப் பரப்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த ஆண்டு தமிழ் சுருக்கெழுத்தில் ஹை ஸ்பீட் டெஸ்டுக்குச் சென்றவர்களில் ஒருவர்கூட தேர்ச்சி பெறவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை யாரும் எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை.

திரு. என். கணபதி: மாணவர்கள் தேர்ச்சிப் பெறாததற்கு அரசாங்கம் காரணமா அல்லது மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்ற பயிற்றுவிப்பாளர்கள் காரணமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1973 மார்ச் 20

திரு. நா. வீராசாமி : திரு. கணபதி அவர்களுக்கு டைபிஸ்டைத் தான் தெரியுமே தவிர, டைப்ரைட்டிங், ஷார்ட்ஹாண்டைப்பற்றி ஒன்றுமே தெரியாது. சுருக்கெழுத்தில் வைக்கப்படுகின்ற தேர்வு முறையைப் பற்றி விளக்குகிறேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் புரிந்துகொள்வார்கள். பி.ஏ., எம்.ஏ., அல்லது பி.எல். தேர்வுக்கு பரீட்சை எழுதுவதற்கு மூன்று மணி நேரம் கொடுக்கிறார்கள். அந்த மூன்று மணி நேரத்தில் ஒரு அரை மணி நேரம் தூங்கிவிட்டு, மீதி இருக்கக்கூடிய நேரத்திலே ஒன்றிரண்டு வினாக்களை விட்டுவிட்டு கூட எழுதி தேர்ச்சி பெற்று விடலாம். ஆனால், சுருக்கெழுத்தில் அப்படியல்ல. சுருக்கெழுத்தில் 10 நிமிடங் கள், தட்டெழுத்தில் 15 நிமிடங்கள்—10 நிமிடங்களில் சுருக் கெழுத்துத் தேர்வுக்குச் செல்கின்றவர்கள் தங்கள் திறமையைக் காட்டியாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பி.ஏ., எம்.ஏ., பி.எல். படித்தவர்களை குறைத்து மதிப்பிடுவ தாகத் தெரிகிறது.

திரு. நா. வீராசாமி : நான் அவர்களின் திறமையை குறைத்து மதிப் பிடவில்லை. பி.ஏ., எம்.ஏ., தேர்வுக்குச் செல்பவர்களுக்கு 3 மணி நேரம் அவகாசம் இருக்கிறது. ஆனால் சுருக்கெழுத்துத் தேர்வுக்குச் செல்பவர்களுக்கு 10 நிமிடம்தான் இருக்கிறது. அந்த 10 நிமிடத்தில் அவர்கள் திறமையைக் காட்டி ஆகவேண்டும். அதில் 10 வினாடி தவறி விட்டால் கூட தேர்ச்சி பெற முடியாது. இந்தமாதிரி நுட்பமான தேர்வுகளை நடத்துகின்ற இடங்கள் சரியாக இல்லை. சரியான லைட் வசதி கிடையாது. அறைகளில் எக்கோ இருக்கிறது. இனி வரும் ஆண்டுகளிலாவது இப்படிப்பட்ட குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, ஷார்ட் ஹாண்ட் எக்சாமினேஷன் டிக்டேஷ னுக்குச் செல்கிறவர்கள் நல்ல பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். சில சமயங்களில் டிக்கேட்டர்களாக வரக்கூடியவர்களின் கோளாறினாலும் சுருக்கெழுத்தில் தேர்ச்சி பெற முடியாத நிலை ஏற்படுகிறது. அதிலே முக்கியமாக இருப்பது லாங்வேஜ் கோளாறு தான். உதாரணமாக ஒரு மலையாளியை டிக்டேட்டராகப் போட்டால் நாம் "அக்கேஷன்" என்று சொல்லக்கூடிய வார்த்தையை அவர் "ஒக்கேஷன்" என்று சொல்வார். "அக்கேஷன்" என்பதற்கும்,



1973 மார்ச் 20] [திரு. நா. வீராசாமி]

"ஒக்கேஷன்" என்பதற்கும் ஒரே "ஸ்ட்ரோக்" போட்டாலும் வெவ்வேறு "வௌவல்" வைக்கவேண்டும். எனவே டிக்டேஷன் கொடுப்பதில் இப்படிப்பட்டக் கோளாறுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, எக்சாமினர்களைப் போடும்போது 50 வயது உள்ளவர்களைப் பார்த்துப் போடுகிறார்கள். அவர்கள் 30 ஆண்டுக ளுக்கு முன்னால் இந்தத் துறையிலே பயிற்சிப் பெற்றவர்களாக இருப்பார்கள். அன்று இருந்த ஸ்டாண்டர்டுக்கும் இன்றைக்கு இருக்கக்கூடிய ஸ்டாண்டர்டுக்கும் பெரிய வேறுபாடு இருக்கிறது. அன்று இருந்த நிலை வேறு; இன்று இருக்கின்ற நிலை வேறு. அவர்கள் பழைய ஸ்டாண்டர்டிலேயே இப்போதும் பார்ப்பார்கள். அதனாலும் சில குறைபாடுகள் ஏற்படும். அவைகளையும் போக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒரு தடவை தட்டெழுத்து, சுருக்கெழுத்து தேர்வுக்குச் செல்வதற்கு எக்சாமினேஷன் ஃபீஸ் இல்லை என்று இப்போது இருக்கிறது. எந்தக் காரணத்தினாலோ ஒரு தடவை அந்த மாணவன் தேர்ச்சி பெறவில்லை என்றால் அவன் திருப்பி பணம் கட்டித்தான் செல்ல வேண்டும். அந்த மாணவர்க ளுக்கு மூன்று முறை இலவசமாக தேர்வுக்குச் செல்ல வழிவகை செய்து கொடுக்க வேண்டும். ஒரு தடவைக்கு ஒரு பாடத்திற்கு 8 ரூபாய் தான் தேர்வு கட்டணம். ஆகவே, அரசாங்கத்திற்கு இதில் அதிக இழப்பு ஒன்றும் வந்துவிடாது. எனவே தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 3 தடவையாவது இலவசமாக தட்டெழுத்து, சுருக் கெழுத்துத் தேர்வுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இந்தத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுகிறவர்களுக்கு சர்டிபிகேட் வழங்குகிறார்கள். இந்த சர்டிபிகேட்டுகளை இரண்டு மூன்று முறை மடித்தால் கிழிந்து விடுகிறது. சர்டிபிகேட்டுகள் காலம் முழுவதும் வைத்துக்கொள்ளப்பட வேண்டியவைகள். எனவே அவைகளை நல்ல தாள்களில், நீண்டநாள் கெட்டுப் போகாமல் இருக்கக்கூடிய தாள்களில் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் அவைகளை நல்ல மையில் பார்ப்பதற்கு பளிச்சென்று தெரிகிற முறையில் அச்சிட வேண்டும்.

[திரு. நா. வீராசாமி] [1973 மார்ச் 20

இன்றையதினம் அரசாங்கம் லைப்ரரிக்கு என்று தனியாக ஒரு டைரக்டரை நியமித்திருக்கிறது. ஆனுல் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2 லட்சம் மாணவர்கள் தேர்வுக்குச் செல்கின்ற இந்தத் துறைக்கு என்று தனியாக ஒரு டைரக்டர் நியமிக்கப்படவில்லை. இப்போது இருக்கிறவர்கள் நல்ல முறையில்தான் தேர்வுகளை நடத்திக்கொண்டிருக்கிறுர்கள். அதிலே நான் குறை சொல்லவில்லை. இப்பொழுது இருப்பவர்கள் எல்.சி.இ., எல்.எம்.இ., பி.இ., பாலிடெக்னிக் போன்றவைகளில் அதிகக் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. அதனுல் அவர்கள் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, அக்கவுண்டன்சி போன்ற இந்தத் துறைகளில் சிறப்பாகக் கவனம் செலுத்த முடியவில்லை. ஆகவே, இந்தத் துறைகளில் பயிற்சிப் பெற்றவர்கள் இதிலே பொறுப் பேற்றுக்கொள்வார்களானுல் இன்னும் நல்லமுறையில் இந்தத் துறையில் கவனம் செலுத்த முடியும். ஆகவே, அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தேர்வுகளிலே எக்சாமினர்களாக வரக்கூடியவர்களுக்கு ஒரு பேப்பருக்கு லோயர் கிரேடுக்கு 37 பைசாவும், ஹையர் கிரேடுக்கு 50 பைசாவும், 75 பைசாவும் கொடுக்கிறுர்கள். இந்த முறை 1954-லே இருந்து இப்போதுவரை அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் கட்டணத்தை தற்போதைய நிலைக்கேற்ப மாற்றி அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னென்று, இந்தத் துறைக்கு இதுவரை "அட்வைசரி கமிட்டி" ஒன்றும் இல்லை. ஆகவே, இந்தத் துறைக்கும் ஒரு அட்வைசரி கமிட்டி நியமிக்க வேண்டும்.

தமிழ்-ஆங்கிலம் தட்டெழுத்து, சுருக்கெழுத்து தேர்வுக்குச் செல்பவர்களை ஊக்குவிக்கும் திட்டம் எதுவும் இப்போது இல்லை. ஆனுல் காவல் துறையிலே இருக்கின்றவர்களை ஊக்குவிப்பதற்கு "அண்ணு மெடல்" கொடுக்கப்படுகிறது. அதைப்போன்று சுருக்கெழுத்து, தட்டெழுத்து தேர்வுகளில் சிறப்பாகத் தேர்ச்சிப் பெறுகின்றவர்களுக்கு "அண்ணு மெடல்" என்ற ஒன்றை ஏற்படுத்தி, அதைக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது சிறந்த சினிமாத் தியேட்டர்களுக்கு "ரோலிங் கப்" கொடுக்கப்படுகிறது. அதைப்போல சுருக்கெழுத்து, தட்டெழுத்தில் சிறப்பாக பயிற்சி அளிக்கக்கூடிய இன்ஸ்டிட்யூட்டுகளுக்கு ரோலிங் கப் கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சினிமா தியேட்டர்களைவிட கல்வி போதிக்கும் இக்கல்விக்கூடங்களை ஊக்குவிக்க இதை அவசியம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 20] [திரு. நா. வீராசாமி]

இன்னெரு முக்கியமான விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எடுயூகேஷனில் இப்போது ஒரு புதிய முறையைப் புகுத்தியிருக்கிறுர்கள். அதாவது, அக்கவுண்டன்சி லோயர் கிரேடு எக்சாமினேஷனுக்குச் செல்லவேண்டுமானுல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஹையர் கிரேடுக்குச் செல்லவேண்டுமானுல் பி.யு.சி. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; லோயர் கிரேடு தேர்ச்சி பெற்றிருந்தாலும் பி.யு.சி.-யில் தேர்ச்சிப் பெறுமல் இருந்தால் ஹையர் கிரேடு எக்சாமினேஷனுக்குச் செல்ல முடியாது, என்ற நிலையை இப்போது உருவாக்கியிருக்கிறுர்கள். எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்கள் இன்ஸ்டிட்யூட்டில் லோயர் படிக்கும்போதே அதைப்பற்றிய முழு பயிற்சியும் பெற்றுவிடுகிறுர்கள். அந்தப் பயிற்சியின் அடிப்படையிலே அவர்கள் ஹையர் கிரேடுக்குச் செல்லலாம். ஆகவே, இப்போதைய இந்த முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மார்க் லிஸ்ட் கொடுக்கிறுர்கள். 600-க்கு 450 மார்க் பெற்றுவிடுகின்ற மாணவர்களை சிறப்பித்து ஊக்குவிக்கிறேம். மாணவர்களுடைய சர்டிபிகேட்டைப் பார்த்து, அதிலே குறிப்பிட்டிருக்கின்ற மார்க்குகளைப் பார்த்து, அவர்களின் திறமையைப் புரிந்துகொள்கிறேம். அதேமாதிரி தட்டெழுத்து, சுருக்கெழுத்து தேர்ச்சிப் பெறுகின்றவர்களுடைய சர்டிபிகேட்டுகளிலும் அவர்கள் பெற்ற மார்க்குகளை குறித்துக் கொடுக்க வேண்டும். மார்க்குகளைக் குறிக்கும்போது சுருக்கெழுத்துக்கு ஸ்பீடில் எத்தனை மார்க், தியரியில் எத்தனை மார்க் என்றும், தட்டெழுத்தில் ஸ்பீடில் எத்தனை மார்க், மானுஸ்கிரிப்டில் எத்தனை மார்க் என்றும் குறித்துக் கொடுக்கவேண்டும். ஒருவர் 100-க்கு 45 மார்க்கு வாங்கி தேர்ச்சி பெற்றிருப்பார். ஒருவர் 100-க்கு 90 மார்க்கு வாங்கி தேர்ச்சி பெற்றிருப்பார். ஆகவே அவர்களின் திறமையை நாம் தெரிந்துகொள்ளும் வகையில் அவர்கள் வாங்கிய மார்க்குகளை சர்டிபிகேட்டுகளில் குறித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனுல் ஏதாவதொரு பேப்பரில்

[திரு. நா. வீராசாமி] [1973 மார்ச் 20

ஒரு மாணவன் தேர்ச்சி பெறுமலிருந்தால் அடுத்த முறை தேர்வு செல்லும்போது அதில் அவன் அதிக கவனம் செலுத்த நல்ல வாய்ப்பு இருக்கும்.

நான் இவ்வளவு விபரமாக இவைகளை எல்லாம் சொல்வதற்குக் காரணம் இந்த காமார்ஸ் துறைக்கு என்று தனியாக ஒரு டைரக்டரை நியமிக்க வேண்டும் என்பதற்காகத்தான். அப்போதுதான் காமார்ஸ் துறையில் தனிக் கவனம் செலுத்த முடியும்.

இதிலே புதிய ஆராய்ச்சிகளை எல்லாம் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, இதற்கென்று தனியாக ஒரு யூனிவர்சிட்டியை அமைத்தால் கூட நல்லது. அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in support of the cut motion I have given, I wish to say a few words on the Demand that has been presented by the Hon. Minister for Education today. It has really given me satisfaction that the total Demand for Education this year is nearly Rs. 97 crores, representing as much as 21 per cent of the total budgetary allotment. Considering the increases in educational set-up and opening of schools coming under other departments also, the total outlay will exceed Rs. 122 crores. If we add one or two crores more, it comes to nearly 25 per cent of the total income of the State. In a year or two, our State I hope will be the first in our country when compared to other States.

Coming to certain points in the note I wish to say that the note is comprehensive, it contains the various courses introduced in schools. and collegiate and technical education institutions. It is very interesting and my feeling is, except a few of us here and some outside, a great number of teachers, the great majority of them do not know what all Government are doing for spread of education in the State.

If there is no administrative objection and inconvenience, I feel that the copies of this note may be supplied to all High Schools so that the headmasters and teachers there could understand the



1973 மார்ச் 20]

various schemes that are being implemented by the Government, how much money is spent and how much the Government is doing in this field. If that is done, I think the irritation between the teachers and the Government would lesen and they all will under stand their responsibilities also.

In the note all the branches of education have been touched. But I am afraid two things have been forgotten. One is about the Oriental Manuscript Library at Madras and the other is the Legislature Library here. We have got here an excellent library which contains very many good books, but they are all old books. Modern books in science and also other subjects, we do not have. I suggest that a Library Committee may be appointed with experts from the University and other fields and they be asked to prepare a list of books which would be up-to-date and that list may be given to the education department. Such up-to-date books may be supplied to our Library and it may be made a model library.

Secondly, there is a library in the Secretariat and it contains so many good books. Very many books in the Secretariat library are not found in our Legislature Library. But such books in the Secretariat library are not issued to Members here. I request that restrictions, if any, in that regard may be removed and books may be issued to Members of this House from that library also.

Next thing is about English. In our State we have introduced teaching of English from the III standard onwards. My feeling is that it is too early. Even during foreign administration when the Englishmen were ruling over us, the teaching of English began only from the IV standard. I learnt English only from the IV standard. Because, until the III standard standard of mother-tongue of boys is very poor in that and there will be no proper response from the students. Therefore, to study English from IIIstandard appears to be a waste of time and money. I think the Education experts may be consulted and teaching of English started from IV standard.

Coming to quality of education, the Government have been trying to improve the standard of education, with the rich experience and administrative efficiency available in the Education

[Thiru K. S. Kothandaramiah] [1973 மார்ச் 20

Department. In the matter of improvement of quality of education, we have to note two things. One is teacher-pupil ratio. At present we have got 1:40. Suppose the time at the disposal of the teacher is 40 minutes, he can hardly spend one minute per student. The teacher will not be able to see the entire class and if there are backward class students and some ordinary students and one or two intelligent students, naturally the teacher makes the intelligent students to sit in the front benches and only attends to them. The backward students and others go without much attention. There is no time for he teacher to attend to them. He is unable to go through note-books of all these students. Therefore, the backward boys get neglected and discouraged and they do not attend the schools regularly. Therefore, the pupil-teacher ratio should be revised as 30:1 atleast so that the teacher could devote more attention to all boys. For every higher elementary school and middle school, a B.T. teacher should be appointed, irrespective of the strength of the school.

We require good text-books and special rooms for teaching subjects like history and geography and language Formerly we used subjects like history and geography and language. Formerly we used to have a special room for teaching subjects like geography where there will be maps etc. That room would have a geography atmosphere; likewise, the history room would have a history atmosphere; so also in the language rooms there would be language atmosphere. It will be easy for the boys to understand the subject without much of help from the teachers. Therefore, in every school there should be separate rooms for every subject, with good text-books, maps etc. In the last 20 years maps have not been prepared accurately and supplied to schools. Some time back, we had instead of history and geography, a social study and it continued for some 20 years. No maps were prepared and without maps teaching was going on. Afterwards, history and geography came again, but still good maps are not available. The teachers purchase maps from private companies which are not accurate or useful. Government should therefore check up these things and arrange for supply of good and accurate maps.



1973 மார்ச் 20] [Thiru K. S. Kothandaramiah]

There should be guide books; there should be educational excursions. Teachers and students should come together in a free atmposphere and have good ideas about each other. Only by such things we can improve the quality of education.

With regard to mid-day meals, Government is spending a lot of money and are arranging for Central Kitchen Programme in rural areas also. I suggest that for serving mid-day meals, there should be a separate room in the schools. There they can take the meal. Now the students are taking their meal in the class room itself, thereby making the room dirty and it is not washed also. If there is a separate room, facility could be separate and the room also could be washed and kept clean. There can be soap, bucket, a towel etc., for the boys to wash their hands and clean their hands. Thereby, we can promote healthy conditions. In all schools, therefore, where there is the mid-day meal system, a separate room for serving the meal should be provided.

For the benefit of middle schools and panchayat union schools, there should be mobile laboratories. There should be one van for each taluk.

Arrangements should be made for medical check-up of boys. The present arrangement is not adequate and should be improved.

So far as text-books are concerned, it has been nationalised. So far as Tamil books are concerned, they are producing good books and in large numbers. But with regard to electives, especially for the minority language, text-books have not been prepared and different teachers are teaching the subject in different ways, some teaching in English and some other in mother-tongue with English text-books. Therefore, to have uniform standards, it is better to have good text-books. When I made a representation to the Hon. Minister, he assured that arrangements would be made for preparation of books for minority languages. Even in the note they have made mention about it. I request the Government and the Department to take early action and see that good text-books are prepared for the minority languages.

Coming to linguistic minorities, I am really happy to say that only two days ago we had a conference of Telugu Pandits in this City when the Director of School Education was there and also the Hon. Minister for Education delivered the inagural address. It

was really a very interesting thing that all the teachers gathered there could understand the deep learning and broad-mindedness of our Education Minister and his great interest in the development of Dravidian languages. The Director of School Education also gave an excellent lecture. It was assured on the occasion that all the facilities given to Tamil Language teachers would be given to the linguistic minority language teachers also. I request the Government and the Department to issue early order so that the teachers who are suffering would get all the facilities like the Tamil teachers.

With regard to development of Dravidian languages, in the note at the end it is stated that efforts are made by the Government. For this purpose, Madras is the best place. For, we have here an excellent Oriental Manuscript Library. That is not well-developed. That Library can be converted into a Research Institution and arrangements made so that our scholars could go there and carry on research work.

With regard to the development of Tamil, I agree that it should be developed ; for its development, Government have appointed some Tamil Development Officers. Similarly my request is that they should consider the appointment of Development Officers for the development of minority languages like Telugu. Then the development of all languages would be uniform. I hope the Government would do the needful. With these words I conclude my speech.

* திரு. இ. எஸ். தியாகராாசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை வரவேற்று எனது கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகத்திலேயே இன்றையதினம் கல்வி எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை இன்றையதினம் அளிக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலிருந்தே புரிந்துகொள்ள முடிகிறது. 1956–57-இல் 32.91 லட்சமாக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை இன்றையதினம் 74.36 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அது மட்டுமல்ல. 1956–57-ஆம் ஆண்டு ஒரு லட்சத்து எட்டாயிரமாக இருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கையும் இரண்டு லட்சத்து முப்பத்து நான்காயிரமாக உயர்ந்



திருக்கிறது—அந்த அளவு எண்ணிக்கையுடைய ஆசிரியர்களுடைய பணியை இன்றைய தினம் தமிழக அரசு பெற்றிருக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அன்றையதினம் 894 ஹைஸ்கூல்கள்—இன்றையதினம் 2,763 பள்ளிகள் இருக்கின்றன என்பதை அறிகிறபோது, கல்வியில் நாட்டம் கொண்டவர்கள் நமது அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. 1961–62-ஆம் ஆண்டு நமது தமிழகத்திலே இருந்த கல்லூரிகள் 83 மட்டும்தான். ஆனால் இன்றையதினம் 1972–73-லே இருப்பது 176 கல்லூரிகள். இதிலிருந்தே கல்வித் துறையில் நமது தமிழகம் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை நாம் நல்ல முறையிலே அறிய முடிகிறது.

கல்லூரி என்று சொல்லும்போது, எனது தொகுதியான திருத்தணியில் கல்லூரி 70-ஆம் ஆண்டு துவக்கப்பட்டிருந்தும்கூட—மூன்று ஆண்டுகள் ஆகியும்கூட—பட்டதாரி வகுப்பு துவக்கப்படவில்லை. தயவுசெய்து இந்த ஆண்டாவது மாண்புமிகு நாவலர் அவர்கள் கருணைகூர்ந்து பட்டதாரி வகுப்பைத் துவக்குவதற்கு உத்தரவிட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித்துறைக்கு மட்டும் 1956–57-லிருந்து நமது அரசு ஒதுக்கிய தொகை 15 கோடி ரூபாய். ஆனால் இன்றைக்கு 100 கோடி என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதையும், கல்வித் துறைக்காக நமது அரசு தன் வருமானத்திலே 25 சத விகிதம் செலவிடுகிறது என்பதையும் உண்மையிலேயே மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அத்தோடு உயர்நிலைப் பள்ளிகளில் 200 லைப்ரரிகள் திறப்பதற்காக உத்தரவிட்டிருப்பதாக அறிகிறேன். அவை ஒவ்வொன்றிற்கும் ரூ. 500 தரப்படுவதாகவும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ரூ. 500-ல் அதிகப் புத்தகங்களை வாங்க முடியாது. குறைவான, அதுவும் சின்னப் புத்தகங்களைத்தான் வாங்க முடியும். எனவே, ஒவ்வொரு பள்ளிக்கும், லைப்ரரிக்காக, குறைந்தது ரூ. 2,000 தரப்பட்டால் நல்ல புத்தகங்களை வாங்கி மாணவர்களுக்குக் கொடுக்க வாய்ப்பாக இருக்கும் என்று நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த நிதி வசதி நிலையில் தருவதற்கு போதிய நிதி இல்லை என்றாலும்கூட, மாணவர்களிடம் ஆண்டுக்கு, ரூ. 1 அல்லது 2 லைப்ரரி நிதியாக வசூலித்து அந்தப் பணத்திலாவது பிள்ளைகளுக்கு நல்ல லைப்ரரி உண்டாக்குவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1973 மார்ச் 20

அடுத்தபடியாக, நமது செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அண்மையிலே நடைபெற்ற பி.டி. ஆசிரியர்கள் கிளர்ச்சியின்போது பத்தாண்டு காலம் பணி புரிந்தவர்களுக்கு செலக்ஷன் கிரேடு தர வாக்களித்திருக்கிறார்கள். அதேபோன்று செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும், அவர்கள் பத்தாண்டு காலம் பணி செய்தால் செலக்ஷன் கிரேடு தருவதற்கு நமது அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உயர்நிலைப் பள்ளிக்கு போதிய வசதியான கட்டடங்கள் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். இதற்கு ரூ. 15 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை முடிந்த அளவுக்கு உயர்த்தி பல பள்ளிகளுக்கும் கட்டடங்கள் கட்டுவதற்கு வாய்ப்பு உண்டாக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. பள்ளிக் கட்டடங்களைப் புதுப்பிப்பதற்காக ரூ. 6 லட்சம் தான் ஒதுக்கி இருக்கிறார்கள். அதுவும் குறைவு. இதையும் அதிகரிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ் வளர்ச்சியைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் பலமுறை இந்த மன்றத்திலேயும் மேல்சபையிலேயும் சொன்னதைப்போல கல்லூரியில் தமிழ்ப் பாடத் திட்டம் இருக்க வேண்டுமென்பதை நமது அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறதே தவிர, அது நல்ல முறையில் வளர்ச்சி பெற வாய்ப்பு இன்னும் பெறவில்லை. எனவே, தமிழ் வளர்ச்சிக்காக பாடத் திட்டங்களை நல்ல முறையில் விரிவுபடுத்துவதன் மூலம் அதை வளர்க்க வாய்ப்பு உண்டாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புத் தருவதில் சிக்கல்கள் இருப்பதாக அறிகிறேன். அவர்களுக்கு அரசு வேலை தருவதில் நல்ல சலுகைகள் கொடுத்து தமிழ் பட்டதாரிகளுக்கு வேலை தருவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, தமிழ் பி.ஏ. பாஸ் செய்தவர்கள் பி.டி. வகுப்பில் சேர அனுமதி வழங்குவதில்லை. பி.ஏ. படிப்பு படித்துவிட்டு ஆசிரியர் கல்லூரியில் சேர வாய்ப்பு இல்லை என்றால் ஆசிரியர்களாக முடியாத காரணத்தால் அவதிப்படுகிறார்கள். தமிழில் பி.ஏ. படித்தவர்களுக்கும் ஆசிரியர் கல்லூரியில் இடம் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



1973 மார்ச் 20] [திரு. இ. எஸ். தியாகராசன்]

அடுத்தபடியாக, தமிழகத்திலே டெக்ஸ்ட் புக்ஸ் சொசைடி ஆரம்பிக்கப்பட்டு வேலை செய்து வருகிறது. கடந்த ஆண்டு 2 கோடியே 60 லட்சம் புத்தகங்களை வழங்கியிருக்கிறது. இது உண்மையிலேயே தேசியமயமாக்கப்பட்ட பெரும் தொழில்களில் முக்கியமானதாகத் கருதப்படுவதால் இந்தத் தொழில் நல்ல முறையிலே இன்றையதினம் வளர்ந்து வருகிறது. அது மட்டுமல்ல, இந்த ஆண்டிலே இந்த நிறுவனம் 3 கோடி புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அதற்காக அந்த நிர்வாகத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் தமிழகத்திலேயே தமிழ் டெக்ஸ்ட் புக்ஸ் சொசைடி 457 புத்தகங்களை வெளியிட்டிருப்பதாக அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியாவிலே, இந்தி மொழியோடுகூட 652 புத்தகங்கள்தான் அச்சிடப்பட்டிருக்கின்றன என்கிற நேரத்தில், இந்தச் சங்கம் 457 புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது என்றால், அவர்களுடைய திறமையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

தமிழ் வளர்ச்சியைப்பற்றி எனது கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் சென்று அவர்களால் முடிந்த காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். அது போதாது. மேன்மேலும் எல்லா அலுவலகங்களுக்கும் சென்று இன்னும் சிறப்பான முறையில் தமிழை நல்ல முறையிலே பயன்படுத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு இந்த அறிக்கையை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

* <u>திருமதி ஜோதி வெங்கடாசலம்</u> : தலைவரவர்களே, மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கொண்டுவந்திருக்கிற இந்த கல்வி மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கல்விக்கு ஏறத்தாழ 100 கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்று பார்க்கிறபோது கல்வியின் தரம் உயர வேண்டுமென்பது நோக்கமாக இருக்க வேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு பணத்தைச் செலவிடுகிறோம். கல்வியின் தரம் அடித்தளத்திலிருந்தே உயர வேண்டும். இன்றைக்கு எங்கே பார்த்தாலும் பள்ளி மாணவர்களிடையே அமைதியின்மை இருக்கிறது. இந்த அமைதியின்மையை

நாம் முதலில் தடுத்தாகவேண்டும். இதில் என்னுடைய யோசனை என்னவென்ருல், மாணவர்கள் கல்லூரியில் சேரும்போது அவர்களுக்கு கொடுக்கக் கூடிய அட்மிஷன் பாரத்தில், discipline என்று ஒன்று அச்சிட்டு கல்லூரி மாணவர்கள் கல்லூரியில் சேரும் போதே அட்மிஷன் பாரத்தோடு அவர்களுக்கு ஒரு டிக்ளரேஷன் பாரம் அச்சடித்துக்கொடுத்து அதில் தாங்கள் எந்தவகையிலும் இன்டிசிப்ளினை நடக்கமாட்டோம் என்றும், அப்படி நடந்தால் வேறு எந்தக் காரணமும் இல்லாமல் கல்லூரியை விட்டு வெளியில் அனுப்பிவிடலாம் என்பதற்கு ஒரு அண்டர்டேகிங் வாங்கிக் கொள்ள வேண்டும். இதுபோல கல்லூரித் தலைவர், மாணவர், பெற்ருேர் ஆகியோர்களிடையே ஒரு உடன்பாடு இருந்தால்தான் கல்லூரிகளில் அமைதியை, ஒழுங்கை ஏற்படுத்த முடியும். அமைதியின்மையை விளைவிப்பவர்களுக்கு கல்லூரியில் இடம் இருக்கலாகாது என்பதைக் கூறுகிறேன். அதே முறையில் பள்ளி களிலும் இருக்கவேண்டும். இதுபோல அண்டர்டேகிங் எழுத் தளவில் இல்லாமல் நடைமுறையில் அதைச் செயல்படுத்த அரசு முன்வரவேண்டும்.

அடுத்து, தமிழ் முக்கியமானதுதான். அதேபோல ஆங்கில மொழியும் அவசியமாக இருக்கிறது. அயல்நாடுகளுக்குச் சென்று வருகிறவர்களுக்கும், வேறு பல நாடுகளுடன் தொடர்பு கொள்வ தற்கும் ஆங்கிலம் அவசியம்தான். நாம் இன்றைக்கு 3-ஆம் வகுப்பில் இருந்து ஆங்கிலத்தை ஏற்படுத்தியிருக்கிருேம். ஆங்கிலத்தில் ஆசிரி யர்களுக்கு ஒரு தனிப் பயிற்சியை பிரிட்டிஷ் கவுன்சில் ஒத்துழைப்புடன் செய்வதைவிட நிறைய கான்வெண்டுகள் இருக்கின்றன. அவர்கள் கிண்டர்கார்டன் வகுப்பில் இருந்தே ஆங்கிலத்தில் சொல்லித்தர ஆரம்பிக்கிருர்கள். இதில் பிரஸ்டிஜ் ஒன்றும் கிடையாது. தமிழ் தான் வேண்டும் வேண்டும் என்கிறவர்கள்கூட இன்றைக்கு நூற்றுக்கு 90 பேர்கள் தங்கள் பிள்ளைகளை இந்த Convent பள்ளியில் சேர்ப்பதற்கு க்யூவில் நிற்பதைப் பார்க்கிருேம். ஆகவே British Council அவர்களுடைய ஒத்துழைப்பும் இருக்கட்டும். அரசும் முதல் வகுப்பில் இருந்து ஆங்கிலத்தைப் போதிக்க முன்வர வேண்டும். Convent முறையை நம் பள்ளிகளில் ஏற்படுத்த வேண்டும்.

அதோடு மீடியம் அப் லாங்வேஜைப்பற்றிச் சொன்ஞர்கள். மீடியம் of learning தமிழாக இருந்தாலும் ஒரு vernacular period ஏற்படுத்தி தெலுங்கோ, உருதோ, இந்தியோ, எடுத்துப் படிக்கிறவர்





களுக்கு நாம் வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டும். மாணவர் களுக்குத் தாய்மொழி Hindi, Urdu, Telugu ஆக இருப்பவர்கள் இந்த vernacular period ல அந்தந்த மொழி படிக்கலாம். அதற்குத் தக்கபடி ஒரு இந்தி, உருது, தெலுங்கு பண்டிட்களை அமர்த்த வேண்டும். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அப்படிச் செய்ய வேண்டும்.

அடுத்து, செகண்டரி கிரேட் எஜுகேஷனைப் பொறுத்தவரை 11-ல் இருந்து 10-வது வரை வைத்துவிட்டு, பி.யு.சி.-ஐ மாற்றி 2 வருட இண்டர்மீடியட் படிப்பாக மாற்றிவிடலாமா என்பதைப்பற்றி யோசித்துக்கொண்டிருப்பதாகச் சொன்ஞர்கள். இதில் இன்னமும் யோசித்துக்கொண்டிருப்பதற்கு ஒன்றும் இல்லை. இன்றைக்கு ஓல்டு இண்டர்மீடியட் படித்தவர்கள் எல்லாம் இருக்கிருர்கள். ஆகவே, 10-வது வகுப்புவரை உயர்நிலைப் பள்ளியை முடித்துவிட்டு பழைய 2 வருட இண்டர்மீடியட் வகுப்பை உடனடியாகத் துவக்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்து, சில்ட்ரன்ஸ் லைப்ரரி ஏற்படுத்துவது நல்லது. அங்கே குழந்தைகளுக்கேற்ற புத்தகங்கள் வைக்கப்படவேண்டும். மேலும் அங்கே வருகிற குழந்தைகளின் வயதிற்குத் தகுந்தபடி என்ன என்ன புத்தகங்களைப் படிக்கவேண்டுமோ அவற்றை லைப்ரரியனே அந்தக் குழந்தைகளுக்கு எடுத்துக்கொடுத்து உதவி செய்கிற நிலைமையையும் ஏற்படுத்த வேண்டும்.

சென்னை நகராண்மைக் கழகப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால் டிசிப்ளின் மிகவும் குறைவாக இருக்கிறது. மேலும், கட்டடங்கள் எல்லாம் ஒயிட்வாஷ்கூடச் செய்யப்படாத நிலையில் இருக்கின்றன. முதலில் மாணவர்களுக்கு நல்லதொரு என்வயர்மெண்டு கொடுத்தாக வேண்டும். அதற்கேற்ற முறையில் அந்தக் கட்டடங்கள் எல்லாம் நல்லமுறையில் பழுதுபார்க்கப்பட்டு, சுத்தமாக வைத்திருப்பதற்குப் போதிய அதிக நிதியைப் பராமரிப்புக்காக ஒதுக்கவேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

அதேபோல, கிராமங்களில் இருக்கிற பள்ளிகளும் பரிதாபகர மான நிலையில்தான் இருக்கின்றன. சில பள்ளிக்குக் கூரை இருந்தால் நான்கு பக்கச் சுவர்கள் இல்லை. நான்கு பக்கச் சுவர்கள் இருந்தால் கூரையில்லை. இவற்றை எல்லாம் டி. இ. ஓ. சென்று பார்க்கிருர்களா, இல்லையா? பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களிடம் பள்ளி களை ஒப்படைத்துவிட்டு இவர்கள் என்ன செய்கிருர்கள்? அவ்வப்

[திருமதி ஜோ வரு கி வெங்கடாசலம்] [1973 மார்ச் 20

போது இவற்றைச் சென்று பரிசீல நல்ல முறையில் வைக்கத்தக்க ஏற்பாடு னசெய்து அந்தக் கட்டடங்களை. கேட்டுக்கொள்கிறேன். டி.இ.ஓ. தக்க களைச் செய்ய வேண்டுமென்று அனுப்புவதற்கு ஆவன செய்ய வேண்டும். ரிப்போர்ட்டை அரசுக்கு

[திரு. நா. வீராசாமி] தலைமை]

மதிய உணவுத் திட்டத்தை எடுத்துக்கொ பரிதாபகரமான நிலையில்தான் இருக்கிறது. நாம் ண்டாலும் மிகவும் லைப்ரரி செஸ்ஸை உயர்த்தி அதற்கு அதிகத் தொகை ஒதுராபர்டி டாக்சில் திருக்கிறோம். ஆனால் இந்த மதிய உணவுக்கு 6 பைசா துக்க முன்வந் ருக்கு என்கிற உதவியை உயர்த்தவில்லை. பத்து பைசாவிந்தஒரு மாணவ களுக்கு இந்தக் காலத்தில் என்ன சத்துணவை வழங்க ல் மாணவர் தயவுசெய்து இதனைக் குறைந்தபட்சம் 50 பைசா என்ற அளவு முடியும்? உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். க்காவது

நான் 1969-ஆம் ஆண்டு காலஞ்சென்ற என் க பெயரில் ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த வேண்டுமெ ணவர் விண்ணப்பித்து இருந்தேன். அதற்கு ஒரு தொகை தரவேவ ன்று மென்று கடிதம் வந்தது. நான் அந்த 75 ஆயிரம் ரூபாய் தொகையை ண்டு தருவதற்கும் ஒப்புக்கொண்டேன். ஆனால் அதைக் கொஞ்சம் தவ, த் முறையில் கொடுக்க உத்தரவிடவேண்டும் என்று கோரியிருந்தேன். இன்றுவரை ஒருபதிலும் எனக்குக் கிடைக்கவில்லை. நான் யாரையும் குறை கூறவில்லை. யாரைக் குறை கூறுவது என்றும் புரியவில்லை. முதன் முதலாக ஏழை மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 80 ஆண்டுகளுக்கு முன்னதாக எங்கள் குடும்பத்தால் ஆரம்பிக்கப்பட்ட பள்ளி ஒன்று சிந்தாதரிப் பேட்டை-யில் இருக்கிறது. அதை நல்லமுறையில் ஒரு உயர்நிலைப் பள்ளியாக ஆக்கவேண்டும் என்கிற நினைப்பில்தான் அந்த விண்ணப் பத்தை அனுப்பினேனே தவிர பத்திரிகையில் என் பெயர் வரவேண்டும் என்பதற்காகவோ, யாரும் செய்யாத ஒரு கைங்கர்யத்தை நாம் செய்ய முன்வந்ததாக இருக்கவேண்டும் என்றோ அந்த விண்ணப்பம் எழுதப் படவில்லை. எண்ணும் எழுத்தும் இரண்டு கண்ணெனத் தகும் என்பதற்கேற்ப அந்தக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்ட பள்ளி அது. அந்த நினைவாக இதனைச் செய்யவேண்டும் என்கிற எண்ணத்தில் எழுதினேன். அதையும் கனம் அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்த்து எனக்கு ஒரு முடிவினை இப்போது கூறவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.



1973 மார்ச் 20]

Dr. H. V. HANDE: Sir, I wish to say a few words in support of the cut motion I have given.

I wish to say with anguish that the Education Department is a monumental example of incompetence, inefficiency and indecision and it has bungled on all fronts right from University education onwards down to primary education. There has been no solution offered either in the department or Ministry concerned. Every problem almost has been treated with utmost contempt. Every suggestion made on behalf of the teachers to solve the problem has been treated with contempt.

With regard to University education, I am very sorry to say that there is too much of politics. There is politics at all levels of the department down to primary level. The politics in the university is worse than the politics in the political field. With regard to university, we are giving grants. What is the method with which this Government treats the university and university treats this Government. I am very pained to say that this Government treats the University as though it is only a play-thing of its own or department, or reducing the university into a mere branch of the Education Ministry. Therefore I have to ask the question where is the autonomy of the university. Are we having it? Is it not a fact that the Vice-Chancellor of the University is the person who is decided by the Chief Minister and Minister for Education to be the Vice-Chancellor. This is the result of the amendment of the Act. If that is the state of affairs, where is the autonomy of the university ?

[The Additional Secretary was seen talking with Mr. Chairman (Thiru N. Veerasami).]

Nobody need tell the Chairman that I need not talk these things. I know what to talk.

Mr CHAIRMAN (Thiru N. VEERASAMI): Do you mean to say that the Secretary cannot consult the Chairman? How do you know that he is telling me all these things ?

Dr. H. V. HANDE: My submission is that autonomy of the University should be kept up. But what is happening is different. The Vice-Chancellor was found in the parlour of the Hon. Minister

[Dr. H. V. Hande] [1973 மார்ச் 20

for Education before the extension of his term. I have got proof for it and I charge that the University Vice-Chancellor was speaking in the room of the Hon. Minister for Education befon extension of his term. When my distinguished friend Dr. A. L. Mudaliar was Vice-Chancellor he never bothered about Government. There was such autonomy then. There was no question of his coming and talking with the Hon. Minister for Education or giving suggestion. There was nothing of that kind then.

My charge in this House is that the Madras University has come to be a play-thing in the hands of the Hon. Minister for Education. What business has the Vice-Chancellor to enter the room of the Hon. Minister for Education? What business has he to enter the Secretariat?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புரோ-சான்சலர் என்ற முறையிலே, வைஸ்-சான்சலருக்கு புரோ-சான்சலர் அறைக்கு வர எல்லா உரிமைகளும் இருக்கின்றன. புரோ-சான்சலரிடம் வைஸ்-சான்சலர் வர வேண்டிய அளவில், புரோ-சான்சலருக்கும் வைஸ்-சான்சலருக்கும் எவ்வளவோ தொடர்புகள் இருக்கின்றன. கல்வித் துறையிலே நிறைவேறவேண்டிய காரியங்கள் பற்றிப் பேசுவதற்கு அவர் புரோ-சான்சலருடைய அறைக்கு வந்திருந்தார். அவர் இதைத்தான் கேட்டார் என்று எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு உறுப்பினர் பேசுகிறார்?

Dr. H. V. HANDE : I am very glad that the cat is out of the bag. I am very glad that the Education Minister under the garb of Pro-Chancellor thinks that the Vice-Chancellor can come and meet him. But the point is why did the Vice-Chancellor come to the Secretariat when his term of office was to end and before extension of the term was given ? At that time he has no business to come and that too one month before extension. Definitely it is not in good taste. He should know that such a thing would be misunderstood. During the medical college admissions, there is a rule that nobody could go to the house of persons who are in the selection board. I say this because I want that the Vice-Chancellor, like Caeser's wife, should be above suspicion. So I say this sort of thing should not go on.



1973 மார்ச் 20]

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பல்கலைக் கழகத்தைப்பற்றி, பாடத்திட்டங்கள், ஆகிய பல்வேறு வகையிலே முடிவு செய்யவேண்டுமென்பதற்காக முந்தைய வைஸ்-சான்சலர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்கள் பல தடவைகள் என்னுடைய அறைக்கு வந்திருக்கிறார் என்று நான் நினைவு படுத்த விரும்புகிறேன். ஆக, இத்தனை நாளைக்குத்தான் வர வேண்டும், இந்த நாட்களில்தான் வரவேண்டும், இந்த நாட்களில் வரக்கூடாது என்றும், அப்படி வந்தார் என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் உள்நோக்கம் கற்பித்து பேசுவது அவருடைய பண்புக்கும் அழகல்ல. இந்த மாநிலத்தினுடைய கல்வி தரத்திற்கும் பெருமை தராது என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நானும் வருத்தத்தோடு சொல்கிறேன். நீங்கள் யுனிவர்சிட்டிக்கு டிக்டேட் செய்வது உங்களுடைய தரத்திற்கும் நல்லதல்ல, கல்வித் தரத்திற்கும் நல்லதல்ல, என்று யூனிவர்சிட்டியிலே எவ்வளவோ போஸ்டுகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்ற அந்த சார்ஜுகளுக்குப் பின்னல் வருகிறேன். காரணம் என்ன?

My only charage is that almost everything is dictated by the Hon. Minister for Education.

Mr. DEPUTY SPEAKER : The Vice-Chancellorship is a very responsible office. You should not accuse the Vice-Chancellor on the floor of the House, where he is not present and could not defend himself. It is not in good taste.

Dr. H. V. HANDE : I know the rules and I can talk freely on this point while discussing this demand because we give grants for running the University. If I had no right to talk on the university in this demand, I do not know where I can talk, on this very important question. What I want is that the University should be completely out of the clutches of this Government.

The Hon. Thiru K. ANBAZHAGAN : The hon. Member referred to University as autonomous body here when he spoke earlier. He also accused the Hon. Minister for Education that he is interfering in the affairs of the autonomous body. That autonomous body has elected bodies like Senate and Syndicate. Those are the forums where the University could be criticised. He can

say such and such posts have not been filled up. But he cannot ask question the Education Minister the reason for not filling up such posts.

MR. DEPUTY SPEAKER : He can ask in a general way without meaning any offence. The Vice-Chancellorship is a respectable office and we will have to respect the office of Vice-Chancellor.

DR. H. V. HANDE : I want the prestige of the Vice-Chancellor to be kept up. I do not want the Hon. Minister to dictate to the Vice-Chancellor.

I have got some more facts. The total number of vacancies pending for a long time in the University is 90. Why has it not been filled up so far ? What is the reason ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே பல்கலைக் கழகத்திற்குத் தனித் தன்மை, அட்டானமி இருக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, இதையெல்லாம் நிரப்பாமலிருப்பார்களானால் அது பல்கலைக் கழகத்தைச் சாருமேதவிர, என்னை ஏன் இதை நிரப்பவில்லையென்று கேட்பானேன்? அட்டானமஸ் ஆக இருக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, 90 இடங்களிலே நிரப்பப்படவில்லையென்று என்னை ஏன் கேட்கவேண்டும்? அதைக் கேட்க வேண்டியது வைஸ் சான்சலரைத்தான். அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. இது ஒன்றே போதும், பல்கலைக் கழகத்தினுடைய அட்டானமியிலே நாங்கள் குறுக்கிடவில்லையென்பதற்கு. பல்கலைக் கழகத்தினுடைய நடைமுறையிலே, யார் யார் எப்படி இருக்கவேண்டுமென்று நாங்கள் எப்படித் தலையிட முடியும்?

டாக்டர் எச். வி. ஹாண்டே : என்னுடைய குற்றச்சாட்டு எல்லாம் இவர்கள் அதைச் சொல்லவில்லை. இவர்கள் சொல்லும் வரையிலே அவர்கள் காத்துக்கொண்டிருப்பார்கள். நான் சும்மா சொல்வது கிடையாது. 10, 12 செனட்டர்கள் வந்து என்னிடத்தில் கம்பிளெயிண்ட் பண்ணிய பிறகு சொல்கிறேன். ஆதாரத்தோடு சொல்கிறேன்.

The reason for these posts not having been filled up is because the green signal has not been given by the Hon. Minister for Education. I want that the affairs of the University to be completely *de novo* investigated. It has not gone into such rut before. Unless they get persons of their choice, the choice of Hon. Minister, the post is not filled up. Unless a directive is given from here, nothing



happens. There are number of instances wherein Governmental machinery goes on interfering and even in fact attacking these people. This sort of thing should be completely stopped.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே பல்கலைக் கழகத்திலே, யார் யாரைப் பேராசிரியாக நியமிப்பது, ஆசிரியராக நியமிப்பது என்பதைப்பற்றி, வைஸ்-சான்சலர், புரோ-சான்சலர் என்ற முறையில் என்னைக் கலக்க வேண்டிய அவசியமும் இல்லை. கலப்பதும் கிடையாது. இதுவரை எந்த நோட்டும் எனக்கு வந்ததும் இல்லை. அங்கு இதற்கு என்ன ஏற்பாடுகள் இருக்கின்றன என்றுகூட எனக்குத் தெரியாது. ஆக, இதுவரையில் அமைச்சர் என்ற முறையிலோ, புரோ-சான்சலர் என்ற முறையிலோ, எனக்கு பட்டியலும் வந்ததில்லை, யாரையும் நான் சிபாரிசு செய்ததும் இல்லை. யாரை நியமித்தீர்கள் என்று நான் கேட்பதும் இல்லை. இப்படி உண்மைக்குப் புறம்பானவற்றைக் கூறுவது திருத்திக் கூறுவது பண்பும் அல்ல, முறையும் அல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே : யூனிவர்சிட்டியைப் பொறுத்த வரையில் எதுவும் பண்பும் இல்லை, முறையும் இல்லை என்பதைச் சொல்வதற்காகத்தான் நானும் சொல்கிறேன். நீங்கள் டெலிபோன் செய்கிறீர்கள் ... ... ...

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த அவையினுடைய ஒரு உறுப்பினர். தப்பித் தவறி, யாராவது ஒருவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் திருடி விட்டார் என்று சொன்னால் அவர் பொறுத்துக்கொள்வாரா? அப்படிச் சொன்னால் அவர் சொல்வது தவறு என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னால் அதை இந்த அவை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதைப்போல், யூனிவர்சிட்டி அட்டானமஸாக இருக்கிறது. அட்டாமனஸ் பாடியாக இருக்கிறது. அதன் அன்றாட விவகாரங்களில், நிரப்பப்படுகிற பதவிகளில் தலையீடு செய்வதில்லையென்று சொன்னதற்குப்பிறகு டெலிபோன் செய்தார் என்று சொல்வது இந்த அவையினுடைய மரபுக்கு உகந்தது அல்லவென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே நீங்களே பேசும்பொழுது சொன்னீர்கள், 13 செனட்டர்கள் வந்து உங்களிடம் சொன்னார்கள் என்று. நான் அமைச்சரவைக்குச் சார்பாகச் சொல்வதாக நீங்கள் நினைக்கக் கூடாது. எப்படி

இந்த அவையின் கௌரவம் காப்பாற்றப்படவேண்டுமென்று நினைக்கிறோமோ அதைப்போன்றுதான் கௌரவத்தை நாம் யூனிவர்சிடி செனட்டுக்கும், சிண்டிகேட்டுக்கும் கொடுத்தாகவேண்டும். செனட்டர்கள் வேண்டுமானால் அங்கே போய்ச் சொல்லிக்கொள்ளலாம். அதைவிட்டுவிட்டு அவர்கள் சொன்னார்கள் என்று நீங்கள் இங்கே வந்து சொல்வதும், அமைச்சர் சொன்னார், தொலைபேசியில் பேசினார் என்றெல்லாம் இங்கே சொல்வதும் சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : திருடுவதைப்பற்றிச் சொன்னார்கள். யார் திருடினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் திருடினார்கள் என்று நான் சொல்லவும் இல்லை, என்னைப்பற்றிச் சொல்வதற்கு எந்தவிதமான அவசியமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

That was about the University.

There are so many irregularities. Even the method of selection of the Vice-Chancellor requires to be set right. The Rules and the Act have to be completely changed and amended. The Vice-Chancellor should be selected like before. Let the University send a panel of three persons and let the Governor, the Chancellor select one from them. Previously that was the method. That method should be adopted and the present method should be changed and the Act amended for that.

Then there is the College, called the Karanthai Pulavar Kalluri in Tanjavur. The way in which the principals are summarily dismissed in some of these colleges is something very very painful and shocking. One Jayachandran, a member of the Syndicate, a member of the Senate and a member of the Academic Council was also the Principal of this Karanthai Pulavar Kalluri, Thanjavur. He was served with a suspension order by a peon in front of the students when he was lecturing to the class. If this be the way in which the Principal is treated, how can we expect student discipline?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியின் முதல்வர் என்னுடைய நண்பர். நானும் அவரும் சிண்டிகேட்டில் உறுப்பினர்களாக இருந்திருக்கின்றோம். அவர் விலக்கப்பட்டதுகுறித்து எனக்குக் கடிதம் எழுதினார். நான் கேட்ட





பொழுது அவர் கல்லூரி முதல்வராக இருந்துகொண்டு மாணவர்களைத் தூண்டிவிடுவதுடன் அவர்களை ஸ்ட்ரைக் செய்யச்சொல்லி ஊக்குவிப்பதுமாக இருந்தார் என்று கூறப்பட்டது. இது ஒரு தனியார் கல்லூரி. அப்படிப்பட்டவருக்கு கல்லூரி பியூன் மூலமாக அந்த நோட்டீஸைக் கொடுக்காமல் மற்ற நிர்வாகிகள் கொண்டு வந்து கையிலே கொடுப்பார்கள் என்று எதிர்பார்ப்பது முறையல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே : கொஞ்சம் பார்த்து கவனிக்கிறேன் என்ற ஆன்ஸரை அவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன்.

When the class was going on, is it proper to send the chit through the peon and then now justifying that action? I never expected this. I am shocked. Instead of trying to set right the wrong, you justify it. You are not also acquitted of the charge.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி யார் கையிலே கொடுத்து கல்லூரிகள் நிர்வகிக்கப்படவேண்டுமென்று வாதாடுகிறார்களோ, அவர்கள் கையில்தான் தனியார் கையில்தான் அந்தக் கல்லூரி இருந்து வருகிறது. எனவே அதற்கும் இந்த அரசுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அவர்கள் அதைப்பற்றி மேல்முறையீடு செய்து கொள்வதற்கு வழிகள் இருக்கின்றன. அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்வதற்கும் வழி இருக்கிறது.

DR. H. V. HANDE : I am grateful to the Ministers. But the Minister for Education has given a different answer from that of the Hon. Minister for Health. I will go to the next point.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த நண்பர் என்னோடு இருந்தவர். ஏன் நீக்கிவிட்டீர்கள், நல்ல தமிழ்ப் பற்றுள்ளவர் ஆயிற்றே என்று கேட்டேன். அவர் மாணவர்களைத் தூண்டிவிடுகின்றார் என்ற தகவல் தரப்பட்டது. அவர்களுக்கு நோட்டீஸ் மாணவர்கள் முன்னாலே பியூன்மூலமாகக் கொடுத்ததால் ஒழுக்கம் கெட்டுவிடும் என்று கூறுவதையும் அவர் மாணவர்களைத் தூண்டி விடுகிறார் என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எது சரியென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : உங்கள் எக்ஸ்ப்ளநேஷனை நீங்கள் சொல்கிறீர்கள். என்னுடைய கருத்தை நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கடைநிலை ஊழியரை இழிவுபடுத்தும் விதத்திலே அவர்கள் இங்கே எதையும் குறிப்பிட வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நீங்கள்தான் இழிவுப்படுத்திப் பேசி இருக்கிறீர்கள். எப்படியாவது நான் சொல்லியதாகச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறீர்கள். அது நடக்காது, நான் சொல்ல வில்லை, நீங்கள்தான் இழிவுபடுத்தியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுகிறபொழுது பியூன் கையிலே கொடுத்து, பியூன் கையிலே கொடுத்து என்று சொல்வது ஏதோ அது ரொம்பக் கேவலமாக நினைத்துச் சொல்வதுபோல் இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்களைப்போல் அவர்களும் மனிதர்கள்தான். அவர்களை அப்படி நினைக்க வேண்டாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் அப்படிச் சொல்லவில்லை. நீங்கள்தான் பியூன் கையிலே கொடுத்து, பியூன் கையிலே கொடுத்து என்று இப்பொழுது சொன்னீர்கள். நான் அவர்களுக்காக எவ்வளவோ வாதாடி இருக்கிறேன். கட்மோஷன்கள் எல்லாம் கொடுத்திருக்கிறேன். எனக்குத் தெரியும். நான் அப்படிச் சொல்லவில்லை. நீங்கள்தான் சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டாக்டர் ஹாண்டே அவர்கள் பியூன் என்று சொன்னதை உயர்வாக மதிக்கிறாரா, அல்லது தாழ்வாக மதிக்கிறாரா?

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர்கள் எவ்வளவு உயர்வாக மதிக்கிறார்களோ அதைவிட இரண்டு மடங்கு நான் உயர்வாக மதிக்கி றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியானால் அவர்கள் கையிலே உத்தரவு கொடுத்ததிலே என்ன தவறு?

டாக்டர் எச். வி. ஹாண்டே : பிரைம்மினிஸ்டரை நீங்கள் மதிப்பாய் நினைக்கிறீர்கள். பிரைம்மினிஸ்டர் முதலமைச்சரை நீக்க வேண்டுமென்று சொன்னால் அதை நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். அதை மக்கள்தான் செய்யவேண்டும்.



The Prime Minister has no right to expel our Chief Minister. The public alone have that right.

அந்தப் பிரச்னையல்ல. யார் உயர்வு, யார் தாழ்வு என்று கிடையாது. முறைகேடாக நடந்திருக்கிறது என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த நேரத்திலே மாண்பு மிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு அரசியல் உண்மையை வெளிப்படுத்தியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லோரும் இந்த அரசைக் கவிழ்த்துவிடலாம் கவிழ்த்துவிடலாம் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல சூடான பதிலை டாக்டர் ஹாண்டே அவர்கள் தந்திருக்கிறார்கள் என்று கருது கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : எப்படியோ கடைசியில் தனக்குப் பயன்படுகிறமாதிரித் திறமையைக் காட்டிக்கொள்கிறார்கள். காட்டிக் கொள்ளட்டும். பரவாயில்லை.

I will go to the next point. Now with regard to certain colleges in our State, there is no proper accomodation and laboratory facilities. Some hon. Members have menioned about this previously and there is lot of substance in what they have said. The Government Arts College, Tindivanam and the Government College at Chingleput are instances. In the latter college, the B.Com. course was started without any lecturers to teach the subject till even the end of December 1972. Then again, for the Bachelor's Degree in Library Science, 700 applications were received, out of which only 30 were selected. I have got a charge here. None was selected by merit. If you go through the marks obtained, not even the Scheduled Caste and backward class candidates have been selected on merits. Merit was thus excluded.

Another charge I wish to make is this. This has been placed at my disposal. That is with regard to the Bachelor's Degree in Library Science.

Then with regard to Primary Education, nearly 1,500 teachers of Primary Education had assembled in Coimbatore in a Mahanadu. The Minister for Education had promised that he would go and address them. Why did he not go? Why should he feel coldfeet

with students? With Primary School teachers, why should you feel this inferiority complex ? Why should they be disappointed ? I know they were there waiting till the evening for the address of the Hon. Minister. He never turned up at all. Why? Is it that their problems are not so important? I would like an answer from the Minister when he gives his reply to the debate.

I was saying that education has been messed up. I have got a number of points and I will mention them briefly. One important point is this. The District Board high schools were taken over from 1st April 1970. In fact the District Boards were abolished more than a decade ago. Is it not the responsibility of the education department to anticipate the problem of merger and be prepared for it? Till today, no proper steps have been taken for merger of A and B wings. The genesis of the problem of graduate teachers has arisen from this A and B wings. Therefore steps have to be taken to see that the two wings are properly settled and reconciled.

I have given 24 cut motions I do not know how far they will be useful. I hope and trust that they will be properly taken into account and attended to.

Then with regard to certain charges about instances of favouritism and nepotism in the education department. I have got here concrete proofs. For instances, one Mr. A. R. Janakan a B.Sc., B.T., was promoted as Headmaster with less than five years of service. It was done in 1962. Then he was promoted as District Board Educational Officer overlooking 52 other Headmasters. In 1969, actually he was charge-sheeted for grave irregularities, corruption etc. Still he was made a Gazetted officer as Gazetted P.A. to the Director of Legal Studies. Not only that he was finally promoted as Assistant Professor in the Law College. Why was this done? I would like to have an answer from the Hon. Minister.

Then one S. Damodaran, B.A., B.T was charged with moral turpitude. He was condemned. But he was promoted as Headmaster and posted to the very same school from where he had to go out on grave charges of moral turpitude. Then again in 1972, he was promoted as Chief Educational Officer when he was actually to be charge-sheeted for grave irregularities. This was done overlooking the seniorities of many.



This is an instance to show the extent of favouritism and nepotism that is rampant in his education department. All these things should be weeded out and at least in future they should keep a clean record. The Director of School Education......

THE HON. THIRU K. ANBAZHAGAN : The hon. Member referred to Mr. Damodaran, a Headmaster and said that he committed grave irregularities. He also said that he has proper materials for the same. If there is grave irregularity, he can also explain it in the House.

DR. H. V. HANDE : The Education Minister will find out the details. I have given the general details.

Now I want to say something about the office of the Director of School Education. I want to make one personal request. Every time I take the phone to call on him, back comes the reply 'Sir, he has gone to Secretariat or he has gone on tour'. What I say is, he must be available for members to talk and time should be set apart for it.

And the way in which the primary teachers are treated in D.P.I. office is pitiable. The usual reply, to a query whether the Director is available or not, is that he is not available. What I say is this sort of the Director being always out of his office, should be put an end to.

I want to say that the reply of the Hon. Minister for Education regarding payment of M.I.T. teaching staff is incorrect. In answer to a question he has said that teachers have been paid but my information is different. I have got a letter from the President of the teaching staff of M.I.T. saying that arrears of salary and allowances to which the State and Central Governments stand committed have not been paid till now, even after the lapse of nearly 2½ years. Besides the revised scales of pay and allowances are yet to be implemented. This is what has beent written to me. That is one thing.

Now I come to teachers of Corporation middle schools. Thiru R. Ponnappa Nadar, Thiru K. T. K. Thangamani, Thiru A. R. Marimuthu and myself gave last year a leter regarding displacement of these teachers. In spite of the assurance given that they will not be disturbed, an order has come in posting B. T. teachers

as Headmasters and saying that these Headmasters would be continued to draw the same pay and allowances as before and would be designated as Additional Headmasters. The Hon. Minister gave the assurance that they will not be disturbed. But in spite of the assurance this has come.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பி. டி. ஆசிரியர்களைக் கொண்டுவந்து போடும்போது ஏற்கெனவே இருக்கிற ஹெட்மாஸ்டர்களுக்கு ஒரு தகுதி கொடுக்கப்பட்டு அவர்களை டிஸ்டர்ப் பண்ணாமல் பி.டி. ஆசிரியர்களைப் போட்டிருக்கிறோம். மாநகராட்சி மன்றங்களில் பி.டி. ஆசிரியர்களை 900 பேர்களை இந்திய அரசாங்கம் தருகிற மானியத்தின் அடிப்படையில் அத்தனை பேர்களையும் போடுகிறேன் என்று சொன்னார்கள். முதலில் அப்படி முடிவெடுத்தார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள், மற்றவர்கள் இப்படி அவ்வளவு பேர்களையும் போட வேண்டாம், ஒரு குறிப்பிட்ட சதவீதம் போடவேண்டுமென்று அளவிற்குச் சொல்லப்பட்டது. அப்படி போட்டதற்குப் பிறகு ஏற்கெனவே உள்ளவர்கள் தங்களை ஒரு நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுடைய சம்பள விகிதத்தில் எத்தகைய குறைபாடும் ஏற்படாமல் எச்.எம். தகுதியைக் குறைக்காமல் அடிஷனல் எச்.எம். என்று அவர்கள் தகுதி பெற்றிருக்கிறார்கள். ஆகவே, படிப்புத் தரத்தில் உயர்வாக இருக்கிற பி.டி. ஆசிரியர்களுக்கு எச்.எம். போஸ்டு கொடுக்கப்பட்டது. ஏற்கெனவே எச்.எம். போஸ்டில் இருக்கிறவர்களை அடிஷனல் எச்.எம். என்று போட்டு அவர்களுக்குத் தகுதியைக் குறைக்காமல், சம்பளத்தைக் குறைக்காமல் பாதுகாப்பு தரப்பட்டிருக்கிறது. அத்தனை இடங்களையும் பி.டி. ஆசிரியர்களுக்குத் தராமல் ஒரு குறிப்பிட்ட சதவித இடத்திற்குத்தான் பி.டி. ஆசிரியர்கள் போடப்பட்டிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Then I come to another point. There are 35 polytechnics in the State. The students have been agitating. The agitation ranged from 13th May to 23rd October 1972. The Director of Technical Education agreed to their demands and promised to implement the same, *vide* his letter Memo. No. PC.DTE/72, dated 20th October 1972. I would like to know from the Hon. Minister what action had been taken and what is the latest position. Are any attempts being made to redress their grievances? That is what I want to know.



Then there is the need for creation of posts of Assistant Professor of Statistics in colleges where ancillary statistics is taught.

Formation of an Education Board consisting of Minister of Education, Legislators, eminent educationists, etc., is a necessity. Today the hon. Member Mr. Mathialagan complained that progress of Tamil medium is not adequate. I wish to say that I differ from him.

THIRU K. A. MATHILAGAN : I said that the progress has slowed down, namely, inroducing Tamil medium.

DR. H. V. HANDE : தமிழைப் பாடமொழியாகக் கொண்டு வரக்கூடிய வேகம் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள்.

Are we quite sure that future of our boys would be safe if they study in Tamil Medium? How many of our politicians are sending our children to Tamil medium sections? Let us forget politics for a moment and have frank talk. Let us try to do something good for our children. One of the reason why D.M.K. is going unpopular —I maintain they are going unpopular and Chief Minister would not agree with me—is that the D.M.K. refuses to face facts. In Supreme Court, can you talk in Tamil? You have to talk in English. How many Palkivalas and Niren Des have we produced? You cannot have such persons if we educate our boys in Tamil medium. They must have good command of English to flourish into good and eminent lawyers. In Parliament we have to talk in English only so that others could understand us. All these problems are there. So, let us face things in a practical way and let us not try to bring in politics here. Let us try to think of the future of our boys and let us not rush in and spoil the future of students. That is one point which I want to stress most.

With regard to graduate teachers, I was watching the Hon. Chief Minister's reply in the morning. I was not very happy. Mr. G. Swaminathan, MLC had a talk with our Chief Minister. He telephoned me from Tanjore and he wanted this matter to be raised here. He informed me that in his talk with the Hon. Chief Minister, the Chief Minister had agreed, including the Hon. Minister for Education, that the whole matter has been solved. Is it necessary now for the Hon. Chief Minister to demand his pound of flesh? The situation now is better.

[Dr. H. V. Hande] [1973 மார்ச் 20

அவ்வளவு பேரும் பணிஞ்சு வந்திருக்காங்க. சுலபமாக முடிக்கலாம். திரும்பி வந்த அவர்களிடம் மன்னிப்புக் கடிதமோ ரிக்ரெட் லெட்டர், க்விப்ளிங் ஆப் வொர்ட்ஸ் தேவையா என்று கேட்கிறேன். நீங்க யோசனை பண்ணிப் பாருங்க. அவர்கள் வந்து விட்டார்கள். அவர்கள் தவறு செய்யவில்லை. 41-வது செக்ஷன் தடையை மீறவில்லையா என்று கேட்பீர்கள். நீங்கள் மீறவில்லையா, நாங்கள் மீற வில்லையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நாங்கள் தடையை மீறுவோம், தாங்குகிறோம் என்று சொன்னோம். தாங்கினோம். அவர்களும் தாங்குவோம் என்றார்கள். தாங்க வேண்டியது தானே.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்து பரிசு கொடுத்தாகிவிட்டது. அவர்கள் செய்தது குற்றமா என்று கேட்கிறேன். நீங்கள் செய்தது குற்றமா? நீங்கள் உங்களைக் குற்றவாளிகள் என்று ஒத்துக்கொள்கிறீர்களா? நீங்கள் அரசியலுக் காக இயக்கமாகச் செய்தீர்கள் என்றால் அவர்களும் இயக்கமாகச் செய்தார்கள். அவர்களிடம் இவ்வளவு ஸ்டிரிக்டாக நடந்துகொள்ள வேண்டுமா? பெருந்தன்மையோடு, பரந்த மனப்பான்மையோடு விட வேண்டியது தான். இதிலே கௌரவப் பிரச்னையாகக் கருதி, மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்கவேண்டுமென்று இவ்வளவு ஹியுமிலியேடிவாக செய்ய வேண்டுமாவென்று கேட்கிறேன். அவர்க ளிடத்தில் மாணவர்கள் படிக்கவேண்டுமென்பதைக் கவனித்தீர்களா? நீங்கள் செய்ததைத்தான் அவர்களும் செய்திருக்கிறார்கள். நாங்களும் செய்ததுதான். யார் ஜாஸ்தியாகச் செய்கிறார்களோ அவர்களுக்குப் பரிசு ஜாஸ்தி. உயர்வான பதவி.

திரு. என். கணபதி : மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் அரசியல்வாதிகளையும் அரசு அலுவலர்களையும் ஒரே கோணத்தில் ஒரே கருத்தில் எப்படிப் பார்க்கிறார்கள்? அரசியல் வாதிகள் தியாகத்தைச் செய்து பரிசைப் பெறுகிறார்கள். அரசு ஊழியர்கள் போராடும்போது தியாகத்தைச் செய்யத் தயாராக இருக்க வேண்டும். ஏற்படும் விளைவுகளைத் தாங்கிக் கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவ்வாறு சுலபமாகச் சொல்லி விடலாம். ஆயிரக் கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. அரசியல்வாதி தாங்க முடியும், அவர்களால் தாங்க முடியாது. நாம்



1973 மார்ச் 20] [Dr. H. V. Hande]

அரசியலில் நுழைந்து விட்டோம். ஆனால் அவர்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்காகப் போராட்டம் நடத்துகிறார்கள். அதோடு அதை முடித்துவிட வேண்டும். அவர்கள் சார்பாக மேல்சபை உறுப்பினர் சுவாமிநாதன், ராஜா ஐயர் ஆகியவர்களும் பேசினார்கள். அதோடு பிரச்சினையை விட்டு விட்டுப் போக வேண்டுமே தவிர இதை கவுரப் பிரச்னையாக நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது.

இப்படி நீங்கள் ஒவ்வொன்றையும் கவுரப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டுதான் அன்பாப்புலர் ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். பிடிவா தத்தை விட்டு விட்டு பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் விட்டுக் கொடுத்துக் கொண்டிருப்பதாக நினைத்துக்கொண் டிருக்கின்றார்கள். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை.

யூனிவர்சிடி விவகாரத்தைப் பற்றிப் பேசும்போது உங்களைத் தாக்கிப் பேசினேன். அதிலே, உங்களுக்கு நிலைமை தெரிய வேண்டு மென்பதற்காக அப்படிப் பேசினேன். இதிலே நான் தாக்கிப் பேசினால் என்மேல் இருக்கும் கோபத்தால் அவர்களைப் பழி வாங்குவீர்கள் என்பதால் பேச முடியாத கட்டத்தில் இருக்கிறேன். இந்தப் பிரச்சினைக்கு ஆறு மணிக்குள்ளாக ஒரு முடிவைத் தெரிவித்துவிட வேண்டும்.

எஸ். எஸ். எல்.சி. பரிட்சை மார்ச் 26-ம் தேதி நடக்கும் என்று அமைச்சர் அவர்கள் திருச்சியில் சொன்னதாக அறிகிறேன். பரிட்சை சுமுகமாக நடக்க வேண்டும்.

அந்த ஆசிரியர்கள் நம்முடைய சகோதர சகோதரிகள்தான். இதிலே ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்ற காரணத்தால் தான் இதிலே நான் அரசியல் விளையாட்டாகப் பேசவில்லை. நான் ரொம்பத் தாழ்மையோடு கேட்டுக் கொள்வது எப்படியாவது பிரச்சினைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். அப்போது தான் இந்த ஆசிரியர்கள் மாணவர்களைக் கவனித்துக் கொள்வதிலே சுமுகமான சூழ்நிலை பிறக்கும்.

நான் கிட்டத்தட்ட 24 வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருக் கிறேன். அவற்றை எல்லாம் நான் படிக்க விரும்பவில்லை. அமைச்சர் அவர்கள் கவனித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மீண்டும் ஒரு முறை கூறிக்கொள்கிறேன். ஆசிரியர் பிரச்சினையிலே இன்று 6 மணிக்குள்ளாக ஒரு சுமுகமான முடிவைக் கூற வேண்டும், நாளையதினம் சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு வழிகோல வேண்டு மென்று கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது இந்த மாமன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் பலரும் கருத்துக்கள் பல வற்றைச் சிறப்பாக வழங்கி இருக்கிறார்கள். என்னைத் தாக்கியோ அல்லது என்னுடைய துறையைத் தாக்கியோ பேசிய உரைகளினால் நான் தளர்ச்சி அடையவில்லை. ஆனால் இந்தத் துறை மேலும் மேலும் வளர வேண்டுமென்ற எண்ணத்தோடு உருவான கருத்துக்கள் பலவற்றை வழங்கி சீரிய முறையில் கருத்துக்கள் பலவற்றை எடுத்துச் சொன்னதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் இந்தத் துறை எந்த அளவுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பலரும் குறிப்பிட்டு காட்டியிருக்கிறார்கள். இந்தக் கல்வித்துறை எப்படி இருந்தது எப்படி வளர்ந்தோங்கி வந்திருக்கிறது என்பதற்கான விவரங்கள் எல்லாம் குறிப்பு அறிக்கையிலே தந்திருக்கிறேன். 98 கோடி ரூபாய் பொதுக் கல்விக்காகவும் தொழில் நுட்பக் கல்விக்காகவும் செலவழிக்க கணக்குக் காட்டியிருப்பதே அந்தத் துறையிலே அதிகமான அளவுக்கு அரசு அக்கறை காட்டி வருகிறது என்பதை உணர்த்துவதற்கு அடிப்படையாக இருக்கிறது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டில் போட்ட கணக்குப்படி 90 கோடி ரூபாய் பொதுக் கல்விக்காகவும், தொழில் நுட்பக் கல்விக்காகவும் செலவழிக்கப்பட்டது.

மற்றும் பொறி இயல் கல்வி, மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கவின் கலைக் கல்வி ஆகிய எல்லாவற்றையும் சேர்த்துக் கணக்குப் போட்டால் 112 கோடி ரூபாய் வருகிறது. அதைத் தவிர ஊராட்சி மன்ற ஒன்றியங்கள், தனியார் துறை செலவழிக்கின்ற தன்மைகளைப் பார்த்தால் மேற்கொண்டு 35 கோடி ரூபாய் செலவாகியிருக்கும். ஆக 148 கோடி ரூபாய் கல்விக்காகத் தமிழ் மாநிலத்தில் பல்வேறு துறைகளின் சார்பாகச் செலவழிக்கப்பட்டதாகக் கணக்கு கூறுகிறது.

இந்த ஆண்டு பொதுக் கல்விக்கும், தொழில் நுட்பக் கல்விக்கும் ஒதுக்கி இருப்பது 98 கோடி ரூபாய். மேற்கொண்டு பல்வேறு துறைகளின் சார்பாகச் செலவழிக்கப்படுவதைச் சேர்த்தால் மொத்தம் 120 கோடி ரூபாய் ஆகும். அதைத் தவிர வேறு பல துறைகளின் மூலம் செலவழிக்கப்படும் கணக்கு 39 கோடி ரூபாய்க்கு மேல் ஆகிறது. ஆக 1973–74-ஆம் ஆண்டு 160 கோடி ரூபாய் அளவுக்கு இந்தப் பணியை ஆற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.



வேறு எந்தத் துறையையும் விட இந்தத் துறைக்கு அதிக வாய்ப்புத் தருகிறோம் என்ற அளவில் இது மிகமிக இன்றியமையாததாக விளங்குகிறது.

இந்தக் கணக்கை மட்டும் காட்டினால் போதாது, இதனுடைய வளர்ச்சியைக் காட்ட வேண்டுமென்று உறுப்பினர்கள் வற்புறுத்திக் கூறினார்கள். அந்த வளர்ச்சியை நாம் மெல்ல மெல்லப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டு சிறப்பாகவும், செம்மையாகவும் செய்து வருகிறோம்.

அகில இந்திய ரீதியில் கணக்கிட்டுப் பார்த்தால் 1971-ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கைப்படி நூற்றுக்கு 29 பேர்தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். 71 பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை கணக்கைப் பார்த்தால் நூற்றுக்கு 42 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள், 58 பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். அகில இந்தியாவிலும் கேரளத்திற்கு அடுத்த படியாக இரண்டாவது இடத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது. கேரளத்தில் நூற்றுக்கு 60 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். 40 பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். அதற்கு அடுத்தபடியாக நம்முடைய தமிழ் மாநிலம் இருக்கிறது. அந்த அடிப்படையிலே நாம் பெரு முயற்சி செய்து எந்த அளவுக்கு நம்முடைய நிதிநிலை இடம் தருகிறதோ அந்த அளவுக்கு, முடிந்த அளவுக்கு கல்விக்காக ஒதுக்கி வைத்திருக்கிறோம்.

300 மக்கள் வாழ்கின்ற இடத்தில் துவக்கப் பள்ளி ஒன்று இருக்க வேண்டும். இரண்டரை மைல் சுற்றளவில் உயர் துவக்கப் பள்ளி ஒன்று இருக்க வேண்டும். ஐந்து மைல் சுற்றளவில் ஒரு உயர் நிலைப் பள்ளி இருக்க வேண்டுமென்பதைக் கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம். இப்போது துவக்கப் பள்ளிகள் ஏற்படுத்தும் முயற்சியில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறோம்.

1947-ல் நாடு விடுதலை பெற்றபோது இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 33 கோடிதான். 1971-ஆம் ஆண்டு கணக்குப்படி பார்த்தால் இன்றைய நிலையில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் எண்ணிக்கை மட்டும் 38½ கோடி. அன்று இருந்த மக்கள் தொகை எண்ணிக்கையை விட இன்று எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை மட்டும் வளர்ந்திருக்கிறது. 56 கோடி மக்கள் தொகையில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் 38½ கோடி பேர். லிட்ரசி எண்ணிக்கையும் வளருகிறது. இல்லிட்ரசி எண்ணிக்கையும் வளருகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 20

ஆறு வயது முதல் பதினோரு வயதுக்குள் உள்ளவர்களை எப்படியேனும் கல்வி பயிலக் கட்டாயமாகச் சேர்க்க வேண்டுமென்பதற்கான வசதிகளைச் செய்திருக்கிறோம். அந்த வகையில்தான் 300 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு இடத்திலும் ஒரு துவக்கப் பள்ளி அமைக்க வேண்டுமென்ற அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும், தனியார் துறை மூலமாகவும் பள்ளிகள் ஏற்பட வசதிகள், வாய்ப்புகள் செய்து தருகிறோம். அதிலே அதிகமான மாணவர்கள் ஈர்க்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் மதிய உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. 18 லட்சம் பேர் மதிய உணவு பெறத்தக்க அளவுக்கு மூன்றில் ஒரு பகுதியினருக்குச் சலுகை காட்டப்பட்டு வருகிறது.

அதோடு மட்டுமல்லாமல் 1-ஆம் வகுப்பிலிருந்து 3-ஆம் வகுப்பு வரை படிக்கின்ற அவ்வளவு பேருக்கும் தமிழ்ப் பாடப் புத்தகங்கள், மற்றைய பாடப் புத்தகங்கள், எழுதுகோல், மற்றைய கருவிகள் எல்லாம் இலவசமாக வழங்கும் ஏற்பாட்டையும் செய்திருக்கிறோம். பல்வேறு வகைகளில் சலுகைகளைத் தருவது லிட்டரிசி எண்ணிக்கையைப் பெருக்க வேண்டுமென்பதற்காகத்தான். அப்படி வந்தாலும் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை நூற்றுக்குத் 90 பேர்தான் 6 முதல் 11 வயது வரை இதற்குள்ளே உட்படுவார்கள். மாண்புமிகு மதியழகன் அவர்கள் இன்னும் 33 லட்சம் பேர் படிக்காதவர்கள் பாக்கி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆறு வயது, ஏழு வய்து ஆனவர்களைக் கண்டிப்பாகப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கலாம். 8 வயது 10 வயது, 12 வயதுக்கு மேற்பட்டு ஆனவர்களை மறுபடியும் எப்படிக் கொண்டுவந்து சேர்ப்பது? அது நடைமுறையில் மிகமிக சாத்தியமற்ற ஒன்றாகும்.

அவர்களுக்கெல்லாம் அடல்ட் எட்யூக்ஷேன் போன்ற முறைகளில்தான் வசதி ஏற்படுத்த வேண்டும். நாம் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்தவேண்டியது. 6, 7, 8 வகுப்புகளில் உள்ளவர்கள் 100-க்கு 100 சேர்ந்து ட்ராப் அவுட்ஸ் இல்லாத அளவிற்கு அவர்கள் படிப்பை நிறுத்தாத அளவிற்குக் கொண்டுவர பொறுப்புள்ளவர்களாக இருக்கிறோம். 42 சத விகிதம்தான் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் என்றால் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து வகுப்பு படித்துவிட்டு ஆறாவது வகுப்பில் அடியெடுத்து வைத்துவிட்டு நிறுத்திவிடுகிறவர்கள் அதில் 26 பேர்கள். 14 பேர்கள்தான் ஆறாவதில் வந்து



1973 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

படிக்கக்கூடிய நிலை இருக்கிறது. கல்வி கற்றுக்கொடுப்பதில், கல்வியை வளர்ப்பதில், தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அது மேலும் மேலும் வளரும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

கல்வித் தரத்தை வளர்ப்பதில் மாணவர்கள்—ஆசிரியர்கள் விகிதாசாரத்தை ஓரளவிற்குக் குறைக்கவேண்டுமென்று சொன்னார்கள். அப்படிக் குறைப்பது நல்லதுதான். அப்படிக் குறைத்தால் ஆசிரியர்கள் அதிகக் கவனம் செலுத்துவார்கள் என்பதும் சரி. ஆனால் இருக்கிற நிதி வசதியை வைத்து பரவலாகக் கல்வியை பரப்ப வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம் நாடு விடுதலை பெறுகிற வரையில் புறக்கணிக்கப்பட்டு கல்வி வசதிகள் தரப்படாத நிலையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு அத்திட்டங்களின் அடிப்படையில் முயற்சிகளை மேற்கொண்டு கல்வியின் பலனைப் பரவலாக ஆக்கும் முயற்சியினை எடுத்து வரும் சூழ்நிலையில் ஓரளவிற்கு குறிப்பிட்ட தொகையைத்தான் ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். 1966-ல் 44 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டது என்றால் இப்போது 99 கோடி ரூபாய் அளவிற்கு நாம் இழுத்துக்கொள்ள முடிகிற அளவிற்குத்தான் நம் நிதிவசதி இருக்கிறது. நிதி வசதி அதிகப்பட்டால் அதிகமாக ஆக்கலாம். இப்போதுள்ள கணக்குப்படி பார்த்தாலும் ஒரு ஆசிரியருக்கு உயர் தொடக்கப் பள்ளியைப் பொறுத்தவரையில் 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையும், உயர்நிலைப் பள்ளிகளில் 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையும் என்ற அந்தக் கணக்கின் அடிப்படையில் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். 20, 25 என்று கணக்குப் போடுவது எளிது. அதிகமாக ஆசிரியர்களை நியமிக்கும் போது அதிகப் பணம் செலவழிக்க வேண்டிய கட்டம் இருப்பதால்தான் நம் நாட்டில் இருக்கிற வசதியை வைத்து, பண வசதியை வைத்து வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டிய அளவில் இருக்கிறோம்.

தேவைகள் முழுவதையும் நிறைவேற்றுகிற அளவிற்குப் போடுகிற பட்ஜட் அல்ல நம் பட்ஜட். இங்கு மட்டுமல்ல, எல்லா ஸ்டேட் பட்ஜட்களும் அப்படித்தான். அமெரிக்கா போன்ற நாடுகளில் தேவைகளை நிறைவேற்றிவிட்டு மிச்சப் பணத்தை வைத்து பிற நாடுகளுக்கு உதவி செய்கிற அளவிற்கு அவர்கள் வரவு செலவுத் திட்டத்தைப் போடுகிறார்கள். நாம் நமது வருவாயை வைத்துத்தான் செலவிடுகிற தன்மையில் திட்டங்களைப் போடவேண்டியவர்களாக இருக்கிறோம்.

பெருமாள் கோவிலே எடுத்துக்கொண்டால் பட்டாசாரியார் கையில் இருக்கக்கூடிய உண்டக்கட்டி அளவிற்குத்தான் வருகிற பக்தகோடிகளுக்குப் பிரித்துத் தரமுடியும். நான்கு பேர்கள் இருந்தால் நான்கு பேர்களுக்குப் பிரித்துத் தருவது, எட்டு பேர்கள் இருந்தால் எட்டுப் பேர்களுக்குப் பிரித்துத் தருவது, 32 பேர்கள் இருந்தால் கையில் பட்டது மாதிரியும் படாதது மாதிரியும்தான் பிரித்துக் கொடுக்க முடியும். இருக்கிற உண்டை ஒன்றுதான். அதே போன்று நம் நிதிவசதியை வைத்து நாம் கல்வியைப் பரவலாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏற்கனவே இருந்த குறைபாடுகளை மெல்ல மெல்ல போக்கும் வகையில் ஏற்கெனவே இருந்த நிலேயில் மூன்றைக் கவனிக்க வேண்டும்.

more than before என்பதைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.
Better than before என்பதைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.
different than before என்பதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

நாம் கல்வியைப் பரவலாக்கவேண்டியிருக்கிறது. எற்கெனவே உள்ள கல்வியைச் சிறப்புடையதாக ஆக்கவேண்டியிருக்கிறது. ஏற்கெனவே தொடர்ந்து இருந்து வருகிற கல்வி முறையை மாற்றி வாழ்க்கைக்கும் கல்வி முறைக்கும் நேரடித் தொடர்பு ஏற்படும் அளவிற்கு மாறுதல் ஏற்பட்டு அந்த வகையில் கொண்டுவரவேண்டு மென்று முயற்சி செய்யவேண்டிய நிலேயில் இருக்கிறோம். இப்போதுள்ள விகிதாசார அடிப்படை இப்போதுள்ள நம் நிதி வசதிக்கேற்றபடி வைத்திருக்கிறோம். 25 ஆண்டுகளுக்கு முன்பு பள்ளிகளில் இருந்த வசதிகளேவிட இப்போது வசதிக் குறைவு என்று யாரும் சொல்லிவிட முடியாது.

ஆசிரியர்களுக்கு இருக்கிற சலுகைகள் மற்றவைகள் எல்லாம் 25 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட நாளுக்குநாள் குறைந்து கொண்டு வருகிறது என்ற குற்றச்சாட்டையும் யாரும் சொல்லிவிட முடியாது. 25 அல்லது 30 ஆண்டுகளுக்கு முன்பு ஸிலபஸ், பாடத் திட்டங்கள் என்னென்ன இருந்தன என்பதையும் இப்போது இருப்ப தையும் வைத்துப் பார்த்தால் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லே என்ற குறையையும் யாரும் சொல்லிவிட முடியாது. முப்பது ஆண்டு களுக்கு முன்பு இருந்த பள்ளிக்கூட கட்டட வசதியையும் இப்போது உள்ள வசதியையும் வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால் இப்போது வசதி அதிகமாகியிருக்கிறது. 15, 20, 30 ஆண்டுகளுக்கு முன்பு நகர்ந்து சென்றுதான் உயர் கல்வி பெறமுடியும் என்ற கட்டம் மாற்றப்பட்டு



இப்போது ஆறு, ஐந்து, நான்கு மைல்கள் சென்று அந்த வசதியைப் பெறலாம் என்ற அளவிற்கு வசதிகளேப் பெருக்கி இருக்கிறோம். எனவே வசதிக் குறைவு என்று யாரும் சொல்லிவிட முடியாது.

பாட திட்டங்களே எடுத்துக்கொண்டால் ஏற்கெனவே இருந்த பாடத்திட்டங்களேயும் இப்போதுள்ள பாடத்திட்டங்களேயும் வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால் இப்போதுள்ள ஸ்டாண்டேர்ட் குறைவு என்று சொல்லிவிட முடியாது. மாணவர்களின் ஆர்வமும் அக்கரை யும், ஆசிரியர்களின் ஆர்வமும், அக்கறையும் கல்வியின் தரம் உயருவ தற்கு மிக மிகத் தேவைப்படுகிறது. அந்தத் தரத்தினே உயர்த்துவ தற்கான எல்லாவிதமான முயற்சிகளேயும் படிப்படியாக மேற்கொண்டு வருகிறோம்.

கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் பாடத் திட்டங்களில் பல்வேறு மாற்றங்களேச் செய்யவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். ஒன்று முதல் பதிஞேருவது வகுப்பு வரையில் புதுப் பாடத் திட்டங்களே நாட்டுக்கு ஏற்ற வகையில் கல்வித் தரத்தைப் பெறும் வகையில், கல்விமுறை வாழ்க்கைக்குப் பயன்படுகிற முறையில் அந்த முறையில் பாடத் திட்டங்களே மாற்றியமைக்கவேண்டியவர் அந்த முறையில் பாடத்திட்டங்களே மாற்றியமைக்கவேண்டியவர் களாக இருக்கிறோம். அந்தந்தத் துறையிலுள்ள வல்லுநர்களேக் கொண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் பாடத் திட்டங்களே வகுத்து ஒன்று முதல் ஐந்து வரையில், ஆறு முதல் எட்டு வரையில், ஒன்பது முதல் பதினென்று வரையில் என்ற அளவிற்குப் புதுப் பாடத் திட்டங்களே எல்லாம் புகுத்தியிருக்கிறோம்.

ஒன்று முதல் ஐந்து வரையில், கணக்கு, அறிவியல் தவிர, மற்றப் பாடங்களுக்கெல்லாம் புதுத் திட்டங்களே சென்ற ஆண்டிலும் புகுத் தித்திருக்கிறோம். வருகிற ஆண்டு கணக்கு, அறிவியல் பாடங்களேயும் ஒன்றும் வகுப்பிலிருந்து மாற்றி நாட்டுக்கு ஏற்ற வகையில் மாற்றப் பட்டு, குழுவினர் ஆராய்ந்து, அந்த அடிப்படையில் பாடப் புத்தகங் கள் அச்சடிக்கப்பட்டுத் தருகிற நிலேயில், கணக்கு, அறிவியலே சொல்லி கொடுக்கிற ஆசிரியர்களுக்கு பயிற்சி தரவேண்டுமென்று இந்த ஆண்டு கிட்டத்தட்ட நாற்பது லட்சம் ரூபாய் செலவழித்து ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி தருகிற அளவிற்குத் தனிப் பயிற்சி தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு மூன்று மாதங்களுக்கு ஒரு வாரம் இரண்டு வாரங்கள் என்று தரப்பட்டு 54,000 ஆசிரியர்களுக்கு இந்த கணக்கு, அறிவியல் இவற்றில் தனிப் பயிற்சி அளிக்கப்பட்டு இந்த ஆண்டு ஜூனிலிருந்து மூன்றும் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையில் சொல்லிக்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 20

கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கேற்றபடி பல்கலைக் கழகமும் ஒரு தனிக் குழு அமைத்து புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு வகுப்பு, மேல்பட்டப் படிப்பு வகுப்பு இவற்றிற்கு நாட்டுக்கு ஏற்றபடி, மற்றப் பல்கலைக் கழகங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து அதற்கேற்றபடி பாடத் திட்டங்களை மாற்றி புது ஸிலபஸ் கொண்டுவரப்பட்டு புகுமுக வகுப்பில் புகுத்தப்பட்டிருக்கிறது.

படிப்படியாக மேல் வகுப்புகளில் புகுத்தி தரத்தை உயர்த்தும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஐந்தாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்றுக் கொடுக்கலாம் என்பதை மாற்றி மூன்றுவது வகுப்பில் இருந்தே கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டு மென்ற முறையில், வாயளவில் சொல்லிக் கொடுத்தால் போதும் மூன்றுவது வகுப்பில் என்பதை மாற்றி ஏட்டளவில் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்று அதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டு வருகிறது. அதற்குத் தகுந்தபடி ஆங்காங்கு பயிற்சிக் கூடங்கள் நிறுவப்பெற்று கணக்கு, அறிவியல் என்று எல்லாத் துறைகளிலும் தரத்தை ஓரளவு மேலும் உயர்த்தவேண்டுமென்ற எண்ணம் இருந்துவருகிறது.

எந்த வகையில் மாற்ற வேண்டும், எந்த வகையில் வைக்கவேண்டும் என்பது அரசியல் வாதிகளாகிய நாம் முடிவு செய்யவேண்டிய நிலையில் இல்லை. வல்லுநர்கள்தான் இதற்கான மாற்றங்களைச் செய்யவேண்டும் சாதாரணமாக வேறு எந்தத் துறையில் மாற்றம் செய்வதாக இருந்தாலும் ஒன்றிரண்டு மாதங்களில் மாற்றத்தைச் செய்து விடலாம். ஆனால் கல்வித் துறையில் எந்த மாற்றத்தையும் பத்து ஆண்டுகள் கழித்துத்தான் பலன் காணத்தக்க அளவிற்கு அதற்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்து மாற்றங்களைச் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம். அதற்குப் பல்கலைக் கழகங்களின் கல்வித் துறையைப் பொறுத்து பல்கலைக் கழகங்கள் அதற்கு அனுமதி அளிக்க வேண்டும். முழு முயற்சியையும் அவர்கள் எடுக்கவேண்டிய அளவிற்கு இருக்கிறது.

பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில் கல்வித் துறையில் அதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதாசாரம் குறைந்திருந்தால் மிகச் சிறந்த கல்வி வந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. ஆசிரியர்களுக்கு அக்கறையும் ஆர்வமும் அதற்கேற்றபடி அமைதல் வேண்டும். மாணவர்கள் நன்கு கற்றுக்கொள்கிற சூழ்நிலை வரவேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன்.



1973 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சென்ற ஆண்டு கணக்குப்படி நூற்றுக்குக் குறைவாக இருந்து 6, 7, 8, 9, 10, 11 வகுப்புகளிலும் சேர்ந்து நூறு மாணவர்களுக்குக் குறைவாக இருக்கிற பள்ளிக்கூடங்கள் மட்டும், எக்கானமி ஸ்ட்ரெங்த் கூட இல்லாமல் நடைபெறுகிற பள்ளிக்கூடங்கள் 55 இருக்கின்றன. அதிலே ஒரு வகுப்பிலே 6—7—8 மாணவர்கள்தான் இருக்கிறார்கள். சில இடங்களில் 9—10—11 வகுப்புகளில் 4—5—6 மாணவர்கள் தான் இருக்கிறார்கள். உள்ளபடியே அந்தப் பள்ளி களிலே 6 மாணவர்களை வைத்து ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பதால், 1:35 விகிதத்தில் இருக்கும் மாணவர்களைவிட கல்வியில் சிறந்து காணப்படுகிறார்களா என்று பார்த்தால், அந்தக் கணக்கைத் தனியாகப் பார்க்கிறபோது 8 மாணவர்களுக்குச் சொல்லி கொடுத்த இடத்திலும், 120 மாணவர்களை 2 வகுப்புகளாக வைத்துக் கொண்டு சொல்லிக் கொடுத்த இடத்திலும் ரிசல்ட் ஒரே அளவுக்குத் தான் இருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்றால் அவரவர்கள் காட்டுகிற அக்கறையைத்தான். அதற்காக எண்ணிக்கையைக் குறைக்க வேண்டாம் என்று சொல்லவில்லை.

இப்போதுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப, நிதி வசதிகளுக்கு ஏற்ப நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். இந்த நிலைமைகளுக்குப் பெற்றோர்களும் காரணமாக இருக்கிறார்கள். ஆசிரியர்களிடத்தில் மாணவர்கள் இருப்பதை விட பெற்றோர்களிடத்தில் ஒரு மாணவன் அதிக நேரம் இருக்கிறான். ஒரு மாணவன் 4½ மணி நேரம் 5 மணி நேரம் தான் பள்ளியில் தங்குகிறான் என்றால் மீதியுள்ள 18–19 மணி நேரம் பெற்றோர்களுடன் தங்கவேண்டிய கட்டம் ஏற்பட்டிருக் கிறது. சமுதாயச் சூழ்நிலையில் பெற்றோர்களின் அக்கறை எந்த விதத்தில் இருக்கிறது என்பதை இந்த உலகம் முழுவதும் காணலாம். இந்தியா முழுவதிலும் காணலாம், நம்முடைய நாட்டிலே கூடக் காணலாம். ஆசிரியர்கள் 4–5 மணி நேரம் எவ்வளவு தான் பக்குவப் படுத்தினாலும், 18 மணி நேரம் பெற்றோர்களுடன் இருப்பதால் அவர் கள் மறுபடியும் கெட்டு மறுநாள் வருகிறார்கள். பிறகு மறு நாள் பள்ளியில் பக்குவப்படுத்தப்பட்டு வீட்டிற்குச் சென்று மறுபடியும் திரும்பி ஆரம்ப நிலைக்கு, கவலையேற்றம் மாடு மாதிரி இருந்த இடத் திலேயே போய் போய் ஒரே இடத்தில் இருக்கிற மாதிரி, இருக் கிறார்கள். பெற்றோர்களுக்கு அக்கறை இருக்க வேண்டும். பெற்றோர் கள்–ஆசிரியர்கள் சங்கம் ஒவ்வொரு பள்ளியிலும் இருக்கிறது. அதற்காக அதிகாரிகள் தனியாக நியமிக்கப்பட்டு ஆங்காங்கு இருக் கின்றனர்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 20

கல்லூரிகளைப் பொறுத்தவரையில் மாணவர்கள் மத்தியில் அமைதியின்மை அடிக்கடி ஏற்படுகிறது. இதற்கு அரசியல் காரணங்கள் பல இருந்தாலும், பல இடங்களில் வேறு காரணங்களாலும் தகராறு ஏற்படுகிறது. கல்லூரிகளில் ஏற்படும் பேரவைத் தேர்தல்களில் ஏற்படும் தகராறுகள், ஒரு கோஷ்டிக்கும் இன்னொரு கோஷ்டிக்கும் இடையே ஏற்படும் தகராறுகள், மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே ஏற்படும் மனக்கசப்புகள், அதன் காரணமாக ஏற்படும் கலவரங்கள், ஒருவருக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படும் தனிப்பட்ட கலவரங்கள், ஒரு ஜாதிக்கும் இன்னொரு ஜாதிக்கும் ஏற்படும் கலவரங்கள், ஒரு மாணவனுக்கும் ஒரு கண்டக்டருக்கும் ஏற்படும் தகராறு என்றாலும், அந்தத் தகராறு மாணவ ஜாதிக்கும், கண்டக்டர் ஜாதிக்கும் இடையே அது தகராறாக மாறி விடுகிறது. அண்மையில் ஒரு கண்டக்டர் ஒரு மாணவனின் காலை மிதித்து விட்டான் என்ற காரணத்திற்காக அது மாணவ ஜாதிக்கும் கண்டக்டர் ஜாதிக்கும் இடையே ஒரு சண்டையாக மாறி கல்லூரி மூடும் நிலைக்கு வந்து, 4 நாட்களுக்குப் பிறகு அவர்களிடையே சமரசம் ஏற்பட்டு கல்லூரி திறக்கும் நிலையேற்பட்டது.

இதற்காக ஒவ்வொரு கல்லூரியிலும் முன்கூட்டியே இத் தகராறுகளைத் தீர்த்துவிடும் அளவிற்கு ஒவ்வொரு கல்லூரியிலும் ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென்று ஒவ்வொரு கல்லூரிக்கும் பல்கலைக் கழகத் துணை வேந்தர் மூலமாகவும், கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலமாகவும் வேண்டுகோள் அனுப்பப்பட்டிருக்கிறது. கல்லூரித் தலைவரைத் தலைவராகக் கொண்டு, ஒரு சீனியர் ப்ரொபசர் மாணவர்களுடன் நெருங்கிப் பழகுபவர் அதிலே போட்டு, அதோடு ஓல்ட் பாயிஸ் அசோசியேஷனில் இருந்து பழைய மாணவர் ஒருவரையும் போட்டு, அதிலே பெற்றோர்கள் சங்கத்தைச் சார்ந்த பிரதிநிதியையும் போட்டு, அந்தக் கல்லூரியில் இருக்கும் மாணவர் மன்றத்தின் தலைவர் செயலாளர், மாணவர்கள் பிரதிநிதி ஆகியோரைக் கொண்டு ஒரு குழு இருந்தாலும், எந்த ஒரு பிரச்சினையையும் முதலில் அந்தக் குழு ஆராய்ந்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை அரசுக்கோ, அல்லது அமைச்சருக்கோ தெரிவித்து தக்க நடவடிக்கைகளை எடுக்கச் செய்யலாம். அந்தக் குழுவினிடத்தில் பிரச்சினைகள் வந்தால் உடனடியாக அதற்குத் தீர்வு காண முடியும். ஆனால் அந்தக் குழுவினிடத்தில் போகாமலேயே ஒரு பிரச்சினை எழுந்த உடனே கிளர்ச்சிகள் மற்றவற்றில் ஈடுபடுகிற காரணத்தால் பல விதமான சங்கடங்கள் ஏற்படுகின்றன. இருப்பினும் 2 ஆண்டு காலமாக



1973 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆங்காங்கு இப்படிப்பட்ட அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, ஆங்காங்கு பிரச்சினைகள் ஆராயப்பட்டு தடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் பல நன்மைகளை நாம் பெற்று இருக்கிறோம்.

நாம் கல்விக்காக செலவழிக்கும் பணத்தில், கல்லூரிக்குச் செலவழிக்கும் வகையில் இந்த மாநிலத்தில் எந்தெந்த அளவுக்கு அதைச் சீர்திருத்த வேண்டுமென்பதற்காக பல்வேறு துறைகளில் திட்டக்குழு அமைக்கப்பட்டு, அடுத்த 2 ஆண்டுகளில் 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2 ஆண்டுகளிலும், 5-ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 2 ஆண்டுகளிலும் பயன்படுத்தத்தக்க அளவுக்கு பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து அறிக்கை அளிக்க மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் ஒவ்வொரு துறையைப் பற்றியும் கருத்து வழங்கியிருக்கிறார்கள். கல்லூரித் துறையைப் பற்றி என்னென்ன மாற்றங்கள் செய்யலாம் என்பதற்காக பல்வேறு நிபுணர்கள் இருக்கிறார்கள். அகில இந்திய அளவில் வல்லுநர்கள் இடம் பெற்று இருந்தார்கள். டாக்டர் திரு. மத்தூர் அவர்கள் இடம் பெற்று இருந்தார்கள். இராமச்சந்திரன், ஐ.ஐ.டி. டைரக்டர் இடம் பெற்று இருந்தார்கள். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இடம் பெற்று இருந்தார்கள். வல்லுநர்கள் அதிலே பங்கு கொண்டு ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அந்த அறிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் என்னென்ன மாற்றங்கள், 12 ஆண்டு காலமாகச் செய்யலாமா என்ற ஒரு கருத்தையும் தந்து இருக்கிறார்கள். அவற்றை ஆராய்ந்து நிதி நிலைக்கேற்ப அதை எந்த முறையில் நடைமுறைப் படுத்தலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

அவர்கள் எடுத்துச்சொன்ன விதத்தில் நம் மாநிலம் ஓரளவுக்குக் கல்விச் சலுகை தந்து, ஊக்கம் தருகிற மாதிரி இருக்கிறது. இப்போது இருக்கிற கணக்குப்படி பார்த்தால், தொடக்கப் பள்ளியைப் பொறுத்தவரையில் 1–5 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு அரசு செலவழித்தது சென்ற ஆண்டு கணக்குப்படி பார்த்தால் ஒவ்வொரு மாணவனுக்கும் அரசு செலவழிக்கும் பணம் ரூ. 61.70 காசு.

உயர் தொடக்கப் பள்ளியில் 6–7–8 வகுப்பில் படிக்கும் மாணவன் ஒவ்வொருவருக்கும் அரசின் சார்பாக செலவழிக்கப்படும் தொகை ரூ. 111.40 காசு—சராசரியாக ஒரு ஆண்டுக்கு. அதே மாதிரி 9–10–11 உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 244.80 காசு செலவழிக்கிறோம்.

புகுமுக வகுப்பில் கலைப் பிரிவு மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 380 செலவழிக்கிறோம். புகுமுக வகுப்பில் அறிவியல் பிரிவு மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 500 செலவழிக்கிறோம். பட்டப் படிப்பு கலைப் பிரிவு மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 410 செலவழிக்கிறோம் (பி.ஏ. வகுப்பு). பி.எஸ்.ஸி. அறிவியல் எடுத்துப் படிக்கிற ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ. 600 செலவழித்து படிப்புச் சொல்லிக் கொடுக்கும் நிலையில் இருக்கிறோம். பட்ட மேற்படிப்பு வகுப்பில் (எம்.ஏ.) கலைப் பிரிவில் படிக்கிற மாணவர் ஒருவருக்கு ரூ. 775 செலவழிக்கிறோம். பட்டமேற்படிப்பு (எம்.எஸ்.ஸி) அறிவியல் எடுத்துப் படிக்கும் மாணவன் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,120 செலவழிக்கிறோம்.

பாலிடெக்னிக்கு படிக்கும் மாணவன் ஒவ்வொருவருக்கும் ரூ. 2,880 செலவழிக்கிறோம். முதல் ஆண்டு, இரண்டாம் ஆண்டு, மூன்றும் ஆண்டு ஆகிய மூன்று ஆண்டுகட்கும் ஒவ்வொரு ஆண்டுக்கும் இந்தத் தொகை செலவழிக்கிறோம்.

போஸ்ட்-கிராஜுவேட் படிக்கும் மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 1,120 தான் செலவழிக்கிறோம் என்றாலும், பாலிடெக்னிக்கில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ. 2,880 செலவழிக்கிறோம்.

அதே மாதிரி வேளாண்மைக் கல்லூரியில் படிக்கும் மாணவன் ஒருவனுக்கு ரூ. 7,000 செலவழிக்கிறோம்.

பொறியியல் கல்லூரியில் படிக்கும் மாணவன் ஒருவனுக்கு ரூ. 8,565 ஒவ்வொரு ஆண்டும் செலவழிக்கிறோம்.

மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மாணவன் ஒவ்வொருவனுக்கும் ரூ. 10,000 செலவழிக்கிறோம்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இவ்வளவு பணம் செலவழிக்கிறோம் என்றாலும், அதை அவர்கள் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று நினைக்கவில்லை. அவர்கள் இதன் பொருட்டு நாட்டுக்குப் பயன்படவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த முறையை வகுத்து, ஒரு அடிப்படையில் இவைகளையெல்லாம் செய்து, பல்வேறு திட்டங்களை வைத்து இருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டு கணக்குப் பார்த்தாலும் கூடுதல் செலவு செய்யும் வகையில் ஓரளவுக்கு அந்தக் கல்வியின் தரத்தையும் தன்மையையும் அதிகப்படுத்தும் வகையில் பெருக்கிக் கொண்டு வருகிறோம் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.





தமிழ்நாட்டில் தமிழைப் பாடமொழியாக ஆக்குவதிலே திரு. மதியழகன் அவர்கள் ஒரு கருத்தைக் கொடுத்தார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் வேறு ஒரு கருத்தைச் சொன்னார்கள். இரண்டு வேறு கருத்துக்கள் இருக்கின்றன. எல்லா வகுப்புகளிலும் தமிழே தமிழகத்தில் இருக்கும் பள்ளிகளில், கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் பாடமொழியாக இருக்க வேண்டும், பிற மாநிலங்களிலிருந்து வந்தவர்கள் ஆங்கிலம் கற்கவும், மற்றவர்கள் தமிழிலே படிக்க வேண்டுமென்று திட்டமிட்டு இருந்தோம். அதற்குப் பிறகு தமிழ் நாட்டிலே தமிழ்தான் பாடமொழி என்று வைத்தோம்.

தமிழ்தான் பாடமொழியாக இருக்க வேண்டுமென்று ஒரு கிளர்ச்சி கூட இருந்தது. ஆனால் அந்தக் கிளர்ச்சி முடிந்து, அரசினர் கல்லூரிகளில் தமிழ்தான் பாடமொழி என்று வந்தவுடன் ஆங்கிலமும் இருக்க வேண்டுமென்று சொல்லி கிளர்ச்சி நடைபெற்றது. தனியார் கல்லூரிகளில் ஆங்கில வகுப்பு இல்லாமல் எங்கள் கல்லூரி வைக்கக்கூடாது, ஆங்கிலம் கற்க வழி இருக்க வேண்டுமென்று சொல்லி பல கல்லூரிகள் ஆங்கிலத்தை வைத்திருந்தன. அரசினர் கல்லூரிகளில் மட்டும் தமிழ் பாடமொழி என்று இருந்தது. தனியார் கல்லூரிகளை நாம் கட்டுப்படுத்த முடியாது. பல்கலைக்கழகம் தான் வேண்டுகோள் விடுத்தது. டாக்டர் லட்சுமண சுவாமி முதலியார் கருத்துப்படி சில கல்லூரிகளில் ஒரு வகுப்பு ஆங்கிலம் வைக்க முடிவு செய்யப்பட்டது. குறிப்பாக தென் மாவட்டங்களில் இருக்கும் கல்லூரிகள் இதை ஏற்றுக்கொள்ள முன் வந்தன. வடமாநிலத்தில் இருக்கும் கல்லூரிகளில், குறிப்பாக சென்னையில் இருக்கும் கல்லூரிகள் முன் வரவில்லை.

பல்கலைக்கழகத் துணை வேந்தர் மூலமாக முயற்சி செய்யவேண்டியிருக்கிறது. அரசு கல்லூரிகளில் நாமே ஏற்று நடத்தியதன் காரணமாக அரசு ஆணையிட்டு காரியங்களைச் செய்தது. ஆனால் மாணவர்கள் பெரும் கிளர்ச்சி செய்த பிறகு அவர்களைச் சமாதானம் செய்கின்ற முறையில் ஓரளவுக்குத் தன்மைகள் வருவதற்கு, டாக்டர் ஏ. எல். முதலியார், அவர்களைத் தலைவராகக் கொண்டு, டாக்டர் சந்திரன் தேவநேசன், திரு. தாமோதரன் இன்னும் மற்றவர்களைக் கொண்ட குழு அமைத்து யோசனை சொல்லச் சொன்னோம். அதைத் தான் அரசு கல்லூரிகளில் ஒரு வகுப்பாவது கட்டாயம் ஆங்கிலத்திலிருக்க வேண்டும் என்ற அளவுக்குக் கொண்டு வந்தோம். அந்த முறைகளில் தமிழில் பயில்கிறவர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் தரவேண்டும் என்றுதான் புகுமுக வகுப்பில் அவ்வளவு பேருக்கும் இலவசப் படிப்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 20

பாக ஆக்கிவிட்டு, தமிழில் எடுத்து பாடம் படிக்கின்ற மாணவர்களுக்கு புத்தகங்கள் வாங்க 50 ரூபாய் என்று வைத்தோம். அது இன்செண்டிவாக பயன்பட வேண்டும் என்பதற்காக வைத்தோம்.

அதே மாதிரி பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டப் படிப்பு படிக்கின்றவர்களுக்கு, தமிழில் படித்தால் 180 ரூபாய் சலுகை வழங்கி வருகிறோம். அந்த வகையிலே 1972–73-லே புகுமுக வகுப்பில் 21,224 பேர் தமிழில் பயின்றார்கள். அதே மாதிரி பட்டப் படிப்பில் 16,787 பேர் தமிழில் பயின்றார்கள். அந்த வகையிலே ஆங்கிலத்திற்கான இடங்களில் 56 ஆயிரத்துச் சில்லறை இடங்கள் இருக்கும்போது 21,244 இடங்கள் தமிழ் எடுத்துப் படிக்கின்ற அளவுக்கு சூழ்நிலை புகுமுக வகுப்பிலே ஏற்பட்டது. அந்த முயற்சிகளும், மற்றவைகளும் மெல்ல மெல்ல மேன்மேலும் வளரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கென வாய்ப்புகளையும், வசதிகளையும் ஏற்படுத்தும்போது, தமிழிலேயே படித்து தேறி வருகின்றவர்களுக்கு அரசாங்கம் பல்வேறு சலுகைகளை மேற்கொள்ளும் சூழ்நிலை ஏற்படும்போது, அப்படிப் படித்துவந்தால் தங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று நிச்சயமாக ஏற்படும்போது கட்டாயம் படிப்பார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

தமிழில் எடுத்துப் படிப்பவர்கள் ஓரளவுக்கு அதிகமான அளவில் வெற்றி பெறுகின்ற நிலைமை இருக்கின்றது. பல இடங்களில் இருந்து வந்திருக்கின்ற அறிக்கைகளைப் பார்க்கும்போது, ஆங்கிலத்தில் படித்து தேர்வு எழுதியவர்கள் வாங்குகின்ற மதிப்பெண்களை விட, தமிழில் படித்து தேர்வு எழுதியவர்கள் அதிகமான மதிப்பெண்கள் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அதுவும் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். இவைகள் மேன்மேலும் வளரும்போது, நல்ல சூழ்நிலைகள் ஏற்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கிட்டத்தட்ட 97 கோடி ரூபாய் அளவுக்கு நாம் கல்வித் துறைக்காகச் செலவழிக்கிறோம் என்றாலும் கூட, சாதாரணமாக பள்ளி, கல்லூரி, தொழிற் கல்வி ஆசிரியர்கள் ஊதியத்திற்கும், பள்ளி கல்லூரி பல்கலைக்கழக மான்யங்களுக்கு மட்டுமே 80 கோடியே 66 லட்ச ரூபாய் செலவழிக்கப்படுகிறது. மற்றைய செலவினங்களுக்கு மற்றத் தொகை செலவழிக்கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கு மொத்தமாக செலவழிக்கப்படுவது



1973 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

5 ஆண்டுகளுக்கு 1 கோடி ரூபாய் இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மதியழகன் குறிப்பிட்டார்கள். பல்வேறு தலைப்புகளில் கல்லூரி, உயர்நிலைப் பள்ளி, துவக்கப் பள்ளிகளுக்கு எல்லா வகையிலும் சேர்த்து 1973–74க்கு மட்டும் கட்டிடம் கட்ட ஒதுக்கியிருக்கிற பணம் ரூ. 3,32,00,000. சென்ற ஆண்டும், அதற்கு முன் ஆண்டும் ரூ. 2 கோடி சில்லறை என்ற அளவில் இருந்தது.

திரு. கே. ஏ. மதியழகன்: நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் வரையில் 1 கோடி ரூபாய் என்று அமைச்சர் அவர்களுடைய குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 2,700 உயர்நிலை பள்ளிகளுக்கு கட்டடம் கட்டுவதற்கு 5 வருடத்திற்கு 1 கோடி ரூபாய் இவ்வளவு பெரிய பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கிறது. இதில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம் என்று வற்புறுத்தத் தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கட்டடங்களுக்கு அதிகம் ஒதுக்க வேண்டும் என்பது தான் அரசின் விருப்பமும். ஆனால், பொதுவாகவே சண்டைக் காலம் வந்த போதெல்லாம் புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டாம் என்ற உத்தரவு வந்தது. பாகிஸ்தான் போர் வந்த போதும் சரி, பங்களா தேஷ் போர் வந்தபோதும் சரி, புதிய கட்டடங்கள் கட்ட வேண்டாம். அதற்கு பணம் ஒதுக்க வேண்டாம் என்று உத்தரவு வந்தது. இப்போது கட்டிடங்கள் கட்ட அதிகப்படியாக ஒதுக்கப்படுகின்ற நிலைமை வேண்டும் என்று நாங்களும் வாதிட்டு, கேட்டு வருகின்றோம். இந்த ஆண்டு உயர்நிலை பள்ளிகளுக்கு எல்லா கட்டடங்களுக்கும் சேர்த்து ரூ. 3,32,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்றால், எந்தவகையிலிருந்து பிரித்து எடுக்கவேண்டும் என்ற பிரச்சினை வரும்போது, பொதுமக்களுடைய ஒத்துழைப்பு, அவரவர்கள் கொடுக்கிற நன்கொடையுடன் ஈட்டுறுதி மான்யத்தின் மூலமாக ஈட்டுத் தொகை தந்து, அந்த அடிப்படையில் ஆங்காங்கு கட்டிடங்கள் எழுப்புகிற முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

துவக்கப் பள்ளியைப் பொறுத்தவரையிலும் கட்டடங்களை விரிவுபடுத்த வேண்டுமென்பதற்காகத் தனி வாரியம் அமைத்து, ஆயுள் காப்பு கழகத்திடம் நிதி வசதி பெற்று, ஒரே தடவையில் 7,000-த்து சில்லறை கட்டிடங்களுக்கு கட்டிடம் இல்லாமல் இருக்கிறது—அந்தக் கட்டிடங்களை கட்டிவிட்டு இந்தத் தொகையைத் திருப்பித் தரலாம் என்றிருக்கிறது. எல்.ஐ.சி. ஒப்புதல் கிடைத்த பிறகு நல்ல

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 20

சூழ்நிலைகள் ஏற்படும் என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு வந்த பிறகு அந்தக் கட்டிடங்கள் கட்டுவதை நாம் எடுத்துக் கொண்டால், துவக்கப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் 7,000 பள்ளிகளுக்கும் ஓரிரண்டு ஆண்டுகளில் கட்டிடங்களை கட்டி முடித்துவிடலாம். இல்லாவிட்டால் 7, 8 ஆண்டுகள் ஆகும். அதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டு வருகிறது.

கன்னிமரா நூலக நியமனத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். நூலகத்தில் இருக்கிற திரு. சுந்தரபாபு என்பவர் தகுதியைக் கவனிக்காமல் திரு. சுந்தரராஜன் கன்னிமரா நூலகராக நியமிக்கப்பட்டார் என்று குற்றம் சாட்டினார்கள். கன்னிமரா நூலகர் பதவிக்கு அந்த நூலகத்தில் டெபுடி லைப்ரேரியனாக இருப்பவரைத்தான் தேர்ந்தெடுக்க முடியும். இதுதான் விதி. திரு. சுப்பு குறிப்பிட்ட திரு. சுந்தரபாபு, நூலகர் பதவிக்குக் கீழேயுள்ள பாகுபாடு உதவியாளர் (கிளாசிபிகேஷன் அசிஸ்டெண்ட்) என்ற பதவியில் இருப்பவர். கன்னிமரா நூலகத்தில் பணியாற்றுபவர்களில் ஜூனியர் பணியாளர்களில் இவர் ஒருவர். உதவி நூலகர் பதவிக்கே இவரும் திரு. சுந்தரராஜனும் பொதுத் தேர்வாணைக்குழு (பப்ளிக் சர்விஸ் கமிஷன்) முன்பு விண்ணப்பம் செய்து கொண்டபோது, திரு. சுந்தரராஜன் உதவி நூலகராக கமிஷனால் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவ்வுத்திரவை எதிர்த்து திரு. சுந்தரபாபு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அது நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, உதவி நூலகர் பதவியை வகிக்காத ஒருவர், அப்பதவிக்கு அருகதையற்றவர் என்று சர்வீஸ் கமிஷனால் நிராகரிக்கப் பட்ட ஒருவர் என்பதனால் நூலகர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட வில்லை. கீழ்ப் பதவிக்கே தகுதியற்ற ஒருவர் என்று சர்வீஸ் கமிஷனால் நிராகரிக்கப்பட்டவர். ஆகவே, மேல் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட வில்லை என்பது தான் இருக்கக்கூடிய நிலைமை, திரு. சுந்தரபாபு பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று கூறினார்கள். திரு. சுந்தர ராஜனும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்தான் என்று சொல்லப் படுகிறது.

* திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அந்தப் பதவிக்குக் கோரப் பட்டிருக்கின்ற குவாலிபிகேஷன்ஸ் :—

M.A., Diploma in Library Science.

At least two years experience in library techniques and organisation.



1973 மார்ச் 20] [திரு. க. சுப்பு]

திரு. சுந்தரபாபுவிற்கு இருக்கக்கூடிய குவாலிபிகேஷன்ஸ்

M.A. High Second Class.

B.Sc. High Second Class.

B. Libr. Science, High Second Class.

Diploma in Anthropology (Distinction).

Typewriting (English) Higher grade.

Commerce Higher grade.

Commercial Geography Higher grade.

Banking Higher grade.

Hindi-Madyama.

Working knowledge in 14 languages.

14 years experience in Connemera Public Library.

4 years and 6 months as librarian in the Directorate of Tamil Development.

Son of a political sufferer. இப்போதும் suffer பண்ண வேண்டியிருக்கிறது.

Application recommended and forwarded by Director of Tamil Development.

Belongs to Backward Class.

Permanent incumbent of Tamil Nadu Educational Subordinate Service

இதெல்லாம் அங்கேயிருப்பவர்களுக்குத் தெரியும் அங்கே டைரக்டராக இருக்கும் திரு. தில்லைநாயகத்தை, திரு. சுந்தரபாபுவை ஓவர்லுக் செய்து, அவரை பிரமோட் பண்ணியிருப்பதாகவும் இவர் மேலே வந்துவிடக்கூடாது என்பதற்காக அப்ளிகேஷனை அனுப்பக் கூடாது என்று செய்திருப்பதாகவும், இது குறித்து முதலமைச்சருக்கு அப்பீல் செய்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இந்தச் சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். இவ்வளவு குவாலிபிகேஷன் உள்ளவரைப் புறக்கணிப்பது சரியான நிர்வாகத்துக்கு உதவியாக இருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பதில் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவேண்டாம். நிதானமாகப் பரிசீலித்துப் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[1973 மார்ச் 20

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதைப்பற்றி பரிசீலனை செய்யவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் தெரிவித்தார்கள். பரிசீலிக்கக் கூடாது என்பது எங்கள் எண்ணம் அல்ல. திரு. சுந்தரராஜன், திரு. சுந்திரபாபு இருவரும் விண்ணப்பித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு சர்வீசும், தகுதியும் இருக்கவேண்டுமென்ற எண்ணம் திரு. சுப்பு அவர்களுக்கும் இருக்கலாம்; எங்களுக்கும் இருக்கலாம். ஆனால் சர்வீஸ் கமிஷனில் அவர்கள் தேர்ந்தெடுக்கின்ற முறைப்படி திரு. சுந்தரராஜனை இந்தப் பணிக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் திரு. சுந்திரபாபு வழக்குத் தொடர்ந்து அந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. வழக்கிலே திரு. சுந்திரபாபு தனக்குச் சாதகமான காரணங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருப்பார். அதையெல்லாம் தெரிந்த பின்புதான் வழக்கைத் தள்ளுபடி செய்திருப்பார்கள்.

திரு. க. சுப்பு: திரு. சுந்தரராஜனைத் தேர்ந்தெடுக்கும்போது திரு. சுந்திரபாபுவின் அப்ளிகேஷன் அனுப்பப்படவில்லை. அப்ளிக்கேஷனை அனுப்பாமல் இங்கே வைத்துவிட்டார்கள். எனவேதான் வேறு சரியான ஆள் இல்லை என்று சொல்லித்தான் சுந்தரராஜனை நியமித்திருக்கிறார்கள். அவருடைய அப்பாயின்ட்மென்ட் ஆர்டரிலே கூட அதைச் சொல்லியிருக்கிறார்கள். வேண்டுமானால் அதைப் படித்துக்காட்டுகிறேன்.

Under Rule 10 (a) (i) of the General rules for the Tamil Nadu State and Subordinate Services, Thiru A. M. Sundararajan, Deputy Librarian, Connemera Public library, Madras in the Tamil Nadu General Subordinate Service, is appointed temporarily as Librarian, Connemera Public Library in the Tamil Nadu Educational Service with effect from the date of his taking charge.

The above appointment is ordered under emergency provisions as there is no approved candidate available for regular appointment. இதற்குக் காரணம் திரு. சுந்திரபாபுவின் அப்ளிகேஷனை அனுப்பவில்லை. சுந்திரபாபு முழுத் தகுதி பெற்றிருந்தும் அவருடைய அப்ளிக்கேஷன் அனுப்பப்படாததினால் சுந்தரராஜனைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். நான் அரசாங்கத்தை குற்றம் சொல்லவில்லை. அங்கே ஏற்பட்ட நிலைமை இது. அதனால் இதை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.



1973 மார்ச் 20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த வழக்கைப் பொறுத்தவரையில், சுந்திரபாபு அவர்கள் இந்த காரண காரியங்களை எல்லாம் நீதிமன்றத்திலே எடுத்துச் சொல்லியிருப்பார். அவைகளை எல்லாம் பரிசீலித்தப் பிறகுதான் அவருடைய வழக்கைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். நான் இதை மறுபரிசீலனை செய்வதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் ஏற்பட்டிருக்கிற நிலைமை இது. சர்வீஸ் கமிஷனிலிருந்து சுந்தரராஜனைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இவர்கள் இருவருமே பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான். அதில் தகராறு இல்லை. இவர்கள் இருவருடைய விண்ணப்பங்களும் சென்றனவா இல்லையா என்பதை தனியே பரிசீலனை செய்யலாம். ஆனால் நியமனம் முறைப்படி நடந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, சட்டக் கல்லூரி நியமனம்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சில குறைபாடுகளைச் சொன்னார்கள். 1972 ஜூலை மாதத்தில் சட்டக் கல்லூரியில் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இப்போது இருக்கின்றபடி டைரக்டர் ஆஃப் லீகல் ஸ்டடீஸ் ஒருவர், ப்ரொபஸர்ஸ் 3 பேர், ஜூனியர் ப்ரொபஸர்ஸ் 14 பேர். அவர்களில் 7 பேர் டெம்பரரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பார்ட் டைம் லெக்சரர்ஸ் 42 பேர். அவர்களில் 20 பேர் டெம்பரரியாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். மொத்தமாக உள்ள 60 பேர்களில் 29 பேர் டெம்பரரியாக இருக்கிறார்கள். மொத்தத்தில் எம்.எல். படித்தவர்கள் 25 பேர். பி.எல். பஸ்ட் கிளாஸ் 3 பேர், பி.எல். தேர்ட் கிளாஸ் 5 பேர். டெம்பரரியாக நியமிக்கப்பட்டிருக்கும் இடங்களுக்குக் கூட மீண்டும் சர்வீஸ் கமிஷன் விளம்பரம் செய்து, தேர்ந்தெடுத்து முறைப்படி நியமிக்கும். இப்போது தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருப்பவர்கள் கூட மனுச் செய்து கொண்டவர்களில் சிறந்த தகுதியுடையவர்களே. அதனால் இந்த நியமனங்களில் எந்தவிதமான தவறுதலும் நடந்துவிடவில்லை என்பதைக் குறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் திரு. ஏ. ஆர். ஜெனகன் நியமனம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் 1962-ல் தலைமை ஆசிரியராக இருந்தார். பின்னால் 1965-ல் அன்றிருந்த காங்கிரஸ் அரசு காலத்தில் அவர் சி.இ.ஓ.க்கு அரசிதழ் பதிவு பெற்ற பி.ஏ. ஆக நியமிக்கப்பட்டார். அதன் பின்னால் அவர் 1970-ல் சட்டக்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 20

கல்லூரியில் செக்ரட்டரியாக நியமிக்கப்பட்டார். இப்போது அவருடைய கல்வித் தகுதிகள்—பி.ஏ., பி.எஸ்.சி., பி.டி. அதற்குப் பின்னால் அவர் பி.எல். தேர்ச்சி பெற்றார். பின்னால் 1972-ல் எம். ஏ. தேர்ச்சி பெற்றார். இப்போது எம்.எல். கோர்ஸ் படித்துக் கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. இவ்வளவு தகுதியும் பெற்றவர் இப்போது லெக்சரராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அப்படி இருந்தும் வேறு நபர் கிடைக்காததால் இவர் அந்தப் பதவிக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறார். இதுதான் நிலைமை. ஆகவே, முறைதவறி எதுவும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஹையர் கிரேடு ஆசிரியர் பதவிகளில் இருக்கின்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நீண்ட நெடுங்காலமாக செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அந்தப் பதவிக்கான இடம் காலி இல்லாததால் அவர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர் பதவியிடங்களில் நியமிக்கப்பட்டார்கள். ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கான சம்பளம்தான் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. அப்படிப் பட்டவர்கள் தங்களுடைய பதவிகளை செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிகளாக மாற்றவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலித்து படிப்படியாக நிறைவேற்றி வருகிறது. மொத்தமாக 33,000 பேர் செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சிப் பெற்றவர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர் பதவிகளில் இருந்தார்கள். நிதி நிலைமைக்கு ஏற்றபடி ஆண்டுக்காண்டு ஒரு குறிப்பிட்ட தொகையினரை செகண்டரி கிரேடு பதவிக்கு அரசு மாற்றி வந்துள்ளது. 4,000 பேர், 3,500 பேர், 5,000 பேர் என்று அவர்கள் ஹையர் கிரேடு பதவிகளிலே இருந்தாலும் அவர்களை செகண்டரி கிரேடு பதவிகளில் இருப்பதாக மாற்றி, அதற்கானச் சம்பளமும் வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் 3,500 பேர்கள் அப்படி மாற்றப்படாமல் இருக்கிறார்கள். அவர்களின் பதவிகளும் விரைவிலே மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஆண்கள் பள்ளிகளிலே பெண்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று திரு. சௌடி சுந்தரபாதி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் இரண்டு கட் மோஷன்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒன்றில் ஆண்கள் பள்ளிகளில் பெண்களை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்ததில் ஆண்கள் பள்ளிகளில் பெண்களை சேர்த்துக்கொள்ளக் கூடாது;



1973 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அருப்புக்கோட்டை என்றால் பெண்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அடுத்த இடங்கள் என்றால் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று சொல்கிறார்கள்.

ஆங்காங்கே வசதியுள்ள இடங்களில், 300, 400 பெண்கள் ஒரே இடத்தில் படிப்பதற்குள்ள வாய்ப்பு இருக்குமானால் அங்கெல்லாம் பெண்களுக்கு என்று தனியாகப் பள்ளிகளை ஏற்படுத்துகிறோம். அதற்கு வாய்ப்பில்லாத இடங்களில் 11-வது வகுப்பு வரையில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. மற்றபடி ஆண்கள் பள்ளியிலே சில பெண்களை மட்டும் சேர்த்துக்கொள்வது என்பதில் சில பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஏனென்றால் பெண்களுக்கு என்று தனியாக கழிப்பிடங்கள் போன்ற வேறுபல வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். 10, 15 பெண்கள் படிக்கிற பள்ளியில் ஒரு ஆசிரியையாவது நியமிக்க வேண்டும் என்று இருக்கிறது.

ஆண்கள் பள்ளியில் பெண்களுக்கு உடற்பயிற்சி வகுப்புகள் நடத்துவதில் சில பல சங்கடங்கள் ஏற்படும். ஆண்கள் தங்கள் விளையாட்டு இடங்களை விட்டுவிட்டு, பெண்கள் விளையாடும் இடங்களில் வந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதனால் ஏற்படுகின்ற சங்கடங்களைப் பற்றி பல பெற்றோர்களிடமிருந்து புகார்கள் வந்திருக்கின்றன.

இவைகளை எல்லாம் சீரிய முறையிலே ஆராய்ந்து பார்த்துத்தான் பெண்களுக்குத் தனியாகப் படிக்க வசதி இருந்தால் ஆண்கள் பள்ளியிலே பெண்களைச் சேர்க்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது நாங்கள் வந்தபிறகு புதிதாக பிறப்பித்த உத்தரவு அல்ல. இந்த உத்தரவு முன்னாலேயே இருக்கிறது. அதை நினைவுபடுத்துகிற வகையிலேதான் இப்போது ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலும் ஒரு விதிவிலக்கு இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பள்ளியிலே பெண்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால், அதுபற்றி அதிகாரிகளுக்கு விண்ணப்பித்து, அவர்கள் அனுமதியோடு சேர்த்துக்கொள்ளலாம் என்ற ஒரு விதிவிலக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாட புத்தகத்தைப் பற்றி திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். 11-வது வகுப்பு வரலாற்று புத்தகத்திலே நேதாஜி சுபாஷ் சந்திரபோஸைப் பற்றி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 20

தவறான கருத்து ஏற்படும் வகையில் எழுதப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். "இந்திய தேசியப் படை" என்ற தலைப்பிலே அதைப்பற்றி விளக்கம் தந்திருக்கிறார்கள். "சுபாஷ் சந்திர போஸ்" என்றிருந்தால் அவருடைய வரலாற்றுக் குறிப்பைத் தந்திருப்பார்கள். "இந்திய தேசியப் படை" என்றிருப்பதால் இந்தக் கருத்தைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளுகிறோம் என்றில்லை. அந்தக் கருத்துக்கள்தான் இருக்க வேண்டும் என்று இல்லை. நாட்டு மக்களுக்குப் பயன் தரத்தக்க உணர்வுகளை ஊட்டத்தக்க வகையில் கருத்துக்களைச் சொல்லலாம். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்கள் மனதில் கொள்ளப்படும். நேதாஜி அவர்கள் ஜப்பானியப் படையோடு சேர்ந்திருந்தது உண்மைதான். அது இந்திய தேசியப் படை என்ற காரணத்தினால் அதை இப்படிக் குறிப்பிட்டு விட்டார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அதில் ஏதோ ஒன்றைச் சொல்லியிருக்கின்றார்கள் என்பதற்காக...............

ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "ஏதோ ஒன்றைச் சொல்லியிருக்கின்றார்கள்" என்று சொன்னார்கள். அப்படியில்லை. மாறாக, "விடுதலைப் போராட்டத்திற்காக அமைக்கப்பட்ட அந்தப் படை ஜப்பானுக்கும் ஜெர்மனிக்கும் உதவி செய்து, ஜப்பானியர் இந்திய எல்லையிலுள்ள இம்பாலாவிற்கு வர உதவி செய்த படை" என்று சொல்லப்பட்டு இருக்கின்றது. ஆக அது எதற்காக அமைக்கப்பட்டதோ அதைத் திரித்துக்கூறி அதை மாசுபடுத்தி, உண்மைக்கு மாறாகச் சொல்லப்பட்டு இருக்கின்றது. எனவே, உண்மைக்கு மாறாகச் சொல்லப்பட்டிருக்கின்றதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து நினைவில் கொள்ளப்பட்டு, அடுத்த முறை இந்தப் பாடப் புத்தகம் திருத்தி அமைக்கப்படும்போது அவை முறையாக திருத்தி அமைப்பதற்கு வழிவகை செய்து தரப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலும்............

திரு. ஏ. ஆர். பெருமாள் : இதிலுள்ள வாசகம், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் இந்தப் படையை வைத்துக்கொண்டு ஜப்பானியர் இந்தியாவிற்குள் வருவதற்கு துணை புரிந்தார் என்று பொருள்படத்தக்க விதத்தில் அமைந்திருப்பதாகக் கொள்ளுகிறேன்.



1973 மார்ச் 20] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

அப்படியிருந்தால், "அவர் ஜப்பானின் துணையோடு இந்திய விடுதலைக்காகப் போராடினார்" என்றுதான் இருக்க வேண்டும். எனவே அந்த முறையில் திருத்தியமைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அங்கத்தினர்கள் இது பற்றிக் கூறிய கருத்துக்கள் மனத்தில் கொள்ளப்பட்டு, அவை திருத்தி அமைக்கப்படலாம் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

சுதந்திரப் போராட்ட வீரர்கள் பற்றி பாடப் புத்தகங்களில் போட வேண்டும் என்று மாண்புமிகு அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இப்போதே பல பாடப் புத்தகங்களிலே திருப்பூர் குமரனைப் பற்றியும், சர்தார் வல்லபாய் படேலைப் பற்றியும், சிவாஜி பற்றியும், அண்ணல் காந்தியடிகள் பற்றியும், லால்பகதூர் சாஸ்திரி பற்றியும், கப்பலோட்டிய வ. உ. சி. பற்றியும், தில்லையாடி வள்ளியம்மை பற்றியும், பண்டித ஜவஹர்லால் நேருவின் நிகழ்ச்சிகள் பலவும் எழுதப்பட்டிருக்கின்றன.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தேசம் விடுதலை பெற்ற பிறகு, விடுதலை உணர்வோடு தேசீய உணர்ச்சி, நாட்டின் பாதுகாப்பு, தமிழ் உணர்ச்சி பெற வேண்டிய இந்த நேரத்தில் தியாகத்தையும் தேசீய உணர்வையும் குறைத்து மதிப்பிடும் வகையில் எழுதி இளம் மாணவர்கள் உள்ளத்தில் பெருந்தலைவர்களைப் பற்றி சந்தேகம் எழத்தக்க விதத்தில் எழுதக் காரணமாக இருந்த ஆசிரியர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எந்தெந்தத் தலைவர்களைப் பற்றி எழுத வேண்டும் என்று சொல்லுவது நாங்கள் இல்லை. அதற்கென வல்லுநர் குழு ஒன்று இருக்கின்றது. அவர்கள் தான் இதுபற்றிய முடிவெடுக்கின்றார்கள். அங்கத்தினர் குறிப்பிடும் வாசகம் தவறுதலாகத்தான் வந்திருக்க வேண்டும். அவசியம் என்னும்போது அதைத் திருத்திக் கொள்ளுவதில் தவறேதுமில்லை. இது திருத்தப்பட வேண்டிய ஒன்றே தவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய ஒன்று இல்லை என்று எடுத்துச் சொல்லி, இதைத் திருத்துவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படிப் பாடத் திட்டங்களில் வரக்கூடிய தலைவர்களின் பெயர்களைப் படித்தார்கள். அதில் பெருமதிப்பிற்குரிய டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பற்றியும் நமது மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் பற்றியும் குறிப்பிடவில்லை. இவர்களையும் அந்தப் பெயர்ப் பட்டியலில் சேர்த்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சேர்த்துக்கொள்ளுவதில் ஆட்சேபனை ஒன்றுமில்லை. ஆனால் இவையெல்லாம் வல்லுநர் குழுவின் முடிவிற்கே விடப்படுகின்றது. அவ்வப்பொழுது அவர்கள் ஆராய்ந்து முடிவெடுக்கின்றார்கள்.

திரு. க. சுப்பு : வல்லுநர் குழுவில் "ப்ரோ–பிரிட்டிஷ்" என்று சொல்லத்தக்க அளவிற்கு உள்ள பேராசிரியர்கள்—மால்கம் ஆதிசேஷய்யா போன்றவர்கள்தான் இருக்கின்றார்கள். நமது நாடு விடுதலை அடைந்த பிறகு அதற்கு ஏற்ப விடுதலைக்காகப் போராடிய பெருந்தலைவர்களைப்பற்றி இவர்கள் பாடப் புத்தகங்களில் எழுத அவ்வளவாக ஆர்வம் காண்பிப்பதில்லை. எனவே அதற்கு ஏற்ப வல்லுநர்களைத் தேர்ந்தெடுத்து...............

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வல்லுநர் குழுவில் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் இப்போது இல்லை. அவர்களைப்பற்றி யாரோ, எப்போதோ ஒன்றைச் சொல்லிவிட்டார் என்பதற்காக அவரைப் பற்றி மாண்புமிகு அங்கத்தினர் தவறாகக் கருதிவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர் எவ்வளவு அறிவாற்றல் உடையவர், அவர் "யுனெஸ்கோ" ஸ்தாபனத்தில் இருந்துகொண்டு எப்படிப்பட்ட பணியினை ஆற்றியுள்ளார் என்பதையெல்லாம் பலர் அறியாமலிருக்கலாம். அவருடைய அறிவாற்றல் சாதாரணமானதில்லை. காழ்ப்புணர்ச்சி இருக்கிறது ஒவ்வொருவருக்கும். யாருமே 100-க்கு 100 செம்மையானவர்கள் என்று சொல்லவில்லை. கூடுமானவரையில் காழ்ப்புணர்ச்சிக்கு அப்பாற்பட்டவர்களையே வல்லுநர் குழுவில் அமர்த்துகின்றார்கள்.

திரு. ஏ. ஆர். பெருமாள் : திரு. சுப்பு அவர்கள் சுபாஷ் போஸைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். . ஆனால் அவர் சார்ந்துள்ள கட்சி ஒரு சமயம் சுபாஷ் போஸ் அவர்களை ஜப்பான் நாட்டின் கைக்கூலி என்று சொன்ன கட்சிதான்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பதில் சொல்ல வேண்டியது தலைவர் மூலமாக எனக்குத்தானே தவிர அங்கத்தினர்களே ஒருவருக்கொருவர் பதில் சொல்லிக்கொண்டிருந்தால் விவாதம் வேறு திசையில் போய்விடக் கூடும்.

திரு. க. சுப்பு : நான் திரு பெருமாள் அவர்களையும் யாருடைய கைக்கூலி என்று சொல்லவில்லை, சுபாஷ் போஸ் அவர்களையும் சொன்னதில்லை.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் சமீபத்தில் மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களுடன் பேசிக்கொண்டு இருக்கும்போது இது பற்றிக் குறிப்பிட்டபோது, அவர்களே வருத்தம் தெரிவித்தார்கள். இப்போது மதிப்பிற்குரிய சுப்பு அவர்கள் வேண்டுமானால் வேறுவிதமாகச் சொல்லலாம். ஆனால் அவர்கள் வருத்தம் தெரிவித்தார்கள். "நாங்கள் சுபாஷ் அவர்களைப் பற்றித் தவறாக எண்ணிவிட்டோம். ரஷ்யாவிலிருந்து வந்த அறிக்கைகளின் அடிப்படையில் நாங்கள் அப்படி எண்ணிவிட்டோம்" என்று உண்மையிலேயே வருந்தினார்கள். அவ்வப்பொழுது ஒன்றைச் சொல்லிக்கொண்டு காலத்தை ஓட்டிக்கொண்டு இருக்கவில்லை.

திரு. க. சுப்பு : நேத்தாஜி இன்னும் உயிரோடுதான் இருக்கிறார் என்று சொல்லிக்கொண்டு காலத்தை ஓட்டிக்கொண்டு இருப்பவர்கள் அவர்கள், நாங்கள் அப்படி இல்லை. தனிப்பட்ட முறையில் சொன்னால்...............

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : விவாதம் என்னையும் விட்டு, கல்வித் துறையையும் விட்டு எங்கேயோ போய்க்கொண்டு இருக்கின்றது. ஆகவே தயவுசெய்து அங்கத்தினர்களை என்னிடத்திலும் கல்வித் துறையினிடத்திலும் வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அளவு கடந்து போய்விட்டது விவாதம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நல்ல முறையில் பாடங்களை வெளியிட வேண்டும் என்பதற்காகவும் குறைந்த விலையில் புத்தகங்கள் குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும் எல்லா மாநிலங்களிலும் பாடப் புத்தகங்களைத் தேசிய மயமாக்க வேண்டும் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டு அதன்படி பல மாநிலங்களிலே பாடப் புத்தகங்களை அரசாங்கமே

வெளியிட்டு வருகின்றார்கள். அந்த வகையிலேயே தமிழ் நாட்டிலும் கிட்டத்தட்ட சிறப்புப் பாடங்களைத் தவிர மற்ற பாடங்களையெல்லாம் வெளியிடும் அளவிற்கு இரண்டு கோடிக்கு மேலே வெளியிட்டிருக்கிறோம். முன்பெல்லாம் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்களையெல்லாம் பார்த்தால் அவை மிகமிகச் சாதாரணமாக இருந்ததைப் பார்த்திருக்கலாம். அட்டையும் மிகமிகச் சாதாரணமாக இருந்திருப்பதைப் பார்த்திருக்கலாம்—அவைகளெல்லாம் தனியார் அச்சிட்டு வெளியிட்டுக்கொண்டு இருந்தபோது. விலையும் ஒன்னரை ரூபாய், இரண்டு ரூபாய் என்ற அளவிற்கு இருந்து வந்தது. ஆனால் அரசு அவற்றை மேற்கொண்ட பின்னர் அட்டையும் மிகவும் அழகாக நான்கு ஐந்து வண்ணங்களில் போட்டு, உள்ளிருக்கும் பாடங்களில் வரும் படங்களையும் நான்கைந்து வண்ணங்களில் தீட்டி, எழுத்துக்களையும் குழந்தைகளின் உள்ளத்தைக் கவரத்தக்க விதத்தில் பெரிதாகவும் தெளிவாகவும் அச்சிட்டிருப்பதைப் பார்க்கலாம். அத்துடன் விலையும் மிகவும் குறைவாகவே வைத்திருக்கின்றார்கள்.

இப்படி வைத்தும் அதிலும் 20, 25 லட்ச ரூபாய் லாபம் கிடைத்திருக்கின்றது. இப்படிக் கிடைத்த லாபமும் மிகமிக ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள், ஸ்லேட்டுகள் போன்றவற்றை வழங்குவதற்கே பயன்படுத்தப்பட்டது. இப்படிக் கிடைக்கும் லாபத்தை வேறு எந்தத் துறைக்கும் பயன் படுத்தாமல் இப்படி ஏழை எளியவர்களுக்கே செலவிடத்தக்க நோக்கத்தோடுதான் அதை இந்த அரசு செலவிட்டு வருகிறது.

பாலிடெக்னிக் பற்றி திரு. சுப்பு அவர்களும் மற்றவர்களும் குறிப்பிட்டுக் காட்டினார்கள். இதுபற்றிய விளக்கங்களை பல தடவை தொழில் நுட்ப கல்வி இயக்குநர் அவர்கள் கண்டு பேசியிருக்கிறார்கள். நான் முதலிலேயே தெரிவித்தபடி, கோவை மற்றும் மதுரை மாணவர்களுடன் பேசிய சந்தர்ப்பத்திலும் அவர்களிடம் விளக்கியிருக்கிறேன். பல மாணவர்கள் சந்தித்திருக்கிறார்கள். சந்திக்கவில்லை என்று சொல்வது தவறு. அப்படிச் சந்தித்த மாணவர்களின் பெயரைக் கேட்டால் அவர்கள் கொடுக்க மறுத்திருக்கிறார்கள். பெயரைக்கூடத் தர மறுக்கிறார்கள். அவர்களின் படிப்புக்கு வசதியான வாய்ப்புகளை எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்து தர அரசு தயாராக இருக்கிறது என்பதை விளக்கமாக எடுத்துச் சொன்னேன்.

இதிலே பிரச்சினை என்னவென்றால், பத்தாவது வகுப்பு படித்து விட்டு பாலிடெக்னிக்கில் சேர்கிறார்கள். ஆனால் என்ஜினியரிங் காலேஜில் சேர்கிறவர்கள் புகுமுக வகுப்பு படிப்பு படித்து, போட்டா



போட்டி அடிப்படையில் சேர்கிறார்கள். ஏ. ஏ. ஏ—டி. டி. டி வாங்கியவர்கள்தான் சேரக்கூடிய அளவுக்கு பொறியியல் கல்லூரியில் போட்டா போட்டி இருக்கிறது. ஆனால் பாலிடெக்னிகில் 100 மார்க் வாங்க வேண்டும் என்று இருந்தது. பிறகு 90 வாங்கினால் போதும் என்று வைத்து, பல பேரை சேர்த்திருக்கிறார்கள். பிரிடெக்னிகல் படித்து விட்டு பி.இ-க்குப் போகிறார்கள். பி.இ-க்குப் போகாவிட்டால் மூன்றாண்டு காலம் பாலிடெக்னிக் படித்துவிட்டு டிப்ளமா வாங்கலாம் என்ற வாய்ப்பை அறிவித்திருக்கிறோம். அதற்கு முன்பு அந்த வாய்ப்பு இல்லை.

அது மட்டுமல்ல. 2, 3 ஆண்டுகள் பல்வேறு துறைகளில் பணியாற்றியவர்கள் பார்ட் டைம் கோர்ஸ் படிக்க பல்கலைக் கழகத்திடம் அனுமதி பெற்று அப்படி மூன்றாண்டு காலம் படித்தால் பி.இ-க்கு ஈக்வலாக வர வாய்ப்பு இருக்கிறது. பி.இ. படிப்பவர்கள், நாங்கள் 6½ ஆண்டு காலம் படித்துவிட்டுத்தான் பி.இ. பட்டம் பெறுகிறோம். பாலிடெக்னிக் படிக்கிறவர்கள் மூன்று ஆண்டுகள் படித்து விட்டு பி.இ-க்கு ஈக்வலாக வருகிறார்களே என்ற கோரிக்கை தரப்பட்டிருக்கிறது. அகில இந்திய ஏ.எம்.ஐ.இ-ல் எல்லோருக்கும் வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. அதை ஒரு சங்கம் நடத்துகிறது. ஏ.எம்.ஐ.இ. பட்டம் பெற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு பி.இ.-க்குச் சரி சமமாக கருதப்படுகிறார்கள். அப்படி மதிக்கப்படவில்லை என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானது. ஏ.எம்.ஐ.இ. பட்டம் பெற்றவர்கள் ஜே. இ-ஆக வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே பி.இ-க்கு ஈக்வலாக மதிக்கப்படுவதில்லை என்பது சரியல்ல.

இப்படி பாலிடெக்னிக் பட்டதாரிகள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இதிலே முக்கியமானது என்னவென்றால், 4½ ஆண்டுகளுக்குள் அந்த பி.இ. பட்டத்தை தந்து விடுங்கள் என்கிறார்கள். இதில் பி.இ. பட்டதாரிகள், நாங்கள் 6½ ஆண்டுகள் படித்து விட்டுத்தான் பி.இ. பட்டம் பெறுகிறோம். இவர்கள் 4½ ஆண்டுகளுக்குள் பி.இ. பட்டம் பெறுவதா என்று எதிர்க்கிறார்கள்.

அதேமாதிரி பார்ட் டைம் கோர்சில், வருடத்திற்கு இரண்டு தடவை பயிற்சி தரலாம் என்று வைத்தோம். அதை எதிர்த்து பி.இ. பட்டதாரிகள் வேலை நிறுத்தம் செய்து, இந்த வாய்ப்பு தரக் கூடாது என்று சொன்னதற்குப் பிறகு அவர்கள் ஒரு சமாதான முறைக்கு வருகின்ற முறையில், குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் வேலை பார்த்தவர்கள் என்பதை 5 ஆண்டுகள் என்றும், வருடத்திற்கு ஒரு முறை பயிற்சி என்று இருந்ததை 2 வருடத்திற்கு ஒரு முறை பயிற்சி என்ற நிலை

வந்தது. மேலும், அந்த 5 ஆண்டுகள் என்பதில் கூட, மொபசலில், போதிய அளவு மாணவர்களின் எண்ணிக்கை இல்லை என்ற காரணத்தால், 5 ஆண்டுகள் தேவை இல்லை, 3 ஆண்டுகள் போதும் என்ற அளவுக்கு முடிவெடுத்து அந்த முடிவு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக, இப்படி, இவர்கள் ஏற்றுக்கொண்டால் அவர்கள் மறுக்கிறார்கள். பி.இ. ஏற்றுக்கொண்டால் பாலிடெக்னிக் டிப்ளோமாதாரர்கள் மறுக்கிறார்கள்: பாலிடெக்னிக் டிப்ளமோதாரர்கள் ஏற்றுக் கொண்டால் பி.இ. பட்டதாரிகள் மறுக்கிறார்கள். ஆகவே, போதிய அவகாசம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதில். தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு எழுதியிருக்கிறார்கள். பல்கலைக் கழகம், பி.இ. பட்டதாரிகளுக்கு எத்தனை ஆண்டு, பாலிடெக்னிக்கு எத்தனை ஆண்டு, என்னென்ன நடைமுறை என்று பல்கலைக் கழகம் ஒரு முறையை நிர்ணயித்து விட்டால் அந்த முறையை நாங்கள் அமல்படுத்த ஆயத்தமாக இருக்கிறோம்.

இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, போராட்டம் வேண்டாம் என்று சொல்லியிருந்தும், தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது வருத்தப்பட வேண்டியிருக்கிறது.

இந்த இண்டர்னல் அசெஸ்மெண்ட் பற்றி இந்திய அரசு அறிக்கை வைத்திருக்கிறார்கள். இதில், மாணவர்கள் நெட்டுரு—பாடத்தை மனப்பாடம் பண்ணி பரிட்சையில் பாஸ் பண்ணுகிற நிலை—பரீட்சைக்கு முன்னால் ஒரு வாரத்திற்கு முன்னால் உட்கார்ந்து பாடங்களை மனப்பாடம் செய்து பரீட்சை எழுதுவதால், மாணவர்களுக்கு ஆழ்ந்த அறிவு இல்லை என்ற குறை கூறப்பட்ட காரணத்தால் எப்படியாவது வெற்றி பெற வேண்டுமென்ற எண்ணத்தைப் போக்கி அவர்கள் உண்மையிலேயே ஆழ்ந்த அறிவினை அடைய முடியுமா என்று யோசித்து ஒரு முறையைத் தந்திருக்கிறார்கள். தற்போதுள்ள முறையினால் மாணவர்களுக்கு ஒரு ஷேலோ நாலெட்ஜ் தான் ஏற்படுகிறது. பரீட்சைக்கு முன்னால் உட்கார்ந்து, பிராபபிள் கொஸ்சன்கள் எவையெவை வரும் என்று பார்த்து, சென்ற ஆண்டு இந்தக் கேள்விகளைக் கேட்டு விட்டார்கள்—செப்டம்பரில் இந்தக் கேள்வியைக் கேட்டு விட்டார்கள், எனவே, மார்ச்சில் இவை வராது, என்று ஒரு எமினேஷன் பிராசஸ் செய்து, பிராபபிள் கொஸ்சன்களை மனப்பாடம் செய்து பரீட்சைக்கு வருகிறார்கள். அதிலும் அவர்களுக்கு



சாய்ஸ் கொடுக்கப்படுகிற தன்மை இருக்கிற காரணத்தால், 12-ல் 6 எழுதினால் போதும்—அந்த ஆறில் 75 மார்க் வாங்கினால் போதும்—இரண்டு சப்ஜெக்ட்களில் 45 வாங்கினால் போதும் என்றெல்லாம் இருக்கிற காரணத்தால், ஆழ்ந்த அறிவை அவர்களுக்குத் தரவும், அவர்களுடைய உண்மையான அறிவைக் கணக்கிடவும் முடியவில்லை. இப்போது புகுத்தப்படவிருக்கிற இன்டர்னல் அசெஸ்மெண்ட்படி மாணவர்கள் வகுப்பறைக்கு வந்த எண்ணிக்கையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு கடைசியாக ஒரு எண்ணிக்கை தருவது என்று இருக்கிறது. இது முதலில் பொறி இயல் கல்லூரியில் புகுத்தப்பட்டு முதலில் வரவேற்கக் கூடிய அளவில் இருக்கிறது என்ற காரணத்தால் மற்ற கல்லூரிகளிலும்கூட இந்த முறை கொண்டுவரப்பட வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. பல்கலைக் கழகத்தால் தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் சாதகமாக இருக்கின்றன. முன்பு 15 சதவிகிதம் தான் தேர்வு பெற்றிருப்பதாக திரு. சுப்பு அவர்கள் மாணவர்கள் குறிப்பிட்டதாகக் குறிப்பிட்டார்கள். முழு புள்ளி விவரமும் இருக்கிறது.

செமிஸ்டர் முறை வருவதற்கு முன்னால் இன்டர்னல் அசெஸ்மெண்ட் வருவதற்கு முன்னால் 470 பேரில் 106 பேர்கள்—அதாவது 22.55 சதவிகிதம்தான் சிவில் இன்ஜினியரிங்கில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இப்போது 758-ல் 247 பேர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்–அதாவது 32.15 சத விகிதம்; தொழில் நுட்பக் கல்லூரியில் 555 பேர்களில் 193 பேர்கள்—அதாவது 34.7 சத விகிதம் தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள். 1972-ல் செமிஸ்டர் முறை புகுத்தப்பட்ட பிறகு 710 பேர்களில் 297 பேர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்—அதாவது 41.8 சத விகிதம். முன்பு 22.55 சத விகிதம். எனவே, இந்தத் திட்டத்தின் மூலம் நல்ல பலன் இருக்கிறதே தவிர வேறல்ல. இந்த முறை புகுத்தப்பட்ட பிறகு 41.8 சத விகிதம் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

மெக்கானிகல் இன்ஜினியரிங் துறையை எடுத்துக்கொண்டால் ஏற்கெனவே 32.99 சதவிகிதத்தினர் தேறினார்கள் என்றால் இப்போது 39.1 சதவிகிதம் தேறியிருக்கிறார்கள். அதேபோல எலக்ட்ரிகல் துறையை எடுத்துக்கொண்டால் முன்பு 34.77 சதவிகிதம் தேறியிருக்கிறார்கள் என்றால் இப்போது 43.31 சதவிகிதம் தேறியிருக்கிறார்கள்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். பைனல் பரீட்சையில் வெற்றி பெறாத மாணவர்கள் இதில் ஒரு கேஸ்கூட இல்லை. ஆக, இந்த செமிஸ்டர் முறைதான் மாணவர்களுக்கு நல்லது. ஆயினும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 20

ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப் போல சிலபல குறைபாடுகள் இருந்தால், ஆசிரியர்கள் வேண்டுமென்றே மாணவர்களைப் பழிவாங்க இதில் சந்தர்ப்பம் இருக்கிறது என்றால், அவற்றை எல்லாம் போக்க என்ன பரிகாரம் காணலாம் என்பதை இந்தத் துறை தொடர்ந்து ஆராயும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த முறைதான் எல்லா நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகிறது என்றும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பட்டதாரி ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பலதடவை அதைப்பற்றி இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். டாக்டர் ஹாண்டே போன்றவர்களும், மற்றவர்களும் இந்தத் துறையின் தன்மையைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் இதில் ஒரு ஒழுங்கை ஏற்படுத்த வேண்டும் என்கிற அக்கறை உடையவர்கள்— அத்தகைய அக்கறை உடையவர்களாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டே இதுபோன்ற கிளர்ச்சியை நடத்தினார்கள். சட்டத்தை மீறி, கோட் ஆப் காண்டெக்டை மீறி செயல்பட்டார்கள். சென்ற ஆண்டும் நான்கைந்து நாட்கள் சிறையில் இருந்தார்கள். அவர்கள் விடுதலை செய்யப்பட்டவுடன் அவர்கள்மீது அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. யாரும் பழி வாங்கப்படவில்லை. ஏற்கெனவே அவரவர்கள் இருந்த பதவியில் அவரவர்கள் அமர்த்தப்பட்டார்கள்.

அதேபோல இந்த ஆண்டும் 6 கோரிக்கைகளை முன்வைத்தார்கள். அவற்றில் 2 கோரிக்கைகளை உடனடியாக ஆராய்ந்து கல்வி மானியம் வரும்போது தக்க நடவடிக்கையை எடுத்துக்கொண்டு அறிவிப்புச் செய்வேன் என்பதாக நான் அவர்களுக்கு வாக்குறுதி அளித்தேன். பேச்சுவார்த்தைகளின்போது மேலவை உறுப்பினர் திருவாளர்கள் ராஜா ஐயர், கணபதி, சந்தோஷம், சாமிநாதன் ஆகியவர்கள் இருந்தார்கள். அவர்கள்கூட இந்த இரண்டு கோரிக்கைகள் பற்றியும் நீங்கள் இப்போதே அறிவித்துவிடுங்கள், அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டுவிடுவார்கள் என்று தெரிவித்தார்கள். நிதித் துறையினர் ஒத்துக்கொள்ள முடியாத நிலை இருந்தும் முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதியின்பேரில் நான் அந்த இரண்டு கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதாக இந்த அவையிலும் சரி, மேலவையிலும் சரி அறிவித்திருக்கிறேன். இருந்தும், அவர்களது தலைவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களது பேச்சையே கேட்காமல் பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டத்தில் இறங்கினார்கள்.



1973 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மற்றொன்று. ஜில்லா போர்டு பள்ளிகள் எல்லாம் 66-லேயே ஜில்லா போர்டுகள் எடுக்கப்பட்டவுடன் அவை தனித்து இயங்கி வந்தன என்றாலும், அந்த ஜில்லா போர்டு பள்ளிகளை எல்லாம் 1—4—1970-ல் அரசாங்கப் பள்ளிகளாக எடுத்துக்கொண்டு அறிவித்ததும், அரசாங்கப் பள்ளிகளில் இருந்த ஆசிரியர்கள் ஏ விங் என்பதாகவும், ஜில்லா போர்டு பள்ளிகளில் இருந்த ஆசிரியர்கள் பி விங் என்பதாகவும் தனியாகவேதான் இருந்தார்கள்.

இப்படி ஏ விங், பி விங் என்று இருப்பது அரசாங்கத்திற்கே சில சங்கடங்களைக் கொடுத்துக்கொண்டு வந்தது. என்றாலும் அந்த இரண்டு சாரார்களும் விரும்பு மட்டும் அவை தனித்தனியாகவே இருக்கட்டும் என்றுதான் நாங்கள் நினைத்தோம். ஜில்லா போர்டு களில் இருந்தவர்கள் நான்கைந்து வருடத்திற்குள்ளாகவே தலைமை ஆசிரியர்களாக வந்திருந்தார்கள். அரசாங்கப் பள்ளியில் இருந்தவர் கள் பத்துப் பதினைந்து ஆண்டு சர்விஸ் ஆன பிறகும் கூட தலைமை ஆசிரியர்களாக வர முடியாத நிலைமை இருந்தது. இன்றைக்கு இந்த இரண்டு பேர்களையும் ஒன்றாக இணைத்து பத்து ஆண்டு சர்வீஸ் உடையவர்களை தலைமையாசிரியர்களாகப் போடுவது என்றால் ஏ விங்கில் இருந்தவர்களைத்தான் பெரும்பாலும் போட வேண்டியதாக இருக்கும். ஜில்லா போர்டு பள்ளிகளில் ஏற்கெனவே தலைமையாசிரி யர்களாக இருந்தவர்கள் கீழே இறங்க வேண்டியதாக இருக்கும் என்கிற காரணத்தினால்தான் அவர்கள் இரண்டு பேர்களுமே ஒத்துப் பேசி நாங்கள் இன்ன முடிவுக்கு வந்துவிட்டோம் என்று அறிவித்தால் மறு நாளே அரசு அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருப்பதாகத் தெரிவித்தோம். நீங்கள் கலந்து பேசுங்கள், உங்களிடையே வேண்டு மென்றால் திரு ராஜா அய்யர் இருக்கட்டும். இல்லையென்றால் கல்வி இயக்குநர் இருக்கட்டும். நானே இருக்க வேண்டுமென்றாலும் இருக்கத் தயார் என்று தெரிவித்திருக்கிறேன்.

ஹெட்மாஸ்டர்களாக தமிழாசிரியர்களைப் போடக்கூடாது என்று கிளர்ச்சி செய்தார்கள். அது பற்றியும்கூடத் தெரிவித்தேன். தலைமை ஆசிரியராக வருவதற்கு இன்ன இன்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்று நிர்ணயித்துக்கொள்வோம். அந்தத் தகுதி அவர்களிடம் இருந்தால் அவர்கள் வரட்டும், உங்களிடம் இருந்தால் நீங்கள் வாருங்கள். பல்கலைக் கழகம் அதுபற்றி முடிவு செய்யும் என்று சொன்னோம்.

அவர்களது மற்றொரு கோரிக்கை சம்பளத்தை 375 ஆக மாற்ற வேண்டும். 50 ரூபாய் ஸ்பெஷல் அலவன்சு தரப்பட வேண்டும் என்பதாகும். இந்த ஒரு இனத்திற்கு நாம் சம்பளத்தை உயர்த்தினால்

இதுபோல உள்ள 8 காட்டகிரிக்கு உயர்த்தியாக வேண்டும். அதோடு இவர்களுக்கு மேலே உள்ளவர்களது சம்பள விகிதத்தையும் உயர்த்தியாக வேண்டும். இதில் எந்த அளவுக்குப் பொருளாதாரப் பிரச்சினை எழுகிறது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். இவர்களுக்கு உயர்த்திய உடனே மற்றவர்களும் கிளர்ச்சி செய்ய ஆரம்பிக்கலாம். இதுபற்றி நிதித் துறையும், மற்றவர்களும் நன்கு ஆராய்ந்தே முடிவு எடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, இது நன்கு பரிசீலிக்கப் பட வேண்டிய ஒன்று எனத் தெளிவாகச் சொன்னோம்.

நாங்கள் இதுபற்றி அவர்களுடன் பேசவே இல்லை என்பது சரியல்ல. பேசினோம். அவர்களும் தங்கள் உறுப்பினர்களிடம் சொல்வதாகவும், கிளர்ச்சியைக் கைவிடுவதாகவும் சொன்னார்கள். முடிவில் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டோம். ஆனால், பட்டதாரி ஆசிரியர்கள் இவர்களது பேச்சைக் கேட்காது போராட்டத்தில் இறங்கிவிட்டார்கள். பள்ளி இறுதிப் பரிட்சை நடக்கிற சமயம்—மாணவர்கள் சரியான முறையில் பாடம் படிக்க சூழ்நிலை இருக்க வேண்டும், இந்த நேரம் வேண்டாம், அதோடு மறியல் செய்வது, உண்ணா நோன்பு இருப்பது எல்லாம் சட்டப்படி, கோட் ஆப் காண்டெக்ட்படி குற்றமாகும் என்றெல்லாம் அறிவித்தோம். அவர்களிடம் கெஞ்சிக் கேட்டோம். அதற்கெல்லாம்தான் இதனை துச்சமென்று மதிப்போம் என்பதாக எல்லாம் அறிக்கை விட்டார்கள். அதை இந்த அவையிலேயே நான் படித்துக் காட்டியிருக்கிறேன். மீண்டும் படித்துக் காட்ட வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறேன்.

மொத்தமுள்ள 25 ஆயிரம் ஆசிரியர்களில் ஏழாயிரம், எட்டாயிரம் பேர்கள் உண்ணா நோன்பு போராட்டம் நடத்தியும், மற்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டும் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களில் பலபேர் இன்றைக்குத் தங்கள் செய்கைக்கு வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். சட்டத்திற்குப் புறம்பாக, ஒழுக்க விதிகளுக்குப் புறம்பாக நடந்து கொண்டதற்காக வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். அதுபோல வருத்தம் தெரிவித்த 1732 பட்டதாரி ஆசிரியர்கள் மறுபடியும் வேலையில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்கள். இப்படிச் சட்டத்தை மீறி, ஒழுங்கை மீறி கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காக டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் எடுத்து, சிறை சென்றார்கள் என்பதை வைத்து ஷோ காஸ் நோட்டீஸ் கொடுத்து அவர்களை வேலையில் இருந்தே நீக்கிவிட முடியும். சட்ட விதிகள் அப்படி இருக்கின்றன. அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்று கூட அரசு கருதவில்லை. தங்களுடைய செயலுக்கு வருத்தம் தெரிவித்து எழுதித் தரவேண்டும் என்று கேட்கிறோம்.





அது கூடக் கூடாது என்றால் ஏற்கனவே வருத்தம் தெரிவித்து எழுதிக் கொடுத்தவர்கள் பைத்தியக்காரர்கள், முட்டாள்கள், வருத்தம் தெரிவிக்காது வீரர்களாக இருந்து வந்து நாங்கள் சேர்ந்தோம் என்கிற நிலை உண்டாவது இருக்கிற கட்டுப்பாட்டைக் குலைக்கக் கூடியதாக ஒழுங்கைச் சிதைக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதாகத்தான் அமையும்.

நாங்கள் சொல்வது செயலுக்கு மன்னிப்பு கேளுங்கள் என்றுகூட அல்ல. வருந்துகிறோம் என்று இவர்கள் எப்படித் தனித்தனியாக எழுதிக் கொடுத்திருக்கிறார்களோ அது மாதிரி எழுதிக் கொடுத்தாலே போதும் என்று சொல்கிறோம். அதிலே தவறு இல்லை. ஆகவே, செயலுக்கு வருந்துவதிலே தவறு இல்லை. கேரளத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். கேரளத்திலே, நாங்கள் சொல்கிற அளவுக்குக் கூட இல்லை.

The strike by section of N.G.O.s and school teachers was withdrawn 'uncond.tionally' today after lasting for 52 days, the longest such strike so far in this State என்று சொல்கிற அளவுக்கு நிபந்தனையற்ற வாபஸ் வாங்கினார்கள்.

The Kerala Ch'ef Minister, Mr. C. Achutha Menon, today reiterated that the State Government staff who were on strike would not be paid their salaries for the strike period.

ஸ்டிரைக் வாபஸ் ஆன பிறகு, ஸ்டிரைக் நாட்களுக்கு அவர்களுக்குச் சம்பளம் தரப்பட மாட்டாது. அவர்கள் விரும்பினால் ஒரு மாத சம்பளம் வேண்டு மென்றால் அட்வான்சாகத் தருவோம். பின்னால் 6 தவணைகளாக பிடித்துக் கொள்வோம். அட்வான்சாகத்தான் தருவோம், அந்த ஸ்டிரைக் பீரியடுக்குச் சம்பளம் தரமாட்டோம் என்று சொன்னார்

' one month's salary would be given to them as advance to be reimbursed in six equal instalments'.

'Government was firm in its earlier resolve to take suitable action against the N.G.O.s' who indulged in violence or insulted women staff. Action would also be taken against the headmasters who struck work without handing over the keys of the schools to the assistant or district education officers.'

'suspension orders served on the headmasters would be temporarily withdrawn. They would be allowed to rejoin duty while proceedings against them would be continued. But they would not be allowed to rejoin duty in the institutions where they were working.'

அவர்கள் மீது நடவடிக்கை இருக்கும்போது வேலை செய்கிற இடத்திலே மறுபடியும் சேர விடமாட்டோம். ஆனல், மறுபடியும் டெம்பரரியாக வேறு இடத்திலேதான் சேர விடுவோம் என்று சொன்னர்.

திரு. க. சுப்பு : நமது தமிழகத்திலே போராடிய ஆசிரியர்கள் அரசு தங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை யென்று போராடினர்கள். கேரளத்திலே ரூ. 192 கோடி பட்ஜெட்டிலே ரூ. 112 கோடி அவர்களுக்காக, என்.ஜி. ஓ-க்களுக்காக கொடுத்திருந்தும் கூட அவர்கள் எந்தவிதக் காரணமுமில்லாமல் அரசியல் காரணத்திற்காகப் போராடுகிருர்கள் என்பதற்காக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தினர்கள் தேவையில்லாமல். ஆனல் நமது ஆசிரியர்கள் நிலை அப்படி அல்ல. அவர்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டும், அதை நிறைவேற்றவில்லை என்பதற்காகப் போராடினர்கள். அவர்களையும், இவர்களையும் ஒன்ருக வைப்பது சரிதான என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்களுடைய தலைவர் தங்கமணி அவர்கள் கேரளத்தைப் பற்றிக் குறிப்பிட்டதன் காரணமாகத்தான் அந்தப் பதிலை சொல்லியிருக்கிறேனே தவிர, கேரளத்தை இழுப்பதற்காகச் சொல்லவில்லை. திரு. அச்சுத மேனன் அவர்கள் என்ன சொன்னர்.

Government and private school teachers and Secretariat employees alleged that cases had been registered against 10,000 employees and that an equal number had been placed under suspension.

என்று ஆசிரியர்களையும், என்.ஜி.ஓ-க்களையும் சேர்த்துத்தான் சொன்னர் 10,000 பேரை சஸ்பெண்ட் செய்திருக்கிருர்கள். 10,000 பேர் மேல் வழக்குத் தொடுத்திருக்கிருர்கள். அங்கே நடக்கிறவை





களைச் சொன்னதன் காரணமாகத்தான் இவைகளைச் சொன்னேனே தவிர, வேறு எதற்கும் அல்ல. ஆக, அந்த வகையிலேகூட நாங்கள் இல்லை. மிகக் குறைந்த அளவிலே, வருத்தம் தெரிவித்தாலே போதும் என்கின்ற நிலைமையிலேதான் பழி வாங்கப்பட மாட்டார்கள் என்று சொல்லி............

திரு க. சுப்பு : கேரளத்தில் அவர்கள் வன்முறையில் இறங்கினர்கள் என்று குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளுக்காக வழக்குப் போட்டிருக்கிருர்கள். ஆனல், தமிழகத்திலே வன்முறையிலே இறங்கினர்கள் என்று அப்படிச் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படியானல் எந்தச் சட்டத்தை மீறியிருந்தார்களோ, அதை மீறிய அளவில் வழக்கு தொடரலாமா? விதி 41-ஐ மீறி இருக்கிருர்கள். அதன்படி வழக்குத் தொடர்வதற்கு, அவர்கள்மீது புரசீடிங்ஸ் நீடிக்கலாம் என்று சொல்கிருர்களா? அதே வகையிலே வழக்கு நீடிக்கும், கோர்ட்டு தண்டனைக்கு அவர்கள் ஆளாகட்டும் என்று சொல்கிருர்களா? சென்ற ஆண்டு ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆண்டுக்காண்டு இப்படி செய்வோம் நீங்கள் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்ருல் என்ன பொருள்?

அதே மாதிரி செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள்மீது நடவடிக்கை எடுத்தோம். என் வீட்டிற்கு வந்து மறியல் செய்தார்கள். நான் வீட்டில் இருக்கும்போது மறியல் செய்தார்கள், நான் வெளியிலே சென்றபொழுது மறியல் செய்தார்கள். நான் ஊரில் இருந்தபொழுது மறியல் செய்தார்கள், நான் ஊரில் இல்லாதபொழுது மறியல் செய்தார்கள். அப்பொழுது ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை யென்பது மட்டும் அல்லாமல், மறியல் செய்தவர்களுக்கெல்லாம் வெற்றி வீரர்கள் என்று பதக்கம் கொடுத்திருக்கிருர்கள். அதைப் பற்றி ஆட்சேபணை இல்லை.

ஆக, அப்படிப்பட்டவர்கள் கட்டுப்பாட்டை மீறிச் செய்கின்ற நிலைமைகள் ஆண்டுக்காண்டு ஏற்படும்போது, அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும்போது, இதிலே மற்றவர்கள் தகுந்த அளவுக்கு கடமை ஆற்றி இருக்கிருர்கள். 25,000 பேரிலே, 8,000 பேர் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் இருக்கிருர்கள். மற்றவர்கள் கடமையாற்றியவர்கள் இருக்கிருர்கள். ஈடுபட்டவர்களில் பலர் வருத்தம் தெரிவித்து வந்திருக்கிருர்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே வருத்தம்

தெரிவித்து வந்தவர்களை விட்டுவிட்டு இவர்களை மட்டும் வருத்தம் தெரிவிக்காமல் இருந்தால்கூட விட்டுவிட வேண்டுமென்று கூறுவது எந்த வகையிலேயும் நியாயம் அல்ல.

குறைந்த அளவு இருக்க வேண்டுமென்ற தன்மையிலே வைத்திருக் கிறோமே தவிர, பழி வாங்க வேண்டுமென்று அல்ல. நாங்களே அவர்களிடத்திலே சொல்லி இருக்கிறோம், கேட்டு இருக்கிறோம், அவர்களுக்குப் பரிந்து பேசுகிற டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த அரசுக்கும் பரிந்து பேசவேண்டும். இந்த அரசினுடைய தன்மைகளைப் புரிந்து, பரிந்து பேச வேண்டும். நாளைக்கு அவர்களேகூட அமைச்சராக வரலாம், என்றாவது ஒரு நாள் வரலாம். அவர் அப்படி வந்தால் என்ன நடவடிக்கை எடுப்பார்? என்ன நடவடிக்கை எடுத் திருக்கிறார்கள் அவர்களுடைய கட்சிக்காரர்கள்? யார் இருந்தாலும் கூட அரசினுடைய மதிப்புக் குறையக் கூடாது. இதிலே கவுரவத்தைப் பார்க்கிற நிலைமைகள் இல்லை. ஒழுங்கை விட்டுவிட முடியாது. இதிலே கவுரவம் என்றால் நாங்கள் ஏன் இறங்கிப் போனோம். இந்தப் பிரச்சினைகள் முடிந்த பிறகுதான் வரவேண்டும், அதுவரை நாங்கள் வரமாட்டோம் என்று அவர்களிடம் சொல்லியிருக்கலாம்.........

திரு ஏ. சுப்பிரமணியம் : டாக்டர் ஹாண்டே அவர்கள் நாளைக்கே கூட அமைச்சராக வரலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன் னார்கள், அமைச்சர் அவர்கள். டாக்டர் ஹாண்டே இங்கிருந்து அந்தப் பக்கம் வருவார் என்ற வாய்ப்பு இருக்கிறது என்று கூறு கிறாரா, அல்லது, இரண்டும் கூட்டாக ஏற்படும் என்று நினைக்கிறார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வரலாம் என்று சொன்னால், வந்து விடுவார் என்று அர்த்தம் கிடையாது. ஜனநாயக இலக்கணத்தை நான் எடுத்துச் சொன்னேன். இங்கிலாந்திலே கன்சர்வேடிவ் கட்சி ஆட்சிக்கு வருகிறது, பிறகு லேபர் கட்சி ஆட்சிக்கு வருகிறது. இதே மாதிரி ரிபப்ளிக்கன் பார்ட்டி அமெரிக்காவிலே ஆட்சிக்கு வருகிறது, டெமாக்ரட்டிக் பார்ட்டி ஆட்சிக்கு வருகிறது. அப்படி ஒரு ஆசையைக் காட்டினாலாவது அடங்குவாரா என்று தான் அப்படிச் சொன்னேன். (சிரிப்பு.).

டாக்டர் எச். வி. ஹாண்டே : எந்த ஆசைக்கும் நான் அடங்க முடியாது. இங்கே எதிர்க் கட்சியிலே இருக்கும்போது சந்தோஷ மாக இருக்கிறேன். அமைதியாக இருக்கிறேன். ஆளும் கட்சியிலே இருப்பவர்களைவிட அமைதியாக இருக்கிறேன்.



மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் அவர்கள் கூட்டு சேரவேண்டு மென்று சொன்னார்கள். அவர்கள் உங்களோடு கூட்டுச் சேர்ந்து தான் வந்திருக்கிறார்கள். நான் எதிர்த்துதான் வந்திருக்கிறேன். உங்கள் நபரை எதிர்த்து, தோற்கடித்துதான் வந்திருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1967-லே அவர் களும் நாங்களும் கூட்டாக இருந்தோம். 1971-லே.................

திரு. ஏ. சுப்பிரமணியம் : நான் லேட்டஸ்ட் பொசிஷனைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது ரொம்ப லேட், ஏற்கெனவே நேரமாகிவிட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மற்றும் தனித் தனியாக கருத்துக்களையும் முறைகளையும் வேறு பலவற்றையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் சிந்தாதிரிப்பேட்டை பள்ளியைப் பற்றிச் சொன்னார்கள். அது பற்றிய முழு விவரங்கள் இப்பொழுது இல்லை. விவரத்தைப் பெற்று, நோக்கங்களை நிறைவேற்ற, அதைக் கண்டறிந்து, அதனுடைய நிலைமைகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

உறுப்பினர் பலரும் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களை இந்த அரசு கவனிக்கும். இந்தக் கல்வித் துறைப் பணியை நான் நிறைவேற்றுகிறேன் என்று சொன்னால், இதிலே வல்லுநன் என்ற காரணத்தால் அல்ல. கல்வித் துறையிலே உங்களைப் போல, நானும் ஆர்வம் கொண்டவன் என்ற அளவில்தான் இவைகளை நிறைவேற்றுகிறேன். இதற்கு அத்தனை பேருடைய ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்தால்தான் இந்தத் துறை வளரும்.

மொத்தம் இருக்கிற 27 ஆயிரத்து சொச்ச உயர்நிலைப் பள்ளி களிலே, அமைதியின்மை என்று சொன்னால் 100-க்குக் குறைவான பள்ளிகளிலேதான் அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்திருக்கும். 176 கல்லூரிகளிலே, 30, 40 கல்லூரிகளிலேதான் இம்மாதிரி நிலைமைகள் ஏற்பட்டிருக்கக்கூடும். ஆக, இந்த நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, நல்ல சூழ்நிலையைப் பெறவேண்டு மென்பதற்காகத்தான் நான் இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்கிறேன்.

இறுதியில் ஒன்றே ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். பல கல்லூரிகளிலே இருக்கிற உதவிப் பேராசிரியர்கள் எல்லாம் தங்களை அரசிதழ் பதிவு பெற்ற ஆசிரியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட பெரும் காலமாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று, அசிஸ்டன்ட் புரபசர்ஸ், தகுதி உடையவர்கள் அத்தனை பேரும் அரசிதழ் பதிவு பெற்றவர்களாக ஆக்கப்படுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 1,800 பேர்கள் அரசாங்கத்திலே பணி புரிபவர்கள் பயன் பெறுவார்கள் என்று கூற விரும்புகிறேன்.

இந்த ஆண்டு 5,000 செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பதவி ஏற்பட்டு, அந்த செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்குரிய சம்பளம் கொடுக்கப்படும் என்று குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. ஆக, இந்த ஆண்டு 5,000 பேருக்கு செகண்டரி கிரேட் பதவிகள் அளிக்கப்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து தேக்கப்படி, ஊதியத்தின் உச்சக் கட்டத்தை அடைந்து, பதவி உயர்வு பெற வாய்ப்பு இல்லாமல் இருக்கும் அரசு ஊழியர்களுக்கு தேக்கப்படி, ஸ்டாக்னேஷன் அலவன்ஸ் வழங்கவேண்டுமென்று இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. அந்த தேக்கப்படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படலாமென்றும், 5 முறைகளுக்கு மேற்படாமலும் பணியாளர்களின் அடிப்படைச் சம்பளம் ரூ. 1,000க்கு மேற்படாமலும் இருக்கும்வரை கொடுக்கப்படலாமென்றும் அது அறிவுரை கூறியிருந்தது. அரசுப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகையை அளித்து ஏற்கனவே அரசு ஆணையிட்டுள்ளது. இப்போது தனியார் பள்ளிகளிலும், ஊராட்சி மன்றப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இந்தத் தேக்கப்படியை அளிக்க அரசு முடிவு செய்திருக்கிறது என்று கூற விரும்புகிறேன். அரசுப் பள்ளிகளுக்கு மட்டும் தரப்பட்ட சலுகை இன்றைய தினம் தனியார் பள்ளிகளுக்கும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கும் தரப்பட்டிருக்கின்றது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேல்பட்டப் படிப்புக் கல்லூரிகளில் பணியாற்றும் முதல்வர்களுக்கு—அரசுக் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும்—1,000—50—1,400 என்று சம்பள விகிதம் இருந்தது; பேராசிரியர்களுக்கு 800–40–1,000–50–1,250 என்று சம்பள விகிதம் இருந்தது. ஆனால் தனியார் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற முதல்வர்களுக்குச் சம்பள விகிதம் 900–50–1,300 என்ற அளவிலும், பேராசிரியர்களுக்கு சம்பள



விகிதம் 600–40–1,000 என்ற அளவிலும் இருந்தது. அரசினர் மேல்பட்டப் படிப்புக் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற முதல்வர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் தனியார் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற முதல்வர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் ஒரேவிதமான சம்பளம் இருக்க வேண்டுமென்ற கோரிக்கையைத் தந்தார்கள். எனவே, அந்த அடிப்படையிலே அரசினர் மேல்பட்டப் படிப்புக் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற முதல்வர்கள், பேராசிரியர்களுக்குப் போலவே தனியார் மேல்பட்டப் படிப்புக் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற முதல்வர்களுக்கும் 1,000–50–1,400 என்ற அளவிலேயும் பேராசிரியர்களுக்கும் 800–40–1,000–50–1,250 என்ற அளவிலேயும் சம்பள விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு மாணவருக்கு இப்பொழுது ரேட் ஆப் காம்பன்சேஷன் ரூ. 50 அல்லது 60 என்ற அளவிற்குத்தான் கொடுக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. இப்பொழுது எல்லாக் கல்லூரிகளுக்கும் புதிய கல்லூரிகளாக இருந்தாலும் சரி, பழைய கல்லூரிகளாக இருந்தாலும் சரி எல்லாக் கல்லூரிகளுக்கும் ஒரு மாணவருக்கு 80 ரூபாய் என்ற அளவிலோ அல்லது 1971–72 ஆம் ஆண்டிலே கொடுக்கப்பட்டு வந்த விகிதம் இந்த இரண்டு வகைகளிலே எது குறைவோ அதைத் தருவதற்கு—80 ரூபாய் குறைவாக இருந்தால் 80 ரூபாய் அளவிலேயும் அல்லது 1971–72 ஆம் ஆண்டிலே கொடுக்கப்பட்ட விகிதம் குறைந்திருந்தால் இது இரண்டிலே எது குறைவோ அதைக் கொடுப்பதற்கு—அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

டீச்சிங் கிராண்ட் அவர்களுடைய மொத்த டெபிஸிட்டில் மூன்றில் இரண்டு பங்கு என்ற அளவிற்குக் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் வருமானக் கணக்கைப் பொறுத்தவரையில் நேஷனல் இன்கம்-தான் எடுத்துக் கொள்ளப்பட்டது, கற்பனைக் கணக்காகத்தான் இதுவரையிலே என்ன காரணமோ வைத்திருந்தார்கள். நன்கொடைகள் மூலமாக வருகின்ற வருமானத்தை யெல்லாம் வருமானக் கணக்கிலே சேர்க்காமல் இருந்தார்கள். ஆக்சுவல் இன்கம் எடுத்துக்கொள்ளப்படாமல் இருந்தது. கற்பனையாக வரவு 40 என்றும் செலவு 80 என்றும் கணக்கு வைத்திருந்தார்கள். இது எந்தக் காலத்திற்கும் பொருந்தி வராத கணக்கு. இந்த முறையை நீக்கிவிட்டு எல்லா வரவினங்களையும் சேர்த்துக் கணக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் செலவினம் அதற்குமேலே வருகின்ற நிலையில் மீதியிருக்கிற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 20

தொகையில் 80 சத விகிதம் அரசு தருவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மீதம் உள்ள 20 சதவிகிதத்தை அந்த அந்த தனியார் ஸ்தாபனங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இது 1972–73 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் என்டோமெண்ட் கணக்கு என்று வைத்திருந்து அதிலே லாபம் வந்தால் அந்த லாபத்தையும் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் நன்கொடை போன்றவற்றை வாங்கினால் அதற்குக் கணக்கு காட்டி அதையும் வரவு இனத்திலே காட்டியாக வேண்டும், நன்கொடை இரண்டாயிரம், மூவாயிரம் என்று வந்தால் அவையும் கணக்குக்கு வந்துவிட வேண்டும். இந்த முறையிலே அவர்களுக்கு டெபிஸிட் ஏற்படுவதிலே 80 சத விகிதத்தைக் கொடுக்கிறோம் மீதிக்கு அவர்கள்தான் தேடிக் கொள்ள வேண்டும். ஆகவே, அரசு இப்படிப்பட்ட ஒரு நல்ல வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பி.ஹெச்.டி. பட்டம் பெற்றவர்களும் மற்றவர்களும் இப் ...ாவிதமான முறையிலேதான் சம்பளம் பெற்றுவருகிறார்கள். பி.ஹெச்.டி. என்ற முறையிலே ஆராய்ச்சி செய்து அதற்குப் பிறகு பணிபுரிந்து அவர்கள் தங்களுடைய திறமையையும் தகுதியையும் உயர்த்திக் கொண்டு கல்லூரிகளுக்கு நல்ல முறையிலே தொண்டாற்றி வருகிறார்கள். அந்த முறையிலே அப்படிப்பட்டவர்களை ஊக்குவிக்கின்ற முறையிலே இரண்டு பேராசிரியர்களையும் இரண்டு துணைப் பேராசிரியர்களையும் தேர்ந்தெடுத்து அவர்களை டெபுட்டேஷன் செய்து அவர்கள் பி.ஹெச்.டி. பட்டம் பெறக்கூடிய முறையிலே ஏற்பாடு நடந்து வருகிறது. பி.ஹெச்.டி. பட்டம் பெற்றவர்களுக்கு ஸ்பெஷல் பே என்று வழங்கினால்தான்—அவர்கள் எம்.ஏ., எம்.எஸ்ஸி. பர்ஸ்ட் கிளாஸிலே தேர்வுபெற்று இரண்டு மூன்றாண்டுக் காலம் கஷ்டப்பட்டு படித்த நிலையில்—அவர்களுக்கு ஸ்பெஷல் பே என்று வழங்கினால்தான் நல்லது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதை அரசாங்கம் கொள்கையளவிலே ஏற்றுக்கொண்டிருக்கிறது, அந்த வகையிலே விரைவிலே முடிவு செய்வதுபற்றி ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைத் தவிர உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்காகத் தனிக் கட்டடம் கட்டுவதற்கு 5.25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1973 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இங்கே பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள், அவற்றை யெல்லாம் நம்முடைய நிதி நிலைமைக்கேற்பவும், வாய்ப்பு வசதிகளுக்கேற்பவும் ஆராய்ந்து செயல்படுவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை."

என்ற முறையிலே கேடில்லாத விழுச் செல்வத்தைப் பெறுவதற்கு இந்தத் துறை தன்னால் இயன்ற அளவிற்கு எல்லோருடைய ஆதரவோடும் முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, பணத்தை இதற்குக் கூட்ட வேண்டும், கூட்ட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். கூட்டிக்கொண்டே போனால் இருநூறு கோடியாகப் போய்விடும். எனவே, கூட்டச் சொல்லிவிட்டு வெட்டச் சொல்வது முறையாகாது, ஆகவே வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சிந்தாதிரிப்பேட்டை பள்ளியைப் பற்றி அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது தகவல் இல்லை என்று சொன்னார்கள். நான் மிகவும் வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது என் சொந்த விஷயம் அல்ல. ஐந்து வருஷம் ஆகிறது. எவ்வளவோ முறைகள் முயற்சி செய்யப்பட்டாகி விட்டது.

All requests had been complied with as per D.P.I.'s Office instructions. In spite of this, I am at a loss to understand how the Hon. Minister is unable to give me a proper reply on this.

இன்னும் அதைப்பற்றிய தகவல் இல்லை என்றால் எனக்கு வருத்தமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவலே இல்லை என்று நான் சொல்லவில்லை. இப்பொழுது அதுபற்றி இருக்கிற சூழ்நிலை பற்றித் தகவல் தெரியவில்லை என்றுதான் சொன்னேன். இப்பொழுது அதனால் பக்கத்திலே இருக்கிற உயர்நிலைப் பள்ளி பாதிக்கப்படும் என்ற அப்ஜெக்ஷன்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 20

ஒன்று இருக்கிறது. இதைத் தவிர இட வசதிகள் பற்றி எல்லாம் எந்த வகையிலே தீர்ப்பது என்ற பிரச்சினை இருக்கிறது, அது உட்கார்ந்து பேசவேண்டிய ஒன்று. இயலுமானால் நான் அதை எடுத்துச் செய்ய ஆயத்தமாக இருக்கிறேன். எனவே அவர்கள் எழுந்தவுடனே அதைப்பற்றிய தகவல் தரமுடியவில்லை என்றுதான் சொன்னேனே தவிர அதைப்பற்றிய தகவலே இல்லை என்று சொல்லவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது ஆராயவேண்டுமென்று சொன்னார்கள். எந்தக் காரணத்தினால் அதிலே தாமதம் ஏற்படுகிறது என்று எனக்குத் தெரியும். இந்தச் சபையில் நான் அதைச் சொல்லவில்லை. இருந்தாலும், அமைச்சர் அவர்கள் அதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்களுடைய கணவர் பெயரால் வரக்கூடாது என்ற எண்ணம் எங்களுக்கில்லை. சிந்தாதிரிப்பேட்டை என்னுடைய தொகுதி. அம்மையார் அவர்கள் 25 ஆயிரம் ரூபாய் திரட்டிக் கொடுத்து ஒரு புதிய பள்ளி வேண்டுமென்றால் நான் அதை மகிழ்ச்சியோடு செய்யத் தயாராக இருக்கிறேன், எனக்குத் தொல்லைகளை அந்த அளவிற்குக் குறைத்திருக்கிறார்கள் என்றுதான் பொருள். ஏற்கனவே ஒரு பள்ளி இருக்கிறது. ஆகவே அந்த முறையிலே அதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கெனவே அங்கே பள்ளி இருக்கலாம். அந்த இடமும் பல ஆண்டுகளுக்கு முன் வெங்கிடாசலம் அவர்களுடைய பூர்வீக சொத்தாக இருந்தது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்ன காரணத்தினால் அது தாமதப்படுகிறது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அந்தக் காரணத்தை இந்தச் சபையிலே நான் சொல்ல விரும்பவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் இங்கே சொல்லாவிட்டாலும் தனியாக என்னிடம் சொல்வார்களானால் நான் பரிகாரம் காணுவதற்கு முயற்சிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.



1973 மார்ச் 20]

கோரிக்கை எண் 16-க்கு திரு. கே. எம். சுப்பிரமணியம், திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. க. சுப்பு, திரு. கே. எஸ். கோதண்டராமய்யா, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : திரு. என். டென்னிஸ், திரு. கே. எ. வகாப் ஆகியோர் தங்களுடைய இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டனவாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண் 16 கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 98,65,64,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை நாளைக் காலை 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 7 மணி அளவில் ஒற்றிவைக்கப்பட்டது.

## (5) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

' Nil '

B. *Reports, Notifications and Other Papers*

* @ 105. Policy Note on Demand No. 20—Fisheries—1973-74 (Tamil).

@ 106. Policy Note on Demand No. 29—Welfare of the Scheduled Tribes and Castes—1973-74 (Tamil).

† 107. Performance Budget on Harijan Welfare, 1973-74.

£ 108. Note on Progress of Education in Tamil Nadu 1973-74 (English and Tamil).

---

@ Despatched to Members on 17th March 1973.

† Laid on the Table of the House on 19th March 1973.

£ Despatched to Members on 19th March 1973.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1973 மார்ச் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Communications among Police Headquarters*

* 446. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to connect all District Police Headquarters with the State Headquarters by Microwave network; and

(*b*) if so, the details of the same?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* (அ) & (இ) அஞ்சல்-தந்தித் துறையின் ஆலோசனையுடன் திட்டமொன்று, காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

*திரு. என். கே. பழனிசாமி :* தலைவர் அவர்களே, இந்த மைக்ரோ-வேவ் சாதன அமைப்பை ஏற்படுத்துவதன்மூலமாக என்ன அனுகூலம் ஏற்படுகிறது, அதற்கு ஆகக்கூடிய செலவு என்ன என்பதை முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க முடியுமா ?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவர் அவர்களே, இப்பொழுது ஒலிபரப்பு முறைகள் நம்மிடத்தில் இரண்டு வகைகளிலே இருக்கின்றன. ஒன்று உயர் அலை ஒலிபரப்பு என்கிற முறையாகும். இதில் கம்பியில்லாத் தந்தியின் மூலமாகச் செய்திதான் அனுப்ப முடியும்; பேச முடியாது. அடுத்தபடியாக, மிக உயர் அலை ஒலிபரப்பு என்ற முறையில் பேச இயலும்; ஆனால் ஒரே நேரத்தில் ஆறு வெவ்வேறு ஒலிபரப்புகளைத்தான் செய்ய இயலும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற நுண் அலை ஒலிபரப்பு முறை வருமானால் மிக விரைவாகப் பல இடங்களுக்கு ஒரே சமயத்தில் ஏறத்தாழ 900 இடங்களுக்கு இந்த ஒலிபரப்பு சாதனத்தின்மூலமாக ஒலிபரப்ப முடியும். இதற்காக ஆகும் செலவையெல்லாம் இன்னும் மதிப்பீடு செய்யவில்லை.

*திரு. ஆ. பரந்தாமன் :* இரவு நேரத்தில் மவுண்ட் ரோடிலுள்ள அண்ணா சிலைக்கு அருகாமையில் நின்று பார்த்தால் பக்கத்திலே இருக்கும் மேடையில் விளக்கொளியின்மூலம் செய்திகளைப் பார்க்கிறோம். அதுபோல், தலைமை மாவட்டக் காவல் நிலையங்களில் அப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாதது.

*திரு. என். கே. பழனிசாமி :* துப்பாக்கிப் பிரயோகம், லத்தி சார்ஜ் போன்றவைகளை அனுமதிப்பதற்கு லோகல் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரம் இருப்பதன் காரணமாக, அது பல சமயங்களில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதால், இம்மாதிரி வரக்கூடிய சமயத்தில் சர்க்காரே நேரடியாகத் தலையிட்டு அத்தகைய அனுமதி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** துப்பாக்கிப் பிரயோகம் போன்றவைகளில் மாஜிஸ்ட்ரேட் அளவில் உள்ளவர் உத்தரவிடுவதைப்பற்றிப் பிறகு நாம் யோசிக்க வேண்டும். பொதுவாக எல்லாக் காரியங்களுக்குமே உடனுக்குடன் தொடர்புகொள்ள இந்த நுண் அலை ஒலிபரப்பு மெத்தவும் பயன்படும்.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* சாதாரணமாக, துப்பாக்கிப் பிரயோகம் நடந்து, குற்றங்கள் சம்பந்தமான விஷயங்கள்மட்டும்தான் இதன்மூலம் செய்தியாகப் பரப்பப்படுகிறது. அது மட்டுமல்லாமல், அந்தந்தப் பிராந்தியத்தில் இருப்பவர்கள் வேறு சம்பவங்கள்—அதாவது நெருப்புப் பிடிப்பது, திடீர் என்று வெள்ளம் வரக்கூடியது போன்ற சம்பவங்கள்—பற்றியெல்லாம் இந்தச் செய்தித் துறையின்மூலமாக அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது இருக்கிற ஒலிபரப்புக்களில், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, ஆறு வெவ்வேறு ஒலிபரப்புச் சாதனங்களைத்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நுண் அலை ஒலிபரப்புக்கு மத்திய சர்க்கார் உடனடியாக உதவி செய்வதாக இருந்தாலும், அல்லது அஞ்சல் துறை தன்னுடைய கருத்தை விரைவில் கூறி விடுகிறது என்று வைத்துக்கொண்டாலும், அதற்குப்பிறகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிடுவதைப்போல எல்லா நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் நிச்சயமாக அறிவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

*திரு. நா. வீராசாமி :* தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் நாட்டில் காவல் துறை அமைத்துக்கொள்ள வேண்டிய நுண் அலை நிலையங்களுக்குக்கூட





மத்திய சர்க்காரைத்தான் நாம் அனுமதி கேட்டுப் பெற வேண்டுமா ? நம்முடைய ஒலிபரப்புக்குத் தேவையான வசதிகளை நாமே செய்துகொள்ளக் கூடாதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதில் அனுமதி பணத்தைப் பொறுத்த விவகாரம். காவல் துறைக்குச் சில கருவிகளை (எக்விப்மென்ட்ஸ்) வாங்குவதற்கு ஓரளவுக்கு நிதி உதவி மத்திய சர்க்காரிடமிருந்து கிடைத்து வருகிறது. அதைப் பெறுவதற்கும் இந்த நுண் அலை ஒலிபரப்பு எல்லா இடங்களிலும் வைப்பதாக இருந்தால் மத்திய சர்க்காருடைய தொடர்பில் இருக்கிற அஞ்சல் துறையின்மூலமாகச் செய்யலாம் என்ற யோசனை இருப்பதாலும், அஞ்சல் துறை மத்திய சர்க்காரின் சார்பில் இருக்கிற காரணத்தாலும் அவர்கள் அனுமதி தேவைப்படுகிறது.

*திரு. கா. வேழவேந்தன் :* தலைவர் அவர்களே, இந்த நுண் அலைச் சாதன அமைப்பின்மூலமாகத் தலைமை அலுவலகத்திலிருந்தும், முதலமைச்சர் தலைமைச் செயலாளர் போன்றவர்கள் அந்தந்த மாவட்ட காவல் துறை அதிகாரிகளோடு தொடர்புகொள்வதற்கு ஏற்ற முறையில் இந்தச் சாதனம் அமைக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நுண் அலை ஒலிபரப்புக் கிடைத்தால் நான் சொன்னதுபோல் ஒரேசமயத்தில் 900 இடங்களுக்கு இந்த ஒலிபரப்பு சாதனத்தின்மூலம் இணைப்பு ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

*திரு. எம். ஏ. லத்தீப் :* நுண் அலை வசதி பெறுகின்ற முறை இப்பொழுது எந்த எந்த இடங்களில் பயன்படுத்தப்படுகிறது ? எங்காவது பரீட்சார்த்தமாகவாவது அது பயன்படுத்தப்பட்டு வருகிறதா ? அதன் பலன் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இங்கு மாத்திரம் அல்ல; வேறு எந்த மாநிலத்திலும்கூட இந்த முறை இருப்பதாகத் தெரியவில்லை.

*திரு. த. சோணையா :* நாட்டில் சிலர் திடீர் திடீர் என்று கலவரங்களைச் செய்துவிட்டுத் தலைமறைவாய்விடுகிறார்களே, அப்படிப்பட்டவர்களை அடக்குவதற்கு இந்த நுண் அலைத் தொடர்பு இருந்தால் அது பலன் தருமே, அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நுண் அலைச் சாதனம் இருந்தால் எல்லாவற்றுக்கும் அது உதவிகரமாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவர் அவர்களே, இந்த நுண் அலை ஒலிபரப்புச் சாதனம் ஏற்படுத்திக்கொள்வதற்கு அஞ்சல் நிலையத்துறையின் ஒத்துழைப் போடுதான் நடத்த முடியும் என்று முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் நாமே தனியாக இந்த ஒலி பரப்பு நிலையங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு நமக்கு வாய்ப்புக் கிடையாதா? வாய்ப்பு இருந்தால் ஏன் அதை நாம் பயன்படுத்தக்கூடாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏற்கெனவே 30—3—1972 இல் நம்முடைய இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்கள் 50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் இதற்கான ஒரு திட்டத்தை மத்திய சர்க்காருக்கு அனுப்பி, கொழும்புத் திட்டத்தின்கீழ் ஜப்பானிய ஒத்துழைப்புடன் (கொலாபரேஷன்) இதை நிறைவேற்ற உதவி கோரினர். ஆனால், கொழும்புத் திட்ட உதவியின் அடிப் படை விதிமுறைகளை இந்தத் திட்டம் நிறைவு செய்யாத காரணத்தால் அதைக் கொழும்புத் திட்ட அதிகாரிகள் மறுத்துவிட்டார்கள். எனவே, இந்தத் திட்டத்திற்கு ஜப்பானின் உடனுழைப்புப் பெறும் தகுதி அப்பொழுது எழா மலே போய்விட்டது. இந்தத் திட்டத்தை மாநில சர்க்கார் அளவிலே செய் வதற்கு இயலாத பல்வேறு சூழ்நிலைகள் இருக்கின்றன. இந்த நுண் அலைக்கு வேண்டிய பல சாதனங்களை மத்திய சர்க்காரின்மூலமாகத்தான் நாம் பெற வேண்டிருக்கிறது.

**திரு. ரா. ரா. முனுசாமி:** போலீஸ் தலைவருக்கு நுண் அலைச் சாதனம் கொடுப்பதைவிட இப்பொழுது குறிப்பாக டெலிவிஷன்மூலமாகச் செய்யலாம் என்று தமிழ்நாட்டில் ஒரு குறிப்பு இருக்கிறதே, அதன்படி மாவட்டங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் தலைமை அதிகாரி தெரிந்துகொள்ளும் நிலையை உருவாக்க முடியுமா?

(விடை இல்லை)

### காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்கள்

* 447. **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போலீஸ் துறையில் டெபுடி இன்ஸ்பெக்டர்கள் என்கிற புதிய பதவியை உருவாக்கும் உத்தேசம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆம்.



**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, போலீஸ் துறையில் டெபுடி இன்ஸ்பெக்டர்கள் என்கிற புதிய பதவி க்ரியேட் பண்ணும்போது, டைரக்ட் ரெக்ரூட்மென்ட் முறையில் தெரிந்தெடுக்கப்படுவார்களா? அல்லது சர்வீசில் இருப்பவர்களில் தகுந்தவர்களுக்கு ப்ரோமோஷன் முறையில் கொடுக் கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்தச் சந்தேகம் தேவை இல்லை. நேரடியாக யாரும் இந்தப் புதிய பதவிக்கு நியமிக்கப்பட மாட்டார்கள். இன்ஸ்பெக்டர்களாகப் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் இந்தப் புதிய டெபுடி இன்ஸ்பெக்டர் பதவியில் அமர்த்தப்படுவார்கள்.

**திரு. மே. சி. தூயமணி:** போலீஸ் கமிஷனால் பரிந்துரை செய்யப்பட்ட புதிய டெபுடி இன்ஸபெக்டர் பதவி போலீஸ் துறையில் எல்லாப் பிரிவுகளிலும் செயல்படுத்தப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது இருக்கிற எல்லா சர்க் கிள்களிலும் இந்தப் பதவி அறிமுகப்படுத்தப்படும்.

**திரு. ஆ. பரந்தாமன்:** புதிய டெபுடி இன்ஸ்பெக்டர் பதவி ஏற்படுத்தும் போது வட்டத் தலைமை நிலையங்களில் மாத்திரமல்லாமல் அந்த வட்டத்திலேயே மற்றொரு பகுதியிலுள்ள காவல் நிலையத்தில் அவர் பணி ஆற்றுவதற்கான செயற்குறிப்பை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது சிறிய அளவில்தான் இந்தப் புதிய பதவிகளை ஏற்படுத்த யோசனை செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** டெபுடி இன்ஸ்பெக்டர் போன்ற புதிய பதவிகளை உருவாக்குவதிலிருந்து மாநிலத்தில் குற்றங்கள் அதிகப்பட்டிருக்கின்றன என்று எடுத்துக்கொள்ளலாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** குற்றங்களைத் தடுப்பதற்கான முயற்சியை இந்த அரசு வேகமாக எடுத்துக்கொள்ளுகிறது என்று எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜோதி வெங்கடா சலம் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது, எந்தச் சந்தேகமும் வேண்டாம், ப்ரொமோஷன்மூல மாகக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். டைரக்ட் ரெக்ரூட்மென்ட் செய்வது அவ்வளவு பெரிய பாவ காரியமா? பொதுவாக, நிர்வாகம் செம்மையாக வும் சீராகவும் நடைபெறுவதற்குப் பல துறைகளில் டைரக்ட் ரெக்ரூட்மென்ட்

சில பர்ஸென்டேஜ்தான் செய்கிறுர்கள். அப்படியிருக்கும்போது டெபுடி இன்ஸ்பெக்டர் பதவிக்குப் போலீஸ துறையில் 40 சத விகிதம் டைரக்ட் ரெக்ரூட்மெண்டுக்கும், 60 சதவிகிதம் டிபார்ட்மென்ட்டில் உள்ளவர்களுக்கும் என்று ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** நேரடி நியமனம் பாவகரமான செயல் அல்ல. அப்படி அது பாவகரமான செயல் என்ருல் திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்தபோதுகூட அந்தப் பாவம் நிறைய நடைபெற்றிருக்கிறது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** இப்போது ஒவ்வொரு சரகத்திலும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறுர்கள். தனிப்பட்டு இன்டிப்பென்டன்டாக டெபுடி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்படும்போது இவர்களுடைய ஜூரிஸ்டிக்ஷன் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** இப்போது இருக்கும் இன்ஸ்பெக்டர்கள் கிரைமையும் சேர்த்து பார்த்துக்கொண்டிருக்கிறுர்கள். டெபுடி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்ட பிறகு கிரைம் பிரிவு பிரிக்கப்பட்டு இவர்களிடத்தில் இயங்கும்.

## *Post of Gazetted teachers in Education Department*

* 448. *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of posts of Gazetted Teachers in the Education Department (excluding ' B ' Section): and

(*b*) the number of posts of Gazetted teachers in the Education Department in the Kanyakumari district ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 76.

(இ) 16.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு பாடசாலைகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய அளவுக்கு அரசு கெஜடெட் ராங்க் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறுர்களே, அப்படிப்பட்டவர்களுக்கு உடனடியாக கெஜடெட் ராங்க் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர்களுடைய கோரிக்கைகளை முறைப்படி எழுதி பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைப்பார்களேயானுல் பரிசீலிக்கப்படும்.





**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இதிலே 'ஏ' விங் சம்பந்தமாக விகிதாசாரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த விகிதாசாரப்படி உடனடியாக நியமனம் செய்வதற்கு இலாகாவில் இருந்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1970-ல் 38 இடங்கள் மூன்று பயிற்சிக் கல்லூரிகள் உட்பட. 1971-ல் 25 இடங்கள். இதிலே ஆயிரம் மாணவர்களுக்கு மேற்பட்ட பள்ளிகள் என்று வகுத்து அந்த வகையில் 15 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அப்படித் தேர்ந்தெடுத்து அந்தத் தலைமை ஆசிரியர்கள் அரசிதழ் பதிவுபெற்றவர்களாக ஆக்கப்படுகின்ருர்கள். இதிலே குறைபாடு இருக்கிறது என்ருே, விடப்பட்டிருக்கிறது என்ருே கருதுவார்களானுல் அது பற்றி விண்ணப்பித்துக் கொள்வார்களானுல் முறைப்படி பரிசீலிக்கப்படும்.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் அவ்வளவு பேரையும் அரசிதழ் பதிவுபெற்றவர்களாக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட செயற்குறிப்பு இப்போது இல்லை.

**புலவர் சி. பழனிச்சாமி :** அரசிதழ் பதிவுபெற்ற ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க அரசு என்ன தகுதிகளை வைத்திருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆயிரம் மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் பணிபுரிகிறவர்களை அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்களாக நியமிக்கின்ற செயற்குறிப்பு இருக்கிறது. அந்த வகையில் 76 தலைமையாசிரியர்கள் அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறுர்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஆயிரம் மாணவர்களுக்கு மேலுள்ள பள்ளிகளில் உள்ளவர்கள் அந்தத் தகுதியுள்ளவர்கள் என்று கூறினுர்கள். அது ஆசிரியர்களுடைய தகுதியைக் குறிப்பதாக இல்லை. ஆசிரியரின் தகுதியை அரசு எப்படி மதிப்பிடுகிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைமையாசிரியர்களில் பணி மூப்புடையவர்களாகப் பார்த்து நியமிக்கப்படுகின்ருர்கள்.

## *New School for Thuraiyur*

* 449 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have any proposal to start a new school at Thuraiyur village in Thuraiyur taluk of Tiruchirappalli district ; and

(*b*) if so, the details thereof ?

[1973 மார்ச் 21

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கு. காமாட்சி :** துறையூர் வட்டத்தில் துறையூர் டவுன், முனிசிபாலிடி என்றுதான் இருக்கிறதேதவிர, துறையூர் கிராமம் என்று இல்லை. துறையூர் கிராமம் என்று ஒன்று இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துறையூர் கிராமம் இருப்பதாகத் தெரியவில்லை. நகராட்சி இருக்கிறது. அங்கிருந்துதான் இந்தச் செயற் குறிப்பு வரவில்லை என்று குறிப்பிட்டேன்.

### வந்தவாசியிலுள்ள பழைய கோட்டை

* 450 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

வடார்க்காடு மாவட்டம், வந்தவாசியில் உள்ள பழைய கோட்டை, மரூதிகள் இவைகளைப் பாதுகாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்பொருள்பற்றிச் செயற் குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** வந்தவாசியிலுள்ள பழைய கோட்டை, மரூதிகள் எல்லாம் தொல்பொருள் இலாகாவின் சார்பாக இருப்பதாகப் போர்டு போட்டிருந்தார்கள். அந்த போர்டைக்கூட இப்போது காணோம். அதிலுள்ள கற்களை எல்லாம் எடுத்து மக்கள் வீடு கட்டுகிறார்கள். அதோடு வட ஆர்க்காடு மாவட்டத்திலே நிறைய பழைய நவாப் பள்ளி வாசல்கள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க தொல்பொருள் இலாகாமூலம் முயற்சிக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** புராதனச் சின்னங்கள் என்ற வகையில் புராதனத்துவமும், முக்கியத்துவம் வாய்ந்தவை, வரலாற்று அடிப் படையில் இருப்பவற்றை மத்திய அரசும், மாநில அரசும் தேவைக்கேற்றவாறு பாதுகாப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. வந்தவாசி கோட்டையில் அப்படி புராதனத்துவம், முக்கியத்துவம் அவ்வளவு உடையதாக இல்லை. இந்தப் பகுதி மிகுதியான நிலப்பரப்பு உடையது. அங்கு பலர் பல ஆண்டுகளாக வீடுகள் கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். அவை முழுவதையும் பாதுகாப்பது என்றால் ஏராளமான பொருட் செலவு ஆகும். சில கோடிட்ட பகுதிகளைமட்டும் எடுத்துப் பாதுகாக்கலாமா என்பதைப்பற்றித் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் பரிசீலித்து வருகிறார்கள். அப்படிக் குறிப்பிட்ட பகுதியைப் பாதுகாக்க இயலுமா என்பதுபற்றி ஆராயப்பட்டு வருகிறது.



1973 மார்ச் 21]

**திரு. ஆ. பரந்தாமன் :** தமிழ் நாட்டிலுள்ள பழைய கோட்டைகள், மரூதிகள் ஆகியவை முழுமையான அளவுக்கு சர்வே செய்யப்பட்டிருக்கிறதா? அந்த வகையில் மத்திய அரசு எந்தெந்த வகைகளில் உதவி புரிகிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மத்திய அரசினுடைய தொல்பொருள் துறையினர் சிலபல பழைமையான சின்னங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவற்றின் முழுப் பொறுப்பையும் அவர்கள்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாநில அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையும் முக்கியத்துவம் மிகுந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க தொல் பொருள்களைப் பாதுகாக்க வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. கே. எ. வகாப் :** வந்தவாசி அவ்வளவு முக்கியமானது அல்ல என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தியாவின் சரித்திரத்தையே மாற்றக் காரணமானது 'பாட்டில் ஆப் வண்டிவாஷ்' ஆகும். கோட்டையின் கற்களை எடுத்து வீடு கட்டப் பயன்படுத்துவதையாவது தடுக்க நடவடிக்கை எடுக்கப் படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதைத்தான் குறிப்பிட்டேன். கோட்டை முழுவதையும் பாதுகாக்க வேண்டுமென்றால் அது இயலாத ஒன்று. கோட்டையினுடைய சுவர்கள், குறிப்பிட்ட பகுதிகளைப் பாதுகாக்கலாமா என்பதைப்பற்றித் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஆராயும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் ஆராய்ந்து வருகிறார்கள். விரைவில் முடிவு எடுக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். தமிழ்நாடு முழுவதும் நம்முடைய மூதாதையரால் கட்டப்பட்ட கலைக் கோயில்கள், பல்வேறு ஆலயங்கள் ஆகியவற்றை மத்திய அரசு தொல்பொருள் பாதுகாப்புத் துறை சரியாகப் பராமரிப்புச் செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. அதை மாநில அரசே ஏற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா? மத்திய அரசுதான் அந்தப் பொறுப்பை வைத்துக்கொண்டிருக்குமென்றால் நல்ல முறையில் பராமரிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு அவர்களை வற்புறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மத்திய அரசினுடைய தொல் பொருள் ஆராய்ச்சித் துறை அகில இந்தியாவில் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கருதத்தக்க சிலபல தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாத்து வருகிறது. அந்த வகையில் தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம்

[1973 மார்ச் 21

கோவில், வேலூர் கோட்டைக்குள்ளே இருக்கும் கோயில்கள் ஆகியவற்றை எல்லாம் பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கின்றது. பூம்புகார்பற்றிய ஆராய்ச்சியையும் மத்திய அரசு மேற்கொண்டிருக்கிறது. இந்த வகைகளில் மத்திய அரசு பாதுகாக்கும் பொறுப்பை மேற்கொண்டிருக்கின்ற நிலையில் அவர்கள் அதிகப் பணம் செலவழிக்க வேண்டும், அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டிருக்கின்ரேம். கங்கைகொண்ட சோழ புரம், தஞ்சைப் பெரிய கோயில் ஆகியவற்றைத் தமிழக அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்கு மாற்ற வேண்டுமென்று பல தடவை கேட்டும்கூட அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த காரணத்தால் அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று கூறிவிட்டார்கள். அப்படியானுல் அவற்றைப் பாது காப்பதில் பெரும் செலவு செய்து பாதுகாக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நாம் விட்டிருக்கிரேம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை எல்லாம் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இதை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர் கள் சொன்னுர்கள். வட ஆர்க்காடு மாவட்டத்தில் ராணிப்பேட்டை, வேலூர் போன்ற பகுதிகளில் பல மசூதிகள், கோட்டைகள் இன்றைக்குப் பல அசுத்த மான, தகாத காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு உதாசினப்படுத்தப்பட்டு வரு கின்றன. அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை மாநில அரசே ஏற்றுக் கொள்ளவேண்டும், அல்லது மத்திய அரசு . சரியானபடி அவற்றை நிர்வாகம் செய்யவேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு எழுத முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் குறிப்பிட்ட இடங்களைப் பொறுத்து எந்த அளவுக்கு அவை தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் வருகின்றன என்பதை வேண்டுமானுல் மாநிலத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை ஆராய்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக் கேள்வியை விட்டுவிட்டு கொள்கைபற்றிக் கேட்க ஆரம்பித்துவிட்டீர்களே.

**திரு. த. சோனையா :** வந்தவாசி பழைய கோட்டையைப்போல் ஊமையன் கோட்டை, வெள்ளையன் கோட்டை, கட்டபொம்மன் கோட்டை போன்ற கோட்டைகள் எல்லாம் வீரம் விளைந்த மண்ணில் இருக்கின்றன. அந்தக் கோட்டைகளை எல்லாம் பாதுகாப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தக் கோட்டைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போய்ப் பார்த்து வரவில்லை என்று



1973 மார்ச் 21]

தெரியவருகிறது. அவைகள் எல்லாம் பாதுகாக்கப்படுகிற கோட்டைகளாக மாநில தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர்கீழ்தான் இருந்து வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதுபோல் துணைக் கேள்விகள் கேட்கக் கூடாது.

**திரு. கு. காமாட்சி :** திருச்சி-சென்னை பாதையில் மங்களமேடு என்ற இடத்தில் ஒரு கோட்டை இருக்கிறது. மிக அழகாக இருக்கிறது. அது எந்தத் துறையால் பாதுகாக்கப்படுகிறது என்பது இதுவரையில் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள்கூட அந்த இடத்திற்கு வந்திருக்கிருர்கள். அது இனி யாவது பாதுகாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக்குறிப்பு இல்லை. தனிக் கேள்விபோட்டால் விவரங்கள் அறிந்து கூறப்படும்.

### தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்கள்

* 451. **வினு—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்கள் (·T·)·(l) எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஆம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்போது டெப்டி கமிஷனர்ஸ் ஆப் லேபர் இம்மாநிலத்தில் மதுரை, கோவை ஆகிய இரண்டு இடங்களில் மட்டும்தான் இருக்கிருர்கள். அதிகமாகத் தொழில் தகாறு வரக்கூடிய இடங்களில் பொறுப்பை இவர்களுக்குக் கொடுக்கக்கூடிய முறையில் திருச்சி, சேலம் போன்ற இடங்களிலும் புதிதாக டெப்டி கமிஷனர்ஸ் ஆப் லேபர் நியமிக்கப்படு வார்களா ? எந்த எந்த இடங்களில் அவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக் கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஏற்கனவே சென்னை, மதுரை, கோவை ஆகிய வட்டாரங்களில் துணை ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுப் பணி யாற்றி வருகிருர்கள். தொழில் துறை அதிகாரிகள் மாநாட்டில் திருச்சி வட்டாரத்திலும் துணை ஆணையாளர் நியமிக்கப்படவேண்டுமென்று கோரப் பட்டது. அந்த மாநாட்டில் நான் கலந்துகொண்டு அதைப் பரிசீலனை செய்வ தாகச் சொல்லியிருக்கிறேன். இப்போது திருச்சியில் ஒரு துணை ஆணையாளரை நியமிக்க அரசு ஆவன செய்து வருகிறது.

**திரு. மா. வே. நாராயணசாமி :** தற்போதுள்ள டெப்டி கமிஷனர்ஸ் ஆப் லேபர், லேபர் ஆபீசர்கள் ஆகியோருக்குத் தொழில் தகராறுகளைத் தீர்க்கும் விஷயத்தில் வேலைப் பளு அதிகமாக இருப்பதால் இன்னும் சிறிது அதிகமான அளவிற்கு இந்தத் தொழிலாளர் நலத் துறை அலுவலர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** நிதிவசதிக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. எம். சுரேந்திரன் :** தற்போதுள்ள தொழிலாளர் வழக்குகளில் ஈடுபட்டு அவற்றைத் தீர்ப்பதற்கு டெப்டி கமிஷனர்ஸ் ஆப் லேபர் போதுமான எண்ணிக்கையில் இல்லை என்று அரசுக்குத் திருப்தி ஏற்பட்ட காரணத்தினால் தான் அதை இன்னும் அதிகப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் படுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதைத்தான் ஏற்கனவே நான் தெரிவித்தேன். நிதிவசதி ஏற்பட்டதும் மாண்புமிகு உறுப்பினர் கருத்து நினைவிற்கொள்ளப்படும்.

**திரு. த. சோணையா :** தொழிலாளர் நலன் கருதி அமைக்கப்படுகிற துணை ஆணையாளர்கள் நகரங்களைப்பொறுத்து அதன் அடிப்படையில் அமைக்கப்படுகிறதா அல்லது ஆங்காங்குள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் அமைக்கப்படுகிறதா ? எந்த வகையில் கணக்கிடப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தொழிலாளர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்களோ அந்த விகிதத்திற்கேற்ப இது அமைக்கப்படுகிறது.

## சென்னையிலுள்ள ஓட்டல் தொழிலாளர்கள்

* 452. வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

சென்னை நகர ஓட்டல்களில் எட்டு மணி நேரந்தான் தொழிலாளர் பணியாற்ற வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இவ்வினா எழவில்லை. ஏனெனில் ஆறு நாட்கள் கொண்ட ஒரு வாரத்தில் வேலைநேரம் 48 மணி நேரத்துக்கு மேற்படக்கூடாது என்றிருந்த போதிலும் இளைஞர்களைதவிர ஏனைய தொழிலாளர்களுக்கான வேலை நேரம் நாள் ஒன்றுக்கு 9 மணி நேரத்துக்கு மேற்படக் கூடாது. நாள் ஒன்றுக்கான வேலை நேரம் 8 மணி நேரம் என்ற வீதத்தில் ஆறு



நாட்கள் கொண்ட ஒரு வாரத்தில் 48 மணி நேரம் பணிபுரிய வேண்டுமென்ற வரையறையை அப்படியே பின்பற்ற வேண்டுமென்பதல்ல. ஏனென்றால் மிகை நேரப் பணி உட்பட எந்த ஒரு நாளிலும் பணிக்கால அளவு 10 மணி நேரத்துக்கு மேற்படக் கூடாது என்னும் நிபந்தனைக்கும், எந்தவொரு காலாண்டிலும் மிகை வேலைநேரம் 50 மணி நேரத்துக்கு மேற்படக் கூடாது என்றும் நிபந்தனைக்கு ஒரு நாளில் 9 மணி நேரத்திற்கு மேற்பட்டு அல்லது ஒரு வாரத்தில் 48 மணி நேரத்துக்கு மேற்பட்டு மிகை நேர வேலை அனுமதிக்கப்படும். அத்தகைய மிகைநேர வேலைக்குச் சாதாரண ஊதிய வீதத்தைப்போல் இரு மடங்கு ஊதியம் வழங்கப்படவேண்டும்.

**திரு. கா. வேழவேந்தன் :** ஓட்டல்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் மாலை நேரத்தில் வருபவர்கள் விருந்துக்குப்பிறகு இரவில் மிகவும் நேரம் கழித்துத் தான் திரும்ப வேண்டியிருக்கிறது. எட்டு மணி நேரம், ஒன்பது மணி நேரம் என்ற வேலைநேரம்போய் அவர்கள் 10, 12 மணி நேரம் கூடப் பணியாற்றுகிறார்கள். அப்படிப் பணியாற்றுகிற ஓட்டல் தொழிலாளர்களுக்குக் கண்டிப்பாக ஓவர் டைம் வேஜஸ் கொடுக்கவேண்டும் அல்லது எட்டு மணி நேரம்தான் வேலை செய்ய வேண்டும் என்பதுகுறித்து ஒரு சுற்றறிக்கை எல்லா ஓட்டல் நிறுவனங்களுக்கும் அனுப்பப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** வேலைநேரம் மிகுதியாக இருந்தால் அவசியம் ஓவர் டைம் தரப்பட வேண்டுமென்பது அரசாங்கத்தின் கருத்தாகும்.

**திரு. கே. எ. வகாப் :** பொதுவாக ஓட்டல் தொழிலாளர்கள், குறிப்பாக சப்ளையர்கள் பணி மிகவும் சிரமமான பணியாகும். அவர்களின் வேலை நேரத்தை எட்டு மணி நேரத்திலிருந்து சற்றுக் குறைத்து அவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அவ்வித எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** ஓட்டல் தொழிலானது பழைய காலத்தில் இருந்தது மாதிரி இல்லாமல் இப்போது ஒரு பெரிய தொழிற்சாலையில் வேலை செய்கிற மாதிரி அத்தொழில் நடந்து வருகிறது. இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் கட்டுக்கோப்பான நிலையில் இல்லாத காரணத்தினால் அவர்களது உரிமைகளை வற்புறுத்திப் பெற்றுக்கொள்வதற்கான சக்தி இல்லாதவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அரசின் கவனம் அவர்கள்பால்

ஏற்பட்டு அரசு உத்தரவுகள் சரியான முறையில் அமல்படுத்தப்படுகின்றனவா, அவை நடைமுறையில் இருக்கின்றனவா, அதனால் பலன் ஏற்பட்டிருக்கிறதா என்பதை ஆராய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் அந்த அடிப்படையில்தான் அரசு நடக்கிறது. எங்கேயாவது இந்த விதிகளுக்கு மாறுபட்டு நடந்தால் அதை ஆதாரத்துடன் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

**திரு. என். கே. பழனிசாமி :** ஓட்டல் தொழிலாளர்களின் முக்கியமான குறை அவர்களுக்கு நிரந்தரமான வேலை இல்லை என்பதுதான். ஆறு மாத காலம் அவர்கள் வேலை செய்தால் அவர்களை நிரந்தரமாக்கவேண்டும் என்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் ஆறு மாத காலத்திற்கு முன்பாகவே அவர்களை முதலாளிகள் வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். அதாவது தினக்கூலி என்ற அடிப்படையில்தான் ஓட்டல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே சட்டத்தைத் திருத்தியாவது ஓட்டல் தொழிலாளர்களுக்கு வேலைப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய முறையில் சட்டம் கொண்டுவர அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** சில ஓட்டல்களில் இதுபோன்ற சில நிலைமைகள் ஏற்படுவதால் அவர்களுக்கெல்லாம் சர்வீஸ் கார்ட்ஸ் வழங்க வேண்டுமென்ற திட்டத்தை அரசு கொண்டுவந்திருக்கிறது. ஆனால் உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் இருந்தால் அதுபற்றிக் குறிப்பிட்டு எழுதி அரசுக்கு தெரிவித்தால் அதுபற்றி ஆராயப்படும்.

**திரு. கே. கந்தசாமி :** ஓட்டல் தொழிலாளர்களுக்கு எட்டு மணி நேரம் வேலை நேரம் என்பது தமிழ்நாட்டில் உள்ள எல்லா நகரங்களிலும் செயல்பட்டு வருகிறதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அரசு சம்பந்தப்பட்டமட்டில், 8 மணி நேரம்தான் என்பதை ஓட்டல் நிர்வாகிகள் திட்டவட்டமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. அதற்கு மாறாக எந்த ஓட்டலிலாவது நடந்தால் அதை அரசின் நினைவுக்கு விரைவாகக் கொண்டு வரலாம். இல்லாத இடங்களைப்பற்றிச்சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. த. சோலையா :** இந்த ஓட்டல் தொழிலாளர்களிடம் வேலை வாங்கிவிட்டு இரவு நேரங்களில் அவர்களுக்குத் தங்குவதற்கு வசதியில்லாத காரணத்தால் அவர்களை ப்ளாட்பாரத்திற்கு அனுப்பிவிடுகிறார்கள். சில நகரங்களில்



பாலைக் கறந்துவிட்டு பிறகு மாடுகளைப் பற்றிவிட்டு விடுகிறார்களே, அதேபோல் முதலாளிகள் இந்தத் தொழிலாளிகளை அப்படி அனுப்பிவிடுகிறார்கள். அந் நிலையை மாற்றியமைத்து அந்தத் தொழிலாளிகள் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்கும் விதத்தில் அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** பொத்தாம் பொதுவாகச் சொல்லாமல் குறிப்பிட்ட இடத்தில் இப்படி நடைபெறுகிறது என்று தெரிவித்தால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 453. **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரிப்பேட்டைத் துணை வட்டம், இலச்சிவாக்கம் அரிசனக் காலனியில் வீட்டு மனை இன்றி இருக்கும் ஏழை அரிசனங்களுக்கு வீட்டு மனை ஆர்ஜிதம் செய்து தருவதில் ஏற்படும் தாமதத்திற்குக் காரணங்கள் யாவை ?

(இ) இவ்வேலை எப்போது முடிவு பெறும் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ)** நில உரிமை பெறும் மத்திய அரசு சட்டத்தின், பிரிவு 6-ன்கீழ் விளம்பர வரைவு ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன் :** இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவாவது அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்குச் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நலத்துறை இயக்குநர் அவர்கள் அரசிடம் நிதிப் பற்றாக்குறை காரணமாக கூடுதலான தொகை கேட்டிருக்கிறார்கள். 15 லட்சம் ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அதைக் கொடுத்துவிட்ட பிறகு நிச்சயமாகப் பட்டா வழங்கப்படும்.

* 454. **வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுகா சூரப்பள்ளி கிராமத்தில் குப்பம்பட்டி அரிசனச் சேரியை மாற்றுவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் வேறு யாராவது ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அவர்களை வெளியேற்றுவதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவரவர்களே, குப்பம்பட்டி கிராமத்தில் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட புறம்போக்கு நிலத்தை ஒரு செட்டியார் ஒரு கவுண்டருக்கு விற்று விட்டு, அந்த நிலத்தைப் பட்டா செய்துகொண்டு
மு.ப. விட்டார். அதனால் அந்தக் குப்பம்பட்டி ஜனங்களுக்கு நிலப்பட்டா ஒதுக்கா
9-30 மல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அரிசனங்கள் தற்போது 85/2 என் இடத்தில் குடியிருக்கிறார்கள். அங்கேயிருக்கும் 43/2 சர்வே எண்ணுள்ள இடத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்று தாசில்தார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற அந்த கவுண்டர் இருக்கக் கூடிய இடம் நிலம் சர்வே எண் 84/6 என்பதுதான். அது திருமதி முனியம்மாள், பெரியதம்பி கவுண்டர் மனைவிக்குக் கொடுக்கப்பட்டது. அரிசனங்கள் இருக்கும் இடம் மந்தைவெளிப்புறம்போக்காக இருக்கிறது. அதை வில்லேஜ் புறம்போக்காக மாறுவதற்கு தாசில்தார் ஈடுபட்டு இருக்கிறார். அதன்பிறகு அந்த இடம் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இந்த நிலப்பட்டா செய்து கொடுத்ததற்குப் பின்னால் அங்கே ஆர்.டி.ஓ. சென்று, செய்தது தவறு என்று சொல்லி, அவர்களுக்குச் சமாதானமாக ஊக்கம் கொடுத்து, சமரச முயற்சிமூலம் அந்த நிலங்களை எடுக்க அந்தப் பிரச்னை இன்வஸ்டிகேஷனில் இருந்து கொண்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற நிலம் வேறு. அது 84/6 என்கிற சர்வே நெ. 84/85 என்கிற சர்வே நெம்பர். இந்த இரண்டு இடத்தையும்தான் ஒருவர் சென்று அதை கையகப்படுத்தியிருக்கிறார். திருமதி முனியம்மாள் பெரியதம்பி கவுண்டரின் மனைவி 2 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கி இருக்கிறார். அந்த இடத்தைச் சர்க்காரிடம் கொடுக்க மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார். பிறகு டி.ஆர்.ஓ. சென்று விலைக்கு வாங்கிவிட்ட பிறகு அதைக் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லிக் கொடுத்திருக்கிறார். அரிசனங்கள் இருக்கும் 43/2 சர்வே எண்ணுள்ள இடத்தை 2.65 ஏக்கர் நிலம் அதை நான் முன்னாலே குறிப்பிட்டதுபோல் வில்லேஜ் புறம்போக்காக மாற்றிப் பட்டா வழங்க இருக்கிறார்கள். அது விரைவில் வழங்கப்படும்.





## மரூர் அரிசனக் காலனிகளுக்கு மின்இணைப்பு

* 455. வினா—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், மரூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு இன்றுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எப்பொழுது மின் இணைப்பு வழங்கப்படும்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) ஊராட்சி மன்றத்தின் தீர்மானமும், செல்நிலைச் சான்றிதழும் கிடைக்கப்பெற்றபின் மின் இணைப்பு வேலை பூர்த்தி செய்யப்படும்.

**திரு. ந. தருமலிங்கம்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மரூர் காலனியில் 500-க்கு மேற்பட்ட அரிசனங்கள் வாழ்கிற காரணத்தால் அங்கே அரசியல் காரணமாக அங்கே வருகின்ற பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டுக் கொடுக்கமாட்டேன் என்று தகராறு செய்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து அரிசின் வேல்பேர் பண்டிலிருந்து செலவு செய்து மின் இணைப்புத் தர முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அரிசனங்கள் இருக்கும் பகுதிகளில் ஆகும் மின் செலவு அத்தனையும் நலத்துறைதான் ஒப்புக்கொள்கிறது. ஏறத்தாழ ரூ. 40 லட்சம் ரூ. 70 லட்சம் என்று ஒவ்வொரு ஆண்டும் மின்சார வாரியத்திற்குப் பணம் தருகிறோம். அதை நலத்துறைதான் ஏற்றுக்கொள்கிறது. அந்த கிராமத்தைப் பொறுத்தவரையில் பழைய மரூர், புதிய மரூர் என்று இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. பழைய மரூர் கிராமத்திற்கு மின் இணைப்புத் தரவேண்டுமென்று சொல்கிறபோது, புதிய மரூர் கிராமத்திற்கும் சேர்த்து ஒன்றாகத் தரவேண்டுமென்று கேட்டார்கள். பழைய மரூர் கிராமப் பஞ்சாயத்துதான் தீர்மானம் போட்டு அனுப்பியுள்ளது. புதிய கிராமத்திலிருந்து தீர்மானம் வரவில்லை. புதிய கிராமத்திலிருந்து தீர்மானம் வந்ததும் இணைப்புக் கொடுக்கப்படும் என்று மின்சார இலாகா செயலாளர் கூறியிருக்கிறார். உள்ளே இருக்கும் கோளாறு என்ன என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாமல் இருக்கமுடியாது. அந்தக் கோளாறை நீக்கி மன்றத் தலைவர் மூலமாகத் தீர்மானம் போட்டுக் கொடுத்தால் விரைவில் அந்தப் பணி முடிவுறும்.

[1973 மார்ச் 21

### புகையிலை தீவிர சாகுபடித் திட்டம்.

* 456. வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நடப்பாண்டில் தமிழ்நாட்டில் புகையிலை தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் செலவிடப்படவிருக்கும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நடப்பாண்டில் தமிழ்நாட்டில் புகையிலை தீவிர சாகுபடித் திட்டத்திற்கு ரூ. 1,15,375 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, எவ்வளவு ஏக்கர் நிலத்தில் அந்தப் புகையிலை சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது ? ஒரு ஏக்கரில் புகையிலை உற்பத்தி செய்தால் லாபம் எவ்வளவு வரும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் வாய் புகையிலை சுமார் 16,000 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டத்தின் மூலம் பயிர் செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்காக கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு ஏக்கருக்கு ரூ. 425 வரை கடன் வழங்கப்படுகிறது. அதிலே பூச்சி மருந்துக்காக ரூ. 15-ம், உரத்திற்காக ரூ. 135-ம், ரொக்கமாக ரூ. 275-ம் வழங்கப்படும். மாதிரி நிருபணங்களுக்கு மானியம் ஒவ்வொரு நிருபண வயலுக்கும் ரூ. 50 வீதம் உழவர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உள்ள தொழில் நுட்ப உதவியாளர் எல்லாப் புகையிலை பயிரிடும் விவசாயிகளையும் நேரில் சென்று பார்த்து, நவீன விஞ்ஞான சாகுபடி முறைகளை அவ்வப் போது வழங்கி வருகிறார்கள்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, இப்போது பீடி சுற்றுவதற்கான புகையிலை குஜராத், மைசூர் போன்ற மாநிலங்களிலிருந்துதான் வருகிறது. அதை தமிழ் நாட்டில் வளர்ப்பதற்காக ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது வாய்ப் புகையிலை பற்றியது. பீடி புகையிலைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் தகப்பனார் காலத்திலேயே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அது சரியாக வரவில்லை என்பதால் கைவிடப் பட்டிருக்கிறது.



1973 மார்ச்-21]

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் சிகரெட்டுக்கான உயர்ரகப் புகையிலை வளர்க்கப்படுகிறதா, இல்லையென்றால் அந்தப் புகையிலையை வளர்ப்பதற்கு வழிவகை செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தற்போது சிகரெட்டுக்காக புகையிலை வளர்க்கப்படுகின்ற திட்டம் இல்லை. ஆனால் தருமபுரி மாவட்டத்தில் சிகரெட் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்காகவும், அதற்காக புகையிலை பயிரிடவும் தீவிரத் திட்டம் தயாரிக்கப் பட்டு, மத்திய சர்க்காரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, நல்ல தரமான புகையிலை வளர்ப்பதற்காக தீவிர சாகுபடித் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மற்றவற்றிற்கு ரிசர்ச் இன்ஸ்டிடியூட் மூலம் விதை தயாரித்துக்கொடுப்பது போல், இதற்கும் விதை தயாரிக்கும் பண்ணை ஒன்றை ஏற்படுத்தி, சில ஏக்கர்களை அரசே ஏற்று நடத்தி, நல்ல விதைகளைத் தயாரித்துத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது கனம் உறுப்பினர் அவர்களின் தொகுதியான வேடசந்தூரில் அந்தத் திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் தமிழக அரசின் சார்பாக அதை விரிவு படுத்த நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசனை பெறப்பட்டு வருகிறது.

### நெல் கடத்தல்

* 457. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல் கடத்தலைத் தடுக்க "மக்கள் குழு படை" அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இம்மாதிரியாக நெல்லும், அரிசியும் அதிகப்படியாக கேரளாவிற்கு, குறிப்பாக ஆந்திரத்திலிருந்து வந்த நெல்லூர் அரிசியும், சென்னையில் இருக்கக்கூடிய நெல், அரிசி எல்லாம் நூற்றுக்கணக்கான

மூட்டைகள் மறைமுகமாக கடத்தப்படுகின்றன, ரயில் மூலமாகவும், மற்றவற்றின் மூலமாகவும் என்று சொல்லப்படுகிறதே, அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அதைத் தடுப்பதற்காக ஆங்காங்கு சோதனைச் சாவடிகள் வைத்து இருக்கிறோம். இன்னும் நம்முடைய உணவு இலாகாவிற்கு என்று தனியாக ஏற்படுத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் அந்தக் கடத்தல் பொருள்களையெல்லாம் சோதனை நடத்திப் பறிமுதல் செய்து வருகிறார்கள்.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, இந்த நெல் கடத்தலைத் தடுப்பதற்கான சோதனைச் சாவடிகளில் ஒரு சிலரே இருப்பதால், அந்தந்தப் பகுதியில் இருக்கும் ஊர்காவல் படையினரையும், சேரணிப்படையினரையும், அதற்காக உபயோகிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதற்கான செயற்குறிப்பு இல்லை. இப்போது அங்கே பணி புரிகிற சிவில் சப்ளைஸ் அதிகாரிகளையும் போலீஸ் அதிகாரிகளையும் அடிக்கடி மாற்றி வருகிறோம். அதனால் ஊர்காவல் படையினரையும், சேரணிப்படையினரையும் உபயோகிக்கும் செயற்குறிப்பு இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்தமாதிரி கடத்தல் செய்பவர்களைக் காட்டிக்கொடுப்பதற்கு, போலீஸ் இலாகாவில் இன்பார்மென்ட்ஸ் என்று வைத்திருக்கிறார்களே, அது போல் இன்பார்மென்ட்ஸ் வைத்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இவைகளை எல்லாம் சொல்லக் கூடாது என்றாலும், அது போன்ற இன்பார்மென்ட்ஸ் வைத்து இருக்கிறோம். அதிலும் குறிப்பாக அவர்களுடைய மாவட்டத்தில் பல பகுதிகளிலும் இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, இப்போது ரோடு மூலமாக லாரியில் போவதைத் தடுப்பது பற்றித்தான் சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்வது, நூற்றுக்கணக்கான மூட்டைகள் ரயில் மூலம், பதுக்கி எடுத்து செல்லப்படுகின்றன. சென்ற ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும் இம்மாதிரி கடத்தல் செய்யப்பட்டிருக்கிறது. அது தடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** எப்படியெப்படி பதுக்கப்படுகிறது என்பது தெரியும். ரயில் மூலமாகப் பதுக்கப்படுகிறது, ரோடு மூலமாகப் பதுக்கப்படுகிறது, தலைமேல் சுமந்து கொண்டு செல்வது இருக்கிறது.



எந்த அளவுக்கு அவைகளைத் தடுக்க முடியுமோ அதைச் செய்து வருகிறோம். நேற்றையதினம்கூட கோவை மாவட்டத்தில் தலையில் சுமந்துகொண்டும் கட்டை வண்டிகளில் ஏற்றிக்கொண்டும் சென்றவர்களைப் பிடித்து இருக்கிறார்கள்.

நாகர்கோவில் பகுதியில் தலையில் சுமந்து கொண்டு சென்றவர்களை பிடித்து இருக்கிறார்கள். ஓரளவிற்கு அரசாங்கம் கெடுபிடியான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு இருக்கிறது. அவர்கள் சொல்கிறமாதிரி ரயிலில் போவதைத் தடுக்க, குறிப்பாக கேரளா பார்டரில் போவதைத் தடுக்க தனி அதிகாரி போடப்பட்டு, ரயிலில் செல்பவர்களைப் பிடித்துக்கொண்டு இருக்கிறோம்.

**திரு. தொ. க. சிறைமீட்டான்:** கடத்தல்காரர்களைப் பிடித்துக்கொடுப்பவர்களுக்கு ஏதாவது பரிசு கொடுக்கும் திட்டம் இருக்கிறதா? இல்லை என்றால் இனிமேலாவது பரிசுத் திட்டத்தை அமுல் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** கனம் உறுப்பினர் அவர்கள் கேட்காமல் இருந்தது அவருடைய தப்பு. இப்போதே கடத்தல்காரர்களைப் பிடித்துக்கொடுப்பவர்களுக்கு 250 ரூபாய் பரிசு வழங்கப்படுகிறது. கடத்தல்காரர்களைப் பிடித்துக்கொடுக்காமல் இருந்தாலும் அவர்களைப்பற்றிய சரியான தகவல்களைக் கொடுப்பவர்களுக்குக்கூட 250 ரூபாய் பரிசு கொடுக்கப்படுகிறது. கடத்திச் செல்லும் சர்க்கரையோடு பிடித்துக்கொடுத்தால் 1,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய்வரையும் அதற்கும் அதிகமாகப் போனால் 10 சதவிகிதமும் கமிஷனர் மூலமாக பரிசுத்தொகை கொடுக்கப்பட்டு வருகிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பலர் கடத்தலில் ஈடுபட்டார்கள் என்றும் அவர்கள் பிடிபட்டார்கள் என்றும் கேள்விப் பட்டோம். முக்கியமாக யார் யார் கடத்தலில் ஈடுபட்டார்கள், அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் தகவல் கொடுக்கமுடியும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், நான் அறிய விரும்பியது, நூற்றுக்கணக்கான மூட்டைகள் சாதாரண ரயிலில் போகவில்லை; குட்ஸ் வண்டிகளில் கள்ளத்தனமாகப் போய்க்கொண்டிருக்கின்றன; அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதுபற்றி. அதைப்பற்றி அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** குட்ஸ் வண்டியில் பெர்மிட் இல்லாமல் போக முடியாது. அப்படி எங்காவது போவதாக இருந்தால், அதுபற்றி தகவல் கொடுத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்தமாதிரியான கடத்தல் சம்பந்தமாக தமிழ்நாடு அரசு கேரள அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி, கடத்தலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** திரு. பொன்னனப்ப நாடார் அவர்கள் நீண்டகாலமாக இந்த எண்ணத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கேரள அரசோடு நெருங்கியத் தொடர்புடைய திரு. தங்கமணி அவர்கள் தமிழ்நாடு உணவுபொருட்கள் கேரளத்திற்கு கடத்தப்படுவதுபற்றி அங்கே சொல்லி கடத்தலைத் தடுப்பதற்கு முயற்சி செய்தால் நல்லது. நம்முடைய அரசு அதுபற்றி முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

**திரு. இ. எஸ். தியாகராசன்:** தலைவரவர்களே, திருத்தணி ஆந்திராவின் அருகாமையில் இருக்கிறது. ஆகவே, அங்கே செக்போஸ்டுகளை அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதுபற்றிய விபரம் இல்லை. செக்போஸ்டுகளை அமைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டால் அதற்கு ஏற்பாடு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் மூலக்கேள்வியோடு தொடர்புடைய துணைக் கேள்விகளைக் கேளுங்கள். முக்கால் பங்கும் மூலக்கேள்வியோடு சம்பந்தம் இல்லாமலே இருக்கிறது.

**திரு. கே. கந்தசாமி:** உணவுப்பொருள்கள் கள்ளக்கடத்தலை தடுப்பதற்கு நேற்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்ததுபோல் பெண் போலீசாரை நியமித்து, ரகசியமாகத் தகவல் சேகரித்தால் சிறப்பாக இருக்கும், அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இது இருட்டு வேளைகளில் பயங்கரமான பாதைகளில் எல்லாம் சென்று பார்க்கவேண்டியது; பிடிக்க வேண்டியது. அதனால் பெண்கள் இந்த வேலைக்கு பொருத்தமுடையவர்களாக இருக்கமாட்டார்கள்.

**திரு. எஸ். முருகையன்:** இதுவரையில் கடத்தல் செய்தவர்கள் எத்தனை பேர்? அதில் எத்தனை பேர் மீது வழக்குப் போடப்பட்டது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. புள்ளிவிபரம் கேட்கிறீர்கள். டாக்டர் ஹாண்டே அவர்களும் இதுபோன்ற கேள்வியைத்தான் கேட்டார்கள். அதற்கு தனிக் கேள்வி போடவேண்டுமென்று அமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதற்கும் அந்தப் பதில் பொருந்தும்.





## விசேஷ காலங்களில் சர்க்கரை விநியோகம்

* 458.வினா—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ரம்ஜான், பொங்கல், கிருஸ்துமஸ் போன்ற விசேஷ நாட்களின் போது சர்க்கரை அதிக அளவில் விநியோகிக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, ரம்ஜான், பொங்கல், கிறிஸ்துமஸ் போன்ற விசேஷமான பண்டிகை நாட்களில் அதிகமான சர்க்கரை தேவைப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட நாட்களில் தேவைக்கேற்ற அளவுக்கு சர்க்கரை விநியோகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நாங்கள் அதற்காகவே கடந்த தீபாவளி பண்டிகையின்போது மத்திய அரசைக் கேட்டோம். அதாவது 12,000 டன் கொடுக்கவேண்டுமென்று கேட்டோம். அவர்கள் ஏற்கெனவே உள்ள அளவையும் குறைத்துவிட்டார்கள். ஆகவே, விசேஷ நாட்களில்கூட அதிகமாக சர்க்கரை கொடுக்க வழியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மே. சி. தூயமணி:** தலைவரவர்களே, இப்போது சர்க்கரை விநியோக உரிமைபெற்றவர்கள் உரியவர்களுக்கு முறைப்படி விநியோகம் செய்யவில்லை என்று தெரிகிறது. ஆகவே, விநியோகத்தை மாற்றி அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிராமப்புறங்களில் நடைபெறுவதைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஒரு சில இடங்களில் தவறு நடைபெறுகிறது. அதுவும், கிராமப்புறங்களில் சர்க்கரைக் கார்டு பெற்ற ஏழை மக்கள் தங்கள் கார்டுகளை மற்றவர்களுக்கு விற்றுவிடுவதால் ஏற்படுவதாகத் தெரிகிறது. தஞ்சை மாவட்டத்திலும் மற்றும் சில இடங்களிலும் அதைக் கண்டுபிடிப்பதற்காக ரேஷன் கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் கொடுக்கப்படுகிறது; உங்கள் கார்டுகளைக் காட்டுங்கள் அல்லது வரும்போது கொண்டு வாருங்கள் எண்ணெய் கொடுக்கிறோம் என்று சொன்னபோது அவர்கள் கார்டு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அவைகளைஎல்லாம் சரி செய்ய இப்போது தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

[1973 மார்ச் 21

**திரு. சோ. அழகர்சாமி :** இப்போதுள்ள இந்த சர்க்கரை விநியோகம் பெரும்பாலும் தனியார்கள் மூலமாக நடைபெறுவதால் கிராமங்களுக்கு சரியாக சர்க்கரை கிடைக்கவில்லை. ஆகவே, ஆங்காங்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் விநியோகம் செய்யவேண்டுமென்ற கட்டாய உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் விநியோகம் செய்ய உத்தரவு போட்டிருக்கிறோம். கூட்டுறவுச் சங்கங்களே சரியில்லை என்று சட்டமன்றத்திலும் மேல் சபையிலும் புகார்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் சரிசெய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சர்க்கரை விநியோகம் பற்றி ஏற்கெனவே ஏராளமான கேள்விகள் கேட்கப்பட்டு, அமைச்சரவர்கள் அவைகளுக்குப் பதில்களும் சொல்லியிருக்கிறார்கள். மானியக் கோரிக்கையிலும் இந்த விஷயம் பேசப்பட்டிருக்கிறது. ஆகவே, உறுப்பினர்கள் ' விசேஷ நாட்களில் சர்க்கரை விநியோகம் ' பற்றி மட்டும் சுருக்கமாக கேளுங்கள்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, வட மாநிலங்களிலே பண்டிகைகள் வரக்கூடிய விசேஷ நாட்களில் சர்க்கரை அதிகமாக விநியோகம் செய்கிறார்கள். ஆனால் பொங்கலைப் போன்ற தமிழர் பண்டிகை வந்தால் அதிகமான சர்க்கரை வழங்க முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, இந்த ஓரவஞ்சனை தடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இந்த ஓர வஞ்சனையை மாநில அரசு செய்யவில்லை; மத்திய அரசு செய்கிறது. நான் ஏற்கெனவே சொன்னமாதிரி தீபாவளிக்கு அதிகமான சர்க்கரை வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டோம். அதற்கு கொடுத்துவந்த அளவையும் குறைத்துவிட்டார்கள். அதனால் ரேஷன் கடைகளில் கொடுக்கவேண்டிய சர்க்கரையை அட்வான்சாக கொடுக்க ஏற்பாடு செய்தோம். ஆகவே, ஓர வஞ்சனை மாநில அரசைப் பொறுத்தவரையில் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இப்போது சில இடங்களில் சர்க்கரையில் கலப்படம் செய்து விநியோகிப்பதாகப் புகார் இருக்கிறது. தரமான சர்க்கரை விநியோகம் செய்யப்படவில்லை. அதைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அப்படி ஓரிரு ' இடங்களிலிருந்து கலப்படம் செய்யப்படுவதாகப் புகார் வந்திருக்கிறது. அதுபற்றி அதற்கான இலாகா நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.



1973 மார்ச் 21]

THIRU K. T. K. THANGAMANI : I am not putting a supplementary question. I want to make one thing clear. What happens is this. The replies are given by Ministers to supplementary questions and out of the answers, further supplementary question arise. They may not be directly connected with the original question, but when the Minister gives an answer, we are at perfect liberty to ask questions arising out of such answers. Now, the question of sugar is an important subject. Although it is restricted, replies to supplementaries touched upon distribution itself. Then we are at liberty to ask question on the distribution. That is all what I want to submit.

MR. DEPUTY SPEAKER : I do not think I am very strict in restricting the rights of hon. Member on supplementary questions. But as far as possible, the supplementary should pertain to the main question. Sugar is not an ordinary subject and it is a vast subject. Our main problem is time. One question has taken up five or ten minutes. Your supplementaries should relate to the main question.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் சர்க்கரை அதிகமாக உற்பத்தி இருந்தும், நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதே கேள்விக்கு டெல்லியிலிருந்து நமக்கு சர்க்கரைக் கொடுக்கவில்லை என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்தக் கேள்வியையே திருப்பிக் கேட்டால் வேறு என்ன பதிலை சொல்ல முடியும்? ஆகவே, இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

THIRU R. PONNAPPA NADAR : Sir, sugar is a very sweet thing. (Laughter)

MR. DEPUTY SPEAKER : But too much of sugar is not good. Doctors advise not to take too much of sugar (Laughter).

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். ஏற்கெனவே ஒரு கேள்வியை ஒரு உறுப்பினர் கேட்டிருந்தால் அதே கேள்வி மறுபடியும் கேட்க உரிமை இல்லையா என்பதற்கு தாங்கள் தீர்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதிலே உரிமைப்போராட்டத்திற்கு ஒன்றும் இல்லை. உறுப்பினர்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும், உரிமை இல்லாத ஒரே ஒரு நபர் பேரவைத் தலைவர்தான். துணைக்கேள்விகளை மூலக் கேள்வியை ஒட்டியதாகக் கேளுங்கள்.

**திரு. ஏ. எம். இராஜா :** நம்முடைய தமிழ்நாட்டில் சர்க்கரை அதிகமாக உற்பத்தியாகி இருந்தாலும், விசேஷ நாட்களில் சாதாரணமாக கொடுக்கும் அளவையும் குறைத்துவிடுகிறார்கள். அப்படி இல்லாமல் விசேஷ காலங்களில் நம்முடைய தேவைக்கு அதிகமாகக் கொடுக்காவிட்டாலும் தேவைக்கு ஏற்ற படி கொடுக்காமல் இருப்பதற்கு அரசியல் உள்நோக்கம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அதை நான் அறியேன் பராபரமே!

**திரு. எம். சுரேந்திரன் :** விசேஷ காலங்களில் அதிகமாக சர்க்கரை வழங்கப்படுகிற சர்க்கரையே மக்களுக்குச் சரியாக விநியோகம் செய்யப் படுவதில்லை என்கிற புகார்கள் இருக்கின்றனவே, இன்றைக்கு கிராமங்களில் ஊராட்சித் தலைவர்கள் மூலமாக சர்க்கரை வழங்குவதால் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் தகவல் தெரிந்து கொள்ளத்தான் கேள்விபோட வேண்டும். புகார்களுக்கோ, குற்றச்சாட்டிற்கோ கேள்வி நேரத்தைப் பயன்படுத்தக் கூடாது.

**திரு. எம். சுரேந்திரன் :** இன்றைக்கு இவர்கள் கொடுக்கிற லாப மார்ஜின் கப்படுவதுபற்றி யோசிப்பதைக் காட்டிலும், சாதாரண காலங்களில் வழங்கப் போதவில்லை என்பதாக ஊராட்சித் தலைவர்கள் அதிக விலைக்கு அங்கங்கே விற்றுவிடுகிறார்கள் என்கிற புகார்கள் இருக்கின்றனவே, அவற்றைச் சரி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** கனம் உறுப்பினர் தம் கேள்வி மூலம் திசை திருப்புகிறார். விசேஷ காலங்களில் கூட மக்களுக்கு அதிக சர்க்கரை கொடுக்க மத்திய அரசு அனுமதிப்பதில்லை என்று சொன்னேன். அதோடு இன்றைக்கு டீக்கடைக்காரர்கள், ஹோட்டல் காரர்கள் ஆகியவர்களின் மூலம்தான் இந்த கள்ளமார்க்கெட்டே வருகிறது. இந்த ஊழல்களை எல்லாம் போக்க 12 ஆயிரம் டன் சக்கரை கொடுத்து விடுங்கள், இவர்களுக்கும் நியாய விலையில் சர்க்கரை கிடைக்க செய்துவிட்டால் இது சம்பந்தமாக ஏற்படுகிற பலவிதமான ஊழல்கள் அகற்றப்படும் என்று நாங்கள் தெரிவித்திருக்கிறோம்.

**திரு. த. சோணையா :** நாம் விசேஷ காலங்களில் மக்களுக்கு இனிப்பு வழங்க அதிக சர்க்கரை வேண்டும் என்று கேட்கிறோம். அவர்கள் இல்லை என்கிற கசப்பான வார்த்தைகளைத்தானே சொல்கிறார்கள். அதற்குமாறாக எப்போது இனிப்பான செய்தி வரும் என்று சொல்ல முடியுமா?

(விடையில்லை)





*Double decker buses.*

* 459 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state the details as to how the double decker buses withdrawn from the long distance routes are being utilised at present?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பதினான்கு இரட்டை மாடிப் பேருந்துகளில் மூன்று பேருந்துகளின் அடிச் சட்டங்களில் வெளிப்படையாக விரிசல்கள் காணப் பட்டதால் அவை பணிக்கு உதவாது எனத் தீர்மானித்து அவற்றைப் பொது ஏலத்தில் விற்றுவிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 11 இரட்டைமாடிப் பேருந்துகள் மாவட்டப் பணிப் பேருந்துகளாக மாற்ற ஆணையிடப்பட்டுள்ளது.

**புலவர் சி. பழனிச்சாமி :** நெடுந்தொலைவுக்கு ஓடிக்கொண்டிருந்த மாடி பஸ்கள் என்னென்ன குறைகள் காரணமாக நிறுத்தப்பட்டுவிட்டன? அந்தக் குறைகளைக் களைந்து மீண்டும் ஓடச் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நெடுந்தொலைவு பயணம் செய்கிற பயணிகள் அதில் தங்களுக்குப் போதுமான வசதிகள் இல்லை என்று குறிப்பிட்டதன் காரணமாக அவை நிறுத்தப்பட்டுவிட்டன.

**திரு. கு. காமாட்சி :** இந்த மாடிப் பேருந்துகளை சென்னையைச் சுற்றிப் பார்க்க வருகிற பயணிகளுக்கு பிக்சட் ரேட் வைத்து டூரிஸ்ட் லக்சுரி பஸ்களாக விடுவதற்கு அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாடிப் பேருந்துகளில் பயணம் செய்தால் மாநகரம் முழுவதையும் காணலாம் என்ற கருத்தை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மாடி பஸ்களைக் கட்டும்போது அது எத்தனை மைலேஜ் போகவேண்டும் என்று நிர்ணயித்தார்கள்? அந்த அளவுக்கு ஓடியிருக்கிறதா? இல்லையென்றால் அவற்றை ஏலம் விடுவதன்மூலம் அரசுக்கு லாபமா, நஷ்டமா? எவ்வளவு என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அந்த மாடி பஸ்களைக் கட்டும் போது 2 லட்சம் கிலோ மீட்டர் ஓடினால்போதும் என்று நிர்ணயிக்கப்பட்டது. ஒரே ஒரு பஸ் தவிர மற்ற 10 பஸ்கள் அந்த 2 லட்சம் கிலோமீட்டர் தூரம் ஓடியிருக்கிறது. அதனால் அரசுக்கு எந்தவித நஷ்டமும் இல்லை.

**திரு. ஏ. எம். இராஜா :** மாடி பஸ்களைக் கட்டுவதற்கு அதிகமான செலவு ஆகியிருக்கிறதே. சென்னை வழித்தடங்களில் அவற்றைச் சாதாரண பஸ்களாக வாவது மாற்றிவிடுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவற்றை நெடுந்தூர வழித் தடங்களில் விடுவதில்லை என்று அரசு தீர்மானித்துவிட்டது. ஆகவே, இருக்கிற மாடி பஸ்களை சாதாரண பஸ்களாக மாற்ற கிட்டத்தட்ட 4,35,600 ரூபாய் அனுமதித்து, அவைகளை எல்லாம் மாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. மாடி பஸ்களை மாநகரங்களில் விடுவதில் சிக்கலும், சிரமங்களும் இருப் பதால் அப்படி விடுவதற்கில்லை.

**திரு. எஸ். நல்லசாமி :** பஸ்கள் தேச உடைமை ஆக்கப்பட்டதற்குப் பிறகு வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருந்த பஸ்களைகூட சில தனியார்கள் நிறுத்தி விட்டார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** நீங்கள் மூலக்கேள்வியை ஒட்டி மாடி பஸ்களைப்பற்றித்தான் கேட்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அப்படி ஏதேனும் குறை இருந் தால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் ஆவன செய்ய முடியும்.

**திரு. எம். சுரேந்திரன் :** மாடி பஸ்களுக்கு அதிகமான பணம் செலவழித்து சாதாரணமான பஸ்களாக மாற்றுவதைவிட அதை லக்சுரி கோச்சாகவே வைத்து, தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் அமைத்து, குழந்தைகளின் சுற்றுலாப் பயணத்திற்கு உபயோகப்படுத்தும் யோசனை நல்லது இல்லையா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அத்தகைய யோசனை எதுவும் இல்லை.

### வந்தவாசிக்கு விரைவுப் பேருந்துப்பணி

* 460. வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வந்தவாசி-வேலூர், வந்தவாசி-உத்திரமேரூர்-சென்னை துரித வண்டி விட செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** வந்தவாசிக்கும் சென்னைக்கும் அப்படி துரித பஸ் விடுகிற செயற்குறிப்பு இல்லை என்றாலும் திருச்சிக்குச் செல்கிற துரித பஸ்களை





யாவது காஞ்சீபுரம், வந்தவாசி, திண்டிவனம் வழியாகச் செல்ல ஏற்பாடு செய் வார்களா ? அப்படிச் செய்வதன் மூலம் அதிகமானபேர்கள் பயன் அடைவார் கள் என்பதை அரசு உணருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** குறிப்பாக சென்னையில் இருந்து 150, 200 மைல்களுக்குள் உள்ளவர்கள் துரித வண்டியைப் பயன்படுத்த விரும்பு வதில்லை. காரணம் கட்டணம் அதிகமாக இருப்பதுதான். அதேநேரம் நீண்ட தூரம் போகிறபஸ்களை நெடுஞ்சாலையைவிட்டு இப்படி சுற்றுப்புற நகரங்களைச் சுற்றி வளைத்துக்கொண்டு போகச் செய்வதன்மூலம் அதில் பயணம் செய்கிற வர்களுக்கு கஷ்டமாக இருக்கும், சீக்கிரம், செல்வதற்கு இடையூறாக இருக்கும். ஆகவே அந்த யோசனையையும் ஏற்பதற்கில்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பயணிகளைப் பற்றிச் சொன்னார்கள். நாகப்பட்டினம் செல்லுகிற பெருந்துகளில் நாகூர் போகிற பயணிகள் காஞ்சிபுரத்திலும், வந்தவாசியிலும் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். மேலும் இந்த வழித் தடத்தில் செல்லுவதால் நல்ல பாதை இருக்கிறது, மேலும் கூட 8 மைல் தான் ஆகிறது. ஆகவே, இதை அரசு மறு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே இது மைல் கணக்கிலே எடுக்கப்பட்டதல்ல. தேசீய நெடுஞ்சாலை இதர நெடுஞ்சாலை வேறு பாட்டைப் பொறுத்தது. வந்தவாசியில் உள்ளவர்கள் போகவேண்டுமானால் வேலூரிலிருந்து போக ஏதாவது தொலை தூர பஸ்கள் விடுவதற்கான நட வடிக்கை வேண்டுமானால் அரசு பரிசீலிக்கலாமே தவிர, சென்னையிலிருந்து நேராகச் செல்கிறவர்களை அந்த வழியாகப் போகச் சொல்வது சரியல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மு.ப. 10-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

### (2) அவையுரிமைப் பிரச்னை

டில்லி, 'தமிழ்நாடு இல்லம்' பற்றிய வினாவுக்கு பேரவையில் முதலமைச்சர் கூறிய பதிலைத் திரித்து 'தென்னகம்' நாளிதழ் வெளியிட்டிருப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. வீராசாமி 184-வது விதியின் கீழ் அவை முன் ஒரு பிரிவிலேஜ் இஷ்யூ கொண்டு வந்திருக்கிறார்கள். இப்பேரவையில் 17—3—1973-ம் நாளன்று, டில்லியிலுள்ள 'தமிழ் நாடு

[1973 மார்ச் 21

இல்லம்' பற்றிய துணை வினா ஒன்றுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடையளிக்கையில் கூறியவற்றை சென்னை 20—3—1973, வெளியூர் 21—3—1973 நாளிட்ட தென்னகம் தமிழ் நாளிதழில் "சட்டசபைக்கு முன்னால் அப்பட்டமான உண்மைகளை மறைக்கும் 'சத்புத்திரர்களே" என்று தலைப் பிட்டுத் திரித்து வெளியிட்டுள்ளது. அவையில் நடந்தது இது தான்.

"திரு. க. உரொ. எட்மண்ட்: துணைத் தலைவர் அவர்களே, டில்லியிலுள்ள தமிழ் நாடு இல்லத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலவசமாகத் தங்கு வதற்கு அனுமதிக்கப்படுகின்றனரா? இல்லையென்றால் சமீபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் அவர்கள் அங்கே இலவசமாகத் தங்கியதாக பத்திரிகையில் செய்தி வந்ததே, அதைப்பற்றி விளக்கம் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அது உண்மை அல்ல. அது அ. தி. மு. க. வின் விஷமப் பிரச்சாரங்களில் ஒன்று. நாடாளுமன்ற உறுப் பினராக இருந்தாலும் முரசொலி மாறன் உரிய வாடகையைச் செலுத்தித் தான் அங்கே தங்கியிருந்தார்கள். காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட அப்படித் தங்கியிருக்கிறார்கள். ஒரு சிலர் இங்கே வீட்டைப் பெற்று வாடகைக்கு விட்டிருக்கிறார்கள் என்று கூடக் கேள்விப்படுகிறேன். ஆனால் முரசொலி மாறன் அப்படிச் செய்யவில்லை. அவர் அங்கே தங்கி இருக்கும் போது முழு வாடகையும் செலுத்தியிருக்கிறாரே தவிர, வாடகை ஏய்ப்பும் செய்யவில்லை, வரி ஏய்ப்பும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்."

**இது, பத்திரிகையில் வெளிவந்துள்ள விதம் பின்வருமாறு :—**

"டில்லியில் உள்ள தமிழ் நாடு மாளிகையினை—மாமன் கருணாநிதி முதல மைச்சராக இருப்பதால் மருமகன் மாறன் கட்டியாண்டு வருகிறார் என்பது குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச் சாட்டுக்குப் பதில் சொல்லப் புகுந்த கருணாநிதியோ வண்ட வாளங்கள் இப்படி அம்பலமாகிறதே என்று ஆத்திரத்தில்—

சட்டமன்ற உறுப்பினர்கள் சாதாரணமானவர்கள், ஒன்றும் தெரியாத வர்கள், என்று நினைத்துக் கொண்டு—

தனக்கே உரித்தான திமிரினால் "சட்ட சபைக்குத் தவறான தகவல்களைத் தந்ததுடன்" மாறனுக்கு வீடு கிடைக்கவில்லை, அதனால் தான் தமிழக அரசு மாளிகையில் தங்கியிருக்கிறார் என்று அப்பட்டமாக உண்மையை மறைத்து கே. டி. கே. தங்கமணி அவர்களுக்குப் பதில் சொல்லியிருக்கிறார்,



1973 மார்ச் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

அரசியல் துரியோதனர்களுக்கு அடைக்கலம் தருவதே வாடிக்கையாகி விட்ட அந்த திருதராஷ்டிரப் பிறவிகளுக்கு மீண்டும் ஒரு முறை கேள்விகளை வரிசைப்படுத்துகிறோம்.

பிரச்னை வாடகை தந்தாரா இல்லையா என்பதே அல்ல.

எந்த ஒன்றிலும் மரபுகளோ, ஒழுக்கமோ முக்கியமல்ல. வாடகை வசூல் தான் முக்கியம் என்று கருதுவோர் வேண்டுமானால் வாடகைச் சங்கதிகளில் குறியாக இருப்பதில் நமக்குக் கவலையில்லை, நட்டமும் இல்லை.

கேள்வியெல்லாம் "மாமன், முதலமைச்சராக இருப்பதால் மருமகன் தமிழக அரசின் மாளிகையை துஷ்பிரயோகம் செய்கிறார் என்பது தான்."

எனவே, இது இப்பேரவையில் நடக்காத ஒன்றை நடந்ததாக வெளியிட்ட துடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விடையையும் அதற்கான வினாவையும் திரித்து வெளியிட்டுள்ளது இப்பேரவையின் உரிமையை மீறிய செயல் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று எழுப்பி யிருக்கிறார். இது எப்படி அவையுரிமையை மீறியதாகும் என்று சுருக்கமாக விளக்கும்படி அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, பேரவையின் 184-வது விதியின் கீழ் இந்த அவை உரிமை மீறிய பிரச்னை பற்றி நான் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

இப்பேரவையில் 17—3—1973-ம் நாளன்று, டில்லியிலுள்ள 'தமிழ் நாடு இல்லம்' பற்றிய துணை வினா ஒன்றுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடையளிக்கையில் கூறியவற்றை சென்னை 20—3— 1973 வெளியூர் 21---3---1973 நாளிட்ட தென்னகம் தமிழ் நாளிதழில் "சட்டசபைக்கு முன்னால் அப்பட்ட மான உண்மைகளை மறைக்கும் சத்புத்திரர்களே" என்று தலைப்பிட்டுத் திரித்து வெளியிட்டுள்ளது. அவையில் நடந்த செய்தியை நான் குறிப்பிட விரும்பு கிறேன். அன்றையதினம் மன்றத்தில் கேள்வி கேட்ட நேரத்தில் மாண்புமிகு அ. தி. மு. க. உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் ஒரு துணைக் கேள்வியைக் கேட்டார்கள். அந்தக் கேள்வி என்னவென்பதை நான் சொல்ல விரும்பு கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எப்படி பிரிவிலேஜ் என்பதற்கு பாயிண்டுகளைச் சொல்லுங்கள்.

[1973 மார்ச் 21

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, அவர் கேட்ட கேள்வி வேறு, ஆனல் இந்தப் பத்திரிகையில் என்ன சொல்லியிருக்கிருர்கள் என்ருல் டில்லியிலுள்ள தமிழ் நாடு மாளிகையினை மாமன் கருணுநிதி முதலமைச்சராக இருப்பதால் மருமகன் மாறன் கட்டியாண்டு வருகிருர் என்ற குற்றச்சாட்டைச் சொல்கிருர்கள். அப்படி இந்த மன்றத்தில் கேள்வி கேட்கவில்லை. தமிழ் நாட்டு இல்லத்தில் முரசொலி மாறன் இலவசமாகத் தங்கியிருக்கிருரா என்று கேள்வி கேட்கப்பட்டதே தவிர பத்திரிகையில் குறிப்பிட்டிருப்பதைப்போல இந்த மன்றத்தில் யாரும் கேள்வி கேட்கவில்லை.

இரண்டாவது, சட்ட மன்ற உறுப்பினர்கள் சாதாரணமானவர்கள் என்றும் ஒன்றும் தெரியாதவர்கள் என்றும் சொல்லியிருக்கிருர்கள். உள்ளபடியே இந்த மாமன்றத்தில் இருக்கக் கூடிய அத்தனைபேரும் அண்ணு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் உள்பட ஒன்றும் தெரியாதவர்கள் என்பதை தென்னகம் வெளியிட்டுக் காட்டியிருப்பது விசித்திரமாக இருக்கிறது. இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் அத்தனையும் அறிந்தவர்கள் என்று இல்லாவிட்டாலும் அவரவர்களுக்குத் தெரிந்த உண்மைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிருர்கள். அப்படியிருக்கும்போது அவர்களை ஒன்றும் தெரியாதவர்கள், சாதாரணமானவர்கள் என்று தவருன முறையில் இந்த மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு நோக்கம் கற்பிக்க வேண்டுமென்ற வகையில் வெளியிட்டிருக்கிருர்கள்.

அது மட்டுமல்ல, முதலமைச்சரவர்கள் தனக்கே உரித்தான திமிரினுல் சட்ட சபைக்குத் தவருன தகவலைத் தந்தார்கள் என்கிருர்கள். முதலமைச்சர் அவர்கள் அளித்த பதில் திமிரான பதிலா என்பது உண்மையிலேயே நமக்குத் தெரியவில்லை. இந்தப் பத்திரிகை இப்படி வெளியிடுவதன் மூலம் அவர்களுக்கு இருக்கிற திமிரைக் காட்டிக் கொண்டிருக்கிருர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. மன்றத்தில் என்ன திமிரானன பதில் சொல்லப்பட்டிருக்கிறது என்ருல் ஒன்றும் சொல்லப்படவில்லை.

அவர்கள் சொல்கிருர்கள், மாறனுக்கு வீடு கிடைக்கவில்லை, அதனுல்தான் தமிழக அரசு மாளிகையில் தங்கியிருக்கிருர் என்று உண்மையை மறைத்து கே. டி. கே. தங்கமணி அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிருர்கள் என்று போடப்பட்டிருக்கிறது. முதலமைச்சரவர்கள் பதில் சொல்கிற நோத்தில் மாறனுக்கு வீடு கிடைக்கவில்லை என்று எந்தவிதமான முறையிலேயும் பதில் சொல்ல வில்லை.



1973 மார்ச் 21] [திரு. நா. வீராசாமி]

திரு. கே. டி. கே. தங்கமணி கேட்ட கேள்வியை நான் இந்த மன்றத்தில் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். கே. டி. கே. தங்கமணி அவர்கள், "சார், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு டில்லியிலே சொந்த வீடு இருப்பதால் அவர்கள் தமிழ் நாடு இல்லத்தில் தங்குவதற்கு டிஸ்கரேஜ் செய்யப்படுமா" என்று கேட்டிருக்கிருர். அதறகு முதலமைச்சர் அவர்கள், "எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் டில்லியில் சொந்த வீடு கிடையாது. திரு. தங்கமணி அவர்கள் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் வீடு கிடைக்க ஏற்பாடு செய்தால் நலயாக இருக்கும். வீடு சிலருக்கு இல்லாத காரணத்திஞல் தமிழ் நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் உரிய கட்டணததைச் செலுத்தி, தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிருர்கள்" என்று பதில் சொல்லியிருக்கிருர்கள். தங்கமணி கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும்போது மாறனைப் பறறி ஒரு வார்த்தை கூட குறிப்பிடப்படவில்லை. அப்படியிருந்தும், மாறனைப் பற்றி குறிப்பிட்டு, மாறனுக்கு வீடு கிடைக்கவில்லை, அதனுல்தான் தமிழக அரசு மாளிகையில் தங்கியிருக்கிருர் என்று சொன்னதாக வேண்டுமென்றே இட்டுக் கட்டி உண்மைக்குப் புறம்பான தகவலைச் சொல்லி இருக்கிருர்கள் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்ஞென்றைத் தெளிவாகச் சொல்லியிருக்கிருர்கள். மன்றத்தில் எழுந்த பிரச்னை தமிழ் நாடு ஹவுஸ் வாடகைப் பற்றித் தான். பத்திரிகையில் சொல்கிருர்கள், பிரச்னை வாடகை தந்தாரா இல்லையா என்பதல்ல என்று சொல்லியிருக்கிருர்கள். இந்த மன்றத்தில் எதைப் பற்றி விவாதித்தார்கள் என்பது மன்றத்தில் இருக்கக் கூடிய உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும்.

ஆகவே, இப்படி ஒரு தவருன நோக்கத்தோடு சட்டசபைக்கு முன்னுல் அப்பட்டமான உண்மைகளை மறைக்கும் சத்புத்திரர்கள் என்று சபையை குறை கூறக் கூடிய வகையில், சட்டசபை உறுப்பினர்கள் சாதாரணமானவர்கள், ஒன்றும் தெரியாதவர்கள் என்று மன்ற உறுப்பினர்களை அகௌரவப்படுத்தும் வகையில், தனக்கே உரித்தான திமிரில் முதலமைச்சரவர்கள் பேசினுர் என்று போட்டு, பொது மக்களுக்கு ஒரு தவருன எண்ணத்தை உண்டாக்கக்கூடிய வகையில் இல்லாததையும் பொல்லாததையும் எழுதி, திருத்தி வெளியிட்டிருக்கிறது. ஆகவே இந்தப் பத்திரிகையில் செயல் உண்மையாகவே அவை உரிமை மீறிய செயலாக இருக்கிறது. இதைத் துணைத் தலைவரவர்களே, தாங்கள் சீராகப் பரிசீலித்து தீர்ப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. க. உரொ. எட்மண்ட்:* தலைவரவர்களே, தென்னகம் நாளிதழ் மீது மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் கொண்டு வந்த உரிமைப் பிரச்னை மீது நான் ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தில் தெரிவிக்க கடமைப்பட்டவனாக இருக்கிறேன். பத்திரிகையில் வந்திருக்கிற செய்தி முதல்வரவர்கள் இந்த மன்றத்தில் தவறான செய்தியைக் கொடுத்திருக்கிறார்கள் என்பது தான் மிக முக்கியமான காரணமாகும். அன்றைக்கு சட்ட மன்றத்தில் நான் கேட்ட கேள்வியையும் அதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொடுத்த பதிலையும் அந்தப் பத்திரிகையிலே அவர்கள் அப்படியே செய்தி கொடுக்கவில்லை. நான் கேட்ட கேள்வி, முரசொலி மாறன் அவர்கள் அங்கே தங்கியிருக்கிறார்களே, வாடகைப் பாக்கி இருக்கிறதா, பத்திரிகையில் அவர்கள் அங்கே இலவசமாகத் தங்கியதாக செய்தி வந்ததே என்று கேட்டேன். வாடகையைக் கட்டியிருக்கிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதன் பேரில் தான் தென்னகம் பத்திரிகை எழுதியிருக்கிறது, பாக்கி இருக்கிறதா இல்லையா என்பது அல்ல பிரச்னை, பிரச்சினையெல்லாம் சில உண்மைகளை முதல்வர் அவர்கள் மாமன்றத்தில் மறைத்திருக்கிறார்கள் என்று போட்டிருக்கிறார்கள்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* தலைவரவர்களே, அவர் கேட்ட கேள்வி முரசொலி மாறன் இலவசமாகத் தங்கியிருக்கிறாரா என்பது, நான் ஒன்றும் தவறான செய்தி சொல்லவில்லை. என் பதிலில் அவர் வாடகை பாக்கி எதுவுமில்லை, ஒழுங்காக கட்டியிருக்கிறார் என்று சொன்னேன். இது என்ன தவறான தகவல்.

*திரு. க. உரொ. எட்மண்ட்:* தலைவரவர்களே, அதைத்தான் சொல்லுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைப்புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* ஒரு கருத்தைப் புரிய வைக்க முடியவில்லை என்றால் பேசுகின்றவர் பேரிலும் குறை இருக்கலாம். புரியும்படியாக எடுத்துக் கூறவேண்டும்.

*திரு. க. உரொ. எட்மண்ட்:* தலைவரவர்களே, புரிய வைக்காமலும் இருக்கலாம்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* புரிய வைக்க வேண்டியது தம்முடைய கடமை. பிரிவிலேஜ் இஷ்யூ தென்னகம் பத்திரிக்கையின்மேல்



கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதன் பேரில் உறுப்பினர்களுக்குப் பேச உரிமை இருக்கிறது. ஆனால் பேரவைத் தலைவர் அவர்களுக்கு அந்தப் பிரச்னையின் மீது முடிவு சொல்ல உதவிகரமாக இருக்கின்ற முறையில் பேச வேண்டும்.

உங்கள் மேல் எந்தப் பிரச்னையும் இல்லை. நீங்கள் உங்களை டிபெண்டு செய்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்த உரிமைப் பிரச்னையை உரிமைக் குழுவுக்கு அனுப்பலாமா கூடாதா என்பதுதான் அவை முன் உள்ள கேள்வி. உங்களுடைய கருத்துக்களை இந்த வழக்கை ஒட்டிச் சொல்லவேண்டும். நீங்கள் எடுத்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதும், அவர் உங்களுக்குப் பதில் கூறுவதும் இப்படி விவாதமாக வரக்கூடாது.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* தலைவரவர்களே, ஒரு விளக்கம் தந்துவிடுகிறேன், தென்னகம் பத்திரிக்கையில் திரு. எட்மண்ட் கேட்ட கேள்வியைப் பொருட்படுத்திப் போடவில்லை. அவர்கள் பொருட்படுத்தியிருப்பது, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கேள்வியை வைத்து போட்டிருக்கிறார்கள். அதில் சொல்லியிருக்கிறார்கள், 'வாடகை கட்டினாரா, இல்லையா என்பது பிரச்சினை அல்ல' என்று பத்திரிகையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எழுந்த பிரச்னையே, திரு. எட்மண்ட் எழுப்பிய பிரச்னையே வாடகை கட்டினாரா இல்லையா என்பதுதான். அதற்கு நான் சொன்ன பதில், வாடகை கட்டியிருக்கிறார்; உரிய விதிமுறைகளோடு நடந்து கொண்டிருக்கிறார் என்பது வாடகை கட்டவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு, கட்டினார் என்று சொல்லியிருக்கிறேன். அதில் தவறான தகவல் எதுவும் இல்லை.

*திரு. க. உரொ. எட்மண்ட்:* தலைவரவர்களே, நான் கேட்ட கேள்வி முரசொலி மாறன் தங்கியிருந்தாரே, வாடகை ஏதாவது பாக்கி இருக்கிறதா என்று கேள்விகேட்டேன். பாக்கியிருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறதே, அது உண்மை தானா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேள்வி கேட்டேன். நான் கேள்வியை அப்படியே சொல்லமுடியாது. என்னுடைய கருத்துக்களை அப்படியே சொல்ல முடியும்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* துணைத் தலைவரவர்களே, டில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலவசமாகத் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்களா? இல்லை என்றால் சமீபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் அவர்கள் அங்கே இலவசமாகத் தங்கியதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே, அதைப் பற்றி விளக்கம் அளிப்பார்களா? இதுதான் திரு. எட்மண்ட் அவர்கள் கேட்ட கேள்வி.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, தென்னகம் பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி, நான் கேட்ட கேள்வி, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தின்மீது பத்திரிக்கையின் கருத்து. என்னுடைய கேள்விக்குப் பின்னால், இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி ஒரு கேள்வி கேட்டார்கள். என்ன கேட்டார்கள் என்றால், டில்லியில் இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கும்போது, அவர்கள் டில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்க வேண்டிய அவசியமென்ன என்ற பொருளில் கேட்டார்கள். அதற்குத் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் டில்லியில் இடம் கிடைப்பதில்லை. இடம் கிடைக்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள் டில்லியில் இருக்கிற தமிழ்நாடு இல்லத்தில் தங்க அனுமதிக்கப்படுகிறார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். அந்தப் பதிலுக்கு மேலும் தன் விளக்கத்தைக் கூறும் வகையில் தென்னகம் தன் கருத்தைப் பத்திரிகையில் சொல்லியிருக்கிறது. அதைச் சொல்லும்போது, இப்படிச் சொன்னதன் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தவறான சில கருத்துக்களை மன்றத்தில் கொடுத்திருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த தகவல் எல்லாம் திரு. மாறன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவருக்கு டில்லி அரசாங்கத்தால் வீடு ஒதுக்கப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திரு. மாறனைப் பற்றி விவாதித்துக் கொண்டிருப்பது பொருத்தமல்ல. வேண்டுமானால் வேறு இடத்தில் விவாதிக்கலாம். திரு. மாறன் அவர்கள் அது பற்றி எடுக்கவேண்டிய நடவடிக்கையை எடுத்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறார். இங்கே எழுந்திருப்பதெல்லாம், பத்திரிக்கையில் வந்த விவரம் சட்டமன்றத்தில் நடந்தது என்பதால்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரிமைப் பிரச்னையில் திரு. வீராசாமி எழுப்பியுள்ள பிரச்னை முக்கியமான பிரச்னை. பேரவையின் நடவடிக்கைகளை தென்னகம் பத்திரிக்கை வெளியிட்ட முறையை ஆட்சேபித்து உரிமைப் பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார். திரு. மாறனைப் பற்றியோ, தமிழ்நாடு மாளிகையைப் பற்றியோ பிரச்னை அல்ல. சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வி. அதற்கு அளிக்கப்பட்ட பதில் இவற்றை வெளியிடுகின்ற முறையில், பத்திரிக்கை உபயோகித்த சில வாக்கியங்களை திரு. வீராசாமி அவர்கள் ஆட்சேபித்து உரிமைப் பிரச்னையைக் கொடுத்திருக்கிறார்கள். பத்திரிக்கையில்



வந்துள்ள ஒரு வாக்கியம் "சட்டமன்ற உறுப்பினர்கள் சாதாரணமானவர்கள், ஒன்றும் தெரியாதவர்கள் என்று நினைத்துக்கொண்டு" என்ற அந்த வாக்கியம் இருக்கின்றதே அது பேரவையின் உரிமையைப் பாதிக்கும் என்று சொல்லியிருக்கிறார்.

அடுத்து, இன்னொரு வாக்கியத்தையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். "தமக்கே உரித்தான திமிரினால் சட்டசபைக்குத் தவறான தகவலைத் தந்ததுடன்" என்ற வாக்கியம். பேரவையின் நடவடிக்கைகளைக் குறித்து விமர்சனம் செய்கின்ற போது, ஒரு பத்திரிக்கையை நடத்துவதில் சம்பந்தப்பட்டவர்கள் பேரவையில் உறுப்பினர்களுக்கு இருக்கின்ற உரிமையை மதிக்கின்ற முறையில் விமர்சிப்பது முறை. வெளியே உறுப்பினர்கள் பேசுவதை எந்த முறையில் எழுதினாலும், விமர்சித்தாலும் கவலை கிடையாது. அது உரிமைப் பிரச்னைக்கு உரியதாகாது. ஆனால் பேரவையில், பேரவையின் ஒரு உறுப்பினர் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் பணியாற்றியதை விமர்சனம் செய்யும்போது, இப்படிப்பட்ட விமர்சனம் வந்திருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, எங்கோ நடைபெற்றதல்ல. 'சட்டசபைக்கு முன்னால்' என்று குறிப்பிட்டு சட்டசபையில் நடந்ததைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். ஆகவே ஏதோ கற்பனையில் எழுதியிருக்கிறார்கள், திரு. மாறனைப் பற்றி எழுதியிருக்கிறார்கள் என்பதல்ல. "சட்டசபைக்கு முன்னால் அப்பட்டமான உண்மைகளை மறைக்கும் சத்புத்திரர்களே" என்று சொல்லி, சட்டமன்றத்தில் நடந்திருப்பதைச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதில் இரண்டே இரண்டு பாயிண்ட்கள் சட்டமன்ற நடவடிக்கைகளை இந்தப் பத்திரிக்கையில் வெளியிட்டிருக்கின்ற முறை பற்றி உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது. வெளியிட்டிருக்கின்ற முறை முறையா, அல்லது முறையற்றதா என்பதைப் பற்றித் தான் பேசவேண்டும். கேள்வி பதிலை விவாதிக்க வேண்டாம்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** துணைத் தலைவரவர்களே, எந்தப் பிரச்னைமீது மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று தெளிவாகச் சொல்லியதற்காக என்னுடைய நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு பத்திரிக்கை இப்படி வெளியிடலாமா? இந்தப் பிரச்னையை உரிமைக் குழுவுக்கு அனுப்பி விவாதிக்க வேண்டுமா, இல்லையா என்று தீர்ப்புச் சொல்லுவதற்கு உதவி செய்யும்படியாக பாயின்ட் எடுத்துக் கொடுத்தால் நன்றி உடையவனாக இருப்பேன்.

*திரு. க. உரொ. எட்மண்ட்:* அதைத்தான் சொல்ல வருகிறேன். துணைத் தலைவரவர்கள் சுட்டிக் காட்டியபடி, சட்டமனறத்தில் இருக்கிறவர்களை ஒன்றும் தெரியாதவர்கள் என்று பத்திரிக்கை சொல்லவில்லை. "ஒன்றும் தெரியாதவர்கள் என்று நினைத்துக் கொண்டு" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படி நினைத்துக்கொண்டு, இப்படி ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லுவதில் எந்தத் தவறும் இல்லை. சட்டமன்ற நிகழ்ச்சிகளை வெளியிடும்போது எந்த மாதிரி நடந்ததோ, அதே வார்த்தைகளைச் சொல்லி வெளியிடவேண்டும். ஆனால் சட்டமன்றத்தில் நடைபெற்ற நடவடிக்கைகள் மீது தன்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு It is a subject-matter of commentaries from outside. சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றி வெளியே உள்ளவர்கள், பத்திரிக்கையை நடத்துகிறவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு, அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அப்படிச் சால்லுகிற அடிப்படையில் தான், இப்படி ஒரு பதிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் சொல்லுகிறபோது, சட்டமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள் ஒன்றும் தெரியாத அப்பாவிகள் என்று நினைத்துக் கொண்டு சொல்லியிருக்கிறார் என்ற கருத்தில் எழுதியிருக்கிறதே ஒழிய, பத்திரிக்கையின் எண்ணம், இங்கே இருக்கின்றவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் என்ற கருத்தில் நிச்சயமாக எழுதவில்லை.

இன்னொன்றையும் சுட்டிக் காட்டினார்கள். அகங்காரமாக முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார்கள். நான் உண்மையிலேயே சொல்லுகிறேன். அப்படி எழுதியிருக்கக் கூடாது. அதற்காக நான் வருந்துகிறேன். எங்கள் கட்சியின் சார்பாக நான் வருந்துகிறேன். மாண்புமிகு முதலமைச்சரைப் பற்றி சொல்லும்போது, அகங்காரமாகச் சொன்னார் என்ற வார்த்தையை உபயோகித்திருக்க வேண்டியதில்லை.

MR. DEPUTY SPEAKER: I want to know whether it is the official organ of the ADMK?

THIRU G. R. EDMUND: It has been declared by our party leader that it is the official paper of our party; long ago it has been announced.

தலைவரவர்களே, என்னுடைய கருத்தெல்லாம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பற்றி பத்திரிக்கையைச் சார்ந்தவர்கள் தங்களுடைய கருத்துக்களை எழுதியிருக்கிறார்கள். ஒருவரைப் பற்றிக் கருத்துச்சொல்ல உரிமை பத்திரிகைக்கு இருக்கிறது. அரசியல் சட்டத்தில் இருக்கிறது.



Freedom of thinking, freedom of expression எல்லோருக்கும் உண்டு என்று அரசியல் சட்டத்தில் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றிப் பத்திரிகை சொல்லியது தவறு என்று குறிப்பிடுகின்ற நேரத்திலே, திரு. வீராசாமி அவர்கள் சொன்னார்கள், வேண்டுமென்றால் அந்தப் பத்திரிகை ஆசிரியர் திமிரோடு எழுதியிருக்கலாம் என்று சொன்னார்கள். பத்திரிகை ஆசிரியர் திமிரோடு எழுதுகிறார் என்று சொல்லுவதற்கு இந்த மன்றத்தில் இருக்கின்ற உறுப்பினருக்கு என்ன உரிமையிருக்கிறதோ, அதே உரிமை மன்றத்துக்கு வெளியே இருக்கின்ற ஒருவருக்கு இந்த மன்றத்தில் இருக்கின்ற ஒருவரைப் பற்றி எழுதுவதற்கும், பேசுவதற்கும் உரிமையிருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு வாக்கியங்களும் அவையின் உரிமை மீறல் பிரச்னைக்கு வராது. இதில் பிரைமா பேஸி (prima facie) வழக்கு இல்லை என்று சொல்லி தள்ள வேண்டுமென்ற கருத்தினைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

*திரு. நா. வீராசாமி:* தலைவரவர்களே, மன்றத்தில் உள்ளவர்களைப் பற்றிப் பேச வெளியே உள்ளவர்களுக்கு உரிமை இருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். எனக்குத் தெரிந்த வரையில் மன்றத்தில் உள்ள உறுப்பினர்களைப் பற்றிப் பேச மன்றத்திற்குத்தான் உரிமை இருக்கின்றதே தவிர மன்றத்திற்கு வெளியே உள்ள எந்தச் சக்திக்கும் அதிகாரம் இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. டி. கே. தங்கமணி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் விவரங்களுக்குப் போக விரும்பவில்லை. தாங்கள் வெகு சுருக்கமாக இந்த உரிமைப் பிரச்சினையைப் பற்றிய விஷயங்களைச் சொல்லியிருக்கின்றீர்கள். அவையிலுள்ள உறுப்பினர்களைப் பற்றியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றியும் அந்தப் பத்திரிகையில் குறிப்பிட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இதைப் பற்றியெல்லாம் சொல்லும்போது, நமது சட்ட மன்ற நிகழ்ச்சிகளையெல்லாம் அப்படியே வெளியே பத்திரிகையில் வெளியிட வேண்டும் என்று சொன்னால் அது 'அஃபிஷல் ரிப்போர்ட்டாகத்தான்' ஆகிவிடும். இந்த முறையில்தான் போடவேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதும் சரியில்லை.

தினசரி இங்கே சட்டமன்றத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளையெல்லாம் மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதற்கு அந்த அந்தப் பத்திரிகைகள் இரு முறையினை வைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். அவ்வாறு கூடாது, செய்திகளை அப்படியே 'கமெண்ட்ஸ்' இன்றி போட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் அது ஒரு 'அஃபீஷல் கெஸட்' மாதிரி ஆகிவிடும். சில சமயங்களில் சுருக்கமாகப் போடுகிறார்கள், சில சமயங்களில் வேறுவிதமாகப் போடுகின்றார்கள். நேற்றுக்கூட இந்தப் பட்டதாரி ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட விவாதங்களைப்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 மார்ச் 21

பற்றி 'இந்து' பத்திரிகை எழுதும்போது, இது ஒரு முக்கியமான பிரச்னை என்ற முறையில், அந்த விவாதத்தில் யார் யார் பேசினார்கள் என்று தனித்தனியாக எடுத்துப் போட்டிருக்கின்றார்கள். அப்போது நான்கூட எடுத்துச்சொல்லலாம், தனித்தனியாக விவாதம் நடத்தவில்லையே, பொதுவான விவாதத்தின் ஒரு பகுதி தானே என்ற முறையில் இந்தச் சபையில் அதைப் பற்றி எழுப்புவதற்கு உரிமை இருக்கின்றது. ஆனால் இந்தச் சிறு விஷயங்களிலே சட்ட மன்ற உறுப்பினர்கள் உணர்ச்சி வயப்பட்டுவிடக்கூடாது. They should not become very sensitive to public opinion

வெளியே உள்ளவர்கள், பத்திரிகையாளர்கள், நம்மைப்பற்றி விமரிசனம் செய்ய அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அவர்களுடைய விமரிசனம் வேண்டுமென்றே நம்மை அவமானப்படுத்த வேண்டும் என்று இருந்தால், அது வேறு விஷயம். இப்போது ஒவ்வொரு அரசியல் கட்சியும் பத்திரிகை நடத்துகின்றார்கள். அவர்கள் அதில் தங்களுடைய கட்சியினை உயர்வாக வைத்துக் கொண்டு மற்ற மற்ற கட்சிகளைச் சற்றுக் குறைவாகச் சொல்ல அவர்களுக்கு இடமுண்டு. அப்படிப்பட்ட முறையில்தான் சொல்லப்பட்டு இருக்கின்றது.

அந்தக் குறிப்பிட்ட வார்த்தையைப் பொருத்த வரையில், நானும் அந்தக் கேள்வியின் அடிப்படையில் உபகேள்வி கேட்டதன் காரணமாக இதைச் சொல்லுகிறேன். ஒரு குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினரைப்பற்றித்தான் கேள்வி கேட்கப்பட்டு இருக்கின்றது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பொறுத்தவரையில், இந்தக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், இங்கே ஆளும் கட்சியில் மிகவும் முக்கியமானவர் என்று கருதி அவர்கள் அதைப் பற்றி எழுதியிருக்கலாம். என் கேள்வியெல்லாம், நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு ஒன்று ஃப்ளாட் கொடுக்கப்படுகிறது அல்லது பங்களா கொடுக்கப்படுகின்றது. அல்லது 'கான்ஸ்ட்டிட்யூஷன் ஹௌஸில்' அல்லது 'வெஸ்டர்ன் கோர்ட்டில்' கொடுக்கப்படுகிறது ரூம்களாக. அப்படி அவர்களுக்கு இடம் கிடைக்க முடியும் என்று இருக்கும்போது இப்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிரந்தரமாக இந்த இடத்தில் ரூம் எடுத்துக்கொள்ளலாமா என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு நல்ல முறையில் பதிலளித்தார்கள். எந்த நாடாளுமன்ற உறுப்பினரும் தக்க கட்டணத்தினைச் செலுத்தி அதிலிருக்க வரலாம் என்று குறிப்பிட்டார்கள். அதைப் பயன்படுத்தியது சரியா இல்லையா என்பதை சம்பந்தப்பட்ட அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கே விட்டுவிடுகின்றேன். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லத் தயாராயில்லை. ஆனால் இந்தக் குறிப்பிட்ட விஷயத்தைப்பொறுத்த வரையில்

டில்லி, 'தமிழ்நாடு இல்லம்' பற்றிய வினாவுக்கு பேரவையில் முதலமைச்சர் கூறிய பதிலை திரித்து 'தென்னகம்' நாளிதழ் வெளியிட்டிருப்பது குறித்து 

1973 மார்ச் 21] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஒரு கட்சியினைச் சார்ந்த பத்திரிகை சில விஷயங்களைச் சொல்லும்போது 'இந்த சம்பவம் நடந்தது' என்று மட்டும் சொல்லி சில பத்திரிகைகள் அதை விட்டு விடலாம். சில பத்திரிகைகள் மிகைப்படுத்தவும் மிகைப்படுத்தலாம். ஆனால் இதை ஒரு உரிமைப்பிரச்சனையாக எடுத்துக்கொள்ள ஆரம்பித்தால், தினசரி நாம் பத்திரிகைகள் அனைத்தையும் புரட்டிப் பார்த்துக்கொண்டு அங்கத்தினர்களுடைய பேச்சுக்களை எந்தெந்தப் பத்திரிகை எந்தெந்த விதத்தில் 'கமெண்ட்' பண்ணினார்கள் என்று பார்த்துக்கொண்டு, உரிமைப் பிரச்சனைகளைக் கொண்டு வருவதற்குத்தான் நேரம் போய்விடும். நாம் பத்திரிகைகளுக்கு உதவி செய்ய வேண்டுமே தவிர அவர்கள் நியாயமாகச் செய்யும் ஃபேர் கம்மென்ட்களை யெல்லாம் நாம் உரிமைப் பிரச்சனைகளாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்துப் பத்திரிகையின் கமெண்ட்ஸ் ஒரு மாதிரியாக இருக்கலாம். 'நவ சக்தி' யின் கமெண்ட்ஸ் ஒரு மாதிரியாக இருக்கலாம். 'ஜனசக்தி' யின் கமென்ட்ஸ் ஒரு மாதிரியாக இருக்கலாம். ஆனால் இந்த மாதிரிதான் அவைகள் அமைய வேண்டும் என்று சொல்லுவது, அவர்களைச் 'சோக்' செய்வதாகும். அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஃப்ரீடம் ஆப்ஃப் ப்ரஸ் இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'காமென்ட்ஸ்' பண்ணுவதற்கு ஒரு வரை முறை வேண்டாம் என்று சொல்லுகின்றீர்களா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஐ ஸெட் ஃபேர் கமென்ட்ஸ். ஃபேர் கமென்ட்ஸ் என்று வரும்போது வார்த்தைகள் கொஞ்சம் கடுமையாகக் கூட இருக்கலாம். 'பொய் சொல்லுகிறார்' என்று சொன்னால் அது தவறாகும். What is important is that the comment must be fair. If they are fair comments, there is nothing wrong if the words are slightly strong.

* **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவரவர்களே, ஃபேர் கமெண்ட்ஸ் என்று சொன்னாலும் உதாரணமாக "அங்கத்தினர் கேட்கும் ஒரு கேள்விக்கும் ஆளும் கட்சிப் பத்திரிகையானது, இந்த அயோக்கியத்தனமான கேள்விக்கு அமைச்சர் திமிராகப் பதிலளித்தார்" என்று எழுதினால் அங்கத்தினருக்கு மரியாதை கிடைக்குமா, உறுப்பினர் உரிமை காப்பாற்றப்படுமா என்று யோசிக்க வேண்டும். ஃபேர் கமெண்ட்ஸ் என்று சொல்லுகின்றவர்கள் இந்தப் பிரச்சனைகளில் எது ஃபேர் கமெண்ட் என்று முடிவெடுக்க வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இது உரிமைப் பிரச்சனையாக வருகிறது என்று சொன்னால்....

[1973 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சற்றுப் பொறுங்கள் அவர் குறிப்பிட்டுள்ள வார்த்தைகள், "சட்ட மன்ற உறுப்பினர்கள் சாதாரணமானவர்கள், ஒன்றும் தெரியாதவர்கள் என்று நினைத்துக்கொண்டு தனக்கே உரித்தான திமிரால் சட்டசபைக்குத் தவறான தகவல்களைத் தந்ததுடன்...." இதுதான் அதில் இருக்கின்றது. இது ஃபேர் காமெண்ட்டா ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** "சட்ட மன்ற உறுப்பினர்கள் சாதாரணமானவர்கள் என்று முதலமைச்சர் நினைத்துக்கொண்டு..." என்று சொல்லும்போது, மாண்புமிகு முதலமைச்சரைக் குறிப்பிட்டதாகத்தான் பாயிண்ட் வருகிறது. இந்தக் குறிப்பிட்ட பத்திரிகை முதலமைச்சர் பேரிலே கடுமையான முறையில் அல்லது சில தவறான முறையில் விமர்சனம் செய்திருக்கின்றார்கள் என்று சொல்லுகிறோமே தவிர இந்தச் சபையை அவமானப்படுத்துவதற்காகச் சொல்லியிருக்கின்றார்கள் என்று கருத இடமில்லை. இது உரிமைப் பிரச்சனையாக வரமுடியாது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலில் சட்டமன்ற உறுப்பினர். பிறகுதான் முதலமைச்சர். முதலமைச்சரானபிறகு சட்டமன்ற உறுப்பினர் என்னும் உரிமையை அவர்கள் இழந்துவிடமாட்டார்கள்.

THIRU K. T. K. THANGAMANI : If every Member becomes super-sensitive then there will be no comment either in public meetings or even in the press and if you are going to curb the freedom of the press, I do not know whether it will be helping them. I think it can be said that the newspapers must be more careful in using the language and that they should not use harsh language. That directive you can give. But if you are going to extend it to affecting the privilege of the House, I think we are extending our power a little too far.

THIRU K. KANDASAMI : I have been requesting the hon. Deputy Speaker since a long time. But I think he is not charitable.

MR. DEPUTY SPEAKER : Is it on a point of order?

THIRU K. KANDASAMI : Yes.

MR. DEPUTY SPEAKER : All right.



1973 மார்ச் 21]

THIRU K. KANDASAMI : Sir, under Article 19 of the Constitution there is freedom of the press. I think to say that in every case anything can be published against anybody is not correct, in my humble opinion. There are several lawyers including the Deputy Speaker who can understand and interpret law. I submit freedom of press and freedom of speech, defined under Article 19, do not imply and do not express, either impliedly or expressly, any unlimited freedom at all. There are restrictions, reasonable restrictions imposed. Here in this case I do not think the matter published can be taken as fair comment. It cannot come under that exemption. Only to impair the character of the Hon. Chief Minister, it has been published.

Therefore, I want your ruling as to whether any comment on a person who is talking nothing but truth, as a liar, and a comment charging a person who is so kind to human beings as a murderer, whether these comments can come as 'fair comment' and whether they can be protected under Article 19 of the Constitution. I want your ruling.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டரும் அல்ல, கிளாரிபிகேஷனும் அல்ல. இந்த பிரிவிலஜ் இஷ்யூவிலே, தாக்குகிற முயற்சி இருக்கிறதா இல்லையா என்பதை கமிட்டிக்கு அனுப்பிப் பார்த்துக் பி.ப. 10-30
கொள்ளலாம். ஆனால் இப்போது இஷ்யூ என்னவென்றால், இது பிரிவிலஜ் இஷ்யூவிற்கு வருகிறதா ? சபையின் உரிமையை மீறிய செயலா அல்லவா என்பதைப் பேச வேண்டும். டெல்லியில் பாராளுமன்ற உறுப்பினர் விடுதியை வாடகைக்கு விட்டார்களா என்பது பிரச்சினை அல்ல. ஆர்டிகிள் 19 பற்றிய பிரச்சினையும் அல்ல. இது ஃபேர் காமெண்டா, இல்லையா ? அதைப் பற்றித் தான் பேசவேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவரவர்களே, இப்போது இந்த அவையின் முன்னால் உள்ள பிரச்சினைகள் இரண்டு. இது உரிமை மீறிய பிரச்சினையா ? தென்னகத்தில் வந்திருக்கிற வார்த்தைகள் காரணத்தால் உரிமை மீறிய பிரச்சினையாகி விட்டதா ? இது ஒன்று. இரண்டாவது, அப்படி உரிமை மீறப்பட்டிருப்பது உண்மை என்று வாதத்திற்கு வைத்துக்கொண்டால்; உரிமைக் குழுவிற்கு அனுப்பப்படக்கூடிய ஒன்றாக இது இரண்டாவது—ஆக இரண்டு பிரச்சினைகள்.

என்னைப் பொறுத்தவரையில் இந்தக் தென்னகம் பத்திரிக்கையில் எழுதியிருப்பதில் நியாயம் உண்டா என்று சுருக்கமாக அணுக வேண்டும். தென்னகம்

பத்திரிகையில் ஒரு விஷயம் எழுதி இருக்கிறார்கள். "நமது முதலமைச்சர் அவர்கள், தனக்கே உரித்தான பாணியில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று கருதிக்கொண்டு பொய்த் தகவல்களைக் கொடுத்தார்கள்" என்று இருக்கிறது. பப்ளிக் காமென்ட். இது கரெக்டா, இல்லையா என்பது ஒருபக்கம் இருக்க, பத்திரிகைகளுக்கு ஓரளவுக்கு சில உரிமைகள் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். இந்தப் பத்திரிகை விமரிசனம் செய்வதற்காகத்தான் இருக்கிறது. எதிர்க் கட்சியாக இருக்கிற காரணத்தால், அதுவும் புதிதாக தி.மு.க. வை எதிர்க்கக் கூடிய காரணத்தால் சற்று வேகமாகவே அதைச் செய்வார்கள். அதற்கு அந்தப் பத்திரிகைக்கு முழு உரிமை இருக்கிறது.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், முரசொலி என்னைத் தாக்குவதற்கு உரிமை இருக்கிறது. பல முறை தாக்கி இருக்கிறார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல என்னை மோசமாகத் தாக்கியும்கூட, இந்தச் சின்ன விஷயங்களை ஏன் இங்கே கொண்டுவர வேண்டும் என்று எண்ணி அதைக் கொண்டுவரவில்லை.

இதில் கேள்வி என்னவென்றால் அடிப்படையில் கேள்விக்கும் பதிலுக்கும் பொருத்தம் இருக்கிறதா என்பதுதான். எப்படிச் சொன்னார்கள் ? முதலமைச்சர் தனக்கே உரித்தான பாணியிலே தகவல் கொடுத்தார் என்று எப்படிச் சொன்னார்கள் என்றால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அங்கே வீடு கொடுத்தால் வாடகைக்கு வருகிறார்கள் என்று....சிலர் அப்படி கொடுத்தாலும் கூட... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே, நீங்கள் உட்காருங்கள். அசெம்பிளியில் ஒரு மரபாகப் போய் விட்டது. நேரத்தை சம்பந்தமில்லாமல் நீடித்துக்கொண்டே போகிறார்கள். 28 பேர்கள் பேச பேர் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** ஆதித்தனார் விவாதத்தின்போது 10 பேர்கள் பேசினார்களே ?

MR. DEPUTY SPEAKER: The hon. Member is not supposed to dispute the ruling of the Chair.

THIRU G. R. EDMUND · * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * * திரு. எட்மண்ட் அவர்கள் கூறின வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.



இந்தப் பிரச்சினையில் டெல்லியைப் பற்றிப் பேசவேண்டாம். இங்கே முதலமைச்சர் சொன்னதைப் பற்றிப் பேசப்படவில்லை. சரியான தகவலா, இல்லையா என்பது கூட பிரச்சினை அல்ல. பேரவையில் இப்படி நடந்தது, என்று பத்திரிகையில் வெளியிடுவது சரியா? "........ திமிரோடு உறுப்பினர்களை ஒன்றும் தெரியாதவர்கள் என்று நினைத்துக்கொண்டு. . ." இது சரியா? பேரவையில் இப்படி நடந்தது என்று பத்திரிகையில் வெளியிடுவது சரியா? என்பதுதான் பிரச்சினை. தவறான தகவலை முதலமைச்சர் தந்தார் என்று முதலமைச்சர் மீது குற்றச்சாட்டு இருக்கிறது. ஆனால் இப்போது பிரச்சினை இதுதான். இதைப் பற்றித்தான் பேச வேண்டும். நேரத்தை நீட்டித்துக் கொண்டே போவது சரியல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவரவர்களே, ஒரு விளக்கம் கேட்கிறேன். நேரத்தைக் குறிப்பிடுங்கள். ஒவ்வொருவருக்கும் இவ்வளவு நேரம் என்று.

அமைச்சர் அவர்கள் பேசியதை வைத்துக்கொண்டு தான் இங்கே பேசுகின்றேனே தவிர பேசாத ஒரு கருத்தை நான் இங்கே கிளப்பவில்லை.

இப்போது நான் சொல்வதெல்லாம் தென்னகம் பத்திரிக்கையில் ஏன் இப்படி எழுதினார்கள் என்பதைச் சொல்வதற்குத் தான் நான் விழைகிறேன். பார்லிமெண்ட் உறுப்பினர்கள் அவர்களுக்குக் கொடுத்த வீட்டை வாடகைக்கு விட்டார்கள். மாறன் ஒழுங்காக வாடகை செலுத்தினார் என்றும் சொன்னார்கள். நான் இதிலே கூற விரும்புவதெல்லாம், இந்தப் பிரச்சினையை இங்கே கிளப்பக் கூடாது. பார்லிமெண்டில் கிளப்ப வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, 'தமிழ்நாடு ஹவுஸ்' நமது நிர்வாகத்தில் இருக்கிறது. நமது நிர்வாகத்தில் இருப்பதால் முதலமைச்சர் சொன்னார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அதையும் சொல்கிறேன். பார்லிமெண்ட் உறுப்பினரைப் பற்றியது என்பதால், நியாயமா, சரியா என்று சொல்லவில்லை. பேச வேண்டிய இடம் பார்லிமெண்ட். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், திரு. வீராசாமி அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். "வெளியே தாக்க முடியுமா, தாக்க முடியாதா" என்று சொன்னார்கள். இங்கே தான் தாக்க வேண்டுமென்ற அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியுமா? After all who is an M.L.A.?

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 மார்ச் 21

ஒரு எம். எல். ஏ. என்பவர் லட்சக் கணக்கான வாக்காளர்களால் உருவாக்கப் படுபவர். அவர்கள் நம்மை தாக்கக் கூடிய உரிமையை எடுத்து விடுவது நியாயமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, சட்டசபையில், இங்கே நடந்ததற்கு மாருக, வெளியே தாக்கக் கூடாது என்பதுதான் கருத்தே தவிர, சட்டசபை உறுப்பினர்களைப் பொது மக்கள் வாக்காளர்கள் தாக்கலாம், கண்டிக்கலாம், எதிர்க்கலாம். சட்ட சபைக்குள் நடந்த நிகழ்ச்சியைத் தவருகக் குறிப்பிட்டுத் தாக்குவது சட்டசபையின் நடவடிக்கைக்கு குறைவை உண்டாக்கக் கூடியதாகும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஏற்றுக்கொள்கிறேன். ஆனல் அவர் (திரு. வீராசாமியைச் சுட்டிக்காட்டி) சொல்வதைத் தான் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. இங்கே மன்றத்தில் பேசியதற்கு மாருகப் பத்திரிகையில் எழுதியிருக் கிருர்களே, அப்படிப்பட்ட கருத்தினைக் கொண்ட போர்ஷன் தெரிவித்திருப்பது தவரு? நான் இங்கே பேசியதை வைத்துக்கொண்டு கூட பயங்கரமாகத் தலைப் புகள் போட்டுத் தாக்கிக்கொண்டிருக்கிருர்கள். அது வேறு விஷயம். மாருக எழுதி இருப்பதாக இருந்தால் அது தவறு. இரண்டாவது கட்டம், தவறு நடந்தபிறகு—தவறு நடந்ததாக வாதத்திற்கு வைத்துக்கொண்டாலும் கூட உரிமைப் பிரச்சினையாக, உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய அளவுக்கு இது பெரிய பிரச்சினையா? உரிமைக் குழுவிற்கு அனுப்புவது தேவையா? திரு. தங்கமணி சொன்னதைப் போல, இப்படி ஒவ்வொரு சிறு விஷயத்தையும் உரிமைக் குழுவிற்கு அனுப்பிக்கொண்டே போனல் You are opening the flood-gates of Privilege issues. ஒவ்வொன்றும் பெரிய விஷயமாகி நாள் தோறும் உரிமைப் பிரச்சினைகள் தான் வரும். You will be opening the flood-gates அது நமக்குத் தேவையா? இரண் டாவது பிரச்சினையில், அப்படி அவர் சொன்னதை திரித்துப் போட்டிருந் தாலும் கூட, இது உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டிய பெரிய விஷயமா? தேவையில்லை. ஏனென்றல், இது பெரிய விஷயம் இல்லை. மற்ற படி நமக்கு வேறு பணிகள் இருக்கின்றன. பி.டபிள்யூ.டி. மானியம் இருக்கிறது. இதற்கே ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. இப்படி ஒவ்வொரு நாளும் பண்ணிக் கொண்டே போனல், அது அன்ருட நடவடிக்கைக்கு நல்லதல்ல. லட்சக் கணக்கான பொது மக்களின் பிரச்சினைகள் இருக்கின்றன. வேறு வேலையே இல்லையா?

(குறுக்கீடு)



1973 மார்ச் 21]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்களின் பிரச்சினை வந்தபோது உரிமைக் குழுவிற்குப் போகலாம் என்று ஒப்புக்கொண்டு, உரிமைக் குழுவில் நியாயம் கிடைக்கும் என்று ஒத்துக் கொண்டார். அப்போது ஒப்புக்கொண்டவர் இப்போது மறுப்பது நியாயம் அல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இப்போது சுகாதார அமைச்சர் சொல்வது அவருக்கு உதவி செய்யாது. பல விஷயங்களை, உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய தேவை இல்லை என்று சொல்லியிருக்கிருர்கள். ஒரு தடவை முதலமைச்சர் அவர்கள் கூட, ஒரு பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய தேவை இல்லை என்று சொல்லி இருக்கிருர்கள். எனவே, சுகாதார அமைச்சர் சொல்கிற நியாயம் சரியல்ல. என்னுடைய விவகாரம் சம்பந்தப் பட்ட வரையில், நானே சம்பந்தப்பட்ட காரணத்தால், பெருந்தன்மையோடு சொன்னேன்.

Because I wanted people to know what happened. I am prepared for justice.

அதற்காகத் தான் சொல்கிறேன். இங்கே பேசக்கூடியது, பொதுமக்கள் என்ன சொல்கிருர்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொது மக்கள் என்ன சொல் கிருர்கள்? ஆளுங்கட்சியைப் பற்றி பேசினல் பேசுங்கள். அரசாங்கத்தைப் பற்றிப் பேச வேண்டியதில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** . . . பலர் என்ன பேசுகிருர்கள் என்ப தைக் கேட்டுக்கொண்டால் தீர்ப்பு வழங்க நியாயமாக இருக்கும். இந்த மன் றத்தில் செயலாற்றுவது, பொது மக்களின் உணர்வுகளை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் ஹாண்டே, உட்காருங் கள். அடுத்து திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசுவார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஒரே ஒரு நிமிஷம். முடித்து விடுகிறேன். எனவே, இந்தமாதிரியான பிரச்சினைகளில் நுழையாமல், பொது மக்கள் சம்பந் தப்பட்ட பிரச்சினையில் கவனம் செலுத்திக் கொண்டு வந்தால் எல்லாத் தரப் பிலுள்ள பொது மக்களின் நம்பிக்கைக்கு ஆளாகிறோம். அப்படிச் செய்யா விட்டால் அவர்களுடைய நம்பிக்கையை இழந்தவர்களாக ஆவோம். நாள் தோறும் இப்படிப்பட்ட உரிமைப் பிரச்சினைகளைக் கொண்டு சபையின்

நேரத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். எனவே, இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுவசியமாக அனுப்ப வேண்டிய தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

*திரு. ஏ. சி. நரசிம்மன் :* தலைவர் அவர்களே, சற்று முன்னால் நமது மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே பேசும் போது பொதுமக்கள் உங்களுக்கு வேறு வேலையே இல்லையா, இந்த மாதிரியே சபை நேரத்தைக் கடத்துகிறீர்களா என்று கேட்பதாக. . .

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* இதையெல்லாம் பொதுமக்களே பார்த்துக் கொள்ளட்டும்.

*திரு. ஏ. ஆர். பெருமாள் :* தலைவர் அவர்களே, இப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கிற பிரச்சினையான, உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டியதா இல்லையா என்பதைப்பற்றி மட்டுமல்லாமல், உரிமைக் குழுவில் பேசவேண்டிய பிரச்சனைகளையெல்லாம் இப்பொழுது பேசுகிறார்கள். உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி மட்டும்தான் பேசப்பட வேண்டும். உரிமைக் குழுவிலே போய்ப் பேசவேண்டிய விவாதங்களை எல்லாம் இங்கே பேசுகிறார்கள். எதற்கெடுத்தாலும் உரிமைக் குழுவிற்குப் போனால், இங்கு எதையுமே நடத்த முடியாது என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன். இப்படி எழுதுவதையெல்லாம் விட்டுவிட்டால், எப்படி எப்படி எல்லாம் எழுதினாலும் பார்த்துக் கொண்டிருக்கவேண்டுமா ? எதையும் எழுதலாம் என்ற நிலைமை வந்து விடாதா ? ஆகவே, இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லி முடிக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* நிறைய உறுப்பினர்கள் பேசுவதற்கு அனுமதி வேண்டுமென்று கேட்கிறார்கள். பின்னாலே மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது, அந்தந்தக் கட்சியின் நேரத்தைக் குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

*திருமதி த. ந. அனந்தநாயகி :* பின்னாலே பேசுகின்ற உறுப்பினர்களை அது பாதிக்கும். இதிலே ஒரு விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர், உரிமைக் குழுவிலே பேச வேண்டியதையெல்லாம் இங்கே பேசுவதாகச் சொன்னார். முதலிலே, இதிலே உரிமை குழுவிற்கு அனுப்ப பிரைமாபாசி கேஸ் மேட் அவுட்டா என்று இங்கே விவாதித்து, நீங்கள் முடிவுகட்டி, அதன்பிறகுதான் நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமே தவிர, நேரடியாக அனுப்பிவிட முடியாது.



*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். கோர்ட்டிலே போய் இவ்வளவு நேரம் பேசுவார்களா, கட்சிக்காரர்களுக்காக ?

*திருமதி த. ந. அனந்தநாயகி :* உரிமைப் பிரச்சினை எப்படி எழும் ? என்ன எழுதியிருக்கிறார்கள் ? சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் சாதாரணமாக ஒன்றும் தெரியாது. இதைவிட 'வல்கர் லாங்குவேஜ்'-ஐ நாம் மற்ற பத்திரிகைகள் யூஸ் பண்ணுவதைப் பார்க்கிறோம்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* நான் முதலிலே ஒன்றை சொல்லிவிடுகிறேன். நான் ஆரம்பத்திலிருந்து திருப்பித் திருப்பிச் சொல்லிவருகிறேன். கிட்டத்தட்ட 42 நிமிஷம் எடுத்திருக்கிறோம், இதற்காக, நான் வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்கள் எந்த வகையிலேயும் நான் தீர்ப்புச் சொல்வதற்கு உதவிகரமாக இல்லை. இது என்னுடைய வருத்தமான கருத்து.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* இந்த மாதிரி 'காமென்ட்ஸ்' ரொம்ப 'டேமேஜிங்' மெம்பர்ஸ் பேசுவது பேரவையிலே உதவிகரமாக இல்லையென்று சொல்வது, 'இட் இஸ இன்சல்ட்டிங் தி ஹவுஸ்'

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* உங்கள் கட்சிக்கு உதவிகரமாக இருக்கும். இது உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமா என்று தீர்ப்பளிக்க எனக்கு உதவிகரமாக இல்லையென்றேன். தங்கமணி அவர்கள் ஃபேர் கமென்ட் இல்லையா என்று கேட்டார்கள். முன்னாலே இதுமாதிரி கொண்டு வந்து தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னார்கள். முரசொலி முதலிய பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அப்பொழுதே நீங்கள் அந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கவேண்டும்.

*திருமதி த. ந. அனந்தநாயகி :* It is nothing but a fair comment. After all, சாதாரண மாணவர்கள் என்றால் that is M.L.As. are innocent. 'Mensrea' கற்பிப்பது என்பது சரியல்ல, அப்படித்தான் நீங்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர, சாதாரணமாக எம். எல். ஏக்கள் ஒன்றும் தெரியாதவர்களாக இருக்கிறார்கள் என்று கொள்ள வேண்டுமே தவிர, இதற்கு உள்நோக்கம் கற்பித்தால், பல வார்த்தைகளுக்கு நாம் உள் நோக்கம் கற்பிக்கவேண்டிவரும். நேற்றுக்கூட, ஹாண்டே திருடி விட்டார் என்று வைத்துக்கொள்ளுங்கள் என்று அமைச்சர் அவர்கள். . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அது தவறான தகவல். அப்படி யாராவது வெளியிலே சொல்லி, அதை ஹாண்டே அவர்களிடம் சொல்வார்களானால், ஹாண்டே அவர்கள் அப்படிச் செய்யவில்லையென்று சொன்னால், ஒப்புக்கொள்ளவேண்டும் என்றேன். நான் நேற்றையதினம் சொன்னதை அப்படியே சொல்கிறேன். வெளியிலோ வேறு எங்கே, வேறு ஒருவர் வேண்டுமென்றே, டாக்டர் ஹாண்டே திருடிவிட்டார் என்று சொன்னால், டாக்டர் ஹாண்டே அவர்கள் அதை மறுத்துச் சொன்னவுடனே, டாக்டர் ஹாண்டே அவர்கள் அப்படிச் செய்யவில்லையென்று மற்றவர்கள் ஒத்துக் கொள்ளவேண்டாமா? அதைப்போலத்தான் கல்வியமைச்சர் அவர்கள் பல்கலைக்கழக விவகாரங்களில் தலையிடுசெய்வதில்லையென்று சொன்னபிறகு, அவர் அவ்வாறு சொன்னது தவறு என்று சொன்னபிறகு, மீண்டும் அதையே வலியுறுத்திச் சொல்லக்கூடாது என்றுதான் விளக்கம் சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அன்று கூட, பேசிக்கொண்டே இருக்கிற அங்கத்தினர் செத்துப் போங்கள் என்று சொல்கிறார். . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்த வார்த்தைகளை நான் என்ன சொன்னேன் என்று விளக்கியாகவேண்டும். அன்றையதினம் நான் பேசிக் கொண்டுதான் சொன்னேன. பேசிக் கொண்டே இறந்து விடுகிறார்கள் என்று சொல்லும்போது நான் பேசிக்கொண்டுதான் சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் பேசிக்கொண்டிருந்தேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நீங்கள் பேசிவிட்டு உட்கார்ந்து விட்டீர்கள். நான் பேசிக் கொண்டிருந்தேன். பேசிக் கொண்டே தான் சொன்னேன் பேசிக் கொண்டிருக்கிறபோதேகூட சிலர் இறந்து போகிறார்கள் என்று. இறந்து போகிறவர்கள் எந்த நேரத்திலும் இறந்து விடுகிறார்கள் என்றுதான் சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு அர்த்தம் சொல்லலாம். இன்றைக்கும் சட்டசபையிலே சொன்னார்கள், அயோக்கியத்தனமான கேள்வி, திமிரான பதில். இதற்கெல்லாம் உரிமைப் பிரச்சினை கொண்டு வர முடியவில்லை. ஏதாவது ஒரு மென்ஸ் ரியா கற்பிப்பது சரியல்ல.

சிலபேர் கடுமையான வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். சில பேருக்கு இனிமையான வார்த்தைகளை உபயோகிக்கத் தெரியாது. அப்படியென்றால், 100 வார்த்தைகளை நம்மால் செசர்ச் செய்யமுடியும். இல்வளவு சென்சிடிவ்வாக



இருக்கமுடியாது. அதையெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்ற கட்டத்திலே இருக்கிறோமேதவிர, ஒவ்வொன்றிருக்கும் நாம் உள் நோக்கம் கற்பித்தால், அது நியாயம் கிடையாது, ஜனநாயகம் வலுவாக விளங்குவதற்கு உதவாது. தவறான தகவல் என்றால் என்ன தவறு? எவ்வளவோ தவறான தகவல்கள் தரப்படுகின்றன. பின்னால் திருத்தப்படுகின்றன. ஸ்பீக்கர் என்ன சொல்கிறார், 'வில்புல்' என்று 'புரூவ்' செய்ய வேண்டுமென்று சொல்கிறார். நான் எந்த மனதை வைத்துக்கொண்டுபேசினேன் இங்கே என்று எப்படி 'புரூவ்' பணுவது. பிரிவிலேஜ் குவஸ்டியன் ரெயிஸ் பண்ணுங்கள் என்று சொல்கிறார்கள். அதைக் கண்டுபிடித்து அங்கத்தினர்கள் கொண்டு வந்தால், என்று 'புரூவ்' செய்யவேண்டும். இதெல்லாம் முடியாத காரியம். 'திமிர்' என்ற வார்த்தை கடுமையான வார்த்தையாக இருக்கலாமே தவிர, மற்றவைகள் எல்லாம் சர்வ சாதாரணமான வார்த்தைகள் —ஆகவே, இதை 'பிரிவிலேஜ் கமிட்டி'—க்கு அனுப்பக்கூடாது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** இந்த விவகாரத்தில் 'பிரைமா பாசி' கேஸ இருக்கிறதா என்பதை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது, முதலமைச்சரவர்கள் இப்படி சாதாரணமானவர்கள் என்று நினைத்துக் கொண்டு, திமிரான பதில் அளித்தார் என்று பத்திரிகையில் போடப் பட்டிருக்கிறது என்று. அதை, மாண்புமிகு அங்கத்தினர்கள் விவாதிக்கிறார்கள், இந்த அவையை குறிக்காமல், முதலமைச்சர் அப்படி நினைத்துக் கொண்டு சொன்னார் என்ற அளவிலேதான் எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் அதனாலே பிரைமா பாசி கேஸ் இல்லை யென்றும் சொல்வதை என்றால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஒன்று, முதலமைச்சர் அவர்கள் ஒரு உறுப்பினர் என்ற முறையிலே, அப்படி நினைத்துக்கொண்டு பேசினாரா என்ற பிரச்சினையானது, முதலமைச்சருடைய 'மென்ட்டல் ஆட்டிட்யூட்', அதைப்பற்றி ஒரு தவறான முறையிலே அவையினுடைய கவுரவத்தை பாதிக்கும் வகையிலே, அவையை உதாசிக்கும் வகையிலே, அவையிலே இருக்கிற உறுப்பினர்கள் சாதாரணமானவர்கள் என்று நினைத்துக் கொண்டு சொல்கிறார் என்று முதலமைச்சருடைய மனதிலே இல்லாத ஒன்றைப் புகுத்திச் சொல்வது, பொறுப்புள்ள உறுப்பினர்களுடைய மனோ நிலையை, பொதுமக்களுக்கு மாறான ஒரு கருத்தைத் தெரிவித்து, அவர்களுக்குக் களங்கம் விளைவிக்க வேண்டுமென்ற கருத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் அப்படித் தவறாகத்தான் சொல்லி பழக்கப்பட்டிருக்கிறார், அப்படித்தான் சொல்கிறார், உறுப்பினர்களை எல்லாம் சாதாரணமாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் சொல்வதைப்போல், அதை விவாதத்திற்காக எடுத்துக் கொண்டாலும், இந்த அவையிலே ஒரு உறுப்பினர் எப்பொழுதெல்லாம் திமிராக நடந்து கொள்கிறார்களோ, எப்பொழுதெல்லாம் உதாசீனப்படுத்துகிறார்களோ, அதற்கு அடங்கி, இந்த அவையிலே இருக்கிறவர்கள் வாய் மௌனியாக இருக்கிறார்கள் என்ற தவறான கருத்தை, பொதுமக்களிடையே ஏற்படுத்த இந்த முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அவையிலே இருக்கிறவர்கள் வாய் மௌனிகளாக, தங்களுடைய கடமைகளை உணராதவர்களாக, முதலமைச்சர் சொல்கின்ற எந்தக் கருத்தையும் ஏற்றுக் கொள்கின்றவர்களாக, பொறுப்புணர்ச்சியை உணரமுடியாத மிக மிகச் சாதாரணமானவர்களாக, பொறுப்பற்றவர்களாக, கடமையுணர்ச்சியற்றவர்களாக இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் அதன் வாயிலாக சொல்லப்பட்டிருக்கிறது.

இது மிக பயங்கரமான நிலைமையை உருவாக்கும். இந்த கருத்தை பொது மக்களிடத்திலே உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது.

'பேர் காமெண்ட்ஸ்' ஐப்பற்றிச் சொன்னார்கள். அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. பத்திரிகைகளுக்கு முழு சுதந்திரம் அதற்கு உண்டு. ஆனால் அப்படி செய்யும்போது, சபையிலே சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்களின்மீதுதான் 'கமெண்ட்ஸ்' செய்யப்பட வேண்டும். அப்படி செய்யப்படுகின்ற 'கமெண்ட்ஸ்' 'பேராக', இருக்கவேண்டுமென்ற தத்துவத்தினுடைய அடிப்படையில் இருக்கவேண்டும். இங்கே மிகத் தெளிவாக எடுத்து சொல்லப்பட்டிருக்கிறது. சபையிலே முதலமைச்சர் கொடுத்த பதில், மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்வி, இந்த இரண்டினுடைய பொருள் மாறுபடுகின்ற வகையில், அவைகளுடைய உள் அர்த்தம், அதற்கு மாறாக ஒரு கருத்தை மாற்றி, பத்திரிகையிலே கொடுத்திருப்பது நிச்சயமாக பேர் கமெண்ட் என்று கருதப்பட மாட்டாது.

அன்று சபையிலே கேட்கப்பட்ட கேள்விக்கு மாறான ஒன்றை, முதலமைச்சர் கொடுத்த பதிலுக்கு மாறான பதிலை, கொடுத்து, சபை நடவடிக்கைகளிலே இல்லாத ஒன்றை சபையிலே கேட்கப்பட்டதாகச் சொல்லப்பட்டதாக பொய்யான தகவலை கொடுத்ததாக சொல்லியதன் காரணமாக சபையிலே. . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பொய் சொல்வது தவறு என்று உறுப்பினர் கூறுகிறார். பொய் என்ற வார்த்தையை உபயோகிக்கக் கூடாது. . .



**திரு. எம். ஏ. லத்தீப்:** நான் அங்கே சொன்னதை சொல்கிறேன். அம்மையார் அவர்கள் சபையினுடைய நடவடிக்கைகள் பற்றி இவ்வளவு கவலை தெரிவிப்பதுபற்றி நான் ரொம்ப சந்தோஷப்படுகிறேன். இதையே மற்றவர்களுக்கும் அவர்கள் பயன்படுத்தினால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அம்மையார் அவர்கள் ஒன்று சொன்னார்கள். அவர்கள் மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன். ஒரு உறுப்பினரைப் பார்த்துப் பொய் சொன்னார் என்று சொல்வதுதான் தவறே தவிர, பொய் என்ற வார்த்தையே பயன்படுத்தக் கூடாது என்று அவர்கள் சொல்வது சரியல்ல, பொய் என்ற வார்த்தையைச் சொல்வது எப்படித் தவறாகும்?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பொய் என்ற வார்த்தையே அன்பார்லிமெண்டரி ஆகும் . . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அம்மையார் சொல்வதுபோன்று பொய் என்ற வார்த்தையே பயன்படுத்தக்கூடாது என்று சொன்னால் இங்கே 'பொய்மையும் வாய்மையிடத்து' என்று வருகின்ற திருக்குறளைக்கூடக் கூற முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உறுப்பினர் பொய் சொன்னார் என்று சொல்வது அன்பார்லிமெண்டரி. அதைப்போன்றுதான் பொய்யான நடவடிக்கை அல்லது பொய்யான பேச்சு என்று சொல்வதும் அன்பார்லிமெண்டரி ஆகும். பொய் என்று சொன்னாலே அது அன்பார்லிமெண்டரியா அல்லது இல்லையா என்பதுபற்றி ஒரு ரூலிங் கொடுத்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொய் என்ற வார்த்தையே வாக்கூடாது என்று அம்மையார் அவர்கள் சொல்வதுபோன்று நொண்டுவந்து விட்டால் நாம் அகராதியிலிருந்தே அந்த வார்த்தையை நீக்கி விட்டது மாதிரியாகிவிடும். முதலமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போன்று குறளையே இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லமுடியாத நிலைமை எல்லாம்கூட வந்துவிடும். எனவே உறுப்பினர் பொய் சொல்கிறார் என்று சொல்லாமல் அவர் சொல்வது தவறான தகவல் என்ற முறையிலே வார்த்தையைப் பயன்படுத்துவது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** நான் சொல்லிய இரண்டு கருத்துக்களின் அடிப்படையிலே பார்த்தால் முகாந்திரம் இருக்கிறது, பிரைமா பேஸி கேஸ் இருக்கிறது. ஏதோ பொறுப்பற்ற அவை என்ற முறையிலே எழுதியிருக்கிறார்கள். இதை

அவையுரிமைக் குழுவிற்கு விட்டுவிட்டு காலத்தை நீட்டினால் அது ஜனநாயகத்திற்கு ஆபத்தாக முடியும். எனவே இதிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இரண்டு கருத்துக்களின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(Thiru K. M. Subramaniam stood up)

MR. DEPUTY SPEAKER: The hon. Member will please resume his seat.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I am also concerned. Please allow me to speak just for one minute.

MR. DEPUTY SPEAKER: I am very sorry. I cannot allow you.

THIRU K. M. SUBRAMANIAM: Why? Just one minute, Sir.

MR. DEPUTY SPEAKER: Please obey the Chair. When I am standing you should not also stand. Please resume your seat.

THIRU K. M. SUBRAMANIAM: I have taken my seat, Sir. I am obeying the Chair. Just allow me one minute.

MR. DEPUTY SPEAKER: Kindly resume your seat. This is not the way to obey. You are not resuming your seat, but you are standing.

THIRU K. M. SUBRAMANIAM: I sat down. Sir. Just I want to say one word. Sir, this is a very important issue in which I am also concerned. You must allow me.

MR. DEPUTY SPEAKER: No. I request the hon. Member to kindly resume his seat.

THIRU K. M. SUBRAMANIAM: I will sit down, Sir. Please allow me one minute.

MR. DEPUTY SPEAKER: The hon Member Thiru K. M. Subramaniam will kindly resume his seat and avoid speaking. I will give you an opportunity afterwards.



THIRU K. M. SUBRAMANIAM: Just two minutes, Sir.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் தயவுசெய்து இருக்கையில் அமருங்கள்.

THIRU K. M. SUBRAMANIAM: I have sat down, Sir. Kindly allow me two minutes.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். இதுவே ஒரு பிரிவிலேஜ் ஆக ஆகிவிடும். தயவுசெய்து உட்காருங்கள். நான் நின்று கொண்டு பேசிக்கொண்டிருக்கும்பொழுது நீங்கள் பேசிக்கொண்டிருந்தால் அது ஒரு பிரிவிலேஜ் ஆக வரும். நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு நான் பெர்மிஷன் கொடுக்கப் போவதில்லை. ஒரு கட்சியில ஒருவருக்குமேல கொடுக்க வேண்டுமென்ற நிலைமை இல்லை. அதைத்தான் திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே உங்கள் கட்சியிலிருந்து திரு. எட்மண்ட் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அடுத்து திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சுருக்கமாகச் சொல்லவேண்டும்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to offer my own remarks. The first point which I want to refer to is whether it would arise whether it is a reflection on the House or on its members. The first point which I want to stress is that I would say that there are certain things which are. not very happily worded. I would just invite the attention of the House to May's Parliamentary Practice, page 141, wherein it is stated:

'Analogous to the publication of libels upon either House is the publication of false or perverted, or of partial and injurious reports of debates or proceedings of either House or committees of either House or misrepresentations of the speeches of particular Members ...............'

So far as this matter is concerned, Sir, the House will have to consider whether the publication was false, perverted or partial or injurious. These are the main points that have been considered by May. According to me, it does not come within the ambit of the definition given in May, even though it may be said to be not happy. I say that it is fair comment because the Press is given enormous powers under the Constitution and these powers will have to be used in fair manner and I think the party papers do indulge in certain remarks which are not very happy. In this

instant case, the publication does not amount to gross or wilful misrepresentation of particular Members' speeches and so I think unless there is wilful misrepresentation which is of a grave nature, this House need not be touchy about it. I think, Sir, out of a mole hill, we need not make a mountain. There are instances in which certain remarks have appeared in the press which were objectionable. In the peculiar circumstances of the case in the nature of political differences between the ruling party, and the present and other parties, we need not make much of the issue and raise a privilege matter on that. In this case, the only point is that such reflections should as far as possible be avoided and I think we can drop further proceedings at this stage. That is the only point which I am going to make.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவர் அவர்களே, நண்பர் வீராசாமி அவர்கள் கொண்டுவந்த இந்த உரிமைப் பிரச்னைமீது எல்லாக் கட்சிகளின் சார்பிலும் கருத்துக்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பத்திரிகையிலே வந்திருப்பதில், நான் இந்த அவையினுடைய உறுப்பினர்களை ஒன்றும் தெரியாத சாதாரணமானவர்கள் என்று கருதிக்கொண்டு திமிரோடு பதில் சொன்னேன் என்ற வாசகம் ஆகும். இந்த அவையில் கடந்த நான்கைந்து ஆண்டுக்காலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரிடத்திலும் நான் எந்த அளவிற்கு நடந்து கொண்டிருக்கிறேன் என்பதும் எந்த நேரத்திலேயும் நான் திமிரோடு நடந்து கொண்டிருக்கிறேனா என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். மிகச் சூடான விவாதம் நடந்துகொண்டிருக்கும்பொழுதுகூட சூடு தணியவேண்டும் என்ற முறையிலே மிகுந்த அமைதியோடும், அடக்க உணர்வோடும் நான் நடந்து கொண்டிருக்கின்றேன்.

1971-ஆம் ஆண்டு தேர்தலுக்குப், பிறகு பதவியேற்றதற்குப் பிறகு இந்த அவையிலே உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரையும் நான் பாராட்டி அவர்கள் எந்த அளவிற்குப் பெருந்தன்மையோடு இந்த அவையை நடத்திச் செல்கிறார்கள் என்பதையும், அவர்கள் துணையோடு இந்த அவையை நடத்திச் செல்ல வேண்டுமென்பதையும் குறிப்பிட்டு ஒவ்வொருவரையும் தனித் தனியாகக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறேன். இந்த அவையிலே உள்ள யாரையுமே சாதாரணமானவர் என்றோ ஒன்றும் தெரியாத நிலையில் உள்ளவர் என்றோ கருதியதே இல்லை என்பதையும் திமிரோடு நடந்துகொள்ளவேண்டுமென்ற மனோ நிலையே கிடையாது என்பதையும் இந்த அவையிலே உள்ள அனைவரும் அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் அறிவார்கள் என்று நம்புகிறேன்.



இந்தப் பிரச்னையைக் கட்சிக் கண்ணோட்டத்திலே நோக்காமல் இந்த அவையினுடைய மரபு, இந்த அவையினுடைய உரிமை, இந்த அவையினுடைய பெருமை இவற்றை நிறைந்த கவனத்தில் கொள்ள வேண்டும்.

நான் இந்த நேரத்திலே ஒரு எடுத்துக்காட்டைக் கூற விரும்புகிறேன். நான் இங்கே எதிர்க்கட்சி வரிசையில் துணைத் தலைவராக இருந்தபொழுது அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்களைப்பற்றி அப்பொழுது நான் ஆசிரியாக இருந்த முரசொலிப் பத்திரிகையில் கடுமையான வாசகத்தைப் பயன்படுத்தியிருந்தார்கள் என்று சொல்லி ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஒருவர் உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்தார்கள். முரசொலி பத்திரிகை என்று கேட்டதுமே நான் மிகுந்த ஆவலோடு அந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்துப் பார்த்தேன். அதற்குப் பிறகு அதுபற்றி அப்பொழுதைய முதலமைசசர் அவர்கள் பதில் சொல்வதற்கு முன்னாலேயே உரிமைப் பிரச்னையைப் பற்றி மற்றவர்கள் பேசுவதற்கு முன்னாலேயே நான் அதன் ஆசிரியாக இருக்கிறேன், ஆசிரியரே தலையங்கம் எழுதுவது இல்லை, பத்திரிகை நடத்துகிறவர்களுக்கு இது தெரியும், ஆசிரியர் ஊரில் இல்லாத நேரத்தில் துணை ஆசிரியர்களும் எழுதுவது உண்டு. ஆகவே கடுமையான வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது, அதற்குத் துணை ஆசிரியர் தான் பொறுப்பு என்றாலும், ஆசிரியர் என்ற முறையில் நான் பொறுப்பேற்கிறேன், இப்படிப்பட்ட வார்த்தைகள் பத்திரிகையில் வருவது தவறு என்று நானே குறிப்பிட்டு அவையில் வருத்தம் தெரிவித்து, இப்படி முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களைப் பற்றிக் கடுமையான வார்த்தைகள் முரசொலிப் பத்திரிகையில் பயன்படுத்தியிருப்பதற்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொல்லி, எப்படிச் சட்டசபையைப் பற்றி பத்திரிகைகள் நடந்து கொள்ளவேண்டுமென்பதற்கு ஒரு வழி வகுத்துக் கொடுப்பதற்குக் காரணமாக இருந்தேன். அந்நாள் முதலமைச்சர் பக்தவத்சலமும் மற்ற கட்சித் தலைவர்களெல்லாரும் பாராட்டிப் பேசி, இதற்கு உரிமைப் பிரச்னை தேவையில்லை என்று அந்தக் கருத்தை நிலை நிறுத்தினார்கள். அப்போதெல்லாம் பத்திரிகைகள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதிலே நான் வழிகாட்டியாக இந்த அவையில் இருந்திருக்கிறேன்.

இப்போது ஏதோ ஆளும் கட்சிக்கு விரோதமான பத்திரிகை, ஆகவே இதை ஆதரிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு இதை விட்டு விடலாம். பொருட்படுத்த வேண்டாமென்ற எண்ணத்தோடு யார் பேசியிருந்தாலும் நான் அவர்களுக்குச் சொல்வதெல்லாம், அதில் குறிப்பிடப்பட்டு இருப்பது நான் உறுப்பினர்களைச் சாதாரணமானவர்கள் என்று கருதினேன் என்று ஒரு குற்றச்சாட்டு, திமிரோடு பேசினேன் என்று மற்றொன்று, அடுத்து தவறான தகவல்

வைத்துக்கொண்டு நான் சொன்ன பதில் தவருன தகவல் என்பது இந்த பத்திரிகையில் குற்றச்சாட்டு. கே. டி. கே. தங்கமணி கேட்டது, "நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு டில்லியிலே சொந்த வீடு இருப்பதால், அவர்கள் தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கு டிஸ்கரேஜ் செய்யப்படுமா" இது தங்கமணி கேட்ட கேள்வி. நான் சொன்ன பதில் "எல்லா நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கும் டில்லியிலே சொந்த வீடு கிடையாது" என்று. "திரு. தங்கமணி அவர்கள் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப் பினர்கள் எல்லோருக்கும் வீடு கிடைக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்" என்று சொன்னேன். இது திமிரான பேச்சல்ல. நானும், அவரும், மற்ற உறுப்பினர்களும் சில நேரங்களில் மகிழ்ச்சியாகப் பரிமாறிக் கொள்கிற நகைச் சுவையே தவிர வேறு அல்ல.

நான் மேலும் சொன்னேன். "வீடு சிலருக்கு இல்லாத காரணத்திஞல் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் உரிய கட்டணத்தைச் செலுத்தி, தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிருர்கள்" என்று நான் சொன்னேன். இதிலே எங்கே திமிரின் வாடை இருக்கிறது, எங்கே நான் சரியான தகவலைச் சொல்லவில்லையென்று உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இது உள்ளபடியே நான் சொல்லாத ஒன்றை நான் தவருன தகவல் கொடுத்தேன் என்ற குற்றச்சாட்டுக்கு என்னை ஆளாக்கி இதிலே எழுதப்பட் டிருக்கிறது. திரு. ஹாண்டே அவர்கள் தன்னைப்பற்றி ஆளும் கட்சிப் பத்திரி கையில் எழுதப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். சட்டசபை உறுப் பினர்கள் பத்திரிகையில் எழுதுவது தங்கள் உறுப்பினர் உரிமையை பாதிககப் படுவதாக இருக்கிறது எனறு கருதுவார்களாஞல் இந்த அவையின் கவனத் திற்குக் கொண்டு வருவதில் தவறு இல்லை என்று சொல்லி, இதை உரிமைக் குழு விற்கு அனுப்புவது தான் சிலாக்கியமானது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்னையில் என்னுடைய முடிவை நாளை நான் அறிவிக்கிறேன்.

(3) கவன ஈர்ப்பு

மு.ப. 11-00

டீசல் ஆயில், பெட்ரோல் தட்டுப்பாடு குறித்து

Dr. H. V. HANDE: Hon. Mr. Deputy Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Transport to a matter of urgent public importance, namely, the scarcity of diesel oil and petrol in our State, particularly in Madurai district and the consequent hardships caused to the public.





திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, இப்போது டீசல் பற்ருக்குறை மின்சார வெட்டின் காரணமாக டீசலுக்கு தேவை அதிகமாகி இன்றையதினம் பற்ருக்குறை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக இன்று இந்தியன் ஆயில் கம்பெனி போன்ற கம்பெனிகள் சில பேர்களுக்கு மட்டும் தான் கொடுக்கிருர் களே தவிர, பர்மா ஷெல், எஸ்ஸோ போன்ற கம்பெனிகளிலிருந்து சப்ளை கிடைப்பதில்லை. போதுமான ஸ்டாக் இல்லையென்று சொல்லப்படுகிறது. ஸ்டாக் கிடைக்குமா கிடைக்காதா என்று சொல்லப்படவில்லை.

Thiru R. PONNAPPA NADAR: On a point of order, Sir. The hon. Member is making a speech. In a Calling Attention matter, it is usual as per the rule we expect the hon. Member only to read the notice. Extraneous matters shall not be made and if any clarification is needed, he can put one or two questions to the Hon. Minister.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் மறதியாக இருந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாத்திரம் வாசித்து விடுங்கள்.

Thiru N. K. PALANISWAMY: Mr. Deputy Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Transport to a matter of urgent public importance, namely, the scarcity of diesel oil and petrol in our State, particularly in Madurai District and the consequent hardships caused to the public.

The Hon. Thiru S. RAMACHANDRAN: Sir, Government are aware of the shortage in the supply of diesel oil due to the stoppage of production by the Cochin Refineries due to annual over-hauling and due to cut in power supply. The stoppage of production in Cochin Refinery was a temporary phase. The production has since commenced. The subject was discussed with the representatives of oil companies. Normal supplies have been resumed.

But, as members are aware, the demand for diesel oil has increased considerably owing to power cut on account of installation of generators in industrial establishments and diesel pumpsets in agricultural fields. There is a serious competition for diesel oil and it has not been possible to replenish the stocks in the depots and the retail bunks just as fast as these products are consumed. The Government of India are being approached to take remedial measures for easing the present situation.

Dr. H. V. HANDE: Will it be possible for the Hon. Minister to tell us the quantity that is required for the State and the quantity that is obtained actually? May I know whether it was not important on the part of the Hon. Minister to find out why this over-hauling should take place at this critical juncture, whether over-hauling could not be done even earlier or a little later? Will it be possible for the Hon. Minister to go into the matter and take the House into confidence and tell all these things?

Right now the position is about 1.500 lorries are actually stationed in a line, in a queue from about 6 p.m. onwards from Aminjikarai, it seems up to Dasaprakash Hotel, and this is the position in other places also. The matter is much more serious. The transport is completely paralysed.

Foodstuffs will not be able to reach the market. Prices may go up very high. Will it be possible for the Hon. Minister to tell us in his reply whether more serious concern will be exhibited on this subject, so that immediate remedial measures can be instituted and also, whether it is possible to get some urgent supplies of diesel oil right now so that the rising prices can also be stopped because of more availability of products?

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, இருக்கக் கூடிய பற்றாக்குறை நீடித்தால் லாரி போக்குவரத்து தடைபடுகிறது. காய்கறிகளும் உணவுப் பொருள்களும் மக்களுக்கு கிடைக்காது போய்விடும். இதனுடைய நெருக்கடியை உணர்ந்து சர்க்கார் இதற்கு ஏற்பாடு செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த உணர்வினை இந்த அரசாங்கம் புறக்கணிக்கக் கூடியதல்ல. இதை முழுக்க ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், தமிழகத்தைப் பொறுத்த வரையில் வட மாவட்டங்களுக்கு சென்னையிலிருக்கிற எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையும், தென் மாவட்டங்களுக்கு கொச்சியிலிருக்கிற எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையும் வேண்டிய டீசல் எண்ணெயை வழங்குகிற பணியினை மேற்கொள்கிறது. இந்த இரண்டு எண்ணெய் தொழிற்சாலைகளையும் நிர்வகிப்பது இந்தியன் ஆயில், இந்திய அரசால் நடத்தப் படக் கூடிய கம்பெனியாகும். மாதம் ஒன்றுக்கு தமிழகத்திற்கு எவ்வளவு



எண்ணெய் தேவை என்பதை நிர்ணயிக்கக் கூடிய பொறுப்பும் மத்திய சர்க்காரிடத்திலே இருக்கிறது. எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை பொறுப்பும் அவர்களிடத்திலே இருக்கிறது.

கொச்சியிலே இருக்கிற தொழிற்சாலையில் அவர்கள் வருஷாந்திர பராமரிப்புக்காக நிறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் எப்படி நிறுத்தியிருக்கிறார்கள் என்றால் சாதாரணமாக எவ்வளவு எண்ணெய் எப்போதும் இருக்குமோ அந்த தேவைக்கான ஏற்பாடுகள் இருக்கிற காரணத்தினால், அந்த எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையினுடைய பராமரிப்பை மேற்கொள்ளலாம் என்று திட்டமிட்டார்கள்.

ஆனால் கடந்த இரண்டு மாதங்களாக மின்வெட்டின் காரணமாக விவசாயிகளும் அதே போன்று தொழில் அதிபர்களும் பம்பு செட்டுகளையும் ஜெனரேட்டர்களையும் பயன்படுத்துகிற காரணத்தினால் அவர்கள் எதிர்பார்த்த கையிருப்பு எண்ணெய் ஏற்கெனவே தீர்ந்து விட்டது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கிற தேவையை சரிக்கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டதன் பேரில் கொச்சியிலே இருக்கிற எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை 15-ம் தேதியிலிருந்து மறுபடியும் உற்பத்தியைத் தொடங்க ஆரம்பித்து விட்டார்கள்.

ஆனால் சென்னையிலே இருக்கும் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை, கொச்சியில் இருக்கும் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை இரண்டும் சேர்ந்து முழு உற்பத்தியைச் செய்தாலும் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை ஒருவாறு தீர்ப்பதாக இருந்தாலும் இதுவே போதுமானதா என்றால் நிச்சயமாகப் போதாது. இன்றைக்கு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் டீசல் எண்ணெயை அதிகப் படுத்த வேண்டும். மாதந்தோறும் எவ்வளவு எண்ணெய் தேவை என்பதைத் தீர்மானிக்கும் டில்லி சர்க்கார் சார்பாக நடத்தப்படும் கூட்டம் இந்த மார்ச் மாதம் 26-ம் தேதி நடைபெற இருக்கிறது.

மின்வெட்டின் காரணமாகத் தமிழகம் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையைத் தெரிவித்து, வழக்கம்போல் கொடுக்கின்ற அளவு கொடுத்தால் போதாது 75 சதவிகிதம் அளவுக்காவது கூட்டிக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை மத்திய சர்க்காருக்கு எழுத்து மூலம் தெரிவித்திருக்கிறோம். நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் உண்மை நிலையை விளக்குவதற்காக ஒரு அதிகாரி அனுப்பப் படுவார். நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்ய முழு ஏற்பாட்டையும் மத்திய சர்க்கார்தான் செய்ய வேண்டும். அதற்காக வற்புறுத்துகிறோம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அமைச்சர் அவர்கள் வருகின்ற 26-ம் தேதி கூட்டத்தில் வற்புறுத்துகிறோம் என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அதிகாரியை அனுப்பி இருக்கிறோம் என்று கூறுகிறார்கள். இந்த மாதிரிப்

பிரச்சினைகளில் முதலமைச்சரே அங்கிருக்கும் அமைச்சர்களோடு தொடர்பு கொள்ள வேண்டும். அமைச்சர் லெவலில் அணுகினால்தான் உடனடியாகப் பலன் கிடைக்கும். கெரோசின் ஆயிலைத் தவறான முறையில் உபயோகித்துக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கிளாரிபிகேஷன் மட்டும் கேளுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: முக்கியமான பிரச்சினை, தயவுசெய்து துணைச் சபாநாயகர் அவர்கள் கொஞ்சம் அனுமதிக்க வேண்டும். டிரான்ஸ்போர்ட் சிஸ்டமே போய்விட்டது, வெளியே வந்து பாருங்கள். ஒரே ஒரு பாயின்ட்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கிளாரிபிகேஷனைக் கேளுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: கெரோசினை தவறான முறையில் லாரிகளுக்கு உபயோகப்படுத்திக் கொண்டிருந்ததைத் தடுத்தார்கள். ஒரு பக்கத்தில் கெரோசின் பற்றாக்குறை இருக்கிறது. டீசலும் அவர்களுக்கு இப்போது கிடைக்கவில்லை. ஆகவே, இந்தப் பற்றாக்குறையில் கூடுதலாக 50 சதவிகிதம் டீசல் கேட்பதற்குப் பதிலாக 75 சதவிகிதம் கேட்டால்தான் சரியான வகையில் வரும் என்ற காரணத்தால் அமைச்சர் அவர்களே இதிலே துரிதமாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தையொட்டி மத்திய சர்க்காருடைய அமைச்சருக்கு நானே கடிதம் எழுதிவிடுகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பற்றாக்குறைக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. எதிர்பார்த்த அளவுக்கு எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. இரண்டாவது, மின்வெட்டின் காரணமாக டீசல் ஆயிலின் தேவை அதிகமாகிவிட்டது. மூன்றாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல் மண்ணெண்ணையைப் பயன்படுத்துவது தடுக்கப்பட்டது. அதன் விளைவாக லாரிகள் டீசலுக்காகக் காத்துக்கொண்டு கூட இருக்கலாம்.

எண்ணெயை உற்பத்தி செய்வதும், வழங்குவதும், தேவைகளை நிறைவேற்றி வைக்கக்கூடியதுமான பொறுப்பு மத்திய சர்க்காரைச் சேர்ந்தது. எப்படி மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எங்களிடத்தில் சொல்லுகிறார்களோ அதே போல் மத்திய சர்க்காரிடத்தில் நாங்கள் சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறோமே தவிர வேறல்ல. ஆக, இந்தக் காரியங்களை டில்லி சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவந்து இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகத்தின் நிலைமை சிக்கலான நிலைமையாக இருக்கிறது என்று விளக்கலாம்.



எலக்ட்ரிசிடி, கோக், டீசல், வாட்டர் ஆகியவை ஒன்றையொன்று இணைந்த செல்வங்கள். ஒன்று இல்லையென்றால் இன்னொன்று கட்டாயம் பாதிக்கப்படும். அந்த வகையில் தனிச் சலுகை அளிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை மாநில அரசு நிச்சயமாக வற்புறுத்தும்.

### (4) அரசினர் சட்ட முன்வடிவு

### தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றது.

### (5) 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

நிதிக் கோரிக்கை எண் 31—பாசனம்.

நிதிக் கோரிக்கை எண் 32—பொதுப்பணிகள்—பணிகள்.

நிதிக் கோரிக்கை எண் 33—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும்.

நிதிக் கோரிக்கை எண் 46—பாசன மூலதனச் செலவு.

நிதிக் கோரிக்கை எண் 47—பொதுப்பணிகள் மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 31—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,55,43,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 15.55.43.600 under Demand No. 31—Irrigation be reduced by Rs. 100".

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, வேதபுரியாறு அணைக்கட்டுத் திட்டத்தை அனுமதிக்க வேண்டும் என்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 31—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,55,43,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு, வாலாஜாப்பேட்டை அருகே அணையை விரிவுபடுத்திப் பாசன வசதி செய்வது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 31—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,55,43,600-ல் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir. I move the following cut motion to discuss about the irrigational needs of Dharmapuri District in general and Hosur and Denkanikota taluks in particular—

'That the allotment of Rs. 15,55,43,600 under Demand No. 31—Irrigation—be reduced by Rs. 100 '.

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Sir, with the permission of the Chair, I move cut motion No. 767 instead of cut motion No. 769.

I move the following cut motion to discuss about the taking up of the work of formation of new tanks at Maravarperungudi/Meenakshipuram within Tiruchuli Panchayat Union, Aruppukottai taluk in 1973-74—

'That the allotment of Rs. 15,55,43,600 under Demand No 31—Irrigation—be reduced by Rs. 100 '.

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss the necessity to discuss with the Government of Kerala to allow at least so much of water in the Neyyar Channel in Kanyakumari District as agreed upon between the Governments of Tamil Nadu and Kerala—

'That the allotment of Rs. 15,55,43,600 under Demand No. 31—Irrigation—be reduced by Rs. 100 '.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வைப்பாற்றின் இருகரைகளிலும் குழாய்க் கிணறுகள் அமைத்து, இரு



பக்கமுள்ள விவசாய நிலத்திற்கு பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 31—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,55,43,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 32—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,48,71,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் G. A. Canal இடது கரையை கிராம இணைப்பு ரோடுத் திட்டத்திலோ அல்லது Marketing Complex- லோ சேர்த்து சில்லத்தூரிலிருந்து, ஆவணம் பொதுப் போக்குவரத்து ரோடாக ஆக்க வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 32—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,48,71,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss the immediate necessity to construct a bridge across Gnarantulai Kadavu in Kodayar in Pacode village in Kanyakumari district—

'That the allotment of Rs. 15,48,71,500 under Demand No. 32.—Public Works—Works—be reduced by Rs. 100.'

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஆறுகளில் பாலங்கள் அமைத்து போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுப்பதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 32—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,48,71,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Sir, I move the following cut motion to discuss the necessity of immediate upgrading of Madurai—Tuticorin road (via) Aruppukkottai as National Highways—

'That the allotment of Rs. 15,48,71,500 under Demand No. 32.—Public Works—Works—be reduced by Rs. 100.'

*திரு. கே. ஏ. வகாப்:* தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகளில் கட்டப்படும் ரயில்வே மேம்பாலங்கள், மண்ணால் கட்டப்படுவதற்குப் பதில் காங்கிரீட் பிளை ஓவர் கட்டுவது சம்பந்தமாக ஆலோசிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 32—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,48,71,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss the problem of jobless Engineers (Graduates and Diploma Holders)—

'That the allotment of Rs. 15,48,71,500 under Demand No. 32.—Public Works—Works—be reduced by Rs. 100.'

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:* தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 33—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,67,85,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU SOWDI S. SUNDARA BHARATHY: Sir, I move the following cut motion to discuss policy—

'That the allotment of Rs. 7,67,85,700 under Demand No. 33—Public Works—Establishment and Tools and Plant—be reduced by Rs. 100.'

*திரு. கே. ஏ. வகாப்:* தலைவர் அவர்களே, சாலைகள் போட, கட்டிடங்கள் கட்ட, வேண்டிய போதிய இயந்திர சாதனங்கள் இல்லாத குறைபாடு பற்றிப் பேச—

"நிதிக் கோரிக்கை எண் 33—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,67,85,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss the need to revise the pay scales of Junior Engineers and Assistant Engineers—

'That the allotment of Rs. 7,67,85,700 under Demand No. 33—Public Works—Establishment and Tools and Plant—be reduced by Rs. 100.'



*மணலி திரு. சி. கந்தசாமி:* தலைவர் அவர்களே, கேங்க் கூலிகளை ஐந்து வருடமாகியும் நிரந்தரம் ஆக்காதது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 33—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,67,85,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES: Sir, I move the following cut motion to discuss the necessity to take up the construction of primary school buildings in Kanyakumari District—

'That the allotment of Rs. 7,67,85,700 under Demand No. 33—be reduced by Rs. 100.'

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:* தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 46—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,43,93,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following cut motion to discuss policy—

'That the allotment of Rs. 12,43,93,600 under Demand No.46—Capital outlay on irrigation be reduced by Rs. 100.'

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss policy—

'That the allotment of Rs. 12,43,93,600 under Demand No. 46—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100.'

THIRU SOWDI S. SUNDARA BHARATHI: Sir, I move the following cut motion to discuss policy—

'That the allotment of Rs. 12,43,93,600 under Demand No. 46—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100.'

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:* தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 47—பொதுப்பணிகள் மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,16,85,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

[1973 மார்ச் 21

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss policy—

'That the allotment of Rs. 13,16,85,100 under Demand No. 47—Capital Outlay on Public Works be reduced by Rs. 100.''

THIRU D. S. A. SIVAPRAKASAM : Sir, I move the following cut motion to discuss policy—

'That the allotment of Rs. 13,16,85,100 under Demand No. 47—Capital Outlay on Public Works be reduced by Rs. 100.''

*திரு. சோ. அழகர்சாமி :* தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதியான கோவில் பட்டி, விளாத்திகுளம் வட்டாரங்களில் வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் புதிய பாசனக் குளங்கள் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 47—பொதுப்பணிகள் மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,16,85,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளின் பேரில் எனது கருத்துக்களை புத்தகங்களாக @ அச்சிட்டு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நீர்ப்பாசனம், நெடுஞ்சாலைத் துறை, தூத்துக்குடி துறைமுகத் திட்டம், சேதுசமுத்திரத் திட்டங்கள் ஆற்றும் பணி குறித்த 1972-73-ம் ஆண்டுக்குரிய ஆய்வுரை, சிறு துறைமுகங்கள் ஆற்றும் பணி குறித்த ஆய்வுரை என்று இவை* எல்லாம் மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை ஏற்றுக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே ஒன்றேகால் மணி நேரம் செலவழிந்து விட்டது. உறுப்பினர்கள் பலர் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். எனவே உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்களானால் மாலை நேரத்திலும் அவையை நடத்துவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்துக்கொண்டு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள கேட்டுக்கொள் கிறேன்.

---

@ ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

* கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.



1973 மார்ச் 21]

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் :* எங்கள் கட்சியின் சார்பில் அதற்கு எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில் பலரும் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். எனவே கூடுமானவரையில் அவர்களுக்கு அவகாசம் கொடுக்கவேண்டும்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* முற்பகல் நிகழ்ச்சியை 1-30 மணி அளவில் நிறுத்திக்கொண்டு மறுபடியும் மாலை 4 மணி அளவில் விவா தத்தைத் தொடங்கலாம்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* முற்பகல் விவாதத்தை 1-30 மணி வரையில் வைத்துக்கொண்டு மீண்டும் 4-00 மணிக்கு வைத்துக்கொள்ளலாம்.

* *திரு. ஜே. ஜேம்ஸ் :* துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற ஐந்து மானியக் கோரிக்கைகள் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப் பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளையொட்டி சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

ஏறத்தாழ 65 கோடி ரூபாய் அளவிற்கு ஐந்து மானியக் கோரிக்கைகளுக்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மானியம் கோரியிருக் கிறார்கள். இந்த ஐந்து மானியக் கோரிக்கைகளைப் பார்க்கும்போது நாட்டில் ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைக்கவேண்டும், நாட்டில் பொருளாதாரம் வளர வேண்டுமென்று சொன்னால் இந்த இலாகாக்கள்தான் அதற்கு அடிப்படை யாக இருந்து செயலாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைக் கூறும் போது அது மிகையாகாது. ஆக, இவ்வளவு பெரியதொரு பணியைச் செய் வதற்கு வழங்கப்படுகிற இந்த மானியங்கள் எந்த முறையில் எந்த அளவில் செலவழிக்கப்படுகின்றன என்பதைப் பார்க்கும்போது நாம் இதனால் எதிர் பார்க்கக் கூடிய நோக்கம் நிறைவேறுகிறதா, நிறைவேறக் கூடிய அளவில் இருக்கிறதா என்பது ஐயப்படும் சூழ்நிலையில்தான் இருக்கிறது.

[திரு. நா. வீராசாமி தலைமை]

கடந்த ஐந்தாண்டுகளாக இத்துறைகள் எதிர்பார்த்த அளவில் வேகமாகச் செயல்படவில்லை என்பதை நான் முதற்கண் இங்கு சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். ஏனெனில் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் பல்வேறு அணைத் திட்டங்கள், பாலங்கள், பாசனத் திட்டங்கள் அனைத்தும் நடத்தப்பட்டு இந்த நாடு ஒரு சுபிட்சமான நிலையில் இருந்து அதற்கு பின் செய்ய வேண்டிய சில பணிகளைக்கூட இந்த அரசால் நிறைவேற்ற முடியவில்லை என்றால் நிச்சய மாக இந்த அரசைப் பாராட்டக் கூடிய நிலையில் இல்லை என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தருணத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், இந்த அரசு கழிந்த நாலைந்து ஆண்டுகளாக மின்சாரத் துறையில் கவனம் செலுத்தாதிருந்ததன் காரணமாக இன்று தமிழ்நாடு இருண்டு தமிழ் நாட்டின் பொருளாதாரம் பாதித்திருக்கிறது என்பதை பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். இந்த அளவில் நாம் செயல் பட்டுக் கொண்டுபோனால் நிச்சயமாக இந்த நாட்டில் பெரும் ஒரு விபத்து ஏற்பட இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மின்சார வெட்டினால் இந்த நாடு எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக் கிறதோ அந்த அளவிற்கு இந்தப் பொதுப்பணித் துறையினாலும் இந்த நாடு பாதிக்கப்படுகிற சூழ்நிலை இன்று இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். இன்று நாம் எதிர்பார்க்கிற குறிக்கோளை அடையவேண்டுமென்று சொன்னால் நாம் ஒதுக்குகிற பணம் நல்லமுறையில் விநியோகிக்கப்பட வேண்டும். இன்று நாம் அடிக்கடி கூறுகிறோம்.

மத்திய அரசு மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் முறையில் மாநிலங் களுக்கு நீதி வழங்கவில்லை, குறிப்பாக தமிழ்நாட்டுக்கு நீதி வழங்கவில்லை என்று கூறிக்கொண்டே இருக்கும்போது நமது அரசைச் சார்ந்திருக்கிற மாநிலத்தில் உள்ள அத்தனை மாவட்டங்களுக்கும் நீதி வழங்குகிறார்களா, நிதி ஒதுக்குகிற முறையில் ஒழுங்காகச் செயல்படுகிறார்களா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நாம் நிதி வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்கும் போது நம்மிடத்தில் நிதி எதிர்பார்க்கிற மாவட்டங்களுக்கு நிதி வழங்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

குறிப்பாக கன்னியாகுமரி, நெல்லை ஜில்லாக்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை இத்தருணத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும்போது முதல் அமைச்சர் அவர்கள் வருகிற தஞ்சா ஆருக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வருகிற கோவை ஜில்லா விற்கும், இன்னும் முதல் அமைச்சர் அவர்களோடு அடிக்கடி டெல்லி செல்கிற தொழில் அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் வருகிற இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்குத்தான் அதிகப்படியாக பணம் ஒதுக்கப்படுகிறதே தவிர மற்ற மாவட்டங்கள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை இந்தத் தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக நெல்லை ஜில்லாவும், கன்னியாகுமரி ஜில்லாவும் புறக்கணிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு அமைச்சர் இருக்கிறார்.

எங்கள் கன்னியாகுமரி ஜில்லாவையும், நெல்லை ஜில்லாவையும் பாதுகாக்கக் கூடிய பொறுப்பை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம்



இந்த அரசு ஒப்படைத்திருக்கிறது. ஆனால் அன்னார் அவர்கள், மற்ற அமைச் சர்கள் தங்கள் ஜில்லாக்களுக்கு திட்டங்கள் வேண்டுமென்று கேட்டு பெற்றுக் கொண்டிருக்கும்போது கூட்டுறவுத் துறை அமைச்சர் நெல்லை ஜில்லாவையும், கன்னியாகுமரி ஜில்லாவையும் புறக்கணிக்கிற வகையில் அந்த மாவட்டங் களுக்கு வேலைத் திட்டங்கள் வேண்டாம் என்று கூறுகிற முறையில்தான் இந்த நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்று நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். நெல்லை ஜில்லாவிற்கும், கன்னியாகுமரி ஜில்லாவிற்கும் இருக்கிற அமைச்சர் இல்லாமல் இருந்தால்கூட இந்த ஜில்லாக்கள் இந்த சர்க்காரால் இந்த அளவிற்குப் புறக்கணிக்கப்பட்டிருக்காது என்று இத்தருணத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு திட்டங்களை நாம் நிறை வேற்றி விட்டோம், இனி அண்டை மாநிலங்களிலிருந்து அங்குள்ள நீர்தேக்கங் களிலிருந்து தண்ணீர் பெறக்கூடிய நிலையில் ஏற்பாடுகளை செய்து கொண்டிருக் கிறோம் என்று கூறிக்கொண்டேயிருக்கிறார்கள். கன்னியாகுமரி ஜில்லாவிலேயே பல திட்டங்கள் உள்ளன. அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில், எங்கள் பகுதியில் மழைக்காலத்தில் தண்ணீர் பாழாகப் போகவில்லை என்று கூறினார்கள். நிலைமை அப்படியல்ல. மழைக் காலங்களில் எந்த அளவிற்கு தண்ணீர் பாழாகி கடலில் போய்ச் சேரு கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இன்றுள்ள பல்வேறு திட்டங்களை கன்னியாகுமரி ஜில்லாவில் அமுல் நடத்தினால் அந்த ஜில்லாவிற்கு மட்டுமல்ல அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் வருகிற நெல்லை மாவட்டம்கூட அவற்றினால் பலன் பெறும் என்ப தையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆலத்துறை அணைத் திட்டம், மாம்பழத் துறை திட்டம், நம்பியாறு திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றினால் கன்னியாகுமரி ஜில்லாவும், திருநெல்வேலி ஜில்லாவும் இதனால் பயன்படும். இந்தத் திட்டங்கள் எல்லாம் இலாகாவால் அங்கீகரிக்கப்பட்டு, அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு வந்திருப்பதாக அறிகிறேன். இனிமேலாவது அந்த ஜில்லாக்கள் புறக்கணிக்கப்படாமல் அந்தத் திட்டங்களை ஏற்று நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சித்தார்-பட்டணம்கால் திட்டத்திற்காக ஏறத்தாழ 26 லட்சம் ஒதுக்கப்பட் டிருக்கிறது. 1964-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றால் நாங்கள் மிகவும் வருந்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். அங்கே எவ்வளவுதான் தண்ணீர் இருந்தாலும் டெயில் என்ட்ஸ்க்கு தண்ணீர் கிடைப்பது இல்லை. நெல்லை ஜில்லாவில் இருக்கும்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 மார்ச் 21

ப. 11-30 ராதாபுரம் பகுதிக்கும் கிடைக்கவில்லை. பாணியாறு ப்ளோ சரியாக இல்லை என்று சொல்வதால், தண்ணீர் அதிகமாக இருந்தாலும் கால்வாயில் போய் சேருவது இல்லை. ஆகவே, அந்த பாணியாறு ப்ளோவை நல்ல வகையில் சீர்படுத்தி தண்ணீர் அதிகமாக விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்ஜினியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக 12 திட்டங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்காக 12 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அதிலே கூட கன்னியாகுமரி ஜில்லாவிற்கும், திருநெல்வேலி ஜில்லாவிற்கும் ஒரு திட்டமும் இல்லை. சிறு பாசனத் திட்டங்களுக்காக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே கூட கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்திற்கு 65 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 133 லட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 5 லட்சம் ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்னும் சிறு பாசனத் திட்டங்களுக்காக ரூ. 1 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படிப் பார்க்கிறபோது எந்த அளவுக்கு கன்னியாகுமரி ஜில்லாவும், திருநெல்வேலி ஜில்லாவும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு வேறு தெளிவு தேவையில்லை. நொய்யாறு இடது கரைக் கால்வாய் என்று ஒன்று இருக்கிறது. கேரளாவிலிருந்து இதற்குத் தண்ணீர் வருகிறது. இதற்காக தமிழ்நாடு அரசாங்கம் கேரள அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. ஆனால் கேரளா அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் நொய்யாறு இடது கரைக் கால்வாய்க்கு தண்ணீர் விடுவது இல்லை. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தண்ணீர் விடவேண்டுமென்று தமிழ்நாடு அரசு கேரள அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டும். இன்னும் அதிகமான அளவுக்குத் தண்ணீர் விடுவதற்கு அங்கே தண்ணீர் இருக்கிறது. ஆகவே, தமிழ்நாடு அரசு இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முல்லையாறு பிராஞ்சு-கிளைக்கால்வாயில் மண் அதிகமாக தூர்ந்து விவசாயத்திற்குப் பயன் அளிக்கும் நிலையில் இல்லை. ஆகவே அதையும் சீர்படுத்தி தூர் எடுத்து போதுமான தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

திறபரப்பு வலது கரைக் கால்வாய் திட்டம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்காக கல் கூட நாட்டப்பட்டு, இந்த காருண்ய சர்க்கார் வந்தவுடன் அந்தக்கல்லை மாற்றிவிட்டு, அந்தத் திட்டத்தை கைவிட்டு விட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சராக அண்ணாதுரை அவர்கள் இருந்தபோது ஏற்கனவே இந்த மன்றத்தில் அதைப் பற்றிச் சொன்னேன். அதை மறுபடியும் எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று சொன்னால் அதை



1973 மார்ச் 21] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஏற்றுக்கொள்வோம் என்று உறுதிமொழி கொடுத்தார்கள். இன்றையதினம் நிலை என்ன? அதை நிரந்தரமாகக் கைவிட்டு விட்ட நிலை தான் இருக்கிறது. அந்தத் திட்டத்தால் விவசாயிகளுக்கு மட்டுமல்ல, அருமனை சிதறால் பகுதியில் உள்ள மக்களுக்கும் குடி தண்ணீர் வசதி செய்து தர உதவிகரமாக இருக்கும். அந்தத் திட்டத்தைக் கைவிடுவதற்குக் காரணம் அங்கே இருக்கும், அந்தப் பகுதியில் இருக்கும் சில வெஸ்டட் இன்டரஸ்டட் பார்ட்டிகள் இருக்கிறார்கள், அவர்களுடைய தூண்டுதலின் பேரில்தான் வருவாய்த் துறை அந்தத் திட்டத்தை கைவிட சிபார்சு செய்து இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) என் கட்சியின் சார்பாக நான் ஒருவன்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** நிறையப் பேர்கள் பேச இருக்கிறார்கள். உங்கள் கட்சியின் சார்பாக இரண்டு பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் 10 நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள். இன்னும் 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அவர்கள் மாலையில்தான் பேச இருக்கிறார்கள். எனக்கு 10 நிமிடம் தாருங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** தலைவர்கள் பிறகு பேச வேண்டும். ஆகையால் 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அடுத்ததாக, அருவிக்கரை இடதுகரைக் கால்வாய் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதிலே கூட சில்ட் எடுக்காமல், அது அந்தப் பிரதேசத்திற்கு எந்தப் பிரயோசனமும் இல்லாமல் இருக்கிறது. அதை ஆத்தூரிலிருந்து சாயக்கோடு வரையிலும் விஸ்தரித்து விவசாயிகளுக்கு பயன் தரத்தக்க வகையில் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்னை நீண்ட நெடுங்காலமாக நமது அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கிறது. அமைச்சரின் அறிக்கையில் அதைப் பற்றி ஒரு குறிப்பு காணப்படுகிறது. நாம் ஏதோ 1971-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8-ம் தேதி இந்த மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றினோம். அதற்குப் பிறகு சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கு தாக்கல் செய்தோம். அது சம்பந்தமாக இதுவரையில் இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

தன்னுடைய அறிக்கையை மத்திய அரசுக்குக் கொடுத்து, மாநில அரசாங்கத்திற்கும் அந்த ரிப்போர்ட் வந்திருப்பதாக குறிப்பில் காணுகிறேன். அந்த ரிப்போர்ட்டில் என்ன சிபார்சு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் இந்த சட்ட மன்றத்தில் வைத்து இருக்க வேண்டும். நாம் அதை அறிந்து விவாதிப்பதற்கு வாய்ப்பு கொடுத்து இருக்க வேண்டும். அதற்கு மாறாக அந்த ரிப்போர்ட்டை பதுக்கி வைத்து இன்று நாம் நாளைக் கடத்திவிடலாம், இது வருகிற சந்ததியைப் பாதிக்கும் விஷயம்தானே என்று கருதித்தான் அது சம்பந்தமாக அதிக அக்கறை செலுத்தவில்லை என்று கருதுகிறேன்.

அடுத்ததாக, சாலை அமைப்பு பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அதிலும் கூட கன்னியாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இன்று ஒரு அடிஷனல் லிஸ்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 20 திட்டங்கள் 337 லட்சம் ரூபாய்க்கு அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு ஒரு திட்டமும் இல்லை. சென்னையிலிருந்து நாகர்கோவில் வரையில் ஆங்காங்கு சாலைகளில் உள்ள பாலங்களை இடித்து விட்டு இருக்கிறார்கள். அவை 1—2 ஆண்டுகள் ஆகியும் இதுவரையிலும் கட்டப்படவில்லை. அவற்றில் அதிக கவனம் செலுத்தி சீக்கிரத்தில் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் இங்கே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கிறபோது மார்த்தாண்டம்—பனிச்சமூர் சாலை அரசாங்கத்தின் ஆக்டிவ் கன்சிடரேஷனில் இருப்பதாகச் சொன்னார்கள். அழுத்திச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தைப்பற்றி சிந்தித்து நல்ல முடிவு எடுப்பதற்காக அல்லது அந்தத் திட்டத்தை கைவிடுவதற்காக ஆக்டிவ் கன்சிடரேஷன் என்று சொன்னாரா என்று தெரியவில்லை. 1952-ம் ஆண்டிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தத் திட்டம், மக்கள் வேண்டி விரும்பிக் கொண்டிருக்கிற திட்டம் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருப்பது வருந்தத்தக்கது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அரசாங்கத்தின் சார்பாக 'ஆக்டிவ் கன்சிடரேஷன்' என்றால், எந்தத் திட்டமும் தீவிர கன்சிடரேஷனில் இருக்கிறது என்றால் உறுப்பினர் கருதுவது போல் இல்லை. ஆக்டிவ் கன்சிடரேஷன் என்றால் அது பேவரபிள் கன்சிடரேஷன் என்று தான் பொருள்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மிக்க நன்றி. ஆக இந்த ஆண்டில் அந்த வேலை எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன். மக்களுக்கு நான் அதைக் கூறலாம் என்று அமைச்சரிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோல், கணபதியான் கடவுபாலம் மிகவும் அவசியமான பாலம். அதையும் உடனடியாகக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாம்பூர் வாய்க்கால், மாறப்பட்டி காஸ்வே, மூவாற்று முகத்தில் ஒரு காஸ்வே, போன்ற திட்டங்களையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை இதற்கெல்லாம் செலவு அதிகமாக ஆகும் என்றாலும், 6 ஆண்டுகாலமாக இந்த மாவட்டம் புறக்கணிக்கப்பட்ட மாவட்டம் என்பதைக் கருத்தில் கொண்டு, 1—2 திட்டங்களையாவது இந்த ஆண்டில் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவமனை, பள்ளிகள் கட்டுதல் பற்றி இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். குலசேகரம், அருமனை ஆகிய இடங்களில் மருத்துவ மனை கட்டுவதற்காக பட்ஜெட்டில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேலை எடுக்கப்படவில்லை. அங்கே இருக்கும் ஆரம்பப் பள்ளிக்கும் கட்டடம் இல்லாமல் இருக்கிறது.

ஜூனியர் இன்ஜினீயர்களுக்கும், சூபர்வைசர்களுக்கும் ஒரு தகராறு இருந்து கொண்டே இருக்கிறது. சூபர்வைசர்கள், ஜூனியர் இன்ஜினியர்கள் ஆகியோருடைய உத்தியோக உயர்வு, சம்பள விகிதம் ஆகியவற்றில் பல வித்தியாசங்கள் இருப்பதால் சூபர்வைசர்கள் அரசாங்கத்திடம் ஒரு மனுவை வைத்து, அதற்கான பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், அந்த விஷயத்திலும் அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** பேசுவதற்கு பெயர் கொடுத்தவர்கள் தங்கள் இருக்கையிலே இருக்கவேண்டும். நேற்றைய தினமும் பெயரைக் கொடுத்துவிட்டு சில மாண்புமிகு உறுப்பினர்கள் சென்றுவிட்டார்கள். அந்த மாதிரி நிகழாத வண்ணம் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். நல்லசாமி:** தலைவரவர்களே, பாசனம், பொதுப்பணித் துறைகள் ஆகிய மான்ய கோரிக்கைகள் மீதான விவாதத்தில் நானும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுப்பணித் துறை மிகச் சிறப்பான முறையில் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அந்த முறையில் இந்த வருடமும் தன்னுடைய பணியை வெகு சீராக நிறைவேற்றுவதற்காக இந்த மானியம் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். கரூர் பகுதியைச் சேர்ந்த குடகனாறு திட்டத்தை அரசு எடுத்துக் கொண்டதற்கு கரூர் மக்கள் சார்பாக, ஏழை விவசாயிகள் சார்பாக, கிருஷ்ணராயபுரம் விவசாயிகள் சார்பாக வாழ்த்தும் நன்றியும் தெரிவித்துக்கொள்

ளுகிறேன். அந்தத் தொகுதி மக்கள் உத்திரசோழபுரம் பஞ்சாயத்துத் தலைவர் தலைமையில் டெபுடேஷனாக வந்ததை ஏற்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவர்களுக்கு ஆறுதல் சொல்லும் வகை யில் திட்டத்தை எடுத்துக் கொண்டதற்கு மக்கள் சார்பாக மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதேமாதிரி நீண்ட நெடுங்காலமாக, நாடு சுதந்திரம் அடைந்த காலத்தி லிருந்து நொய்யலாறு திட்டத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நமது அரசு அவசியம் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டும், அதற் கான முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று பலமுறை வேண்டியிருக்கிறோம். அந்த வேண்டுகோளை நடந்து கொண்டிருக்கிற வருடத்திலாவது ஏற்று, நொய் யலாறு திட்டத்தை துரிதப்படுத்தி நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கரூர் மக்கள் சார்பாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, காவேரி ஆற்றில் இருக்கின்ற தண்ணீர் நல்ல முறையில் பாசனத் திற்கு உபயோகப்பட்டு வருகிறது. என்றாலும் காவேரி தண்ணீரை கிழக்குப் பகுதியில் இருக்கின்ற தஞ்சை மாவட்டம் முழுவதுமாக செலவிட்டு வரு கின்றது. தஞ்சை மாவட்டத்தைச் சுற்றிப் பார்த்தால், காவேரி தண்ணீரை நிரம்ப வயலில் நிறுத்தி வைத்து, அது வீணாகிக் கொண்டிருக்கிறது. எங்கள் பகுதிகளைப் பார்க்கின்றபோது, கோவை மாவட்டம், திருச்சி மாவட்டம், சேலம் மாவட்டம் போன்ற மேற்குப் பகுதிகளைப் பார்க்கின்றபோது, தஞ்சை மாவட்டத்தில் 1 ஏக்கருக்கு பாய்ச்சுகின்ற தண்ணீரை நாங்கள் 10 ஏக்கருக்குப் பாய்ச்சுகிறோம். அப்படி நாங்கள் பாய்ச்சி ஒரு ஏக்கரில் காண்கிற கண்டு முதல், தஞ்சை மாவட்டத்தில் 4 ஏக்கர்களில் கண்டு வருகிறார்கள். இந்த நிலைமை தொன்றுதொட்டு இருந்து வருகிறது. பசியாக இருப்பவர்களுக்கு சாப்பாடு இல்லாமல், மிதமான பசியுள்ளவர்கள் பல பலகாரங்களை சாப்பிடுவது போல் இது இருக்கிறது. அவர்கள் சாப்பிட முடியாமல் பாதியைத் தூக்கி எறிகிறார்கள்.

கிழக்குப் பகுதியில் இருப்பவர்கள் காவிரித் தண்ணீரை தேவையான அளவுக்கு உபயோகித்து, எஞ்சியதை மேற்குப் பகுதியில் உள்ளவர்களுக்குக் கொடுத்தால் பஞ்சத்தைத் தீர்க்கமுடியும். தஞ்சை மாவட்டத்தில் இன்னும் இயற்கையாக இருக்கக் கூடிய தண்ணீர் செல்வங்கள் இருக்கின்றன. நிலத்தடி நீரும் அதிகமாக இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடியில் இருக்கின்ற நீரை எடுத்துப் பாய்ச்ச ஏற்பாடு செய்து, மிகுதியாக இருக்கின்ற காவிரித் தண்ணீரை சேலம், கோவை, திருச்சி ஆகிய மாவட்டங்களுக்குக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்ளுகிறேன்.





நிலத்தடி நீரை ஆராய விவசாயிகளைச் சேர்ந்தவர்கள், எஞ்சினியர்கள், பல தரப்பட்ட நிபுணர்கள் ஆகியவர்களைச் சேர்த்து ஒரு குழு அமைத்து, தமிழ்நாடு பூராவும் சுற்றிப் பார்த்து, பாசனத்திற்கு தண்ணீரை எதிர்பார்த்துக் கொண் டிருப்பவர்களுக்குத் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழ்நாடு பூராவும் சர்வே செய்வதற்கு நல்ல முறை யில் குழு அமைத்து அந்தக் குழு கொடுக்கின்ற ஆலோசனையை அரசு ஏற்று செயல்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியை அடுத்துள்ள கரூர் தொகுதியில் தமிழ் நாட்டிலேயே முன்மாதிரியாக பாசனம் ஒன்று அமைத்திருக்கிறோம். லிப்டு இர்ரிகேஷன் மூலம் டிரில்லர் விவசாயம் செய்கிறோம். அதன் மூலம் 7,300 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாயப் போகிறது. செழிப்பான முறையில் பாயப் போகிறது. இந்தியாவிலேயே பெருமைப்படக் கூடிய அளவுக்கு உள்ள பாசனமாக அமையப் போகிறது. இன்னும் பல விவசாயிகள் அந்த முறையில் பாசனம் செய்ய விரும்புகிறார்கள். அந்த விவசாயிகளுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் முறையில் இன்னும் 6,000 ஏக்கருக்கு பெர்மிஷன் கொடுத்தால். இன்னும் தீவிரமாக தெளிப்பான் பாசன முறையைச் செய்து காண்பிப்போம். நமது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் வந்து பார்த்து கரூர் விவசாயிகள் தஞ்சை விவசாயிகளைப் போல் திறமையான விவசாயிகள் என்று தீர்ப்புக் கூறிவிட்டு வந்திருக்கிறார்கள்.

ஆகவே, எங்கள் பகுதி விவசாயிகளும் திறமையுள்ள விவசாயிகள் என்று அறிந்து, அதிகக் கண்டுமுதல் செய்யக்கூடியவர்கள் என்று அறிந்து, மேலும் 6,000 ஏக்கருக்கு பெர்மிஷன் தரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். அந்தப் பகுதியிலிருக்கின்ற பாசனதாரர்கள் எல்லாம் கிட்டத்தட்ட 15,000 ஏக்கருக்கு மேல் பெர்மிட் இல்லாமல் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள். 1962-ம் வருடம் பாய்ந்திருக்கக்கூடிய பாசனத்தில் இருந்தவர்களுக்கு மட்டும் பெர்மிட் கொடுக்கலாம் என்ற உத்திரவு இருக்கிறது. அதற்குமேல் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருப்பவர்கள் தண்டத் தீர்வை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கீழ் கிராமத்தில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள், மேல் கிராமத்திற்கு அப்ஜெக்ஷன் என்ற நிலைமை இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) இருந் தாலும் எப்படியோ தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது 1973 வரையிலும். ஆகவே அவர்கள் குறையை தீர்க்கும் வகையில், அரசாங்கம் 6,000 ஏக்கருக்கும் பெர்மிட் வழங்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வேண்டிக்கொண்டு பெல் அடித்ததால் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

• திரு. பா. நாகலிங்கம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பாராட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

நீண்ட நெடுங்காலமாக, 20 ஆண்டு காலமாக என்னுடைய தொகுதியில், நானும் சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து இன்று வரையில் கேட்டு வந்த நாப்பாளையம் திட்டம் நிறைவேற்றப்படுவதற்காக இந்த ஆண்டு 12,70,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக இந்த அரசிற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் குறிப்பாகவும் சிறப்பாகவும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தையும், வாழ்த்தையும் தொகுதி மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதுமட்டுமல்லாமல் காட்டூருக்குப் போகின்ற கால்வாய்க்கும் ரூ. 3,50,000 இந்த அரசு ஒதுக்கியிருப்பது கண்டு பெருமைப்படுகிறேன்.

இன்றைக்கு சாலைகளை எடுத்துக் கொண்டால், 1,500 ஜனத்தொகை கொண்ட ஊர்களுக்கு சாலையமைக்கும் வேலையை ரூரல் ஒர்க்ஸ் திட்டத்தில் எடுக்க வேண்டும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு தாக்கீது அனுப்பியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இன்றைக்கு இருக்கின்ற கிராமச் சாலைகள் எல்லாம், சாலைகள் என்று பெயரளவில் இருக்கின்றனவே தவிர, உண்மையான சாலைகள் அல்ல. 1,500 ஜனத்தொகை உள்ள ஊர்களுக்கான சாலைகளை எல்லாம் ரூரல் ஒர்க்ஸில் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அமைச்சரவர்களையும், அதிகாரிகளையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுமட்டுமல்லாமல் அண்ணாமலைச் சேரி-சுண்ணாம்புக்குளம் ரோடை நீண்ட நெடுங்காலமாகவே பெருவழித்துறையில் எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். இன்னொரு முக்கியமான பிரச்னை, என்னுடைய தொகுதிக்குப் பக்கத்தில் இருக்கிற கும்மிடிப்பூண்டி-யைச் சேர்ந்த கடலோரப் பகுதியிலிருக்கிற மீனவர்கள், முஸ்லீம் மக்கள் பல்லாயிரக்கணக்கான மீன்களை கடலில் பிடித்து சென்னைக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் படகு மூலமாகச் சென்று பழவேற்காடு துறைமுகத்திற்குச் செல்லவேண்டும். இல்லையென்றால் ஆரம்பாக்கத்திற்கு வரவேண்டும். ஆகவே அண்ணாமலைச் சேரியிலிருந்து சுண்ணாம்புக்குளம் வரை உள்ள சாலையைச் சீர்படுத்தி பஸ் போக்குவரத்து ஏற்படும்படி செய்தால் மீனவ குடிமக்கள் கடலில் கிடைக்கின்ற மீன்களை மற்றும் கடல் உணவுப் பொருள்களை சென்னைக்குக் கொண்டுவர வசதியாக இருக்கும். அதை உடனடியாக இந்த ஆண்டிலாவது நிச்சயமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அமைச்சரவர்களையும், அந்தத் துறையில் பணியாற்றுகிற அத்தனை அதிகாரிகளையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.



அடுத்து, அனுப்பநாயக்கன்குப்பம் அணைக்கட்டிலிருந்து கிளிக்கொடி வரையில் ஒரு கால்வாயை வெட்டித் தருவதாக அமைசசரவர்கள் அறிவித்திருந்தார்கள். அது சம்பந்தமாக தலைமைப் பொறியாளர் அவர்களை இரவு 12 மணிக்குக்கூட போய் விரைவிலே வேலையை முடிப்பதற்கு ஆவனச் செய்ய வேண்டுமென்று கேட்டோம். அவர் செய்த உதவியை என்னுடைய தொகுதி மக்களும், விவசாயப் பெருங்குடி மககளும் என்றும் மறக்கமாட்டார்கள். ஆனால் அந்தக் கால்வாய் இதுவரை முழுமையாக சீர் செய்யப்படவில்லை. அந்தக் கால்வாய் மராமத்து செய்யப்படவில்லை. அதை உடனடியாகச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைக்குத் தண்ணீர் பஞ்சம் என்றால் அதற்காகப் பல திட்டங்களைப் போட்டு நம்முடைய அரசு நிறைவேற்றியது. பஞ்சட்டியிலிருந்து தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் எங்கள் நிலைமை குடி தண்ணீருக்குக்கூட மோசமாக இருக்கிறது. அங்கிருந்து கிரவுண்ட் வாட்டர் எல்லாம் பெரிய பெரிய ஆலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, எங்கள் பகுதிக்கு விவசாயத்திற்கு ஆழமான கிணறுகளை வெட்ட வேண்டியிருக்கிறது. அதற்கு நீர்ப்பாசன கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் ஏற்பாடு செய்வதாக மாண்புமிகு முதலமைச்சரவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சரவர்களும் தெரிவித்தார்கள். ஆனால் இதுநாள் வரையில் அதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்ற திங்கள் 17-ம் நாள் அங்கே நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்தபோது நானும் மற்றவர்களும் அதைப்பற்றித் தெரிவித்தோம். உடனடியாக ஆயிரம் இல்லை என்றாலும் நூறாவது தருவதாகச் சொன்னார்கள. அது போதாது. காவிரிப் பாசனம் தஞ்சை மாவட்டத்திற்குக் கிடைப்பதைபோன்ற வசதி எங்களுக்கு கிடையாது. ஆகவே, எங்கள் பகுதி மக்களின் தண்ணீர் பற்றுக்குறை சம்பந்தப்பட்ட குறைபாடுகள் எல்லாவற்றையும் போக்கும் வகையில் விரைவிலே ஏராளமாக ஆழமான கிணறுகளை வெட்டித் தருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இணைப்புச் சாலைகளைப் பொறுத்தவரையில் யூனியன் நிதி இல்லை, நிதி இல்லை என்று நீண்ட காலமாகச் சொல்லி வருகிறது. நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் முன்னோடியாகப் பலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். அந்த முன்னோடித் திட்டங்களைப் போல எங்கள் பகுதியில் இணைப்புச் சாலைகளைப் போடுவதற்கு அதிக உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுதும் சிறப்பாக பல காரியங்களை நம்முடைய அரசு

செய்துகொண்டிருக்கிறது. இன்னும் எல்லாக் கிராமங்களுக்கும் குடி தண்ணீர் வசதியும், இணைப்புச் சாலை வசதியும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று, பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, 1973-74-ம் ஆண்டு பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பொதுப்பணித் துறையைப்பற்றி மறைந்த மாமேதை இராஜாஜி அவர்கள் ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோது, 'முதல் நம்பர் விரோதி பொதுப்பணித் துறை' என்று இந்த மன்றத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் இந்தத் துறையினால் அரசாங்கத்தின் வருமானத்தில் பெரும் பகுதி விரயம் ஆகிறது. நிறைவேற்றப்பட வேண்டிய காரியங்கள் நல்லமுறையில் நிறைவேற்றப்படாமல் பணம் விரயமாவதால் அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

உதாரணமாக திருச்சி மாவட்டத்தில் அதிகமான மக்கள் தொகை உள்ள கஞ்சமலைப் பகுதியில் 500 ரூபாய் சம்பளம் வாங்குகின்ற கெஜட்டெட் ஆபீசர்கள்—4 ஜூனியர் எஞ்சினீயர்களுக்கு 2 ஏக்கர் விஸ்தீரணத்தில் பி.டபிள்யூ.டி. துறையினால் 4 பங்களாக்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். சென்னையிலே இருக்கின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கூட 1 கிரவுண்ட் அல்லது 1½ கிரவுண்டில் நல்லமுறையில் வீடு கட்டிக்கொண்டிருக்கும்போது அவர்களுக்கு இப்படி வீடு கட்டுவதில் பணத்தை விரயம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கனம் உறுப்பினர் அவர்கள் இராஜாஜியின் கருத்தைச் சொன்னார்கள். பின்னால் ஜூனியர் எஞ்சினீயர்களுக்கு பங்களாக்கள் கட்டி பணத்தை விரயம் ஆக்குவதாகச் சொன்னார்கள். அது தவறு. அப்படி ஒன்றும் பங்களாக்கள் கட்டப்படவில்லை. 4 ஜூனியர் எஞ்சினீயர்களுக்கும் அளவான முறையிலேதான் வீடுகள் கட்டப்படுகின்றன. ஒதுக்கப்பட்டிருக்கும் இடம் வேண்டுமென்றால் கொஞ்சம் அதிகமாக இருக்கலாம். ஆனால் அவ்வளவு இடத்திலும் வீடு கட்டப்படவில்லை. ஆகவே, தவறான தகவலைத் தரவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: எனக்குக் கிடைத்த தகவலை வைத்துச் சொல்கிறேன். அதைப்போன்று திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் பங்களாவை விட அங்கே இருக்கின்ற எக்சிக்யூட்டிவ் ஆஃபீசர்களுக்கு பெரிய பங்களாக்களாகக் கட்டப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடனா நதி, ராம நதித் திட்டங்களைப் பற்றிப் பேசும்போது—சென்ற ஆண்டு பட்ஜெட்டின் மீது உரையாற்றும்போது—1972 முடிவுக்குள் இந்தத் திட்டங்கள் முடிவடையும் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் இதுவரை அந்தத் திட்டங்கள் நிறைவேற்றித்தரப்படவில்லை; சிறப்பு விழா நடத்தப் படவில்லை; அதற்கு என்ன காரணம் என்றும் தெரியவில்லை. அதற்கு அதிகப் பணம் ஒதுக்காததால்தான் இன்னும் முடிவடையவில்லை என்று நினைக்கிறேன். அந்தத் திட்டங்களை விரைவிலே முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்று மணிமுத்தா, தாம்பிரவருணி பாசனத்தில் பல முறைகேடான காரியங்கள் நடைபெறுகின்றன. எங்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. மணிமுத்தார் நீர்த்தேக்கத்தில் நிரந்தரமாக 50 அடி ஆழத்திற்கு தண்ணீர் தேக்கி வைக்கப்பட வேண்டுமென்று டேட்டெட் 16—2—1971-ல் அரசாங்கம் ஜி.ஓ. நம்பர் 472, பி.டபிள்யூ.டி., ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால் இப்போது அந்த ஆணையை அவர்கள் மீறி நடந்துகொண்டிருக்கிறார்கள். இப்படி மீறுவதன் காரணமாக தாம்பிரவருணியின் முறையான பாசன வசதி பெறும் கன்னடியான் பகுதி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதுபற்றி புகார் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் நடவடிக்கை எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லை.

1972-ம் ஆண்டு கார் காலத்திலே கூட இந்த நிலைமையினால் 10,000 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டு, ஒரு மேனி குறைவு, தேய்வு அறுவடை நடந்திருக்கிறது. மேலும் அதனால் மக்கள் கொந்தளிப்பு அடையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்தமாதிரியான சூழ்நிலை ஏற்படாமல் இருக்க, பாதிப்பு நிலைமை ஏற்படாமல் இருக்கச் செய்ய வேண்டியது அமைச்சரவர்களின் கடமை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தமாதிரியான சம்பவங்கள் நிகழ்வதற்குக் காரணம் திருநெல்வேலி கிழக்கு ஜில்லாவில் இருக்கக்கூடிய சில செல்வாக்குப் படைத்த பெரிய மனிதர்கள்தான் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களின் அத்து மீறல்களினால் எங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்க வில்லை. இந்த நிலையில் நாம் மைசூரும் கேரளமும் தண்ணீர் கொடுக்கவில்லை என்று குறை சொல்லிக்கொண்டிருக்கிறோம். நமது மாநிலத்தில் ஒரு

மாவட்டத்திற்குள் இருக்கின்ற மேற்குப் பகுதிக்கும் கிழக்குப் பகுதிக்கும் சரியாக தண்ணீர் விநியோகிக்க முடியாத நிலையில் மற்றவர்களைப்பற்றி எப்படி நாம் குறை சொல்ல முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

எனது தொகுதியில் தாம்பிரவருணி இருப்பதால் அதை செழிப்பான பகுதி என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். தாம்பிரவருணி தண்ணீருக்கும் வட பகுதியிலே இருக்கின்ற எங்களுக்கும் சம்பந்தமில்லை. தாம்பிரவருணி தண்ணீர் வட பகுதியில் இருக்கின்ற விவசாயிகளுக்கோ அல்லது மற்ற காரியங்களுக்கோ பயன்படவில்லை. ஆகையால் தாம்பிரவருணியின் வட பகுதியாகிய பாப்பாகுடி பிர்க்காவையும் கடயம் பிர்க்காவையும் வறண்ட பகுதிகளாகப் பிரகடனப்படுத்தி, அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குளங்கள் மராமத்துச் செய்யப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்று எங்கள் பகுதியிலே உள்ள பல குளங்கள் மராமத்துச் செய்யப்படாமல் இருக்கின்றன. கடயம், பாப்பாகுடி, சேரன்மகாதேவி பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து எந்தெந்தக் குளங்கள் மராமத்துச் செய்யப்பட வேண்டுமென்று ஒரு லிஸ்டை தயாரித்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை அப்ரூவ் செய்து, அந்தக் குளங்களை எல்லாம் மராமத்து செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லை என்றால் அந்தப் பகுதிகளுக்கு பாசன வசதி கிடைக்காமல் சரியாக விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படும். எனவே மராமத்து வேலைகளை உடனடியாகச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கூடல்-வீரவநல்லூர் பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நீண்டநாட்களாக நாங்கள் கோரி வந்திருக்கிறோம். எனக்கு முன்னாலே இருந்த சட்டமன்ற உறுப்பினர்களும் அதைப்பற்றிச் சொல்லி வந்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றித் தந்தால் அங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், வியாபாரம் செய்கின்ற மக்களுக்கும் மிகவும் உதவியாக இருக்கும். அந்தப் பாலத்தைக் கட்டித் தரவேண்டுமென்று நெல்லை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் 1969-ம் ஆண்டில் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்ற தகவலையும் அமைச்சரவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, முக்கூடல்-கடயம் ரோடு வேலை பல ஆண்டுகளாக நடந்து கொண்டே இருக்கிறது. அது இன்னும் முடியவில்லை. அந்தத் திட்டம் 1951-ம் ஆண்டு அங்கே ஜில்லா போர்டு இருந்த காலத்தில் அனுமதிக்கப்பட்ட திட்டமாகும்.





நே.ப.

திட்டத்தட்ட இருபது ஆண்டு காலமாகியும் இந்தத் திட்டத்தைப் பொறுத்த 12-00
மட்டில் எல்லாம் ஆமைவேகத்தில்தான் நகர்ந்து கொண்டு இருக்கிறது. இதை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் இந்த இரண்டு ஊர்களுக்கும் மத்தியிலுள்ள சுமார் பதினைந்து கிராமங்கள் பயனடையும். இன்று நெல்லை மாவட்டத்தில் அமைந்துள்ள திட்டங்கள் போக, பச்சாறில் ஒரு அணைக்கட்டினைக் கட்டுவதற்கு பத்தாண்டு காலமாக சர்வே நடந்து கொண்டு இருக்கிறது. அது எப்போது முடியும், எப்போது சர்க்காருடைய அப்ரூவலுக்குப் போகும் என்று தெரியவில்லை. இதை உடனடியாக முடித்துத் தர அரசு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஸ்ரீவைகுண்டம் தாலுக்காவில் மருதூர் கால்வாயில் காங்க்ரீட் லைனிங் செய்து தண்ணீர் சேதத்தைத் தவிர்ப்பதுபோல தாம்பிரவருணி மூன் காலிலும் மணிமுத்தாறு முன்காலிலும் இப்படி காங்க்ரீட் லைனிங் செய்தால் 25 சதவிகிதம் அளவிற்கு தண்ணீர் சேதத்தைத் தவிர்க்கலாம் என்ற யோசனையைச் சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. தொ. க. சிறைமீட்டான்: பேரவைத் தற்காலிகத் தலைவரவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியத் தினை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இத்துறையினால் நம் மாநிலத்தில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருப்பதை நாம் பாராட் டாமல் இருக்க முடியாது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பல இடங்களிலே சொந்தமாக அனுபவித்துவந்த குளங்கோர்வை நிலங்களில் பட்டாக்களை வழங்கியபின் கடந்த கால அரசு அதை நீக்கி தண்டத் தீர்வையை விதித்து வந்தது. நம் அரசு வந்த பிறகு அமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்பி னாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருணையாலும் அங்கே யெல்லாம் சுமார் 65,000 விவசாயிகளுக்கு பட்டா வழங்கியிருக்கின்றார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் பல ஆண்டு காலமாக புறக்கணிக்கப்பட்டு வந்த மாவட்டமாகும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே அந்த மாவட்டத்து மக்கள் அண்டையிலுள்ள தஞ்சை மாவட்டத்திற்கு பிழைப்பிற்காக விவசாயக் கூலிகளாகச் சென்றவர்கள் நிறையபேர் இன்னும் திரும்பி வரமுடியவில்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் ஏதோ இராமநாதபுரம் மாவட்டம் மிகமிக அபிவிருத்தி அடைந்திருப்பதைப்போலப் பேசினார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்னும் பல பகுதிகளில் 20 மைல் சுற்றளவிற்கு சரியான ரோடு வசதி இல்லாமல் இருக்கின்றது. உதாரணமாக போகலூர்

ஊராட்சி ஒன்றியம் 64 பஞ்சாயத்துக்களைக் கொண்டுள்ளது. ஆனால் பாதை வசதியில்லாமல் இருந்தது. நம் அரசு வந்தபிறகுதான் அங்கேயெல்லாம் பாதை வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இராமநாதபுரம் மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தினைப்போல வளர்ச்சியுற்றதாகச் செய்ய வேண்டுமானால் இன்னும் பல கோடி ரூபாயை இந்த மாவட்டத்திற்கெனச் செலவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, சேதுசமுத்திரத் திட்டம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். இது நீண்டகாலமாகக் கேட்டு வரும் திட்டமாகும். இதை காங்கிரஸ் ஆட்சியிலேயே முடித்துத் தருகின்றோம் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையில் இது நிறைவேற்றித் தரப்படவில்லை. எனவே அந்த மாவட்டத்திற்கு மிக முக்கியமாக உள்ள இந்தத் திட்டத்தினை இந்த ஐந்தாண்டு திட்டத்திலாவது நிறைவேற்றித் தரவேண்டும் என்று நமது அரசு மத்திய அரசினை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் கண்மாய் மிகவும் பெரிய கண்மாய். இது இராமநாதபுரம் நகருக்கும் மற்றும் நான்கைந்து கிராமங்களுக்கும் உணவினைத் தரும் கண்மாயாகும். இதை ஆழப்படுத்திச் செப்பனிட ரூ. 20 லட்சத்தில் ஒரு திட்டம் தயாரித்து அதற்கு தலைமைப் பொறியாளர் அவர்கள் அரசின் அங்கீகாரமும் பெற்றிருக்கிறார்கள். எனவே இந்த ஆண்டிலேயே இந்த வேலையைத் துவக்கி இதை முடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிறு நீர்ப்பாசன கண்மாய்களெல்லாம் ஊராட்சி ஒன்றியங்களின் நிதி வசதிக் குறைவு காரணமாக மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. இவற்றை அரசே ஏற்று மராமத்து செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் சிறு சிறு கண்மாய்களாக உள்ள நான்கைந்து கண்மாய்களை ஒன்றாக இணைக்கும் சாத்தியக்கூறுகள் உள்ள இடங்களிலே அவற்றை இணைக்கும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் நீர்ப்பாசன வசதி பெருகும். அடுத்து என் தொகுதியில் பார்த்திபனூர் கண்மாய் 2,000 ஏக்கர் பாசனத்திற்கு உதவியாக இருக்கக்கூடியது. அதுவும் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றது. இதையும் அரசு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து மதுரை-மண்டபம் நெடுஞ்சாலை தேசிய நெடுஞ்சாலை பல்லாண்டு காலமாக விரிவு படுத்தப்படாமல் இருக்கின்றது. இதை விரிவு படுத்துவதுடன் வளைவுகளையும் போக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது



போன்று பரமக்குடியிலிருந்து இராமநாதபுரம் வரை நெடுஞ்சாலை பல இடங்களிலே வளைவுகளுடன் கூடியதாக இருக்கின்றது. இதையும் நேர்படுத்தி விரிவு படுத்த வேண்டும், அவசியமானால் இதற்காக மத்திய அரசையும் அணுகிக் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து என் தொகுதியான பார்த்திபனூர் இணைப்புச் சாலையிலிருந்து வீரசோழம் வரை கூனங்குளம், பீக்கங்குறிச்சி, சிம்பளாக்குடி, திருந்தலாங்கோட்டை வழியாக வீரசோழம் வரையில் போகும் சாலையை அமைப்பதற்கு மூன்று லட்சம் ரூபாய் அளவிற்கு எஸ்டிமேட் போடப்பட்டுள்ளது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து இராமநாதபுரம் கலைக்கல்லூரி மாணவர்களுக்கு மாணவர்கள் விடுதி ஒன்று மிகமிக அவசியமாக இருக்கிறது. இப்போது கல்லூரி இரண்டு மூன்று மைல்களுக்கு அப்பால் இருப்பதால் புதிய கட்டிடம் ஒன்று அங்கே கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அடுத்து பரமக்குடியிலிருந்து அபிராமம், பார்த்திபனூர் செல்லும் பாதையொன்று காங்கிரஸ்காரர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டும் இன்னும் அங்கே பேருந்துகள் செல்லத்தக்க அளவிற்கு வசதிகள் இல்லை. எனவே இதையும் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாவட்டத்தின் பல பகுதிகளில் கால்வாய்களுக்கு மேலே பாலங்கள் இல்லாமல் இருக்கின்றன. பல இடங்களிலே பாலங்களுக்கான எஸ்டிமேட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் இன்னும் வேலைகள் எடுத்துக் கொள்ளப்படாமலேயே இருக்கின்றன. இதுபற்றி கடந்த ஆண்டிலும் சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். இவற்றையெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கூத்தன்கால்வாய்க்கு 12 லட்சம் ரூபாய் செலவில் போட்டத் திட்டம் நிறைவேறி இருக்கிறது. விளத்தூருக்கு அருகாமையில் ஒரு பாலத்தையும் சத்திரப்பட்டிக்கு அருகாமையிலும் ஒரு பாலத்தை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவிற்குப் பேச வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: பேரன்புமிக்க மாற்றுத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய அரசியல் எதிர்கால வாழ்வினையே தன் கையகத்தில் கொண்டுள்ள இந்தப் பொதுப்பணித் துறை மானியத்தை மிகுந்த ஆவலோடு வரவேற்று, பாராட்டி, அதன்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். எந்த அளவிற்குப் பொதுப்பணித் துறையானது திறமையாகப் பணியாற்றுகின்றதோ அந்த அளவிற்குத்தான் ....

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: மாண்புமிகு அங்கத்தினர் இந்த மன்றத்தில் பேசும்போது தலைவரவர்களை 'பேரன்புமிக்க தலைவரவர்களே' என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): அழைக்கலாம். அதில் தவறொன்றுமில்லை. அன்பு சற்று அதிகமாக இருக்கிறது. தவறில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: சட்டமன்றத் தொகுதியில் கண்ணுக்குத் தெரியும்படியான சில திட்டங்களை நிறைவேற்றக் கூடியது இந்த பொதுப்பணித் துறைதான். எனவேதான் ஆரம்பத்தில் அவ்வாறு கூறினேன்.

இந்தப் பொதுப்பணித் துறைக்காக ஒதுக்கிய ரூ. 60 கோடி போதாது என்றே நான் கருதுகிறேன். இதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன். சட்டமன்ற உறுப்பினர்கள் மீது அன்பும் பாசமும் கொண்டவர்கள் நமது முதலமைச்சர் அவர்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுடைய அரசியல் எதிர்காலம் இந்தத் துறையினால் செயலாற்றப்படும் திட்டங்களை நம்பித்தான் பெரிதும் இருப்பதால் இந்தத் துறைக்கு இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, முடவனாறு திட்டத்தினை ஏற்றுக்கொண்டு இருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் அருவாக்குரிச்சுக்கு உரிய பங்கினை அளிக்க வேண்டும். அருவாக்குரிச்சியில்தான் நொய்யலாறு திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ஆனால் அதன் பலன் அருவாக்குரிச்சிக்குக் கிடைக்கவில்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. அருவாக்குரிச்சி தொகுதிக்கு ஆற்றுவசதி இல்லை, பாசன வசதியும் இல்லை. அது நீண்டகாலமாக வறட்சிமிக்க பகுதியாக இருக்கின்றது. ஆகவே கிடைக்கும் இந்த நீரையாவது முழுமையாக நொய்யலாற்று திட்டத்தின் கீழ் கிடைக்கும் நீரை முழுமையாக அருவாக்குரிச்சிக்குக் கொடுக்கும்படி 'ஸ்கீமை'த் தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, அங்கே பரப்பலாறு திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. அதிலே, பள்ளிப்பட்டி அருகில் அணை வேண்டுமென்று நீண்டநாளாக கோரிக்கை இருந்து வருகிறது. இது என்ன செயல் திட்டத்திலிருக்கிறது என்று தெரியவில்லை. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமராவதி ஆற்றிலே மழைக் காலங்களில் வெள்ள நீரைத் தேக்கி குளம் குட்டைகளுக்கு திருப்பிவிட திட்டம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும். ஏற்கனவே இருக்கக்கூடிய திட்டங்களை பாதிக்கக்கூடிய திட்டம் எதையும் சொல்ல நான் தயாராக இல்லை. வீணாக, சமுத்திரத்தில் விழக்கூடிய



வெள்ள நீரை உபயோகப்படுத்தக் கூடிய திட்டம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். எனது தொகுதியில் 'பாண்ட் ஸ்கீம்' ஏதும் செயல்படுத்தப்படவில்லை. இனியாவது குறைந்தபட்சம் இந்த சிறிய திட்டங்களையாவது செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டிபார்ட்மெண்டில் சிவில் இஞ்சினீயர் பற்றாக்குறை இருக்கிறது என்றும், மெக்கானிகல் இஞ்சினீயர் உபரியாக இருக்கிறார்கள் என்றும் கேள்விப்படுகிறேன். ஒரு ஒழுங்கு திட்டமிட்டு இதை சரி செய்ய வேண்டுமென்ற ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜெமினி பாலம், காவிரி ஆற்றுப் பாலம் ஆகிய திட்டங்கள் திட்டமிட்டபடி சுறுசுறுப்பாக நடக்கின்றன. ஆனால் விழுப்புரம் நெடுஞ்சாலையில் ஒரு சிறிய பாலத்தை சீரமைப்பதற்கு கவனக் குறைவு இருப்பதால் உரிய நேரத்தில் நிறைவேற்றப்படவில்லை. இவற்றை விரைவாக நிறைவேற்றக் கூடிய அளவுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ் மட்டத்தில், இலாகாவில், சுறுசுறுப்பு குறைவாக காணப்படுகிறது. இவர்களிடம் சுறுசுறுப்பை உண்டாக்கி, திட்டங்களை தீவிரமாகச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையில் பொறியாளர்களையே இயக்குநராக நியமிக்க வேண்டும். இப்போது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இவர்கள் ஈடுபட்டுள்ள பணி, முழுக்க முழுக்க டெக்னிகலாக இருப்பதால், திறமை பெற்ற பொறியாளர்களையே ஏன் நியமிக்கக் கூடாது? ஆகவே, பொறியாளர்களையே இயக்குநர், செயலாளர், தனிச் செயலாளர், துணைச் செயலாளர்—இப்படிப்பட்டவர்களின் வேலைக்கு நியமிக்க வேண்டும் என்று சிபாரிசு செய்கிறேன்.

மேல் மட்ட அதிகாரிகளின் சம்பளம் நீண்டகாலமாக ஸ்டாக்னன்ட்—தேக்க நிலையிலேயே இருப்பதாக அறிகிறேன். அவர்களின் இந்தக் குறை நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏ.இ.-க்களுக்கு ரூ. 425—25 . . . என்ற சம்பளம் இருக்கிறது. அசோசியேட் லெக்சரரின் சம்பள விகிதம் ரூ. 475—25 . . . என்று இருக்கிறது. இருவரும் ஒரே கிரேடில் உள்ளவர்கள்தான் என்பதால் ஏ.இ.-க்கு ரூ. 475—25 . . . என்று மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பி.டபிள்யூ.டி.-ல் பல பிரிவுகள் தனியாகப் பிரிந்து சென்று விட்டன. குடிநீர் வாரியம், வீட்டு வசதி வாரியம்—இப்படி பல வாரியங்களாகப் பிரிந்து விட்டதால் அவர்களுக்கு போனஸ் போன்ற வசதிகள் கிடைக்க, எஞ்சிய பி.டபிள்யூ.டி.

யைக் கலைத்துவிட்டு வாரியங்களாக அமைக்க வேண்டும் என்று பொறியாளர்கள் கருதுகிறார்கள். இதை அனுதாபத்துடன் அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் எதைக் கலைத்துவிட வேண்டுமென்று சொல்கிறார்? பி.டபிள்யூ.டி.-யையேவா?

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: ஆம். அதற்கு பதிலாக போர்டு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு குறை. வீட்டு வசதி வாரியத்திற்கும் மற்ற பல வாரியங்களுக்கும் அனுப்பப்பட்ட ஜே.இ.-க்கள் 3 வருஷத்திற்குள் மேல்பதவிக்கு வாய்ப்பு ஏற்பட்டு உயர்ந்து விடுகிறார்கள். துரதிருஷ்டவசமாக பொதுப்பணித் துறையிலுள்ள ஜே.இ.-க்கள் 10, 12 ஆண்டுகள் மேல்பதவி உயர்வு இல்லாமல் தேங்கிய நிலைமையில் இருக்கிறார்கள், என்ற குறைபாட்டை பொறியாளர்கள் சொல்கிறார்கள். ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு, ஹவுசிங் போர்டு, வாடர் போர்டு ஆகிய பல போர்டுகளை ஏற்படுத்தி விட்டதால், பொதுப்பணித் துறையில் வேலை வாய்ப்பு குறைந்து விட்டதாக அவர்கள் கருதுகிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, சில நாட்களுக்கு முன்பு எல்லா இஞ்சினீயர்களும் "இஞ்சினீயர் டே" கொண்டாடினார்கள். என்னையும் அழைத்திருந்தார்கள். நான் சென்றிருந்தேன். அப்போது அனைத்து இஞ்சினீயர்களும் இருந்த காரணத்தால், அவர்கள் எல்லாம் "ஒன் யூனிட்" வேண்டுமென்று கேட்டார்கள். "நீங்களே பேசி ஒரு முடிவுக்கு வந்தால் அரசு பரிசீலிக்கும்" என்று சொன்னேன். ஆனால் அவர்களுக்குள் ஒருமித்த கருத்து ஏற்படாத நிலை இப்போது இருந்து வருகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, இஞ்சினீயர்களுக்கு பொதுவாக "காமன் பூல்" ஒன்று ஏற்படுத்தி, அதிலே யார் யார் சீனியராக இருக்கிறார்களோ, அவர்களுக்கு பதவி உயர்வு தரலாம். வாரியத்திற்குச் செல்லாதவர்களிடையே பதவி உயர்வு கிடைக்காததால் மனக் குறை இருந்து வருகிறது. இதை தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னிலை-ஐந்தாருக்கு இடையே பாதை அமைப்பதை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. தார் சாலை போடப்பட்டுள்ளது. மேலும், நான் இந்தச் சட்டமன்றத்தில் குரலெழுப்பிய பின்னல், ரூ. 5,20,000-க்கு மேலாக செலவழிக்கக் கூடிய திட்டம் ஒன்று என்னுடைய தொகுதியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ராசிபுரம்-அரவகுருச்சியில் வாராவதி ஒன்றில் தரைமட்டப் பாலம் ஒன்று கட்டப்பட்டு வருவது குறித்து எனது உள்ளபூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.



நண்பர் அப்துல் லத்தீப் சாதிக் சார்பில், வாணியம்பாடியில் ரூ. 35 லட்சத்திற்கு ஒரு பாலத்தை கட்டுவதற்கு இந்த அரசு அனுமதித்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் கூறிய என்னுடைய தொகுதி குறைகளையும் மற்ற குறைகளையும் நிறைவேற்றியதற்காக இந்த அரசுக்கு என்னுடைய நன்றிக் கண்ணீரை காணிக்கையாக்க விரும்புகிறேன் அதேபோல, நான் மேலே கூறிய குறைகளையும் நிறைவேற்ற உத்தரவிட்டால் ஏழை எளிய பாமர மக்களுடைய நன்றி இந்த அரசுக்கு நிச்சயமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு நான் கூறிய திட்டங்களை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, தமிழக அரசின் 1973-74-ஆம் வருஷ ஃபார்வர்டு பாசன, பொதுப்பணி, கட்டிடத் துறைக்கு மானியக் கோரிக்கைகளை, கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்று கீழ்க்கண்ட கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல இந்த நாட்டு மக்கள் அத்தனை பேரும் சுபிட்சமாக வாழ்வதற்கு, அவர்கள் வாழ்வு வளம் பெறுவதற்கு அத்தியாவசியமான அத்தனை ஏற்பாடுகளையும் செய்வதற்கு இந்தத் துறை மிகச் சிறப்பான முறையில் இயங்குவது பாராட்டுக்குரியது.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இரண்டு விதங்களில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அபிவிருத்தித் திட்டம் என்றும், அத்தியாவசியத் திட்டம் என்றும் இதைப் பிரிக்கலாம். ரோடு போடுவது, நீர்ப்பாசன வசதிகளை விருத்தி செய்வது, கட்டிட வேலைகளை நிறைவேற்றுவது, அபிவிருத்தி செய்வது ஆகியவை டெவலப்மெண்டல் பிராஜெக்ட்கள். ஆக, இந்தத் துறையின் வேலைகளை, டெவலப்மெண்டல் வொர்க்ஸ, மற்றும் அத்தியாவசியத் திட்ட வேலைகள் சென்சியல் ஆர் அனவாய்டபிள் வொர்க்ஸ், என்ற தரப்பிலே இரண்டு தரப்பில் மேற்கொள்ளலாம் என்று கருதுகிறேன். இதைப்பொறுத்தவரையில் ரோடுகளை எடுத்துக்கொண்டால் ஏற்கனவே இருக்கிற ரோடுகளைக் கொள்ளலாம். நீர்நிலை என்கிறபோது தஞ்சையைப் பொறுத்தவரையில் வான்பொய்பினும்தான்பொய்யா காவிரி—பெரினியில் வாட்டர்—அந்தப் பகுதிகளுக்கு வெள்ளமாகப் பொங்கி பாசனவதி அளிக்கிறது. கட்டங்கள் என்று எடுத்தாலும் ஏற்கனவே இருக்கிற கட்டணங்களை எடுத்துக்கொள்ளாம். இவற்றை எல்லாம் அபிவிருத்தி செய்தால் போதும். "To suit the modern requirements of the people, these things should be developed in a more appropriate way." என்பதாகக் கொள்வதற்கு அபிவிருத்தித் திட்டம் என்று வைக்கலாம்.

சில இடங்களில் ரோடுகளே இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். தண்ணீர் இல்லாமல் வாழ்க்கை நடத்துவதே அசாத்தியமாக இருக்கிற இடங்கள் இருக்கின்றன. கட்டிடங்கள் இல்லாமல் வேலை பாதிக்கப்படுகிற இடங்கள் இருக்கின்றன. இங்கெல்லாம் அத்தியாவசியத் திட்டங்கள் என்ற தலைப்பில் essential necessities என்று கொள்ளலாம். இங்கே இரண்டு வித மான தேவைகளை அரசு பூர்த்தி செய்கின்றது. அவற்றை மூன்று தலைப்புகளில் மேற்கொண்டு வருகிறது என்பதைக் காண்கிறோம்.

இரிகேஷன், ரோட்ஸ் என்ற தலைப்பின் கீழ் இந்த ஆண்டு 64 கோடி ரூபாய் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். இன்னும் அதிக நிதி வசதி இருந்தால் அதிகமான தொகை ஒதுக்கப்பட வேண்டிய மானியம் இது. மக்களுடைய அத்தியாவசியத் தேவைகள் அதிகரிக்கிற போது இந்த வேலைகளும் விரிவாக, விரைவாகச் செயல்படவேண்டிய அவசர மான நிலைமையில் இருக்கிறோம்.

நீர்நிலை என்ற தலைப்பின்கீழ் பார்க்கிறபோது நிலநீர் ஆய்வு என்ற தலைப்பின் கீழ் சில திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். வெளிநாட்டார் உதவியை வைத்துப் பல கோடி ரூபாய்களைக் கடனாகப் பெற்று பல ஆராய்ச்சி களை பல மாவட்டங்களிலும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ஆனால் மதுரை, கோயம்புத்தூர், வடஆற்காடு போன்ற மாவட்டங்களில் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தாமல் ஆப்ரோ என்ற நிறுவனத்தின் கீழ் உணவு அபிவிருத்தித் திட்டம் என்பதாக ஒரு திட்டத்தினை செயல்படுத்த முன் வந்திருக்கிறார்கள். இது மிக வேக் ஆக இருக்கிறது. முக்கியமான விவரங்கள் கூட இல்லாமல் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ்தான் என்னுடைய தொகுதியை உள்ளிட்ட மதுரை மாவட்டம் வருகிறது. எங்கள் மாவட்டத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, என்ன என்ன வேலைகள் நிறை வேற்றப்பட்டிருக்கின்றன என்கிற விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அங்கே ஜியாலாஜிஸ்ட் இருக்கிறார்கள். அண்டர் க்ரவுண்டு வாடர் டிவிஷன் அதிகாரிகள் இருக்கிறார்கள். இங்கே இருக்கிற குறிப்பைக் காண்கிறபோது அங்கே பூமிக்கு அடியில் குறைவாகத்தான் தண்ணீர் இருக்கிறது, ஆழ்கிணறு கள் வெட்டுவதன் மூலம் இருக்கிற தண்ணீரைத்தான் அங்கே பகிர்ந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது என்று தெரிகிறது. அதை நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பிட்ட அளவுதான் தண்ணீர் இருக்கிறது என்ற பகுதியில் கோடிக் கணக்கான ரூபாய்களை அதிகாரிகளுக்குச் சம்பளமாக வீணே கொடுத்துக்



கொண்டிருப்பதில் பயன் இல்லை. இதற்கு முன்பே நான் இந்தச் சட்ட மன்றத்தில் பலமுறை என்னுடைய மாற்று யோசனையைத் தெரிவித்து இருக் கிறேன்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கேரள அரசோடு நமது அரசாங்கம் நமது முதல்வர் பேசி, அங்கே வீணாகக் கடலில் போய்க் கலந்துகொண்டிருக்கிற நதிகளின் நீரை இந்தப் பக்கம் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

நாம் உடனடியாக ஒரு ஸ்டடி டீமையாவது போட்டு எந்த எந்த சிற்றாறுகள், போராறுகளின் தண்ணீரை இந்தப் பக்கம் திருப்ப முடியும் என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். டெரிடோரியல் டிவிஷன், லிங்விஸ்டிக் டிவிஷன் ஆகிய வற்றை எல்லாம் நாஷனல் இண்டிக்ரேஷன்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது பாராட்டக்கூடாது.

ஒரு தேசம் என்ற முறையில் இந்தப் பகுதி வளப்பட்டால் அந்தப் பகுதிக்குத் தேவையான உணவுப் பொருள்களும் அதிகமான அளவு கிடைப்ப தற்குத்தான் வழியேற்படும். இதை நமது முதல்வர் அவர்கள் இந்திரா காந்தி யாருக்குத் தெரிவித்து கேரள அரசாங்கம் இதற்கு இணக்கம் தர முயற்சிக்க வேண்டும். இதுபற்றி அதிகாரிகளிடம் விசாரித்தபோது பேச்சுவார்த்தைகள் நடப்பதாகச் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வெஸ்டேர்ன் காட் டெவலெப்மெண்டு கார்ப்பரேஷன் அமைப் பதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இது அதன் பரிசிலனையின்கீழ் வரும். நாம் என்னதான் இதுபற்றி தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டாலும் தண்ணீர் கொடுக்க வேண்டியவர்கள் அவர்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திரு. கே. கந்தசாமி: அரசின் முயற்சியைப் பாராட்டுகிறேன். எக்ஸ்டர்னல் வாட்டர் இல்லாமல், இரண்டர்னல் வாட்டர் லிமிட்டடாகத்தான் இருக்கிறது என்ற நிலையில் இதற்கு வேறு வழி இல்லை. (மணி அடிக்கப்பட்டது). இன் னும் 2 நிமிடங்கள் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கட்சிக்கு 2 பேர்களைப் பேச அனுமதித்திருக்கிறேன். நீங்கள் அதிக நேரம் எடுத்துக்கொண்டால் அவருக்குத்தான் நேரம் இல்லாமல் போகும்.

திரு. கே. கந்தசாமி : நான் முடித்துவிடுகிறேன். ரோடுகளைப் பொறுத்த வரை உசிலம்பட்டி மிகவும் பிற்பட்ட பகுதி. கிராமங்களுக்கு ரோடுகள் இல்லை. இணைப்புச் சாலைகள் இல்லை. அந்தப் பகுதியில் இதில் போதுமான கவனம் செலுத்த வேண்டும். பொதுப்பணித் துறை அலுவலாளர்களுக்கு தக்க கட்டிடம் இல்லை. நல்லமுறையில் அலுவலகங்களுக்குக் கட்டிடம் கட்டித் தர வேண்டும். அதிகமான வாடகைக் கட்டிடங்களில் இருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது.

(6) நடைமுறைக் கேள்வி.

(அ) எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அதிக நேரம் ஒதுக்கப்பட வேண்டும் என்பது குறித்து.

திரு. க. உரா. எட்மண்ட் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த சட்ட மன்றத்தில் பார்வார்ட் ப்ளாக்கைச் சேர்ந்தவர்கள் நான்கு பேர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு 2 பேர்களை பேச அனுமதித்திருப்பதாக இந்த அவையில் அறிவித்திருக்கிறீர்கள். அ.தி.மு.க. வைச் சேர்ந்த நாங்கள் ஏறத்தாழ 11 பேர்கள் இருக்கிறோம். அந்தக் கணக்குப்படி 3 பேர்களாவது பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

THIRU K. KANDASWAMY : On a point of order, Sir............

THIRU G. R. EDMUND : There cannot be a point of order on point of order எங்களில் அந்தக் கணக்குப்படி 3 பேர்களாவது ...வதற்கு அனுமதி தருவீர்களா ?

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : On a motion of privilege, with the permission of the Chair I am moving a Motion of Privilege எனக்கு முன்பாகப் பேசிய உறுப்பினர் அவர்கள் . . .

THIRU R. PONNAPPA NADAR : A privilege motion cannot be moved all of a sudden. Notice will have to be left with the Hon. Speaker and the Hon. Speaker should either allow or waive notice.

MR. DEPUTY SPEAKER : It is not a big question of privilege. You can raise it on a point of order.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : I submit first of all that I have got a right not only to move a Motion of Privilege, but also to raise a point of order. I now move a Motion of Privilege, if the Chair is willing to give me permission.



அடிக்கப்பட்டது.)

MR. DEPUTY SPEAKER : Rule 184 clearly says that you must give it in writing and seek the permission of the Chair. When I am not able to understand what is the issue behind the Privilege Motion, I cannot give permission. You can restate the same matter under a point of order.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Now that I understand the Chair is not willing to give me permission to move a Privilege Motion, I am raising a point of order on the same subject. எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் அவர்கள் பார்வார்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த மன்றத்திலே 4 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்தத் தகவல் . . . . .

THIRU G. R. EDMUND : I stand corrected.

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Very well.

THIRU K. KANDASWAMY : This is a matter relating to the prestige of the party. This is a wilful misrepresentation to mislead the House and defame the party. The hon. Member definitely knows that there are 7 members belonging to Forward Bloc. Why should he refer to it as four members? He should correct himself. Through the Chair I want to make this request.

MR. DEPUTY SPEAKER : I do not think that it was misrepresented wilfully. By mistake he would have said like that. I think you better stand corrected. This is not a very big mistake. That number may go up or come down. அவர்கள்கூட ஏறத்தாழ 11 பேர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார். அது ஏறும், இறங்கும்.

* திரு. எஸ். ஆறுமுகம் : கனம் உறுப்பினர் ஏறத்தாழ என்று சொன்னால், அவர்களுடைய கட்சியிலே 11 பேர்கள் உருப்படியாக இல்லை. ஆகவே, வருவதும் போவதுமாக இருக்கிறார்களா என்று தெரிய விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : முதலில் மாண்புமிகு உறுப்பினர் உருப்படியாக பார்த்துக்கொண்டால் சரியானது. அவர்கள் குறிப்பிட்டது எதிர்க்கட்சி களுக்கும் அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். எதிர்க் கட்சிகளுக்குப் பாதி நேரமும், ஆளும் கட்சிக்குப் பாதி நேரமும் என்று கொடுக்க வேண்டும். 50 : 50 என்று கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏறத்தாழ 11 பேர் என்று சொல்வது தவறு இல்லை. எந்தக் கட்சியிலும் ஏறலாம், இறங்கலாம்.

திரு. நா. வீராசாமி : இந்த மன்றத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் சமமாக நேரம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பல நேரங்களில், பட்ஜட் உரையிலிருந்து கூடச் சொல்கிறேன், 175 பேரைக் கொண்டிருக்கிற ஆளும் கட்சி மிகக் குறைந்த நேரத்தை எடுத்துக் கொண்டு எதிர்க்கட்சிகளுக்கு அதிக நேரத்தைக் கொடுத்திருக்கிறது. எதிர்க்கட்சிகளுக்கு 60 சதவிகிதமும் சில நேரங்களில் ஆளும் கட்சிக்கு 40 சதவிகிதம் தான் கிடைத்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த விவாதத்திலே 50 சதவிகிதம் தான் கிடைத்திருக்கிறது. எதிர்க்கட்சிகளுக்கு அதிக நேரம் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மெஜாரிட்டியாக இருந்தால், ஆளும் கட்சி உறுப்பினர்கள் பாதிக்கப்படுவது இயற்கை.

திரு. கே. ஏ. மதியழகன் : The opposition have the say, always the ruling party has the wa அவர்கள் செயலாற்றுகிற இடத்தில் இருப்பதால், ஜனநாயக அடிப்படையில், எல்லா மன்றங்களும் அப்படித்தான் அனுசரித்துக்கொண்டிருக்கின்றன. (பேரவைத் தலைவரை நோக்கி) நீங்கள் கூறுகிறீர்கள் என்று சொல்லவில்லை. இன்னும் கொஞ்சம் தாராளமாக இருக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. வீராசாமி : இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வீராசாமி, நீங்கள் 'பேனல் ஆப் சேர்மனி'லே இருக்கிறீர்கள். நீங்களே இந்தப் பிரச்சினையில் தலையிடாமல் இருப்பது உங்களுடைய நடுநிலைமைக்கு உகந்ததாக இருக்கும்.

திரு. நா. வீராசாமி : இதை எழுப்புவதற்கு உரிமை இல்லையென்றால், 'பேனல் ஆப் சேர்மனி'லேயிருந்து இறங்கி விடுகிறேன். அதிலிருக்கிறேன் என்பதற்காக நீங்கள் மறுக்கக் கூடாது. அதைக் காட்டி தயவுசெய்து நீங்கள் மிரட்டக் கூடாது. (சிரிப்பு.)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : Sir. I want a clarification with your permission. ஆளும் கட்சியினுடைய எல்லா பொறுப்பும் வகிக்கக் கூடிய



அமைச்சரவை இருக்கிறது. அவர்கள் கையிலே உங்களுடைய உரிமைகள், உங்களுடைய தொகுதிகள் எல்லாம் சரியான முறையிலே பாதுகாக்கப்படுகிறது. ஆனால், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றவர்கள், தங்களுடைய தொகுதி யானாலும் சரி, பொதுவாக நாட்டிலே இருக்கிற பிரச்சினைகளானாலும் சரி, இடித்துப் பேசுவதற்காக அவர்களுக்கு அதிக வாய்ப்பு கொடுக்க வேண்டும். அதுதான் ஜனநாயக மரபு. அந்த சம்பிரதாயப்படி, பேசுவதற்கு எதிர்க் கட்சிகளுக்கு அதிக நேரம், வாய்ப்பு, கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, 175 பேர் இருக்கிற இந்த ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு சில நேரங்களிலே 5 நிமிடம் தான் தருகிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் 20 நிமிடம், 25 நிமிடம், ½ மணி நேரம் என்று பேசுகிறார்கள். இதனால் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு எதிர்க் கட்சியிலே இருந்தால் கூட, கொஞ்சம் நேரமாவது கிடைக்குமே என்ற எண்ணம் தோன்றும். ஆகவே, ஆளும் கட்சிக்காரர்களுக்கும், முறையாக, ஓரளவிற்கு தாரான மனப்பான்மையுடன் இல்லாவிட்டாலும், உரிமை அடிப்படையிலாவது 50 சதவிகிதம் நேரமாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினையே அதிகமாகப் பேச வேண்டுமென்பதற்காகத்தான் மாலை நேரத்தில் கூட்டம் வைத்திருக்கிறோம். இப்படிப் பேசி நேரத்தை வீணாக்குவதைவிட, பிரச்சினையையே பேசி தீர்த்துக்கொள்ளலாமே. மந்திரியானாலும் கூட எவ்வளவு நேரத்திற்கு வேண்டுமென்றாலும் இருந்து பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம். எதிர்க்கட்சித் தொகுதிகளைப் புறக்கணித்துவிட்டோ, ஆளும் கட்சி உறுப்பினர் தொகுதிகளுக்கு சலுகை கொடுப்பதோ கிடையாது. எல்லா தொகுதிகளிலும் முறையாக கவனிக்க வேண்டியவைகளை கவனிக்கிறோமே தவிர, விவரத்திற்காக, நேரத்தை நீடிப்பதைப் பற்றி, இப்பொழுது பேசி, நேரத்தை வீணாக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரத்தைப் பங்கிடுவதிலேயே நேரத்தை வீணாக்கக் கூடாது. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்ன கருத்தை நான் மறுக்கவில்லை. இடித்துச் சொல்வது உரிமையென்று சொன்னார்கள். ஆனால், அதே நேரத்தில் அவர்கள் இடி தாங்குவதற்கான உரிமையையும் ஆளும் கட்சிக்குத் தரவேண்டும். ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் பல பிரச்சினைகள் இருக்கும். இருந்தாலும்கூட ஆளும்கட்சி உறுப்பினர்களை நாம் நேரத்தைக் குறைத்துக்கொள்ளச் சொல்கிறோம்.

* திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை மானியத்தை இந்த மாமன்றத்தில் அளித்திருப்பதை நான் உளப்பூர்வமாக வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தொகுதிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 10 நிமிடமாவது அதிகம் ஒதுக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பொதுப்பணித் துறை திட்டம் ஒரு புரட்சிகரமான திட்டமாகும். இந்த திட்டத்திற்காக ரூ. 15,48,71,500-க்கு ஒதுக்கீடு செய்திருப்பதை நான் பாராட்டுகின்றேன். என்னுடைய தொகுதியிலே நீண்ட நாளையக் கோரிக்கையாக இருக்கிற ஒருசில பிரச்சினைகளைப்பற்றி இங்கு கூற விரும்புகிறேன். எனது தொகுதியிலுள்ள அசகுளத்தூர் அருகே ஓடும் மயூரா நதியில் ஒரு தரைப் பாலம் கட்ட வேண்டுமென்று பலநாள் கேட்கின்ற கோரிக்கையை முடித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தியாகதுருகம் அருகே மணிமுத்தா நதியில் ஒரு தரைப் பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று பல காலமாக நாங்கள் கோரிக் கொண்டிருக்கிறோம். அதை மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இந்த நடப்பாண்டிலேயே கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆற்காவாடி அருகே ஓடும் முஷ்குந்தா நதியின் அருகிலே ஒரு தரைப் பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதையும் இந்த நடப்பாண்டிலேயே கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சிறிய நீர்ப்பானத்திற்காக நமது அரசு பல கோடி ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறது. அந்த சிறிய நீர்ப்பாசனத்தில் என்னுடைய தொகுதி மிகச் சிறிய தொகுதி. அங்கு ஏரிப் பாசனங்கள் அதிகமாக இருக்கின்றன. அதை செப்பனிட்டும், தூர் எடுத்தும் சீர்செய்து கொடுத்தால் ஏராளமான புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலமாக மாறும் வாய்ப்பிருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, உச்சிமேடு, கூத்தகுடி என்று இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. அந்த கிராமங்களுக்கு கோமுகி திட்டம் மூலமாக தண்ணீர் கிடைக்கிறது. உச்சிமேடு கிராமம் கோமுகி திட்டத்திற்கு அருகாமையிலேயிருந்தும்கூட, அவர்கள் தண்ணீர் பெற முடியாமையால், கூத்தகுடி மக்களுக்கும் உச்சிமேடு கிராம மக்களுக்கும் சண்டை சச்சரவு அடிக்கடி ஏற்படுகிறது.



(திரு. நா. வீராசாமி தலைமை)

அண்மையிலே கூட ஒரு விபரீதமான நிலை ஏற்பட்டிருக்கிறது. கத்திக் குத்தெல்லாம் நடந்திருக்கிறது. நிலங்களை அழித்திருக்கிறார்கள். இதையெல்லாம் புகைப்படம் பிடித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். அதன்மீது துரித நடவடிக்கை எடுத்து, கிராம மக்களுக்கு நல்ல வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையிலே இன்று பல திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நம்முடைய மாநில அரசு, மத்திய அரசு உதவியுடன் பாம்பன் பாலம், ஜெமினி அருகே மேம்பாலம் கட்டி இருக்கிறார்கள். அதேபோன்று இப்பொழுது என்னுடைய தொகுதியிலே திருவாங்கத்திலிருந்து, மணலூர் பேட்டைக்கு பெண்ணையாற்றில் ஒரு மேம்பாலம் கட்ட பல லட்ச ரூபாயாகும் என்று குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். மாநில அரசு ஆராய்ந்து, மத்திய அரசு உதவியுடன் அங்கு ஒரு மேம்பாலம் கட்ட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக சாலைகள். கள்ளக்குறிச்சியிலிருந்து அசுவகுளத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலையைப் பொதுப்பணித் துறை எடுத்துக்கொண்டு சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று தியாகதுருகத்திலிருந்து மணலூர்பேட்டை செல்லுகின்ற நெடுஞ்சாலையையும் பொதுப்பணித் துறையே மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூங்கில்துறைப்பட்டி மேம்பாலத்திற்காக அரசாங்கம் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு தொகை ஒதுக்கியிருக்கிறது. அதையும் சீக்கிரமாக சீரமைப்புச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோமுகி டாம் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, ஏராளமான நிலங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றையெல்லாம் புல்டோசர்கள் வைத்து சீரமைப்புச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக போதுமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோயிலூர்-சங்கராபுரம் நெடுஞ்சாலையில் பல வளைவுகள் இருக்கின்றன. அந்த சாலையில் அதிகமான பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக பஸ்கள் அதிக வேகம் போக முடியாமல் இருக்கிறது; ஓட்டுநர்களுக்குத் தொல்லைகளும் இருக்கின்றன. எனவே அந்த வளைவுகள் இல்லாத முறையிலே ஒரு நல்ல நெடுஞ்சாலையாக அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சங்கராபுரத்தில் மணிமுக்தா நதியின் குறுக்கே அணை கட்டினால் அதன் மூலம் 50 ஆயிரம் ஏக்கர் புஞ்சை நிலத்தை நஞ்சை நிலமாக மாற்ற முடியும் என்று பல முறைகள் நானும் கேட்டிருக்கிறேன். அதைப்பற்றி டி. டி. சி. மீட்டிங்கில் சொல்லியிருக்கிறேன். தீர்மானமும் கொடுத்திருக்கிறேன். எனவே அதனையும் விரைவிலே நிறைவேற்றித் தர அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சியிலிருந்து கடலூர் செல்லும் நெடுஞ்சாலையிலிருந்து நின்னையூர், கொட்டையூர் செல்லும் இணைப்பு பாதையைப் பொதுப்பணித் துறையில் சேர்த்துக் கொண்டு சீரமைப்புச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களைவிட அதிகமாகச் சலுகைகள் கொடுக்கக் கூடிய முறையில் கவனம் செலுத்தி நல்லமுறையிலே பணிகளைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த பொதுப் பணித் துறை மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் கிராமங்கள்தான் இந்த நாட்டின் உயிர்நாடி என்ற முறையிலே கிராம மக்களுக்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டி முறையாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு நான் கூறிக்கொள்கிறேன். எந்த அளவிற்கு இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற திட்டங்கள் பலன் அளிக்கும் என்பதை ஆராய்ந்து பார்க்கிறபொழுது இந்த அரசு வந்ததற்குப் பிறகு கிராமங்களுக்காக, அவற்றின் முன்னேற்றத்திற்காக பல நல்ல திட்டங்களைத் தீட்டி செயல்பட்டு வருகிறது என்பதை உணர்ந்து நான் மனமாரப் பாராட்டுகிறேன்.



பொதுவாக ஒரு நாட்டில் ஒரு ஆட்சியின் சிறப்புக்கு எது எடுத்துக்காட்டு என்றால் நாட்டிலேயுள்ள கிராமங்கள் எந்த அளவிற்கு முன்னேற்றமடைந்திருக்கின்றன என்பதைத்தான் பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய தினம் நம்முடைய தமிழ் நாட்டிலே கிராமப்புறங்களிலே எங்கு பார்த்தாலும் இணைப்புச் சாலைகள், ரோடு வசதிகள், சிறு கண்மாய்கள் உருவாக்குதல் போன்ற வசதிகளை இந்த அரசாங்கம் செய்து கொடுத்திருப்பதற்காக நான் மக்களுடைய சார்பிலே இந்த அரசாங்கத்தை மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் தமிழகத்திலேயே மிகவும் பின்தங்கிய மாவட்டம். என்னுடைய தொகுதியாகிய கடலாடித் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அங்கு மணற்பாங்கான பகுதிகளும் உப்பங்கழிகளும் நிறைந்து இருக்கின்றன. இந்த அரசு வந்ததற்குப் பிறகு அங்கே நல்ல இணைப்புச் சாலைகளையும் கால்வாய் போன்றவற்றைச் செய்திருந்தாலும் இன்னும் நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த அரசின் காலத்திலேதான் நிதிநிலை அறிக்கையிலே முதுகுளத்தூர் பகுதியிலே சிறிய நீர்ப்பாசன வசதிகளுக்காக என்று 46 லட்சம் ரூபாய் செலவிலே பல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அதற்காக நான் அந்த மக்களின் சார்பிலே பெரிதும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பரலையாற்றுத் திட்டம், நாராயணகாவேரித் திட்டம், ஊத்தம்கால்வாய்த் திட்டம் இவற்றையெல்லாம் சீக்கிரமாக நிறைவேற்றித் தர அரசு முயற்சிக்க வேண்டும்.

எங்கள் பகுதியிலே மலட்டாறு என்ற ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. மழைக் காலத்திலே நீர் அதிகமாக வந்து அது எதற்கும் பயன்படாமல் கடலிலே கலக்கிறது. அதனால், எந்தவிதப் பயனுமில்லாததால்தான், அந்த ஆற்றுக்கு மலட்டாறு என்ற பெயர் வந்தது. அந்த ஆற்றின் குறுக்கே அணைகட்டி தண்ணீரைப் பயன்படுத்துவதற்கான திட்டம் ஒன்று ஏற்கனவே இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் எங்கள் பகுதியில் உள்ள மக்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, எங்கள் பகுதியிலே அரசு தன்னால் இயன்ற அளவிற்கு போக்குவரத்திற்காக சாலைகள் போட்டிருந்தாலும்கூட இன்னும் செய்ய வேண்டியது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் வாலிநோக்கம் என்ற ஊர் இருக்கிறது. அது கடற்கரையிலே அமைந்திருக்கிறது. அங்கு உள்ள மக்கள் மீன்பிடி தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தப்

பகுதியில் கிடைக்கக் கூடிய மீன் சுவையான மீன் என்று கூறப்படுகிறது. அதிலே உள்ளபடியாக நான் பெருமைப்படுகிறேன். அந்த மீனை வெளி இடங்களுக்குக் கொண்டுபோகிறார்கள். ஆனால் அந்த மீனைப் போதுமான அளவிற்குக் கொண்டுபோக அந்த மக்களுக்குப் போதுமான போக்குவரத்து வசதிகள் இல்லை. எனவே பஸ்கள் போக்குவரத்துக்குச் சாலை வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரத்திலிருந்து கீழக்கரைக்கு ஒரு சாலை சக்கரைக்கோட்டை வழியாகச் செல்கிறது. மழைகாலத்திலே பஸ்கள் செல்லும்பொழுது அங்கே ஆபத்துக்கள் வரக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. சென்ற ஆண்டு கூட ஆபத்து ஏற்பட்டது. அந்த ரோடை அகலப்படுத்தி சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கடலாடிக் கண்மாய் என்ற ஒரு கண்மாய் இருக்கிறது. அதற்கு நேரடியாகக் கால்வாய் கிடையாது. சென்ற ஆண்டு அந்தக் கண்மாய் நிறையாமலிருந்ததால் போதிய நீரை பாசன வசதிக்குப் பயன்படுத்தப்படமுடியாமல் போய் பயிர்கள் எல்லாம் சாவியாகி விட்டன. எனவே தனியாக அங்கே ஒரு கால்வாய் வெட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே சில கண்மாய்கள் இன்னும் மராமத்துச் செய்யப்படாமல் இருக்கின்றன. ஆப்பனூர் கண்மாய், குருவிகாத்து கண்மாய், இதம்பாடல் கண்மாய் என்ற கண்மாய்களை எல்லாம் விரைவிலே மராமத்து செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரத்திலே அரசாங்கக் கலைக் கல்லூரி ஒன்று கட்டப்பட்டு இருக்கிறது. அங்கே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதிகள் செய்யப்படாமல் இருக்கிறது. எனவே ஒரு ஹாஸ்டலையும் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன் வருகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் பாசன வசதி செய்து கொடுப்பதற்கும், சாலைகள் அமைத்துக் கொடுப்பதற்கும், கட்டிடம் கட்டுவதற்காகவும், நிர்வாகச் செலவுகளுக்காகவும் சேர்த்து 64 கோடி ரூபாய்க்கு அனுமதி கோரியிருக்கிறார்கள். இந்த 64 கோடி ரூபாய் மிகக் குறைவான தொகையாகும். நம்முடைய நாட்டில் பெரும் பகுதியானது இன்னும் சொல்லப்போனால், லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசு நிலங்களாக, பாசன வசதியற்ற நிலங்களாக



இருக்கின்றன. இந்த நிலங்களுக்கெல்லாம் பாசன வசதிகளைப் பெருக்கிக் கொடுப்பதன் மூலமாக நம்முடைய ராஜ்யத்தில் அதிகமான உணவை உற்பத்தி செய்ய முடியும். அதற்குரிய முறையிலே புதிய திட்டங்களைத் தீட்டியாக வேண்டும். குளங்கள், ஏரிகள், ஓடைகள் போன்றவைகள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் மழைக் காலங்களில், அதிக மழை பெய்கிற சமயத்தில் அந்த மழைத் தண்ணீர் தங்குவதற்குரிய முறையில் அணைகளைக் கட்டி, கரைகளை உயர்த்தி, தண்ணீரைத் தேக்க வைத்துக் கொள்வதன் மூலம் அங்கெல்லாம் பாசன வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். பாசன வசதி இல்லாததன் காரணமாக வறட்சி ஏற்பட்டு பெரிய அளவு விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்வதற்கு விரும்புகிறேன்.

பாலங்கள் கட்டும் விஷயத்தில் அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்ய வேண்டும். பாலங்கள் கட்டுவது மிகத் தாமதமாக நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு காண்டிராக்ட் முறைதான் காரணம் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கமே இந்த வேலைகளைச் செய்து முடிப்பதன் மூலமாகத்தான் விரைவிலே இந்த வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியும். காண்டிராக்ட்காரர்கள் வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறார்கள். இதனால் வெகு நாட்கள் கால தாமதமாகிக் கொண்டிருக்கிறது. இதே போல கிராம சாலைகளையெல்லாம் அரசாங்கம் ஏற்று நடத்தவேண்டும். கிராம சாலைகள் என்று சொல்கிற போது, ஊராட்சி மன்றங்களுக்கு இருக்கிற சாலைகள் போக, ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொந்தமாக இருக்கிற சாலைகள், ஊராட்சி ஒன்றியங்கள் அவர்கள் செலவழித்து அந்த சாலைகளை பராமரிக்கக் கூடிய நிலைமையில் இருக்கவில்லை. ஆகவே, அரசாங்கம் அவர்களுக்கு மானியம் கொடுப்பதும் இல்லை என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த தொகையைக் கொண்டே இந்த நெடுஞ்சாலை இலாகாவே இந்த வேலைகளைச் செய்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பேருந்துகள் செல்கிற சாலைகள் விஷயமாக இத்தனை கிலோ மீட்டர் தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற விதிமுறை இருப்பதை மாற்றியாக வேண்டும். பேருந்துகள் எங்கெங்கு ஓடுகிறதோ அந்த சாலைகள் பூராவையும் கூட்டு மன்றத்திடமிருந்து அரசாங்கம் ஏற்று அந்த வேலைகளைச் செய்து கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு முன்வரவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கும் அதே சமயத்தில் ஆற்றுக் கரைகளை உயர்த்துவது, வடிகால் வசதிகளைச் செய்து கொடுப்பது போன்ற நடவடிக்கைகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு வருகிறது. காவிரியில் வருகிற வெள்ளத்தைத் தடுப்பதற்காக

அப்பர் அணை கட்டுவதற்கு 212 லட்ச ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டு, இந்த அரசு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பியிருக்கிறது என்று சொல்லி வருகிறார்கள். அந்த வேலையை உடனடியாகச் செய்தாக வேண்டும்.

மேட்டூரிலே தண்ணீர் விடுவது, திறந்து விடுவது அடைக்கப்பட்டாலும் இன்றையதினம் தஞ்சை மாவட்டத்திற்குத் தண்ணீர் வந்து பெரிய சேதத்தை ஏற்படுத்துவதை நாம் பார்க்கிறோம். அவ்வாறு தண்ணீர் வருகிற போது, தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற ஆற்றுக் கரைகளை யெல்லாம் உடைத்து விடுகிறது. இந்த ஆண்டு கூட பெரிய அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மழைக் காலங்களில் தொடர்ச்சியாக, நிரந்தரமாக 22 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் நீரில் மூழ்கி வருஷா வருஷம் சேதமாகிக் கொண்டிருக்கிறது.

நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, பட்டுக்கோட்டை போன்ற தாலுகாக்களில் நிரந்தரமாக வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுத்தாக வேண்டும். கடலுக்கு ஓடுகிற ஆறுகளில் ஸ்டைப் கட் செய்வதன் மூலமாக வெள்ளச் சேதத்தைத் தடுத்து நிறுத்த முடியும் என்று தீர்மானம் போட்டும் கூட, அரசாங்கத்தினுடைய அனுமதி கிடைக்காமல் இருந்து கொண்டிருக்கிறது. நாகப்பட்டிணம் தாலுகாவிலே நல்லாறு இருக்கிறது. அந்த ஆற்றில் சைடு கட் போடுவதற்கு 14 லட்ச ரூபாய் அனுமதி கேட்டு அரசாங்கத்தினுடைய ஒப்புதல் கிடைக்காமல் 4, 5 ஆண்டுகளாக அந்த வேலை நடைபெறவில்லை. இது போல கால்வாயைச் சீர்திருத்தக் கூடிய வேலைகளை எடுத்துக் கொண்டால் நல்லது. மிகக் குறைவாகப் பணம் ஒதுக்குவதன் காரணமாக இந்த வேலைகள் முழுவதும் முடிவடையாமல் இருக்கிறது. இந்த வெள்ளச் சேதத்தைத் தடுப்பதன் மூலமாகத் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் உள்ள பயிர்களைப் பாதுகாக்க முடியும். வெள்ளச் சேதத்தால் பெரிய அளவிற்கு நஷ்டம் ஏற்படுகிறது. தாங்க முடியாத நஷ்டத்திற்கு விவசாயிகள் ஆளாக்கப் படுகிறார்கள்.

இந்த ஆற்றுக் கரைகளை யெல்லாம் பலப்படுத்துவதற்கு நாங்கள் பல தடவைகளில் ஆலோசனை சொல்லியிருக்கிறோம். கரைகள் பலஹீனமாக இருக்கிறது, சுமார் 4 அடி உயரமாவது உயர்த்தியாக வேண்டும். கரைகளை அகலப்படுத்த வேண்டும். ரிவிட்மெண்டு கட்டியாக வேண்டும். ரிவிட்மெண்டு என்று சொல்லி கட்டைகளைப் போடுகிறார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வந்து பார்த்தால் தெரியும். எந்த இடத்தில் ரிவிட்மெண்டு போடுகிறார்களோ அதே இடத்தில் உடைப்பு எடுத்திருக்கிறது.

பாமினி ஆற்றில் இந்த மாதிரியான கட்டைகளைப் போட்டார்கள். இது நியாய பூர்வமாகச் செய்யக் கூடிய வேலையல்ல, லாபத்திற்காக இதைக்





காண்டிராக்ட்காரர்கள் செய்கிறார்கள். அதன் காரணமாகத்தான் எங்கெல்லாம் அவர்கள் ரிவிட்மெண்டு போடுகிறார்களோ அங்கே யெல்லாம் உடைப்புகள் ஏற்படுகின்றன. இவைகளைக் கல்லால் கட்டுவதன் மூலமாக இதைத் தடுத்து நிறுத்த முடியும். இம்மாதிரி செய்யக் கூடிய வேலைகளை யெல்லாம் அரசாங்க வேலைகளாகச் செய்ய வேண்டும். ஒப்பந்தக்காரர்களிடம் விடக் கூடாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவ்வாறு இன்றையதினம் இந்த வேலைகளை அரசாங்கம் செய்வதன் மூலமாக அவைகள் நேரடியாகக் கண்காணிக்கப்படலாம். அதிகாரிகளின் பொறுப்பில் வரக்கூடிய நிலைமை ஏற்படும். அதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பொறுப்பு இருக்க முடியும். காண்டிராக்ட் கொடுப்பதன் மூலமாகத் தப்பித்துக் கொள்ளக் கூடிய ஒரு நிலை ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கு அரசு ஆலோசித்தாக வேண்டும். இப்படி தடுத்து விடுவதன் மூலமாகத்தான் பல கோடி ரூபாய்களை மிச்சப்படுத்த முடியும். வேலை, நல்ல வேலையாக அமையும், என்பது என்னுடைய அபிப்பிராயமாகும். ஆகவே இந்தக் கரைகள் உயர்த்தக் கூடிய வேலையைத் தஞ்சை மாவட்டத்தில் செய்ய வேண்டியது அவசியமிருக்கிறது. மற்றபடி சில கிராமங்களுக்கு வடிகால் திட்டங்கள் போட்டு நிறைவேற்ற வேண்டும். இதுபற்றி அரசாங்கத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அது சீஃப் என்ஜினியர் அளவிலோ அல்லது அரசாங்க அளவிலோ அனுமதி கிடைக்காததால் வேலை நடைபெறவில்லை. உதாரணமாக எடையூர் கிராம வடிகால் திட்டம் குலைதாங்கி ஆற்றிலே வடிகால் வசதி செய்து கொடுக்கவில்லை. இம்மாதிரி வடிகால் திட்டங்கள் நிறைய இருக்கிறது. இதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். லிஃப்ட் இர்ரிகேஷன் 4, 5 ஸ்கீம்கள் போடப்பட்டு, அது கூட அனுமதிக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. வீணாகக் கடலில் சென்று கொண்டிருக்கிற தண்ணீரை இறைத்து மேட்டுப்பாங்கான நிலங்களில் பாசன வசதி செய்யக் கூடிய திட்டங்கள் இவைகள். இதைச் செய்து முடிப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

இன்றையதினம் ஒரு வேலையைச் செய்வதன் மூலமாக லாபம் வருகிறதா, லாபம் இருந்தால்தான் செய்ய முடியும் என்ற கொள்கையை நீண்ட பல ஆண்டுகளாக அரசு கடைப்பிடித்து வருகிறது. அம்மாதிரி பார்க்கக் கூடாது என்பது என் கருத்தாகும். லாபம் வருகிறதா இல்லையா என்று பார்க்காமல் இந்த வேலைக்கு எவ்வளவு செலவானாலும் அந்த வேலையைச் செய்து முடித்து அங்கேயிருக்கிற மக்களுக்கு உதவியாக இருக்கக் கூடிய ஒரு நல்ல ஏற்பாடுதான் சிறந்த உதவியாக இருக்க முடியுமேயொழிய லாபம் வருகிறதா என்று பார்த்து மதிப்பீடு செய்து லாபம் வரவில்லை யென்பதற்காகப் பல வேலைகள் கைவிடப்படுகின்றன. இந்த நிலையை அரசாங்கம் மாற்றியாக வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1973 மார்ச் 21

அதே போல இன்றையதினம் உலக வங்கிகள் மூலமாக 26 கோடி ரூபாய் பெற்று நில வங்கிகள் மூலமாகக் கொடுக்கப்படுகிறதென்று சொல்கிருர்கள். ஆழ் கிணறு வெட்டி பாசனம் செய்வதற்குப் பணத்தை நிலவள வங்கியிடம் கொடுக்கவேண்டியதில்லை என்பது என்னுடைய கருத்தாகும். டிபார்ட்மெண்டு மூலமாகத் தான் இந்த வேலைகளையும் செய்ய வேண்டும். அம்மாதிரி செய்வதன் மூலமாக முறையாகச் செய்ய முடியும். விண்ணப்பம் வங்கிக்குப் போட்டு, அது பரிசீலனை செய்து, விவசாயிகளுக்குப் பணம் கிடைப்பதிலே மிகக் காலதாமதம் ஆகிறது. இதில் விருப்பு, வெறுப்பு காட்டப்படுகிறது. இது அவசியமில்லை யென்று கருதுகிறேன். சகல வேலைகளையும் டிபார்ட்மெண்டு மூலமாகவே செய்தாக வேண்டும். நீர்ப்பாசன வேலைகளும் சாலைப் போக்குவரத்து வேலைகளும், கட்டிடம் கட்டக் கூடிய வேலைகளும் அரசாங்கத்தினுடைய இலாக்காக்கள் மூலம் செய்வது உதவியாக இருக்க முடியும். இல்லை யென்று சொன்னுல் காண்டிராக்ட்காரர்கள் ஆதாயம் தேடக் கூடிய நிலை தான் ஏற்படும். அவர்கள் தங்களுடைய வேலைகளைச் சிறப்பாகச் செய்வது கிடையாது, முறையாகச் செய்வதில்லை, சீக்கிரத்தில் அந்த வேலைகள் பழுதடைந்து போகிறது என்பதை நேரடியாகப் பார்த்தவர்களுக்கு இது நன்கு தெரியும். இந்த முறையில் அரசு இன்றையதினம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே சமயத்தில் இந்த இலாக்காவில் கேங்கு கூலிகள் பல ஆண்டுகளாக வேலை செய்து கொண்டிருக்கிருர்கள். காங்கிரஸ் அரசாங்கம் வந்த காலத்திலிருந்து வேலை செய்து கொண்டிருக்கிருர்கள். அவர்கள் ஏழைகள், கிராமப்புறங்களில் நல்ல வெய்யிலில் மண்ணைச் சுமந்து வேலை செய்து சாலைகளைப் பராமரிக்கக் கூடிய கூலிகள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். அவர்கள் தங்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிருர்கள். அவ்வாறு செய்வதன் மூலமாக அவர்கள் என்றும் அரசாங்கத்திற்கு விசுவாசிகளாக இருப்பார்கள். அரசாங்கம் அவர்கள் விஷயத்தில் அக்கறையோடு கவனிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

ஆகவேதான் என்னுடைய அழுத்தமான அபிப்பிராயம் இந்த வேலைகளை ஒரு சமூக வேலையாகப் பார்த்து சமூகத்திற்கு உணவு அளிக்கக் கூடியதற்கு மிக உயிர் நாடியாக இருக்கக்கூடிய நீர்ப்பாசன வேலைகளைத் துரிதமாகச் செய்து கொடுப்பதற்குப் போட்ட திட்டங்களை யெல்லாம் நிறைவேற்றுவதற்கு வேகமாக நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதன் மூலமாகத் தான் எதிர்காலத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். இந்த வேலைகளைச் செய்து முடிப்பதற்கு டிபார்ட்மெண்டு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1973 மார்ச் 21] [திரு. ஆ. கு. சுப்பையா]

தஞ்சை மாவட்டத்தில் ஆறுகளுக்கு குறுக்கே பாலங்கள் அமைக்க வேண்டியிருக்கிறது. பாலங்கள் இல்லாத காரணத்தினுல் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் செல்வதற்கு முடியாத நிலை இருக்கிறது, மேலும் விவசாயிகள் தங்கள் பொருள்களை நகர்ப்புறங்களில் கொண்டு போய் விற்க முடியாத நிலையில் போக்குவரத்து மிகத் தடையாக இருக்கிறது. இதற்குக் காரணம் கிராமங்களில் குறுக்கே பெரிய ஆறுகள் ஓடுவதன் காரணமாக இந்த நிலை இருக்கிறது.

அந்த ஆறுகளுக் கெல்லாம் பாலங்களைக் கட்டியாக வேண்டும். மூன்ருவது திட்டத்தில் செய்யப் போவதாகச் சொன்ஞர்கள், நான்காவது திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்ஞர்கள். இப்போது பார்க்கிறபோது அந்த வேலைகளின் பெயர்களையே குறிப்பிடவில்லை என்று பார்க்கிறபோது தஞ்சை மாவட்டத்தில் இருப்பவர்கள் ஏமாற்றப்படுகிருர்கள் என்றுதான் தெரிகிறது. அந்தப் பாலங்களை எல்லாம் கட்டி போக்குவரத்து வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சே. குமாரசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, சமீபத்திய வெள்ளத்தால் தென்ஞற்காடு மாவட்டம், குறிப்பாகத் திருக்கோவிலூர்ப் பகுதி, திருக்கோவிலூர் அணைக்கட்டு உடைந்ததன் பயஞக பெரும்பான்மையான ஏரிகள் உடைப்பெடுத்து, பி.ப. 1-00 விவசாயிகள் பெருந்தொல்லைக்கு ஆளாகிய நேரத்தில் விரைந்து செயலாற்றி, விவசாயம் பாதிக்காத வகையில் நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தி அந்தப் பகுதியில் உடைப்பெடுத்து சாலைகளை அனைத்தையும் விரைவில் சீர்செய்து போக்குவரத்தினை ஒழுங்குபடுத்திய நெடுஞ்சாலை, பொதுப்பணித் துறையினரை இந்தச் சந்தர்ப்பத்திலே பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தப் பகுதியில் இனி மேற்கொள்ள வேண்டிய பணிகளில் குறிப்பாக சிலவற்றை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என் தொகுதியில், சமீபத்திய வெள்ளத்தில், திருவெண்ணைநல்லூர் ஒன்றியம் மிக மிகப் பாதிக்கப்பட்ட பகுதி, எனவே, அந்தப் பகுதியில் பாதிக்கப்பட்ட சாலைகள் அனைத்தையும் நிரந்தரமாகச் சீர்செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். வெள்ள நிவாரணப் பணிகளை நெடுஞ்சாலைத் துறையினர் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் திருவெண்ணைநல்லூர் ஒன்றியத்தில்—திருவெண்ணைநல்லூர்—ஏனுதிமங்கலம் சாலை, ஏனுதிமங்கலம்-பேரைங்கினூர் சாலை, புதூர் பாளையம் சாலை, மழவராயனூர் சாலை, கன்ஞம்பட்டு சாலை, தெம்மங்கலம் சாலை, காரப்பட்டு சாலை, கனியாம்பட்டு சாலை, அருந்திருக்கை சாலை ஆகிய இந்தச் சாலைகளை,

மலட்டாற்றைக் கடந்து செல்லக்கூடியவற்றை 'காஸ் வே' கட்டி நிரந்தரமாகப் பயன்படக்கூடிய வகையில் சீர்செய்ய வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் 'ரூரல் ரோட்ஸ்'—கிராம இணைப்புச் சாலைத் திட்டத்தின்கீழ் அண்டராயநூர், மனங்குப்பம் சாலையை நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திய வெள்ளத்தில் என் தொகுதியில் பேரைங்கியூர் உயர்நிலைப்பள்ளி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பெண்ணையாற்றின் கரையில் உள்ள அப் பள்ளிக்குத் தேவையான கட்டிடங்களை உடனடியாகக் கட்டி உதவ வேண்டும்.

திருவெண்ணைநல்லூர்—திருக்கோவிலூர் செல்லும் பெருவழித் துறை பாதையை ஆற்றின் கரையோரமாக அதை உடனடியாக அகலப்படுத்தி மேம் படுத்த வேண்டும். திருக்கோவிலூர் பகுதியில் பெண்ணை ஆற்றின் இரு மருங்கிலும், எதிர்காலத்தில், கிராமங்களில் வெள்ளம் புகாதபடி தடுப்புச் சுவர் கட்டிப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருக்கோவிலூர் அணைக்கட்டைப் புதிதாக அமைக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த அணையை ரெகுலேஷன் சிஸ்டத்துடன் 'பேரேஜ்' அணையாக 1½ கோடி ரூபாய் செலவில் அமைப்பதாக அறிகிறேன். அதை உடனடியாக அமைக்க வேண்டும். ஆற்று மணல் பாசனக் கால்வாய்களில் புகாதபடி புதிய முறையில் இந்த அணையை அமைத்துத் தரவேண்டும். ஏற்கனவே இருந்த வகையில் அல்லாது புதிய வகையில், இன்னும் சிறப்பான முறையில் உதவக்கூடிய வகையில் 'பேரேஜ்' அணையாக மாற்றியமைக்க வேண்டும். விழுப்புரம், திருக்கோவிலூர் ஆகிய தாலுகாக்களுக்குப் பாசனத்திற்கு உதவக் கூடிய இதில் செலவு கூடுதலானாலும் நவீன முறையில் அந்த அணையை அமைத்து பொதுப்பணித் துறையினர் சிறப்பான பாராட்டுதலை அங்கு பெற வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

விருத்தாசலம் தாலுக்காவில் உள்ள வெல்லிங்டன் ரிசர்வாயரை சீர்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் 1971-ம் ஆண்டு அறிவித்ததை அமல் படுத்த வேண்டும். வெல்லிங்டன் ரிசர்வாயர் வாய்க்காலை சுமார் 16 மைல் தூரம் கான்க்ரீட் செய்ய வேண்டும். இதனால் பெருமளவுத் தண்ணீர் பாசனத் திற்குப் பயன்படும். இதற்குத் தேவையான தொகையை இந்த வட்டாரத்தில் பெண்ணாடத்திலுள்ள சர்க்கரை ஆலை செஸ் நிதியிலிருந்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

மீண்டும் திருக்கோவிலூர் அணையை பேரேஜ் அணையாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நன்றி கூறி விடைபெறுகிறேன்.



திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை சம்பந்த மாகக் கொண்டுவரப்பட்ட மானியத்தை வரவேற்று இரண்டொரு கருத்துக் களைக் கூற விரும்புகிறேன்.

மதுரை மாநகரிலே பெரிதாக அமைந்திருக்கும் அரசாங்க ஆஸ்பத்திரியில் சில நாட்கள் தங்கியிருந்தேன். அந்தப் பெரிய ஆஸ்பத்திரியில் எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் மழைக் காலங்களில் மேல் மட்டத்தில் பிளவுகள் ஏற்பட்டு தண்ணீர் சிந்துகிறது. இதனால் ஆஸ்பத்திரியில் இருக்கும் நோயாளிகள் பெரும் தொல்லைக்கு உள்ளாகிறார்கள். அதை மறுபடியும் செப்பனிட அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைக்கு அடுத்தபடியாக மதுரை மாநகரம் பெரிய நகரமாக அமைந் திருக்கிறது. ஏற்கனவே வைகையில் ஒரு மேம்பாலம் இருக்கிறது. அந்தப் பாலத்தில் பொதுமக்களும், வாகன வண்டிகளும் செல்ல நெருக்கடியாக இருக் கிறது. அந்த நெருக்கடியைப் போக்க வேண்டும். சைதாப்பேட்டையில் இருக்கும் பெரிய பாலத்தைப் போல் மதுரை மேம்பாலத்தை விரிவுபடுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் ரயில்வேயில் இரண்டு மேம்பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதற்கு அடியில் நல்ல கடைகளை வைப்பதற்கு வசதியான இடங்கள் இருக் கின்றன. அங்கு கடைகள் வைக்காவிட்டால் ஆடுமாடுகள், நாய்கள் தங்கி சுத்தத்தைக் கெடுத்துவிடும். மாநகராட்சி மூலமாகக் கடைகளைக் கட்டித் தருவதன் மூலம் பொதுமக்களுக்கும் பலன் ஏற்படும், அரசுக்கும் நல்ல பெயர் ஏற்படும். ஆகவே, அங்கே கடைகளைக் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகரத்தில் சிறப்பான தெப்பக்குளம் இருக்கிறது. அதிலே அடிக்கடி தண்ணீர் வற்றிப் போகிறது. அதற்கு வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் வர பாதை அமைத்திருக்கிறார்கள். அந்தப் பாதை பழுதடைந்து அதிகமாகத் தண்ணீர் வருவதில்லை. அதைப் பழுது பார்க்க ஏற்பாடு செய்ய நிறையத் தண்ணீர் குளத்திற்கு வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

மதுரை-மண்டபம் நெடுஞ்சாலை என்னுடைய தொகுதியில் மணலூர் வரை ஒரு பஸ் வந்தால் இன்னொரு பஸ் விலகுவதற்கு ஏற்ற வகையில் பெரியதாக இருந்து என்னுடைய தொகுதியான மணலூர் வந்த பிறகு குறுகிவிடுகிறது. அதைத் தார் ரோடாக அகலப்படுத்திப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து மதுரை மாநகரத்திற்கு அந்தச் சாலை வழியாகத்தான் எல்லாவிதமான வண்டிப் போக்குவரத்தும் நடை பெற வேண்டியிருக்கிறது. ஆகவே, மதுரை—மண்டபம் சாலையை விரிவுபடுத்தி தார் ரோடு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரைகர் கடைசியில் கால்வாய் இருக்கிறது. மக்கள் அந்தக் கால்வாயில் நீந்தித்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அது நெடுங்காலமாகப் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. ஒரு பாலம் அமைத்து அந்தப் பிரச்சினையைத் தீர்த்துத் தரும்படி தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இடைக்காட்டூர் என்ற ஊருக்கு வைகை ஆற்றில் நீந்திச் செல்லுகின்ற நிலையில் மக்கள் இருக்கிறார்கள். வெளியூரிலிருந்து வரக் கூடியவர்கள் போக முடியாமல் தவிக்கிறார்கள். அங்கு ஒரு மேம்பாலம் அமைத்துத் தரவேண்டு மென்று ஏற்கனவே அமைச்சர் அவர்களிடத்தில் கூறி இருக்கிறேன். மீண்டும் அந்தத் திட்டத்தையும் வேண்டுகோளையும் சமர்ப்பிக்கிறேன்.

திருப்பாச்சேத்தி—படமாத்தூர் ரோட்டுக்கு இடையில் வைகை வருகிறது. அங்கு மேம்பாலம் கட்ட செலவு அதிகமாகும் என்று சொல்லுகிறார்கள். ஆயிரக் கணக்கான வாகனங்கள் அந்த வழியாகச் செல்ல வேண்டியிருக்கிறது. அதிலே பாலம் இருந்தால் திருப்பாச்சேத்தியிலிருந்து மூன்று மைல் தூரந்தான் படமாத்தூர் இருக்கிறது. ஆனால் மானாமதுரை பாதையில் சுற்றிச் சென்றால் 35 மைல் ஆகிறது, திருப்புவனத்தைச் சுற்றிச் சென்றால் 20 மைல் ஆகிறது. மூன்று மைலில் போக வேண்டியதற்கு 30 மைல் 40 மைல் சுற்ற வேண்டி இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு தரைப் பாலமாவது போட்டுக் கொடுக்க மானியம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாம்பன் பாலத் திட்டம் நீண்டகாலமாக இருந்து வருகிறது. அதை நிறை வேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேதுசமுத்திரத் திட்டத்தையும் உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனுஷ்கோடி அழிந்து விட்டது. அதிலே மீண்டும் கடலரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டி தனுஷ்கோடியைப் புதுப்பித்துத் தர ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமப்புறங்களில் தீவிரத் திட்டத்தின் மூலம் தார் ரோடு போடுகிறார்கள். என்னுடைய மானாமதுரை தொகுதியில் நிறைய அப்படிப்பட்ட ரோடுகள் போட வேண்டியிருக்கின்றன. கழுகர் கடை, பிரமனூர், முதுவன்திடல், சொரிக்குளம், கட்டிக்குளம், கிழபசலை, மிழகனூர், சின்னக் கண்ணனூர், தேன் புதுக்கோட்டை, பெரிய கோட்டை, கானூர்மடப்புரம், தஞ்சாக்கூர், வேம்பத்தூர், சக்கந்தி, தமராக்கி ஆகிய ஊர்களில் தார் ரோடு போட்டுக் கொடுக்கும்படி இந்த அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் உள்ள, கொந்தகை, திருப்புவனம், சாங்கியன், பொம் மனூர், திருப்பாசத்தி, மாந்நாடு, கட்டிக்குளம், மிளகனூர், மானாமதுரை,



சின்னக்கண்ணனூர், தேனுபுதுக்கோட்டை, பெரியகோட்டை, இடைக்காட்டூர், கானூர், பூவந்தி ஆகிய கண்மாய்களை எல்லாம் வெட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய துறைகளுக்காக 64 கோடி ரூபாய்க்குமேல் மானியம் கோரியிருக்கிற தொகையை நான் வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் தமிழ்நாட்டில் இருக்கிற சாலைகள் இந்தியத் தாயகத்திலே முதன்மையாக இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த அரசுமே செய்ய முடியாத அளவிற்குச் சாலைகளை நல்லமுறையில் திறம்பட செப்பனிட்டு வருவதில் நம் தமிழக பொதுப் பணித் துறை மிக நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக சாலைகள்பற்றி பேசும்போது, கிராமப்புறச் சாலைகள் அமைத்தல் விஷயமாக நான் என் கருத்துக்கள் ஒன்றிரண்டைச் சொல்லக் கடமைப்பட்டி ருக்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் சொன்னதுபோல் ஐந்தாண்டுக் காலத்தில் 19 கோடி ரூபாய் கிராமப்புறச் சாலைகளைச் செப்பனிட டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு அருமையான திட்டத்தை இந்த நாடுபோற்றும் வகையில் தெரிவித்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு 3 கோடி ரூபாயும், இந்த ஆண்டு 3 கோடி ரூபாயும் அதன்படி ஒதுக்கியிருக்கிறார்கள். மேலும் 13 கோடி இன்னும் மூன்றாண்டுக் காலத்தில் ஒதுக்கப்பட இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது தமிழ்நாட்டு மக்கள் உண்மையிலேயே டாக்டர் கலைஞர் அவர்களையும் அவர்களது அமைச்சரவையையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

ஆயிரத்தி ஐநூறு மக்கள் தொகையைக் கொண்ட ஒவ்வொரு கிராமத்தி லும் இரண்டு மூன்று ஆண்டுகளில் தார் போட்ட சாலைகள் இருக்கும் விதத்தில், நல்ல வசதி பெறக்கூடிய தமிழக அரசு வசதி செய்ய இருக்கிறது. நான் என்னுடைய வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகிறேன். இப்படி 1,500 மக்கள் கொண்ட கிராமங்களுக்கு மட்டும்தான் இப்படிப்பட்ட சாலைகள் போட வேண்டும் என்பதை ஓரளவிற்கு மாற்றி அதில் நூறு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் இருந்தாலும் எல்லாக் கிராமங்களும் ஸ்ட்ரிக்டாகப் பார்ப்பதன் பயனாக சில முக்கியமான கிராமங்கள் விடுபட வாய்ப்பிருக்கிறது. ஆகவே, தயவு செய்து

1,500 என்பதை 1,400, 1,300 என்றாக்கினால் இன்னும் பல கிராமங்கள் வசதி பெறவாய்ப்பிருக்கும் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, நாஷனல் ஹைவேஸ். அதற்காக ஒரு தனித் துறை நம் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் துவங்கப் பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் தனித்துறை தோன்றிய பிறகு நாஷனல் ஹைவேஸ் பாதைப் பணிகள் எந்த அளவிற்குச் செம்மையாக நடைபெற்று வரு கின்றன என்பது நாம் கண்கூடாகக் காண்கிறோம். அதற்காக ஒரு தனி சீப் என்ஜினியர் போட்டதன் காரணமாக இதுவரை செலவழிக்கப்படாதிருந்த பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டு அதன் பயனாக நாட்டிலுள்ள நாஷனல் ஹைவேஸ் பாதைகள் நல்லமுறையில் வளம் பெறும் வாய்ப்பினை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நாஷனல் ஹைவேஸ் பற்றிச் சொல்லும்போது என் தொகுதிபற்றிய சில விஷயங்களையும் சொல்லிக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். என் திருத்தணித் தொகுதிக்கு அண்மையில் உள்ள ஆந்திரா மாநிலத்தைச் சார்ந்த திருப்பதி வெங்கடேசப் பெருமாள் கோவிலுக்குப் போகிற மக்களுக்கு ஆந்திரா அரசு ஒன்றைச் செய்திருக்கிறது. திருத்தணி எல்லை வரையில் ஆந்திர அரசு திருப்பதி-மதராஸ் என்ற பாதையைத் திருத்தணி எல்லை வரையில் அவர்கள் நாஷனல் ஹைவேசில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் விளைவாக அந்தப் பாதை மிகவும் அழகாகவும் வளமாகவும் இருந்து வருகிறது. அதே போல் திருத்தணி எல்லையில் இருந்து சென்னை வரை அந்தப் பகுதியை நாஷனல் ஹைவேசில் எடுத்துக் கொண்டால் அந்தப் பகுதி அழகாகவும் வள மாகவும் ஆவதற்கு நல்லதொரு வாய்ப்பினை நாம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அதுபற்றி நம் அரசு மத்திய அரசை வலியுறுத்தி அதை நாஷனல் ஹைவேசின் கீழ் எடுத்துக் கொள்வதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தணிகை முருகன் கோவிலைக் கொண்ட பெரியதொரு ஸ்தலமாகும். (மணியடிக்கப்பட்டது.)

நான் முருகனைப் பற்றிப் பேசுகிறேன். கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.





* திரு. இ. எஸ். தியாகராசன்: அங்கு ஆயிரக்கணக்கில் மக்கள் தினப்படி வருகிறார்கள். அங்குள்ள ரெயில் பாதையில் மேம்பாலம் இல்லாமல் வருகிற மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். எனவே, நம் அரசு மத்திய அரசோடு பேசி அங்கு ஒரு மேம்பாலம் கட்டித் தரவேண்டும்.

அடுத்து என் தொகுதியில் பள்ளிப்பட்டில் கொசஸ்தலை ஆற்றில் ஒரு பாலம் கட்ட சென்ட்ரல் ரோட் பண்ட் நிதியிலிருந்து பெற 42½ லட்சம் ரூபாயில் ஒரு திட்டம் தீட்டி மத்திய அரசின் அனுமதி கோரி அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதை எப்படியாவது வாங்கி அந்தப் பாலத்தைக் கட்டித் தர அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிப்பட்டு தொகுதியில் பல ஏரிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூட கட்டடங்களின் கூரைகள் பாழடைந்து விட்டன. அவைகளைப் பழுது பார்ப்பதற்காக, வேண்டிய நிதி ஒதுக்கி விரைவில் அவற்றைச் சீர் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பல பாசன ஏரிகள் புதிதாகப் போடவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். அதற்கான எஸ்டிமேட்ஸ் தயாரிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அவை விரைவில் செய்து தரப்பட வேண்டும் என்று கேட்டு இந்தச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கைகள்மீது என் கருத்துக்களைத் தெரிவிக்க இருக்கிறேன்.

பொதுவாக, நடைபெற இருக்கிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்குப் பெரிய திட்டங்கள் எதுவும் இல்லை என்பது எங்களைப் போன்றவர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டில் இருக்கின்ற பல்வேறு சிறு திட்டங்களைக் கூட நிறைவேற்றுவதற்கு இப்போது காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்னையில் கூவம் திட்டத்திற்கு மட்டும் ஏறத் தாழ இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் இந்த அரசு செலவழித்திருக்கிறது. அதே போல் பக்கிங்காம் கால்வாயைச் சீர்திருத்தம் செய்வதற்கும் ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய் இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. இவை எல்லாம் அவசியமற்ற காரியங்கள் என்று சொல்வதற்கு நான் தயாராகயில்லை. இவைகளுக்குக் கொடுக்கிற முக்கியத்துவத்தைப் பொதுவாக பாசனத் திட்டங்களை நிறை

வேற்றுவதற்குப் பெரும் தொகையை ஒதுக்க வேண்டுமென்றுதான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னால் மாவட்ட நீர்பாசன மாநாட்டை நடத்திப் பேசுகிற நேரத்தில் ஒவ்வொரு குளமும் நிரம்ப நிரம்ப விவசாயிகள் மிகவும் சந்தோஷப்படுவார்கள் என்ற கருத்தை அந்த மாநாட்டில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால் ஏற்றுக் கொண்ட கருத்துக்களை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது திட்டங்களை உருவாக்கியிருக்கிறதா என்று ஆராயும்பொழுது இதுவரைக்கும் எந்தத் திட்டங்களையும் உருவாக்க வில்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு குளங்கள் இருக்கின்றன. ஒரு குளத்திற்குக் கால்வாய் இல்லாத காரணத்தினாலே ஒரு குளம் நிறைந்து நீர் நிரம்பி மறு குளத்திற்கு நீர் செல்லக்கூடிய வசதி இல்லாமல் இருக்கிறது. இதனால் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய தண்ணீர் கிடைக்காமல் அவர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். என்னுடைய பகுதியிலே கடம்பார் குளம் என்ற பெரிய குளம் இருக்கிறது. அதிலே தண்ணீர் நிரம்பி அதற்குக் கீழே உள்ள 12 குளங்கள் நிரம்ப வேண்டிய நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு குளமும் நிரம்பி கடைசியாக உள்ள குளத்தில் தண்ணீர் வருவதற்குள் பல மாதங்கள் ஆகிவிடுகின்றன. எனவே, அதற்கு ஒரு கால்வாய் வேண்டும். அதன்மூலமாகக் கீழே உள்ள குளங்களுக்கு தண்ணீர் போவதற்கு வசதி செய்ய முடியும். இதைப்பற்றி நீண்டநெடுநாட்களாக கோரிக்கையை அந்த மக்கள் வைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

நான் சட்ட மன்ற உறுப்பினரான பிறகு அதிகாரிகளிடத்திலே இதைப் பற்றிச் சொன்னேன். இதற்கு மூன்று வழிகள் உள்ளன. ஒன்று கடம்பார் குளத்தினுடைய தலைமதகை இரண்டு மடங்கு அகலப்படுத்த வேண்டும். இன்னொன்று கடம்பார் குளத்திற்குள்ளேயே கால்வாயைக் கொண்டுவந்து கடம்பார் குளத்திற்குத் தண்ணீர் விடாமல் கீழே உள்ள குளங்களுக்குத் தண்ணீர் கொண்டு வருவது.

இன்னொன்று 25 ஆண்டுகளாகச் சொல்லி வருகிற திட்டம், வேறு வழியாக அந்தக் குளங்களுக்கு தண்ணீர் கொண்டுபோய்ச் சேர்ப்பது. இதிலே எந்தத் திட்டத்தையாவது நிறைவேற்றினால்தான் தண்ணீர் விவசாயிகளுக்குக் கிடைக்கும். பயிர் கதிர்விட்டு இருக்கிற சூழ்நிலையிலே குளங்களிலே தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டால் ஒவ்வொரு குளமும் நிரம்பி தண்ணீர் ஒவ்வொரு குளமாகச் செல்வதற்குள்ளாகப் பயிர்கள் வாடிவிடுகின்றன. அதை உடனடியாக நிறைவேற்ற அரசு திட்டம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





என்னுடைய பகுதியில் உள்ள ஆழ்வார்திருநகரியில் சடையனேரி கால்வாய் திட்டம் என்ற ஒரு திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதையும் விரைவிலே நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு குளம் எத்தனை கன அடி தண்ணீர் கொள்ளவேண்டுமோ அந்த கன அடிநீர் கொள்ளாத அளவிற்கு வண்டல்மண் அடங்கிக் கிடக்கிறது. எனவே அதை தூர் எடுக்க வேண்டும். அந்த மாவட்டத்திலேயுள்ள பல குளங்களிலே தூர் வாரப் படாமல் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. எனவே அவற்றை யெல்லாம் தூர் வார வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே சரக்கன் ஓடை என்ற ஒரு ஓடை இருக்கிறது. அதிலே ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்று ஆறாண்டுக் காலமாகப் பேசியிருக்கிறேன். முன்னாலே நான் அந்தப் பக்கம் இருந்தபொழுதும் பேசியிருக்கிறேன் அப்பொழுதும் நிறைவேற்றப்படவில்லை, இப்பொழுது இந்தப் பக்கம் வந்திருக்கிறேன், இப்பொழுதாவது கிடைக்கும் என்று நம்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்குச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. . .

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினரை நான் நண்பராகத்தான் கருதுகிறேன். எதிரியாகக் கருதவில்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நானும் அதைத்தான் சொல்கிறேன். என்மீது உங்களுக்கு அன்பு எப்பொழுதும் இருக்கிறது. அந்த முறையிலே அந்தத் திட்டத்தை 50 ஆயிரம் ரூபாய் செலவில் நிறைவேற்றி அந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே தலைவன்மடலி என்ற பகுதியிலே ஒரு ஆறு கடலிலே போய்ச் சேருகிறது. அந்தப் பகுதியிலே உள்ள 8 கிராமங்களுக்கு மக்கள் போய்ச்சேர வேண்டுமானால் அந்த ஆற்றை கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று 25, 30 ஆண்டுகளாக அந்த மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாலம் கட்டுவதற்கும் இணைப்புச் சாலை போடுவதற்கும் 1½ லட்சம் ரூபாய் அளவில் திட்டம் போட்டிருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலே உள்ள திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குப் பலர் செல்லுகிறார்கள். திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்கு ரோடை அகலப்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற பொதுப்பணித் துறை மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்ப

கிறேன். என்னுடைய பகுதியாகிய வேதாரண்யம் பகுதி தஞ்சை மாவட்டத்திலே மிகவும் பின்தங்கிய பகுதி என்பதை அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் அறிவார்கள். அந்தப் பகுதியிலே பாசன வசதிகளைச் செய்வதற்கான விரிவான திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். அங்கேயுள்ள 30, 40 கிராமங்களுக்குப் பாசன வசதிகள் செய்துதர வேண்டுமென்பதை நான் வலியுறுத்தி அதற்காக ஒரு சில வழிகளையும் எனக்குத் தெரிந்த வரையிலே சொல்ல விரும்புகிறேன்.

முள்ளியாற்றிலிருந்து மாரகொண்டான் மூலமாகச் செல்வதையும், அடப்பாற்றிலிருந்து அவரிக்காடு வழியாகச் செல்வதையும் ஆழ வெட்டி பாசன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாலை வசதிகள் என்று எடுத்துக்கொண்டால் வேதாரண்யம் பகுதியிலே ஒரே ஒரு தார் சாலைதான் இருக்கிறது. வேறு அரசுக்குச் சொந்தமான சாலைகளே கிடையாது. சாலை வசதிகள் இல்லாத தொகுதியாக அந்தத் தொகுதி இருக்கிறது. பல கிராமங்களுக்கு மக்கள் போக வேண்டுமானால் போட்டின் மூலமாகத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அல்லது நீண்ட தூரம் நடந்தும் நீந்தியும் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது.

நான் இதைப்பற்றி சென்ற கூட்டத் தொடரின்போதுகூடச் சொன்னேன். அப்படிப்பட்ட ஊர்களுக்கு இணைப்புச் சாலைகள் விரைவிலே போட்டுத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆயக்காரன்புலம் வழியாகச் செல்லும் சாலை, அவரிக்காடு, தோப்புத்துறை, நாலுபேத வல்லி வழியாகச் செல்லும் கோவில் பத்து சாலை ஆகியவற்றை அரசாங்கமே எடுத்துக்கொண்டு நல்ல முறையிலே அவற்றை சீர்செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடற்கரையையொட்டி வாழ்கிற மக்கள் வசிக்கக்கூடிய பகுதியில் அந்த மக்களுக்கு எல்லாம் விமோசனம் அளிக்கக்கூடிய முறையிலே அந்தச் சாலைகளை அரசாங்கமே எடுத்துக் கொண்டு நல்ல சாலைகளாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொன்னால், அந்தத் தொகுதி ஒரு தனிப் பொறியாளரை நியமித்து அந்தப் பகுதியில் உள்ள பொதுப்பணித் துறையின் மூலமாக என்ன என்ன காரியங்களைச் செய்யவேண்டுமோ அவற்றை யெல்லாம் விரைவிலே செய்வதற்கு அரசாங்கம் உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொதுப்பணித் துறை ஊழியர்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அந்தத் துறையிலே உள்ள ஊழியர்கள், லஸ்கர்கள், நிரந்தரம் இல்லாமல் பணியிலே இருந்து வருகிறார்கள். அவர்களுடைய நீண்டநெடுநாள் கோரிக்கை முதலாவது சம்பள கமிஷன், இரண்டாவது சம்பள கமிஷன் இரண்



டிலுமே அவர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்று சொல்லியும் கூட அவ்வாறு அறிவிக்கப்படவில்லை. அதன் காரணத்தினால் அவர்களுக்கு கிராஜுவுடி, பென்ஷன் போன்ற எந்தவிதமான சலுகைகளும் தரப்படவில்லை. நமது அரசு பல பேர்களுக்குத் தொழிலாளர்களுக்கு, வேலைவாய்ப்புக்களில் இருக்கக்கூடியவர்களுக்கு முக்கியமான பல உயர்ந்த பதவியிலே இருக்கின்றவர்களுக்கு எல்லாம் அடிக்கடி நன்மைகள் செய்து கொண்டிருக்கிறது, ஆனால் இது வரையில் கோரிக்கையே அதிகமாக வைக்காத அவர்களையும் கவனிக்க வேண்டும். வெள்ள காலங்களிலும் மற்ற காலங்களிலும் இரவு பகல் என்று பாராமல் அந்தத் தொழிலாளர்கள் இந்த நாட்டிற்கும் அரசுக்கும் உதவி செய்து வருகிறார்கள். அவர்களுடைய நீண்டநாளைய கோரிக்கையை ஏற்று அவர்களை யெல்லாம் விரைவிலே அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல முக்கியமான வடிகால் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட இருக்கின்றன. சென்ற கூட்டத் தொடரின்போதே நான் அவற்றை யெல்லாம் பேசியிருக்கிறேன். வடிகால் திட்டம் முக்கியமானது ஆகும். முள்ளியாற்றிலே ஒரு ஸ்ட்ரைட் கட் வெட்டி வடிகால் வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(6) நடைமுறைக் கேள்வி—தொடர்ச்சி.

(ஆ) மாலை நேரக் கூட்டத்திற்கு அவையில் 'டீ' வழங்கப்பட வேண்டும் என்பது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், தலைவரவர்களே, இன்றைய தினம் மாலை 4 மணிக்கு நாம் திரும்பவும் இங்கே கூடி விவாதிக்க வேண்டியிருக்கிறது. நேற்றையதினம் 4 மணி அளவில் கூடியபோது கோரம் இல்லாமல் இருந்தது. கோரம் இல்லாமல் இருப்பதற்குக் காரணம், 4 மணி என்று கூறுகிற போது அது டீ சமயமாக இருப்பதால் தான். ஆகவே, ஒன்று 4-30 மணி அல்லது 5 மணிக்கு வைக்க வேண்டும் அல்லது டீ ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் டீ சாப்பிட்டு விட்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): நம்முடைய திரு. ஜேம்ஸ் அவர்களின் கோரிக்கையின்பேரில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கலந்து கொண்டு, டீ வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

*பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, இன்று மாலை 4 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.*

*பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணி அளவில் ஒத்தி வைக்கப்பட்டது.*

* *

*இடைவேளைக்குப்பின் பேரவை மாலை 4-00 மணிக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் தலைமையில் கூடியது.*

*(5) 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)*

DR. H. V. HANDE: Hon. Mr. Deputy Speaker, Sir, in connection with this present Demand before the House, in support of the cut motions moved on behalf of our Party, I would like to say a few things.

At the outset I should say that the performance of the Ministry of Public Works does not give us room for satisfaction. There is considerable gap between the promises made and the actual execution. The Government must gear up its Ministry for better performance. There are a number of complaints in several sections and many of them have to be attended to urgently. For instance, there are three cut motions given notice of by the hon. Member, Thiru Venkataswamy—the first is to discuss about the delay in starting Doddatalla Project in Denkanikota taluk of Dharmapuri district, the second is to discuss about the delay in sanctioning the Kelavarapalli Anicut across South Pennar in Hosur taluk, in Dharmapuri district and the third is to discuss about the delay of execution of the following anicuts:

(1) Madeswan Kovaipallam,
(2) Ganga Gowri Lalla,
(3) Muttavalamadugа,
(4) Sellay Haggu Lalla,
(5) Dodda Maduvu Pallam, all in Denkanikota taluk in Dharmapuri district.

All these things are there pending for a long time and have not been attended to. There are then certain other very serious lacunae which I wish to point out. For instance, the problem of Junior Engineers has not been properly attended to by this Government. Their pay scale should be on a par with the Associate Lecturers in Government Engineering Colleges. That is what the Junior Engineers have sought from this Government. That has to be attended to by this Government.





Then the Head Draftsmen of Public Works Department are there. Their problem is to be tackled immediately. The Public Works Department Junior Engineers have sought that they should be declared as on par with Tamil Nadu Electricity Board Engineers and the Engineers of the Neyveli Corporation, i.e., the pay scale should be changed from Rs. 400–15–475–20–575–30–650 to Rs. 475–25–650–30–800.

They have also sought promotion after completion of 5 years of service as is being done in the case of Junior Engineers of the Neyveli Lignite Corporation. They have also sought that regularisation of emergency Junior Engineers numbering about 1100 out of the total strength of 2,000 Junior Engineers. Family, they have asked for a common pool for all the Government Departments, with a uniform scale of pay and then promotion avenues provided straightaway from the common pool. They have asked again that the Diploma holders' grievances should be redressed. I would like to know whether the Hon. Minister has got any solutions.

Another problem which has been engaging the attention of many of us for a very very long time is with regard to the Tuticorin Harbour Project. I am pained to find that the note that has been given to this House makes a dismal reading. For instance, I shall only quote: 'The target date of completion: Tuticorin Harbour Project is a spill-over scheme from the Third Five-Year Plan to be continued during the Fourth Plan and completed during the Fourth Plan period itself.' Now what is the position? Is it complete? No. Why is there enormous delay with regard to this project? Why is this Government not properly insisting on the Central Government to finish this project expeditiously? What is the exact difficulty? I would like to know. I understand that some private companies have been entrusted with this problem. What is the difficulty of these companies? In the book supplied to members it is said that the progress of work in the Tuticorin Harbour is not what it should have been and that the firm who have been entrusted with the execution of major civil construction works in respect of both the south breakwater, pier head, wharf walls, etc. and the north breakwater has been facing acute difficulties, mainly financial and that their grievances have been looked into in the past and certain relief measures within the overall scope of the contracts were afforded to them. It is said that they have been facing acute difficulties. What are the difficul-

ties ? What is the sort of difficulties ? We have not been taken into confidence and informed of it. They themselves say, the difficulties are mainly financial. What exactly is the problem ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The problem is clearly stated there. It is not the fault of the State Government. This Government stated the position and conveyed its grave concern over the delay in the execution to the Government of India and impressed on them the need to accelerate the progress. The Government of India, in the Shipping and Transport Ministry, have informed this Government that they are aware of the progress in the Harbour Project and they have said that it is not what it should have been. They have stated that the contractors have some difficulties. However, they have given the assurance that the Tuticorin Harbour would be available for use by the end of 1973 so that the port could be commissioned for limited service.

DR. H. V. HANDE : It is an answer given by them and it is vague. 'The matter is receiving attention' is the usual jargon. We would like to know what are the steps taken to accelerate the progress. We would like to know what exactly are the reasons for this delay. This should have been over by the middle of the Fourth Plan. Will it be over at least by the middle of the Fifth Plan ? It is scandalous, it is very detrimental to our State. Something is seriously wrong somewhere, in some place. In all these things we want the House to be taken into confidence and told what are the exact difficulties and reasons for the delay.

Another matter which is of grave concern to us—I am quite sure all members would agree with me that this is causing concern and I refer to the extreme delay that is going on in this project and that is about Cauvery ? What about Cauvery ? I would like to know why no mention has been made about it ? Everybody seems to have forgotten about it. I do not understand how the Hon. Minister and the Hon. Chief Minister have forgotten about it. Nobody seems to be aware of it. Previously telegrams were sent and party leaders were suddenly called for a meeting. After about half a dozen meetings, this seems to have been put in the cold-storage, as though some magic has taken place. What has happened ?

The Hemavathi Project is going on. Are we going to get water or not ? Well, we are grateful to the Mysore Government for helping us in this grave situation now. But what is the position about Cauvery ? Is it being kept shrouded into a mystery; We would like to know the latest position. Has any discussion taken place ? What is the position of Mr. K. L. Rao ? What is the assurance he has given ? Should not this House be taken into confidence and informed about all these things ? Thiru Marimuthu was there ; other leaders were there ; we were all called for these meetings. For one year it went on. Now nothing seems to have been done further.



This is exactly the mistake you have done. The late-lamented member from the Socialist Party raised the issue last time. It was not considered urgently. Will the Hon. Minister give us an assurance that everything has been done? What has happened? Why is there lull ? What are we going to do to settle the dispute ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : In order that my friend may not make political capital out of this, I will make the position clear right now.

The Member is fully aware that we are taking all steps. The State Government have taken all necessary steps. The three Chief Ministers of Tamil Nadu, Mysore and Kerala agreed to refer the matter to a Fact Finding Committee. That Committee has visited Tamil Nadu, Kerala and Mysore and they have submitted their report to the Government of India. The Government of India has forwarded the report of the Fact Finding Committee to the State Governments and have asked for time for discussion with the Chief Minister of Tamil Nadu. Everything possible is being done by the State Government. Anticipating what my hon. friend would say, I have got the report of the Fact Finding Committee that has been sent to us by the Government of India. But I cannot disclose the findings of the ' Fact Finding Committee ' now.

DR. H. V. HANDE : If you make us believe that you are taking action, we may be lulled into that belief, we may be lulled into that false sense of security. It may be good sense of security for you but it is false sense of security for me.

I now come to Cooum. Last year I talked about it and this year also I have unfortunately to talk about it. I hope everything would be over and I would not have to talk about it next year. Let me hope so. You may say now that all work is over and

boats are plying. But we all know the quality of water there. This morning also some of our own colleagues had reported to me about the water there. I do not want to talk about it and discourage people going there. Let me leave it at that. Only in the estuary portion, it is all right and you have started the boating. What is stated in the note is " make the Cooum river beautiful and navigable ". You may say you have made it beautiful. I say it is not so. Leave that apart.

Is it navigable ? Have you made it navigable ? For the past two or three years, you have been telling the House that you would make it navigable. You have spent a huge amount. I will now let out a secret. Originally you wanted it to become navigable. You spent nearly 3 to 3½ crores. But suddenly some top Engineer, I do not know his name, discovered that public money should be put to better use and that this thing should stop with this. ' Thus far and no further ' he seems to have said and so, the original programme of making it navigable has been stopped in the middle. It is now not at all navigable. In the estuary portion it is so and you have little more draft and boats are plying. But it is not so further down. I make the serious charge that you have taken us all, members, in a ' ride ' (I am using it as a figure of speech) into a sort of hallucination that you would make it navigable. But that primary object has not been fulfilled now. In the bridges and culverts constructed, you may see they are not navigable.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : May I ask one question to Dr. Hande ? Has he ever travelled under these bridges ?

DR. H. V. HANDE : Let me put a question to the Hon. Minister, has he ever travelled in the bridge at Chetpet, From Chetpet onwards, there are 3 or 4 bridges and it is not at all navigable, there. Now you say all work is over and only rehabilitation work remains. But I maintain that it is not navigable and all works connected with it are not over.

Now there was a report on Buckingham Canal in 1968-69. The amount sanctioned for formation of roads at Hood Warf and Shell Wharf at North Buckingham canal margin, construction of wharf at Chintadripet all totalling Rs. 44 lakhs. But no mention is made of it now in the present report what is the improvement made and utilisation of funds. How has the Rs. 44 lakhs been spent? We





would like to know the details of progress of work. Let not this scheme become another 'Cooum'. Let not the money go into the drain. This is what I would like the Hon. Minister to consider. Let him give us the full details.

Now I come to Chembrambakkam tank improvement. This Rs. 60 lakhs scheme was inaugurated by the Chief Minister with all pump and splendour. It was a grandiose function with all pomp and splendour. They would have wasted 1 MW of electricity on tube lights and other illuminations. I would talk about that wastage when I talk on the Electricity Board budget next year and the Hon. Minister for Electricity may reply to me then. I would like to know what is the purpose of this scheme? Have proper tenders been called for? We would like to have details. Originally, it was intended as one piece of work.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : So far as Chembarambakkam tank improvement scheme is concerned, the hon. Member is talking as though the entire work has been sanctioned and tenders had been called for. I may say that the work had been split up into three stages. The first stage would cost Rs. 7 lakhs. It has just been sanctioned and tenders would be called for hereafter. Only after calling for tenders, action will be taken.

DR. H. V. HANDE : Originally they wanted to take it as one unit. Now the Hon. Minister says it had been split up into three stages. We would like to have details. We speak on information supplied to us. We do not have CID's like Government to check each and everything. I would like to have he following details :—

(a) whether proper tenders were called for ?

(b) if so, the quotations received from various parties.

(c) whether tender was given to one person or various persons?

(d) whether the entire work was given to one person or the scheme has been split up.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : செம்பரம்பாக்கம் திட்டத்தைப் பற்றிக் கேட்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு மொத்தமாக 65 லட்சம் அல்லது 70 லட்சம் ரூபாய் என்று நினைக்கிறேன் : சரியாகச் சொல்ல முடியவில்லை.*

ஆனால் இப்போது பூராத் திட்டமும் நடைபெறுவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இந்தத் திட்டத்தை பஸ்ட் ஸ்டேஜ், செகண்ட் ஸ்டேஜ், என்று இப்படி 4, 5 பிரிவுகளாகப் பிரித்து, வேலை நடைபெறுகின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முதல் கட்டத்திற்கு 7 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைக்கின்றபடி 60, 70 லட்சத்தையும் ஒரேயடியாகச் செலவழிக்கவில்லை. யாரோ தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். பூராத் திட்டத்தையும் ஒரேயடியாக நிறைவேற்ற அரசாங்கத்திடம் பணம் கிடையாது. அதனால் 4,5 கட்டமாகப் பிரித்து வேலை நடத்த வேண்டுமென்றுதான் திட்டமிட்டிருக்கிறோம். ஆகவே, தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : I am for the scheme where it is for the purpose of food production. But what we want to know is the quantum of food production expected from this scheme. I want that detail. My information is that the Tourist Centre has been linked with this. If the Hon. Minister says 'no', it is a different thing. That is one thing.

One other point is with regard to this chronic complaint and that is about the Gemini Flyover. We have discussed about it. The extra point I would like to stress is this. My information was that instead of the Gemini Flyover passing along the Mount Road, if it has been taken via the Luz Church Road, Nungambakkam High Road we would have saved much money and it would have been economical. That would have been a better flyover also and it would have helped for better method of flow of traffic. I met some very good expert on the matter and I am saying that on that basis only. I would like to know about it. But what has happend and we could not do anything about it now.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : That was also considered.

DR. H. V. HANDE : Whatever it is, we would like to know the details about that. What is the position of flow of traffic? My information is that flow would have been better if we had done it the other way. Further, the cost of construction would have also been much less.





Finally, about another point about which I have mentioned on the floor of the House earlier and that is with regard to splitting of the contract. A portion of the contract was taken by the Government, that is, Government itself was doing a part of the work. Governor's address itself and no answer was forthcoming then Governor's address itself and no answer was forthcoming then from the Minister. If he has got any answer, he can give us the same now.

With regard to that green book, I will again go to that, regarding the charges levelled against the Ministry and their replies. There is one *inter alia* and that is : On the 7th May 1970 the tender of Messrs. Sathyanarayana and Bros. was accepted by the finance processing of the Additional Chief Secretary, overlooking the Chief Secretary, Thiru Royappa. All that I can say is that it was not on 7th May 1970, but on 27th April 1970 itself that the Chief Minister and the Minister for Works had decided in their minds to commit this particular thing and that is considered as irregularity. I am generous and I say 'it is considered an irregularity '.

The Chief Minister says 'the date stamp shows that the file was received in Chief Secretary's office on 27th April 1970. As orders had to be issued urgently, the file was got back by the Additional Chief Secretary from the Chief Secretary's office on 28th April 1970 and it was circulated to Minister for Works for orders. Is it possible? It is received in the Chief Secretary's office at 5 p.m. on 27th April 1970 and at 11 a.m. the next morning—it becomes another day, one minute can make the change—I would like to know whether this fact was made known that it came at 5 p.m. and suddenly in the morning next day it was taken from the Office of the Chief Secretary by the Additional Chief Secretary? Then hurriedly orders were passed. Was there a need for that? As though to contradict the impression that a decision was taken in a hurry, the Chief Minister goes on to say 'only on 13th July 1970 final orders were passed'. If so, where was the hurry to hijack the file within hours from the Chief Secretary's office ? Why was this done ? This is a fundamental question every hon. Member has the right to ask and get an answer from the Government. The answer is obvious. The negative remarks made by the then Chief Secretary in the margin of the file stating that it would take him

considerable time to scrutinise the file before approval as it involved tender for a huge amount have also to be taken into consideration. Therefore, this is a simple irregularity, with very very costly results.

All these things, I request the Hon. Minister should, in his reply, cover. Thank you, Sir.

*(திரு. மா. மீனாட்சிசுந்தரம் அழைக்கப்பட்டு சபையில் இல்லாததால் திரு. வீ. இராஜகோபால் அழைக்கப்பட்டார்.)*

***திரு. வீ. இராஜகோபால்:*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொதுப்பணித் துறைக்கான மானியக் கோரிக்கையை வரவேற்று சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

நாட்டின் வளர்ச்சியில் அதிகமாகப் பங்குபெறும் இந்தப் பொதுப்பணித் துறையானது திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட பிறகு சாதித்துள்ள சாதனைகளை எண்ணி நாம் பெருமைப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். நாம் கூவம் நதி என்றெல்லாம் முன்பு சொன்னபோது, 'கூவத்தில் படகா? நாற்றமடிக்காதா?' என்றெல்லாம் அன்றைக்குப் பேசியவர்கள் இன்றையதினம் ஆச்சரியப்படுகின்றார்கள். இப்படிக் கூவத்தை மாற்றிக் காண்பித்திருப்பது இந்த அரசின் மிகப் பெருஞ் சாதனைகளில் ஒன்றாகும்.

அதுபோன்று இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு சென்னை நகரையே அழகுபடுத்தியிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது இந்தப் பொதுப்பணித் துறையானது எந்த அளவிற்குச் சிறப்பாக பணியாற்றி வருகின்றது என்பதைச் சொல்லத் தேவையில்லை. அடுத்து ஜெமினிக்கு எதிரில் ப்ளை-ஓவர் கட்டி வருவதானது நமது பணிகளுக்கு மகத்தானதொரு எடுத்துக் காட்டாகும். இப்படிப்பட்ட ஃப்ளை-ஓவரை வெளி நாடுகளில்தான் பார்க்கிறோம். ஆனால் நமது நாட்டில் தமிழ்நாட்டில் இப்படிப்பட்டதொரு ஃப்ளை-ஓவர் கட்டியிருப்பதை யொட்டி நமது அரசினைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம் நாம்.

அடுத்து, இன்றுள்ள முறையில் ஏரிகளிலிருந்து தண்ணீரை விடுவதற்கும் அடைப்பதற்கும் ஒரு ஆள் நீரில் முழுகித்தான் அதைச் செய்ய வேண்டியிருக்கின்றது. இதில் பல ஆபத்துக்களும் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே இந்த முறைக்குப் பதிலாகத் தண்ணீரை விடுவதற்கோ அடைப்பதற்கோ யாரும் நீரில் இறங்காமல் கரையிலிருந்தே அதைச் செய்வதற்கான முறையை மதகுகளில் அமைத்துத் தரவேண்டும். அடுத்து ஏரிகளிலுள்ள எதிர்வாயிலுள்ள நிலங்களை இப்போது பல இடங்களிலும் ஆக்கிரமிப்பு செய்வதைப் பார்த்திருக்கிறோம். இதன் காரணமாக ஏரியின் அளவு குறைந்து கொண்டே வருகின்றது. எனவே, ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.



அடுத்து, நெடுஞ்சாலைகளில் பல்லாண்டு காலமாக 'காங்கிரஸ்காரர்கள்' பணியாற்றி வருகின்றார்கள். ஆனாலும் அவர்கள் நிரந்தரமாக்கப்படாமலேயே இருந்து வருகின்றார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம் இன்று நெடுஞ்சாலைகள் அழகாக இருப்பதற்கே அவர்கள்தான் காரணமாக இருக்கின்றார்கள். எனவே அவர்களுக்கு இதைச் செய்யக் கடமைப்பட்டு இருக்கின்றோம்.

அடுத்து, என் தொகுதியில் உள்ள சுகநதியில் குறுக்கே அணை கட்டினால் அது வந்தவாசி தாலுக்காவில் ஏறத்தாழ ஐந்து அல்லது பத்தாயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும். இதை அரசு பரிசீலிக்க வேண்டும். மேலும் நாட்டில் எங்கெங்கே சிறு சிறு நதிகள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் அணைகளைக் கட்டி நீரைத் தேக்கினால் இன்னும் விவசாயம் பெருக வாய்ப்புகள் ஏற்படும்.

என் வந்தவாசித் தொகுதியில் ஐந்து கண் பாலம் என்று ஒன்று இருக்கின்றது. அது மிகவும் குறுகலாக இருக்கின்றது. ஒரு நேரத்தில் ஒரு பஸ் தான் போகலாம். அப்போதுகூட அந்தப் பாலத்தில் யாரும் நிற்கவும் கூடாது. அவ்வளவு குறுகியதாக இருக்கின்றது. இதை அகலப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, நீண்ட நெடுங்காலமாக காங்கிரஸ்காரர்கள் இருந்த காலத்திலிருந்து கேட்டு வருகின்றார்கள், அங்கே உள்ள சாலவேடு காசிகுளம் ஆறுகளின் குறுக்கே பாலம் கட்ட வேண்டும் என்று. இப்போதாவது அந்த மிகவும் அவசியமான மேம்பாலங்களைக் கட்டிக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். அதுபோல என்னுடைய தொகுதியில் எல்லைக் கோடியிலுள்ள ஊர் நெற்குளம். அதைத் தாண்டிச் சென்றால் தென்னார்காடு மாவட்டத்தைச் சார்ந்த செஞ்சி தாலுக்கா வருகிறது. இந்த இரண்டு ஊர்களுக்கும் இணைப்புச் சாலை வேண்டும் என்று நீண்ட நெடுநாட்களாகக் கோரிக்கையை அந்த ஊர் மக்கள் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். இதையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, வந்தவாசியில் ஒரு பெரிய மருத்துவ மனை இருக்கிறது. அந்த மருத்துவ மனையின் தாழ்வார ஓரங்களில் மழைக் காலங்களிலும், மற்ற நேரங்களிலும் குளிர் காலங்களில் சாரல் அடித்தும், தண்ணீர் உள்ளே வந்தும்,

நோயாளிகள் அவதிப்படுகிருர்கள். அந்த சாலேப் போக்குவதற்குத் திரை போட வேண்டும். அந்த மருத்துவ மனை டாக்டருக்குப் பல முறை எழுதியும் எடுத்துச் சொல்லியும் எந்த ஏற்பாடும் செய்யவில்லை. மழைக் காலங்களிலும், குளிர் காலங்களிலும் அங்கே தடுப்பு எதுமில்லை. நோயாளிகள் கஷ்டப்படு 4-30 பி.ப கிருர்கள். மழைக் காலங்களில் தண்ணீர் வெள்ளம் போல உள்ளே சேர்ந்து விடுகிறது. அதைப் போக்குவதற்கு திரை போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(திரு. சே. சதாசிவம், திரு. என். காத்தமுத்து இருவரும் அழைக்கப்பட்டு, அவையில் அவர்கள் இல்லாததால் திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் பேச அழைக்கப்பட்டார்.)

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** தலேவரவர்களே, தமிழ் நாட்டில் பெரிய நீர்ப் பாசன நிலேகள் எல்லாம் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு விட்டன என்பதை அறிவோம். இனி பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப் பட ஏதும் இல்லே. அதைப் போலவே நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களே எடுத்துச் செய்யவும் வாய்ப்புகள் இல்லே. எனவே, இருப்ப தெல்லாம் சிறிய நீர்ப்பாசன திட்டங்கள்—அவற்றைதான் இனி செயல்படுத்த வேண்டும்.

பட்ஜெட் உரையிலேகூட முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருந்தார்கள். நமது நாட்டில் சமீபத்தில் வெள்ளப் பெருக்கின் காரணமாகப் பழைய நீர்ப்பாசனத் துறையானாலும் சரி, கால்வயாலும் சரி அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி, அவற்றிற்குக் கலுவாய்கள் அமைத்து, வெள்ளப் பெருக்கைத் தடுப்பதுடன் அவற்றை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிருர்கள். அந்தக் கருத்திற்கேற்ப இந்த நிதிநிலே அறிக்கையிலே நீர்ப்பாசனத் துறையிலே சிறிய திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று பார்த்தால் அது மிகவும் குறைந்த தொகையாக இருக்கிறது. இது முதலமைச்சரின் உரைக்கும், அமுல்படுத்தவிருக்கிற செயல் பாட்டிற்கு மிடையே உள்ள முரண் பாட்டைக் காட்டுகிறது.

ஒரு கொள்கையை சொல்லி விட்டு அதற்கு முரண்பாடான முறையில் அரசு செலவழிக்கிறது என்ற முரண்பாட்டை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை எதற்காகக் கூறுகிறேன் என்று சொன்னுல், பொதுவாக என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால் இந்தச் சிறு பாசன வசதிகள் அங்கே அதிகம் தேவைப் படுகின்றன. கடந்த 25 ஆண்டுகளாக இந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு நீர்ப்பாசனத் திட்டம் ரூ. 5 லட்சம் செலவில்



ஒரே ஒரு கலுவாய் அமைக்கின்ற திட்டம் தான் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. பலமுறை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அருப்புக்கோட்டை தொகுதியைப் பொறுத்தவரையில் அருப்புக்கோட்டை தாலுக்காவில் புதிய கலுவாய்கள் அமைப்பதற்குக் கடந்த ஏழு ஆண்டுகளாக இன்வஸ்டிகேஷன் செய்யப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டு வைக்கப்பட்டிருக் கின்றதே தவிர, அவை செயல்படுத்தப்படாமலிருக்கின்றன. இவற்றை எடுத்துக் கொள்ள அதிகத் தொகை ஆகாது.

பாலுத்தம் கலுவாய் இருக்கிறது. அதைச் சீர்செய்ய ரூ. 2 லட்சம்தான் ஆகும். இப்படி, ஒரு 10, 14 திட்டங்கள்—இவை அனைத்தையும் எடுத்துக் கொண்டாலும் கூட, ரூ. 25 அல்லது 30 லட்சத்திற்கு மேல் போகாது. அருப்புக் கோட்டை, முதுகுளத்தூர் தாலுக்காக்கள் நீர் வளம் அற்ற இடங்கள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. மற்ற பகுதிகளுக்கு, சிறிய நீர்ப் பாசனத் திட்டங் களுக்கு அதிகத் தொகை ஒதுக்காவிட்டாலும் கூட, அருப்புக்கோட்டை வட்டத்திற்கும் முதுகுளத்தூர் வட்டத்திற்குமாவது அதிகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சரிடம் மதுரை, சிவகங்கை பகுதிகளுக்குச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அதிகம் தேவை என்று பல முறை வற்புறுத்தி எடுத்துச் சொல்லி யிருக்கின்றேன். இந்த நேரத்திலும்,, அமைச்சர் அவர்களே, கருணை கூர்ந்து வரக்கூடிய நிதி ஆண்டிலாவது 1973-74-ஆம் ஆண்டிலேயே அதிகப் பணம் ஒதுக்கி இந்தத் திட்டங்களே உடனடியாக எக்சிக்யூஷனுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும், உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே, குள்ளச் சந்தை என்ற பகுதியிலே, ஏறத்தாழ 3 ஆயிரம் ஏக்கர் நிலம் . . .

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதியைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிற காரணத்தால், அது பற்றிய விவரங்கள் அடங்கிய பட்டியல் என்னிடம் இருக்கிறது. அதை வாசிக் கிறேன்.

The following new tank schemes are under execution in Aruppukottai taluk.

| *Serial nnmber and name of scheme.* | *Estimated cost.* |
|---|---|
| | RUPEES IN LAKHS. |
| 1 Formation of new tank near Tiruvirundalpuram. | 5·32 |
| 2 Formation of new tank near Kanjampatty. | 1·65 |

[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி] [1973 மார்ச் 21

II. The following new tank schemes are under consideration at various levels as noted against each.

| Serial number and name schemes. | cost in lakhs. | under finalisation by |
|---|---|---|
| 1 Formation of new tank near Palavanatham village. | 2·65 | Government. |
| 2 Formation of new tank near Kullursandai. | 25·00 | Board of Revenue. |
| 3 Formation of new tenk near Therkunathan village. | 3·85 | ,, |
| 4 Formation of new tank near Periavallikulam village. | 1·37 | ,, |
| 5 Formation of new tank near Vaduvarpatti. | 2·90 | ,, |
| 6 Forming new tank near Dharapuram. | 0·72 | Local Officer. |

இந்தத் திட்டங்களை யெல்லாம் சொல்லிவிட்ட காரணத்தால், உறுப்பினர் வேறு பிரச்சினையைப் பற்றிப் பேசலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிவிப்புக்கு நன்றி.

அதிலே இன்னும் ஒரு கோரிக்கை. அதைப் பற்றி வெட்டுப் பிரேரணை கூட கொடுத்திருக்கிறேன். அருப்புக்கோட்டையில் கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதி என்று 2 பகுதி இருக்கிறது. மேற்குப் பகுதியில் ஏற்கனவே ஒரு திட்டம்—கஞ்சங்காடு திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு திட்டம் இருக்கிறது. மறவங்காடு—மீளுட்சிபுரம் கஞ்சங்காட்டை ஒட்டி இருக்கிறக் கூடிய முதல் திட்டம். அந்தப் பகுதி மக்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் ஏற்கனவே சர்க்காரில் பெண்டிங்காக இருக்கிறது. எனவே இந்தத் திட்டங்களை யெல்லாம் உடனடியாக இந்த ஆண்டிலேயே செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல ஏற்பாடுகள் உடனடியாகச் செய்யப்படவிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போர்ட் ஆப் ரெவின்யூவில் பெண்டிங்காக இன்னும் சில திட்டங்கள் இருக்கின்றன. ஒரு ஸ்டேஜிலிருந்து இன்னொரு ஸ்டேஜுக்குப் போவதற்குக் காலதாமதம் ஆகிறது. இதில் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 21] [திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

இறுதியாக ரோடுகளைப் பொறுத்த வரையில் ஒரு சின்ன விஷயம். தூத்துக்குடி பெரிய துறைமுகமாக ஆகி வருகிறது. மதுரையிலிருந்து தூத்துக்குடிக்கு அருப்புக்கோட்டை வழியாகச் சென்றால் 25 மைல் குறைகிறது. இன்றைக்குத் தூத்துக்குடி முக்கியத்துவம் பெற்ற நகரமாக ஆகி வருகிற காரணத்தாலும், பேக்டரிகள் அதிகமாகி வருகின்றன என்ற காரணத்தாலும், அமைச்சர் இதை உடனடியாகக் கவனித்து, நேஷனல் ஹைவேயாக ஆக்க சிபாரிசு செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசும் இதற்கு இணங்கிவிடும் என்று நினைக்கிறேன். மானியக் கோரிக்கையில் ஏராளமான நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற முறையில், இன்னும் அதிகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. அ. வெள்ளத்துரை: தலைவரவர்களே, 1973-74-ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

நீர்ப்பாசன வசதிகளைப் பொறுத்த வரையில், 1967-க்கும் பிறகு நமது திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பிறகு பொதுப்பணித் துறையில் நல்ல முன்னேற்றத்தை காண்கிறோம். அவற்றைப் பொது மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். பாசனத் துறையை எடுத்துக் கொண்டால், பல திட்டங்கள் எல்லாம் இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்றன. எனது தொகுதியை எடுத்துக் கொண்டால் வாசவ நல்லூரில் ஒரு ஸ்கீம் ரூ. 169 லட்சத்தில் போடப் பட்டிருக்கிறது. சூபரிண்டெண்டிங் எஞ்சினீயர் ஆபீசிலிருந்து சீப் எஞ்சினீர் ஆபீசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. வேலை துரிதமாக நடைபெறாமல் தாமதப் பட்டுக் கொண்டு வருகிறது. துரிதமாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்தால் 20 ஆயிரம் பாசன வசதி பெற வாய்ப்பு இருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்தில் வள்ளியூர் பஞ்சாயத்து யூனியனில் ஆலத்துறையாறு இருக்கிறது. அது மிகவும் வறட்சியான பகுதி. ராதாபுரம், நாங்குநேரி வள்ளியூர் போன்ற பகுதிகள் எல்லாம் அந்த ஆலத்துறையாறு திட்டம் நிறைவேற்றப்பட்டால் பயன் அடையும். அந்தத் திட்டத்திற்காக ரூ. 19.30 லட்சம் போடப்பட்டிருக்கிறது, எனினும் அது ஏனோ தாமதப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதையும் துரிதப்படுத்தினால் அந்தப் பகுதியில் நீர்வளம் பொங்கி விவசாயிகள் பெரிதும் பயன் அடையக்கூடும். ஆகவே அதைத் துரிதப்படுத்தித் தர வேண்டும் என்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சிவகிரியில் இருபதாயிரம், முப்பதாயிரம் ஏக்கராக்கள் பாசன வசதி பெறக் கூடிய குளங்கள் மராமத்து இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவற்றுக்காக 87 லட்சம் மதிப்பீடு போட்டிருக்கிறார்கள். அதையும் தாமதமின்றி மராமத்து செய்து கொடுத்தால் அந்தப் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள் பாசன வசதியைப் பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் இருக்கிறது. தென்காசி, அம்பாசமுத்திரம், வாதவத்தநல்லூர் ஆகிய இந்த இடங்களில் எல்லாம் நிறைய கிளை ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. மேற்குநோக்கி ஓடிக்கொண்டிருக்கும் அந்த ஆறுகளை எல்லாம் பரிசீலனை செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் நல்லமுறையில் பராம ரிக்கப்படுவதில்லை. காரணம் அவர்களிடம் போதுமான பணம் இல்லை. கிராமப் பகுதிகளில் யூனியன் ரோடுகள் மண்சாலைகளாகவே இருக்கின்றன. ஆகவே பத்துப் பதினைந்து மைல்களுக்குட்பட்ட சாலைகளை விட்டுவிட்டு மற்ற சாலைகளை எல்லாம் ஹைவேசில் எடுத்துக் கொண்டு நல்ல தார் சாலைகளாகப் போட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையில் உள்ளார் ஸ்கீம் இன்னமும் பரிசீலனையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. இதனால் இருபதாயிரம் ஏக்கரா பாசன வசதி பெறும். 150 லட்சம் மதிப்பீடு போட்டிருக்கிறார்கள். அதை உடனடியாக எடுத்துச் செய்து கொடுத்தால் 20 ஆயிரம் ஏக்கரா பாசன வசதியைப் பெறும். அதைத் துரிதப்படுத்திச் செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* THIRU K. S. KOTHANDARAMIAH : Mr. Deputy Speaker, Sir, I wish to say a few words in support of my cut motion I have given with regard to this Demand.

My cut motion relates to the backwardness of my area and irrigation needs of my district of Dharmapuri in general and the needs of Hosur and Denkanikota taluks in particular. I have been pressing about the irrigation needs of Dharmapuri district and **Hosur and Denkanikota taluks** since a few years. No doubt many improvements have taken place and many schemes have been sanc-





tioned. The district of Dharmapuri is agriculturally backward and it has been recognised by Central Government as backward and I had to thank the Hon. Chief Minister for getting the central assistance after declaring our district as backward district. Industrially also it is backward.

There are many small schemes, each costing about Rs. 3 to Rs. 4 lakhs which could be sanctioned for our district and which would improve the position. They have investigated many schemes a number of times. When the Hon. Minister for Public Works visited my place some time back he told me and he would get sanction for the irrigation quickly. One is the construction of dam at Kodayalam which cost, only Rs. 4 lakhs. The dam has been constructed and two channels have to be dug. Necessary action can take place for digging the two channels.

The other scheme is ' Kuppammacheruvu ' near Berigai village. That was sanctioned three years back. But the contractor was not a suitable man. The whole thing was washed out in rains. Recently I appealed to the Collector and to the Engineering Department and said the construction was not good. I said then that cement should be used for the bund. They went on with their own way and in the rains it was again washed out. Number of times this has happened. The work should supply water to 30 or 40 tanks. I hope and trust the Hon. Minister would take necessary action in the matter and order for proper construction.

The next is Dalavacheruvu tank. I have talked about it number of times. The area was zamindari area and neglected since two to three centuries. The cost of the work is only Rs. 3 to 4 lakhs and the entire Rulagiri firka would be covered by this. It can irrigate about 400 acres. I request the Hon. Minister to announce the sanction of this scheme now in this House itself, so that I can go with that good news to the people, who are clamouring for it since long.

The next is Verepalli dam. It can irrigate about 800 acres and its estimate is about Rs. 40 lakhs. Proposals have been sent from the Superintending Engineer. I think the papers are with Government or the Chief Engineer. I hope it will be considered and scheme sanctioned.

[Thiru K. S. Kothandaramiah] [1973 மார்ச் 21

The next is Burnitham and Bandapalli for each anicuts which would irrigate 100 acres and 80 acres. Because they are not repaired, the ryots are losing 1,000 candies per year. Necessary orders may be issued in this connection to effect the repairs.

Coming next to the Doddahalla project, I bring to the memory notice of the Hon. Minister that when the Hon. Chief Minister was the Minister in charge of Irrigation, he was kind enough to announce about this time, at 8 o'clock in the same Assembly Hall that the Doddahalla scheme had been accepted by the Government and it would be recommended to the Government of India. It is now 2½ years. Last year it was told that investigation was over. If this scheme is implemented it could irrigate Anchetti firka which is a backward area and which borders the Cauvery river. Now the whole water goes to the Cauvery river.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: With regard to Doddahalla project, the scheme was submitted to the Water and Power Commission of the Government of India; they asked for certain clarifications. After getting the clarification from the Chief Engineer, the proposals will be sent to the Government of India. It is the Government of India who have to give the clearance.

THIRU K.S. KOTHANDARAMIAH: What I heard was some lands are required for this from the Reserve Forest area and there are some difficulties about it. I hope and trust that the Hon. Minister in charge of forests and the Works Minister may join together and settle the question in a satisfactory manner, and send the details to the Central Government.

Regarding Kalavarapalli dam in Hosur Block, it is the only dam that can be given as a major dam to Hosur taluk. The estimated cost of the scheme is Rs. 1,60,00,000. Investigation was made about two years. It can irrigate about 5,000 acres. The District Collector and the Sub Collector came to the place and said that it had been recommended to the Government. I hope the matter will be taken up early and necessary recommendation will be made to the Union Government to accord sanction to this important scheme at any early date.

There are about 600 Basniudars taluks in Hosur taluk. A conference was held on Harur and there it was decided that all Zamindari area tanks which are in bad condition should be reno-



1973 மார்ச் 21] [Thiru K. S. Kothandaramiah]

vated and the assurance was given then that a separate set of Engineers would be sent to take up investigation. I only bring this to the notice of the Hon. Minister and request that a set of Engineers may be sent who will take up this work and arrange for repair of the tanks in that area.

Now, in the speech of the Hon. Minister supplied to us, it is said that Dharmapuri has been selected as one under the Drought Prone Area Programme. It is said that two medium irrigation schemes costing Rs. 157.50 lakhs and 18 minor schemes costing Rs. 126.18 lakhs have been proposed under this programme and they are under consideration of the Government of India. My difficulty is it is not given in detail what are the schemes that would be taken up under this programme. If we approch the District Collector, he does not give us the details. If we approach the Engineers of the District, they also do not give us the details. They do not give details in spite of our request to them. Therefore, I request the Hon. Minister to give us the details of the schemes to be taken up under this programme, so that we could in turn go and tell the people of the locality and say that these are the schemes that would be taken up, and these are the schemes that Government have recommended to the Central Government. They will then know that such and such are the schemes that would come up in that area. Then only they will accept that we have done something. That is the duty of an M.L.A. Therefore, details of the schemes may be given.

Then with regard to Ganga-Cauvery link: I have already explained that the proposed Ganga-Cauvery link should be re-examined. I have consulted a number of retired Engineers in Bangalore. I have also gone through the maps of the concerned regions. I myself am a geography student. The proper places to bring the Canal are these. Its channel would be brought to Sreesailam Project in Kurnool district and then it should come to Mysore table land: it can be taken to Kolar district and then to Hosur; they are all in the same level of 3,000 fet. There is the South Pennar. There is the Palar river; There is also the Santhakumar river. Once the canal is brought to that area, it will fill Chinnar dam. Chinnar is a tributory to Cauvery and falls in it at Hoganakkal; Cauvery flows there; there is the water falls; within 10 miles we have got Mettur dam.

[Thiru K. S. Kothandaramiah] [1973 மார்ச் 31

So, so many things are near-about. They are all close together and Hosur taluk is in Mysore table land. All this can be done without incurring much expenditure and also with great advantages. According to the proposals of Dr. K. L. Rao, he brings to the channel Sreesailam Project and then it comes to Chingleput district. Thereby it comes down by 2,000 feet below and again it has to be taken up to Mettur, by pumping the water. Instead of taking the canal that way, if it is brought to Kolar, Hosur and Mysore table land, the entire Dharmapuri district, Coimbatore district, and North Arcot district will be benefited. There will be no extra expenditure also. We can give water for all these districts. Chingleput and other places also can get water, also Madras.

Once our Hon. Chief Minister said that Palar was almost a desert. Now Palar gets water under this modified scheme. South Pennar, North Pennar, Hoganakkal and other places mentioned by me will get this water. That is an excellent schemes. I therefore request the Hon. Minister and the Department to investigate the whole thing. I am not suggesting this because I belong to Hosur. It is because that this is the proper method to link Ganges with Cauvery. I hope this question will be taken up.

With regard to roads, the one from Uddanapalli to Sulagiri is an important one. Many panchayats have been included in the Sulagiri Union. There is no road. There is the South Pennar river flowing there; people of that place have to go round and suffer because of lack of a road there. It was called an 'MLA road', because, it should not be like that. People of the area are simply asking me about that road, and why it is not done early. After all, it is a small road. It can be taken up and completed very quickly.

With regard to jungle streams, because it is a hilly area, it requires many causeways and bridges. The District Collector and the Highways Engineers say, 'we are not concerned with this ; we are concerned only with Highways ; for interior roads and bridges you have to apply to Government'. There are a number of jungle streams in the area and therefore small causeways have to be constructed. This can be examined and a scheme may be sanctioned for the purpose.



1973 மார்ச் 31] [Thiru K. S. Kothandaramiah]

Lastly, the following anicut schemes have been investigated:—

Madeswaram Kovaipallam,

Ganga Gowri Halla,

Muthyalamadugur ;

Sellay Haggwhalla,

Dodda Maduvenpallam,

Jala Veerabadraswamy temple anicut.

All these are in Denkanikota taluk and they have all been investigated. Proposals have been sent by the Collector. No action seems to have been taken. I request the Hon. Minister to take up these schemes and help the people of that area. Unless the irrigation facilities are improved and provided in an adequate manner, the backwardness of the area cannot be rectified and removed. The backwardness of the people cannot be expected to be improved unless these are done and they are given these facilities. Therefore, I request the Hon. Minister and the department to consider our requests favourably and at least sanction these small projects at an early date. Thank you Sir.

* திரு. மு. மாரிமுத்து: தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் கொடுத்துள்ள மானியங்களை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுப்பணித் துறை சிறு பாசன திட்டத்தின் கீழ் எனது தொகுதியில் பல நல்ல காரியங்களையெல்லாம் செய்து ஏழை விவசாயிகளுக்கு நல்லாதரவு கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக எனது தொகுதியில் மணிவிழுந்தான் கிராமத்தில் ரூ. 7 லட்சத்திலும், அம்மாம்பாளையத்தில் ரூ. 9 லட்சம் அளவிலும், நடுவலூர் ஏரிக்கு ரூ. 2 லட்சம் அளவிலும் இதுபோன்ற பல திட்டங்களையெல்லாம் நிறைவேற்றி என் பகுதி ஏழை விவசாயிகளுக்கு நல்லாதரவு கொடுத்திருக்கிறார்கள். இந்த அளவு கொடுத்த மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நீதி வழங்கிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொண்டு இன்னும் இதுபோன்று நிறைவேற்ற பல திட்டங்கள் இருப்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வலசைக்கல்பட்டி, பாதையூர், உளிபுரம், சாமக்காபாளையம், சிறுவாச்சூர், பைத்தூர், கல்பகனூர், மலையாறு, போன்ற இடங்களிலும், இன்னும் மங்களபுரம், சிலியம்பட்டி, கிரிப்பட்டி ஆகிய இடங்களிலும் இதுபோன்ற பல

திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. இந்த திட்டங்களையெல்லாம் விரைவிலே நிறைவேற்றித் தந்து, ஏழை விவசாயிகளுக்கு மேலும் ஊக்கத்தை அளிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இங்கே விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நெடுந்துறைப் பிரிவில், சுமார் 30 கிலோ மீட்டர் அளவில் சுமார் 20 கிராமத்திற்கு இப்பொழுது சாலைகள் அமைக்கின்ற வகையிலே சுமார் ரூ. 11 லட்சம் அளவிலே திட்டம் கொடுத்திருக்கிறோம். அதற்கும் தான் சம்பந்தப்பட்ட பொறியாளர்களுக்கும் அமைச்சரவர்களுக்கும் பாராட்டு தெரிவித்துக் கொண்டு இந்த வேலைகளை விரைவிலே நிறைவேற்றித் தருவதற்கு வேண்டியதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது எங்கள் பகுதியை மாண்புமிகு முதல்வர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சரவர்களும் மேலும் சம்பந்தப்பட்ட பொறியாளர்களும் விரைவிலே எங்கள் பகுதியை வந்து பார்வை இட்டு சென்னை கோவை இணைப்புச் சாலையில் செல்லுகிற தலைவாசல் பாலத்தைப் பார்வையிட்டு, அந்தப் பாலம் ஒரு மாத காலமாக பழுதுபட்டிருப்பதால் அந்த வழித் தடம் பாதிக்கப்பட்டிருப்பதால் மீண்டும் விரைவிலே அந்தப் பாலத்தைச் செப்பனிட அவர்கள் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். மேலும் அந்தப் பாலத்தை புதுப்பிக்க 20 லட்ச ரூபாய் அளவிலே நிதி கொடுத்திருக்கிறார்கள். அதை விரைவிலே கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஊராட்சி மன்றங்கள் சம்பந்தப்பட்ட, ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட சாலைகளைப் பற்றி அரசாங்கத்திற்கு நாங்கள் தகவல் கொடுத்திருக்கிறோம். அந்தச் சாலைகளை விரைவிலே செப்பனிட ஏற்பாடு செய்ய வேண்டும். கங்கவெள்ளி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பல கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அவைகளை நிறைவேற்றித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த வசிஷ்டா நதியிலும், சுவேதா நதியிலும் வெள்ளத்தின் போது 20 தினங்களுக்கு ஆற்றில் செல்கிற வெள்ளத்தால் மக்கள் ஆற்றைக் கடந்து போக முடியாமல் அவதிப்பட்டார்கள். ஆற்றுக்கு மறு கரையில் உள்ள காட்டுக்கோட்டை, பெரியேரி, கவர்பனை, லத்துவாடி ஆகிய கிராமங்களுக்குப் போவதற்கு பாலம் இல்லாமல் கஷ்டப்படுவதால் வெள்ள நிவாரண நிதியிலிருந்து பாலம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வேலையை முடித்துக் கொடுப்பதன் காரணமாக சுமார் 25 கிராம மக்கள் பயனடையக் கூடும், விவசாய மக்கள் பயனடையக் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேலும் எங்கள் பகுதியில் ஆத்தூர் அருகே கலைக் கல்லூரியை பொது நிதியிலிருந்து நாம் கட்டிக் கொண்டிருக்கிறோம். மேலும் அரசாங்கத்திற்கு எஸ்டிமேட் போன்றவைகளெல்லாம் அனுப்பப்பட்டால் தான் மேற்கொண்டு அரசாங்க நிதி கிடைக்க வாய்ப்பு ஏற்படும். இதை விரைவிலே எடுத்து செயல்படுவதற்கு அரசாங்கத்திற்கு எடுத்துக் கொடுப்பதற்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் பேளுக்குறிச்சிக்கு அருகில் தொழுநோய் பிச்சைக்காரர் இல்லம் மிக விரைவிலே கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டங்களுக்கெல்லாம் பொதுப்பணித் துறையில் பணியாற்றுகிற பணியாளர்கள் ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள். இன்னும் சில கோரிக்கைகளை அமைச்சரவர்களுக்கு எடுத்துச் சொல்ல இருக்கிறேன். அவைகளை எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நெடுஞ்சாலைப் பிரிவில் பணியாற்றுகிற மிகவும் கடை நிலையில் இருக்கிற கேங்கு கூலிகள் கடந்த பல ஆண்டு காலமாக கூறி வந்த கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. குறிப்பாக இந்த கேங்கு கூலிகளாக வேலை செய்கிறவர்கள் அத்தனை பேரிலும் சுமார் 90 சதவிகிதத்தினர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய பிரதிநிதியாக வந்திருக்கிற நான் கேட்டுக் கொள்வதெல்லாம் அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். போதிய ஊதியம் கொடுக்க வேண்டும். மின்சாரத் துறையிலே எப்படி நிரந்தரமாக்கினர்களோ அது போல இவர்களை நிரந்தரமாக்க வேண்டும். அவர்களுக்கு சுகாதார வசதிக்காக நிதியெல்லாம் கொடுத்து, ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பொதுப்பணித் துறையிலே டிப்ளமா ஹோல்டர்கள் கொடுத்த கோரிக்கைகளையெல்லாம் பரிசீலனை செய்து நல்ல ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

## (7) அறிவிப்பு

### பேரவை உறுப்பினர் திரு. எஸ். எம். துரைராஜ் கைது செய்யப் பட்டது குறித்து.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that I have received the following telegram today from the Superintendent of Police, Madurai South.

" I am to inform you that Thiru S. M. Durairaj, M.L.A. of Tamil Nadu Legislative Assembly was arrested today 21st March 1973 at 11.50 hours at Madurai for conspiracy to go in an unlawful assembly for rioting with deadly weapons to commit mischief and attempt to cut and murder one Arumugam, 26th Ward, Secretary, of DMK at Madurai stop. The occurrence is under investigation in Madurai Town Central Station Crime Number 530/73 under Sections 147, 148, 149, 307, 426, 440, 506 (2) IPC and 109 IPC read with 120-B IPC. He is sent to court for remand.

THIRU J. JAMES: All sections under IPC.

MR. DEPUTY SPEAKER: There are 500 and odd Sections under IPC.

### (5) 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, நாட்டிலே வறுமையைப் போக்குவது, பொருளாதார வளர்ச்சியை அதிகப்படுத்துவது போன்ற முக்கியமான பணிகளையெல்லாம் அடிப்படையிலே செய்து தரவேண்டிய பொதுப்பணித் துறையினருக்கு நான் எனது நன்றியை தெரிவித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

நம்முடைய எதிர்கால வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது விவசாயம். அந்த விவசாய அபிவிருத்திக்கு நீர் வசதி செய்து கொடுப்பது போக்குவரத்து வசதி செய்து கொடுப்பது பொதுப்பணித் துறை. தமிழகத்திலே நாம் மிகுந்த திறமை மிக்க என்ஜினீயர்களைப் பெற்றிருக்கிறோம். நாம் அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து செயல்படுவதற்கான நல்ல வசதிகளைச் செய்து கொடுப்போமானால் மிகக் குறுகிய காலத்திலேயே தமிழகத்திலே பெரும் வளர்ச்சியை நாம் எதிர்பார்க்க முடியும். அதிலே ஒன்றும் சந்தேகம் கிடையாது. மிக அனுபவம் வாய்ந்த என்ஜினீயர்கள் நம்மிடத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் நிதி வசதி அதிகம் கொடுத்து நம்முடைய தலையீடு அதிகமில்லாமல் எதை முந்தி எடுக்கவேண்டுமோ, எதை பிந்தி எடுக்க வேண்டுமோ அப்படியே எடுங்கள் என்று அவர்களை சுயேச்சையாக இயங்க வழி விட்டு காரியத்தை வேகமாகச் செய்யுங்கள் என்று ஒப்படைப்போமானால் நம்முடைய வளர்ச்சி, தமிழகத்தினுடைய வளர்ச்சி மிக அதிகமாக இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.





பாசன வசதியை எடுத்துக் கொள்வோமானால் பெரிய பாசன திட்டங்களெல்லாம் அநேகமாக நிறைவேறி விட்டது. நடுத்தர பாசன திட்டங்களைப் பற்றி நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அந்தப் பரிசீலனையில் 12 திட்டங்களைச் செய்து கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். இன்னும் எத்தனை திட்டங்கள் எடுக்க முடியும் என்பது ஆராய்ச்சியின் பலனாகக் கிடைக்கும். அதற்கு அடுத்தபடியாக சிறிய நீர்ப்பாசன திட்டங்களில் அதிகக் கவனத்தைச் செலுத்த வேண்டியிருக்கிறது.

நம்முடைய பொருளாதார வளர்ச்சியிலே விலைவாசி யேற்றத்திற்குக் காரணம் நாம் முடக்கிய தொகையின் பலன் சீக்கிரமாக நமக்குக் கிடைக்காதது என்பது தான் எல்லோரும் அறிந்த உண்மை. நோட்டுக்கள் அச்சடித்து அதிகமாக டெபிசிட் பினான்சிங் காரணமாக விலைவாசி ஏறிவிட்டது என்று எல்லோரும் சொல்கிறார்கள். அது ஓரளவு உண்மையும் கூட. ஆனால் வளர்ந்து வருகிற பொருளாதாரத்தில் இதைச் செய்ய வேண்டியிருக்கிறது, கைவிட முடியவில்லை. இம்மாதிரியாக டெபிசிட் பினான்சிங்கில் பெரிய திட்டங்களை நிறைவேற்றுகிற போது பல ஆண்டுகள் கால தாமதமாகிறது. இப்படி தாமதமாக பலன் கிடைக்கிற காரணத்தினால் விலைவாசி ஏறுகிறது. ஆனால் இந்தச் சிறிய நீர்ப் பாசனங்களைப் பொறுத்த வரையிலும் இது உடனடியாகப் பலன் கிடைக்கக் கூடிய திட்டம். ஆகையினாலே இதிலே மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் பல அனுமதிக்கப்படாமல் இருப்பதாக நான் அறிகிறேன்.

சென்ற ஆண்டு அதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் பாக்கி ஆறு ஏழு கோடி ரூபாய்க்கு அரசினர் கைக்கு வந்த திட்டங்களும் பாக்கி இருப்பதாக அறிகிறேன். இந்த ஆண்டும் அதற்காக நான்கு கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உடனடியாகப் பயன் தரக்கூடிய திட்டங்களுக்குக் கால தாமதம் செய்யாமல் அதிகப்படியான தொகையை ஒதுக்கியிருக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் சிறு பாசனத் திட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன. நமக்குத் தெரியாமலே, கேட்பாரற்று, சொல்வாரற்று இருக்கின்றன. 20,000, 30,000, 40,000 லட்சம் செலவில் செய்யக் கூடிய திட்டங்கள் கிராமங்கள் தோறும் இரண்டு திட்டங்கள், நான்கு திட்டங்கள் இருக்கின்றன.

எஸ்.எம்.ஐ.பி. ஆய்வுப் பிரிவு இருக்கிறது. தனிப் பிரிவு போட்டுச் செய்கிறார்கள். அது போதாது. இன்னும் அதிகப்படியான பிரிவுகளை ஏற்படுத்தி மைனர் இர்ரிகேஷன் திட்டங்களை எவ்வளவை நிறைவேற்ற முடியுமோ அவற்றை உடனடியாக எடுத்தாக வேண்டும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் அடுத்த ஆண்டு ஆரம்பமாகிறது. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிகப்படியான

தொகை பாசனத்துக்கு ஒதுக்க வேண்டும். அந்தத் தொகையைச் செலவழிக்க சிறிய பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செலவழிப்பதற்கான சந்தர்ப்பத்தை இழந்து விடாமல் அதிகப்படியான திட்டங்களைக் கையில் தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

நம்முடைய நாட்டில் எஞ்சினியர்கள் நிறைய இருக்கிறார்கள். படித்து விட்டு வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். இதன் மூலம் அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பும் கொடுக்க முடியும். அவர்களை வைத்துக் கொண்டு இந்த இன்வெஸ்டிகேஷன் ஸ்கீமை விரைவுபடுத்த அரசு முயற்சிக்க வேண்டும். இது ரொம்ப முக்கியமானது என்று கூறிக் கொள்கிறேன்.

நமக்கு இருக்கக்கூடிய பெரிய பாசனத் திட்டங்களுடைய பலனை எந்த அளவுக்குப் பெற்றிருக்கிறோம் என்று ஆராய்ச்சி செய்ய வேண்டும். 1935-ம் ஆண்டில் காவிரி-மேட்டூர் பிராஜக்ட் முடிந்து தண்ணீர் விடப்பட்டது. ஆனால் அதனுடைய ஆயக்கட்டு பூராவும் டெவலப் ஆகி எல்லா நிலங்களும் சாகுபடியாக 30 ஆண்டுகள் பிடித்தன. இன்னும்கூட சில இடங்கள் டெவலப் ஆகாமல் தரிசாகக் கிடக்கின்றன. அவை ரொம்பக்குறைவு. அதற்குப் பிறகு கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேல் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிகிற வரை முதலீடு செய்திருக்கிறோம்.

பெரிய திட்டங்களாகவும், நடுத்தரத் திட்டங்களாகவும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதனால் லட்சிய அளவை எந்த அளவுக்கு எட்டிப் பிடித்தோம், நிலங்கள் எல்லாம் பாசன வசதி பெற்றுவிட்டதா என்பதை எல்லாம் பரிசீலிக்க வேண்டும். முதலீடு செய்த தொகையின் பயனை நாட்டு மக்கள் பெற்றிருக்கிறார்களா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அப்படிப் பரிசீலனை செய்வோமானால் பின்னால் எடுத்துக் கொள்ளக் கூடிய திட்டங்களுக்கு அது ஒரு படிப்பினையாக இருக்கும் என்ற காரணத்தால் அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழைய வாய்க்கால்களை நவீனப்படுத்த வேண்டுமென்ற திட்டம் விரிவாகச் செயல்படுத்தப்படுகிறது. பாராட்டுகிறேன். கூடுமான வரை தண்ணீர் விரயமாகாமல் தடுக்க வாய்க்கால்களை நவீனப்படுத்துவது மிக அவசியம். காவிரித் திட்டத்தில் நல்ல முறையில் வேகமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலே சிமெண்ட் கட்டை போட்டு தண்ணீர் சேதப்படாமல் செய்து கொடுக்கிறார்கள். இதை எல்லாம் காண்டிராக்டிலே இப்போது செய்கிறார்கள். டிப்பார்ட்மெண்டிலேயே செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். ஆற்று மணலிலே சிமெண்டை வைத்து அங்கேயே கலந்து போடுகிறார்கள். எவ்வளவு சிமெண்ட், எவ்வளவு மணல், எப்படிக் கலந்து போடுகிறார்கள் என்பதைக் கண்காணிப்பது சிரமம். அப்படி இப்படிப் பார்க்கும்போது கொஞ்சம் மணலை எடுத்துப் போட்டுக் கொள்ளலாம். பலகீனமாகப் போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் டிப்பார்ட்மெண்ட் ஒர்க்காக எடுத்துச் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும்.



அடுத்து பெரிய திட்டங்கள். காண்டிராக்டுக்கு விடாமல் அரசாங்கமே பல திட்டங்களை நிறைவேற்ற முடியுமா என்று பார்க்க வேண்டும். நிறைய எஞ்சினியர்கள் இருக்கிறார்கள். காண்டிராக்டர்கள் லாப நோக்கோடுதான் செய்வார்கள். அரசாங்கமே அதற்காக தனி டிவிஷன் போட்டு நிர்வாகம் ஒரு பக்கம் இருந்தாலும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவை கட்டடங்களாக இருந்தாலும், பாலங்களாக இருந்தாலும் நேரடியாகச் செய்தால் நலமாக பலன் இருக்குமா என்பதைப் பற்றி நடைமுறையில் செய்து பார்த்து பிறகு அதை விரிவுபடுத்த முடியுமா என்று பார்க்கவேண்டும்.

சிறிய பாசனத் திட்டங்களைப் பற்றி முதலிலேயே குறிப்பிட்டேன். தஞ்சை மாவட்டத்தில் பல திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதிக்கப்படுகின்ற நிலையில் இருக்கின்றன. அவை எல்லாம் உடனடியாகப் பலன் தரத்தக்க திட்டங்கள். ஒரு பக்கத்தில் தண்ணீர் வீணாக சமுத்திரத்தில் போய் விழுந்து கொண்டிருக்கிறது, இன்னொரு பக்கத்தில் தண்ணீர் இல்லையென்று சாகுபடி செய்ய முடியாத நிலை. இந்தத் திட்டங்களுக்கெல்லாம் உடனடியாக அனுமதி கொடுத்தால் விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயரும், உற்பத்தி பெருகும்.

மகாராஜசமுத்திரம் என்ற ஆறு ஓடுகிறது. அதன் தண்ணீரை இதுவரை பயன் படுத்தியதே கிடையாது. அதற்கு வெட்டிக்காடு என்ற இடத்தில் அணை கட்டினால் அந்தத் தண்ணீரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அக்கினியாற்றில் அணை கட்ட வேண்டுமென்பது நீண்ட நாள் திட்டம் மதிப்பிற்குரிய ராமையா அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்ட திட்டம். இன்னும் இன்வெஸ்டிகேஷனிலேயே இருக்கிறது. திருமணச்சேரியில் அக்கினியாற்றின் குறுக்கே அணை கட்ட வேண்டும். அந்தப் பகுதி ரொம்ப வறட்சியான பகுதி. பொதுமக்களுக்குப் பயன்தரத்தக்கதாக இருக்கும் என்ற காரணத்தால் அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளத் தடுப்புக்காக மிகுந்த அக்கறை காட்டியிருக்கிறோம். வெள்ளத் தடுப்புக்காக ஆங்காங்கு செய்கின்ற வேலைகள் மறு வெள்ளம் வருகிறபோது

அடித்துக் கொண்டு போகிற நிலை இல்லாமல் ஒரு பகுதியில் கரையைப் பலப்படுத்தும்போது பூராவும் நல்ல முறையில் செய்தால் பணம் விரயமாகாமல் தடுக்க ஏதுவாக இருக்கும்.

காவிரித் திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் வெள்ளத் தடுப்புக்காக ஒதுக்கப்படுகின்ற பணத்தைச் செலவு செய்வது பற்றி ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் ரோடு வசதி குறைவு. போக்குவரத்து வசதி பல கிராமங்களுக்குச் சரியாக இல்லை. அதற்குப் பல காரணங்கள். நிறைய வாய்க்கால்கள் குறுக்கே போகின்றன. நஞ்சை நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, வெள்ளத் தடுப்புக்காகக் கரைகளைப் பலப்படுத்தும் போது ரோடு வசதிகளையும் ஏற்படுத்தினால் கரை பலமாக இருக்கும். லாரிகள் போய், பஸ்கள் போய் கெட்டியாகிவிடும். மக்கள் நடமாட்டமும் இருக்கும், அதனால் வெள்ள காலத்தில் உடைப்பு ஏற்பட்டால் உடனடியாகக் கண்டு பிடித்து தடுக்க முடியும்.

முன்பு பூதலூர் அருகே எப்படி உடைப்பு ஏற்பட்டது? ஒரு சிறு வளை இருந்தது. அதிலே தண்ணீர் போயிற்று. அதைப் பார்த்து அடைக்க வழி இல்லை. உடைத்துக் கொண்டு விட்டது. ஆகவே, வெள்ளத் தடுப்புக்காகக் கரைகளைப் பலப்படுத்தும்போது ரோடுகளையும் சேர்த்துப் போட்டு விட்டால் மக்கள் போக்குவரத்து அதிகமாகும். வெள்ள காலத்தில் உடைப்பு ஏற்படாமல் கண்காணிப்பதையும் பொதுமக்களே கவனித்துக் கொள்ள முடியும். அதற்காகத் தனி ஆள் போடக் கூட வேண்டியதில்லை. (மணி அடிக்கப்பட்டது).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இன்னும் அரைமணி வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** ஏற்கனவே 20 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். இன்னும் பத்து நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** ஆகவே இந்தக் கரைகளை எல்லாம் பலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி கரைகளைப் பலப்படுத்தும்போது பயன் தரும் மரங்களை வைக்கும் பழக்கத்தைக் கைக்கொள்வதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். ரோடுகளாக இருந்தாலும் சரி அல்லது ஆற்றின் கரைகளாக இருந்தாலும் சரி, ஒரு மைல் நீளத்திற்கு வருவாய் தரும் மரங்களான தென்னை, புளிய மரங்கள் இவைகளை நட்டால் ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆண்டுக்கான வருவாய்



அதிலிருந்து கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கும். அரசாங்கம் ஆள்களைப் போட்டு பாதுகாப்பு செய்ய இயலவில்லை என்றால் யார் விரும்புகிறார்களோ அவர்கள் மரங்களை அப்படி நட்டுக்கொள்ளலாம் என்ற அளவிற்கு உரிமை வழங்கினால் அதனால் பல குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும். அதோடு அரசுக்கு ஏதோ மர வரி என்று அம்மாதிரி ஏதாவது கொடுக்க ஏற்பாடு செய்தால் இன்று அரைப் பட்டினியாக இருக்கக்கூடிய குடும்பங்கள் தங்கள் வருவாயை அதிகரித்துக் கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும். ஆகவே அதில் கவனம் செலுத்தி தனியார்களுக்கு அப்படிப்பட்ட உரிமையை வழங்கலாம் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தில் வடிகால் திட்டங்கள் அதிகமாக நிறைவேற்றப்பட வேண்டும். வெள்ளம் வரும்போது சரியான வடிகால் வசதி இல்லாததன் காரணமாக பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. இன்வெஸ்டிகேஷன் எல்லாம் போட்டு என்ஜினியர்கள் வேலை செய்து கொண்டிருந்தாலும் வடிகால் வசதிகள் செய்வதற்கான வேலைகள், வேகமாக நடத்தப்பட வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வடிகால் பிரச்னை கிராமந்தோறும் இருக்கிறது. காவேரி பிராஜக்டில் இருக்கிறது. ஸி. எம். பி. ஏரியாக்களில் இருக்கிறது. எவ்வளவோ ஏக்கர்களுக்கு வடிகால் வசதி இல்லாமலிருக்கிறது. சிறு சிறு திட்டங்களாக இருந்தாலும் 40,000 ரூபாய் செலவில் இருந்தாலும் வடிகால் வசதி செய்து கொடுக்கும் காரியங்களைச் செய்ய வேண்டும்.

வெள்ளக் காலத்தில் எங்கள் மாவட்டத்தில் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த பெரிய ஏரிகளை அமைத்துக் கொடுக்கவேண்டும். கோவை மாவட்டத்தில் சிறு சிறு குட்டைகளைக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்வதால் கிணறுகளில் தண்ணீர் கிடைக்கும். என் அபிப்பிராயம் என்னவெனில் சிறுசிறு குட்டைகளை விட பெரிய பெரிய ஏரிகளை அமைத்தால் மழைக் காலத்தில் தண்ணீரை நிரப்பி வைக்க முடியும். அதை வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்ய முடியுமா என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். சமுத்திரத்தில் சென்று மழை நீர் வீணாகப் போவதை விட இப்படி ஏரிகள் அமைத்தால் அவற்றில் தேக்கி வைத்து விவசாயத்திற்கு பயன்படுத்திக் கொள்ள உதவியாக இருக்கும்.

பாதகம் இல்லாத முறையில் அதைச் செய்து முடிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதைத் துரிதமாகச் செய்து முடிக்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

வெளியில் உள்ள நீரைப் பயன்படுத்திய பிறகு நிலத்திற்கு அடியில் உள்ள நீரை கண்டுபிடித்து பயன்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். 11½ கோடி ரூபாய்க்குரிய ஒரு திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். முதலில் ஒரு ஆய்வு செய்யப்பட்டது காவிரி பிரதேசங்களில். அது மேலெழுந்தவாரியான ஆய்வு. அப்படி ஆய்வு செய்வதில்—ஒரு பகுதியில் நீர் இருக்கிறது. ஆனால் ஐம்பது அடி வித்தியாசத்தில் உள்ள இன்னொரு பகுதியில் தண்ணீர் இல்லை என்ற நிலையும் இருக்கிறது. ஐம்பது அடி வித்தியாசத்தில் கூட நீரோட்டத்தில் வித்தியாசம் தெரிகிறது. அங்கு நீர் இருக்கிறது, இங்கு நீர் இல்லை என்ற நிலையும் இருக்கிறது. ஆகவே இன்டென்ஸிவாக வில்லேஜ் பை வில்லேஜ் ஆராய்ச்சி, பரிசீலனை செய்ய வேண்டும். அப்படி ஆராய்ச்சி செய்வதன் மூலம் எங்கெங்கு தண்ணீர் கிடைக்கிறது என்பதை விவசாயிகள் உணர்ந்து கிணறுகள் வெட்ட அல்லது போர் வெல்ஸ் போட வசதியாக இருக்கும், வாய்ப்பாக இருக்கும். ஏனெனில் தண்ணீர் கிடைக்கும் என்று கிணறுகள் தோண்டி நட்டப்பட்ட விவசாயிகள் பலர் இருக்கிறார்கள். எனவே அப்படி கிராம வாரியாக ஆய்வு செய்தால் கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். விவசாயிகள் நஷ்டப்படாத வகையில் அவர்கள் பயன்பெற வாய்ப்பாக இருக்கும். எனவே அதையும் பரிசீலனை செய்ய வேண்டும் வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

அடுத்து, சாலை வளர்ச்சித் திட்டம். சட்டசபையில் அதைப் பற்றிப் பேசாத நாளே கிடையாது. இணைப்பு ரோடுகளை வேகமாக செயல்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 19 கோடி ரூபாய் திட்டத்தில் இந்த ஆண்டு ஆறு கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாராட்டுகிறேன். 19 கோடி ரூபாய் மூன்று ஆண்டுகளுக்குள் முடிந்துவிடும். எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் போட வேண்டும் என்று திட்டமிட்டு அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைவதற்குள் இணைப்பு சாலைகள், லிங்க் ரோட்ஸ், இல்லாத கிராமங்களே கிடையாது என்ற முறையில் எந்தக் கிராமத்திலிருந்தும் எந்தக் கிராமத்திற்கு போக முடியும் என்ற முறையில் எல்லா டயரக்ஷன்ஸிலும் இணைப்பு ரோடுகளை அமைத்துக் கொடுக்கும் நிலையை ஏற்படுத்தினால் தவிர விவசாய அபிவிருத்தியை நாம் பெறமுடியாது. ஒரு போகத்திலிருந்து இரண்டு போகம் விளைவிக்கவும், இரண்டு போகத்தில் இருந்து மூன்று போகம் விளைவிப்பதற்கும், உரங்களைக் கொண்டுவரவும்,





விளைபொருள்களை எடுத்துச் சென்று சந்தைகளில் விற்கவும் ரோடு வசதி மிகமிக அவசியம். தஞ்சை மாவட்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

பெரிய திட்டங்களை நிறைவேற்றும்போது தவறுகள் பல ஏற்படும் வாய்ப்புகள் இருக்கின்றன. நமது சமூக அமைப்பில் தவறுகள் ஏற்படத்தான் செய்யும், இருக்கத்தான் செய்யும். அதை நூற்றுக்கு நூறு போக்கிவிட முடியாது. ஆனால் அதை முடிந்த வரையில் குறைப்பதற்கு தக்க கண்காணிப்பு அவசியம். கோடிக்கணக்கில் நாம் செலவு செய்யும்போது சரியான கண்காணிப்பு வேண்டும்.

அறந்தாங்கிப் பகுதியில் ஈஸ்ட்கோஸ்ட் ரோடில் அரசநகரி என்ற இடத்தில் ஒரு பாலம் கட்டப்படுகிறது. தவறு என்று கூறவில்லை. தெரியாத காரணத்தினால் சொல்கிறேன். அது பரிசீலனை செய்யப்பட வேண்டும். அங்கு வடிகால் இல்லை, குளங்கள் இல்லை, ஆறு இல்லை. இரண்டு பக்கத்திலும் நிலம்தான் இருக்கிறது. முதலில் நான் கவனிக்கவில்லை. ஒருவர் என்னைப் பார்த்து கேட்டார், இதை ஏன் கட்டுகிறார்கள் என்று. 'வடிகால் இல்லை, ஆறு இல்லை, பின் ஏன் இந்தப் பாலத்தை கட்டுகிறார்கள் என்று கேட்டார். ஊருக்குள் நுழைந்தபோது தெரியவந்தது மக்களுக்கு ஒரு தவறான உணர்வு இருப்பதாக. காரணம் இல்லாமல் அங்கு பாலம் கட்ட மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இருந்தாலும் அந்தப் பகுதி மக்களுக்கு, தவறாக வேண்டுமென்றே அந்தப் பாலத்தைக் கட்டுகிறார்கள் என்ற உணர்வு இருப்பதால் கட்டப்படுவதற்கான காரணத்தை போர்டு எழுதிப் போட வேண்டும். அதில் தவறு இருக்கிறதா என்பதைப்பற்றி விசாரிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இவ்வளவு பெரிய திட்டங்களை நிறைவேற்றுகிற பொதுப் பணித் துறையில் உள்ள பணியாளர்களுக்கு உற்சாகம் தரத்தக்க வகையில் அவர்கள் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது என் பணிவான வேண்டுகோள். அதில் நூற்றுக்கணக்கான பணியாளர்கள் ப்ரமோஷன் போக்குவரத்திலெல்லாம் ஏதோ சங்கடங்கள் இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். பொதுப்பணித் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கும், ஹௌஸிங் போர்டில் பணியாற்றுகிறவர்களுக்கும் இடையில் ஹௌஸிங் போர்டில் பணியாற்றுகிறவர்களுக்கு சீக்கிரமாக ப்ரமோஷன்ஸ் கிடைக்கிறது என்றும் இங்கு 10, 12 ஆண்டுகள் பணியாற்றியும் கூட ப்ரமோஷன்ஸ் கிடைப்பதில்லை, இவற்றையெல்லாம் ஒன்றுபடுத்த வேண்டும் என்றெல்லாம் கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள்.

டிராப்ட்ஸ்மேன் வேலை பார்க்கிற டிப்ளமோ ஹோல்டர்ஸ் அவர்களுக்கு ப்ரமோஷன் வேண்டுமென்று கோருகிற போது, அவர்களுக்கு இருக்கும் கோரிக்கைகளை அவர்களோடு கலந்து பேசி, அவர்களுக்கு மனச்சங்கடம் இல்லாமல் நிவர்த்தி செய்தால், நம்முடைய திட்டங்கள் நல்ல வகையில் நிறைவேற்றுவதற்கு அவர்கள் பேருதவியாக இருப்பார்கள் என்ற காரணத்தால், அவ்வப்போது அவர்களுடைய கோரிக்கைகளை பரிசீலனை செய்து, எந்தெந்த கோரிக்கைகளை உடனடியாக ஏற்றுக் கொள்ள முடியுமோ அவற்றை ஏற்றுக்கொண்டு, மற்றவற்றைப் பரிசீலிக்கிறோம் என்று எடுத்துச் சொல்லி, அவர்களை உற்சாகப்படுத்துகிற முறையில் அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, பாசன பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகளின் கீழ் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் சில வார்த்தைகளைச் சொல்வதற்கு உங்களின் அனுமதியைக் கோரி உங்கள் முன்னாலே நிற்கிறேன்.

இன்று காலை முதல் நடைபெற்ற இந்த விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், பல கட்சியைச்சார்ந்த தலைவர்களும் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் பொதுப்பணித் துறையில், இந்தப் பாசனத் துறையில் நம்முடைய மாநிலத்தின் முன்னேற்றத்திற்கான பல நல்ல கருத்துக்களை எடுத்துரைத்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் நான் திருப்பிச் சொல்லாமல் சுருக்கமாக இந்தத் துறை இந்த மாநிலத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளை அது ஆற்றத் தவறி இருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுவதன் மூலம் என்னுடைய உரையை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கும் அரசுக்கும் நான் உணர்த்த வேண்டியது என்னுடைய தலையாய கடமை என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக நீர்ப்பாசன வசதிகளைப்பொறுத்தவரையில், ஆற்று நீருக்கான எல்லா விதமான திட்டங்களும் முடிந்து விட்டன. இனிமேல் ஊற்று நீரை தேடவேண்டும், கிணறு வெட்ட வேண்டும், ஆழ்கிணறு தோண்ட வேண்டும், அதற்காக இந்தத் துறை மிகவும் கவனம் செலுத்தி வருகிறது, ஏறக்குறைய அதுவும் முடிந்து விட்டது என்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் சொல்கிற அதே நேரத்தில், ஆற்று நீர்ப்பாசன துறைகளுக்கான 'சர்பேஸ் வாட்டர்' முறைகளில், நம்முடைய அண்டை





அந்தத் தண்ணீரை எல்லாம், அரபிக்கடலில் வீணாகச்சென்று கலக்கும் தண்ணீரையெல்லாம் இங்கே பெறுவதற்கான முயற்சிகள் இருக்கின்றன. அதற்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்து இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்கிற நேரத்தில் அதற்கான சர்வே, அதற்கான திட்டம், அதற்காக ஆற்றவேண்டிய கடமைகளை இந்த அரசு சரியாக ஆற்றவில்லை என்று நான் ரொம்பவும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லவிரும்புகிறேன். அதற்குக் காரணம், இந்த நீர்ப்பாசனத்துறையிலே முதல் திட்டத்திலே 1½ லட்சம் ஏக்கர், 2-வது திட்டத்தில் 1½ லட்சம் ஏக்கர் புதிதாக நீர்பாசனத்தில் கொண்டு வந்தாலும், மிகப்பெரிய திட்டமான அந்தத் திட்டம், நீர்ப்பாசனத் திட்டங்களிலேயே மிகப்பெரிய திட்டம், ஏறக்குறைய 60-70 கோடி ரூபாய் மூலதனம் செய்யும் திட்டம், இன்றையதினம் மத்திய அமைச்சராக உள்ளவரும், இந்த மாநிலத்தின் முன்னாள் நிதியமைச்சருமாக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் கேரளா மாநிலத்தோடு கலந்து பேசி, கடலில் கலக்கும் நீரை விஞ்ஞான ரீதியான டன்னல்ஸ் மூலமாக தென் கிழக்குப் பகுதிக்குக் கொண்டு வந்து, கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, தாராபுரம், பல்லடம் ஆகிய இடங்களுக்கு நீர்ப்பாசனம் செய்து கொடுக்கும் பெரிய திட்டம், அது மட்டுமல்லாமல் ஒரு 2 லட்சம் கிலோ வாட் மின்சார உற்பத்தி செய்யும் திட்டம், ரூ. 60-70 கோடி செலவிலே அமைக்கப்பட்ட திட்டம், அன்றையதினம் துவக்கப்பட்டது. அது தான் நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் பெரிய நீர்ப்பாசன திட்டம்.

இந்த நீர்ப்பாசனத் திட்டம் தான் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம். இது பல கட்டங்களில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தாலும் நான் ரொம்பத் தெளிவாகச் சொல்கிறேன், இந்த மாநில அரசின், கேரள மாநில அரசின் நட்புறவின் சின்னமாக இருக்கும் ஆழியாறுதிட்டம் முழு வடிவம் பெறாதது இந்த அரசாங்கத்தின் அசிரத்தையானப் போக்கினாலும், ஊசலாட்டமான தன்மையினாலும் தான் என்பதை ரொம்பத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். 2½ லட்சம் ஏக்கர் பாசனம் பெறும் பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. வாய்க்கால்கள் கட்டி முடித்தாகி விட்டது. அமைச்சர் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். எல்லாவிதமான நடவடிக்கைகளும் முழுமையாகச் செய்தாகி விட்டது.

Works completed-All the following works have been completed :

Dams : Sholayar Dam, Parambikulam Dam, Tunacadavu Dam, Peruvaripallam dam, Sholayar Power Tunnel, Sarkarpathy

Canal : Aliyar feeder canal, Sethumatai canal, Vettaikaranpudur canal; Pollachi canal, Parambikulam Main Canal and Udumalpet Canal.

Small Reservoirs-Uppar dam and right and left flank canals.

இவைகளெல்லாம் செய்து இருக்கிறார்கள். இதற்கு 67 கோடி ரூபாய் மதிப்பீடு இன்று செலவாகியிருப்பது ரூ. 50 கோடிக்குமேல் ஆகியிருக்கிறது. இன்னும் மின்சார திட்டத்திற்கு ஒரு ரூ. 15 கோடி என்று கணக்கு வைத்தால் மொத்தம் 80 கோடி ரூபாய் செலவாகிறது. அப்படியிருந்தும் இன்னும் 1 லட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் வசதி பெற முடியவில்லை. இந்தப் பரம்பிக்குளம்-ஆழியாறு பெற வேண்டிய தண்ணீரின் அளவு நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 28 டி. எம். சி. பெற வேண்டியது, அந்த உடன்பாட்டின் படி. நீரார் நதியைச் சுற்றியுள்ள நதித் திட்டங்கள் முடிவுறாக் காரணத்தால் இன்றைக்கு 16 டி.எம்.சி. பெற்று வருகிறார்கள். 28 டி.எம்.சி. பெறுவதற்குப் பதிலாக இன்றைக்கு 16 டி.எம்.சி. தான் பெற்று வருகிறோம். இதன் விளைவாக 1,40,000 ஏக்கர் தான் பயன்பெறுகிறது. இன்னும் 1 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறாமல் இருக்கிறது. அணைக்கட்டு, வாய்க்கால்கள், மதகுகள் எல்லாம் கட்டி 10-15 ஆண்டுகாலமாக இருந்து வருகிறது. இது மட்டுமல்ல.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

இதன் மூலமாக சோலையாறு பிராஜக்ட் ஒன்று, இரண்டு என்று பேஸ் வைத்து செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். என்னுடைய பெரும் கவலையெல்லாம் கேரளா மாநிலத்தில் உள்ள அரசோடு பேசி, இவ்வளவு பெரிய 70 கோடி ரூபாய் மூலதனமுள்ள அணைக்கட்டிற்கு, அவர்களிடத்திலிருந்து தண்ணீர் பெறுவதை முடிவு செய்யாமல், இவ்வளவு பெரிய தொகை செலவு செய்ததன் பலனாக, அதை நிறைவேற்ற முடியாத காரணத்தால் இன்று அது விரயமாகக்கிடக்கிறது என்பதையும், அதிலே இந்த அரசாங்கம் தவறியிருக்கிறது என்பதையும் நான் பலமாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அவர்கள் எழுதியிருக்கிறார்கள். நீரார் நதித்திட்டம் சம்பந்தமாக ஒரு சிறு விவகாரத்தின் காரணமாக மட்டும் இது நிற்கிறது என்று சொன்னால், இதற்கு மிகப் பெரிய பொறுப்பை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

இது மட்டுமல்ல. இதற்கு என்ன காரணம் என்பதையும், இதன் விவகாரங்களை இந்த அமைச்சரவையில் இருந்தவன் என்ற முறையில் நன்றாக அறிவேன். திருவாளர் இ. எம். எஸ். நம்பூத்திரிபாத் அவர்கள் கேரளாவில் முதலமைச்ச



ாக இருந்த நேரத்தில் இவைகளெல்லாம் முடிவு செய்யப்பட்டு, இந்தத்திட்டத்தின் மூலம் மேலும் கோயம்புத்தூர் நகரத்திற்கு ஏறக்குறைய 10 லட்சம் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் சிறுவாணி திட்டமும் உடன்பாடு செய்யப்பட்டு, அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நம்முடைய மாஜி பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த நம்முடைய முதலமைச்சர் முன்னிலையில் சிறுவாணியின் அந்த டாம் சைட்டில் கால்கோள் விழா நடைபெறுகிற அளவுக்கு உடன்பாடு செய்யப்பட்டது. அங்கே இருக்கும் இடதுசாரி கம்யூனிஸ்ட் மந்திரிசபை விலக வேண்டிய நிலைமையேற்பட்டதற்குப் பிறகு வந்த மந்திரிசபையோடும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நல்ல உடன்பாடுகள் வருகின்ற கட்டங்கள் எல்லாம் வந்தன.

அதற்குக் காரணங்கள் சொல்லிப் பிரயோசனமில்லை. குற்றம் சாட்டிப் பிரயோசனமில்லை. உங்களுடைய அனுமதியோடு இந்த தஸ்தாவேசுகளை உங்களிடத்தில் உதாரணமாகக் காட்டுகிறேன். என்னுடைய கரத்தில் இருப்பது 1969-ம் ஆண்டு மே மாதம் 10-ம் நாள் நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், நிதியமைச்சராக இருந்த நான், இவர்களுடைய முன்னிலையில் தமிழ்நாடு முதலமைச்சரும், கேரள முதலமைச்சரும் செய்து கொண்ட அக்கிரிமெண்ட். ஏதோ வெறும் தஸ்தாவேஜுகள் அல்ல.

Agreement of Chief Minister of Kerala and Tamil Nadu, dated 10th May 1969,

என்று இந்த அளவுக்கு டிராப்டு வந்த பிறகு, இரண்டு மாநில முதலமைச்சர்கள் செய்கின்ற காரியங்கள் எப்படி திருப்பித் திருப்பி சருக்கி விழுந்துகொண்டே போகின்றன; அப்படிப் போவதற்குக் காரணம் என்ன என்பதை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆண்டுகள் இரண்டு, மூன்று உருண்டோடி இருக்கின்றன. 10 லட்ச மக்களுக்கான குடிநீர் பெற சிறுவாணித் திட்டத்தை செய்கிறோம் என்றார்கள். சென்னைக்கு அடுத்த பெரிய தொழில் நகரமாகிய கோவையில் இன்னும் ஒரு மாதம் கழித்துப் போனால் பானை ஊர்வலம் நடந்து கொண்டேயிருக்கும். என்றைக்கோ திரு. ரத்தினசாமி முதலியார் காலத்தில் போடப்பட்ட குடிநீர் திட்டத்தை வைத்துக்கொண்டு வளர்கின்ற கோவை நகர புறநகரப் பகுதிகளுக்கு கேரளத்திலிருந்து சிறுவாணி திட்டத்தின் மூலம் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் நின்று கொண்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் யார்? 4 ஆண்டுகளாக செய்யமுடியாத நிலைமை என்றால், அதற்கு யார் காரணம்? இரண்டு மாநிலத்தினுடைய முதல்வர்கள் முடிவுக்கு வந்த பிறகு, ஒரு நட்புறவின் சின்னமாக கேரளப்பகுதியில் இணைந்து 1 லட்சம் ஏக்கரா பாசனம் செய்யத் தவறியதற்கு என்ன காரணம்? நான் தவறிவிட்டார்கள் என்று குற்றம் சாட்டுகிறேன். இன்றைக்கு இருக்கின்ற கேரள

முதலமைச்சர் திரு. அச்சுத மேனன் அவர்கள் மிகப் பெரிய நல்ல மனிதர். அண்டை மாநிலங்களில், தங்களுடைய மாநிலத்தைப் போன்று அக்கறை காட்டுகின்ற அவர்களைக் கலந்து சிறுவாணி திட்டத்தை நிறைவேற்றத் தவறிய காரணம் என்ன? கோவை மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்கள் அமைச்சரவையில் இருக்கின்றார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய உடுமலைப் பேட்டை தாலுக்காவில் 80,000 ஏக்கரும், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்களுடைய பொள்ளாச்சித் தாலூக்காவில் 20½ லட்சம் ஏக்கர்; ஆக 1 லட்சம் ஏக்கருக்கு பயன் படும் திட்டம். அப்போதுகூட சொன்னார்கள். மதியழகன் கோவைக்காரர். அதனால் கோபிச்செட்டிப்பாளையத்திற்கு தண்ணீர் விடாமல், பவானி ஆற்றைக் கொண்டுபோய் அடமானம் வைத்துவிட்டு, இந்தத் தண்ணீரை ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். திரு. கருத்திருமன் இங்கேயேகூட சொன்னார்கள். அந்த அளவுக்கு முடிந்த திட்டம், இன்றைய தினத்தில் ஏன் இப்படி இருக்கிறது என்றால், இதை ஒரு ராஜதந்திரத்துடன், நல்ல அணுகுகின்ற முறையில் அண்டை மாநிலத்துடன் அணுகி நன்மைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளை நமது மாண்புமிரு முதலமைச்சர் அவர்கள் தவறியிருக்கிறார் என்றுதான் இதற்குப் பொருள் என்று மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவது, நம்முடைய நண்பர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மாரிமுத்து அவர்களும், திரு. ஹாண்டே அவர்களும் மைசூர் மாநிலத்துடன் காவிரி நீர் பங்கீடு தகராறு பற்றிச் சொன்னார்கள். இதில் நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இந்தப் பேச்சு வார்த்தைகளில், டில்லி மாநகரத்தில் நீர்பாசன அமைச்சர் திரு. கே. எல். ராவ் கூட்டிய மாநாடுகளில் திரு வீரேந்திர பட்டீலுடன் பேசியவன் என்ற முறையில் சொல்லிக்கொள்ளுகிறேன். இந்தக் காரியங்களில் கூட நம்முடைய approah negative approach- இருக்கிறது என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். தஞ்சை மாவட்ட உறுப்பினர்களும், மாண்புமிகு மன்னார்குடி அமைச்சர் அவர்களும் நன்றாக தெரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

காவிரிநீர் பங்கீட்டு ஒப்பந்தம் 1974-ம் ஆண்டுடன் முடிந்துவிடுகிறது அதை எப்படி நாம் காப்பாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்; எப்படி நலன்கள் அதில் தொக்கியிருக்கிறது என்பதைத் தெரிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். 1924-ம் வருட ஒப்பந்தம் 1974-ம் ஆண்டுடன் முடிந்து விடுகிறது. நாம் மாநில சுயாட்சி உரிமை என்று பேசிக் கொண்டிருக்கிறோம். வாயைத் திறக்காமல் மைசூர் மாநில மக்கள் காவிரி ஆற்றின் குறுக்கே ஹேமாவதி அணைக்கட்டு கட்டி, மத்திய அரசின் பணமா, வேண்டியதில்லை; திட்ட



கமிஷனா, கவலையில்லை; இந்திரா காந்தி அம்மையாரா, உள்ளே வாதீர்கள் என்று ரொம்ப தைரியமாக தங்களுடைய சொந்த கஜானாவைத் திறந்து, இன்றைக்கு நம்முடைய உரிமைகளைக் கூட பாதிக்கின்ற அளவுக்கு காரியங்களைச் செய்துவிட்டிருக்கிறார்கள். நாம் உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கை கொடுப்போம் என்றெல்லாம் சொல்லுகிறோமே தவிர . . . (மாண்புமிகு முதலமைச்சர் அவையில் நுழைகிறார்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வந்துவிட்டார்கள், அவர்கள் அவையில் இல்லையே என்று வருத்தப் பட்டுக் கொண்டிருந்தேன்.

திரு. நா. வீராசாமி: நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம். அது அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

திரு. கே. ஏ. மதியழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் நான் உட்காரலாம். இப்படி உறுப்பினர்கள் பேச்சுக்கிடையே குறுக்கிடுவது முறையானதல்ல. நான் பேசவேண்டாம் என்றால் உட்கார்ந்து விடுகிறேன். எல்லாவற்றிலும் நண்பர் இந்தமாதிரி குறுக்கிடக்கூடாது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு டாக்குமெண்டை வைத்திருக்கிறார்கள். அதைப் பற்றி ஒரு சந்தேகம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். "நான் அமைச்சராக இருந்தபோது முதலமைச்சர் அவர்களும், நானும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், கேரள அரசோடு ஒப்பந்தம் செய்துகொண்டோம்" என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் ஒரு அக்ரிமெண்டை காட்டினார்கள். அவர் நிதியமைச்சராக இருந்தபோது செய்து கொண்ட ஒப்பந்தம். அபிஷியல் டாக்குமெண்ட். அதை அவர் அமைச்சராக இல்லாத நேரத்திலே பயன்படுத்துவது முறைதானா என்பதற்குத் தான் விளக்கம் வேண்டுகிறேன். ஏனென்றால் அமைச்சர் சத்திய பிரமாணம் எடுத்துக் கொள்ளுகிறார்கள். Official secrets would not be Published என்று பிரமாணம் செய்திருக்கிறார்கள். அப்படி ஏற்றுக்கொண்ட பிறகு இப்போது மன்றத்தில் படித்துக் காட்டுவது முறை தானா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் என்னுடைய திசையை திருப்பியிருக்கிறார்கள். இருந்தாலும் சுருக்கமாக பதில் சொல்லிவிட்டு மேற்கொண்டு மானியத்தின் மீது பேசுகிறேன். இந்த டாக்குமெண்ட் எப்படி கிடைத்தது என்கிறார்கள். இது ஒன்றும் டாக்குமெண்ட் அல்ல. இரண்டு மாநில முதலமைச்சர்கள் ஒத்துக் கொண்ட அளவுக்கு வந்தது, எப்படி கீழே சுருக்கிக் கொண்டு போயிற்று என்ற கடுதாசுகள்.

நான் முதலில் சொல்ல விரும்புவது, மாண்புமிகு உறுப்பினருக்கு பாராளுமன்ற முறைகளில் இப்போது என்னவோ கொஞ்சம் சிரத்தை ஏற்பட்டிருக்கின்றது. சட்டமன்ற மரபுகளில் எல்லாம் அக்கறை வந்திருக்கிறது. ஒரு வேளை முதலமைச்சர் அவர்களிடம் நற்சான்று வாங்குவதற்காக அக்கறை காட்டு கிறோரோ என்னவோ தெரியவில்லை. டாக்குமெண்ட் எங்கேயிருந்து உறுப்பி னர்கள் பெற்ருர்கள் என்ற சோர்ஸ் சொல்ல வேண்டிய அவசியம் பாராளு மன்ற நடைமுறையில் இல்லை.

I might have begged, borrowed or stolen திருடிக் கொண்டு வந்திருக்கலாம், கடன் வாங்கிக் கொண்டு வந்திருக்கலாம். பிச்சை எடுத்துக் கொண்டு வந்திருக்கலாம். உறுப்பினர்கள் எங்கிருந்து வாங்கிஞர்கள் என்று சொல்ல வேண்டிய அவசியம் பாராளுமன்றத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : எனக்கே சந்தேகம். நீங்கள் அமைச்சர் என்ற பொறுப்பிலிருந்து சத்தியப் பிரமாணம் எடுத்திருக்கிறீர்கள். ஆகவே இது அபிஷியில் சீக்ரெட் டாக்குமெண்டா, ஆர்டினரி டாக்குமெண்டா என்று சொன்னுல் போதும்.

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, அபிஷியல் சீக்ரெட் என்பதை, இந்த நாட்டின் பொது நலன்களுக்கு விரோதமான காரியங்களை நான் அமைச் சராக இருந்தபோதும் சரி, இனியும் சரி சொல்லுபவன் அல்ல. இரண்டு மாநில முதலமைச்சர்களுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தம். ஏராளமான பத்திரி கைகளில் வந்தது. அபிஷியல் சீக்ரசி என்பது வேறு. அமைச்சர்களாக இருப் பவர்கள் அந்தக் காலத்தில் நடந்த இரகசியத்தைச் சொல்லக்கூடாது. ஆனல் இது Accord of Kerala and Tamil Nadu Governments லட்சக் கணக்கான வெளிநாட்டு பேப்பரில் கூட வந்திருக்கிற காரியம்.

அடுத்து காவிரி தண்ணீரைப் பொறுத்த வரையில். . .

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். அவர்கள் குறிப் பிட்டது மூன்று முதலமைச்சர்களும் சேர்ந்து செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் பற்றியா அல்லது ரிவைஸ்ட் ஒப்பந்தம் இன்னும் கையெழுத்து ஆகாமல் இருக் கிறதே, அதைப் பற்றியா என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : 1969-ம் ஆண்டு கேரள மாநில முதலமைச்சரும், தம்முடைய முதலமைச்சரும் சேர்ந்து செய்துகொண்ட ஒரு பொதுவான உடன்பாட்டின்படி ஒரு லட்சம் ஏக்கருக்குப் பாசனம் கிடைக்கக் கூடிய நிலை



யிலிருந்த நீராறு திட்டம் என்ன ஆயிற்று? அந்தத் திட்டத்திற்குப் போட்ட 68 கோடி ரூபாய் தெருவிலே கிடக்கிறதே, 10 லட்சம் மக்களுக்கு குடிதண்ணீர் கொடுக்க முடியவில்லையே, அந்தப் பொறுப்பைத் தொடர்ந்து செய்தார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேரள மாநில முதலமைச்சர் என்று பொதுவாகச் சொல்லிவிட்டால் போதாது. 1969-ம் ஆண்டிலே தமிழ்நாட்டு முதலமைச்சரும், கேரள முதலமைச்சரும் சந்தித்தார்கள்; ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தார்கள் என்ருல் அப்போது கேரளத்தில் முதலமைச்சராக இருந்தவர் திரு. இ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவர்கள். அவர்கள் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தார்கள். அதற்குப் பிறகு அரசு மாறியது. அந்த அரசு மாறிப்போய், அதே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வேறு ஒரு பிரிவினர் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். அதற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாச்சரியங்களின் பின்னணியில் அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட முடியாத நிலைக்கு அங்குள்ள அமைச்சரவை ஆளாயிற்று. நாங்கள் பலமுறை அச்சுத மேனன் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறோம். திரு. மதியழகன் அவர்கள் பங்களூருக்குப் போகும்போது கூட திரு. அச்சுதமேனனைச் சந்தித்துப் பேசி யிருக்கிருர்கள். திரு. இ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவர்கள் ஒப்பந்தம் செய் திருக்கிருர்கள் என்று கூடச்சொன்னுர்கள். திரு. மதியழகன், அவர்கள் அமைச்சராக இல்லாமல் ஸ்பீக்காராக இருந்தபோது கூட அச்சுதமேனன் அவர் களைச் சந்தித்துப் பேசியிருக்கிருர்; அமைச்சர்கள் சந்தித்துப் பேசியிருக் கிருர்கள்; இப்போதும் அவரைச் சந்தித்துப் பேச வேண்டுமென்று தேதி கேட்டுக் கொண்டிருக்கிறோம். அன்மையில்கூட, பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் பேசிவிட்டு வந்திருக்கிருர்கள். அங்கே இருக்கின்ற பிரச்ச னைகள் காரணமாக இன்னும் திட்டம் நிறைவேற்றப்பட முடியவில்லையே தவிர, நம்மால் அல்ல.

திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொஞ்சம் காலங்கடந்து வந்திருக்கிருர்கள். நான் முதலிலே இதைப்பற்றித்தான் பேசி னேன். திரு. இ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவர்களோடு ஏற்பட்ட ஒப்பந்தத் தைப்பற்றி எல்லாம் சொன்னேன். அச்சுதமேனன் அவர்களோடு ஒரு 15 நாட்களுக்கு முன்புகூட பேசியிருக்கிறேன். அவர்கள் நல்ல எண்ணம் படைத் தவர்களாக இருக்கிருர்கள். நம்முடைய இரண்டு மாநிலங்களும் நட்புறவுடன் இருக்கவேண்டும் என்ற எண்ணம் உடையவர்களாக இருக்கிருர்கள்.

நாம் வறட்டுப்பாளையம், நல்லதங்காள் ஓடை என்றெல்லாம் நீர்ப்பாசனத் திட்டங்களைப் போட்டு எவ்வளவோ ரூபாய்களை எல்லாம் ஒதுக்கிக் காரியங் களைச் செய்தும் இன்னும் முடியாமல் இருக்கின்ற நிலையில் தான் இருக்கிறது.

திரு. இ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவர்களை வைத்து சிறுவாணித் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிற காரியம் ஏன் பின்னால் போயிருக்கிறது என்பது தெரியவில்லை. அதேமாதிரி தான் ஹேமாவதி திட்டம். ஹேமாவதியில் அணை கட்டும் வேலையில் அவர்கள் எவ்வளவோ தூரம் போய்விட்டார்கள். அதேமாதிரி தைரியமாக நம்முடைய முதலமைச்சர் செய்யமுடியவில்லையே. நம்முடைய மாநிலத்திலே அணைகட்டி நீர்ப்பாசனம் செய்வதற்கு யார் தடுத்தால் நமக்கு என்ன என்ற எண்ணத்தில் அந்த மாநிலம் இருக்கிறது. அதனால் தான் எவ்வளவோ சொல்லியும் ஹேமாவதியில் வேகமாக அணை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். 1974-ம் வருஷத்தோடு பழைய ஒப்பந்தம் முடியப்போகிறது. அதைப்பற்றிக் கேட்டால் மைசூர் மகாராஜா காலத்திலே செய்துகொண்ட ஒப்பந்தம், அதனால் எங்களுக்கு என்ன என்று சொல்கிறார்கள். வீரேந்திர பட்டீல் காலத்திலேயே அதைத் தடுக்க வேண்டும் என்று கோர்ட்டுக்குப் போய் பார்த்தார்கள். முடியவில்லை. சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் காலத்தைக் கடத்தினார்கள். கோர்ட்டுக்குப் போய் வழக்கை சுலபமாகத் தீர்த்துக் கொள்ளும் காலமா இது. பிறகு . . ,

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இதை எல்லாம் இந்த அரசின் சார்பில் நாங்கள் மாத்திரம் செய்த முடிவல்ல. காவிரித் தண்ணீர் பிரச்சனை தமிழ்நாட்டின் 4 கோடி மக்களின் பிரச்சனை என்ற அளவில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கூடி, அவர்கள் அளித்த ஆலோசனையின் அடிப்படையில்தான் காவிரித் தகராறில் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்திருக்கிறோம். இந்த அரசின் சார்பில் மட்டும் எதுவும் செய்யவில்லை. அனைத்துக்கட்சித் தலைவர்களின் முடிவின்படிதான் நடந்திருக்கிறோம்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** நான் அதை ஒப்புக்கொள்கிறேன். இனிமேலும் அனைத்துக்கட்சித் தலைவர்களின் ஒப்புதலைப் பெறலாம். மன்னார்குடி அமைச்சர் மட்டுமல்ல, எல்லா அமைச்சர்களும் சேர்ந்து. . .

**திரு. கு. காமாட்சி:** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்கள் விருப்பம்போல் அமைச்சர்களின் பெயர்களை மாற்றிச் சொல்வதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நான் ஒன்றும் மன்னார்குடிக்கு அமைச்சரல்ல; தமிழ்நாட்டு அமைச்சரவையில் ஒருவன். ஏற்கெனவே இருக்கக்கூடிய பெயரைச் சொன்னால் போதும். நீங்கள் அமைச்சராக இருந்த போது கனியூர் அமைச்சர் என்றா சொன்னார்கள்?



**திரு. கே. ஏ. மதியழகன்:** அமைச்சரவர்கள் மன்னார்குடியைச் சேர்ந்தவர்கள். ஆதலால் அப்படிக் குறிப்பிட்டேன். அது தவறு என்றால் மாற்றிக் கொள்கிறேன். எனக்கு ஆட்சேபனை இல்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நீங்கள் ஒன்றும் எனக்குப் பெயர் வைக்கவேண்டாம்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** உங்கள் பெயரை உங்கள் பெற்றோர்கள் வைத்திருப்பார்கள்; ஊர் மக்கள் வைத்திருப்பார்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. மன்னார்குடி எனக்கு ரொம்ப பிடித்தமான இடம். அதனால் அப்படிச் சொன்னேன். அமைச்சரவர்களுக்கு அது பிடிக்க வில்லை என்றால் மாற்றிக்கொள்கிறேன்.

ஆக, திட்டங்களை நிறைவேற்றுவதில் நம்முடைய 'அப்ரோச் நெகட்டிவ்' ஆக இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு இவைகளை எல்லாம் பஞ்சாயத்து பேசி தீர்த்துக்கொள்ள மத்திய அரசு விரும்புகிறது. மத்திய அரசும் உட்கார்ந்து, கேரள அரசும் உட்கார்ந்து, தமிழ்நாடு, மைசூர் அரசுகளும் உட்கார்ந்து சுமுகமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள வழி காணவேண்டும். இல்லையென்றால் தமிழகத்தின் 4 கோடி மக்களுக்கும் உணவளிக்கிற தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படும். இந்த முயற்சியிலே இப்போது ஒரு மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. நமது உரிமையைப் பாதுகாக்கின்ற வகையிலே தமிழகம் விழிப்புடனும் உன்னிப்புடனும் இருக்கவேண்டும். அது இந்த அரசாங்கத்தின் கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, காவிரி டெல்டா பற்றி இங்கே பல உறுப்பினர்கள் பேசினார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களும் அதிலே அக்கறை கொண்டிருக்கிறார்கள். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும், இன்று காலையிலே திரு. சுப்பையா அவர்களும் கூட சொன்னார்கள். தஞ்சை பகுதியிலே ரிப்பேர், ரினோவேஷன் செய்வதற்கு ஆண்டு ஒன்றுக்கு 3½ கோடி ரூபாய் வீதம் 4 ஆண்டுகளுக்கு 12 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைப் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். இது சரியான முயற்சி அல்ல. ஏனென்றால் தஞ்சை மாவட்டத்திலே நீர்ப்பாசன அமைப்புகள் பழைய காலத்திலேயே—கரிகாலன் காலத்திலே ஏற்படுத்தப்பட்டவை. அங்கே மதகு கிடையாது, வாய்க்கால் வசதி கிடையாது; ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு போக வேண்டுமானால் பாலம் கிடையாது. தஞ்சைத் தரணி 13 லட்சம் ஏக்கர் பாசனப் பரப்பைக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட தஞ்சை தரணியிலே இன்றைக்கு சரியான வாய்க்கால் கிடையாது, பாதை கிடையாது; பாலம் கிடையாது. இன்னும் அங்கே வேளாண்மை இரு மடங்கு பெருகவேண்டும்;

பெருக்க முடியும். 13 லட்சம் ஏக்கருக்கு இப்போது பாசன வசதி செய்வதை வாய்க்கால்கள் எல்லாம் சீரமைக்கப்பட்டால் அதுவே 26 லட்சம் ஏக்கருக்குப் போதுமானதாகும். கோவையிலே வருகின்ற அமராவதி ஆற்றுத் தண்ணீர் 10 ஏக்கர் நிலத்திற்குப் பாய்கிறதென்றால் அதே அளவு தண்ணீர் தஞ்சை மாவட்டத்தில் 5 ஏக்கருக்குத்தான் பாய்கிறது. வைகைப் பகுதியில் 10 ஏக்கர் நிலத்திற்குப் பாயக்கூடிய தண்ணீர் தஞ்சையிலே 5 ஏக்கருக்குத்தான் பாய்கிறது. ஆகவே, தஞ்சை பாசன வசதிகளை—வாய்க்கால் வசதிகளை மாற்றி அமைத்தால்—ரீ மாடல் செய்தால் இப்போது 13 லட்சம் ஏக்கருக்குப் பாய்கின்ற தண்ணீர் 26 லட்சம் ஏக்கருக்குப் போதுமானதாக இருக்கும். அந்த முறையிலே பாதை அமைப்புகள், பால அமைப்புகள், எல்லாம் செய்யவேண்டும்; தண்ணீரை சிக்கனமான முறையிலே பயன்படுத்த வேண்டும்.

அதற்காகத் திட்டமிட்டு, காவிரி டெல்டா டெவலப்மென்ட் ஸ்கீம் என்று ஒரு திட்டத்தை வகுத்து, இந்தமாதிரியான காரியங்களுக்காக உலக வங்கியை அணுகி, அதன் மூலம் 50 கோடி ரூபாய் அல்லது 60 கோடி ரூபாய் பெற்று, தஞ்சை மாவட்ட பாசன ஏற்பாடுகளைப் புதுப்பித்து, மதகுகள் அமைத்து, தண்ணீர் பாய்ச்சலை சிராக்கி—இந்த முறையிலே காரியங்களைச் செய்ய வேண்டும். அவைகளைச் செய்யாமல் ஏதோ ரினோவேஷன் என்று சொல்லி—காவிரி நீர்ப்பாசன புனருத்தாரணம் என்று சொல்லி, மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் பெயின்ட் அடிப்பதைப் போல செய்திருக்கின்ற காரியங்கள் தஞ்சை மாவட்டத்திலே பாசன வசதி ஏற்பட்டு, உணவு உற்பத்தியைப் பெருக்காது என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். வேளாண்மையிலே அரசு எடுத்திருக்கின்ற நல்ல முயற்சிகளை நான் மறுக்கவில்லை.

பி.ப. 6-00

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, 'காவிரி மாடர்னைசேஷன் ஸ்கீமைப்' பொறுத்தவரையில் அவர்கள் சொன்னதுபோல உலக வங்கியிடம் அணுகியிருக்கிறோம். உலக வங்கி அதைப் பார்த்து விட்டு 40 கோடி ரூபாய்க்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறது. நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரையில் இதிலே சிறப்பான முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதிலே தாமதம் ஏற்படுவதற்குக் காரணம் மத்திய அரசு உலக வங்கியின் உதவியை நாம் பெறுவதற்கு இன்னும் அனுமதி அளிக்கவில்லை. ஆகவே, அனைவரது கண்டனமும் மத்திய அரசை நோக்கிப் போகவேண்டுமே தவிர இங்கே திரும்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் எனக்கு அவர்களிடத்தில் தயவு தாட்சண்யம் ஏதும் கிடையாது.





**மாண்புமிகு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலகபாங்கி உதவி கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அப்படியிருந்தும் நமது அரசின் சார்பிலேயே ரூபாய், 1,298 லட்சத்தில் நான்காண்டுக்கான ஒரு திட்டத்தினைத் தீட்டி இப்போது இந்த ஆண்டிற்கென 3½ கோடி ரூபாய் திட்டத்தினைத் தீட்டியிருக்கிறோம். மத்திய அரசோ அல்லது உலக பாங்கியோ உதவியளிக்க வில்லை என்பதற்காக நாம் நின்றுவிடவில்லை. இந்த ஆண்டிற்கென 3½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியது பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம்தான். எங்களுக்கு மத்திய அரசிடம் தயவு தாட்சண்யம் எதுவும் இல்லை. இவர்களிடத்திலாவது விட்டகுறை-தொட்டகுறை என்று இருக்குமே தவிர, அங்கே ஒன்றுமில்லை.

என் கருத்தெல்லாம், ரூ. 12 கோடி ஒதுக்க இருக்கின்றீர்கள். அதில் ஏதோ ரூ. 3½ கோடி செலவழிக்கப்போவதால் காரியம் தீராது. நம்முன் இருப்பது மிகப் பெரியதொரு காரியம். பதிமூன்று லட்சம் ஏக்கர் நிலம், உலக பாங்கியிலிருந்து நமக்குச் தேவையான உதவி, கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் இவற்றையெல்லாம் பார்க்கும்போது மூன்று கோடி ரூபாயை வேறு காரியத்திற்கு உபயோகப்படுத்தலாமா என்று எண்ணத் தோன்றுகிறது. முதலமைச்சர் கூறியதற்காக நான் அவருக்கு மகிழ்ச்சியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதே நேரத்தில், நான் இது விஷயத்தில் இவ்வளவு நேரம் பேசியிருக்க வேண்டியதில்லை என்றே கருதுகிறேன். காரணம், 'இப்படியெல்லாம் நிலைமைகள் இருக்கின்றன' என்று உங்கள் குறிப்பில் எழுதியிருக்க வேண்டும். ஆனால் இதை நீங்கள் எழுதவில்லையே தவிர, இதே உலக வங்கி மூலம் ரூ. 26 கோடியே 25 லட்சம் தஞ்சை மாவட்டத்திலும் வேறு பல மாவட்டங்களிலும் குடிநீர்க் கிணறுகளைத் தோண்டுவதற்காக, நமது மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் மூலம் கிராம நிலவள வங்கிகள் மூலமாக இந்த ரூ. 26 கோடியும் வினியோகிக்கப்படும் என்று எழுதியிருக்கின்றீர்கள், உங்கள் வரையில்.

கிணறுகளைத் தோண்டுவதற்காக உலக பாங்கிடமிருந்து இந்தத் தொகையைப் பெறுகிறோம் என்று சொல்லும்போது, ஒரு சந்தேகம் வருகின்றது. இந்த ரூ. 26 கோடி பணத்தைக் கொடுப்பதற்கு முன்பு ஒன்றைச் செய்ய வேண்டும், தொண்டாமுத்தூர் பகுதியில் கிணறுகளை வெட்டுவதற்காக இரண்டு, மூன்று கோடி ரூபாயைச் செலவழித்திருப்பதில் ஏற்பட்ட பலாபலன்கள் என்ன என்பதை 'எவால்யுவேஷன்' செய்யவேண்டும். இது கூட்டுறவுத் துறை அமைச்சர் பொறுப்பு என்றாலும் யார் பொறுப்பாக இருந்தாலும், இதையும் பார்க்க வேண்டும்.

இப்படி 26 கோடி ரூபாய் தொகையை உலக பாங்கி கடன் கொடுத்திருக்கிறது. . இதை நில வள பாங்குகள் மூலமாக தஞ்சை மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் கிணறுகளைத் தோண்டுவதற்காகச் செலவழிக்கின்றோம் என்று சொல்லிவிட்டு, இந்தக் காவிரி டெல்டாவைப்பற்றிச் சொன்னார்களே, 'மாடர்னைஸேஷன் ஸ்கீம்', இதை விட்டு விட்டால் பயன் கிடைக்காது. இதைச் செய்தால் தமிழகத்தின் நலிவைப் போக்கலாம். தஞ்சை மாவட்டத்தில் வளம் கொழிக்கும். கோளத்திற்கு ஏற்றுமதி செய்யத்தக்க அளவிற்கு, ஏன், மாநிலமே தன்னிறைவு பெறத்தக்க அளவிற்கு ஏற்படக்கூடிய இந்தத் திட்டத்தைப் பற்றி, இந்தக் காரியத்தைப் பற்றி ஒரு வார்த்தைகூட இல்லையே என்றுதான் நான் சற்று முன்பு சொல்லிக்கொண்டு இருந்தேன். (மணியடிக்கப்பட்டது.)

இன்னும் எனக்குப் பதினைந்து நிமிஷம் வேண்டும். குறுக்கிடு செய்துவிட்டார்கள். அதில் எனக்குப் பதினைந்து நிமிஷம் போய்விட்டது.

அடுத்து, பாண்டியாறு-பொன்னம்புழா திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. இது பற்றி அவர்கள் தங்கள் உரையில் விளக்கம் தருவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

அடுத்து, இன்று பெருமையாகப் பேசப்படுவது 'கங்கை-காவிரி இணைப்புத் திட்டம்'. இப்போது கற்பனை மாதிரி தோன்றினாலும் இது நடக்கக்கூடிய காரியம்தான். இவற்றை இணைத்தால், இந்தியா முழுவதற்குமாக 'வாட்டர் க்ரிட்' ஏற்படும் என்று டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் சொல்லுகின்றார்கள். இது ஒரு பெரிய திட்டம்தான். என்றாலும், இதனுடைய முதல் கட்டமாக 'கோதாவரி-காவிரி இணைப்பு' ஒன்று ஏற்பட்டு தென்னாட்டில் இந்தக் கோதாவரி-காவிரி க்ரிட் துவங்கப்பட வேண்டும். அதற்கு முன்பாக காவிரி-கிருஷ்ணா நதிகளின் இணைப்பு ஏற்பட வேண்டும். மத்திய அரசிலேயே இதை வரவேற்று இருக்கின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அமைச்சர் அவர்கள் அப்படித்தான் சொல்லியிருக்கின்றார்கள். இது நல்ல கருத்து. ஆனால் இது வெறும் உபசாரப் பேச்சாக இல்லாமல், இது பற்றி நல்ல வகையில் அபிவிருத்தி திட்டக் கமிஷனிடத்திலும், முதலமைச்சர்கள் மாநாட்டிலும் வற்புறுத்தி, இந்தத் திட்டத்தினைத் துவங்கினால் நல்லது. இதை நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இதை அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அதற்காக நான் இந்த அரசுக்கு என்னுடைய





அடுத்து, ஃப்ளட் கண்ட்ரோல் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் கொடுமை மிகவும் பயங்கரமானது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்தத் துறையில் நம்முடைய அரசு மட்டுமில்லை, இதற்கு முன்பிருந்த அரசும் தவறிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. இதுபற்றி திரு. இராமையா அவர்களிடம்கூட சொன்னேன். அவர் மராமத்து அமைச்சராக இருந்திருக்கின்றார்கள். வெள்ளத்தடுப்புப் பணிகளில் நாம் போதிய அக்கறை காண்பிக்கவில்லை.

காவிரிக் கரையைப் பலப்படுத்துவதிலும் நாம் தவறியிருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து வெள்ளத்தடுப்பு நிதியினை வாங்கி அஸ்ஸாம் மாநிலத்தில் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆனால், அந்த நேரத்தில் நாம் ஏமாந்திருக்கின்றோம். சமீப காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் விளைந்த பாதிப்புக்கள், நாம் அந்தத் துறையில் எந்த அளவிற்கு ஏமாந்துவிட்டோம் என்ற உண்மையை வெகு அழகாக எடுத்துக்காட்டியது.

காலையில் திருக்கோவிலூர் உறுப்பினர் பேசிக் கொண்டு இருந்தார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள அந்த பொன்னியாறு அணை, திருக்கோவிலூருக்கு அருகிலுள்ள அந்த அணை நூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அதை எப்போதாவது நாம் முறையாகக் கவனித்திருந்தால் அது இந்த வெள்ளத்தின்போது உடைந்திருக்காது. அது உடைந்த காரணத்தினால் அதையொட்டிஉள்ள 576 'இர்ரிகேஷன் ஸோர்ஸஸ்' பாழ்பட்டு, பெரு வெள்ளம் ஏற்பட்டு கடலூர் நகரே தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த காட்சியினைப் பார்த்தோம். அந்த நகரில் ஒவ்வொரு வீட்டிலும் ஐந்தடி, ஆறு அடி தண்ணீர் தேங்கிக் கொண்டு இருந்தது. அமைச்சர் அவர்களே கூட ஆகாய விமானத்தில் ஏறிக்கொண்டுதான் கடலூரையும் பண்ணுருட்டியையும் பார்க்க முடிந்தது. அந்த அளவிற்குப் பெருவெள்ளம் ஏற்பட்டு பாழடைந்துவிட்டது அந்தப் பகுதிகள்.

இப்படிப்பட்ட பெரு வெள்ளம் இந்த நாட்டின் வரலாற்றிலேயே இப்போதுதான் ஏற்பட்டது. ஆனாலும் 100 ஆண்டு காலத்திற்குமுன்பு கட்டப்பட்ட அந்தப் பொன்னியாற்றின் அணைபற்றி நாம் நினைத்துப்பார்க்கவில்லை இந்தப் பெரு வெள்ளம் ஏற்பட்டதற்கு முன்பு. கடலூர் மூழ்கியிருந்தால்? அந்தத் துரதிர்ஷ்டம் நிகழக்கூடாது. 576 பாசனக் குளங்களும் ஏரிகளும் உடைந்துவிட்டன. 100 ஆண்டுகாலத்திற்கு முன்பு கட்டப்பட்ட அந்த அணையைப் பற்றி நாம் எண்ணிப் பார்த்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்று சொல்லிக்கொண்டு, இப்போது ரூபாய் 16 கோடியைப் பெற்றிருக்கின்றீர்கள். இவற்றை இன்று செலவு செய்வதன் மூலமாக இப்படிப்பட்ட பழைய அணைக்

கட்டுகளையும் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். அதற்கு இது ஒரு எச்சரிக்கைக் குரலாக பயன்படும் விதத்தில் நான் இதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்தச் சேதுசமுத்திரதிட்டம்—சேலம் எஃகாலை என்றெல்லாம் நாம் அடிக்கடி சொல்லிக்கொண்டு இருக்கின்றோம். மத்திய அரசும் திரும்பத் திரும்ப ஒரேவிதமான பதிலைத்தான் இது விஷயத்தில் சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். நான்காவது திட்டம் முடிந்துவிட்டது. இதுபற்றி நமது முதலமைச்சர் அவர்கள் மத்திய திட்ட அமைச்சர் தார் அவர்களோடு பேசியிருக்கின்றார்கள். இதில் மேலும் நாம் அக்கறை காட்ட வேண்டும். இந்தச் சேதுசமுத்திரத் திட்டம் மிக மிகப் பெரிய திட்டம். நமது தேசத்தின் பாது காப்புக்கும் உதவக்கூடிய திட்டம். கப்பல் போக்குவரத்தில் பிற்காலத்தில் இது பிரதான இடத்தினைப் பெறும் வாய்ப்பு இருக்கின்றது. பக்கத்திலுள்ள தூத்துக்குடி ஒரு பெரும் தொழில் 'காம்ப்ளெக்ஸ்' ஆக உருவாகிவரும் நேரத்தில் இந்தச் சேதுசமுத்திரத் திட்டத்தினை மத்திய அரசிடம் வற்புறுத்திப் பெற்றால் தமிழகத்தின் எதிர்காலம் பெருமைப்படக்கூடியதாக இருக்கும், எனவே இதை மேலும் மேலும் வற்புறுத்திப்பெறுவது நமது மாநிலத்தின் கடமை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இவ்வளவு விளக்கமாக விவரமாக உள்ள இந்த அறிக்கையில் இந்த வீராணம் திட்டம் பற்றி ஒரு வார்த்தையைக் கூடப் பார்க்க முடியவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** அது இப்போது பொதுப் பணித்துறையில் இல்லை. தனியாகப் போய்விட்டது. எனவே அது பற்றி இங்கே பேசுவதற்கு இடமில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன்:** பின் எதிலே பேச வேண்டும் என்று சொல்லுகின்றீர்கள்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** வீராணம் திட்டம் பொதுப் பணித்துறையில் இல்லை. ஆர்.டி.எல்.ஏ.வில் இருக்கின்றது. அந்த மானியம் வரும்போது பேசலாம். என் மானியத்தில் பேச வேண்டாம்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இலாகாவினை எங்கே வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளட்டும். ஆனால் வீராணம் திட்டம் பிறந்தது ஏதென்ஸ் நகரிலே. அது எப்படிப் பிறந்தது வளர்ந்தது என்ற திட்டத்திற்குப் போகவில்லை இப்போது. எங்கே பார்த்தாலும் வீராணம் திட்டம் என்று இருக்கிறது. ஆனால் இங்கே ஒன்றும் காணோம். ஆனாலும் அமைச்சர் அவர்களுக்குப் பொறுப்பு இருக்கின்றது. ஏன் என்றால் அதைப் பொதுப்பணித்துறைதான் நிறைவேற்றிக் கொண்டு வருகின்றது.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** உங்கள் ஆசியோடு பிறந்த குழந்தைதான் அது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** என் ஆசியோடு பிறந்திருக்கலாம். ஆனால் பிறந்த குழந்தை சீராக முறையாக வளரவேண்டும், முறையாக வாழ வேண்டும் என்பதில் எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது.

கடந்த நான்காண்டு காலமாக இந்த வீராணம் திட்டத்தினைப் பொறுத்த வரையில் என்னென்ன அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லு வதற்கு நீங்கள் கடமைப்பட்டு இருக்கின்றீர்கள். இது குடிநீர் திட்டம், பொதுச் சுகாதாரத்தின் கீழ் வரும் என்றெல்லாம் சொன்னாலும் இது சென்னை நகருக்குக் குடி நீர் கொண்டுவரும் திட்டமாகும். பதினெட்டு கோடி ரூபாயை உள்ளடக்கியதொரு பெரிய திட்டம் இது. எனவே, அது எந்த அளவில் இருக்கின்றது என்பதுபற்றிய விளக்கங்களை இந்த மன்றத்திற்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றீர்கள் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சென்னையைப் பொறுத்தவரையில் கூவத்தைப் பற்றி கூறும்போது, அதை முடித்து விட்டதாகக் கூறுகிறார்கள். என்ன முடிந்தது என்று தெரியவில்லை. கூவத்திற்குப் பக்கத்திலே தான் நான் குடி இருந்தேன். ரூ. 2 கோடித் திட்டம்—நேப்பியர் பாலத்திலிருந்து இங்கே வரை—எல்லாக் காரியங்களையும் செய்துவிட்டோம்—முதல் கட்டம் முடிந்து விட்டது—குரோட்டன்ஸ் வைப்பது இரண்டாவது திட்டம்—800 பேருக்கு வீடுகள்—உல்லாசப் படகுகள் விட்டு விட்டோம் என்றெல்லாம் சொல்லி, முதலமைச்சர் அவர்களைக் கொண்டு வந்து காட்டி முடிந்து விட்டது என்று சொல்கிறார்கள்.

இரண்டு கோடி பணம் செலவழிந்ததற்கு பலன் மக்கள் கண்களுக்குத் தெரியவேண்டும் என்பதையும், அதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதையும் நீங்கள் யோசிக்க வேண்டும். படகுத் துறை, நீச்சல் குளம், நான்கு படகுகள் என்று சொன்னால் மட்டும் போதாது. இந்தக் கூவம் திட்டம் போட்டதே கொசுவை ஒழிப்பதற்காகத் தான் துவங்கப்பட்டது. இன்றைக்கு அந்த கொசுத் தொல்லை ஒழிக்கப்படவில்லை என்ற நிலை இருக்குமானால் என்ன காரணம் என்பதை சிந்திக்கவேண்டும்.

பக்கிங்ஹாம் வாய்க்காலில் காலை விடுகிறார்கள். ரூ. 50 லட்சம் செலவு செய்யப் போகிறோம்—100 மைலுக்கு செலவிடப் போகிறோம்—திட்டமிட்டிருக்கிறோம்—மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். திரு. மாரிமுத்து சொன்னதைப் போல இந்தக் காரியங்களையெல்லாம் காண்டி

ராக்டர்களிடம் விட்டு விடுவதால் பல பாதிப்புகள் வர காரணமாகிறது. இது வரையில் விரயமானது கூட பரவாயில்லை. இந்த இலாக்காவின் பெயரை இப்போது பொதுப் பணித்துறை Public Works Department என்று மாற்றியிருக்கிறார்கள். முன்பு மராமத்து இலாக்கா என்று பெயர். வேகமாகப் போகிறவர்கள், இதை "பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மெண்ட்" என்று சொல்லத்தக்க அளவுக்கு இந்த இலாக்காவில் சேதாரம் அதிகமாக இருக்கும். 18 சதவீதம், 20 சதவீதம் என்று மட்டுமல்ல, ரூ. 60 கோடி இருந்தாலும் வேஸ்ட் ஆகிவிடும். சேதாரத்தைக் கண்டு பிடிக்க முடியாது. ரூ. 1½ லட்சம் சேதாரம் ஏற்படுத்தியது போல இனியும் ஏற்படாமல், எந்தெந்தக் கட்டங் களில் சேதாரம் ஆகிறது என்பதை அறிந்து எந்த அளவுக்கு குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது அண்டை மாநிலங்களான கேரளத்தோடும், மைசூரோடும் நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள—உறவை விரிவு படுத்திக்கொள்ள இந்த அரசாங்கம் தவறிவிட்டிருக்கிறது—மீண்டும் உறவினை விரிவுபடுத்திக் கொள்வதில் இந்த அரசு தன்னுடைய எண்ணத்தைச் செலுத்த வேண்டும் என்றும், காவிரி பகுதியை அபிவிருத்தி செய்வதில் உலக வங்கியுடன் முயற்சிகளை விரிவு படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியபோது ரூ. 40 கோடித் திட்டமான காவிரி மாடர்னைசேஷன் ஸ்கீம் மத்திய அரசின் தாமதத்தால் தேங்கியிருக்கிறது என்று குறிப் பிட்டார்கள். நான் கேள்விப்பட்டமட்டில் உலக வங்கி இந்தத் திட்டத்தை பரிசீலனை செய்து, அது முடிவடையும் தருணத்தில் மைசூருக்கும் நமக்கும் ஏற்பட்ட காவிரி நீர்ப் பிரச்சினை காரணமாக அந்தப் பரிசீலனையை ஒத்தி வைக்கவேண்டுமென்று மைசூர் அரசு கருதியதாகவும், இதில் மத்திய அரசின் தாமதம் இல்லை என்றும் தெரிகிறது. இதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவிக்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, காவிரிப் பிரச்சினைக்கும் காவிரி மாடர்னைசேஷனுக்கும் சம்பந்தமில்லை என்பதை மத்திய அரசிடம் பலமுறை எடுத்துச்சொல்லிவிட்டோம். வேறொரு மாநிலத்தை சர்ச்சைக்கு இழுக்க வேண்டாமென்று தான் இதைச் சொல்லவில்லை. இப்போது அவர்களே சொல்லி விட்டார்கள். மாரிமுத்துவுக்கு மத்திய அரசைக் காப் பாற்ற வேண்டுமென்ற புதிதான அக்கறையின் காரணமாக, மைசூர் அரசு இதற்குக் காரணம் என்று சொன்னார்கள். மைசூர் அரசும் இதை மறுத்து வருகிறது.





திரு. கே. ஏ. மதியழகன் : அதுவும் அவர்கள் அரசு தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுவும் "உங்கள் அரசு" என்று மதி சொல்கிறார். ஆகவே, மைசூர் அரசே காவிரி மாடர்னைசேஷன் ஸ்கீமில் சில மறுப்புகளைத் தெரிவித்திருக்கிறது. காவிரிப் பிரச்சினைக்கும் காவிரி மாடர்னைசேஷனுக்கும் சம்பந்தம் இல்லை என்பதை மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்லியும் கூட, மத்திய அரசு மைசூர் அரசின் வார்த்தைக்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்தார்களோ, அவ்வளவு மதிப்பும் மரியாதையும் நம் வார்த்தைக்குத் தரவில்லை

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, அப்படிக் கூட கொள்வதற் கில்லை. நமக்கும் மைசூருக்கும் உள்ள பிரச்சினை தீர்ந்த பிறகு இதை எடுத்துக்கொள்ளலாம் என்றும் இருந்திருக்கக் கூடும் அல்லவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்களுக்காக இவர் வக்காலத்து வாங்கியதற்கு நன்றி.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, பொதுப் பணித் துறையில், ரூ. 67 கோடிக்கு மேலாக பல மானியங்களுக்கான கோரிக்கைகளை இந்த மன்றம் விவாதத்திற்கு கொண்டு வந்திருக்கின்றது. நல்ல கருத்துக்களை பல அங்கத்தினர்களும் கூறினார்கள். அதிலேயும் குறிப்பாக, தங்கள் தங்கள் தொகுதிகளில் நல்ல பல காரியங்கள் நடைபெற வேண்டுமென்ற முறையில், ரோடு இல்லை, பாலம் இல்லை போன்ற குற்றச்சாட்டுகளை பலரும் எடுத்துச் சொன்னார்கள். நான் அந்தப் பிரச்சினைக்குள் புகாமல், இன்றையதினம் மிகப் பெரிய பெரிய பிரச்சினைகளாக இருக்கின்ற ஒன்றிரண்டைப் பற்றி மட்டும் என் கட்சி சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று கருது கின்றேன்.

முதலில், முக்கியமான காவிரிப் பிரச்சினையைப் பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் கூறினார்கள். காவிரிப் பிரச்சினையானது நல்ல முறையில் கவனமாக தீர்க்கப்படவேண்டும், தமிழகத்தை இருளடைய வைத்துவிடக் கூடாது என்ற முறையில் நமது அரசு நடந்து கொள்ள வேண்டுமென்பதற்காக சில வழிவகைகளைச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதிலே இந்த விவகாரத் திற்குள்ளே போக நான் விரும்பவில்லை. மத்திய அரசு, மைசூர் அரசு என்று

பரஸ்பரம் குற்றஞ்சாட்டாமல் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தான் பொருத்தமானதாக இருக்கும். "வான் பொய்த்தாலும் தான் பொய்யா காவிரி" என்று பெருமையோடு சொல்லிக்கொண்டிருக்கிறோம். காவிரி நீரினால் 13 லட்சம் ஏக்கர் நிலங்கள் தஞ்சை ஜில்லாவில் பயன் அடைந்து வருகின்றன என்று சொல்கிறோம். எனவே, இந்தக் காவிரிப் பிரச்சினையில் எல்லாக் கட்சிக் காரர்களும் முனைந்து அக்கரை காட்ட வேண்டும். இன்னொரு மாநிலத்தைப் பொறுத்தவரையில் காரசாரமான விவாதத்தை இங்கே கிளப்புவது நமக்கு சரியானதாக இருக்க முடியுமா என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இங்கே திரு. மதியழகன் சில குற்றச்சாட்டுகளைக் கூறினாலும், இந்தப் பிரச்சினையில் நாம் மிகவும் பொறுப்போடும், அக்கறையோடும் இருக்க வேண்டும் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாம் இன்றைக்கு ஏற்படுத்துகின்ற முடிவு 1924-ஆம் ஆண்டில் ஏற்பட்ட முடிவுக்கு பாதகம் இல்லாத முறையிலே, தமிழகத்தைக் காத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்த இலாக்காவிற்கும், ஆளுங்கட்சியிலே இருக்கின்றவர்களுக்கும் இருப்பது அவசியம். எதிர்க்கட்சிக்காரர்களும் ஒரு வேளை அடுத்த தடவை அதிகாரத்திற்கு வரலாம் என்று எதிர்பார்த்து, அந்த முறையில் பொறுப் புணர்வோடு இந்தப் பிரச்சினையிலே தீர்வு காண்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

காவிரிப் பிரச்சினையைப் பற்றி அமைச்சர் தன்னுடைய ஆய்வுரையில் விரிவான விளக்கங்களைத் தராதது அந்தக் காரணமாகத் தான் இருக்கும் என்று கருதுகிறேன். அரசின் சார்பிலும், எதிர்க் கட்சி சார்பிலும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளைக் கூறிக்கொண்டிருக்காமல்—கட்சிப் பிரச்சினையாக அணுகாமல், தமிழகத்திலுள்ள 4½ கோடி மக்களின் பிரச்சினையாகக் கருதி, சாதகமான முடிவு காண்பதற்கு வழிவகை காண வேண்டும். தொன்றுதொட்டு, பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக அனுபவித்து வந்த இந்த மிகப் பெரிய நீர்ப்பாசன வசதி இனி கிடைக்காமல் போகுமானால் இந்தத் தமிழகமே இருண்டு போய்விடும் என்று தமிழக மக்கள் ஐயப்படுகிறார்கள். அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மேல் மட்டத்தில் செய்கிற பணிகள் எல்லாம் நல்ல முறையில் சீரோடும் சிறப்போடும் இருக்கவேண்டுமானால் நமக்கு வருவாய் கிடைக்கக்கூடிய வழியில் தெளிவான நிலைமை இருக்கவேண்டும். ரெகரிங் எக்ஸ்பெண்டிசர் அதிகமாக இல்லாமல், புரொடக்டிவ் எக்ஸ்பெண்டிசர் தரப்பில் அதிகமாக இருந்தால் அப்போது தான் சாலச் சிறந்ததாக இருக்கும்.



இன்று கூவம் திட்டத்தைப்பற்றி பலரும் பல கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். கூவம் திட்டத்திற்கு இப்போது ஏறத்தாழ 212 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று ஆய்வுரையில் கூறியிருக்கிறார்கள். ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சராக இன்னும் ஏராளமான பணம் நாம் செலவழிக்க வேண்டியதாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். காரணம் கூவம் முகத்துவாரத்தில் இன்னும் ஏராளமான பேர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அடிக்கடி தூர்ந்து போகிறது, பாக்கியிடங்களில் படகு போக முடியவில்லை என்கிறார்கள். இன்னும் எவ்வளவு பணம் ஆண்டுதோறும் செலவழிக்க வேண்டி வரும் என்று தெரியவில்லை. இது ஒரு வருமானம் அளிக்கக் கூடிய திட்டமாக இல்லை. இதன்மூலம் கூவத்தில் இருக்கிற துர்நாற்றம் அகன்றுவிட்டது என்று சொல்கிறார்கள். அப்படியும் இல்லை. பலயிடங்களில் துர்நாற்றம் அகலவில்லை. இது ஒரு வெள்ளையானையாகத்தான் பணத்தை விழுங்கிவிட்டது. பெருவெள்ளம் ஏற்பட்டால் என்ன ஆகும் என்ற ஐயப்பாடும் இருந்துகொண்டேதான் இருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை செலவு நிறைய ஏற்பட்டிருக்கிறதேயொழிய நிரம்பப் பிரயோசனம் அதற்கேற்றபடி ஏற்படவில்லை என்கிற குற்றச்சாட்டை சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. உல்லாசப் படகு ஓட்டுவதைப்பற்றிச் சொன்னார்கள். உல்லாசப் படகில் செல்வதுபோன்ற விளம்பரம் மட்டும் போதாது. நாம் என்ன செலவு செய்திருக்கிறோம், அதில் நமக்கு என்ன ரிட்டர்ன் இருக்கிறது? வெறும் ப்யூடிபிகேஷனுக்காக எத்தனை கோடி ரூபாய் விரயமாகியிருக்கிறது என்பதை உணரவேண்டும்.

அதைத்தவிர சென்னையில் பாலர் அரங்கம் என்று இருந்தது. ஒருங் கிணைந்த சட்டமன்றத்திற்காக முன்பு 1952-இல் அது கட்டப்பட்டது. அங்கே சட்டமன்றமும் நடந்திருக்கிறது. இன்றைக்கு அந்த உறுதியான கட்டிடத்தை இடிப்பதற்காக 38 ஆயிரம் ரூபாய் காண்டிராக்டுக்கு விட்டிருக்கிறார்கள். எனக்கு நினைப்பு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அதை பாலர் அரங்காகத் திறந்துவைத்தார்கள். இவர்கள் அதை—மவுண்ட் ரோடை அண்ணாசாலை என்று பெயர் மாற்றியதைப் போல—கலைவாணர் அரங்கு என்று பெயர் மாற்றினார்கள். கலைவாணர் எங்களுடைய பகுதியைச் சேர்ந்தவர் தான். அவரைப்பற்றி மாசு கற்பிக்கவேண்டுமென்று சொல்லவில்லை. கலைவாணர் அரங்கு என்று மாற்றி அதை இடிப்பதற்கு இன்றைக்கு 38 ஆயிரம் ரூபாய் செலவழிப்பதைக் காட்டிலும் தனியாகவே கலைவாணர் அரங்கு என்று ஒன்றைக் கட்டியிருந்தால் மிகவும் வரவேற்கக் கூடியதாக இருக்கும். பண்டித நேரு அவர்களுடைய நினைப்பை ஒட்டியாவது இந்த இடத்திற்கு

பாலர் அரங்கு என்பதாக அவர் வைத்த பெயரை மாற்றுவது சரியல்ல, இதைப்போய் இடிப்பதற்காகவும் இத்தனை ஆயிரம் ரூபாய் காண்டிராக்டுக்கு விட்டதும் சரியல்ல. காண்ட்ராக்டர்கள் தான் பிழைக்கிறார்கள். அரசாங்க பொதுப் பணம் விரயமாகிறது. நண்பர் மதி அவர்கள் கூடச் சொன்னார்கள், பி.டபுள்யூ.டி. என்பது பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மெண்டு என்பதாக. வெள்ளைக் காரர்கள் காலத்தில் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் Public Works Department is a public waste department என்பதாக வேடிக்கையாகச் சொல்வார். அந்த அளவுக்குத்தான் இன்றைக்கு அரசாங்கப் பணம் விரயமாக்கப்படுகிறது என்கிற குற்றச்சாட்டினை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் இந்த இலாக்கா பணிகள் மார்ச் மாதத்தில்தான் ஒதுக்கிய பணம் செலவழிக்கப்படவேண்டுமே என்பதாக துரிதமாக நடைபெறுகிறது. மற்ற காலங்களில் ஆமை வேகத்தில்தான் போகிறது. ஆமை வேகத்தில் போவதினால் எவ்வளவு இடையூறுகள் ஏற்படுகின்றன என்று சொல்ல வேண்டாம். வருஷக் கடைசியில் முடித்தாகவேண்டுமே என முயல் வேகத்தில் போகிறதனால் கோயம்புத்தூரில் கட்டிய பாலம் என்ன ஆயிற்று என்கிற நிகழ்ச்சியை திரும்ப இங்கே எடுத்து நான் சொல்ல வேண்டியதில்லை.

இப்போது மேம்பாலங்கள் என்று கட்டுகிறார்கள். ஜெமினிக்கு அருகில் ப்ளை ஓவர் கட்டுகிறார்கள். அதைப்பற்றி பல கட்சித் தலைவர்களும் தங்கள் கருத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அமெரிக்காவில் இருந்து வந்த நிபுணர்கள் கூட அது சரியான முறையில் அமைக்கப்படவில்லை என்று கூறிய தாக அறிகிறேன். அது உண்மையாக இருந்தால் அதற்குக் காரணம் யார், டிசைன் தயாரித்தது யார் என்பதை ஆராய்ந்து ரெஸ்பான்சிபிலிடியை பிக்ஸ் பண்ணி நடவடிக்கை எடுக்க அரசு தயங்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

அது மட்டுமல்ல. ஜெமினி அருகில் மேம்பாலம் கட்டுவதைப்போல திருநெல்வேலியில் ஒரு மேம்பாலம் கட்டப்படுகிறது. அந்த வேலை ஆரம்பித்து பல ஆண்டுகள் ஆகின்றன. வேலை காமதப்பட்டு வருகிறது. ஆமைவேகம் என்றுகூட அல்ல ஸ்னெயில் ஸ்பீடில்தான் நடக்கிறது. அது ஒரு முக்கிய மான பகுதி. இதனால் வியாபாரிகள், பொதுமக்கள் எவ்வளவு பாதிக்கப்படு கிறார்கள். போக்குவரத்து எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்கவேண்டும். அதற்கு பெயர் சூட்டுவதில் தகராறு? இதுபோன்ற தகராறு வந்த மதுரையில் பெயர் சூட்டாமலேயே விட்டுவிட்டார்கள். அந்த மாதிரி பிரச்சினை இதில் எழாது என்று கருதுகிறேன்.



இன்னொரு விஷயம், நாஷனல் ஹைவேஸ்களை எடுத்துக்கொண்டால் இருக்கிற பல பாலங்களை உடைத்துப்போட்டுவிட்டார்கள். ஆனால் அந்தப் பாலங்களைத் திரும்பக் கட்டும் வேலை தாமதப்படுகிறது. நம். 7 நாஷனல் ஹைவேயில் கூடப் பார்க்கலாம். அதுவும் மழை காலங்களில் உடைத்துப் போட்டதைப் பார்க்கிறோம். அவை மதறிய சர்க்காரின் பொறுப்பில் இருந் தாலும் நிறைவேற்றி வைக்கிற பொறுபபு மாநில சர்க்காருக்கு இருக்கிற காரணத்தினால் உடனடியாக அவறறைக கட்டுவதற்கு வேண்டிய வழிவகை களைக் காணவேண்டும்.

இன்னொரு விஷயம். நாஷனல் ஹைவேயில் பைபாஸ் போட 3.14 கோடிக்கு திட்டமிட்டிருக்கிறார்கள். இரண்டு வேலை முடிந்திருக்கிறது. பத்துப் பதினான்கு வேலைகள் முடிக்க முடியாதிருப்பதுபற்றி புள்ளி விவரம் தந்திருக்கி றார்கள். உதாரணமாக விருதுநகரில் பைபாஸ் போடவேண்டுமென்று லட்சக் கணக்கில் திட்டமிட்டிருக்கிறார்கள். இன்னும் போடப்படவில்லை. அதன் காரணமாக போக்குவரத்து எவ்வளவு பாதிக்கப்படுகிறது. மின்னல்வேக வண்டிகள் கூட விருதுநகர் டவுனைக் கடந்து செல்ல மணிக்கணக்கில் ஆகிறது. டிராபிக் ஜாம் ஆகிற நேரத்தில் கேட்கவேண்டாம். இந்த பைபாஸ் ரோடுகளை உடனடியாக அமைக்கத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேலம் ரோடு, கிருஷ்ணகிரி ரோடு ஆகியவற்றுக்கு எல்லாம் முதலிடம் கொடுக்க வேண்டும். ஒன்றிரண்டு வேலைகளுக்குத்தான் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. போதுமான அளவில் இந்தத் துறையில் கவனம் செலுத்தப்படவில்லை என்கிற குற்றச்சாட்டை முன் வைக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தைக் கூறவேண்டுமென்று நினைக்கி றேன். பொதுவாகப் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு ராபின் கலெக்ஷனில் பணம் ஒதுக்கப்படுவதாகப் பார்த்தோம். அந்தத்தொகை ஒரு பள்ளிக்கூடத்திற்கு எவ்வளவு என்று வரையறுக்கப்படவில்லை. தாலுக்கா மருத்துவ மனை கட்டவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தாலுக்கா மருத்துவ மனையும் படுக்கை வசதி இல்லாமல் மிகவும் மோசமான நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு எக்சைஸ் வருமானத்தை செலவழிப்பதற்கு வழிவகை செய்வது பொருத்தமாக இருக்கும் என்று இந்த நேரத்தில் என் ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். 6-30 பி.ப.

(திரு. நா. வீராசாமி தலைமை)

அடுத்தபடியாக, இன்னொரு விஷயம் பற்றி கூறவேண்டுமென்று நினைக்கி றேன். இந்த அறிக்கையை பார்க்கிறபொழுது இங்குள்ள இலாகாக்களுக்கு

எல்லாம் கட்டிடம் கட்டிக் கொடுக்கின்ற பொறுப்பு இந்த இலாகாவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. பல கட்டிடங்கள் எல்லாம் பூர்த்தியாகியிருக்கின்றன. உதாரணமாக, ஆர்.டி.ஓ. ஆபீஸ் பத்மனாபபுரம் கட்டிடம் கட்டி பூர்த்தியாகி, அது இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. அங்கு ஆர்.டி.ஓ. ஆபீஸ், வாடகைக் கட்டிடத்திலே இருக்கிறது. பூர்த்தியாகியிருக்கிற இந்தக் கட்டிடத்திலே அந்த ஆபீஸை மாற்றுவதற்கு அரசாங்கம் உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டால், யாரும் திறப்பதற்கு உடந்தையாக இல்லை. ஆகவே, இதை உடனடியாகத் திறப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, சேதுசமுத்திரம் திட்டத்தைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். இதைப்பற்றி இங்கு அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே என்ன கூறியிருக்கிறார்கள்?

The project is economically viable and technically feasible

என்று சொல்லி அதன் விவரங்கள் பற்றியெல்லாம் பல ஆய்வுரைகளை எல்லாம் தந்திருக்கிறார்கள். தூத்துக்குடி ஹார்பர் திட்டத்திற்கு இது இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது என்ற காரணத்தினால் அதை விரைவிலே செய்வதற்கு இந்த அரசாங்கம், மத்திய அரசாங்கம் சுணக்கம் காட்டினால் அதை வன்மையாகக் கண்டிக்கத் தயாராக இருக்கிறோம், ஆவன செய்யவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்சினைக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். குறிப்பாக, அடுத்த திட்ட காலத்திற்குள்ளாவது இது வருமா, வாராதா என்ற ஐயப்பாடு இருக்கிறது. பல இன்வெஸ்டிகேஷன்கள் நடந்திருக்கின்றன, பல ஆய்வுரைகள் நடந்திருக்கின்றன. பிராஜக்ட் ரிப்போர்ட்டுகள் தயாராக இருக்கின்றன. இந்த விவரங்கள் எல்லாம் அவர்களுடைய ஆய்வுரையிலிருந்து தெரிய வருகிறது. அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு மாநில அரசாங்கம் மத்திய அரசை கேட்டு வேண்டிய வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் தூத்துக்குடி திட்டமானது சரியான முறையிலே நடக்கவில்லை. காண்ட்ராக்ட்டிலே பல கோளாறுகள் இருக்கின்றன என்று அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் எல்லாம் கூறுகிறார்கள். இவ்வளவு காலமாகியும் ஏன் இந்த வேலையை இவ்வளவு சுணக்கமாகச் செய்கிறார்கள், காலாகாலத்திலே வேலை நடைபெறாத காரணத்தினால், உடனடியாக அந்தத் திட்டத்தை முடிப்பதில் காலதாமதம் ஆகிறது என்ற குற்றச்சாட்டை சொல்ல விரும்புகிறேன். எக்சிக்யூஷன் பொறுப்பு முழுவதையும் மாநில அரசாங்கத்திற்கு தந்திருக்கிறார்கள். பெரிய உரத் தொழிற்சாலை ஒன்று அந்தப்



பகுதியிலே வர ஏற்பாடாகியிருக்கிறது. நாப்தா போன்ற பொருள்களெல்லாம் இறக்குமதி செய்ய கஷ்டம் இருக்கிறது என்று இந்த ஆய்வுரையிலே கூறப்பட்டிருக்கிறது. இந்த சுணக்கத்திற்கெல்லாம், நமது அதிகாரிகள் வேண்டிய முறையிலே, இதை துரிதமாக நடத்தவில்லையென்று சொல்கிறார்கள். காண்ட்ராக்டர்களை காலாகாலத்தில் முடுக்கிவிட்டால் அவர்கள் நன்றாக வேலை செய்வார்கள். குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் முடிக்கவில்லையென்றால், அவர்களுக்கு பைன் போடவோ, அல்லது காண்ட்ராக்ட்டை ரத்து செய்துவிட்டு, வேறு காண்ட்ராக்டர்களுக்குக் கொடுப்பதோ ஏதுவாக இருக்கும்.

தூத்துக்குடியைப் பெரிய நகரமாக ஆக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. தூத்துக்குடியை வளர்க்க இந்த அரசாங்கம் அதிக அக்கறை எடுத்திருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. தூத்துக்குடி துறைமுகத் திட்டத்திற்கும், சேலம் உருக்காலைக்கும் தீர்மானங்கள் எல்லாம் நிறைவேற்றி, போராடிப் பெற்றோம். அதையெல்லாம் நான் மறுக்கவில்லை. ஆனால் அப்பொழுதிருந்த வேகம், இப்பொழுது குன்றியிருக்கிறது என்று தான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அந்த முறையிலே விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன். சில பகுதிகளையெல்லாம் விரிவாக்குவதற்கு இன்னும் எவ்வளவு காலம் வருமோ என்ற நிலைமை இருக்கிறது.

'Construction of Wharf wall" என்ற தலைப்பிலே ஒரு கருத்துக் கூறியிருக்கிறார்கள்.

The casting of concrete blocks required for the construction of the Wharf wall has commenced.

Launching of block is yet to be started.

அது எப்பொழுது ஆரம்பமாகப் போகிறதோ. ஒருவேளை நந்தன் சிதம்பரத்திற்குப் போனமாதிரியாகிவிடுமோ என்றுதான் அச்சமிருக்கிறது.

அடுத்து 'பாலன்ஸ் ஆப் ஒர்க்ஸ்' பற்றி இங்கு எடுத்துக்கூறி இருக்கிறார்கள். இதிலே கூறி இருப்பது

The construction of Pier heads, reclamation of Wharf area and dredging including under-water blasting remain to be taken up for commissioning the port and they have been included in the major contract.

ஏதோ, காண்ட்ராக்ட், ஒப்பந்தத்திலே உட்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தத் திட்ட வேலை எப்பொழுது முடியும் என்று திட்டவட்டமாக எந்தக் கருத்தும்

காணவில்லை. இது முக்கியமானது. தென்னகப் பகுதி வளர்ச்சிக்கு மிக முக்கியமான திட்டமாக இருக்கிற காரணத்தால், உடனடியாக வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

இன்னொரு விஷயத்தைப்பற்றி இங்கு கூறுவது பொருத்தமென்றே கருது கிறேன். இந்த இலாகாவிலே இருக்கிற இன்ஜினியர்கள் எல்லாம், பலரும், இந்த விஜிலன்ஸை கண்டு அஞ்சுகிற தன்மையைப் பார்க்கிறேன். உதாரணமாக, எங்களுடைய பகுதியிலே ஒரு சானல், தோவாளை சம்பந்தமாக, அண்மையிலே விஜிலன்சுக்கு கேஸ் ரெபர் செய்யப்பட்டது. அதன் விவரங்களுக்கு நான் செல்ல விரும்பவில்லை. ஆனால் பல சிறுசிறு காண்ட்ராக்டர்கள் தங்களுடைய பணத்தைச் செலவழித்து வேலையை முடித்துவிட்டார்கள். ஏதோ ஒருசிலர் செய்த வேலை சரியாக இல்லாத காரணத்தினால், 'மெஷர்மென்ட் புக்ஸ்' அத்தனையையும் அவர்கள் கைப்பற்றியிருக்கிறார்கள். அதன் காரணமாக, சிறு காண்ட்ராக்ட்டர்கள் பணம் பெறமுடியாமல் அவதிப்படுகிறார்கள். இதற்கு பரிகாரம் செய்யவேண்டும். அவர்கள் மீது கேஸ் இருந்தால், குறிப்பிட்ட சில மாதங்களுக்குள் அவைகளை முடித்துவிட வேண்டுமென்றும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அந்த இலாகா எடுக்கவேண்டுமென்றும், ஆலோசனைகள் கூறவேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன். விஜிலன்ஸில் அந்தக் கேஸை விசாரிப்பதற்காக நாள் எடுத்துக்கொண்டே போகிறார்கள். இதனால் இன்ஜினீயர்கள் பயந்து பாஸ் செய்யாமல் இருக்கிறார்கள். இதனால், காண்ட்ராக்டர்கள் வேலைகளை தொடர்ந்து செய்யமுடியவில்லை.

என்னுடைய பகுதியைப் பொறுத்துள்ள பிரசினையை இங்கே கூற விரும்புகிறேன். சிற்றாறு-பட்டிணங்கால் பொறுத்த அளவிலே அங்கே தண்ணீர் திறந்து விடுவதற்கு கன்டிஷன்கள் எல்லாம் கூறியிருக்கிறார்கள். கழிந்த தடவை எப்பொழுது திறந்தார்கள் என்ற விவரமெல்லாம் கூறி இருக் கிறார்கள். இராதாபுரத்தில் 17,000 எக்கர் நிலத்திற்குத் தண்ணீர் இறைக்கப் பட்டதாகப் புள்ளிவிவரங்கள் இதிலே இருக்கின்றன. கழிந்த தடவை என்ன நடந்தது? அங்கிருந்த தண்ணீரை இராதாபுரத்திற்கும் என் பகுதிக்கும் திறந்து விட்டார்கள். கடைசியிலே அணையிலே தண்ணீர் குறைந்தது. இதற்குப் பிறகு, உடனடியாகத் தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தாவிட்டால், சுமார் 80,000 ஏக்கர் நிலம் பாதிக்கப்படும் என்று அங்குள்ள விவசாயிகள் கிளர்ச்சி செய்தார்கள். இதிலே என்ன கோளாறு என்று சொன்னால், போர்ட் அதிகாரிகளும், கோ-ஆர்டினேஷன் கமிட்டியிலிருப்பவர்களும் சில விதி முறைகளை வகுத்திருக்கிறார்கள். இந்த அணையிலே இவ்வளவு அளவு தண்ணீர் இருந்தால் இந்த இரண்டு சானல்களுக்கும் தண்ணீர் விடவேண்டுமென்ற நிபந்தனையை வைத்திருந்தார்கள். ஆனால், அளவு குறைந்தால் அதை





நிறுத்த வேண்டுமென்ற முறையிலே திட்டவட்டமான அளவுக்கு எந்தக் கருத்தும் இல்லை." அந்தக் காரணத்தினால், இராதாபுரத்திற்கு தண்ணீர் கொடுத்து, அதனால் அளவு குறைந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. டிரை-இரிகேஷனுக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று இருந்தது. இராதாபுரத்திற்குத் தண்ணீர் கொடுத்ததை ஆட்சேபிப்பதற்காக நான் அந்தக் கருத்தைச் சொல்ல வில்லை. ஆனால், ஏற்கனவே பாசனம் பெற்றிருந்த 80,000 ஏக்கர்களுக்கும் கொடுத்த தண்ணீர் போக, மீதி தண்ணீரை இராதாபுரத்திற்குக் கொடுக்க வேண்டிய அந்த விவரங்களைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் ஆண்டுக் காண்டு ஆராயவேண்டும், அறிவிக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்த விவ சாயிகள் துன்பங்களும் பிரச்சினைகளும் தீரும். இல்லாவிட்டால், அங்கு பகைமை உணர்ச்சி வளரும். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

அடுத்து, நெய்யார் இரிகேஷன் பற்றி, மேற்குத் தொடர்ச்சி மலையிலே வீணாக ஓடுகின்ற தண்ணீரிலே பங்கு பெற்றுக்கொள்ளுங்கள் என்று அன்றிருந்த திருவிதாங்கூர் அரசாங்கம் தந்தார்கள். 130 கியூசெக்ஸ் தண்ணீர் நமக்குத் தர வேண்டுமென்று அக்ரிமெண்டிலே இருக்கிறது. ஆனால் அவர்கள் சொல்கின்ற அளவிலே தண்ணீர் தருகிறார்களா என்றால் இல்லை. அவர்கள் 125 கியூசெக்ஸ் தண்ணீர் போகிறது என்று அண்மையிலே சொன்னார்கள். ஆனால் இந்தத் திட்டத்தினால் எந்தவிதப் பிரயோஜனமும் இல்லாமல் பலரும் பாதிக்கப்பட் டிருக்கிறார்கள். 125 கியூசெக்ஸ் என்று சொல்கிறார்களே என்று, சூப்பரின் டென்டிங் இன்ஜினியர் மூலமாகவும், கலெக்டர் மூலமாகவும் அதைப்பற்றிப் பரி சோதனை செய்ததில் அங்கு 65, 70 கியூசெக்ஸ் தான் வந்துகொண்டிருக்கிறது. இந்த மாதிரி அவர்கள் கணக்கு சொல்கிற நேரத்திலே பொறநாம் பொது விலே கணக்கு சொல்கிறார்கள். அங்கு வறட்சி ஏற்பட்டிருக்கிறது. விவசாயம் எல்லாம் கெட்டு விட்டது. அரசாங்கத் தரப்பில் இதை முடிவு செய்யவேண்டும். பல வாய்க்கால்களைத் தூர் எடுக்காததன் காரணமாக அவைகள் பாழடைந்து இருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையிலே ஓடுகிற தண்ணீரைப் பெறப் போவதாகத் தமது உரையிலே அமைச்சரவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பேசுகிற நேரத்திலே சுமுகமான தீர்வு காணவேண்டுமென்று கேட்டு இந்த நாட்டி லிருக்கிற விவசாயிகளைக் காப்பாற்றவேண்டும். இந்த உணர்ச்சியோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் என்னவென்றால் இந்த இலாகாவைப் பராமரிக்கிற அந்த என்ஜினீயர் அவர் கேரளாவைச் சேர்ந்தவர், அவர் கன்னியாகுமரியில் எக்ஸிக்யூடிவ் என்ஜினீயராக இருக்கிறார். அவரைத் தேடிச் சென்றால் அவர்

ேர் போயிருக்கிறார் என்று அடிக்கடி சொல்கிறார்கள். திருவனந்தபுரத்திற்கு அவர் அதிகமாகப் போகிறார் என்பதைப் பொறுப்புணர்ச்சியோடு கூறிக் கொள்கிறேன். அவர் இந்த மாதிரி இருக்கிற காரணத்தினால் எங்கள் பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு தண்ணீர் நமக்குக் கிடைக்க வேண்டுமோ அதற்கு அவர் உடந்தையாக இல்லை. அது மட்டுமல்லாமல் அவர் உல்லாசமாக, ஏகபோகமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவருக்கு அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை மக்கள் விவசாயத்தைப் பற்றி அக்கறை இல்லை. அவர் முன்பு பாலிடெக்னிக்கில் இருந்தார். எப்படியோ யாரையோ பிடித்து அவர் துரதிருஷ்டவசமாக எங்கள் பகுதிக்கு, அதாவது கன்னியாகுமரி டிவிஷனுக்கு எக்ஸிக்யூடிவ் என்ஜினீயராக வந்திருக்கிறார். அவருக்குப் பற்றும் பாசமும் கேரளாவில் இருக்கிறது. அப்போது கேரளாவில் இருக்கிறவர்கள் எங்களை படுத்தின பாடுகளை நாங்கள் மறக்க முடியாது. இந்த மாதிரி அதிகாரிகளை எங்களை வஞ்சம் தீர்ப்பதற்கோ என்னவோ எங்களுக்குப் போட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் வஞ்சம் தீர்ப்பதற்காக அந்த எக்ஸிக்யூடிவ் என்ஜினீயரை அங்கே போட்டோம் என்று சொல்கிறார்கள். அப்படியில்லை. அதில் ஏதாவது குறைபாடு இருக்குமானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம்.

நெய்யாற்றைப் பொறுத்த வரையிலே மாவட்ட ஆட்சித் தலைவரும், சூப்பிரண்டெண்டிங் என்ஜினீயரும் பார்வையிட்டு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். இந்த அரசு அதன் பேரில் கேரள அரசோடு தொடர்புகொள்ள முடிவு செய்திருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** விளக்கத்திற்கு நன்றி.

அடுத்தபடியாக இன்னொரு விஷயத்தைக் கூறி விட்டு முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். பாலிடெக்னிக்கில் படித்தவர்கள் பல புகார்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சூப்பர்வைசர்கள், அவர்களுக்கும் பட்டதாரி என்ஜினீயர்களுக்கும் வெவ்வேறு முறை என்ற நியதி இருக்கிறது. இரு சாராரும் ஒரே வேலையைச் செய்கிறார்கள், ஆனால் அவர்களுக்கிடையில் பல விதமான வேற்றுமை இருக்கிறது. அவர்கள் பட்டப் படிப்பு படித்திருக்கிறார்கள் என்று சொன்னாலும், இருவரும் ஒரே வேலையைச் செய்கிற காரணத்தினால் இடை வெளி, ஏற்றத் தாழ்வு அதிகமாக இருக்கக் கூடாது, அது சம்பளமானாலும் சரி, அல்லது வேறு பிரச்னையானாலும் இடைவெளி இருப்பது சரியல்ல. அதுவும் 5 வருஷம் வேலை செய்தால் உரிய ப்ரமோஷன் கொடுக்க வழி செய்யவேண்டும்.



என்ஜினீயர்கள் வேலையில்லாத் திண்டாட்டம் இந்தியா முழுமையாக இருக்கிறது, அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், இதே பிரச்னை தமிழகத்தில் இருக்கிறது. டிப்ளமா படித்தவர்கள், பாலிடெக்னிக்கில் படிக்கிறவர்கள் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கிறது. அவர்களைச் சிறைச்சாலையில் போட்டிருக்கிறார்கள். இந்த மாதிரியான நிலைமை உருவாகாமல் இருக்க வேண்டுமானால் அவர்களுடைய இந்தப் பிரச்னையை மனிதாபிமானத்தோடு, ஹ்யூமன் கன்சிடரேஷனோடு செய்யவேண்டும். முன்பிருந்த விகிதாசாரத்தை மாற்றியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 1 : 3 என்ற விகிதம் இருக்கிறது. Status quo is maintained.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அதற்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல பிரச்னைகள் அவர்களுக்கு இருக்கின்றன. இதை விரிவாக எடுத்துக் கூறுவதென்று சொன்னால் நேரம் ஆகிறது. ஆதலால் இந்தப் பிரச்னையை அதோடு விட்டு விடுகிறேன்.

இன்னொரு விஷயம், இந்த பி.டபிள்யூடி. குவார்ட்டர்வைப் பொறுத்த வரையில் அந்த வாடகையானது சம்பளத்தில் 10 சதவிதமும் அதோடு எச். ஆர். ஏ.-யும் சேர்ந்து போட்டிருக்கிறார்கள். அரசு இப்போது இந்த எச்.ஆர்.ஏ.-யை கொஞ்சம் கூட்டியிருக்கிறார்கள். இதையெல்லாம் கூட்டிப் பார்க்கிற போது அவர்களுக்குப் போடுகிற வாடகை ஃபேர் ரெண்டுக்கு அதிகமாக இருக்கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல் என்.ஜி.ஓ.-க்களுக்கு இது கஷ்டமாக இருக்கிறது. ஏனென்றால் அவர்களுடைய சம்பள அடிப்படையிலே இந்த வாடகையை அவர்களிடத்தில் வசூலிக்கிற காரணத்தினால் அதிகமாகக் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆதலால் ஃபேர் ரெண்ட் அளவில் வாடகை போடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆதலால் என்.ஜி.ஓக்களுக்கு நிவாரணம் அளிக்கிற தன்மையில் இந்த வாடகையைத் திருத்தி அமைக்கவேண்டும். அது அல்லாமல் இப்போதிருக்கிற முறையானது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. கூடுதல் சம்பளம் பெறுகிறவர்கள் 10 சதவிதம் என்பதால் அதிகமாகவும் குறைந்த சம்பளம் பெறுகிறவர்கள் குறைவாகவும் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கேயிருக்கிற அமெனிடிஸ் அடிப்படையில் இந்த வாடகையானது ஏற்படவில்லை. சம்பளத்தின் அடிப்படையில் வாடகையை வசூல் செய்கிறார்கள். இதைப் புனர் பரிசீலனை செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த இலாகாவிலே பல காரியங்கள் இருந்தாலும் எல்லாப் பகுதிக்கும் நீதி வழங்கக் கூடிய முறையில் பள்ளிக் கூடங்களானாலும் மருத்துவ மனைகளானாலும் எல்லாப் பகுதிகளிலும் அமைப்பதற்கு இந்த அரசாங்கம் வழி செய்யவேண்டும். அது அல்லாமல் பட்ஜெட்டிலே பணம் ஒதுக்கிவிட்டு அதை லாப்ஸ் செய்வதற்கு விடாமல் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கூறிக்கொண்டு வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, வீராணம் திட்டத்தைப் பொறுத்தும், வேறு சில குடி நீர்த் திட்டங்களைப் பொறுத்தும் விவாதமே இல்லை என்பதுபோல சில கருத்துக்கள் பரிமாறப்பட்டன. குடி நீர் வாரியத்தில் உள்ள எல்லாத் திட்டங்களும் சூரல் டெவலப்மென்டு விவாதத்தின்போது விவாதிக்கப்பட்டன. வீராணம் திட்டம், மெட்ரோபாலிடன் திட்டத்தின் காரணமாக, இது சம்பந்தமாக கட் மோஷன்கூட கொடுக்கப்பட்டது. வீராணம் திட்டத்தைப் பற்றி விவாதிக்கவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் எண்ணுவது தவறாகும். மக்கள் நல்வாழ்வுத்துறை மானியத்தில் விவாதிக்கப் பட்டது. இந்த திட்டம் மெதுவாகப் போகவில்லை. சுறுசுறுப்பாக நடைபெறுகிற காரியங்களை, தாமதம் இருப்பதாகச் சொல்லி, உற்சாகத்தைக் குறைத்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 3 தொழிற்சாலைகளுக்கு வெளி நாட்டிலிருந்து இயந்திரங்கள் இறக்குமதி செய்து, அதற்கு மத்திய அரசு அன்னியச் செலவாணி உதவி தந்து, இயந்திரங்கள் வாங்கி தொழிற்சாலையை அமைத்து பண்டங்களை உண்டாக்கி தொடக்கவேண்டிய அளவிற்கு இருக்கிற அவ்வளவு பெரிய திட்டமாகும். ஏற்கெனவே முதலமைச்சரவர்கள் காலக்கெடு அமைத்துள்ளார். அதற்குள் முடிக்க மிகத் துரிதமாக பணிகள் நடக்கின்றன என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## (6) நடை முறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### வாரியத் தலைவர்கள் விவாதத்திற்குப் பதிலளிக்கலாமா என்பது குறித்து

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, விவாதம் நடக்கிறபோது, வாரியத் தலைவர்கள் பேசுகிறார்கள். பல வாரியத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்தில் அங்கமாவென்று தெரியவில்லை. அதிகார பூர்வமாக அவர்கள் பேசலாமாவென்று தெரியவில்லை. குடிசை மாற்று வாரியம் என்று பல வாரியங்கள் சொல்கிறார்கள். அமைச்சர்கள்தான் பதில் சொல்லுவதற்கு உரிமை உண்டு. வாரியத் தலைவர்கள் அமைச்சர்களிடத்தில் கருத்துக்களைச்



சொல்லலாமே தவிர அவர்களே அமைச்சர்கள் மாதிரி சொல்லக்கூடாது. இரண்டு வகையான அமைச்சர்கள் இருக்கிறார்களாவென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இதுபற்றிய ஒரு வரம்பு முறை செய்தால் நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : ஏற்கெனவே இரண்டு தினங்களுக்கு முன்னாலே திருமதி அனந்தநாயகி அவர்கள் இப்படிப் பட்ட கேள்வியை எழுப்பினார்கள். நம்முடைய சட்டப்பேரவைத் தலைவரவர்கள் மிகத் தெளிவாக ரூலிங் கொடுத்திருக்கிறார்கள். ஒரு உறுப்பினர் கேட்டால் மாண்புமிகு அமைச்சர்கள் மட்டுமல்ல, இன்னொரு உறுப்பினரும், இந்த மன்றத்தில் இருக்கக் கூடியவர்கள் விளக்கம் அளிக்கலாம் என்று இந்தப் பொறுப்பில் இருந்தவர்கள் தீர்ப்பளித்து இருக்கிறார்கள். அந்த வகையில் ஒரு உறுப்பினர் என்ற முறையில் மட்டுமல்ல, வாரியத்தின் தலைவர் என்ற முறையிலும் அவர்கள் திறம்பட ஆற்றிவருகிற பணிகளை இந்த மன்றத்திற்கு அளிப்பதில் எந்தவிதமான வேறுபாடு அல்லது முறைகேடுகள் இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். கருத்துக்கள், விளக்கங்களைச் சொல்வது என்பது வேறு. அதிகார பூர்வமாகப் பதில் அளிப்பது என்பது வேறு. அதிகார பூர்வமாகப் பதில் சொல்ல பொறுப்பேற்கிறவர்கள் அமைச்சர்கள். ஆகவே பொதுவாக அவர்கள் இதைத் தவிர்ப்பது நல்லது. ஒரு உறுப்பினர் எழுந்து சொல்லிவிட்டு இதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கை என்று சொல்கிற நிலை ஏற்பட்டுவிடும். வாரியத் தலைவர்கள் நிர்வாக அமைப்பில் பணியாற்றுகிறார்கள். அவர்கள் ஏதாவது நற்பணிகள் செய்திருந்தால் பாராட்டலாம்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதை எடுத்துச் சொல்லலாம். ஆனால் அவர்கள் அதிகார பூர்வமாக எதுவும் சொல்வதற்கில்லை. They are not answerable to the House. இந்த மரபை அனுசரிப்பது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வாரியத் தலைவர் என்ற முறையில், உறுப்பினராக இருக்கிறவர் கிளாரிபிகேஷன் என்ற முறையில் சொல்லலாம். அவர் அமைச்சருக்குத் தெரியாத, அவர் அதிகாரத்தை மீறிய தகவலைச் சொல்கிறார்கள் என்று கருதவேண்டியதில்லை. அது பேரவையின் நடவடிக்கைகளுக்கு நல்லதுதான். நடவடிக்கைகளுக்கு உதவி செய்கிற முறையில் சொல்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: உரிமை பற்றியே சொல்லவில்லை. வெளியே பார்க்கும்போது 'ஜாரிங்' என்று பொதுமக்கள் சொல்கிற மாதிரி இருக்கும், அமைச்சர் இருக்கும்போது அவர் சொல்வது. நடைமுறையிலே வந்தால்தான் தெரியும். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களை விட விளக்கம் தெரிந்த பெரிய உறுப்பினர்கள்கூட இருக்கலாம். அதற்காக அவர்கள் உங்கள் மூலமாக அதையும் ஒரு உறுப்பினர் சொல்வது சரியல்ல என்ற என்னுடைய கருத்தைச் சொன்னேன்.

திரு. செ. கந்தப்பன்: பேரவையினுடைய உறுப்பினர் என்ற முறையிலே மாத்திரம் அல்ல, வாரியத்தினுடைய தலைவர் அரசாங்கத்தின் பகுதியாகவும் இருக்கிற காரணத்தால். . . .

திரு. கே. ஏ. மதியழகன்: அமைச்சர்களோடு அதிகாரிகளும் இருக்கிறார்கள், அவர்களும் பதில் சொல்லலாமே, நிர்வாகத்திற்காக இருக்கிற ஒரு வாரியம் அது. உறுப்பினராக இருப்பதற்காகப் பேசலாம், பேசும்பொழுது, விவாதத்திலே பங்குகொண்டு பேசலாம். அவரைப் பற்றி ஏதாவது குறைகள் சொன்னால் பேசலாம். கந்தப்பன் அவர்களுடைய நடவடிக்கையைப் பற்றிச் சொன்னால் பேசலாம். பொதுவாக வீராணம் திட்டம் சரியாக நடைபெறுகிறது என்று அமைச்சர் மூலம் சொல்வதுதான் முறையானது என்று தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. கு. காமாட்சி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். தலைவர் அவர்களே, இந்த விவாதமானது இந்த மானியத்திலே பேசக் கூடாத ஒரு பிரச்சனையைப்பற்றி பேசியதன் காரணமாக வந்தது. இந்த மானியத்தைப்பற்றி பேசும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்கிறார். இந்த வீராணம் துறையைப்பற்றி பேசவேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், ஆர்.டி.எல்.ஏ. அமைச்சர் அல்லது முதலமைச்சர் இருக்கும்போது பேசியிருக்கலாம். அவர்கள் இல்லாத நேரத்திலே இந்த மன்றத்திலே வீராணம் துறையைப்பற்றி தகவல் கேட்கும்போது சம்பந்தப்பட்ட வாரியத் தலைவர் சொல்வதிலே என்ன தவறு இருக்கிறது என்பதை தலைவர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் என்னுடைய கருத்தையும் இதிலே கூறுவதற்கு நான் முற்படுகிறேன்.

சாதாரணமாக, இந்த ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற மந்திரி சபையானது அதனுடைய எல்லா செயல்களுக்கும் முழுப் பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள் என்பது முழுக்க முழுக்க உண்மையாக இருக்கிறது. தனிப்பட்ட ஒரு வாரி-



யத்தின் தலைவரோ அல்லது மன்ற உறுப்பினரோ தன்னுடைய கருத்தை விளக்க வேண்டுமானால் தன்னிலை விளக்கமாக வேண்டுமானால் தன்னுடைய கருத்தைக் கூறலாம். அதல்லாமல், அரசாங்கத் தரப்பிலே கூறவேண்டிய கருத்துக்களாக இருந்தால் அமைச்சர்கள் மூலம் தெரிவிப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதல்லாமல், நம்முடைய உரிமைகளைப் பாதுகாக்கின்ற அளவிலே இருக்கிற நிலையில், இதை நிச்சயமாக பொதுப் பணித்துறை அமைச்சர் கூறியிருந்தால் அது பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பனைப் பற்றி தனிப்பட்ட முறையில் திரு. மதியழகன் அவர்களோ அல்லது மற்ற உறுப்பினர்களோ எந்தக் குறையோ, குற்றச்சாட்டோ ஒன்றும் சொல்லவில்லை. ஆதலால், வீராணம் சம்பந்தமாக ஏதாவது கூறவேண்டுமானால், அமைச்சரவையிலே இருக்கிற அமைச்சர்கள் கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும். பல வாரியங்கள் இப்பொழுது இருக்கின்றன. இன்னும் பல வாரியங்கள் வர இருக்கின்றன. ஒவ்வொரு வாரியத்தின் தலைவரும் இங்கு அங்கமாக இருக்கிற நிலைமையில் பதில் சொல்வது என்று சொன்னால் மிகவும் சங்கடத்திற்கு ஆளாகிவிடும். ஆதலால், இந்த மாதிரியான நிகழ்ச்சி மேலும் நிகழாமல் இருப்பதற்குத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். ஆதலால், அமைச்சர்கள் தான் பதில் சொல்ல வேண்டுமே தவிர, மற்றும் குற்றச்சாட்டுகள் இருந்தால் தன்னிலை விளக்கம் கூறுவதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. பதில் சொல்வது, அமைச்சர்கள் தான் சொல்லவேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. எதிர்தரப்பிலிருந்து வந்தாலும் சரி, வேறு தரப்பிலிருந்து வந்தாலும் சரி, பதில் சொல்கின்ற பொறுப்பு அரசாங்கத்தின் கையிலே இருக்கிறது, அமைச்சரவை கையிலே இருக்கிறது என்ற கருத்தையும் நான் வலியுறுத்திக் கூறிவிரும்புகிறேன்.

* திரு. செ. கந்தப்பன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை இரண்டு மூன்று தடவை நம்முடைய சட்டமன்றத்திலே எழுப்பப்பட்டிருக்கிறது. மிக முக்கியமாக ஆழ்ந்து சிந்திக்கப்பட்டு முடிவெடுக்க வேண்டிய பிரச்சினையாகக் கூட இது இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்களாக இருக்கிற சில அங்கத்தினர்கள் சில பொறுப்பிலே இருக்கிற நேரங்களில், அவர்கள் எந்தப் பொறுப்பு வகிக்கிறார்களோ அந்தப் பொறுப்பையொட்டி, அந்த நிர்வாகத்திலே இருக்கிற சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகிற நேரத்தில், அந்தக் குறைபாடுகளுக்கு நேரடியாக அவர்கள் பொறுப்பு தாங்கிக்கொள்கிற காரணத்தாலே அவர்கள்

பதில் அளித்துத் தீரவேண்டிய கடமை ஏற்பட்டு விடுகிறது. பொதுவாக அமைச்சர்கள் பதில் அளிக்க வேண்டுமென்பதை, அதில் சம்பந்தப்பட்டவர்கள், பொறுப்பாளர்கள் பதில் அளிக்கும்போது, மறுக்கிறார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. (குறுக்கீடு) அதை நான் ஒத்துக்கொள்கிறேன். அது ஜனநாயக மரபாக இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்கங்கள் தெரிந்துகொள்ளத்தான் பேசுகிறார்கள். வாரியத் தலைவர்கள் விளக்கங்கள் தருவதிலே அவர்கள் மகிழ்ச்சி அடையவேண்டுமே தவிர, அதற்காகக் கூச்சப்பட வேண்டியதில்லை. கூச்சப்பட என்ன இருக்கிறது?

நம்முடைய சட்டமன்றத்திலே அந்த மரபு இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. ஆனால் நாடாளுமன்றத்தில், பல்வேறு குழுக்கள் இருக்கின்றன.

"Responsibility is on the Cabinet of Ministers"

என்று இருந்தாலும் சில நேரங்களில் அந்த குழுக்கள் சமர்ப்பிக்கிற அறிக்கைகள் அங்கே விவாதத்திற்கு வருகின்றன. (குறுக்கீடு) நான் தெரிந்து சொல்கிறேன். அங்கே 10 ஆண்டுகள் இருந்தேன். குழுக்கள் இருந்தன, இருக்கின்றன. நானே இந்தப் பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறேன். அங்கே பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, எஸ்டிமேட்ஸ் கமிட்டி எல்லாம் இருக்கின்றன. ஒருமுறை மசானி அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி சேர்மனாக இருந்தபொழுது, சில கேள்விகள் எழுப்பப்பட்டு, அதற்கு அவர்கள் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதைப்போல் மரபுகள் வைத்திருக்கிறார்கள். அது அமைச்சருடைய உரிமையை பாதிப்பதாக அவர்கள் கருதவில்லை. நிதி அமைச்சர்தான் பதில் சொல்லவேண்டும், அந்தக் குழுவினுடைய தலைவர் சொல்லக்கூடாது என்று அங்கு யாரும் சொல்ல முன்வரவில்லை. அமைச்சர்கள் இருக்கும்போது, நாங்கள் விளக்கம் சொல்வது, எந்த வகையிலும் யாரையும் பாதிக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்வதற்குத்தான் பிரச்சினைகளை இங்கே பேசுகிறார்கள். விளக்கங்கள் தெரிந்துகொள்வதற்குத்தான் பிரச்சினைகளை இங்கே பேசுகிறார்கள். விளக்கம் தெரிந்து கொண்டிருக்கிற அந்த சந்தர்ப்பத்திலே இருக்கிற ஒருசில உறுப்பினர்கள் விளக்கங்கள் தருவதாலே, அவை உரிமை மீறப்படவில்லை, அரசின் உரிமை பாதிக்கப்படவில்லை, அரசு தன்னுடைய உரிமையை தட்டிப் பறித்தது என்று சொல்ல முடியாது என்று கருதுகிறேன்.

**திரு. ஆர் பொன்னப்ப நாடார்:** தங்களுடைய அனுமதியின் பேரிலே சம்பந்தப்பட்ட ரூலைப் படித்துக் காட்டுவது நல்லது என்று கருதுகிறேன்.



A member, may, with the permission of the Speaker make a personal **explanation although there is no** question before the House, but in this case no debatable matter may be brought forward, and no debate shall arise.

என்று தன்னிலை விளக்கத்திற்குத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் ரூல் 81 இருக்கிறது. இதுமாதிரியான காரியங்கள் எந்த விதிமுறையிலே வருகின்றன என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இப்பொழுது இருக்கிற விதிமுறையிலே இந்த ஒரு ரூல்படிதான் ஏதாவது கருத்து கூறமுடியும். ஆதலால், மேலும் இதுமாதிரியான நிகழ்ச்சியை அனுமதிக்காமல் இருப்பது தான் பொருத்தமானது என்று கருதுகிறேன். அதைப் பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களையும் ஆலோசித்து, ஒரு முடிவு காணுவது பொருத்தம் என்று கருதுகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் நம்முடைய விதி 81-ஐ எடுத்து, தன்னிலை விளக்கத்திற்கு இந்த விதிதான் என்று கூறினார்கள். எந்த ஒரு உறுப்பினரும் கிளாரிபிகேஷன் செய்யக் கூடாது, கிளாரிபிகேஷன் பண்ணக் கூடாது என்ற முறையிலே விதிமுறைகளிலே இடம் இருக்கிறதா? பொதுவாகப் பார்க்கிறோம், எவ்வளவோ மரபுகளை விட்டுக்கொடுத்து வந்திருக்கிறோம். ஏதாவது ஒரு பிரச்சினை வந்தால், 7 கட்சிகளின் தலைவர்களைப் பேச அனுமதிக்கிறோம், 7 கட்சிகளின் உறுப்பினர்களைப் பேச அனுமதிக்கிறோம். ஆனாலும் கட்சி தரப்பிலே அமைச்சர்களுக்கு உதவிகரமாக இருக்கும் அளவுக்கு வாரியத் தலைவர் உறுப்பினர் என்ற அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, கிளாரிபை செய்யக் கூடாது என்று எந்த விதியில் இடம் பெற்றிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு:** தலைவர் அவர்களே, திரு. மதியழகன் அவர்களால் இந்த பிரச்சினை எழுப்பப்பட்டபோது, அந்த தலைவர் இடத்திலே இருந்து தீர்ப்பு கொடுத்துவிட்டார் உறுப்பினர் வீராசாமி. தீர்ப்பு கொடுத்துவிட்டு இங்குவந்து இப்படி விவாதம் செய்வது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நான் கொடுத்த தீர்ப்புக்கு விரோதமாகத்தான் என்னுடைய வாதம் இருக்கக்கூடாது. அங்கு ஒரு தீர்ப்பு கொடுத்துவிட்டு இங்கு வேறுவிதமாகக் கூறுவதுதான் தவறே தவிர. . . .

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* ஒரு நீதிபதி திருப்பி வழக்கறிஞராக ஆகவேண்டாம். (சிரிப்பு)

*திரு. நா. வீராசாமி :* ரிடையர் ஆனபிறகு, நீதிபதி வழக்கறிஞராகப் போகாமல் வேறு எங்கே போவது?

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* நீங்கள் இன்னும் ரிடையர் ஆகவில்லை. (சிரிப்பு).

*திரு. கே. ஏ. மதியழகன் :* திரு. கந்தப்பன் அவர்கள் எழுப்பிய கருத்தை ஒட்டி ஒரு கருத்து, ஒழுங்குப் பிரச்சினையில் எழுகிறது. ஒன்று கந்தப்பன் அவர்கள் இந்த மன்றத்தினுடைய உறுப்பினர். இந்த மன்றத்தின் உறுப்பினருக்குள்ள எல்லாவிதமான உரிமைகளும் அவர்களுக்கு உண்டு. அவர் வாரியத் தலைவர். அது ஒரு நிர்வாகப் பொறுப்பே தவிர, இங்கே பதில் சொல்வதற்கு எந்தவிதமான பாத்தியத்தையும் அவர் கொண்டாட முடியாது. என்னுடைய நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் டூரிசம் டெவலப்மென்ட் கார்ப்பரேஷனின் தலைவராக இருக்கிறார். அவரும் வந்து கடைசி பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு பதில் சொல்வது என்றால் எப்படி இருக்கும், அதிகாரிகள் வந்து பதில்சொல்வது என்றால் எப்படி இருக்கும்? அமைச்சரிடத்திலே சொல்ல
இரவு 7-00 லாம். கேள்வி எழக் கூடாது என்று அல்ல. கேள்வி எழுந்தால் அமைச்சர்கள் இருக்கிறார்கள் பதில் சொல்ல. இதை எல்லோருக்கும் விஸ்தரிப்பது மரபுகளுக்கும் நல்லதல்ல. பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, சேர்மன், எஸ்டிமேட்ஸ் கமிட்டி சேர்மன் எல்லாம் இருக்கிறார்கள்.

அந்த விவாதங்கள் வருகின்றபோது எஸ்டிமேட்ஸ் கமிட்டி சேர்மன் என்ற முறையில் பேசுகின்றார்களே தவிர, மந்திரிமார்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் துறைகள் பற்றிப் பதில் சொல்லுவதில்லை. ஒரு அமைச்சர் இல்லாவிட்டால் இன்னொரு அமைச்சர் பதில் சொல்லலாம். கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிடி இருக்கிறது. வீராணம் திட்டத்தைப் பற்றி விவகாரமே தெரியாமல் நாங்கள் சொல்லிவிட்டோம், அதனால்தான் பிரச்சினை எழுந்தது என்று சொன்னார்கள். எங்களுக்கெல்லாம் அவ்வளவு விவகாரங்கள் தெரியாது. அந்த உறுப்பினர்களுக்குத் தெரிந்த அளவுக்கு எங்களுக்குத் தெரியாது. வீராணம் திட்டத்தின் பொறுப்பு இப்போதுதான் மாறி இருக்கிறது. ஆனால் வீராணம் திட்டத்தின் மிகப் பெரிய பொறுப்பை ஏற்று நடத்தியவர்கள் நம்முடைய பொதுப்பணி அமைச்சர் அவர்கள். வாரியத் தலைவர்கள் அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டிய நிலையிலே சட்ட சபைக்குள்ளே பேசுவது சரியல்ல.



*திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :* முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் என்னுடைய ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* சில வேண்டாம்., ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

*திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :* இந்தச் சபையிலே ஒரு மெம்பருக்கு கிளாரிபிகேஷன் செய்ய உரிமை இருக்கிறதா இல்லையா என்றால் கிளாரிபிகேஷன் செய்ய உரிமை இருக்கிறது. அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு பதில் சொல்லுவதற்கு உரிமை கிடையாது. அப்படி அல்லாமல் பர்சனல் எக்ஸ்பினனேஷன் என்ற முறையில் சொல்ல உரிமை இருக்கிறது. அந்த வரம்பை மீறி அரசாங்கத்தின் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு பதில் சொன்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது.

*திரு. கு. காமாட்சி :* மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்களைப் பார்த்து விவகாரம் தெரியாதவர் என்று சொன்னதாகச் சொன்னார்கள். நான் அவர்களிடத்தில் மிகுந்த மதிப்பு வைத்திருப்பவன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* விவகாரத்தை வளர்க்க வேண்டாம். விட்டு விடுங்கள்.

ஒரு வாரியத் தலைவர் என்ற முறையில் இந்தப் பேரவையில் யார் வேண்டுமானாலும் விளக்கம் தரலாமா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. திரு. கந்தப்பன் இந்தப் பேரவையின் உறுப்பினர் என்ற அந்தஸ்துதான் முதலில்—பிறகுதான் அவர் வாரியத் தலைவர் என்ற முறையில் விளக்கம் அளிப்பது. ஆகவே, வாரியத் தலைவர் என்ற முறையிலோ, அதிகாரி என்ற முறையிலோ இந்தப் பேரவையிலே விளக்கம் சொல்ல உரிமை கிடையாது. அப்படி இருக்கவும் முடியாது. கிளாரிபிகேஷன் என்ற முறையில் கூட உறுப்பினர்கள் தங்களுடைய உரிமையைக் கோரலாம். மானியக் கோரிக்கை விவாதத்திற்கு கந்தப்பன் அவர்கள் பதில் அளிக்க முன்வந்தால் அனுமதிக்க முடியாது. அவர் சொன்ன விளக்கம் விவாதத்திற்குப் பதில் அல்ல. கேள்விக்குப் பதில் என்று கூட எடுத்துக் கொள்ளலாம். இந்தப் பேரவையின் அனுமதியுடன் தான் வாரியங்களை அமைத்திருக்கிறோம். பேரவையின் உரிமையை மீறி குறிப்பிட்டதாக எடுத்துக் கொள்ள முடியாது. தனிப்பட்ட முறையில் விவாதத்திற்குப் பதில் அளிக்கும் உரிமை எந்த வாரியத் தலைவருக்கும் இல்லை. அப்படி இதற்கு முன்னால் அனுமதிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பதற்கு என்னுடைய துரதிருஷ்டம் இதற்கு முன்னால் வாரியங்கள் இல்லை.

கமிட்டித் தலைவர்கள் அறிக்கையை இந்தச் சபையில் சமர்ப்பிக்க உரிமை இருக்கிறது. திரு. கந்தப்பன் அவர்கள் குறிப்பிட்டது போல் அதுபற்றி அவர்களிடம் கேள்வி கேட்டால் பதில் சொல்ல வேண்டிய கடமையும் இருக்கிறது. அமைச்சர்களுடைய அதிகாரத்தைச் சந்தேகிக்கும் அளவுக்கு அவர்கள் அதிகாரம் மேலே போகிறது என்பது ஒன்றுமில்லை. பேரவையின் கவுரவத்தைப் பாதிக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறு பாதிக்கவில்லை, விவாதத்திற்குத் தெளிவுபெறும் முறையில், உதவி செய்யும் முறையில்தான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும். அமைச்சர் சொல்ல வேண்டிய பதில்கள் கூட உறுப்பினர்களுக்குத் தோன்றலாம். நகைச்சுவையோடு கூடச் சொல்லலாம். எந்த உறுப்பினர் சொன்னாலும், எந்தக் கட்சியில் இருந்து சொன்னாலும் கிளாரிபிகேஷன் என்ற முறையில் நடவடிக்கைக்கு உதவிகரமாகத்தான் இருக்கும், அதிலே தவறு இல்லை, பேரவையின் கவுரவப் பிரச்சினை குறுக்கிடவில்லை என்று தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு அமைச்சரைப் பேச அழைக்கிறேன்.

## (5) 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறைக்காக 64. 32,79,500-ரூபாய்க்கான மானியக் கோரிக்கைகளை இந்த மன்றத்தின் அனுமதியைக் கோரி மன்றத்தின் முன்னால் வைத்திருக்கிறேன்.

தமிழ்நாட்டின் தென்பகுதியிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் அவர்கள் பேச ஆரம்பித்து அதே மாவட்டத்தைச் சேர்ந்த எதிர்க் கட்சித் தலைவர் பேசி முடித்து பலரும் கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களுக்கும், மானியக் கோரிக்கைகளை ஆதரித்துப் பேசிய உறுப்பினர்களுக்கும், மானியக் கோரிக்கைகளின்பேரில் வெட்டுப் பிரேரணை கொடுத்து கண்டித்துப் பேசிய உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலாவதாக, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்துக்களுக்கு விடை அளிக்கலாம் என்று எண்ணுகிறேன். எல்லா உறுப்பினர்களுடைய பேச்சுக்களுக்கும் பதில் அளிக்க முடியுமா, நேரம் இருக்குமா என்று சந்தேகமாக இருந்தாலும் முடிந்த அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்களுக்குப் பதில் அளிக்க விரும்புகிறேன்.



திரு. ஜேம்ஸ் அவர்கள் பேச ஆரம்பிக்கும்போதே கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டமும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன என்ற குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். அது மாத்திரமல்லாமல் கோவை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், தஞ்சை மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்குச் சிறப்பான இடத்தைத் தந்திருக்கிறார்களே தவிர, கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டததிற்கு உரிய இடம் தரப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது அப்படி இல்லையென்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்டச் சாலைகள்—ஸ்டேட் ரோட்ஸ்—எடுத்துக் கொண்டால் 1971-72-ல் மூன்று வேலைகளுக்கு 5 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1972-73-ம் ஆண்டில் ஒரு வேலைக்கு 3 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

அதர் ரோட்ஸ் என்ற திட்டத்தில் 1971-72-ம் ஆண்டில் 6 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. சாலைகளை மேம்படுத்தும் பணியில் 1971-72-ல் ஆறு வேலைகளுக்கு 5 லட்சத்து 95 ஆயிரமும், 1972-73-ல் ஒரு வேலைக்கு 4 லட்சத்து 95 ஆயிரம் ரூபாயும் செலவிடப்பட்டிருக்கிறது.

கிராமப் புறச் சாலைகளுக்காக திருநெல்வேலி மாவட்டத்திற்கு 54 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரை திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒரு கோடி 29 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால் 1970-71-ல் ஸ்டேட்ஸ் ரோட்டுக்கு 1½ லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ரூரல் ரோடுகளுக்கு 94,000 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ரூரல் ரோட்ஸ் புரோகிராமில் 28 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடைபெற இருக்கின்றன. தேசிய நெடுஞ்சாலைகளுக்காகப் 10 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய்க்கும் சிறு பாலத்திற்காக 88 ஆயிரம் ரூபாய்க்கும் வேலைகள் நடைபெற இருக்கின்றன.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1973 மார்ச் 21

நம்முடைய நண்பர் ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது எஸ்.எம்.ஐ.பி. ஸ்கீமில் இந்த இரண்டு மாவட்டங்களும் சரியானபடி கவனிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். விவரங்களைப் பார்த்தால் எஸ்.எம்.ஐ.பி. ஸ்கீமுக்காகப் பணம் ஒதுக்கி இருப்பது—

| | ரூபாய். |
|---|---|
| கோவை மாவட்டத்திற்கு | 44,64,500 |
| தஞ்சை மாவட்டத்திற்கு | 63,35,000 |
| இராமநாதபுரத்திற்கு | 49,12,000 |
| திருநெல்வேலிக்கு | 64,07,000 |
| கன்னியாகுமரிக்கு | 6,54,000 |

என்று ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது திருநெல்வேலி மாவட்டத்திற்கு இராமநாதபுரம் மாவட்டத்தை விட, கோவை மாவட்டத்தை விட அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். கன்னியாகுமரி மாவட்டம் மிகச் சிறிய மாவட்டம். கணக்குப் பார்க்கும்போது ஒரு டிவிஷன் அளவுக்குத்தான் இருக்கிறதே தவிர, பெரிய மாவட்டமாக ஏற்றுக் கொள்ள இயலாது.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சொல்லுவது உண்மைக்குப் புறம்பாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் எஸ்.எம்.ஐ.பி. அண்டு டி.சி.ஆர். ஸ்கீமுக்கு, மேஜர் அண்டு மீடியம் ஸ்கீம்களுக்கு 20 திட்டங்களுக்கு 615 லட்சம் ரூபாய்; கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மூன்று திட்டங்களுக்கு 684 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்துடைய ஆய்வில் இருக்கும் திட்டங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் 70 திட்டங்கள்—1,236 லட்சம் ரூபாய்; கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஐந்து திட்டங்கள்—14 லட்சம் ரூபாய். ஆக இந்த அளவுக்கு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நான் ஜேம்ஸ் அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன். ஆலந்துறையாறு திட்டத்திற்கு ஆட்சேபனை இல்லையென்று சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்கான கன்கரன்ஸ் கொடுக்க வேண்டிய பொறுப்பு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரைச் சார்ந்தது. அவர்களும் அனுமதி தந்திருக்கிறார்கள்.



1973 மார்ச் 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

எனவே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசின் சார்பாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெய்யாறு சானல் பற்றி ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். ஏற்கனவே நான் சொன்னதைப் போல் மாவட்ட ஆட்சித்தலைவரும், சூப்பரின்டென்டிங் என்ஜினியர் அவர்களும் பார்வையிட்டு ரெவின்யூ போர்ட் மூலம் 18—2—1972 இல் அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அந்த அறிக்கை அடிப்படையில் கேரள அரசோடு தொடர்பு கொள்ளப்படும்.

அருவிக்கரை லெப்ட் பாங்க் சானலில் தூர் எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அந்தப் பணிகள் ஏப்ரல் அல்லது மே மாதத்திற்குள்ளாக முடிந்துவிடும்.

அடுத்து, நல்லசாமி அவர்கள் சொன்னார்கள். கொடகனாறு திட்டம் நிறைவேற்ற அனுமதி அளித்தமைக்கு நன்றி பாராட்டினார்கள். அதன் மதிப்பீடு 2,12,00,000. அதற்கான அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றும் முயற்சி அரசுத் தரப்பில் எடுத்துக்கொள்ளப்படும்.

அவர் முக்கியமாகச் சொன்னது நொய்யலாற்றுத் திட்டம். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் ஜப்பார் அவர்களும் குறிப்பிட்டார்கள். அது அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது. diversion of Noyyal river நொய்யல் ஆற்றுத் தண்ணீர்த் திருப்பிவிடும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது அதன் மதிப்பீடு 65 லட்சம் ரூபாய். சிறைமீட்டான் அவர்கள் இராமநாதபுரத்தில் உள்ள பிக் டாங்க் தூர் எடுக்கவேண்டியதுபற்றிச் சொன்னார்கள். இதற்காக ரூ. 20,50,000-ல் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அது போர்ட் ஆப் ரெவின்யூவின் பரிசீலனையில் இருந்துவருகிறது. அதை அரசாங்கத்திற்கு அனுப்பியபிறகு அது பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜப்பார் அவர்கள் நங்காஞ்சியாறு திட்டம் பற்றிச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அதன் மதிப்பீடு ரூ. 60,50,000 ஆகும். நொய்யல் ஆற்றுத் திட்டம் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி ஏற்கனவே நான் விளக்கம் கொடுத்திருக்கிறேன்.

கடலாடி உறுப்பினர் திரு. ராமலிங்கம் அவர்கள் பாலையாறு திட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது ரூ. 14,30,000-க்கான திட்டம். நடைமுறையில் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

நாராயணகாவேரி திட்டம் ரூ. 19,20,000 திட்டம். அது அனுமதிக்கப்பட்டு திட்டத்திற்கான டென்டர்கள் கோரப்பட்டு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மலட்டாறு திட்டம் டிடெய்ல்ட் இன்வெஸ்டிகேஷனில் இருந்து வருகிறது. திரு. சோனையா அவர்கள் எடைகாட்டூரில் வைகை ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டவேண்டுமென்று சொன்னார்கள். அச்சடிக்கப்படாவிட்டாலும் கூட அதுபற்றித் தனியாகத் தரவேண்டுமென்று சொன்னேன்.

Construction of sub-mergeable dam across the Vaigai river.

ரூ. 13,60,000-க்கான திட்டம். சென்ட்ரல் ரோடு பண்டிலிருந்து செய்ய வேண்டுமென்று நடவடிக்கை எடுத்திருக்கிறோம். சென்ட்ரல் ரோட் பண்ட் என்றால் மத்திய அரசு அனுமதி பெற்றுத்தான் நிறைவேற்ற வேண்டுமா என்று கேட்டார்கள். ரூ. 3,37,00,000-க்குத் திட்டம் அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசு இரண்டு கோடி ரூபாய் அளவிற்குத் திட்டம் அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு திட்டம், ரூ. 90,00,000 க்கான திட்டம். இது கொடைக்கானல் உடுமலைப்பேட்டைக்குப் போடக்கூடிய சாலையைப் பொறுத்தது. இதற்கு ஒதுக்கப்படும் தொகையைக் குறைத்துக் கொண்டு ரூபாய் இரண்டு கோடித் திட்டத்தை அனுமதிக்கும்படி கேட்டு அதை நிறைவேற்ற முயற்சிக்கிறோம்.

திரு. எ. கே. சுப்பையா அவர்கள் பேசும்போது 'ஸ்ட்ரெயிட் கட்டிங்க் ஆன் நல்லார்' பற்றிக் குறிப்பிட்டார்கள். அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

'கிளைதாங்கியாறு ட்ரெய்னேஜ் ஸ்கீம்'-க்காக மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்யலாம் என்று மதிப்பீடு இருந்தது. அதை ரிவைஸ் செய்து 15 லட்சமாக்கலாமா அல்லது 20 லட்சம் ஆக்கலாமா என்று மறுபரிசீலனை செய்ய அரசாங்கத்திடம் இருந்து வருகிறது.

அடுத்து லிப்ட்இரிகேஷன்பற்றி திரு. சுப்பையா அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 13 திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். ரூ. 44,50,000 க்கான திட்டங்கள் செயல்பட்டிருக்கின்றன. இப்போது எட்டுத் திட்டங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. ரூ. 22.8 லட்சம் செலவில் அத்திட்டங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.



முடிவு செய்வதற்கு இருக்கிற திட்டங்கள் 4. இருபது லட்சம் ரூபாய்க்கான திட்டங்கள் பரிசீலனையில் இருந்து வருகின்றன. 42 திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

கிளிக்கோடு குளத்தை ரிப்பேர் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அன்னப்பநாய்க்கன்பாளையத்திற்குத் தண்ணீர் வரவேண்டுமென்று சொன்னார்கள். நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. தியாகராசன் அவர்கள் ஆந்திர மாநிலத்தில் திருப்பதியிலிருந்து திருத்தணி வரையில் உள்ள சாலை நாஷனல் ஹைவேஸ் சாலையாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதேபோல் திருத்தணி-சென்னை சாலையையும் நாஷனல் ஹைவேஸ் சாலையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு எங்களுக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் மத்திய அரசு எற்றுக்கொள்ளுமா என்பது சந்தேகம். 12 திட்டங்களை அனுப்பிவைத்தோம். அதில் தூத்துக்குடி-பாளையங்கோட்டையில் உள்ள ஒரு சிறிய சாலையை ஏற்றுக்கொண்டு மற்றவைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் சொன்னது சரியல்ல, அதாவது ஆந்திர நாஷனல் ஹைவேஸ் ஆக அதை மாற்றவில்லை என்ற தகவல் எனக்கு இருக்கிறது. ஸ்டேட் ஹைவேஸ்மூலம் சிறிது செலவு செய்து அதைத் தரமாக வைத்திருப்பதாகத் தகவல் இருக்கிறது. உறுப்பினர் சொன்ன கருத்துக்களை ஏற்று அந்தச் சாலையைச் சீர்படுத்த அரசு சார்பாக ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. குமாரசாமி அவர்கள் திருக்கோவிலூர் அணைக்கட்டுபற்றிச் சொன்னார்கள். திரு. மதியழகன் அவர்கள் சொன்னதுபோல் அது நூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. பெருத்த மழை காரணமாக பெருத்த சேதம் ஏற்பட்டிருப்பது உண்மை. வெள்ள நிவாரணப் பணியின்கீழ் சீர் செய்ய முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பொன்னியாறுபற்றிக் கூறினார்கள்.

ஃப்ளட் பாங்க்ஸ் போடவேண்டுமென்று திரு. குமாரசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். வெள்ள நிவாரணப் பணியின்கீழ் ரூ. 13,80,000 செலவில் எடுத்துக் கொள்ள அரசு முடிவு செய்திருக்கிறது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பெரிய ஏரி, வெல்லிங்க்டன் ரிசர்வாயர் இருக்கிறது. அதைச் சீரமைக்கும் பணிகளுக்கு ரூ. 13 லட்சத்திற்கான திட்டம் அரசின் கவனத்தில் இருக்கிறது. விரைவாக நிறைவேறும் வாய்ப்புகள் இருக்கின்றன.

அடுத்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் அரசாங்கக் கல்லூரிக்கு ஹாஸ்டல் கட்டுவதைப்பற்றிச் சொன்னார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில்.

Government have approved in principle the above work on 26th October 1970 and it has been sent to the University Grants Commission and clearance from the U.G.C. has not yet been received.

இன்னும் யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. அந்த அனுமதி கிடைத்தபிறகு அதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் கடம்பா குளம் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அட்வான்ஸ்-கார், கடம்பாகுளம் மிகவும் சிக்கலான பிரச்னை. அந்தப் பிரச்னையை அரசாங்கம் பரிவோடு கவனித்து நடவடிக்கை எடுத்து இருக்கிறது. கடம்பாகுளம் பொறுத்தவரையில் the estimate for additional four vents in the Poraiyar head sluice and improvement to Poraiyar channel at a cost of Rs. 3.35 lakhs is under the consideration of the Government. அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொல்லவேண்டியது என் கடமையாகும்.

சப்ளை டு சடையனேரித் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது ஜெமினி ஃப்ளை ஓவர்பற்றிச் சொன்னார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் சொன்னார்கள். வெளி நாட்டு நிபுணர்கள் ஜெமினி ஃப்ளை ஓவர் சரியாக அமைக்கப்படவில்லை என்று சொல்லி யிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் போடப்பட்டு, நிறைவேற்றப்பட்டுவிட்ட பிறகு யார் வேண்டுமானாலும் குறை சொல்லலாம்.

The traffic design study revealed that it would be more advantageous to have the fly-over along the Mount Road, so that if this fly-over is to be extended up to Thousand Lights, it can be done. Also the study led to the conclusion that if the traffic along Cathedral Road and Nungambakkam High Road Doveton in due course, it can be handed by a sub-way; the design as now constructed has been made so that it would permit such a sub-way.





இவைகளையெல்லாம் பரிசீலித்துத்தான் இந்த அரசாங்கம் அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி இருக்கிறது.

ஆனால் ஜெமினிஃப்ளை ஓவர் பற்றி இது வரையில் வெளிநாட்டு நிபுணர்கள் எவரும் குறை கூறியதாகத் கருத்துகொண்டுவரப்படவில்லை. அப்படி யாராவது கொண்டு வந்தால், அதைப் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேம்பாலம் 48 அடி அகலப்படுத்தப்பட்டிருக்கிறது. கோபதி நாராயணன் செட்டித்தெருவிற்குத் தனி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் அந்த டிசைனில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாற்றங்கள். இவையெல்லாம் ஜெமினி மேம்பாலம்பற்றியது.

திருநெல்வேலி மேம்பாலத்தைப்பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். திருநெல்வேலி மேம்பாலத்தைப் பொறுத்தவரையில் ரயில்வேத் துறையிடமிருந்து அனுமதி பெறக் காலதாமதம் ஆயிற்று. அது வெகு விரைவில் வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ரயில்வேயிட மிருந்து அனுமதி வந்துவிட்டது. இந்த வேலையும் இந்த ஆண்டுக்குள் முடிந்து விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதைக் கட்டுவதில் ஆரம்பக்கட்டத் தில் பிரச்னை இருந்தது. லேண்ட் அக்குவிசிஷனில் தகராறு ஏற்பட்டது. சிலர் ஹைக்கோர்ட் வரை சென்றார்கள். அதனால் காலதாமதம் ஏற்பட்டது. இப்போது எல்லாம் முடிந்து விட்டது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக இந்த வேலை முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து,தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த உறுப்பினர் சொன்னார். தொட்டஹல்லா திட்டத்திற்காக மத்திய அரசாங்கத்தின் அனுமதி கேட்டு இருக்கிறோம். சில விளக்கங்களை அவர்கள் கேட்டார்கள். அந்த விளக்கங்களைக் கொடுத்து இருக்கிறோம். அந்த விளக்கம் கொடுத்த பிறகு அந்தத் திட்டத்திற்கு அனுமதி கொடுத்து விடுவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. வெள்ளைச்சாமி அவர்கள் உள்ளார்-ஆலத்துறைத் திட்டம்பற்றி சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்காக ரூ. 297 லட்சம் செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். தலைமைப் பொறியாளரின் ரிப்போர்ட் அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது. அந்த ஆலோசனை முடிந்த பிறகு டீடெயில்ட் இன்வெஸ்டிகேஷன் செய்துதான் முடிவிற்கு வரமுடியுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. மாரிமுத்து அவர்கள் தலைவாசல் பாலம்பற்றிச் சொன்னார்கள். அங்கே வெள்ளக்காலத்தில் ஏற்பட்ட சேதத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, அது விரை

வாகக் கட்டி முடிக்கப்பட்டு இருப்பதற்காகப் பாராட்டினார்கள். ரூ. 23 லட்சம் செலவில் வெள்ள நிவாரணப்பணியின்கீழ் இந்தத் தலைவாசல் பாலம் கட்டப்படும் என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பேசிய மாண்புமிகு திரு. மாரிமுத்து அவர்கள், அந்தத் திட்டங்களால் ஏற்படக்கூடிய யூடிலைசேஷன் ஆப் பொடன்சியல் எவ்வளவு லாபம் பெற முடியும், அந்தத் திட்டத்தால் என்ன நன்மை என்பதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைப் பரிசீலிக்கிறோம். அதற்காகக் குழு இருக்கிறது. அதாவது ரெவின்யூ துறை அமைச்சர் தலைமையில் அந்தக் குழு அமைக்கப்பட்டு, பரிசீலிக்கிறது. 6 மாதங்களுக்கு ஒரு முறை பரிசீலிக்கப்படுகிறது. ஏதாவது குறைபாடுகண்டால் அதற்கு நடவடிக்கை எடுத்தும் வருகிறது என்பதை நண்பர் மாரிமுத்து அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் எப்போதுமே 2, 3 பிரச்னைகளைப்பற்றிப் பேசுவார். கூவம், வீராணம்பற்றிப் பேசுவார், மற்ற பிரச்னைகளைப்பற்றிப் பேசுவார் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் அதிகமாகக் கட்மோஷன்கள் கொடுத்தார்கள்.

'To discuss unemployment of Engineers'.

'To discuss revision of scales of pay of Junior Engineers'

இப்படி நிறையக் கொடுத்த அவர்கள், அவைகளைப்பற்றிப் பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் எப்போதுமே பேசிப்பேசிப் புளித்துப் போன வீராணம் திட்டம், கூவம் திட்டத்தைப்பற்றித்தான் பேசினார்கள்.

இப்போது புதிதாக. செம்பரம்பாக்கம் விட்டுவிட்டீர்களா என்று கேட்டார்கள். அந்தத் திட்டத்திற்கு அனுமதி கொடுப்பதற்கு முன்னாலேயே புகார் சொன்னார்கள். பத்திரிக்கையில் பார்த்தேன். திட்டம் அரசாங்கத்தின் அனுமதிக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. இப்போதே என்ன புகார் என்றால் அந்த வேலைகள் யாருக்கோ கொடுக்கப்பட்டு விட்டன என்று புகார் சொன்னார்கள். அந்தத் திட்டம் எந்த அளவில் இருக்கிறது என்று புள்ளி விவரம் கூறுங்கள் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டதற்குப் பின்னாலே, அவர் சட்டமன்றத்தில் இல்லாவிட்டாலும், அவற்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

செம்பரம்பாக்கம் திட்டத்தைப் பொறுத்தவரையில்,

It is proposed to effect improvement to Chembrambakkam in four stages at a cost of Rs. 66 lakhs—improvement to the tank



bund costing Rs. 7 lakhs, improvement to the surplus arrangements at a cost of Rs. 22 lakhs, improvement to the distribution system Rs. 30 lakhs and general improvements to make it a picnic and tourist centre at Rs. 7 lakhs.

ரூ. 66 லட்சம் நான்கு கட்டமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று செய்துள்ளோம் இந்தத் திட்டத்திற்கு முதல் கட்டமாக ஏழு லட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

The entire length of 5 miles is split up into 13 reaches; tenders have been called for and decided on the basis of lowest tender; the work is now in good progress in all the 13 reaches.

எனவே, அந்த செம்பரம்பாக்கம் திட்டத்தில் எந்தவிதமான கோளாறும் கிடையாது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மாண்புமிகு சத்தியவாணிமுத்து அவர்கள் விவசாயத்துறை அமைச்சராக இருந்தபோது நானும் அவர்களும் சென்று பார்த்தோம். அந்தத் திட்டம் முக்கியமானது, அவசியமானது என்று கருதி, அரசாங்கம் அதற்காக ரூ. 64 லட்சம் ஒதுக்கி, நான்கு கட்டமாக அதை நிறைவேற்ற உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. அந்த அடிப்படையில் முதல் கட்டத்திற்காக ரூ. ஏழு லட்சத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டு வேலை நடந்து கொண்டிருக்கிறது.

அடுத்து, பக்கிங்காம் கால்வாய் திட்டத்திற்கான செலவை எடுத்துச் சொல்லி அதற்கான விவரங்களைத் தரவேண்டுமென்று கேட்டார்கள்.

Out of Rs. 44 lakhs sanctioned in August 1967 a good portion has been spent for purchasing the excavator. Construction of Wharf has been spent for purchasing the excavator. Construction of Wharf at Chintadripet roads, etc., will be taken up.

44 லட்சம் ரூபாயில் 34 லட்சம் ரூபாயை இயந்திரச் சாதனங்கள் வாங்குவதற்கும், சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு துறை கட்டுவதற்கும், பாக்கி ரூ. 10.46 லட்சத்தை 1973-74-ம் ஆண்டில் உபயோகிப்பதற்காக அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் பணம் 20 லட்சம். அதிலே

Regarding the allocation of Rs. 20 lakhs, dredging under centrally sponsored scheme a sum of Rs. 8.28 lakhs has been set apart. The plans will be sent in 1973–74.

மத்திய அரசாங்கத்தின் பணம் 8 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. ஏற்கனவே 44 லட்சம் செலவுக்கான விவரங்கள் சொல்லியிருக்கிறேன். இப்போது 50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த பக்கிங்காம் கால்வாய் சீர்படுத்தப்

பட வேண்டுமென்ற திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்து இருக்கிறார்கள். அதற்காக ரூ. 4 கோடி செலவாகலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். முழு மானியமும் மத்திய அரசாங்கம் கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த ஆண்டு ரூ. 1 கோடி எதிர்பார்த்து, ரூ. 50 லட்சம் தமிழக அரசு செலவு செய்யவேண்டுமென்று முடிவு செய்து இருக்கிறோம்.

அக்கினியாறு, திருவணன்சேரிபற்றிச் சொன்னார்கள். அது ரூ. 23 லட்சத்திற்கான திட்டம். அந்தத் திட்டம் முடிவுபெறும் கட்டத்தில் இருக்கிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வடிகால் திட்டங்களைப் பொறுததவரையில் 6.8 கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, வடிகால் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அடுத்து, நம்முடைய உறுப்பினர் திரு. கோதண்டராமையா அவர்கள் அடிக்கடி பேசக்கூடிய தளவாய், அக்காடங்கை டாங், வைரநாய்க்கன்பட்டி டாங் ஆகியவற்றைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். தளவாய்செருவு வேலைக்கு ரூ. 5,06,000 மாவட்ட வறட்சி பணித் திட்டத்தில் ஒதுக்கப்பட்டு வேலைகள நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அககாடஙகை டாங், வைரநாய்க்கன்பட்டி டாங், இவை ஐந்தாவது பிளானில் சேர்க்கப்பட்டு மத்திய அரசாங்கத்தின் அனுமதிக்காக இருக்கிறது.

அடுத்து, மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் விருதுநகர் பைபாஸ்பற்றி சொன்னார்கள்.

This has been sanctioned by Government of India recently on 25th October 1972. Tenders have been settled and these works are being **taken up.** இந்த வேலைகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களுக்கு என்னால் முடிந்தவரை பதிலளித்திருக்கிறேன். இப்போது பொதுவான சில கருத்துக்களுக்குப் பதிலளிக்க முற்படுகிறேன்.

குறிப்பாக காவேரி மாடர்னைசேஷன்பற்றி விவாதத்தில் சொல்லப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததுபோல, உலக வங்கியின் உதவி நமக்குக் கிடைக்க இருந்தாலும்கூட, மத்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைக்காததால், திட்டத்தை நிறைவேற்றமுடியவில்லை. அதற்கான காரணங்களை அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். ஆகவே அதை மீண்டும் சொல்லவேண்டியதில்லை என்று கருதுகிறேன். மத்திய அரசாங்கத்தின் அனுமதி போடு உலக வங்கியின் உதவியைப் பெற்றுத் திட்டத்தை நிறைவேற்ற முடியா





விட்டாலும், காலத்தைக் கடத்தக்கூடாது என்ற நோக்கத்தோடு, நம்முடைய அரசாங்கம் ரூ. 1,2ﾝ8.3 லட்ச ரூபாய்க்கு, அதாவது 12 கோடி ரூபாய்க்குமேல் திட்டம்போட்டு, நான்கு ஆண்டுகளுக்குள்ளாக இந்தத் திட்டம் நிறைவேற வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த 1973-74-க்கு 301 லட்ச ரூபாய் இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரவு 7-30
இந்த திட்டத்துக்கு நாம் கொடுத்திருக்கின்ற பெயர் 'Accelerated Repairs Programme' இந்தத் திட்டம் நிறைவேறும் நேரத்தில் ஒரு சிலர் குறை கூறினார்கள். பத்திரிக்கைகளில் செய்தி வந்தது. நான் அதிகாரிகளைக் கேட்டு அதற்கான விளக்கங்களைப் பெற்றிருக்கிறேன். இந்தக் காவிரிச் சீரமைப்புத் திட்டம் (Cauveri Accelerated Repairs Programme) பற்றி திரு. சி. எஸ். ராமச்சந்திரன், அட்வைசர், சென்டிரல் பிளானிங் கமிஷன், அவர்கள் சொல்லிய கருத்தை மன்றத்திற்கு வைப்பது உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் சிலர் குறை கூறும்போது திரு. சி. எஸ். ராமச்சந்திரன் பார்வையிட்டு ஜூலை மாதம் 4-ம் தேதி கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

Mr. C. S. Ramachandran, Advisor to the Central Planning Commission who toured Thanjavur district for two days told **pressmen** here on Friday that the Planning Commission would suggest to other old irrigation systems the successful progress being made in modernisation of Cauveri delta. He said he had visited several districts where various modernisation schemes were being implemented and he commended to various States in which scheme was permissible, modernisation of old irrigation **system alone would be helpful to make more use of water through** better utilisation and regulating the control flows with modernisation methods would convince the World Bank of efficient use **of financial aid.**

மத்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைக்காவிட்டாலும்கூட, பிளானிங் கமிஷன் அட்வைசர் பார்வையிட்டுச் செய்யலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். இப்படி நம்முடைய திட்டம் பாராட்டப்படுகிற திட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றத் திட்டங்களைப்பற்றிக் கருத்துக்கள் வந்திருக்கின்றன. சில பஞ்சாயத்துத் தலைவர்கள், யூனியன் தலைவர்கள் பாராட்டிச் சொல்லி யிருக்கிறார்கள். அந்தக் கருத்தையும் மன்றத்தின் கவனத்துக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இங்கே காவிரி டிஸ்பியூட் பிரச்னைபற்றி ஒன்றும் சொல்லப்படவில்லையே என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் வருத்தப்பட்டார்கள். கொடுக்கப்பட்டிருக்கின்ற புத்தகத்தில், காவிரிபற்றி அரசாங்கத்தின் நிலைமை தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, காவிரிப் பிரச்னையில் ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

டில்லியில் நடந்த பேச்சு வார்த்தையில் மாண்புமிகு திரு. கே. எல். ராவ், திரு. தேவராஜ் அர்ஸ், திரு. அச்சுத மேனன், நமது முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்னவென்றால் பிரச்னையைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தார்கள். இப்படிப் பேசித் தீர்த்துக்கொள்ள அடிப்படை வேண்டுமென்பதற்காக Fact Finding Committee நியமிக்கப்பட்டு, அதன் ரிப்போர்ட்டைப் பெறலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவின் அடிப்படையில் Cauveri Fact Finding Committee தமிழ்நாட்டிற்கு வந்தது. அதே போல் கேரளத்திற்கும் மைசூர் மாநிலத்திற்கும் சென்றது. பாண்டிச்சேரி மாநிலத்திற்கும் சென்றது. அங்கெல்லாம் சென்று அந்தக் கமிட்டி ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டியின் அறிக்கை என்னிடம் இருக்கிறது. அதை வெளியிடுவதற்கில்லை என்ற காரணத்தால் இங்கே கொடுக்கவில்லை. கமிட்டியின் ரிப்போர்ட் வந்தபிறகு மத்திய அரசு நமது மாண்புமிகு முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். Fact Finding Committee ரிப்போர்ட் வந்திருக்கிறது. மீண்டும் பேசித் தீர்க்க தேதி நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். முதலமைச்சரவர்கள் தேதி நிர்ணயிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய நாட்டில் . . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த அறிக்கை நமக்குச் சாதகமாக இருக்கிறதா, பாதகமாக இருக்கிறதா என்ற விவரங்களையாவது மன்றத்தைக் கான்பிடன்ஸில் எடுத்துக்கொண்டு வெளியிட அமைச்சரவர்கள் முற்படுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, This is a Committee to find facts. எப்படியிருக்கிறது என்பது உறுப்பினருக்குத் தெரியும். அமைப்பைப் பற்றி விவாதம் தேவையில்லை.



திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, தெரிந்த Facts தான். காவிரி நீர்ப் பங்கீடு தமிழ்நாட்டுக்கு எவ்வளவு; மைசூர் மாநிலத்திற்கு எவ்வளவு என்பதுதான் வியாஜ்யம். ஏற்கனவே தெரிந்த Facts. Fact களை Face பண்ணமுடியாமல் கோர்ட்க்குப் போனீர்கள். அதற்குப் பிறகு இப்போது எதிர்க்கட்சித் தலைவர்கள்மீது பழி போடுகிறீர்கள் Fact Finding ரிப்போர்ட்டில் இருக்கிறதை மன்றத்துக்குச் சொல்லலாம். இதெல்லாம் பொது விஷயமேதவிர, மகத்தான பாதுகாப்பு ரகசியம் இல்லை. மைசூர்காரர்களுக்கு எவ்வளவு சேரவேண்டும். நமக்கு எவ்வளவு என்று முடிவு செய்வதற்கு முன்பே எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேட்டு அந்தக் கருத்தைச் சொல்லப் போகிறீர்களா, அல்லது நீங்களே ஒரு கருத்தைச் சொல்லப் போகிறீர்களா என்று சொல்லுவது நல்லதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சுப்ரீம் கோர்ட்டுக்குப் போவதற்கு முன்னால்கூட எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேட்டுத்தான் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனோம். எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்துகொள்ளாமல் போகவில்லை. இந்த ரிப்போர்ட்டைப் பொறுத்தவரையிலும் என்ன முடிவு செய்யலாம் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்யவேண்டிய முடிவாகும்.

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, I want a straight answer from the Hon. Minister. சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனோம் என்று சொன்னார்கள். இதெல்லாம் காலம் கடந்துவிட்ட ஒன்றாகும். 1974-ல் அகிரிமெண்ட் காலாவதியாகப் போகிறது. ஏற்கனவே ஹேமாவதியில் மைசூர்காரர்கள் அணையைக் கட்டிவிட்டார்கள். அதற்குப் பிறகு நாம் கோர்ட்டுக்குப் போனோம் என்றால், அது மந்தத் தன்மைக்கு விளக்கமேதவிர எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னதால் போனீர்கள் என்று பொருளாகாது. கேரளத்தில் திரு. அச்சுதமேனன் அவர்கள் இந்த அறிக்கையைப்பற்றி விவரமாகப் பேசியிருக்கிறார்கள். இங்கே நாங்கள் அறிக்கையை வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன், உங்களுக்கென்று சொந்தக் கருத்து இருக்கிறதா, அல்லது எதிர்கட்சிகள் சொல்லுகிற ஏகோபித்த கருத்தைத்தான் தமிழ்நாட்டின் கருத்தாக முதலமைச்சர் வற்புறுத்தப் போகிறாரா என்பதற்கு நேரடியான பதிலைச் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, எதிர்கட்சித் தலைவர்கள் எல்லாம் கலந்துகொண்ட கூட்டத்தில் அமைச்சரவையில் இருந்த நேரத்தில் நானும் கலந்துகொண்டேன். ஒவ்வொரு நடவடிக்கை எடுக்கிறபோதும் எதிர்கட்சித் தலைவர்களைக் கலந்துகொண்டுதான் எடுக்கப்பட்டது. கடைசியாக

முதலமைச்சர் அவர்கள் வழக்கை கைவிட்டுவிட்டுப் பொதுவான அடிப்படையில் விவாதிப்பது என்பதையும்கூட எதிர்க்கட்சித் தலைவர் ஒத்துக்கொண்டார்கள். அப்போது சபாநாயகராக இருந்த காரணத்தால், ஒரு வேளை உறுப்பினருக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒத்துக்கொண்டது தெரியாமல் இருக்கலாம். பழி போட்டுவிட்டுத் தப்ப வேண்டுமென்பதோ, தாமதம் செய்வதோ அரசின் கொள்கையில்லை. எதையும் பேசித் தீர்ப்பது என்றால் கொஞ்சம் காலமாகும்.

திரு. கே. ஏ. மதியழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் எதிர்கட்சித் தலைவர்களுடன் கலந்ததைச் சொன்னார்கள். பேச்சு வார்த்தைகளில் ஒவ்வொரு கட்டமும் எனக்குத் தெரியும். மைசூர் முதலமைச்சரோடு விவாதித்த கட்டமும் தெரியும். எதிர்கட்சித் தலைவர்களுடன் பல நேரங்களில் பேசியிருப்பதும் தெரியும். என்னுடைய வாதமெல்லாம் எதிர்கட்சித் தலைவர்கள் மீது பழிபோட்டுவிட்டு நீங்கள் தப்பிக்க விரும்புகிறீர்கள் என்பதல்ல. எதிர்கட்சித் தலைவர்களை அழைத்துச் செய்வது, அவர்களையும் சேர்த்துக் கொள்வோம் என்ற கட்டத்துக்கு வந்த பின்னால், இன்றைக்கு நான் கேட்கின்ற ஒரு கேள்வி என்னவென்றால், நீங்கள் சொல்லுகிற அபிப்பிராயம், எதிர்க்கட்சித் தலைவர்களின் கருத்துக்களைக் கேட்டு மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லப் போகிறீர்களா, அல்லது நீங்களாகச் சொல்லப் போகிறீர்களா என்பதுதான். நமது மக்களின் நலனுக்கு ஆபத்து வரக்கூடாது என்பதற்காக வற்புறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

நான் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம் முதலமைச்சர் அவர்கள் Fa^t Find:ng Committee ரிப்போர்ட்டின் பேரில் எதிர்கட்சித் தலைவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு, அந்த அபிப்பிராயத்தை நமது அரசின் அபிப்பிராயமாக வற்புறுத்தப் போகிறாரா அல்லது அரசுக்கென்று தனியாக அபிப்பிராயம் இருக்கிறதா? தனியான அபிப்பிராயம் இருக்கிறதென்றால், அந்த அபிப்பிராயம் என்ன? அது மன்றத்துக்குக் கொடுக்கப்படுமா? கொடுக்காத வரையில் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: வந்திருக்கிற அறிக்கைபற்றி அதிகாரிகள் ஆலோசனை செய்து முடிவுகளை அறிவிக்க வேண்டும். அதன்மீது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அரசின் சார்பிலே மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கையைப்பற்றி முடிவு செய்வார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: முதலமைச்சரவர்கள் முடிவு செய்வது ஒரு பக்கம் இருக்கட்டும். இந்த அறிக்கையைப்பற்றி நீங்கள் எப்படி முடிவு செய்யப்போகிறீர்கள்? எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்து முடிவு செய்யப் போகிறீர்களா அல்லது நீங்களே முடிவு செய்யப்போகிறீர்களா?



மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எப்படி முடிவு செய்யவேண்டும் என்பது பற்றி அதிகாரிகள் விளக்கம் அளித்த பின்னால் முதலமைச்சரவர்கள் முடிவு செய்வார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: எல்லா முடிவுகளையும் எதிர்க்கட்சித் தலைவர்களைக்கேட்டுத்தான் செய்தோம் என்று எல்லோர்மீதும் பழியைப் போட்டிருக்கிறீர்கள். இனிமேல் இதில் செய்யவேண்டிய முடிவை எதிர்கட்சித் தலைவர்களைக் கலந்து செய்யப்போகிறீர்களா இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி. அதிகாரிகள் யோசிக்கட்டும்; எவ்வளவு நாள் வேண்டுமானாலும் யோசிக்கட்டும். நான் கேட்டதற்கு இப்போது பதில் சொல்ல முடியாது; நாளை முதலமைச்சர்தான் சொல்வார் என்றால் அதையாவது சொல்லிவிடுங்கள். நாளைக்கு முதலமைச்சர் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் மதியழகன் அவர்களுக்கு எல்லா விவரங்களும் தெரியும்.

திரு. கே. ஏ. மதியழகன்: பழைய விபரங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். இந்த ஃபாக்ட் ஃபைன்டிங் கமிட்டி ரிப்போர்ட்டைப்பற்றி எப்படி முடிவு செய்யப்போகிறீர்கள் என்றுதான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தும்போது நான்கு முறை நானும் கலந்துகொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் மதியழகன் அவர்கள் ஸ்பீக்கராக இருந்ததால் அவர்கள் வரமுடியவில்லை. ஆகவே, கடைசியாக என்ன முடிவு செய்யப்பட்டது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க முடியாது. ஆனால் எனக்கு அதைப்பற்றித் தெரியும். அதனால்தான் சொல்கிறேன் அதிகாரிகளிடமிருந்து விளக்க அறிக்கை வந்தபின்னால் முதலமைச்சரவர்கள் அதைப்பற்றி முடிவு செய்வார்கள் என்று.

திரு. கே. ஏ. மதியழகன்: நான் அதை மறுக்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர்களுடன் கலந்து பேசித்தான் முடிவு செய்யப்பட்டது என்பதை நான் மறுக்கவில்லை. என்னுடைய கருத்து என்னவென்றால் இந்தப் பிரச்சினையை திரு. வீரேந்திரபட்டீல் காலத்திலேயே சுமுகமாக முடித்திருக்கலாம்; அதற்கு அனுகூலமான நிலைமை அப்போது இருந்தது; அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறி விட்டீர்கள் என்பதுதான். ஆகவேதான், மீண்டும் இப்போது வந்திருக்கிற இந்த அறிக்கையின்மீது எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்து முடிவு செய்யப்படுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது சம்பந்தமாக நடந்த பேச்சுவார்த்தைகளின் பல கட்டங்களில் அவர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள். திரு. வீரேந்திரபட்டீல் அப்போதெல்லாம் எவ்வளவு 'அடமண்டாக' இருந்தார் என்பதெல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்போது நிலைமை என்னவென்றால் 'காவிரி ஃபாக்ட் ஃபைன்டிங் கமிட்டி' ரிப்போர்ட் வரப்பெற்றிருக்கிறது. அதிகாரிகளின் கருத்துக்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அதன்பிறகு தமிழ்நாடு அரசின் கருத்துக்களை மத்திய அரசுக்குச் சமர்ப்பிப்போம்.

அடுத்து, நம்முடைய தமிழ்நாட்டில் 'பூண்டி ரிசர்ச் ஸ்டேஷன்' ஒன்று இருக்கிறது. அதை இப்போது 'பூண்டி ரிசர்ச் இன்ஸ்டிடியூட்' என்று 'அப்கிரேடு' செய்திருக்கிறோம். அதைப்போலவே நீரியல் துறையை இப்போது 'இன்ஸ்டிடியூட் ஆஃப் வாட்டர் ஸ்டடீஸ்' என்று உயர்த்தியிருக்கிறோம்.

அடுத்து, 'கிரவுண்ட் வாட்டர்'-பற்றிப் பல உறுப்பினர்கள் பேசினார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா மாவட்டங்களிலும் இருக்கிற நில நீரை ஆராய்ச்சிசெய்து விரிவான அறிக்கை ஒன்றைக் கொடுப்பதற்காக கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் ஒன்றை அமைத்திருக்கிறோம். தஞ்சை மாவட்டம், பாலாறு பேசின், மணலி ரிஃபைனரி ஆகிய இடங்களில் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். தமிழ்நாடு முழுதும் இதுபோல் ஆராய்ச்சி செய்து ஒரு விரிவான திட்டத்தைத் தயாரிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அதற்காக மத்திய அரசிடமிருந்து 5 லட்சம் ரூபாய் எதிர்பார்த்திருக்கிறோம். அதுமட்டுமல்ல; 11 கோடி ரூபாயில் ஒரு திட்டத்தைத் தீட்டி மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறோம். அதன் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் நிலத்தடி நீரைப்பற்றி ஆராய்ச்சிசெய்து புள்ளிவிவரங்களைச் சேகரித்து அரசுக்கு அனுப்புவார்கள்; அதன்பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பொன்னேரி உறுப்பினர் திரு. நாகலிங்கம் அவர்கள்கூட கிரவுண்ட் வாட்டர்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய பகுதியில் 'கிரவுண்ட் வாட்டர் இயக்ககம்' கிணறுகள் வெட்ட அனுமதிக்கவில்லை என்று சொன்னார்கள். அதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. அங்கே உள்ள தொழில் நிறுவனங்களுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர் வழங்குவதுபற்றி அரசாங்கம் ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறது. அந்த ஒப்பந்தத்திற்கு அரசாங்கம் கட்டுப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களுக்குப் பாதகம் ஏற்படாதபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் குறைகளைப் போக்குகின்ற வகையில் நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகள்மூலம் பரிசீலனை செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து, வெள்ள நிவாரணம்குறித்துப் பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். வெள்ளச்சேதம் ஏற்பட்டபோது அரசாங்கம் உடனடியாகப் பொதுப் பணித்துறை நெடுஞ்சாலைத் துறைப் பிரிவு மூலம் நடவடிக்கை எடுத்தது. அந்தப் பிரிவு விரைவாகப் பணிகளை நிறைவேற்றி வருகிறது. இப்போது மத்திய அரசு கொடுத்த தொகையைத் தவிர பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைப் பிரிவு 8 கோடி ரூபாய் கொடுக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறது. எனவே, கூடியவிரைவில் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்கள் நெடுஞ்சாலைத் துறைப் பிரிவு மூலம் சீராக்கிவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1972-73-ல் பொதுப்பணித் துறை நெடுஞ்சாலைப் பிரிவு ரோடுகள் போடுவதற்காக 2.43 கோடி ரூபாயும் பாலங்கள் அமைப்பதற்கு 75 லட்சம் ரூபாயும் செலவிட்டிருக்கிறது என்ற விவரத்தையும் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டடப் பிரிவைப் பொருத்தவரையில் அரசாங்கம் மார்க்கெட்டிங்-கம்-பிஸினஸ்-கம்-ரெசிடன்ஸ்'—பல மாடிக் கட்டடம் ஒன்றை கட்டுவதற்கு எஸ்டிமேட் தயாரித்திருக்கிறது. அதைக் கட்டி முடிப்பதற்கான திட்டம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில் அரசாங்க அலுவலகத்திற்காக 'மல்டி ஸ்டோரிடு பில்டிங்' ஒன்றைக் கட்டவேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. மேற்கொண்டு அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அரசாங்க ஊழியர்களுக்குக் குடியிருப்பதற்கு வீடு கட்டிக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். வீடு கட்டி வருகிறோம். இந்த ஆண்டு நம்முடைய அரசு 10 லட்சம் ரூபாயை அதற்காக ஒதுக்கியிருக்கிறது. அரசாங்க ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான ஆரம்பத் திட்டமாக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய திட்டங்கள்பற்றிக் கேட்டார்கள். இன்று பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்; பல திட்டங்கள் ஆய்வில் இருக்கின்றன. பாலாறு-பொரந்தலாறுத் திட்டம் 281.60 லட்சம் ரூபாய், பாப்பலாறுத் திட்டம் 39.12 லட்சம் ரூபாய், சின்னாறு திட்டம் 123.90 லட்சம் ரூபாய், தண்டராயாறு திட்டம் 87.68 லட்சம் ரூபாய், நத்தன் திட்டம் 72.1 லட்சம் ரூபாய், கருப்பா

நதித் திட்டம் 154 லட்சம் ரூபாய், பொன்னணியாறுத் திட்டம் 95 லட்சம் ரூபாய், பிளவக்கல் திட்டம் 186.22 லட்சம் ரூபாய், மருதா நதித் திட்டம் 108.90 லட்சம் ரூபாய் ஆகியத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

பவானியில் வறட்டுப்பாளையம் ரிசர்வாயர் திட்டம் 60 லட்சம் ரூபாய்.

சாத்தனூர் அணைக்கட்டு ரைட் சைடு சானல் 202 லட்சம் ரூபாய்.

குண்டரைப்பள்ளம் திட்டம் 46 லட்சம் ரூபாய்.

செங்கோட்டைத் தாலுகா, ஆதவினுர்கோயில் திட்டம் 149 லட்சம் ரூபாய். ரூபாய்.

செங்கோட்டைத் தாலுகா ஆதவினுர்கோயில் திட்டம் 149 லட்சம் ரூபாய்.

வட்டமலைக்கரைத் திட்டம் 70 லட்சம் ரூபாய்.

வரதமா நதித் திட்டம் 103.50 லட்சம் ரூபாய்.

குதிரையாறு திட்டம் 57 லட்சம் ரூபாய்.

அரக்கன் கோட்டை சானல் 19.20 லட்சம் ரூபாய்.

வழக்குப்பாளிபள்ளம் நீர்த்தேக்கத் திட்டம் 52 லட்சம் ரூபாய்.

நல்லதங்காள் ஓடைத் திட்டம் 56 லட்சம் ரூபாய்.

காஞ்சிபுரம் தாலுகாவில் பாலாறு அணைக்கட்டுத் திட்டம் 190 லட்சம் ரூபாய்.

தும்பலஹல்லித் திட்டம் 66.50 லட்சம் ரூபாய்.

பாம்பாறுத் திட்டம் 91 லட்சம் ரூபாய்.

கொல்லிமலைத் திட்டம் 319 லட்சம் ரூபாய்.

குடகனாறுத் திட்டம் 212 லட்சம் ரூபாய்—ஆகிய திட்டங்கள் ஆய்வில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் பாம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்பற்றிப் பேசினார்கள். அதுபற்றிய எல்லா விபரங்களும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களேகூட பல சந்தர்ப்பங்களில் அது பற்றிய விவாதங்களில் கலந்துகொண்டிருக்கிறார்கள். அந்தச் சரித்திரம் எல்லோருக்கும் தெரியும். முதலில் 9—11—1958-ல் திரு. காமராஜ் அவர்களுக்கும் திரு. இ.எம்.எஸ். நம்பூதிரிபாத் அவர்களுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அது முழு வடிவம் பெறாததால் 10—5—1969-ல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களும், திரு. இ.எம்.எஸ். நம்பூதிரிபாத் அவர்களும் மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்களின்



ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதன்படி ஒரு மாதத்திற்குள் பேச்சு வார்த்தை முடியவேண்டும் என்று தெரிவித்தார்கள். ஆனால் ஒரு மாதத்திற்குள் கேரள மந்திரிசபை கலைந்துவிட்டது. அதனால் பல பிரச்சனைகள் ஏற்பட்டன. முதலிலே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி சிறுவாணித் திட்டத்திலிருந்து அவர்கள் 1.3 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டும் என்றும், பரம்பிகுளம் திட்டம் பவானிலிருந்து 2.5 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டுமென்றும் ஏற்பாடு ஆகியிருந்தது.

அதற்குப் பின்னால் அவர்கள் எங்களுக்கு அட்டப்பாடி வேலைக்குத் தண்ணீர் வேண்டும்; அதனால் 2.5 டி.எம்.சி. தண்ணீர் போதாது; 5 டி.எம்.சி. தண்ணீர் வேண்டுமென்று கேட்டார்கள். 2.5 டி.எம்.சி. தண்ணீர் தருவதாக ஒப்பந்தம் செய்துகொண்டபோதே இந்த மன்றத்தில் திரு. கருத்திருமன் அவர்கள் 'அடமானம் வைத்துவிட்டார்கள், விற்றுவிட்டார்கள்' என்றெல்லாம் கூறிய வார்த்தைகள் திரு. மதியழகன் அவர்களுக்குத் தெரியும். இனி 5 டி.எம்.சி. தண்ணீருக்கு நாம் ஒப்புக்கொண்டால் என்ன நிலைமை இங்கே ஏற்படும் என்பதை நாங்கள் எண்ணிப்பார்க்கிறோம். ஆகையால் நாங்கள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. இந்தப் பிரச்சினையில் தகராறு இருக்கிறது. இருந்தாலும் அதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அண்மையில்கூட நான் இதுபற்றிப் பேசிவிட்டு வந்தேன். மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாள் கேட்டிருக்கிறோம். இதுபோன்று இன்றைய தினம் பரம்பிகுளம்-ஆளியாறு திட்டத்திற்கு இவ்வளவு பணம் செலவழித்திருக்கிறோம் ஆனால் அதைப்பற்றி ஒன்றும் பேசவில்லை என்று குறிப்பிட்டார்கள். பேச்சு வார்த்தைக்குப் பிறகு இன்று அப்பர் நீராற்றுத் திட்டத்திற்கு அனுமதி கொடுத்து விட்டார்கள் கேரளத்தில்—ஆனால், லோயர் நீராற்றுத் திட்டத்திற்கு இன்னும் அனுமதி வழங்கவில்லை. கேரள அரசு சில விவரங்களைச் சொல்லிக் கொண்டு காலதாமதம் செய்துகொண்டு வருகின்றார்கள். இப்போது அரசு மட்டத்தில் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. எனவே இந்தத் திட்டங்களையெல்லாம் உரிய நேரத்தில் முடிக்கக்கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இப்படிப்பட்ட பேச்சு வார்த்தைகளிலே சங்கடங்கள் இருப்பது இயற்கைதான். ஆனால் சிறுவாணி—கோயம்புத்தூர் திட்டம் எவ்வளவு நாள் பிரச்சினை என்பது அந்த மாவட்டத்தின் அமைச்சர் என்ற முறையில் உங்களுக்கு நன்கு தெரியும். சாதாரணமாக ஒரு நகரத்திற்குக் குடி நீர் வழங்குவதற்கான திட்டத்தில் எந்த மாநில அரசும் உரிமைகளைக் கோருவதில்லை. திரு. இ.எம்.எஸ். அவர்கள் மிகப் பெருந்தன்மையோடுதான்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1973 மார்ச் 21

அதைக் கொடுக்க முன்வந்தார்கள். ஆனால் இன்றுள்ள நிலையில் சீக்கிரமாக ஏதாவது நடவடிக்கை எடுத்து இதை நிறைவேற்றப்போகின்றீர்களா, எடுக்க முன் வருகின்றீர்களா என்றுதான அறிய விரும்புகின்றேன். இவ்வளவு காலதாமதம் ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை.

இங்குள்ள அமைச்சரவையும் மிக வலிவான அமைச்சரவைதான். ஆனால் திடீரென்று சிறுவாணித் திட்டத்தை கைவிட்டுவிட்டார்கள். இப்போது அமைச்சர் அவர்கள் கோயம்பத்தூருக்குப் பக்கத்திலேயே வேறு ஒரு திட்டத்தைப்பற்றிப் பரிசீலித்துக்கொண்டு இருக்கின்றோம் என்று இதை விட்டு விட்டார்கள். இதற்காகச் செலவிடப்பட்ட பணம் வேஸ்ட்தானா என்று யோசிக்கவேண்டும்.

அடுத்து, இப்போது சோலையாறுத் திட்டத்தினால் பலனில்லை, மின்சாரம் கிடைக்காது என்று சொல்லப்படுகிறது. பன்னிரண்டு, பதிமூன்று கோடி ரூபாயை இந்தத் திட்டத்தில் முடக்கி விட்டு, இப்போது அதனால் பலனில்லை, அல்லது ஒப்பந்தமாகவில்லை என்று ஏதோ காரணங்களைச் சொல்லிக்கொண்டு இருந்தால் இதற்குக் காலவரையறையே இல்லையா? அப்படியானால் அவர்கள் என்னதான் சொல்லுகின்றார்கள் என்று நீங்கள் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கின்றீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் அவசியமானால் 'க்ளாரிஃபிகேஷன்' கேட்கலாம். ஆனால் ஒரு 'ஸ்பீச்சை'-யே செய்வது என்றால் நேரமாகிவிடுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: துணைத் தலைவரவர்களே, இந்தப் பாண்டியாறு பொன்னம்புழா திட்டமானது 1963-ம் ஆண்டிலே தம் இரண்டு அரசுகளுக்கிடையே செய்துகொண்ட ஒரு ஒப்பந்தத்தின்படி 14 டி.எம்.சி. தண்ணீரை நாம் உபயோகித்துக்கொண்டு அதனால் மின்சாரத்தை உற்பத்திசெய்துகொண்டு அந்தத் தண்ணீரைக் கோளத்திற்கு மின்சாரத்திற்கும் விவசாயத்திற்குமாகக் கொடுப்பது என்று ஏற்பட்டது. இந்தப் பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தினால் கோவை, பல்லடம், அவனாசி ஆகிய மூன்று தாலூக்காக்களிலுள்ள வறண்ட பகுதிகளுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் கொடுப்பதாக இருந்தது. இப்போது என்ன சொல்லுகின்றார்கள் என்றால் பழைய ஒப்பந்தத்தின்கீழ்தான் நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லுகின்றார்கள். நாங்கள் சொல்லுவது 14 டி.எம்.சி. யில் என்ன அளவிற்கு மின்சாரம் உற்பத்தியாகுமோ அந்த அளவிற்கு மின்சாரம் உற்பத்தியாகத்தக்க அளவிற்கு அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கிறோம் என்று சொன்னதற்கு அவர்கள் பரிசீலித்துப் பதில் சொல்லுகிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள்.



1973 மார்ச் 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

அடுத்து, தூத்துக்குடித் துறைமுகத்திட்டம்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் கொஞ்சம் கண்டித்தே பேசினார்கள்—ஏன் இதில் இவ்வளவு காலதாமதம் ஆகிறது என்று கேட்டார்கள். காலதாமதம் ஆவதற்கான விளக்கங்களையெல்லாம் கேட்டு அதையொட்டிய கடிதப்போக்கு வரத்துபற்றியும் குறிப்பிட வேண்டும் என்று சொன்னார்கள். அவர் கேட்டுக்கொண்டபடி அந்தக் கடிதத்தின் முக்கியமான பகுதிகளைப் படித்துக் காண்பிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நமது அரசின் சார்பாக நம் அமைச்சர் அவர்கள் இந்தக் கடிதங்களை எழுதியிருக்கின்றார்கள்.

*Letter, dated* 15*th December* 1972 *from our Government to Shri Raj Bahadur of the Shipping and Transport Ministry, New Delhi.*

"Kindly refer to the Progress report on the Tuticorin Harbour Project, Tuticorin periodically submitted by the Chief Engineer and Administrator, T.H.P., Tuticorin, during the period from January 1972 to September 1972, direct to the Government of India in the Ministry of Shipping and Transport (an extract of statement showing at a glance the progress in the different items of work from January 1972 to September 1972, in the THP, Tuticorin is enclosed). It may be observed that the North breakwater has been completed up to only 42.85 per cent of its total length and dumping of stones including core has reached only 49.5 per cent of its total quantity. Average dumping per month for the past three months (July, August and September) comes to 31,000 tonnes. In this connection the State Port Officer, Madras has pointed out that with an increased tempo of 35,000 tonnes per month, North breakwater might be expected to be completed by July 1975, that the Southern Breakwater with its present rate of progress might be expected to be completed by August 1973 and that the construction of berths might take at least 2 years from August 1973. This will be around August 1975. It is observed from that report that both Northern and Southern breakwaters with berths might be completed by August 1975, and construction of pier heads might take another six months from that date, that is, by the end of March 1976, and that the THP, Tuticorin might be ready to take ships, provided dredging is taken up simultaneously and completed before the end of 1975. Considering the present rate of progress and the work completed so

far, the State Port Officer is of the opinion that the entire Harbour Project might be completed and ready to take ships by April 1976.

One plan and a graph showing the work done up to the end of September 1972 and the balance portion of work yet to be taken up is enclosed for your information.

As you may be aware, the Government of India have cleared the Fertiliser Project at Tuticorin and the factory requires liquid cargo such as Naphtha and fuel oil to the tune of 4.60 lakh tonnes and solid raw materials, such as sulphur, rock phosphate and potash to the tune of 2.92 lakh tonnes to be imported through Tuticorin major harbour. The finished fertilisers to the tune of 2.10 lakh tonnes are also required to be shipped at Tuticorin major harbour. The fertiliser complex depends on the harbour for their import of raw materials and export of finished products.

At the present rate of progress, it appears unlikely that the oil jetty and at least two berths which are required by the fertiliser complex at Tuticorin may not be made available to them by the middle of 1973, as originally contemplated. While viewing with concern the delay, may I request you kindly to take such measures as are necessary to accelerate the progress in the execution of the Project".

இது நமது அரசாங்கத்தின் சார்பாக எழுதப்பட்ட கடிதம். இந்தக் கடிதத்திற்கு வந்துள்ள பதிலை நான் படித்து விடுகின்றேன்.

"Dear Shri Aditanar,

I am in receipt of your D.O. letter No. 1595/F2/72, dated 15th December 1972. I am aware that the progress of work in the Tuticorin harbour is not what it should have been. As you know, major civil construction works in respect of both the south breakwater pier heads, wharf walls, etc., and the North breakwater are being executed by Messrs. Andhra Civil Construction Co., Madras. The firm has been facing acute difficulties, mainly financial; their grievances have been looked into in the past and certain relief measures within the overall scope of the contracts were afforded to them. Lately they have represented to the Government for the grant of certain concessions. Their representation is presently under examination by us. I assure you that my



Ministry is fully seized of the matter. We realize that the project has suffered a set back and we are endeavouring to ensure that the project does not get unduly delayed. We are endeavouring to be able to use the wharf in the Tuticorin Harbour by the end of 1973 so that the port is commissioned for limited service if not wholly."

This is the letter, dated 29th December 1972 from Mr. Raj Bahadur from the Ministry of Parliamentary Affairs and Shipping and Transport, New Delhi.

எனவே தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தினைப் பொறுத்தமட்டில் நமது அரசின் காரணமாக எந்தவிதமான கால தாமதமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அடுத்து 'பை-பாஸ்' சாலைகள் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தேசிய நெடுஞ்சாலை என்ற முறையில் சென்னை-நெல்லூர், சென்னை-பெங்களூர், சென்னை-திருச்சி ஆகிய சாலைகளில் 'பை-பாஸ்' பாதைகள் அமைப்பதற்கு ரூ. 75 லட்சம் செலவில் இப்போது வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன. அதுபோல கோயம்புத்தூர் 'பை-பாஸ்' சாலை போடுவதற்காக 'லேண்டு அக்விசிஷன்' நடைபெற வேண்டியிருக்கிறது.

மேலும் இங்கே 'செக்ரடேரியேட்'டில் ரூ. 1.26 கோடி செலவில் ஒரு கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. அதுபோல டெல்லியிலுள்ள 'தமிழகத்தை மேலும் சற்று விரிவுபடுத்த வேண்டும் என்று திட்டம் போட்டு நமது அரசினால் அங்கீகாரம் செய்யப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

அடுத்து, மிக முக்கியமான திட்டம் பாம்பன் ப்ரிட்ஜ் திட்டம் சுமார் 5½ கோடி ரூபாய் செலவில் அங்கீகரிக்கப்பட்டு டெண்டர்கள் கோரப்பட்டு இருக்கின்றன. டெண்டர்ஸ் ஃபைனலைஸ் செய்யப்பட்டபிறகு வேலைகள் நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், ஜெமினி மேம்பாலம், அடையார் பாலம், மவுண்ட் ரோடு வெல்லிங்டன் பாலம் ஆகியவற்றை சீரமைக்க காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் டி.வி. ஸ்டேஷன் மத்திய அரசால் குறிக்கப்பட்ட இடத்தில் ரூ. 40 லட்சம் அளவுக்கு கட்டிடங்கள் கட்ட மத்திய அரசு அனுமதி கொடுத்து, பொதுப் பணித்துறையின் மூலம் சீப் எஞ்சினியர்—

பில்டிங்ஸ் மூலமாக நிறைவேறிக்கொண்டிருக்கிறது. 150 மீட்டர் உயரத்திற்கு ரிவால்விங் டவர் கட்டவேண்டுமென்று கோரிக்கை மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பக்கிங்ஹாம் கேனலைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டேன். அதில் மூன்று பாலங்களைச் சீர்படுத்த திட்டம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. சேமியர்ஸ் ரோடு பாலம், எட்வார்ட் எலியட்ஸ் ரோடு பாலங்களை ரூ. 30 லட்சம் திட்டத்திலே சீர்படுத்த அரசு அனுமதி அளித்திருக்கிறது.

சென்டிரல் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் பார்க் ஸ்டேஷனுக்கும் மூர் மார்க்கெட்டுக்குமிடையே சப்-வே கட்ட அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. மேலும், சென்டிரல் ஸ்டேஷனுக்கு முன்புரம் இருக்கிற பாலத்தையும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ரெயில் ஓவர் பிரிட்ஜுகளைப் பொறுத்தவரையில் தென்காசி—மதுரை ரோட்டில் ரூ. 36 லட்சம் திட்டமும், திருச்சி—நாமக்கல் ரோட்டில் ரூ. 15 லட்சம் திட்டமும் தூத்துக்குடி-திருநெல்வேலி ரோட்டில் ரூ. 15 லட்சம் திட்டமும், பெரம்பலூர்-மாணமதுரை ரோட்டில் ரூ. 15 லட்சத்தில் ஒரு திட்டமும், கடலூர்-திருச்சி ரோட்டில் ரூ. 25 லட்சத்தில் ஒரு திட்டமும் அரசினிடம் இருக்கிறது. மதுரை முனிசிபாலிடிக்கு அருகாமையில் ரூ. 40 லட்சத்தில் ஓவர் ப்ரிட்ஜ் கட்டுவதற்கு புரபோசல் பெண்டிங்காக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சிவப்பிரகாசம் அவர்கள் பேசும்போது, அட்வான்ஸ் கார் பற்றி குறிப்பிட்டு, அப்பேர்பட்ட புகார்கள் ஏதும் இல்லாத அளவுக்கு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். பழைய காலத்திலிருந்தே இந்தப் போராட்டம் இருக்கிறது. எத்தனை ஆண்டுகாலம் இந்தக் குற்றச்சாட்டு இருக்கிறது என்றும் சொன்னார்கள். இதில் எந்தவிதமான குற்றச்சாட்டுகளுக்கும் இடம் இல்லை, சுமுகமான நிலை இருக்கிறது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேங்க் மஸ்தூர் பற்றிச் சொன்னார்கள். நெடுஞ்சாலையில் பணி ஆற்றுகிற கேங்க் மஸ்தூர்களை புரோவின்ஷியலைஸ் பண்ணவேண்டும் என்பது ரொம்ப பழைய காலப் பிரச்சினை. சரித்திரத்தைப் படித்துப் பார்க்கும்போது 1947-ஆம் ஆண்டு நெடுஞ்சாலைகள் டிஸ்ட்ரிக்ட் போர்டினிடமிருந்து அரசுக்கு



மாற்றப்பட்ட காலத்திலிருந்து இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆக இது 30 ஆண்டுக்காலப் பிரச்சினை. சுமார் 11,500 கேங்க் மஸ்தூர்கள் வேலை செய்கிறார்கள். 5 ஆண்டு, 10 ஆண்டு, 15 ஆண்டு, 25 ஆண்டு என்று சர்வீஸ் செய்திருந்தும்கூட இவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்ற நீண்ட நாள் கோரிக்கையாக இது இருந்து வந்தது. மேலவையில் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் பொதுப்பணித் துறையின் மானியத்தின்போது இது அறிவிக்கப்படும் என்று, திரு. பராங்குசம் ஒரு கேள்வி கேட்டபோது.

அந்த முடிவை இப்போது நான் அறிவிக்கவிருக்கிறேன். இப்போது கேங்க் கூலிகளுக்குத் தரப்படுகிற சம்பளம்—எல்லாம் சேர்த்து ரூ. 127. அவர்கள் சங்கத்தின் சார்பாக என்ன கோரிக்கை வைத்தார்கள் என்றால், “நாங்கள் அதிகமாகச் சம்பளம்கூட கேட்கவில்லை, 20 ஆண்டு, 15 ஆண்டு சர்வீஸ் செய்தவர்களை ரெகுலரைஸ் செய்யுங்கள்” என்று. அவர்களது கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து, பத்து ஆண்டுகளுக்கும் அதற்கு மேலேயும் சர்வீஸில் உள்ளவர்கள்—அவர்கள் கேட்டது 15 ஆண்டுக்கு மேல்—ஆனால் நாம், 10 வருஷம் அதற்கு மேல் சர்வீசில் உள்ளவர்களை எல்லாம் புரொவின்ஷியலைஸ் செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. (கரவொலி). 10 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்தவர்களின் எண்ணிக்கை 6,500 பேர்கள். அவர்களின் சம்பளம் ரூ. 127 என்று இருந்தது. ரெகுலரைஸ் செய்யும்போது ஒரு ஸ்பெஷல் பே கொடுப்பது என்று முடிவு செய்து ரூ. 100 ப்ளஸ் ரூ. 30 என்று கொடுப்பது என்றும் அதற்கும் மேலாக, அவர்கள் இருக்கின்ற இடத்திற்கேற்ப, சிடி காம்பன்சேடரி அலவன்ஸ் ஆகியவை கொடுப்பது என்றும் இதனால் 6500-க்கு மேற்பட்ட கேங்க் மஸ்தூர்கள் பயனடைவார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (கரவொலி).

ஜே. ஈ-க்களைப் பற்றிச் சொன்னார்கள், நிறைய புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. இவர்களுடைய சம்பள விகிதம்—பே கமிஷன் சிபாரிசு செய்தபடி—ரூ. 400–15–20–650. இவர்கள் அனோமலி கமிஷனுக்குப் போனபோது, அசிஸ்டன்ட் புரொபசர்களுக்கு கொடுக்கக் கூடிய ரூ. 425-20-650 ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்டு, அனோமலி ஒன்றுமில்லை என்று ஒன் மேன் கமிஷன் கூறியிருந்தும்கூட, இவர்களுடைய சம்பள விகிதங்கள் தற்போது மாற்றப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய மாற்றப்பட்ட சம்பள விகிதம்—ரூ. 425-20-575-25-650 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1973 மார்ச் 21

அடுத்து, சொல்லக்கூடிய பிரச்சினை என்னவென்றால், ஹவுசிங் போர்ட், வாட்டர் போர்ட் ஆகியவற்றில் வேலை செய்கிறவர்களை பொதுப்பணித் துறையிலிருந்து டெபுடேஷனில் அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு நிறைய புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. இந்தத் துறையில் பதவி உயர்வில் தேக்க நிலை இருப்பதாகச் சொன்னார்கள். உண்மையில் அப்படியல்ல. அது சம்பந்தமான புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, 1960-ல் ஒரு சி.ஈ. 63-லும், 66, 67 வரை ஒரே சி.ஈ. இன்றைக்கு நூல் அண்டு நேஷனல் ஹை வேசையும் சேர்த்து 2 சி.ஈ., சி.ஈ.-க்கள் டெபுடேஷனில் இருக்கிறார்கள்—ஆன் அதர் ட்யூட்டி—ஆக மொத்தம் 5 சி.ஈ.-க்கள் இருக்கிறார்கள்.

சூபரென்டெண்டிங் எஞ்சினீயர்கள் :

1960—7.

1963—7.

1966—6.

1969—7.

1972—17.

ஆன் டெபுடேஷன் 4.

ஆக மொத்தம்—21.

டிவிஷனல் எஞ்சினீயர்கள்.

1960—28.

1963—43.

1966—36.

1969—32.

1971—77.

இதில் டெபுடேஷன்—19,

அசிஸ்டண்ட் எஞ்சினீயர்கள்.

1960—144.

1963—159.

1964—166.

1969—229.



1973 மார்ச் 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

1970—315.

டெபுடேஷன்—75.

மொத்தம்—414.

ஜே. ஈ. சூபர்வைசர்கள :

1960 615.

1969 887.

1972 1,274.

டெபுடேஷன்—7.

மொத்தம்—1,350.

பொதுப்பணித் துறை எடுத்துக்கொண்டால், 28—3—1973-ல் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு :—

சூபர்வைசர்—947, டெபுடேஷன்—65.

அசிஸ்டண்ட் எஞ்சினீயர்—1,000, டெபுடேஷன்—127.

எக்சிக்யூடிவ் எஞ்சினீயர்—191, டெபுடேஷன்—79.

சூபரின்டெண்டிங் எஞ்சினீயர்—30, டெபுடேஷன்—10.

சி.ஈ.—9, டெபுடேஷன்—6.

இந்த அளவுக்கு இலாக்கா விரிவடைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கணக்கைப் பார்க்கும்போது இன்றைக்கு சிவில் எஞ்சினீயர்கள் குறைவாக இருக்கிறார்கள். மெக்கானிகல் எஞ்சினீயர்கள், எலெக்டிரிக் எஞ்சினீயர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். இன்றைக்கு என்ன செய்கிறோம் என்றால், மெக்கானிகல் எஞ்சினீயர்களுக்கு 'ஓரியண்டல் கோர்ஸ்' என்ற முறையில் பயிற்சி கொடுத்து சிவில் எஞ்சினீயர்களாக வைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. டெபுடேஷனில் இருக்கிறவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கிறபோது, பி.டபிள்யூ.டி.-யில் இருக்கிறவர்களுடைய கோரிக்கை என்னவென்றால், வாடர் சப்ளை போர்டு, ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு, ஹவுசிங் போர்டு, மற்றுமுள்ள கார்ப்பரேஷன்களிலுள்ள எஞ்சினீயர்களையெல்லாம் சேர்த்து, 'ஒன் யூனிட்' என ஒரு காமன் பூல் ஏற்படுத்த வேண்டுமென்று. முன்பே, இதற்கு விளக்கம் சொல்லும்போது சொன்னேன். அசோசியேஷன் ஆப்

எஞ்சினீயர்கள், ' எஞ்சினீயர்கள் டே ' கொண்டாடினார்கள் அந்த என்ஜினீயர்களுடைய அசோசியேஷன் சார்பாக அந்த விழா கொண்டாடப்பட்டது. அந்த அசோசியேஷனில் மராமத்து இலாக்காவைச் சேர்ந்த பொறியாளர்கள் இருக்கிறார்கள். ஹைவேஸ் இலாக்காவைச் சேர்ந்த பொறியாளர்கள் இருக்கிறார்கள். இன்னும் வாட்டர் போர்டைச் சேர்ந்த என்ஜினியர்கள் இருக்கிறார்கள். ஆக, எல்லாத்துறைகளையும் சேர்ந்த பொறியாளர்கள் அந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பதனால் நான் அவர்களிடம் சொன்னேன். நீங்கள் எல்லாரும் சேர்ந்து ஒரு அக்ரீட் ஃபார்மூலாவைக் கொடுத்தால் அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும் என்று தெரிவித்திருக்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அந்தப் பொறியாளர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வருவதற்குப் பதிலாக அரசாங்கமே அவர்கள் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு நியாயமான தீர்ப்பை வழங்குவது சாலச் சிறந்ததாக இருக்கும் அல்லவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவர்கள் எல்லோருமே சேர்ந்து ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள். நாம் ஒருவகை ஏற்பாட்டை செய்யப்போகிறபோது அந்தச் சங்கத்தின் சார்பில் பின்னால் அவர்களே எதிர்க்கலாம். அதற்குப் பதிலாக அவர்களே ஒரு ஃபார்மூலாவைக் கொடுத்தால் அரசாங்கத்தின் சார்பில் அதைப் பரிசீலிப்பதற்கு வழியேற்படும் என்றுதான் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களுக்கெல்லாம் நான் இங்கே பதில் சொல்வதற்கு விவரங்கள் வைத்திருக்கிறேன். நேரம் இல்லாத காரணத்தினால் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல முடியவில்லையே தவிர அவற்றை எல்லாம் இலாக்காவினர் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசியவர்கள் எல்லாம் இந்த இலாக்கா இன்னும் துரிதமாகச் செயல்படவேண்டும் என்றே தெரிவித்தார்கள். இன்னும் வேகமாகச் செயல்பட, விரைவாகப் பல திட்டங்களை எடுத்துப் பூர்த்தி செய்ய அதிகமான நிதி வேண்டும் என்றேதான் அவர்களும் கோரியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் துறைகளுக்காக ஒதுக்கப்பட்ட மானியக் கோரிக்கைகளின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் வாங்கிக் கொண்டு இவற்றை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.



திரு. ந. தருமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா ட்டமன்ற உறுப்பினர்களது கோரிக்கைகளுக்கும் அமைச்சர் அவர்கள் திலளித்திருக்கிறார்கள். ஆனால் ரீஷிவந்தியம் தொகுதியை மறந்துவிட்டார்கள் ன்றே நினைக்கிறேன். நீண்ட நெடுநாளையக் கோரிக்கையாக இருந்துவரும் ன்று தரைப் பாலங்களையாவது கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வரு ார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தத் திட்டங்கள் ரிசீலிக்கப்படும்.

திரு. கே. எ. வகாப் : பாலாறு பேசின் சம்பந்தமாகப் போடப்பட்டிருக் கம் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவேண்டும் என்பதாக நீண்டநாளாகக் கோரி ந்திருக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது சம்பந்தமாக நீங்களே இந்த வையில் பலமுறை கேள்விகள் போட்டு அமைச்சர் பதிலளித்திருக்கிறார். இந்த விஷயத்தை விவாதத்தின்போதே பேசியிருக்கலாம்.

திரு. கே. எ. வகாப் : எங்கள் கட்சியில் இருந்து பேச வாய்ப்பு இல்லாத காரணத்தினால்தான் இதனைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. கே. எ. வகாப் : அந்தக் கட்டுப்பாட்டை நீக்கும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தக் கட்டுப்பாட்டை நீக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். இப்போது நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட் வழங்குவதில் எந்தவிதமான சங்கடமும் இல்லை. எங்காவது சிரமம் இருந்தால் அதுபற்றி எழுதினால் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எ. மதியழகன் : நமது அமைச்சர் அவர்கள் பாம்பன் பாலத்தைப் பற்றிச் சொன்னார்கள். 5 கோடி திட்டமாக அது அமைய இருக்கிறது என்றார்கள். இதனை காண்டிராக்டுக்கு விட டெண்டர் கோரப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். டெண்டர் கோருவது, பின்னர் பத்து நாட்களிலேயே மேலும் 2 கோடியைக் கூட்டிக்கொடுப்பது என்பதாகத்தான் இவை எல்லாமே இருக்கிறது. நீண்ட நெடுங்காலமாக வந்து வந்து விட்டு வருகிற ஒரு கருத்து— அரசாங்கம் ஒரு கொள்கையை ஏற்படுத்திக்கொண்டு ஒரு கோடிக்குள்

இருக்கிற வேலைகளைத்தான் காண்டிராக்டுக்கு விடுவது, அதற்குமேல் போகிற திட்டங்களை அரசாங்கமே எடுத்துச் செயல்படுத்துவது என்கிற முடிவினை வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் ஏற்கனவே 50 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: இது ஐந்துகோடி பற்றியது—அரசாங்கம் வரையறுத்துக்கொண்டாகவேண்டிய ஒரு முக்கியமான கொள்கை பற்றியது. ஆகவேதான் கேட்கிறேன். அரசாங்கம் இதுபற்றி மறுபரிசீலனை செய்து இது போல ஒரு கோடிக்கு மேற்பட்ட திட்டங்களை அரசாங்கமே எடுத்து நிறைவேற்ற முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திரு. மாரிமுத்து அவர்களும், திரு. கே. டி. கே. அவர்களும் கூட இதுபற்றிச் சொன்னார்கள். இதுபற்றி இலாக்கா பொறியாளர்களுடன் கலந்து பரிசீலனை செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது நிதிக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

நிதிக் கோரிக்கை எண் 31க்கு திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. கே. ஏ. வகாப், திரு. கே. எஸ். கோதண்டராமையா, திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லை யாதலால் அவை பேரவையின் அனுமதியுடன் பெறப்பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களது வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டனவாக கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 31—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,55,43,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 32க்கு திரு. ஏ. ஆர் மாரிமுத்து, திரு. ஜே. ஜேம்ஸ், திரு. ஆ. கு. சுப்பையா, திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி, திரு. கே. ஏ. வகாப், ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லை யாதலால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டன.



டாக்டர் எச். வி. ஹாண்டே இருக்கையில் இல்லாததால் அவரது வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 32—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,48,71,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 33 க்கு திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி, திரு கே. ஏ. வகாப், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லை யாதலால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. கே. கந்தசாமி, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களது வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டனவாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 33—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,67,85,700 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 46-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவரது வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* பேரவையின் முன்னுள்ள கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண். 46—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,43,93,600 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 47 க்கு திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லையாதலால் அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.

திரு. இ. சி. ஆ. சிவபிரகாசம், திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களது வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டனவாகக் கருதப்பட்டன.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* பேரவை முன்னுள்ள கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண். 47—பொதுப்பணிகள் மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,16,85,100 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 8-18 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

(8) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. *Statutory Rules and Orders.*

83. Notification issued with G.O. Ms. No. 153, Transport dated the 14th March 1973 making the Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Rules, 1973. [Laid on the



Table of the House under section 32 (4) of the Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Act, 1973 (Tamil Nadu Act 12 of 1973).]

84. Notification issued with G.O. Ms. No. 2566, Rural Development and Local Administration, dated the 9th December 1972, in regard to an amendment to the Tamil Nadu Bhoodan Yagna Rules, 1959. [Laid on the Table of the House under section 28 (4) of the Tamil Nadu Bhoodan Yagna Act, 1958 (Tamil Nadu Act XV of 1958).]

## B. *Reports, Notifications and Other Papers.*

109. Notification issued with G.O. Ms. No. 2272, Rural Development and Local Administration, dated the 26th October 1972, in regard to an amendment to the Tamil Nadu Cottage Industries Construction and Establishment (Restrictions, Limitations and Conditions) Rules 1960.

@ 110. Performance Budget on Fisheries—1973–74.

£ 111. Performance Budget on Collegiate Education—1973–74

£ 112. Performance Budget on School Education—1973–74.

£ 113. Performance Budget on Technical Education—1973–74.

† 114. Review on the working of Minor Ports in Tamil Nadu during 1972–73 (English and Tamil).

---

@ Laid on the table of the House on 19th March 1973.

£ Laid on the table of the House on 20th March 1973.

† Despatched to Members on 20th March 1973.

## இணைப்பு I

[70-ம் பக்கத்தில் கண்டுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### பாசன-பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகள்—1973-74.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை 31. பாசனம்" என்பதன் கீழ் ரூ. 15,55,43,600-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை 46. பாசனத்திற்கான மூலதன முதலீடு" என்பதன் கீழ் ரூ. 12,43,93,600-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை 32. பொதுப் பணிகள்—பணிகள்" என்பதன் கீழ் ரூ. 15,48,71,500-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை 33. பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடங்களும்" என்பதன் கீழ் ரூ. 7,67,85,700-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை 47. பொதுப் பணிகளுக்கான மூலதன முதலீடு" என்பதன்கீழ் ரூ. 13,16,85,100-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

2. ஏற்கனவேயுள்ள பாசன ஏற்பாடுகளை விரிவுபடுத்தவும், அவற்றை மேம்படுத்தவும், அவற்றிலிருந்து உரிய அளவு பயனைப் பெறும் வண்ணம் அவற்றைச் சரியான நிலையில் வைத்திருக்கச் செய்யப்படும் இயல்பான பேணுதல் செலவும், வெள்ளம், புயல் காரணமாக ஏற்படும் சேதங்களைப் பழுது பார்த்தல் ஆகியவற்றுக்காகும் செலவும், நடப்பு வருவாயிலிருந்து "கோரிக்கை 31. பாசனம்" என்பதன் கீழ் அளிக்கப்படும் மானியத்தின் மூலம் பெறப்படும். ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வருகின்ற அல்லது இவ் வரவு-செலவுத் திட்ட ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கிற புதிய பாசனத் திட்டங்களின் மீதான செலவின் பெரும் பகுதி "கோரிக்கை 46. பாசனத்திற்கான மூலதன முதலீடு" என்னும் தலைப்பின் கீழ் அளிக்கப்படும் மானியத்திலிருந்து பெறப்படும்; கோரிக்கை 31-ன் கீழ் அளிக்கப்படும் நிதி ஒதுக்கத்தில் வருவாய்த்



துறை ஆளுகையில் உள்ள சிறு பாசனப் பணிகள் செலவுக்கான ரூ. 1,14,07,100 தொகையும் அடங்கும். பணியாளர்கள், பாசனக் கட்டுமான வேலைகளுக்கும், பேணுதலுக்கும் தேவைப்படும் கருவிகள், தளவாடங்கள் ஆகியவற்றின் மொத்தச் செலவும் கோரிக்கை 33-ன்கீழ் வருகின்றது: பாசனத் தொடர்பான செலவில் ஒரு பகுதி, அதாவது ரூ. 1,23,63,100 "கோரிக்கை 31. பாசனம்" என்பதில் சேர்க்கப்பட்டுள்ளது.

3. கட்டடங்கள், சாலைப் போக்குவரத்துகள், பலவகைப் பணிகள் போன்ற மூலப் பணிகளுக்கும், சாலைகள், பாலங்கள் கட்டுதலும் சீரமைத்தல் போன்ற பழுது பார்த்தல் செலவுகளுக்கும், இப்போதுள்ள கட்டிடங்களையும் சாலைகளையும், பேணி வருவதற்குரிய இயல்பான செலவுக்கும் உள்ள நிதி ஒதுக்கீடு கோரிக்கை 32-ல் அடங்கும். பொதுப் பணித்துறையிலும், நெடுஞ்சாலை—கிராமப் பணிகள் துறையிலும் பணியாளர்களுக்கும், கருவிகளுக்கும், தளவாடங்களுக்கும். ஆகும் மொத்த செலவு கோரிக்கை 33-ன் கீழ் வருகின்றது. ஒவ்வொன்றும் தனித்தனியே ரூ. 1 லட்சம் செலவாகிற சாலைகள் கட்டடங்களுக்குரிய புதிய பணிகளுக்கும் அல்லது தனித்தனியே இந்தத் தொகை வரம்புக்குக் குறைவாக இருப்பினும், நோக்கம், காலம், இடப்பரப்பு வகையில் நீடித்த ஒரு திட்டமாக அமைந்து மொத்தத்தில் ரூ. 5 லட்சத்திற்கு மேல் செலவாகக் கூடிய பணிகளுக்கும் ஆகும் செலவு, கோரிக்கை 47-ன் கீழ் பெறப்படுகிறது.

4. இவ்வாறு 1973-74-ல் பாசனம், சாலைகள், கட்டடங்கள் ஆகியவை குறித்து செலவிடக் கருதப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள மொத்தத்தொகை ரூ. 64,32,79,500 ஆகும்.

### பாசனம்.

5. நடப்பாண்டில் அதாவது 1972–73-ல், தென் மேற்குப் பருவமழை சற்றுக் காலங்கடந்தே தொடங்கியது; அதுவும் இயல்பான அளவுக்குக் குறைவாகவே பெய்தது. காவிரி நீர்கோள் பகுதியில் மழையளவு 22 சத விதம் குறைவாக இருந்தது. பவானி நீர்கோள் பகுதியில் மழையளவு 37 சதவீதம் குறைவாகவும், பெரியாறு நீர்கோள் பகுதியில் 29 சதவீதம் குறைவாகவும் இருந்தன. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் 30 சதவீதமும், பவானிசாகரில் 41 சதவீதமும், பெரியாறு நீர்த் தேக்கத்தில் 5 சதவீதமும், அமராவதி நீர்த் தேக்கத்தில் 37 சதவீதமும், பாபநாசம் நீர்த் தேக்கம், பேச்சிப் பாறை, பெருஞ்சாணி நீர்த் தேக்கங்களில் 32 சதவீதமும், 42 சதவீதமும், 17 சதவீதமும் முறையே நீர் வரவு குறைந்தது. தென் மேற்குப் பருவ மழை பொய்த்ததால் 1972 செப்டம்

பரில் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து காவிரிப் பாசனப் பகுதிக்கு தேவைப் படும் நீர் முழுவதையும் அளிப்பதில் இடர்பாடு ஏற்பட்டது. மிகவும் பற்றுக் குறை காலத்தில் அதைப் போக்குவதற்கு மைசூர் மாநில கிருஷ்ணராஜசாகரி லிருந்து சிறப்பாக 35,000 இலட்சம் கன அடி நீர் பெறப்பட்டது.

6. எனினும் வடகிழக்குப் பருவ மழை சாதகமாகவே இருந்தது. இதனால், அனேகமாக நீர்த் தேக்கங்கள் அனைத்திலும் நீர் வரவு நல்ல வகையில் இருந்தது. ஏரிகளிலும் நீர் வரவு செம்மையாக இருந்தது. கோடைகாலப் பயிர்கள் விளைவிக்க இது ஏதுவாக இருந்தது.

7. மேட்டூர், மணிமுத்தாறு, வீடூர், கோமுகி நதி, மணிமுத்தாறு நதி நீர்த் தேக்கங்கள் தவிர ஏனையவை வழக்கமான நாளில் திறந்து விடப்பட்டன. கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தின் கீழ், அதன் பாசனப் பரப்பு முழுவதிற்கும் கூடுதல் பயிர் விளைவிக்கச் சிறப்பு முறையில் நீர் வழங்கப்பட்டது. சாத்தனூர் கால்வாயின் கீழ் 8,140 ஏக்கர் பரப்பளவில் கூடுதல் பயிர் விளைவிக்கச் சிறப்பு முறையில் நீர் வழங்கப்பட்டது. காவிரி கயவாய்ப் பகுதியில் இந்த ஆண்டிலும் இருபோகம் விளைவிக்கும் திட்டம் மேலும் பல பகுதிகளில் செயற் படுத்தப்பட்டது.

8. பவானிசாகரில் நீர் சேமிப்பு மன நிறைவளிப்பதாக இருந்ததால், பவானி கால்வாயின் கீழ் உள்ள இரண்டாவது பாசன உரிமை முறை ஆயக் கட்டுகளுக்கு—அவற்றில் பயிரிடப்பட்ட பயிர்களின் தன்மைக்கு எவ்விதக் கட்டுப்பாடுமின்றி—நீர் வழங்கப்பட்டது. பொதுவாக, இரண்டாவது நீர் வழங்கு பருவத்தில் பன்செய்ப் பயிர்களுக்கு நீர் வழங்க அனுமதிக்கப்படும்.

9. காவிரி கயவாய்ப் பாசன ஏற்பாட்டில் பழுது பார்த்தல், புதுப்பித்தல் பற்றிய விரைவுத் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1972–73-லிருந்து தொடங்கி நான்காண்டுகளில் ரூ. 1,298 33 லட்சம் செலவில் அமையும் பணிகளை மேற்கொள்வதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 1973–74-ல் ரூ. 360 லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

10. பழைய பாசன வாய்க்கால்களின் திறமையைப் பெருக்க அவைகளைப் புதுமைப்படுத்தி அமைப்பதில் அரசு நாட்டம் செலுத்தி வருகிறது. இப் போது அமராவதி, தாமிரவருணி வாய்க்கால்களைப் புதுப்பிக்கும் பணி ஏற் கெனவே மேற்கொள்ளப்பட்டு முன்னேற்ற நிலையை அடைந்துள்ளது. பவானி ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் காளிங்கராயன், தாடபள்ளி, அரக்கன் கோட்டை வாய்க்கால்களை ஏற்றவாறு புதுமைப்படுத்தி அமைப்பதற்கான, செயற்குறிப்புகள் முடிவாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அமராவதி கால்



வாய்களின் இரு பகுதிகளுக்குக் காரை பூசும் முதல் நிலைப் பணியின் மதிப்பீடு களுக்கு அரசு ஏற்பளித்துள்ளது. அப்பணி நிறைவேறி வருகிறது. பிற கால்வாய்களைப் புதுப்பித்து காரை பூசுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

11. சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களின் கீழ் 1973–74-ல் ரூ. 409.92 லட்சம் செலவிடப்படும். இவ்வாண்டு இலக்கு ?25 பணிகளாகும். இப்பொழு துள்ள ஆயக்கட்டில் 61,250 ஏக்கருக்கு இடையீடற்ற பாசனம் அளிப்பதோடு 25,750 ஏக்கர் புதிய பரப்பளவுக்குப் பாசன வளம் இதனால் உருவாகலாம்.

### உள்நாட்டு நீர்வழிகள்.

### (1) கூவம் சீரமைப்புத் திட்டம்.

12. சென்னை மாநகர எல்லைக்குள் கூவம் ஆற்றை அழகுற அமைத்துத் தூய்மையாக்கவும், நீர் ஏற்ற, நீர் வற்ற வசதிகளுடன், படகுப் போக்கு வரத்துக்கு ஏற்றதாகவும் செய்யும் நோக்கத்துடன். கூவம் சீரமைப்புத் திட்டத்திற்கு 1967-ல் அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டம் மூன்று நிலை களில் நிறைவேற்றப்பட்டது. கூவம் கழிமுகத்தில் மணல் வாரி எந்திரத்தை நிறுவ பொறி மதகும் படகுத் துறையும் கட்டும் பணியும், நேப்பியர் பாலத்தி லிருந்து பொறி மதகு வரை இருபக்கங்களிலும் கரை அமைக்கும் பணியும் முதல் நிலை பணியாக மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது நிலையில், ஆற்றின் இரு கரைகளிலும் காரை பூசி வாய்க்கால் வழிப்படுத்தல், ஆற்றோரத்தில் பூங்காக்களும் புல்வெளிகளும் அமைத்தல், நீச்சல் குளம், படகு குழாம் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூன்றாவது நிலையின்கீழ், 941 குடிசை வாழ் குடும்பத்தினருக்கு தீப்பிடிக்காத குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது. ஏழு படகுத் துறைகள் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு திட்டப் பணிகள் அனைத்தும் நிறைவேற்றி முடிக்கப்பட்டு கூவம் ஆற்றில் உல்லாசப் படகு விடும் பணி 4—2—1973-ல் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் கூவம் ஆறு பொது மக்களின் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 212.2 லட்சமாகும்.

### பக்கிங்ஹாம் கால்வாய்.

13. மாநகர எல்லைக்குள் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயினை ரூ. 44 லட்சம் செலவில் சீரமைப்பதை நோக்கம் கொண்ட திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ், பக்கிங்ஹாம் கால்வாயின் வடகரைப் பகுதிகளில்

விறகுத் துறையிலும் கிளிஞ்சல் துறையிலும் சாலைகள் அமைத்தல், சிந்தாதிரிப் பேட்டையில் தோணித் துறை கட்டுதல், சில பகுதிகளில் கால்வாய்க்குக் காரை பூசுதல் ஆகிய பணிகள் செய்யப்பட்டன. கால்வாயில் சேறு வாருவதற்கான சேறுவாரி இயந்திரங்களும், கூவம் கழிமுகத்தில் பயன்படுத்த மணல்வாரி இயந்திரமும் வாங்கப்பட்டு நிறுவப்பட்டன.

14. பக்கிங்ஹாம் கால்வாயில் சேறுவாரி ஆழப்படுத்தி சீரமைக்கும் நோக்குடன், ரூ. 20 லட்சம் செலவிலான திட்டம் ஒன்று மத்திய அரசுக் கடனுதவித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு, அதன் கணிசமான பகுதி முடிவடைந்துள்ளது. இக் கால்வாய்க்குப் பேரளவுச் சீரமைப்புகள் செய்ய அரசு கருதியுள்ளது; ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்தைச் சேர்ப்பதற்கான செயற்குறிப்புகள் இந்திய அரசுக்கு முன்னரே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பக்கிங்ஹாம் கால்வாய் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்திற்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்குடன் அதனைச் சீரமைக்கும் பெருந் திட்டத்திற்கு முன்னோடியாக மாநில அரசு 1973-74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 5.00 லட்சம் ஒதுக்கியுள்ளது.

நமது மாநிலத்திற்குள் உள்ள 100 மைல் நீளத்தில், இக்கால்வாயை 33 அடி அகலமும் 6 அடி ஆழமும் கொண்டதாக மாற்றுவது இத் திட்டத்தின் நோக்கமாகும்.

### நில நீர் ஆய்வு

15. தமிழ்நாட்டில் நில நீர் வள ஆய்வு, அனைத்து நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டது.

16. முதல் நிலையில் (1966 மார்ச் முதல் 1972 பிப்ரவரி வரை) நில நீர் ஆய்வு குறித்த முறையான, அறிவியல் அடிப்படையிலான முன்னோடிப் பணி தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. சென்னை மாநகர், அதன் சுற்றுப்புறங்கள், பாலாறு, நெய்வேலிப் பகுதிகளில் நிலத்திற்குள் கீழே நல்ல நீரோட்டம் இருக்குமிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மீஞ்சூர்—பஞ்செட்டி—தாமரபாக்கம் நீரோட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட நிலநீர் குழாய் மூலம் வட சென்னையில் உள்ள தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. 1969-ல் தொடங்கப்பட்ட இரண்டாவது நிலைப் பணி 1972-ல் நிறைவேற்றி முடிக்கப்பட்டு, இறுதி அறிக்கை ஐக்கிய நாடுகளுக்கு அதன் அனுமதிக்காக அனுப்பப்பட்டது. இரண்டாவது நிலையின் கீழ், காவிரி கயவாய்ப் பகுதியில் விரிவான பரவலான நில நீர் ஆய்வு நடத்தப்பட்டது.



17. தமிழ்நாடு அரசினால் 1970-ல் ஏற்படுத்தப்பட்ட 9 கோட்டங்களுடன் கூடிய நில நீர் இயக்குநர் அலுவலகம், மாவட்டங்கள் அனைத்திலும் ஒரே நேரத்தில் ஆய்வுகள் நடத்தவும், நீரியல், வானியல் தகவல் சேகரிக்கவும் பொறுப்பாக உள்ளது. மாநில முழுவதிலும் 3 முதல் 4 ஆண்டுகளுக்குள் ரூ. 11.77 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆய்வுப் பணியை முடிப்பதற்கான விரிவான செயல் திட்டம் ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. திட்டத்தில் சேராத பணியாக இதைக் கருதி நிதி உதவி அளிக்குமாறு மத்திய அரசு கேட்கப்பட்டுள்ளது.

18. நில நீரைப் பயன்படுத்தி தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, திருச்சி, தருமபுரி, வட ஆர்க்காடு, சேலம் மாவட்டங்களில் சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்ற, உலக வங்கியின் அனைத்து நாடுகள் வளர்ச்சி சங்கம் ரூ. 26.25 கோடி வழங்கியுள்ளது. இக் கடன் தொகை தொடக்க நில வள வங்கிகள் மூலமாக உழவர்களுக்கு வழங்கப்படும். உலக வங்கி திட்டத்தின் கீழ் வராத பகுதிகளில், வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் மூலம் உதவி பெறும் திட்டங்களும் உள்ளன.

19. கோயம்புத்தூர், வடஆர்க்காடு, மதுரை மாவட்டங்களின் சில பகுதிகளில் நில நீர் ஆய்வினை மேற்கொள்ள, "ஆப்ரோ" நிறுவனத்திற்கு AFPRO (உணவு உற்பத்திக்கான நடவடிக்கை) மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது.

### பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்புகள்.

20. பொறியாளர்களுக்கு மேலும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் கருத்துடன், தமிழ்நாட்டிலுள்ள பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்கள் பற்றி ஆய்வதற்கு 10 கோட்டங்களை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. மத்திய அரசு உதவித் திட்டத்தின்கீழ் இது தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை ரூ. 12 கோடி செலவு மதிப்புள்ள கீழ்க்காணும் 12 நடுத்தர திட்டங்கள் முடிவு செய்யப்பட்டு அரசின் பரிசிலனையில் உள்ளன :—

1. குண்டேரிப் பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம்—கோயம்புத்தூர் மாவட்டம்.

2. நல்லதங்காள் ஓடை நீர்த்தேக்கத் திட்டம்—கோயம்புத்தூர் மாவட்டம்.

3. வட்டமலைக்கரை ஓடை நீர்த்தேக்கத் திட்டம்—கோயம்புத்தூர் மாவட்டம்.

4. வழுக்குப் பாறைப்பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம்—கோயம்புத்தூர் மாவட்டம்.

5. வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம்—கோயம்புத்தூர் மாவட்டம்.

6. வரதம்மா நதி நீர்த்தேக்கத் திட்டம்—மதுரை மாவட்டம்.

7. குதிரையார் நீர்த்தேக்கத் திட்டம்—மதுரை மாவட்டம்.

8. கோடனூறு நீர்த்தேக்கத் திட்டம்—மதுரை, திருச்சி மாவட்டம்.

9. குந்தாறு நீர்த்தேக்கத் திட்டம்—திருநெல்வேலி மாவட்டம்.

10. அடவி நயினார் கோயில் நீர்த்தேக்கத் திட்டம்—திருநெல்வேலி மாவட்டம்.

11. சாத்தனூர் அணைக்கட்டு வலப்பக்க கால்வாய்த் திட்டம்—வட ஆர்க்காடு மாவட்டம்.

12. பழைய சீவரம் கிராமத்திற்குப் பக்கத்தில் பாலாற்றுக்குக் குறுக்கே அணை கட்டுதல்—செங்கற்பட்டு மாவட்டம்.

தவிர, 36 சிறு திட்டங்கள் விரிவான ஆய்வின் கீழும், 65 திட்டங்கள் தொடக்க ஆய்வின் கீழும் உள்ளன.

21. உதவி மானியத் திட்டமாக, தமிழ்நாட்டில் சுமார் ரூ. 200 இலட்சம் செலவில் மேற்பரப்பு நீர் ஆய்வினை மேற்கொள்ளும் செயற் குறிப்பு ஒன்றும் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

22. இம்மாநிலம் தன்னுடைய மேற்பரப்பு நீர் வளம் அனைத்தையும் அநேகமாகப் பயன்படுத்திவிட்டது. அண்டை மாநிலங்களின் உபரி நீரினைப் பெற இனி பேச்சுவார்த்தை நடத்தவேண்டியுள்ளது. இதற்காக—அதாவது மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளிலிருந்து நீரைத் திசை திருப்ப—கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. அண்மையில் அனுப்பிய தன்னுடைய அறிக்கையில், தமிழ்நாட்டின் வேண்டுகோள் கேரள அரசால் பெருந்தன்மையுடன் கவனிக்கப்பட வேண்டும் என்று பாசன ஆணைக் குழு தனது நம்பிக்கையைத் தெரிவித்துள்ளது. கங்கையை காவிரியுடன் இணைக்கும் தேசிய நீர் இணைப்புத் திட்டத்தின்கீழ், காவிரியை கோதாவரியுடனும், கிருஷ்ணாவுடனும் இணைக்கும் பணி முதல் நிலையில் மேற்கொள்ளப்படலாம் என்று மத்திய அரசுக்கு இந்த அரசு கருத்து தெரிவித்துள்ளது. ஏனெனில், இந்த இணைப்பில் உயர்மட்டத்திற்கு நீரேற்றும் பணி இல்லை, கால்வாய் வெட்டும் அதே நேரத்தில், இதன் பயன் உடன் கிடைக்கப் பெறும்.



வறட்சியால் மிகவும் பாதிக்கப்படும் பகுதி குறித்தத் திட்டம்.

23. தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் நிலவும் நீர் பற்றாக் குறையைத் தீர்க்க, மத்திய அரசுப் பொறுப்பேற்கும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை, ரூ. 91.17 லட்சம் செலவிலான 139 சிறு பாசனத் திட்டங்கள் பொதுப் பணித்துறையால் நிறைவேற்றப்படுவதற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளன. 68 திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. 63 திட்டங்கள் நிறைவேறி வருகின்றன. எட்டு திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு இனிமேல் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இத்திட்டம் 1973–74-லிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

24. மிகவும் வறட்சியான பகுதித் திட்டத்தை உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்துவதற்கு தருமபுரி மாவட்டமும் இந்திய அரசால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 1973-74-ல் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது; இது 3 முதல் 4 ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்படும்.

25. இத்திட்டத்தின்கீழ், ரூ. 157.50 லட்சம் செலவாகும். இரண்டு நடுத்தர பாசனத் திட்டங்களையும் ரூ. 126.18 லட்சம் செலவாகும் 18 சிறு பாசனத் திட்டங்களையும் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. அவை இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளன.

கடல் அரிப்புத் தடுப்புத் திட்டங்கள்

26. செங்கற்பட்டு மாவட்டம் கோவளத்தில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 70 கி.மீ. நீளமுள்ள அரபியக் கடற்கரையில் 14.5 கி.மீ. தொலைவுக்கு ரூ. 351 லட்சம் செலவில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான தொடக்க மதிப்பீடு அரசால் பரிசீலனை செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கடலரிப்புத் தடுப்பு ஏற்பாடாக இப்பணியை நிறைவேற்றுவதற்கு முழு மானியவுதவி அளிக்குமாறு இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களும் வடிகால் திட்டங்களும்

27. ரூ. 52.00 லட்சம் செலவு மதிப்பீடுள்ள 19 பணிகளுக்கு இவ்வரசு அனுமதி வழங்கியுள்ளது. அவை நடைபெற்று வருகின்றன. 1971-72 வரை ரூ. 30.30 லட்சம் செலவாகியுள்ளது. 1972–73-ல் டிசம்பர் வரை ரூ. 49.70 லட்சம் செலவாகியுள்ளது. 1973–74-க்கு ரூ. 12.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

28. கொள்ளிடம்-காவிரி வெள்ளக்கரைகளில் பலமற்ற பகுதிகளில் அவற்றைப் பலப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1971–72 வரை ரூ. 10.34 லட்சம் செலவாகியுள்ளது. 1972–73-ல் ரூ. 47.28 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1973–74-க்கு ரூ. 61 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

29. காவிரி கயவாய்ப் பகுதியில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, மேல் அணையில் காவிரியின் குறுக்கே ரூ. 212 இலட்சம் செலவில் தடுப்பு அணை கட்டுவதற்கான செயற்குறிப்பு இந்திய அரசின் அனுமதிபெற அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திட்ட ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்ததும் இவ் வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

### 1972 டிசம்பரில் புயலாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்ட சேதங்கள்

30. 1972 டிசம்பர் முதலாவது, இரண்டாவது வாரங்களில் கடலோர மாவட்டங்கள் சிலவற்றில் வீசிய கடும்புயலின் விளைவாலும், அதனைத் தொடர்ந்து சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் விரிவாக மழை பொழிந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதனாலும், பாசன வாயில்கள் பலவற்றுக்குப் பரவலான சேதமேற்பட்டது. தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டிலும் கிட்டத்தட்ட 576 பாசன வாயில்கள் சேதமடைந்தன அல்லது பாதிக்கப்பட்டன. இந்த மாவட்டத்தில் உள்ள கோமுகி அணையும் திருக்கோவிலூர் அணைக்கட்டும் பெருஞ்சேதமுற்றன. பல்வேறு மாவட்டங்களில் சேதமுற்ற பாசன வாயில்களுக்குப் பழுது பார்ப்பதற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ஏறத்தாழ ரூ. 6.90 கோடி ஆகிறது.

31. வெள்ளச் சேதங்களைப் பழுது பார்க்கப் போதுமான நிதி ஒதுக்கித் தருமாறு மாநில அரசு இந்திய அரசைக் கேட்டுள்ளது. இது தொடர்பாக, மத்திய ஆய்வுக்குழு ஒன்று, 1973 ஜனவரி முதல் வாரத்தில் சென்னை மாநகரில் மாநில அரசு அதிகாரிகளுடன் கலந்து பேசியது; மேலும் அக்குழு பாதிக்கப்பட்ட பகுதிகளையுஞ் சென்று பார்வையிட்டது. அவர்கள் இங்குள்ள மாநில அதிகாரிகளுடன் இரண்டாவது முறையும் விவாதம் நடத்தினர். அவர்கள் கேட்ட விவரங்கள் அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன. 1973 ஜனவரி 3-வது வாரத்தில் டில்லியில் 3-வது சுற்று விவாதம் நடைபெற்றது. குழுவின் பரிவுரைகளை ஏற்றுக்கொண்டு, இந்திய அரசு ரூ. 14.25 கோடி உதவியளிக்க முன் வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது.



32. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடியாக துயர் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பழுதுபார்க்கும் பணிகளைச் செய்யவும், இந்திய அரசிடமிருந்து வரும் உதவிக்காகக் காத்திராமலேயே மாநில அரசு இந்தப் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ள ரூ. 1 கோடி ஒதுக்கியது. நீரைத் தேக்கி வைத்துப் பாதுகாக்கும் பொருட்டு உடைப்புகளை அடைப்பதற்காக உள்ளூர் அதிகாரிகளாலும் உரிய தருணத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தென்ஞார்க்காடு மாவட்டத்தில் வெள்ளச்சேதங்களைப் பழுதுபார்க்கும் பணிகளைக் கவனிக்க; பொதுப்பணித்துறைக் கோட்டங்கள் மூன்றுடன், கண்காணிப்புப் பொறியாளர் ஒருவர் தலைமையில் பொதுப்பணித்துறை வட்டப்பிரிவு ஒன்று அடங்கிய சிறப்புப் பணியாளர்களுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்திற்கு இன்னொரு சிறப்புக் கோட்டத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### காவிரி நீர் தகராறு

33. 1972 மே திங்கள் 30, 31-ஆம் நாட்களில் புது டில்லியில் தமிழ்நாடு, மைசூர், கேரள மாநில முதலமைச்சர்களிடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கிணங்க, காவிரி நீர் தகராறு குறித்து எல்லாத் தரப்பினருக்கும் இசைவான ஓர் உடன்பாட்டிற்கு வரும்பொருட்டு காவிரி நீர் பற்றி புள்ளி விவரத் தகவல் தொகுப்பதற்காக தகவல் தொகுக்கும் குழுவொன்றை இந்திய அரசு நியமித்தது.

34. இந்தத் தகவல் தொகுக்கும் குழு இம்மூன்று மாநிலங்களுக்கும், புதுச்சேரி மாநிலத்துக்கும் சென்று பார்வையிட்டு, அந்தந்த மாநிலங்களின் அரசு அதிகாரிகளுடன் கலந்து பேசியது.

35. பின்னர், 1972 நவம்பர் இரண்டாவது வாரத்தில், புது டில்லியில் இந்த மூன்று மாநிலங்களின் தொழில் நுட்ப பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றை தகவல் தொகுக்கும் குழு கூட்டியது. அக்கூட்டத்தில் மும்மாநிலப் பிரதிநிதிகளாலும் பல்வேறு கருத்துக்கள் குறித்துத் தகவல் தொகுக்கும் குழுவுக்கு விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. 1972 டிசம்பர் இரண்டாம் வாரத்தில் இக்குழு மீண்டும் பங்களூருக்கும் சென்னைக்கும் வருகை தந்து, சில கருத்துக்கள் குறித்து விளக்கம் பெறுவதற்காக மாநில அதிகாரிகளுடன் கலந்து பேசியது.

36. தகவல் தொகுக்கும் குழு தனது அறிக்கையை மத்திய அரசுக்குப் பணிந்தனுப்பியது. அந்த அறிக்கையின் படிகளை மத்திய அரசு மாநிலங்களுக்கு அனுப்பியிருக்கிறது. இவ்வறிக்கை குறித்து மூன்று மாநிலங்களின் முதலமைச்சர்கள் விரைவில் விவாதிப்பார்கள்.

## சாலைகள்

37. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில், அதாவது 1969 ஏப்ரல் திங்கள் 1-ம் நாளில் இம்மாநிலச் சாலைகளின் மொத்த நீளம் 65,014 கி.மீ. ஆகும். 1969–70 முதல் 1971–72 வரையிலான ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சித் திட்டங்களின் பயனாக, 21—3—1972 நிலவரப்படி நெடுஞ்சாலை–கிராமப்பணிகள் துறையின் பொறுப்பிலுள்ள சாலைகளின் மொத்த நீளம் 69,620 கிலோ. மீட்டராக உயர்ந்துள்ளது.

38. ஊராட்சி ஒன்றிய; ஊராட்சிப் பேருந்து வழித்தடச் சாலைகளை இவ்வரசு மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ் 1960–61 முதல் 1972–73 வரையிலான 13 ஆண்டுக்கால அளவில் இதுவரை எடுத்துக்கொள்ளப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 10,929 கிலோ மீட்டராகும். 1973-74-ல் மொத்தம் 1,600 கிலோ மீட்டர் நீளத்திற்கு பேருந்து வழித்தடச் சாலைகளை மேற்கொள்ள அரசு கருதியுள்ளது.

39. 1972–73-ல் தொடங்கப்பட்ட சிறப்பு கிராமச் சாலைகள் திட்டத்தை இங்கு சிறப்பாக குறிப்பிடலாம். எவ்வகை வளர்ச்சிக்கும், முழுமையான, திறமையான சாலை ஏற்பாடு மிகவும் இன்றியமையாததாகும். பொருளாதார வளர்ச்சி—கிராமங்களை மாற்றிப் புத்துருவமளித்தல் என்னும் பணியைத் தொடங்கி வைப்பது மட்டுமன்றி அதனைத் தொடர்ந்து நடத்துவதும் விரைந்து முடிக்கச் செய்வதும் இந்த இன்றியமையா அடிப்படை வசதியாகிய சாலைகளேயாகும்; மேலும், இவைதான் பெருமளவுக்கு வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தருகின்றன. கிராமப் பகுதிகளின் பொருளாதார வளங்களைப் பயன்படுத்துவதில் உள்ள தடைகளையகற்றுவதற்குரிய உடனடித் தேவையிருக்கும் சூழ்நிலையில் கிராமச் சாலைகளுக்குப் பெரும் முக்கியத்துவம் ஏற்படுகிறது. பசுமைப் புரட்சியின் அனுகூலங்களை கிராமச் சாலைகள் மூலம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும், அங்காடிக்கு வரும் உபரியளவைப் பெருக்க அவை பெரிதும் உதவுகின்றன. இவற்றைக் கருத்திற் கொண்டு 1,500-ம் அதற்கு அதிகமும் மக்கள் தொகையுடைய எல்லாக் கிராமங்களையும் சிற்றூர்களையும் ரூபாய் 19.00 கோடி மதிப்பீட்டுச் செலவில் முதன்மைச் சாலைகளுடன் இணைக்க ஐந்தாண்டுத் திட்டமொன்றைத் தமிழ்நாடு அரசு தயாரித்துள்ளது; இத்திட்டத்தின்படி எல்லாக் காலத்திலும் பயன்படும் இணைப்புச் சாலைகள் 281 கிலோ மீட்டர் நீளத்துக்கு அமைக்கப்படும். தற்போதுள்ள மண்சாலைகளில், 4,280 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் எல்லாக் காலத்துக்கும் ஏற்ற சாலைகளாக மேம்பாடு செய்யப்படும்.



40. இத்திட்டத்தின் முதற்படியாக, ரூபாய் 6.00 கோடி செலவாகும், கீழ்க்கண்ட பணிகளுக்கு அரசு அனுமதித்துள்ளது :—

(i) எல்லாக் காலத்துக்கும் பயன்படும் இணைப்புச் சாலைகள் 281 கிலோ மீட்டர் நீளத்துக்கு அமைத்தல்; குறுக்கு வடிகால் பணிகளைக் கட்டுதல் ஆகியவை இதில் அடங்கும்; இப்பணியின் மூலம் 200 சிற்றூர்கள் இணைக்கப்படும். இதற்கு ரூபாய் 1.50 கோடி செலவாகும்.

(ii) மொத்தம் ரூபாய் 4.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் கிராமச் சாலைகளில் குறுக்கு வடிகால்களைக் கட்டுதலும், எல்லாக் காலங்களுக்கும் ஏற்றதாயிராத தற்போதைய கிராமச் சாலைகளில் 1,427 கிலோ மீட்டர் நீளத்தை எல்லாப் பருவத்துக்கும் ஏற்ற சாலையாகத் தரமுயர்த்தலும், ஆகிய இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

41. நடப்பாண்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான திட்டப்பணிகளில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு பெரிய பாலம் கட்டுதலும் ஒன்றாகும். இது 45-வது தேசிய நெடுஞ்சாலையில் 193/2 ஆம் மைலில் கட்டப்படும். இப்பாலத்திற்கு அணுகு சாலைகளும் அமைக்கப்படும். இப்பாலம் கட்டுவதற்கு மொத்தம் ரூபாய் 77,91,900 செலவாகும்.

42. பெருநகரச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் பூங்கா ரயில் நிலையத்துக்கருகே நடந்து செல்வோர் சுரங்கப் பாதையொன்று கட்டவும் (செலவு ரூபாய் 11.50 லட்சம்). அதே நெடுஞ்சாலையில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்காக ஒரு பாலத்தைப் புதுப்பித்துக் கட்டவும் (செலவு ரூபாய் 16 லட்சம்) 1972–73-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகரப் பகுதிக்கான பயணிகள்-சரக்கு போக்குவரத்து குறித்த அடங்கல் ஆய்வு, நகரமைப்புத் திட்டத் துறையைக் கலந்தாலோசித்து தனிப்பிரிவு ஒன்றால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

43. 1972 டிசம்பரில் பெய்த பெருமழையாலும், வெள்ளத்தாலும், குறிப்பாக வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, சேலம், தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் சாலைகளுக்குப் பெருமளவில் பரவலாகச் சேதம் ஏற்பட்டது 1972–73-ல் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இந்தச் சாலைகளை உடனடியாகச் செப்பனிடுவதற்காக அரசு ரூபாய் 1.30 கோடி அனுமதித்துள்ளது.

## கட்டிடங்கள்

44. பொதுப்பணித் துறையின் கட்டிடப் பிரிவின் முக்கியமான அலுவல் மாநில அரசின் பெரும்பாலான துறைகளின் கட்டிடத் தேவைகளை நிறைவேற்றுவதே ஆகும்.

45. பல்வேறு துறைகளின் தேவைகளுக்கிணங்கத் திட்டமிடுதல், வடிவமைப்பு கட்டிடம் கட்டும் வேலை ஆகியவற்றுக்குக் கட்டிடப்பிரிவு பொறுப்புடையதாகும். இவை தவிர, சிறப்பு நேர்வுகளில் மத்திய அரசுத் துறைகளுக்கும் ஓரளவு அரசுத் தன்மையுள்ள பிற அமைப்புகளுக்கும் கட்டிடம் கட்டும் பணிகளை இத்துறை முகவர் நிறுவனமாயிருந்து நிறைவேற்றுகிறது. மாநில அரசுக் கட்டிடங்களைப் பேணும் பொறுப்பும் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

46. இதுவரை கட்டி முடிக்கப்பெற்ற அல்லது கட்டிடப்பணி நடந்து வருகிற அல்லது முடியுந்தறுவாயிலுள்ள பெரும்பணிகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | ரூபாய். (லட்சத்தில்) |
|---|---|
| 1. திருவாரூரில் 70 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை | 16.00 |
| 2. திருப்பத்தூரில் 38 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை | 10.00 |
| 3. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி 2-வது தொகுதிக்கு மேல், முதல் இரண்டாவது மாடி கட்டுதல். | 10.50 |
| 4. சிதம்பரத்தில் 70 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை | 10.90 |
| 5. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் மேலும் கூடுதலாக மூன்று தளங்கள் கட்டுதல். | 14.20 |
| 6. திருவாரூர் கலைஞர் கருணாநிதி அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரி கட்டுதல். | 15.00 |
| 7. செய்யாற்றில் அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரிக்கு அறிவியற்பகுதி கட்டிடம் கட்டுதல் | 12.30 |
| 8. உடுமலைப் பேட்டையில் அரசினர் கலைக் கல்லூரிக்கு நிலையான கட்டிடங்கள் கட்டுதல். | 13.35 |
| 9. சென்னை, நந்தனம் அரசினர் கலைக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல். | 21.00 |
| 10. திருப்பூர் அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு நிலையான கட்டிடம் கட்டுதல். | 13.35 |
| 11. திண்டுக்கல் அரசினர் மகளிர் கலைக்கல்லூரிக்கு நிலையான கட்டிடம் கட்டுதல். | 13.35 |
| 12. மாயூரத்தில், தர்மாபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு நிலையான கட்டிடம் கட்டுதல் | 13.35 |
| 13. மன்னார்குடியில் அரசினர் கலைக்கல்லூரிக்கு நிலையான கட்டிடம் கட்டுதல். | 13.35 |



47. மேற்சொன்ன திட்டப் பணிகளைத் தவிர ரூபாய் 57.38 கோடி செலவு மதிப்பீட்டில், திருச்சி சிறுபடைக்கலத் திட்டம் குறித்த வேலைகள் நிறைவேற்றப்படுவதற்காக பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. இவ்வேலை 1964 மார்ச்சில் தொடங்கியது. திட்டத்தின் பெரும்பகுதி வேலை செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன வேலை குறித்து இதுவரை ரூபாய் 5,39,96,214 செலவாகியுள்ளது. நடப்பாண்டில் ரூபாய் 3.25 லட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னையில் ரூபாய் 37 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் T. V. Station ஒன்றை நிறுவுதல் தொடர்பான பணி நிறைவேற்றுவதற்காகப் பொதுப்பணித் துறையிடம் விடப்பட்டது. இப்பணி 1972 ஜூலையில் தொடங்கப்பட்டது. மேற்சொன்னப் பணி குறித்து 1973 ஜனவரி இறுதி வரை ரூபாய் 8,98,009 செலவிடப்பட்டுள்ளது.

48. திட்டப்பணிகளில் முன்னேற்றம் குறித்த விவரங்கள் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள விரிவான ஆய்வுரையில் கொடுக்கப்பட்டுள்ளன.

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the index is given below :—

| | | |
|---|---|---|
| A.M.\|Ad.Motion | .. | Adjournment Motion. |
| Ann. | .. | Announcement. |
| B.O.H. | .. | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. St. | .. | Calling Attention Statement. |
| Consid. | .. | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select\|Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select\|Joint Select Committee.<br>(iii) Amendment to circulate |

(iv) Motion to consider as reported by Select|Joint Select Committee.

(v) Amendment to recommit to Select|Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | .. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | .. | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | .. | Demands for Supplementary Grants. |
| G.A. | .. | Governor's Address. |
| G.D. | .. | General Discussion. |
| H.A.H. Dis.\|H.H.D. | .. | Half-hour Discussion. |
| Int. | .. | Introduction stage of a Bill. |
| L.A. | .. | Legislative Assembly. |
| L.C. | .. | Legislative Council. |
| M. | .. | Motion. |
| P.M. | .. | Privilege Motion. |
| R\|Res. | .. | Resolution. |
| St. | .. | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

SEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

17TH, 19TH, 20TH AND 21ST MARCH 1973.

Volume XXXVI (Nos. 1 to 4).

PAGES

## A


ABDUL JABBAR, THIRU V.M.—

Budget, 1973-74, Voting—

Irrigation .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 599-603

AGRICULTURE—

Coimbatore Regulated Market, irregularities .. .. 149-150
Ground Water Directorate, technical guidance to small cultivators .. .. .. .. .. .. 332-334

ALAGARSAMY, THIRU S.—

Arrest of B.T. Teachers and the consequent unrest (A.M.) .. .. .. .. .. .. .. 23

Budget, 1973-74, Voting—

Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 165-166

Irrigation .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. .. 578-579,
Capital Outlay on Public Works .. .. .. 582

PAGES

A—cont.


ALDA M. FOWLER, THIRUMATHI—
Budget, 1973–74, Voting—
Education .. .. .. .. .. .. 371–374

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—
Budget, 1973–74, Voting—
Community Development Projects, etc.—Public Works—Grants-in-aid .. .. .. 108
Education .. .. .. .. .. .. 358
Fisheries, Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. .. .. .. .. .. 165, 202–207, 241–242

Chief Minister's reply *re.* Tamil Nadu House, distorted publication in "Thennagam" (Privilege Matter) .. 562–565, 567

Election of Speaker (Point of Order) .. .. .. 160

ANBAZHAGAN, THIRU K.—
Budget, 1973–74, Voting—
Education .. .. .. .. .. .. 365–366, 459–460, 461, 462–463

Irrigation .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. . 709–710, 711

Chief Minister's reply *re.* Tamil Nadu House, distorted publication in "Thennagam" (Privilege Matter) .. 560, 564

ARCHAEOLOGY—
Old Fort and Mosques at Wandawasi, protection .. 522–525

ARUMUGAM, THIRU C.—
Kothandaramasami temple, Madurantakam, properties. 153–154




PAGES

B


BALASUNDARAM, THIRU V.—
Budget, 1973–74, Voting—
Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc .. 174–176

BILL(S)—
Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973—
Int. .. .. .. .. .. .. .. 577
Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973—
Int. .. .. .. .. .. .. .. 346
Water Supply and Drainage Board (Amendment) Bill, 1973—
Int. .. .. .. .. .. .. .. 347

BOMMAN, THIRU K. H.—
Budget, 1973–74, Voting—
Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 164, 194–197

BRIDGE(S)—
Across Kuzhithurai, construction .. .. .. 335–336


C


CALLING ATTENTION—
Diesel oil and petrol, scarcity .. .. .. .. 572–577

CHAIR—
Announcements—
Arrest of Thiru S. M. Durairaj .. .. .. 651–652
B.O.H., change in order .. .. .. .. 243
Estimates Committee, election .. .. .. .. 156–157
Privileges Committee, election .. .. .. .. 155
Public Accounts Committee, election .. .. .. 156
Release of Thiru C. V. Velappan .. .. .. 154

PAGES

*C*—cont.


CHAIR—*cont.*

*Adjournment Motion* :

Arrest of B.T. teachers in Madurai and consequent unrest—

Consent was withheld on the ground that the motion was unnecessary after the explanatory statement of the Chief Minister .. .. 28

Calling Attention—

Clarification alone could be sought after a Minister's statement .. .. .. .. 576

Debate—

Members who have given their names to the Chair for speaking must be present in the House in their respective seats when called upon to speak. Otherwise, they would lose the opportunity to participate in the debate .. 403, 589

*Reference to individuals not present in the House*—

Vice-Chancellorship being a very responsible and respectable office, it was not in good taste to accuse the Vice-Chancellor on the floor of the House where he was not present and could not defend himself. The Member could seek information in a general way without meaning any offence .. .. .. .. .. 459–460

*Reply by Minister* :

During the discussion on Demands for Grants, a point of order was raised whether another Minister could intervene and reply, when the Minister concerned was present.

The Chair ruled that a Minister other than the Minister-in-charge, whether present or not, could intervene and reply, as all the Ministers in the Cabinet had joint responsibility .. 366




PAGES.

*C*—cont.


CHAIR—*cont.*

Debate—*cont.*

*Reply by a Member instead of the concerned Minister* :

On 17th March 1973, when objection was taken to the reply made by a Member (who also happened to be the Chairman of the Water and Drainage Board) to certain points raised in the course of the discussion on a Demand for Grant, instead of the concerned Minister doing it, the Chair observed that being the Chairman of the Board and also as a Member of the House, he could give to the House all the information within his knowledge and there was no harm in his doing it .. .. 87–88

On 21st March 1973, when the same point was raised by another Member, the Deputy Speaker observed as follows :—

"The Member enjoyed primarily the status of Member of the House though he was the Chairman of a Board. In his capacity as Member of the House he could clarify certain points. If he chose to reply to the discussion on Demands for Grants as a Chairman of the Board it was not permissible. After all, the Boards were constituted with the consent of the House. There was no question of his trying to overstep the rights of the Ministers. Inasmuch as he had only made certain clarifications which helped the House, it need not be taken as affecting the honour or privilege of the House." .. .. .. .. .. 688–695

Decorum—

Derogatory references to the University Senate and Syndicate should be avoided as they should accord equal respect and honour to those bodies just as they were zealous in upholding the honour and prestige of the House .. .. 459–460

PAGES

C—cont.

CHAIR—*cont.*

*Mode of addressing the Chair :*

There was nothing wrong in addressing the Chair as "Most affectionate Chairman" (பொன்புக்க தலைவரவர்களே) .. .. .. 600

When the Chair was on its legs, Members should not be standing and should resume their seats. The very act of a Member speaking simultaneously when the Chair was on its legs and speaking would constitute a breach of privilege .. .. .. .. .. .. 569

Demands for Grants—

At the time of voting on Demands for Grants, Members should confine their remarks to stating whether they withdrew the cut motions moved by them or not .. .. .. .. .. 243

Expressions used in the House—

'Lie'—(பொய்)—

The Chair held that the contention of a Member that the word 'Lie' (பொய்) was unparliamentary and hence should not at all be used in the House could not be accepted as, in that case, it would virtually mean the deletion of the word from the dictionary itself and would even prevent the verses in the Kural containing that word to be quoted in the House. However, he advised the Member to use some substitute word in place of that word .. .. 567

The expression "The practice of eavesdropping was most prevalent among women than among men" was taken exception to by a lady Member who wanted that the Member should withdraw that remark.

The Chair ruled that the lady Member's protest would suffice and the Member need not withdraw the remark .. .. .. .. 322



PAGES

C—cont.

CHAIR—*cont.*

*Matters sub judice—*

When a Member objected to the reference by another Member to a matter which was under judicial enquiry, a point of order was raised stating that opinion expressed about that matter by the Member and the reply thereto by the Minister might affect the course of that enquiry. The other Member contended that only when a matter was pending before a court it could be considered to be *sub judice* but in the instant case it was only before a fact finding enquiry commission and so could not be considered to be *sub judice.*

The Chair quoting the relevant rule held that irrespective of whether it was judicial enquiry or fact finding enquiry, as the proceedings of the House should not affect the course of that enquiry, the Member should refrain from referring to the matter which was being enquired into by the Commission .. .. .. .. 433–437

Mike—

Only the mike in front of the Member who was called upon by the Chair to speak would work as directed by him. If all the Members wanted the mike to work at the same time, it would not work .. .. .. .. .. .. 60

Point of clarification—

No questions should be asked by way of clarification in the middle of the speech of a Minister even if the Minister yielded. Such clarification was to be sought only after the Minister concluded his speech .. .. .. .. 103, 232

Point of Order—

*Election of Speaker :*

On 19th March 1973, a Member raised a point of order and stated that contrary to the provisions contained in Rule 4 of the Assembly Rules and Article 178 of the Constitution, the vacancy of the office of Speaker had not been filled up for the past 4 months and steps

PAGES

C—cont.

CHAIR—*cont.*

*Election of Speaker*—cont.

Point of Order—*cont.*

should be taken for filling up the vacancy expeditiously. Endorsing the point of order another Member stated that though they might have waited for the judgment of the High Court in the Writ Petition challenging the removal of the former Speaker, now that the Court had pronounced its judgment, the delay in the election of the Speaker was either due to the fact that the ruling party found it difficult or there was break-down of the Constitution. After hearing the views of some other Members and also the Leader of the House, the Deputy Speaker made the following observations :—

"It is not good parliamentary practice to bring in Court decisions here. Just as they had no right to talk about Courts, the Courts too had no right to speak about the Assembly. So far as the election of Speaker was concerned, the decision of the Court could, in no way, be binding on the Assembly.

Lawyer-Members should not refer to the Courts and their decisions while they spoke in the House. We did not wait for the decision of the Court to conduct the election of the Speaker. The Court could not interfere in that matter.

The Judiciary and the Legislature were separate entities and should function as such. They should not help create a conflict between the two.

As for the vacancy of the office of the Speaker, there were precedents in the House when the office of the Speaker was kept vacant for even ten months during which period the Deputy Speaker had conducted the House. Hence, he held that there was no point of order." .. .. .. .. 157–164



PAGES

C—cont.

CHAIR—*cont.*

Privilege Matter—

*Alleged distorted publication in* " Thennagam " *of the Chief Minister's answer to a question about Tamil Nadu House at Delhi* :

On 21st March 1973, a Member of the ruling party raised a matter of privilege against the paper " Thennagam ", for publishing in its paper *inter alia* that " the Chief Minister in his own arrogant way, taking the Members as ordinary, ignorant persons, had furnished wrong information to the House in reply to a question put by a Member." Quoting from the relevant proceedings, the Member contended that the publication in the paper was a completely distorted version. Moreover, the characterisation of the Members as " Ordinary, ignorant persons " and the Chief Minister as " arrogant " had been made deliberately with a view to mislead the public and create a wrong impression among them. Hence, it was a clear case of breach of privilege.

After hearing some Members and also the Chief Minister, the Deputy Speaker deferred his ruling .. .. .. .. .. .. 543–572

Notice of a privilege matter should be given in writing. Without knowing the issue behind a privilege motion, the Chair could not give his consent .. .. .. .. .. .. 607

QUESTION HOUR—

Question hour should be utilized only for the purpose of eliciting information and not for making allegations or complaints .. .. .. .. 540

PAGES

C—cont.


CHAIR—*cont.*

QUESTIONS AND ANSWERS—

*Supplementary questions* :

On a point of order raised that a lady Member put a supplementary question and the Minister answered the same without the Member following the usual procedure of catching the eye of the Speaker by raising her hand and getting his permission before putting the question just like other Members did, the Chair observed that he allowed the same in view of the fact that the lady Members were in minority, there being only 2 or 3 of them in the House .. .. .. .. .. .. 344–345

Should be brief especially when a number of questions relating to the same subject had already been put and answered .. .. .. 538

RELEVANCY:

Should not relate to policy and should not go beyond the scope of the main question .. 154, 524, 536, 539, 542

Should relate to the main question, should be general in nature and not relate to individual places .. .. .. .. 147

Should be in the form of questions .. .. 19

CHELLIAH, THIRU KUZHA—

Budget, 1973–74, Voting:

Fisheries .. .. .. .. .. ..

Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 176–180

COLLEGE(S)—

Madras Homoeopathy Development Association, opening of—by .. .. .. .. .. .. 328–329

COMMITTEE(S)—

Estimates, election (M) .. .. .. .. .. 156

Privileges, election (M) .. .. .. .. .. 155

Public Accounts, election (M) .. .. .. .. 155–156




PAGES

C—*cont.*


CO-OPERATION—

Co-operatives, cases against .. .. .. .. 336–338

CRIMES—

Theft in Government Ration Shop, Gopalapuram .. 22–23


D


DENNIS, THIRU N.—

Adyar River, water pollution .. .. .. 133–135

Budget, 1973–74, Voting:

Community Development Projects, etc. .. .. 66–70

Public Works—Grants-in-Aid .. .. ..

Education .. .. .. .. .. .. 348

Fisheries .. .. .. .. .. ..

Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 165

College, opening by Madras Homoeopathy Development Association .. .. .. .. 328–329

Co-operatives, cases against .. .. .. .. 336–338

Doctors for Leprosy Clinics .. .. .. 127–131

Gratuity for workers, uniformity .. .. 8–9

Ground Water Directorate, technical guidance to small cultivators .. .. .. .. .. .. 332–334

Honorary Presidency Magistrates, filling up of vacancies .. .. .. .. .. .. 141–142

Kuzhithurai, construction of bridge across .. 335–336

Magistrates under suspension .. .. .. .. 142–143

Mineral deposits, exploration .. .. .. 16–17

Raffle Scheme, revision of prizes .. .. .. 313–319

Ryots of Chittar-Pattanamkal Channels, lift irrigation facilities .. .. .. .. .. .. 144–145

PAGES

D—*cont.*

DEVARAJAN, THIRU M.—
Budget, 1973-74, Voting:
Education .. .. .. .. .. .. 393-395

DEVENDIRAN, THIRU A.—
Liquor consumption, film on evils of .. .. .. 13-16
Police Department, recruitment of women as constables .. .. .. .. .. .. 319-323

DHARMALINGAM, THIRU N.—
Budget, 1973-74, Voting:
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant. 610-612
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. ..
Harijan Colonies in Maroor, electricity supply .. 531

DURAIRAJ, THIRU S. M.—
Arrest (Ann.) .. .. .. .. .. .. 651-652

DURAISAMI, THIRU E. K.—
Budget, 1973-74, Voting:
Education .. .. .. .. .. .. .. 384-387

DURAISAMY, THIRU S.—
Coimbatore Regulated Market, irregularities .. .. 149-150
Deputy Commissioners of Labour, increase in number. 525-526

E

EDMUND, THIRU G. R.—
Budget, 1973-74, Voting:
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 625-627
Chief Minister's reply *re.* Tamil Nadu House, distorted publication in "Thennagam" (Privilege Matter) .. 548-553
Members of the Opposition, allotment of more time (Point of Order) .. .. .. .. .. 606



PAGES

E—*cont.*

EXHIBITION(S)—
Palm Products Co-operative Federation, expenditure incurred on .. .. .. .. .. .. 339

EXPUNCTIONS—
Budget, 1973-74, Voting :
Community Development Projects, etc. .. .. } 75, 558
Public Works—Grants-in-aid .. .. .. ..

F

FAMILY PLANNING—
Demographic Cell in State Family Planning Bureau, working .. .. .. .. .. .. .. 329-330

FILMS—
Liquor Consumption, evils of .. .. .. .. 13-16

FINANCIAL BUSINESS—
Budget, 1973-74, Voting :
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 28-111
Education .. .. .. .. .. .. 347-513
Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 164-243
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 577-606, 610-629, 630-651, 652-688, 696-728

FINE ARTS—
Dramas, Prize Scheme .. .. .. .. .. 1-5

FOODGRAINS—
Paddy, illicit movement .. .. .. .. .. 533-536

PAGES

G

GANESAN, THIRU S.—
Tobacco, Intensive Cultivation Scheme .. .. .. 532–533

GEOLOGICAL SURVEY—
Fossil trees, preservation .. .. .. .. .. 21–22

GOPAL, THIRU K. P.—
Budget, 1973–74, Voting :
Education .. .. .. .. .. .. 374–378

GOVINDARASAN DURAI, THIRU—
Budget, 1973–74, Voting :
Education .. .. .. .. .. .. 381–384

GURUSAMI, THIRU N. V.—
Budget, 1973–74, Voting :
Education .. .. .. .. .. .. 418–420

H

HANDE, DR. H. V.—
Budget, 1973–74, Voting :
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 76–82, 109
Education .. .. .. .. .. .. 349, 457–471
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 577, 580, 581, 630–638
Chief Minister's reply *re.* Tamil Nadu House, distorted publication in "Thennagam" (Privilege Matter) .. 557–562
Diesel oil and petrol scarcity (C.A.) .. .. .. 572, 574, 575–576
Election of Speaker (Point of Order) .. .. .. 158



PAGES

H—*cont.*

HANDE, DR. H. V.—*cont.*
Garbage dumping in low level areas in Nungambakkam .. .. .. .. .. .. .. 131–133
Thuraiyur, new school for .. .. .. .. 521–522

HARIJAN WELFARE—
Elachivakkam Harijan Colony, assignment of house-sites to Harijans .. .. .. .. .. .. 529
Harijans of Mettunavithampalayam, house-sites for .. 12
Land set apart for Harijan Colony, encroachment .. 529–530
Maroor Harijan Colonies, electricity supply .. .. 531
Periapuliyur Harijan Colony, assignment of house-sites to residents .. .. .. .. .. .. 331

HOSPITALS AND DISPENSARIES—
Doctors for Leprosy Clinics .. .. .. .. 127–131
Income limit for free treatment .. .. .. .. 123–127
Primary Health Centres at Periapalayam and Gummidipoondi, construction of compound walls .. 327–328

HOTEL(S)—
Employees in Madras City, working hours .. .. 526–529

I

ILANGOVAN, THIRU G.—
Budget, 1973–74, Voting :
Education .. .. .. .. .. .. 368–371

INDIAN MEDICINE—
Herbs, research on .. .. .. .. .. .. 323–327

IRAJARATHINAM, THIRU D.—
Budget, 1973–74, Voting :
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. 70–72

IRRIGATION—
Artesian Well Schemes, details .. .. .. .. 145–149
Ryots of Chittar-Pattanamkal Channels, lift irrigation facilities .. .. .. .. .. .. .. 144–145

PAGES

J

JABAMALAI, THIRU G.—
Budget, 1973–74, Voting :
Fisheries .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 169–171

JAMES, THIRU J.—
Budget, 1973–74, Voting :
Fisheries .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 166–169

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 578–579, 581, 582, 583–589

Election of Speaker (Point of Order) .. .. .. 157–158, 163

Evening Session, supply of tea (Point of Order) .. 629

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—
Budget, 1973–74, Voting :
Education .. .. .. .. .. .. 453–456, 511, 512

Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 219–225

JUDICIARY—
Honorary Presidency Magistrates, filling up of vacancies .. .. .. .. .. .. .. 141–142
Magistrates under suspension .. .. .. .. 142–143
Village Courts, revival .. .. .. .. .. 135–141

K

KAMATCHI, THIRU K.—
Chairmen of Boards, right of reply (Point of Order). 690



PAGES

K—*cont.*

KANDAPPAN, THIRU S.—
Budget, 1973–74, Voting—
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 81, 86

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 688

Chairmen of Boards, right of reply (Point of Order) .. .. .. .. 691–692

KANDASAMI, THIRU MANALI C.—
Budget, 1973–74, Voting—
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 581

KANDASAMY, THIRU K.—
Budget, 1973–74, Voting—
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 72–76

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 603–606

Chief Minister's reply *re.* Tamil Nadu House, distorted publication in "Thennagam" (Privilege Matter). 557

KANDASAMY, THIRU K. P.—
Budget, 1973–74, Voting—
Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 191–193

PAGES

K—*cont.*

KANNAPPAN, THIRU M.—

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973 .. .. .. .. .. .. 577

KARTHEESAN, THIRU V.—

Budget, 1973-74, Voting—

Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 200–202

KARUNANIDHI, DR. M.—

Arrest of B.T. Teachers and the consequent unrest (A.M.) .. .. .. .. .. .. .. 24–28

Budget, 1973-74, Voting—

Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid, .. .. .. .. 61

Education .. .. .. .. .. .. 353, 354–355, 358, 359, 360, 361, 465

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 667, 668, 670, 676–677

Chief Minister's reply *re.* Tamil Nadu House, distorted publication in "Thennagam" (Privilege Matter) .. 548, 549, 550, 567, 570–572

Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 .. .. .. .. .. .. .. 346

Water Supply and Drainage Board (Amendment) Bill, 1973 .. .. .. .. .. .. .. 347

KHADI—

Madurai Zone, sales in .. .. .. .. 338–339



PAGES

K—*cont.*

KITTAPPA, THIRU N.—

Artesian Well Schemes, details .. .. .. .. 145–149
Ashok Nagar—Aminjikarai link road, formation .. 339–340
Bengalgram, distribution .. .. .. .. .. .. 22
Herbs, research on .. .. .. .. .. .. .. 323–327
Hospitals, income limit for free treatment .. .. 123–127
Paddy, illicit movement .. .. .. .. .. .. 533–536
Pallavan Transport Corporation, season tickets .. 150–151
Toddy Bottling Plant, establishment .. .. .. 12–13

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Budget, 1973-74, Voting—

Education .. .. .. .. .. .. .. 348, 446–450

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 578, 644–649

KRISHNAMOORTHI, THIRU V. (NELLIKUPPAM)—

Budget, 1973-74, Voting—

Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 60–66

KUMARASAMY, THIRU A. S.—

Budget, 1973-74, Voting—

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 619–620

L

LABOUR—

Ramanadhi Project workers, hunger-strike .. .. 143–144
Workers, uniform gratuity .. .. .. .. 8–9

PAGES

L—cont.

LANDS—
Kuppampatti Harijan Colony, encroachment .. .. 529-530

LATHEEF, THIRU M. A.—
Budget, 1973-74, Voting—
Education .. .. .. .. .. .. .. 429-431
Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 183-185
Chief Minister's reply *re.* Tamil Nadu House, distorted publication in "Thennagam" (Privilege Matter) .. 565-568

LOANS—
Burma and Ceylon Repatriates, loans to .. .. 9-11

M

MANIYAN, THIRU P. S.—
Police Department, recruitment of women as constables. 319-323

MARIMUTHU, THIRU A. R.—
Budget, 1973-74, Voting—
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 29, 34-40
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 578, 579, 652-660, 676

MARIMUTHU, THIRU M.—
Budget, 1973-74, Voting—
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 649-651

PAGES

M—cont.

MATHIALAGAN, THIRU K. A.—
Budget, 1973-74, Voting—
Education .. .. .. .. .. .. .. 420-437
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 660-676, 709, 710, 711, 715-716, 725-726
Chairmen of Boards, right of reply (Point of Order). 688-689, 690, 694
Members of the Opposition, allotment of more time (Point of Order) .. .. .. .. .. .. 607, 608

MEENAKSHISUNDARAM, THIRU M.—
Budget, 1973-74, Voting—
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 627-629

MINES AND MINERALS—
Deposits, exploration .. .. .. .. .. 16-21

MOTION(S)—
Ad. Motion—
Arrest of B.T. Teachers and the consequent unrest .. 23-28
Estimates Committee, election .. .. .. .. 156
Privilege Committee, election .. .. .. .. 155
Public Accounts Committee, election .. .. .. 155-156

MUNU ADHI, THIRU—
Budget, 1973-74, Voting—
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 57-60

PAGES

M—*cont.*

MUNUSAMI, THIRU R. R.—
Budget, 1973-74, Voting—
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 40-43
Mineral deposits, exploration in South Arcot district .. 17-21

MUTHAMILSELVAN, THIRU V. N.—
Budget, 1973-74, Voting—
Education .. .. .. .. .. .. .. 407-410

MUTHU, THIRU V.—
Budget, 1973-74, Voting—
Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 193-194

N

NAGALINGAM, THIRU P.—
Budget, 1973-74, Voting—
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 592-594

NALLASAMY, THIRU S.—
Budget, 1973-74, Voting—
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 589-591

NARAYANASWAMY, THIRU M. V.—
Budget, 1973-74, Voting—
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 29, 47-51



PAGES

N—*cont.*

NEDUNCHEZHIYAN, DR. V. R.—
Budget, 1973-74, Voting—
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 28, 29, 61, 79-80, 92-108, 109, 110
Education .. .. .. .. .. .. .. 347, 349 356-358, 427, 428, 431, 458, 459, 460, 468, 470, 472-511, 512
Election of Speaker (Point of Order) .. .. .. 162
Estimates Committee, election (M) .. .. .. 156
Privilege Committee, election (M) .. .. .. 155
Public Accounts Committee, election (M) .. .. 155-156

O

OBITUARY REFERENCE—
Ramachandra Reddy, Thiru B., ex-Chairman, Madras Legislative Council .. .. .. .. .. 313

OIL—
Diesel oil and petrol, scarcity (C.A.) .. .. .. 572-577
Kerosine, misuse .. .. .. .. .. .. 152

ORPHANAGE(S)—
Thiruvalluvar—, Veeravanallur, complaint about .. 11

P

PADMANABHAN, THIRU P.—
Budget, 1973-74, Voting—
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 33-34

PAGES

P—*cont.*

PALANISAMY, PULAVAR C.—
Budget, 1973-74, Voting—
Education .. .. .. .. .. .. .. 378-381

PALANISAMY, THIRU N. K.—
Budget, 1973-74, Voting—
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 29, 30-33

Diesel oil and petrol, scarcity (C.A.) .. .. .. 573-574
Fossil trees, preservation .. .. .. .. .. 21-22
Mineral deposits, exploration .. .. .. .. 16-17
Police Headquarters, communications among .. .. 515-518
Road near Karumanjarai Pond, formation .. .. 336
Toddy bottling plant, establishment .. .. .. 12-13
Village Courts, revival .. .. .. .. .. 135-141

PAPERS LAID ON THE TABLE—
Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969, notification .. .. .. .. .. .. 244
Agriculture Demand, policy note .. .. .. 111
Bhoodan Yagna Act, 1958, notification .. .. .. 729
Community Development, 1973-74, Policy Note on Financial Supplement (English and Tamil) .. 244
Cottage Industries Construction and Establishment (Restrictions, Limitations and Conditions) Rules, 729
Demand—Fisheries, Policy Note .. .. .. .. 514
Demand—Welfare of the Scheduled Tribes and Castes, Policy Note (Tamil) .. .. .. .. .. 514
Education, Progress in Tamil Nadu, 1973-74 (English and Tamil) .. .. .. .. .. .. .. 514
General Sales Tax Act, 1959, notification .. .. 244
Khadi and Village Industries Board Act, 1959, annual accounts .. .. .. .. .. .. .. 244
Minor Ports, review on working during 1972-73 (English and Tamil) .. .. .. .. .. 729



PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*
Performance Budget on Agriculture, 1973-74 .. .. 111
Performance Budget on Collegiate Education, 1973-74. 729
Performance Budget on Fisheries, 1973-74 .. .. 729
Performance Budget on Harijan Welfare, 1973-74 .. 514
Performance Budget on School Education, 1973-74 .. 729
Performance Budget on Technical Education, 1973-74. 729
Stage Carriages and Contract Carriages (Acquisition) Act, 1973, Notification .. .. .. .. .. 728-729
Welfare Programmes for Women and Children for 1973-74, Policy note (English and Tamil) .. .. 244

PARANDHAMAN, THIRU A.—
Budget, 1973-74, Voting :
Education .. .. .. .. .. .. .. 415-418

PERUMAL, THIRU A. R.—
Chief Minister's reply *re.* Tamil Nadu House, distorted publication in "Thennagam" (Privilege Matter) .. 562

POLICE—
Deputy Inspectors, creation of new posts .. .. 518-520
Headquarters, communications among .. .. .. 515-518
Women, recruitment as constables .. .. .. 319-323

PONNAPPA NADAR, THIRU R.—
Budget, 1973-74, Voting :
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. 28, 82-92

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 581, 677-688

Chairmen of Boards, right of reply (Point of Order). 690-691, 692-693

PAGES

P—*cont.*

PONNAPPA NADAR, THIRU R.—*cont.*

Chief Minister's reply *re.* Tamil Nadu House, distorted publication in "Thennagam" (Privilege Matter) .. 569–570

Members of the Opposition, allotment of more time (Point of Order) .. .. .. .. .. .. 608–609

PRIVILEGE—

Chief Minister's reply *re.* Tamil Nadu House, distorted publication in "Thennagam" .. .. .. .. 543–572

PUBLIC HEALTH—

Adyar River, water pollution .. .. .. .. 133–135

Garbage dumping in low level areas in Nungambakkam. 131–133

PULSES—

Bengal-gram, distribution .. .. .. . .. 22

R

RAFFLE SCHEME—

Prizes, revision .. .. .. .. .. .. 313–319

RAJAGOPAL, THIRU V.—

Budget, 1973–74, Voting—

Irrigation .. .. .. .. .. .. ..

Public Works—Works .. .. .. .. ..

Public Works—Establishment and Tools and Plant.

Capital Outlay on Irrigation .. .. .. ..

Capital Outlay on Public Works .. .. .. 638–640

RAJU, THIRU J. S.—

Demographic Cell in State Family Planning Bureau, working .. .. .. .. .. .. .. .. 329–330

RAMACHANDRAN, THIRU S.—

Diesel oil and petrol, scarcity (C.A. St.) .. .. 573, 574–575, 576–577

RAMALINGAM, THIRU C.—

Budget, 1973–74, Voting :

Irrigation .. .. .. .. .. ..

Public Works—Works .. .. .. ..

Public Works—Establishment and Tools and Plant.

Capital Outlay on Irrigation .. .. .. ..

Capital Outlay on Public Works .. .. .. 612–614



PAGES

R—*cont.*

RAMALINGAM, THIRU R.—

Budget, 1973–74, Voting—

Fisheries .. .. .. .. .. .. ..

Welfare of Scheduled Tribes and Castes, etc. .. .. 197–200

RAMAN, THIRU M.—

Budget, 1973–74, Voting :

Fisheries .. .. .. .. .. .. ..

Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 185–188

REST HOUSE(S)—

Tamil Nadu House, New Delhi, boarding and lodging charges .. .. .. .. .. .. .. 5–8

ROAD(S)—

Ashok Nagar—Aminjikarai link road, formation .. 339–340

Depressed Class people of Konapparayankulam village, facilities to .. .. .. .. .. .. .. 331–332

Near Karumanjarai Pond, formation .. .. .. 336

S

SADIQ PASHA, THIRU S. J.—

Budget, 1973–74, Voting :

Irrigation .. .. .. .. .. .. ..

Public Works—Works .. .. .. .. ..

Public Works—Establishment and Tools and Plant.

Capital Outlay on Irrigation .. .. .. ..

Capital Outlay on Public Works .. .. .. 577, 579, 580, 581, 582, 594, 602, 605, 632, 633, 635–636, 641–642, 646, 666, 671, 686, 696–724, 725, 726



ES

1

PAGES

S—*cont.*

SADIQ PASHA, THIRU S. J.—*cont.*

Budget, 1973–74, Voting—*cont.*

Members of the Opposition, allotment of more time, (Point of Order) .. .. .. .. .. .. 609

SANGUMUTHU THEVAR, THIRU S.—

Double decker buses, utilisation .. .. .. .. .. 541–542

Ramanadhi Project workers, hunger-strike .. .. 143–144

Tamil Nadu House, New Delhi, boarding and lodging charges .. .. .. .. .. .. .. 5–8

SATHIYAVANIMUTHU, THIRUMATHI—

Budget, 1973–74, Voting :

Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 164, 165, 166, 225–240, 241, 242

SCHOOL(S)—

High School for Vengal village .. .. .. .. .. 330–331
Thuraiyur, new school for .. .. .. .. .. .. 521–522

SERVICES—

Deputy Commissioners of Labour, increase in number. 523–526

SIRAIMEETTAN, THIRU T. K.—

Budget, 1973–74, Voting :

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 597–599

SIVAPRAKASAM, THIRU D. S. A.—

Budget, 1973–74, Voting :

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 582, 594–597



PAGES

S—*cont.*

SIVAPRAKASAM, THIRU D. S. A.—*cont.*

Thiruvalluvar Orphanage at Veeravanallur, complaint against .. .. .. .. .. .. .. 11

SONIAH, THIRU T.—

Budget, 1973–74, Voting :

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 621–623

SOUNDARAPANDIAN, THIRU P.—

Burma and Ceylon Repatriates, loans to .. .. 9–11

Depressed class people of Konapparayankulam village, road facilities to .. .. .. .. .. .. 331–332

Deputy Inspectors of Police, creation of new posts .. 518–520

SRINIVASAN, THIRU T. P.—

Budget, 1973–74, Voting :

Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 181–182

SUBBIAH, THIRU A. K.—

Budget, 1973–74, Voting :

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 579, 614–619

SUBRAMANIAM, THIRU A.—

Budget, 1973–74, Voting :

Education .. .. .. .. .. .. .. 348, 395–403, 492

Police Department, recruitment of women as Constables .. .. .. .. .. .. 319–323

PAGES

S—*cont.*

SUBRAMANIAM, THIRU K. M.—
Budget, 1973-74, Voting :
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. ..
Education .. .. .. .. .. .. .. 347
30, 51-53

SUBRAMANIAM, THIRU M.—
Harijans of Mettunavithampalayam, house-sites for .. 12

SUBRAMANIAM, THIRU V.—
Budget, 1973-74, Voting :
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. ..
53-55

SUGAR—
Supply during special occasions .. .. .. .. 537-540

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—
Budget, 1973-74, Voting :
Education .. .. .. .. .. .. .. 348, 403-407
Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. ..
164, 165, 171-174
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. ..
578, 579, 580, 581, 640-643
Chairmen of Boards, right of reply (Point of Order). 695

SUPPU, THIRU K.—
Budget, 1973-74, Voting :
Education .. .. .. .. .. .. .. 347, 349-367, 486-487, 488, 494, 495, 504, 505
Government Ration Shop, Gopalapuram, theft in .. 22-23

PAGES

S—*cont.*

SURENDRAN, THIRU M.—
Budget, 1973-74, Voting—
Fisheries .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 166, 188-191
Lands set apart for Harijan Colony, encroachment .. 529-530

SWAMIDHAS, THIRU A.—
Budget, 1973-74, Voting :
Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 30
387-393
Education .. .. .. .. .. .. .. 520-521
Gazetted teachers, number .. .. .. .. ..

T

TEACHERS—
Gazetted posts, number .. .. .. .. .. 520-521

TEMPLE(S)—
Kothandaramasami temple, Madurantakam, properties. 153-154

TANGAMANI, THIRU K. T. K.—
Arrest of B.T. Teachers and the consequent unrest (A.M.) .. .. .. .. .. .. .. .. 23-24
Budget, 1973-74, Voting : .. 354, 356
Education .. .. .. .. .. .. ..
Fisheries .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 210-219
Chief Minister's reply *re.* Tamil Nadu House, distorted publication in "Thennagam" (Privilege Matter) .. 553-556
Election of Speaker (Point of Order) .. .. .. 159, 163

THYAGARAJAN, THIRU E. S.—
Budget, 1973-74, Voting : .. 450-453
Education .. .. .. .. .. .. ..

PAGES

T—*cont.*

THYAGARAJAN, THIRU E. S.—*cont.*

Budget, 1973-74; Voting—*cont.*

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant 623-625
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. ..

TOBACCO—

Intensive Cultivation Scheme .. .. .. .. 532-533

TODDY—

Bottling Plant, establishment .. .. .. .. 12-13

TOURISM—

Tourist bungalow for Ranipet .. .. .. .. 340-346

TRANSPORT AND COMMUNICATIONS—

Double decker buses, utilisation .. .. .. .. 541-542
Express buses to Wandhawasi .. .. .. .. 542-543
Madras-Vadapurampakkam bus route, extension .. 151-152
Pallavan Transport Corporation, season tickets .. 150-151

V

VEERASAMI, THIRU N.—

Budget, 1973-74, Voting :

Education .. .. .. .. .. .. .. 438-446

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant. 665
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. ..

Chairmen of Boards, right of reply (Point of Order) . 693

Chief Minister's reply *re.* Tamil Nadu House, distorted publication in "Thennagam" (Privilege Matter) .. 545-547, 551, 553

Election of Speaker (Point of Order) .. .. .. 160

Members of the Opposition, allotment of more time (Point of Order) .. .. .. .. .. 608, 609



PAGES

V—*cont.*

VEDACHALAM, THIRU M.—

Budget, 1973-74, Voting :

Fisheries .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 207-209

VELAPPAN, THIRU C. V.—

Release (Ann.) .. .. .. .. .. .. 154

VELLADURAI, THIRU A.—

Budget, 1973-74, Voting :

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Out lay on Public Works .. .. .. 643-644

VENKATASWAMY, THIRU B.—

Budget, 1973-74, Voting :

Community Development Projects, etc. .. ..
Public Works—Grants-in-aid .. .. .. .. 29, 55-57

VEZHAVENDAN, THIRU K.—

Dramas, prize scheme .. .. .. .. .. 1-5

Elachivakkam Harijan Colony, assignment of house-sites to Harijans .. .. .. .. .. .. 529

Harijan Colony, Periapuliyur, assignment of house-sites for residents .. .. .. .. .. 331

High School for Vengal village .. .. .. .. 330-331

Hotel employees in Madras City, working hours .. 526-529

Madras-Vadapurampakkam bus route, extension .. 151-152

Primary Health Centres at Periapalayam and Gummudipoondi, construction of compound walls .. 327-328

PAGES

# W

WAHAB, Thiru K. A.—

Budget, 1973–74, Voting :

Community Development Projects, etc. .. .. 29
Public Works—Grants-in-aid .. .. .. .. 43–47

Education .. .. .. .. .. .. .. 348, 410–415

Fisheries .. .. .. .. .. .. ..
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 164, 165

Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Works .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. 578, 580

Exhibition by Palm Products Co-operative Federation at Madhavaram, expenditure incurred .. .. 339
Express buses to Wandhawasi .. .. .. .. 542–543
Kerosine, misuse .. .. .. .. .. .. 152
Khadi, sales in Madurai Zone .. .. .. .. 338–339
Old Fort and Mosques at Wandhawasi, protection .. 522–525
Sugar, supply during special occasions .. .. .. 537–540
Tourist bungalow for Ranipet .. .. .. .. 340–346

TAMIL NADU ...
61608
Y811,31 N73
31N73-36 31